**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை**

# இராமலிங்க அடிகள் வரலாறு

## முன்னுரை

**அருட்பெருஞ்ஜோதி அபயம் அபயம்**
**பொருட்பெருஞ்ஜோதிப் புனைதந்-திருட்பெருங்கார்**
**அள்ளற் கடல்கடத்தி அக்கரை மேல் ஆனந்தம்**
**கொள்ளற் கபயங் கொடு.**

-திருஅருட்பா

திருவள்ளுவர் திருமூலர் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்திகள் மாணிக்கவாசகர் பட்டினத்தார் தாயுமானார் என வாழையடி வாழையாக வரும் திருக்கூட்ட மரபில் சென்ற நூற்றாண்டில் சன்மார்க்கமுந் தமிழும் தழைத்தினிதோங்க நந்தமிழகத்தேவந்துதித்த செந்தமிழ் ஞானி திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் ஆவர்.

திரிசிரபுரம் மகாவித்துவவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சேக்கிழார் பிள்ளைத் தமிழில், சேக்கிழார் பெருமான் நூலாசிரியரும் உரையாசிரியரும் போதகாசிரியரும் ஞானாசிரியரும் ஆவரெனக் கூறிப்போற்றுவர்.

**நாடிய விரிநூல் சொற்றிடு திறனால்**
**நன்னூலா சிரியன்**
**நகுபா சுரமுத லுரைசெய் தலினால்**
**நவிலுரை யாசிரியன்**
**நீடிய பரசம யக்குழி வீழ்ந்தவர்**
**நீப்பப் போதனைசெய்**
**நிலையாற் போத காசிரி யன்னிவை**
**நிகழ்தொறு நிகழ்தொறும்**
**ஆடிய ஞானத் திறனுற லான்ஞா**
**னாசிரி யனுநீ யென்**
**றான்றோர் பலரும் புகழப் படுபவ**
**வகில மெலாஞ்சென்று**
**கூடிய புகழ்சால் குன்றத் தூரன்**
**கொட்டுக சப்பாணி**
**கொற்றச் சேவையர் காவல நாவல**
**கொட்டுக சப்பாணி**

-சப்பாணிப் பருவம் 9.



RangaRakes
tamilnavarasam.com

வள்ளற்பெருமான் நூலாசிரியரும் உரையாசிரியரும் போதகாசிரியரும் ஞானாசிரியரும் ஆதலொடு பதிப்பாசிரியரும் பத்திரிகையாசிரியரும் ஆவர். மனுமுறைகண்ட வாசகம் ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய நூல்களை இயற்றியமையான் நூலாசிரியர். ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி முதலியவற்றைச் செய்தமையான் உரையாசிரியர். ஒழிவிலொடுக்கம், தொண்டமண்டல சதகம், சின்மயதீபிகை ஆகிய நூல்களைப் பதிப்பித்தமையான் பதிப்பாசிரியர். 'சன்மார்க்க விவேக விருத்தி' என்னும் பத்திரிகையைத் தொடங்கியமையான் பத்திரிகாசிரியர். பலருக்கு பாடஞ்சொன்னமையான் போதகாசிரியர். திருவருண் ஞானத்தைப் போதித்தமையான் ஞானாசிரியர். இவ்வாறு அடிகள் நூலாசிரியராய், உரையாசிரியராய், பதிப்பாசிரியராய், பத்திரிகையாசிரியராய், போதகாசிரியராய், வியாக்கியானகர்த்தராய், சித்தமருத்துவராய், சீர்திருத்தவாதியாய், அருட்கவிஞராய் இவை இத்தனைக்கும் மேலாக அருண்ஞானியாய் விளங்கினர்.

இன்று துறைதோறும் துறைதோறும் தோன்றியுள்ள பல சீர்திருத்தங்களுக்கு வித்திட்டவர் அடிகளே. சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சைவசமயத்தில் பல சீர்திருத்தங்கள் தோன்றின. 'சீர்திருத்தச் சைவம்' என்றொன்று தோன்றிற்று. மறைமலையடிகளும் திரு.வி.கலியாணசுந்தரனாரும் தங்களைச் சீர்திருத்தச் சைவர் எனச்சொல்லிக் கொள்வதில் பெருமையடைவர். சீர்திருத்தச் சைவம் தோன்றற்குக்காரணர் வள்ளற்பெருமானே. அடிகளின் சமரச சுத்த சன்மார்க்கம் தோன்றிலதேல் சீர்திருத்தச் சைவம் தோன்றுவதெங்கே?

தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு முதன்முதலாகத் திருக்குறள் வகுப்பு நடத்தியவர் அடிகளே. தமிழ்நாட்டில் முதன்முதலாக முதியோர் கல்வியை ஏற்படுத்தியவர் அடிகளே. தமிழ்நாட்டில் முதன் முதலில் மும்மொழிப் பாடசாலை(தமிழ், வடமொழி, ஆங்கிலம்) நிறுவியவர் அடிகளே. தமிழகத்தின் முதல் கல்வெட்டாராய்ச்சியாளர் அடிகளே. தமது கொள்கைக்கு ஒரு தனி மார்க்கத்தைக் கண்டவர் அடிகளே. தமது மார்க்கத்திற்கு ஒரு தனிக்கொடி கண்டவர் அடிகளே. தமது மார்க்கத்திற்கு ஒரு தனி மந்திரம் கண்டவர் அடிகளே. தமது மார்க்கத்திற்கு ஒரு தனிச் சபையையும் கட்டியவர் அடிகளே.சமயகுரவர் நால்வருக்குப்பின் அவர்களோடு ஒப்ப மதிக்கப் பெறுபவர் அடிகளே. தேவார திருவாசகங்களுக்குப் பின் அவற்றோடு ஒப்ப மதிக்கப்பெற்று வழங்குவது அடிகளின் திருவருட்பாவே. திருவருட்பா, அதுதோன்றிய காலத்திலேயே பெருஞ்செல்வாக்குப் பெற்றது. அடிகளின் சமரச சன்மார்க்கம் அதுதோன்றிய நூறு ஆண்டுகளுக்குள்ளேயே நாடெங்கும் பரவியுள்ளது. நூறு ஆண்டுகள் என்பது நாட்டு வரலாற்றில் குறுகிய காலமாகும். அடிகளின் தோற்றத்திற்கு முன் தமிழ் நாடு இருந்த நிலை வேறு. அடிகளின் தோற்றத்திற்குப் பின் தமிழ்நாடு உள்ள நிலைவேறு. சமயத் துறையில் மட்டுமன்றிச் சமூகவாழ்விலும் பெரும் மாறுதல்களும் சீர்திருத்தங்களும் அடிகளால் ஏற்பட்டன. இன்று நாடெங்கும் பேசப்பட்டுவரும் ஒருமைப்பாட்டிற்கு வித்திட்டவர் அடிகளே. இன்று நாம் பேசும் ஒருமைப்பாடு சாதாரண தேசிய ஒருமைப்பாடு (National Integrity). ஆனால் அடிகள் கண்ட ஒருமைப்பாடோ அனைத்துலக (சர்வதேச) ஒருமைப்பாடு (International Integrity). அனைத்துலக ஒருமைப் பாடெனச் சொன்னாலும் சாலாது. அண்ட ஒருமைப்பாடு (Universal Integrity).



RangaRakes tamilnavarasam.com

அண்டாண்ட ஒருமைப்பாடு எனச்சொல்லல் தகும். அடிகளின் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைத் தத்துவத்திற்கு மேல் வேறு ஒரு தத்துவம் இல்லை.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அடிகளின் வரலாறு தெளிவாகவும் விரிவாகவும் ஆராய்ச்சி முறையிலும் இதுகாறும் எழுதப்பெறவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறந்து விளங்கியவர் அடிகளும், பிள்ளையவர்களும், நாவலருமாவர். பிள்ளைவர்களின் வரலாற்றை அவர்களின் மாணாக்கராகிய ஐயரவர்கள் எழுதினார்கள். தமிழில் வெளிவந்த புலவர் வரலாறுகளுள் தலையாயது அதுவே. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் வரலாறாகவே அது விளங்குகிறது. ஆறுமுகநாவலரின் வரலாற்றை அவரது மாணாக்கர்கள் எழுதினர். அடிகளின் மாணாக்கராகிய தொழுவூர் வேலாயுத முதலியாரோ அடிகளின் வரலாற்றை எழுதினாரல்லர். ஆதிசங்கரர் வரலாற்றை (சங்கர விஜயம்) எழுதினார். இராமலிங்க விஜயம் எழுத வேண்டியவர் சங்கர விஜயம் எழுதிப் பொழுது போக்கியதை எண்ணும்போது வருந்தாதிருக்க முடியவில்லை. வேலாயுதனார் கவி ஆற்றல் பெற்றவர். அவர் எண்ணியிருந்தால் அடிகளின் வரலாற்றைப் பெரியதோர் செய்யுள் நூலாகவே பாடியிருக்கலாம். அடிகள் இளமையில் சென்னையிலிருந்த காலத்தில் வேலாயுதனார் உடனிருந்தார். அடிகள் வடலூர் நோக்கிய பின் எப்போதாவது ஓரிரு முறை வடலூர்க்கு வருவதும் போவதுமாக இருந்தார். அடிகளுடன் நெருங்கிய தொடர்பில்லை. வடலூரில் நிகழ்ந்த ஓரளவு அறிவார். இதனாலும் இன்னோரன்ன காரணங்களாலும் அவர் அடிகளின் வரலாற்றை எழுதும் நிலையில் இல்லை.

**அடிகளின் வரலாற்றை அறிதற்கான மூலங்கள் பின்வருவனவாம்.**

1.திருவருட்பாவிலும், அடிகளது பிற அருளிச் செயல்களிலும், கடிதங்கள், கட்டளைகள், பத்திரிகைகள் ஆகியவற்றிலும் காணப்படும் அகச்சான்றுகள்.

2.தொழுவூர் வேலாயுதனார் பாடிய 'திருவருட்பா வரலாறு'

3.தொழுவூர் வேலாயுதனார் பிரம்மஞான சங்கத்தாருக்கு அளித்த வாக்குமூலம் (1882).

4.தென் ஆர்க்காடு மாவட்ட கெஸட்டில் காணப்படும் குறிப்பு (1906).

5.திருவருட்பா, பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பில் காணப்படும் அரிய குறிப்புகள்.

திருவருட்பாவில் பிள்ளைச் சிறுவிண்ணப்பம், பிள்ளைப் பெருவிண்ணப்பம், அருள் விளக்கமாலை முதலியவையும் உரைநடை விண்ணப்பங்களும் வரலாற்றுக் குறிப்புகள் பலவற்றைக் கொண்டுள்ளன. 1858 இல் அடிகள் வடலூர்ப் பக்கம் வந்தபின் சென்னையிலிருந்த இறுக்கம் இரத்தின முதலியார்க்கும் புதுவை வேலு முதலியார்க்கும் வரைந்த திருமுகங்களில் வரலாற்றுச் செய்திகள் பல உள்ளன. கட்டளைகள், பத்திரிகைகள் ஆகியவைகள் அடிகள் நிறுவிய நிலையங்களின் வரலாறுகளையும் கொள்கைகளையும் கூறுகின்றன. இவையெல்லாம் அகச் சான்றுகளாம். தொழுவூர் வேலாயுதனார் பாடிய 'திருவருட்பா வரலாறு' திருவருட்பா முதல் நான்கு திருமுறை முதற் பதிப்பின் (1867) இறுதியில் சேர்த்து அச்சிடப்பட்டுள்ளது. அடிகளின் ஊர், பேர், பெற்றோர், பிறப்பு, வளர்ப்பு,



RangaRakes tamilnavarasam.com

ஓதாதுணர்தல் ஆகியவையும் திருவருட்பா வெளிவந்த வரலாறும் இதனுட் கூறப்பட்டுள்ளன. 66 செய்யுள்களை உடைய அதனை இந்நூலின் பின்னிணைப்பாகத் தந்திருக்கிறோம் தொழுவூர் வேலாயுதனார் சொல்ல, பிரம்மஞான சங்கத்தாரால் பதிவு (Record) செய்து கொள்ளப்பட்ட இவ் வாக்குமூலத்தின் சில இடங்களில் பிரம்மஞான சங்கத்தின் செல்வாக்குத் தொனிக்கிறது. ஆயினும் வேறெதனாலும் அறிய இயலாத பல நல்ல குறிப்புகள் இவ்வாக்கு மூலத்தால் தெரிகின்றன. ஆங்கிலத்தில் உள்ள இவ்வாக்கு மூலத்தையும் அதற்கு பிளவட்ஸ்கி அம்மையார் எழுதிய முன்பின் குறிப்புகளையும் அவற்றின் தமிழாக்கங்களையும் பின்னிணைப்பாகத் தந்துள்ளோம். தென்ஆர்க்காடு மாவட்ட கெஸட்டில் அடிகளின் வரலாறு சுருங்கக் கூறப்படுகிறது கெஸட் குறிப்பும் அதன் தமிழாக்கத்துடன் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது. திருவருட்பா பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு பெருவிருந்து. பாலகிருஷ்ண பிள்ளையின் அடிக்குறிப்புகளால் அறியப்படும் செய்திகளின் மிகப் பல வேறெதனாலும் அறிய இயலாதவை.

அடிகளின் வரலாறாக இதுவரை வெளிவந்துள்ள நூல்களுள் குறிப்பிடத்தக்கவை பின் வருவனவாம்.

1.இராமலிங்கசுவாமிகள் சரித்திரக் கீர்த்தனை (1923).ச.மு.கந்தசாமிபிள்ளை பல்லவி, அநுபல்லவி, சரணங்களுடன் (8 அடி கொண்ட 261 சரணங்கள்) அமைந்த இக்கீர்த்தனையே முதன் முதலில் எழுந்த முழுமையான வரலாறாகும். இதிலும் இராமலிங்கசுவாமிகள் சரித்திரக் குறிப்புகளிலும் வேறெதனாலும் அறியப்படாத பல செய்திகள் கூறப்படுகின்றன. இவற்றின் ஆசிரியர் காரணப்பட்டு சமரச பஜனை ச.மு.கந்தசாமிபிள்ளை அடிகளை நேரிற் கண்டு பழகியவர். அடிகளையே வழிபடுகடவுளாகக் கொண்டொழுகியவர். இவரது பிரபந்தத்திரட்டிலும் திருவருட்பாப் பதிப்பிலும் இவர் பெயர் 'திருவருட்பிரகாச வள்ளலாரை உபாஸனா மூர்த்தியாகக் கொண்டொழுகும் காரணப்பட்டு சமரச பஜனை ச.மு.கந்தசாமி பிள்ளையவர்கள்' எனக் குறிப்பிடப்படுகிறது. வள்ளற் பெருமானையே வழிபடு கடவுளாகக் கொண்ட இவர் தாம் நேரில் அறிந்தவற்றையும், அடிகளுடன் பழகியவர்கள் வாயிலாகக் கேட்டவற்றையும் விரிவாகத் தொகுத்துக் கீர்த்தனையாகப் பாடினார். எட்டாம் அகவையில் அடிகள் சமய தீக்கை பெற்றார் என்ற செய்தி கீர்த்தனையில் சொல்லப்படுகிறது. இச்செய்தி வேறெதனாலும் அறியப்படாதாகும். சைவக் குடும்பங்களில் சிறுவர்களுக்குத் தீட்சை செய்விக்கும் வழக்கம் இன்றியமையாத வொன்றாக சிறுவர்களுக்கு தீட்சை செய்விக்கும் இன்றியமையாத வொன்றாக அந்நாளில் வழங்கியது. பரம்பரைச் சைவக் குடும்பத்தில் பிறந்த வள்ளற் பெருமான் பிள்ளைப் பருவத்தில் சமயதீக்கை பெற்றார் என்பது முறையும் சிறப்புமே ஆகுமன்றி இழுக்காகாது.

2. இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகள் (1923. 1924). இது ச.மு.க.வின் ஷை கீர்த்தனையைக் கொண்டே மோசூர் கந்தசாமி முதலியாரால் உரைநடையாக எழுதப்பெற்று ச.மு.க.வினால் பார்வையிடப் பெற்றது. மோசூர் கந்தசாமி முதலியார் B.A. சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் vernacular Superindentent ஆகவும் பின்பு தமிழ்ப் பேராசிரியராகவும் பணியாற்றியவர் இச்சரித்திரக் குறிப்புகள் 1923ஆம் ஆண்டில் வெளிவந்த ச.மு.க.பிரபந்தத் திரட்டிலும், 1924ஆம் ஆண்டில் வெளிவந்த திருவருட்பா ச.மு.க.பதிப்பிலும் இடம் பெற்றது. அடிகளின் அருள் வாழ்வில் நிகழ்ந்த பல அற்புதச் செயல்கள் இதனுள்



RangaRakes tamilnavarasam.com

தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. திருவருட்பாப் பதிப்புகளில் ஆசிரியர் வரலாறாக இரண்டொரு பக்கங்கள் அளவில் வழங்கி வந்த வரலாற்றை எழுபது பக்கத்திற்கு விரித்த சிறப்பு ச.மு.க. வையே சாரும்.

## அடிக்குறிப்புகள்


1.இராமலிங்க அடிகள் வரலாறு..........................................................16
**2. திருஒற்றியூர்ப் பகுதி**...................................................................48
3.**சென்னையில் சில நிகழ்ச்சிகள்**.......................................................134

5.அகவை 47-51...............................................................................406
6.அருட்பெருஞ் ஜோதி அகவல் அருளியது 18-4-1872.......................423
7.இராமலிங்க அடிகள் முற்பிறப்பில் தாயுமனவரா?....................................533
8.அடிகள் வரலாற்றுக் காலக் குறிப்புகள்...................................................545


3. இராமலிங்க அடிகள் வரலாற்றுந் திருவருட்பா ஆராய்ச்சியும் (1930 செப்டம்பர்). மாம்பாக்கம் திருக்குறள்பீடம் குருகுலம் அழகரடிகள் T.S.பாலசுந்தரம் பிள்ளையாக விளங்கிய காலத்தில் அவர்களால் 'செந்தமிழ்ச் செல்வி' ஐந்தாம் சிலம்பின் இதழ்களில் (1927-1928) தொடர் கட்டுரைகளாக எழுதப்பெற்றுப் பின்னர் அவற்றைத் தொகுத்து நூலாக (1930இல்) வெளியிடப்பெற்றது. பரங்கிமலை மறைமலையடிகள் கல்விக் கழக வெளியீடு. ஆசிரியர் அழகரடிகளார் மறைமலையடிகளின் மாணாக்கர். பாலசுந்தரம் பிள்ளையாக இருந்த இவர்கள் இளவழகனாராகி இப்போது அழகரடிகளாக விளங்குகிறார்கள். நுண்மாண் நுழைபுலமுடைய இவர்கள் எழுதிய இந்நூல் ஆசிரியரின் கல்வியறிவுத்திறத்திற்கேற்பச் சிறந்து விளங்குகிறது.

4.இராமலிங்க சுவாமிகள் சரிதம் (1934). 409 பாடல்களைக் கொண்ட செய்யுள் நூல். பண்டிதை அசலாம்பிகை அம்மையார் இயற்றியது. அம்மையாரை இக்கால ஔவையார் என்று திரு.வி.க. பாராட்டுவர். அம்மையார் சில காலம் வடலூரில் வாழ்ந்தார். திருவருட்பா ச.மு.க.பதிப்பிற் (1924) கண்ட சரித்திரக் குறிப்புகளைத் தழுவியே இவர் இதனைப் பாடினார். ச.மு.க.வின் இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகள் அவரது பிரபந்தத் திரட்டிலும் (1923) திருவருட்பாப் பதிப்பிலும் (1924) இடம் பெற்றதே ஒழியத் தனி நூலாக வெளிவரவில்லை பிரபந்தத் திரட்டும், திருவருட்பாப் பதிப்பும் இப்போது கிடைக்கா. ஆதலின் இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகளைத் தனி நூலாக யாம் இப்போது (1-8-1970 இல்) வெளியிட்டுள்ளோம். அதுபோன்றே அசலாம்பிகையார் பாடிய இராமலிங்க சுவாமிகள் சரிதத்தையும் (1-11-1970இல்) வெளியிட்டுள்ளோம்.

5.Sri Chidambaram Ramalinga Swamiji-His life, Mission & Studies (1935). By T.V.G.Chetty. டி.வி.ஜி.செட்டி எழுதிய ஆங்கில நூல் உயர்ந்த

தாளில் நன்கு அச்சிட்டு அழகிய படங்களுடன் அருமையாகக் கட்டிஞ் செய்து வெளியிடப்பட்டுள்ள இது ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள வரலாறுகளுள் சிறந்தது.

6.அருட்சுடர் வள்ளலார் (இரண்டாம் பதிப்பு 1940). சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதியது. இதன் முதற் பதிப்பு எப்போது வெளிவந்ததென்பது இவ்விரண்டாம் பதிப்பில் குறிப்பிடப்பெறவில்லை. பாரதியாருக்கே உரிய தனி நடை.

7.திருஅருட்பிரகாச வள்ளலார் திவ்ய சரித்திரம் (திருத்திய பதிப்பு 1955)- சென்னை சமரச சுத்த சன்மார்க்கசங்கம். 1955க்கு முன்னும் பின்னுமாகப் பல பதிப்புகள் வெளி வந்தன. திவ்ய சரித்திரம் என்ற பெயருக்கேற்ப இது அமைந்துள்ளது.

8.The Life of St.Ramalingar (1961) By P.Mutharasu, M.A, B.T., திரு பொ.முத்தரசு, எம்.ஏ.,பி.டி., எழுதிய ஆங்கில நூல். திருநெல்வேலிச் சன்மார்க்க சங்க வெளியீடு. இதுவும் நல்ல நூலே.

9.சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் சரித்திரச் சுருக்கம் (1963). பொறையாறு சிதம்பர சுவாமிகள் எழுதியது. திருவருட்பாவிலுள்ள அகச்சான்றுகளைக் கொண்டும், ச.மு.க. பதிப்பு சரித்திரக் குறிப்புகலை ஒட்டியும் இது எழுதப்பட்டுள்ளது. இதுவரை தமிழில் வந்துள்ள வரலாறுகளுள் இது சிறந்ததென்று சொல்லலாம்.

10.வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (1963). திரு.ம.பொ.சிவஞானம் அவர்கள் எழுதியது. அடிகளின் வரலாற்றைச் சமூக பொருளாதார கலாச்சார அரசியல் முறையாக விமர்சனம் செய்வது. தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றி மத்திய அரசாங்கத்திலும், மாநில அரசாங்கங்களிலும் நாடெங்கும் ஒரே பேச்சாக இருந்த காலத்தில் 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் பெயருடன் வெளிவந்த இது நாடெங்கும் பரவியுள்ளது. ஆசிரியர் அரசியல்வாதி என்பதும் ஒரு காரணம்.

திருவருட்பாப் பதிப்பாளர் திரு. ஆ. பாலகிருஷ்ண பிள்ளைM.A.,B.L., அவர்கள் ஒருவரலாறெழுதத் திட்டமிட்டிருந்தார். இதுவரை வெளிவந்துள்ள திருவருட்பாப் பதிப்புகளுள் சிறந்தது பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பே. அடிகளின் திருக்கரத்தாலெழுதப்பெற்ற திருவருட்பா மூல ஏடுகள் திருமுகங்கள் முதலியன அவருக்குக் கிடைத்தன. அவற்றையெல்லாம் பல்லாண்டுகளாகத் துருவி ஆராய்ந்து திருவருட்பாவையும் அடிகளின் பிற அருளிச் செயல்களையும் பன்னிரண்டு புத்தகங்களாகச் சுத்தப் பதிப்பாக அச்சிட்டு வெளியிட்டார். இவரது பதிப்பை எவ்வளவு பாராட்டினாலும் தகும். தாம் எழுதக் கருதியிருந்த அடிகளின் வரலாற்று நூலுக்கு 'வள்ளற் பெருமானாரின் வாழ்க்கை வரலாறு' எனப்பெயரும் இட்டிருந்தார். மூலங்களைச் செப்பஞ்செய்து வெளியிட்ட அவர் வரலாற்றை எழுதுமுன் காலமாகி விட்டது தமிழகத்தின் தவக்குறையே. ஆ.பா. அவர்கள் எழுதவிருந்த வரலாறு எழுதி வெளிவராத குறை குறையே. அதை நீக்குமாறும் ஈடு செய்யுமாறும் இல்லை.

திருவருட்பாவிலுள்ள அகச்சான்றுகளையும் ஏனைய புறச் சான்றுகளையும் நன்கு ஆராய்ந்து இலக்கண இலக்கியச் சிறப்புடையதாய் ஆராய்ச்சி முறையில்



RangaRakes tamilnavarasam.com

வரலாறொன்று எழுதவேண்டுமென்ற எண்ணம் எமக்குப் பல ஆண்டுகளாகவே இருந்தது.

இதுவரை வெளிவந்துள்ள வரலாறுகளுக்கும் இவ்வரலாற்றிற்கும் பெரிதும் வேறுபாடுண்டு. முதலில் குறிப்பிடத்தக்கது நூலின் அளவு. இதுவரை வெளிவந்துள்ள வரலாறுகள் அனைத்தினும் இதுவே பெரியது. ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி, தொண்ட மண்டல சதகத்தின் நூற்பெயரிலக்கணம்-வழிபாடு கடவுள் வணக்கப்பாட்டுரை, குடும்ப கோரம், அடிகள் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடத்துச் செய்துகொண்ட நான்கு உரைநடை விண்ணப்பங்கள், அடிகளின் உபதேசங்களாகிய திருவருண் மெய்ம்மொழி-மஹோபதேசம் ஆகியவை முற்றிலும் அப்படியே எடுத்துக்கொடுக்கப்பெற்றுள்ளன. இவற்றைப் பற்றிய செய்திகளை மட்டும் கூறி இவற்றைத் திருவருட்பாவிற் காண்க என்று கூறிச் செல்ல எமக்கு மனமில்லை. மேற்கோளாக எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. கூறும் பொருளுக்கு நேர் தொடர்பான வரிகளை மட்டும் எடுத்துக் காட்டிச் செல்ல எமக்கு விருப்பமில்லை. அளவால் மட்டுமின்றி இந்நூல் பொருட்சிறப்பாலும் பெரிது. இதுவரை வெளி வந்துள்ள வரலாறுகளிற் கூறப்பெறாத பல செய்திகள் இந்நூலில் முதன் முதலாகக் கூறப் பெறுகின்றன. திண்ணையினின்றும் விழாமல் காக்கப் பெற்றது, துறந்து மீண்டது, கர்ப்பூரம் கிடைக்காது வருந்தியது, ஒற்றியில் தண்டிக்கப்பெற்றது, சிறுவர்க்குக் கல்வி பயிற்றியது, இறைவன் இரவில் எழுந்தருளி ஒன்று கொடுத்தது, திருநீரு கேட்கச் சுடர்ப்பூ அளிக்கப்பெற்றது, உடுத்த வேட்டியை அவிழ்த்துத் தரையில் விரித்துப் படுத்தயர்ந்தபோது இறைவன் எழுந்தருளி அருள் செய்தது. இரட்டைக் குதிரை வண்டியில் இறைவியோடும் எழுந்தருளி அருள் செய்தது. திருவடி தீக்கை, அந்த மத்தக சையோக தீக்கை, பரிச, நயன, வாசகதீக்கைகளைப் பெற்றது. ஆகியவையும் இன்னோரன்ன பிறவும் இவ்வரலாற்றில்தான் முதன் முதலாகக் கூறப்படுகின்றன. இவையனைத்திற்கும் திருவருட்பாவில் அகச்சான்றுகள் உள்ளன. இருந்தும் இதுவரை வரலாறேழுதியோர் இவற்றை யெல்லாம் கூறிலர்.

சிதம்பர இரகசியம் இதனுள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. சிதம்பர வரலாறும் சிறப்பும் இருபத்தைந்து பக்கங்களில் விரித்துச் சொல்லப்பட்டுள்ளன. ஒழிவிலொடுக்க ஆசிரியர் கண்ணுடைய வள்ளலாரின் வரலாறாகத் தெரிவன அனைத்தும் தொகுத்துக் கூறப்படுகின்றன. நான்கு மார்க்கங்களும் ஆறந்தங்களும் விளக்கப்பட்டுள்ளன. இன்று கிடைத்தற்கரிய நூல்களாகிய ஒழிவிலொடுக்கத்தின் முதற்பதிப்பு (1851), ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முதற்பதிப்பு (1879), திருவருட்பா முதற்பதிப்பு (1867) ஆகியவற்றின் முகப்புப் பக்கங்கள் (Title Pages) நிழற்படம் (photo) எடுத்து அச்சிடப்பெற்றுள்ளன. இவ்வாறு இந்நூல் பலவகையாலும் சிறப்புறச் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு இந்நூல்பலவகையாலும் சிறப்புறச் செய்யப்பட்டுள்ளது. இதுவரை வெளிவந்துள்ள வரலாறுகளிற் காணப்படும் ஐயந்திரிபுகளெல்லாம் இவ்வரலாற்றிற் கூறப்பெறும் செய்திகளால் களையப்பெறுகின்றன.

அடிகள் திருவரலாற்றை நாம் பின்வருமாறு வகுத்துள்ளோம்.

**1.சென்னை வாழ்க்கை**
**<u>(1,2,3,5 திருமுறைக் காலம்)</u>**

அகவை ஆண்டுகள்



RangaRakes tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| 1.கந்தகோட்டப் பகுதி | 1-12 | 1823-1835 |
| 2.திருவொற்றியூர்ப் பகுதி | 12-35 | 1835-1858 |

## 2.வடலூர் வாழ்க்கை
## (4,6 திருமுறைக் காலம்)

| | | |
|---|---|---|
| 1.பூர்வ ஞானசிதம்பரம் பகுதி | 35-44 | 1858-1867 |
| 2.உத்தரஞான சிதம்பரப்பகுதி | 41-47 | 1867-1870 |
| 3.சித்திவளாகப்பகுதி | 47-51 | 1870-1874 |

ஒன்பதாம் ஆண்டில் இறைவனால் ஆட்கொள்ளப் பெறுதல், ஓதாதுணர்தல், கந்தகோட்ட வழிபாடு, கண்ணாடியிற் காட்சிபெறல், கன்னிச் சொற்பொழிவு ஆகியவையும் பிறவும் கந்தகோட்டப் பகுதியுள் அடங்கும்.

பன்னிரண்டாம் ஆண்டில் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கியது முதலாக முப்பத்தைந்தாம் ஆண்டில் சென்னை வாழ்வை நீத்தது வரை, ஒற்றியூர் சென்று வழிபடுவதும், திருவலிதாயம் திருமுல்லை வாயில் திருத்தணிகை முதலிய தல வழிபாடுகளும் நூற் பதிப்புகளும் பிறவும் திருவொற்றியூர்ப் பகுதியுள் அடங்கும். திருத்தணிகைப் பகுதி என்றொரு தனிப் பகுதிக்கு இடமில்லை. அது கந்த கோட்டப் பகுதி திருவொற்றியூர்ப் பகுதிகளுள் அடங்கிவிடுகிறது.

கந்தகோட்டப் பகுதி திருவொற்றியூர்ப் பகுதி இவ்விரண்டும் கொண்ட சென்னை வாழ்க்கை, திருவருட்பா 1,2,3,5 திருமுறைக்காலம் ஆகும்.

அடிகள் கருங்குழியை உறைவிடமாகக் கொண்டு சிதம்பரம் சென்று வழிபடுவதும் மீள்வதுமாக இருந்ததும், திருமுது குன்றம் திருவண்ணாமலை திருவதிகை முதலிய தலங்களை வழிபட்டதும், சன்மார்க்க சங்கம் நிறுவியதும் திருவருட்பா முதற்பதிப்பு வெளிவந்ததும் பிறவும் பூர்வஞான சிதம்பரப் பகுதியுள் அடங்கும்.

சத்திய தருமச்சாலை நிறுவியதும் பிறவும் உத்தரஞான சிதம்பரப் பகுதியுள் அடங்கும்.

சத்திய ஞான சபை நிறுவியதும், மேட்டுக் குப்பத்தில் உறைந்ததும், சித்திவளாகத் திருமாளிகையும், சன்மார்க்க கொடி கண்டதும், சித்திவளாகத்தில் இறைவனோடிரண்டிறக் கலந்ததும் சித்திவளாகப் பகுதியுள் அடங்கும்.

பூர்வ ஞான சிதம்பரப் பகுதி, உத்தரஞான சிதம்பரப் பகுதி, சித்திவளாகப் பகுதி இம்மூன்றும்கொண்ட வடலூர் வாழ்க்கை 4,6 திருமுறைக் காலமாம்.

இவ்வாறு வகுத்துக்கொண்டு வரன்முறையாகக் கால வரிசைப்படி இவ்வரலாறு எழுதப்பெற்றுள்ளது. அடிகள் பெற்ற பெரும் பேறுகள்-மரணமிலாப்



RangaRakes tamilnavarasam.com

பெருவாழ்வு முதலிய-கூடியவரை விளக்கப்பட்டுள்ளன. பயன்மிக்க பதினொரு பின்னிணைப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.

31-12-1967இல் வடலூர் வரலாற்றை எழுதி வெளியிட்ட பின் அடிகள் வரலாற்றை எழுதத் தொடங்கினோம். 1969 தைப்பூசத்தில் வெளியிட எண்ணியிருந்தோம். பல இடர்ப்பாடுகளால் இரண்டாண்டுகள் தடைப்பட்டு இப்போது 100ஆவது தைப்பூச வெளியீடாக 9-2-1971 தைப்பூசத்தன்று வெளி வருகிறது.

இந்நூலை வெளியிடுவதற்கு நன்கொடையும் முன் பணமும் அளித்துதவிய அன்பர்களுக்கும் (பின் இணைப்பு பக்கம் 47 காண்க) குறிப்பாக புதுவை.திரு.P.N.இராஜமாணிக்கம் பிள்ளை அவர்களுக்கும், ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முதற்பதிப்பு ஒன்றைக் கொடுத்துதவிய அன்பர் புதுவை திரு.ரா.பரமதயாளம் பிள்ளை அவர்களுக்கும், Hints of Esoteric Theosophy என்னும் நூலின் படி ஒன்றை அளித்துதவிய அன்பர் காஞ்சிபுரம் ஓய்வுபெற்ற நீதிபதி திரு.C.M. சீதாராம முதலியார் அவர்களுக்கும் எமது நன்றி. நூலின் முன்னர் அச்சிடப்பெற்றுள்ள தருமச்சாலை, ஞானசபை, சிற்சபை, பொற்சபை, சித்திவளாகம் ஆகியவற்றின் படங்கள் 1838இல் எடுக்கப்பெற்றவை. இப்பழைய படங்களையும் எமது ஆராய்ச்சிக்கு இன்றியமையாதவையாகிய பழங் குறிப்புகள் பலவற்றையும் யாம் வடலூர் வரலாறு எழுதும்போதே எமக்குக் கொடுத் துதவியதோடன்றி இந்நூல் எழுதும் போதும் அச்சிடும்போதும் உடனிருந் துதவிய அறிஞர் கடலூர் திரு.தி.கி.நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு எம் நன்றி.

பல்வேறு பணிகளால், முன்னரே அறிவித்திருந்த நூல் வெளியீட்டு முன்னேற்பாட்டுத் திட்டத்தைத் (pre publication offer) தீவிரமாகச் செயற்படுத்தவியலாது பொருள் முட்டுப் பாட்டால் இடருற்ற காலையில் இடர் நீக்கியுதவியவர்கள் அறக்கொடை வள்ளல் திரு.நா.மகாலிங்கம் அவர்களாவர். அப்பெருந்தகையார்க்கு எமது நன்றி.

இந்நூலை அழகாக அச்சிட்ட திருச்சிராப்பள்ளி ஜோதி பிரண்டர்ஸ் உரிமையாளர் சன்மார்க்க மெய்யன்பர் திரு.ஜோதி இராமசாமி அவர்களுக்கு எம் நன்றி.

இவ்வாறு எம்மையும் பணிகொண்டு வாழ்வித்துவரும் எம்மையாளுடைய பெருமானார் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளாரின் பொன்னார் திருவடிகளை வழுத்துகின்றோம்.

**வடலூர்**
**9-2-1971** **சன்மார்க்க தேசிகன் ஊரன்**
**தைப்பூசம்**

சமரச சன்மார்க்கத்தையும் காந்தீயத்தையும்
தம் இரு கண்களாகக் கொண்டவரும்
தொழிலதிபரும், கல்வியாளரும், கொடையாளரும்
சென்னை இராமலிங்க மிஷன் தலைவரும்



RangaRakes tamilnavarasam.com

<u>பொருட்குறிப்பு</u>
<u>(பக்க எண்)</u>


**1.கந்தகோட்டப்பகுதி (1823-1835) 1-38**

நாடும் ஊரும், பிறந்த பொன்னாடு3, பெற்ற திரு ஊர் 4, பெற்றோர் 5, பிறப்பும் வளர்ப்பும், சிவபெருமானே சித்தராக வந்து அடிகளின் திருப்பிறப்பை அறிவித்தல் 6, திருப்பிறப்பு 7, பெயர்சூட்டல் 8, வளர்ப்பு 9, சிதம்பர தரிசனம், சிதம்பர ரகசியம் 10, ரகசியம் வெளியானது ஏன்? 11, பொன்னேரி வாழ்க்கை 13, சென்னை வாழ்க்கை, சென்னையில் உறைந்த இடம் 14, திண்ணையினின்றும் விழாமல் காக்கப் பெறுதல் பள்ளிப் பருவ நிகழ்ச்சிகள் 15, கந்தகோட்ட வழிபாடு 23 கண்ணாடியில் காட்சி பெறல் 27, ஓதாது உணர்தல் 30 ஒன்பதாம் அகவையில் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றது ஆடல் பருவத்தே பாடல் செய்யத் தொடங்குதல் 34, துலுக்காணத்து ரேணுகையைப் பாடியது 36, துறந்துமீண்டது 37.

**2.திரு ஒற்றியூர்ப் பகுதி (1835-1858) 39-168**

பன்னிரண்டாம் அகவை முதல் முறையான ஞான வாழ்க்கை தொடங்குதல், இப்பருவக் குணநலன்கள் 41, உணவில் வெறுப்பு 42, பொருள் ஆசை இல்லை 44, பொய் உலக ஆசாரம் இல்லை 45, திரு ஒற்றியூர் வழிபாடு, அதன் வரலாறும் சிறப்பும் 46, அடிகள் கண்ட ஒற்றியூர் 47, ஒற்றி முருகன் திருமுன்னர் 48, கர்ப்பூரம்




RangaRakes tamilnavarasam.com

கிடைக்கவில்லை 49 ஒற்றியூர்ப் பதிகங்கள் 50, ஒற்றியூர்க்கு நெஞ்சை அழைத்தல் 51, ஒற்றியூரில் அருளீய அகப்பொருள் பாடல்கள், ஒற்றியூர் அனுபவங்கள், ஒற்றியில் திருவாசகம் 54, நந்தி ஆசிரமமும் நந்தி ஓடையும் 55, பட்டினத்தார் திருக்கோயில், குறுக்கு வழி 57, உத்தம மனிதன் போகிறான்; ஒற்றியிற் போய்ப் பசித்தனையோ? வடிவுடை அம்மை அண்ணியார் வடிவில் தோன்றி அமுது அளித்தது 58, கோயில் பூசகர் வடிவில் இறைவனே வந்து உணவு அளித்தது, ஒற்றியில் தண்டிக்கப்பட்டது 60, ஒற்றியிலா? தில்லையிலா? 62, தொழுவூர் வேலாயுத முதலியார் அடிகளின் மாணவரானது (1849)-63 திருமணம் (1850)-64, சென்னையில் வித்வானாக விளங்கியது பாடம் சொல்லல், நூல்கள் பதிப்பித்தல், சாற்றுக்கவி அளித்தல், பெருமானிடம் பாடம் கேட்டோர் 66, சிறுவர்க்குக் கல்வி பயிற்றல், 'ஒழிவில் ஒடுக்கம்' பதிப்பித்தது (1851), அதன் ஆசிரியர் கண்ணுடைய வள்ளலார் வரலாறு 67, வள்ளலார் ஆதீன வரலாறு 76, உரை ஆசிரியர் சிதம்பர சுவாமிகள் 77 அடிகள் பதிப்பு, அடிகள் அருளிய 'ஒழிவில் ஒடுக்கப் பாயிரவிருத்தி' 78, 'நிட்டானுபூதி உரை'க்குச் சாற்றுக்கவி அளித்தது (1851)-93, 'மனுமுறை கண்ட வாசகம்' இயற்றியது (1854)-94, சென்னையில் இருந்தபோது பழகிய பெரியோர்கள் ஆறுமுக சுவாமிகள் 103, தாண்டவராய்த் தம்பிரான் 107 'சிதம்பரப் புராணப் பதிப்புக்குச் சாற்றுக்கவி அளித்தது (1855)-111, 'தொண்ட மண்டல சதகம்' பதிப்பித்தது (1855) 114, தொண்டை மண்டலமா? தொண்ட மண்டலமா? அடிகள் அருளியபெயர் இலக்கணம் 116, அடிகளின் கல்வெட்டு ஆராய்ச்சி, சதகத்தின் காப்புச் செய்யுளுக்கு அடிகள் செய்த உரை 130, வழிபடு கடவுள் வணக்கப் பாட்டு உரை 131 சென்னையில் சில நிகழ்ச்சிகள், பாம்பு தீண்டாது அகன்றது 137, திருநீறு அளித்து நோய் தீர்த்தது, திருமண வீட்டுக்குச் சென்றது, சங்கராசாரியரின் ஐயம் தெளிவித்தது 138, சிறுவர்களை அடிக்க வேண்டாம் 139, ஏட்டாலும் கேட்க மறுத்தது தமிழ் என்னும் சொல்லுக்கு இட்ட உரை 141, திருத்தணிகை வழிபாடு, திருத்தணிகை வரலாறும் சிறப்பும் 145, அடிகளின் வழிபாடு, சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே 146, கனவிலேனும் காட்டுகிலாய், பாலும் நீரும் 148, நின் சித்தம் என்பாக்கியம் 149, எழுதாக் குறைக்கு என் செய்வோம், திருத்தணிகைத் திருப்பதிகங்கள், 150, பிற தலங்களின் வழிபாடு திருவலிதாயத்தை வழிபட்டது 151, திருமுல்லை வாயில் வழிபாடு 153, எவ்வுள் வழிபாடு 155, 'சின்மயதீபிகை' பதிப்பித்தது (1857), வேத நாயகம் பிள்ளை 'நீதி நூ'லுக்குச் சாற்றுக்கவி அளித்தது, அவரது 'சர்வ சமய சமரச கீர்த்தனைகள்' அடிகள் முன்னர் அரங்கேற்றப் பெற்றது 156 குடும்ப கோஷம் 158, சென்னை வாழ்வை நீத்தது (1858) நகர வாழ்வின் துன்பத்தைக் காண அஞ்சித் தோட்டங்களில் திரிந்தது 161, புள்ளிருக்கு வேளூரை வழிபட்டது 163 அடிகள் அருளிய செவ்வாய்க் கிழமை விரத முறை 165 திருஆரூர் 166, திருக்கண்ணமங்கை, சீகாழி 167.

## <u>3. பூர்வஞான சிதம்பரப்பகுதி (1858-1867) 169-312</u>

கருங்குழியில் உறையத் தொடங்கியது (1858)-171, தல வழிபாடு, திருமுதுகுன்றம் 172, திருஅண்ணாமலை 174, திரு அதிகை, தனித்து உறைதல் 175, சிங்கபுரிக்கந்தரைப் பாடியது, கல்பட்டு சுவாமிகளை ஆட்கொள்ளல் 176, சிதம்பர வழிபாடு, சிதம்பர வரலாறு 177, சிதம்பரச் சிறப்புகள் பெயர் 178, பழைமை 180, தலைமையும் முதன்மையும், எதற்கும் முன் நிற்றல் 182, ஆகாயத்தலம் 183, அனாகத்தலம் சபை-அம்பலம் 185, தில்லைத் திரு நடனம் 187, நடராச வடிவம் 194, ரகசியம், இருசமயக்கடவுள் இருப்பு 195, திருமுறைகளின் மூல ஏடுகள் வைக்கப்பெற்றிருந்தமை 198, மாணிக்கவாசகர் சிற்றம்பலத்துள் புகுந்து மறைந்தனர்


RangaRakes tamilnavarasam.com

சேக்கிழார்க்கு அடி எடுத்துக் கொடுத்தமை, சமயப்பொது 199, பலர் தொழுதமை 200, சிதம்பரத்தில் அருளிய பாடல்களும் வழிபாடும், சிதம்பர விஷயமான பாடல்கள் 201, எல்லாம் செயல்கூடும் என் ஆணை, அடிகள் ஆணையில் கிளத்தல் 202 சிற்றம்பலப் புகழ்ப் பாக்கள் 204, சிவகாமி அம்மையைப் பாடியது 206, சிதம்பரப் அனுபவங்கள், இறைவன் தில்லைத் திருநடனம் காண்க என்று அருளியது. இன்னும் ஒருகால் காண்பேனோ? 207, சிறிது அறிந்தேன் முழுதும் அறிவேனோ? அம்பல வாயிலில் அழுது நின்றது, அம்பலத் திருவாயிலில் உரைத்தது 208, அம்பலத் திருக்காட்சி 209 திருச்சிலம்பு ஒலி கேட்டது, அம்பலவாணனிடம் பரிச தீக்கையும் வாசக தீக்கையும் பெற்றது 210, தற்காலத்தில் சிதம்பரம் 211, சிதம்பரம் கோயில் புதுக்கக் கருதியது 212, சமயகுரவர் நால்வரையும் அவர்களது அருளிச் செயல்களையும் அவர்களது அருள் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்களையும் போற்றுதல் 213, ஆளுடைய பிள்ளையார், அவரை குருவாகக் கொள்ளல். உயிர்-அருள்-சிவ அனுபவங்கள் இன்னது எனப்பிள்ளையார் அருளியது 214, அடிமுடி இது என உணர்த்தி அருளியது, திருநெறித் தமிழ் கொண்டு ஐயம் நீத்து அருளியது 216, கற்பம் பல முயன்றாலும் பெறலரும் திறன் எலாம் ஒரு பகற் பொழுதில் அளித்தது 217, பிள்ளையாரின் அருள்வாழ்வில் நடைபெற்ற அற்புதங்களில் ஈடுபடல் 218, ஆளுடைய பிள்ளையாரின் மொன் மொழிகளைத் தம் நெஞ்சுக்கு எடுத்துரைத்தல் 220, ஆளுடைய அரசுகள் 221, ஆளுடைய நம்பிகள்; ஏழிசையாய்-திருப்பாட்டு 223 யானைமீது எழுந்தருளிய திருக்கோலத்தைக் காணப் பெற்றிலனே, உன் திருப்பாட்டைத் தினந்தோறும் நான் படிக்கும் போது, உன் முடிமேல் இறைவன் திருவடிக்கு என்ன ஆசையோ 224, திருமால் பரவைவீட்டு வாயிற்படியாய் வடிவெடுக்க நேர்ந்திலனே, சுந்தரர் மணத்தில் தடுத்தாட்கொண்டது 225, கச்சூரில் பிச்சை ஏற்று ஊட்டியது, ஆளுடைய அடிகள், திருவாசக அனுபவம், அன்புருவம், அருளுருவம், இன்புருவம் 226, 'என்னையும் இருப்பதாக்கினன்' என்றதன் பொருள் என்ன?, வாட்டமெல்லாம் வந்தொருக்கால் மாற்றுதியே 227, திருவாசக இன்பம், நான் கலந்து பாடுங்கால், நின் ஒருமொழியே போதும் 228, பறவைகளும் வேட்டமுறும் விலங்குகளும் நாட்டமுறும், ஆளுடைய அடிகளுக்காக இறைவன் செய்தருளிய அற்புதங்களைப் போற்றுதல் 229, திரு ஐந்தெழுத்தில் பற்று, இறுக்கம் இரத்தின முதலியாருக்குத் திருஐந்தெழுத்தை உபதேசித்தது 230 திருமுறைகளால் அருள் பெற்றது, திருநெறி மெய்த் தமிழ் மறையாம் திருக்கடைக்காப்பால் இறைவன் திரு உள்ளம் காட்டி அருளியது 232, திருமந்திரத் திருமுறையால் உணர்த்தி அருளியது, 233, 'உலகெலாம்' என்னும் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம் 234, ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம் 241, ஷடாந்தம் 244, கலாந்தம் 246, நாதாந்தம், யோகாந்தம் 247, போதாந்தம், வேதாந்தம் 249, சித்தாந்தம் 250 வேதாந்த சித்தாந்த சமரசம்-ஆறு அந்த சமரசம்-ஆறு அந்த அனுபவ சித்திகளை அடிகள் பெற்றமை 252, நான்கு மார்க்கங்கள் 256, தாச மார்க்கம்-சரியை-சாலோகம் 258 சற்புத்திர மார்க்கம்-கிரியை-சாமீபம் 259, சகமார்க்கம்-யோகம்-சாரூபம் 260, சன்மார்க்கம் -ஞானம்-சாயுச்சியம் 261 ஞானத்தின் சிறப்பு 262, சன்மார்க்கத்தின் சிறப்பு 264 நான்கு மார்க்கங்களுக்கு அடிகள் அருளும் புதிய விளக்கம் 256, சமரச சன்மார்க்க கொள்கைகள் 266, சன்மார்க்க சங்கம் நிறுவியது, (1865) 267, சங்கத்தார் 266, சங்கத்தலைவர், சங்கமதிப்பு 270, சங்க சாதுக்கள் 271, சங்கத்தார் தொண்டுகள், சங்கப் பெயர்மாற்றம், சங்கம் சார்வீர் 272 கூடலூரில் உறைதல் 274, அடிகளை ஒரு சித்தர் வந்து கண்டு சென்றது 275, தீண்டிய பாம்பு மாண்டது, கூடலூர் தேவநாயகம் பிள்ளைக்கு அருளியது 276, ஒரு அன்பருக்கு வழித்துணை அருளியது, தாசில்தாருக்கு அறிவுரை, மற்றும் சில அற்புதங்கள் 277, பிரம்ம சமாஜத் தாருடன் உருவ வழிபாடுபற்றி வாது (16-1-1867)



RangaRakes tamilnavarasam.com

278, பிரம்ம சமாஜமும் அதனை நிறுவியவரும் 285, பிரம்ம சமாஜம் 287, விக்கிரக வழிபாட்டைப் பற்றி அடிகள் கொள்கை 289, கருங்குழியில் நிகழ்ந்த அற்புதங்கள், நீரால் விளக்கு எரித்தது 290, இரவில் இறைவன் எழுந்தருளி 'ஒன்று' கொடுத்தது 292, திருநீறு கேட்கச் சுடர்ப்பூ அளிக்கப் பெற்றது 295, அடிகளும் அரசாங்க அதிகாரிகளும் 296, அடிகளை இசைவிருந்தில் கலந்துகொள்ள ஒருவர் அழைத்தல்; திருஅருட்பா அச்சில் வந்தது; முதல் நான்கு திருமுறைகளின் முதல் பதிப்பு (1867)-299, நிர்பந்த ஏற்பாடு இறுக்கம் இரத்தின முதலியார் நாளும் ஒரு வேளையே உண்ணும் விரதமும் அடிகளின் எதிர் விரதமும் 300, அச்சிட இசைவு அளித்தல் 302, 'இராமலிங்க சாமி' என்று வழங்காமை வேண்டும் 303, 'திருஅருட்பா' பெயர் திருமுறை வகுப்பு 305, 'திருவருட்பிரகாச வள்ளலார்' என்னும் பெயர் முதல் பதிப்பு வெளியீடு 307, சிறப்புப் பாயிரங்கள் 308 தொ.வே.பாடிய 'திருஅருட்பா வரலாறு' 'இனி அச்சில் பதிக்கப் படுபவை' என்னும் குறிப்பு 310.

**4.உத்தரஞான சிதம்பரப்பகுதி (1867-1870) 313-436**

சத்திய தருமச்சாலை நிறுவியது (23-5-1867), பசியின் கொடுமையும் அதைத் தவிர்த்தலின் சிறப்பும் 315, சீவகாருண்ய ஒழுக்கம்-பசிக்கொடுமை 316, பசிதவிர்த்தலின் சிறப்பு, சத்திய தருமச்சாலை பெயர் சூட்டல், இடம் தேர்ந்து எடுத்தல் 322 இனாம் பத்திரம் 323, தருமச்சாலைத் தொடக்கவிழா 334, சீவகாருண்ய ஒழுக்க விளம்பரம் 335, தருமச்சாலையின் தொண்டு 339, கிளைச்சாலைகள், 'சீவகாருண்ய ஒழுக்கம்'-நூலை அருளியது 341 சன்மார்க்க போதினி பாடசாலை (1867)-344, 'சன்மார்க்க விவேக விருத்தி' பத்திரிகை தொடங்குதல் 346, அடிகள் சாலையில் உறைதல், அடிகளின் தோற்றம் 349, உடை 350, உணவு 351, உறக்கம் 353, பழக்க வழக்கங்கள்-முக்காடு 354, கைகளைக் கட்டி இருத்தல், திரு அடிநிலைகள் 355, அடக்க ஒழுக்கம் 356, சீவகாருண்ய உள்ளம் 357, சீவகாருண்யத்தின் எல்லை 363,அடிகளின் கொள்கைகள், கடவுள் ஒருவரே 364 கடவுள் அருட்பெருஞ்சோதியர், சிறுதெய்வ வழிபாடு கூடாது 365, சிறு தெய்வங்களுக்கு உயிர்ப்பலி இடுதல் கூடாது 367 புலால் மறுத்தல் 368, சாதி சமய வேறுபாடுகள் கூடா 369, எவ் உயிரையும் தன் உயிர்போல் எண்ணுதல் 375, வேத ஆகம சாத்திர புராண இதிகாசங்கள் முடிவான உண்மையைத் தெரி தெரிவிக்க மாட்டா 376, சமாதி வற்புறுத்தல் 378, குறையை இறைவனிடத்து விண்ணப்பம் செய்வோம் 381, குடும்பகோரம் 381, கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் வரலாறு 395 சுவாமிகள் அடிகளைக் காணல் 396, தண்டபாணி சுவாமிகள் வரலாறு, சுவாமிகள் அடிகளைக் காணல் 398, புலவர் புராணத்தில் சுவாமிகள் அடிகளைப் பாராட்டல் 400. திருச்சிற்றம்பல ஞானிகள் 402, இலக்கணக் கடிதம் 403, அகரத்தைப் பற்றிய வினாக்கம் 406, சாலையின் நடைமுறை 409, ஒருநாள் காலை அடிகள் சாலையில் பெற்ற பேறு 410, சாலையில் நிகழ்ந்த அற்புதங்கள் 411, உடுத்த ஆடையை அவிழ்த்துத் தரையில் படுத்து அயர்ந்தபோது இறைவன் வந்து அருளியது 412, ஒரே சமயத்தில் பல இடங்களில் திகழ்ந்தது 414 அடிகளின் திருக்கரம் அமுதசுரபி ஆதல், சாலைக்கு அரிசி வருவித்தல், திரை மறைவில் திருச்சிற்றம்பலம், மழை பெய்வித்தது 416, தீ அணையச் செய்தது, புன்செய் நன்செய் ஆதல், ஒருவரது அகந்தை அடங்கியது 417, கள்வர்க்கும் கருணை பாலித்தது 418, புற இனத்தாரை அக இனத்தாராக மாற்றியது 419, பொன் விளைவு 420, சபாபதி சிவாசாரியார் 422, வேட்டவலம்



RangaRakes tamilnavarasam.com

ஜமீன்தார் அருட்பா மருட்பாவாதம் 424, ஆறுமுக நாவலர் வழக்கு 425, அடிகளின் மருத்துவத் தொண்டு 427, திருக்குறள் வகுப்பு நடத்தச் செய்தது 428, சன்மார்க்க சங்கம் விளங்கும் கால அறிவிப்பு (27-4-1870)-429, அடிகள் இறைவனிடம் வற்புறுத்தி விண்ணப்பித்தல் 430, விரைவில் அருளுமாறு வேண்டுதல் 431, வேண்டிய பொருள் எலாம் ஒரு நாழிகையில் கிடைக்கப் பெற்றது, அடிகளுக்கு இறைவன் சன்மார்க்க மரபை உணர்த்துதல் 433, சன்மார்க்கப் பணி செய்யக் கட்டளை இடுதல் 435.

**<u>5.சித்திவளாகப் பகுதி (1870-1874) 437-552</u>**

மேட்டுக்குப்பத்தில் உறையத் தொடங்கியது 439, சித்திவளாகத் திருமாளிகை 439, சித்திவளாகப் பெயர்; முத்தியும் சித்தியும் 440, சித்திவளாகத்தில் ஆற்றிய அருந்தவம் பிரமதண்டிகா யோகம் 441, ஒரு நாழிகையில் யோக நிலையை உணர்த்தப் பெற்றது, உருவத்தை மறைத்துக்கொண்டு பிறர் கண்களுக்குத் தோன்றாது உறைதல் (அக்டோபர் 1870) 442, சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக்கட்டளை (30-3-1871)-444, சன்மார்க்கப் பெரும்பதி வருகைபற்றிய அறிவிப்பு (12-4-1871)-446, சமரச வேத பாடசாலை நிறுவியது (11-1-1872)-447, சத்திய ஞானசபை நிறுவியது (25-1-1872)-448, உத்தர ஞான சிதம்பரம் 449, சத்தியஞான சபை 451, ஞான சபையில் முதல் தைப்பூச விழா (25-1-1872), சபை விளம்பரம் 453, சபை வழிபாட்டு முறை 456, சாலையில் உள்ளவர்க்கு இட்ட ஒழுக்கக் கட்டளை (9-3-1872)-457, அருட்பெருஞ் ஜோதி அகவல் அருளியது (18-4-1872)-458, சன்மார்க்கப் பிரார்த்தனை, கல்பட்டு இராமலிங்க சுவாமிகளுக்காக அருளிச் செய்த விண்ணப்பம் (12-5-1872)-460, சன்மார்க்க விண்ணப்பங்கள், சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம் 461, சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம் 465, சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம் 473, சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம் 477, ஞானசபை வழிபாட்டு விதி வகுத்தது, நிலையங்களின் பெயர்களை மாற்றியது (18-7-1872)-ஞானசபை விளக்க விபவ பத்திரிகை 478 விளக்கு 480, தூசு துடைத்தல், சபையினுள் புகுவோர்க்கு உரிய தகுதிகள் 481, சபைத் திறவு கோலை வைத்துக் கொள்ளும் முறை 482, அன்பர்களை எச்சரித்தது (25-11-1872) சித்திவளாகத்திலும் தருமச்சாலையிலும் வசிப்பவர்கள் பரஸ்பரம் பழகுவதற்கு எச்சரிப்புப் பத்திரிகை 484, வதந்தி ஒன்றை அறிவிப்பால் நீக்கிது (8-9-1873)-485, சித்தி வளாகத்தில் உபதேசித்த ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கப் பெருநெறியின் உண்மை ஒழுக்கங்களைக் குறிக்கும் அருட்பிரகாசத் தந்தையார் திருஅருள் மெய்ம்மொழி 486, இந்திரிய 488, கரண-ஜீவ-ஆன்ம ஒழுக்கங்கள் 489, கொடி கட்டியது, பேர் உபதேசம் (22-10-1873) கொடி-சன்மார்க்கக் கொடி 491 பேர் உபதேசம், மகா உபதேசம் 493, சித்திவளாகத்தில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகள்-இறைவன் இரட்டைக் குதிரைவண்டியில் வந்து அருளியது, மூட ஆட்டுக்குட்டியின் அன்பும் அடிகளின் அறக்கருணையும் 503, வலைஞர்க்குக் காட்டிய மறக்கருணை 504, அடிகள்பட்ட அரும்பாடுகளும், பெற்ற பெரும் பேறுகளும் 505, இறைவனின் பிள்ளை ஆனது 507 வடலூர்ப் பிள்ளையார் 508, அடிமுடி காட்டப் பெற்றதும் சூட்டப்பெற்றதும், திருஅடி 511, திருஅடியே சிவம், யான் எனது அற்ற இடமே திருஅடி 512, அடி முடி காட்டப்பெற்றது 513, அடி முடி சூட்டப்பெற்றது, திருஅடி தீக்கை 516 அத்தக மத்தக சையோக தீட்சை பெற்றது 517, அடிகளும் இறைவனும் உடல் உயிரை மாற்றிக் கொண்டது 518, தேக சித்தி, சுத்த, பிரணவ. ஞான தேகங்களைச் பெற்றது 521 சுத்த மாதி சுவர்ண-பிரணவ-ஞான தேகங்கள்



RangaRakes tamilnavarasam.com

524, நரை திரை முதலியன இல்லாமை 526, நிழற்படம் பிடிபடாமை 527 மழையால் நனையாமை, கர்ம-யோக-ஞான சித்திகள் பெற்றது 528, எல்லாம் வல்ல சித்தி பெற்றது 529, ஐந்தொழில் ஆற்றல் பெற்றது 530, மணிமுடி சூட்டப்பெற்றது 530. செங்கோல் அளிக்கப்பெற்றது 531, கங்கணம் அணிவிக்கப் பெற்றது 532, ஆழி-அம்பலத்து அரசு அளிக்கப் பெற்றது 533 செத்தாரை எழுப்புதல் 535, மரணம் இல்லாப் பெருவாழ்வு 537, ஞான சபையை மூடியது, வடலூரிலும் சித்திவளாகத்தில் பாடிய பாடல்கள் -ஆறாந்திருமுறை 547, சித்திவளாகத்தில் திருவிளக்கு வழிபாடு ஏற்படுத்தியது 548. இறைவனோடு இரண்டறக் கலந்தது 549, பிற்செய்திகள் 550, இந்நூல் ஆசிரியரிடமுள்ள மூல ஏட்டின் படிகள் 551.

**6.பின் இணைப்புகள் 1-48**

(1)தொ.வே.பாடிய திருஅருட்பா வரலாறு 3, (2) தியாசபிகல் சொசைட்டியாருக்குத் தொ.வே.அளித்த வாக்கு மூலம் (ஆங்கிலம்) 12, அதற்கு இதழாசிரியர் H.P.பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய முன்னுரை (ஆங்கிலம்) 16 வாக்குமூலத்தின் கீழ், பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய பின் குறிப்பு (ஆங்கிலம்), தொ.வே.அளித்த வாக்குமூலத்தின் தமிழாக்கம் 17, அதற்குப் பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய முன்னுரையின் தமிழாக்கம் 22, தொ.வே.வாக்குமூலத்திற்குப் பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய அடிக்குறிப்பின் தமிழாக்கம் 23, (3) தென் ஆர்க்காடு ஜில்லா கெஸட்டீர் குறிப்பு 25, அதன் தமிழாக்கம் 26, (4) அடிகளின் சம காலப் பெரியோர்கள் புலவர்கள் 28, (5) அடிகள் வழிபட்ட தலங்கள் (திரு அருட்பாப் பாடல்பெற்றவை). வைப்புத் தலங்கள் 29, (6) அடிகளின் அருளிச் செயல்கள் 30, (7) அடிகள் முன் பிறப்பில் தாயுமானவரா? 31, (8) அடிகள் மீண்டும் வருவாரா? 34, (9) இரண்டரை நாழிகை 40, (10) அடிகள் வரலாற்றுக் குறிப்புகள் 43 (11) அடிகள் வரலாற்றுக் காலக் குறிப்புகள் 45.

**முற்றும்**

## இராமலிங்க அடிகள்

## சென்னை வாழ்க்கை

## 1.கந்த கோட்டப் பகுதி

## (1823-1835)



RangaRakes tamilnavarasam.com

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# இராமலிங்க அடிகள் வரலாறு

## சென்னை வாழ்க்கை

## 1.கந்த கோட்டப் பகுதி 1823-1835

**(அகவை 1-12)**

### நாடும் ஊரும்

### பிறந்த பொன்னாடு

பாரினிற் சிறந்தது பரத கண்டம். இதனைச் சிவயோக பூமி என்பர் அடிகள். தமிழ் மொழியின் சிறப்பெழுத்தாகிய ழ கரத்திற்கு இலக்கணங்கூறும் அடிகள் ' சிவயோக பூமியாகிய பரத கண்டத்தில் பௌராணிக தத்துவத்தாற் குறிக்கப்பட்ட



RangaRakes tamilnavarasam.com

ஐம்பத்தாறு தேசங்களுள் சுதேசந் தவிர மற்ற ஐம்பத்தைந்து தேச பாஷைகளிலுமில்லாததாயும்.....................' என்றெழுதுவர். (தமிழ் என்பதன் உரை). இப்பரத கண்டத்தின் தென்பகுதி தென்னாடாம் தமிழ்நாடு. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட இத்தமிழ்நாடு வள்ளலாரையும் தந்தது. தமிழகம் ஞானபூமி. வள்ளுவர் முதல் வள்ளலார் வரை ஞானிகள் பலரை வாழையடி வாழையாகப் பெற்றெடுத்த ஞானமண். திருக்குறளும் திருமந்திரமும் திருவாசகமும் திருவருட்பாவும் தோன்றிய ஞான மண். இதனை 'மாதவம் செய்த தென்திசை', 'தேசம் எல்லாம் விளங்கிய தென்திசை' என்பர் சேக்கிழார். இத்தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறை.

ஞான பூமியாகிய இத்தமிழகத்தில் தம்மை பிறப்பித்தமைக்காக அடிகள் இறைவனுக்கு நன்றி கூறுவர்.

"சுத்த சன்மார்க்க லக்ஷிய சத்திய ஞானக் கடவுளே! ஜீவர்களாற் கணித்தறியப்படாத பெரிய உலகின் கண்ணே, பேராசை பெருங்கோபம் பெருமோகம் பெருமதம் பெருலோபம் பேரழுக்காறு பேரகங்காரம் பெருவயிரம் பெருமடம் பெருமயக்கம் முதலிய பெருங் குற்றங்களே பெரும்பாலும் விளைவதற்குரிமையாகிய மற்றையிடங்களிற் பிறப்பியாமல் குணங்களே பெரும்பாலும் விளைதற்குரிய இவ்விடத்தே, உறுப்பிற் குறைவுபடாத உயர்பிறப்பாகிய இம்மனிதப் பிறப்பில் என்னைப் பிறப்பித் தருளிய தேவரீரது பேரருட் பெருங் கருணைத் திறத்தை யென்னென்று கருதி யென்னென்று துதிப்பேன்!"

-சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெருவிண்ணப்பம்

அடிகள் இறைவனிடத்துச் செய்துகொண்ட உரைநடை விண்ணப்பங்கள் நான்கு கிடைத்திருக்கின்றன. அவை சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம், சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெருவிண்ணப்பம், சமரச சுத்த சன்மார்க்க சத்தியஞான விண்ணப்பம், சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம் என்பன. இவற்றுள் முதல் இரண்டிற்கும் அடிகளாரது தெய்வத் திருக்கரத்தால் எழுதப் பெற்ற மூலங்களே கிடைத்துள்ளன. இரண்டாவதாகிய சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பத்தின் ஒரு பகுதியே மேலெடுத்துக் காட்டப்பட்டது. தன்னைத் தமிழ் நாட்டிற் பிறப்பித்தமைக்காக அடிகள் இறைவனுக்கு நன்றி கூறுவதை இதனுட் காண்கிறோம். உலகில் தமிழகம் ஒன்றே குணங்கள் விளைதற்குரிய இடம் என்பதும் தமிழகந்தவிர மற்றை இடங்கள், பேராசை-பெருங்கோபம் பெருமோகம்-பெருமதம்-பெருலோபம்-பேரழுக்காறு-பேரகங்காரம்-பெருவயிரம்-பெருமடம்-பெருமயக்கம் முதலிய பெருங் குற்றங்களே விளைதற்குரியவை என்பதும் அடிகளார் கருத்தாதல் காண்க. இதனால் அடிகளது நாட்டுப்பற்று நன்கு விளங்கும். இறைவா! என்னை இந்நாட்டிற் பிறப்பித்தாயே, இதற்கு எவ்வாறு நன்றி கூறுவேன்! என்று முறையிடுமளவிற்கு அடிகளிடத்து நாட்டுப்பற்று முறுகியிருந்தது. அதன் காரணம் தமிழ் மண்ணின் ஞானச் சிறப்பே. ஞானத்தை விளைவிக்குந் திறத்தில் பரந்த இவ்வுலகில் தமிழகம் ஒன்றே நன்செய் நிலம், மற்றவை புன்செய் நிலங்களே.

## பெற்ற திருவூர்

வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகில், சோழ வள நாட்டில், சிதம்பரத்திற்கு வடமேற்கே ஏறத்தாழப் பத்துக் கல்லில் உள்ள மருதூர், அடிகள் பிறந்த திருவூராகும். இது தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் உள்ளது.

இதனைத் தொழுவூர் வேலாயுத முதலியாரவர்கள் தமது திருவருட்பா வரலாற்றில்

**மணிகொழிக்கும் கல்லோல மாக்கடலை முகந்துண்டு**
**பிணிதவிர்க்கத் தலைப்பெயலும் பெய்யாத காலத்தும்**
**தணிவில்வளந் தருபொன்னித் தடம்புனல்சூழ்ந் தகன்கடைவாய்**
**மணிமுழக்கம் கேட்டறியா வளநாடு சோணாட்டில்** 1

**நீர்பூத்துப் பிறைக்கொழுந்து நின்றவிர்செஞ் சடைக்காட்டின்**
**ஏர்பூத்த பவளமலை இமையம்அருள் பசுங்கொடியும்**
**நார்பூத்த பன்னகமும் அடுபுலியும் நலன்ஓங்கச்**
**சீர்பூத்த பொதுஉடைய திருத்தில்லைப் பதிஒருசார்** 2

**ஐந்திணைசேர் அகத்தமிழின் துறைநுகர்ந்து புறத்துறையின்**
**வந்தபொருள் அவைகொண்டு செய்வனசேய் மாண்பினவாம்**
**நந்தல்இலா ஆக்கத்து நாற்குடியும் தழைத்தோங்கும்**
**கொந்தவிழ்பூந் தண்மருதக் குலமருதூ ராம்மருதூர்** 3

-திருவருட்பா வரலாறு

எனப் பாடுவர். பண்ணுருட்டியிலிருந்து வடலூர் வழியாகக் கும்பகோணம் செல்லும் சாலையில் (இச்சாலையே தருமச்சாலைத் தொடக்க விழா அழைப்பில் 'சென்னை நகரிலிருந்து கும்பகோணத்திற்குப் போகின்ற பெரிய பட்டை' எனக் குறிப்பிடப் பெறுவது) வடலூரிலிருந்து தெற்கே மூன்று கல்லில் (சென்னையிலிருந்து 128/2-ஆவது மைல்) மருதூர்ச் சாலை பிரிகிறது. அங்கிருந்து மருதூர் இரண்டரைக் கல். மருதூரில் அடிகள் பிறந்த வீடு சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இருந்தது. இப்போது இல்லை. முற்றிலும் இடிந்து போயிற்று. வீடு இருந்த இடம் திறந்த வெளியாக இருக்கிறது.

## பெற்றோர்

அடிகளை மகனாகப் பெறும் பேறு பெற்ற பெற்றோர்கள் இராமையபிள்ளை, சின்னம்மாள் என்போர். இவர்கள் சமயம் சைவம். குலம் வேளாண் குலம். மர்பௌ கருணீகர் மரபு.

**இராமையன் மருவாமை இராமைய னிராமையன்**
**அராமுடிப்பூ மணந்தபுகழ் அருங்கருணீ கக்குலத்தோன்**
**பராவுவட மீன்கற்பின் சின்னம்மை சின்னம்மைப்**
**பொராவண்ணம் துணைகொண்டு பொதுநீக்கி அறம்புரந்தான்.**

-திருவருட்பா வரலாறு (தொ.வே.)4.

இராமையாபிள்ளை மருதூரின் கிராமக் கணக்கர். பிள்ளைகளைக் கூட்டிப் பாடஞ்சொல்லும் கணக்காயாராகவும் விளங்கினார். சின்னம்மையார், செங்கற்பட்டு மாவட்டத்தில் பொன்னேரிக் கருகிலுள்ள சின்னகாவணம் என்னும் ஊரிற் பிறந்து வளர்ந்தவர். இராமைய பிள்ளைக்கு ஆறாவது மனைவியாக வாழ்க்கைப்பட்டவர். ஐந்து மனைவியரும் மகப்பேறின்றி ஒருவர்பின் ஒருவராக இறக்கவே இவரை ஆறாவதாக மணமுடித்தார். இவர்களுக்கு சபாபதி, பரசுராமன் என்னும் இரு ஆண்மக்களும், உண்ணாமுலை, சுந்தரம் என்னும் இரு பெண் மக்களும் பிறந்தனர்.

[1.கருணீகர், சைவ வேளாளருள் ஒருவகையினர். சித்திரகுப்தர் இவர்களது குல முதல்வர். சித்திராபௌர்ணமி இவர்களுக்குச் சிறப்பு. இவர்கள் குலத்தொழில் ஊர்க் கணக்கு, கோயிற் கணக்கு. சீர்கருணீகர், சரட்டுக் கருணீகர், மேல்நாட்டுக் கருணீகர், கீழ்நாட்டுக் கருணீகர், கைகாட்டிக் கருணீகர் என்பன இவர்களது உட்பிரிவுகள். சரட்டுக் கருணீகர் பூணூல் அணிவர். இவர்கள் உறையுமிடம் அக்கிரகாரம் எனக் கருணீக புராணத்திற் கூறப்படுகிறாது. 64 அக்கிரகாரங்களும், 4698 உபகிராமங்களும் இவர்களுக்கு இருந்தனவாம். இவர்களுள் 64 கோத்திரமும் 6 சூத்திரமும் உண்டு.]

## பிறப்பும் வளர்ப்பும்

### சிவபெருமானே சித்தராக வந்து அடிகளின் திருப்பிறப்பை அறிவித்தல்

இராமையபிள்ளையும் சின்னம்மையாரும் தம் மக்களுடன் வாழ்வாங்கு வாழ்ந்து இனிதாக இல்லற நடத்தி வருநாளில் ஒருநாள் உச்சிப்போதில் சிவபெருமானே மானிடத் திருக்கோலங் கொண்டு சிவவேடம் முற்றப்பூண்ட சிவனடியாராக எழுந்தருளி பசியால் களைத்த தோற்றத்துடன் இராமையாபிள்ளை வீட்டிற்கு வந்து வாயிலில் நின்று, 'அம்மையே! அடியார்க்கு அமுது செய்விக்க வேண்டும்!' என்றார். அச்சிவவொலி கேட்ட சின்னம்மையார் விரைந்து வந்து அடியாரின் அடிகளில் முடியுற வணங்கி உள்ளே அழைத்துச்சென்று முறைப்படி அமுது படைத்தார். அமுதுண்ட அடியவர் அகமிக மகிழ்ந்தவராகிச் சின்னம்மையாரை நோக்கி, "அம்மையே! நம்பசி போக்கினை! நானிலத்தின் பசியையெல்லாம் போக்கவல்ல ஒருமகன் பிறப்பான். 'அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருக்கும் உலகர் அனைவரையும் சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித்திடவும், அடைந்தவரெல்லாம் இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடவுமென்றே இந்த யுகத்தே நாம் வருவிக்க' ஒருவன் வந்துறுவான். அவனியெங்கும் அருளைப்பிரகாசிக்கச் செய்து அருட்பிரகாச வள்ளலாய் விளங்குவான். அந்த ஞானத்திருமகன் இவ்வில்லிற் பிறப்பான். அவனால் உலகம் உய்யும். அவன் நம்பிள்ளை. அவன் திருவரவை யுணர்த்தவே நாம் வந்தோம், வாழ்க! வாழ்க!" என வலக்கரமெடுத்து வாழ்த்தி,' 'கருநீறு காணும் திருநீறு காண் இது, இதனை, நீயும் அணிதி, நின்கணவற்கும் அளித்தி' எனக்கூறித் திருநீறளித்து வாயிற்புறம் நோக்கினர். வாயில்வரை உடன் சென்று சின்னம்மையார் வழியனுப்பினார். வாயிலைத் தாண்டித் தெருவில் அடிவைத்த சித்தர் சில அடிகளே நடந்தார். அப்பால் அவர்கட்புலனாக வில்லை. அடிச்சுவடும் இல்லை. திடீரென மறைந்தருளினார்.



RangaRakes tamilnavarasam.com

அம்மையார் அச்சமும் வியப்புமுற்றார். கணவர் வந்தவுடன் நிகழ்ந்ததைக் கூறினார். அவரோ, சிவனடியார் வந்தபோது யானில் லாது போனேனே! சித்தரைக் காணும் பேறு பெற்றிலேனே! என வருந்தினார். இல்லக்கிழத்தியார் பெற்ற பெருவாழ்த்தால் ஒருவாறு தேறினார். கணக்கப்பிள்ளை வீட்டிற்குச் சித்தரொருவர் வந்ததும், உண்டதும், வாழ்த்திச் சென்றதும், செல்லும் வழியில் கட்புலனாகாது விட்புலம்போயதும் ஊரெலாம் பரவிற்று. பிள்ளையின் வீட்டில் ஏதோ அற்புதம் நிகழப் போகிறது என்பதே ஊரெங்கும் பேச்சாயிற்று. சின்னாளில் சின்னம்மையார் கருவுற்றார்.

## திருப் பிறப்பு

1823-10-5, சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் இருபத்தோராம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணியளவில் ஐந்தாவது மகவாக அடிகள் பிறந்தருளினார்கள். அடிகளின் பிறப்பை வேலாயுதனார்,

**தூய்மையான் உயர்தவத்தால் துருவம்உறீஇ இருத்தலின்**
**வாய்மையான் வடகைலை எனஓங்கி வாழ்நாளில்**
**சேய்மையாத் தனைப்பிரிந்திங் கெமைத்தெரியாச் சிறியோமை**
**நோய்மைஓ வுறவண்மை இன்பத்து நுழைவிப்பான்** 5

**மறைவிளங்க ஆகமவாய் மைகள்விளங்கச் சைவநெறித்**
**துறைவிளங்க வடகலையும் தென்தமிழும் துணிபொருளின்**
**நிறைவிளங்க நீடுயிர்கள் நெறிவிளங்க நிலைவிளங்கப்**
**பொறைவிளங்கப் பொய்புகுதா தேழையோம் புலம்விளங்க** 6

**விடையுகைக்கும் தான்தோன்றி விரித்துக்காட் டியமெய்ம்மை**
**நடையுகக்கக் காட்டியும்கா ணார்காண நாலாம்பொய்க்**
**கடையுகத்தில் கண்கூடாய் நிலைகாட்டப் பெருங்கருணை**
**மடையுடைத்து மயற்காட்டின் மயங்காமே வெளிகாட்டி** 7

**அறங்காட்டும் துறைகாட்டி அறுசமயத் தவரவர்க்குத்**
**திறங்காட்டிச் சிவங்காட்டிச் சித்திமுத்தித் திருக்காட்டிப்**
**புறங்காட்டில் பொய்யுடலை வையாமெய்ப் புலங்காட்டி**
**மறங்காட்டென் மனக்காட்டை வளராமே மதிகாட்ட** 8

**தவநெறியும் தவப்பயனும் சார்பும்சார் புணர்பொருளும்**
**சிவனருளுன் அருட்பயனும் தேர்ந்தனர்தேர்ந் ததும்உணரா**
**தவநெறியில் புக்குழன் றங் கசதிஆ டுறும்அறிவில்**
**பவநெறிநாத் திகரும்உயப் பரிந்தருளின் இயல்காட்டி** 9

**சன்மார்க்கத் தவர்யாரும் தனிவிரும்பும் நிலைவிரும்பும்**
**பன்மார்க்கத் தவர்யாரும் பற்றும்ஒரு பற்றாகி**
**என்மார்க்கத் தவர்களும்நா டரியபழம் பொருள்எளியேன்**
**துன்மார்க்கத் தவம்போக்கித் தவமாக்கத் துணிந்தருளி** 10

[2 அடிகள் பிறப்புக் குறிப்பு (ஜாதகம்) வருமாறு: கலியுகம் 4925, சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 21-ஆம் நாள் (5-10-1823) ஞாயிற்றுக்கிழமை, பூர்வ பட்சம், துவிதியை திதி, சித்திரை நட்சத்திரம், நாலாம் பாதம், உதயாதி இருபத்தொன்பதேமுக்கால் நாழிகை.

| | | | |
|---|---|---|---|
| லக் | | சனி | குரு |
| | இராசி | | அங்<br>கே |
| ராகு | | | |
| | | புத<br>சந் | சுக்<br>சூரி |

பொய்யோடப் பொய்யோடாப் புறநிலைகள் புலம்போட
மெய்யோடா வைதிகச்செம் மொழிஒன்றான் வெய்யமல
மையோட மையோடு மனமோட மலிபிறவி
ஐயோடும் இறப்போட அருளோடு கண்ணோடி 11

போக்குவர வில்லாது புறங்கீழ்மேல் உள்நடுசார்
பாக்கும்இடை அறஇருந்த அதிசூக்கத் தொருதனிமை
நோக்கருநோக் குணர்வருளான் நோக்குறஎட் டுருவாதி
தாக்கருதாக் குறஅன்று கொண்டதொரு தகைமைஎன 12

ஊரொடுபேர் உருஒன்றும் இல்லாத ஒப்பில்உணர்
வோர்உருஈர் உருமுக்கண் நால்இருதோள் ஐந்துமுகம்
கார்உருகண் டமும்ஆறு கவர்சடையும் மறைத்தருளி
ஏர்உறவந் தெழுந்ததுவோ அன்றிஇமை யவர்க்கன்று 13

பொன்நாடு தனைவழங்கப் போர்காட்டி எஃகேந்தி
எந்நாளும் என்ஆளும் எந்தைஆ றிருதோளும்
மன்ஆறு முகமும்ஒளித் துற்றதெனல் அலதுமற்றிங்
கென்ஆவ தன்னார்பால் இருஞ்சேய்மை தனைப்புனைந்து 14

அறுமீனார் முன்களிப்ப அனிலநாள் கொண்டதென
உறுகன்னி அறுவைமீன் கொண்டருளி உலகமெலாம்
பெறுகோல மதுகாட்டி உதயஞ்செய் பிள்ளையார்
வறியோம்பால் முளைஉண்டார் மகிழ்ந்தனைபால் முலைஉண்டார் 15

-திருவருட்பா வரலாறு

எனப் பாடுவர். அடிகளாரின் மாணாக்கர் பொன்னேரி சுந்தரம்பிள்ளையவர்களோ,

தாய்மலர்ந்த பெருங்கருணைத் தத்துவனார் எங்கள்



RangaRakes tamilnavarasam.com

**சனிப்பிறப்பை ஒறுத்துவினைத் தனித்தொடக்கை அறுக்க**
**ஏய்மலர்ந்த கருணைதிரு மேனிகொண்ட காலத்(து)**
**எண்தோளோ இருதோளோ முக்கண்ணோ இருமை**
**ஆய்மலர்ந்த அருட்கண்ணோ நாமம்எழுத்(து) ஐந்தோ**
**அன்றிஅருள் இராமலிங்க அற்புதப்பொற் பெயரோ**
**வாய்மலர்ந்த(து) ஈரிரண்டு மறையோமூ விரண்டு**
**மாமுறையோ வகுத்துரையீர் மயக்கொழிமா தவரே**

எனப்போற்றுவர். பின்னாளில் அடிகளை அடுத்து அவர்களது அருட்பெருமையினை உணர்ந்த இவர்கள் 'முருகனே வந்து முளைத்தனனோ. சிவபிரானே வந்து தோன்றினனோ' என அடிகளின் பிறப்பைச் சிறப்பித்தல் இறும்பூதன்று. அடிகள் அறிவாற் சிவனே என்பது திண்ணம்.

## பெயர் சூட்டல்

பெற்றோர்கள் பிள்ளையார்க்கு இராமலிங்கம் எனப்பெயரிட்டனர். இராமேச்சரத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் திருப்பெயர் இராமலிங்கம் என்பது. இராமனால் நிறுவி வழிபடப் பெற்றமையான் இராமேச்சரம் என்றும், இராமலிங்கம் என்றும் பெயர்பெற்றது. இராமலிங்கம் என்பது சைவ உலகில் பெரிதும் வழங்கும் பெயர். பரம்பரைச் சுத்த சைவ வேளாளராகிய இராமையா பிள்ளை தம் குழந்தைக்கு இராமலிங்கம் எனப் பெயரிட்டது பொருத்தமே. இப்பிள்ளைத் திருநாமமே பின்னாளிலும் நிலைப்பதாயிற்று.

**திருமுகங்கண் டவர்யாரே ஆயினுங்கண் டளவேதீ**
**தொருவிமயக் கொழிந்தவர்தாம் செய்வனவும் உறுவனவும்**
**தரும்உணர்ச்சி முக்குற்றத் தடையறஆங் குறலானும்**
**அருள்அன்பின் புறலானும் அல்லல்எலாம் அறலானும்** 16

**பாதகசூ தகங்கள்அறப் பணலானும் பாவனையாய்க்**
**கோதறுபா வனைக்கெட்டாக் கொள்கைத்தாய் உறலானும்**
**மேதகுதன் நிலைஆக்கி நிலைப்பயனாக் குறல்ஆதி**
**வேதகத்தா னும்பொருள்கோள் வெளிப்படையில் புலப்படவே** 17

**உருநாமம் இராமலிங்கம் எனக்கொண்டார் ஓங்கருளால்**
**குருநாம மந்திரமாக் கொண்டுய்ந்தார் உயநினைந்தார்**
**பெருநாம மந்திரத்தைப் பெற்றிஅறி யார்எல்லாம்**
**திருநாமம் இதுபிள்ளைத் திருநாமம் என்பாரே.** 18

-திருவருட்பாவரலாறு (தொ.வே.)

## வளர்ப்பு



RangaRakes tamilnavarasam.com

இராமைய பிள்ளையும் சின்னம்மையாரும் பிள்ளையாரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்தனர். இறைவனும் தனது ஞானப் பிள்ளையைப் பேய் வெருட்டல், பாலெதிரெடுத்தல், பசியால் அரற்றல், பயத்தாலுலம்புதல், உண்டியுவட்டல் முதலிய குறைகளேற்படாவண்ணம் அகத்தும் புறத்தும் காத்திருந்து வளர்த்தான். குழந்தைப் பருவத்தில் இங்ஙனம் இறைவன் தம்மை வளர்த்தருளினானென்பதை அடிகளே தமது பிள்ளைப் பெருவிண்ணப்பத்திற் கூறியுள்ளனர்.

"அருட்பெரு வெளியின்கண்ணே அருட்பெருஞ்ஜோதி வடிவராகி விகற்பமில்லாது விளங்குகின்ற மெய்ப்பொருட் கடவுளே! சிசுப் பருவந்தொடங்கிக் குமாரப் பருவம் வரையில் பேய் வெருட்டல், தோஷந்தாங்கல், பாலெதிரெடுத்தல், சவலைக்குருந்தாதல், நோய்ப் பிணிப்புண்டல், பசியாலரற்றல், பயத்தாலுலம்புதல், உண்டியுவட்டல், உடம்பொடு நேர்தல் முதலிய எவ்வகைத் தடைகளாலுந் தடைபடாமல் எனதகத்தும் புறத்தும் காத்திருந்து வளர்த்தருளிய தேவரீரது பேரருட் பெருங்கருணைத் திறத்தை என்னென்று கருதி யென்னென்று துதிப்பேன்!"

-சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெருவிண்ணப்பம்

**சிதம்பர தரிசனம்**

திங்கள் சில கழிந்தன. இராமைய பிள்ளை மனைவி மக்களுடன் சிதம்பர தரிசனத்திற்குச் சென்றார். அப்போது அடிகட்கு அகவை ஐந்து திங்கள் எனப்ர் ச.மு.கந்தசாமி பிள்ளை. சிற்சபையில் நடராசப் பெருமானை வழிபட்டபின் சிதம்பர ரகசிய தரிசனத்திற்காக அனைவரும் அதன் முன்னர் வந்து நின்றனர். பாலுண் குழவியாகிய பிள்ளைப் பெருமான் தாயின் கையிலிருந்தார். தீக்ஷிதர் திரை தூக்கச் சிதம்பர ரகசியம் தரிசனமாயிற்று. அனைவரும் தரிசித்தனர். கைக் குழந்தையாகிய பிள்ளைப் பெருமானும் தரிசித்தார். ஐந்து திங்கட் கைக்குழந்தையாகிய அடிகட்குச் சிதம்பர ரகசியம் ரகசியமா யிருக்கவில்லை; வெட்ட வெளியாகப் புலப்பட்டது. இறைவன் ரகசியத்தை வெளிப்படையாகக் காட்டியருளினான். குழவிப் பருவத்தே இறைவன் இங்ஙனம் அருள் செய்த நிகழ்ச்சியை அடிகள் தமது பின்னாளைய பாடலொன்றில் அழகாகக் குறித்துள்ளனர்.

**தாய்முதலோ ரொடுசிறிய பருவமதில் தில்லைத்**
**தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது**
**வேய்வகைமேல் காட்டாதே என்றனக்கே எல்லாம்**
**வெளியாகக் காட்டியஎன் மெய்உறவாம் பொருளே**
**காய்வகைஇல் லாதுளத்தே கனிந்தநறுங் கனியே**
**கனவிடத்தும் நனவிடத்தும் எனைப்பிரியாக் களிப்பே**
**தூய்வகையோர் போற்றமணி மன்றில்நடம் புரியும்**
**சோதிநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே**

-6 (இடை) அருள்விளக்கமாலை 44.

தாய் முதலோரொடு என்ற வதனால் தாயுடன் மற்றையோரும் உடனிருந்தனரென்பதூஉம், சிறிய பருவமதில் என்றவதனால் அப்போது அடிகள் சிறுபிள்ளை என்பதூஉம், தில்லைத் தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது



RangaRakes tamilnavarasam.com

என்றவதனால் தரிசிக்கப் பெற்றது சிதம்பர ரகசியமே என்பதூஉம் உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெளிவாகப் பெறாப்படும்.{3}

## சிதம்பர ரகசியம்

தில்லைத் திருக்கோயிலில் சிதம்பர ரகசியம் என்றொரு சந்நிதி உண்டு. நடராசப் பெருமான் திருநடம்புரியும் சிற்சபையில் நடராசப் பெருமானுக்கு வலப்புறத்தில் சிதம்பர ரகசியம் உள்ளது. இறைவனை அருவமாக வழிபடுமிடமாதலின் இது ரகசியம் எனப்பெயர் பெற்றது.

{3 தரிசித்தது நடராசரை என்றும், கைக்குழந்தையாகிய அடிகள் தந்தையின் தோளிலிருந்தாரென்றும் வரலாறெழுதிய அனைவரும் தவறாக எழுதியுள்ளனர். மேற்கண்ட பாடலை ஓரிருவர் எடுத்துக் காட்டினாரேனும் தரிசித்தது சிதம்பர ரகசியம் என விளக்கினாரல்லர், விளங்கிக் கொண்டாரல்லர். தரிசித்தது சிதம்பர ரகசியத்தை என்பதை முதன்முதலில் யாமே தெளிவு படுத்தினோம்.}

அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூவகை வழிபாடும் சிதம்பரத்தில் உண்டு. அருவம்-சிதம்பர ரகசியம். உருவம்-நடராசர். அருவுருவம்-படிகலிங்கம். ரகசியம் எப்போதும் திரையால் மறைக்கப்பட்டிருக்கும். இதுபோன்ற மற்ற எல்லாச் சந்நிதிகளும் எப்போதும் திரையால் மறைக்கப்படுவதில்லை. அபிடேக அலங்கார காலங்களில் மட்டுமே சந்நிதிகளில் திரையிடுதல் வழக்கம். இச்சிதம்பர ரகசியம், ரகசிய சந்நிதியாதலின் எப்போதுமே திரையிடப் பெற்றிருக்கும். திரையின் வெளிப்புறம் கறுப்பு, உட்புறம் சிவப்பு. கறுப்பு சிவப்புப் பட்டுத் துணிகளால் தைக்கப்படும் இத்திரை, ஆண்டுக்கு இருமுறை புதுப்பிக்கப்படும். ஆனி மார்கழி விழாக்களின் போது பழைய திரை அகற்றப் படும். ஆனி மார்கழி விழாக்களின் போது பழைய திரை அகற்றப் பெற்றுப் புதுத்திரை சாத்தப்பெறும். நாள்தோறும் ஆறுகால பூசையிலும் ஒவ்வொரு கால பூசையின் நிறைவில் அன்று பூசை முறையுடைய பூசகர் திரையை மூன்றுமுறை தூக்கித் தரிசனம் செய்விப்பார். இரவு இரண்டாங்கால பூசை விசேட பூசையாக நிகழும். திரை தூக்கப் பட்டதும் உள்ளே பார்த்தால் வெட்டவெளியாக இருக்கும். சுவரில் பொன்னால் செய்யப்பெற்ற வில்வச் சரங்கள் (மாலைகள்) தொங்கவிடப்பட்டிருப்பது தெரியும். அவ்விடத்தில் சுவரில் சிதம்பரச் சக்கரம் நிறுவப்பெற்றுள்ளது. திரையோ, வில்வமாலையோ, சக்கரமோ ரகசியமல்ல. திரைக்குள் உள்ள வெட்டவெளியே ரகசியமாகும். இறைவன் ஆகாய வடிவில்-அருவமாய்-அங்கெழுந்தருளி யுள்ளானென்பதே ரகசியம். சிதம்பரம் ஆகாயத் தலமன்றோ? நமது ஊனக் கண்களுக்குத் தெரிதற்கான குறியாகவே வில்வச் சரங்கள் தொங்க விடப்பட்டுள்ளன. ஆனி, மார்கழித் திருவிழாக்களின்போது சிதம்பரச் சக்கரத்துக்குப் புனுகுச் சட்டம் சாத்தாப் பெறுகிறது. மற்ற எல்லாக் கோயில்களிலுமுள்ள தெய்வ சக்திகள், நள்ளிரவு வழிபாட்டுக்குப்பின் சிதம்பர ரகசியத்திற்கு வந்து ஒடுங்குவதாயும் அதிகாலை முதற்கால வழிபாட்டுக்குத் தத்தம் இடம் சார்வதாயும் ஓர் ஐதிகம் உண்டு.

வேறு எக்கோயிலிலும் 'ரகசியம்' இல்லை. ரகசியம் தில்லைக்கே உரிய தனிச் சிறப்பு. கோயில்களிற் சிறந்தது சிதம்பரம். அதனுள்ளும் அதன் ரகசியம் சிறந்தது.

அடிகள் ஓராண்டுப் பருவத்தில் பூர்வஞான சிதம்பரமாகிய தில்லையில், ஒரு திரை தூக்கத் தாம் வெளியாகக்கண்ட அனுபவப் பொருளையே நாற்பத்தெட்டாண்டுகளுக்குப் பின் தமது நாற்பத்தொன்பதாம் அகவையில் உத்தரஞான சிதம்பரமாகிய வடலூரில் சத்தியஞான சபையில் எழுதிரை நீக்கி நமக்கு ஒளியாகக் காட்டியருளினர்.

### இரகசியம் வெளியானதேன்?

எல்லார்க்கும் ரகசியமாயிருப்பது அடிகட்கு மட்டும் வெளியானதேன்? ஐந்து திங்கட்குழவியாகிய அம்மழவிளம் பருவத்திற்றானே இறைவன் அடிகட்குச் சிதம்பர ரகசியத்தின் உண்மைப் பொருளை வெளியாகக் காட்டியதேன்? பிறந்த ஐந்து திங்களிலேயே அடிகள் அதற்கேற்ற பக்குவம் வாய்ந்திருந்தனரோ? அடிகள் முற்பிறப்புகளிலேயே அடியராயிருந்து சரியை கிரியை யோகங்களை முடித்து இராமலிங்கராகிய இப்பிறப்பில் விட்ட குறையைத் தொட்டு, ஞானத்தில் நின்று சித்தி பெறுதற்கென்றே பிறந்த சாமு சித்தராதலானும், அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும் திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித்திடுதற்கென்றே இறைவன் வருவிக்க திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர், பட்டினத்தார், தாயுமானார் என வாழையடி வாழையாக வரும் திருக்கூட்டமரபில் வந்துற்ற பெருமானான தானும் பிறந்த ஐந்தாந் திங்களிலேயே-பாலூட்டித் தாலாட்டி வளர்க்கப் பெறும் பருவத்திலேயே-இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாகும் பக்குவமுடையராயினர். இறைவனும் இரகசியத்தை வெளியாகக் காட்டி அருள் செய்தான்.

அடிகள் முற்பிறப்புகளிலும் அடியரென்பது

**புதுமையன் அல்லேன் தொன்றுதொன் டுனது**
**பூங்கழற் கன்புபூண் டவன்காண்**

**-2, அருளியல் வினாவல் 9**

**புதியன் என்றெனைப் போக்குதி ரோநீர்**
**பூரு வத்தினும் பொன்னடிக் கடிமைப்**
**பதிய வைத்தனன் ஆயினும் அந்தப்**
**பழங்க ணக்கினைப் பார்ப்பதில் என்னே**

**-2, கொடி விண்ணப்பம் 6**

**அடிய னேன்அலன் என்னினும் அடியேன்**
**ஆக நின்றனன் அம்மைஇம் மையினும்**

**-2, அவலத்தழுங்கல் 10**

**ஏணாதன் என்னினும்யான் அம்மையின்நின் அடியேன்**
**எனஅறிந்தேன் அறிந்தபின்னர் இதயமலர்ந் தேனே**



RangaRakes tamilnavarasam.com

**-4, அன்புமாலை 9.**

**(அம்மை-முற்பிறப்பு, இம்மை-இப்பிறப்பு)**

என்னும் அடிகளது பாடற் பகுதிகளாற் பெறப்படும். திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர், பட்டினத்தார், தாயுமானார் என வாழையடி வாழையாக வரும் திருக்கூட்ட மரபில் வந்தவரென்பது

**வாழைஅடி வாழைஎன வந்ததிருக் கூட்ட**
**மரபினில்யான் ஒருவன்அன்றோ வகைஅறியேன் இந்த**
**ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ**
**இதுதகுமோ இதுமுறையோ இதுதருமந் தானோ**
**மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யான் உனக்கு**
**மகன்அலனோ நீஎனக்கு வாய்த்ததந்தை அலையோ**
**கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்**
**கொடுத்தருள்நின் அருள்ஒளியைக் கொடுத்தருள்இப் பொழுதே**

**-6 (இடை) பிரியேன் என்றல் 4**

என்ற பாடலானும், விட்டகுறையைத் தொட்டு நிறைவேற்றற் கென்றே பிறந்தவரென்பது

**கட்டவிழ்ந்த கமலம்எனக் கருத்தவிழ்ந்து நினையே**
**கருதுகின் றேன் வேறொன்றும் கருதுகிலேன் இதுதான்**
**சிட்டருளம் திகழ்கின்ற சிவபதியே நினது**
**திருஉளமே அறிந்ததுநான் செப்புதல்என் புவிமேல்**
**விட்டகுறை தொட்டகுறை இரண்டும்நிறைந் தனன்நீ**
**விரைந்துவந்தே அருட்சோதி புரிந்தருளும் தருணம்**
**தொட்டதுதான் துணிந்துரைத்தேன் நீஉணர்த்த உணர்ந்தே**
**சொல்வதலால் என் அறிவால் சொல்லவல்லேன் அன்றே**

**-6 (இடை) சிவதரிசனம் 9**

என்னும் திருவாக்கானும், உலகத்தை உய்விக்க இறைவனால் வருவிக்கப் பெற்றவரென்பது

**அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்**
**திருந்த உலகர் அனைவரையும்**
**சகத்தே திருத்தி சன்மார்க்க**
**சங்கத் தடைவித் திடஅவரும்**
**இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்**
**திடுதற் கென்றே எனைஇந்த**
**உகத்தே இறைவன் வருவிக்க**

உற்றேன் அருளைப் பெற்றேனே

6 (முடி) உற்றதுரைத்தல் 9

என்னுந் திருவாக்கானும் பெறப்படும். முற்பிறப்புத் தவ முதிர்ச்சியானும், அகத்தே கறுத்ததுப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடை வித்திடுதற்கென்றே இறைவன் வருவிக்க வந்துற்றதனானும், விட்ட குறையைத் தொட்டுப் பேரருள் பெற்றுச் சித்தியடைதற் கென்றே பிறந்தபிறப்பு இதது வாதலானும், இப்பிறப்பே இறுதிப் பிறப்பாதலானும் ஐந்தாந் திங்களிலேயே இத்திருவருட் செயல் நிகழ்ந்ததென்க.

## பொன்னேரி வாழ்க்கை

சின்னாளில் தந்தை இராமையபிள்ளை காலமானார். குடும்பம் தலைவரை இழந்தது. சின்னம்மையார் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு தாம் பிறந்த ஊராகிய பொன்னேரிக்குச் சென்றார். சிலகாலம் குடும்பம் பொன்னேரியில் வாழ்ந்தது. தந்தை இறந்தது அடிகளின் ஆறாந் திங்களல் என்றும், பொன்னேரிக்குச் குடிபெயர்ந்தது எட்டாந்திங்களில் என்றும் ச.மு.க.கூறுவர்.

## சென்னை வாழ்க்கை

பொன்னேரிக்குச் சென்ற சின்னம்மையார் ஓரிரு ஆண்டுகளே அவண் வதிந்தார். பின்னர் தம் மக்களுடன் சென்னைக்குக் குடியயேறினார். தமையனார் சபாபதி பிள்ளை, காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் கல்விகற்றுப் புராணச் சொற்பொழிவாற்றுவதில்வல்லவராகி அதனாற் கிடைக்கும் வருவாயைக்கொண்டு குடும்பத்தை நடத்திவந்தார்.

## சென்னையில் உறைந்த இடம்

சென்னையில் உறைந்த இடம் ஏழுகிணறு வீராசாமிப் பிள்ளை தெரவில் 38-ஆம் எண்ணுள்ள வீடாகும்.{4} பின்னாளில் வடலூரிலிருந்த காலத்தில் சென்னைக்கு எழுதிய கடிதமொன்றில் இவ்வீட்டு முகவரி,

"சென்னப்பட்டணம் ஏழுகிணற்றுக்கடுத்த வீராசாமிப்பிள்ளை வீதியில் கீழண்டை வாடை நெ.ந.அ-வது கதவிலக்கமுள்ள வீட்டில் இறுக்கம் மகா-ள-ஸ்ரீ இரத்தின முதலியாரவர்களுக்கு"

என அடிகளாரால் குறிக்கப்பட்டுள்ளது. மற்றொரு கடிதத்திலும் '38-வது கதவு இலக்கமுள்ள' என வீட்டெண் குறிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான கடிதங்களில் 'சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன் பேட்டை ஏழுகிணற்றுக்கடுத்த வீராசாமிப் பிள்ளை தெரு' என பெத்து நாயக்கன்பேட்டையும் குறிப்பிடப் பெற்றுள்ளது. பல கடிதங்களில் 'கலெக்டர் கச்சேரி ள-ள-சுப்புராய பிள்ளை வீட்டுக்கு எதிர் வீடு' என இவ்வீடு குறிக்கப் பெறுகிறது. அடிகள் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு எழுதிய கடிதங்களின் முகவரிகளால், சென்னை பெத்துநாயக்கன் பேட்டையில் ஏழுகிணற்றுக்கு அடுத்த வீராசாமி பிள்ளை தெருவில் கதவு எண் 38 உள்ள வீட்டில் இரத்தின முதலியார் வதிந்தனர் என்பது தெளிவாய் அறியப்பெறுகிறது. இவ்வீடு



RangaRakes tamilnavarasam.com

தெருவின் கீழ் சிறகில் உள்ளதென்பதும், இதன் எதிர் வீட்டில் கலெக்டர் கச்சேரி சுப்பரய பிள்ளை இருந்தாரென்பதும் தெரிகின்றன. இவ்வீட்டின் ஒருபகுதியில் அடிகளது குடும்பத்தாரும், மற்றொரு பகுதியில் இறுக்கம் இரத்தின முதலியாரும் உறைந்தனர். இவ்வீடு மூன்று அற்புதங்கள் நிகழ்ந்த இடமாகும். 1. திண்ணையிலிருந்து விழாமல் காத்தது. 2. கண்ணாடியல் காட்சியளித்தது. 3. பசியுடன் படுத்தயர்ந்தபோது உணவளித்தது. கண்ணாடியில் காட்சியளித்தது மேன் மாடியிலும் ஏனைய இரண்டும் திண்ணையிலும் நிகழ்ந்தன. {5}

{4} ச.மு.க.பிரபந்தத்திரட்டு (1923), திருவருட்பா ச.மு.க.பதிப்பு (1924) இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகள், பக்கம் 5.

{5} அடிகின் சென்னை வீட்டு முகவரி அக்கால வழக்கப்படி;

சென்னப்பட்டினம்-பெத்து நாயக்கன்பேட்டை-ஏழுகிணறு-வீராசாமிபிள்ளை தெரு-கீழ்சிறகு-கலெக்டர் கச்சேரி சுப்பராய பிள்ளை வீட்டுக்கு எதிர் வீடு-கதவு எண்-38. இக்கால வழக்கப்படி; 39, வீராசாமி பிள்ளை தெரு, சென்னை.1. வீட்டின் கதவு எண் அப்போது 38-ஆக இருந்தது. இப்போது 39-ஆக மாறியுள்ளது. தெருப்பெயர் மாறாது வீராசாமி பிள்ளை தெரு வென்றே வழங்குகிறது அடிகளது வாழ்வில் மூன்று அற்புதங்கள் நிகழ்வதற்கு இடமாயிருந்த இவ்வீட்டை வாங்கி நினைவுச் சின்னமாக்குதல் வடலூர் நிலையங்களின் நிர்வாகத்தினர் கடமையாகும்.}

## திண்ணையினின்றும் விழாமல் காக்கப் பெறுதல்

பிள்ளைப்பெருமானுக்கு அகவை மூன்று அல்லது நான்கு இருக்கும். ஒருநாள் இரவில் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்தார். யாரும் துணை இல்லை. திண்ணையோ, உயரமான ஒட்டுத் திண்ணை. நள்ளிரவில் தூக்கக் கலக்கத்தில் புரண்டு திண்ணையிலிருந்து கீழே நள்ளிரவில் தூக்கக் கலக்கத்தில் புரண்டு திண்ணையிலிருந்து கீழே நழுவி விட்டார். இன்னும் தரையில் விழவில்லை. அந்த நள்ளிரவில்-பாதி இரவில்-அப்பக்கமாக ஒருவர் வந்தார். திண்ணையினின்றும் நழுவிக் கீழே விழப்போகும் சிறுவரைக் கண்டார். தரையில் விழாது தாங்கி எடுத்து அணைத்துக் கிழே கிடத்திச் சென்றார். வந்தவர் யார்? அவரே பொதுவில் ஆடும் ஆனந்தத் தாண்டவர் கூத்தர். தமது பிள்ளைப் பருவத்தில் நிகழ்ந்த இதனை அடிகளே,

**ஓங்கியஓர் துணைஇன்றிப் பாதிஇர வதிலே**
**உயர்ந்தஒட்டுத் திண்ணையிலே படுத்தகடைச் சிறியேன்**
**தூங்கிமிகப் புரண்டுவிழத் தரையில்விழா தெனையே**
**தூக்கிஎடுத் தணைத்துக்கீழ்க் கிடத்தியமெய்த் துணையே**
**தாங்கியஎன் உயிர்க்கின்பம் தந்தபெருந் தகையே**
**சற்குருவே நான்செய்பெருந் தவப்பயனாம் பொருளே**
**ஏங்கியஎன் ஏக்கம்எலாம் தவிர்த்தருளிப் பொதுவில்**
**இலங்குநடத் தரசேஎன் இசையும்அணிந் தருளே**

**-6 (இடை) அருள்விளக்கமாலை 45**

என அருளியுள்ளமை காண்க.



RangaRakes tamilnavarasam.com

துணைஇன்மை, பாதிஇரவு, உயர்ந்த ஒட்டுத் திண்ணை, தூக்கத்தில் புரண்டு விழுதல், தரையில் விழாது தாங்கப் பெறுதல் ஆகியவற்றை, இவ்வருட் பாடல் நம் கண்முன் நிறுத்திக் காட்டுகிறது. பாடலின் முதல் நான்கடிகளில் இவ்வற்புதம் தெளிவாகக் குறிப்பிடப் பெறுகிறது. அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருக்கும் உலகர் அனைவரையும் திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித்திடுதற்கென்றே தான் வருவித்த பிள்ளைக்கு ஊறுநேர்வதை இறைவன் பார்த்திருப்பனே?

## பள்ளிப் பருவ நிகழ்ச்சிகள்

பிள்ளைப்பெருமான் வளர்ந்து பள்ளிப் பருவம் எய்தினார். அகவை ஐந்தாயிற்று. சபாபதி பிள்ளை, இளவலைப் பள்ளிக்குவைக்க விழைந்தார். இளையவராகிய பிள்ளைப்பெருமான் பள்ளியை விழைந்தாரில்லை. அவரது நினைவெல்லாம் கோயில் குளங்களி இருந்தது. பள்ளிக்கூடத்தில் இல்லை.

பிள்ளைப்பெருமானின் பள்ளிப் பருவ நிகழ்ச்சிகளை, மணி-திருநாவுக்கரசு முதலியாரவர்கள் 'இராமலிங்க சுவாமிகள் கல்வி கற்ற வரலாறு' என்னும் தலைப்பில் இற்றைக்கு நாற்பதாண்டுகளுக்கு முன்பு சித்தாந்தம் 1928 செப்டம்பர் (மலர் 1-இதழ் 9) பிரபவ, ஆவணி இதழில் ஒரு கட்டுரையாக எழுதினர். இவரது கட்டுரைகள் சில தொகுக்கப்பெற்றுள்ள 'பல்பொருட் கட்டுரை' என்னும் பெயருடன் நூலாக வெளிவந்த போது அதனுள் இக்கட்டுரை இடம்பெற்றது. மணி-திருநாவுக்கரசர் (1888-1931), அட்டாவதானம் பூவை. கலியாணசுந்தர முதலியாரின் (1854-1918) மாணாக்கர். பிற்காலத்தில் கலியாணசுந்தர யதீந்திரர் என்ற பெயருடன் விளங்கிய பூவையார் தமது இளமையில் வடலூர் சென்று அடிகளை நேரிற்கண்டு வழிபட்டவர். தமது ஆசிரியராகிய பூவையாரின் வாயிலாகக் கேட்ட வரலாற்றையே மணி-திருநாவுக்கரசர் எழுதியுள்ளனராதலின், முன்னோர் மொழி பொருளேயன்றி அவர்மொழியும் பொன்னேபோற் போற்றுவம் என்னும் இலக்கணத்திற் கிணங்க, அக்கட்டுரையைப் 'பல்பொருட் கட்டுரை' யினின்றும் கீழே தருகின்றோம்.

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளை அறியாதார் ஒருவரும் இலர். அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப் பாடல்கள் எவ்விடத்தும் பாடப்பட்டு வருகின்றன. அவர் திராஷா பாகமாகச் செய்யுள் செய்வதில் அதிசமர்த்தர். அவர் பாட்டுக்கள் பண்டித பாமர ரஞ்சகமாக இருத்தலின், அவை கல்வி மிகுதியும் இல்லாதவருடைய மனத்தையும் அழலிடைப்பட்ட வெண்ணெய் போல உருகும்படிசெய்து அன்பில் ஈடுபடுத்துகின்றன. இத்தகைய பெரியார் தமது இளமைப் பருவத்தில் எங்ஙனம் கல்வி கற்றுக் கொண்டார் என்பது மிக்க சுவையினை விளைக்கின்றது. என் ஆசிரியருள் ஒருவராகிய சிவ ஸ்ரீ கலியாணசுந்தரதீந்திரர் அவர்கள் வாயிலாக யான்கேட்ட அவ்வரலாற்றை இங்கு எழுதுவேன்.

இராமலிங்க சுவாமிகள் இளமையிலேயே தம் பெற்றோரை இழந்து விட்டமையால் தம் தமையனாராகிய சபாபதிப்பிள்ளையின் ஆதரணையில் இருந்து வந்தனர். சபாபதிப்பிள்ளை தமிழிலே இலக்கிய இலக்கணங்களைப் போதுமானவரையிற் கற்றுச் சிவபுராண படனஞ்செய்வதில் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் சைவ புராணங்களைக் கேட்போர் பக்தி பரவசராகும்படி செவ்வையாய்ப் பிரசங்கஞ் செய்வார். அவர் பொருள் வருவயை முன்னிட்டுச் சென்னையை



RangaRakes tamilnavarasam.com

அடைந்து, சைவப் பிரபுக்கள் சிலரைத் துணையாகக் கொண்டு தமது வாழ்க்கையை நடத்தி வந்தனர். இங்ஙனம் வாழ்ந்து வருவார்க்குத் தம் இளவலாகிய இராமலிங்கத்துக்குக் கல்விப் பயிற்சி செய்விப்பதில் பெரிதும் ஆவல் உண்டு.

பிள்ளை அக்காலக் கல்வி முறைப்படித் திவாகரம், நிகண்டு' சதகம், அந்தாதி, முதலிய நூல்களைத் தம் அருமைத் தம்பியாருக்கு நாடோறும் வழுவாமல் கற்பிக்கலானார். ஆனால், இராமலிங்கமோ சொல்லிவைத்த பாடங்களைக் கண்ணும் கருத்துமாகக் கற்பதில்லை. எந்நேரமும் ஏதோ வேறொரு சிந்தையில் ஆழ்ந்து, தமையனார் மொழியைச் சிறிதும் நோக்குவதில்லை. சதா சருவதா நினைவு வேறுபட்டிருக்கும் இளையவராகிய இராமலிங்கம் கல்வி கற்கமாட்டாத முழுமகன் என்றும், அவர் தமது கருத்தை நிறை வேற்றாதிருத்தலின் வழிக்கு வாராத பிள்ளை யென்றும் சபாபதிப்பிள்ளை தீர்மானித்து விட்டார். அவர் உலக வழிக்கு ஒத்து வாராத பிள்ளை என்பது உண்மையே! இராமலிங்கம் தன்மையைக் கண்ட சுற்றத்தாரும் அவ்வாறே எண்ணினர்.

இராமலிங்கமோ எங்கேனும் குறிப்பின்றிச் சுற்றுவதும், மக்கள் கூட்டங்களில் சென்று அவர்கள் வாயைப் பார்த்துக்கொண்டு நிற்பதும், கோயில் குளங்களுக்குச் சென்று வழிபாடு புரிவதும், வேடிக்கை பார்ப்பதுமாகக் காலங்கடத்தி வந்தார். அவர் தாமாகத் தமக்குத் தோன்றிய புத்தகங்கலை எடுத்துக்கொண்டு, தமக்கு விருப்பமான நேரங்களில் படிப்பார். ஆனால் தம் தமையனார் கட்டளைப்படி எந்நூலையும் உருப்போட்டுப் படித்து அப்படியே ஒப்புவிக்கமாட்டார். எனினும், இராமலிங்கம் ஒருநாளும் தம் தமையனாரை அவமதித்தேனும் எதிர்த்தேனும் யாதொன்றும் பேசியதில்லை; அவரைக் குறித்துப் பிறரிடம் முணுமுணுத்துக் கொண்டதுமில்லை.

சபாபதிப்பிள்ளை, தம்பி இராமலிங்கத்தை எவ்வாறேனும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்றெண்ணி அவர் தம் அன்புள்ள மனைவியை{6} அழைத்து, "இராமலிங்கம் என் சொற்படி நடவாததால் இனி நீ, அவனுக்குச் சோறிட வேண்டாம். அவன் இப்பொழுதே வீட்டைவிட்டு நடக்கவேண்டும். நீ என் கட்டளையை மீறி நடந்தால் நீயும் அவனைப் போல் நடக்க வேண்டும்". என்று தம்பியை எதிரிலே வைத்துக்கொண்டு கண்டிப்பாகத் திட்டஞ்செய்தார். இக்கட்டளையை இரண்டொரு முறை பிரயோகித்தும் இராமலிங்கம், தமையனார் இல்லாத வேளையிலோ, அன்றிக் கண்ணயரும் வேளையிலோ, தெரியாமல் புழைக்கடை வழியாகப் போந்து, தம் அண்ணியாரைக் காண்பார். அவ்வம்மையோ கற்பிற் சிறந்த உத்தமி; கருணை நிறைந்த செல்வி; நற்குடிப் பிறப்பும், ஒழுக்கமும் நிரம்பிய குணவதி. அவள் தன் கணவனார் கட்டலையை இனிதுனர்ந்தும், தம் மைத்துனச் சிறுவரை, பெற்ற சேயினும் பெரிய சேயாக மதித்து அன்பாற் குழைந்து, அவர் தம் செய்கைக்கு மனம் வெதும்பி நாடோறும் இனிய உணவுடன் அரிய மதியையும் புகட்டி வந்தாள். இவ்வம்மையின் செம்மை மொழிகளும் இளைய இராமலிங்கத்துக்கு நன்மை தந்தில.

{6.} இவ்வம்மையாரின் பெயர் பார்வதி. பாப்பாத்தி என்று அழைப்பது வழக்கம்.}



RangaRakes tamilnavarasam.com

இங்ஙனம் பன்னெடு நாட்கள் சென்றன. தம்பி இராமலிங்கம் தலையெடுத்ததே யன்றிக் கலையெடுத்ததில்லை. தமையனார் அறியாவண்ணம் வீட்டுக்கு வருவதும், சோறுண்பதும், கூறை பெற்றுக் கொள்வதும், தமது வழியிலே முனைந்து நிற்பதுமாகவே இருந்து வந்தனர். சபாபதிப்பிள்ளையோ தம் தம்பியைக் குறித்து ஒன்றும் கேளாது விட்டுவிட்டார். சிலவேளைகளில் அவருக்குத் தம் மனைவி தனக்குத் தெரியாமல் ஊட்டி வருவதும் தெரிய வந்தது. அதனைக் காணாதது போல் புறக்கணித்து விட்டுவிட்டார். இவ்வாறிருக்கும் நாளில், ஒருநாள் சபாபதிப்பிள்ளையின் தாயார்{7} திதி வந்தது. அன்று அவர் உறவின் முறையாருக்கும் நண்பருக்கும் தெரிவித்து, மிகச் சிறப்பாக பிராமண சந்தர்ப்பணை, அன்னதானம் முதலிய செய்தல் இயல்பு. அங்ஙனமே சிரார்த்தம் சாஸ்திர ரீதியாய்ச் சிரத்தையுடன் நிறைவேறிற்று. எல்லாரும் ஒருங்கமர்ந்து அறுசுவை உணவை ஆரஅமர உண்டு களித்தனர். பின்னர் விருந்தினர் எல்லாரும் மேன்மாடத்திற் சென்று, குளிர்ந்த சந்தனம் பூசியும், பரிமள புஷ்பத்தின் நறுமணம் நுகர்ந்தும், தாம்பூலந் தரித்தும் இன்னுரையாடிக் கொண்டிருந்தனர்.

முகமும் அகமும் மலர்ந்து, வந்த விருந்தை ஓம்பி, வருவிருந்தை எதிர்நோக்கி யிருந்த சபாபதிப் பிள்ளையின் மனைவிக்கோ உண்பதற்கு மனம் வரவில்லை. அந்நங்கை வேலை மிகுதியால் களைப்புற்று உள்ளமும் கெட்டுச் சோர்வடைந்திருந்தாள். சபாபதிப் பிள்ளையும் தம் சகோதரனை மறந்தவரல்லர். அவர், அனைவரும் வரிசையாகக் கூடி உண்ணுந் தருணத்தில் தம்பியை நினைத்துக் கொண்டார். ஆனால் என்செய்வார் பாவம்! தம்பி எங்ஙனமேனும் வீட்டுக்கு வந்து தன் அண்ணியால் உண்பிக்கப்படுவான் என்பது அவருக்குத் தெரியும். எனினும் தம் அரும்பிறப்பு உடனிருந்து உண்பதற்கில்லையே எனச் சிந்தாகுலங் கொண்டார். பின் அவர் சிறிது சிந்தித்து எல்லாம் திருவருட் செயலென எண்ணி, வாளாவிருந்தார். அதனால் அன்று அவருக்கும் மனநிறைவு உண்டாகவில்லை.

{7} இது தந்தையார் திதியாக இருக்க வேண்டும். தாயார் திதி என்பது பிழை.

மணி மூன்றாயிற்று. இதுதான் சமயமென்று அறிந்தனர் இராமலிங்கம். அவர் தம் தமையனார் அப்பொழுது கண்ணுறக் கங்கொள்வார் என்றெண்ணி வீட்டுக்குள் நுழைந்தார். அவர் வரவை எதிர்நோக்கிய வண்ணம் வழிமேல் விழிவைத்துப் பார்த்திருந்த அவர் அண்ணியார் உடனே விரைந்துசென்று அவருக்கு இன்னடிசில் ஊட்டினார். அவருக்குக் கள்ளத்தனமாக இவ்வாறு தம் மைத்துனருக்கு உணவு தருதல் சிறிதும் பிடிக்கவில்லை. ஐயோ! எத்தனையோ பேர் வந்து மகிழ்வோடு வயிறார உண்டிருப்ப, இவர் இவ்வாறு வேளை தப்பி வந்து பதனழிந்த உணவை உட்கொள்ளும்படி இறைவன் கட்டளை நேர்ந்துளதே என்றுன்னி உருக, அவர் கண்களில் நீர் முத்து முத்தாய் வடிந்தது. அது 'பசி ருசி அறியாது' என்னும் பழமொழிக் கிணங்க ஆர்வமும், எங்கே தமையனார் வந்து விடுவாரோ என்ற அச்சமும் ஓங்க, விரைந்துண்ணும் இராமலிங்கம் கண்களுக்குப் புலப்பட்டது. புலப்படலும் அவர் 'அன்பு அன்பைத் தோற்றுவிக்கும்' என்னும் உண்மைக்கிணங்க, தம் அண்ணியார் முகம் பொலிவழிந்து விழி நீர் பெருக்குதலைக் காணப்பொறாராய் உண்ணுதல் தவிர்ந்து அவரை நோக்கி "அண்ணியம்மா, ஏன் புலம்புகிறீர்?" என்று வினவினார். அதற்கு அவள் மறுமொழி புகலாது வாளா விருந்தாள். அவரை மீண்டும் மீண்டும் இராமலிங்கம் வற்புறுத்தினார். அதனால் அவ்வம்மை தனது கண்ணீரைத்



RangaRakes tamilnavarasam.com

துடைத்துக்கொண்டு, "தம்பி, உன் நிலைமையைக் குறித்துத்தான் அழுகிறேன்; நீ எப்படி உலகில் வாழப்போகிறாய், இப்படி எத்தனை நாளைக்குத் திருடனைப்போல வந்து போவது? எனக்குப் பிற்காலத்தில் உன் வாழ்க்கை என்னாகும்!" என்று கூறித் தேம்பித் தேம்பிப் புலம்பினாள்.

"இராமலிங்கம் அறிவு தூண்டப்பட்டது; உணர்ச்சி ஓங்கியது. அன்னையினும் ஆயிரம் மடங்கு அதிகமாகத் தம்மைப் பேணி வளர்த்த அண்ணியார் வருத்தத்தை அவரால் தாங்க முடியவில்லை. அதனால் அவர் அவ்வம்மையை நோக்கி, "அண்ணியம்மா, உங்கள் விருப்பம் யாது? அதைக் கூறினால் தட்டின்றிச் செய்வேன்" என்றார். "நீ உன் தமையனார் விருப்பம்போல் கல்வி கற்கவேண்டியதைத் தவிர்த்து, நான் என்ன சொல்லப்போகிறேன்," என்றார். ஆனால் அப்படியே நான் செய்யத் தடையில்லை. நாளைக்கே மேன்மாடியில் எனக்குத் தனியே ஓர் அறையை விட்டுவிடவேண்டும். அவ்வறையை மெழுகித் தூய்மை செய்து வைத்து விடுங்கள்; நான் கல்வி கற்கத் தொடங்குவேன்", என்றனர்.

அண்ணியம்மை அங்ஙனமே செய்ய ஒப்புக்கொண்டார். அதன்மேல் இராமலிங்கம் தமக்கு ஒருநிலைக் கண்ணாடியும் சில பரிமள வர்த்திகளும் வேண்டுமென அண்ணியிடம் கூறிப் பொருள் பெற்றுக்கொண்டு அவற்றை வாங்கி வந்து தமது அறையிலே வைத்துக்கொண்டார். பிறகு அவ்வறையின் கதவை மூடிக்கொண்டு நாடோறும் படித்துக்கொண்டு வந்தார். சபாபதிப்பிள்ளை ஏதோ தம் இளவல் நல்வழியில் திரும்பி விட்டான் என்றெண்ணிப் பேசாமலிருந்தார். ஆனால் இராமலிங்கம் இன்ன நூலைப் படிக்கின்றார் என்பது யாருக்கும் தெரியாது. கேட்பவர்கட்கெல்லாம் அவர் "இராமலிங்கம் ஏதோ குறியாய் ஓரிடத்தில் தங்கித் தரித்து இருக்கிறான்; கதவை மூடிக்கொண்டு நாள் முழுவதும் படித்துக் கொண்டிருக்கிறான்; ஆனால் அவன் இன்னது படிக்கிறான் என்பது இறைவனுக்கே வெளிச்சம்;" என்று மொழிந்தனர். எனினும், அவருக்கு வீடு தங்கித் தம் தம்பி இருப்பது பெருமகிழ்வை விளைத்தது. இங்ஙனம் சிறிது காலம் சென்றது.

பின்பு, ஒரு நாள் சபாபதிப் பிள்ளைக்குக் கையேடு வாசிக்கும் பெண்மணி நோயுற்றாள். அவருக்குக் கையேடு அவ்வம்மையே வாசித்தல் வருதல் வழக்கம். அவ்வம்மை இனிய குரலும் சிறிது இசைப் பயிற்சியும் உடையவள்; பிரசங்கத்தின் இடையிடையே தேவாரத் திருப்பாசுரங்களைப் பண்ணுடன் பாடுவாள். அன்றியும், பௌராணிகருக்கு ஆங்காங்கு வேண்டப்படும் மேற்கோள்களைச் சமயமறிந்து எடுத்துச் சொல்லுவாள். அதனால் சபாபதிப் பிள்ளைக்கு அவ்வம்மையின் உதவியின்றிப் புராணஞ் சொல்லுதல் இயலாததாக இருந்தது. ஏடு வாசிப்பவர் பெண்பாலராயிருந்ததால் சில இடர்ப்பாடுகளும் இருந்தன. அவ்வம்மை கைம்பெண்; சபாபதிப் பிள்ளைக்கு நெருங்கிய உறவினள். அவள் யாருடைய பார்வைக்கும் தோன்றாதவாறு அவளைச் சுற்றி ஒரு மெல்லிய துணி சதுரமாகக் கட்டப்படல் வேண்டும். அங்ஙனம் கட்டப்படுதல் குறித்த நேரத்திற்கு முன்னரே நடைபெறல் வேண்டும். இவ்வளவு இடர்ப்பாடுகளையும் எண்ணாமல் சபாபதிப் பிள்ளை அவள் வருவாய் தமது குடும்பத்தைச் சார்தலினாலும், அவள் திறமையுடையவளாக இருத்தலாலும், வேறொருவர் தமக்குக் கிடைக்காததாலும், அவளைக் கொண்டே தமது தொழிலை நடத்தி வந்தனர். ஆனால் அவருக்கு அடிக்கடி தம் சகோதரர் கையேடு வாசிப்பதாயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்னும் எண்ணம் உதிப்பதுண்டு.

அற்றைநாள் கையேடு வாசிக்கும் பெண்மணி பிணியாயிருந்ததால் அன்று பிரசங்கத்தை நிறுத்தி வைக்கவேண்டும். ஆனால் அன்று பிரசங்கம் நிறுத்தக்கூடாததாயிருந்தது. பிரசங்கம் வைத்தவர்கள் ஆவலோடு அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்; அவர்கள் ஏமாற்றத்தை அடைவது சபாபதிப் பிள்ளைக்கு விருப்பமில்லை. அதனால், அவர்தம் இனிய அரிய மனைவியை அழைத்து, "இன்று என்ன செய்வது? பிரசங்கத்தை நிறுத்த எனக்கு எள்ளளவும் விருப்பமில்லை! ஏடு வாசிக்கவோ ஆளில்லை. நான் தனியாகச் சொன்னாலும் சபைக்கு அலங்காரமாய் இராது". என்றனர். அவ்வம்மை உடனே, "இதோ வந்துவிட்டேன்", என்று கூறித் தம் கொழுந்தரிடம் சென்று, "தம்பி, உன் தமையனார், பிரசங்கம் நின்றுவிடுகிறதே என்று தவிக்கிறார்; நீ ஏடு வாசிக்கமாட்டாயா? நீ வாசிப்பதாய் இருந்தால் பிரசங்கம் நடைபெறலாமல்லவா? வாசிக்கிறாயா? தைரியமாகச் சொல்", என்று கேட்டாள். இராமலிங்கம் சிறிதும் தாழ்த்தாது கையேடு வாசிக்க ஒப்புக்கொண்டார். இதனை உவகை துளும்பக் கேட்டுக் கொண்ட அவ்வம்மை, தன் கணவனாருக்கு இதனை எடுத்து மொழிய, அவர் அரை மனமாய் ஒப்புக்கொண்டார்; அவருக்கு இராமலிங்கம் எப்படிப் படிப்பானோ என்று ஐயுறவு இருந்தது.

அன்று இரவு பிரசங்கம் துவக்கப்பட்டது. சபாபதிப் பிள்ளை கடவுள் வணக்கச் செய்யுட்களைச் சொல்லி முடித்தனர். இராமலிங்கம் புராணம் வாசிக்கத் தொடங்கினார்.{8} எடுத்த எடுப்பே எல்லாருக்கும் இன்பத்தை ஊட்டியது குரலின் சுவையும் கூடிக்கொண்டது சொல்லும் வகையோ மனத்தைக் கரைக்கிறது; ஒவ்வொரு மொழியும் உள்ளத்தே பொதுந்து அன்பிலூறித் தேனிலூறிய பழம் போலத் தித்திப்பூறி வருகின்றது. பாட்டைப் பிரித்துப் பிரித்து அந்நுவயித்துப் படித்தார்; இடமறிந்து தொடர்களை எடுத்துக்கொடுத்தார். மக்கள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். சபாபதிப் பிள்ளைக்கோ உவகை பொங்கி வழிந்தது. சிலர், 'ஒரே தறியில் துணித்த துண்டு' என்றார்கள். சிலர், அண்ணன் துப்பாக்கி என்றால் இவர் பீரங்கி' என்றார்கள். சிலர், 'இது உற்பாத பிண்டம்' என்றார்கள். பிரசங்க சபையில் தேவாமிர்தம் கொழித்தது.

அன்றிரவு பிரசங்கம் முடிந்தவுடன் சபாபதிப்பிள்ளை மனையைச் சேர்ந்து, தம் அரும் பெறல் வாழ்க்கைச் செல்வியிடம் நிகழ்ந்தவற்றைச் செப்பி நிறை மகிழ்வு கொண்டார். அவ்வம்மை ஏதோ கடவுள் கண்திறந்தார் என்று கூறி முகமலர்ச்சியுடன் தன் கணவரிடம் மொழிந்துவிட்டு, உள்ளுக்குள் பெருங்களிப்படைந்தாள். அவ்வம்மை மறு நாள் தம்பிக்குக் கண்ணேறு கழித்தாள்; இராமலிங்கம் புன்னகை அரும்பினார். இப்பொழுது இராமலிங்கம் மூத்தவர் எதிரிலே வருவதில்லை, இங்ஙனம் பல நாள் சென்றன.

{8} கையோடு படித்தது ச.மு.கந்தசாமிப்பிள்ளை இயற்றிய இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் கீர்த்தனையிலும் ச.மு.க.பதிப்பு இராமலிங்கசுவாமிகள் சரித்திரக் குறிப்புகளிலும் சொல்லப்பட்டுள்ளது.}

ஒரு நாள் சபாபதிப் பிள்ளை திடீரெனக் கடுங் காய்ச்சலால் வருந்தினார். அன்று முத்தியாலுப் பேட்டையில் செல்வத்தில் சிறந்த ஒரு வணிகர் வீட்டில் பிரசங்கம்{9}. அவருக்கோ படுக்கையை விட்டு எழவும் இயலவில்லை; பித்தம் தலை

சுற்றுகிறது; தலை யிடிக்கிறது. அவர் மனைவியிடம் சொல்லி தம்பி இராமலிங்கத்தை அழைத்தார். "அப்பா, நீ செட்டியாரிடம் சென்று நான் இவ்வாறு துன்புறுவதாகச் சொல்லிவிட்டுவா," என்று அனுப்பினார். அவர் பணித்தவாறே இராமலிங்கம் அங்கே சென்றார். மக்கள் திரண்டிருந்தனர்; சுவாமி படங்கள் பல அழகாக அலங்காரஞ் செய்யப்படிருந்தன; கூடத்தின் நடுவில் பெரிய நடராஜர் படம் ஒன்று ரோஜா மாலை சூட்டி ஒரு பலகையின் மீது வைக்கப்பட்டிருந்தது. அப்படத்தின் திருவுருவம் புதிதாகச் சமைக்கப்பட்டது; அது பேரழகு ததும்பி இருந்தது. அதன் முன்னர்த் தேங்காய், பழம், கடலை, கற்கண்டு முதலான தின்பண்டங்கள் தட்டுத் தட்டாய் வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் இராமலிங்கம் சென்று பிரசங்கம் நடைபெற முடியாமையைப் பற்றிக் கூறினால் அவர்கள் மனம் எப்படி இருக்கும்! செட்டியார் உள்ளம் உடைந்தார்; பெருமூச்செறிந்தார்; இனி என்ன செய்வேன்? என்று கவன்றார். அப்போது, அவருக்கு அக்கம்பக்கத்திலே யிருந்தவர்கள் அவர் நிலையை உணர்ந்து, இராமலிங்கத்தைத் தம்மாலியன்றவரையில் பிரசங்கம் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டனர். அவரோ தமக்கு யாதுந் தெரியாதெனப் பன்முறை தடுத்தார். அவர்கள் விட்டபாடில்லை. அதன் மேல் அருள் கனிந்த நெஞ்சையுடைய இராமலிங்கம் அன்று சொல்லக் கடவதாகிய பரஞ்சோதி முனிவர் திருவாய் திருவாய் மலர்ந்தருளிய திருவிளையாடற் புராணத்துள், வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலத்தைப் பத்திச் சுவை சொட்டச் சொட்ட யாவரும் கருவிகரணாதி சேட்டையற்று நிற்ப, விடிய விடியப் பிரசிங்கித்தனர்.{10} ஜனங்கள் வியப்பால் விழுங்கப்பட்டு இராமலிங்கம் சாதாரண மனிதரல்லர்; ஏதோ தெய்வப் பிண்டம் எனக்கொண்டு அவர் பால் அச்சமும், அன்பும் கொண்டு நின்றனர்.

{9} சோமு செட்டியார் வீடென்பர். சென்னை-1, ஜார்ஜ் டவுன், லிங்கிசெட்டிதெரு, எண் 105 உள்ள இவ்வீட்டைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வாங்கி மறைமலையடிகள் நூலகத்தை வைத்துள்ளனர்.

{10} பெரிய புராணத்துள் திருஞானசம்பந்தர் புராணம் என்பர் ச.மு.க.திருஞானசம்பந்தர், வாதவூரடிகள் ஆகிய இருவரிடத்திலுமே வள்ளற்பெருமானுக்கு ஈடுபாடு மிகுதி. ஆதலின் இரண்டில் எதுவாயினும் சிறப்பே, திருஞானசம்பந்தர், வள்ளற்பெருமானின் வழிபடு குரு. வாதவூரடிகளின் திருவாசகம் வழிபடுநூல். அறையிலிருந்த பிள்ளைப்பெருமானை அம்பலத்திற்கிழுத்து விடுத்தது, கையேடு படித்ததும் இக்கன்னிச் சொற்பொழிவுமே யாகும். }

பிறகு அவ்வணிகப் பிரபு சபாபதிப் பிள்ளைக்குப் பதிலாக இனி அவர் தம்பியே பிரசங்கம் செய்தால் போதுமென்று கூறினார். சபாபதிப் பிள்ளை 'குடும்ப பாரம் இனிக் குறையும்; இருவரும் பொருள் ஈட்டுதல் சாலவும் நன்'றென உட்கொண்டு வேறோரிடத்தில் தாமும் பிரசங்கஞ் செய்து வந்தனர்.

இப்படி நிகழுங் காலத்தில், சபாபதிப் பிள்ளைக்குத் தம் தம்பியார் பிரசங்கத்தைக் கேட்க வேண்டுமென்ற வேணவா உண்டாயிற்று. அதனால், அவர் ஒரு நாள் முக்கியமாகத் தம்பியாருக்கும், பொதுவாகப் பிறருக்குந் தெரியாதபடி சபையில் ஒரு மூலையில் இருந்தார். பிரசங்கம் தொடங்கப்பட்டது; கையேடும் இல்லை; பேரேடும் இல்லை. இராமலிங்கம் பெரிய புராணத்திலே 'திருவாரூர்ச் சிறப்பை' எடுத்துக்கொண்டு சோனாமாரியாகப் பொழியத் தலைப்பட்டார்.{11} அவர் வாக்கிலே மதுரமான தமிழ்ச் சொற்கள் தங்குதடையின்றிக் கரைபுரண்ட வெள்ளம்

போல வந்துகொண்டிருந்தன; மனத்தில் கருத்துக்கள் புதிது புதிதாகத் தோன்றிக் கொண்டே யிருந்தன; சொல்லும் தொரணையும், வாக்குப்படுத்துவதும், காட்டும் நயனும் பயனும் சபாபதிப் பிள்ளைக்குப் பீதியை உண்டாக்கின. அன்று முதல் அவர் தம் தம்பியாரைத் தெய்வமாகவே கருதி வாந்தார்"

-பல்பொருள்கட்டுரை, பக்கம் 1-11.

{11} திருவாரூர்ச் சிறப்பைப்பற்றிப் பெருமான் ஆற்றிய சொற்பெருக்கு எங்ஙமிருக்குமென்பதை மனுமுறை கண்ட வாசகத்தில் பெருமான் எழுதும் திருவாரூர்ச் சிறப்பைப் படிப்போர் நன்குணர்வர். இந்நூலில் பின்னோரிடத்து அது எடுத்துக் காட்டப்பெறும்.}

# கந்த கோட்ட வழிபாடு

## கந்த கோட்ட வரலாறு

வள்ளற்பெருமான் வழிபட்ட திருத்தலமாகிய கந்தகோட்டம் சென்னை நகரில் பூங்கா (பார்க் டவுன், சென்னை-3) என்னும் பகுதியில் உள்ளது. கந்தசாமி கோயில் எனவும் முத்துக்குமாரசாமி கோயில் எனவும் இது வழங்கும். கந்தகோட்டம் என வழங்கத் தொடங்கியவர் அடிகளே.

பழங்காலத்தில் கோயில்கள் கோட்டம் எனப்பெயர் பெற்றிருந்தன. வச்சிரக் கோட்டம், வேற்கோட்டம், நிலாக்கோட்டம், நிக்கந்தக் கோட்டம், சுடுகாட்டுக் கோட்டம் எனப் பல கோட்டங்கள் காவிரிப் பூம் பட்டினத்திலிருந்ததாகச் சிலப்பதிகாரத்தாலறிகிறோம்.

**அமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்**
**புகர்வெள்ளை நாகர்தம் கோட்டம் பகல்வாயில்**
**உச்சிக்கிழான் கோட்டம் ஊர்க்கோட்டம் வேற்கோட்டம்**
**வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்**
**நிக்கந்தக் கோட்டம் நிலாக்கோட்டம்**

**-கனாத்திறமுரைத்த காதை (9-13)**

இதற்கு உரை எழுதும் அரும்பதவுரையாசிரியர் "அமரர் தருக்கோட்டம்-கற்பகம் நிங்குங் கோயில், வச்சிரக் கோட்டம்-வச்சிராயுதம் இருக்கிறகோயில். நிக்கந்தக் கோட்டம்-நிக்கந்த தேவரான அருகர் கோயில், நிலாக்கோயில்" என உரையெழுதுகின்றார். சேரர் தலைநகராகிய வஞ்சியின் கீழ்த்திசையில் குணவாயிற்கோட்டம் என்றொரு கோயிலிருந்த தென்பதூம், அரசு துறந்திருந்த இளங்கோவடிகள் அதிலிருந்தாரென்பதூஉம்,

**"குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த**
**குடக்கோக் சேர லிளங்கோ வடிகட்கு"**

என்னும் சிலப்பதிகாரப் பதிகச் செய்யுளடிகளாலும் அதன் உரைகளாலும் அறியப்படும்.



RangaRakes tamilnavarasam.com

காஞ்சிபுரத்திலுள்ள முருகன் கோயில் 'கச்சிக் குமர கோட்டம்' என்றும், கும்பகோணத்திலுள்ள கோயிலொன்று 'குடந்தைக் கீழ்க்கோட்டம்' என்றும் வழங்கப்படுவதைக் காண்கிறோம். திருவையாற்றுக் கோயிலுக்குக் 'காவிரிக் கோட்டம்' என்பது பெயர். 'காவிரிக் கோட்டத்து ஐயாறுடைய அடிகளோ' என்பது சுந்தரர் தேவாரத் திருவாக்கு.

மணிமேகலையுள் சிறைக்கோட்டம் அறக் கோட்டமாக்கிய காதையில், சிறைச்சாலையும் அறச்சாலையும், சிறைக்கோட்டம் அறக்கோட்டம் என வழங்கப்படுதலின், கோட்டம் என்பது இடப் பொதுப் பெயராக வழங்கப்பட்டு வந்ததெனக் கருதலாம். முற்காலத்தின் நாட்டின் பிரிவுகளும் கோட்டம் என வழங்கப்பட்டன. தொண்டை(டை) நாடு இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கோட்டம் என்னும் சொல் பிற்காலத்தில் வழக்கொழிந்து போயிற்று. இந்திய விடுதலைக்குப் பிறகு தமிழகத்தின் ஆட்சி மொழியாகத் தமிழ்மொழி ஏற்கப்பட்ட பின்னர் ரெவினியு டிவிஷனைக் (Revenue Division) கோட்டம் என வழங்குகிறோம். இலக்கிய வழக்கிலும் வரலாற்று வழக்கிலும் அருகிப் போன 'கோட்டம்' என்னும் இச்சொல்லை இற்றைக்கு நூற்றுநாற்பதாண்டுகளுக்கு முன்னரே வழக்கிற்குக் கொணர்ந்த சிறப்பு வள்ளற்பெருமானையே சாரும். கந்தசாமி கோயிலைக் கந்த கோட்டமாக்கியவர் அடிகளே.

கந்த கோட்டம் மிகப் பழைமையான கோயிலன்று. இது ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது. சாலிவாகன சகம் 1595-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு செங்கற் கட்டிடமாகக் கட்டப்பட்டதென்றும் இப்போதுள்ள கற்கோயில் ஷெ சகம் 1780ல் கட்டப்பட்டதென்றும் இங்குள்ள கல்வெட்டால் அறியப்படுகிறது. முந்நூறு ஆண்டுகளுக்கு முன் சென்னையில் வேளூர் மாரிசெட்டியார், கந்தப்ப ஆசாரியார் என்ற இரு நண்பர்கள் இருந்தனர். இவ்விருவரும் கார்த்திகைதோறும் திருப்போரூர் சென்று வழிபடுவதை நியமமாகக் கொண்டிருந்தனர். இந்நியமப்படி சாலிவாகன சகம் 1595-ஆம் ஆண்டு பிரமாதி வருடம் மார்கழித் திங்கள் கார்த்திகையன்றும் திருப்போரூர் சென்றனர். வழி நடந்த களைப்பினால் போரூரில் ஒரு குளக் கரையில் படுத்தயர்ந்தனர். அருகிலுள்ள புற்றொன்றில் முருகப்பெருமானின் திருவுருவம் மறைந்து கிடப்பதாகக் கனவு கண்டனர். விழித்தெழுந்து புற்றைத் தோண்டிப் பார்த்து, முருகன் திருவுருவொன்று காணப்படவே இதுவும் அவனருளே என மகிழ்ந்து அதனைத் தம்முடன் சென்னைக்கு எடுத்துவந்து கந்தப்ப ஆசாரியார் முன்னரே கட்டி வழிபட்டுவரும் விநாயகர் கோயிலில் எழுந்தருளச் செய்தனர். முருகனுக்குத் தனிக்கோயில் அமைக்க மாரி செட்டியார் விரும்பினார். முத்துநாயகர் என்பவரால் வழங்கப்பட்ட தோட்டத்தில் செங்கற்கோயில் கட்டப்பெற்றது. பின்னர் அதுவே கற்கோயிலாகக் கட்டப்பெற்றது.

வள்ளற்பெருமான், முருகதாச சுவாமிகள் என்னும் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் ஆகிய மூவரும் கந்த கோட்டத்தை வழிபட்டுப் பாமாலைகள் சூட்டியுள்ளனர். வள்ளற் பெருமானால் அருளப்பெற்றவை தெய்வமணிமாலையும் கந்தர் சரணப் பத்தும் ஆகும். தண்டபாணி சுவாமிகள் பாடியவை; கந்த கோட்டத் திருப்புகழ், கந்தகோட்டப் பதிற்றுப்பத்தந்தாதி, மயில்மிச்சை கண்ட பதிகம், தேர்மிசை கண்ட பதிகம், சிவகுரு தரிசனப்பதிகம், சண்முக தரிசனப் பதிகம்,


RangaRakes tamilnavarasam.com

விமான தரிசனப் பதிகம், கந்தசுவாமிக் கலம்பகம், கந்தசாமிப்பிள்ளைத் தமிழ், கந்தசாமிப் பதிகம், கந்தர் தனிவெண்பா, என்பனவாம். பாம்பன் சுவாமிகள் பாடியன; கந்தசாமிப்பா, கந்தர் இரட்டை மணிமாலை, கந்தர் ஒருபா ஒருபது, கந்தர் திருவாரம், கந்தர் நான்மணிமாலை, கந்தவேள் வேட்கை, சென்னைச் சேய், சென்னை முத்துக்குமாரசுவாமி ஆகியனவாம்.

குளத்தூர் வரகவி கிருஷ்ணப்ப செட்டியார் செல்வக் கந்தர் தலபுராணம் என்ற பெயரில் செய்யுள் வடிவில் ஒரு தல புராணத்தை இயற்றினார். கந்தர் திருப்புகழ், கந்தர் கீர்த்தனை என்பனவும் இவரால் செய்யப்பட்டன. உரைநடையில் தல புராணம் ஒன்று நமச்சிவாய யோகிகள் என்பவரால் செய்யப்பட்டுள்ளது.

கந்த கோட்டத்தைப் பற்றிப் பல பிரபந்தங்கள் தோன்றியிருந்தும் வள்ளற் பெருமானது அருட்பாக்களைத் தவிர மற்றவையாவும் பெருவழக்காகப் பயிலப் பெறவில்லை என்பது கண்கூடு.

## கந்தகோட்ட வழிபாடு

பள்ளிசென்று பயிலாதும் வீட்டில் தங்காதும் திரிந்த பிள்ளைப் பெருமான் நாள்தோறும் கந்தகோட்டத்திற்குச் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டார்கள். தனித்து ஓரிடத்தமர்ந்தும் கந்தவேளின் முன் நின்றும் நெடுநேரம் மெய்ம்மறந்து தியானிப்பார். அருட்பாடல்களைப் பாடிப் பணிவார். அக்காலத்தில் அங்ஙனம் பாடப்பெற்றதே 'தெய்வமணிமாலை'யும், 'கந்தர் சரணப்பத்து'ம் ஆகும். பெருமானால் முதன் முதலிற் பாடப்பெற்ற தலம் கந்தகோட்டமே. முதன் முதலிற் பாடப்பெற்றது தெய்வமணிமாலையே. முதலில் அச்சானதும் இதுவே. தெய்வமணிமாலை இனிய எளிய செஞ்சொற்களானியன்றது. முப்பத்தொரு திருப்பாடல்களைக் கொண்டது. பாடல்தோறும் இறுதியில் 'கந்த கோட்டத்துள் வளர் தலம் ஓங்கு கந்தவேளே தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணியே' என்பதை மகுடமாக உடையது. 'தெய்வமணியே' என முடிவதால் 'தெய்வ மணிமாலை' எனப் பெயர் பெற்றது. முதற்பாடல் 'திருவோங்கு புண்ணியச் செயலோங்கி' என்ற தொடக்கத்தை யுடையது
.

**திருஓங்கு புண்ணியச் செயலோங்கி அன்பருள்**
**திறலோங்கு செல்வம்ஓங்கச்**
**செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பம்**
**திகழ்ந்தோங்க அருள்கொடுத்து**
**மருஓங்கு செங்கமல மலர்ஓங்கு வணம்ஓங்க**
**வளர்கருணை மயம்ஓங்கிஓர்**
**வரம்ஓங்கு தெள்அமுத வயம்ஓங்கி ஆனந்த**
**வடிவாகி ஓங்கிஞான**
**உருஓங்கும் உணர்வின்நிறை ஒளிஓங்கி ஓங்கும்மயில்**
**ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்**
**உறவோங்கும் நின்பதம்என் உளம்ஓங்கி வளம்ஓங்க**
**உய்கின்ற நாள்எந்தநாள்**
**தருஓங்கு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலம்ஓங்கு கந்தவேளே**



RangaRakes tamilnavarasam.com

**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே**

பெருமான் பாடியருளிய முதற்பாடல் இதுவே. பெருமானது திருவாக்கில் முதன்முதலிற் பிறந்த சொல் 'திருஓங்கு' என்பதே. பெருமானால் 'திருஓங்கு' என்று பாடப்பெற்ற பின்னரே இத்தலம் விளக்கம் பெற்றது. எளிய கோயிலாயிருந்த அது, பொருளும் புகழும் பெற்றுச் சிறப்பதாயிற்று. "சென்னைக் கந்தகோட்டத்தைச் சுவாமிகள் பாடியபின்பு, அது பொன்னும் நவமணியும் கொழிக்கும் செல்வத்திருக் கோட்டமாகத் திகழ்கின்றது என்பர்" என மணி-திருநாவுக்கரசு முதலியார் எழுதுகின்றார்.

சிறுவர்களும் பெரியோர்களும் தெய்வமணிமாலைப் பாடல்களை மனப்பாடம் செய்துகொண்டு பாடத் தொடங்கினர். அன்பர் ஒருவர் முன்வந்து தெய்வமணிமாலையையும் கந்தர் சரணப்பத்தையும் அப்போதே அச்சிட்டார். அம்முதற் பதிப்பின் முகப்பேடு வருமாறு. (பக்கம் 28)

இதில் அச்சிடப்பட்ட ஆண்டு குறிப்பிடப்படவில்லை. ஆயினும் இது அடிகளார் ஒழிவிலொடுக்க நூலை அச்சிற் பதிப்பித்த 1851-ஆம் ஆண்டுக்கு முற்பட்டதாக இருக்கும் என்று தொன்றுதொட்டுவரும் கேள்வியால் அறியக் கிடக்கிறது எனத் திருவருட்பா பதிப்பாளர் ஆ.பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் எழுதுகின்றார்.

அடிகள் முதன் முதலில் பாடிய தலம், கந்தகோட்டமே. பாடிய பாமாலை தெய்வமணிமாலையே. அடிகளது முதற்பாடல் 'திருவோங்கு' என்னுந் தொடக்கத்தையுடைய இதன் முதற்பாடலே. அடிகள் திருவாக்கிற் பிறந்த முதற்சொல் 'திருஓங்கு' என்பதே. அடிகளது அருட்பாடல்களுள் முதன்முதலில் அச்சானது தெய்வமணிமாலையும் கந்தர் சரணப்பத்துமே. இவ்வாறு அடிகள் வாழ்வில் கந்தகோட்டமும் தெய்வமணிமாலையும் முதலிடம் பெறுகின்றன. தெய்வமணிமாலையுள், ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும் என்று தொடங்கும் பாடல் பெரிதும் பயிலப்படுவதொன்றாம்.

**ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற**
**உத்தமர்தம் உறவுவேண்டும்**
**உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்**
**உறவுகல வாமைவேண்டும்**
**பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை**
**பேசா திருக்கவேண்டும்**
**பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்**
**பிடியா திருக்கவேண்டும்**
**மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை**
**மறவா திருக்கவேண்டும்**
**மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற**
**வாழ்வில் நான் வாழவேண்டும்**
**தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலம்ஓங்கு கந்தவேளே**

**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே.**

-8

பிள்ளைப்பெருமான் சிறுவயதில் எவ்வெவற்றை இறைவனிடம் வேண்டினாரென்பது இதனாற் போதரும்.

<u>**கண்ணாடியில் காட்சிபெறல்**</u>

அண்ணியின் கண்ணீரைக் காணப்பொறாது வருந்தி. அவர் விருப்பப்படியே படிப்பதற்கிசைந்த இளைஞராகிய பிள்ளைப் பெருமான் மறுநாளே வீட்டுக்கு வந்தார். கைநிறையப் புத்தகங்களோடும் நிலைக்கண்ணாடியோடும், பூசைப்பொருள்களோடும், அலகிட்டு மெழுக்கிட்டு வைத்திருந்த மேன்மாடி யறையுட் புகுந்தார். அறைக்கதவை மூடிக்கொண்டார். நிலைக்கண்ணாடியைச் சுவரில் வைத்து அதனெதிரில் அமர்ந்து தியானிக்கத் தொடங்கினார். உள்ளே நடப்பது இன்னதென அண்ணன், அண்ணியார் அறியார். 'கதவை மூடிக்கொண்டு உள்ளே என்ன படிக்கிறான்! என்ன செய்கிறான் என்பது ஒன்றும் தெரியவில்லையே, எல்லாம் மூடு மந்திரமாகவன்றோ' இருக்கிறது எனச் சபாபதிப்பிள்ளை நினைத்தார். இருப்பினும் தம்பி ஓரிடத்துத் தங்கித் தரித்திருப்பதில் அவருக்கு மகிழ்ச்சி. அண்ணியாரும் ஏதோ 'கடைசியாகக் கடவுள் கண்திறந்தார்' என்றிருந்தார்.

அறைக்குள்ளே பெருமான் முருக உபாசனையில் முனைந்தார். உண்ணும்போது தவிர மற்றப்போது வெளியே வருவதில்லை. உறக்கமும் உள்ளேயே கொள்வார். கண்ணாடியின் எதிரே அமர்ந்து உண்ணாடினார். கண்ணாடியிற்றோன்றிக் கண்குளிரக் காட்சி தந்தருள் என முருகனை வேண்டினார். ஒருநாள் தியானத்திலிருந்த போது கண்ணாடியில் முருகன் தோன்றினான். ஆறுமுகத்தோடும் பன்னிரு தோள்களோடும் வேலோடும் மயிலோடும் கோழிக்கொடியோடும் தணிகை முருகன் கண்ணாடியிற் காட்சியளித்தான். பிள்ளைப் பெருமானின் பெருவேட்கையைத் தணிகைப் பிள்ளைப்பெருமான் தணித்தான். பெருமான் கண்குளிரக் கண்டார். அதுவரை காணாதன கண்டார், களித்தார். கண்ணுற்ற அக்காட்சியைப் பண்ணுற்ற பாடலால் பாடித் துதித்தார்.

**சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ்கடப்பம்**
**தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களும்ஓர்**
**கூர்கொண்ட வேலும் மயிலும்நற் கோழிக் கொடியும்அருட்**
**கார்கொண்ட வண்மைத் தணிகா சலமும்என் கண்ணுற்றதே**

**-5, பிரார்த்தனை மாலை 1.**

முன்னையோர் யாரும் கண்ணாடியில் வழிபட்டதாக வரலாறில்லை. கண்ணாடியில் வழிபட்டதும் காட்சியளித்ததும் புதுமையாக உள்ளன. சாந்தம்புத்தூரில் வேடன் ஒருவனுக்குச் சிவபெருமான் கண்ணாடியில் தோன்றி அருள் செய்ததனைத் திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருமான் குறிப்பிடுகின்றார்.



RangaRakes tamilnavarasam.com

**தர்ப்பணம் அதனில் சாந்தம் புத்தூர்**
**விற்பொரு வேடற்கு ஈந்த விளைவும்**

**-2. கீர்த்தித் திருஅகவல் 31-32.**

**(தர்ப்பணம்-கண்ணாடி)**

கண்ணாடியில் வேடனுக்கு அருள்செய்த வரலாற்றின் விளக்கம் தெரிந்திலது.{12}

**ஓதாதுணர்தல்**

பிள்ளைப் பெருமான் பள்ளிப்பருவம் எய்தியதும் தமையனார் சபாபதிபிள்ளை தாமே கல்விப் பயிற்சியைத் தொடங்கி வைத்தார். பின்னர் தமதாசிரியராகிய காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதிமுதலியாரிடன் கல்வி கற்க அனுப்பினார். பெருமான் உலகியற் கல்வியில் கருத்தூன்றவில்லை. இளைய இராமலிங்கரின் அறிவுத் தரத்தையும் பக்குவ நிலையையும், கந்த கோட்டஞ் சென்று கவிபாடித் துதித்தலையும் கண்ட மகாவித்துவான் இவ்விளைஞர் கல்லாதுணரவும் சொல்லாதுணர்த்தவும் வல்லவரென்றுணர்ந்து அவர்க்குக் கற்பிப்பதைக் கைவிட்டார். பின்னாளில் அடிகள் தொண்ட மண்டல சதகத்தைப் பதிப்பித்த போது (1855) அப்பதிப்பிற்குத் தாம் அளித்த சாற்றுக்கவியில் 'பலகலை தெரிதரும் உணர்ச்சியன், சிவனருள் புனையும் மாறுறா அன்பர், மனமாக அகன்றோன், தேறுவார் உளத்துத் திகழ்ந்தயன் முதலோர் தெரிதற்கரிய சிதம்பர நகரில் பரிவுறு புலமைப்பண்பன் இராமலிங்கமெனும் பெயரோனே' என அடிகளைப் பாராட்டியுள்ளார்.{13}

{12} அடிகள் கண்ணாடியை நிறுவி வழிபட்டாரெனவே செவிவழிச் செய்தியும் வரலாறுகளும் கூறுகின்றன. நிலைக்கண்ணாடியை வைத்து வழிபடுவது எந்த மரபு என்பது விளக்கவில்லை. இதற்குமுன் அவ்வாறு யாரும் வழிபடதாகத் தெரியவில்லை. கோயில்களில் கண்ணாடி சேவை என்பதொன்றுண்டு. மூர்த்தியை அணி செய்து, நிலைக்கண்ணாடியின் எதிரே நிறுத்தி, கண்ணாடியிற் காணும் வடிவத்தை வணங்குவதே கண்ணாடி சேவை. திருவரங்கம் பெரிய கோயிலில் கண்ணாடி சேவைக்கென்றே நாற்புறமும் சுவரில் கண்ணாடி பதித்த தனி அறை ஒன்று உண்டு, அடிகள் கண்ணாடியை வைத்து வழிபடாது திருவுருவப் படத்தையோ அல்லது வேறெதனையோ வைத்து வழிபட்டிருக்கலாம். அல்லது இவையொன்றுமின்றித் திருவுருவை உள்ளத்தில் நினைந்தே தியானித்து வழிபட்டிருக்கலாம். சுவரிலிருந்த கண்ணாடியில் முருகன் தோன்றிக் காட்சியளித்திருக்கலாம். இங்ஙனம் கருதினும் இழுக்கன்று. வழிபாட்டுக்கென்றே அடிகள் நிலைக்கண்ணாடியைப் புதிதாக நிறுவி வழிபட்டனரா அல்லது அடிகளால் வைக்கப்படாது முன்னரே அவ்வறையிலிருந்த கண்ணாடியில் காட்சியளிக்கப் பெற்றனரா என்பது தெளிவாக விளங்காததே. கண்ணாடி முன்னரே இருப்பினும், அல்லது அடிகள் புதிதாக வைப்பினும், எவ்வாறிருந்தபோதிலும் கண்ணாடியிற் காட்சி பெற்றார் என்பதே பொருத்தம். கண்ணாடியில் வழிபட்டார் என்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. சன்மார்க்க அன்பர்கள் சிலர் அருட்பெருஞ்ஜோதி வழிபாட்டுக்காக நிறுவியுள்ள ஒளிவளர் திருவிளக்கோடும் வள்ளற் பெருமான் திருவுருவப் படத்தோடும், நிலைக்கண்ணாடி ஒன்றையும் வைத்து வழிபாடு செய்து வருகின்றனர். கண்ணாடி வழிபாடு என்று ஒரு புதிய மரபை நாம் உண்டாக்குதல்



RangaRakes tamilnavarasam.com

முறையெனத் தோன்றவில்லை. முடிவாக அடிகள் கூறிய அருட்பெருஞ்ஜோதி வழிபாடே நமக்குரியதாம்.

{13} சபாபதி முதலியாரின் காலம் 1792-1871. இவர், உரையாசிரியர் மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் எனப்படுவார். புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் இவரது மாணாக்கராவார். அடிகனின் மற்றொரு தமையனாரான பரசுராம பிள்ளையும் இவரிடம் கல்வி கற்றவரே. பெரிய புராணத்தையும் (1860) தேவாரத்தையும் (1863) முதல் முதலில் அச்சிட்டவர் இவரே இவர் இயற்றிய நூல்கள். திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, மருந்தீசர் சடைப்பத்து. பச்சையப்ப முதலியார் நீதிமாலை, பச்சையப்ப முதலியார் புகழ்மாலை என்பன. பல கீர்த்தனைகளையும், இயற்றியுள்ளார். பல புராணங்களுக்கு உரை எழுதினார். இவரது மாணவர் பலர் பெரும்புகழ் பெற்றனர்.}

அடிகள் எப்பள்ளியினும் பயின்றதில்லை. எவ்வாசிரியரிடத்தும் படித்ததில்லை. கற்கவேண்டுவனவற்றை இறைவனிடமே கற்றார். கேட்க வேண்டுவனவற்றை இறைவனிடமே கேட்டார். பெருமானின் கல்வியும் கேள்வியும் இறைவனிடத்துப் பெற்றதேயொழிய வேறு எவ்வாசிரியரிடத்தும் பெற்றதல்ல. இறைவன் அடிகளைப் பள்ளியில் பயிற்றாது தானே கல்வி பயிற்றினான். இங்ஙனம் அடிகள் ஓதாதே உற்ற கலைகளை யெல்லாம் உணர்ந்தார். இவை பின்வரும் அகச் சான்றுகளாகிய அருட்பாக்களால் அறியப்பெறும். கற்றதும் கேட்டதும் இறைவனிடத்தே என்பது

**சுற்றதுமற் றவ்வழிமா சூததுஎன் றெண்ணாத்**
**தொண்டரெலாங் கற்கின்றார் பண்டுமின்றுங் காணார்**
**எற்றதும்பு மணிமன்றில் இன்பநடம் புரியும்**
**என்னுடைய துரையேநான் நின்னுடைய அருளால்**
**கற்றதுநின் னிடத்தேபின் கேட்டதுநின் னிடத்தே**
**கண்டதுநின் னிடத்தேஉட் கொண்டதுநின் னிடத்தே**
**பெற்றதுநின் னிடத்தேஇன் புற்றதுநின் னிடத்தே**
**பெரியதவம் புரிந்தேன்என் பெற்றிஅதி சயமே**

**-4, அன்புமாலை 16.**

என்ற பாடலானும், பள்ளியில் பயிற்றாது இறைவனே கல்வி பயிற்றினான் என்பது,

**சினைப்பள்ளித் தாமங்கள் கொணர்ந்தனர் அடியார்**
**சிவசிவ போற்றிஎன் றுவகைகொள் கின்றார்**
**நினைப்பள்ளி உண்ணத்தெள் ஆரமு தளிக்கும்**
**நேரம்இந் நேரம்என் றாரியர் புகன்றார்**
**முனைப்பள்ளி பயிற்றாதென் தனைக்கல்வி பயிற்றி**
**முழுதுணர் வித்துடல் பழுதெலாம் தவிர்த்தே**
**எனைப்பள்ளி எழுப்பிய அருட்பெருஞ் ஜோதி**
**என்னப்ப னேபள்ளி எழுந்தருள் வாயே**

**-6 (முடி) திருப்பள்ளிஎழுச்சி 7**

என்ற பாடலானும்,



RangaRakes tamilnavarasam.com

"எல்லாமானவராயும் ஒன்றுமல்லாதவராயும் எல்லா அண்டசராசரங்களின் அகத்தும் புறத்து நிறைந்து விளங்குகின்ற தனித் தலைமைக் கடவுளே! குமாரப் பருவத்தில் என்னைக் கல்வியிற் பயிற்றும் ஆசிரியரையின்றியே என்றரத்திற் பயின்றறிதற் கருமையாகிய கல்விப் பயிற்சியை எனதுள்ளகத்தே யிருந்து பயிற்றுவித்தருளினீர்" என அடிகள் இறைவனிடத்துச் செய்துகொண்ட சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெருவிண்ணப்பத்தின் பகுதியாலும் பெறப்படும். ஓதாதுணர்ந்தனர் என்பது,

நாதாபொன் அம்பலத் தேஅறி வாநந்த நாடகஞ்செய்
பாதா துரும்பினும் பற்றாத என்னைப் பணிகொண்டெல்லாம்
ஓதா துணர உணர்த்திஉள் ளேநின் றுளவுசொன்ன
நீதா நினைமறந் தென்நினைக் கேன்இந்த நீணிலத்தே

-2, தனித்திருவிருத்தம் 49.

ஏதும்அறி யாதிருளில் இருந்தசிறி யேனை
எடுத்துவிடுத் தறிவுசிறி தேய்ந்திடவும் புரிந்து
ஓதுமறை முதற்கலைகள் ஓதாமல் உணர
உணர்விலிருந் துணர்த்திஅருள் உண்மைநிலை காட்டித்
தீதுசெறி சமயநெறி செல்லுதலைத் தவிர்த்துத்
திருஅருண்மெய்ப் பொதுநெறியில் செலுத்தியும்நான்மருளும்
போதுமயங் கேன்மகனே என்றுமயக் கெல்லாம்
போக்கிஎனக் குள்ளிருந்த புனிதபரம் பொருளே

-4, அன்புமாலை 25.

சாதிகுலம் சமயம்எலாம் தவிர்த்தெனைமேல் எற்றித்
தனித்ததிரு அமுதளித்த தனித்தலைமைப் பொருளே
ஆதிநடுக் கடைகாட்டா தண்டபகிர் அண்டம்
ஆர்உயிர்கள் அகம்புறம்மற் றனைத்தும்நிறை ஒளியே
ஓதிஉணர்ந் தவர்எல்லாம் எனைக்கேட்க எனைத்தான்
ஓதாமல் உணர்ந்துணர்வாம் உருவுறச்செய் உறவே
சோதிமய மாய்விளங்கித் தனிப்பொதுவில் நடிக்கும்
தூயநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே

-6 (இடை) அருள்விளக்கமாலை 23.

ஓதி யுணர்தற் கரிய பெரிய
வுணர்வை நண்ணி யே
ஓதா தனைத்து முணர்கின் றேனின்
னருளை யெண்ணி யே

-(கீர்த்தனை)மெய்யருள் வியப்பு 41.

ஓதா துணர்ந்திட ஒளிஅளித் தெனக்கே



RangaRakes tamilnavarasam.com

**ஆதாரம் ஆகிய அருட்பெருஞ் ஜோதி**

**-6, அருட்பெருஞ்ஜோதி அகவல்23,24**

என்னும் பாடல்களாற் பெறப்படும். ஓதினும் உணர்தற்கரிய பெரிய உணர்வுகளையும் கலைகலையும் ஓதாதே உணரப்பெற்றாரெனவும், ஓதி உணர்ந்தவரெல்லாம் தன்னைக் கேட்கத் தான் ஓதாதுணர்ந்தாரெனவும் மேற்பாடல்களில் தெளிவாகக் கூறப்பெற்றமை காண்க. மேலெடுத்துக் காட்டியவெலாம் வலிய அகச்சான்றுகளாதல் அறிக. முற்பிறப்புகளிலேயே சரியை கிரியை யோகங்களை முடித்து இப்பிறப்பில் ஞானத்தில் நின்று சித்திபெறுதற்கென்றே பிறந்த சாமுசித்தராதலின்{14} அடிகள் இளமையிலேயே ஓதாதுணரப் பெற்றார். ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற் கெழுமையும் ஏமாப்புடைத்து என்னுங் குறள் (398) மொழி, அடிகட்கு முற்றும் பொருந்துவதாம்.

{14} ஆன்மாக்களை மூன்று வகையினராகச் சாத்திரம் கூறுகிறது. 1. பிராகிருதர் 2. வைநயிகர், 3. சாமுசித்தர். பிராகிருதர் என்பார் சாமானியர், லௌகிகர், உலகியலார், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழ்பவர். உலகில் பெரும்பாலோர் பிராகிருதரே. வைநயிகர் என்பார் வினய சீலர். ஓரலவு பக்குவம் வாய்ந்தவர்கள். சாமு சித்தர் என்பார் அதிதீவிர பக்குவிகள். முற்பிறப்புகளிலேயே சரியை, கிரியை, யோகங்களை முடித்து இப்பிறப்பில் ஞானியாகவே பிறப்பவர்கள்.

சாமு சித்தரைப் 'போத மிகுத்தோர்' என்றும், பிராகிருதரைப் 'பேதமைக்கே பொருந்தினோர்' என்றும், வைநயிகரை 'கதிப்பாற் செல்ல ஏது நெறி எனும் அவர்' என்றும் அருணந்தி சிவாசாரியர் சிவஞான சித்தியாரிற் கூறுவர்.

**போதமிகுத் தோர்தொகுத்த பேதை மைக்கே**
**பொருந்தினோ ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல**
**ஏதுநெறி மெனுமவர்கட் கறிய முன்னாள்**
**இறைவனரு ணந்திதனக் கியம்ப நந்தி**
**கோதிலருட் சனற்குமா ரற்குக் கூறக்**
**குவலயத்தின் அவ்வழியெங் குருநாதன் கொண்டு**
**தீதகல எமக்களித்த ஞான நூலைத்**
**தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி யென்றே**

**-9**

இதற்கு உரை எழுதும் சிவாக்கிரயோகிகள் 'ஞானாதிகாரியாகிய சாமு சித்தருக்கும் உலக வாழ்வே மெய்யென்றும், தேகமே ஆன்மாவென்றும் இருக்கும் பிராகிருத சனங்களுக்குமன்றி, மோட்சத்துக்கு ஏது என்னை? என்று சிந்திக்கும் வைநயிகருக்கு அறியும்படி" என்றெழுதுகின்றார். மேலும் "சாமுசித்தராவார்; சாமாநியமான இஷ்டா பூர்த்தாதி தருமங்களுக்குப் பரமான சிவ தருமமாகிய சரியை கிரியை யோகம் இயற்றி அதனால் நின்மல அந்தக்கரணராய், அந்தத்தேகம் விட்டும் அந்த ஞானம் கெடாமல் மீளவும் ஜனிக்கும்பொழுதும் அந்த ஞானத்துடனே ஜனிக்கும்பொழுதும் அந்த ஞானத்துடனே ஜனித்துச் சிவபாவனை பண்ணுமவர். வைநயிகராவார் விநயசீலராய் உலகத்துக்கு உயர்ந்தோர் போதிக்கும்



RangaRakes tamilnavarasam.com

ஞானத்தினானும் குரு உபதேசத்தினானும் சிவ சாத்திரத்தினானும் நித்தியா நித்திய வஸ்து விவேகிகளாய், மனோ வாக்குக் காய வியாபாரங்களினால் சர்வ கன்மங்களையும் துடைக்கப் பட்டவர்களாகிக் கிராமத்தின் மோட்சத்தையடைபவர். பிராகிருதராவார் பூமியில் ஜனித்து மேற் சொற்பனத்தின் ஞானம் போல் அறிந்தறியாமலும் கிளிஞ்சிலை வெள்ளியென்று அறிவதுபோல விபரீத ஞானியுமாய், அதனாலே தேகாதிகளை ஆன்மா என்றும் பிரகிருதி ஜன்னிய வஸ்துக்களைப் பரமென்றும் எண்ணுமவர், "என எழுதிச் சாமுசித்தர், வைநயிகர், பிராகிருதராவார் இத்தகையர் என்பதைத் தெளிவாக விளக்குகிறார்.

திருஞான சம்பந்தர், இராமலிங்க அடிகள் போன்றோர் சாமு சித்தர்கள்; அஃதாவது பிறவி ஞானிகள். இவர்களது இலக்கணத்தைச் சிவாக்கிரயோகிகள் "அந்தத் தேகம் விட்டும் அந்த ஞானம் கெடாமல் மீளவும் ஜனிக்கும் பொழுது அந்த ஞானத்துடனே ஜனித்து" எனக் கூறுவதை உற்று நோக்குக. இவர்கள் முற்பிறப்பில் எவ்வளவு அறிவோடு இருந்து இறந்தார்களோ அவ்வளவு அறிவோடு பிறந்திருக்கிறார்கள். விட்ட இடத்தில் தொட்டிருக்கிறார்கள். இதுதான் விட்ட குறை தொட்ட குறை என்பது.}

## ஒன்பதாம் அகவையில் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றது

இங்ஙனம் ஓதாதுணர்ந்த பிள்ளைப்பெருமான் ஒன்பதாம் அகவையில் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றார். ஒன்பதாம் ஆண்டில் இறைவன் தம்மை ஆண்டருளியதைப் பெருமானாரே பின்னாளில் தனது பாடல்களிற் குறிப்பிட்டுள்ளனர்.

**வேண்டாமை வேண்டுகின்றோர் நிற்க மற்றை**
**வேண்டுவார் வேண்டுவன விரும்பி நல்கும்**
**தூண்டாத மணிவிளக்கே பொதுவி லாடும்**
**சுடர்க்கொழுந்தே என்னுயிர்க்குத் துணையேஎன்னை**
**ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டு கொண்ட**
**அருட்கடலே என்உள்ளத் தமர்ந்த தேவே**
**ஈண்டாவ எனச்சிறிய அடியேன் உள்ளத்**
**தெண்ணம்அறிந் தருளாயேல் என்செய் கேனே.**

**-2, அடிமைப் பதிகம் 3.**

**வேண்டார் உளரோ நின்னருளை மேலோ ரன்றிக் கீழோரும்**
**ஈண்டார் வதற்கு வேண்டினரால் இன்று புதிதோ யான்வேண்டல்**
**தூண்டா விளக்கே திருப்பொதுவிற் சோதி மணியே ஆறொடுமூன்**
**றாண்டா வதிலே முன்னென்னை யாண்டாய் கருணை யளித்தருளே.**

**-6 (முன்) வாதனைக்கழிவு 7.**

என்பன காண்க. இவை தவிர, 'என்னையறியாப் பருவத்தாண்டு கொண்ட என் குருவே,' 'என்னைச் சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே,' 'எனை அறியா இளம் பருவந்தனிலே பரிந்து வந்து மாலையிட்டான்,' 'ஏதும் ஒன்றறியாப் பேதையாம்

பருவத்தென்னை ஆட்கொண்டு,' 'தெருவிடத்தே விளையாடித் திரிந்த எனை வலிந்தே சிவமாலை அணிந்தனை', 'அற்றமும் மறைக்கும் அறிவிலாதோடி ஆடிய சிறு பருவத்தே குற்றமும் குணங்கொண்டென்னை ஆட்கொண்ட குணப் பெருங் குன்றமே', என அகவை குறிக்கப்பெறாது சிறு பருவம் குறிக்கப்பெறும் இடங்கள் பல.

### ஆடல்செயும் பருவத்தே பாடல் செயத் தொடங்குதல்

அறியாப் பருவத்தே ஆட்கொள்ளப் பெற்றபெருமான், அப்பருவத்திலேயே பாடல்செயும் வன்மையும் பெற்றார். ஆடித்திரியும் பருவத்தே பாடிப் பணியும் பக்குவத்தை இறைவன் தனக்கருளியத்தை அடிகள் பல பாடல்களிற் கூறி வியந்து துதிக்கின்றார்கள்.

**உருவத்தி லேசிறி யேனாகி யூகத்தி லொன்றுமின்றித்**
**தெருவத்தி லேசிறு கால்வீசி யாடிடச் சென்றஅந்தப்**
**பருவத்தி லேநல் அறிவளித் தேஉனைப் பாடச்செய்தாய்**
**அருவத்தி லேஉரு வானோய்நின் தண்ணளி யார்க்குளதே.**

**-1, திருவருண்முறையீடு 48**

**பாடும்வகை அணுத்துணையும் பரிந்தறியாச் சிறிய**
**பருவத்தே அணிந்தணிந்து பாடும்வகை புரிந்து**
**நாடும்வகை உடையோர்கள் நன்குமதித் திடவே**
**நல்லறிவு சிறிதளித்துப் புல்லறிவு போக்கி**
**நீடும்வகை சன்மார்க்க சுத்தசிவ நெறியில்**
**நிறுத்தினைஇச் சிறியேனை நின்அருள்என் என்பேன்**
**கூடும்வகை உடையரெலாங் குறிப்பெதிர்பார்க் கின்றார்**
**குற்றமெலாங் குணமாகக் கொண்டகுணக் குன்றே**

**-4, அன்புமாலை 14**

**ஐயறிவிற் சிறிதும்அறிந் தநுபவிக்கத் தெரியா**
**தழுதுகளித் தாடுகின்ற அப்பருவத் தெளியேன்**
**மெய்யறிவிற் சிறந்தவருங் களிக்கஉனைப் பாடி**
**விரும்பிஅருள் நெறிநடக்க விடுத்தனைநீ யன்றோ**
**பொய்யறிவிற் புலைமனத்துக் கொடியேன்முன் பிறப்பில்**
**புரிந்ததவம் யாததனைப் புகன்றருள வேண்டும்**
**துய்யறிவுக் கறிவாகி மணிமன்றில் நடஞ்செய்**
**சுத்தபரி பூரணமாஞ் சுகரூபப் பொருளே.**

**-4, அன்புமாலை 27**

**ஏதும்ஒன் றறியாப் பேதையாம் பருவத்**
**தென்னைஆட் கொண்டெனை உவந்தே**
**ஓதும்இன் மொழியால் பாடவே பணித்த**
**ஒருவனே என்னுயிர்த் துணைவா**

வேதமும் பயனும் ஆகிய பொதுவில்
விளங்கிய விமலனே ஞான
போதகம் தருதற் கிதுதகு தருணம்
புணர்ந்தருள் புணர்ந்தருள் எனையே.

-6 (இடை) அநுபோகநிலையம் 7

வெம்மாலைச் சிறுவரொடும் விளையாடித் திரியும்
மிகச்சிறிய பருவத்தே வியந்துநினை நமது
பெம்மானென் றடிகுறித்துப் பாடும்வகை புரிந்த
பெருமானே நான்செய்த பெருந்தவமெய்ப் பயனே
செம்மாந்த சிறியேனைச் சிறுநெறியில் சிறிதும்
செலுத்தாமல் பெருநெறியில் செலுத்தியநற் றுணையே
அம்மானே என்ஆவிக் கானபெரும் பொருளே
அம்பலத்தென் அரசேஎன் அலங்கல்அணிந் தருளே

-6 (இடை) அருள் விளக்கமாலை 76

ஆதியிலே எனைஆண்டென் அறிவகத்தே அமர்ந்த
அப்பாஎன் அன்பேஎன் ஆருயிரே அமுதே
வீதியிலே விளையாடித் திரிந்தபிள்ளைப் பருவம்
மிகப்பெரிய பருவம்என வியந்தருளி அருளாம்
சோதியிலே விழைவுறச்செய் தினியமொழி மாலை
தொடுத்திடச்செய் தணிந்துகொண்ட துரையேசிற் பொதுவாம்
நீதியிலே நிறைந்தநடத் தரசேஇன் றடியேன்
நிகழ்த்தியசொன் மாலையும்நீ திகழ்த்திஅணிந் தருளே.

-6 (இடை) அருள்விளக்கமாலை 94

என்ற திருப்பாடல்கள், வீதியிலே விளையாடித்திரிதற்குரிய சிறு பருவத்திலேயே அடிகள் பாடும் ஆற்றல் பெற்றுப் பாடிப் பணிந்தாரென்பதற்கான அகச் சான்றுகளாம். முதல் திருமுறை நெஞ்சறிவுறுத்தலில்

-நீடுலகில்

தான்பாடக் கேட்டுத் தமியேன் களிக்குமுன்னம்
நான்பாடக் கேட்டுவக்கும் நற்றாய்காண் ....(186)

என்பது அடிகள் தொட்டிற் பருவத்தே பாடும் வல்லமை பெற்றிருந்தார் என்பதன் குறிப்பாம். தாய் தாலாட்டுப் பாடக் குழந்தை கேட்டுக் களிப்பது வழக்கம்; ஆயின் அதற்கு முன்னரே நான் பாடக்கேட்டு என் தாயாம் வடிவுடையம்மை உவக்கிறாள் என்பது பொருள்.

துலுக்காணத்து இரேணுகையைப் பாடியது



RangaRakes tamilnavarasam.com

சென்னை ஏழுகிணற்றில் வள்ளற்பெருமான் வைகிய வீராசாமிப் பிள்ளை தெருவிற்கடுத்த ஆனைக்காரக்கோனான் தெருவில் துலுக்காணத்தம்மன் கோயில் என்றொரு கோயில் உள்ளது. இரேணுகை துதியாகப் பாடப்பெற்ற ஐந்து பாடல்களும் துலுக்காணத்தம்மை பஞ்சரத்தினம் என வழங்குகின்றன. 'துலுக்காணத்திரேணுகையெனுமொரு திருவே' என்பது பாடல்தோறும் மகுடமாக அமைந்துள்ளது. இப்பாடல்கள் திருவருட்பா முதல்நான்கு திருமுறை முதற்பதிப்பிலும் ஐந்தாம் திருமுறை, ஆறாந்திருமுறை முதற்பதிப்புகளிலும் சேரவில்லை. 1924-ஆம் ஆண்டு ச.மு.க.பதிப்பில் தனிப்பாடல்களுடன் முதன்முதலாகச் சேர்க்கப் பெற்றுள்ளன. இவை பாடப்பெற்ற காலம் கந்தகோட்ட வழிபாட்டுக் காலம் அல்லது திருவொற்றியூர் வழிபாட்டுக் காலம் ஆகும். அடிகளால் பாடப்பெற்றபின் அக்கோயிலில் பலிகொடுக்கும் வழக்கம் நின்று சைவக் கோயிலாயிற்று.

## துறந்து மீண்டது

விளையாட்டுப் பருவத்தில் ஒருநாள் பிள்ளைப்பெருமான் ஒத்த அகவையுடைய சிறுவனாகிய நண்பன் ஒருவனை நோக்கி, 'அப்பா! இப்பொய் யுலகத்தில் எனக்கு ஆசையில்லை, உனக்கு எப்படி? சொல்' என்றார். அவன் 'எனக்கும் ஆசையில்லை' என்றான். இருவரும் துறவியாகி விடுவதென முடிவுசெய்து துறவிக்கோலம்பூண்டு சென்னை விட்டகன்றனர். பின்னர் அது சரியன்றெனத் திருவருளுணர்த்த உணர்ந்து மீண்டனர். 'நினது மெய்யருள் மீட்டிட மீண்டேம்' எனப்பெருமான் கூறுகின்றார்.

**ஐயநான் ஆடும் பருவத்திற் றானே**
**அடுத்தநன் னேயனோ டப்பா**
**பொய்யுல காசை எனக்கிலை உனக்கென்**
**புகல்என அவனும்அங் கிசைந்தே**
**மெய்யுறத் துறப்போம் என்றுபோய் நினது**
**மெய்யருள் மீட்டிட மீண்டேம்**
**துய்யநின் உள்ளம் அறிந்ததே எந்தாய்**
**இன்றுநான் சொல்லுவ தென்னே.**

**-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம்76**

என்னும் பாடலில் இளமையில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சியை அடிகள் குறித்திருத்தல் காண்க.

சிறுவர் இருவரும் சேர்ந்து, தலையை மழித்துக்கொண்டு கோவணத்துடன் அல்லது எளிய சிறிய ஆடையுடன் வெளிப்பட்டுச் சென்றிருப்பர். நகரைவிட்டுப் போய் பல இடங்களில் அலைந்திருப்பர். உருத்திராக்க மாலையணிந்தும் கல்லாடை யுடுத்தும் சென்றிருத்தலும் கூடும். 'மெய்யருள் மீட்டிட மீண்டேம்' என்றதனால், அத்துறவு சரி யன்றெனத் திருவருளுணர்த்த உணர்ந்து மீண்டனர் என்பது போதரும்.

ஓதாதுணர்தல், கந்தகோட்ட வழிபாடு, கண்ணாடியிற் கடவுட் காட்சி, கையோடு படித்தல், கன்னிச் சொற்பொழிவு, கந்தகோட்டத்தையும்



RangaRakes tamilnavarasam.com

திருத்தணிகையையும் பாடுதல் ஆகிய இவை அடிகளின் ஒன்பதாம் ஆண்டுமுதல் பன்னிரண்டாம் ஆண்டுவரை நிகழ்ந்த நிகழ்ச்சிகளாம்.

பன்னிரண்டாம் அகவையில் முறையான ஞானவாழ்க்கையைத் தொடங்கியதையும் ஒற்றியூர் சென்று வழிபட்டதையும் பிறவற்றையும் அடுத்துவரும் திருஒற்றியூர்ப் பகுதியில் காண்போம்.

## 2. திருஒற்றியூர்ப் பகுதி

### (1835-1858)

### அகவை 12-35

**பன்னிரண்டாம் அகவைமுதல் முறையான ஞான வாழ்க்கை தொடங்குதல்**

அடிகள் தமது பன்னிரண்டாம் அகவைமுதல் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கினார்கள்.

**பன்னிரண் டாண்டு தொடங்கிநான் இற்றைப்**
**பகல்வரை அடைந்தவை எல்லாம்**
**உன்னிநின் றுரைத்தால் உலப்புறா ததனால்**
**ஒருசில உரைத்தனன் எனினும்**
**என்னுளத் தகத்தும் புறத்தும்உட் புறத்தும்**
**இயல்புறப் புறத்தினும் விளங்கி**
**மன்னிய சோதி யாவும்நீ அறிந்த**
**வண்ணமே வகுப்பதென் நினக்கே**

**-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம்126**

**பனிரண் டாண்டு தொடங்கி யிற்றைப்**
**பகலின் வரையு மே**
**படியிற் பட்ட பாட்டை நினைக்கின்**
**மலையுங் கரையு மே**

**ஈரா றாண்டு தொடங்கி யிற்றைப்**
**பகலின் வரையு மே**
**எளியேன் பட்ட பாட்டை நினைக்கி**
**லிரும்புங் கரையு மே**

**-(கீர்த்தனை) எனக்கும் உனக்கும் 78-79**

என்பன இதனைக்கூறும் அகச்சான்றுகளாம்.

**இப்பருவக் குண நலன்கள்**

பிள்ளைப் பருவத்திலேயே வள்ளற்பெருமானிடம் நற்குணங்கள் பல அமைந்திருந்தன. ஏனைய சிறுவர்களைப் போல் பெருமான் விளையாடித் திரிந்தாரல்லர். அச்சிறு பருவத்திற்றானே பெருமான் தனித்திருப்பார். எதையும் இச்சையின்றி நுகர்வார். பத்தி செய்திருப்பார். பாடிப் பணிவார். பிற உயிர்க்கிரங்குவார். இப்படிப் பெருங்குணங்களைப் பற்றியிருந்தார். இந்நற்குண நற்செய்கைகள் வள்ளற்பெருமானின் பிள்ளைப் பருவத்திலேயே அவரிடம் விளங்கின வென்பது அவர்கள் செய்தருளிய பெருவிண்ணப்பத்தாற் பெறப்படும். இளமையிலேயே தமக்கு இக்குண நலன்களை அருளி நற்செயல்களிற் செலுத்தியதற்காக இறைவனுக்கு அடிகள் நன்றி கூறுவர்.

அறிவாரறியும் வண்ணங்களெல்லாமுடைய பேரருட் பெருஞ்சோதிப் பெருந்தகைக் கடவுளே! குமாரப் பருவத்திற்றானே உலகிற் சிறுவர்களுடன் கூடிச் சிறு விளையாட்டியற்றல் சிற்றுண்டி விழைதல், சித்திரம் பயிறல், அதிசயம் பார்த்தல், அசங்கியம் பேசல், அவலித் தழுதல், சிறு சண்டை செய்தல், சிறு குறும்பியற்றல், தன்வசத்துழலல், தாய்வயிற் சலித்தல் முதலிய குற்றங்களில் என்னைச் சிறிதுஞ் செலுத்தாமல், ஓர் சிறிது அறிவு விளங்கப் புரிந்து இடந் தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், ஜெப தபஞ்செய்தல், தெய்வம் பராவல், பிறவுயிர்க்கிரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப் பணிதல், பத்தி செய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில் என்னைச் செலுத்திய தேவரீரது பேரருட் பெருங்கருணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

-சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்

பிள்ளைப் பருவத்திற்குரிய குற்றங்கள் பெருமானிடத்து இல்லாமையும், அப்பருவத்தில் அமைதற்கரிய குணங்கள் அமைந்திருந்தமையும் மேல் அகச்சான்றாகிய விண்ணப்பத்தில், பெருமான் திருவாக்காலேயே கூறப்பட்டிருக்கின்றன.

### உணவில் வெறுப்பு

'சிற்றுண்டி விழைதல் முதலிய குற்றங்களில் என்னைச் சிறிதும் செலுத்தாமல்' எனப்பெருமான் கூறுகின்றார்கள். அறிவறியாச் சிறிய பருவத்திலேயே, வள்ளற் பெருமான் உணவை வெறுத்தார். நல்ல இனிய சுவை யுணவுகளை விரும்பி உண்டதே இல்லை.

**அறிவிலாச் சிறிய பருவத்திற் றானே**
**அருந்தலில் எனக்குள வெறுப்பைப்**
**பிறிவிலா தென்னுட் கலந்தநீ அறிதி**
**இன்றுநான் பேசுவ தென்னே**
**செறிவிலாக் கடையேன் என்னினும் அடியேன்**
**திருவருள் அமுதமே விழைந்தேன்**
**எறிவிலாச் சுவைவே றெவற்றினும் விழைவோர்**
**எட்டுணை யேனும்இன் றெந்தாய்**

**-6 (முன்) பிள்ளைச் சிறுவிண்ணப்பம், 8**



RangaRakes tamilnavarasam.com

என்ற இப்பாடலில் 'அறிவிலாச் சிறிய பருவத்திற்றானே அருந்தலில் எனக்குள வெறுப்பை' என்ற அடிகளை நோக்குக. தான் உண்ணாவிடில் பெற்ற தாய் வாடுவளே எனக்கருதித் தாயின் வாட்டத்தைப் பார்ப்பதற்கு அஞ்சிச் சிறுவயதில் சிலகாலம் அன்னையார் இட்ட இனிய உணவுகளை உண்டார். உற்றார், நண்பர், அன்புடையோர் வாட்டம் உறுவதற்கு அஞ்சிச் சிலநாள் உண்டார். இவையலால் இனிய உணவுகளைக் கண்டகாலத்தும் உண்டகாலத்தும் மனஞ் சுளித்து அஞ்சினார். விழாக்களில் விருந்தளித்த நண்பர்கள் விருந்துண்ண அழைத்தபோது அவர்களுக்கு அன்போடு வேறு போக்குரைத்து அயலிடங்களில் ஒளிந்துறைந்தார். தப்பித் தவறி இன்புறும் உணவுகொண்ட போதெல்லாம் இவ்வின்பத்தால் இனி யாது துன்பம் வருமோ என்று உளம் நடுங்கி அடுத்த வேளைகளில் உண்ணாது வேறு வயிற்றோடு இருந்தார். ஆயினும் அன்பினாலே அன்பர் கொடுத்தவை எல்லாம் 'ஐயகோ, தெய்வமே இவற்றால் வன்புறச் செய்யேல்' என்று உள்ளம் பயந்து வாங்கி உண்டிருந்தார். தமது இம்மன நிலைகளையும் அனுபவங்களையும் பெருவிண்ணப்பத்தில் இறைவனிடம் விண்ணப்பித்துள்ளதைக் காண்க.

**உற்றதா ரணியில் எனக்குல குணர்ச்சி**
**உற்றநாள் முதல் ஒரு சிலநாள்**
**பெற்றதாய் வாட்டம் பார்ப்பதற் கஞ்சிப்**
**பேருண வுண்டனன் சிலநாள்**
**உற்றவர் நேயர் அன்புளார் வாட்டம்**
**உறுவதற் கஞ்சினேன் உண்டேன்**
**மற்றிவை அல்லால் சுகஉணாக் கொள்ள**
**மனநடுங் கியதுநீ அறிவாய்.**

**களிப்புறு சுகமாம் உணவினைக் கண்ட**
**காலத்தும் உண்டகா லத்தும்**
**நெளிப்புறு மனத்தோ டஞ்சினேன் எனைத்தான்**
**நேர்ந்தபல் சுபங்களில் நேயர்**
**அளிப்புறு விருந்துண் டமர்கஎன் றழைக்க**
**அவர்களுக் கன்பினோ டாங்கே**
**ஒளிப்புறு வார்த்தை உரைத்தயல் ஒளித்தே**
**பயத்தொடும் உற்றனன் எந்தாய்.**

**இன்புறும் உணவு கொண்டபோ தெல்லாம்**
**இச்சுகத் தால்இனி யாது**
**துன்புறுங் கொல்லோ என்றுளம் நடுங்கிச்**
**சூழ்வெறு வயிற்றொடும் இருந்தேன்**
**அன்பிலே அன்பர் கொடுத்தவை எல்லாம்**
**ஐயகோ தெய்வமே இவற்றால்**
**வன்புறச் செய்யேல் என்றுளம் பயந்து**
**வாங்கியுண் டிருந்தனன் எந்தாய்.**

**-6(முன்) பிள்ளைப் பெருவிண்ணப்பம் 31;29;30**

**கிளைத்தஇவ் வுடம்பில் ஆசைஎள் அளவும்**



RangaRakes tamilnavarasam.com

**கிளைத்திலேன் பசிஅற உணவு**
**திளைத்திடுந் தோறும் வெறுப்பொடும் உண்டேன்**
**இன்றுமே வெறுப்பில்உண் கின்றேன்**
**தளைத்திடு முடைஊன் உடம்பொரு சிறிதும்**
**தடித்திட நினைத்திலேன் இன்றும்**
**இளைத்திட விழைகின் றேன்இது நான்தான்**
**இயம்பல்என் நீஅறிந் ததுவே.**

**-6(முன்) பிள்ளைச் சிறுவிண்ணப்பம் 12**

'இன்றுமே வெறுப்பில் உண்கின்றேன்,' 'இன்றும் இளைத்திட விழைகின்றேன்' என்பதனுள் 'இன்றும்' என்றது இப்பிள்ளைச் சிறு விண்ணப்பமும் பெரு விண்ணப்பமும் பாடப் பெற்ற பிற்காலத்தைக் குறித்ததாம். இளமை முதலே அடிகள் உணவில் வெறுப்புடையர் என்பது இவற்றாற் போதரும்.

## பொருளாசை இல்லை

சிறு பருவத்திலேயே அடிகட்குப் பொருளாசை இல்லை. சிறுவன் நல்ல பிள்ளையாயிற்றே, நன்றாகப் பாடுகிறானே, உரையாற்றுகிறானே என்று பாராட்டி அன்போடு பிறர் வலியக் கொடுக்கும் காசுகளை வாங்கும்போது மனம் புழுங்குவார். வாங்கிய காசுகளை வீட்டுக் கூடைகளிலும் சாலகங்களிலும் வீசி எறிவார். கிணற்றிலேயும் குளத்திலேயும் கேணியிலேயும் எறிவார். கொடுத்தவர் மேலேயே வீசி எறிவதும் உண்டு.

**செறிவதில் மனத்தேன் காசிலே ஆசை**
**செய்திலேன் இந்தநாள் அன்றி**
**அறிவதில் லாத சிறுபரு வத்தும்**
**அடுத்தவர் கொடுத்தகா சவர்மேல்**
**எறிவதும் மேட்டில் எறிந்ததும் எனக்குள்**
**இருக்கின்ற நீஅறிந் ததுவே**
**பிறிவதில் லாநின் அருட்பெரும் பொருளைப்**
**பெற்றனன் பேசுவ தென்னே.**

**பணத்திலே சிறிதும் ஆசைஒன் றிலைநான்**
**படைத்தஅப் பணங்களைப் பலகால்**
**கிணற்றிலே எறிந்தேன் குளத்திலும் எறிந்தேன்**
**கேணியில் எறிந்தனன் எந்தாய்**
**குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை**
**எறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே**
**கணத்திலே எல்லாம் காட்டும்நின் அருளைக்**
**கண்டனன் இனிச்சொல்வ தென்னே.**

**-6(முன்) பிள்ளைச் சிறுவிண்ணப்பம் 10:11**

**அருளினை அளிக்கும் அப்பனே உலகில்**
**அன்புளார் வலிந்தெனக் கீந்த**



RangaRakes tamilnavarasam.com

**பொருளினை வாங்கிப் போனபோ தெல்லாம்**
**புழுங்கிய புழுக்கம்நீ அறிவாய்**
**மருளும்அப் பொருளைச் சாலகத் தெறிந்து**
**மனமிக இளைத்ததும் பொருளால்**
**இருளுறும் எனநான் உளம்நடுங் கியதும்**
**எந்தைநின் திருவுளம் அறியும்.**

**-6(முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 45**

'நான் படைத்த அப்பணங்களை' என்றாது சொற்பொழிவுக்காகத் தமக்களிக்கப்பட்ட சன்மானங்களைப் போலும். பொருளிலே உலகம் இருக்கிறது; ஆதலால் ஒருவரிடம் பலகால் சென்றால் பொருளுக்காக வருகின்றான் எனக் கருதி வெறுப்பரென அஞ்சி யாரிடத்தும் சென்றிலேன்; பொருளை நினைத்த போதெல்லாம் உவட்டினேன் இவற்றை நீ அறிவாய் என அடிகள் இறைவனிடம் விண்ணப்பிக்கிறார்கள்.

**பொருளிலே உலகம் இருப்பதா லினால்**
**புரிந்துநாம் ஒருவர்பால் பலகால்**
**மருவினால் பொருளின் இச்சையால் பலகால்**
**மருவுகின் றான்எனக் கருதி**
**வெருவுவர் எனநான் அஞ்சிஎவ் விடத்தும்**
**மேவிலேன் எந்தைநீ அறிவாய்**
**ஒருவும்அப் பொருளை நினைத்தபோ தெல்லாம்**
**உவட்டினேன் இதுவும்நீ அறிவாய்.**

**-6(முன்) பிள்ளைப் பெருவிண்ணப்பம் 46**

**(உவட்டுதல்-அருவருத்தல்)**

அடிகள் இளமை முதலே பொருளிச்சை அற்றவர் என்பது இவற்றாற் போதரும். 'பொருளால் இருளுறும்' 'பொருளிலே உலகம் இருக்கிறது' என்பன எவ்வளவு பெரிய பேருண்மைகள்.

**பொய்யுலகாசாரம் இல்லை**

உணவில் ஆசையும் காசில் ஆசையும் இங்ஙனமாக அச் சிறுவயதிலேயே சாதியொழுக்கம் முதலிய பொய்யுலக ஒழுக்கங்கள் பெருமானிடத்து இலவாயின. சாதியாசாரம் முதலிய பொய்யுலகாசாரங்களைக் கடைப்பிடிக்காமல் தடுத்து தமது அறிவை இறைவன் விளக்கஞ் செய்தருளினான் எனப் பெருமானாரே கூறுகின்றார்கள்.

அச்சிறு பருவத்திற்றானே ஜாதி ஆசாரம் ஆசிரம ஆசாரம் என்னும் பொய்யுலகாசாரத்தைப் பொய்யென் றறிவித்து அவைகளை யநுட்டியாமற் றடை செய்வித்து அப்பருவம் ஏறுந்தோறும் ஏறுந்தோறும் எனதறிவை விளக்கஞ்செய்து செய்து என்னை மேனிலையில் ஏற்றி ஏற்றி நிலைக்க வைத்தருளினீர்.

-சமரச சுத்த சன்மார்க்க சத்தியப்பெருவிண்ணப்பம்

## திருவொற்றியூர் வழிபாடு

பன்னிரண்டாம் அகவை முதல் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கிய பிள்ளைப் பெருமான் நாடோறும் திருவொற்றியூர் சென்று தியாகப் பெருமானையும் வடிவுடை யம்மையையும் ஒற்றி முருகரையும் வழிபட்டு வரத் தொடங்கினார்கள். பன்னிரண்டாம் அகவை தொடங்கி சென்னை வாழ்வை நீத்த முப்பத்தைந்தாம் அகவை வரை இருபத்து மூன்றாண்டு காலம் பெருமான் ஒற்றியூரை வழிபட்ட வண்ணமிருந்தார்கள். பெருமானது ஒற்றியூர் வழிபாட்டையும் அக்காலத்தில் நிகழ்ந்த அற்புதங்களையும் இனிக் காண்போம்.

## திருவொற்றியூர் வரலாறும் சிறப்பும்

இது தொண்டை நாட்டுத் தலங்கள் முப்பத்திரண்டில் ஒன்று. சென்னைக்கு வடக்கே ஆறு கல் தொலைவில் கடற்கரை ஓரமாக உள்ளது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பெற்றது. சம்பந்தர் பதிகம் ஒன்றும் அப்பர் பதிகம் ஐந்தும் சுந்தரர் பதிகம் இரண்டும் ஆக எட்டுப் பதிகங்கள் இதற்கு உள்ளன. இது சுந்தரமூர்த்திகள் சங்கிலி நாச்சியாரை மணந்த தலம். பட்டினத்தடிகள் முத்தி பெற்ற தலம். கலிய நாயனார் தொண்டாற்றிய தலம். திருக்கோயிலின் பெயர் பூங்கோயில் என்பது. இறைவனது திருப்பெயர்கள் ஒற்றியப்பர், ஆதிபுரீசுவரர், படம்பக்க நாதர், புற்றிடங்கொண்டார், வன்மீக நாதர், எழுத்தறியும் பெருமான், தியாகராசர் என்பன. இது மமிகப் பழைய ஊராதலின் ஆதிபுரி எனப்பெயர் பெற்றது. இறைவனும் ஆதிபுரீசுவரர் எனப் பெயர் பெற்றார். வாசுகியை அணைத்து அருள் செய்தமையால் படம்பக்க நாதர் எனவும், புற்று வடிவிலிருப்பதால் புற்றிடங்கொண்டார், வன்மீக நாதர் எனவும் பெயர் பெற்றார். எல்லாக் கோயில்களின் படித்தரங்களையும் குறைக்க அரசன் செய்த கட்டளையில் 'ஒற்றியூர் நீங்கலாக' என வரி பிளந்தெழுதியமையால் எழுத்தறியும் பெருமான் எனப்பெற்றார். உற்சவ மூர்த்தியின் பெயர் தியாகராசர். இது சப்த விடங்கக் கணக்கில் சேராத தியாகராசத் தலம். இறைவியின் பெயர்-வடிவுடையம்மை.

மூலத்தான மூர்த்தி புற்று வடிவில் உள்ளது. ஐந்தடி நீளமும் ஓரடி அகலமும் மூன்றடி உயரமுமுள்ள இப்புற்று கவசமிடப்பட்டுள்ளது. கார்த்திகைப் பௌர்ணமியயன்று இக்கவசம் அகற்றப்படும். அது முதல் மூன்று நாள்கள் புற்றுருவான லிங்கத்தைத் தரிசிக்கலாம். பின்னர் கவசம் சாத்தப்பட்டு விடும். கவசம் சாத்தியிருக்ம் போதும் புற்றின் ஒரு சிறு பகுதி மட்டும் தெரியுமாறு கவசத்தில் திறப்பு ஒன்று உள்ளது.

இக்கோயிலில் சில தனிச் சிறப்புகள் உண்டு. இங்கு நவக் கிரகங்கள் இல்லை.{15} ஆனால் இருபத்தேழு லிங்கங்கள் இருபத்தேழு நட்சத்திரங்ளின் பெயருடன் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன. பொதுவாக அவை நட்சத்திர லிங்கங்கள் என வழங்கப்படுகின்றன. சைவர், வைணவர், சுமார்த்தர், ஆதிசைவக் குருக்கள், நம்பூதிரிப் பிராமணர், உவச்சர் ஆகிய ஆறு வகையினர் இக்கோயிலிற் பூசை செய்து வந்தனர். மூலத்தானப் பூசனை ஆதிசைவக் குருக்களுக்கும், வடிவுடையம்மைின் பூசனை நம்பூதிரிப் பிராமணருக்கும், பரிவார தெய்வங்களின்



RangaRakes tamilnavarasam.com

பூசனை உவச்சருக்கும் உரியதென்பர். இப்போது குருக்கள் நம்பூதிரி ஆகிய இருவர் மட்டுமே பூசை செய்து வருகின்றனர். வடிவுடையம்மையைப் பூசிக்கும் நம்பூதிரி, பிரம்மச்சாரியாக இருக்க வேண்டும். இந்த வழக்கத்தை ஆதிசங்கரர் ஏற்படுத்திய தாயும் முதல் பிரம்மச்சாரியை அவரே நியமித்ததாயும் கூறுவர். ஆதிசங்கரர் லகுலீசர் திருவுருவங்கள் கோயிலின் உள் சுற்றில் உள்ளன. வடக்கு உள்திருச்சுற்றில் வட்டப்பாறையம்மன் சந்நிதி வடக்கு நோக்கி யிருக்கிறது. அச்சந்நிதியில் அம்மனுக்கு எதிரே வட்டமான கல் (பாறை) ஒன்று உள்ளது. இதனாலேயே வட்டப்பாறை அம்மன் என்ற பெயர் இந்த அம்மனுக்கு வந்தது. இங்கிருந்த திருமாலின் திருவுருவம் ஏறத்தாழ முந்நூறாண்டுகளுக்கு முன்னரே அகற்றப்பட்டு விட்டதெனச் செவிவிழிச் செய்தியொன்று வழங்குகிறது.

## அடிகள் கண்ட ஒற்றியூர்

குடும்ப கோஷம் குருதரிசனப் படலத்தில் அடிகள் திருவொற்றியூரை மிக அழகாக வருணிக்கிறார்கள்.

**நீர்வளம் நிலவளம் நிறைந்த பொற்பது**
**கார்வளர் பொழில்புடை கவின்ற காட்சிய**
**தேர்வளர் நலனெலாம் என்றும் உள்ளது**
**சீர்வளர் தலங்களுள் திலகம் என்பது.** 1

**திருவளர் புயத்தனுந் திசைமு கத்தனுந்**
**தருவளர் மகத்தனுஞ் சார்ந்து நாடொறும்**
**மருவளர் மலர்கொடு வழிபட் டெண்ணிய**
**உருவளர் சிறப்பெலாம் உற்ற மாண்பது** 2

**அற்றமில் சண்பைய ராத மூவருஞ்**
**சொற்றமிழ்ப் பதிகங்கள் தோறுஞ் சேர்வது**
**நற்றவர் புகழ்வது நாயினே னுக்குங்**
**கற்றவர் உறவினைக் காட்டி நின்றது** 3

{15} சிவன் கோயில்களில் சுமார்த்தக் கலப்பு ஏற்பட்ட பிற்காலத்தில் நவக்கிரகங்கள் நிறுவப்பெற்றன.}

**தவநெறி தழைத்துமெய்ச் சாந்தம் பூத்துவன்**
**பவநெறி காய்த்தருட் பழம்ப முத்திடும்**
**நவநெறி தரும்பர நவிற்றுஞ் சைவமாஞ்**
**சிவநெறி தருந்தருச் சிறந்த சீரது** 4

**சோலையுந் தடங்களுந் துரிசி லாஅறச்**
**சாலையும் மடங்களுஞ் சத்தி ரங்களும்**
**பாலையும் பழத்தையும் பருக லொத்தசொன்**
**மாலையுந் தொடுப்பவர் வாழ்வு முள்ளது** 5

**அந்தணர் அறுதொழில் ஆற்றுஞ் சால்பது**



RangaRakes tamilnavarasam.com

மந்தண மறைமுடி வழுத்து மாண்பது
சுந்தர நீற்றணி துலங்கும் அன்பர்கள்
வந்துவந் தனைசெய்து வசிக்கும் பேறது 6

பூவெலாம் புதுமணம் பொலியும் ஒண்தளிர்க்
காவெலாஞ் சிவமணங் கமழு கின்றது
தேவெலாஞ் செறிவது சிவங் கனிந்மெய்ந்
நாவெலாம் புகழ்வது நன்மை சான்றது 7

சாலியும் போலிய தழைகொள் கன்னலின்
வேலியு முக்கனி விளைவுந் தாழைகள்
கோலிய பொங்கருங் குறைவி லாதது
பாலியின் வடகரைப் படியின் மேலது. 8

எண்டிசை புகழநின் றிலங்கு கின்றது
அண்டர்கள் முடிவினும் அழிவிலாதது
தொண்டமண் டலவடற்றூய கீழ்த்திசை
கண்டல்சூழ் கடற்கரை காண வுள்ளது 9

திருமகள் கலைமகள் சிறந்த ஞானமாங்
குருமகள் மூவரும் கூடி வாழ்வது
தெருமரல் அகற்றுமெஞ் சிவபி ரான்மலை
ஒருமகள் உடனுறை ஒற்றி மாண்பதி. 10

திருவொற்றியூரை இங்ஙனம் வருணிக்கும் பெருமானார் தாமருளிய ஒற்றியூர்ப் பதிகங்களில், 'செஞ்சாலி ஓங்குந் திருஒற்றி', 'சிந்தையே ஓங்குந் திருஒற்றி', 'தென்னார்சோலைத் திருஒற்றி', 'திருவாழ் ஒற்றி', 'நந்த வனஞ் சூழ் ஒற்றி', 'எழில்கொள் ஒற்றியயூர்', சைவ வைதிகங்கள் திகழும் ஒற்றியூர்', 'எழில் ஆரும் ஒற்றியூர்', 'நலத்திற் சிறந்த ஒற்றி நகர்', 'ஒற்றி எனும் காவல் நகரம்', 'ஒற்றியூர் நியமம்', எனப் பலவாறு போற்றுகின்றார்கள்.

## ஒற்றி முருகன் திருமுன்னர்

பன்னிரண்டாண்டுக்கு மேல் ஒற்றியூர் சென்று வழிபடத் தொடங்கிய பிள்ளைப் பெருமான், தியாகப் பெருமானோடு முருகப்பெருமானையும் வழிபடுதலை வழக்கமாகக் கொண்டார். திருக்கோயில்களளில் சந்நிதிக்குப் பின்னே திருச்சுற்றில் முருகப் பெருமான் எழுந்தருளியிருப்பார். கோயில்களில் முருகப் பெருமானுக்குரிய சிறப்பான இடம் இதுவே. ஒற்றிப் பூங்கோயிலின் திருச்சுற்றில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைப் பிள்ளைப்பெருமான் நாடோறும் வழிபடுவார்.

சிறுவராகிய பிள்ளைப்பெருமான் சென்னையில் வீட்டின் மாடியறையில் திருத்தணிகை முருகனைத் தியானித்தபோது கண்ணாடியிற் காட்சியளிக்கக் கண்டனரேயன்றி தணிகைக்கு நேரிற் சென்று முருகனைத் தரிசித்தாரல்லர். சென்று மீளும் செலவுக்குப் பொருள் கிடைக்காமையாலோ, துணை கிடைக்காமையாலோ, மற்றெதனாலோ பெருமான் சிறுவராயிருக்கும்போது தணிகை செல்லக்கூடவில்லை.



RangaRakes tamilnavarasam.com

ஆயினும் தணிகை சென்று தரிசிக்க வேண்டும் என்ற தணியாத ஆர்வம் இருந்தது. தணிகை சென்று தரிசிக்குமுன் சென்னையிலிருந்தே தணிகையைப் பாடிய பாடல்கள் பல அவற்றுட் பலவற்றில் இந்த ஆர்வத்தைக் காண்கிறோம்.

**"தணிகை மலையைச் சாரேனோ"**
**"நண்ணேனோ மகிழ்வினொடும் திருத்தணிகை மலையதனை"**
**"தணிகைக்கு வாவென ஓர் மொழி நல்குவையே"**

என்பனவும் இவைபோல்வனவும், அதுவரை பெருமான் தணிகைக்குச் சென்றிலர் என்பதையும், தணிகை செல்லும் பேரவா ஓங்கியிருந்ததென்பதையும் காட்டும். கந்தகோட்ட முருகனைக் கண்ணாரக் கண்டு வழிபட்டு மகிழ்ந்தவர் தணிகை சென்று வழிபடப் பெரிதும் விரும்பி அஃது இயலாத நிலையில், ஒற்றி முருகன் சந்நிதியில் நின்று தணிகேசனை நினைந்து துதிப்பாராயினர். ஒற்றி முருகன் முன்னின்று அவனைத் தணிகேசனாகவே கண்டு துதிப்பது இளைய பிளளைப்பபெருமானார்க்கு ஒரு வகை வழக்கமாயிற்று.

### கர்ப்பூரம் கிடைக்கவில்லை

இங்ஙனம் ஒற்றி முருகனைத் தணிகை நாயகனாக எண்ணி வழிபட்டு வருகையில் ஒரு நாள் அவன் திரு முன்னர் ஏற்றக் கர்ப்பூம் கிடைக்கவில்லை. கையிற் காசு கிடைக்காமையால் கர்ப்பூரம் கிடைக்கவில்லை போலும். பிள்ளையார் மனம் பெரிதும் வருந்திற்று. வேறொன்றுஞ் செய்யலாற்றாத நிலையில் கர்ப்பூரங் கிடைக்காமையை முருகனிடமே, 'ஒற்றியில் நின் முன்னர் ஏற்றிட..........ஒன்பிதம் காண்கிலன், அதற்கென் செய்வனே,' நின்திருமுன்னராய் ஒரு மருங்கேற்ற என் செய்தேன் கர்ப்பூர ஒளியினுக்கே', 'நின்பால் எடுத்தேற்றக் கிடைக்குங் கொலோ வெண்பளிதம் எற்கே' என விண்ணப்பித்துத் துதித்தார்.

**கார்பூத்த கண்டத் தொடுமேவு முக்கட் கனிகனிந்து**
**சீர்பூத் தொழுகுசெந் தேனே தணிகையில் தெள்அமுதே**
**பேர்பூத்த ஒற்றியில் நின்முன்னர் ஏற்றிடப் பேதையனேன்**
**ஏர்பூத்த ஒண்பளி தம்காண் கிலன்அதற் கென்செய்வனே.**

**கருமருந் தாய மணிகண்ட நாயகான் கண்மணியாம்**
**அருமருந் தேதணி காசலம் மேவும்என் ஆருயிரே**
**திருமருங் கார்ஒற்றி யூர்மே வியநின் திருமுன்னராய்**
**ஒருமருங் கேற்றஎன் செய்கேன் கற்பூர ஒளியினுக்கே**

**பால்எடுத் தேத்தும்நற் பாம்பொடு வேங்கையும் பார்த்திடஓர்**
**கால்எடுத் தம்பலத் தாடும் பிரான்திருக் கண்மணியே**
**வேல்எடுத் தோய்தென் தணிகா சலத்தமர் வித்தகநின்**
**பால்எடுத் தேற்றக் கிடைக்குங் கொலோவெண் பளிதம்எற்கே.**

**-5 கையடை முட்டற்கிரங்கல் 1-3**

**(பளிதம்-கர்ப்பூரம்)**



RangaRakes tamilnavarasam.com

ஒற்றி முருகன் முன் பாடப்பெற்ற இப்பாடல்கள் ஐந்தாந் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. இவையடங்கிய பதிகத்திற்குக் "கையடை முட்டற் கிரங்கல்" என்ற அழகிய பெயரைத் தொ.வே. அமைத்துள்ளார். கையடை முட்டற்கிரங்கல்- உரியபொருள் அகப்படாமைக்கு வருந்துதல். அந்நாளில் ஒரு நாள் கர்ப்பூரங் கிடைக்காது அடிகள் வருந்தினர். பின்னாளில் கர்ப்பூரம் பெருமளவிற் குவிந்தது. இந்நாளில் வள்ளற் பெருமான் திருமுன்னர் மலைபோற் கர்ப்பூரம் ஏற்றப்படுகிறது. சிறு வயதில் அடிகள் கர்ப்பூரங் கிடைக்காது வருந்தினார் என்பதை எண்ண எண்ண நம் உள்ளம் உடைகிறது. கையடைமுட்டற் பாடல்களைப் படித்தால் கண்ணீர் வருகிறது. கர்ப்பூரம் கிடைக்காதபோது இளைய பெருமானின் மனம் என்ன பாடு பட்டதோ?

## ஒற்றியூர்ப் பதிகங்கள்

திருவருட்பா முதல் திருமுறையிலுள்ள வடிவுடை மாணிக்க மாலையும் இங்கித மாலையும், இரண்டாம் திருமுறையின் பெரும்பகுதியும், மூன்றாம் திருமுறை முழுவதும் ஒற்றியூர் வழிபாட்டுக் காலத்தில் ஒற்றியூரின் மேற் பாடப் பெற்றவைகளாம். ஒற்றியூரிற் கோயில்கொண்டருளும் பெருமானை எழுத்தறியும் பெருமான், தியாகப் பெருமான், ஒற்றியப்பர், படம்பக்க நாதர் என்ற நான்கு பெயராலும் அடிகள் பாடியுள்ளனர். அன்பர்களால் பெரிதும் பயிலப்பெறும் சில இனிய பாடல்கள் வருமாறு;

**சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை**
**முந்தை வினைதொலைத்துன் மொய்கழற்காள் ஆக்காதே**
**நிந்தைஉறும் நோயால் நிகழவைத்தல் நீதியதோ**
**எந்தைநீ ஒற்றி எழுத்தறியும் பெருமானே.**

**-2, எழுத்தறியும் பெருமான் மாலை 1**

**அழுத பிள்ளைக்கே பால்உண வளிப்பாள்**
**அன்னை என்பார்கள் அழவலி இல்லாக்**
**கொழுது நேர்சிறு குழவிக்கும் கொடுப்பாள்**
**குற்றம் அன்றதும் மற்றவள் செயலே**
**தொழுது நின்னடி துதிக்கின்றோர்க் கெனவே**
**துட்ட னேனுக்கும் சூழ்ந்தருள் செயலாம்**
**செழுது மாதவி மலர்திசை மணக்கத்**
**திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே**

**-2, அவலத் தழுங்கல் 4**

**நறைமணக்கும் கொன்றை நதிச்சடில நாயகனே**
**கறைமணக்கும் திருநீல கண்டப் பெருமானே**
**உறைமணக்கும் பூம்பொழுல்சூழ் ஒற்றிஅப்பா உன்னுடைய**
**மறைமணக்கும் திருஅடியை வாய்நிரம்ப வாழ்த்தேனோ.**

**-2, அருள்திறத்து அலைசல் 1**



RangaRakes tamilnavarasam.com

**போகம் கொண்ட புணர்முலை மாதொரு**
**பாகம் கொண்ட படம்பக்க நாதரே**
**மாகம் கொண்ட வளம்பொழில் ஒற்றியின்**
**மோகம் கொண்டஎம் முன்நின் றருளிரோ.**

**-2, அருள்விடை வேட்கை 1**

ஒற்றியூர் வடிவுடையம்மையைப் பாடிய பாமாலை, வடிவுடை மாணிக்கமாலை என்பது. முதல் திருமுறையுள் சேர்ந்துள்ள இது 101 பாடல்களை உடையது. காப்புச் செய்யுளைச் சேர்ப்பின் 102 ஆகும். பாடல்கள் அனைத்தும் 'வடிவுடை மாணிக்கமே' என்று முடிவன. வடிவுடை மாணிக்கமாலை என்ற பெயர் அடிகள் இட்டருளியதே. முதற் பாடலும் இறுதிப் பாடலும் வருமாறு;

**கடலமு தேசெங் கரும்பே அருட்கற்ப கக்கனியே**
**உடல்உயி ரேஉயிர்க் குள்உணர் வேஉணர் வுள்ஒளியே**
**அடல்விடை யார்ஒற்றி யார்இடங் கொண்ட அருமருந்தே**
**மடலவிழ் ஞான மலரே வடிவுடை மாணிக்கமே.**

**வாழிநின் சேவடி போற்றிநின் பூம்பத வாரிசங்கள்**
**வாழிநின் தாண்மலர் போற்றிநின் தண்ணளி வாழிநின்சீர்**
**வாழிஎன் உள்ளத்தில் நீயுநின் ஒற்றி மகிழ்நரும்நீ**
**வாழிஎன் ஆருயிர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே.**

**-1, வடிவுடை மாணிக்கமாலை 1;101**

### ஒற்றியூர்க்கு நெஞ்சை அழைத்தல்

இரண்டாம் திருமுறை அருள் நாம விளக்கத்தில் பத்துப் பாடல்களிலும் பாடல்தோறும் 'எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து' என அடிகள் நெஞ்சை அழைப்பர்.

**வாங்கு வில்நுதல் மங்கையர் விழியால்**
**மயங்கி வஞ்சர்பால் வருந்திநாள் தோறும்**
**ஏங்கு கின்றதில் என்பயன் கண்டாய்**
**எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து**
**தேங்கு லாவுசெங் கரும்பினும் இனிதாய்த்**
**தித்தித் தன்பர்தம் சித்தத்துள் ஊறி**
**ஓங்கும் ஓம்சிவ சண்முக சிவஓம்**
**ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே.**

**-2, அருள்நாமவிளக்கம் 1**

அடுத்த, சிவ சண்முக நாம சங்கீர்த்தன லகரியில் பத்துப்பாடல்களிலும் முறையே 'பொழுது போகின்றது எழுதி என் நெஞ்சே', 'போது போகின்றது எழுதி என் நெஞ்சே', 'காலம் செல்கின்றது எழுதி என் நெஞ்சே', 'இருட்டிப் போகின்றது எழுதி என் நெஞ்சே', 'எல்லை செல்கின்றது எழுதி என் நெஞ்சே', 'இரவு



RangaRakes tamilnavarasam.com

போந்திடும் எழுதி என் நெஞ்சே', 'இனி இச் சிறுபொழுதும் சாய்ந்து போகின்றது எழுதி என் நெஞ்சே', 'கடுகி இப்பொழுதும் இமைப்பில் போகின்றது எழுதி என் நெஞ்சே', 'உரைக்கும் இப்பொழுதும் குறைந்து போகின்றது எழுதி என் நெஞ்சே' என நெஞ்சை அழைக்கும் பாங்கு உள்ளத்தை உருக்குகிறது. இவ்வாறு நெஞ்சை அன்போடு வருந்தி அழைக்கும் அடிகள் நெஞ்சறிவுறூஉப் பதிகத்தில் 'மனமே, நான் ஒற்றியூர்க்கு இன்றே செல்கின்றேன் நீ என்னுடன் வருவாயோ? அன்றி வாராது நிற்பாயோ? அறியேன், உனக்கும் இயம்பினேன் பழி இல்லை என்மீதே' என நெஞ்சுக்கு அறிவுறுத்துவர்.

**என்ன தன்றுகாண் வாழ்க்கையுட் சார்ந்த**
**இன்ப துன்பங்கள் இருவினைப் பயனால்**
**மன்னும் மும்மல மடஞ்செறி மனனே**
**வாழ்தி யோஇங்கு வல்வினைக் கிடமாய்**
**உன்ன நல்அமு தாம்சிவ பெருமான்**
**உற்று வாழ்ந்திடும் ஒற்றியூர்க் கின்றே**
**இன்னல் அற்றிடச் செல்கின்றேன் உனக்கும்**
**இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே.**

**துன்ப வாழ்வினைச் சுகம்என மனனே**
**சூழ்ந்து மாயையுள் ஆழ்ந்துநிற் கின்றாய்**
**வன்ப தாகிய நீயும்என் னுடனே**
**வருதி யோஅன்றி நிற்றியோ அறியேன்**
**ஒன்ப தாகிய உருவுடைப் பெருமான்**
**ஒருவன் வாழ்கின்ற ஒற்றியூர்க் கின்றே**
**இன்ப வாழ்வுறச் செல்கின்றேன் உனக்கும்**
**இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே.**

**-2, நெஞ்சறிவுறூஉ 1;2**

'உனக்கும் இயம்பினேன் பழிஇல்லை என்மீதே' என்பதனைப் பதிகத்தின் எல்லாப் பாடல்களிலும் மகுடமாக அமைத்திருக்கிறார்கள். மனமே, ஒற்றியூர்க்குச்சென்று நாம் சரியை செய்வோம், திருமஞ்சனங்கொண்டு வருவோம், திருவலகிடுவோம், திருமெழுக்கிடுவோம், திருவிளக்கிடுவோம், இன்ன பல் திருப்பணிகள் செய்வோம் நீ என்னுடன் வா எனப் பணி கூறி நெஞ்சைப்பணிவாக அழைக்கும் பாடல்கள்.

**செஞ்சொன் மாதவர் புகழ்திரு ஒற்றித்**
**தேவர் காண்அவர் திருமுடிக் காட்ட**
**மஞ்ச னங்கொடு வருதும்என் மொழியை**
**மறாது நீஉடன் வருதிஎன் மனனே.**

**தாழும் தன்மையோர் உயர்வுறச் செய்யும்**
**தகையர் ஒற்றியூர்த் தலத்தினர் அவர்தாம்**
**வாழும் கோயிற்குத் திருவல கிடுவோம்**
**மகிழ்வு கொண்டுடன் வருதிஎன் மனனே.**



RangaRakes tamilnavarasam.com

**பதியு நாமங்கள் அனந்தமுற் றுடையார்**
**பணைகொள் ஒற்றியூர்ப் பரமர்கா ணவர்தாம்**
**வதியும் கோயிற்குத் திருவிளக் கிடுவோம்**
**வாழ்க நீஉடன் வருதிஎன் மனனே.**

**அணிகொள் ஒற்றியூர் அமர்ந்திடும் தியாகர்**
**அழகர் அங்கவர் அமைந்துவீற் றிருக்கும்**
**மணிகொள் கோயிற்குத் திருப்பணி செய்தும்**
**வாழ்க நீஉடன் வருதிஎன் மனனே.**

**-2, நெஞ்சறை கூவம் 6-10**

என்பனவாம். நெடுமொழி வஞ்சி என்னும் பதிகத்தின் பத்துப் பாடல்களிலும் காமம், கோபம், லோபம், மோகம், மதம், ஆணவம், அகங்காரம் ஆகிய வற்றை விளித்து 'ஒற்றியூர்ச் சிவன் அருள்வாளால் உன்னை வெட்டுவல் உண்மை என்றுணரே' எனக் கடிவது அடிகள் அவற்றை எங்ஙனம் கடிந்தனரென்பதைக் காட்டும். 'காமமாம் புலையா', 'எனைக் கலக்கம் கண்ட பாவியே காமவேட்டுவனே', 'காமமாம் வஞ்சக முறியா', 'அமைவறிந்திடா ஆணவப் பயலே', 'அகங்கார மர்க்டவா', 'அகங்காரமாம் வீணா' எனக்கடுத்து விளிப்பதும், அங்ஙனம், விளித்து 'ஒற்றியூர்ச் சிவனருள்வாளால் உன்னை வெட்டுவல்' என்றுரைப்பதும் மேலும் அது 'உண்மை என்றுணரே' என்பதும் ஆழ்ந்து கருதத்தக்கன. குற்றங்கடிதற்கு இஃதோர் எடுத்துக்காட்டாம்.

**ஒற்றியூரில் அருளிய அகப்பொருட் பாடல்கள்**

சீரார் வளஞ்சேர் ஒற்றி நகர்த் தியாகப்பெருமானைப் பாடும் பிள்ளைப் பெருமான் தியாக வள்ளலைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு, அகப்பொருட் சுவை ததும்பப் பாடிய பாடல்களும் பதிகங்களும் பல. மூன்றாந் திருமுறையின் பத்தொன்பது பதிகங்களும் அகப்பொருட் பாடல்களே. திருஉலாப்பேறு, நாரையும் கிளியும் நாட்டுறுது, இரங்கன்மாலை, திருஉலா வியப்பு, சல்லாப வியன்மொழி, இன்பக் கிளவி, இன்பப் புகழ்ச்சி, திரூஉலாத்திறம், வியப்புமொழி, புணரா விரகு பொருந்துறு வேட்கையின் இரங்கல், குறி ஆராய்ச்சி, காட்சி அற்தம், ஆற்றாக் காதலின் இரங்கல், திருக்கோல்ச் சிறப்பு, சோதிடம் நாடல், திருஅருட் பெருமிதம், காதற் சிறப்புக் கதுவா மாண்பு, ஆற்றாவிரகம், காதல் மாட்சி என வரும் பதிகப் பெயர்களே, அவை அகப்பொருட் பாலகளென்பதைக் காட்டும். முதல் திருமுறையின் ஈற்றிலமைந்துள்ள இங்கித மாலையும் அகப்பொருண்மாலையே.

## <u>ஒற்றியூர் அனுபவங்கள்</u>

### <u>ஒற்றியில் திருவாசகம்</u>

ஒற்றிப்பூங்கோயிலிலே தியாகப்பெருமான் சந்நிதியிலே வள்ளற்பெருமான் திருவாசகத்தைப் பாடி உருகுந் திறத்தை மணி-திருநாவுக்கரசர் பின்வருமாறு எழுதியுள்ளார்.



RangaRakes tamilnavarasam.com

நம் இராமலிங்கம் பெரும்பான்மையும் திருவாசகத்தில் ஓரம் வாய்ந்தவர் என்று என் ஆசிரியர் கூறுவர். அவர் பல காலங்களிலும் தியாகப்பெருமான் சந்நிதியிலே நின்று, கீழ்வரும் தித்திக்குந் திருவாசகத்தைத் தாம் பாடிக் கண் மழை பொழிந்து, மயிர் முனை நிறுத்தி நாத் தழுதழுத்துச் சோர்ந்து விழுந்து விடுவது வழக்கம் என்பர்.

**பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே**
**பற்றுநான் மற்றிலேன் கண்டாய்**
**சீரொடு பொலிவாய் சிவபுரத்து அரசே**
**திருப்பெருந் துறையுறை சிவனே**
**ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்து உரைக்கேன்**
**ஆண்டநீ அருளிலை யானால்**
**வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்**
**வருகவென்று அருள்புரி யாயே.**

**-வாழாப் பத்து 1**

இத் திருப்பாட்டினும் 'ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன் ஆண்ட ந அருளிலை ஆனால் வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்' என்னும் உயிரை உருக்கும் இனிய அடிகளை அவர் கூறும் பொழுது கண்களில் உவகைக் கண்ணீர் ஊற்றெடுத் தொழுகுமாம்.

-இராமலிங்க சுவாமிகள் திருக்கோயில் வழிபாடு சித்தாந்தம், மலர் 1-இதழ் 6. (1928)

"நம் அடிகளார் திருவொற்றித் தியாகப்பெருமான் திருமுன்னர் நின்று வழிபடும் பொழுதெல்லாம் தாம் அன்போடு கற்றுள்ள திருவாசகம்,தேவாரம் முதலிய அருணூல்களிலுள்ள திருப்பாடல்களைப் பரவசமாகப் பாடி உருகுவார்" என்றும் மணிமங்கலம் திருநாவுக்கரசனார் எழுதுகின்றார். வள்ளற்பெருமான் தாமே பாடல்களைப் பாடித் துதிப்பதோடு முன்னோர் மொழியும் பொன்னே போற் போற்றுவம் என்பதற்கு அறிகுறியாக முன் ஞானிகளது அருளிச் செயல்களையும் திருமுன்னர் விண்ணப்பஞ்செய்வர்போலும். முருகனை வழிபடு கடவுளாகவும் ஞானசம்பந்தரை வழிபடு குருவாகவும் திருவாசகத்தை வழிபடு நூலாகவும் இளமையிலேயே அடிகள் அமைத்துக்கொண்டார்கள். அடிகளது திருவாசகக் காதல் அவர்கள் அதனை வழிபடு நூலாகக் கொண்டதனின்றும் மணி-திருநாவுக்கரசர் கூறும் மேற்கூற்றினின்றும், மணவின்பக் காலத்தில் பள்ளியறை புக்கபோது திருவாசகத்தொடு புகுந்து அன்றிரவெல்லாம் அதனையே திக்கழித்தமையானும் அறியப்படும். அடிகள் திருவாசகத்திற்கே வாழ்க்கைப்பட்டவர்.

## நந்தி ஆச்சிரமமும் நந்தி ஓடையும்

திருவொற்றியூர், நந்தி வழிபட்ட தலம். இங்கு நந்தியம்பெருமானுக்குத் தனிக்கோயில் உண்டு. அது பூங்கோயிலுக்கு வெளியே அதன் வடமேற்கு மூலையில் வடக்கு மாட வீதியில் உள்ளது. வடக்கு மாட வீதியின்மேல்கோடியில் வடசிறகில் மேற்கு மாடவீதியைப் பார்த்துள்ள இந்நந்தி கோயில் இப்போது நந்தீஸ்வரர் கோயில் என வழங்கப்படுகிறது. அடிகள் இதனை நந்தி யாச்சிரமம் எனக் குறிக்கின்றனர். இந்நந்தியாச்சிரமத்தை அடிகள், 'தண்டமிழ்க் கவிதை போற்



RangaRakes tamilnavarasam.com

சாந்தம் மிக்கது' எனச் சிறப்பிப்பர். அடிகள் அருளிய குடும்ப கோஷத்துள் இந் நந்தியாச்சிரமம் அழகாக வருணிக்கப்படுகிறது.

… … … … … … … … ஒற்றி மாண்பதி 10

அப்பெரும் பதியிடை அயன்முன் னாகிய
முப்பெருந் தலைவரும் முடிவ ணங்கிட
ஒப்பருஞ் சிவபிரான் உருவு கொண்டருள்
செப்பருங் கோயிலைச் சேர்ந்த சூழலில் 11

கிள்ளைகள் ஆகமங் கிளக்கக் கேட்டதற்
குள்ளுணர் பூவைகள் உரைவி ரித்திடத்
தெள்ளிய மயிலினந் தேர்ந்துள் ஆனந்தங்
கொள்ளைகொண் டயனடங் குயிற்ற வுள்ளது 12

சைவயா கங்களுஞ் சாற்று மற்றைய
தெய்வயா கங்களுஞ் செய்ய வோங்கிய
மைவிடாப் புகையொடு மழையுங் கூடினும்
மெய்விடார் உளமென விளங்கு கின்றது 13

கண்டவர் உளமெலாங் கட்டு கின்றது
தண்டமிழ்க் கவிதைபோற் சாந்த மிக்கது
விண்டயன் பதமுதல் விரும்பத் தக்கது
எண்டருந் தவமர சிருக்குஞ் சீரது 14

வந்தியார் அமுதையும் வாங்கி யுண்டருள்
அந்தியார் வண்ணர்தம் அருளில் நின்றது
நந்தியாச் சிரமமா நாமம் பெற்றது
நிந்தியா நெறியதோர் நிலையுண் டாயிடை. 15

-குருதரிசனப்படலம்

இந்நந்தியாச்சிரமத்திற் கருகில் அதன் மேல்புறம் நந்தியோடை இருந்தது. தூர்ந்து அழிந்த நிலையில், நந்தியாச்சிரமத்திற்கும் இருப்புப்பாதை (Railway line) க்கும் இடையே, அது சிலகாலம் முன்னரும் கழிவுநீர்க் கால்வாயாக இருந்தது. இப்போது அதுவும் ஆங்காங்கே தூர்க்கப்பட்டுச் சில இடங்களில் மட்டும் மழை நாளில் நீர் தேங்கி நிற்கும் குழிகளாக இருக்கின்றது. இருந்த இடமுந் தெரியாது போன இந்நந்தி யோடையும், நந்தியாச்சிரமமும் அடிகள் பழகிய இடங்களாம். நந்தி ஓடையை 'கங்கையிலே மிக்கதெனக் கருதி மேலோர் ஓலையிலே பொறித்த நந்தி ஓடை' என்றும் அதன் நீரைத் 'தெய்வ நன்னீர்' என்றும் அடிகள் கூறுவர். (குடும்பகோஷம், முயற்சிப்படலம், 2) திருவொற்றியூர்க்குச் செல்லுங் காலங்களில் அடிகள் நந்தியாச் சிரமத்தில் தனித் தமர்ந்து தியானஞ் செய்வர். நந்தியோடைக் கரையில் உலவுவர். இவை அடிகட்கு உவப்பான இடங்களென்பது அகப்புறச்

சான்றுகளால் நன்கறியப்படுகிறது. நந்தியோடை அடிகட்குப் பெரிதும் இசசைந்த இடம் என மணி-திருநாவுக்கரசர் எழுதுகின்றார்.

அடிக்கடி திருவொற்றியூருக்குச் செல்வார். அங்கே உள்ள நந்தியோடை அவருக்குப் பெரிதும் இசைந்த இடம். அந் நந்திஓடையின் கரையிலே தென்னஞ் சோலையின் ஒருமருங்கிலே அமர்ந்து, மெல்லென வீசுங் காற்றை நுகர்ந்தும், ஓடையிலே ஓடும் தெண்ணீரின் ஓட்டத்தைக் கண்டும் அதனை உண்டு மகிழ்ந்தும், மர நிழலின் அருமையை ஆரத்துய்த்தும் இன்புற்ற பொழுதெல்லாம் இறைவன் திருவருள் நலத்தையும் உன்னியுன்னி அதன்கண் திளைப்பார். இத்திளைப்பே பின்னர்த் தாம் பாடிய செய்யுள் ஒன்றிலே திறம்பட அமைவதாயிற்று. அச்செய்யுள் இயற்சொற்களால் இயன்றுளதேனும், ஆழமும் நுண்மையும் பெற்றுப் பல நோக்குடன் திகழ்வதைக் காண்க.

**கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த**
**குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே**
**ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே**
**உகந்தகண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே**
**மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே**
**மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே**
**ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்**
**ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.**

**-இராமலிங்கசுவாமிகள் திருக்கோயில் வழிபாடு**

அடிகளது ஒற்றியூர் வழிபாட்டுக் காலத்தில் சிறந்து விளங்கிய நந்தி யோடையும் நந்தி யாச்சிரமமும் பின்னாளில் சிறப்பிழந்தன. நந்தியோடை இருந்த இடமும் தெரியாமற் போய்விட்டது. நந்தியாச்சிரமம் சீர்குலைந்த நிலையில் இன்றும் உள்ளதேனும் அதன் இருப்பினையே சன்மார்க்க அன்பர்களிற் பெரும்பாலோர் அறியார்.

### பட்டினத்தார் திருக்கோயில்

நந்தி யாச்சிரமத்திற்குச் சென்று நந்தி யோடைக் கரையில் உலவுவதும் அமர்வதும் போன்று ஒற்றிக் கடற்கரையிலுள்ள பட்டினத்தார் கோயிற்குச் சென்று வழிபட்டு, ஆங்குள்ள குளக்கரையில் அமர்வது வழக்கம். ஒருநாள் அவ்வாறு குளக்கரையில் அமர்ந்திருந்தபோது, பட்டினத்தார் கோயிலில் தொண்டு செய்துகொண்டு அருகே ஒரு குடிசையில் உறைந்த வயது முதிர்ந்த அம்மையார் ஒருவர் வந்து வணங்கினர். அடிகள் ஒருபிடி கடற்கரை மணலை அள்ளி அம்மையார் கையிற் கொடுத்தனர். அம்மையார் கையை மூடித் திறக்வே மணலெல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சி யளித்தன. 'மணலெலாம் வெண்ணீறு' எனப் பாடியருளினர் பட்டினத்தடிகள். நம் அடிகளோ மணலெலாம் சிவலிங்கங்களாகக் காட்டியருளினர்.

### குறுக்குவழி


RangaRakes tamilnavarasam.com

ஒருநாள், சோமு செட்டியார், வேலாயுத முதலியார் முதலிய அன்பர்கள் சூழ அடிகள் ஒற்றியூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். வழியில் பெருமழை வந்தது. உடன் வந்தோர் மழையால் வருந்தினர். அது கண்ட அடிகள் புதிய குறுக்கு வழியொன்றைக் காட்டி அனைவரையும் அவ்வழியே அழைத்துச் சென்று கணப்பொழுதில் ஒற்றியூர் சேர்த்தனர். அவ்வழியை அதற்கு முன் யாரும் அறியார். உண்மையில் அப்படியொரு வழியே இல்லை. அப்படியொரு வழி அன்று தோன்றியது அடிகள் நிகழ்த்திய -அடிகட்காக நிகழ்ந்த-அற்புதமாகும்.

உத்தம மனிதன் போகிறான்

திருவொற்றியூர்த் தேரடித் தெருவில் ஒரு வீட்டுத் திண்ணையில் நெடுநாளாக ஒரு துறவி இருந்தார். அவர் உடை யொன்றும் உடுத்துவதில்லை. நிர்வாணமாகவே இருப்பார். தெரு வழியாகப் போவோர் வருவோரை யெல்லாம் அவரவர் குணங்களுக்கேற்ப 'மாடு போகிறது, கழுதை போகிறது நாய் போகிறது, நரி போகிறது' என்று சொல்லிக் கொண்டிருப்பார்.

அடிகள் திருவொற்றியூர்க்குச் செல்லும் போதெல்லாம் நேராகத் தேரடித்தெரு (சந்நிதித்தெரு) வழியாகச் செல்வதில்லை. தெற்கு மாடவீதியிலுள்ள நெல்லிக்காய்ப் பண்டாரச் சந்தின் வழியாகச் சென்று கோயிலை அடைவதே வழக்கம். நெல்லிக்காய் ஊறுகாய் மிகப் பக்குவமாகச் செய்து அன்பர்களுக்கு இடும் சைவப் பண்டாரமொருவர் அச்சந்தில் உறைந்ததால் அது அப்பெயர் பெற்றது. அடிகளும் உடன் செல்வோரும் சிற்சில காலங்களில் திருவொற்றியூரில் அவர் வீட்டில் உண்பதுண்டு. வழக்கத்திற்கு மாறாக ஒருநாள் அடிகள் தேரடித்தெரு வழியாகச் சென்றனர். அன்று புதிதாக அடிகளைக் கண்ட நிர்வாணத் துறவியார் 'இதோ ஓர் உத்தம மனிதன் போகிறான்' எனக் கூவியவாறே தமது கைகளால் மெய்யைப் பொத்திக்கொண்டார். அடிகள் அவரிடம் சென்று சற்று அளவளாவினர். அதன் பின் அந்நிர்வாணத் துறவி அங்கில்லை. அன்றிரவே அவ்விடம் விட்டகன்றார். அடிகளுக்காக அவர் அங்கே அவ்வளவு நாள் காத்திருந்தார் போலும்.

**ஒற்றியிற் போய்ப் பசித்தனையோ?**
**வடிவுடையம்மை, அண்ணியார் வடிவில் தோன்றி அமுதளித்தது**

ஒருநாள் ஒற்றியூர் வழிபாட்டிற்குச் சென்றபோது இரவு சென்னை மீள்வதற்குக் காலங்கடந்துவிட்டது. அகாலத்தில் வீடு திரும்பிய அடிகள் கதவைத் தட்டி அண்ணன் அண்ணியரை எழுப்ப விரும்பவில்லை. உணவையுங் கருதாது திண்ணையிற் படுத்துறங்கினர். வழிநடந்த இளைப்பொடும் பசிக்களைப்பொடும் படுத்தயர்ந்தனர். சற்றுப் பின்னர் யாரோ எழுப்பினாற்போலிருந்தது. விழித்தெழிந்து பார்க்க, அண்ணியார் வட்டிலில் உணவுடன் அருகில் நின்றிருந்தார். அண்ணியார் வட்டிலைக் கொடுக்க வாங்கி உண்டு அடிகள் மீண்டும் படுத்தார். பின்னுஞ் சற்று நேரத்தில் மீண்டும் யாரோ எழுப்புவதை உணர்ந்தார். இப்போதும் அண்ணியாரே வந்து எழுப்பினார். உள்ளே வந்து உணவு கொள்ளுமாறு அழைத்தார். அடிகட்கு இது வியப்பாயிருந்தது. 'முன்னமே வட்டிலில் உணவு கொண்டு வந்து கொடுத்தீரே' என அடிகள் புகன்றார். ஒற்றியூரினின்றும் வழக்கமாகத் திரும்பும் காலம் கடந்துவிடவே இன்று வரவில்லைபோலுமென்றெண்ணித் தாம் கதவைத் தாழிட்டுக்கொண்டதாகவும், இப்போது தான் வெளியே வந்து பார்த்தபோது படுத்திருப்பதைக் கண்டதாயும், இதற்குமுன்னர் தாம் உணவு கொண்டு வந்து கொடுக்கவில்லை என்றும் அண்ணியார் கூறினார். அண்ணியாரின் கூற்று



RangaRakes tamilnavarasam.com

அடிகட்கும், அடிகளின் கூற்று அண்ணியார்க்கும் வியப்பாயிருந்தது. இருவரும் உண்மை யாதென விளங்காது வியந்த வியப்பாயிருந்தது. இருவரும் உண்மை யாதென விளங்காது வியந்த வண்ணமிருந்தனர். அப்போது அண்ணியார் வடிவில் திருக்கரத்தே திகழ்வள்ளத்துடன் வடிவுடை யம்மை அடிகட்குக் காட்சியளித்தார். கண்ட அடிகள், தாம் பசித்திருப்பதைப் பொறுக்கப் பெறாது வடிவுடையம்மையே அண்ணியார் வடிவில் தோன்றி வள்ளத்தில் உணவு வழங்கியருளியதை உணர்ந்து அண்ணியார்க்கும் கூறினார். அதுகேட்ட அண்ணியாரும் இத்தகைய கொழுந்தர் வாய்த்தமையாலன்றோ வடிவுடை நாயகி என் வடிவங்கொள்ள நேர்ந்ததென்று எண்ணி எண்ணி இறும்பூதெய்தினார்.{16} அடிகளின் அருமையை எண்ணி மகிழ்ந்து நடந்தவற்றைக் கணவற்குக் கூறினார்.

ஆறாந் திருமுறை, அருள் விளக்கமாலைப் பாடல்களில் இவ்வற்புதம் அடிகளாலேயே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அன்றொருநாள் நம்பசிகண் டந்தோ தரியாது**
**நன்றிரவில் சோறளித்த நற்றாய்காண்**

**-1, நெஞ்சறிவுறித்தல் 176**

**தெற்றியிலே நான்பசித்துப் படுத்திளைத்த தருணம்**
**திருஅமுதோர் திருக்கரத்தே திகழ்வள்ளத் தெடுத்தே**
**ஒற்றியிற்போய்ப் பசித்தனையோ என்றெனையங் கெழுப்பி**
**உவந்துகொடுத் தருளியஎன் உயிர்க்கினிதாந் தாயே**
**பற்றியஎன் பற்றனைத்தும் தன்அடிப்பற் றாகப்**
**பரிந்தருளி எனைஈன்ற பண்புடைஎந் தாயே**
**பெற்றியுளார் சுற்றிநின்று போற்றமணிப் பொதுவில்**
**பெருநடஞ்செய் அரசேஎன் பிதற்றும்உவந் தருளே.**

**இருள்இரவில் ஒருமூலைத் திண்ணையில்நான் பசித்தே**
**இளைப்புடனே படுத்திருக்க எனைத்தேடி வந்தே**
**பொருள்உணவு கொடுத்துண்ணச் செய்வித்தே பசியைப்**
**போக்கிஅருள் புரிந்தஎன்றன் புண்ணியநற் றுணையே**
**மருள்இரவு நீக்கிஎல்லா வாழ்வும்எனக் கருளி**
**மணிமேடை நடுஇருக்க வைத்தஒரு மணியே**
**அருள்உணவும் அளித்தென்னை ஆட்கொண்ட சிவமே**
**அம்பலத்தென் அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.**

{16} தமக்கையார் வடிவில் தோன்றித் தாமரை இலையில் உணவளித்ததாகக் கூறுவோர் உண்டு. தாமரை இலை என்பது தவறு. பாடலில் 'வள்ளம்' எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிள்ளைப் பெருமானுக்கு வழக்கமாக உணவு படைப்பவர் அண்ணியாரே யாதலின் இறைவி அவர் வடிவில் தோன்றி அமுதளித்தார் என்பதே பொருத்தம்.}

**நான்பசித்த போதெல்லாம் தான்பசித்த தாகி**
**நல்உணவு கொடுத்தென்னைச் செல்வம்உற வளர்த்தே**

**ஊன்பசித்த இளைப்பென்றும் தோற்றாத வகையே**
**ஒள்ளியதெள் அமுதெனக்கிங் குவந்தளித்த ஒளியே**
**வான்பதிக்கும் நெடுமாற்கும் நான்முகற்கும் அரிதாம்**
**வாழ்வெனக்கே ஆகியுற வரம்அளித்த பதியே**
**தேன் பரித்த மலர்மணமே திருப்பொதுவில் ஞானத்**
**திருநடஞ்செய் அரசேஎன் சிறுமொழிஏற் றருளே.**
**-6 (இடை) அருள்விளக்கமாலை 43, 48, 49**

தெற்றி-திண்ணை. வள்ளம்-உண்ணுங்கலமாக உதவும் வட்டில் வகை. ஒற்றியிற் போய்ப் பசித்தனையோ என்பது ஒற்றியூர் சென்ற மீண்ட குறிப்பு. இருள் இரவு என்பது நேரங்குறித்தது.

## கோயிற் பூசகர் வடிவில் இறைவனேவந்து உணவளித்தது

மற்றொரு நாள் அடிகள் ஒற்றியூர்க் கோயிலின் மண்டபமொன்றில் பசியோடு படுத்துறங்கினார். அன்பர் சிலரும் உடனிருந்தனர். அடிகள் இடையில் விழித்தபோது இறைவனே கோயிற் பூசகர் வடிவில் வந்து அன்னமளித்துச் சென்றான். வந்த அப்பூசகர் இரண்டு நாளாக ஊரிலில்லை யென்பது பின்னர்த் தெரிய வந்தது.

ஆண்டவன், அடியார்களது பசி பொறுக்கப் பெறாதவன். ஞான சம்பந்தக் குழந்தை பசியாலும் பயத்தாலும் அழுதபோது அவனது அருட்சத்தியாகிய இறைவி ஞானாப் பாலூட்டினாள். திருப்பைஞ்ஞீலியில் அப்பர் பசியால் வாடியபோது இறைவன் தண்ணீர்ப்பந்தர் வைத்துக் கட்டுச் சோறளித்தான். திருக்கச்சூரில் சுந்தரர் பசியால் துன்புற்ற போது இறைவன் பிச்சை யேற்றுவந்து உணவருந்தினான். ஞான சம்பந்தர் இறைவியால் பொன் வள்ளத்தில் (ஞானப்) பாலூட்டப் பெற்றார். வள்ளற்பெருமானும் இறைவியால் வள்ளத்தில் (ஞானத்) திருவமுதளிக்கப் பெற்றார். இறைவனால் கோயிற்பூசகர் வடிவில்வந்து உணவளிக்கப் பெற்றார். வள்ளற்பெருமான் பசித்தயர்ந்தபோது இறைவன் இறைவி இருவருமே வந்து உணவூட்டினர்.

## ஒற்றியில் தண்டிக்கப்பட்டது

இறை வழிபாட்டின் பின்னரே அடிகள் உண்ணுதல் வழக்கம். ஒருநாள் இவ்வழக்கந் தவறி வழிபாட்டுக்கு முன்னரே உணவருந்தி விட்டனர். இதற்காக இறைவன் அடிகளைத் தண்டித்தான். இதனை அடிகளே குறிப்பிடுகின்றார்கள்.

**பசைஇலாக் கருங்கல் பாறைநேர் மனத்துப்**
**பதகனேன் படிற்றுரு வகனேன்**
**வசையிலார்க் கருளும் மாணிக்க மணியே**
**வள்ளலே நினைத்தொழல் மறந்து**

**நசைஇலா மலம்உண் டோடுறும் கொடிய**
**நாய்என உணவுகொண் டுற்றேன்**
**தசைஎலாம் நடுங்க ஒற்றியில் உன்னால்**
**தண்டிக்கப் பட்டனன் அன்றே.**



RangaRakes tamilnavarasam.com

**அன்னைபோன் றடியர்க் கருத்தியில் அருத்தும்**
**அப்பநின் அடியிணை காணா**
**தென்னையோ மலம்உண் டுழன்றிடும் பன்றி**
**என்னஉண் டுற்றனன் அதனால்**
**புன்னைஅம் சடைஎம் புண்ணிய ஒளியே**
**பூதநா யகஎன்றன் உடலம்**
**தன்னைநீ அமர்ந்த ஒற்றியில் உன்னால்**
**தண்டிக்கப் பட்டனன் அன்றே.**

-2, பிரசாத விண்ணப்பம் 1, 2.

'ஒற்றியில் உன்னால் தண்டிக்கப்பட்டனன் அன்றே' என இப்பதிகத்தின் பத்துப் பாடல்களிலும் அடிகள் அருளுகின்றார்கள். அளிக்கப்பட்ட தண்டனை இன்னதென்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் அது உடலுக்கு அளிக்கப்பட்ட தண்டனை என்பது என்றன் உடலம் தன்னை நீ அமர்ந்த ஒற்றியில் உன்னால் தண்டிக்கப்பட்டனன்' என இரண்டாம் பாடலில் கூறப்படுதலானும், அத் தண்டனை தசையெலாம் நடுங்கச் செய்வதாயிருந்ததென்பது, 'தசையெலாம் நடுங்க ஒற்றியில் உன்னால் தண்டிக்கப்பட்டனன்' என முதற் பாடலில் கூறப்பெறுதலானும் பெறப்படும். தண்டிக்கப் பெற்ற இடம் ஒற்றியூர் என்பது எல்லாப் பாடல்களிலும் குறிக்கப்பெற்றது. தண்டிக்கப்பட்டதன் காரணம், உணவருந்திய பின் இறை வழிபாட்டுக்குச் சென்றதென்பது இப்பதிகத்தின் ஏனைய பாடல்கள் தோறும் உருக்கமாகக் கூறப்படுகிறது.

**கண்ணினால் உனது கழற்பதம் காணும்**
**கருத்தினை மறந்துபாழ் வயிற்றை**
**மண்ணினால் நிறைத்தல் எனஉண வருந்தி**
**மலம்பெற வந்தனன் அதனால்** 3

**நின்முனம் நீல கண்டம்என் றோதும்**
**நெறிமறந் துணவுகொண் டந்தோ**
**பொன்முனம் நின்ற இரும்பென நின்றேன்**
**புலையனேன் ஆதலால் இன்று** 4

**குழிக்குமண் அடைக்கும் கொள்கைபோல் பாழும்**
**கும்பியை ஓம்பினன் அல்லால்**
**செழிக்கும்உன் திருமுன் நீலகண் டந்தான்**
**செப்புதல் மறந்தனன் அதனால்** 5

**கமரிடை மலநீர் கவிழ்த்தல்போல் வயிற்றுக்**
**கடன்கழித் திட்டனன் அல்லால்**
**அமரிடைப் புரமூன் றெரித்தருள் புரிந்த**
**ஐயனே நினைத்தொழல் மறந்தேன்** 6



RangaRakes tamilnavarasam.com

அருமருந் தனையாய் நின்திரு முன்போந்
தரகர எனத்தொழல் மறந்தே
இருளுறும் மனத்தேன் மலத்திலும் இழிந்த
இயல்புற உண்டனன் அதனால் 7

கண்ணுதல் கரும்பே நின்முனம் நீல
கண்டம்என் றோதுதக் மறந்தே
உண்ணுதற் கிசைந்தே உண்டுபின் ஓதிபோல்
உன்முனம் நின்றனன் அதனால் 8

கற்றவர்க் கினிதாம் கதியருள் நீல
கண்டம்என் றுன்திரு முன்னர்
சொற்றிடல் மறந்தேன் சோற்றினை ஊத்தைத்
துருத்தியில் அடைத்தனன் அதனால் 9

முறைப்படி நினது முன்புநின் றேத்தி
முன்னிய பின்னர்உண் ணாமல்
சிறைப்படி வயிற்றில் பொறைப்பட ஓதிபோல்
சென்றுநின் முன்னர்உற் றதனால் 10

என்பனவற்றால் காண்க. இறைவனை நினையாதும் வழிபடாதும் உண்ட குற்றத்திற்காக வள்ளற் பெருமானே தண்டிக்கப்பட்டனர், அதுவும் தசையெலாம் நடுங்கத் தண்டிக்கப்பட்டனர் எனின் நம்போலியர் நிலை என்னை? பசித்துக் களைத்தபோது இடந்தேடிவந்து உணவூட்டிய இறைவனே புசிக்குமுன் தொழ மறந்தபோது தண்டித்தான். அணைக்கும்போது அணைத்த அவனே, அடிக்கும்போது அடித்தான். தக்கவை செய்தபோது அடியார்க்கு அருளும் அவனே, தகாதவை செய்தபோது தண்டிக்கிறான். வள்ளற்பெருமானது அருள் வாழ்வில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சி நம்மனோர்க்குப் பெரியதோர் பாடமாகும்.

## ஒற்றியிலா? தில்லையிலா?

பல காலம் திருவொற்றியூரை வழிபட்டுப் பற்பல பதிகங்களையும் மாலைகளையும் பாடிப் பணிந்த பெருமான், துன்பங்கள் என்னைவிட்டு நீங்குவதற்கு இவ்வொற்றியூரை அடுத்து நிற்கவோ அல்லது தில்லைக்கு வந்து வழிபடவோ என இறைவனை வினவியும், இறைவன் எனக்கு அருளுமிடம் தில்லைச் சிற்றம்பலமோ அல்லது இந்த ஒற்றி நகரோ எனச் சோதிடம் பார்த்து உரைப்பீர் என்று சோதிடரை விளித்துச் சோதிடம் நாடலாகவும் இரு பாடல்களைப்பாடி யுள்ளனர்.



RangaRakes tamilnavarasam.com

**அல்லல் என்னைவிட் டகன்றிட ஒற்றி**
**அடுத்து நிற்கவோ அன்றிநற் புலியூர்த்**
**தில்லை மேவமோ அறிந்திலேன் சிவனே**
**செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்**
**ஒல்லை இங்குவா என்றருள் புரியா**
**தொழிதி யேல்உனை உறுவதெவ் வணமோ**
**புல்லர் மேவிடா ஒற்றிஅம் பரனே**
**போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின்றவனே.**

**-2, சிறுமை விண்ணப்பம் 7.**

**பெற்றி அறியாப் பிரமனுக்கும் பெரிய மாற்கும் பெறஅறியார்**
**புற்றின் அரவார் கச்சைஉடைப் புனிதர் என்னைப் புணரும்இடம்**
**தெற்றி மணிக்கால் விளங்குதில்லைச் சிற்றம்பலமோ அன்றிஇந்த**
**ஒற்றி நகரோ சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே.**

**-3. சோதிடம் நாடல் 2**

தம்மை ஆள்வது தில்லையிலா அல்லது ஒற்றியிலா என வள்ளற்பெருமான் வினவுவது அதுகாறும் ஒற்றியைச் சுற்றி நின்ற பெருமான் ஒற்றியை விட்டுத் தில்லையைப் பற்றும் கருத்துடையரானார் என்பதனைக் காட்டுகின்றது. திருஒற்றியூர் வழிபாடு திருத்தில்லை வழிபாடாகத் திரும்பிய இடம் இதுவாம்.

## தொழுவூர் வேலாயுத முதலியார் அடிகளின் மாணவரானது-1849

1849-ஆம் ஆண்டில் தொழுவூர் வேலாயுத முதலியார் அடிகளை வந்தடுத்து மாணவராயினார். அப்போது அடிகட்கு அகவை இருபத்தாறு. வேலாயுதனார்க்கு அகவை பதினேழு. வேலாயுதனார் அடிகளை வந்தடுத்த வரலாறு பின்வருமாறு வழங்குகிறது.

அடிகளது புலமையில் அவ்வளவாக நம்பிக்கையற்ற தொழுவூர் வேலாயுத முதலியார் கடிய நடையில் தாமே நூறு செய்யுள்களை இயற்றிக் கொண்டுவந்து 'இவை சங்கட் செய்யுட்கள், பழைய ஏடுகளிற் காணப்பட்டன' வென்று அடிகளிடம் காட்டினர். கண்ணுற்ற அடிகள் 'இவை சங்கப் பாடல்களல்ல, சங்கப் பாடல்களில் இவ்வளவு குற்றமிராது, இவை பொருளிலக்கணந் தேறாக் கற்றுக்குட்டி பாடியவை', எனக்கூறினர். இதனைக் கேட்ட வேலாயுதனார் தமது செய்கைக்கு நாணி அடிகளைச் சரணடைந்தார். இவ்வாறு ச.மு.க. பதிப்பு சரித்திரக் குறிப்புகளுட் கூறப்பட்டுள்ளது.

தொ.வே. அவர்களின் மகன் தொ.வே. திருநாகேசுவர முதலியார் இதனைப்பற்றிக் கூறுவது வருமாறு;

வேலாயுதனாரது இளமைப் பருவத்தில் அவரது கல்வியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை உடையவரும், அவரது காலஞ்சென்ற தந்தையாரின்

நண்பர்களிலொருவருமாகிய காளவாய்-குப்பண்ண முதலியார் என்பவர் இளைஞர் வேலாயுதனாரை அடிகளிடம் அழைத்து வந்து சேர்ப்பித்தார். அடிகளும் 'புதியவனல்லன் நம் பிள்ளை நமக்கே கிடைத்தான்' என்று கூறி ஏற்றுக்கொண்டார். தமக்கு ஆசிரியராக வாய்த்த அடிகளின் அறிவாற்றலைச் சோதித்துணர விரும்பிய வேலாயுதனார் ஒரு செய்யுளையும் அதற்கு ஐவகை உரையையும் தாமே செய்து கொண்டுவந்து அடிகளிடம் காட்டி இதற்கு ஐவகையாக உரை கூறுகின்றனர் என்று விண்ணப்பித்தார். அடிகளோ அதற்கு ஒன்பது வகையாகப் பொருள் கூறலாம் என்றுசொல்லி அவ்வொன்பது வகைப் பொருளையும் விளக்கினர். அடிகளின் பேரறிவுத் திறத்தைக் கண்ட வேலாயுதனார் அடிகட்கு ஆட்பட்டுச் சிறந்தார். இது தந்தையின் வரலாற்றில் தனயன் எழுதுவது.

வரும்போதே சோதனையுடன் வந்ததாகச் ச.மு.க. பதிப்பு சரித்திரக்குறிப்பும் பிறவும் கூற, வந்து அடுத்தபின் சோதித்ததாக அவரது மகனார் கூறுகின்றார். வரும்போதேயோ அல்லது வந்து அடுத்த பின்னரோ வேலாயுதனார் அடிகளைச் சோதித்தறிபவரானார் என்பது உண்மை. ஆசிரியர் மாணவனைச் சோதித்து ஏற்பதே வழக்கம். ஆனால் இங்கோ மாணவர் ஆசிரியரைச் சோதித்து ஏற்றுக் கொண்டார். இத் தலைகீழ்ப்பாடம் வேலாயுதனாரிடம் இறுதிவரை இருந்தது.

## திருமணம் - 1850

பிள்ளைப் பருவத்திலேயே மூவாசைகளையும் முற்றுத்துறந்து துறவொழுக்கம் பூண்டொழுகிய பிள்ளைப் பெருமானுக்குத் திருமணஞ் செய்வித்துக் காணவேண்டுமென அன்னையாரும் தமையர்களும் தமக்கையர்களும் விரும்பினர். பெருமான், திருமணத்திற்கு இசையவில்லை. மணப்பருவங் கடந்தது. உற்றாரும் உறவினரும் நெருக்கி வற்புறுத்தினர். துறவி யொருவரைக் கொண்டும் பெருமானுக்கு 'இல்லற உபதேசம்' செய்வித்தனரென வரலாறுகள் கூறுகின்றன. இறுதியாகப் பெருமான் ஒருவாறு ஒப்பினர். இருபத்தேழாம் அகவையில் திருமணம் நிகழ்ந்தது. காலவரிசைப்படி நிகழ்ச்சிகளைக் குறித்துள்ளதாகிய எமக்குக் கிடைத்த குறிப்பொன்றில் திருமணம் 1850-ல் நிகழ்ந்ததாகக் குறிக்கப்பெற்றுள்ளது. இதனைக் கொண்டே எமது வடலூர் வரலாற்று நூலில் வடலூர் வரலாற்றுக் காலக்குறிப்பில் '1850? திருமணம்' எனக் குறித்து, வினாக் குறியுமிட்டு வைத்தோம். டாக்டர்.கு.ஶ்ரீநிவாசன் அவர்கள் எழுதிய சுத்த சன்மார்க்க விளக்கத்திலும் அடிகளின் திருமணம் 1850-ல் நிகழ்ந்ததாகவே எழுதியுள்ளார். 1850-ஆம் ஆண்டில் அடிகட்கு அகவை இருபத்தேழாகிறது. இவ்வளவு காலங் கடந்து திருமணஞ் செய்யும் வழக்கம் அக்காலத்திலில்லை, ஆணுக்குப்பதினாறும் பெண்ணுக்குப் பன்னிரண்டும் திருமணப் பருவமென நூல்கள் கூறுகின்றன. சென்ற நூற்றாண்டிலும் இளமைத் திருமணங்களே நடைபெற்று வந்தன. பெருமான் மணவாழ்க்கையில் இச்சையின்றி, இசைய மறுத்ததால் காலம் நீட்டித்தது போலும். 1850-இல் இருபத்தேழாம் அகவையில் திருமணம் நடந்தென்பதற்கு ஆதாரம் இன்னதெனத் தெரியவில்லை.

தமக்கை உண்ணாமுலையம்மையாரின் மகள் தனம்மாளை அடிகட்கு மணஞ் செய்வித்தனர்.

சுந்தரமூர்த்திகளின் திருமணத்தில் நீ வந்து வலுவில் ஆட்கொண்டதுபோல் என் மணத்தில் நீ வராவிடினும், உனது பூதகணங்களில் ஒன்றுவந்து



RangaRakes tamilnavarasam.com

ஆட்கொள்வதாயிருந்தால் நான்முன்னரே செய்ததன்றி இன்றும் ஒரு திருமணம் செய்வேன் எனச் சிவநேசவெண்பாவில் அடிகள் இறைவனிடம் விண்ணப்பிக்கிறார்கள்.

**முன்மணத்தில் சுந்தரரை முன்வலுவில் கொண்டதுபோல்**
**என்மணத்தில் நீவந் திடாவிடினும்-நின்கணத்தில்**
**ஒன்றும் ஒருகணம்வந் துற்றழைக்கில் செய்ததன்றி**
**இன்றும் ஒருமணஞ் செய்வேன்.**

**-1, சிவநேசவெண்பா 52.**

இப் பாடலில் அடிகள், தாம் மணம்புரிந்தமையைக் குறிக்கின்றனர். செய்ததன்றி என்பது முன்செய்த தல்லாமல் எனப்பொருள் பட்டு முன்செய்த திருமணத்தைக் குறிக்கும். இன்றும் ஒருமணஞ் செய்வேன் என்பது முன்னும் ஒரு திருமணஞ் செய்ததன் குறிப்பாம். அடிகளின் திருமணத்திற்கு இப்பாடல் அகச்சான்றாகும். அடிகள் தொட்டுத் தாலிகட்டினார்களன்றி இல்லற வாழ்வில் ஈடுபட்டார்களல்லர். மணமக்கள் பள்ளியறைக்கு அனுப்பப்பெற்ற முதல் இரவில் அடிகள் திருவாசகத்தை ஓதியே இரவு முழுவதையும் கழித்தார்கள். பின்னைப் பல இரவுகளும் திருவாசகத்தை ஈதுதலினும் கேட்டலினுமே கழிந்தன. அடிகளின் இல்லற வாழ்க்கை இவ்வளவே. பாலுண் குழவிப் பருவத்திலேயே இல்வாழ்வில் தமக்கு அருவருப்பு உண்டென அடிகள் கூறுவர். 'இதில் அருவருப்புப் பால்உணும் காலையே உளதால்' என்பது அடிகள் திருவாக்கு.

**இன்னுமிங் கெனைநீ மடந்தையர் முயக்கில்**
**எய்துவித் திடுதியேல் அதுவுன்**
**தன்னுளப் புணர்ப்பிங் கெனக்கொரு சிறிதும்**
**சம்மதம் அன்று நான் இதனைப்**
**பன்னுவ தென்னே இதில்அரு வருப்புப்**
**பால்உணும் காலையே உளதால்**
**மன்னும்அம் பலத்தே நடம்புரி வோய்என்**
**மதிப்பெலாம் திருவடி மலர்க்கே.**

**-6, பிள்ளைச்சிறுவிண்ணப்பம் 7.**

இவ்வாறு பிள்ளைப் பருவமுதலே இல்வாழ்வை அருவருத்து நின்ற பெருமான் பிறர் வற்புறுத்தலாலும் ஊழாலும் திருமணத்திற்கு இசைய வேண்டியராயினார். ஒருத்தியைத் தொட்டார். ஆனால் அவளோடு கலக்கவில்லை. 'தொட்டனன் அன்றிக் கலந்திலேன்' என அடிகளே அருளுகின்றனர்.

**முனித்தவெவ் வினையோ நின்னருட் செயலோ**
**தெரிந்திலேன் மோகமே லின்றித்**
**தனித்தனி ஒருசார் மடந்தையர் தமக்குள்**
**ஒருத்தியைக் கைதொடச் சார்ந்தேன்**
**குனித்தமற் றவரைத் தொட்டனன் அன்றிக்**
**கலப்பிலேன் மற்றிது குறித்தே**
**பனித்தனன் நினைத்த தோறும்உள் உடைந்தேன்**

பகர்வதென் எந்தைநீ அறிவாய்

-6, பிள்ளைப்பெருவிண்ணப்பம், 43.

'தொட்டனன் அன்றிக் கலப்பிலேன்', 'மற்று இது குறித்தே பனித்தனன்', 'நினைத்த தோறும் உள் உடைந்தேன்' என்பன உன்னற்குரியன. மணம்புரிய நேர்ந்ததைக் குறித்து, அடிகளின் திருவுள்ளம் வருந்திற்றென்பதும், அதனை நினைத்தபோதெல்லாம் அடிகள் உள்ளம் உடைந்தாரென்பதும் இப்பாடலாலறியப்படுகிறது.

அடிகட்கு இது இறுதிப் பிறவி. இவ்விறுதிப் பிறப்பிலும் திருமணஞ் செய்துகொள்ளவேண்டிய ஊழ் அடிகட்கு இருந்தது.

அடிகட்கு வாழ்க்கைப்பட்ட அம்மையார் தனம்மாளின் பின் வரலாறு சரியாக விளங்கவில்லை. செவிவழிச்செய்தியாகக் கூறப்படும் செய்திகள் சிலவும் ஒன்றையொன்று ஒவ்வாதனவாயுள்ளன.

## சென்னையில் வித்துவானாக விளங்கியது

### பாடஞ் சொல்லல் நூல்கள் பதிப்பித்தல் சாற்றுக்கவி யளித்தல்

கந்த கோட்டத்தையும் திருத்தணிகையையும் திருவொற்றியூரையும் பாடிப்பரவி அருட்கவிஞராக விளங்கிய அடிகள் வித்துவானாகவும் சென்னையிற் சிறந்து விளங்கினர்.

### பெருமானிடம் பாடங் கேட்டோர்

தொழுவூர் வேலாயுத முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார், நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், கிரியா யோக சாதகராகிய பண்டார ஆறுமுகவையா, பொன்னேரி சுந்தரம்பிள்ளை, காயாறு ஞான சுந்தர ஐயர் ஆகியோர் அடிகளிடத்துப் பாடங் கேட்டோராவர். பண்டார ஆறுமுக ஐயா விநாயக புராணம் முழுமையும் பாடங் கேட்டாரெனச் ச.மு.க. பதிப்பு சரித்திரக் குறிப்புகளுட் குறிப்பிடப் பட்டுள்ளது. அவரது பெயரும் கிரியா யோக சாதகராகிய பண்டார ஆறுமுகவையா வெனக் குறிக்கப்பட்டுள்ளது. இவர்களுள் தொழுவூர் வேலாயுத முதலியார் உபயகலாநிதிப் பெரும் புலவர் என்ற பட்டம் பெற்றுச் சிறப்புற்றார். அடிகள் சித்திபெற்ற பின் சென்னை பிரசிடென்சி காலேஜில் தமிழாசிரியராக விளங்கினார். இறுக்கம் இரத்தின முதலியார் பள்ளியாசிரியரானார். நரசிங்கபுரம் வீராசாமி முதலியார் சில இலக்கண நூல்களைப் பதிப்பித்தார்.



RangaRakes tamilnavarasam.com

மறைமலையடிகள் நூலகத்தில் நிறுவப்பெற்றுள்ள
கல்வெட்டு. பக்கம் 22 அடிக்குறிப்பு காண்க.

திருவருள் ஒளிநிறை இல்லம்

இந்த (சோழ செட்டியார்) இல்லத்திலே
1832 ஆம் ஆண்டு
பொன்னால் எழுதப்பெற்ற அம்பலவாணர்
திருவுருவத்தை நிலைநாட்டவும், அன்று
அருட்டிரு இராமலிங்க அடிகளாரின்
தமையனார் சைவத்திரு சபாபதிப் பிள்ளையவர்கள்
திருஞானசம்பந்தர் வரலாற்றைப் பேசவும்
ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

திரு. பிள்ளையவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தமையால்,
தம்பொருட்டுப் போய்ப் பேசுமாறு
அருள்மிகு தம்பியார் இராமலிங்கர்க்கு ஆணையிட
அடிகளார், 'உலகெலா முணர்ந்து ஓதற்கரியவன்'
என்ற இறைவணக்கப் பாடலை எடுத்து விரிவுரையாற்றினர்.
அவ்வுரையினைக் கேட்டு இன்பவெள்ளத்திலாழ்ந்த
அவையினர் இனி அடிகளாரே தொடர்ந்து
பேசுமாறு வேண்டினர் என்பது வரலாறு.

வள்ளலார் தெய்வநெறிக் கொள்கைகளைப்
பரப்பும் பொருட்டுப் 'பொதுநிலைக் கழகம்' நிறுவிய
மறைமலையடிகளாரின் நூல்நிலையம்
நடைபெறுதற்கு இந்த வீடு அமைந்ததுடன்
முகப்பில் பொன்னம்பலவாணர் சிவகாமியம்மையோடு
எழுந்தருளிப் பொன்னார் அருளொளி வீசுவது
திருவருட் செயலேயாகும்.

திருச்சிற்றம்பலம்

அடிகள் பதிப்பின் (1851) முகப்பேடு:

உ

திருச்சிற்றம்பலம்
ஒழிவிலொடுக்கம்

சீகாழி.
திருஞானசம்பந்தசுவாமிகள்
திருவருள்பெற்ற
கண்ணுடையவள்ளல்



RangaRakes tamilnavarasam.com

**திருவாய்மலர்ந்தருளிச்செய்தது.**

**இஃது**
**திருப்போரூர்ச்**
**சிதம்பரசுவாமிகளால்**
**ருளிச்செய்த - உரையுடன்.**

**சிதம்பரம்.**
**இராமலிங்கபிள்ளையவர்களால்**
**பார்வையிடப்பட்டு.**

**மண்ணிப்பாக்கம்.**
**சபாபதி முதலியாரவர்களால்**

**முத்தமிழ்விளக்க அச்சுக்கூடத்திற்**
**பதிப்பிக்கப்பட்டது**
**விரோதிகிருதுவரு ஐப்பசிமீ**
**முதல் பதிப்பு.**

### சிறுவர்க்குக் கல்வி பயிற்றல்.

இங்ஙனம் பெருநூல்களைத் தக்கார்க்குப் பாடஞ் சொல்லும் போதகாசிரியராக விளங்கிய அடிகள் சிறுவர்களைக் கூட்டி அவர்களுக்கு நீதிநூல்களைப் பயிற்றுவித்தார்கள். இவ்வுண்மை

**தொகுப்புறு சிறுவர் பயிலுங்கால் பயிற்றும்**
**தொழிலிலே வந்தகோ பத்தில்**
**சகிப்பிலா மையினால் அடித்தனன் அடித்த**
**தருணம் நான் கலங்கிய கலக்கம்**
**வகுப்புற நினது திருவுளம் அறியும்**
**மற்றுஞ்சில் உயிர்களில் கோபம்**
**மிகப்புகுந் தடித்துப் பட்டபா டெல்லாம்**
**மெய்யநீ அறிந்ததே அன்றோ.**

**- 6 (முடி) பிள்ளைப்பெரு விண்ணப்பம் 36**

என்னும் பாடலாற் பெறப்படும். பயின்ற சிறுவர்பலர் என்பது 'தொகுப்புறு சிறுவர்' என்றதனால் அறியப்படும். பயிற்றும் தொழிலிலே வந்த கோபத்தாலும், சிறுவர் செய்யும் குறும்புகளைக் கண்டு சகிப்பிலாமையினாலும் அவர்களை அடித்துவிட்டுப் பின்னர் அதற்காகக் கலங்கியமையைப் பெருமான் இறைவனிடம் இப் பாடலில் விண்ணப்பிக்கிறார்கள். சிறுவர்களை அடிக்க வேண்டாமெனப் பொன்னேரி சுந்தரம் பிள்ளைக்குப் பாடியனுப்பிய 'படிப்பது நன்றேனத் தெரிந்த பாங்குடையாய்' என்ற தொடக்கத்தையுடைய பாடல் ஈண்டு நினைவு கூரத்தக்கது. சிறுவர்களை நல் வழியிற் பயிற்றவேண்டுமென்ற எண்ணம் அடிகட்கு இளமையிலேயே இருந்தது.



RangaRakes tamilnavarasam.com

அதன் பயனும் முயற்சியுமே அடிகள் தாமே சிறுவர்க்குப் பயிற்றியது. பின்னாளில் வடலூரில் சமரச வேத பாடசாலையையும், சன்மார்க்க போதினி பாடசாலையையும் பெருமான் ஏற்படுத்தியதும் சிறுவர்களைச் சன்மார்க்கத்திற் பயிற்றுவித்தற்கே. கல்வியின் அருமையையும் இன்றியமையாமையையும் அடிகள் நண்குணர்ந்தவர்கள். அடிகள் ஆற்றியருளிய அரும்பணிகள் பலவற்றுள் கல்விப்பணியும் ஒன்றாம்.

**ஒழிவிலொடுக்கம் பதிப்பித்தது - 1851**

அடிகள் பதிப்பித்த நூல்கள் மூன்று. 1. ஒழிவிலொடுக்கம். 2. தொண்டமண்டல சதகம், 3. சின்மய தீபிகை. இவை முறையே 1851, 1855, 1857 ஆம் ஆண்டுகளிற் பதிப்பிக்கப்பெற்றன.

# ஒழிவிலொடுக்க ஆசிரியர் கண்ணுடைய வள்ளலார் வரலாறு

ஒழிவிலொடுக்கத்தை அருளிய ஆசிரியர் காழிக் கண்ணுடைய வள்ளலார். அதற்கு உரை செய்தவர் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள். அதனை முதன் முதலிற் பதிப்பித்தவர் நமது அடிகள். அடிகளின் பதிப்பிற்குப் பின் மூன்று பதிப்புகள் வெளியாயின. 1906 ல் திரு. எஸ். அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் எம்.ஏ.எல்.டி. ஒரு பதிப்பை வெளியிட்டார்கள். அதன் முன்னுரையில் அவர் கண்ணுடைய வள்ளலாரைப் பற்றிய வரலாறுகளைக் கூறியிருக்கிறார். பின்னர் 21-9-1934 முதல் மூன்று நாள் சென்னை, மயிலாப்பூரில் ஞானியார் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற சைவ சித்தாந்த சமரச விசேட மாநாட்டில் 22-9-1934 ஆம் நாளன்று ஒழிவிலொடுக்கத்தைப் பற்றி ஒரு சொற்பொழிவாற்றினார். அச்சொற்பொழிவு ஒரு கட்டுரையாக ஒழிவிலொடுக்கம் என்னும் தலைப்புடன் சித்தாந்தம் 1934 அக்டோபர் இதழில் (மலர் 7- இதழ் 10) வெளி வந்துள்ளது. கண்ணுடைய வள்ளலார் வரலாற்றை இன்றுள்ள பலர் அறியார். அவரது வரலாறு பல வகையான ஐயங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் இடனாக உள்ளது. ஒழிவிலொடுக்கம் ஐக்கிய வாத சைவ நூல் என்றும் கண்ணுடைய வள்ளலார் ஐக்கிய வாத சைவர் என்றும் பலர் கூறி வந்தனர், வருகின்றனர். சித்தாந்த சைவ நூல் என்றும் சிலர் கூறுவர். ஐக்கிய வாத சைவ நூல் அன்று என்பதும் சித்தாந்த சைவ நூலே என்பதும் அனவரத விநாயகம் பிள்ளை, அவர்கள் கருத்து. மெய்கண்ட சந்தானத்தில் வந்த சித்தாந்த சைவராகிய சம்பந்த சரணாலயரே கொள்கை மாறி ஐக்கிய வாத சைவராகிக் கண்ணுடைய வள்ளலார் என்ற புதிய பெயர் பூண்டு வள்ளலார் மரபு என்னும் ஒரு புதிய மரபையும் ஆசாரிய பீடத்தையும் நிறுவித் தாமே அதன் முதல் ஆசாரியராயினார் என்பது ஆராய்ச்சி அறிஞர் திருச்சிற்றம்பலம்-மு.அருணாசலம், எம்.ஏ. அவர்களது கொள்கை. இவர் இதனைத் தமது தமிழ் இலக்கிய வரலாறு- பதினான்காம் நூற்றாண்டு-பதினைந்தாம் நூற்றாண்டு (1969) ஆகிய இரு நூல்களிலும் விரிவாக எழுதியுள்ளார். இவ்விரு அறிஞர்களது எழுத்துகளால் மிக அரிய செய்திகள் தெரியவருகின்றன. இவற்றைத் தெரிந்து கொள்வதற்கான மூலங்கள் மிக அருமையாகவே கிடைக்கின்றன. சித்தாந்தத்தில் வெளி வந்த அனவரத விநாயகர் கட்டுரையை அவ்வாறே எமது திங்களிதழாகிய சன்மார்க்க விவேக விருத்தியில் (1969 ஆகஸ்ட், மலர் 1-இதழ் 8) வெளியிட்டோம். ஒழிவிலொடுக்கம் வள்ளற்பெருமானின் மதிப்பிற்குரிய நூல். அதனை அவர்கள் பதிப்பித்திருக்கின்றார்களாதலின் அதன் ஆசிரியரைப்பற்றிய செய்திகளனைத்தையும்



RangaRakes tamilnavarasam.com

தெளிவாயறிந்து கொள்வது நமது கடமையாகும். ஆதலின் அனவரத விநாயகர் கட்டுரையின் ஒரு பகுதியையும், அருணாசலனாரது கருத்துகளையும் இவண் தருகின்றோம்.

(அனவரத விநாயகர் கட்டுரையின் ஒரு பகுதி)

தமிழ்நாட்டில் உண்மையாராய்ச்சி புரிபவர் வேதாந்திகளென்றும் சித்தாந்திகளென்றும் இருவகைப்படுவர். வேதாந்தமாகிய உபநிடதங்களிற் காணும் கொள்கைகளைத் தமவாக்கொள்பவர் வேதாந்திகள். வேதாந்தங் கூறுவது அத்வைதமென்று கொண்டு கேவலாத்வைதம், விசிஷ்டாத்வைதம், சுத்தாத்வைதமெனு மூன்றுக்கும் அதனை யாதாரமாகக் கொள்வர். துவைதத்துக்கும் வேதாந்தம் இடங்கொடுக்குமென்பாரும் உண்டு. இஃதிவ்வாறாயினும் தமிழ்நாட்டில் வேதாந்தமென்னின் சங்கராத்வைதமே குறிக்கப்படும்; கைவல்லிய நவநீதம், ஞான வாசிட்டம் முதலிய நூல்கள் அதனை விரித்துரைப்பன.

சித்தாந்திகள், வேதங்களோடு சிவாகமங்களையும் தமக்கு ஆதாரமாகக் கொள்வர். சித்தாந்தம் ஆகமாந்தமெனவும் படும். சிவாகமங்கள் சைவ மென்றும் சொல்லப்படுதலால் சித்தாந்தத்தைச் சைவ சித்தாந்தமென்பதே பொருத்தமான பெயராகும். சைவ சித்தாந்தத்தை யுரைக்கும் நூல்கள் சிவஞான போதம் முதலிய பதினான்கெனச் சொல்வர். சிவஞானபோதம் மெய்கண்டதேவராற் செய்யப்பட்டதாகலின் அவற்றை மெய்கண்ட சாத்திரங்களென்றும் சொல்வர். அவற்றுள், சிவஞானபோதம் முதனூல், சிவஞான சித்தியார் வழிநூல், சிவப்பிரகாசம் சார்பு நூல், மற்றையவை இவற்றிற் கூறப்படும் உண்மைகளுள் ஒரோவொன்றை யெடுத்துத் தெளிவுபடுத்துவன. சிவஞான சித்தியார் பரபக்கமும், சங்கற்ப நிராகரணமும் புறச்சமய அகச் சமயங்களைக் கண்டிப்பன. திருவுந்தியாரும் அதன் வழித்தாகிய திருக்களிற்றுப் படியாரும் அனுபூதியைப் பெரிதும் பாராட்டியுரைக்கும் அரிய சாத்திரங்களாம். அவை சிவஞானபோதத்திற்கு முன் தோன்றியவை யெனக் கொண்டு அவற்றை ஆதியில் வைப்பர்.

**உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்**
**பிந்திருபா வுண்மை பிரகாசம் - வந்தவருட்**
**பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு**
**உண்மைநெறி சங்கற்ப முற்று.**

என்பது மெய்கண்ட நூல்களின் பெயர்களைக் குறிக்கும் வெண்பா. மெய்கண்ட சாத்திரங்களை மூல பாடமாகவும், உரை பாடமாகவும் வெளியிட்டவர்கள், இம்முறையையே கொண்டனர். உமாபதி சிவம் இயற்றிய நூல்கள் சிவப்பிரகாசாதி எட்டு என்னும் கொள்கையே பரவியுள்ளது. 'சிவப்பிரகாசாதியஷ்டக' மென்றோர் பதிப்பில் இவற்றை மாத்திரம் கொண்டு வெளிவந்த துண்டு, ஆயினும், உண்மை நெறி விளக்கம் அவர் செய்த தன்று, சீகாழிச் சிற்றம்பல நாடிகள் சீடர் சீகாழித் தத்துவனார் செய்தது. அதனை யொழித்துச் சீகாழிச் சிற்றம்பல நாடிகள் இயற்றிய துகளறு போதத்தைச் சேர்த்துச் சாத்திரங்களைப் பதினான்கெனத் தொகைப்படுத்தற்கு ஆதாரங்கள் உண்டு. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், துகளறுபோதம் மூன்றையும் பதினான்கில் இறுதி மூன்றாக வைத்துச் சாத்திரங்களைக் கிரமஞ்செய்த சுவடிகள் காணக் கிடைக்கின்றன.


RangaRakes tamilnavarasam.com

சிவஞான போதத்திற்கு முன் சிவாகமச் சார்பாகத் தமிழிற் செய்யப்பட்ட நூல்கள் ஞானாமிர்தம் போன்றவை சில உள. ஞானாமிர்தத்தில் ஞானபாதமே அச்சிடப்பட்டுளது. சரியாபாதம் கிரியாபாதம் யோகபாதம் மூன்றும் அகப்பட்டில. கிரியாபாதத்துள்ள செய்யுளொன்று சிவஞான பாடியத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது.

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் போன்ற நூல்கள் கற்போரது மனத்தை உண்மைப் பொருளில் மாத்திரமே செலுத்தும். திருவுந்தியார்க்கு விளக்கவுரை போன்றது திருக்களிற்றுப் படியார். துகளறு போதம் சிவோபாசனையால் அடையப்பெறும் அநுபூதித் திறங்களை வகுத்துரைப்பது. இவற்றோடு துணை போவதாயும் இவற்றிலுள்ள பொருள்களை உவமைகளால் தெளிவுபடுத்தி விரித்துரைப்பதாயுமுள்ள நூல் ஒழிவிலொடுக்கம்.

பல விஷயங்களைக் கலந்து கூறும் மற்றச் சாத்திரங்கள் போலன்றிச் சுகாதீத நிலையை விரைவிலடைவிக்கும் தற்போதவொழியைப் பற்றியே யுரைக்கும் இந்நூல் பெருவழக்காயில்லாமை வருந்தத் தக்கது. சைவ சித்தாந்திகளெனத் தம்மைச் சொல்லிக் கொண்டு திருப்தி யடைவோரிற் சிலர் இது ஐக்கிய வாத முரைக்கும் நூல் என்றுரைத்து இதனை ஒதுக்குவதை நான் அறிவேன். ஐக்கியவாதத்திற்குரைக்கப்படும் இலக்கணங்கள் இந்நூலகத்தில்லாமையை ஆராய்ச்சியாளர் அறிவர். தற்போதமழிவதால் தம் உலக வாழ்விற்குக் கேடு வருமென்றஞ்சி இந்நூலை யோதியுணர்தலை யொழிந்தனர் என்னின், அது பொருந்துவதாகும். ஒழிவிலொடுக்கத்தைச் சிரத்தையோடு ஓதியுணர்பவர் உலக வாழ்வில் அசிரத்தை கொள்ளுதல் திண்ணம். அசிரத்தை வெறுப்பினால் வருவதன்று; தற்போத மொழிந்து, சிவானந்தப் பேற்றையடையும் நெறியில் நிற்பவர்க்கு, அவ்வசிரத்தை தானே யுண்டாகும். சாந்தலிங்க தேவர், வைராக்கிய சதகத்தை அரங்கேற்றிய காலத்து அதனைக் கேட்ட பிரபுக்கள் பலர் அப்பொழுதே துறவடைந்தனரென்னும் வரலாறு உண்டன்றோ.

இனி, இவ்வரிய சாத்திரம் இயற்றிய ஆசிரியர் யாவர், அவர் திகழ்ந்த காலம் எது முதலிய கேள்விகள் பல எழுதல் இயல்பே. இந்நூலைக் கி.பி.1851-ல் முதலாக அச்சிடுவித்துத் தமிழுலகிற் பரவச் செய்தவர் திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள். அவர் இதற்குச் சிறப்புப் பாயிரமாகிய 'வள்ளல் குருராயன்' என்னும் வெண்பாவிற்கு ஓர் விரிந்த விருத்தியுரை யியற்றி நூலோடு சேர்த்ததன்றியும் அரும்பதங்களையும் அருந்தொடர்களையும் ஆங்காங்கே விளக்கினர். பின் இந்நூல் இரண்டு மூன்று முறை பதிப்பிக்கப்பட்டது. கி.பி. 1906-ல் இடையில் விட்டுப்போன சிறப்புப்பாயிர விருத்தியைச் சேர்த்ததோடு உரையில் பந்திகளைப் பிரித்து, வேண்டாத சந்திகளைவிடுத்து, ஒரு பதிப்பு என்னால் வெளியிடப்பட்டது. அதன் பின் தோன்றிய பிறர் பதிப்புக்கள் என்னுடைய முகவுரையை மாத்திர மொழித்து, மற்றையவற்றை அதிலுள்ளபடியே வெளியிட்டன. இராசாங்கத்தார் கையெழுத்து நூல்நிலையத்தில் இரண்டு ஏட்டுச் சுவடிகள் உள்ளன. அவற்றிற்கும் அச்சுப் பிரதிகட்கும் சிலபேதமுண்டு. அவற்றின் துணைகொண்டும், பிறவிடங்களில் அகப்படும் சுவடிகளின் துணைகொண்டும் அந்நூல் நன்றாக ஆராய்ச்சிசெய்து நவீன முறையிற் பதிப்பித்தற் குரியது.

திருவருட்பிரகாச வள்ளலார்க்கு முன், இந்நூலைத் தமிழுலகிற் பரவச்செய்தவர் பேரைச் சாந்தலிங்க தேவர் என்னும் வீரசைவப் பெரியார். குமாரதேவர், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளைத் தம் குரவராகிய சாந்தலிங்க



RangaRakes tamilnavarasam.com

தேவரிடத்துக் கொண்டுசென்று, அவரை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிய பொழுது, சுவாமிகளது தமிழ்புலமையை அறிந்த சாந்தலிங்க தேவர் ஒழிவிலொடுக்கத்தையும், தாம் இயற்றிய கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என்னும் நூல்களையும் அவர் கையிற்கொடுத்து அவற்றிற்கு உரையெழுதுமாறு ஆஞ்ஞாபித்தார். ஞானசாத்திரங்களுக்கு உரையெழுவதில் சிதம்பர சுவாமிகள் சிறந்தவர் என்பதனை அவர் உரைகலை மேனோக்காக வோதியவர்களும் உணர்வர். அவர் உரையின்றி ஒழிவிலொடுக்கத்தின் பொருள் தெளிவாக விளங்காதென்பது மூலத்தை மட்டுமோதி நோக்கியோரால் எளிதினறிந்து கொள்ளப்படும். அந்நூலிலுள்ள உவமை நயங்களையும் சாஸ்திர நுட்பங்களையும் சிதம்பர சுவாமிகள் நன்கு விளக்கியுள்ளார்.

இனி, இந்நூலைத் தமிழுலகிற்குபகரித்த பெரியார் சீகாழிக் கண்ணுடைய வள்ளலார். அவர் திருஞானசம்பந்தப் பெருமான் திருவவதாரஞ் செய்த பதியிலே அவதரித்து, ஞானக் கண்ணுடைமையாலும் அருட்கண்ணுடைமையாலும் கண்ணுடையார் என்னும் பெயர்க்கும், ஞானத்தின் மிக்க கொடையில்லையாகலின் அதனை வரைவின்றி வழங்கியதனால் வள்ளல் என்னும் பெயர்க்கும் உரியரானார். அவர் வரலாற்றைச் சீகாழி வித்துவச்சிகாமணி ப.அ.முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள் செந்தமிழ்ச் செல்வியில் விரிவாக எழுதியுள்ளார்கள். 'அதிகைக்கதிபர்கள் மரபினருள் சண்பையர் தலைவர் என்பாரும் மங்கயர்க்கரசியென்பாரும் செய்த தவப்பயனால் கண்ணுடைய வள்ளலார் இரௌத்திரி வரு பங்குனி மீ திருவாதிரைத் திருநாளில் (1380-1) திருவவதாரஞ்செய்து 96 திருநட்சத்திரத்திலும் பூவுலகத்தை வைதிக சமயத்தால் அலங்கரித்து நள வருஷம் (1476) சித்திரை மீ சித்திரைத் திருநாளில் சோதியிற் பரிபூரணமடைந்தார்.

கண்ணுடைய வள்ளலார் அருளிச் செய்த நூல்களுளொன்றாய மாயா ப்ரலாபத்திற்குச் சிறப்புப்பாயிர முரைத்தவர்

**கெடிலப் புனல் சூழதிகைக் கதிபன்**
**ஆழிமேன் மிதந்த காழிமு தூரன்**
**திசைமிகு கீர்த்திக் குகமடத் தலைவன்**
**கருநெறி கழிக்குந் திருநெறித் தேசிகன்**
**அத்தனைக் காட்டி யமுது வாழ்வித்த**
**வித்தகன் றனக்கு வேளைக் காரன்**
**சிற்குணன் றன்னைச் சேர்ந்தவர்க் கருளும்**
**நற்கண் ணுடைத்திரு ஞானசம் பந்தன்**
**திருமலி யின்பச் சிவனடித் தொண்டர்தம்**
**பெருமைய ரடிபுனை பெற்றியோனே**

என உரைத்ததனால் வள்ளலார் சீகாழியினாராகிய அதிகைக் கதிபராதலோடு குகமடத் தலைவரென்பதும், திருஞானசம்பந்தப் பெருமானுக்கு அகம்படித் தொண்டரென்பதும், கண்ணுடைத் திருஞான சம்பந்தனென ஆண்டான் பெயரையும் சேர்த்து அவர் பெயரை வழங்குதலுண்டென்பதும் அறியக் கிடக்கும். குகமடம் அதிகையதிபர்களால் வைதிக சைவத்தை நிலை நாட்டற் பொருட்டு ஏற்படுத்தப்பட்டதென்றும், ஆது ஆதியில் குணதர வீச்சரத்திற்குக் கீழ்பாலிருந்ததென்றும், 1380-ல் அதிகைக் கதிபர்கள் அதனைச் சீகாழியில் ஆனந்த


RangaRakes tamilnavarasam.com

தீர்த்தத்தின் கீழ்பால் ஸ்தாபித்துக் கிரீடாசாரியர்களாலே சகல விமரிசைகளுடன் சத் காலஷேபஞ் செய்து வந்தனரென்றும், வள்ளலார் இம்மண்டலத்தில் தமது காலத்தே 96 சைவ மடங்களைத் தாபித்துத் தாம் அவைகட்குத் தலைவராகவும், ஏனை மடாதிபதிகள் இதர தத்துவ பதிகளாகவும் விளங்கச் செய்தார் என்றும் பிள்ளையவர்கள் உரைத்தனர். சோழமண்டல சகதத்திற் காணும்

> **பள்ள மலியார் கலியுலகிற் பரம னுருவாய்ப் பணிந்தோருக்**
> **குள்ள படியீ தெனவுணர்த்தி யுலவா முத்தி யுறக்காட்டிக்**
> **கள்ள மதவல் லிருள்கடிந்து காணுங் காழிக் கண்ணுடைய**
> **வள்ளல் கருணை செயுஞ்சூழல் வளஞ்சேர் சோழ மண்டலமே.**

என்னுஞ் செய்யுள் வள்ளலார், கண்ணுடையார் எனப்பட்டதற்குத் காரணத்தையுரைத்து, அவரவதாரத்தால் சோழநாடு உய்ந்ததைக் குறித்தது.

கி.பி. 1906-ல் வெளிவந்த என்னுடைய ஒழிவிலொடுக்கப் பதிப்பு முகவுரையில் கண்ணுடைய வள்ளலாரைப் பற்றி வழங்கும் ஐதிகங்கள் மூன்று உண்டு என உரைத்தேன். 1929-ல் வெளிவந்த 'அருட்பிரகாசம்' என்னும் தமிழ் மாசிக பத்திரிகையின் இரண்டிதழ்களிற் காணப்படும் 'கண்ணுடைய வள்ளலார் வரலா' ற்றிலும் இம் மூன்றுமே காட்டப்பட்டுள்ளன. அவற்றையின்றி வேறு ஐதிகம் எங்கும் உரைக்கப்படவில்லையாகலின், அவற்றை யிங்கு யான் முன்னுரைத்தவாறே யுரைப்பேன்.

ஓர் ஐதிகம், இவரைச் சைவ சித்தாந்த ஸ்தாபனாசாரியராகிய மெய்கண்ட தேவர்க்குத் தநயராக்கும். அப்பெரியார்க்குப் பிள்ளையா யவதரித்த வள்ளலார் மேலான ஞான நெறியிலேயே மனம் பற்றினவராய்ச் சரியை கிரியை யோக மென்னும் மூன்று பாதங்களையும் பழித்து, நூலெங்கும் தற்போத வொடுக்கம் வேண்டற்பாலதென முழக்கி, அதனைத் தவிர வேறொன்றுங் கூறாததற்கு அறிகுறியாக (தற்போத) ஒழிவிலொடுக்கமெனத் தமது நூற்குப் பெயருமிட்டருளி, அதனைத் தந்தந்தையாரிடத்துக் கொண்டுபோய் அவர் பூசை வேளையிற் காட்டினராம் மெய்கண்ட தேவரோ பக்குவ வேறுபாடுகளுக்கேற்ப வழங்கி வரும் வழிபாட்டு வேறுபாடுகளையும் ஆதரித்து வந்தனராதலின் அந்நூலைக் கண்டு மனமுளைந்து பூசையிலிருந்தவாறே சிறு கோபவெளிப்பாட்டினால் தமது திருமேனியிலிட்டிருந்த விபூதி திரிபுண்டரக் குறிகளை யழித்துச் சைவ சமயத்துக்கும் அச்சமயத்தின் சின்னங்களாகிய விபூதி ருத்திராட்சங்களுக்கும் கேடு வந்ததே என்று இரங்கினராம். வள்ளலாரா தீனத்து வந்தார் கைகளிற் குறிகளையிட்டு அழிக்கும் வழக்கத்தைச் சுட்டிக்காட்டி இக்கதை மெய்ம்மையே யென்று நிறுத்த முயலுவாருமுண்டு. விபூதியை யழித்தவர் மெய்கண்ட தேவராயிருந்ததனால், வள்ளலாதீனத்தார் செய்கைக்கு அது காரணமாதல் எப்படி? மெய்கண்ட தேவர் வள்ளலா தீனத்துக்கு மூல புருஷரா? கண்ணுடைய வள்ளலார் காலம் பதினைந்தாம் நூற்றாண்டென்று ஏற்படுதலின் பதின்மூன்றான் நூற்றாண்டின் முற்பகுதியில் திகழ்ந்த மெய்கண்ட தேவர்க்கும் அவர்க்கும் சம்பந்தங் கற்பித்தல் பொருந்தாது.

இனி, இவ்வாசிரியரைப்பற்றிச் சீகாழியில் வழங்கும் ஐதிகம் ஒன்று. அப்பதியில் ஒரு செல்வர் வீட்டில் செல்வப் பிள்ளையவதரித்து அக்காரணத்தினால் சகல கலைஞானங்களிலும் அபார விற்பத்தியடையும் அவகாசமுதலியன பெற்றிருந்த

நமது வள்ளலார் தினந் தவறாது திருக்கோயிலுக்குப் போவது வழக்கம். அப் பதியிலேயே அவதரித்துச் சிவபெருமானது செல்வக் குமாரரென விளங்கிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரது அருட் சரிதங்களைக் கேட்டல் மரத்திரையே யன்றி அவற்றுட் பெரும்பான்மையும் நிகழ்ந்த தலத்தில் தாமும் தங்கும் பெரும்பேறு பெற்றமையால், வள்ளலார் பிள்ளையாரிடத்துப் பேரன்பு பூண்டு அவரையே தமக்கு ஆசாரியராகக் கொண்டு உபாசித்து வந்தார். உபாசனையின் பலனாக ஞானம் தம் மனத்துள் உதித்த காலந்தொட்டு வள்ளலார் பிரதி தினமும் கோயிலுக்குப் போய்த் திரும்பித் துயின்றெழுந்து ஒரு வெண்பாச் செய்து வந்தார். கோயிலில் நெடுநேரம் போக்கி மீளுதல் இவர்க்கு இயல்பாகலின் இவர்க்கு வழிகாட்டியாகக் கந்தன் என்னும் வேலைக்காரன் தீவர்த்தியோடு உடன் செல்வது வழக்கமாயிருந்தது. இருநூற்றம்பத்துமூன்றாம் வெண்பாவிற்குரிய தினத்தில் நெடுநேரமாயும் வள்ளலார் வீட்டிற்குத் திரும்பினாரல்லர். மத்தியில் மின்னலும் இடியும் மழையும் மிகுந்து தெருக்களிளெல்லாம் வெள்ளம் ஓடத்தலைப்பட்டது. கந்தன் வீட்டிலேயே தங்கி விட்டான். வள்ளலார் தரிசனம் முடிந்து கோயில் வாயிலை அணுகிக் 'கந்தா' என்னலும் ஸ்ரீ சுப்பிரமணியமூர்த்தியே கந்தனாய் உருக்கொண்டு அவ்விடத்துத் தீவர்த்தியுங் கையுமாய்ப் புகுந்து வழி விட்டார். வீடு போய்ச்சேர்ந்ததும் பழைய கந்தன் மன்னிப்புக் கேட்பதற்காக ஒடுங்கி முன்வந்து நின்றான். கூட வந்த கந்தனைத் திரும்பிப் பார்த்தவர் அவனைக் காணாராய்த் திகைத்தார். பின்னர் இஃது எமது ஞானசம்பந்தன் அருள் விளையாட்டேயாகுமெனத் துணிந்து அன்றிரவு வெண்பாப்பாடி நூலைமுடித்து அதனைத் தம் அருகிருந்த பக்குவர்களிடத்து மனமுவந்து கொடுத்தனர். காலையில் எழுந்ததும் தம் பெருந்திரவிய மத்தனையையும் அரைக் கணத்தில் வாரியிறைத்துத் துறவு மேற்கொண்டார்.

இஃதன்றி வேறொரு ஐதிகமும் வழங்கும். சீகாழி நகரில் ஏழைக் குடும்பமொன்றிற் பிறந்து பள்ளிக்கூடத்திலொதுங்கும் பாக்கியந்தானும் இன்றிக் கூலித்தொழில் செய்து வந்தவர் கண்ணுடைய வள்ளல்; பகல் முழுதும் கூடையை யெடுத்துக் கூலி வேலை செய்து அற்பப் பொருளீட்டித் தம் காலந்தள்ளி வந்தவர். ஒரு நாள் தற்செயலாய் ஒரு பணக்காரன் இவரைக் கூலியாளாக வருமாறு கூப்பிட்டான். இவரும் இசைந்து உடன் சென்று அவன் வாங்கிய பொருள்களை யெல்லாம் தம் கூடையில் நிரப்பிவைத்துக் கூடையைத் தூக்கிக்கொண்டு அவன் பின்னே சென்றார். அவனும் வழியிலிருந்த ஆலயத்துள் தரிசன நிமித்தம் பிரவேசித்தான். இவரும் உடன் செல்லுதல் அவசியந்தானே. ஒவ்வொரு சந்நிதியிலும் ஒரு முறை கர்ப்பூராத்திரிகம் பணிமாறப் பண்ணினவன், திருஞானசம்பந்தர் சந்நிதியில் எஞ்சிய கர்ப்பூரத்தை இரண்டாம் முறை ஏற்றி வைத்தான். உடனே கூலிக்கார வள்ளல், இம்மூர்த்தியே பெரிய சாமி யென்று நிச்சயித்தார். பின் அப்பணக்காரனோடு அவன் வீடு சேரும் வரை உடன்சென்று அவன் சரக்குகளை யொப்பித்துவிட்டு அவன் கொடுத்த கூலியாகிய இரண்டு பணத்தையும் கூடைக்குளேற்று வாசற்படி தாண்டியதும் கூடையை இரண்டு பணத்தோடு வீதியிற் சுழற்றியெறிந்தார். இவரைப் பார்த்திருந்த ஜனங்கள் இவன் பிழைக்க வகையறியான், பித்தேறினான் என்றனர். விரத்தி மிக்க வள்ளல் நேரே கோயிலுட் புகுந்துபெரியசாமி சந்நிதியில் நின்றார். நின்றவர் மூன்றுநாள் வரை அவ்விடம் எங்காயினும் ஒளித்திருந்து கோவிலார் புறம்போந்ததும் தங்கடவுளிடம் வந்துசேருவர். மூன்றாம் நாளிரவில் கடவுள் வள்ளலார் கனவிற்போந்து, 'உன்னுடைய பக்தியாற் பிரசன்னமாயினோம். வேண்டியதைக் கேட்டு அடைக' என்றனர். இவர், 'யான் ஒன்றும் அறியேன், எல்லாம் உன் பரம்' என்றனர். அதன் பின் ஞானசம்பந்தரே இவருக்குச் சகல ஞானத்தையும் உபதேசித்து

இச்சாத்திரத்தை எழுதுமாறு செய்தனர். ஞான சம்பந்தரே இவருக்கு உபதேசகுரு என்பது பல பாட்டுக்களினும் ஆசிரியர் கூறுமாற்றான் அறியப்படும். உதாரணமாக,

**கின்னரியைத் தொட்டவர்போற் கேட்டவள வுக்களவு**
**சொன்னதல வெங்கள் சுவாமியுரை-மன்னடத்தி**
**லானந்த மூர்ச்சிதர் கையாடகயாழ் தன்னிலே**
**தானுநலம் போலமொழிந் தான்**

என்னும் வெண்பாவை நோக்குக. வெண்பாக்கள் அமைந்திருக்கும் தன்மையும், பல வழக்குச் சொற்கள் விரவியிருத்தலும் ஆசிரியர் இலக்கண இலக்கியப் பயிற்சி வரன் முறையாக அடைந்தவரல்லர் போலுமென ஊகித்தற் கிடந்தரும். மற்று, வள்ளலார் அதிகைக்கதிபர் எனப்படுதலால் செல்வ மல்கிய குலமொன்றில் உதித்தவராதல் வேண்டும். அவர் ஏழையாகக் கூலிவேலை செய்து பிழைத்தார் என்பது எவ்வாற்றானும் பொருந்தாது.

இனி, ஒழிவிலொடுக்கம் ஓதியுணர்ந்து அடங்குதற்குக் கருவியாயுள்ள நூல்.

**சும்மா திருக்கவைத்த சூத்திரமாஞ் சாத்திரத்தை**
**விம்மா கதறுவதும் வேலைகளுந்-தம்மறிவா**
**னீட்டிப் பிடித்திருக்கு நிட்டைகளு ஞானிகண்முன்**
**காட்டும் பரியாச கம்**

இந்நூல் பொதுவிலுபதேசம், சத்தினிபாதத்துத்தமரொழிவு, யோகக் கழற்றி, கிரியைக் கழற்றி, சரியைக் கழற்றி, விரத்தி விளக்கம், துறாவு, அருளவத்தைத் தன்மை, வாதனைமாண்டார் தன்மை, நிலையியல்பு என்னும் பத்து அதிகாரங்கள் கொண்டது. பொது விலுபதேசம், ஆசாரியர் அனாசாரியர், இலக்கண முதலியவற்றையும், நூலட்கூறிய கருத்தெல்லாவற்றையும் தொகுத்துப் பொதுவான உபதேசமாகக் கூறிற்று.

**சத்தாதி தத்துவம்போய்த் தானுமெதி ருங்கழன்றாற்**
**சித்தாந்த வேதாந்தச் சீர்மையிலே-முத்தி**
**யநிர்வசன மின்ப மதீதமெனி லாங்கே**
**பினமிடுதல் கன்மம் பிளாய்.**

என்ற வெண்பாவில் ஆசிரியர் சித்தாந்தம் வேதாந்தமென்று பேதம் பாராட்டுவதெல்லாம் கீழ்ப்பட்ட நிலையிற்றான் என்று விளக்கினார். சத்திநி பாதத்துத்தமரொழிவு, நால்வகைச் சத்திநி பாதத்து உத்தமர்களது பிரபஞ்சப் பற்றொழிவை முறையே கூறிற்று. யோகக் கழற்றி, கிரியைக் கழற்றி, சரியைக் கழற்றி முதலிய மூன்றும், ஞானத்திற்குப் பக்குவராய் வந்தவர்கட்குத் தற்போதத்தை யொழித்து, ஞானம் வருவித்தற் பொருட்டு அத்தற்போதத்தாற் செய்யும் சரியாதிகலைப் போதனைகளால் நீக்குமாற்றைக் கூறின. விரத்தி விளக்கம், உட்டுறவின் இலக்கணம் அறிவித்தது. துறவு, புறத்துறவின் இலக்கணத்தை யுரைத்தது. அருளவத்தைத் தன்மை, ஆறாறு தத்துவத்தைக் கடந்து ஆணவ இருளையும் கடந்து ஆன்ம தரிசனம் முதலிய சுத்தாவத்தையில் நிற்போரது தன்மை கூறிற்று. வாதனை மாண்டார் தன்மை, குடும்பத்தோடு கூடியிருந்தும் ஞானம்



RangaRakes tamilnavarasam.com

பெற்று அக்குடும்ப வாதனை மாண்டு நின்றார் தன்மையுரைத்தது. நிலையியல்பு, உண்மை நிலை தவறினும் மீட்டும் அதனைச் சென்றடைதற் குபாயம் கூறியது.

ஒழிவிலொடுக்கத்திலுள்ள உண்மைகளையும் நயங்களையும் இவ்வாறு அதிகார விளக்கங் கூறுதலானும், ஆங்காங்கே சில வெண்பாக்களை யெடுத்துக் காட்டுதலானும் சொல்லி முடித்து விட்டதாக நினைக்கலாகாது. வெண்பாத்தோறும் உண்மை யுண்டு, பதந்தோறும் நயமுண்டு. அவற்றை முறையாக உரையின் துணைகொண்டே படித்தறியத் தகும்.

## வள்ளலார் ஆதீன வரலாறும் கண்ணுடைய வள்ளலார் வரலாறும்
## (திரு.மு.அருணாசலம், எம்.ஏ., அவர்கள் கருத்து)

கண்ணுடைய வள்ளலாரின் காலம் 1375-1425.{17} மெய்கண்ட சந்தானத்தில் வந்த பழுதைகட்டிச் சம்பந்த முனிவரின் (1350-75) மாணவராகிய இவர், முதலில் (1375-1400) சம்பந்த சரணாலயர் என்ற பெயருடன் விளங்கினார். அப்போது தத்துவ விளக்கம் என்ற நூலைச் செய்தார். பின்னர் கொள்கை மாறி ஐக்கியவாத சைவராகிக் கண்ணுடைய வள்ளல் எனப்பெயர் வைத்துக் கொண்டார். இப்பெயரில் விளங்கிய போது ஒழிவிலொடுக்கத்தைச் செய்தார். ஒழிவிலொடுக்கம்

{17. இங்கு குறிக்கும் காலம் வாழ்நாட் காலமன்று. ஆசாரியராகச் சிறந்து விளங்கிய காலமாம்.}

ஐக்கியவாத சைவநூல். ஐக்கியவாத சைவத்தை மேற்கொண்டபின், இவர் திருஞானசம்பந்தப் பெருமானையே குருவாகக் கொண்டார். வள்ளல் பரம்பரை என்ற ஒரு புதிய பரம்பரையை ஏற்படுத்தினார். அதற்கு இவரே முதல் ஆசாரியரானார். காழிக்கண்ணுடைய வள்ளலாராய் இவர் வள்ளலார் சந்தான ஆசாரிய பீடத்தில் எழுந்தருளி விளங்கிய காலம் 1400-1425. இச்சந்தானத்தார் துறவிகளாய் இராமல் இல்லறத் தாராயிருந்தனர். இவர்களை வெள்ளை வேட்டிக்காரரர் என வழங்குவர். வள்ளல் பரம்பரையில் நால்வர் வரலாறுகளே திட்டமாய்த் தெரிவன. இந்நால்வரும் 15-ஆம் நூற்றாண்டில் இருந்தவர்கள். இவர்கள் முறையே கண்ணுடைய வள்ளல், சுயம்பிரகாச வள்ளல், சிவஞான வள்ளல், சட்டைநாத வள்ளல் என்போர். இந்நால்வரும் ஒருவர்பின் ஒருவர் முறையே மாணாக்கராய் வந்தவர்களா அல்லது இல்லற தருமத்தினாலேயே, இன்றும் உள்ள சில வீர சைவ மடங்கள்போலப்புதல்வர் மரபாய் வந்தவர்களா என்பது விளங்கவில்லை. சுயம்பிரகாச வள்ளல் நூல் செய்யவில்லை. சிவஞான வள்ளல் செய்த இருபது சிறு சாத்திர நூல்கள் கொண்ட தொகுப்பு வள்ளலார் சாத்திரம் என்ற பெயரோடு வழங்குகிறது. இது வேதாந்த நூல் என்பதே பொதுவான கருத்து. கண்ணுடைய வள்ளல் ஐக்கியவாத சைவத்தைத் தழுவிய போதிலும்கூட அவர்பின் வந்துள்ளோரிடம் சைவ சித்தாந்தமே ஓங்கியிருப்பதற்குச் சிவஞான வள்ளல் சான்றாவார். சட்டைநாத வள்ளல் செய்தநூல் சதாசிவ ரூபம் என்பது. இது சைவ மக்கள் பயில்கின்ற ஒரு பிரமாண நூல். கண்ணுடைய வள்ளல் ஐக்கியவாத சைவர், சுயம்பிரகாச வள்ளலாரும், சிவஞான வள்ளலும் வேதாந்திகள். சட்டைநாதர் சைவ சித்தாந்தி. எனினும் வள்ளல் பரம்பரை, ஐக்கியவாத சைவம் என்று சைவ சித்தாந்திகளால் ஒதுக்கப்பட்டது. பதினான்காம் நூற்றாண்டில் தோன்றிய வள்ளல் ஆதீனம் இருபதாம் நூற்றாண்டில் இப்பரம்பரையில் வந்தவர், கல்வியறிவில்லாமல் சீரழிந்து போனார். இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இந்த ஆதீனம்



RangaRakes tamilnavarasam.com

மிகவும் இழிந்த நிலையிலிருந்து வந்து இன்று அடியோடு மறைந்துவிட்டது. இம்மடத்தின் தலைவனாய் இருந்த ஓர் இளம்பிள்ளை மடத்துக்குச் சொந்தமாயிருந்த நிலம், வீடு, மடம், பூசைத் திரவியங்கள், பூசைக்கான சிறப்புமிக்க நடராசமூர்த்தி முதலான மூர்த்தி வடிவங்கள், ஏட்டு வடிவிலுள்ள நூல்கள் முதலிய அனைத்தையும் விற்றுப் பொருளைத் துர்வினியோகம் செய்துவிட்டான் என்பர் பெரியோர். கண்ணுடைய வள்ளலே பூசித்த, மிகச் சிறந்த பெரிய நடராச மூர்த்தி வடிவமொன்று சமீப காலத்தில் இவனால் விற்கப் பட்டது என்பர். இந்த மரபு இருந்த இடம் தெரியாமல் அழிந்து விட்டது.

### உரையாசிரியர் சிதம்பர சுவாமிகள்

இவ்வொழிவிலொடுக்கத்திற்கு உரை செய்தார் திருப்போரூர் சிதம்பர சுவாமிகளாவர். இவர் பூர்வாசிரமத்தில் சிதம்பர கவிராயர் என்ற பெயருடன் வித்துவானாக விளங்கினார். விருத்தாசலம் குமார தேவ சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்றும் பேரூர் சாந்தலிங்க சுவாமிகளிடம் உபதேசம் பெற்றும் துறவியானார். சாந்தலிங்க அடிகளார் அருளிச் செய்தகொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் ஆகிய நான்கு நூல்களுக்கும் அவ்வடிகளாரது கட்டளைப்பட்டி உரை யெழுதினார். ஒழிவிலொடுக்கத்திற்கு உரை செய்யுமாறு இவருக்குக் கட்டளையிட்டவர் சாந்தலிங்க அடிகளே யாவர். சிதம்பர சுவாமிகளது உரைகள் மிகவும் அருமை வாய்ந்தவை. அருள் நூல்களுக்கு உரைவரைதலில் சிதம்பர சுவாமிகள் வல்லவரென்பது இவ்வுரைகளாற் பெறப்படும். {18}

### அடிகள் பதிப்பு

ஒழிவிலொடுக்கத்தைச் சிதம்பர சுவாமிகள் உரையுடன் பதிப்பித்த அடிகள். நூலின் சிறப்புப்பாயிரச் செய்யுளுக்கு மட்டும் ஒரு விருத்தியுரை செய்து தம் பதிப்பிற் சேர்த்திருக்கின்றார்கள்.

இதனுள் அடிகள் கந்தரந்தாதி, கல்லாடம், சித்தியார், திருவாசகம், திருக்குறள், புறப்பொருள் வெண்பா மாலை, தொல் காப்பியம் ஆகிய நூல்களினின்றும் மேற்கோள் காட்டியுள்ளனர். அடிகள் அருளிய பாயிர விருத்தி வருமாறு:

### அடிகள் அருளிய ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்தி
### சிறப்புப் பாயிரம்

### நேரிசை வெண்பா

**வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்**
**வள்ளன்மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தா-னுள்ளத்**
**தழிவிலடுக் குந்தேனை யன்பரெலா முண்ண**
**வொழிவி லொடுக்கநூ லோர்ந்து**



RangaRakes tamilnavarasam.com

இச் செய்யுள் கருதிற்றியாதோ வெனின், இந்நூன்முகத்தாசிரியர் பெயர் முதலியவற்றைக் குறித்து நிற்றலிற் சிறப்புப் பாயிர வொழுக்க முணர்த்தல் கருதிற் றென்க.

**வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன் - வள்ளன்மலர்த் தாடலைமேல் வைத்து** என்பது; வள்ளலா ரென்னுந் திருப்பெயருடையவர், ஞானாசாரிய நிருபராகிச் சமய வாதிகள் தருக்கச் செருக்குகள் பிற்பட்டொழியப் பேரரு ணெறியான் வெற்றிகொண்டு சீகாழி யென்னுந் திருநகர்க்கண்ணே மெய்ந்நெறி விளங்க வீற்றிருந்தருளிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரது வள்ளற்றன்மையுடைய மலர்போலுந் திருவடிகளைத் தமது நன்முடிக்கண் ஓர் பொன் முடியாக அணிந்து.

{18. திருவாசகத்திற்கு இவர் செய்த உரை ஏட்டுவடிவில் விருத்தாசலம் குமார தேவர் மடத்தில் உள்ளது. அது இன்னும் அச்சாகவில்லை.}

**ஓர்ந்து-உள்ளத்-தழிவி லடுக்குந்தேனை யன்பரெலா முண்ணவொழிவி லொடுக்கநூ லுரைத்தான்** என்பது; அத் திருவடிகளின் அருட் டுணையால் தத்துவங்க ளனைத்துஞ் சடமென்றோர்ந் துணர்ந்து அவற்றைக் கடந்து தற்காட்சியோடு திருவருட் காட்சியுஞ் செய்து, அங்ஙனம் வாதனையா னசைந்தெழும் போதந்தோற்றாது அதனை யத் திருவருளொளொயி னடக்கி ஆண்டு, மேன்மேலு மெழாநின்ற சிவாநந்தத் தேனைத் தாம் அனுபவஞ் செய்தவாறு அதன்கண் அன்புள்ள பக்குவருஞ் செய்தற்பொருட்டு, அச் சிவாநந்தாநுபவ அந்தரங்க மெல்லாம் வெளிப்பட்டு விளங்க, ஒழிவிலொடுக்க மென்று ஓர் உபதேச முறையை யுரைத்தருளினார் என்றவாறு.

**வள்ளல்** என்னும் பெயர் ஆசிரியர்க்குத் தாம் முன்னிருந்த கிரியாசாரிய நிலைக்கண் அவ் வாசாரிய மரபின் வழித்தாய் வந்த காரண வபிடேகச் சிறப்புப் பெயரென்க. அல்லதூஉம், பின்னர் ஞாநாசாரிய நிலைக்கண் தமதருண்ஞான நோக்கா னியைந்த கண்ணுடைய வென்னுங் காரண விசேடண மேற்கொண்டு நின்ற இவ் வள்ளலென்னும் பெயர் ஈண் டவ் விடேசண மிசையெச்ச நிலையி னிற்ப நின்ற தெனினும் அமையுமென்க.

இஃது வினை பண்பு முதலிய வடுத்த தொகை நிலைச் சொற்றொடராகாது தொகா நிலையாய்த் தனைத் தொடர் பயனிலை யண்மைப் பொருளுணர்ச்சியின்றி யிடையிட்டு நிற்கத் தான் செய்யுண் முதற்கண் தனித்திருந்தமையின் ஆற்ற லின்றாலோ வெனின், அற்றன்று; கொடைமடங் குறித்த குணங் காரணமாக வந்த இவ் வள்ள லெனும் பெயர் தன்னுறுப்புகளுட் கொடை குணம் புக ழழகு வளமென்னு நல்வகை குறித்த பல்பொருட் பகுதியாய வண்மை யென்னு முதலுறுப்பான் ஆசிரியர்க்குளவாய அக்கொடை முதலிய அருட் குணங்களைக் குறிப்பிற் புலப்பட விரித்தலிற் பொருளாற்றல் உண்டென்க. அல்லதூஉம் இப்பெயர் உயர் பொருட் கிடனாய் உடனிலைக் கூட்டாய் ஒரு நெறியசைத்தாய் ஓரினந்தழுவிப் பல்வகைக் குறிப்பிற் படர்ந்து முற்றியைபு வண்ணப் பெருஞ் சொல்லாக நிற்றலிற் சொல்லாற்றலும் உண்டென்க. ஆயின், இவ்வாசிரியர் பெயர் இச்செய்யுளின் இடை கடைகளின் ஒன்றினிறுத்தாது முதலடி முதற்சீ ரெதுகைத் தொடைக்கணிறுத்ததிற் குறித்த தியாதோவெனின், ஒன்றிரண்டெனக் கொண்டுறு மறை யாகம நன்றிரு முடிபி னடுநிலை நடாஅய்ப் புலம்பெறு தத்துவ நியதியிற் போந்து உண்மலந் தெறு மறிஞர் வாழ்த்திப் பரவும் ஆசிரியர் சன்மார்க்க முதலிய



RangaRakes tamilnavarasam.com

மார்க்க நான்கனுட் டலைமையிற்றலைமையாய வுத்தம சன்மார்க்கத்தின ரென்பது குறித்த தென்க. இங்ஙனம் உத்தம சன்மார்க்கத்தின ரென்பதை யாசிரியர் கூறிய "இது வென்றதெல்லாம் பொய் யென்றான்"{19} என்னுந் திருவெண்பா வாற் காண்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

**குருராயன்** என்பது திருஞான சம்பந்தப் பிள்ளையார்க்குச் சிறப்பிற் சிறப்பாய காரணப் பெயராய் நின்று, ஓதி யுணர்ந்து பன்னாட் பல சாதனங்களின் முயன்று முயன்று ஆசாரியத் தன்மையொருவாறு அரிதிற் கிடைப்பப் பெற்று மோரோர் காலங்களின் அவத்தை வயப்பட்டு மயங்கு மற்றையாசாரியார் போலாது ஓதாமல் வேதாகமாதிகலை முற்று முணர்ந் திறைப்போது மோர் சாதனங்களின் முயன்றதின்றி ஞானாசாரிய வருளிலக்கணங்களனைத்துந் தாமே தம்பால் நிரம்பி நிற்ப அமர்ந்தன ரென்பதூஉம், ஓதியுணர்ந்த அவ் வாசாரியர்க் கெல்லாம் அவரவ ரறிவின்கண் அருளுவாய் நின்றறிவித்தும் ஆசாரிய வுருவாய வெளிநின்று அனுக்கிரகித்தும் நின்றன ரென்பதூஉம், திருநோக்கஞ் செய்தன் முதலிய அறுவகைத் தீக்கையானு மன்றித் தமது திருவுருவைக் காண்டல் நினைத்தன் மாத்திரையே பக்குவரல்லாரும் பக்குவராய்ப் பயன்பெற நின்ற திருவருட் பெருமைய ரென்பதூஉங் குறித்த தென்றுணர்க. இங்ஙனம் ஓதாமல் வேதாகமாதி யுணர்ந்தமை முதலியவற்றை யாசிரியர் கூறிய "தன்மையு முன்னிலையும்"{20} என்னுந் திருவெண்பாவாற் காண்க.

அல்லதூஉம், **குருராயன்** என்பது **வாதுவென்ற சம்பந்தன்** என்பதற்கு மேனிற்க வைத்த விதப்புக் குறிப்பாற் பிள்ளையார் இவ்வவதாரத்தின் மேனின்ற அவதாரத்தினுங் குமார சற்குருவாய் அரனார்க்கும் அகத்தியனார்க்கும் உபதேசித்தருளிய ஆசாரியத் தலைமையுங் குறித்ததெனக் கொள்க. அருணகிரிநாதர்,

> **தென்னவ னங்ஙனஞ் சூழ்காத் திரிநக சூலகரத்**
> **தென்னவ னங்கனந் தப்பத நீட்டினன் செல்வமுன்பின்**
> **றென்னவ னங்கநன் னீற்றாற் றிருத்திய தென்னவின்னந்**
> **தென்னவ னங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே{21}**

{19. இதுவென்ற தெல்லாம்பொய் யென்றா னெனக்குப்
பொதுவன்றித் தங்குமிடம் போச்சு-அதுநாங்கா
ணென்றா னதன்பே ரிரவைப் பகலாக்கு
மொன்றோ பரமசுக மோ.

{20. தன்மையு முன்னிலையுந் தானாய்ப் படர்க்கையுமா
யென்னொழிவி லின்புமா யின்புமிது-வென்னாத
வேதாந்த சித்தாந்த மேபிறவா வீடென்றா
னோதாமல் வேதமுணர்ந் தோன்.

பொதுவிலுபதேசம், 44, 42;

{21. கந்தரந்தாதி, 54.}



RangaRakes tamilnavarasam.com

என்றதனாற் பிள்ளையார் இவ்வவதாரத்திற்கு மேனின்ற அவதாரத்திற் குமார சற்குருவென்பது காண்க.

**கல்லாடம்**

> **உழன்மதிற் சுட்ட தழனகைப் பெருமான்**
> **வணங்கிநின் றேத்தக் குருமொழி வைத்தோய்**
> **... ... ... ... ... ... ... ... ... ... ... .... .... ... .... ...**
> **குறுமுனி தேற நெடுமறை விரித்தோய்.**{22}

**சித்தியார்**

> **அருமறையா கமமங்க மருங்கலைநூ றெரிந்த**
> **வகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருளை**{23}

என்பவைகளால் அரனார்க்கும் அகத்தியனார்க்கும் உபதேசித்த ஆசாரியத் தலைமையை யுணர்க.

ஆயின், **குருவேந்தன்** என்னாது **குருராயன்** என்றது எது குறித்தற்கோவெனின், நான்கன் வேற்றுமையா னடுத்து மிக்குயர் நெறிப் பொருண்மையின் வந்த காரகச் சிறப் பொருதலைத் தொடர்மொழிப் பெயராய இக் குருராய னென்ப தன்கட் குரு வென்பதன் முதனிலை யெழுத்துத் தமிழியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும் ராய னென்பதன் முதனிலை யெழுத்துத் தமிழியல் விதியின்றி ஆரியவியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும் வந்து இருவகை யியலுங் கோடலின், இதனைத் தம் பெயராகவுடைய பிள்ளையாருந் தமிழ்நூல் வடநூலென்னும் இருவகை நூற்கு முரியா ரென்பது குறித்தற்கென்க. ஆசிரியர் "மறைப் புலவன் தமிழ்க் குரிசில் சீகாழிச் சம்பந்தன்"{24} என்றதனால் இருவகை நூற்கு முரியா ரென்பது காண்க வென்க. அல்லதூஉம், பொருள் வேறுபடாது சிறிதே வடிவு வேறுபட்டு நின்ற குருராய னென்பது தன்னை யுள்ளூன்றி நோக்கினர்க்கு இலை மறை காய் போல ஐ வென்னு முயிர்மெய்யோடிருந்த தன் முன் வடிவ முட்கொண்டு விளங்கக்காட்டி நிற்கின்ற தாகலின், இதனையுடைய பிள்ளையாருந் தமது கடவுட் டன்மை வேறுபடாது உத்தம புருட வுருவங்கொண்டு நின்ற தம்மை அன்பான் உள்ளூன்றி நோக்கினார்க்குக் குமார சற்குருவென்னும் பெயர் கொண்டு அளவிகந்த சூரியர் உதயம்போன்றொளிவீசுந் தம் முன்னுருவாய தெய்வத் திருவுரு வுட்கொண்டு விளங்கக் காட்டி நின்றன ரென்று குறித்தற் கென்பதுமாமென்க. ஆளுடைய பிள்ளையார் புராணம்

{22. முருகக் கடவுள் துதி.

{23. பரபக்கம், முருகன் துதி.

{24. சத்தியநிர் வாணத்தாற் றற்போதத் தாக்கறுத்து
வைத்துவழி காட்டு மறைப்புலவன் - சுத்தன்



RangaRakes tamilnavarasam.com

றமிழ்க்குரிசிற் சீகாழிச் சம்பந்த னென்பா
னெமக்கருளிச் செய்த திது.

-பொதுவிலுபதேசம், 11 }

**மறைவளர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்**
**பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்**
**துறைபெறு மணியே சுருதியி னெளியே வெளியேவந்**
**திறையவ னுமையா ளுடனரு டரவெய் தினையென்பார்.**{24}

என்று மூவாண்டிற் பிள்ளையார் திருவருள் வடிவைக் கண்டு சீகாழியுள்ளார் வியந்து கூறிய வாறாய விச்செய்யுளால் உள்ளூன்றி நோக்கினர்க்குத் தம் முன்னுருவைக் காட்டி நின்றன ரென்பது காண்க வென்க. இனி இன்றியமையாக் காட்டுளதேற் காட்டுவதன்றி மற்றைய விரிக்கிற் பெருகும் என்க.

அல்லதூஉம், குரு என்பத னீற் றுயிர்மெய்யோடு ராயன் என்பதின் முத லுயிர்மெய்ப் புணராப் புணர்க்கையாய் நின்றதாகலின், இங்ஙனம் ஆனந்த வடிவராகிய பிள்ளையாருந் தாங் கொண்டருளிய மானிடத் திருவுருவோடு புணராப் புணர்க்கையாய் நின்றனரெனக் குறித்தற் கென்பது மா மென்க.

அல்லதூஉம், குறிலிணைக் கெதிர் நெடில் குறி லெண்ணீடாக நிற்பவு மீற்றி னவ் வெண்ணீடின்றி யொற்று நிற்பவுந் தொடர்ந்து மொழி யாகலிற் பிள்ளையாரும் பக்குவர்க்கு மறைப் பொருளாயும் அதிபக்குவர்க்கு அநுபவப் பொருளாயும் இவ் விரண்டினுங் கலவாது அதீதப் பொருளாயு நின்றன ரென்று குறித்தற் கென்பது மாமென்க. இங்ஙனம் குருராய னென்பதிற் கு வ்வென்பது இருள், ரு வ்வென்பது அருள், ராயன் என்பது விளங்கச் செய்கின்றோன் பொருளாம். இதனால் கு வ்வென்னு மசுத்தாவத்தையில் நின்றோரை ரு வ்வென்னுஞ் சுத்தாவத்தையில் தாம் நின்றவண்ண நிறுத்துகின்றோர் குரு ஆவர். இச்சுத்தாவத்தைக்கு ஆதாரனாகியும் அதீதனாகியும் விளங்கி இவ்வவத்தையினின்றும் அக் குருவாயினோர் தாழாதவண்ணம் அருள் செய்து நின்று அதீதப் படுத்துகின்றோன் ராயன் ஆவன் ஆகலின், இதனாலும் உணர்க வென்க.

எழுத்தாதிப் பல்வகைக் குறிப்பிற் பொருணெறிபற்றி நின்ற நோக்கம் செறிவு நுட்பம் இங்கிதம் இன்பம் கம்பீரம் சிறப்புறுதி முதலிய நற்குணந் தழீஇய சொற்புண ரீதென்றே, ஆசிரியரும் "சரிதாதி நான்கினுக்கும்" {26} என்னுந் திருவெண்பாவி னிடைக்கட் குருராயனென்று இதன் பெருமைதோன்ற வைத்தனரென்க. இஃது இன்னும் விரிக்கிற் பெருகு மென்க.

{25. 92-வது திருப்பாடல்.

{26. சரிதாதி நான்கினுக்குஞ் சாலோக மாதி
வருமா றெனக்களித்த வள்ளல்-குருராயன்
ஞானத்திற் பக்குவர்க ணால்வர்க் குபதேச
மானத் தையுநிகழ்த்தி னான்.



RangaRakes tamilnavarasam.com

**வாது வென்ற சம்பந்தன்** என்பதிற் பொது வானே வாது வென்ற என்றது என் குறித்தோ வெனின், எண்வகைக் குன்றத்தெண்ணாயிரவ ராய பாயுடுக்கைப் பறிதலைச் சமணர்களொருங்கே கூடித் தென்மதுரைக்கட் செந்தமிழ்ப் பாண்டியனை முன்னிட்டுச் செருக்காற் செய்த சுர வாதம் அனல் வாதம் புனல் வாதங்கள் பிற்படத் திருநீற்றானுந் திருவாக்கானும் வென்று திறல்கொண்டமை யன்றியும், பரசமய கோளரி யென்று தானே யொலித்த திருச்சின்னத்தின் தெய்வப் பேரொலி கேட்டு உளம் பொறாது எதிரிட்டு மறித்த போதமங்கைப் புத்த நந்தியின் பொய்த் தருக்கமும் புழுத்தலையும் பொடிபட் டழியவும், பின்னருள்ளது போன் றில்லதைப் பற்றிச் சாக்கியக் குழுவுள் தலைவனாய சாரிப்புத்தன் சிற்சில வகையாற் செய்த சமயவாதந் தலை தடுமாறவும், செந்தமிழ் வேதத் திருமுறை தாங்கி மேம்படும் அறிஞரான் வெற்றிகொண்டமையும், திருவோத்தூரின்கண் அரனுக்கிடுபனை யாண் பனை யாயிற்றே யென்று அசதியாடிய அமணக்குழூஉக்களின் வாய்வாதங்கள் மண்பட் டொழியத்தாம் திருவாய் மலர்ந்த திருக்கடைக்காப்புள் ஓர் மொழியானே அவ்வாண்பனை பெண்பனையாகச் செய்து விறல்கொண்டமையுங் குறித்ததென்க.

அல்லதூஉம், **வாது** என்ப திலக்கணையாகக் கொண்டு பெருமண நல்லூரின் கண் திருமண நல் விழாவைத் தரிசிப்பான் வந்த மக்கட் கெல்லாந் தொன்று தொட் டிடைவிடாது உடனிழற் போற் சூழ்ந்துள பிறவிப் பெருவாதுக ளனைத்தும் வென்றதூஉம், திருப்பாச்சி லாச்சிராமத்தின்கண் மழவன் மகளார்க்கு அடுத்த முயலக வாது வென்றதூஉம், மருகற்கண் ஓர் வசியனுக்கு அடுத்த விடவாது வென்றதூஉம், இவை முதலியவுங் குறித்த தெனினுமாமென்க. வெற்றிகொண்ட பொருட்டிறன் முதலியவற்றுள் ஒன்றேனுந் தோன்றக் கூறாது இலேசானே வாது வென்ற தென் குறித்தோ வெனின், பிறர்க்கு இங்ஙனம் வேறல் தம்மானுந் துணைமையானும் பற்பல நாட் பற்பல வகையின் முயற்சி செயினுமுற்றா தெனினும், பிள்ளையார்க்குச் செந்தமிழ் பொழியுந் திருவாக்கானே ஆண்டாண்டு அவ் வேறன் முற்றிய தென்பது குறித்தென்க. **வாது என்பது குருராயன்** என்பதனோடுஞ் **சம்பந்தன்** என்பதனோடுஞ் சாராது நடுநின்றமையின், அத்துவித நெறியினுஞ் சேராது துவித நெறியினுஞ் சாராது நின்ற பதிதவாதிகளது பயனில் வாத மெனினு மமையு மென்க.

எதிரேற்கப்பட் டெதிர்வினைக் கீழ்ப்பட மேற்கொள் வினையெழுச்சிப் பொருளின் வந்த வெல் லென்னும் பிறவினைப் பகுதியானடுத்த **வென்ற** என்னும் பெயரெச்சஞ் சம்பந்தனென்னும் பெயர் கொண்டு முடிந்து, இங்ஙனம் வெற்றி கொண்ட பருவம் பிள்ளையார்க்கு இளங்குமாரப் பருவ மெனக் குறித்த தென்க. என்னை? எச்சமென்பது இளஞ் சேய் மேற் றாகலின்.

**சம்பந்தன்** என்பது பிள்ளையார்க்கு மூ வகைவைக் கண் மூவுலகம் புகழப் பொற்பொடு புணர்ந்த அற்புதத் திருப்பெயராகலின் ஆண்டுப் பெருமா னருளப் பிராட்டியா ரளித்த சிவஞானத் தெள்ளமு தருந்தி அச்சிவ ஞானத்திற்கு உரிமை பூண்டமை குறித்த தென் றுணர்க. ஆயின் சிவஞான சம்பந்தன் என்னாது சம்பந்த னென வைத்த தென்கொலோ வெனின்: சிவஞானமு மன்றிச் சிவானந்த மானந்தாதீதம் என்பவைக்கும் உரிமை பூண்ட தலைமை பற்றியும் அவற்றை உல



RangaRakes tamilnavarasam.com

குயிர்க்கு இங்ஙன மென்றுணர்த்தி உரிமை செய்விக்கு மாட்சி பற்றியும் அங்ஙனம் வைத்ததென்க.

அல்லதூஉம், சுருங்கச் சொல்லுதல் வனப்பினாற் சம்பந்தனெனவே சிவஞான சம்பந்த னென வுரிமைச் சிறப்பு வழக்கால் தானே தோன்று மென வைத்த தெனினுமா மென்க. எங்ஙனமெனின், இந்திரனென்பது இறைமைச் சிறப்பு வழக்கால் தேவேந்திரனையும் உடையானென்பது பொருட் சிறப்பு வழக்கால் பொன்னுடையானையுங் குறிக்கு மாகலி னென்க.

**வள்ளல் மலர்த்தாள்** என்னும் ஒருவகை வனப்பு இருவகைச் சந்தி மூவகை மொழித் தொகைச் சொற்றாடர்க்கண் வள்ளலென்னுங் குணிப்பெயர் வினை முதற் றொழிற் பயனுறப்படுமுடைமைக் குணப்பெயராய் நின்று பிள்ளையாரது திருவடிகள் தம்மை யடைந்தோர்க்கு வரையா தானந்தப் பேற்றை யளித்து அவரைத் தாங்கிக் கோடலைக் குறித்த தென் றுணர்க. அஃதேல் ஆனந்தப் பேற்றைத் தருதற்குந் தாங்கிக் கோடற்குங் கருத்தர் பிள்ளையா ரன்றோ? அங்ஙனம் இருப்பத் திருவடிகட்கு இங்ஙனங் கூறல் எங்ஙனமெனில்: திருவடிகள் தம்மை வழிபடுவோர்க்கு இரங்கி இன்ப மீதற் பொருட்டு எழுந்தருளும் பிள்ளையாரது படர்ச்சி நிகழ்ச்சிக் கருவியாய் நின்று அவரை யவ் வழிபடுவோர் பால் வருவித்தலானும், ஞான தீக்கை பண்ணுங்கால் அவர் சென்னியிற் சூட்டப்பட்டு ஐக்கியம் வருவித்தலானும், நித்தியானந்தப் பேறு வாய்க்கு மாகலின் இங்ஙன மென்க.

அல்லதூஉம், வாட்டமி லருளுங் கோட்டமில் குணனுமசையா நிலையு நசையா மனனும் வெகுளாப் பண்பும் விடாப் பேரன்புஞ் செவ்வியின் மரீஇ எவ்வெவர் எவ்வகை வேட்டனர் அவ்வகை விருப்பொடு குறிப்பின் வரையா தீதல் வள்ளற்றன்மை என்ப வாகலின், இவ் வள்ளற் றன்மையைத் தம்பால் அடைந்தோரிடை யடைவித்தருளுங் கருணைபற்றி யங்ஙனங் கூறிய தெனினு மமையுமென்க. அஃதேல் வள்ளற் றன்மை வழங்கு மலர்போலுந் திருவடியென்றன்றோ வுரை விரித்தல் வேண்டும், அங்ஙன மன்றி வள்ளற் றன்மை யுடைய மலர் போலுந் தாளென விரித்திருக்கின்றதே யெனின்; அங்ஙன மடைவித்தலும் வள்ளற் றன்மையே யாகலினு முடையதொன்றன்றே யுதவப்படு மாகலினும் இங்ஙனம் விரித்தல் அங்ஙனம் கூறற்கு மமைதி யா மென்க.

அல்லதூஉம், அருளின்றி யமையாத வள்ளற் றன்மைக் கவ்வருளே முதற் காரணமா மாகலின், ஆனந்த வடிவராகிய பிள்ளையார் அவ் வானந்தப் பேற்றை யளிக்கும் வள்ளற்றன்மைக்கு முதற் காரணமாகிய திருவருட் சத்தியே திருவடி யென்று குறித்தற்குக் காரணத்தைக் காரியமாக ஈண்டு உபசரித்த தெனினுமமையு மென்க.

அல்லதூஉம், எமது திருவடிகளை வழிபடின் வீட்டின்ப மெளிதில் தருவே மென்று பிள்ளையார் விதித்தருளிய அருள் விதிப்படியறிந்து வழிபடின், அவ் வழிபாட்டான் அவ்வீட்டின்பந் தரப்பெறுதல் உண்மையாகலின், அவ் வுண்மை நோக்கி யீண்டுக் கூறிய தெனினும், பிள்ளையார் திருமேனி முற்றுந் தெய்வத்தன்மை பூரண மாகலின் அதனை யறிவிக்க ஈண்டுக் கூறியதெனினு மமையுமென்க. திருவடிகட்கு அடையாய வள்ளலென்பதூஉம் ஆசிரியர் பெயராய வள்ள லென்பதூஉம், அடியிணை எதுகைத் தொடையாய் எழுத்தசை சீரொலி



RangaRakes tamilnavarasam.com

பொருளாதிகளானொற்றுமை கொண்டு நின்று பிள்ளையாரது திருவடித் தீக்கைக்கும் ஆசிரிய ரதிபக்குவத் தன்மைக்கும் உள்ள வொற்றுமைப் பொருத்தம் விளக்கின வென்க.

வள்ளல் என்பது பிள்ளையார்க்குக் காரணச் சிறப்புப் பெயராகக் கொண்டு பொருள் கூறுவாறு முளர். அங்ஙனங்கூறின், இத்துணைச் சிறப்பின்று என்று மறுக்க. என்னெனின், அவயவச் சிறப்பா னவயவிக் குணம் வெளிப்படுத்தலே பெரும் பாலு மின்பமாகலி னென்க. இதனைப் "போற்றிமா னான் முகனுங்காணாத புண்டரிகம்" {27} என்பதனாற் காண்க வென்க. வள்ளமலர்த்தா ளெனப் பாடமோதி வள்ளம் போலுங் குவிந்த வாய்மலரென மலர்க் கடையாக வுரை விரிப்பாரு முளர். அங்ஙனம் விரித்தலில் இத்துணைப் பெரும் பயனின்றென மறுக்க. இங்ஙனமின்னும் விரிக்கிற் பெருகு மென்க.

{27. திருவாசகம், திருவெம்பாவை 20.}

**மலர்** என்பது வள்ளற் றன்மையி னருகு வைத்தமையின், ஈண்டு நிறைதலுங் குறைதலுமா யுள்ள நீர் நிலைக்கண் தோன்றியும் அழிந்தும் விரிந்துங் குவிந்தும் வாடியும் நின்று வண்ணமும் நறையும் வாசமுஞ் சிறுபோது கொண்டு பறித்தலாகிய சிறுதொழிற்படு மலர்களை நீக்கி, ஆண்டுத் திரிபிலாத் தெய்வத் தெண்ணீர் நிலைக்கண் ஒழியா மலர்ச்சியும் அழியா மணமும் பொன்னிறப் பொலிவும் இன்னற வொழுக்கு மென்மையும் தன்மையும் வியப்புறு முருவுங் கண்டோர் கண்கவர் காட்சியும் மாட்சியுங் கொண்டு முக்காலமுங் குன்றா மலரைக் குறித்தமை காண்க. என்னெனிற் பிள்ளையார் திருவடிகள் மெய்ஞ்ஞான விளக்கமா யருண் மணம் வீசிப் பொன்னிறம் பொலிந்து ஆனந்த மொழுக்கி மெல்லென வுற்றுத் தண்ணெனக் குளிர்ந்து தரிசிக்கின்றோர் வியப்புறு முருவா யவரது விருப்ப நோக்கம் பரவ என்றும் ஒரு தன்மையவா யிருக்கின்றமையி னென்க. ஆயின் மலர் போலுந்தாளென்று உவமை விரிந்தபடி நிற்றற்கு இடங்கொடாது மலர்த்தாளென்ற தென்னெனின், அத் தெய்வத்திரு மலர் தனைக் கண்டோர்க்குச் சிறிய விடயானந்தத் தருதலே யன்றித் திருவடிபோற் சிவாநந்தம் தரமாட்டார் சிறுமை நோக்கியென்க.

அல்லதூஉம், சுபவடிவாய் எவ்வகைச் சுபங்கட்கு முன்னின்றதனை விளங்குறச் செய்வதாய் மகிழ்வுடையோர் யாருமேற்கொண்டணியப்படுவதாய் நிற்கு நன்மலர் போலு மெனக் கூறினுமமையும்; என்னெனின், திருவடிகள் அருள் வடிவா யானந்தப் பேற்றிற்கு முன்னின் றளிப்பதா யறிவுடையோர் தந்தலை மேற் கொண் டணியப்படுவதாய் நிற்றலி னென்க.

அல்லதூஉம், மலரை யடைந்த வண்டுக ளதனது தேனுண்டு களிகொள்ளுதல் போற் றிருவடிகளை யடைந்தோரும் அருளானந்தம் பெற் றிறுமாத்தலி னிங்ஙனங் கூறிய தெனினுமமையு மென்க. இதனைத் தொகையுவமை யணியாகக் கூற லின்றி வள்ளன் மலர்த்தா னெனக் கூட்டி யற்புதத் தொகை யுவமை யணியாகக் கொண்டு பொருள் கூறுவாரு முளர். அவர் கூறுங் கூற்றிற் பெரும் பயனின் றென மறுக்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகு மென்க.

**தாள்** என்பது அடிகட் கன்றியும் முயலுதற்கும் உண்ணின்ற பொருள் வெளிப்படாமைக்கும் அதனை வெளிநின்றோ ருட் சென்று கவரப்படாமைக்குங் காப்பாகக் காப்பினிற்குங் கருவிக்கு மணிதற்கணியி னிருகடையு மிணைத்து நிற்கு



RangaRakes tamilnavarasam.com

மிடைப்பூட்டிற்கு மிடனாகி வந்த பலபொரு சொல் லாகலின், திருவடிகள் தம்மை யடைந்தோரை யானந்த நிலையுட் சேர்த்தலும் அங்ஙனஞ் சேர்ந்தோர் மீட்டு வவ்வானந்த நிலையினின்பம் போதவசைவு தோற்றி வெளிப்படாமைக்கும் அவத்தைகளுட் சென்று தாக்கிக் கவரப்படாமைக்குங் காப்பாக அருளுருவா யதன் முன்னிற்றலுஞ் சிவத்துடன் சிவனை யிடைநின்று கூட்டுவித்தலுங் குறித்தது காண்க. இக் குறிப் புணர்த்த வன்றே மலர்க்கா லென்னாது மலர்த்தா ளென்ற தென்றுணர்க.

**தலைமேல் வைத்து** என்பது ஆசிரியர் தம் ஆசாரியராகிய பிள்ளையார் திருவடித் தீக்கை செய்யத் தாம் பெற்றமை குறித்தது காண்க. அஃதேல், வைக்கப்பட்டு எனச் செயப்பாட்டுவினை யெச்சத்தா னிருத்தற் பாலதன்றோ வெனின், ஆசிரியர்க்கு அத் திருவடிக் கண்ணேயுள்ள பிரியத் தொடர்ச்சியின் பெருமை தோன்ற இங்ஙனம் நின்று அங்ஙனங் குறித்த தென்க. இதற்கு இவ்வா றன்றித் தலைமேற் பாவனையான் வைத்தெனக் குறித்ததென்று கூறுவாரும் உளராலோ வெனின், அவ்வாறு கூறிற் பிள்ளையார் இந்நூலாசிரியர்க்கு ஞானாசாரிய ரென்பதும் இவர் ஞானாதீக்கை யுடையா ரென்பதும் விளங்குத லின்றி மற்றையாசிரியர்போல் எடுத்த நூலினிது முடிதற்பொருட்டுப் பாவனையான் வழிபடு கடவுட் பழிச்சின ரென் றிலேசிற் கருதப்படுமாகலின் அங்ஙனங் கூறன் மரபன் றென்க. தலையில் வைத்து என்னாது தலை மேல் வைத்து என்றமையான், மறை முடிக் கண்ணே வயங்காநின்ற அச் செல்வத் திருவடியின் சீர்மை தோன்றிற் றென்க.

**ஓர்ந்து** என்பதில் ஓர் என்னும் பிறவினை முதனைலை, அறிவுதனக் கெதிரிட்ட வுணர்ச்சிப் பொருட்கண் எதிரிடுவது போன்று எதிரிடா துள்ளாழ்ந்த அப்பொருட்டிற னெதிரிடப் பெயரும் புடை பெயர்ச்சியு மெதிரிட்ட பின்னர் விகற்பியா தெதிர்க்குந்தொறு மெதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சியுங் கோடலிற் கருவித்திறனுந் தன் றிறனும் அருட் டிறனும் உற் றுணர்ந் தவ் வுணர்ச்சி விகற்பியாது தேறி நின்றமையைக் குறித்தது காண்க. இக் குறிப்புத் தோன்றவன்றே திருவள்ளுவ நாயனாரும் "ஓர்த்துள்ள முள்ளதுணரின்" {28} என்றா ரென்றறிக.

**உள்ளத் தழிவில்** என்பதில் உள்ள மென்பதன் பகாப்பதவி யிற்றுப் பகுபதப் பொருளி னிடவாகு பெயரா யணுப் பொருட் கண் வந்த வுள் ளென்னும் பகுதி யுட்புறத்தும் அப்போதம் எழுஞ் சிற்றசைவும் பேரசைவுங் குறித்தது காண்க.

**உள்ளம்** என்பது வாதனையா னுள் ளெழும் போதத்திற்காகுபெயராயது. வள்ள லென்பது போன் றொழுகிசையாய் வரவுள்ள வழிவி லென்னாது பொறுத்திசையாய் வர உள்ளத் தழிவிலென்ற தென்கொலேவெனின்: வேற்றுமை வழியாகலினும் போதவசைவு சார்பின்றி யமையாமை குறிக்கவேண்டு மாகலினும், சாரியையோடு புணர்த்தி யங்ஙனங் கூறிய தென்க.

{28. ஓர்த்துள்ள முள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.
-மெய்யுணர்தல், 7 }

அழிவு என்பதில் அழி யென்னும் பொது வினைப் பகுதி முன்னர்த் தோற்ற நிகழ்ச்சிப் பின்னர் ஓர் காலத்தும் ஓரிடத்துமின்றிக் கெடுதற் பெயர்ச்சிக்கண் வந்ததாகலின், அப்போத நிகழ்ச்சி பின்னரெக்காலத்தும் உட்புற மென்னு



RangaRakes tamilnavarasam.com

மெவ்விடத்துந் தோற்ற நிகழ்ச்சியின்றி யொடுங்கியவாறு குறித்த தென்றுணர்க. இங்ஙனமன்றி உள்ளத்தழிவி லென்பதற்கு மனத்தினசைவற்ற விடத்தெனப் பொருள் கூறுவாறு முளராலோ வெனின், மனத்தினசைவு போதவசைவறிற்றானே யறுமாகலினுஃ தறாத விடத்திஃ தெவ்வாற்றானு மறாதாகலினும் அது பொருந்தா தென்க. இதனை ஆசிரியர் கூறிய "பற்றாத போதும் பதறும்"{29} என்னுந் திருவெண்பாவாற் காண்க வென்க.

**அடுக்குந் தேன்** என்பதில் அடுக்கு மென்பது அடுத்த லென்னுந் தொழிற் பெயர்க்கண் தல்விகுதி தன்னொற்றுச் சந்தியொடு நீங்க வெதிர்காலப் பெயரெச்ச விடைநிலை யும்மை ககரமெய்ச் சாரியை யூர்ந்து தன்னொற்றுச் சந்திபெற் றாண்டு நின் றிறையு மிடைப்பாடு தோற்றாது செறிதற் பெயர்ச்சியும், அடுக்க லென்னுந் தொழிற் பெயர்க்கண் அல்விகுதி நீங்க அவ்வெதிர் காலப் பெயரெச்ச விடைநிலை யும்மை விகுதி நீங்க நின்று தன் வரவு கண்டோடிய குற்றுகர மூர்ந்த மெய்க் கண் ணேறி நின்றிறையு மிடைப் போதின்மை படாது பன்முறை மேன்மேலுறுதற் பெயர்ச்சியும் பொருளாகக்கொண் டிருவகைப் பகுதி யொருவகை யெச்சமாக நிற்றலின், சிறிதும் இடத்தானுங் காலத்தானும் பிரிவு தோன்றாது செறிந்து பன்முறை மேன்மேலெழும் ஆனந்தத் தே னென்று குறித்த தென்றுணர்க.

உள்ளத் தழிவிலடுப்பது ஆனந்த மாகலிற் றேனென்பதை யுவமைக் குறிப்பாற் சிவானந்தத்தேனென்ற தென்றுணர்க.

தேனுண்ட வண் டசை வின்றி யத் தேன் மயமா யிருத்தல் போல, ஆனந் தானுபவத்தர் போத வசைவின்றி யிவ் வானந்த மயமாயிருத்தலி னுவமையாகக் குறிக்கப்பட்ட தென் றுணர்க. இதனை யொப்புமைக் கூட்ட மொட்டாதிகளாகக் கூறுவாறு முளராலொ வெனின், அவ்வாறு கூறினும் பொருள் சிதையாமையி னொருவா றமையு மென்க. போத வசைவின்கண் தோற்றல் விடயானந்த மாகலில், போத வொழிவின் கட்டோற்றல் சிவானந்த மெனக் குறித்தற்கு உள்ளத் தழிவி லடுக்குந் தே னென்ற தென்றுணர்க. எங்ஙனமெனின், உள்ளத் தழியாமையி னடாத் தேனென் றெதிர்மறுக்கப் படுதலி னென்க. மதுரம் பற்றித் தேனை யானந்தத்திற் குவமை கூறுவாரு முளராலோ வெனின் அது நாவிடயமா யிறைப்போது நிற்றலின் இத்துணைச் சிறப் பின் றென்க.

{29. பற்றாத போதும் பதறும் பழக்கமதைக்
கற்றா லென்னாகக் கலக்காது-சற்றேநீ
தீண்டிவிடிற் றான்காண் செனன மரணமது
மாண்டுவிடி னீசிவமா வை.
-யோகக் கழற்றி, 15.}

**அன்பரெலாமுண்ண** வென்பதில், அன்பர் என்பது பொருள் புகழாதியைக் குறித்துப் பயில்வோரை நீக்கிச் சிவானந்தம் எந்நாள் அடைது மென் றிடைவிடா ததனையோ விரும்பிப் பயில்வோரைக் குறித்த தென் றுணர்க. எலா மென்பது சரிதாதி கன்ம மார்க்கங்களைக் கூறும் பிற நூல்க ளெல்லாம் பருவ நோக்காது சாதி சமயாசார விகற்பங்களை நோக்கிச் சிலரை நீக்கியும் சிலரை நிறுவியும் அதிகரித்தல் போலாது அச் சாதி சமயாதிகளினுயர்ந்தோர் தாழ்ந்தோரியாரேனும் பருவத்தராயின் இந்நூற்கு உரியராவரென்பது குறித்த தென்றுணர்க.


RangaRakes tamilnavarasam.com

உட்கொள வென்னும் பொரு ளுட்கொண்டு பொருட்டுப் பொருளிற் போந்த உண்ண வென்னும் வினையெச்சம் ஆனந்தா நுபவத்திற்கு விடாத விலக்கணை யாயிற் றென்றுணர்க. என்னையெனில், உண்ணலிற் பசி நீங்கல்போல் ஆனந் தாநுபவத்திற் பசுத்துவ நீங்கலி னென்க.

பயன் காரணம்பற்றி வந்த **ஒழிவிலொடுக்கநூல்** என்பது ஒழிவிலொடுக்க மென்னு நூல் ஒழிவிலொடுக்கந் தரு நூலென விருவழிக்கும் பொதுவாய சந்தியான் வந்தமையில், தன்னை வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் பொது வென்று குறித்த தென்றுணர்க.

**ஒழிவிலொடுக்கநூ லுரைத்தான்** என்பதில் வேற்றுமை சாரியை யுருபு முதலிய வொன்றும் விரியாது நிற்றலின், னாசார மன்றிக் கருமாசார மொன்றும் விரியாத விந்நூலினின் மலத்தன்மை தோன்றிற்றென்றுணர்க. **உரைத்தான்** என்பது ஒருவர் மதி நுட்பத்தால் தாங் கண்டறிந்த மாற் றுயர்ந்த பொன்னின் றன்மையைப் பிறருமறிந்து பயன் கோடற்குக் கட்டளைக் கல்லினுரைத்துக் காட்டல் போல்,கருதி குரு வநுபவத்தாறறா மநுபவத் தறிந்த சிவனாந்தப் பேற்றின் றன்மையைப் பக்குவமறிந்து பயன் கோடற் பொருட்டு நூற்க ணுரைத்துக் காட்டினாரென்று குறிப்புறுத்திற்றென் றுணெர்க.

என்னெனிலுரை யென்பது பொன்னுரையும் பொருளாகக் கோடலி னென்க. உரைத்தான் என்னும் பயனிலை செயப்படு பொருளி னிறுதியினி யையாது செயப்படு பொருட்குங்கருவிப் பொருட்கு மேல் தாடலை மேல் வைத்து என்பத் னிறுதியிற் றொடர்ந்து நின்ற தென்னெனின், சிவநத்தீக்கை யுடைய ராயுரைத்தா ரென்பது மன்றித் தம தாசாரியர் திருவடி சான்றாகத்தாங் கண்ட வநுபவத்தை விளங்க வுரைத்தாரென்பதுங் குறித்தற்கென்க. என்னை? தாடலைமேல் வைத்து எனவே சான்றாக வைத்து என்பது தானே யாமையு மாகலின்

தலைமேல் வைத்து என்பதன்பின் நிற்கக் கடவதாய ஓர்ந்து என்பது செயப்படு பொருட்பி னிறுதி நிலையாய் நின்ற தென்னெனின், இந்நூல் கற்றோர்க்குக் கருமங்குறைந்து ஞான மேலிடுத லுண்மை குறித்தற் கென்க. எங்ஙன மெனின், அவ்வோர்ந்து என்பது வினைக்குறையாகலி னென்க. "உள்ளத் தழிவிலடுக்குந் தேனை யன்பரெலா முண்ண வொழிவிலொடுக்க நூலோர்ந் துரைத்தான்" எனக்கொண்டு போத வொழிவின்கண் அடுப்பதாய வானந்தத்தை யன்ப ரெல்லா மநுபவிக்கும் பொருட்டு வேதாகம முடிபான ஞான நெறியை யாராய்ந்து ஒழிவிலொடுக்க மென்றோர் நூலையுரைத்தார் எனப் பொருள் கூறுவாருமுளர். அங்ஙனங் கூறின் ஆசிரியர் பர ஞான முடையா ரென்பது தோற்றாது, அபரஞானத்தாற் கூறப்பட்ட நூல் மிகச் சிறவாமையானும் அது பொருந்தாதென்க.

இந்நூ லியற்றற் கேற்ற நற்பொருளுடைமையுஞ் சிறப்புப்பாயிர விலக்கணத்துள் ஆக்கியோன் பெயரே யென முதனிறுத்தப்பட்ட நிமித்த காரணச் சிறப்புடைமையும் இச் செய்யுண் முடிபுக் கெழுவாயாந் தலைமை யுடையையும் பற்ற வள்ளலென முதனிறுத்திய தென்க. இந் நூலாசிரியர்க்கு ஆசிரியர்க்கு ஆசாரிய ரிவ ரென்பது தோன்றற்கு அவ் வள்ள லென்பதென்புடை குருராய னென்பதை நிறுத்திய தென்க. இங்ஙனம் ஆசாரிய ரென்பவர் பிள்ளையார் யென்பது தோன்றற்கு ஞானசம்பந்த னென வைத்தல் வேண்டுமாகலின் அந்த ஞானத்தைக்

குறிக்கும் பாசவெற்றியாய "வாதுவென்ற" வென்பது முன்கூட்டிச் சம்பந்தனென வதன்புடை நிறுத்திய தென்க. இரண்டாம் அடிக்கட் பிள்ளையார் தாள்கள் நிறுத்தத் தொடங்கி முன்னர் அத் தாள்களின் இயற்கை யருளென்று குறிக்க வள்ளலென்றும், அதன் வடிவம் ஆனந்த மென்று குறிக்க மல ரென்றும் முறையே வைத்து வள்ளன் மலர்த்தா ளென நிறுத்திய தென்க. தாள்க ளன்றியும் பிள்ளையாரும் அருளியற்கையரே யென்பது குறிக்கச் சம்பந்த னென்னுஞ் சத்தந் தோற்றியவுடன வள்ளற்சந்தத் தோன்ற நிறுத்திய தென்க. இங்ஙனம் நிறுத்தியவைசொற்பொருண்முறை நிலை. தாளென்பதற்குந் தலையென்பதற்கும் முள்ள சொற்பொருட் சம்பந்த வின்பம் பற்றித்தாடலை யென்றும், தலை யென்ப தற்கும் மேலென்பதற்குமுள்ள உரிமை நோக்கம் பற்றித் தலை மேலென்றும், மேலென்னுமிடப் பொருட்கு வைத்தற்றோழில் சிறந்தது பற்றி மேல் வைத்து என்றும், வைத்து என்பதற்கும் உரைத்தா னென்பதற்கும் இறுதியு முதலு மினமாதல்பற்றி வைத் துரைத்தா னென்றும் முறையே நிறுத்திய தென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொன் முறை நிலையும் சொற்பொறுண் முறை நிலையுமாம். இங்ஙனம் முற்று முறை நிலை கூறுப்புகின் மிகப் பெருமாகலி னொருவறு காட்டினம். மற்றையவுமிவை கொண்டுணர்க வென்க.

இச்செய்யுட் பொருள் ஆசிரியரது அருளறிவின் மாட்சிமையை வெளிப்படையானுங் குறிப்பானும் விளங்க விரித்தலின் வாகைக் திணையுட் சால்பு முல்லைப் பொருளின்பாற் பட்டதென்க. என்னை? சால்பு முல்லைப் பொருள்: "வான்றோயுமலையன்ன சான்றோர் தஞ் சால்புரைத்தன்று " {30} என்பவாகலின்.

இச்செய்யுள் தன்னுட் செயப்படு பொருளாய் நின்ற நூற் சிறப்பைத் தன்னானுந் தன்னுறுப்புக்களானுங் குறிப்பாற் குறித்து நின்ற நன்னோக் குடைச் செய்யு ளென் றுணர்க. அங்ஙனங் குறித்தவை யெங்ஙன மெனின்:-

இச்செய்யுள் தான் கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியப்பாவென்னு முப்பாவினுஞ் சிறந்த வெண்பா வாகலின், இக் குறிப்பால் இந்நூல் சரியை நூல் கிரியை நூல் யோக நூல் என்னு முந் நூலினுஞ் சிறந்த ஞான நூல் என்று குறித்த தென்க.

தான் ஈரசையா னாசிட் டிருவகைத் தளை தழீஇ யொழுகிசைச் செப்ப லோசையான் வந்த தாகலின், இக் குறிப்பால் இந் நூல் ஆகம முடிவும் வேத முடிவுங் கூறுமிருவகை நெறியு மொருவகை நெறியாத் தழீஇக் கொண்டிருந்தமை குறித்த தென்க.

தான் ஒன்றடுத்த விரட்டை முப்பத்தாறெழுத்துக்களைக் கொண்டு நிற்றலின், இக் குறிப்பான் இந்நூல் பாசமொன்றடுத்த தத்துவ முப்பத்தா றென்றும் முப்பத்தாறன் றன்மையிவை யென்றும் பகுத்தறிதல் வகையு முணர்த்துவ தெனக் குறித்த தென்க.

தான் நான்கடுத்த முப்பத்தா றசைகளை யசைத்து நிற்றலின், இக்குறிப்பா னிந்நூல் அத் தத்துவ முப்பத்தாறனையும் நியதி களைதன் முறையை யுணர்த்துவ தெனக் குறித்த தென்க. அஃதேன் முப்பத்தாறன்மே னான்கடுத்த தென்னெனின், ஆன்ம தத்துவத்தின் வன்மை தோன்றற் கோரசையும், வித்தியா தத்துவத்தின் வலி தோன்றற் கோரசையும், நாத தத்துவத்தின் பெருமை தோன்றற் கீரசையு மிகுந்தன வென்க.



RangaRakes tamilnavarasam.com

தான் பதினைந்து சீர் சீர்கொள நிற்றலின், இக்குறிப்பான் இந் நூல் ஆசாரியத் தன்மை சீடத் தன்மை பதித் தன்மை பசுத் தன்மை பாசத் தன்மை உபதேசத் தன்மை பக்குவத் தன்மை யோக நிவர்த்தி கிரியை நிவர்த்தி சைர்யை நிவர்த்தி விரத்தி விளக்கம் துறவுத் தன்மை அருளவத்தைத் தன்மை வாதனை மாண்டார் தன்மை நிலை யியல்பு என்னு மிப் பதினைந்தனையுஞ் சீர் பெறக் கொண்ட தெனக் குறித்த தென்க.

{30. புறப்பொருள் வெண்பா மாலை, 8 வாகைப் படலம், 31.}

தா னெழுவகைத் தளையி னியைந்த தாகலின், இக் குறிப்பான் இந் நூல் ஆன்ம தரிசனம் அருட்டரிசனம் பரைதரிசனம் பரையோகம் பரையோக நீக்கம் போத வொழிவு இன்பப்பேறு என்னுமெழுவகை நிலையும் அறிவிப்ப தெனக் குறித்த தென்க.

தான்தனிச் சொல் பெற்று நான்கடியுடன் நடந்த தாகலின், இக் குறிப்பான் இந்நூல் கூறு மொப்பற்ற ஞானமும் சுத்தச் சரியை சுத்தக்கிரியை சுத்தயோகம் சுத்தஞானம் என நான்கு பாதத்தோடு நடப்ப தெனக் குறித்த தென்க.

தான் ஒருஉத் தொடையொடு முத் தொடையா னியன்றதாகலின், இக்குறிப்பான் இந்நூற் சுருதி குரு அனுபவ மென்னு மூன்று மொத் தியன்ற தெனக் குறித்த தென்க.

அல்லதூஉம், இச் செய்யுளடி நேரடியாய் விதித்த வெழுத் தெல்லையி னிகவாது நிற்றலின், இக் குறிப்பான் இந் நூல் மெய் வீட்டி னெறித்தாய் அவ்வீஇட்டி னெறிக் கெல்லையாய ஞானத்தினிகவாது நின்ற தெனினுமா மென்க. எல்லை என்னெனின், "பத்தெழுத் தென்ப நேரடிக் களவே, யொத்த நாலெழுத் தொற்றலங் கடையே" {31} யென்ப வென்க. இங்ஙனங் குறித்தற் கன்றே இச் செய்யு ளீற் றடியி நூற் பெயரை வேறடை கொடாது தனிமையி னிறுத்திய தென்க.

இச் செய்யுள் சிறப்புப் பாயிரத்ததாயி னப்பாயிரத்திலக்கண மிதனு ளிருந்தவா றெங்ஙன மென்னின்: வள்ளலென்பதனா லாசிரியர் பெயரும், குருராயன் வாது வென்ற சம்பந்தன் வள்ளன் மலர்த்தா டலைமேல் வைத் துரைத்தா னென்பதனான் ஞானாசாரியராகிய பிள்ளையா ரருளுபதேச வழித்தென வுட்கொளப்படுதலின் வழியும், இந்நூற்றொடர் தமிழ்த் தொட ராகலி னித் தமிழ் வழங்கு நிலமே யிந்நூல் வழங்கு நிலமெனக் கருதப்படுதலின் எல்லையும், ஒழிவிலொடுக்க நூலென்பதனால் நூற்பெயரும், ஒழிவிலொடுக்க மென அன்மொழித் தொகைப் பெயர் மாத்திரையி னில்லாது நூலென விரித்தமையினிந் நூலுந் தொகை விரியுடைய தெனக் கருதப்படுதலின் யாப்பும், உள்ளத் தழிவி லென்பதனாற் கருதிய பொருளும், அன்பரெலாம் உண்ணவென்பதனால் கருதிய பொருளும், அன்பரெலாம் உண்ணவென்பதனால் அன்பரெலா முணற்பொருட் டிஃதியற்றுகவென் றுள்ளெழுந் தெதிரிட்டு நின்றது ஆசிரியரது பெருங்கருணை யெனக் கருதப்படுதலிற் கேட்போரும், உள்ளத் தழிவி லடுக்குந் தே னென்பதனாற் பயனும் புலப்படு மாகலின், அவை யிருந்தவா றிங்ஙன மென்க.

{31. தொல்காப்பியம், செய்யுளியல், 38.}



RangaRakes tamilnavarasam.com

இப்பாயிரச் செய்யுள் முற்காலத்தது,
இவ்வுரை சி.இராமலிங்க பிள்ளையவர்களாற் செய்யப்பட்டது,
ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்தி முற்றிற்று.

சிதம்பர சுவாமிகளின் உரையில் வரும் அருஞ்சொற்கள் சிலவற்றிற்குப் பொருளெழுதி அதனை 'இந்நூலுரை பாடத்திற் சிற்சில இடங்களிலுள்ள மறை சொற்பொருட்குத் தெளி சொற் பொருள்' என்ற தலைப்புடன் பாயிரவிருத்தியை அடுத்து அச்சிட்டிருக்கின்றார்கள். நூலுள் ஆங்காங்கே அடிக்குறிப்புகளையும் அமைத்துள்ளனர். நூலிறுதியில் 'அமைத்துக்கொளல்' என்ற தலைப்பில் சிற்சில விளக்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளன.

அடிகளாற் பதிப்பிக்கப்பெற்ற நூல்களுள் இதுவே முதலாவதாகும். இதனைப் பதிப்பிக்கும்போது அடிகட்கு அகவை இருபத்தெட்டு. அவ்விளம் பருவத்திலேயே அடிகள் சிறந்த ஞான நூல்களை ஆராய்ந்து பதிப்பிக்கும் ஆற்றல் பெற்றிருந்தனரென்பது இதனாலும் அவர்கள் 1857-இல் பதிப்பித்த சின்மய தீபிகைப் பதிப்பாலும் விளங்கும்.

**நிட்டானுபூதி உரைக்குச் சாற்றுக்**
**<u>கவியளித்தது - 1851</u>**

நிட்டானுபூதியை அருளிச்செய்த ஆசிரியர் திருக் கைலாய பரம்பரைத் திருக்கோவலூர் ஆதீனம் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தின் பிரமத குருமூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் ஆவர். குமாரதேவரும் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளும் இவரது சம காலத்தவர்கள். நிட்டானுபூதி சிறந்த அனுபூதி நூல். 91 செய்யுள்களை உடையது. இந்நூலுக்கு உரை செய்தவர் முத்துக்கிருஷ்ணப் பிரம்மம். இவரது தந்தையார் அருணாசல செட்டியார். தாயார் ருக்மணி அம்மாள். இவர் 1815 ஆம் ஆண்டு யுவ வரூ ஆவணி மீ 14உ திங்கட்கிழமை ஸ்ரீ ஜெயந்தி நாளில் பிறந்தார். அரசாங்கப்பணியாளராக இருந்து விலகினார். இவர், சுத்த அத்வைத வேதாந்தாசாரியராகிய திருமூலர் மரபில் எழுந்தருளிய முத்துராமப்பிரம்மத்தின் மருகர். சீடரும் ஆவர். அவரது திருக்கூட்டத்துத் தலைவரில் இளவரசுப் பட்டம் பெற்றவர். சாரம் பொதியை நாயகர் சபையின் முதற் பட்டம் பெற்றவர். சாரம் பொதியை நாயகர் சபையின் முதற் பட்டம் பெற்றவர். சென்னை அருணாசலீசுவரன் பேட்டையில் அருணாசலீசுவரர் கோயிலுக்கு எதிரே 224ஆவது கதவு எண்ணுடைய திருமடத்தில் இவர் இருந்தார். தருமச்சாலைத் தொடக்கவிழாவிற்கு வந்து சிறப்பிக்குமாறு அடிகள் வரைந்தருளிய திருமுகத்திற்கு இவர் மறுமொழியாக எழுதிய கடிதம் இந்நூலில் பின்னோரிடத்து எடுத்துக்காட்டப்பெறும். இவர் தன் ஞானகுருவின் கட்டளைப்படி 1847-இல் நிட்டானுபூதி உரையை இயற்றினார். அவ்வுரை 1851-இல் (விரோதிகிருது, வரூ மார்கழி மீ) அச்சாயிற்று. இவ்வுரை மிகச்சிறத்த உரை. 91 நூல்களிலிருந்து 410 செய்யுகளை மேற்கோளாக உரையாசிரியர் எடுத்துக் காட்டுகிறார். இவ்வுரைக்கு அடிகள் சாற்றுக்கவி யொன்றை வழங்கியருளினர். அது வருமாறு:

**நலங்கொள்சிவ யோகமண நாற்றிசையு மணக்கும்**



RangaRakes tamilnavarasam.com

**ஞானமணங் கந்திக்கு மோனமண நாறும்**
**விலங்கலில்சித் தாந்தமணம் பரிமளிக்கும் இன்பா**
**வேதாந்த மணங்கமழும் வேதமணம் வீசும்**
**நலங்கொளுமெய் யத்துவிதத் திருமணமும் பரவும்**
**தனிமுத்துக் கிருட்டினப்பேர் தங்கியநம் பிரமம்**
**வலங்கொளுநன் னிட்டானு பூதியெனு நூற்கே**
**வாய்மலர்ந்த வுரையெனுமோர் மாமலரி னிடத்தே. {32}**

## மனுமுறை கண்ட வாசகம் இயற்றியது - 1854

உரைநடை நூல்கள் அரிதாகத் தோன்றத் தொடங்கிய அக்காலத்தில், மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்னும் இரண்டு உரைநடை நூல்களை அடிகள் எழுதியருளினார்கள்.

உரைநடையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றி இங்கு சிறிது காண்பது பொருந்துவதாகும். சங்க நூல்கள் அனைத்தும் செய்யுட்களே. காப்பியங்களுள் செய்யுளோடு உரைநடையும் விரவி வருவதுண்டு. இது

**தொன்மை தானே**
**உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே**

என்னும் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தாற் பெறப்படும். இச்சூத்திரத்திற்கு உரையெழுதும் பேராசிரியர் 'தொன்மை யென்பது உரை விரா அய்ப் பழைமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது, அவை பெருந் தேவனாராற் பாடப்பட்ட பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன' என்றெழுதுகின்றார். 'சிலப்பதிகாரமும் இதன் பாற்படும்' என்றார் நச்சினார்க்கினியர். பெருந்தேவனார் பாரதமும் தகடூர் யாத்திரையும் இறந்துபட்டன. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக இப்போது சிலப்பதிகாரம் ஒன்றே உள்ளது. சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பதை

**உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்**
**உரைசா லடிக ளருள மதுரைக்**
**கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்**

என்னும் சிலப்பதிகாரப் பதிகச் செய்யுளடிகளால் அறியலாம். சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று கூறப்பட்ட போதிலும், அதன் உரைபெறு கட்டுரை, வாழ்த்துக் காதையின் உரைப்பாட்டுமடை ஆகிய சிறு பகுதி மட்டுமே உரைநடை. மற்றைப் பெரும் பகுதி செய்யுளே. பெரும்பாலும் செய்யுளாகவும், மிகச் சிறுபான்மை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகவும் அக்காலத்தில் நூல்கள் செய்யப்பட்டனவே தவிர தனி உரை நடை நூலாக யாதும் எழுதப்பட வில்லை. இடைக்காலத்தில் சங்க நூல்களுக்கும், காப்பியங்களுக்கும், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களுக்கும் உரைகள் எழுதப்பட்டன. மேலை நாட்டார் தமிழகத்திற்கு வந்த பின்னரே தனி உரை நடை நூல்கள் தோன்றத் தொடங்கின. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளரத் தொடங்கிற்று. மேலை நாட்டினின்றும் சிறியனவும் பெரியனவுமான உரைநடை நூல்களை எழுதினர். அவர்களது சமயம் பரவ இது பெருந்துணையாயிருந்தது.



RangaRakes tamilnavarasam.com

இதன் பின் நம்மவர்களும் உரைநடை நூல்களை எழுதத் தலைப்பட்டனர். வின்ஸ்லோ என்னும் ஐரோப்பியர் எழுதிய தமிழ், ஆங்கில அகராதியின் முன்னுரையில் அவர் அக்காலத்திய உரைநடையைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார். "தமிழில் உரைநடைஅ இன்னும் உருவாகவில்லை. அதனைச் சரியாக உருப்படுத்துவதற்கு அறிஞர்கள் செய்து வரும் முயற்சிகள் நல்ல பயன் தரும். சுதேசிகள் விரைந்து செய்யுள் செய்பவராயிருந்தும் ஒரு பக்கமாவது உரைநடை யெழுத இயலாதவர்களாயிருக்கின்றார்கள்," என அவர் கூறுவதனின்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் உரைநடை நிலையை நாம் அறியலாம். பிரதாப முதலியார் சரித்திரத்தின் ஆங்கில முன்னுரையில் ஆசிரியர் மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள் தமிழ் உரைநடையைப்பற்றிக் கூறுவனவும் ஈண்டறியத் தக்கதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் உரைநடை வளர்ச்சியில் ஆறுமுக நாவலரும், வேதநாயகம் பிள்ளையும், இராமலிங்க அடிகளும் குறிப்பிடத்தக்கோராவர். ஆறுமுக நாவலர் பால்பாடம், சைவ வினாவிடை, பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம் ஆகிய உரைநடை நூல்களைச் செய்தார். வேதநாயகம் பிள்ளை பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம் என்னும் இரு நவீனக் கதைகளை (நாவல்) உரைநடையில் எழுதினார்.

அடிகள் மனு முறை கண்ட வாசகம் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்றா இரண்டு உரைநடை நூல்களை எழுதியருளினார்கள். மனுமுறை கண்ட வாசகம் அடிகள் காலத்திலேயே பதிப்பிக்கப்பட்டது. ஜீவகாருண்ய ஒழுக்கம் அடிகளது சித்திக்குப் பின்னர் அச்சாயிற்று. அடிகள் தமது ஒழிவொலொடுக்கப் பதிப்பில் எழுதிய பாயிர விருத்தியும், தொண்டை மண்டல சதகப்பதிப்பில் எழுதிய நூற் பெயரிலக்கணமும் உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கமும் இன்ன பிறவும் அடிகளின் உரைநடைத் திறத்தைக் காட்டுவனவாம்.

## மனுமுறை கண்ட வாசகம்

மனுமுறை கண்ட வாசகம் என்பது, 'வாயிற் கடைமணி நடுநா நடுங்க ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான் தன் அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோனா'கிய மனுச்சோழன் முறை செய்த வரலாற்றைக் கூறுவது. பெரிய புராணத்துள் வரும் மனுச்சோழர் வரலாற்றை விரித்து 'மனுமுறை கண்ட வாசகம்' என்ற உரைநடை நூலை அடிகள் எழுதியருளினார்கள். இந்நூலுக்கு மனுமுறைகண்ட வாசகம் என அடிகள் பெயரிட்டதே அழகாகும். பெரிய புராணத்துள் 'திருநகரச்சிறப்பில்' மனுச்சோழர் வரலாறு கூறப்படுகிறது. சிலபதிப்புகளில் திருநகரச்சிறப்பு என்ற தலைப்புக்குப் பதிலாக 'மனுநீதி கண்ட புராணம்' என்ற தலைப்புக் காணப்படுகிறது. சமாஜப்பதிப்பில் 'திருநகரச் சிறப்பு' என்றே இருக்கிறது. 'இப்பகுதியின் தலைப்பு மேற்குறித்த படியும் திருவாரூர்ச் சிறப்பென்றும், மனுநீதி கண்ட புராணம் என்றும் பிரதிகளில் வெவ்வோறாகக் காணப்படுகிறது' என்று சமாஜப் பதிப்பில் திருநகரச் சிறப்பின்கீழ் அடிக் குறிப்பெழுதப்பட்டுள்ளது. நாவலர் பதிப்பில் இது 'மனுநீதிகண்டபுராணம்' என்ற தலைப்புடன் காணப்படுகிறது. 'மனுநீதி', 'மனுநீதிச்சோழன்' என்பதே பெரு வழக்காயிருந்தும் அடிகள் மனுநீதி கண்ட வாசகம் என்னாது மனுமுறை கண்ட வாசகம் எனப்பெயரிட்டது என்னெனில், நீதியை முறை என்பதே பண்டைத் தமிழ்ச்சான்றோர் வழக்காதலினென்க.

**குறைவி லுடம்பரிந்த கொற்றவன் முன்வந்த**
**கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானை.**

**-சிலப்பதிகாரம், 29 அம்மானைவரி**

**மகனை முறை செய்த மன்னவன்**

**-மணிமேகலை, 22 210**

என்ற தொல்லோர் வழக்குகளைக் காண்க. திருவள்ளுவரும் அரச நீதியை 'முறை' என்றே கூறினார்.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும் -338**

என்பது வள்ளுவர் வாக்கு. இவற்றையெல்லாம் நன்குணர்ந்த பெருமானாகிய அடிகள் தமது நூலுக்கு மனுமுறை கண்ட வாசகம் எனப்பெயரிட்டார்கள்.

இந் நூலை எழுதும்படி அடிகளைக் கேட்டுக்கொண்டவர்கள், சென்னை சாஸ்திர விளக்கச் சங்கத்தார் ஆவர். இதுபோன்ற நூற்றொண்டுகள் பலவற்றைச் சாஸ்திர விளக்கச் சங்கத்தார் செய்துள்ளனர். சிதம்பர புராணத்தைப் பதிப்பிக்கும்படி மதுரை ஆதீனம் சிதம்பர சுவாமிகளைக் கேட்டுக்கொண்டவர்கள் இச் சாஸ்திர விளக்கச் சங்கத்தைச் சார்ந்த சைவ சித்தாந்த சபையார்களேயாவர்.

மனுமுறைகண்ட வாசகம் முதன் முதலாக 1854-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அச்சிடப்பட்டது. அப்பதிப்பின் முகப்புப் பக்கத்திற்காண்பன பின்வருமாறு:

உ சிவமயம் திருச்சிற்றம்பலம் மனுமுறை கண்ட வாசகம் இஃது பலருக்கு முபயோகமாகச் சாஸ்திர விளக்கச் சங்கத்தார் கேட்டுக்கொண்டபடி மநுநீதி கண்ட புராணத்தை விரிவுள்ள வாசக நடையாகச் சிதம்பரம் இராமலிங்கப் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டு பாளையம் சுப்பராயச் செட்டியாரவர்களால் மேற்படி சங்கத்தாரவர்களது வித்தியானந்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. ஆனந்த வரு ஆனி மீ.

மனுமுறை கண்ட வாசகத்திற்கும், பெரிய புராணத்திலுள்ள மனுநீதி கண்ட புராணத்திற்கும் கதைப் போக்கில் சிற்சில வேறுபாடுகள் உள்ளன. விதிவிடங்கள் உலாப் போனதாகப் புராணம் கூற, அவன் சிவதரிசனத்திற்குப் போனதாக வாசகம் கூறும் தேர்க்காலில் அடிபட்டிறந்த கன்றின் தாய்ப்பசு வருந்துவதைக் கண்டு வீதிவிடங்கன் பிராயச்சித்தம் செய்து கொள்ளச் சென்றான். என்று புராணங்கூற, கன்றிறந்து கிடக்குமிடத்தை விட்டு வீதிவிடங்கன் சென்ற பின்னரே, தாய்ப்பசு கன்றைத் தேடிவந்து வருந்தியது என்று வாசகம் கூறும். இன்னும் இதுபோன்ற சில வேறுபாடுகளும் உள்ளன. இவை நூலாசிரியர் என்ற முறையில் அடிகளால் புனைந்து கூறப்பட்டனவாகும். பெரிய புராணத்தில் திருநகரச் சிறப்புக் கூறப்புகுந்த சேக்கிழார் திருவாரூரிலிருந்து அரசோச்சிய மனுச்சோழர் வரலாற்றைச் சுருங்கக் கூறுகின்றார். அடிகள் அதனையே விரித்துத் தனி நூல் செய்யப் புகுந்தாராதலின்



RangaRakes tamilnavarasam.com

அதற்கு வேண்டிய சில மாறுதல்களைச் செய்து கொண்டார்களெனலாம். பெரிய புராணத்தின் மனுநீதி கண்ட புராணத்தை முத நூலாகக் கொள்ளின், அடிகளின் மனுமுறை கண்ட வாசகம் வழி நூலாகும். அன்றிப் பழைய இலக்கியங்களில் மனுச் சோழர் வரலாற்றுக் குறிப்புகளாகக் காணப்படுவனவற்றை முதனூற் கருத்தாகக் கொள்ளின், சேக்கிழாரின் புராணத்தை வழி நூலாகவும் அடிகளின் வாசகத்தைச் சார்பு நூலாகவும் கொள்ளலாம். இங்ஙனம் கொள்ளல் சிறந்ததன்று. சேக்கிழாரின் புராணத்தை முதல் நூலாகவும் அடிகளின் வாசகத்தை வழி நூலாகவும் கொள்ளலே சிறந்ததாம். அடிகள் ஏற்படுத்திக்கொண்ட மாறுதல்கள் 'முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப்பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி' யதாம்.

இந்நூலுள், 'தீராக்குறைக்குத் தெய்வமே முடிவு', இளங் கன்று பய மறியாது,' 'எண்ணம் பொய்யாகும், ஏளிதம் மெய்யாகும்,' 'கும்பகோணத்துப் பள்ளன் கொள்ளைகொண்டுபோக தஞ்சாவூர்ப் பார்ப்பான் தண்டங் கொடுத்தான்', 'எழுத்தறியாதவன் ஏட்டைச் சுமந்தது போல,' 'காலம் போகும் வார்த்தை நிற்கும்,' 'எரியுங் கொள்ளியை ஏறத் தள்ளுவதுபோல,' 'எரியும் நெருப்பில் நெய் விடுவது போல,' 'கப்பல் உடைந்து கலங்கும் போது தெப்பமும் உடைந்தது போல,' 'கொண்ட மனையாளிருக்கக் கூலிவாங்க வந்தவளைத் தாலி வாங்கச் சொன்னதுபோல' என்னும் பழமொழிகளும் இவைபோன்ற பிறவும் வந்து நமக்குப் பேரின்பம் பயப்பனவாம்.

இம்மனுமுறை கண்ட வாசகம், இளையரும், முதியோரும் சிற்றறிவினோரும் பேரறிஞர்களும் போற்றிப் படித்து மகிழவேண்டிய தொன்றாகும். இதன்நடைச் சிறப்பை அறிவதற்காகச் சிலபகுதிகளை ஈண்டுத் தருகின்றோம்.

கடல் சூழ்ந்த உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலுஞ் சிறப்புடையதாய், காவிரி என்னுந் தெய்வத் தன்மையுள்ள நதியினால் எந்தக் காலத்திலுங் குறைவு படாத நீர்வளப்பமுடையதாய், வாழைச்சோலை பலாச்சோலை மாஞ்சோலை தென்னஞ்சோலை கமுகஞ்சோலை கருப்பஞ்சோலை முதலாகிய பலனுள்ள சோலைகள் அணி அணியாக ஒன்றையொன்று சூழ்ந்தோங்க அசோகு குருக்கத்தி சண்பகம் பாதிரி முதலான விருக்ஷங்களால் நெருங்கி, வண்டுகள் பாடுகின்ற மலர்ச்சோலைகளும் தாமரைத் தடாகங்களும், நீர் நிறைந்து அல்லி நீலம் முதலான புட்பங்கள் மலர்கின்ற ஓடைகளும் பொய்கைகளும் ஏரிகளும் குளங்களும் பலவிடங்களிலுமுள்ளதாய், செந்நெல் முதலாகிய பயிகள் மாறாது முப்போகமும் விளைகின்ற குறைவற்ற விளைவையுடைய வயல்கள் நெருங்கியுள்ளதாய், சிதம்பரம் பஞ்சநதம் மத்தியார்ச்சுனம் சம்புகேச்சுரம் முதலான திவ்வியக்ஷேத்திரங்கள் இடையிடையிலுள்ளதாய், இல்லற தருமத்தில் எள்ளவும் பிழை படாது செல்வத்திலும் கல்வியிலும் நிறைவுள்ள குடிகளுக்கிடமானதாய், பல வள்ளப்பங்களுங்கொண்டு பூமிதேவிக்கு முகம்போல விளங்குகின்ற சோழ தேசத்தில்; பாதாள லோகத்தைப் பார்த்திருக்கின்ற ஆழமுள்ள அகழியினாற் சூழப்பட்டு இந்திரலோகத்தை எட்டிப் பார்க்கின்ற உன்னதமுள்ள கோபுரங்களையுடைய மதிலும் உய்யானம் நந்தவனம் பூஞ்சோலை முதலானவைகளும் தெய்வதீர்த்தம் பிரமதீர்த்தம் வசந்த வோடை. செங்குவளையோடை முதலான நீர்நிலைகளுமுள்ளதாய், தேர்நிலைகள் யானைக் கூடங்கள் குதிரைப்பந்திகள் சேனையிடங்கள் ஆஸ்தான மண்டபம் அரச மண்டபம் விசித்திர மண்டபம் விநோத மண்டபம் நியாய மண்டபம் நிருத்த மண்டபம் கல்வி மண்டபம் கணக்கறி மண்டபம் பாடல் மண்டபம் பரிசன மண்டபம் சித்திர மண்டபம்



RangaRakes tamilnavarasam.com

தேவாசிரிய மண்டபம் சித்திரத்தெற்றி சிலம்பக்கூடம் ஆயுதசாலை அமுத சாலை அறச்சாலைகளும் உடையதாய், ரத்ன பீடிகைகளும் கனக மாளிகைகளும் பளிங்கு மாடங்களும் மணிப் பந்தல்களும் மகர தோரணங்களும் மங்கல கோஷங்களுமுள்ள கடைவீதி கணிகையர்வீதி சூத்திரர்வீதி வைசியர்வீதி அரசர் வீதி அந்தணர்வீதி ஆதிசைவர்வீதி சைவர்வீதி வைதிகர்வீதி தபோதனரிருக்கை சைவமுனிவர்மடம் உட்சமயத்தார் உறையுள் முதலான வளப்பங்களை உடையதாய், தியாகராஜப் பெருமான் எழுந்தருளிய கமலாயம் என்னுந் திருக்கோயிலை உள்ளே உடையதாய், சோழராஜர்கள் பரம்பரையாக அரசாட்சி செய்வதற்கு உரிய ராஜதானியாய், நிலமகள் திருமுகத்திலிட்ட திலகம்போல் விளங்கிய திருவாரூர் என்ற நகரத்தில் ... ... .... .... .... ...

**-திருவாரூர் நகர வருணனை**

அவர் ஆளுகைக்குட்பட்ட உலகங்களில், பூவே பறிபடுவது, புனலே சிறைபடுவது, காற்றே அலைபடுவது, கல்லே கடினமுடையது, மாவே வலுப்படுவது, வாழையே குலைபடுவது, வண்டே மதுவுண்பது, பந்தே அடிபடுவது, பரியே கட்டுண்பது, நெல்லே குத்துண்பது, நெற்கதிரே போர்படுவது, வயலே வளைபடுவது, மாதரிடையே குறைபடுவது, தரித்திரமே தரித்திரப்படுவது, துக்கமே துக்கப்படுவது, பொய்யே பொய்படுவது; இவையல்லாமல், பொருள் பறிக்கப்படுவோரும், சிறைச்சாலையில் வைக்கப்படுவோரும், பகைவரால் அலைக்கப்படுவோரும், கடின மனமுள்ளவர்களும், வடுப்படுவோரும், குலைபடுவோரும், மதுவுண்போரும், அடிபடுவோரும், கட்டுண்போரும், குத்துண்போரும், போரிற்படுவோரும், வளைபடுவோரும், குறைபடுவோரும், தரித்திரப்படுவோரும், துக்கப்படுவோரும், பொய்படுவோரும், வேறேயில்லாமல் மேன்மையே விளங்கியிருந்தது.

**-மனுச் சோழர் ஆட்சிச் சிறப்பு**

அப்பொழுது, இரதி இந்திராணி முதலான தேவ மாதர்களை யொத்த அவ்வீதியிலுள்ள ஸ்திரீ ஜனங்களெல்லாம் அப்புத்திரனைக் கண்டு மணமுள்ள மலரை வண்டுகள் சூழ்ந்தது போலவும் இனிய சுவையுள்ள தேனை ஈக்கள் சுற்றியது போலவுஞ் சூழ்ந்துகொண்டு, கலை நெகிழ்ந்தும் கைவளை சோர்ந்தும் கண்ணீர் ததும்பியும் குழலவிழ்ந்தும் கொங்கைகள் விம்மியும் பசலை போர்த்தும் மையலடைந்த மனத்தவர்களாய், "கரும்பை வில்லாகவுடைய காமனைப்பார்க்கிலும் என் மடங்கு அழகுடைய இளவரசே கன்னிகைப் பருவம் உள்ளவளே நான்: என்மேற் கடைக்கண் செய்யாயோ?" என்றும் "எழுதப்படாத சுந்தர வடிவமுள்ள இளங்காளையே! புருஷர்முகம் பாராத பூவையே நான்: என்னைப் புணர்ந்து போகாயோ?" என்றும், "கண்களுக்கு நிறைந்த கட்டழகனே! காவலழியாத காரிகையே நான்; என்னைக் கலந்த போகாயோ?" என்றும், "சுபலக்ஷணங்கள் நிறைந்த சுந்தர வடிவனே! கல்யாணமில்லாத கன்னிகையே நான்: என்மேற் கருணை செய்யாயோ?" என்றும், "மனுச் சக்கரவர்த்தி பெற்ற மதயானையே! சிறு வயதுள்ளவளே நான்: என்னைத் திரும்பிப்பாராயோ?" என்றும், "அதிசயிக்கத்தக்க அழகனே! நிறை யழியாத நேரிழையே நான்: சற்றே நின்று போகாயோ?" என்றும், "இந்த ராஜபுத்திரனுக்கு வீதிவிடங்கனென்று பெயரிட்ட பெரியோர்க்கு அனந்தந்தரம் அடிக்கடி தெண்டனிட்டாலும் போதாதே" என்றும், "வாசமுள்ள தயிலம் பூசி மணமுள்ள மலர்மாலை சூழ்ந்து வாழைப்பூ இதழ்போல வகிர்ந்து குயில் முகம் போல முடியிட்டுப் பளிங்குச் சிமிழ்க்குள்ளிருந்து தோன்றுகின்ற பருத்த



RangaRakes tamilnavarasam.com

நீலக்கல்போல் தாவள்ளியமான தலைச் சாத்துக்குள்ளிருந்து சிறுகித் தோன்றுகின்ற குடுமியும், பார்க்கின்றவரது பார்வைக்கு இன்பந் தருகின்ற தோற்றமும், மாறாத மலர்ச்சியும் மனோரஞ்சிதமான அழகும் குளிர்ச்சியும் ஒளியும் பெற்றுச் செந்தாமரை மலர்போல் விளங்கும் முகமும், கருமை மிகுந்து செம்மை கலந்து காருண்யந் ததும்பி இங்கிதமறிந்து சிறிதேயிமைத்து மனோரம்மியமாய் மலர்போன்று நீண்ட கண்களும், ஒளிகொண்டு உயர்ந்து நீண்ட நாசியும், குண்டலமணிந்து நீண்டு அகன்ற செவியும், திரிபுண்டரந் தரித்துத் திலகந் தீட்டி அழகு பெற்று அகன்று உயர்ந்த நெற்றியும், பவளம் போற் சிவந்து திரண்ட உதடும், முல்லை யரும்புகள் போலச் சிறுகி நெருங்கி ஒளிவீசும் பற்களும், குறுகி மென்மையாகிச் சிவப்பேறிய நாவும், கண்டரசம் முதலான ஆபரணங்களை அணிந்து வலம்புரிச் சங்கு போல் திரண்ட கண்டமும், மத்தளம் போலத் திரண்டு மந்தர மலைபோல உயர்ந்து கண்டோர் கண்களையுங் கருத்தையுங் காட்டுகின்ற சுகந்த மாலையணிந்த வெற்றியுள்ள தோளும், வீணைத்தண்டு போல நீண்டு தாழ்ந்து கடகமணிந்த கையும், தாமரை மலர்போற் சிவந்து மிருதுவாகி மழைபோற் சொர்ணம் பொழிகின்ற முன் கையும், விளக்க மிகுந்து பதக்க முதலானவை அணிந்து களப கஸ்தூரிகள் பூசிக் கண்ணாடிபோல அகன்று மலைபோல உயர்ந்த மார்பும், சிறுகி உயர்ந்த வயிறும், ஆழ்ந்து அழகுபெற்ற உந்தியும், யானைத் துதிக்கை போன்று திரண்ட தொடையும், வட்டந் தோன்றாது தசைகொண்டு செழிப்புள்ள முழங்காலும், திரண்டு நீண்ட கனைக்காலும், தாமரை மலர் போன்று வீரகண்டையணிந்த கால்களும், வரம்பு கடவாத வடிப்பமுள்ள வடிவமுடைய இந்த இராஜபுத்திரனைக் கண்டு களிப்பதற்கு நானென்ன தவஞ் செய்தேனோ!" என்றும், "இராஜசிங்கமாகிய இந்தக் குமரனைச் சிருஷ்டித்தவன பிரமதேவனோயானால் இவனழகுக்குத் தக்க மாதினை இனி எங்கே உண்டு பண்ணுவானோ!" என்றும், "இவ்வழகனது வடிவைக் கண்டால் உருகாத கருங்கல்லும் உருகுமானால் பேதமையுள்ள பெண்கள் மனம் உருகாதிருக்குமோ!" என்று, "இவனது பூர்ணசந்திர விம்பம் போன்ற புன்னகையொன்றுமே மூன்றுலகத்திலுமுள்ள பெண்களுக்கெல்லாம் பித்தேற்றுமே!" என்றும் பலவிதமாகத் தனித்தனி சொல்லி மோகங்கொண்டு நின்றார்கள்."

**-வீதி விடங்கன் சிவதரிசனஞ் செய்யச் செல்லுதல்**

இந்தப் பிறப்பில் என் புத்தியறிந்து ஒரு தீங்குஞ் செய்ததில்லையே! இந்தப் பிறப்பில் இல்லாவிட்டாலும் முற் பிறப்பிலே-

**நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ!**
**வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ!**
**தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ!**
**கலந்த சிநேகரைக் கலகஞ் செய்தேனோ!**
**மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ!**
**குடிவரி யுயர்த்திக் கொள்ளை கொண்டேனோ!**
**ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ!**
**தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ!**
**மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனோ!**
**உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தேனோ!**
**களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனோ!**
**பொருளை இச்சித்துப் பொய் சொன்னேனோ!**
**ஆசைகாட்டி மோசஞ் செய்தேனோ!**

வரவு போக்கொழிய வழியடைத்தேனோ!
வேலையிட்டுக் கூலி குறைத்தேனோ!
பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ!
இரப்போர்க்குப் பிச்சை இல்லையென்றேனோ!
கோள் சொல்லிக் குடும்பங் குலைத்தேனோ!
நட்டாற்றிற் கையை நழுவவிட்டேனோ!
கலங்கியொளித்தோரைக் காட்டிக்கொடுத்தேனோ!
கற்பழிந்தவளைக் கலந்திருந்தேனோ!
காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ!
கணவன்வழி நிற்போரைக் கற்பழித்தேனோ!
கருப்பமழித்துக் களித்திருந்தேனோ!
குருவை வணங்கக் கூசிநின்றேனோ!
குருவின் காணிக்க கொடுக்க மறந்தேனோ!
கற்றவர் தம்மைக் கடுகடுத்தேனோ!
பெரியோர் பாட்டிற் பிழைசொன்னேனோ!
பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ!
கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத்தேனோ!
ஊன்சுவையுண்டு உடல் வளர்த்தேனோ!
கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ!
அன்புடையவர்க்குத் துன்பஞ் செய்தேனோ!
குடிக்கின்ற நீருள்ள குளந் தூர்த்தேனோ!
வெய்யிலுக் கொதுங்கும் விருக்ஷ மழித்தேனோ!
பகைகொண்டு அயலார் பயிரழித்தேனோ!
பொதுமண்டபத்தைப் போயிடித்தேனோ!
ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ!
சிவனடியாரைச் சீறி வைதேனோ!
தவஞ் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ!
சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனோ!
தந்தைதாய் மொழியைத் தள்ளிநடந்தேனோ!
தெய்வ மிகழ்ந்து செருக்கடைந்தேனோ!
என்ன பாவம் செய்தேனோ! இன்னதென்றறியேனே!

-மகனது செய்கை கேட்ட மதுச்சோழன் தன் செங்கோல் வளைந்ததெனப் பலவாறு வருந்துதல்

கரும்பு கசப்பென்றால் எட்டிக்காய் போற் கசப்பென்றும், தாயைக் கொலைசெய்வது தக்கதென்றால் வேதத்தின் முதற்காண்டத்தில் விதித்திருக்கின்ற தென்றும், வெள்ளத்திற் கல் மிதக்குமோவென்றால் ஆற்றில் அம்மி மிதக்கக் கண்டோமென்றும், காக்கை வெளுப்பென்றால் நேற்றைப் பொழுதில்நிற்கக் கண்டோமென்றும், கல்லின்மேல் நெல்லு முளைக்குமென்றால் கொத்தாலாயிரங் குலையாலாயிரமென்றும், கள்ளனைப் பிடிக்கலாமோவென்றால் பிடித்தால் பெரும்பாவமல்லவோ வென்றும், பொய் ஆயிரமட்டுஞ் சொல்லலாமோவென்றால் ஐயாயிரமட்டுஞ் சொல்லலாமென்று விதியிருக்கிறதென்றும், பெண் சாதியுள்ளவனுக்குப் பிள்ளை கொடுப்பது ஆரென்றால் ஐயா! பெண் கொடுத்தவனே பிள்ளை கொடுக்க வேண்டுமென்றும், ஒருவன் மனையாள் மற்றெருவனைக் கூடலாமோ வென்றல் அடக்கத்தில் ஆயிரம் பேரோடு கூடினாலுங் குற்றமில்லை



RangaRakes tamilnavarasam.com

யென்றும் இந்தக் கழுவில் இவனையேற்றலாமோ வென்றால் கழுவுக்குத் தக்க கனமில்லையென்றும், என் பிள்ளையும் எச்சரிக்கைக்கரன் பிள்ளையும் ஒருவனை யொருவன் உதாசினமாகத் திட்டினாராம் இதற்கென்ன செய்யலாமென்றால் உமது சற்புத்திரன் வாய்க்குச் சர்க்கரையிடவேண்டும் மற்றவன் வாய்க்கு மண்ணிட வேண்டுமென்றும் சொல்லுகின்ற துர்மந்திரிகளைப்போல-ஞாயம் பாராது, நயிச்சிய வார்த்தைகளைச் சொன்னீர்கள் இது கால வேற்றுமையென்றே யெண்ணுகிறேன்."

**-அமைச்சர்கள் சமாதானத்துக்கு மநுச்சோழர் விடை**

அந்தக்ஷணமே நித்திரை நீங்கி யெழுகின்றதுபோல், இளங் கன்றானது உயிர்பெற்று எழுந்து தன் தாய்ப் பசுவினிடத்தில் சென்றாது. மந்திரியும் புதல்வனும் உயிர்பெற்றெழுந்து, ஆண்டவனை வணங்கி அருகே மலந்த முகத்தோடு வந்தனை செய்துகொண்டு மகிழ்ந்து நின்றார்கள். அதுகண்டு அந்நகரத்திலுள்ள ஜனங்களும் மற்றவர்களும் தம்மை யறியாத பெருங்களிப்புடையவர்களாய்ச் சிலர் "அற்புதம்! அற்புதம்! அற்புதம் அற்புதம்!" என்று ஆடினார்கள்; சிலர் "பண்ணிய பூசை பலித்தது! பலித்தது!" என்று பாடினார்கள்; சிலர் "சூரியகுலந்தோன்றியது! தோன்றியது!" என்று துதித்தார்கள். சிலர் "துக்கம் நீங்கியது! சுகம் கிடைத்தது!" என்று துள்ளினார்கள்; சிலர் "குறையெல்லாந் தீர்ந்தது! குறையெல்லாந் தீர்ந்தது!" என்று கொண்டாடினார்கள். சிலர் "கும்பிட்ட தெய்வம் குறுக்கே வந்தது!" என்று குதித்தார்கள்; சிலர் "எம்பெருமான் எதிர்ப்பட்டால் என்ன முடியாது!" என்று எக்களித்தார்கள்; சிலர் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொண்டு ஒரு காத மட்டும் ஓடித் திரும்பினார்கள்; சிலர் "கலக்கந் தீர்ந்தது! களிப்பு வந்தது!" என்று கைகொட்டினார்கள்; சிலர் தோள் தட்டிக்கொண்டும் தொடை தட்டிக்கொண்டும் முகரோமத்தை முறுக்கிக் கொண்டும் முகமலர்ந்துகொண்டும் உடல் நிமிர்த்துக்கொண்டும் உலாவி நின்றார்கள்; சிலர் "வாழ்வு வந்தது!" என்று மனம் பூரித்தார்கள்.

**-கன்றும், இளவரசும் அமைச்சரும் உயிர்பெற்றெழுந்தமை கண்ட மன்னனும் மக்களும் மகிழ்வுறல்**

மனுச்சோழன் தன் மகன் வீதிவிடங்கனைத் தேர்க்காலி லிட்டுக் கொன்று முறை செய்ய முடிவுசெய்து அவ்வாறே கட்டளை பிறப்பிப்பதும் அமைச்சர்கள் அவ்வாறு செய்தல் அவசியமன்று, பிராயச் சித்தம் செய்து கொள்வதே போதும் என்பதும், அரசன் அதனை மறுத்துக்கூறி தனது முடிவை வற்புறுத்துவதுமான இடத்தில், அடிகள் எழுதுவன வெல்லாம் நுட்பமும் திட்பமுமாய்த் தருக்க நடையிலமைந்துள்ளமை காண்க.

## சென்னையிலிருந்த போது பழகிய பெரியோர்கள்

### 1. ஆறுமுக சுவாமிகள்



RangaRakes tamilnavarasam.com

இவர்கள், மதுரைத் திருஞான சம்பந்தரா தீனத்தில் 288-ஆவது குருமகா சந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகத்திருஞான சம்பந்த தேசிகர் ஆவார்கள். அடிகள் சென்னையிலிருந்த காலத்தில் ஆனந்த ஆண்டு புரட்டாசித் திங்கள் இருபத்தோராம் நாளில் (5-10-1854) சுவாமிகளுக்குத் திருமுகமொன்றை வரைந்து விடுத்துள்ளார்கள். 'திருவளர் மார்பன்' என்று தொடங்கும் அத்திருமுகம் நூற்றொன்பது அடிகளால் இயன்ற நிலை மண்டிய ஆசிரியப்பாவாகும்.

ஆறுமுக சுவாமிகளுக்குப் பின் வந்த சாமிநாத தேசிகரும் அடிகளிடம் தொடர்புடையவரெனத் தெரிகிறது. ஆதீன அடியவரான சிதம்பர சுவாமிகள் அடிகளின் நண்பராவார்.

**அடிகள் ஆறுமுக சுவாமிகளுக்கு எழுதிய செய்யுட் கடிதம் வருமாறு:**

**திருவளர் மார்பனுந் திசைமுகத் தவனும்
உருவளர் தேவரு முணர்ந்திடப் படாத
சச்சிதா னந்த சாக்ஷாத் கார
சொச்ச நித்திய சுயம்பிர காச
நிர்க்குண நிச்சல நிமல நிராமய
சிற்குண தற்பர சிற்பர சின்மய
அகள வற்புத வனந்தா னந்த
சகள மத்திய சத்திய சத்துவ
அகண்ட பூரண வருளா னந்த
மகண்ட விண்டல வாணர்கள் வந்தித
தத்துவ சொரூப தத்துவா தீத
தத்துவ காரண தத்துவ ரகித
விச்சுவ சொரூப விச்சுவ காரண
விச்சுவ ரகித விச்சுவா தீத
பிரணவ சொரூப பிரணவ காரண
பிரணவ ரகித பிரணவா தீத
பஞ்சாக் கரப்பொருட் பாங்குறு வடிவ
எஞ்சாக் கருணை யெனுந்திரு வுருவ
நாத வடிவ நாதநா தாந்த
வேத வடிவ நாதநா தாந்த
உள்ளம ரொளிய வொளியினுள் ளொளிய
கள்ளமி லன்பர் கண்ணமர் வெளிய
பெரியதிற் பெரிய பெருங்குணக் கடல
அரியதி லரிய வானாதி போதக
ஆகம வடிவ வாகம முடிவ
ஆகம நிலய வாகம காரண
சைவசித் தாந்த ஸ்தாபகஞ் செய்த
தெய்வ மகத்துவ சிறப்புறு நெறிய
ஞான காரண ஞானமெய்ச் சொருப
ஞான நாடக ஞானசம்பந்த
தேவ தேவ சிவசிவ சிவவென
யாவருந் துதிக்க வினியதென் பாண்டி
நாட்டிடை மதுரா நகர்த்திரு மடாலயத்**



RangaRakes tamilnavarasam.com

தீட்டிய வருளா லெழிலருள் வடிவங்
கொண்டெமை யடிமை கொண்டருள் புரிந்த
தண்டமிழ் மறைமொழி தருந்தனி முதலே
மூவாண் டதனில் மூவுல குந்தொழத்
தேவாண்ட ஞானத் தெள்ளமு தருந்திய
மணியே யென்கண் மணியே சைவ
மணியே தெய்வ மணியே யணியே
முத்துச் சிவிகையின் முளைத்தெழு மிளங்கதிர்
ஒத்துத் தனியமர்ந் தருளிய வொளியே
சைவந் தழைக்கச் சமண்கழு வேறத்
தெய்வநீ றளித்த திருவருட் குன்றே
பிழைத்தலி லென்பைப் பெண்ணுரு வாக
அழைத்தருள் புரிந்த அற்புத வமுதே
சரியை யாதிய சாதுர்ப் பாதமுந்
தெரியநல் லோர்க்குத் தெரித்தருள் தெளிவே
பாலொடு கலந்த பழம்போ லினிக்க
நூலொடு மெய்ம்மொழி நுவன்றருள் பதியே
தவமே தவத்திற் சார்தரும் பயனே
நவமே சாந்த நகைமுக மதியே
செவ்விய கரும்பே தேனே கனியின்
திவ்விய சுவையே தெவிட்டா மருந்தே
அஞ்செழுத் துண்மையை யறிந்திட வடியேன்
நெஞ்சமுழுத் துறவரு ணீள்தயா நிதியே
என்னொரு தாயே யென்னையீன் றோனே
என்னுயிர்க் குயிரே யென்பெரும் பொருளே
என்னுடை யறிவே யென்னுளத் தன்பே
என்னுயர் கதியே யென்னுடைக் குருவே
அடியேன் புரியு மாயிரம் பிழையும்
படியாற் பொறுத்துப் பாங்கருள் பரமே
எல்லாம் வல்ல விறையே யடைந்தவர்
பொல்லாங் கெல்லாம் பொறுத்தருள் பொறையே
முற்று முணர்ந்த முதலே யுலகப்
பற்றை யகன்றநற் பண்பின ருறவே
ஆனசம் பந்தநல் ஆறு முகத்திரு
ஞானசம் பந்த ஞானதே சிகனே
போற்றிநின் சேவடி போற்றிநின் பூம்பதம்
போற்றிநின் றாண்மலர் போற்றிநின் கழற்கால்
குற்றமுங் குணமாக் கொண்டருள் புரியும்
பெற்றிநின் கருணைப் பெரும்பெய லதற்கு
அட்டமாக வனந்தந் தெண்டன்
இட்டமா வடியே னிட்டவிண் ணப்பந்
திருச்செவிக் கேற்றுத் திருவுளத் தெளியேன்
உருச்செவி யறியா வுறுபிழை பொறுத்திட
வேண்டு நின்னருள் வேண்டுநின் கருணை
வேண்டும் வேண்டும் வேண்டு மென்னெனில்
என்னென வுரைக்கே னென்னென வுரைகேன்

பொன்னன நினது பூம்பதந் தரிசித்
தன்பர்க ளெல்லாம் அவ்விடை வாழ
நன்பய னறியா நாயே னொருவனும்
நன்னிதி யனையநின் சந்நிதி யதனில்
மன்னுநின் கருணை வடிவக் காட்சியைத்
தரிசித் தின்பத் தனிக்கட லாடப்
பிரியத் துடனே பெற்றிலா தந்தோ
தகவிலே னெடுநாட் டனித்துச் சேய்மையில்
புருடனைப் பிரிந்த பூவையைப் போல
வாழ்விற் குறைந்து மனந்தளர் வெய்தித்
தாழ்வுறு நாணந் தலைக்கொள நின்றேன்
ஆதலாற் சுவாமிக ளருளிற் புரிந்த
தீதிலாத் திருமுகத் தெய்வந் தன்னை
தரிசித் துள்ளந் தழைத்து வணங்கிப்
பரிசித் தன்பொடு பரவிப் போற்றி
வணங்கி வணங்கி வாசித் துடம்பும்
உயிருந் தழைக்க வுவந்தா னந்தக்
கூத்திது வரையிற் குயிற்றிநிற்கின்றேன்
என்னினு மந்தோ வென்செய்வேன் பிரிந்த
புன்னெறி நினைத்துப் போந்த நாணமும்
அச்சமு மென்னை யடிக்கடி தகைக்க
நச்சிய வித்தனை நாளும் விண்ணப்
பத்திரஞ் செய்து பரவத் தாழ்த்தேன்
குத்திர மனத்துக் கொடியேன் செய்பிழை
மலையினுங் கடலினு மண்ணினும் பெரிதே
நிலையினு மறியா நெடும்பிழை யெந்தாய்
என்செய்தாற் றீருமென் செய்வே னெளியேன்
பொன்செய்தா லன்னநின் பொன்மல ரடியை
இரவும் பகலும் இடைவிடா துன்னிப்
பரவும் பரிசே பரிசென வருளே.

சென்னைப் பட்டணத்தைச்
சார்ந்த மயிலையில்
ஆனந்தவரு புரட்டாசிமீ உகஉ

அடியேன் சிதம்பரம் இராமலிங்கம்

ஆனந்த வரு புரட்டாசிமீ உக உக்குச் சரியா ஆங்கில நாள் 5-10-1854 என ஆ.பா. குறித்துள்ளனர். கடிதத்தின்கீழ் 'சென்னைப்பட்டணத்தைச் சார்ந்த மயிலையில்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் இக்கடிதம் எழுதிய காலத்தில் அடிகள் மயிலையில் வைகினர் எனத் தெரிகிறது. மயிலையில் எவ்வளவு காலம், எங்கு தங்கினர் என்பது தெரியவில்லை. இச்செய்யுட் கடிதத்தை யெழுதுமுன் ஆறுமுக சுவாமிகளிடமிருந்து அடிகட்கு வந்த திருமுகமொன்று கடிதத்தின் 91-97 வரிகளில் குறிக்கப்படுகிறது. அத்திருமுகம் கிடைக்கவில்லை. அடிகட்கும் ஆறுமுக சுவாமிகட்கும் கடிதத்தொடர்பிருந்தமை இதனால் அறியப்படுகிறது. அடிகள் மதுரை சென்றனரா, ஆறுமுக சுவாமிகளைக் கண்டனரா வென்பது தெரியவில்லை. மதுரை



RangaRakes tamilnavarasam.com

யாதீன அடியவராகிய சிதம்பர சுவாமிகளும் அடிகளது நண்பராக விருந்திருக்கின்றனர். ஆதீனகர்த்தரும் அடியவர் ஒருவரும் நண்பராக விருந்தும் அடிகள் மதுரை செல்லாதிரார். அவர்களும் அடிகளை அழையாதிரார். ஆயினும் அடிகள் மதுரை சென்றதாக ஆதாரமில்லை. மதுரை பொருளாக அடிகள் தனிப் பதிகங்களும் செய்யவில்லை.

## 2. தாண்டவராயத் தம்பிரான்

திருவாவடுதுறை யாதீனத் தம்பிரானும் வித்துவானும் ஆகிய இவர் சென்னை கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் திருவாவடுதுறை ஆதீன மடத்தில் இருந்தார். இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்கு நண்பர். மகாவித்துவான் பிள்ளையவர்கள் ஆதீன வித்வானாகியதற்குக் காரணர் இவரே. இவர் சிறந்த இலக்கண இலக்கியப் புலமையுடையவர். ஆதீன கர்த்தராகிய சுப்பிரமணிய தேசிகருக்கு இவரிடம் சிறந்த மதிப்பும் அன்பும் உண்டு. "நாம் வழிபடு தெய்வம் பிரத்தியட்சமாகி, என்ன வேண்டும் என்று கேட்டால் தாண்டவராயத் தம்பிரானவர்களை நாம் பார்க்கும்படி செய்ய வேண்டுமென்று கேட்போம்" என்று அவர் சொல்வதுண்டென ஐயரவர்கள் பிள்ளையவர்கள் வரலாற்றில் குறிப்பிட்டுள்ளனர். (இரண்டாம் பாகம் பக்கம் 251) தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகட்கு, அடிகள் வரைந்த நீண்ட செய்யுட் கடிதமொன்றும் சில பாடல்களும் கிடைத்துள்ளன.

**அணிவளரும் உயர்நெறிகொள் கலைகள்நிறை மதிமகிழ்வை**
**அடையும்ஒளி யுடைய சடையோய்**
**அருளொழுக அமுதொழுக அழகொழுக இளநிலவின்**
**அளியொழுக ஒளிர்மு கத்தோய்**
**அமலநிலை யுறவுமுறு சமலவலை யறவுமுணர்**
**வருள்கருணை மிகுகு ணத்தோய்**
**அடியர்வினை அகலவொரு பரமசுக நிலையருளு**
**மதுகருது திருவு ளத்தோய்**
**அநகசுப விபவசுக சரிதரக சிரகமந**
**வதுல வதுலித பதத்தோய்**
**அகிலசர வசரவப விமிதமித வணுவுமணு**
**வணுவுமிவை யெனவு ரைத்தோய்**
**அகிதவித விவிதபரி சயசகல விகலஜக**
**வரஸரஜ தளமி ழைத்தோய்**
**அகளமன ரமணவபி நிகடவபி நிபிடதட**
**வநதிசய சுகம ளித்தோய்**
**அணுபக்ஷ மிதுசம்பு பக்ஷமிது காண்கவென்**
**றன்புடன் உரைத்த பெரியோய்**
**அதிக்கிராந் தத்தியல்பு திக்கிராந் தத்தியல்பி**
**னமைதியிஃ தென்ற அறவோய்**
**அதிகார போகவில யங்களிரு வகையியல்**
**அறிந்திட வுணர்த்தும் உணர்வோய்**
**அருவமிஃ துருவமிஃ தருவுருவ மிஃதென**
**அறைந்தறி வுறுத்தும் அறிவோய்**



RangaRakes tamilnavarasam.com

அபேதசம் வேதந சுயஞ்சத்தி யியலெலாம்
அலைவற விரித்த புகழோய்
அநநிய பரிக்கிரக சத்திவிளை வெல்லாங்கை
ஆமலக மெனஇ சைத்தோய்
அத்துவா நெறியாறும் ஒத்துவா னெறியா
றடைந்திடுக என்ற பரிசோய்
அவுத்திரியி னுத்தரமு னக்கிசைவு றுத்துதும்
அமர்ந்திடுக என்ற இனியோய்
பணிவளரு நிபுணகண பணகரண பரணவண
பரதயுக சரண புரண
பரம்பர சிதம்பர திகம்பர நிரந்தர
பரந்தர விளங்கு பரம
படகபட தடவிகட கரடகட கரியுரிகொள்
பகவ அரகர வென்னவே
பவன்றகு சிவன்றனை யுவந்தனை சுவந்தனை
பகர்ந்திடுக என்ற அமுதே
பகரகர வுகரபர மகர குண குணிகளுறு
பரிசறிய உறைசெ யரசே
பயன்றரு வயிந்துவ துவந்திகழ் சிவம்புகல்
பதந்தெளிய வருள்செய் இறையே
பதசிகர வகரநெறி யகரநக ரமகரவு
பவயபய நிலைசொன் மலையே
பவந்தெறு நவந்தரு குவம்பரி பவம்பொடி
படும்படி யெனும் புனிதமே
பதியுதவு பதிதனது பரிசுமஃ தடையுமொரு
பசுவியலு மருள்செய் பொருளே
பந்தநிலை யந்தநிலை யிந்தநிலை யென்றுபர
பந்தமொழி தந்த மணியே
படியுமிடர் வடியுமிருள் விடியுமணி மொழிமறைகள்
படியுமென நொடிம ருந்தே
பஞ்சமல கஞ்சுகமு மெஞ்சும்வகை பஞ்சமிலை
பஞ்சமக மென்ற நிதியே
பதிதநெறி விடுகவொரு பதிதனெறி தொடுக வொளி
படரும்வகை யெனுமே னுறவே
பங்கமற வங்குமுள விங்குமுள எங்குமுள
பண்டைவெளி யென்ற வொளியே
பலிதவநு சிதவுசித யுகளவிக பரமிரவு
பகலென விளம்பு வளமே
பன்னிலையு முன்னிலையு நின்னிலையு மென்னிலை
படிந்துவிடு கென்ற நன்றே
திணிவளரு மறிவுகொடு தொடர்வரிது பெரிதுபர
சிவமது வெனுஞ் செல்வமே
சிவசா தனம்பெறார் பவசா தனம்பெறுவர்
தெளிகவெனும் அளிகொள் குருவே
திருநீறு காணினது கருநீறு காணுவது
தேர்ந்துணர்க வென்ற தெளிவே

சிவமேவு சமயமது தவமேவு சமயமிது
சித்தமென வோது முதலே
சிவனடியை வாழ்த்தாத வாயூத்தை வாய்கொடிய
செவ்வாய் எனச்சொல் நிறைவே
சிவமான்மி யம்புகாக் காதுகா தென்னுந்
தெலுங்கமொழி யென்ற வொன்றே
சிவனடி வணங்காத தலைசிதலை யவன்விழாத்
தெரிசியாக் கண்கள் புண்கள்
சிவனைநினை யாச்சிந்தை நிந்தையா மிதுநமது
சித்தாந்த மென்ற திருவே
திகழ்பரம னடவும்விடை மனையினமும் அவன்முனோர்
செறிகமரின் அமுதுண்ட நாள்
சேர்வுற விடேலென்ற வொருமரக் கறியுமச்
சிவபிரான் விடய மாகத்
திருவாத வூரடிகள் திருவாய் மலர்ந்தருள்
திருக்கோவை யார்செய் கையுஞ்
செப்புகவெ னக்கடாஅய் நின்றவர்க் கிறைமொழி
தெரிக்குஞ் சிறப்பு வாய்ந்தே
சீரைந் தெழுத்தினா லிலகுநக ரின்கணோர்
திருவைந் தெழுத்தி னோங்குந்
தேசிகத் தண்ணமுத வான்கடல் படித்தருள்
தெள்ளமுதம் உண்டு தேக்கிச்
செறிபவக் கோடையற அருண்மழை பொழிந்தொளி
சிறந்தோங்கு சீர்க் கொண்டலே
செய்யதாண் டவராய தூயவாழ் வேநினது
திருவடிக் கன்பு கொண்டே
தணிவளர் விராகமது பெற்றிலேன் காமரந்
தானுமறி யேன் றுன்பினைத்
தலிதஞ்சே யேன்மங்கு லங்கொண்டு நகபதந்
தன்னிற் பருத்து வினையைத்
தாங்குசும் மாடாயி னேனவ விராகமுதல்
சாற்றுசும் மாடு மட்டுந்
தங்குமொழி முதலையுடை யேன்முதற் கயலில்
தயங்குமொரு நாமம் உடையேன்
தகுமுறைக் கடைமூன்றி னுஞ்சுவசி யுற்றிலேன்
சதுரிலேன் பஞ்ச நயவேன்
சட்டியி லிரண்டினொன் றேய்ந்திலேன் ஒன்றுபோற்
றானுழைத் துழலுகின்றேன்
தண்டனா யிரமிட் டுரைக்கும்விண் ணப்பமது
தானென்னை யெனிலு னடியார்
சைவ யோகஞ்செய்வர் யானுமொரு காற்போன
சைவ யோகஞ் செய்குவேன்
தட்டுறா ஞானமுடை யார்நினது தொண்டர்யான்
றானுமது சுட்ட வுடையேன்
சாந்தநெஞ் சுடையர்நின தன்பர்யான் மணம்வீசு
சாந்தநெஞ் சதுவு முடையேன்

சகசநிய மம் பெறுவர் நின்னடியர் அடிமையுஞ்
சகச நியமம் பெற்றுளேன்
தனிவீடு விழைவர்நின் னன்பர்யான் பலகூட
சாலையுள வீடு விழைவேன்
சார்புலக் கள்வர்வரின் அஞ்சுவர்நி னடியர்யான்
தனிவரினு மிக அஞ்சுவேன்
தாழ்பொறி யடக்குவர்நி னன்பர்யா னுயர்பொறிகள்
தமையக மடக்க வல்லேன்
தமியனேன் றன்னைநீ கைவிடேல் விடினுநின்
றன்னைநான் விடுவ னல்லேன்
தகுவழக் கிட்டெனினும் நின்பா லெனக்குமொரு
சார்புறச் செய்கு வேனே.

பண்டு குலம்பேசப் பரிந்ததில்லை யீண்டென்னைக்
கொண்டு குலம்பேசக் குறிப்பானோ-தொண்டுசெய
நீண்டவரா யப்பெருமா னீக்குந் திருத்துறைசைத்
தாண்டவராயப் பெருமான் றான்.

பின்வரும் இருபாடல்களும் வேறொருகால் வரைந்து அனுப்பியவை எனத் தெரிகின்றன.

வானே ரமரர் வருந்திக்
கடைந்த மருந்துவந்து
தானே யொருசிறு நாய்க்குக்
கிடைத்த தகவெனவெம்
மானேர் துறைசைநற் றாண்டவ
ராய மணியெனது
பானேர் கிடைத்தும் பயன்கொள்கி
லேன்வெறும் பாவியனே.

மின்னேர் சடைமுடித் தாண்டவ
ராய வியன்றவநின்
றன்னே ரடைதற் கெளிதாக
நான்பெற்றுந் தாழ்த்துகின்றேன்
பொன்னே கொடுத்து மெனுநா
லடியின்{33} பொருட்கிலக்கா
யென்னே யிருந்துழ லென்னேழை
வன்மதி யென்மதியே.

<u>சிதம்பர புராணப் பதிப்புக்குச்</u>
<u>சாற்றுக்கவி யளித்தது-1855</u>



RangaRakes tamilnavarasam.com

புராணத் திருமலை நாதர் இயற்றிய சிதம்பர புராணத்தை மதுரையாதீனம் சிதம்பர சுவாமிகள் 1855-இல் (இராட்சத, ஆவணி) அச்சிற் பதிப்பித்தர்கள். இச்சிதம்பர சுவாமிகள் "வேதாகம சித்தாந்த சைவ சமயாசாரிய பீடமாக விளங்குகின்ற மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் சிதம்பர சுவாமிகள்" என வழங்கப்படுவர். 1867-இல் திருவருட்பா முதல் நான்கு திருமுறைகள் முதன் முதலாக அச்சானபோது "தண்ணீர் விளக்கெரித்த" என்னும் பாடலைத் திருவருட்பாவின் சிறப்பாகப் பாடியவர் இவரே. இவரது சிதம்பர புராணப் பதிப்புக்கு அடிகள் அருளிய சாற்றுக் கவிகள் வருமாறு:

சிதம்பர புராணம் இதம்பெறத் திருத்திய
சிதம்பர முனிவன் பரம்பர வியது.

செம்மலர் செம்மலுந் திருத்தகு நிறத்தனும்
அம்மலர்க் கரத்திற் கம்மலர்க் கடவுளும்
படைத்திடன் முன்னாப் பயனுறு பெருந்தொழி
னடைத்திற மூன்று நடாஅய்ப் பிறங்கிய
தத்தந் தலைமையிற் றாழ்வின்றி யோங்குபு
சித்தந் திறமுறத் திருவருட் சார்த்திச்
சின்மய வடிவிற் சிதாகா யத்திடைத்
தன்மய வின்பத் தனிநடம் புரியுங்
காரண வெண்குணா கார வகண்ட
பூரண பராபர புனித சிற்பர
சிவநிலை யிஃதெனத் தெளிவித் தழியா
நவநிலை ஞாங்கர் நண்ணிய வநுபவத்
தனிச்சிவ ஞானந் தன்னைமூ வாண்டிற்
பனிப்பறச் சிவைமுலைப் பாலொடு மளாஅய்
ஊட்டிட வுண்டிவு வுலகெலாந் தழைப்ப
வாட்டமி லமுத வாய்மலர் மலர்ந்து
தோடுடை யெனுமறைச் சொல்லமு தளித்து
நாடுடைத் தாதையை நயப்பித் தருளிப்
பற்பல சைவப் பதிதொறு மணுகிச்

{33. இங்கு மேற்கொண்டுள்ள நாலடியார்ச் செய்யுள்:

பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும்-அன்னோ
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயமில் அறிவி னவர்.

-பெரியாரைப் பிழையாமை 2 (162)}

சொற்பல பதிகச் சுருதிகள் புனைந்து
பொற்றிருத் தாளமும் புதுமணிச் சிவிகையுங்
கொற்றவர் புகழ்மணிக் குடையுஞ் சின்னமுஞ்
சுந்தரக் காளமுஞ் சந்தநற் றாரையுஞ்



RangaRakes tamilnavarasam.com

சிந்தரும் வெண்மணிப் பந்தருங் காசும்
பரம்பர னளிக்கப் பண்புடன் பெற்றோன்
வரம்பெறு மழவன் வல்விடந் தீர்த்து
வருநெறி பற்பல மகத்துவம் புரியாக்
கூடலிற் றென்னன் கூனுங் குற்றமும்
வாடலி லமணர்தம் மதமும் வாழ்க்கையும்
எளிதினின் முருக்கி யியல்புறு மாண்பனை
யளியுறு பெண்பனை யாகக் காட்டியொண்
மயிலையி லென்பினை  மங்கை யாக்கியுள்
அயர்வறு திருமணத் தடைந்தவர் தமக்கெலாம்
பெறலருஞ் சோதிப் பேருரு வளித்திவ்
வையமும் வானமு மறையுஞ் சைவமும்
உய்ய வோங்கிய வொருபெருங் குரவன்
ஞான சம்பந்த நாயக னருளால்
ஈன சம்பந்த மெல்லா மொழித்தோன்
நரைவரு மென்றெணி நல்லறி வாளர்
இரைவுறு குழவி யிடத்தே துறந்தார்
என்னு நாலடிக் {34} கிலக்கிய மானவன்
மன்னுமா தவரெலாம் வழுத்து மருந்தவன்
எல்லா வுயிர்க்கு மிதஞ்செய லன்றிப்
பொல்லாமை யொன்றும் புணராப் புண்ணியன்
வாய்மையு மாண்பும் வயம்பெறு மனனுந்
தளிவுஞ் சுற்றமாக் கொண்டோன்
கனவிலு முலகைக் கருதாக் கருத்தினன்
நனவினிற் சுழுத்தி நண்ணிய திறத்தோன்
முப்பொருட் டிறனு முழுதுணர் முனிவன்
எப்பொருட் கண்ணு மெய்ப்பொரு ளுணர்ந்தோன்
சிவமலா தொன்றுஞ் சிந்தைவைத் தறியான்
பவமிலா நெறியே பற்றிய நிலையினன்
காமம் வெகுளி மயக்கெனுங் கரிசினை

{34. இங்கு மேற்கொண்டுள்ள நாலடியார்ச் செய்யுள்:
நரைவரும் என்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்-புரைதீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே கோல்ஊன்றி
இன்னாங் கெழுந்திருப் பார்.

-இளமை நிலையாமை 1 (11)}

நாமங் கெடவுண் ணலிவித்த வித்தகன்
துறவரில் துறவன் சுத்தமெய்ஞ் ஞானி
அறவரி னறவ னன்பரி னன்பன்
திகழ்சிவ யோகி ஜீவன் முக்தன்
புகழிக ழொன்றும் பொருந்தாப் புனிதன்
சிவநூன் முழுதுந் தெளிந்த சத்துவன்
பவநூன் மறந்தும் பாராத் திறலோன்


RangaRakes tamilnavarasam.com

என்போன் றவர்க்கு மின்னருள் புரிவோன்
தன்போன் றவரிலாச் சாந்த வேந்தன்
சைவம் பழுத்த தனித்தரு நங்குல
தெய்வமா மதுரைச் சிதம்பர தேவன்
புண்ணிய சிதம்பர புராணந் தன்னை
நுண்ணிய வறிவா னோக்குபு திருத்தம்
ஏர்பெற வியற்றி யாவரும் பயின்றுயப்
பாருறு மச்சிற் பதிப்பித் தருளிய

உதவியை நினைந்துள முவந்து முப்பொழுதும்
பதமரு ளவனருட் பதமிறைஞ் சுதுமே.

உலகெலாம் புகழுஞ் சிதம்பர வரலா
றுயிரெலா முணர்ந்து வீடடைவான்
அலகுறா மடற்க ணெழுதுறா வெழுத்தி
னமைவித்த வருட்பெருங் கடலே
இலகுசீர்க் கூடன் மடாலயத் தமர்ந்த
வெழிற்றிரு ஞானசம் பந்தத்
திலகசற் குருவி னருள்பெறும் பொருளே
சிதம்பர மாதபோ நிதியே 1

சிதம்பர வரலா றுலகெலா முணரத்
திருத்தியெம் போன்றவர் தமக்கும்
இதம்பெறு மழியாப் பதம்பெற வளித்த
இன்பமே யென்றனி யன்பே
கதம்பெறு மதங்க ளதம்பெறப் புரிந்த
கவுணியற் கினியவுட் களிப்பே
சிதம்பெறு ஞானா முதந்தரு மதுரைச்
சிதம்பர மாதபோ நிதியே. 2

சத்திறை யுயிர்தான் சத்தசத் தாகுந்
தடைமல மசத்திவற் றிடைநீ
இத்திறை யபர நோக்கலை பரநோக்
கெய்துதி யிறைநிறை வுறைவாய்
புத்தியீ தெனவென் புத்தியைத் திருத்தும்
போதசின் மயவொளி மணியே
சித்தியெண் வகையும் பெறத்தரு மதுரைச்
சிதம்பர மாதபோ நிதியே. 3

மறைநெறிப் பொதுவு மாகமச் சிறப்பும்
வகுப்பது சிவத்தொடு மருவிக்


RangaRakes tamilnavarasam.com

குறைநிறை வகலக் கூடுத லிதனைக்
குறிப்பறக் குறியெனக் குறிக்கக்
கறைமிடற் றொளித்துச் சடைமுடி யோடுங்
காட்சிதந் தருள்செழுங் கதிரே
சிறைமல மகற்றி யருடரு மதுரைச்
சிதம்பர மாதபோ நிதியே 4

ஒன்றெனி லிரண்டாங் குறுமய லதனா
லொன்றெனக் குறித்தலு மொழித்தே
நின்றனை யெனினீ நின்றனை யறிதி
நெறியிதென் றுணர்த்திய நிறைவே
மன்றிலா னந்த வாரிவா யமுதம்
வாரியுண் டெழுஞ்செழு முகிலே
தென்றிசைக் கணிகொண் டோங்கிய மதுரைச்
சிதம்பர மாதபோ நிதியே. 5

## தொண்டமண்டல சதகம் பதிப்பித்தது-1855
## தொண்டை மண்டல சதகம்

இது தொண்டை மண்டலத்தின் சிறப்பைக் கூறும் நூல். செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்களும், தென் ஆர்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியும் சேர்ந்த நிலப்பரப்பு பண்டைக் காலத்தில் தொண்டை மண்டலம் என வழங்கப்பட்டது. சதகம் என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைஉப் பிரபந்தங்களுள் ஒன்று. நூறு பாடல்களைக் கொண்டதாய் இயற்றப்பெறுவதின் சதகம் எனப்பெயர் பெற்றது. நீதி சதகங்கள், மண்டல சதகங்கள் என சதகங்கள் இரு வகைப்படும். குமரேச சதகம், தண்டலையார் சதகம் முதலியன நீதி சதகங்களாம். தொண்டை மண்டல சதகம், சோழ மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம் ஆகியன மண்டல சதகங்களாம். மண்டல சதகங்களுள் சிறந்ததும் பெருவழக்கானதும் தொண்டை மண்டல சதகமே.

இதனை இயற்றியவர் படிக்காசுப் புலவர். இவரது காலம் இற்றைக்குச் சுமார் முந்நூறாண்டுகட்கு முற்பட்டது. இவர் பிறந்த ஊர் தொண்டை நாட்டுஇக் களத்தூர். களந்தை, தென்களந்தை, பொன் விளைந்த களத்தூர் எனவும் இது வழங்கும். நளவெண்பாவைப் பாடிய புகழ்ந்திப் புலவரும், திருக்கழுக்குன்றத் தல புராணம், திருவாரூருலா ஆகியவற்றை இயற்றிய அந்தகக்கவி வீரராகவரும் நேமிநாதம் என்னும் இலக்கண நூலை இயற்றிய குணவீர பண்டிதரும் இவ்வூரிற் பிறந்தவர்களே. இவர் செங்குந்த மரபினர். இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகரிடத்திற் பாடங்கேட்டவர். இவரது இயற்பெயர் இன்னதெனத் தெரியவில்லை. தில்லையில் இவருக்குக் கூத்தப்பிரான் பொற்காசுகளை அருளியமையின் இவர் படிக்காசுப் புலவர் எனப் பெயர் பெற்றார். வள்ளல் சீதக்காதியால் இவர் சிறப்பிக்கப் பெற்றவர். பாம்பலங்காரர் வருக்கக்கோவை, தண்டலையார் சதகம், புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் என்பன இவரால் இயற்றப்பெற்ற பிற நூல்கள். பின்னாளில் இவர் தருமபுரமடத்தைச் சார்ந்து துறவு பெற்றார்.

இவரது சிறப்பைப் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடிய பின்வரும் பாடலால் அறியலாம்.

**மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன்**
**உரைத்த தமிழ் வரைந்த ஏட்டைப்**
**பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்**
**பரிமளிக்கும் பரிந்தவ் வேட்டைத்**
**தொட்டாலும் கைம்மணக்கும் சொன்னாலும்**
**வாய்மணக்கும் துய்ய சேற்றில்**
**நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே**
**பாட்டினது நளினந் தானே.**

சந்தப் பாடல்களைப் பாடுவதில் இவர் சிறந்தவரென்பது பின்வரும் தனிப்பாடலொன்றால் பெறப்படும்.

**வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்**
**செயங்கொண்டான் விருத்த மென்னும்**
**ஒண்பாவுக் குயர்கம்பன் கோவையுலா**
**வந்தாதிக் கொட்டக் கூத்தன்**
**கண்பாவு கலம்பகத்திற் கிரட்டையர்கள்**
**வசைபாடக் காள மேகம்**
**பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலா**
**தொருவர் பகரொ ணாதே.**

அடிகளது தொண்டை மண்டல சதகப்பதிப்பில் படிக்காசுப் புலவரைப்பற்றி ஒரு குறிப்பு தனியாக எழுதப்பட்டுள்ளது. அது வருமாறு:

இத்தொண்டமண்டல சதகஞ் செய்த புலவர் செங்குந்த மரபிற்றோன்றிச் சிவானுக்கிரகத்தால் தமிழ்க்கலை முழுதும் பயின்று தெய்வீகம் விளங்கிய நல்வாக்கினைப் பெற்று சிதம்பரத்தில் நடேசர் பொன்பணம் ஐந்து பஞ்சாட்சரப் படியில் வைத்தருளக் கொண்டு அதனாற் படிக்காசுப் புலவரென்று பெயர் பெற்றவர்.

## அடிகள் பதிப்பு

அடிகள் தொண்ட மண்டல சதகத்தை 1855-ஆம் ஆண்டில் (இராட்சச, மார்கழி) பதிப்பித்தார்கள். இதனை ஆராய்ந்து பதிப்பிக்குமாறு வேண்டியவர் தொண்டமண்டலம் துளுவ வேளாளர் இயற்றமிழ்ப் போதகசாலைத் தலைவர் கொண்ணூர் ஐயாசாமி முதலியார். அப்பதிப்பின் முகப்பேடு பின்வருமாறு. (பக்கம் 117)

## தொண்டை மண்டலமா? தொண்ட மண்டலமா?

அக்காலத்தில் 'தொண்டை மண்டலம்' என்ற பெயரைப்பற்றிச் சென்னைப் புலவர்கள் சிலரிடையே ஒரு வாதம் எழுந்தது. அது 'தொண்டை மண்டலம்' என்று



RangaRakes tamilnavarasam.com

வழங்குவது சரியா அல்லது தொண்ட மண்டலமென்று வழங்குவது சரியா என்பதாகும். 'டகரமா' அல்லது 'டகர ஐகாரமா' என்ற இவ்வாதம் இறுதியில் அடிகளிடம் வந்தது. அடிகள் 'தொண்ட மண்டலம்' என்பதே சரியென நிறுவித் தம் கூற்றை விரித்து **'நூற்பெயர் இலக்கணம்'** என்ற தலைப்பில் எழுதித் தொண்ட மண்டல சதகத்தோடு சேர்த்துப் பதிப்பித்தார்கள். அடிகளின் தொண்ட மண்டல சதகப் பதிப்பிற்கே இவ்வாதம் காரணமாயிருக்கலாம். நூற் பெயரிலக்கணத் திறுதியில் பின்வருமாறு கூறப்படுவதனின்றும் இதனை அறிகிறோம்.

தொண்ட மண்டல மென்பதைத் தொண்டை மண்டலமென்று இச்சென்னை நகரிலிருக்கின்ற வித்துவான்களிற் சிலர் மாறாக வழங்க, அது குறித்துச் சில பிரபுக்களும் வித்துவான்களும் உபாத்தியாயர்கலும் "இவ் விரண்டில் இலக்கண வமைதியும் உலக வழக்கு முள்ளது யாது? அதனை யொருவாறு தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டபடி சிதம்பரம் இராமலிங்க பிள்ளை யவர்களாற் றெரிவிக்கப்பட்டது".

## அடிகள் அருளிய நூற்பெயர் இலக்கணம்

**தொண்ட மண்டல சதகம்**-ஒருவாறிதனிலக்கணம் விரிக்கின்றாம்.

இஃது மூவகை மொழி இருவகைச் சந்தி முத்திறத் தொகை ஒருதலை நோக்க முந்நிலை யிலக்கணச் செந்நிலைத் தொடர்.

முற்பாட்டுயர் பொருட்டலைமை யுடையதினிலைமை, இடைப்பாட்டுடைய துரிமையுடைமை நிலைமை, பிற்பாட்டுடைமை யுரிமையுடைய துடைமையாய-இத்தொடரைச் சொற்றிறந் தோன்றத் தொடர்பின்மை செயின், தொண்டன் மண்டலம் சதகம் என்று செய்க.

இதனுள் தொண்ட னென்பது வழக்கியற்பாடு ஒற்றுமைச் செறிவு வேற்றியற்கரணம் குறிப்புயர் நோக்கம் பொருள் யாக்கம் குற்றியல் வண்ணம் இடைப்பல் வயிற்றொகை முதலிய சொல்லியற் பாகுபாட்டினமைந்த முதறொகைச் சிறப் புயர் திணைக் காரணப் பொருட்பெயர். மண்டலமென்பது வடசொன்னோக்கியற் காரணப் பண்புகோளிடப் பெயர். சதகமென்பது வடசொற் பாட்டியற் காரண வெண்ணிலைக் குழூஉக் கோட்பெயர்.

உ

சிவமயம்

## தொண்டமண்டல சதகம்



RangaRakes tamilnavarasam.com

******

**இஃது**
**படிக்காசுப் புலவரால்**
**இயற்றப்பட்டது.**

**கஅருச வரு ஜனவரி மீ**
**ம-ள-ள-கனம் பொருந்திய**
**தொண்டமண்டலம்**
**துளுவவேளாளர் களேற்படுத்திய**
**இயற்றமிழ்ப் போதகசாலை**
**இரட்சகர்த்தராகிய**

**கொண்ணூர்**

**ஐயாசாமி முதலியாரவர்கள்**
**கேட்டுக் கொண்டபடி**

**சிதம்பரம்**
**இராமலிங்க பிள்ளையவர்களாற்**
**பரிசோதிக்கப்பட்டு**
**இந்து பிரஸென்னும் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.**
**இராட்சச வரு மார்கழி மீ**

இத் தொடர்க்கண் இயை பின்மையிற் பொருள் கொளின்: தொண்டன் -ஆதொண்டன், மண்டலம்-வட்டம், சதகம்-நூற்றினாலாய கூட்டம் என்று கொள்க. இயை புண்மையிற் பொருள்கொளின்: தொண்டன் -ஆதொண்டனென்னுமோ ரரையன், மண்டலம்-இருபதின் காத வெல்லை வட்ட மாய நாடு, சதகம்-நூறு செய்யுட்களாலாய கூட்டம் என்று கொள்க. பொருத்த வியைபிற் பொருண் முடிபு கொளின்; ஆதொண்டனென்னு மரையனா லாளப்பட்ட விருபதின் காத வெல்லை வட்டமாய நாட்டின் வண்மையைக் குறித்த நூறு செய்யுட் கூட்டத்தானாய வோர் வகை யாப்பென்று கொள்க. இங்ஙனம் வழங்கல் சொற்சுருங்கியல் பொருளாழ்பியல் குறிக்கோளியல் தொகையின்பம் அளவிசைப்பாடு பல்வயின் வழக்கு ஒருங்கியலுடைமை முதலிய தோன்றக் காரணம் பற்றிய பெயர்க்கோள்களை வழங்குவிக்குங் கலைவல்லோர் கண்ணிய நிலையென் றுணர்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

இதனுள் தொண்டமண்டல மென்பத னியலை விளங்க வகுத்துணர்த்துக வெனின்: ஆதொண்டந் தழை வயிற் கிடத்தப் பட்டதனா லாதொண்ட னெனக் காரணக்குறிப் பெயரேற்று, இரவி மரபின் கண்ணோ ரிறைமகனா லாளப்பட்ட வெதிரி லாட்சியுடைமையின் இம்மண்டலத்திற்குத் தொண்ட மண்டல மெனப் பெயர் வழங்கிற்று.



RangaRakes tamilnavarasam.com

இனி, ஆதொண்டந் தழையானு மலரானு மியற்றிய தொங்கலணிந்தமையின் ஆதொண்ட னெனப் பெயர் வழங்கிற்றென்பாரு முளாராலோ வெனின்: அங்ஙனங் கூறினு மிங்ஙனம் வழங்க லொத்த நிலை யென்க.

அற்றேல், ஆதொண்டந் தழை வயிற் கிடத்தப் பட்டவனை ஆதொண்டனென்று குறியீடு செய்த லெங்ஙன மெனின்: மேற்கலைவல்லோர் கண்ணிய நிலை யென்றா மதனா லுணர்க வென்க. அன்றி, கடப்பந் தழை வயிற் கிடத்தப்பட்டவனைக் கடம்பனென்றும் வேப்பந் தழையானு மலரானுந் தொடுத்த தொங்கலணிந்தோனை வேம்பனென்றும்-இங்ஙனம் பலபட வழங்குங்காரணக் குறிப்பெயர்கள் பலவுள வவற்றாற் றேர்ந்து தெளிகவென்க.

அற்றேல், ஆதொண்டன் மண்டலமெனல் வேண்டும்: தொண்டமண்டல மெனல் எங்ஙன மெனின்: நிறுத்த மொழிக்கண்ணீற்றுச் சிறப் புயர்திணை யாண்பாற் படர்க்கை விகுதியாய அன்னென்பதன் னகர மெய் குறித்து வரு கிளவியோ டந் நிறுத்த மொழி பிளவுபட் டிரு சொன் னீர்மையிற் பொருந்தாப் புணர்ச்சியாய்ப் புணர்ச்சி யின்பம் பெறாமை நோக்கி, அவையொன்றுபட் டொரு சொன் னீர்மையிற் பொருத்தப் புணர்ச்சியாய்ப் புணர்ச்சியின்பம் பெறற்பொருட்டு ஒத்த கிழத்திக்குங்கிழவோற்கும் புணர்ச்சி யின்பந் தோன்றற்பொருட் டகன்று நிற்கு முயிர்ப்பாங்கி போன் றகன்று நிற்பவும்: நிறுத்த மொழிக்கண் முதனிலை வேற்றுமை யொற்றுமை விரவுறுப் பாகாரம் பல்வயின் வழக்குத் தொகை யின்ப முதலிய நோக்கித் தொகுக்கப்பட்டுந் தொகா வியலின் ஞாபக விடய வுருவி னருகிக் கண்ணுற்று நிற்பவும்-தொண்டமண்டலமென்று வழங்கிற் றென்க.

இஃது இருவயிற்றோற்றம் சிறப்பாட்சியுடைமை பொருளடைச் சேர்பு ஒற்றுமைச்செறிவு ஒத்திசைப்பேறு நுனித்துணர்புணர்வு முதலிய நோக்கியலைப் பெற்றுந் தேயவழக்குச் சிறப்புடைச் சொற்றொடரிற் போந்த காரணக் குறிப் பெயரென்க.

தொண்டமண்டல மெனிற் காரணக் குறி விளங்கப் புலப்பட லின்றாலோ வெனின்: மேற் சொற்சுருங்கியன் முதலிய குறித்து வழங்குவித்தல் கவிஞர் கண்ணிய நிலை யென்றாம், ஆதலிற் கூர்ந்தறிக வென்க.

கூர்ந்தறிதற் றன்மையது செய்யுள் வழக்கே யன்றிப் பாடை வழக்குத் தேய வழக்கு முதலிய வன்றா லெனின்: இத் தொண்ட மண்டல மென்பது செய்யுள் வழக்கு முதற் பல்வகை வழக்கினும் பயின்று வரலானு முற்காலத்த தன்றிப் பிற்காலத்துக் காரணக் குறியாக்கப் பெயராய் வழங்கலானும் புறப்பாட்டிற் பொருண்முடிபு வல்லுநரல்லார்க்கும் விளங்கப் புலப்படுதலானுமத னகப்பாட்டிற் செய்கை முடிபு முதலிய இயன் மாத்திரையே கூர்ந்தறிக வென்றாமென்க.

இஃது செய்யுண் முதலிய பல்வகை வழக்கினும் பயின்று வருதன் முதலிய இச் சதக யாப்பின்கண்ணும் காஞ்சி மான்மியத்தைக் குறித்த காப்பிய முதலியவற்றின்கண்ணும் பாடை வழக்குத் தேய வழக்கு நகர் வழக்கு முதலிய வழக்கியற்கண்ணும் பல்வகைப் பெயர்க்கு மிலக்கணம் புலப்படுத்தற் கருவியாய முந்து நூன் முதலிய நூன் முடிபின்கண்ணும் வழக்குணர்ச்சிக் கண்ணுங் காண்கவென்க.



RangaRakes tamilnavarasam.com

அற்றேற் கூர்ந் தறிக வென்ற வகப்பாட்டிற் செய்கை முடிபு முதலிய விளங்கப் புலப்படுத்துக வெனின்: பயன் றரூஉந் தொழிலது புடைபெயர்ச்சிக்கண் ணுரிமை தோற்றி யுரிமையுடைமைக்கு முதலாய முதற்பொரு ளெஞ்சி நிற்ப அம்முதலாய முதற் பொருட் டொழின் முடிபிட னேற்ற தன் றொழிற்பய னுறுதற்கிடனாய செய்பொரு ளம் முதற்பொரு ணோக்கிய லொருபுடை யொப்பத் தொழிற்பயன் றோற்றற் கிடனாய தரப்பொருள் வேற்றுரிமை யேற்றுத் தன்றொழின் முடிபின் முற்றிப்புடை பெயர்ச்சியினுரிமை பெற்ற முதற் பொருண்மையினொப்புமை பெற்றுந் தன் புடைபெயர்ச்சியி னுரிமை யேற்று வேற்றுரிமை முதற் பொருட் கரணத் தொழிற்பய னுறப்படூஉஞ் செய்பொருளைத் தன் கருமத் தொழிற் பயனுறப்படூஉஞ் செய்பொருளாப் புடைபெயர்ந் ததனுரிமை யேற்ற முதலாய முதற் பொருட்பாடு பெற்றும் வந்த விரிசொற் றெரிநிலை வினைமுற்றா னணைந்த பெயர்க்கோணிலை நோக்காய-ஆதொண்டந் தழையிற் கிடத்தப்பட்டவன் ஆதொண்டைத் தழையிற் கிடத்தப்பட்டவன் ஆதொண்டந் தழையானு மலரானு மியற்றப்பட்ட மாலையைத் தரித்தவன் என்பன தன் வினைமுதற்றொழிற்பயன் றோற்றுமிடனுந் தன்றொழிற் பய னுறப்படூஉஞ் செய்பொருளு மிடனாக ஆதொண்டந் தழையன் ஆதொண்டைத் தழையன் என விரிசொற் குறிப்பு வினை முற்றா னணைந்த பெயர்க் கோணிலை நோக்காய்ப் பின்னர் இடப்பொரு ளவயவியுங் கருவிப் பொரு ளவயவியு மிடனாகப் பெற்று, ஆதொண்டை யென்பத னீற்றைகாரங் கெட்டாஃதூர்ந்த மெய்ம்மேல் விகுதி அன்னூர்ந்து ஆதொண்டன் எனக் குறுந்தடியுஞ் செம்பட்டு மாயவாறு போற்றொகை நிலையேற்றுப் பெயரேயாய் நின்றது.

அல்லதூஉம், ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய

**பனையு மரையு மாவிரைக் கிளவியு**
**நினையுங் காலை யம்மொடு சிவணு**
**மையெ னிறுதி யரைவரைந்து கெடுமே**
**மெய்யவ ணொழிய வென்மனார் புலவர்** {35}

{35. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், உயிர்மயங்கியல், 81}

என்னுஞ் சூத்திரத்துள் நினையுங்ககாலை யென்பதாற் றழை யென்னுஞ் சொல்வந்துழி தொண்டை யென்னுஞ் சொல் லிறுதி யைகாரங்கெட் டஃதூர்ந்த மெய்ம்மே லம்முச்சாரியை யூர்ந்து நின்றதன்றே: அங்ஙனம் உயர்திணை யாண்பாற் படர்க்கை விகுதியாயய அன்னென்பதனை யேற்குமிடத் தத் தழை யென்ப தெஞ்சி யத் தழையிற் கிடத்தப்பட்டவ னென்றறிந்து கோடற் குறியாத் தழையாற போந்த அம்முச் சாரியையின் மகரவொற்று நீங்க நின்ற அகரத்தின் பின்னர் அவ் வுயர்திணை யாண்பால் விகுதி அன் னென்பதி னகரநீங்க னதர வொற் றடுத்து ஆதொண்டன் என் றாயது எனினு மமையும். இதனை, முதனிலை இறுதிநிலை இடைநிலை முதலிய பல்வகை யுறுப்புக்களிற் பல்வகை நோக்குடைப் பல்வகைப் பெயரும் செறிப்பிற் நிறப்பட நெறிப்படூஉம் வழக்கிற் பல்வகை விகாரத்தாற் செந்நிலைபெறூ உமென விதித்த வுணர்வுடையோ ருயர் நெறி வழக்கா லுய்த்துணர்க.

இங்ஙனம், ஆதொண்ட னென்னும் பெயர் முதற்பொருண் முடிபு தன் முடிபிற் பெற்ற தன்றொழிற்பய னுற்படூஉஞ் செய் பொருட் டன்மை யகப்பாட்டினும்,



RangaRakes tamilnavarasam.com

உடைப்பொருட் பிறிதினுரிமையுடைமைத் தன்மை புறப்பாட்டினும், உயர் பொருளைச் சிறப்பிடப் பெயர் அவ் விருவயினும் பொருந்த நின்ற மண்டல மென்பதனோடு மருவும் வழி, மேல் வகுத்த வண்ணந் தன்னீறும் முதலுந் தொகுத்தலைப் பெற்ற தென்க. அல்லதூஉம், முதலெஞ்சி நின்ற இப் பெயர் மண்டல லத்தோ டணைந்தவழ விகுதி அன் எஞ்சி அம்முச்சாரியை பெற்று வருமொழி நோக்கி மகர மொழியத் தொண்ட மண்டல மென் றாய தெனினு மமையும். இதனை ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய

**அப்பெயர் மெய்கெடுத் தன்கெடு வழியு**
**நிற்றலு முரித்தே யம்மென் சாரியை**
**மக்கண் முறைதொகூஉ மருங்கி னான {36}**

என்னுஞ் சூத்திர நோக்கத்தாற் காண்க வென்க.

ஆதொண்ட னென்பது தென் சொன் னோக்கு மண்டல மென்பது வடசொன் னோக்கு தம்முட் செறிவா னொத்தவேனும் பாடையா னொவ்வாமை பெறலின் அங்ஙனம் பெருமை நோக்கியும், முன் நிலையாய வந்நிலைக்கும் பின் னிலையாய விந்நிலைக்கு மிலச்சினையாத னோக்கியும், விசேடண விசேடியச் செந்நிலை மரபு நோக்கியும் இங்ஙன முதலு மீறுந் தொகுத்தலைப் பெற்ற தெனினும்; முதனிலை வண்ண வொற்றுமை இசையொற்றுமை உருபொற்றுமை நோக்கியும், இறுதிநிலை சிறப்புநிலை இனவொற்றுமை நோக்கியுந் தொகுத்தலைப் பெற்ற தெனினுமமையும். இஃதின்னுங் கூறிற் பெருகும். ஆகலின் ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய

**உணரக் கூறிய புணரியன் மருங்கிற்**
**கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே {37}**

என்னுஞ் சூத்திரக் கருத்தா னமைக வென்க.

{36. தொல், எழுத்து, புள்ளிமயங்கியல், 55.

{37. தொல், எழுத்து, புள்ளிமயங்கியல், 110.}

அன்றி, ஆதிநாராயணன் புரம்-நாரணபுரம், ஆபூதன் மங்கலம்-பூத மங்கலம். பெரும்பற்றினாற் புலிப்பாதன் பூசித்தவூர், பெரும் பற்றினாற் புலிபூசித்தவூர்-பெரும்பற்றப்புலியூர், புலியூர் முதலிய பெயர்க்கோள்களையும்; புள்ளம் பூதன் குடி-பூதங்குடி, கொற்றன் குடி-கொற்றங்குடி, சாத்தன் குடி-சாத்தங்குடி, கொற்றன் மங்கலம்-கொற்ற மங்கலம், சாத்தன் மங்கலம்-சாத்தன் மங்கலம், வேடன் மங்கலம்-வேட்ட மங்கலம், வேடன் குடி-வேட்டங் குடி, சாத்தன் மங்கை-சாத்தமங்கை, விஜயன் மங்கை-விஜய மங்கை, கண்ணன் மங்கை-கண்ண மங்கை, கண்ணன் புரம்-கண்ணபுரம், கண்ணன் குடி-கண்ணங்குடி, சீராமன் விண்ணகரம்-சீராம விண்ணகரம், வரகுணன் மங்கை-வரகுண மங்கை, ஐயைபுரம்-ஐயபுரம் முதலிய பெயர்க்கோள்களையும்; நந்தன் மண்டலம்-நந்த மண்டலம், சேரன் மண்டலம்-சேர மண்டலம், சோழன் மண்டலம்-சோழ மண்டலம், முதலிய பெயர்க்கோள்களையும்-பற்றாகக் கொண்டமைக வென்க. இதனைப் பிற்காலத்து மரூஉ வழக்கென்று



RangaRakes tamilnavarasam.com

கொள்வாரு முளராலோ வெனின், அங்ஙனம் கொள்வது மர பன்று; கொள்கினுங் கொள்க வென்க.

இத் தொண்ட மண்டல மென்பது பல்வகைப் புணர்ச்சிக்கும் பல் வகை வழக்கியற்கும் இயற்பா டின்னோசை முதலியவற்றிற்கும் ஒத்த நிலை யென்க.

இங்ஙன மன்றி, தொண்டை மண்டல மென்பொரு முளராலோ வெனின்: அங்ஙன மாறுபடக் கூறுவோர் நுண்ணிய அறிஞர் கண்ணிய நிலையும் மாற்றம் பொருளுறூஉ மாற்ற னிலையும் பல்வகைப் புணர்ப்பிற் செல்வகை நிலையுங் கடிபுகோ ணெறியின் முடிபுறூஉ நிலையு முழுக்கறூஉம் பல்வகை வழக்கிய னிலையு மொருவாற்றானு மோர்ந் துணர்கிலராய்ப் போலி யிய னிலைகோலுநரென்க. என்னை? இலக்கண நுட்பங் கூர்ந்துய்த் துணர்தற் றன்மை யுளரே லங்ஙனங் கூறற் கியையா ராகலின் அவர் சில வழூஉ நெறி வழக்குப்பற்றிக் கூறுதன் மாத்திரையரன்றி விவகரிக்கக் கடவ ரல்லர்.

ஆயினும், அவர்க்கு மற்றவர்க்கும் அவ் வழக் கழி வழக்கே யன்றி யிழி வழக்கு மாமென் றுணர்ச்சி தோற்றற் கியாமே அத் தலைக்கண் ணின் றவர் கூற்றாக விவகரித் ததனை மறுக்கின்றாம்:-

**அவர் கூற்றாக விவகரித்தல்**:- தொண்டைத் தழையானு மலரானு மியற்றிய மாலை யணிந்தவ னாண்ட மண்டல மாகலின், தொண்டை மண்டல மெனல் வேண்டும்.

**அதனை மறுத்தல்**:- தொண்டை மண்டல மெனின், கொவ்வைத் தூற்றை யுடைய மண்டல மென்றும் ஒருவாறு ஆதொண்டைத் தூற்றையுடைய மண்டல மென்றும் தெளிவின்றிக் கருதப் படுவதன்றித் தொண்டைத் தழையானு மலரானு மியற்றிய மாலையணிந்தவனா லாளப்பட்ட மண்டல மென்று கருதப்படுவ தன்று.

அல்லதூஉம், சேரன் மண்டலம்-சேர மண்டலம், சோழன் மண்டலம்-சோழ மண்டலம் என்பனபோலிம் மண்டலத்திற்கு, முன்னர் துண்டீரனாலாளப் பட்டமையின் துண்டீரன் மண்டலம் -துண்டீர மண்டலம், துண்டீரன் புரம்-துண்டீரபுரம் என்றும்; பின்னர் தண்டகனா லாளப்பட்டமையின் தண்டகன் நாடு-தண்டகனாடு, தண்டகன் புரம்-தண்டகபுரம் என்றும் பெயர் வழங்கின. அவைபோல், அதன் பின்னர் ஆதொண்டனா லாளப்பட்டமையின், ஆதொண்டன் மண்டலம்-ஆதொண்டமண்டலம், தொண்டன் மண்டலம்-தொண்ட மண்டல மென்றே மரபு வழுவாமை வழங்கல் வேண்டும். இதற்குப் பிரமாணம்

**முக்கணான் கணநா தர்க்கு முதன்மைத்துண் டீர னாண்டு**
**மிக்கதுண் டீர னாடாய்த் தண்டக வேந்தன் றாங்கித்**
**தக்கதண் டகனன் னாடாய்த் தபனன்மா குலத்துச் சோழன்**
**றோக்கதார்த் தொண்ட மான்காத் தாயது தொண்ட னாடே.**

இங்ஙனம் பல் காப்பியங்களினும் பல பிரபந்தங்களினும், பிரபல வித்துவான்களாக முன்னிருந்த ஔவையார், கம்பன், ஒட்டகத்தன் முதலனோர்கள் பல்வகைக் காரணங் குறித்துச் செய்த பல் வகைச் செய்யுட்களினும், ஈண்டு முன்னும் பின்னும் வகுத்தமைக்குப் பிரமாணங்க ளிருக்கின்றன. அவைகளை



RangaRakes tamilnavarasam.com

விரிக்கிற் பெருகும். ஆகலின் அவற்றைத் தனித்தனி காண்டொறு மாங்காங் குணர்ந்தமைக.

அங்ஙன மன்றித் தொண்டை மண்டல மெனின்: சான்றோர் வழித்தாய மரபு வழுவி மயங்குவதூஉ மன்றிக் "காஞ்சி விருக்கடைமையா னந் நகருடைய வளாகத்திற்குக் காஞ்சி மண்டலமென்று வழங்கிற்று; அங்ஙனமே, தொண்டைத் தூறுடைமை பற்றித் தொண்டை மண்டலமென்று வழங்கிற் றிஃதே துணிபு" என்று திரிபு தோற்றும். அன்றித் தொண்டைத் தழையானு மலரானு மியற்றப்பட்ட தொங்க லணிந்த வோ ரரையனா லாளப் பட்ட மண்டலம் அவ் வரையனுக் குரிமை தோன்ற நிற்றலின்றிப் பரம்பரையானன்றி யிடைப்பாட்டாற் பெற்றஅத்தொண்டையை வேற்றுரிமையாகப் பெறற்கு எவ் வாற்றானும் பொருத்தமின்று. இதனைக் கல்வியிற் சாதாரணத் தன்மையுடையோரும் "வாதராயண சம்பந்தத்தினினும் போலும்!" என்று எள்குவர்; அன்றிக் "குமரியைக் கொண்டவனை விட்டுக் டவந்தவனோடு கூட்டியனுப்பியது போலும்!" என்றசதி யாடுவர். என்னின், கற்று வல்லோர் முகப்பின் இஃதென்னாம்? இதன்கண் உரிமைமலைவு பொருண்மலைவு மரபுமலைபு வழக்கு மலைவு தகுதிமலைவு உணர்ச்சிமலைவு யூகமலைவு நியாயமலைவு கருத்துமலைவு முதலிய மலைவின் றொகையே புலப்படுகின்றன. ஆகலின், தொண்டை மண்டல மெனலமைவன்று; தொண்ட மண்டலமெனல் வேண்டும்.

**அவர் கூற்றாக விவகரித்தல்** - அஃதேல், அற் றன்று;பாண்டின் மண்டலம் பாண்டி மண்டல மென்றாயது போல் தொண்டையன் மண்டலம் என்பது விகுதி அன் கெட்டுத் தொண்டை மண்டல மென்றாயது: ஆகலிற்றொண்டை மண்டல மெனல் வேண்டும்.

**அதனை மறுத்தல்**-பாண்டியன் மண்டலம் பாண்டி மண்டலமமென் றாயது மரூஉ வழக்கு. இஃ தங்ஙன மன்று. மரூஉ வழக்காயினும் பாண்டி யென்பது குடிப் பெயர்க் கோளாய் அவ் வரையனையும் ஒற்றுமை யுரிமையா லம் மண்டலத்தையுமன்றி வேறு குறித்த லின்றி நிற்றலி னறிஞரா லமைத்துக் கொள்ளப்பட்டது. தொண்டை மண்டல மென்பதை மரூஉ வழக்கி னமைத்துக் கொள்வே மெனின், இங்ஙனங் குறித்தலின்றப் பல் வகையானும் வேறு குறுத்து வழூஉ நிலையைப் பெறுகின்றது. என்னை? தொண்டைத் தழையானு மலரானுந்தொடுத்த தொங்க லணிந்தோனைத் தொண்டைன் எனன்: பிற்காலத்தில் மக்கள் வரலாறுணராமையின் "பெருந்தொண்டையனைத் தொண்டைய னென்று வழங்கினர் கொல்?" அன்றிப் புழைக்கை யுடைமையாற்றும்பி முகத்தவன் கொல்?" என்றையுறுதற்கும், தொண்டு ஐயனென்று பிரித் தேற்ற பெற்றி கோடற்கும், ஒருவாற்றாற் கேள்வி யுடையோருங் "கொவ்வைத் தழையிற் புனைந்த மாலை யுடையன்கொல்? ஆதொண்டடைத் தழையிற் கிடத்தப்பட்டவன்கொல்?" என்றையுற்று மயங்குதற்கு இடனாய்ச் சொல்வலி பொருள்வலி இன்னிசை வண்ண முதலிய சிதைவுறு நின்று வழூஉ நிலையைப் பெற்று மண்டலத்தோ டணைந்து ஐயம் மயக்கம் கவர்கோண் முதலிய இழுக்கினை யேற்று வழுவினும் வழுவாய் நிற்றலானும்; இங்ஙனம் வழங்கல் அறிஞர் வழக் கன் றாகலானும்; இதனை வழூஉநிலை யென்றாம். இஃது "உடற் றூய்மை கருதி நீராட்டு வந்து சென்றாண்டளற்றினழுந்திய தொக்கு" மென்று எள்குதற் கிடனன்றிச் சிறிது மமைத்துக் கோடற் கிட னன்று. ஆகலின், தொண்டை மண்டல மென லமை வன்று' தொண்டை மண்டல மெனல் வேண்டும்.

**அவர் கூற்றாக விவகரித்தல்-** அற்றேல், தொண்டையென்பது ஆகுபெயராய் நின்று அரையனை யுணர்த்தி யுரிமை தோற்றி மண்டலத்தொடு புணர்ந்து தொண்டை மண்டலமென்றாயிற்று: அதனால் தொண்டை மண்டல மெனல் வேண்டும்.

**அதனை மறுத்தல்-** இடைப்பாட்டி னியதி யியை பின்றி வந்த கடம்பூர் என்பது விருக்கத்தையுடைய வூ ரென்று தன்னளவே புலப்படுத்து மன்றி ஆகுபெயராய்க் கடப்ப மாலையைத் தரித்தவ னூ ரென்று பிறிதளவு புலப்படுத்துவ தின்று. என்னை? ஆகுபெயர் ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத் தொன்முறை யுரைப்பதாகலின். அங்ஙனமே பரம்பரையானன்றி இடைப்பாட்டி னியதியியை பின்றி வந்த தொண்டை மண்டலத்தொடு புணர்ந்துழி தொண்டையை யுடைய மண்டல மென்று தன்னள வுணர்த்துமன்றித் தொண்டையை யுடையான் மண்டலமென்று பிறிதி னள வுணர்த்தற்கோர் வகையானும் வலியின்று. இஃது "'யூக மின்றி ஒன்று குறித்தொன்று வரைய வொன்று பட்ட' தென்னு முலக வழக்கி னினம் போலும்!" என் றெள்குதற்கிடனாம். ஆதலிற் றொண்டை மண்டல மெனலமை வன்று: தொண்ட மண்டல மெனல் வேண்டும்.

**அவர் கூற்றாக விவகரித்தல்-** அற்றேல், தொண்டை யுடையனாலாளப்பட்டது தொண்டை யென்று ஈறுகெட் டை விகுதியேற்றுச் சிறப்புப்பெயராய் மண்டலத்தொடு புணர்ந்து அங்ஙனமாயிற்று: ஆகலிற் றொண்டை மண்டல மெனல் வேண்டும்.

**அதனை மறுத்தல்-**ஐ யீற்றின் ஐகார விகுதி போந்து கெட்டுப் புணரிற் குறியீ டின்மையிற் சிறப்பன்று: இங்ஙனம் புணர்த்தல் இயற்பாடு மன்று; அறிஞர் மரபு மன்று. அங்ஙனமாயினும் தொண்டையை யுடைய தென்றாகு மன்றித் தொண்டையுடையனாலாளப்பட்ட தென் றொரு வாற்றானு மாவ தன்று. அன்றிச்சோழ மண்டல முதலியவற்றோடு முரணும். அங்ஙனமமைதி யின்றிக் கூறினுஞ் சந்தி யின்பத்தான் நாகை பட்டினம் நாகபட்டின மென் றாயதுபோல், தொண்டை மண்டலம் தொண்ட மண்டல மென்றாதலே வேண்டும். இதனை முன்னர் விளக்கியவற்றுட் காண்க. இஃது பல்வகை யிழுக்கினுஞ் செல் வகைத்து. "இரும்பொற் பூண்டு டுரீஇச் சென்று கரும் பொற்றளைகை புகுத்தியதி னினம்!" என் றெள்குதற் கிடனாம். ஆகலிற்றொண்டை மண்டல மெனலமை வன்று; தொண்ட மண்டலமெனல் வேண்டும்.

அல்லதூஉம், இங்ஙனம் தொண்டையென்பது பல்வகைப் பொருட் கிடனாய பெயர்த் திரிசொல். ஆதொண்டை யென்பது தன் னளவே யுணர்த்தும் பெய ரியற்சொல். இங்ஙனம் திரி சொல்லாற் சிறப்புப் பெயர்க் காரணக் குறி செய்தல் வழக்கறிந்தோர் மரமன்று. இயற் சொல்லாற் காரணக் குறிப் பெயரமைத்தலே யவரது மரபு. இஃது ஆதொண்டச் சக்கரவர்த்தி யென்று வழங்கும் அறிஞர் வழக்கா லறியப்படும்.

**அவர் கூற்றாக விவகரித்தல்-**அற்றேல், ஆதொண்டையன் என்பது மண்டலத்தொடு புணர்ந்துழி, முதலு மீறுங் கெட்டு அங்ஙன மாயிற்று: ஆகலின் தொண்டை மண்டல மெனல் வேண்டும்.

**அதனை மறுத்தல்** - ஆதொண்டையன் எனின், தொகையின் பமும் இசை யின்பமும் செறிவுகோளு மின்றிப் புல்லென்கையானும், சுருங்கியற் பேரின்பங் குறித்து முன்னும் பின்னும் தொகை செய்தமைத்த சான்ரோர் ஓரெழுத்தா னீட் டியற் பெயர்ப்பாற் படுத்தி முடிபு வழூஉச் செயற் கியையா ராகலினும், இங்ஙனம் தொகுக்கப்படின் பொருளாட்சி முதலிய குன்றலின்றிச் செந்நெறியிற் பெரும் பயன் றரலானும், அங்ஙன மமைத்தல் வழுவேயாம். இஃது ஆதொண்டையன் சக்ரவர்த்தி ஆதொண்டையச் சக்ரவர்த்தி யென்னாது, ஆதொண்டன் சக்ரவர்த்தி ஆதொண்டச் சக்ரவர்த்தி யென்று வழங்கும் அறிஞர் வழக்கா லறியப்படும்.

**அவர் கூற்றாக விவகரித்தல்**-ஈண்டு ஆதொண்டைச் சக்கரவர்த்தி யெனின் வழு வென் னெனின்.

**அதனை மறுத்தல்**-அங்ஙனம் பெறின், அவ்வரையற்கு ஆதொண்டையாற் காரணக் குறிப் பெய ரமைப்பான் கருதிய வன்றே கருதியாதல் வேண்டும். அங்ஙன மின்றிப் பின்னர் செங்கோன்மை ஆண்மை முதலிய வன்மையுடைமை பற்றி முகமனா வமைக்கப்பட்டது ஆகலின், வழூஉ இங்ன மென்க. ஈண்டு ஆதொண்டன் சக்ரவர்த்தி ஆதொண்டச் சக்ரவர்த்தியென்பது 'புடைப் புள கன்னிப் பொற் குலைக்கண்ணே இடைப்பிள வியையா விரட்டைப் பழம்ரோன்' றொரு பொருட் கிரு வயினெழுந் திடைப் பிள வறியாச் சிறப்பினப் பெயர். ஆதொண்டன் சோழன் ஆதொண்டச் சோழனென்பது மது. இதனை தசரத் க்ரவர்த்தி-தசரதச் சக்ரவர்த்தி, நளன் சக்ரவர்த்தி-நளச் சக்ரவர்த்தி, புரூரன் சக்வவர்த்தி-புரூரச் சக்ரவர்த்தி, சோழன் ராஜன் - சோழராஜன், சேரன் ராஜன் - சேர ராஜன், பாண்டியன் ராஜன் - பாண்டிய ராஜன், சோழன் மஹாராஜன் - சோழ மஹாராஜன், சைவன் சோழன் - சைவச் சோழன், குலோத்துங்கன் பாண்டியன் - குலோத்துங்க பாண்டியன், சோழன் மன்னன் - சோழ மன்னன், சேரன் மன்னன் - சேர மன்னன் என வழங்கும் பல் வகை முடிபு வழக்குகளாற் றெளிந்தமையப்படும்; ஆகலின் ஆதொண்ட னெனல் வேண்டும்: ஆதொண்டைய னெனல் இழுக்கு. இங்ஙனம் இழுக்காய ஆதொண்டைய னென்பது முதலுமீறுங் கெட்டு மண்டலத்தொடு புணர்ந்து மண்டல மென் றாயிற் றெனினும் மேற்குறித்த பல்வகை வழூஉக்கட்கும் பே ரிடனாகத் தக்கது. "'இடனறிந்து பிறாண்டாத் தின வுண்ணி யெரிவிற் புழுங்கிற்று' என்பதற்கும், 'கருத் தறியாமற் கலப்பான் புகுந்து அருத்த மிழுக்குமா' லென்பதற்கு மினம்!" என்று எள்குதற்கிடனாம், ஆகலிற் றொண்டை மண்டல மெனல் வழூஉ; தொண்ட மண்டல மெனல் வேண்டும்.

**அவர் கூற்றாக விவகரித்தல்**-தொண்டைக்கா டுடைமையாற் றொண்டை மண்டல மெனல் வேண்டும்.

**அதனை மறுத்தல்**- இங்ஙனம் தொண்ட மண்டல வரலாற்றை வகுக்குங் காப்பியத்திற் கண்டதே யன்று; இவ்வாறுண் டென் றறிஞ்ரா னிதுகா றியாங் கேட்டது மின்று; ஆகலின் வழுவாம். இஃது 'வழி யறியாக் கன்று குழி வழியாச் சென்' றென்பதற்கினம். இங்ஙனம் வழியறியாது மொழியினும், பொய் கூறினும் பொருந்தக் கூறுக வென்னு மிழிந்தோர் வழக்கின் கண்ணு மேற்புடைத் தன்று. என்னை யெனின் காஞ்சி தில்லை என்னு மரப் பெயர்கள் ஒற்றுமை யுரிம்,ஐ குறித்து காஞ்சியைக் கண்டு தில்லையை யடைந்தா னென்று வழங்கப்படுகின்றன. அங்ஙனம் தொண்டையைக் கண்டு என்று எவ் வகை வழக்கினும் வழங்கப்பட்ட தின் றாகலி னென்க. இதனாலுந் தொண்ட மண்டல மெனல் வேண்டும்.

**அவர் கூற்றாக விவகரித்தல்**-தொண்டைமான் என்னும் பெயருள் வேற் றோ ரரைய னிருந் ததிகரித் தமையின் தொண்டைமான் மண்டல மென்பது மான்கெட்டு அங்ஙனமாயிற்று; ஆகலிற் றொண்டை மண்டல மெனல் வேண்டும்.

**அதனை மறுத்தல்**-இங்ஙனம் புணரினும், மேற்குறித்த வழூஉ நிலைகட் கிடனாம்.

அன்றித் தொண்டைமா னென்பதே வழூ. என்னை? தொண்டைமா னென்பது தனி மொழி தொடர் மொழி யென்பவற்றுளெம் மொழி? விடை: தனி மொழி. வினா:தனி மொழியாயின் இதற்கு முதனிலை இறுதிநிலை இடைநிலை என்னை? விடை:தொண்டை -முதனிலை, ஆன் -கடைநிலை, மகரம்-இடைநிலையாம்.

**அதனை மறுத்தல்** - என்னின் முதனிலைக்கும் இறுதிநிலைக்கும் இடப்பா டொத்து நிற்பது இங்ஙனம் வரூஉம் பெயர்கட்கு இடைநிலை. ஈண்டு முதனிலை யீற் றைகாரக் குறுக்கம் விலங்கிப் பொறுத் திசைப்ப விடைப்பா டின்றி யிறுதி நிலையோ டிணைந்து வேறு குறித்தலி னிடைநிலையி லமை வின்று. அன்னீறன்றி ஆனீறு ஆறிறந்தன்றி யைந்திறந் தியையுந் தொடர் மொழிப் பெயர்க்கன்றி இங்ஙனம் உரித்தாவ தன்று, நயப்பாடின்மையின். ஆகலின் இறுதி நிலை யியலு மமை வின்று. விகாரத்தால் வேறு குறித்தலின் முதனிலை யியலு மமை வின்று.

அல்லதூஉம், இஃ திடைநிலை யாயின், கோமான் என்பதற்கும் அங்ஙனம் இடைநிலை யாகல் வேண்டும். அங்ஙன மாயின், கோ-ம்-ஆன்: இவற்றுள், கோ-அரையன் என்னின், ஆன் விகுதி அதிகரிப்பின்றி மூங்கை மோலும் யானை யுண்ட கனி போலும் பெயர்ச்சியும் பயனுமின்றி வற்றன் மரனி னின்றது. ஆகலின் இஃது இங்ஙன மன்று; ஆகலின் அஃது அங்ஙன மன்று. இஃது 'கைபட லறியான் பொய்பட லொன்றோ'{38} வென்பதற் கினம். ஈண்டு, தொடர் மொழியாய்க் கோன்மன் - கோமான் என நிலை மொழி யீறு கெட்டு வருமொழி முத னீண்டது. இதனை வழுதிமன் என்னுங் காப்பிய வழக்கானுங் கண்டுணர்க. அன்றி, கோன் மஹான் -கோமான் என நிலைமொழியீறு கெட்டுக் கோமானென்றாயது. இங்ஙனமே தொண்டன் மன் -தொண்டன் மஹான - தொண்டன்மான் என்பன தொண்டமா னென்றாயது. மன் மஹான் மான் என்பவைக்குப் பெருமையுடையவ னென்பது பொருள். ஆகலின், தொண்டைமா னெனல் வழு; தொண்டமா னெனல் வேண்டும். இங்ஙனமே சேரன்மான் - சேரமான், மலையன் மான் - மலையமான் முதலியவுங் காண்க. ஆகலின் மண்டலத்தோடு கூடிய வழி தொண்டமண்டல மெனல் வேண்டும். அன்றி, தொண்டனாடெனல் வேண்டும்; தொண்டைநா டெனல் வழூஉ. என்னை? சேரன் நாடு-சேரனாடு, சோழன் நாடு - சோழனாடு, பாண்டியன் நாடு-பாண்டியனாடு, மலையன் நாடு-மலையனாடு என்பது போல், தொண்டன் நாடு-தொண்டனாடு எனல் மரபு ஆகலின். தொண்டனாடு எனில் அடிய னென்ன முதல் வேறு குறிக்குமே யெனின், அங்ஙனங் குறிப்பதில் ஆற்றலு மின்று பயனு மின்று. என்னை? ஆவென்பது கரண விடயமாக நின்று உரியானைக் குறிக்கின்றதாகலின்; அன்றி, உடையானை யன்றி உடைமை குறித்தலின் றாகலி னென்க.

இங்ஙனம் பல்வகையாற் சொல்வகை செய்த லென்? தொண்டை மண்டல மெனின் மேற்குறித்த வண்ணம் உரிமை மலைவு பொருண்மலைவு மரபுமலைவு வழக்குமலைவு தகுதிமலைவு உணர்ச்சிமலைவு யூகமலைவு நியாயமலைவு



RangaRakes tamilnavarasam.com

கருத்துமலைவு ஐயங்கவர்கோள் மயக்கம் வேற்றுக் குறிப்பு வேற்றுரிமை நிலைமை நியதியின்மை இயைபின்மை சொல்வலிச் சிதைவு பொருள்வலிச் சிதைவு பொய்க்கோள் அனர்த்தம் இன்னிசைவண்ணச் சிதைவு பிளவுபாடு முதலிய பல்வகை வழுக்கட் கிடனாம்.

{38. **பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்**
**பேதை வினைமேற் கொளின்.**

-திருக்குறள், பேதைமை 6. }

அன்றி, ஆதொண்டை யென்பத னீற் றைகாரக் குறுக்கங் குற் றலகே பெற்றது. தொண்டை யென்பத னீற் றைகாரக் குறுக்கங் குற்றலகோ டொற்றலகு பெற்றது. என்னை? ஆதொண்டை: ஆ-தொண்டை: ஈரலகு-ஓரலகு-அரையலகு முதலிடைப்பாடு இரு கலை-நடுவிடைப்பாடு காற்கலை-கடையிடைப்பாடு முக்காற்கலை ஆகலின், ஆதொண்டை யீற் றைகாரக் குறுக்கங் குற்றலகே பெற்றது. தொண்டை: தொண்-டை: ஓரலகு-அரையலகு-முன்னிடைப்பாடு காற்கலை-பின்னிடைப்பாடு அரைக்கலை ஆகலின், தொண்டையீற் றைகாரக் குறுக்கங்குற்றலகோ டொற்றலகும் பெற்றது. இங்ஙனம் தொண்டை மண்டலத்தோடு புணருங்கால், மண்-ட-ல-ம்; ஓரலகு-அரையலகு-ஓரலகு-அரையலகு-நான் கிடைப்பாடு: கால் - கால் அரை-அரைபெற்று வேற்றிசை விரவி நிற்றலின், புணர்ச்சியிடை ஐங்கலையைப் பெற்றுப் பிரிந்து வேறு குறிக்கின்றது ஆகலினும், தொண்டை மண்டல மெனல் வழு; தொண்ட மண்டல மெனல் வேண்டும்.

இங்ஙனம் பெயர்க் கோள்கட்கு இயற் சொற் பெயர் முதலிய, சொல்விரிப்பெயர் முதலிய, செஞ் சொற் பெயர் முதலிய, சாதி கூற்றுப் பெயர் முதலிய, ஒரு மொழிப் பெயர் முதலிய, உயர் திணைப் பெயர் முதலிய, பாற்பெயர் முதலிய, பொதுவிற் பொதுப்பெயர் முதலிய, தன்மைப் பெயர் முதலிய, வழக்குப் பெயர் முதலிய, வெளிப்படைப் பெயர் முதலிய, வரையினடைப் பெயர் முதலிய, உயருரிமைப் பெயர் முதலிய, சிறப்பு நிலைப் பெயர் முதலிய, சித்துப் பொருட் பெயர் முதலிய, இடுகுறிப் பெயர் முதலிய, மரபு நிலைப்பெயர் முதலிய, எழுத்துப் தொடர்ப் பெயர் முதலிய, பொருணிலைப் பகுபதப் பெயர் முதலிய, பெருஞ் சொல்லாட்சிப் பெயர் முதலிய, முதனூல் வாய்ப்பாட்டுப் பெயர் முதலிய-இவை முதற் பெயர்ப் பாகுபாடுகளி னிலக்கணங்களும்; எழுத்துப் புணர்ச்சி, பதப் புணர்ச்சி, தொடர்புப் புணர்ச்சி, பொருட்புணர்ச்சி, வண்ணப் புணர்ச்சி, அளபுப் புணர்ச்சி, இயைபுப் புணர்ச்சி, சமநிலைப் புணர்ச்சி, கலவைப் புணர்ச்சி, தெரிநிலைப் புணர்ச்சி, குறிப்புப் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி, ஒற்றுமைப் புணர்ச்சி, சிறப்புடைப் புணர்ச்சி, பொதுவுடைப் புணர்ச்சி, இருமைப் புணர்ச்சி முதலிய புணர்ச்சி, பொதுவுடைப் புணர்ச்சி, இருமைப் புணர்ச்சி முதலிய புணர்ச்சியிலக்கணங்களும்-கூர்ந்துணரார்க்குத் தொண்ட மண்டல மென்பதி னிலக்கணமும் புலப்படுவதன்று.

இங்ஙன முணரமாட்டாதார்-ஆதொண்டச் சக்ரவர்த்தி யென்பவர் தா மரசு செய்யுங் காலத்தில் தம்மாற் கட்டுவித்த ஆலயங்களிற் றம் பெயரிலச்சினை சிலையின்கட் பொறிப்பித்தனர்; ஆண்டும் ஆதொண்டவென்றே இலக்கண வமைதி பெற்றிருக்கின்றது: இதனை, திருவலிதாயம் திருமுல்லைவாயில் முதலிய சிலதலங்களிற் சென்றேனுங் கண்டு தெளியக் கடவர். இஃதின்னுங் கூறிப்பெருகும்.



RangaRakes tamilnavarasam.com

தொண்ட மண்டல மென்பதைத் தொண்டை மண்டலமென்று இச் சென்னை நகரிலிருக்கின்ற வித்துவான்களிற் சிலர் மாறாக வழங்க, அது குறித்துச் சில பிரபுக்களும் வித்துவான்களும் உபாத்தியாயர்களும் "இவ் விரண்டில் இலக்கணவமைதியும் உலக வழக்கு முள்ளது யாது? அதனை யொருவாரு தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டபடி, சிதம்பரம் இராமலிங்க பிள்ளை யவர்களாற் றெரிவிக்கப்பட்டது.

நூற் பெயர் இலக்கணம் முற்றிற்று.

**அடிகளின் கல் வெட்டாராய்ச்சி**

இந்நூற் பெயரிலக்கணத்தின் இறுதியில் "இங்ஙன முணரமாட்டாதார் ஆதொண்டச் சக்ரவர்த்தி யென்பவர் தாமரசு செய்யுங் காலத்தில் தம்மாற் கட்டுவித்த ஆலயங்களிற் றம் பெயரிலச்சினை சிலையின்கட் பொறிப்பித்தனர்; ஆண்டும் ஆதொண்ட வென்றே இலக்கண வமைதி பெற்றிருக்கின்றது; இதனை திருவலியதாயம் திருமுல்லைவாயில் முதலிய சிவ தலங்களிற் சென்றேனுங் கண்டு தெளியக் கடவர்," என்று கல்வெட்டுச் சான்று காட்டி முடிக்கின்றனர். திருவலிதாயம் திருமுல்லைவாயில் கல்வெட்டுகளில் 'தொண்ட மண்டலம்' என்றே காணப்படுகிறது. அடிகள் கல்வெட்டுச் சான்று காட்டுவதனின்றும், அவர்கள் திருக்கோயில்களுக்குச் செல்லுங்காலங்களில் கோயிற் கட்டிடக்கலை சிற்பக்கலை, கல்வெட்டுகள் ஆகியவற்றையும் ஆராயும் வழக்குமுடையவர் களென்பதனை அறிகிறோம்.

அடிகளுக்குச் சமகாலத்திலிருந்த பெரும் புலவர்களெல்லாம் கல்வெட்டுக்களைப்பற்றி நினைந்ததும் இல்லை. சாசன ஆராய்ச்சி (Epigraphy) தொல் பொருளாராய்ச்சி (Archaeology) ஆகிய இரண்டும் மேலைநாட்டார் நமக்களித்த கருவூலங்களாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மேலைநாட்டு அறிஞர் சிலரது முயற்சியின் பயனாக இவ்விரு துறைகள் அரசாங்கத்தாரால் அமைக்கப்பட்டன. அறிஞர் பலர் தனித்த முறையிலும் இக்கலைகளுக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளனர். தமிழ்ப் புலவர்களெல்லாம் கல்வெட்டுகளிற் கவனஞ் செலுத்தாத காலத்தில் அடிகள் கல்வெட்டுகளை ஆராய்ந்தனரெனின் அடிகளது கலைப்புலமையை அளவிடுதலெங்ஙனமோ? **அடிகள் தமிழ் நாட்டின் முதற் கல்வெட்டாராய்ச்சியாளர் ஆவர்.**

**சதகத்தின் காப்புச் செய்யுளுக்கு அடிகள் செய்த உரை**

தொண்ட மண்டல சதகத்தின் காப்புச் செய்யுளுக்கு அடிகள் ஒரு விரிவுரை செய்து தம்பதிப்பில் சேர்த்திருக்கிறார்கள். நூற்பெயரிலக்கணத்தின்பின் 'வழிபடு கடவுள் வணக்கப் பாட்டுரை' என்ற தலைப்புடன் அது அச்சிடப்பட்டுள்ளது. அடிகள் அருளிய அவ்வுரை வருமாறு:

**வழிபடு கடவுள் வணக்கப் பாட்டுரை.**

**வழிபடு கடவுள் வணக்கம்**

**கொண்டலை நிகர்க்கும் வேளான்**



RangaRakes tamilnavarasam.com

**குடியொடு தழீஇய தொண்ட**
**மண்டல சதகந் தன்னை**
**வளமையான் வகுப்ப தற்குப்**
**புண்டர நுதலி ரண்டு**
**புயமிசை யிருந்தி ரண்டு**
**குண்டல நிகரி ரண்டு**
**குமரரை வணக்கஞ் செய்வாம்.**

**கொ...ம்:** இச் செய்யுள் -வியனுறு மெதிரதூஉம் வீழாக் கொடையும் பயனுறூஉந் தொழிலும் பழியாப் பண்பும் வாய்மையுமறிவு மாஅண்பு மாண்மையும் தூய்மையும் பொறையுந் தோ ஒற்றமு மன்பு முளங்கொ ளிரக்கமு மொழுக்கமு முதலா விளங்கு விழுக்குடி வேளாண் குடியே இத் தொண்ட மண்டலத்திற் பெரும்பாலு மிறைகொளப்பட்டுத் தம் வளமையா னீண்டுறூஉ மற்றைக் குடிகட்கும் இம் மண்டலத்திற்கும் வளமை தோற்றிற்று-அஃது நெறிப்பானுஞ் செறிப்பானுந் தோன்ற வழிபடு கடவுட் பராஅய்ப் புலப்படுத்துவ லென்று புகுந்தமை யுணர்த்துகின்றதென்க.

எங்ஙனமெனின், "கொண்டலை நிகர்க்கும் வேளாண் குடியொடு தழீஇய தொண்ட மண்டல சதகந்தன்னை வளமையான் வகுப்பதற்குக் குமரரை வணங்குவா" மென்ற துய்த் துணர்கவென்க. இஃது வற்புறுத்தற்கு வேளாண் குடியை யளவை முகத்தான் வெளிப்படையின் விளங்க வைத்து மற்றைக் குடிகளை வேற்றுரு பொடுவிற் பராமுதற்தாற் குறிப்பிட்கட் சார்த்தி வைத்ததே யமைவு மென்க. விளங்கு விழுக்குடி வேளாண் குடியென்றதனா லன்றே அங்கையிற்கனி போன் றிங்ஙனம் பெற்றாம்.

அஃதீண் டெற்றாற் பெறுது மெனின், கொண்டலை நிகர்க்கும் வேளாண் குடி யென்றதனாற் பெறுது மென்க. எங்ஙன மெனின், கொண்டலை-பருவப் புயலை, நிகர்க்கும்-ஒக்கும், வேளாண்குடி-வேளாண் குடிப் பிறப்பினர். எனவே: வேளாண் குடிப் பிறப்பினர் கைம்மாறு கனவினுங் கருதலின்றி வரையாது வழங்கும் வள்ளற்றன்மை யுடையா ரென்றும்; எவ்வாற்றா னுயர்ந்தோர்கட்குந் தம்மை யன்றி உலகிய னடத்தப் படாச் சிறப்புடைக் கருவியாந் தன்மை யுடைய ரென்றும்; இங்ஙனம் வையகத்தார்க் கன்றி வானகத்தார்க்குங் குன்றா நன்றி குயிற்றுந ரென்றும்; தம்மானேயன்றித் தங் கருவியானுங் கருமத்தானும் எவ்வெவ் வளாகத் தெவ்வெவ் வுயிர்கட்கு மின்பந் தரூஉ மியலின் ரென்றும்; ஆன்ற கல்வி, ஊன்று கேள்வி, சான்ற வுணர்ச்சி, ஏன்ற ஒழுக்க முதலிய உயர்நெறிக் குன்றத் தும்ப ரிம்பர் பல்காற் பயிலுறும் பாங்கினரென்றும்; தொன்னெறி யரையர்க்குத் துணைவராகிப் பகைப்புல னடுங்கிய படர்ந் தெதிருறீஇ வாய்விட் டார்த்து வாள் புடை பெயர்த்து விற் புடைத் தழீஇப் பொற்பொடு பெய்யு மாண்மையரென்றும்; தண்ணளி யுருக்கொடு தாங்கிச் செங்கோ னிலை பெறச் செய்யுந் தலைமைய ரென்றும்; கடவு ளாணையிற் கடவாச் செறிவும் யாவருமதிக்கு மேஎருடைமையும் புலவராற் பசுமையும் பொய்யா மாற்றமும் போக்கறு தொற்றமு மின்சுவை நிறைவுமெத்திற நலனு முடையரென்றும் - உவமைக் குறிப்பாற் பெறப்படுதலின் இங்ஙன மென்க. ஈண்டு வகுத்தவை கொண்டலின் கண்ணுமுய்த் துணர்ந்து கொள்க. இஃது வகுத்த தன்றிவிரிப்பிற் பெருகும்.



RangaRakes tamilnavarasam.com

இனி, கொண்டலை நிகர்க்கும் வேளாண்குடி என்பதற்குக் கொண்டல்-கொண்டலை நடாத்தும், ஐ-தலைவனாகிய இந்திரனை, நிகர்க்கும் -ஒத்த, வேளாண்குடி-வேளாண்குடிப் பிறப்பினர் எனினு மமையும். இங்ஙனம் பெறுங்கால், வேளாண் குடிப் பிறப்பினர் தமது நல்லொழுக்க மென்னு மாணையாற் கொண்டலை யாங்காங்குப் பெய்வித்து நடத்தலும், ஐவகைத் திணையினு முய்வகைத் திணையாய மருதத் திணையை வளம்படுத்துக் காத்தலும், வேளாண் வேள்விக்கு வேந்தராதலும், வீழாது தரூஉம் வேளாண்மைக் குரிய கருவியையுடைய ராதலும், யாவரானும் விரும்பப்படூஉ மியற்கிய ராதலுங்கொள்க. ஈண்டு வகுத்தவை இந்திரன்மாட்டு முய்த் துணர்க. இஃதும் விரிப்பிற் பெருகும்.

அன்றி, கொண்ட லென்ப திலக்கணையாற் காவற் கடவு ளாய விண்டுவாகக் கொண்டு அக்கடவுளை யொத்த வேளாண் குடியெனினு மமையும். இங்ஙனங் கொள்ளுங்கால், வேளாண் குடிப்பிறப்பினர் நடுநின் றெவ்வெவ் வுயிர்க்கு நுகர்ச்சி வருவித்தலும், பகைப் புலன் முருக்கிப் பாதுகாத்தலும், திருவிற் பொலிந்த சிறப்புடைய ராதலிம், இன்சுவை யமுதமிரந்தோர்க் கீதலும், பூமகட் குரிமை பூண்டு நிற்றலும், சத்துவத் தனிக்குணத்தானே பயிறலும், ஊக்கமுஞ் செவ்வியு முடைய ராதலுங் கொள்க. ஈண்டு வகுத்தவை விண்டுவின் மாட்டு முய்த் துணர்க. இஃதும் விரிப்பிற் பெருகும்.

கொண்டலை நிகர்க்கும் வேளாண்குடி யென விரியுவமையின் கண் ணுவம வுரு பன்றி யை யுருபும் விரித்த திங்ஙனம் விரிப்பதற்குக் குறி யுணர்த்த வென்க. உவமைக்கும் பொருட்கு மொரு நோக்கத்தா னன்றிப் பலபட வகுத்த தெற்றாலெனின், உவமைப் பொருள் புகழ் பொருண் மிகை குறித் தழுக்கற்று முரணுதற்குறியா நிகர்க்கு மென்னுந் தடுமா றுவம யுருபு விரித்தமையினென்க. என்னை? ஆசிரியர் தொல்காப்பியர் உவம வுருபுகளை வகுத்து முடிபு செய்யுமிடத்து, "கடுப்ப வேய்ப்ப"{39} வென்னுஞ் சூத்திரத்தா னிகர்ப்ப வென்பது மெய் யுவம வுரு பென்று வகுத்த வண்ண மவ் வுருபு ஈண் டஃ தேலாது தொழில் பயன் முதலிய வேற்ற தாகலின். அஃதே லிஃ தியாண்டும் வரைதலின்றோ வெனின் "தடுமா றுருபுக டாம்வரை யின்றே"{40} யென்பவாகலின் விரும்புமிடத் தின் றென்க. அன்றி இஃ தழுக்கற்று முரணுதற் பெயர்ச்சிக்கட் போந்த வெச்சம் போறலி னங்ஙனங் குறித்த வைத்த தெனினு மமையு மென்க. இவ் வுவமை நோக்கைச் "சுட்டிக்கூறா"{41} வென்னுஞ் சூத்திர நோக்கத்தானுங் காண்க. உவமையும் பொருளு மொத்தல் வேண்டு மென்றவா றொத்த வண்ண முய்த்துணர்க. அன்றி உவமப் போலி மறுக்கப்படா வாகலி னீண் டவற்றுள்ளு மேற்பன விருப்பினு மிழுக்கின் றென்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

{39. **கடுப்ப வேய்ப்ப மருளப் புரைய**
**வொட்ட வொடுங்க வோட நிகர்ப்பவென்**
**றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்**
**-தொல் பொருள், உவம இயல், 15.**

40. **தடுமா றுவமங் கடிவரை யின்றே**
**-தொல் பொருள், உவமம், 35.**

41. **சுட்டிக் கூறா வுவம மாயிற்**
**பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே**



RangaRakes tamilnavarasam.com

-தொல்பொருள், உவமம், 7.}

கொண்ட லென்பது விரவு மிகையொலிக் காப்பிய வழக்குத் தொடரியற் பால்பகா வஃறிணைப் பல்பொருள் குறித்த வொரு பெயர்த் திரிசொல். ஈண்டுச் சிறப் புய ருரிமைக் கருவி யவயவப் பொது நிலைப் பூதப் பொருட்டாகிய மேகத்தை யுணர்த்திற்று.

வேளாண் குடி யென்பது உயர்நிலைக் காப்பிய வழக்குச் சொன்னடைச் சிறப்பு முன்னிலைக் காரணம் பின்னிலை யிடுகுறிச் சாதிக் கூற்றுத் தொடர்நிலை கருத்துப் பொருட்புறத் துயர் திணைக் காட்சிப் பொருட் பன்மைத் தோற்றத் தன் மொழித் தொகைச் சொற் றொடர். இதனை வேளாண்மைக் குரிய குடிப் பிறப்பின ரென்று விரித்துக் கொள்க. வேளாண்மை நன்றி ஈகை வேளாண்டொழின்மை முதலிய பல்பொருள் குறித்தவொரு சொல். அஃது வேளாண் டொழி லுடைமையா னன்றி ஈகை முதலிய நற்செய்கை யுடைமைக்கு முரிய வோர் குடிப்பண் பாயிற்று. குடி யென்பது குலம் ஊர் முதலிய குறித்தவோர் சொல். அஃதீண்டு குலத்தின் மே னின்றது. அன்றி மருதத் திணை யூ ரென்பது மொன்று. வேளாண்டொழில் என்பதில் வேள் என்பது நன்னிலம், ஆண் என்பது உரிமைத் தலைமை, தொழில் என்பது முயன்று முடித்தல்; இதனால் நன்னிலந் திருந்திச் செந்நெறி பொங்கப் பைங்கூழ் விளைக்கு முரிமைத் தலைமைத் தொழில் என்பது பெறப்பட்டது. அல்லதூ உம்வேள் என்பது விரும்பப்படுகை, ஆண்டொழில் -ஆண்மைத் தொழில்: இதனால் அரயரால் விரும்பப்படூஉம் மந்திரித் தலைமை சேனைத் தலைமை யென்னும் ஆண்மைத் தொழிலுடையோரென்பதூஉ மமையு மென்க. இதனை யுடைய குடிப்பிறப்பினர் வேளாண் குடிப் பிறப்பினர் வேளாள ரென்க. இவ்வேளாண் குடிப் பிறப்பினர் ஈகை முதலிய நற்செய்கைகளின் மிக்காரென்பதற்கு வேறு கூறவேண்டுவ தின்று: இவர் குடிப்பெயரே தக்க சான் றென்க, அன்றி அந்தணர் அரையர் வணிகர் முதலியோர் தத் தமக் குரிய வொழுக்கங்களை நடத்தற்கு வேளாண் குடிப் பிறப்பினரது உதவி முற்றும் வேண்டுதலின், இவர் நெறி பெருநெறி யென்பதற்கு மஃதே சான் றென்க. இதனைத் தொல் காப்பியத்தில் "நாற்றமு" மென்னுஞ் சூத்திரத்துள் {42} "வேளாண் பெரு நெறி" யென்றதனாற் காண்க. அன்றி யிவர்க்கித் தொழி லுரிமைச் சிறப்பென்பதூஉம் இவரது மேம்பாட்டுத் தன்மையையு மர பியலிற்{43} காண்க. இதனை விரிக்கிற் பெருகும்.

வழிபடு கடவுள் வணக்கப் பாட்டுரை முற்றிற்று.

அடிகளது பதிப்பில் சதகச் செய்யுள் ஒவ்வொன்றற்கும் மேற்கோளாக பழைய நூற் பாடல்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. சில செய்யுட்களுக்கு இரண்டு அல்லது மூன்று பாடல்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. இம்மேற்கோட் பாடல்கள் சதகச் செய்யுள் ஒவ்வொன்றன்கீழும் அச்சிடப்பட்டுள்ளன. இம் மேற்கோட் பாடல்கள் அடிகளால் முதன் முதலாக எடுத்துக் காட்டப்பட்டனவா அல்லது அவர்களுக்கு கிடைத்த ஏடுகளில் இருந்தனவா என்பது தெரியவில்லை. யாமறிந்தவரை அடிகளுடைய தொண்ட மண்டல சதகப் பதிப்பே (1855) முதற் பதிப்பாகக் காணப்படுகிறது. அதற்கு முன்பு யாரும் பதிப்பித்துள்ளதாகத் தெரியவில்லை.



RangaRakes tamilnavarasam.com

இவை எல்லாவற்றினுஞ் சிறந்ததோர் செய்தி அடிகளின் இப்பதிப்பு இலவச வெளியீடென்பதாகும். இதுபற்றி இப்பதிப்பிற் காணப்படும் குறிப்பு வருமாறு:

{42. தொல். பொருள். களவு 23}
{43. தொல். பொருள். மரபியல்.}

இந்தப் புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம் பெத்திநாயகன் பேட்டை முல்லாதெருவில் இயற்றமிழ்ப் போதகசாலை ஆமாத்தியர்களி லொருவராகிய சென்னப்ப நாயகன் குப்பம் பாலசுப்பிரமண்ணிய முதலியாரிடத்தில் விலை கொடாமற் பெற்றுக்கொள்ளலாம். புறதேயத்திலுள்ளவர்கள் கடித மூலமாய் ஊர்ப்பெயரும் நாமதேயமும்-விபரமாகத் தெரிவித்தாற் கொடுத்தனுப்பப்படும். தபால் செலவு தாங்களே கொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டியது.

அடிகளின் இப் பதிப்புக்குக் காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், புதுவை சுப்பராய முதலியார், விருத்தாசலம் தியாகராஜ கவிராயர் ஆகிய நால்வர் சாற்றுக்கவியளித்துள்ளனர். அவை வருமாறு:

ம-ள-ள-ஸ்ரீ-காஞ்சிபுரம் வித்வான்
சபாபதி முதலியாரவர்களியற்றிய

**அகவல்**

**சீர்வளர் மேருத் தென்பாற் றிசையில்**
**பேர்வளர் நாவற் பெருந்தீ வத்தொளிர்**
**தொண்டநன் னாட்டுவாழ் துளுவவே ளாளர்**
**கண்ட முத்தமிழ்க் கல்விச் சாலைப்**
**பாலனத் தலைமை பரித்துள வள்ளல்**
**கோல மிகுத்த கொன்றையம் பதிமால்**
**உமைகர நதிகுலொத் துங்கன் சைலத்**
**தமைவுறு மன்ப னலர்குவ ளைத்தார்**
**மார்பன் முத்தைய வரொதயன் றேனு**
**கார்தரு நிகர்கொடைக் காவல னாவலர்**
**பொய்யா மொழியார் புகழ்தமி ழாகரன்**
**அய்யா சாமிவே ளகத்து விருப்பம்**
**மருவுறத் தொண்ட மண்டலத் திலக்கணை**
**வரிவடி வத்து வரையா வண்ணம்**
**அரிறப நாடி யமைத்தனன் பலகலை**
**தெரிதரு முணர்ச்சியன் சிவனருள் புனையும்**
**மாறுறா வன்பன் மனமா சகன்றோன்**
**தேறுவாருளத்துத் திகழ்ந்தயன் முதலோர்**
**தெரிதற் கரிய சிதம்பர நகரிற்**
**பரிவுறு புலமைப் பண்பன்**
**இராம லிங்க மெனும்பெய ரோனே.**

**ம-ள-ள-ஸ்ரீ புரசை அஷ்டாவதா நம் சபாபதி முதலியாரவர்க ளியற்றிய**



RangaRakes tamilnavarasam.com

நேரிசை ஆசிரியப்பா

மாமணி துதைந்த காமரு நெடுங்கடற்
றானை யுடுத்த மாநில வரைப்பிடை
யேழனுண் மேதகச் சூழு நாவலந்
தீவிற் கொழிதமிழ் மேவுநன் னாட்டில்
வான்றோய் புகழுறூஉஞ் சான்றோ ருடைத்தென
வவ்வைமு தாட்டி மிருக்கையென் னிலைஇ
மன்னிய தொண்ட மண்டல சதகம்
பன்னிய பெருஞ்சீர்ப் படிக்கா சுப்பெயர்க்
கவிஞன் சொற்றதன் கவினெலா மெளிதிற்
புவியுளோ ருணர்வான் பூத்தகங் கனிவு
வளனுத வுறுபுகழ்த் துளுவவே ளாளர்
நீங்கரு நலனெலா மோங்கிய சென்னையின்
மேதக வமைத்த கோதி லியற்றமிழ்ப்
போதக சாலை புரக்கும் புரவலன்
மாங்குயின் மடவார் தேங்குயிற் றிரளைக்
கற்பா னரும்பும் பொற்பார் செந்நிறத்
தடந்தளிர் பொதுளிய நெடுந்தழை யெகின்மிசை
மேவாப் பலகாற் கூவாப் பயில்வுறு
மன்றலந் தண்டலைக் கொன்றையம் பதியின
னதிகுலந் தருமுத் தைய நரபதி
சதுர்பெறு தனையன் றண்குவ ளைத்தா
ரணிமலை மார்பகத் தையா சாமிமா
றருகெ னாகமஞ் சாற்றுநாற் பாத
மிருமையுந் தருமவை யியலுற வுளுற்றுநர்க்
கொருபெருந் தலையா யுயர்தரு சிதம்பர
மருவுமா நந்த வள்ளி களிக்கு
நிராமையற் பரவு மிராமலிங் கப்பெயர்ப்
புலமையோ னன்கு புரிந்துளங் கொள்ளுபு
தொலைவற நெடிது சொற்பொரு ணோக்கி
வழுவா வியலின் வனைந்தீன்
டெழுதா வெழுத்திலிட் டினிதுநல் கினனே.

ம-ள-ள-ஸ்ரீ புதுவை -சுப்பராய முதலியாரவர்க ளியற்றிய விருத்தம்

தொண்டமண் டலத்தைத் தொண்டைமண் டலமாச்
 சொலுமவர் புறங்கொடுத் திரியத்
தண்டமி மியலின் விரித்துரை விளங்கத்
 தந்தன னலகில்வே தாந்தத்
தொண்டிரை யறிவாம் பஃறியாற் கடந்து
 சித்தமைம் பொறிசெலா தடக்கும்
அண்டரும் புகழு மிராமலிங் கப்பே
 ரற்புத ஞாநதே சிகனே.

ம-ள-ள-ஸ்ரீ விருத்தாசலம் தியாகராஜ கவிராஜரவர்க ளியற்றிய



RangaRakes tamilnavarasam.com

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

**கலைநிலையுங் கலையுணரும் புலவர்நிலை கண்டான்**
**கவிநிலைகண் டான்றமிழின் கடற்கரையைக் கண்டான்**
**சிலையெனவா டகச்சிலம்பைச் சிலைத்திடவே வாங்கிச்**
**சிலைத்தொருமுப் புரவலியைச் சிரித்தெழுந்த நாதன்**
**றலையெனவோர்ந்தன்னோன் றன் றிருப்பதத்தில் விருப்புஞ்**
**சத்தியமாண் பொறைஞாநந் தகுராம லிங்க**
**நிலவியநா வலன்றொண்ட மண்டலமென் றேபேர்**
**நிறுவினான் புநிதரெலா நிச்சயங்கொள் வாரே.{44}**

நூற் பெயரிலக்கணத்தை, அவர் கூற்றாக விவகரித்தல், அதனை மறுத்தல் என இரு கூறாக வகுத்து அடிகள் செய்திருத்தல் அருமைப் பாடுடைத்தாம். இதனுள் காட்டப் பெறும் இலக்கண நுட்பங்கள் இலக்கணம் வல்லாரையும் இறும்பூதெய்தச் செய்வன.

## சென்னையில் சில நிகழ்ச்சிகள்

### பாம்பு தீண்டாது அகன்றது

ஒருநாள் மாலை அடிகள் சில அன்பர்களுடன் வியாசர்பாடிக்குச் சென்று சொற்பெருக் காற்றி இரவு சென்னை திரும்பினார்கள். வழியில் பாம்பொன்று குறுக்கிட்டது. உடனிருந்த அனைவரும் அஞ்சி ஓடினர். அடிகள் அசையாது அவ்விடமே நின்றார். பாம்பு அடிகளின் காலைச் சுற்றிக்கொண்டது. அடிகள் அதனைப் போம்படி ஏவினர். அதுவும் ஊறு செய்யாது அகன்றது. அஞ்சியோடிய அனைவரும் இவ்வற்புதத்தைக்கண்டு வியந்தனர். 'இதனை நமக்கு அறிவித்தவர் அன்று வள்ளலாருடன் சென்றவருள் ஒருவரான மகாவித்துவான் திருமயிலை-தணிகாசல முதலியார்'{45} என்று ச.மு.க. பதிப்பு சரித்திரக் குறிப்பில் அடிக் குறிப்பாக எழுதப்பட்டுள்ளது.

{44. காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார் புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் முதலிய பெரும்புலவர்கள் அடிகளது முடிவை (தொண்டமண்டலம் என்பதை) ஆதரிக்கின்றனர். எனினும் அடிகட்கு முன்னும் பின்னும் தொண்டை மண்டலம் என்றே வழங்கிவருகிறது. அடிகள் பதிப்பும், முடிவும் வழக்கிலில்லாமை ஒருபுறமிருப்ப அவற்றை இன்றைய இலக்கிய உலகம் அறிந்திருப்பது தானும் அருமை.

{45. மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியார்: இவர் ஆறுமுக நாவலரிடம் பாடம் கேட்டவர். சாத்திரபாடம் சொல்லுவதில் மிகவும் வல்லவர். எல்லோருக்கும் பாடம் சொல்லமாட்டார். சிவதீக்கை பெற்று, மரக்கறியுண்டு, நாடோறும் கோயில் வழிபாடு செய்வோர்க்கே பாடம் சொல்லுவார். வடமொழியிலும் வல்லவர். அச்சுக்கு வராத நூல்கள் எனினும் தயங்காது எழுதிப்படித்தவர். வித்துவான் சண்முகம்பிள்ளை, திரு.வி.க.விசுவநாத குருக்கள், அரங்கசாமி நாயகர், ம.பா.அவர்களின் தந்தையார் மாசிலாமணி முதலியார் ஆகியோர் இவரிடம் பாடங்கேட்டவர்கள். கதிர்வேல்பிள்ளை காலமான பின்னர் திரு.வி.க. இவரிடமே பாடங்கேட்டார். இவர் 1918-இல் காலமானார்.



RangaRakes tamilnavarasam.com

வள்ளற்பெருமானின் உடன் கூட்டத்தவருள் ஒருவராக இவர் பெருமானுடன் வியாசர்பாடி சென்று வந்தார் என்ற செய்தி நமக்கு மகிழ்ச்சியளிப்பதாம். }

## திருநீறளித்து நோய்தீர்த்தது

பல ஆண்டுகளாக வாத நோயால் துன்புற்ற வித்வான் கண்ணாடி-சுப்பராயமுதலியார் என்பவர் தனது துன்பத்தை அடிகளிடம் விண்ணப்பித்துக் கொண்டார். அடிகள் திருநீறளிக்கவே அவரைப் பற்றியிருந்த வாத நோய் குணமாயிற்று. நோய் நீங்கப்பெற்ற அவர்

**அகத்தியனோ வான்மிகியோ ஆதிசேடன் றானோ**
**மகத்துவமாஞ் சம்பந்த மாலோ-சகத்திலகுஞ்**
**சச்சிதா னந்தத்தின் தண்ணளியோ என்னென்பேன்**
**மெச்சுமதி ராமலிங்க வேள்**

என்று பாடிப் பரவினார்.

## ஒரு திருமண வீட்டுக்குச் சென்றது

சென்னையிலிருந்த சபாபதி முதலியாரென்பவர் தன் வீட்டில் நிகழும் திருமணத்திற்கு எழுந்தருளிச் சிறப்பிக்க வேண்டுமென அடிகளை வேண்டினார். அடிகளும் இணங்கித் திருமண வீட்டுக்குச் சென்றனர். வீட்டுவாசலில் சேவகன் ஒருவன் நின்று தலைப்பாகையும் சட்டையும் தரித்து வந்தவர்களை வரவேற்று உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தான். நல்ல சோமன் சொக்காய் சோடு முதலிய அணியாது தான் உட்புகுதலை அச்சேவகன் அவமதிப்பாகக் கருதக்கூடும் என நினைந்து அடிகள் திருமண வீட்டிற் புகாது எதிர்வீட்டுத் திண்ணையில் அமர்ந்தனர். அந்த வீட்டுக்காரரும் திருமணத்திற்கு வந்திருந்த சிலரும் அடிகளின் வருகையைத் தெரிவிக்கத் திருமண வீட்டாரிடம் ஓடினர். அப்போது அடிகள்

**சோடில்லை மேல்வெள்ளைச் சொக்கா**
**யிலைநல்ல சோமணில்லைப்**
**பாடில்லை கையிற் பணமில்லை**
**தேகப் பருமனில்லை**
**வீடில்லை யாதொரு வீறாப்பு**
**மில்லை விவாகமது**
**நாடில்லை நீநெஞ்ச மேயெந்த**
**வாற்றினி னண்ணினையே.**

என்ற பாடலைப் பாடியருளினர்.

## சங்கராசாரியரின் ஐயந் தெளிவித்தது

அக்காலத்திய சங்கராசாரிய சுவாமிகள் ஒருகால் சென்னைக்கு எழுந்தருளியபோது வடமொழி நூலொன்றில் தமக்குள்ள சில ஐயங்களைத் தெளிவித்துக்கொள்ளக் கருதி, தக்க வித்வான்கள் உளரோ வெனவினவ ஓர் அந்தணர் அடிகளைப்பற்றிக் குறிப்பிட்டார். சங்கராசாரியரும் அடிகளைக் காண

விரும்பி அழைத்தார். அடிகள் தொழுவூர் வேலாயுத முதலியாரையும் உடனழைத்துச் சென்றனர். சற்றுநேரம் அளவளாவியபின் சங்கராசாரியர் அவ்வடமொழி நூலை அடிகளிடம் கொடுத்து தமது ஐயங்கலை விளக்கவேண்டினர். அடிகள் அந்நூலின் உரிய ஏடுகளை ஒருமுறை திருக்கண்ணோட்டஞ்செய்து வேலாயுதனாரிடம் கொடுத்து 'நீர் சொல்லும்' எனப் பணித்தருளினார்கள். வேலாயுதனார் அடிகளது ஆணையைச் சிந்தித்து அப்பகுதியை விரிவாக விளக்கினார். சங்கராசாரியருக்கிருந்த ஐயங்கள் அகன்றன. அவர் அடிகளை சிறப்பாகப் பாராட்டி விடை கொடுத்தார்.

### சிறுவர்களை அடிக்க வேண்டாம்

அடிகளாரின் தமையனார் சபாபதி பிள்ளையின் மருகர் பொன்னேரி சுந்தரம் பிள்ளையிடம், சபாபதி பிள்ளையின் மகன் வடிவேல் பிள்ளை சிறுவராயிருந்த போது படித்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் வடிவேல் பிள்ளை, சுந்தரம் பிள்ளையின் புத்தகமொன்றை அவருக்குத் தெரியாமல் எடுத்து அதில் அவர் வைத்திருந்த ஒரு படத்தை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். இதனைக் கண்ட சுந்தரம் பிள்ளை சிறுவன் விளையாட்டாகப் படத்தைக் கிழித்துவிடக்கூடு மென்றஞ்சி 'ஏன் அப்புத்தகத்தை எடுத்தாய்,' எனக் கடிந்து கொண்டு வடிவேல் பிள்ளையை அடித்து விட்டார். இச் செய்தி அறிந்த அடிகள் படிக்கும் சிறுவர்கலை அடிப்பது நன்றால்ல என ஒரு பாடலைப் பாடிச் சுந்தரம் பிள்ளைக்கு அனுப்பியருளினர். அப்பாடல்

**படிப்பதுநன் றெனத்தெரிந்த பாங்குடையாய்**
**மன்றுள்வெளிப் பரம னன்பே**
**தடிப்பதுநன் றெனத்தேர்ந்த சதுருடையாய்**
**அறநவின்ற தவத்தாய் வீணில்**
**துடிப்பதிலாத் தூயமனச் சுந்தரப்பேர்**
**உடையாய்என் தோழ கேள்நீ**
**அடிப்பதுமச் சிறுவர்களை யடிப் பதுநன்**
**றல வென்மேல் ஆணை யாணை.**

என்பது. இதனுள் அடிகள் 'அடிப்பது நன்றல' என்பதைத்தன் மேல் ஆணையிட்டுக் கூறியிருப்பதைக் காண்க. சிறுவர்களுக்குப் பாடஞ்சொல்லும் போது கோபத்தினாலும் சகிப்பிலாமையினாலும் அவர்களை அடிகள் அடித்ததும், அங்ஙனம் அடித்தபோது கலங்கிய கலக்கமும், பின்னாளில் அதனை இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்வதும் முன்னரெடுத்துக் காட்டப்பட்டன (பக்கம்-67) சிறுவர்களை அடிக்காது, அன்பினாலேயே நல்வழிப்படுத்த வேண்டும் என்பது அடிகள் கருத்து. இதனைத் தாமும் கடைப்பிடித்தார்கள். பிறர்க்கும் எடுத்துரைத்தார்கள். ஆசிரியர்கள் இதனை அறிந்து ஒழுகுதல் கடனாம். வடிவேல் பிள்ளை சிறுவராயிருக்கும்போது அடிகளிடமும் படித்தார். அவருக்கு அடிகள் அரிச்சுவடி கற்பிக்கும்போது இனவெழுத்துகளை இரண்டிரண்டாக எழுதிக் கற்பிப்பார்களாம். இதனை வடிவேல் பிள்ளையின் மகனார் தணிகாசலம் பிள்ளையவர்கள் எமக்குக் கூறினர். அவ்வாறு எழுதித் தம் கையொப்பமிட்டும் தந்தனர்.

### எட்டாலும் கேட்க மறுத்தது

சென்னையில் உறைந்த கந்தசாமி முதலியார் என்பவர் தமது வறிய நிலையை அடிகளாரிடம் கூறிச் செல்வர் சிலரை அணுகிப் பொருளுதவி பெறுவதற்கு ஏதுவாகச் சிலர்க்கு அறிமுகச் சீட்டுத் தந்தருள வேண்டினார். இதனைக் கேட்ட அடிகள் நகைத்து

**ஏட்டாலுங் கேளயல் என்பாரை நான்சிரித் தென்னைவெட்டிப்**
**போட்டாலும் வேறிடம் கேளேன்என் நாணைப் புறம்விடுத்துக்**
**கேட்டாலும் என்னை உடையான் இடஞ்சென்று கேட்பனென்றே**
**நீட்டாலும் வாயுரைப் பாட்டாலுஞ் சொல்லி நிறுத்துவனே.**

எனப் பாடி அவருக்கு அருட்செல்வத்தைப் போதித்தனுப்பினர். இப்பாடல் திருவருட்பா முதல் திருமுறை, திருவருண் முறையீட்டில் முப்பத்தோராவது செய்யுளாகவும் திகழ்கின்றது.

## தமிழ் என்னும் சொல்லுக்கிட்ட உரை

சென்னையில் சங்கராசாரிய சுவாமிகளுடன் அளவளாவ நேரிட்ட போது சங்கராசாரிய சுவாமிகள் சமஸ்கிருதமே எல்லா மொழிக்கும் தாய்மொழி எனக் கூறினாராம். அடிகள் அஃதுண்மையன்றென மறுத்து சமஸ்கிருதம் எல்லாமொழிக்கும் தாய்மொழியாயின் தமிழ் தந்தைமொழி எனக் கூறித் தமிழின் சிறப்பை விரிவாக விளக்கி, ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழறிவுறுத்துவான் வேண்டிக் கபிலர் குறிஞ்சிப் பாட்டினைச் பாடியதனை நிகர்ப்ப, ஆரிய மட்டுமே நன்குணர்ந்த ஆசாரியராகிய சங்கராசாரியர்க்குத் தென்மொழிக் கடலும் வடமொழிக் கடலும் நிலை கண்டுணர்ந்த மொழிப் புலமையோடன்றித் திருவருட் புலமையால் உலகத்து மொழியனைத்தும் முட்டற உணர்ந்த முற்றறிவினராகிய பெருமானார் 'தமிழ்' என்னும் சொல்லுக்கு ஓர் உரையும் அப்போதே செய்து சங்கராசாரியர்க்குத் தமிழின் செவ்வியைச் செவியறிவுறுத்தியருளினர்.

அடிகள் செய்தருளிய அவ்வுரை விளக்கம் "உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை" என்னும் திங்களிதழில் 21-8-1897-இல் "தமிழ். ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளால் எழுதப்பட்டது" என்னும் தலைப்போடு முதன் முதலாக அச்சிடப்பட்டது. பின்னர் சித்தாந்தம் 1913-ஜூலை (தொகுதி உ-பகுதி எ) இதழில் "தமிழ். இராமலிங்க சுவாமியெழுதியது" எனச் சித்தாந்த தீபிகையிலுள்ளவாறே அச்சிடப்பட்டுள்ளது. திருவருட்பா பதிப்புகளிலும் இது இடம் பெற்றுள்ளது. அடிகள் அருளிய அவ்வுரை வருமாறு:

### தமிழ்

தமிழ் என்பது **த்-அ-ம்-இ-ழ்** என்னும் ஐந்து அலகு நிலையுடைத்**து. த்,ம்,ழ்:** ஜடசித்கலை. **அ, இ:** சித் கலை.

**அ** அகண்டாகார சித்தை விளக்கும் ஓங்கார பஞ்சாக்கரத்துள் பதிநிலை யக்கரமாம்.

**இ** பதியை விட்டு நீங்காத சித்தை விளக்கும் வியவகாரத்தால் அனந்தாகார வியஷ்டி பேதங் காட்டும் ஜீவ சித்கலை யக்கரமாம்.

பதி சிதாத்ம கலைகளுக் காதாரமாகி உயிரினுக்குடலை யொத்துக் குறிக்கப்படும் **த்,ம்,ழ்** எழுத்துகளுக் குரை:

**த்** ஏழாவது மெய்;

**ம்** பத்தாவதாகும்;

**ழ்** கரு-வ**து இயற்கை யுண்மைச் சிறப்பிய லக்கரமாம்.**

ஐந் தலகு நிலையும் உபய கலை நிலையும் மூன்று மெய் நிலையும் அமைந்துள்ளதும், சம்பு பக்ஷித்தாரால் அனாதியாய்-சுத்த சித்தாந்த ஆரிஷ ரீதிப்படி கடவுள் அருளாணையால்-கற்பிக்கப்பட்டதும், எப் பாஷைகளுக்கும் பிதுர் பாஷை யென்று ஆன்றோர்களால் கொண்டாடப்பட்டதும், இனிமை யென்று நிருத்தம் சித்திக்கப் பெற்றுள்ளதுமான தமிழ் என்னும் **இயற்கை யுண்மைச் சிறப்பியல் மொழி**க்குச் சுத்த சித்தாந்த பத உரை:-

**த்-அ;** தத்வ ரூ பாதி சிவ போ காந்தமான தசகாரிய இயற்கை யுண்மைக் கட்டளை நிலையில், முன் அலகு நிலைப் பொருள் கூறிய விடத்துக் குறித்த ஏழாவது நிலையாகிய த் என்பது சிவ ரூப இயற்கை யுண்மைக் கட்டளையாம்.

**அ** அகண்டாகார சித்கலா ரூப ஓங்காரக் துட்பொருட் பிரதம விலக்கிய வியக்தி யக்கரம். பன்னீருயிர் நிலையிற்றலையாய முத லக்கர மாதலில், அதுவே பிரமாதி பரசி வாந்த நவ நிலைக்கும் அனாதி யாதி காரணமா யுள்ள இயற்கை யுண்மைப் பரிபூரணப் பொருளிலக்காம். என்னவே, சிவ ரூப மாகும் தகரா காசத்தில் சுந்த சிவ மாகும் அருட்ஜோதி யிணைந்துள்ள பூரணானந்த ஸ்வரூப பரபதி வியக்த மாயிற்று.

**ம்-இ**: சங்கார ப்ரணவ மாகிய மகாரம் முக்தான்மாக்களுக்கு ஒளி வண்ணச் சதானந்த மாயும் பெத்தான்மாக்களுக்கு இருள் வண்ண மலரூப மாயும் இருந்து, கற்பாந்தப் பிரளய முடிவின் சிருஷ்டி திதியாதிகளில் சிதான்ம சக்தியாகிய ஜீவனுக்கு அதிகரணமாகவும்; முற்குறித்த பத்தாவது நிலயமாகிய ஆன்மாதாரமாகியு முள்ளதெனப் பொருளாம்.

இ-பன்னீருயிர் நிலைகளில் மூன்றாம் நிலை யுயிராகிய இகரம் திரிகலா ஆன்ம வருக்கத்தில் அபரமாகிய சகலாகலரையும் பரமாகிய பிரளயாகலரையும் கீழ்ப்படுத்தி அவ்விரு கூட்டத்தாருக்கும் மேற்பட்டு நின்ற சுத்த விஞ்ஞான கலராகிய சிதாத்மாக்களைச் சுட்டுகின்றதாம்.

என்னவே, ஆதார ஆதேயக் கூட்டுறவால் என்றுத் தோன்றி விளங்கும் சிதான்ம வருக்கங்கள் பரபதி லக்ஷியமாகிய பூரணானந்தத்திற்கு அநுபவிகளாக வுரியவர்கள் ளெனக் குறிக் கொள்ளல் வேண்டும்.

**ழ்:** இந்தச் சிறப்பிய லக்கரம் பதினெண் மெய்களில் பக்ஷி முடிபின் எண் குறிப்பில் நின்று**, சிவயோக பூமியாகிய பரத கண்டத்தில்** பௌராணிக தத்துவத்தாற் குறிக்கப்பட்ட ஐம்பத்தாறு தேசங்களுள் சுதேசந் தவி**ர மற்ற**



RangaRakes tamilnavarasam.com

**ஐம்பத்தைந்து தேச பாஷைகளிலு மில்லாததாயும்** பதினெண்ணிலமாகக் குறிக்கப்பட்ட செந்தமிழ் கொடுந்தமிழ் என்னும் இருமைக்கும் ஒற்றுமை யுரிமையாயும், முத்துறைத் தமிழுக்குள் முதன்மைத் துறையானதும் இருக்கு யஜுர் சாம மென்னும் சமஸ்கிருத வேதத் திரயப் பொருள் அநுபவத்தை யெளிதில் கற்றுணர்ந்து தெளிந்து அநுபவதித்தற்குப் பரமேசுரனது திருவருளைப் பஞ்சாக்ஷர முத்தொழிற் காரியமான பஞ்ச தசாக்கரியால் பிரத்தியக்ஷாநுபவம் சித்திக்கச் செய்யும் நிலையமானதும் ஸ்ரீ மாணிக்கவாசகர் சம்பந்தர் நாவரையர் சுந்தரர் திருமூலர் முதலிய மகாபுருஷர்களால் சாத்திர தோத்திரங்களாக அருளிச் செய்யப்பட்டிருகும் திருவாசகம் தேவாரம் திருமந்திரம் என்னும் பரமார்த்த ரகசியங்களை யுடையதும்-பலநாள் நைஷ்டிக அதிகரணம் பூண்டு போதாகாசிரியர் சந்நிதியில் தாழ்ந்து சகபாடிகளோடு சூழ்ந்து சுர ஒலி பேதங்களைச் தேர்ந்து உழைப்பெடுத்து ஓதினாலும் பாடமாவதற்கு அருமையாயும் பாடமானாலும் பாஷியம் வியாக்கியானம் டீக்கா டீக்கா டிப்பணி முதலிய உரைகோள் கருவிகளைப் பொருள் தேடிக் கைவரினும் அக்கருவிகளால் போதகம் பெறவேண்டியதற்குப் பாஷியகாரர்கள் வியாக்கியான கர்த்தர்கள் டீக்கா வல்லபர்கள் டீக்கா சூசகர்கள் முதலிய போதக உப போதகாசிரியர்கள் கிட்டுவது அருமையில் அருமையாயும் இருக்கிற ஆரியம் மகாராட்டிரம் ஆந்திரம் என்ற பற்பல பாஷைகளைப் போலாகாமல்-பெரும்பாலும் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமாயும் ஒலி யிலேசாயும் கூட்டென்னுஞ் சந்தி அதிசுலபமாயும் எழுதவும் கவி செய்யவும் மிக நேர்மையாயும் அக்ஷர ஆரவாரம் சொல்லாடம்பரம் முதலிய பெண்மை அலங்காரமின்றி எப்பாஷையின் சந்தககளையும் தன் பாஷையுள்ளடக்கி ஆளுகையில் ஆண்டன்மையைப் பொருந்தியதுமான தற்பாஷைக்கே அமைவுற்ற **ழ் ற் ன்** என்னும் முடி நடு அடி சிறப்பிய லக்கரங்களில் முடிநிலை இன்பாநுபவ சுத்த மோனாதீதத்தைச் சுட்டுறச் சுட்டும் **இயற்கை யுண்மைத் தனித் தலைமைப் பெருமைச் சிறப்பிய லொலியாம்.**

உரை கூறிப் போந்த சுத்த சித்தாந்த ஆரிட ரீதி முப்பதவுரைப் பொழிப்பு: மருளியற்கை மல இருளைப்பரிபாக சத்தியால் அருளொளி யாக்கி, அதற்குள் ளீடான சிதாத்ம சிற்கலாசத்தி யென்னும் சுத்த ஆன்மாவானது தகர ககன நடன அருட்பெருஞ் ஜோதி யென்னுஞ் சுத்த சிவானந்த பூரணத்தை சுத்த மோனா தீதவியலால் அனுபவிக்கும் **இயற்கை யுண்மையே தமிழ் என்னும் சொற்பொருள்** சுட்டின வாறு காண்க.

இதன் கருத்து யாதெனில்: **தமிழ்ப் பாஷையே அதி சுலபமாகச் சுத்த சுவாநுபூதியைக் கொடுக்குமென்பதாம்.**

இவ்வுரை, இலக்கண நுட்பத்துடன் தத்துவ நுட்பங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. அகரத்தைப் பதிநிலை அக்கரம் என்பதைக் காண்க. 'அகர முதல எழுத்தெல்லாம்' என்றவாறு அகரம் எல்லா எழுத்துக்களுக்கும் முதலில் நிற்பதாய் முதல்வனாகிய பதி போன்றதாதலின் பதி நிலையக்கரம் எனப்பட்டது.

'இனிமை என்று நிருத்தம் சித்திக்கப்பட்டுள்ளதுமான தமிழ்' என்றவதனால் தமிழின் இனிமைச் சிறப்பு சொல்லப்பட்டது. 'தமிழ்' என்னும் சொல்லுக்கு இனிமை எனப் பொருளுண்டு, 'இனிமையு நீர்மையுந் தமிழெனலாகும்' என்பது பிங்கல நிகண்டு. சிந்தாமணியுள்ளும்' தமிழ் தழீஇய சாயலவர்' எனத் 'தமிழ்' இனிமைப் பொருளில் வந்துள்ளமை காண்க.

தமிழை, இயற்கை உண்மைச் சிறப்பியல் மொழி எனக் கூறும் அடிகள், அதன் கண்ணுள்ள ழகரம் இயற்கை உண்மைச் சிறப்பியல் எழுத்தென்பர். ழகர ஒலி, இயற்கை உண்மைத் தனித் தலைமைப் பெருமைச் சிறப்பியல் ஒலி என்பர். சிறப்பியலெழுத்தாகிய இந்த ழகரம் தமிழ் தவிர மற்றை மொழிகளில் இல்லை என்பார், 'சிவயோக பூமியாகிய பரத கண்டத்தில் பௌராணிக தத்துவத்தாற் குறிக்கப்பட்ட ஐம்பத்தாறு தேசங்களுள் சுதேசந் தவிர மற்ற ஐம்பத்தைந்து தேச பாஷைகளிலுமில்லாத தாயும்' என்கின்றனர். பரத கண்டத்தைச் சிவயோக பூமி என்றதனை நோக்குக.

ஆரியம், மகாராட்டிரம், ஆந்திரம் முதலிய பிற மொழிகளைக் கற்க விரும்புவோர் பல நாள் நைட்டிக பிரமச்சரியம் பூண்டு கற்பிக்கும் ஆசிரியரிடம் பணிவிடை செய்து ஒழுகி, உடன் கற்கும் மாணாக்கர்களோடு கூடிக் கூச்சலிட்டு ஓத வேண்டுமென்றும், அப்படி ஓதினாலும் பாடமாவது அருமையென்றும், அப்படிப் பாடமாயினும், பாஷியம், வியாக்கியானம், டீக்கா, டீக்கா, டிப்பணி முதலிய உரைகோள் நூல்களை அரிதாகத் தேடி படிக்க வேண்டுமென்றும், தேடிய அவை கையிற் கிடைத்துப் படித்தாலும், அவற்றைப் பயன்படுத்திக் கற்பதற்கு பாஷ்யகாரர்கள், வியாக்கியானகர்த்தர்கள் கிடைப்பது அருமையென்றும், அடிகள் வழக்கு வீழ்ந்த மொழியென்பதை அடிகள், உரைகோள் கருவிகளும் போதகாசிரியர்களும் கிட்டாமையைக் கூறுவதால் அறியலாம்.

இனித் தமிழின் சிறப்பைக் கூறுவார், தமிழெழுத்துக்கள் கற்பதற்கு எண்ணளவு சுருக்காமனவை என்றும் தமிழ் ஒலி இலேசானது என்றும், தமிழில் கூட்டு என்னுஞ் சந்தி அதி சுலபமானது என்றும், தமிழ் உரைநடையிலெழுதவும் கவி செய்யவும் மிக நேர்மையானது என்றும், எழுத்தாரவாரம் சொல் ஆடம்பரம் முதலிய பெண்மைக் குணங்கள் இல்லாதது என்றும், எம்மொழியின் ஒலிகளையும் தன்னுட் கொண்டது என்றும் கூறுகின்றனர்.

உரையை முடிக்கும்போது, 'தமிழ்ப் பாஷையே அதிசுலபமாகச் சுத்தசிவானுபூதியைக் கொடுக்குமென்பதாம்' என முடிக்கின்றனர். **இறையின்பத்தைக் காட்டுவிப்பதும் கூட்டுவிப்பதும் தமிழ் மொழியே** என்பது பெரியோர் கொள்கை. அவர்களது அனுபவமும் அதுவேயாம். தமிழே இறையின்பத்தைக் கொடுப்ப தென்பதனைச் சீகாழித் தாண்டவராயரும் திருவாசக அனுபூதி உரையில் **'இத் திருவாசகம் தமிழால் துதிப்பது ஏதென்னில், பரமசிவன் சுத்தாத்துமாக்களுக்குத் தமிழாலன்றி வேறொரு பாடையாலும் நிரதிசய இன்பம் பிறவாதென்ற அருமை பற்றியேயாகும்'** எனக் கூறுவர்.

## திருத்தணிகை வழிபாடு

அடிகளின் வரலாற்றில் திருத்தணிகைப் பகுதி எனத் தனியாக ஒரு பகுதி இருப்பதற்கு இடமில்லை. அது கந்தகோட்டப் பகுதியோடும் திருவொற்றியூர்ப் பகுதியோடும் கலந்திருக்கிறது. அடிகள் கந்தகோட்டத்தையும், திருவொற்றியூரையும் வழிபட்ட காலமே திருத்தணிகையை வழிபட்ட காலமாம்.

## திருத்தணிகை வரலாறும் சிறப்பும்



RangaRakes tamilnavarasam.com

திருத்தணிகை தொண்ட நாட்டு முருகத் தலங்களுள் ஒன்று. தணிகாசலம் எனவும் வழங்கப்பெறும். செங்கல்வகிரி, சீபூரணகிரி, கல்லாரகிரி, கணிகவெற்பு, மூலாத்திரி, நல்லகாத்திரி கற்பசித்து, பிரணவார்த்த மாநகரம், இந்திர நகர், நாரதப் பிரியம், உற்பலவரை என்பன இதற்குப் புராணங்களுள் வழங்கும் பெயர்களாம். முருகவேள், சூரன் முதலிய அசுரர்களுடன் செய்த போரினின்றும் தணிந்து வந்து இருத்தலால் இது தணிகை எனப் பெயர் பெற்றது. 'அமர்தணிதலின் தணிகை' எனத் தணிகைப் புராணம் கூறும். (புராண வரலாற்றுப் படலம்-59) 'செருத்தணி' எனக் கந்தபுராணங் கூறும். 'செங்கண் வெய்ய சூர்ச் செருத்தொழிலினும் சிலை வேடர், தங்களிற் செயும் செருத்தொழிலினும் தணிந்திட்டே, இங்கு வந்து யாம் இருத்தலால் செருத்தணி என்றோர், மங்கலங்குதரு பெயரினைப் பெற்றது இவ்வரையே' என்பது கந்தபுராணம். (வள்ளியம்மை திருமணப் படலம்-216)

இங்கெழுந் தருளியுள்ள முருகப்பெருமானின் திருநாமம் ஞான சத்திதரர். மூல மூர்த்தியாகிய ஞானசத்திதரரும் வள்ளியம்மையாரும் தெய்வயானையும் தனித்தனி மூலத்தானங்களில் எழுந்தருளியுள்ளனர். விழா நாயகரான சுப்பிரமணிய ஈசுவரர் வள்ளி, தெய்வயானையுடன் உருத்திராக்க விமானத்தில் எழுந்தருளியுள்ளார்.

அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்களும் கச்சியப்ப முனிவர் இயற்றிய தணிகைப் புராணம், திருத்தணிகை யாற்றுப் படை, திருத்தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதி ஆகியனவும், கல்லாரகிரி மகாத்மியம் என்னும் வடமொழிப் புராணமும், திருத்தணிகைக் கந்தப்பையர் இயற்றிய தணிகாசல புராணமும், அடிகள் அருளிய திருவருட்பாக்களும் இத்தல நூல்களாம். தணிகையை வழிபட்டோர் பலர். அவருட் சிறந்தோர் அருணகிரிநாதரும் இராமலிங்க அடிகளுமாவர்.

## <u>அடிகளின் வழிபாடு</u>

## சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே

அடிகள் இளமையில் முருகனை வழிபடு கடவுளாகக் கொண்டாரென்பதும், ஒன்பதாம் அகவையில் முருகப்பெருமானால் ஆட்கொள்ளப் பெற்றாரென்பதும், தணிகை முருகன் கண்ணாடியில் தோன்றி அடிகட்குக் காட்சியளித்தானென்பதும் முன்னரே சொல்லப் பெற்றன. 'சீர் கொண்ட தெய்வ வதனங்களாறும்' என்ற தொடக்கத்தையுடைய பாடலில், தாம் கண்ட தணிகைக் காட்சியை அடிகள் விதந்தோதுவர். தணிகையில் முருகப் பெருமான் ஒரு திருமுகத்தோடேயே எழுந்தருளியுள்ளார். ஆயினும் அடிகட்கு ஆறுமுகங்களோடும் காட்சியளித்தார். இஃதென்னை என ஐயுறுவாருமுண்டு. அதுகாறும் தணிகை முருகனைக் காணாத அடிகள் தணிகை ஒருமுகனாகிய அவனை அறுமுகனாகவே உள்ளத்தில் நிறுத்தித் தியானிக்க, அவனும் அறுமுகனாகவே காட்சியளித்தருளினான் என்க. 'யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்' என்பது நமது ஒத்து. ஈண்டு, 'யாதொரு கோலங் கொண்டீர் அக்கோலமாகி ஆங்கே அவர் தாம் வருவர்' எனக்கொள்க. மற்று ஐந்தாந் திங்களிலேயே சிதம்பர ரகசியத்தை வெட்ட வெளியாகத் தரிசிக்கப்பெற்று மிக உயர்ந்ததாகிய அருவநிலையில் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற அடிகள் பின்பு ஒன்பதாம் அகவையில் உருவநிலையில் முருகனால் ஆட்கொள்ளப் பெற்றது என்னை எனில், கூறுதும், உண்மையில் கடவுள் ஒருவரே. அவ்வொரு கடவுளே அவரவர் வேண்டும் வடிவில் விளங்கி அருள் செய்கிறார். அறியாப் பருவத்தே அடிகட்கு இறைவன் தன்



RangaRakes tamilnavarasam.com

அருவ நிலையைத் தெள்ளிதிற் காட்டியருளினான். பின்னர் அடிகள் சற்று அறிவறிந்த பருவத்தே முருகனைத் துதித்தனராக ஒருவனாகிய இறைவன் முருகனாக வந்து காட்சியளித்தான்; ஆட்கொண்டான். 'யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்' என்னும் சித்தியார் இதனைத் தெளிவாக அறிவுறுத்துகிறது. உருவ வழிபாட்டிலிந்து அருவ வழிபாட்டுக்குச் செல்வது படிமுறை. முதலில் அடிகள் முருக உபாசகராக இருந்தார். பின்னர் சிவ பக்தரானார். பின்னர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அடியரானார். கந்தகோட்ட முருகன், ஒற்றியூர்ச் சிவபிரான், தில்லை நடராசர், வடலூர்ப் பேரொளி என்பது வள்ளலார் சென்ற வழி. அடிகளின் அருள் வாழ்வில் கந்தகோட்டம்-சரியை. ஒற்றியூர்-கிரியை. தில்லை-யோகம். வடலூர்-ஞானம். இதுவும் ஒருவகைப் படிமுறை. தம்மைச் சிறுகாலை ஆட்கொண்ட தேவதேவனை அடிகள்.

**ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே தெய்வ**
**யானைமகிழ் மணிக்குன்றே அரசே முக்கட்**
**பேறுமுகப் பெருஞ்சுடர்க்குட் சுடரே செவ்வேல்**
**பிடித்தருளும் பெருந்தகையே பிரம ஞானம்**
**வீறுமுகப் பெருங்குணத்தோர் இதயத் தோங்கும்**
**விளக்கமே ஆனந்த வெள்ள மேமுன்**
**தேறுமுகப் பெரியஅருட் குருவாய் என்னைச்**
**சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.**

எனப்பாடுவர். கல்வி எல்லாம் கற்பித்தாய், நின்பால் நேயம் காண வைத்தாய், பிறர்பால் சென்று இரவா வண்ணம் ஏற்றம் அளித்தாய், என்பால் நின் இரக்கம் என்னே என்னே எனப் போற்றுவர்.

**கல்விஎலாம் கற்பித்தாய் நின்பால் நேயம்**
**காணவைத்தாய் இவ்வுலகம் கானல் என்றே**
**ஒல்லும்வகை அறிவித்தாய் உள்ளே நின்றென்**
**உடையானே நின்அருளும் உதவு கின்றாய்**
**இல்லைஎனப் பிறர்பால்சென் றிரவா வண்ணம்**
**ஏற்றம்அளித் தாய்இரக்கம் என்னே என்னே**
**செல்வஅருட் குருவாகி நாயி னேனைச்**
**சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.**

**-5, திருவருள்விலாசப்பத்து 1, 4**

## கனவிலேனும் காட்டுகிலாய்

நின் திருவடிகளைக் கனவிலேனும் காட்டு எனவேண்டுவார். பாத மலர் அழகினை இப்பாவி பார்க்கில் கண்ணேறுபடும் என்றோ கனவிலேனும் காட்டென்றால் காட்டுகிலாய் என்பார்.

**பண்ஏறும் மொழிஅடியர் பரவி வாழ்த்தும்**



RangaRakes tamilnavarasam.com

பாதமலர் அழகினைஇப் பாவி பார்க்கில்
கண்ஏறு படும்என்றோ கனவி லேனும்
காட்டென்றால் காட்டுகிலாய் கருணை ஈதோ
விண்ஏறும் அரிமுதலோர்க் கரிய ஞான
விளக்கேஎன் கண்ணேமெய் வீட்டின் வித்தே
தண்ஏறு பொழில்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே.

-5, ஜீவசாட்சிமாலை 1

இவ்வாறே மாணிக்கவாசர்க்காகக் கொண்ட குதிரைச் சேவகக் கோலத்தை என் கனவிலாதல் காட்டு எனவேண்டுவர்.

திருவாத வூரெம் பெருமான் பொருட்டன்று தென்னன்முன்னே
வெருவாத வைதிகப் பாய்பரி மேற்கொண்டு மேவிநின்ற
ஒருவாத கோலத் தொருவாஅக் கோலத்தை உள் குளிர்ந்தே
கருவாத நீங்கிடக் காட்டுகண் டாய்என் கனவினிலே.

-1, திருவருண்முறையீடு, 134

கனவிலாயினும் காட்டு என அடிகள் வேண்டுவதற்கிசைய இறைவன் பல காட்சிகளைக் கனவிலும் அருளினான், நனவிலும் அருளினான். கனவிலேனும் காட்டு என வேண்டுவது இறைதிருக்காட்சியில் அடிகட்கிருந்த ஆரா அவாவினைத் தெரிவிக்கும்.

## பாலும் நீரும்

நீயும் நானும் பாலும் நீருமாய் நிற்க வேண்டினேன் எனத் தணிகப் பெருமானை அடிகள் வேண்டுகின்றார்.

பேயும் அஞ்சுறும் பேதை யார்களைப்
பேணும் இப்பெரும் பேய னேற்கொரு
தாயும் அப்பனும் தமரும் நட்பும்ஆய்த்
தண்அ ருட்கடல் தந்த வள்ளலே
நீயும் நானும்ஓர் பாலும் நீருமாய்
நிற்க வேண்டினேன் நீதி ஆகுமோ
சாயும் வன்பவம் தன்னை நீக்கிடும்
சாமியே திருத் தணிகை நாதனே.

மாலின் வாழ்க்கையின் மயங்கி நின்பதம்
மறாந்து ழன்றிடும் வஞ்ச நெஞ்சினேன்
பாலின் நீர்என நின்அ டிக்கணே
பற்றி வாழ்ந்திடப் பண்ணு வாய்கொலோ
சேலின் வாட்கணார் தீய மாயையில்
தியங்கி நின்றிடச் செய்கு வாய்கொலோ
சால நின்உளம் தான்எவ் வண்ணமோ



RangaRakes tamilnavarasam.com

**சாற்றி டாய்திருத் தணிகை நாதனே.**

**-5, ஆற்றாமுறை 8, 10**

பாலையும் நீரையும் சேர்த்தால் அவ்விரண்டும் ஒன்றாகக் கலந்து விடும். அதுபோல இறைவனுடன் இரண்டறக் கலக்கும் பேற்றைப் பெருமான் வேண்டுகின்றார். 'நீயும் நானும் பாலும் நீருமாய் நிற்க வேண்டினேன்', 'பாலின் நீர் என நின் அடிக்கணே பற்றி வாழ்ந்திடப் பண்ணுவாய்கொலோ' என்னும் வேண்டுகோள்கள் இறைவனோடிரண்டறாக் கலப்பதையே வேண்டுவன. 'பொருளாம் ஓர் திருவடியில் உடையாயும் நானும் புணர்ந்து கலந்தொன்றாகிப் பொருந்துதல் வேண்டுவனே' என்பர்பிறாண்டும்.{46}

{46. 7-5-1861 இல் இறுக்கம் இரத்தின முதலியாருக்கு வரைந்த திருமுக மொன்றில்,

பகவத் பத்தியிற் சிறந்தவராகிய வரதாசாரிய சுவாமிகள் திருவையிந்திரபுரத்துக்கு வந்ததாகக் கேள்விப்பட்டேன். அந்த சுவாமிகளைச் சென்னப்பட்டணத்தில் தாம் கண்டால் ஒன்று சொல்ல வேண்டுவது. அதென்னவெனில், பாலு நீரும் போலும் பார்ப்பன சிநேகம் என்று நான் தெரிவித்ததாகத் தெரிவிக்க வேண்டும்.

என அடிகள் குறித்தருளியுள்ளார்கள். பாலையும் நீரையும் சேர்த்தால் அவ்விரண்டும் ஒன்றாகக் கலந்துவிடும். பின்னர் தனித்தனியே பிரிக்கமுடியாது. இதுபோல் பார்ப்பனர் நட்பு இணைபிரியா நட்பாகும் என்பது கருத்து. பாலைக் தனியாகப் பயன்படுத்துவதில்லை. நீரைக் கலந்தே பயன்படுத்துகிறோம். பாலிலேயே நீர் இருக்கிறது. அதுவே நீர்ப்பொருள் நீர் கலந்த பாலை அடுப்பில் வைத்துக் காய்ச்சுகிறோம். சூடு ஏற ஏற நீர் சுண்டுகிறாது. தன்னோடு கலந்திருந்த நீர் சுண்டுவதைக் கண்டு பால் பொங்குகிறது. பொங்குவதை அடக்க, சிறிது நீரை அதன்மேல் தெளிக்கிறோம். பொங்குவது அடங்குகிறது. பிரிந்த நண்பன் வந்து விட்டான் என்ற மகிழ்ச்சிபோலும். இப்படி, பாலும் நீரும் இணைபிரியாதிருப்பது போல, பார்ப்பனத் தோழன் இணைபிரியாதிருப்பான் என்பது பொருள். பாலும் நீரும் போலும் பார்ப்பன சினேகம் என்ற பழமொழியின் பொருள் இதுவென்பதற்கு மேற்பாடல்களே ஆதாரமாகும். இதனை விரித்து எமது 'சன்மார்க்க விவேக விருத்தி 1-9-1969 இதழில் (மலர் 1-இதழ் 9) பாலும் நீரும் போலும் பார்ப்பன சினேகம் என்ற தலைப்பில் ஒரு கட்டுரையாக எழுதியுள்ளேம். }

**நின் சித்தம் என் பாக்கியம்**

பெரியோர்களைக் காணும்போது 'தங்கள் சித்தம் என் பாக்கியம்' என்று முகமன் கூறி வணங்குகிறோம். பிள்ளைப் பெருமானும் தணிகைப் பெருமானை நின் சித்தம் என் பாக்கியம் என்று கூறி வணங்குவர்.

**குன்று பொய்உடல் வாழ்வினை மெய்எனக் குறித்திவண் அலைகின்றேன்**



RangaRakes tamilnavarasam.com

**இன்று நின்திரு அருள்அடைந் துய்வனோ இல்லைஇவ் வுலகத்தே**
**என்றும் இப்படிப் பிறந்திறந் துழல்வனோ யாதும்இங் கறிகில்லேன்**
**நன்று நின்திருச் சித்தம்என் பாக்கியம் நல்தணி கையில்தேவே.**

**-5, கருணைமாலை 8**

**வழுதாக்குறைக்கு என் செய்வோம்**

இறைவன் திருப்பெயரை ஓதாது அவமே உழல்கின்ற நெஞ்சமே நம் தலைமீது எழுதாக்குறைக்கு என்செய்வோம் எனப் பெருமான் இரங்குவர்.

**தாதாதா தாதாதா தாக்குறைக்கென் செய்குதுமியாம்**
**ஓதா தவமே யுழனெஞ்சே-மீதாத்**
**ததிதி யெனமயிலிற் றானடி நாளுந்**
**திதிதி தருந்தணிகைத் தே.**

**-5, தனிப்பாசுரங்கள் 5**

இவ்வெண்பாவின் முதலடியில் தாதாதா தாதாதா தாக்குறை என்பதை எழுதாக்குறை எனப் படிக்கவேண்டும். தகர ஆகாரம் (தா) ஏழுமுறை வந்ததைக் காண்க. எழுதாக் குறைக்கு என் செய்குதும் யாம் ஓதாது அவமே உழல் நெஞ்சே என்பது பாடல். எழுதாக் குறை என்பது தலைமீது (பிரமன்) எழுதாத குறை. மூன்றாம் அடியில் ததிதி என்பது ஒலிக்குறிப்பு. மயில் ததிதி என்றாடுகிறது. ஈற்றடியில் 'திதிதி' என்பது முத்தி. இப்பாடல் சற்று மாறுபட்ட வடிவத்துடன் இரண்டாம் திருமுறை பொதுத்தனித் திருவெண்பாவிலும் இடம் பெற்றுள்ளது.

**தாதாதா தாதாதா தாக்குறைக்கென் செய்குதும்யாந்**
**தாதாதா என்றுலகில் தான்அலைந்தோம்-போதாதா**
**நந்தா மணியே நமச்சிவா யப்பொருளே**
**எந்தாய் எனப்புகழ வே. -10**

இப்பாடலில் இரண்டாவது அடியில் 'தாதாதா' என்பதை தாதா, தா, எனப்பிரிக்க வேண்டும். தாதா-வள்ளலே, தா-கொடு என்பது பொருள்.

**திருத்தணிகைத் திருப்பதிகங்கள்**

இங்ஙனம் அடிகள் திருவொற்றியூர் வழிபாட்டுக் காலத்தில் பல முறை திருத்தணிகை சென்றுப் பற்பல பதிகங்களைப் பாடித் துதித்தனர். சென்னையிலிருந்தவாறே தணிகையைக் குறித்துப் பாடப்பெற்றனவும் பல. இவை யாவும் ஐந்தாத் திருமுறையாகத் தொ.வே. அவர்களால் வகுக்கப்பட்டன. ஐந்தாந் திருமுறையின் பெரும் பகுதி திருத்தணிகைப் பதிகங்களே. ஐந்தாந் திருமுறை முதற் பதிப்பில் தொ.வே. அவர்கள் அதற்குத் திருத்தணிகைப் பதிகங்கள் என்றே பெயரிட்டிருக்கிறார்.

தணிகைமலை மருந்தே, தணிகைமலைத் தேனே, தணிகைமலைத் தேவே, தணிகைமலை அரசே, தணிகை மணியே, தணிகை நாதனே, தணிகை வள்ளலே,


RangaRakes tamilnavarasam.com

தணிகை வெற்பனே, தணிகை வேலனே, தணிகை அண்ணலே, தணிகை மன்னனே, தணிகை வாணனே என்றெல்லாம் தணிகைப் பெருமானை இப்பதிகங்களில் அடிகள் போற்றிப் புகழ்ந்து பணிவர். தணிகையைத் 'தானே தனக்கு நிகராய் விளங்கு தணிகாசலம்' என்பர்.

## பிறதலங்களின் வழிபாடு

அடிகள் சென்னையிலுறைந்த காலத்தில் திருவலிதாயம். திருமுல்லை வாயில், திருஎவ்வுளூர் ஆகிய தலங்களையும் வழிபட்டனர்.

## திருவலிதாயத்தை வழிபட்டது

திருவலிதாயம், தொண்ட நாட்டுத் தலங்கள் முப்பத்திரண்டில் ஒன்று. இப்போது பாடி என வழங்கப்படுகிறது. சென்னையினின்றும் ஏறத்தாழப் பன்னிரண்டு கல்லில் உள்ளது. தொண்ட மண்டலத்தில், புலியூர்க்கோட்டத்தில், அம்பத்தூர் நாட்டைச் சேர்ந்தது. தற்போது செங்கற்பட்டு மாவட்டத்தில் சைதாப்பேட்டை வட்டத்தில் உள்ளது. இறைவன் பெயர்-வலிதாயநாதர், அம்மையார் பெயர்-தாயம்மை. திருவீதிநாச்சியார் என ஒரு கல்வெட்டிற் காணப்படுகிறது. சம்பந்தர் பதிகம் மட்டும் உள்ளது. அடிகள் திருவலிதாயத்திற்குச் சென்றிருந்தஞான்று வலிதாயநாதருக்குக் கந்தைத் துணி யொன்று சாத்தப்பட்டிருந்தது. அதனைக்கண்ட அடிகள் நெஞ்சம் கரைந்தனர். 'கந்தை சாத்திய தென்கொலோ' என்றும், 'கந்தையை நீக்கித் துணிந்தொன்றை உடுத்துவார் இல்லையோ இவ்வுலகிலே' என்றும், 'பழங்கந்தையைவிடத் தோல் உடுப்பதே தூய்மை' என்றும், 'நீரே கந்தை சுற்றி நிற்பீர் எனில் எமக்கு ஈயும் பரிசு என்ன' என்றும், 'கந்தையைச் சுற்றி, ஐயோ பரதேசிபோல் இருந்தீர்' என் செய்வேன் என்றும், 'பழங்கந்தை சாத்தினீர் நீர் யாரும் அற்றவரோ' என்றும், 'புல்லிதாய கந்தையைப் போர்த்தினால் கல்லிதாய நெஞ்சம் கரைகின்றதே' என்றும் பாடியருளினர். திருவலிதாயத்தில் பாடிய பதிகத்தின் பத்துப் பாடல்களிலும் கந்தை சாத்தியிருந்தது குறிப்பிடப்பட்டுள்ளது.

**திரைப டாதசெ ழுங்கட லேசற்றும்**
**உரைப டாமல்ஒ ளிசெய்பொன் னேபுகழ்**
**வரைப டாதுவ ளர்வல்லி கேசநீ**
**தரைப டாக்கந்தை சாத்திய தென்கொலோ.** 1

**சிந்தை நின்றசி வாநந்தச் செல்வமே**
**எந்தை யேஎமை ஆட்கொண்ட தெய்வமே**
**தந்தை யேவலி தாயத்த லைவநீ**
**கந்தை சுற்றும்க ணக்கது என்கொலோ** 2
**வேலை கொண்ட விடம்உண்ட கண்டனே**
**மாலை கொண்ட வளர்வல்லி கேசனே**
**பாலை கொண்ட பராபர நீபழஞ்**
**சேலை கொண்ட திறம்இது என்கொலோ** 3

**பன்னு வார்க்கரு ளும்பர மேட்டியே**
**மன்னும் மாமணி யேவல்லி கேசனே**
**உன்ன நீஇங்கு டுத்திய கந்தையைத்**



RangaRakes tamilnavarasam.com

துன்னு வார்இல்லை யோபரஞ் சோதியே 4

கடுத்த தும்பிய கண்டஅ கண்டனே
மடுத்த நற்புகழ் வாழ்வல்லி கேசநீ
தொடுத்த கந்தையை நீக்கித்து ணிந்தொன்றை
உடுத்து வார்இலை யோஇவ்வு லகிலே. 5

ஆல்ஆ டுத்த ரும்பொரு ளேதிரு
மால்அ டுத்தும கிழ்வல்லி கேசநீ
பால்உ டுத்தப ழந்கந்தை யைவிடத்
தோல்உ டுப்பது வேமிகத் தூய்மையே. 6

துன்னும் மாமருந் தேசுட ரேஅருள்
மன்னும் மாணிக்க மேவல்லி கேசரே
துன்னு கந்தையைச் சுற்றிநிற் பீர்எனில்
என்ன நீர்எமக் கீயும்ப ரிசதே. 7

மாசில் சோதிம ணிவிளக் கேமறை
வாசி மேவிவ ரும்வல்லி கேசநீர்
தூசில் கந்தையைச் சுற்றிஐ யோபா
தேசி போல்இருந் தீர்என்கொல் செய்வனே. 8

தேரும் நற்றவர் சிந்தைஎ னுந்தலம்
சாரும் நற்பொரு ளாம்வலி தாயநீர்
பாரும் மற்றிப்ப ழங்கந்தை சாத்தினீர்
யாரும் அற்றவ ரோசொலும் ஐயரே 9

மெல்லி தாயவி ரைமலர்ப் பாதனே
வல்லி தாயம ருவிய நாதனே
புல்லி தாயஇக் கந்தையைப் போர்த்தினால்
கல்லி தாயநெஞ் சம்கரை கின்றதே. 10

கந்தை சுற்றிய இரக்கக்காட்சியைக் கூறும் இப்பதிகம் 'காட்சிப் பெருமிதம்' எனப்பெயர் பெற்றுள்ளது. கந்தைசுற்றிய காட்சியை இவ்வாறு பத்துப் பாடல்களிலும் வைத்துப் பாடியதைக் கேட்டபின் கோயிலார் கந்தையை அகற்றி வேறு நல்ல ஆடையைச் சாத்தினர். வலிதாயத்தின் வரலாற்றிலேயே வள்ளற் பெருமான் வழிபட்ட நாள் குறிப்பிடத்தக்கதாகும். இப்போதும் பல கோயில்களில் சிவலிங்கத்திற்குக் கந்தை சுற்றியிருத்தலைக் காண்கிறோம். கண்டும் வள்ளற் பெருமானுக்கு உண்டான உணர்ச்சி நமக்கு உண்டாவதில்லை. கோயிலார்க்கும் உணர்ச்சி யில்லை. நமக்கும் உணர்ச்சி யில்லை.

வள்ளற்பெருமான் திருக்கோயில் வழிபாட்டுக்குச் செல்லும் காலங்களில் வழிபாட்டுடன், கோயில் பூசை முறை, தூய்மை, சிற்பங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றையும் கூர்ந்தாராயும் வழக்கமுடையவர். தொண்டமண்டல சதகப்பதிப்பில் வரைந்த நூற்பெயரிலக்கணத்தில் திருமுல்லைவாயில் திருவலிதாயக் கல்வெட்டுகளைக் குறிப்பிடுகின்றனர். தொண்டமண்டல சதகத்தைப் பெருமான்



RangaRakes tamilnavarasam.com

பதிப்பித்தது 1855-ஆம் ஆண்டிலாதலின் திருமுல்லைவாயிலையும் திருவலிதாயத்தையும் வழிபட்டது அதற்கு முன்னர் ஆகும்.

## திருமுல்லைவாயில் வழிபாடு

திருமுல்லைவாயில் என்ற பெயருடைய தலங்கள் இரண்டு உள்ளன. ஒன்று சோழநாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. மற்றொன்று தொண்டநாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது. முன்னது தென்திருமுல்லைவாயில், பின்னது வடதிருமுல்லைவாயில் என்று வழங்கப்பெறும். வள்ளற்பெருமான் வழிபட்டது, வடதிருமுல்லை வாயிலாகும்.

தொண்டநாட்டுத் தலங்கள் முப்பத்திரண்டனுள் இது இருபத்திரண்டாவது. செங்கற்பட்டு மாவட்டத்தில் சைதாப்பேட்டை வட்டத்தில் சென்னையிலிருந்து ஏறத்தாழப் பதினைந்து கல்லில் உள்ளது. இத்தலம் பழங்காலத்தில் முல்லைக் காடாயிருந்தது. தொண்டநாட்டு மன்னன் ஒருவன் இவ்வழியாகச் சென்றபோது அவனது யானையின் காலில் முல்லைக் கொடிகள் சிக்கி யானை நின்றது. மன்னன் இறங்கி, கொடிகளை வெட்டினான். வெட்டுண்ட இடத்திலிருந்து குருதி பீறிட்டது. அகழ்ந்து பார்த்தான். சிவலிங்கமொன்று காணப்பட்டது. அதுவே வெட்டுப்பட்டுக் குருதி வழிந்தது. மன்னன் காட்டை அழித்துக் கோயில் கட்டினான். இதனால் இத்தலத் திறைவனுக்கு வெட்டுத்தாங்கி ஈஸ்வரர் என்றொரு பெயர் ஏற்பட்டது. நீரால் திருமுழுக்காட்டுவதில்லை. சந்தனக் காப்பே சாத்தப்படுகிறது. இறைவன் - மாசிலாமணியீசர், அம்மை - கொடியிடைநாயகி. அர்த்த மண்டபத் தூண்கள் இரண்டும் எருக்க மரத்தாலா னவை. இது இத்தலத்தின் தனிச்சிறப்பு.

சுந்தரர் இத்தலத்தை வழிபட்டுப் பாடியுள்ளார். ஒரேபதிகம். கண் பார்வை யிழந்தபின் சுந்தர மூர்த்திகள் முதன் முதலாக வழிபட்ட தலம் இதுவே. 'படுதுயர்களையாய் பாசுபதா பரஞ்சுடரே, எனப் பாடல் தோறும் வேண்டுகிறார். 'சங்கிலிக்காவென் கண்கொண்ட பண்ப நின்னடியேன் படுதுயர்களையாய்' என ஒரு பாடலிற் கூறுகிறார். 'பாலி வடகரை முல்லை வாயில்' என்பது ஒரு பாடலின் தொடர். இப்போது பாலாற்றுக்கும் திருமுல்லைவாயிலுக்கு மிடையேயுள்ள தூரம் பத்து மைல் இருக்கும். பாலிவடகரை எனச் சுந்தரர் கூறுதலால் பழங்காலத்தில் பாலாறோ அல்லது அதன் கிளை ஒன்றோ இவ்வழியாக ஓடிப் பின்னாளில் வறண்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இதற்காதாரமாக இத்தலத்தருகே இப்போதும் பெரிய மணல்வெளி இருக்கிறது. அப்பக்கத்தில் பழைய பாலாற்றைப் பற்றிய பேச்சும் உள்ளது.

அடிகள் இதனை வழிபட்டு 'அருளியல் வினாவல்', 'திருமுல்லைவாயில் திருவிண்ணப்பம்' என்னும் இரு பதிகங்களை அருளியுள்ளார்கள். இரண்டும் இரண்டாந் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. அருளியல் வினாவல் பத்துப் பாடல்களிலும் 'உன் திருக்கோயில் வந்தடைந்தால் ஏன் எனக் கேளாதிருப்பதும், வா என உரையாதிருப்பதும், எங்கு வந்தாய், நீ யார் என்றேனும் கேளாதிருப்பதும், என்று வந்தாய் என ஒரு சொல்லும் சொல்லாதிருப்பதும், கேள்வியில்லாதிருப்பதும், பகைவரைப்போல் பார்த்திருப்பதும், சும்மா இருப்பதும், எது நினைந்து வந்தாய் எனக் கேளாதிருப்பதும், முகமறியார் போலிருப்பதும், உன் திருவருட்கியல்போ' என அடிகளார் மாசிலாமணி ஈசனை வினவுகின்றார்கள். திருமுல்லைவாயில் திருவிண்ணப்பத்தில், உன் கோயிலுக்கு வந்து தொழாது இதுகாறும்



RangaRakes tamilnavarasam.com

இல்லத்திருந்தேன் என்றும், இன்று வந்து தொழ எத்தவம் செய்தேன் என்றும், இதுகாறும் வந்து உன் புகழைப் பேசாத குறையைப் பொறுத்தருள் என்றும் விண்ணப்பிக்கின்றார்கள். ஐந்தாம் பாடலில் 'உன் தன் ஊர் சிறக்க உறுவதெவ்வண்ணமே' எனக் கூறுவதால் திருமுல்லைவாயில் சிற்றூராகவே அன்றும் விளங்கிற்றென்பது போதரும். அச்சிற்றூர் மேலுஞ் சிறக்க வேண்டுமெனப் பெருமான் விரும்பினர். சுந்தரர் பதிகம் சலவைக் கல்லில் பொறிக்கப் பெற்றுள்ளது. வள்ளற்பெருமான் அருளிய பதிகங்களும் பொறிக்கப் பெற வேண்டும். {47}

{47. வள்ளற்பெருமான் வழிபட்ட தலங்கள் அனைத்திலும் பெருமான் அருளிய அவ்வத்தலத் திருவருட்பாக்களைப் பொறிப்பித்தல் வேண்டும். இது ஆங்காங்குள்ள சன்மார்க்க அன்பர்கள் கடனாம்.}

**தேன்என இனிக்கும் திருஅருட் கடலே**
**தெள்ளிய அமுதமே சிவமே**
**வான்என நிற்கும் தெய்வமே முல்லை**
**வாயில்வாழ் மாசிலா மணியே**
**ஊன்என நின்ற உணர்விலேன் எனினும்**
**உன்திருக் கோயில்வந் தடைந்தால்**
**ஏன்எனக் கேளா திருந்தனை ஐயா**
**ஈதுநின் திருஅருட் கியல்போ.**

**-2, அருளியல் வினாவல் 1.**

**தாயின் மேவிய தற்பர மேமுல்லை**
**வாயின் மேவிய மாமணி யேஉன்தன்**
**கோயின் மேவிநின் கோமலர் த்தாள்தொழா**
**தேயின் மேவி இருந்தனன் என்னையே.**

**தில்லை வாய்ந்த செழுங்கனி யேதிரு**
**முல்லை வாயில் முதல்சிவ மூர்த்தியே**
**தொல்லை யேன்உன்தன் தூய்திருக் கோயிலின்**
**எல்லை சேரஇன் றெத்தவம் செய்ததே.**

**சீர்சி றக்கும் திருமுல்லை வாயிலில்**
**ஏர்சி றக்கும் இயன்மணி யேகொன்றைக்**
**தார்சி றக்கும் சடைக்கனி யேஉன்தன்**
**ஊர்சி றக்க உறுவதெவ் வண்ணமே.**
**-2, திருமுல்லைவாயில் திருவிண்ணப்பம், 1,2,5**

## திருஎவ்வுள் வழிபாடு

இது, மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களாலே மங்களா சாசனஞ் செய்யப்பெற்ற நூற்றெட்டுத் திவ்விய தேசங்களில் ஒன்று. சாலி ஹோற்ற மகரிஷி முன் தோன்றிய திருமால் "சயனிப்பதற்கு எவ்வுள்" என வினவியதால் இத்தலம் "திருஎவ்வுள்" எனப் பெயர் பெற்றது. திரு எவ்வுளூர் எனவும் வழங்கப்பெறும். இப்போது திருவள்ளூர் என வழங்குகிறது. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள இது



RangaRakes tamilnavarasam.com

சென்னையிலிருந்து ஏறத்தாழ முப்பது கல் தொலைவில் உள்ளது. பெருமாள் - வீரராகவர். தாயார்-கனகவல்லி. திருமங்கையாழ்வாரும் திருமழிசையாழ்வாரும் இதனை மங்களாசாசனஞ் செய்துள்ளனர். அடிகள் திருவலிதாயம் திருமுல்லைவாயில் ஆகிய தலங்களை வழிபட்ட காலத்தில் திரு எவ்வுளூரையும் வழிபட்டு வீரராகவப்பெருமாளைப் போற்றி ஐந்து திருப்பாடல்களை அருளியுள்ளனர். வீரராகவர் போற்றித் திருப்பஞ்சகம் என அவை வழங்கப்படுகின்றன.

**தண்ணமர் மதிபோற் சாந்தந் தழைத்தசத் துவனே போற்றி**
**வண்ணமா மணியே போற்றி மணிவண்ணத் தேவா போற்றி**
**அண்ணலே யெவ்வு ளூரில் அமர்ந்தருள் ஆதி போற்றி**
**விண்ணவர் முதல்வா போற்றி வீரரா கவனே போற்றி.** 1

அடிகள் வழிபட்ட தலங்களுள் இரண்டு திருமால் தலங்களாம். 1. திருஎவ்வுள். 2. திருக்கண்ண மங்கை. திருமால் பரமாக அடிகள் அருளிச் செய்தவை வீரராகவர் போற்றித் திருப்பஞ்சகம், இராமநாமப்பதிகம், திவ்வியநாம சங்கீர்த்தனம் ஒன்று, கண்ணமங்கைத் தாயார் துதி ஒன்று ஆகப் பதினேழு பாடல்களாம்.

## சின்மய தீபிகை பதிப்பித்தது - 1857

சின்மய தீபிகை என்பது ஓர் அருமையான ஞான நூல். இதனை அடிகள் 1857, பிங்கள ஆண்டு கார்த்திகைத் திங்களில் முதன் முதலாகப் பதிப்பித்தார்கள். அப் பதிப்பின் முகப்புப் பக்கம் பின்வருமாறு: (பக்கம் 157) இந்நூலாசிரியரின் பெயர் அடிகளது பதிப்பில் குறிப்பிடப்படவில்லை. அடிகளாரின் இப் பதிப்பைப் பின்பற்றிக் காஞ்சிபுரம் இராமானந்தயோகி 1907-ஆம் ஆண்டில் ஒரு பதிப்பை வெளியிட்டார். அதனுள் இந்நூலாசிரியர், 'விருத்தாசலம் குமார தேவ சுவாமிகள் ஆதீனம் முத்தைய சுவாமிகள்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சின்மய தீபிகை நூற்றுப்பதினான்கு பாடல்களையும், ஐந்து பாயிரச் செய்யுட்களையும் கொண்ட சிறந்த ஞான நூலாகும்.{48}

{48. இதற்கு உரை இல்லை. உரை ஒன்று செய்து இதனைத் தனியாகப் பதிப்பிக்கவேண்டும்.}

## வேதநாயகம் பிள்ளை நீதி நூலுக்குச் சாற்றுக் கவியளித்தது.

மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை (11-10-1826-21-7-1889) இயற்றிய நீதி நூலுக்கு அடிகள் ஒரு சாற்றுக்கவியருளியுள்ளனர். அது வருமாறு:

**வளங்கொள்குளத் தூர்அமர்ந்த வேதநா**
**யகன்அருளால் வயங்க முன்னாள்**
**உளங்கொள்மனு உரைத்தனன்ஓர் நீதிநூல்**
**அந்நூற்பின் உறுநூ லாகத்**
**துளங்கிடும்அவ் வூர்உறைஅத் தோன்றல்ஓர்**
**நீதிநூல் சொன்னான் இந்நாள்**
**விளங்கும் இந்நூல் முன்னர்மற்றை**

**நூல்எல்லாம் கிழிபடத்தின் வெண்ணூலன்றே.**

நீதி நூலின் முதற் பதிப்பு 1859-இல் (காளயுக்திவரு தை மீ) வெளீயாயிற்று. நானூறு பாடல்களைக் கொண்ட அதனுடன் மேலும் இருநூறு பாடல்களைச் சேர்த்து 1860-இல் இரண்டாம் பதிப்பொன்று வெளியிடப்பெற்றது. அடிகளின் இச்சாற்றுக்கவி 'சென்னப்பட்டணம் வித்வான் ம-ள-ள-ஸ்ரீ இராமலிங்க பிள்ளையவர்களியற்றியது' என அச்சிடப்பட்டுள்ளது.

**வேதநாயகரின் சர்வ சமய சமரச கீர்த்தனைகள் அடிகள் முன்னர் அரங்கேற்றப்பெற்றது.**

"மாயவரம் முன்சீபு ஸ்ரீ வேதநாயகம் பிள்ளை அவர்கள் தமது ஆசிரியராகிய மகாவித்துவான் ஸ்ரீ வி.மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களோடு வடலூர் சென்று சுவாமிகள் முன்பாகத் தாம் இயற்றிய சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளை அரங்கேற்றிக்கொண்டு வந்தார்கள்.

**சிவமயம்**

**திருச்சிற்றம்பலம்**

**சின்மய தீபிகை**

**சிதம்பரம்**

**இராமலிங்க பிள்ளை**

**அவர்களால்**

**பார்வையிடப்பட்டு**

**மண்ணிப்பாக்கம்**

**சபாபதி முதலியார்**

**பாக்குப்பேட்டை**

**மதுரை முதலியார்**

**இவ்விருவர்களால்**

**முத்தமிழ் விளக்க அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.**

**பிங்கள வரு-கார்த்திகை மீ**

**முதற்பதிப்பு**

என்று கர்ண பரம்பரைக் கேள்வியாலும் ஸ்ரீ K.V.ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்கள் தமது சங்கீத சில்லரைக் கோவையில் எழுதியிருப்பதாலும் தெரியவருகிறது" என ஆ.பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் கீர்த்தனைப் பகுதி முன்னுரையில் எழுதுகிறார். பிள்ளையவர்களும். வேதநாயகம் பிள்ளையும் வடலூர் சென்று, அடிகளிடம் சாற்றுக்கவி பெற்றமை ச.மு.க.பதிப்பு சரித்திரக் குறிப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குடும்ப கோஷம்

அடிகள் இளமையில் சென்னையிலிருந்த போது குடும்ப கோஷம் என்னும் செய்யுள் நூலைச் செய்யத் தொடங்கி யருளினார்கள். இதனைப் பத்தொன்பது படலமாக வகுத்திருக்கிறார்கள்.

1. **குருதரிசனப் படலம்**
2. **முயற்சிப் படலம்**
3. **தந்தையாதியர் வருபடலம்**
4. **விடை கொடுத்த படலம்**
5. **தந்தையாதியர் புலம்புறு படலம்**
6. **நகர் காண்படம்**
7. **விண்ணப்பப் படலம்**
8. **குடும்ப கோஷப்படலம்**
9. **தேச சஞ்சாரப்படலம்**
10. **துயறுரு படலம்**
11. **தூஷணப் படலம்**
12. **உலகியற் படலம்**
13. **பெண் சமுகப் படலம்**
14. **ஆண் சமுகப் படலம்**
15. **துறவுப் படலம்**
16. **சாது சங்கப்படலம்**
17. **நிராசைப்படலம்**
18. **மகிழ்ச்சிப்படலம்**
19. **உபதேசப்படலம்**

முதல் இரண்டு படலங்களாகிய குருதரிசனப் படலமும் முயற்சிப் படலமும் செய்யப்பட்டுள்ளன. நூலின் தொடக்கத்தில் காப்புச் செய்யுள் நான்கும் அவையடக்கச் செய்யுள் ஒன்றும் உள்ளன. காப்புச் செய்யுளுள் விநாயகர், முருகன், சிவபெருமான், அம்மை, நந்தி, சண்டேசுரர், நால்வர் ஆகிய பதின்மர்க்கும் வணக்கங்கூறும் இரண்டாவது செய்யுள் அருமையானது.

**ஆனைமுகத் தனை ஆறு முகத்தனைஐம்**
**முகத்தனைப்பா லவளைப் பூதச்**
**சேனைமுகத் தலைவனைச் சண்டேசுரனைக்**
**கவுணியகோத் திரநங் கோவைச்**
**சோனைமுகத் தருள்திருத்தாண் டகம்புனைந்த**
**அப்பனைவன் தொண்டத் தேவை**



RangaRakes tamilnavarasam.com

**வானைமுகத் தவர்வழுத்தும் வாதவூர்**
**அடிகளையாம் வணங்கி வாழ்வாம்.**

குருதரிசனப்படலம் 53 செய்யுள்களை உடையது. முயற்சிப்படலம் 58 செய்யுள்கள். ஏனைய படலங்கள் செய்யப்படவில்லை. எட்டாம் படலத்தின் பெயரால் இந்நூல் குடும்பகோஷம் எனப் பெயர் பெற்றது. பின்னாளில் வடலூரிலிருந்த போது அடிகள் குடும்பகோரம் என்றொரு நூலை அருளிச் செய்தார்கள். குடும்ப கோஷம் பெரிய நூல். குடும்ப கோரம் சிறுநூல். குடும்ப கோஷம் நன்மாணக்கனொருவனின் ஞான சாதன வரலாற்றைக் கூறுவது. குடும்ப கோரம் ஒரு துறவியின் தத்துவக் குடும்பச் சேட்டைகளை விவரிப்பது. குடும்பகோஷத்திற் கூறப்படும் வரலாறு வருமாறு:

தொடக்கத்தில் ஒற்றியூரும் அங்குள்ள நந்தியாச்சிரமமும் அதன் முனிவர் கூட்டமும், ஆச்சிரமத் தலைவராகிய சிவகுரு ஆங்கெழுந்தருளியிருக்கும் வண்ணமும் அழகாக வருணிக்கப்படுகின்றன. பின்னர் வரலாறு தொடங்குகிறது. சென்னையிலிருந்து சஞ்சலன் என்னும் பதினாறு ஆண்டுச் சிறுவனொருவன் தன்னை ஒத்த சிறுவர் சிலரோடு திருவொற்றியூர்த் திருவிழாவுக்குச் செல்லுகிறான். சிறுவர்கள் திருவிழாக் காட்சிகளைக் கண்டுகளிக்கின்றனர். மற்ற சிறுவர்கள் பிரிந்து விடச் சஞ்சலன் மட்டும் நந்தியாச்சிரமத்திற்குச் செல்லுகிறான். சென்று சிவகுருவைத் தரிசிக்கிறான். தன்னை ஆட்கொள்ள வேண்டுகிறான். சிவகுரு அவனது வரலாற்றை உசாவுகிறார். சஞ்சலன் தன் வரலாற்றைச் சொல்லுகிறான். எனது ஊர் இங்கிருந்து ஐந்து கடிகையிலுள்ள சென்னை.{49} குலம் சூத்திரர் குலம். தந்தையின் பெயர் **ஆசையுடையான்**. தாயின் பெயர் **வினைச்சி.** என் பெயர் **சஞ்சலன்.** நான் கடைசிப்பிள்ளை. எனக்குமுன்னே பிறந்தவர்கள் சுற்றத்தார் மிக உண்டு. தாய்ப்பால் ஏழாண்டுமட்டும் குடித்து நாக்குத் தடிப்பேறினேன். படிப்பேறவில்லை. எனக்கு முன்னே பிறந்தோர் தம் பெயர் எழுதக் கற்று நடிப்பேறினர். நான் அவர்முன் நொடிப்பேற நின்றேன். 'இவன் நாக்குத் தடித்தான், உடம்புந் தடித்தான், புத்தியில் உலகைக் கொழுந்தானான்' என்று என் தந்தை என்னைக் கல்விச் சாலையினின்று அகற்றிக் கடைகளுக்குச் சென்று பண்டங்கள் சுமந்து வரப் பணித்தார். நான் பெற்றோர்க்கும் கடைப்பிள்ளையானேன். கல்வியிலும் கடைப்பிள்ளையானேன். தொழிலிலும் பண்டங்கள் வாங்கிச் சுமந்துவரும் கடைப்பிள்ளையானேன். நான் செல்வக் குடும்பத்திற் பிறந்தேன். பிறந்தநாள் தொட்டு இந்நாள் வரை வேறு குறையில்லை. கல்வி அறிவில்லாக் குறையொன்றே குறை. கல்வியில் ஆசையுள்ளேன். திருவொற்றியூரில் திருவிழாவென்று சொல்லக்கேட்டு என்னனைய சிறுவர்களோடு எய்தினேன். விழாக் காட்சிகளைக் கண்டேன். உடன் வந்தோர் பிரிந்தனர். முன் பிறப்பில் செய்ததவப்பயனால் தங்களைத் தரிசிக்கப்பெற்றேன். சிறியேனைக் காத்தருள வேண்டும் என்றான். அதனைக் கேட்ட சிவகுருவும் புன்னகை புரிந்து 'இப்போது உன் நகருக்கு ஏகித் தந்தை தாயிடம் கூறிச் சம்மதம் பெற்று வருக' என்றார். தந்தை தாய் சம்மதத்தை வேண்டிச் சென்னை நகர் சென்றேனேல் குகையிலுள்ள புலியைப் போய்ப் பார்த்து வரப்போன வகையாய் முடியும் எனச் சஞ்சலன் புகன்றான். இங்குள்ளோர் பிச்சை வாங்கி உண்பார், நீயும் அவ்வாறுண்பாயானால் இங்கிரு எனச் சிவகுரு அருளினார். அங்ஙனமே இசைந்து சஞ்சலன் ஆச்சிரமத்திலேயே இருந்தான். ஒற்றிப் பெருமானை முப்போதும் வழிபட்டுக் கோயிற் பணியாற்றித் தம் மாணவர்களிடம் கலைபயிலக் குருநாதர் பணித்தருளினார். ஆச்சிரமத்தின் தலைமாணாக்கர் சிதம்பர முனிவர். அவரிடம் சஞ்சலன் நாள்தோறும் ஒரு நாழிகை பயின்று மற்றைப்



RangaRakes tamilnavarasam.com

பொழுதெல்லாம் சிவப்பணியே செய்தான். அதிகாலையில் எழுந்து நந்தி ஓடையில் நீராடிக் குருநாதரையும் திருக்கூட்டத்தாரையும் வணங்கி ஒற்றிப் பூங்கோயிற்குச் சென்று மாடவீதியை மும்முறை வலம்வந்து கொடியைத் தொழுது கோயிலின் உள்சுற்றை ஏழுமுறை வலஞ்செய்து விநாயகரை வணங்கி, நந்தி தேவரைப் பணிந்து, உட்சென்று படம்பக்கநாதர், தியாகேசர், தென்முகப் பரமாசாரியர், முருகர், சோமாஸ்கந்தர், வயிரவர், நால்வர், சண்டேசுவரர் என முறைப்படி வழிபட்டு, திருக்கோயிலை அலகிட்டு, மெழுக்கிட்டுத் திருமதில் திருக்குளம் திருவீதிகளில் கல் புல் முதலியன அகற்றி நந்தவனஞ்சென்று நீர் அட்டி பத்திரமும் மலர்களுங்கொய்து மாலை தொடுத்துக் கோயிலுக்களித்து உச்சிக்காலப்பூசை கண்டுபணிந்து பின்னர் ஊர்க்குட் சென்று புலைகொலை குறியார் இல்லந்தோறும் போர்நெற் சோறேனும் புதுக்கஞ்சியேனும், புளித்தகாடியேனும், கூழேனும் கிடைத்ததை வாங்கி ஆச்சிரமம் சென்று அனைவர்க்கும் அளித்து மிக்கதைத் தானும் உண்டு இவ்வாறு கோயிற்பணியும் ஆச்சிரப்பணியும் செய்து திருக் கூட்டத்தாரொடு இருந்து பயின்றான். திருக்கூட்டத்தலைவர் சிதம்பர முனிவர் சஞ்சலனின் உள்ளத்தை அறிந்து ஏற்றவாறு கற்பித்தார். ஒரு நாழிகைப் போது கலைபயிலுதல், ஐந்து நாழிகை உறக்கம், மற்றைப்பொழுதெல்லாம் சிவப்பணியும் குருபணியும் இயற்றி இருக்கும் நாளில்-இவ்வளவோடு முயற்சிப் படலம் முடிகிறது. பின் பதினேழு படலங்களும் செய்யப்பெறவில்லை. பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. படலத்தின் பெயர்களே அருமையாயுள்ளன. 19-4-1866-இல் அடிகள் வடலூரிலிருந்து சென்னைக்கு இறுக்கம் இரத்தினம் முதலியார்க்கு எழுதிய திருமுகத்தில் இக்குடும்ப கோடம் முற்றுப் பெறாதிருத்தலைக் குறிப்பிடுகின்றனர். ஆதலின் இது அக்காலத்திற்கு முன்னரே செய்யத் தொடங்கப்பெற்ற தென்பது வெள்ளிடைமலை. சென்னையிலிருந்தபோதே இது எழுதப்பெற்ற தென்பது கிடைத்துள்ள் ஆதாரங்களால் நன்கறியக்கிடக்கிறது.

{49. கடிகை என்பது ஒரு நாழிகை. கால அளவாகிய இது தூரத்தைக் குறிக்கும் அளவாகவும் முன்னாளில் வழங்கிற்று. சாதாரணமாக ஒருவர் ஒரு நாழிகையில் நடக்கக்கூடிய தூரம் நாழிகை வழி, நாழிவழி எனப்படும் முக்கால் நாழிகை வழி, ஏழரை நாழிகை வழி என்பன பழைய வழக்குகள். இன்னும் சில கிராமங்களில் அருமையாக இவ்வழக்கு உள்ளது முக்கால் நாழிகை வழி=1 மைல். 71/2 நாழிகை வழி=10மைல் அல்லது ஒரு காதம். ஒருவர் கூப்பிடுவது மற்றொருவருக்குக் கேட்கக்கூடிய தூரம் கூப்பிடுதூரம். சென்னைக்கும் திருவொற்றியூர்க்கும் இடையே உள்ள தூரம் ஐந்து கடிகை என அடிகள் (சஞ்சலன் கூற்றாக) குறிப்பிடுகின்றனர். ஐந்து கடிகை-ஐந்து நாழிகை வழி. }

சஞ்சலன், ஆசையுடையான், வினைச்சி என்பன புனை பெயர்கள். நந்தியாச்சிரமும் நந்தியோடையும் ஒற்றியூரில் உள்ளவை. குடும்ப கோஷம் கற்பனை நிகழ்ச்சியா எனச் சொல்லக்கூட வில்லை. முற்றிலும் கற்பனையாக இருத்தற்கில்லை. ஓர் உண்மை நிகழ்ச்சியையே-வரலாற்றையே-கற்பனை நயத்துடன் அடிகள் கூறுகின்றார்கள் எனக்கொள்ள வேண்டியுள்ளது. சஞ்சலன் வரலாறு அடிகள் வரலாற்றொடு பெரிதும் பொருந்துகிறது. சென்னை சமரச சன்மார்க்க சங்கத்தின் திருவருட்பா பதிப்பில் குடும்ப கோஷத்தின் கீழ் இது அடிகளது வரலாற்றைக் குறிக்காது என்றொரு அடிக்குறிப்பு எழுதப்பட்டுள்ளது. ஒற்றியூர் வழிபாட்டுக் காலத்தில் இதனை அடிகள் செய்திருக்கிறார்கள். தன் வரலாற்றையும் அனுபவத்தையும் வேறு பெயர்களை வைத்து ஒரு பெருநூலாகப் பலபடங்களில் பாடும் முயற்சியில் அடிகள் இளமையில் தலைப்பட்டிருக்கக் கூடுமோ



RangaRakes tamilnavarasam.com

என ஐயுற வேண்டியுளது. அடிகள் நூலை முடிக்காது நிறுத்திவிட்டமை இவ்வையத்தை மிகுவிக்கிறது. இந்நூல் முடிக்கப் பெற்றிருப்பின் ஆயிரம் செய்யுட்கு மேல் ஆகும். பல பொருள்கள் சாதனமுறைகள் அனுபவங்கள் வெளிப்பட்டிருக்கும். முற்றுப்பெறாது போனமை நம் தவம் முற்றுப் பெறாமையே.

**சென்னை வாழ்வை நீத்தது - 1858**

நாள்தோறும் திருவொற்றியூர் சென்று வழிபடுவதும் இடையிடையே சென்னையை அடுத்துள்ள பிற தலங்களுக்குச் சென்று வழிபடுவதும், தம்மை வந்து அடுத்தவர்களுக்கு இலக்கண, இலக்கிய, நீதி, ஞான நூல்களைப் பாடஞ் சொல்லுவதும், சிறுவர்க்குக் கல்வி பயிற்றுவதும், நூல் செய்வதும், உரை செய்வதும், வியாக்கியானம் செய்வதுமாக நாள்கள் சென்றன. அந்நாளில் சென்னையிற் சிறந்து விளங்கிய வித்துவான்களில் அடிகளும் ஒருவராகத் திகழ்ந்தார்கள். தமது நூல்களுக்குப் பெரிய வித்துவான்களிடம் சாற்றுக்கவி பெறுவோர் அடிகளிடம் பெற்றனர். நீதி நூலுக்கு அளித்த சாற்றுக்கவி சென்னப்பட்டணம் வித்துவான் இராமலிங்கபிள்ளை அவர்கள் இயற்றியது என அச்சிடப்பட்டுள்ளது. இங்ஙனம் சென்னையில் தாம் ஒரு வித்துவானாக விளங்குவது அடிகளின் திருவுள்ளத்திற்கு இசைவில்லை. ஞான வாழ்வை விரும்பிய திருவுள்ளம் வித்துவான் வாழ்வை விரும்பவில்லை.

**நகர வாழ்வின் துன்பத்தைக் காண அஞ்சித் தோட்டங்களில் திரிந்தது**

ஆரவாரம் நிறைந்த சென்னை வாழ்வை அடிகள் வெறுத்தார்கள். நகர வாழ்வின் ஆடம்பரங்களையும் அலங்கோலங்களையும் காண்பதற்கஞ்சினார்கள். அடிகள் பெரும்பாலும் நகருள் இருப்பதில்லை. நகருக்கு வெளியேயுள்ள தோட்டங்களிலும் பிறவிடங்களிலுமே நாள்தோறும் பொழுதைக் கழிப்பர். பகலில் இவ்வாறு தோட்டங்களிலும் பிற இடங்களிலும் திரிந்த பின் இரவில் நகருக்குத் திரும்புவர். பகலின்றி இரவிலும் பல நாள் இப்படியே திரிவர்.

**சகப்புற வாழ்வைப் பார்த்திடில் கேட்கில்**
**சஞ்சலம் உறும்எனப் பயந்தே**
**நகர்ப்புறத் திருக்குந் தோட்டங்கள் தோறும்**
**நண்ணியும் பிறவிடத் தலைந்தும்**
**பகற்பொழு தெல்லாம் நாடொறுங் கழித்தேன்**
**பகலன்றி இரவும்அப் படியே**
**மிகப்பல விடத்தும் திரிந்தனன் அடியேன்**
**விளம்பலென் நீஅறிந் ததுவே.**

**-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம். 48**

<u>சென்னை வாழ்வை நீத்தது</u>

இங்ஙனம் இரவும் பகலும் நகரில் தங்காது வெளியிடங்களிலும் தோட்டங்களிலும் திரிந்த அடிகள் நகர வாழ்வைத் துறந்து வெளியேறுவதற்குத் திருவுள்ளங் கொண்டனர். குடும்பத்தாரோடு வீட்டில் இருப்பதும் அவர்களது திருவுள்ளத்துக்கு உவப்பாயில்லை. சென்னை வாழ்வு தமது ஞான வாழ்வுக்கு ஒத்து வாராதென்பதை உணர்ந்த வராகிக்குடும்பத்தினரையும் நகரத்தையும் விட்டு நீங்கித் தொலைவிற் சென்று வதியக் கருதினர்.

**தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால்**
**சிலுகுறும் என்றுளம் பயந்தே**
**நாட்டிலே சிறிய ஊர்ப்புறங் களிலே**
**நண்ணினேன் ஊர்ப்புறம் அடுத்த**
**காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்**
**களத்திலே திரிந்துற்ற இளைப்பை**
**ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள்**
**எந்தைநீ அறிந்தது தானே.**

**-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 58**

செல்வ மிக்க சென்னையில் இருந்தால் உள்ளம் சிறுகுறும் என்ற தனது அச்சத்தை அடிகள் மேற்பாடலில் தெளிவாகக் குறிக்கின்றார். சென்னை வாழ்வை நீத்த காரணத்தை இப்பாடல் கூறுவதாகும். இது பின்னாளில் வடலூரிலிருந்த போது பாடிய பாட்டு.

அடிகள் சென்னை வாழ்வை நீப்பாராகி ஒரு நாள் நகரை விட்டுப் புறப்பட்டு வழியிலுள்ள பல தலங்களை வணங்கித் தாம் பிறந்த மருதூர்ப் பக்கம் வந்து அருகிலுள்ள கருங்குழியை அடைந்தார்கள். சிதம்பர சுவாமிகள், சடைச் சுவாமிகள், வீராசாமி நாயக்கர், தொழுவூர் வேலாயுத முதலியார் முதலிய அன்பர்களுடன் பிள்ளைப் பெருமான் வண்டிப் பாதையாய்ப் புறப்பட்டு இடையிலுள்ள தலங்களைத் தரிசனஞ் செய்து கொண்டு வந்தார்களென்றும், வழியில் புதுவையில் விசுவநாதய்யர் முதலிய அன்பர்கள் விரும்பியபடி சில நாள் தங்கினார்களென்றும் பின்னர் சிதம்பரம், சீகாழி, வைத்தீசுவரன் கோயில் ஆகிய தலங்களை வழிபட்டுக் கருங்குழி வந்தடைந்தார்களென்றும் ச.மு.க.பதிப்பு சரித்திரக் குறிப்புல் காணப்படுகிறது.

## புள்ளிருக்குவேளூரை வழிபட்டது {50}

{50. புள்ளிருக்கு வேளூரில் வள்ளலார் என்னும் எமது நூலையும் காண்க. 2-7-1969 வேளூர்க் குடமுழுக்கு விழா வெளியீடு.}

பாடல்பெற்ற தலங்கள் 275-இல் ஒன்றான இது சோழநாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களுள் பதினாறாவதாகத் திகழ்வது. தஞ்சாவூர் மாவட்டத்தில் சீகாழி வட்டத்தில் உள்ளது. இறைவன் திருப்பெயரால் வைத்தீஸ்வரன் கோயில் என வழங்கப் பெறுவது. புள் (சடாயு, சம்பாதி), இருக்கு (இருக்கு வேதம்), வேள் (முருகன்), ஊர்(சூரியன்) ஆகிய நால்வரும் வழிபட்டமையால் புள்ளிருக்குவேளூர் (புள்+இருக்கு+வேள்+ஊர்) எனப் பெயர் பெற்றது. இறைவன் திருப்பெயர் வைத்தியநாதர். இறைவி தையல்நாயகி. முருகப்பெருமான் திருப்பெயர்



RangaRakes tamilnavarasam.com

முத்துக்குமரர். அடியார்களது உடற்பிணியையும், உள்ளப்பிணியையும் தீர்ப்பவனாதலின் இறைவன் வைத்தியநாதன் எனப்பட்டான். "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராத நோய் தீர்த்தருள வல்லான்" எனத் திருநாவுக்கரசர் போற்றுவர். "அடியேன் பிணியை விலக்கு கண்டாய்",' 'ஊன்கொண்ட தேகத்தும் உள்ளத்தும் மேவி உறும் பிணியால் நான்கொண்ட துன்பம் தவிர்ப்பாய்" என வள்ளற்பெருமான் வேண்டுவர்.

இங்கு வழிபட்டவன் முருகன். வழிபடப்படுபவனும் முருகன். இத்தலத்தை வழிபட்டுப் பேறுபெற்ற முருகன் தம்மை வழிபடுவோர்க்குப் பேறுகளை அருள்வதற்காக இங்கேயே எழுந்தருளியிருக்கிறான். இங்கே எழுந்தருளியுள்ள முருகப்பெருமானின் திருநாமம் செல்வமுத்துக்குமார சுவாமி என்பது. இத்தலத்தில் சிறப்பெல்லாம் இச்செல்வ முத்துக்குமார சுவாமிக்கே. இது சிவத்தலமாயினும் முருகப்பெருமான் இங்கு தனிச் சிறப்போடு விளங்குகின்றார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், அருணகிரிநாதர், குமரகுருபர சுவாமிகள், இராமலிங்க அடிகள் ஆகியோர் இத்தலத்தை வழிபட்டுப் பாடிப் பணிந்த பெரியோர்களாவர்.

புள்ளிருக்கு வேளூர்ப் பெருமானை அடிகள் இரண்டு பதிகங்களாலும் ஒரு மாலையாலும் ஒரு கீர்த்தனையாலும் இரு தனிப் பாடல்களாலும் போற்றியுள்ளார்கள். அவை சிகாமணிமாலை, பிரசாதப் பதிகம், வைத்தியநாதர் பதிகம் முதலியன.

**சிகாமணி மாலை**: 'வயித்தியநாதா அமரர் சிகாமணியே' என்பது பாடல்தோறும் மகுடமாக அமைந்துள்ளது. 'சிகாமணியே' என இறைவனை விளிப்பதால் இது சிகாமணிமாலை எனப் பெயர் பெற்றது. வல்வினை வாழ்க்கைக் கடலினின்றும் தம்மை நல்வினை வாழ்க்கைக் கரையேற்ற வேண்டும் என்றும் (பாடல்1), நான் நினக்குப் பணிசெயல் வேண்டும். நின் தாள் எனக்குத் துணைசெயல் வேண்டும் என்றும் (5), உடற் பிணியாலும் உள்ளப் பிணியாலும் உறும் துன்பத்தைத் தவிர்த்தருள வேண்டும் என்றும் (13), அடிகள் இம்மாலையுள் வைத்தியநாதனை வேண்டுகின்றார்கள். உடற்பிணி என்றதை நோய்களாகக் கொள்ளாது நரை திரை மூப்பெனக் கொள்ளவேண்டும்.

**வல்வினை யேனைஇவ் வாழ்க்கைக் கடல்நின்றும் வள்ளல்உன்தன்**
**நல்வினை வாழ்க்கைக் கரைஏற்றி மெய்அருள் நல்குகண்டாய்**
**கொல்வினை யானை உரித்தோய் வயித்திய நாதகுன்றாச்**
**செல்வினை மேலவர் வாழ்வே அமரர் சிகாமணியே.**

**நானே நினக்குப் பணிசெயல் வேண்டும்நின் நாள்மலர்த்தாள்**
**தானே எனக்குத் துணைசெயல் வேண்டும் தயாநிதியே**
**கோனே கரும்பின் சுவையேசெம் பாலொடு கூட்டுநறும்**
**தேனே வயித்திய நாதா அமரர் சிகாமணியே.**

**-2, சிகாமணிமாலை 1, 5**



RangaRakes tamilnavarasam.com

**பிரசாதப் பதிகம்:** நின் அருள் மருந்தினால் அன்றி மற்றொன்றால் பிணிகள் தீராதென்றும், தேவராயினும் மூவராயினும் நின் அருளின்றிப் பிணிகளை விலக்கிடுவரோ என்றும், நின் அருள் இல்லையேல் தொல்லை நோய்களின் தொடக்கு நீங்காதென்றும், வன்பிணிகள் வாதியா நிற்கும் என்றும் அடிகள் இதனுள் அருளுகின்றார்கள்.

**வைத்தியநாதர் பதிகம்**: "தவசிகாமணி உலகநாத வள்ளல் மகிழவரு வேளூரில் அன்பர் பவரோக மற வளர் வைத்திய நாதனே' என்பதைப் பாடல்தோறும் மகுடமாக உடையது. அக்காலத்தில் வேளூரில் கட்டளைத் தம்பிரானாயிருந்த உலகநாதத் தம்பிரான் சுவாமிகளையே பெருமான் தவசிகாமணி உலகநாத வள்ளல் என்று பாடல் தோறும் வைத்துப் பாடியருளினர். வள்ளற்பெருமான் திருவாக்காற் பாடப்பெற்ற அத்தம்பிரான் சுவாமிகள் தக்க பக்குவம் வாய்ந்த உண்மைத் துறவியாயிருந்தாராதல் வேண்டும். இப்பதிகப் பாடல்களில் பெருமான் உலகாயதர்களை வண்மையாகக் கண்டிக்கின்றார்கள்.

**கீர்த்தனை:** இது,

**நல்ல மருந்திம் மருந்து-சுகம்**
**நல்கும் வைத்திய நாத மருந்து**

எனத் தொடங்குகிறது. 'பிறப்பை ஒழிக்கும் மருந்து', 'இறப்பைத் தவிர்க்கும் மருந்து', 'சித்தியும் முத்தியும் சேர்க்கும் மருந்து' என வைத்தியநாதர் இதனுள் போற்றப் பெறுகிறார். முத்துக்குமாரரும் தையல்நாயகியும் குறிப்பிடப் பெறுகின்றனர்.

**மூவர் க்கரிய மருந்து-செல்வ**
**முத்துக் குமரனை யீன்ற மருந்து**
**நாவிற் கினியமருந்து -தைய**
**னாயகி கண்டு தழுவு மருந்து.**

**இவற்றின் காலம்**: சிகாமணி மாலையும் பிரசாதப் பதிகமும் கீர்த்தனையும் இரண்டாந் திருமுறையிலும், வைத்திய நாதர் பதிகம் ஆறாந்திருமுறைத் தனிப் பாடல்களுடனும் இடம் பெற்றுள்ளன. இவை தவிர இரு வெண்பாக்கள் ஐந்தாந் திருமுறையில் உள்ளன. இவற்றில் முன் பாடியது எது பின் பாடியது எது என்பதும் வள்ளற்பெருமான் வேளூர் சென்று வழிபட்டது ஒரே முறைதானா அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையா என்பதும் இன்ன பிறவும் ஆராய்தற்குரியன.

**இளவேனின் மாலையாய்க் குளிர்சோலை யாய்மலர்**
**இலஞ்சிபூம் பொய்கையருகாய்**
**ஏற்றசந் திரகாந்த மேடையா யதன்மேல்**
**இலங்குமர மியவணையுமாய்த்**
**தளவேயு மல்லிகைப் பந்தராய்ப் பால்போற்**
**றழைத்திடு நிலாக்காலமாய்த்**
**தனியிளந் தென்றலாய் நிறைநரம் புளவீணை**
**தன்னிசைப் பாடலிடமாய்**
**களவேக லந்தகற் புடையமட வரல்புடை**



RangaRakes tamilnavarasam.com

**கலந்த நயவார்த்தையுடனாய்க்**
**களிகொள இருந்தவர்கள் கண்டசுக நின்னடிக்**
**கழனிழற் சுகநிகருமே**
**வளவேலை சூழுலகு புகழ்கின்ற தவசிகா**
**மணியுலக நாதவள்ளல்**
**மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற**
**வளர்வைத் தியநாதனே.**

**-வைத்தியநாதர் பதிகம் 12**

## அடிகள் அருளிய செவ்வாய்க்கிழமை விரதமுறை

தையல் நாயகியை வேண்டி, செவ்வாய்க்கிழமைகளில் விரதமிருப்பதுண்டு. இவ்விரத முறையைப் பெருமான் புதுவை வேலு முதலியார்க்கு உபதேசித்த குறிப்பொன்று கிடைத்துள்ளது. அது பின்வருமாறு அன்பரொருவரால் எழுதி வைக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை இரவில் பலகாரஞ் செய்து, செவ்வாய்க் கிழமை அருணோதயத்திலெழுந்து திருநீறு நெற்றியில் மாத்திரம் அணிந்து, நல்ல நினைப்புடன் அங்க சுத்தி தந்த சுத்தி முதலானவையுஞ் செய்து கொண்டு, சூரியோதயத்திற்கு முன் ஆசாரமான சுத்த சலத்தில் ஸ்நாநஞ் செய்து, விபூதியைச் சலத்தினால் குழைத்து அனுஷ்டானப்படி தரித்துக்கொண்டு, கணபதியை நினைத்து, பின்பு ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை நூற்றெட்டு முறை செபித்து சிவத் தியானம் செய்து, எழுந்து வாயிலில் வந்து சூரியனைப் பார்த்து ஓம் சிவ சூரியாய நம வென்று மெதுவாகச் சொல்லி நமஸ்கரித்து, அதன் பின்பு அவ்விடத்திலே தானே நின்றுகொண்டு, தங்கள் தங்கள் மனத்திலிருக்கிற கோரிக்கைகளை முடித்துக் கொடுக்க வேண்டுமென்று ஸ்ரீ வயித்தியலிங்கரையும் தையநாயகியையும் முத்துக்குமாரசாமியையும் தியானித்துக்கொண்டு, பின்பு ஓம் வயித்தியநாதாய நம வென்று நூற்றெட்டு ஆயிரத்தெட்டு இரண்டில் எந்த அளவாவது செபித்து, ஒரு பலம் மிளகு சீலையில் முடிந்து வயித்தியலிங்கார்ப்பணம் என்று ஓரிடத்தில் வைத்து, சிவனடியார் ஒருவர்க்கு உபசாரத்தொடு அமுது படைத்து, பின்பு சுசியோடு பச்சரிசிப் பொங்கல் முதலான புசிப்பை அரையாகாரம் முக்கால் ஆகாரங் கொண்டு, அன்று மாலையில் சிவதரிசனஞ் செய்து, பாய் சயனம் கொட்டை முதலாகியவையும் விட்டு மெழுகிய தரையில் கம்பளம் விரித்துப் படுக்க வேண்டும்; சிவசரித்திரங் கேட்க வேண்டும்; செபஞ்செய்து கொண்டிருக்க வேண்டும்; சந்தனம், புட்பம், தாம்பூலம், இராகம், சுகம், பெருந் தூக்கம் முதலானவையும் விட்டிருக்க வேண்டும்.

-திருவருட்பா, உபதேசப் பகுதி பக்கம் 4

## திருவாரூர்

இது பாடல் பெற்ற தலங்கள் 275-இல் ஒன்று. சோழநாட்டில் காவிரியின் தென்கரைத் தலம். சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பெற்றது. மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறந்தது. இறைவன்; வன்மீக நாதர், இறைவி: அல்லியங்கோதை.



RangaRakes tamilnavarasam.com

சோழ மன்னர்களின் தலை நகரங்கள் ஐந்தனுள் இது ஒன்று. தன் மகன் ஏறிச் சென்ற தேரில் அடிபட்டிறந்த பசுங்கன்றுக்காகத் தன் மகனையே தேர்க்காலிலிட்டுக் கொன்று முறை வழங்கிய மனுநீதிச்சோழர் இருந்து அரசோச்சிய தலம். ஏயர்கோன் கலிக்காமர், காடவர்கோன் கழற்சிங்கர், விறன்மிண்டர், செருத்துணையார், நமிநந்தியடிகள், தண்டியடிகள் ஆகிய நாயன்மார்கள் வாழ்க்கைத் தொடர்புடைய தலம். சுந்தரமூர்த்திகள் பரவை நாச்சியாரோடு இல்லறம் நடத்திச் சிவனடியார்களை ஆதரித்த தலம். சுந்தர மூர்த்திகள் திருத்தொண்டத் தொகையை அருளிய தலம். சிவபெருமான் சுந்தரருக்காகப் பரவை நாச்சியாரிடம் ஒரு முறைக்கு இருமுறையாகத் தூது சென்றருளிய தலம். திருக்கச்சி ஏகம்பத்தில் இடக்கண்பெற்ற சுந்தரர் இங்குவந்து வலக்கண் பார்வையும் பெற்றார். காஞ்சிபுரமும் இத்திருவாரூரும் ஐம்பூதத்தலங்களுள் மண் (பிருதிவி) தலமாம். ஆறாதாரத் தலங்களுள் இது மூலாதாரத்தலம். பிறக்க முத்தி தரும் தலம். 'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' எனச் சுந்தரர் அருளியுள்ளார். ஆரூரிற் பிறந்தவர்கள் அனைவரும் சிவகணங்களே என்பதை ஆரூர் அண்ணலே நமிநந்தியடிகளுக்குக் காட்டியருளினர். நமிநந்தி அடிகள் தண்ணீரால் விளக்கெரித்து வழிபட்ட தலம். 'நிறைசெல்வத்திருவாரூர்', தேராரும் திருவாரூர்,' செல்வம் மல்கிய தென் திருவாரூர்', 'தேசமல்கிய தென்திருவாரூர்' எனப் புகழப்பெறும் தலம்.

திருவாரூரில், ஆரூர், ஆரூர் அரநெறி, அரூர்ப் பரவையுண் மண்டளி என மூன்று தலங்கள் உள்ளன. மூன்றுமே பாடல் பெற்றவை. அரநெறி, ஆரூர்க் கோயிலுக்குள்ளேயே உள்ளதெனினும் தனித் தலமாகக் கணக்கிடப்பெறும்.

இச்சிறந்த திருஆரூரை அடிகள் வழிபட்டுப் பாமாலை யொன்றையும் ஆரூர்ப்பெருமானுக்குச் சாத்தி வணங்கியுள்ளார்கள். அது இரண்டாம் திருமுறையில் 'விண்ணப்பப் பதிகம்' என்ற பெயருடன் திகழ்கிறது. முதல் நான்கு திருமுறைகள் 1867 பிப்ரவரியில் நூலாக வெளிவந்ததாதலின் இரண்டாந் திருமுறையில் இடம்பெற்றுள்ள இத்திருவாரூர்ப்பதிகம் 1867-ஆம் ஆண்டுக்கு முன்னரே அருளப் பெற்றதாதல் வேண்டும். 1858-இல் சென்னை வாழ்வை நீத்த அடிகளார் அன்பர்கள் சிலரோடு புறப்பட்டுச் சிதம்பரம் சீகாழி, வைத்தீஸ்வரன் கோயில் ஆகிய தலங்களை வழிபட்டுக்கொண்டு கருங்குழி வந்தடைந்ததாகச் ச.மு.கந்தசாமி பிள்ளையவர்கள் கூறுவர். புள்ளிருக்கு வேளூர் முதலிய தலங்களை வழிபட்ட காலத்தில் அடிகள் திருவாரூரையும் வழிபட்டிருப்பர்.

**எந்தாய் ஒருநாள் அருள்வடிவின் எளியேன் கண்டு களிப்படைய**
**வந்தாய் அந்தோ கடைநாயேன் மறந்து விடுத்தேன் மதிகெட்டேன்**
**செந்தா மரைத்தாள் இணைஅண்றே சிக்கென் றிறுகப் பிடித்தேனேல்**
**இந்தார் சடையாய் திருஆரூர் இறைவா துயரற் றிருப்பேனே**

**-2, விண்ணப்பப் பதிகம் 9**

என்னும் பாடலுள் 'எந்தாய் ஒருநாள் அருள் வடிவின் எளியேன் கண்டு களிப்படைய வந்தாய்' என்பது அடிகளது அனுபவம் ஆகும்.

**திருக்கண்ணமங்கை**



RangaRakes tamilnavarasam.com

திருவாரூருக்கு அருகிலுள்ள வைணவத் தலமாகிய திருக்கண்ணமங்கையில் எழுந்தருளியுள்ள அபிடேகவல்லித்தாயாரின் துதியாக அடிகள் அருளிய திருப்பாடலொன்றுள்ளது. அடிகள் திருவாரூரை வழிபட்ட காலத்தில் திருக்கண்ண மங்கைக்கும் சென்று வழிபட்டார்களாதல் கூடும்.

**சீகாழி**

'பின்னர் சீர்காழிக்குச் சென்று அம்மன் கோயிற்பந்தலில் பிரசங்கஞ் செய்தனர்' என்று ச.மு.க. பதிப்பு சரித்திரக் குறிப்பில் எழுதப் பட்டுள்ளது. பெருமானின் சீகாழி வழிபாடு பற்றி விரிவாகத் தெரியவில்லை. சீகாழியைப்பற்றித் தனிப் பதிகங்களோ, பாடல்களோ அருளப் பெறவில்லை. சீகாழி, திருஞானசம்பந்தரது திருப்பதியாகும். சம்பந்தரை குருவாகக் கொண்டு அவரிடத்துப் பெரிதும் ஈடுபட்ட அடிகள், வேளூர், திருவாரூர் வழிபாட்டுக் காலத்தில் சீகாழிக்கும் சென்று வழிபட்டார்கள் என்பது இயல்பே. சீகாழியில் பாடல்கள் அருளியிருந்தார்களாயின் அவை நமக்குக் கிடைக்காது போயினமை நம் தவக்குறைவே.



# 3.பூர்வஞான சிதம்பரப் பகுதி
## (1858-1867)

### அகவை 35-44

### கருங்குழியில் உறையத் தொடங்கியது - 1858

தமது முப்பத்தைந்தாம் அகவையில் (1858) சென்னை வாழ்வை நீத்த அடிகள் வழியிலுள்ள தலங்களை வழிபட்டுச் சிதம்பரத்தை அடைந்தார்கள். அடிகளைக் காண நேர்ந்த கருங்குழி மணியக்காரர் வேங்கடரெட்டியார் அடிகளைத் தம்மூர்க்கு வருமாறு அழைத்தார். அடிகளும் கருங்குழிக்கு எழுந்தருளினர். வேங்கட ரெட்டியார் அடிகளை அன்போடு வரவேற்று உபசரித்தார்; கருங்குழியில் தமது இல்லத்திலேயே தங்கியருள வேண்டும் என வேண்டினார்.



RangaRakes tamilnavarasam.com

ரெட்டியாரின் உண்மை அன்பை உணர்ந்த அடிகள், அவரது விருப்பத்திற்கிணங்கக் கருங்குழியில் அவரில்லத்திலேயே தங்கினார்கள். 1858-இல் கருங்குழிக்கு வந்தது முதல் 1867-இல் சத்திய தருமச்சாலையை வடலூரில் ஏற்படுத்தி அங்கெழுந்தருளும் வரை கருங்குழியே அடிகளின் உறைவிடமாயிற்று. இக்காலத்தில் அடிக்கடி சிதம்பரம் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டார்கள். அருகிலுள்ள பிற தலங்களுக்கும் சென்று வழிபட்டார்கள். கருங்குழியில் வதிந்த காலத்தைச் சிதம்பர வழிபாட்டுக்காலம் எனலாம். திருவருட்பா நான்காம் திருமுறையும் ஆறாம் திருமுறையின் சில பதிகங்களும் இக்காலத்திற் பாடப்பெற்றவை. தண்ணீர் விளக்கெரிந்ததும், இறைவன் மானிடத் திருமேனி தாங்கி வந்து அருள் செய்ததும் இங்கு நடைபெற்ற அற்புதங்கள்.

கருங்குழியில் அடிகளை ஆதரித்து ஆட்பட்டவர் வேங்கடரெட்டியார். வேங்கட ரெட்டியார் என்ற பெயரும், அவரது மனைவியார் பெயர் முத்தியாலு அம்மாள் என்பதும் ச.மு.க. அவர்களால் குறிப்பிடப்பெறுகிறது. இவர் ஊரின் மணியக்காரர். இன்றும் இப்பரம்பரையினரே மணியக்காரராக உள்ளனர். ரெட்டியார் வீட்டில் அடிகளுக்கெனத் தனி அறை ஒன்று ஒதுக்கப்பட்டது. உறையுள் மட்டுமன்றி, உணவும் ரெட்டியார் வீட்டிலேயே படைக்கப்பட்டது. இங்ஙனம் ஒன்பதாண்டு காலம் அடிகளைப் பேணி அவர்களுக்கு ஆட்பட்ட இக் குடும்பம் முற்பிறப்பில் என்ன தவம் செய்ததோ?{51}

{51. ரெட்டியார் வீட்டில் இருவர் காலமானதைப் பற்றிய குறிப்புகள் அடிகளது கடிதங்களால் அறியப்படுகின்றன. ஒருவர் ரெட்டியார் என்றும் மற்றவர் ராமகிருஷ்ண ரெட்டியார் என்றும் குறிப்பிடப்படுகின்றனர். ரெட்டியார் என்று குறிப்பிடப்பெறுபவர் வேங்கட ரெட்டியார் போலும். இராமகிருஷ்ண ரெட்டியாருக்குப் பின் வந்தவர்கள் வீராசாமி ரெட்டியாரும் பாஷ்யம் ரெட்டியாரும் ஆவர். இவ்விருவரும் காலஞ்சென்று விட்டனர். பாஷ்யம் ரெட்டியார் மனைவி ராஜசுந்தரத்தம்மாளும், மக்கள் இராமலிங்க ரெட்டியாரும் வீராசாமி ரெட்டியாரும் இப்போது உள்ளனர். இராமலிங்க ரெட்டியார் மணியக்காரராக இருக்கிறார்.}

## கருங்குழி விநாயகர்

கருங்குழியில் அடிகள் இருந்த வீட்டுக்கு அருகே ஒரு சிறிய விநாயகர் கோயில் உள்ளது. இவ் விநாயகரை அடிகள் பாடியுள்ளார்கள். ஐந்தாந் திருமுறை தொடக்கத்தில் மூத்த பிள்ளையார் திருப்பதிகங்கள் நான்கு உள்ளன. அவற்றில் மூன்றாவதாகிய கணேசத் திருவருள் மாலையின் இறுதிப்பாடலில் 'நற்கருங்குழி என்னும் ஊர் மேவி அன்பர்க்கருள் கணநாதனே' என ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நாவி னால்உனை நாள்தோறும் பாடுவார்**
**நாடு வார்தமை நண்ணிப்பு கழவும்**
**ஓவி லாதுனைப் பாடவும் துன்பெலாம்**
**ஓட வும்மகிழ் ஓங்கவும் செய்குவாய்**
**காவி நேர்களத் தான்மகிழ் ஐங்கரக்**
**கடவு ளேநற்க ருங்குழி என்னும் ஊர்**
**மேவி அன்பர்க்க ருள்கண நாதனே**



RangaRakes tamilnavarasam.com

**விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.**

**-5, கணேசத் திருவருள்மாலை 10**

மேற்குறித்த நான்கு பதிகங்களுமே கருங்குழி விநாயகரை குறித்துப் பாடப்பெற்றதாகலாம். அடிகள் கருங்குழியை நற்கருங்குழி எனப்பாடியுள்ளனர். அடிகள் உறைந்தமையானும் அவர்கள் திருமுன்னர் நீரால் விளக்கெரிதல் முதலிய அற்புதங்கள் நிகழப்பெற்ற இடமாதலானும் அது திருக்கருங்குழி ஆகும்.

## தல வழிபாடு

கருங்குழியில் வைகிச் சிதம்பரத்தை வழிபட்டு வந்த அடிகள் இடையிடையே பிறதலங்கள் சிலவற்றிற்கும் சென்று வழிபட்டார்கள். அவ்வாறு வழிபடப்பெற்றவை திருமுதுகுன்றம், திருஅண்ணாமலை, திருஅதிகை முதலியவையாம்.

## திருமுதுகுன்றம்

இது நடு நாட்டுத் தலங்கள் இருபத்திரண்டனுள் ஒன்று. விருத்தாசலம் என இப்போது வழங்குகிறது. சில அடிகளே உயரமுள்ள பரந்த கற்பாறையின் மேல் கோயில் அமைந்துள்ளது. இறைவன் பழமலை நாதர். இறைவி பெரிய நாயகி. மூவரும் இதனைப் பாடியுள்ளனர். சம்பந்தர் பதிகம் ஏழும் அப்பர் பதிகம் ஒன்றும் சுந்தரர் பதிகம் மூன்றும் இதற்கு உள்ளன. சுந்தரர் பதிகம் பாடிப் பழமலையாரிடம் பன்னீராயிரம் பொன் பெற்று இங்கு மணி முத்தாற்றில் இட்டுத் திருவாரூரில் குளத்தில் எடுத்தார். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இத்தலத்தில் பெரிதும் ஈடுபட்டவர். குமார தேவர் இங்கேயே எழுந்தருளியிருந்தவர். இத்தலம் காசியிலும் வீசம்பெரியது என்பர். ஆதலின் விருத்தகாசி எனவும் கூறப்படும்.

அருகிலுள்ள இத்தலத்தை வள்ளற்பெருமான் வழிபட்டுப் பாடியுள்ளார்கள். பழமலையார் திருப்பதிகம் ஒன்றும் சில தனிப்பாடல்களும் அடிகள் அருளியனவாம்.

**ஆதிமலை யனாதிமலை யன்புலை யெங்கும்**
**ஆனமலை ஞானமலை யானந்த மலைவான்**
**ஜோதிமலை துரியமலை துரியமுடிக் கப்பால்**
**தோன்றுமலை தோன்றாத சூதான மலைவெண்**
**பூதிமலை சுத்தவனு பூதிமலை யெல்லாம்**
**பூத்தமலை வல்லியெனப் புகழுமலை தனையோர்**
**பாதிமலை முத்தரெலாம் பற்றுமலை யென்னும்**
**பழமலையைக் கிழமலையாய்ப் பகருவதென் னுலகே.**

**சாக்கியானா ரெறிந்தசிலை சகித்தமலை சித்த**
**சாந்தருளஞ் சார்ந்தோங்கித் தனித்தமலை சபையில்**
**தூக்கியகா லொடுவிளங்குந் தூயமலை வேதஞ்**
**சொன்னமலை சொல்லிறந்த துரியநடு மலைவான்**
**ஆக்கியளித் தழிக்குமலை யழியாத மலைநல்**
**அன்பருக்கின் பந்தருமோ ரற்புதப்பொன் மலைநற்**



RangaRakes tamilnavarasam.com

**பாக்கியங்க ளெல்லாமும் பழுத்தமலை யென்னும்**
**பழமலையைக் கிழமலையாய்ப் பகருவதென் னுலகே.**

**-தனிப்பாசுரப் பகுதி பக்கம் 68**

பழமலையைக் கிழமலையாய்ப் பகருவதென்னுலகே' என அருளியதில் அரிய நயம் உள்ளது. இத்தலத்தின் பெயர் முதுகுன்றம்; பழமலை. ஆயினும் இன்று உலகம் இதனை விருத்தாசலம் என்றே வழங்குகிறது. விருத்தம் என்ற சொல் முதுமை எனப்பொருள்பட்டுக் கிழத் தன்மையைக் குறிக்குமேயன்றிப் பழைமையைக் குறிக்காது. ஆதலின் முதுகுன்றைப் பழமலை என்னல் சிறப்பே யன்றி விருத்தாசலம் என்னல் சிறப்பன்று. அங்ஙனம் கூறில் அது கிழமலையாம். 'பழமலையைக் கிழமலையாய்ப் பகருவதென் உலகே' என இதனால் தான் அடிகள் நயந்தோன்றப் பாடினர். பழமலையார் திருப்பதிகத்தில் தாம் கண்ட காட்சியை இனிதாகப் பாடுவர்.

**திருமால் கமலத் திருக்கண்மலர்**
**திகழு மலர்த்தாட் சிவக்கொழுந்தைக்**
**கருமா லகற்றுந் தனிமருந்தைக்**
**கனக சபையிற் கலந்தவொன்றை**
**அருமா மணியை யாரமுதை**
**யன்பை யறிவை யருட்பெருக்கைக்**
**குருமா மலையைப் பழமலையிற்**
**குலவி யோங்கக் கண்டேனே.**

**-தனிப்பாசுரப் பகுதி, பக்கம் 49**

மற்றொரு பாடலில்.

**கனியுஞ் சிலையுங் கலந்த விட**
**மெங்கே யங்கே கண்டேனே.**

என அருளுவர். இதனுள் பழமலையைக் கனியுஞ் சிலையுங் கலந்த இடம் எனக் குறிக்கின்றனர். கனி-பழம். சிலை-மலை. கனியும் சிலையும் கலந்த இடம், பழமலை.

இத்தலம் அருகிலுள்ளதால் அடிகள் பலமுறை சென்று வழிபட்டித்தல் கூடும்.

### திருவண்ணாமலை

நடுநாட்டுத் தலங்களுள் இதுவும் ஒன்று. இறைவன் அண்ணாமலையார், இறைவி உண்ணாமுலையம்மை. இது ஐம்பூதத்தலங்களுள் தேயு(தீ)த் தலம். சம்பந்தரும் அப்பரும் இதனைப் பாடியுள்ளனர். சம்பந்தர் பதிகம் இரண்டும் அப்பர் பதிகம் மூன்றும் உள்ளன. பிரமன் மால் காணப்பெரியோனாக-தீக்கொழுந்தாக - இறைவன் நின்றருளிய தலம் இதுவே.

அடிகள் அண்ணாமலையாரைப் பாடிய பதிகம் ஒன்று இரண்டாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. இதனுள் அடிகளார், 'நினது சந்நிதி உற எனக்கருளே', 'அருணையை விழைந்தேன் அங்கெனை அடைகுவித்தருளே', நின்



RangaRakes tamilnavarasam.com

கோயிற்கு எளியனேன் வர வரம் அருளே' என வேண்டித் துதிக்கின்றனர். இதனால் இப்பதிகம் பாடிய நாளையில் அடிகள் திருவண்ணாமலை சென்றிலர் என்றும், வேறிடத்திருந்தவாறே அண்ணாமலையாரைப் பாடிப்பரவினர் என்றும் கருத வேண்டியுள்ளது. பின்னாளில் அண்ணாமலை சென்று வழிபட்டிருத்தலும் கூடும்.

**திருவிளங்கச் சிவயோக சித்தியெலாம் விளங்கச்**
**சிவஞான நிலைவிளங்கச் சிவாநுபவம் விளங்கத்**
**திருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே**
**திருக்கூத்து விளங்கவொளி சிறந்ததிரு விளக்கே**
**உருவிளங்க வுயிர்விளங்க வுணர்ச்சியது விளங்க**
**வுலகமெலாம் விளங்கவரு ளுதவுபெருந் தாயாம்**
**மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க**
**வயங்கருண கிரிவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே.**

என்ற பாடல் அடிகள் அருணகிரியில் வளர்ந்த சிவக்கொழுந்தாகிய அண்ணாமலையாரைப் போற்றியதாம். அருணகிரியில் தீக்கொழுந்தாக வளர்ந்த இறைவனை, அருணகிரி விளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே எனப் போற்றுவது மிகப்பொருத்தமாம். 'வயங்கு அருணகிரி விளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே' என்பதனை, 'வயங்கு மணிப்பொது விளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே' என மாற்றி இப்பாடலை அப்படியே பொதுவிலாடும் பொன்னம்பலவர்க்கு ஆக்கியிருக்கிறார்கள்.

## திருவதிகை

இதுவும் நடுநாட்டுத் தலமே. அட்ட வீரத்தலங்களுள் இது. ஒன்று. அதிகை வீரட்டானம் எனவும் வழங்கும். திரிபுரத்தை எரித்த தலம். இறைவன் வீரட்டேசுவரர். இறைவி பெரியநாயகி. மூவராலும் பாடப்பெற்றது. சம்பந்தர் ஒன்று, அப்பர் பதினாறு, சுந்தரர் ஒன்று, ஆகப்பதினெட்டுப்பதிகங்கள் இதற்கு உள. அப்பரும் அவர் தமக்கையார் திலகவதியாரும் சரியைத் தொண்டு செய்த தலம். அப்பரின் சூலை நோய் நீங்கிய தலம். சுந்தரர்க்கு இறைவன் திருவடி தீட்சை செய்தருளிய சித்தவடமடம் இங்கு தான் உள்ளது.

அடிகள் திருவதிகை சென்று வழிபட்டுப் பெரியநாயகியைப் போற்றிய பாடல்கள் மூன்று கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்று வருமாறு:

**உரிய நாயகி யோங்கதி கைப்பதிகத்**
**துரிய நாயகி தூயவீ ரட்டற்கே**
**பிரிய நாயகி பேரரு ணாயகி**
**பெரிய நாயகி பெற்றியைப் பேசுவாம்.**

## தனித்துறைதல்

1862-ஆம் ஆண்டில் சிலகாலம் நெல்லிக்குப்பத்திலும், கூடலூரிலும் அடிகள் தனித்துறைந்தார்கள். 1862-இல் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு எழுதிய ஒரு கடிதத்தில் 'தற்காலம் நான் வேறோர் நிமித்தம் தனித்து கூடலூரைச் சார்ந்த நெல்லிக்குப்பம் கரும்பாலையாடுந் தோட்டத்திலிருக்கிறேன்' எனக் குறித்துள்ளார்கள். அடுத்த கடிதத்தில் 'தற்காலத்தில் யான் வசிக்குமிடம்



RangaRakes tamilnavarasam.com

இதுவென்று குறிப்பதற்குக் கூடாத பலவிடங்களாக இருத்தலில் இருக்குமிடம் இதுவென்று குறிக்கவில்லை', எனக் குறிப்பிடப் பெறுகிறது. ஐப்பசி 23-இல் (நவம்பர் 1862) எழுதிய கடிதத்தில் 'நான் ஆடி மீ ரூஉ புறப்பட்டு கூடலூர்க்குப் போய் ஐப்பசி மீ கசஉ கருங்குழிக்கு மீட்டும் வந்தேன்' என்றெழுதியுள்ளார்கள். அதே நாளில் புதுவை வேலு முதலியார்க்கு வரைந்த கடிதத்திலும் 'நான் ஐப்பசி மீ யசஉ கூடலூரை விட்டுப் புறப்பட்டு அவசியமான ஒரு காரியம்பற்றி கருங்குழிக்கு வந்தேன்' என்றெழுதியுள்ளார்கள். இவற்றால் ஆடி 5 முதல் ஐப்பசி 14 வரை மூன்று திங்களுக்கு மேல் அடிகள் கூடலூரிலிருந்தனரென்பது தெரிகிறது. தல வழிபாடு தவிர பிற செயல்களுக்காவும் தனித்திருப்பதற்காகவும் அடிகள் இவ்வாறு கருங்குழியை விட்டு அயலிடங்களில் அவ்வப்போது சில காலம் தங்குவதுண்டு.

## சிங்கபுரிக் கந்தரைப் பாடியது

அடிகள் சிங்கபுரிக் கந்தரைப் பாடிய பதிகம் ஒன்று ஆ.பா. அவர்களால் தனிப்பாசுரப் பகுதியில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. 1892-ஆம் ஆண்டு அருட்பாப் பதிப்பில் இது முதல் வெளி வந்தபோது குறிஞ்சிப்பாடிக்கு அடுத்துள்ள சிங்கபுரிக்கந்தர் பதிகம் என்ற தலைப்போடு அச்சிடப்பட்டிருக்கிறது என்றும் இப்பதிக வரலாறு -'இஃது ரக்தாக்ஷி வரு சித்திரை மீ உசு உ சுக்கிர வாரம கார்த்திகை நக்ஷத்திரம் சோதரர் சபாபதி பிள்ளையின் ரோக நிவாரணார்த்தம் சி.இராமலிங்க பிள்ளையவர்களாலியற்றியது' என ஓர் நோட்டுப்பிரதியில் காணப்படுகிறதென்றும் ஆ.பா.அடிக் குறிப்பெழுதியுள்ளார். ஷெ சித்திரை 26-க்குச் சரியான ஆங்கில நாள் 6-5-1864 என்றும் குறித்துள்ளார். இப்பதிகத்தின் பாடல்கள் 'சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக்குன்றே' என்று முடிகின்றன. நோயை நீக்க வேண்டுமென இப்பாடல்கள் வேண்டுகின்றன. தமையனாரின் வழிபாட்டுக்காக அடிகள் இப்பதிகத்தைப் பாடியளித்திருக்கலாம். சிங்கபுரியின் மீது பாடிய காரணம் சபாபதி பிள்ளை அடிகளைக் காணக் கருங்குழிக்கு வந்திருந்தாரென்றும் அது போது இது பாடப்பெற்றதென்றும் கருதலாம்.

## கல்பட்டு சுவாமிகளை ஆட்கொள்ளல்

தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவலூர் வட்டத்தில் திருக்கோவலூரிலிருந்து பன்னிரண்டு கல் தொலைவில் திருநறுங்குன்றம் என்றோர் ஊர் உள்ளது. அங்கு சிறு குன்று ஒன்றுண்டு. அம்மலையில் இராமலிங்கம் என்றொரு சுவாமிகள் இருந்தார். இவர் கல்பட்டு இராமலிங்க சுவாமிகள் என்று வழங்கப்படுவர். தம்மைக் குருநாதனே வலிந்து வந்து ஆட்கொள்ள வேண்டும் என்றிருந்த இவரை, நமது அடிகள் திருநறுங்குன்றத்திற்குப் போய் ஆட்கொண்டு தம்முடன் கருங்குழிக்கு அழைத்து வந்தார்கள். அட்சய ஆண்டு ஆடித்திங்கள் பத்தொன்பதாம் நாள் (2-8-1866) திருநறுங்குன்றம் இராமசாமி நயினார்க்கு வரைந்த திருமுகமொன்றில் கல்பட்டு சுவாமிகள் திருநறுங்குன்றம் வந்திருப்பதைக் குறித்து அடிகள் உசாவுகின்றனர். இதனால் கல்பட்டு சுவாமிகளை அடிகள் ஆட்கொண்டது 1866-க்கு முன்னரே என்பது பெறப்படுகிறது. இக் கடிதத்தில் கல்பட்டு சுவாமிகளை அடிகள் சிவஞானவிருப்பினராகிய ராமலிங்க மூர்த்திகள் என்றும் நமது ராமலிங்க மூர்த்திகள் என்றும் குறிக்கின்றனர். வடலூரில் சிறப்பான உபதேசங்களைச் சன்மார்க்க அன்பர்களுக்கு அருளுங் காலத்தில் அடிகள் இவரையும் அழைப்பதுண்டாம். 'சத்திய தருமச்சாலையில் பிரசங்கஞ் செய்கிற காலங்களில் கல்பட்டு ஐயாவுக்குப் பயன்படக்கூடிய விஷயம் நடக்கிற



RangaRakes tamilnavarasam.com

சந்தர்ப்பங்களில் அவரைப் பிரசங்கத்துக்கு அழைப்பிப்பர்' எனச் ச.மு.க. பதிப்பு சரித்திரக் குறிப்புகளுட் கூறப்படுகிறது. அடிகளின் பிரசங்களில் இவருக்குப் பயன்படக் கூடாத விஷயங்களும் இருக்கும் போலும்! கல்பட்டு சுவாமிகளின் சமாதி தருமச் சாலைக்குக் கிழக்கே உள்ளது. இவரது முன் பின் வரலாறு முதலிய தெளிவாகத் தெரியவில்லை.

## சிதம்பர வழிபாடு

### சிதம்பர வரலாறு

தில்லைத் திருத்தலம் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் வட்டத்தில் அதன் தலை நகராக அமைந்துள்ளது. மேற்கே நாகச்சேரியும், வடக்கே வெள்ளாறும், கிழக்கே திருவேட்களமும் அண்ணாமலை நகரும், தெற்கே திருநெல்வாயிலும் திருக்கழிபாலையும் கொள்ளிடப் பேராறும் இதற்கெல்லைகளாக அமைந்துள்ளன. இந்நான்கெல்லைக்குட் பட்ட இந்நகர் 1871-இல் முனிசிபல் நகரமாயிற்று. நகரின் பரப்பு 1.84 சதுர மைல். மக்கள் தொகை 1961-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 40694.

தில்லைச்சிதம்பரம் மிகப் பழைமையானது. இதன் வரலாறு வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டது. தில்லை என்பது ஊரின் பெயர். சிதம்பரம் என்பது கோயிலின் பெயர். கோயிலின் பெயரே இப்போது ஊர்ப்பெயராக வழங்குகிறது. கோயில், சிற்றம்பலம், புலியூர், பெரும் பற்றப் புலியூர் என்பன இதன் வேறு பெயர்கள். இது சோழநாட்டு காவிரைவடகரைத் தலம். பஞ்ச பூதத்தலங்களுள் ஆகாயத் தலம். ஆறாதாரத் தலங்களுள் அனாகதத் தலம்.

பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் தில்லையை வழிபட்டுத் திருநடனங் கண்டனர். சமயகுரவர் நால்வரும் இதனைவழிபட்டுப் பாடியுள்ளனர். திருஞானசம்பந்தர் பதிகம் 2, திருநாவுக்கரசர் பதிகம் 8, சுந்தரர் பதிகம் 1 ஆகப் 11 பதிகங்கள் இதற்கு உள்ளன. திருவாசகப் பதிகங்கள் 51-இல் 25 பதிகங்கள் தில்லையில் அருளியவையே. 'தில்லை பாதி திருவாசகத்தில்' என்பது பழமொழி. திருக்கோவையார் திருச்சிற்றம்பலவரையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டமையால் திருச்சிற்றம்பலக் கோவையார் என்றும் வழங்கப்படும். திருமூலர், பட்டினத்தார், அருணகிரியார், தாயுமானார், இராமலிங்க அடிகள் ஆகிய ஞானிகளும் இதனை வழிபட்டுப் பாடியுள்ளனர். இதனை வழிபடாத ஞானிகளும் பெரியோர்களும் இல்லை எனலாம்.

தில்லைத் திருக்கோயில் 40 ஏக்கர் பரப்புடையது. பல காலங்களில் பல மன்னர்களால் திருப்பணி செய்யப்பெற்று விளங்குவது. இறைவன் லிங்க வடிவில் எழுந்தருளியுள்ள மூலத்தானம் திருமூலட்டானம் எனப்படும். இறைவன் திருப்பெயர் திருமூலட்டானேசுவரர். கூத்தப்பெருமான் எழுந்தருளித் திருநடனம் புரியும் இடம் சிற்சபை. தமிழகத்தின் ஐம்பெருஞ் சபைகளுள் இதுவே தலைமையானது. ஐம்பெருஞ்சபைகளுள் ஒன்றான இச்சிதம்பரம் தனக்குள்ளும் ஐந்து சபைகளை உடையது.

நடராசப் பெருமானது சந்நிதிக்கருகில் திருமால் கோவிந்தராசர் என்னும் திருநாமத்துடன் விளங்குகிறார். கோவிந்தராசர் எழுந்தருளியுள்ள இடம்



RangaRakes tamilnavarasam.com

திருச்சித்ரகூடம் எனப்படும். 108 வைணவத் திருப்பதிகளுள் இத்திருச்சித்ரகூடமும் ஒன்று. இதனைக் குலசேகரப் பெருமாளும் திருமங்கையாழ்வாரும் மங்களாசானஞ் செய்துள்ளனர்.

தல வரலாற்றைக் கூறும் புராணங்களும் நூல்களும் பல. கோயிற்புராணம், சிதம்பர புராணம், தில்லைவன மான்மியம், சிதம்பர விலாசம், சிதம்பர ரகசியம், தில்லை உலா, தில்லைக் கலம்பகம் என்பன அவற்றுட் சில. வடமொழியிலும் பல நூல்களும் புராணங்களும் உள. இதன் வரலாறாகக் கூறவேண்டியன இன்னும் பல உளவெனினும் விரிவஞ்சி விடுத்தாம். அடுத்துக் கூறப்பெறும் சிதம்பரச் சிறப்புகளாலும் வரலாற்றுச் செய்திகள் சிலவற்றை அறியலாம்.

## சிதம்பரச் சிறப்புகள்

தலங்களுட் சிறந்தது சிதம்பரம். இதன் சிறப்புகள் பல. பெயர்ச் சிறப்பு, பழைமைச் சிறப்பு, தலைமைச் சிறப்பு, முதன்மைச் சிறப்பு, எதற்கும் முன்னாம் சிறப்பு, பூதச் சிறப்பு, ஆதாரச் சிறப்பு, சபைச் சிறப்பு, ஆடற் சிறப்பு, ரகசியச் சிறப்பு, இருசமயக் கடவுளர் இருப்பாம் சிறப்பு, திருமுறைகள் சேமித்து வைக்கப் பெற்றிருந்த சிறப்பு, மாணிக்கவாசகர் சபையுட் புகுந்து இறைவனோடிரண்டறக் கலந்தருளிய சிறப்பு, சேக்கிழார்க்கு அடியெடுத்துக் கொடுத்த சிறப்பு, சமயப் பொதுவாம் சிறப்பு, பலர் தொழுதேத்திய சிறப்பு என்பன அவற்றுட் சிலவாம். இவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

### பெயர்

தில்லை, சிற்றம்பலம், சிதம்பரம், கோயில், புலியூர், பெரும்பற்றப் புலியூர், குகை, தகராகாசம், புண்டரீகபுரம், பொன்னம்பலம், பொது என்பன இதன் பெயர்கள்.

**தில்லை**: கடற்கரையோரச் சதுப்பு நிலங்களில் வளரும் ஒரு வகைச் செடிக்குத் தில்லை என்று பெயர். இச்செடி புதராக வளரும்; பெரிய மரமாக வளருவதில்லை. ஆதியில் தில்லைச் செடிகள் நிறைந்த ஊராதலின் இவ்வூர் தில்லை எனப்பெயர் பெற்றது. தில்லைவனம் எனப்புராணங்களாற் கூறப்பெறும். தில்லை என்பது இவ்வூர்க்குத் தலமரத்தால் வந்த பெயர். தில்லைத் தலத்தின் தல விருட்சம் தில்லைச்செடி. தல விருட்சம் ஆல் என்பாரும் உளர். தில்லை என்பது ஊரின் (தலத்தின்) பெயரென்றும், சிதம்பரம், சிற்றம்பலம் என்பன கோயிலின் பெயரென்றும், கோயிற் பெயராகிய சிதம்பரமே இப்போது ஊர்க்கும் வழங்கி வருகிறது என்றும் முன்னர் கூறினோம். தலப்பெயர் தில்லையும் கோயிற்பெயர் சிற்றம்பலமும் ஆகுமென்பது,

**'தில்லையுட்..............செய்யானுறை**
**கோயில் சிற்றம்பலந்தானே'**
**'தில்லை தன்னுள் ஏறு தொல்புகழேந்து சிற்றம்பலத் தீசனை'**

**-திருஞானசம்பந்தர்**



RangaRakes tamilnavarasam.com

**'தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்'**
**'தில்லை தன்னுள் திகழ்ந்த சிற்றம்பலத்தே'**
**'தில்லை தன்னுள் நவின்ற சிற்றம்பலத்தே'**
**'தில்லை தன்னுட் கருது சிற்றம்பலத்தே'**
**'தில்லை தன்னுள் மல்கு சிற்றம்பலத்தே'**
**'புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே'**

**-திருநாவுக்கரசர்**

**'புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானை'**

**-சுந்தரர்**

**'தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்'**

**-குலசேகராழ்வார்**

என்னுந் திருவாக்குகளாற் பெறப்படும். சிற்றம்பலமும் சிதம்பரமும் ஒன்றே.

சிதம்பரம்: சித்+அம்பரம்-சிதம்பரம். சித்-அறிவு; அம்பரம்-ஆகாயம், பரவெளி, அம்பலம். சிதம்பரம்-ஞானாகாசம், சிதாகாசம்.

**சிற்றம்பலம்:** சிறு+அம்பலம்-சிறிய அம்பலம், சிற்றம்பலம். சிறுமை-நுண்மை, சூக்கும நிலை. சிற்றம்பலம்-சூக்குமாகாயம், பரவெளி.

**கோயில்:** இது தலைமை பற்றி வந்த சிறப்புப்பெயர். சைவ உலகில் கோயில் என்பது சிதம்பரம். வைணவ உலகில் கோயில் என்பது திருவரங்கம். இரு சாராரும் தத்தம் தலைமைத் தலத்தைக் 'கோயில்' என்றே வழங்குவர். கோயில் என்பது எல்லாக் கோயில்களுக்கும் உரிய பொதுப்பெயராயினும் தில்லைக்கும் திருவரங்கத்திற்கும் அவற்றின் தலைமை பற்றிச் சிறப்பாக வழங்கப்பட்டது. சிதம்பரத்தின் புராணம் ஒன்றிற்குக் கோயிற்புராணம் என்றே பெயர். அது உமாபதி சிவத்தாற் செய்யப்பட்டது. கோயில் திருப்பதிகம், கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் நான் மணிமாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம் என்னும் பெயர்களைக் காண்க. திருவரங்கக் கலம்பகத்தைக் கோயிற் கலம்பகமென்பதுமுண்டு. கோ+இல்-கோயில். கோ-தலைவன் (இறைவன்), இல்-உறைவிடம், கோயில்-இறைவனின் உறைவிடம்.

**புலியூர்**: புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதரால் பூசிக்கப்பெற்றதனால் புலியூர் எனப்பெயர் பெற்றது.

**'புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே'**

**-திருநாவுக்கரசர்**

**'புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானைப் பெற்றாமன்றே'**



RangaRakes tamilnavarasam.com

-சுந்தரர்

**பெரும்பற்றப்புலியூர்: பெரும்பற்றினாற் புலிக்கால் முனிவர் பூசித்தவூர்.**

**'பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'**

**-திருநாவுக்கரசர்**

**குகை, தகராகாசம்:** அண்டமாகிய உலகத்திற்கும் பிண்டமாகிய நமது உடம்புக்கும் இது இருதயமாக விருப்பதால் குகை, தகராகாசம், புண்டரீகபுரம் எனப் பெயர் பெற்றது. குகை-நெஞ்சக்குகை. தகராகாசம்-இருதயாகாசம். புண்டரீகம்-தாமரை, நெஞ்சத்தாமரை.

**பொன்னம்பலம்**: கூரைக்குப் பொன் வேயப்பெற்றதாதலின் பொன்னம்பலம், பொற்சபை, கனகசபை எனப்பெயர் பெற்றது.

**பொது:** பொது, சபை, மன்றம் என்பன ஒருபொருட் சொற்கள். இது சபைக் கோயிலாதலின் பொது எனப்பட்டது.

**'வயங்குமணிப் பொது விளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே'**

**-இராமலிங்க அடிகள்**

இவ்வாறாக இத்தில்லைத் திருக்கோயிலின் திருப்பெயர்கள் தத்துவப் பொருள் வாய்த்தனவாயுள்ளமையும், ஊர்ப்பெயர் அருகிவழங்கக் கோயிற் பெயரே ஊர்ப் பெயராக விலங்குகின்றமையும் சிறப்புடைத்தாம்.

**பழைமை**

சிதம்பரம் மிகப்பழைமையானது. மாணிக்கவாசகப் பெருமான் இதனைத் 'தில்லை மூதூர்' என்பர்.

**'தில்லைமூதூர் ஆடிய திருவடி'**

**-திருவாசகம் 2**

மாணிக்கவாசகர் காலத்திலேயே இது மூதூராகக் கருதப்பட்ட தனின்றும் இதன் பழைமையை உணரலாம்.

மிகப் பழங்காலத்தில் கோயில்கள் மண்ணாலும் மரத்தாலும் கட்டப்பட்டன. மண்ணாலான அக்கோயில்கள் மண்தளி (மண்டளி) என வழங்கப்பெற்றன. தளி-கோயில். பழையாறை வடதளி, பரவையுண் மண்டளி, திருக்கச்சிமேற்றளி, ஓணகாந்தன்றளி என்பன காண்க. திருவாரூர்ப் பரவையுள் மண்தளி ஆதியுள் மண்கோயிலாகவே இருந்த தாதல் வேண்டும். அங்கெழுந்தருளியுள்ள இறைவனின் திருப்பெயராகிய மண்டலேசுவரர் என்பதும் இதனை வலியுறுத்தும். மண்ணாலும் மரத்தாலும் கட்டப்பெற்ற கோயில்கள் காலப்போக்கில் நிலைபெறாமற்போகவே

செங்கல், சுண்ணாம்பு, மரம் ஆகியவற்றால் கோயில் கட்டும் வழக்கம் ஏற்பட்டது. சங்ககாலக் கோயில்கள் செங்கற் கோயில்களே. சுவர்கள் இடிந்தும் விட்டம் வீழ்ந்தும் சிதைந்துபோன எங்கற்கோயிலொன்றைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற சங்ககாலப் புலவர் குறிப்பிடுகிறார்.

**இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென**
**மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து**
**எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று**
**ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை**

**-அகநானூறு 167**

**(இட்டிகை-செங்கல்)**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் காலத்தில் இருந்தனவெல்லாம் செங்கற் கோயில்களே. பெரிய மலைப் பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களை முதன் முதலிற் கட்டியவன் மகேந்திர வர்மனே. திருச்சிராப்பள்ளி, சித்தன்னவாசல், சீயமங்கலம், சிங்கவரம், குரங்கணின்முட்டம், திருக்கழுக்குன்றம், மண்டபப்பட்டு, தளவானூர், மகேந்திரவாடி, வல்லம், பல்லாவரம், மாமல்லபுரம் ஆகிய ஊர்களிலுள்ள குகைக்கோயில்கள் மகேந்திரவர்மனால் குடையப் பெற்றவை. செங்கல், சுண்ணாம்பு, சுதை ஆகியவற்றால் கட்டப்படும் பழைய முறையை மாற்றிப் பாறையைக் குடைந்து கோயில் அமைக்கும் புதிய முறையைக் கையாண்ட மகேந்திரவர்மன் 'விசிற்ற சித்தன்' எனப் புகழப்பெற்றான். மண்டப்பட்டு குகைக்கோயிலுள்ள வடமொழிக் கல்வெட்டொன்று "செங்கல்லும், சுண்ணாம்பும், மரமும் உலோகமும் இல்லாமலேயே பிரம ஈசுவர விஷ்ணுக்களுக்கு விசித்திர சித்தன் என்னும் அரசனால் இக்கோயில் அமைக்கப்பட்டது" எனக் கூறுகிறது.

இதன் பின்னர் இராசசிம்மன் காலத்திற்றான் கருங்கல் துண்டுகளை ஒன்றன் மேலொன்றாக அடுக்கிக் கோயில் கட்டும் வழக்கம் உண்டாயிற்று. இராசசிம்மனால் முதன்முதலாகக் கட்டப்பெற்ற கற்றளி காஞ்சிக் கைலாசநாதர் கோயிலாகும். கற்றளிகள் கட்டத் தொடங்கிய பின் பழைய செங்கற் கோயில்களெல்லாம் கற்றளிகளாக்கப் பெற்றன.

கோயிற் கட்டிடக் கலையின் வரலாற்றை, மண்தளிக்காலம், செங்கற் கோயிற்காலம், குகைக்கோயிற் காலம், கற்றளிக்காலம் என நான்கு காலப் பகுதிகளாகப் பிரிக்கலாம், தில்லைக்கோயில் மண்தளிக் காலத்தில் தோன்றிச் சிறிதாக விளங்கியது; பின்னர் செங்கற் கோயிலாகக் கட்டப்பெற்றது; காலப்போக்கில் கற்றளியாக்கப்பட்டது. சிற்றம்பலத்துள் இன்றும் காணப்படுகின்ற பழமையான மர வேலைப்பாடுகள் கோயிலின் பழமையை காட்டுவனவாகும். செங்கற் கோயிலில்களின் மரக்கூரைகளுக்குச் செப்புத்தகடு வேய்தல்பண்டைய வழக்கு. மழையினாலும், வெயிலினாலும் பழுதுபடாதிருப்பதிற்காக இங்ஙனம் தகடு வேய்வர். சிற்றம்பலம் பொற்றகடு வேயப் பெற்றது. இதனால் கனகசைபை என்றும், பொன்னம்பலம் என்றும் பெயர் பெற்றது. கூரைஅமைப்பும் பழைமையை காட்டுவதாகும். சுருங்கக்கூறின் சிதம்பரங்கோயில் வரலாற்றிற்கு முற்பட்ட பழைமையுடையதாகும்.



RangaRakes tamilnavarasam.com

## தலைமையும் முதன்மையும்

தலங்களுள் தலைமையானதும் முதன்மையானதும் இதுவே. பாடல் பெற்ற தலங்களை வரிசைப்படுத்துங்கால் முதலில் வைத்தெண்ணப்படுவது இதுவே. தலங்களின் அட்டவணையையும், அடங்கண் முறை (தலமுறை)யையும் காண்பார் இதனை எளிதிலறியலாம்.

## எதற்கும் முன்னிற்றல்

திருமுறைகளை ஓதும்போது "திருச்சிற்றம்பலம்" எழுவாயாகவும் இறுவாயாகவும் ஓதுதல் வேண்டும். அஃதாவது ஓதத்தொடங்கும்போது "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லி தொடங்கி, ஓதி முடிக்கும்போது "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லி முடிக்கவேண்டும். திருமுறைகளை எழுதும்போது தொடக்கத்திலும், முடிவிலும் "திருசிற்றம்பலம்" என எழுதவேண்டும். திருமுறை ஏடுகளிலும் நூல்களிலும் பதிகந்தோறும் முதலிலும் முடிவிலும் "திருச்சிற்றம்பலம்" என்றெழுதப்பட்டிருப்பதையும் அச்சிடப்பட்டிருப்பதையும் காணலாம்.

வள்ளற்பெருமானும தமது பாடல்களை எழுதும்போது பதிக முதலிலும் ஈற்றிலும் "திருச்சிற்றம்பலம்" என் எழுதும் வழக்கமுடையவர் . இதனை அவர்கள் திருக்கரஞ்சாத்திய திருவேடுகளிற் காணலாம். மேலும் பெருமான் திருச்சிற்றம்பல ஞானிகட்கு எழுதிய இலக்கணக் கடிதத்தில் அவரது பெயரை மறை பொருள் வகையாற் குறிக்குமிடத்து.

> உணர்ந்தோரானியல் வகையவின்ன வென்றவற்றிற் பின்மொழி
> மதிக்குமுன்மொழி மறைக்கு முதலீறு விளங்க முடிப்பதாய பின்
> மொழியடைசார் முன்மொழி ஞாங்கர் விளஞங்கிய ஞானிகட்கு

எனக் குறித்துள்ள விடத்திலும் "திருச்சிற்றம்பலம்" என்னும் சொல்லின் இச்சிறப்பினை குறிப்பிட்டுள்ளமை காண்க.

சிவஞான முனிவரது வாழ்க்கையில் நிகழ்ந்த சுவையான் நிகழ்ச்சியொன்றும் ஈண்டறியத்தக்கது. வட்நூற் கடலுந் தமிழ்நூற் கடலுநிலை கண்டுணர்ந்த சிவஞான முனிவர் தாமியற்றிய காஞ்சிப் புராணத்தைக் காஞ்சியில் அரங்கேற்றினர். அரங்கேற்றத் தொடக்கத்தில் நூன் முதலிலுள்ள நடராசத்துதி படித்து முடிக்கப்பட்டவுடனேயே அவையிலிருந்த ஒருவர் எழுந்து தடைநிகழ்த்தினாா. காஞ்சிப்புராணம் பாடத்துவங்கியவர் முதலில் தலத்து இறைவனாகியா ஏகாம்பரேசரைத் துதித்துப் பாடாமல் சிதம்பரேசரைத் துதிக்காலாமா என்பதே அவரது மறுப்பு. இம்மறுப்பு பொருளற்றதென்றும் அற்பமானதென்றும் அவர் அறியாதவரல்லர். இருந்தும் ஏதாவது கூறித் தமது இருப்பையும் அறிவையும் விளக்கஞ் செய்ய வேண்டுமென்றும் கருத்தால் எழுந்து மறுத்துவிட்டார். இதனைக் கேட்டதும் சிவஞான முனிவரது மாணாக்கராகிய கச்சியப்பர் எழுந்து முனிவரை வணங்கி தடைக்கு விடை கூறத் தம்மை அனுமதிக்க வேண்டினார். அனுமதி பெற்றபின் அவையிலிருந்த தல ஓதுவரை அழைத்துத் தலப் தேவாரப் பதிகத்தை ஓதுமின் என்றார். ஓதுவாரும் அவைமுன் ஓதப் புகுந்தார். கச்சியப்பர் உடனே அவரைத் தடுத்தி நிறுத்தி, ஐயா! காஞ்சிபுரத் தேவாரத்தை

தொடங்குவானேன்? 'பிருதிவியம்பலம்' என்றல்லவா சொல்லித் தொடங்க வேண்டும் என்றார். அவையோர் வியப்புற்றனர். திருமுறைகளுள் எதனை ஓதினாலும் எங்கு ஓதினாலும், எத்தலத்துக்குரியதை ஓதினாலும் முதலில் திருச்சிற்றம்பலத்தை நினைந்து 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லி ஓதத் தொடங்குவது முறையன்றோ! என ஓதுவார் கூறினர். கச்சியப்பர் மறுத்தவரைக் காட்டி, இதனை அவர்க்குக் கூறும் என்றார். அந்தப்போலிப் புலவர் வாயடைத்துப் போய் வெட்கித் தலை குனிந்தார். அவையோர் மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தனர். அரங்கேற்றம் அதுமுதல் தடையின்றி நடந்தது. சிற்றம்பலத்தின் சிறப்பை அனைவரும் உணர்ந்தனர்.

இன்றும் சைவ நன்மக்கள் கடிதம் முதலியன எழுதும் போதும் தொடக்கத்தில் மேலே 'திருச்சிற்றம்பலம்' என்றெழுதியே தொடங்குவர். தலைமையும் முதன்மையும் ஆன இத்திருச்சிற்றம்பலத்தை முன்னிட்டே எதனையும் செய்யவேண்டும். திருச்சிற்றம்பலமே எங்கும் எதற்கும் முன்னிற்பது.

## ஆகாயத்தலம்

உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது. மண், நீர், தீ, வளி, வான் என்பன ஐம்பூதங்களாம். இவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றும் கூறப்பெறும். உலகம் ஐம்பூதங்களாலானதென்பதைத் தொல்காப்பியர்.

**நிலந்தீ நீர்வளி விசும்பொடு ஐந்துங்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின் -1589**

எனத் தொல்காப்பியம் மரபியலிற் கூறியுள்ளார். உயிர்களது உடம்புகளும் ஐம் பூதங்களின் சேர்க்கையால் ஆனவையே. 'அண்டத்திலுள்ளது பிண்டத்தில்' என்ற பழமொழியும் ஈண்டறியத்தக்கது.

ஐம் பூதங்களைப்பற்றித் தெளிவாகவும் நுட்பமாகவும் உணர்ந்த நமது பெரியோர்கள் ஒவ்வொரு பூதத்தின் பெயராலும் ஒரு தலத்தை ஏற்படுத்தினர். அவை பஞ்சபூதத்தலங்கள் எனப்படும். அவையாவன:

**மண்-பிருதிவித்தலம் - காஞ்சிபுரம், திருவாரூர்**

**நீர்-அப்புத்தலம் - திருவானைக்கா**

**தீ-தேயுத்தலம் - திருவண்ணாமலை**

**வளி-வாயுத்தலம் - திருக்காளத்தி**

**வான் - ஆகாயத்தலம்- சிதம்பரம்**

**கடல்விடம் நுகர்ந்த காசினி லிங்கம்**
**காஞ்சிமா நகருறை லிங்கம்**
**காவிரி வடபால் வருதிரு ஆனைக்**



RangaRakes tamilnavarasam.com

**காவினில் அப்புலிங் கமதாம்**
**வடதிசை அண்ணா மலையினில் லிங்கம்**
**வன்னியின் வடிவுகா ளத்தி**
**வாயுலிங் கமதாம் சிதம்பர லிங்கம்**
**மாசில் ஆகாயலிங் கமதாம்**

**-தில்லைக் கலம்பகம் 32**

காஞ்சிபுரத்தை மண் தலமாகக் கூறுவதே பெருவழக்கு. திருவாரூரையும் கூறுவதுண்டு. காஞ்சிபுரத்து லிங்கம் பிருதிவி லிங்கம். கம்பையாற்றங்கரையில் மண்ணால் லிங்கம் செய்து உமையம்மையார் வழிபட்டதாக வரலாறு. சுயம்புலிங்கம் என்பதும் உண்டு. திருவாரூரில் லிங்கம் புற்று வடிவு. புற்றிடங்கொண்டார் என்பது இறைவன் திருப்பெயர்.

நீர்த்தலமாகிய திருவானைக்காவில் அப்புலிங்கம். லிங்கத்தைச் சுற்றிச் தண்ணீர் ஊறிக்கொண்டேயிருக்கும். கோடை காலத்திலும் ஊற்று வற்றுவதில்லை. மழை காலத்தில் ஊற்றுப்பெருகி மூலத்தானத்தில் நீர் நிறைந்து லிங்கம் மூழ்குவதும் உண்டு. அக் காலங்களில் தண்ணீரை இறைத்து வெளியேற்றுவர்.{51}

{51. திருவானைக்காத் திருக்கோயில் மூலத்தானத்தில் எப்போதும் நீர் ஊறிக் கொண்டே இருப்பதன் காரணம் வருமாறு: காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடையே உள்ள தீவில் அமைந்துள்ள திருவரங்கமும் திருஆனைக்காவும் நீர் வளம் மிக்கன. காவிரியாறு பாய்ந்து வளப்படுத்தும் சோழ நாட்டுக்குப் பொன்னி நாடென்றும் நீர் நாடென்றும் பெயருண்டு. இந்நீர்நாட்டில் இருபெரிய ஆறுகளுக்கு இடையில் நிலமட்டத்தினும் தாழ்ந்த இடத்தில் எப்போதும் நீர் ஊறுவதான ஊற்றுள்ள இடத்தில் லிங்கம் நிறுவப்பட்டு, ஆனைக்காக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. ஊரினும், கோயில் பள்ளத்தில் உள்ளது. கோயிலினும் மூலத்தானம் பள்லத்தில் உள்ளது, இதுவே நீர் ஊறுவதற்கான காரணமாம். நெடுஞ்சாலையிலிருந்து கோயிலுக்குச் செல்லும் சாலை தாழ்ந்து சறுக்கலாகச் செல்லுகிறது. கோயிலின் கோபுரவாயிகள்தோறும் நாம் படிகளில் இறங்கிச் செல்லுகிறோம். மூலத்தானத்திற்குப் போகும்போது சில படிகள் இறங்குகிறோம். கணக்கிட்டுப் பார்ப்பின் ஊரின் நிலமட்டத்தைவிட மூலத்தானத்தின் மட்டம் ஒரு கிணற்றின் ஆழம் தாழ்வாகி இருப்பது தெரியும். யாம் திருவரங்கம் நகராட்சியில் நகரமைப்பு இன்ஸ்பெக்டராயிருந்தபோது திருவானைக்காவின் நிலமட்டங்களை அளவிட்டு-சர்வே (Contour Survey) செய்து-அறிந்தோம்.}

திருவண்ணாமலை லிங்கம் தீ லிங்கம். இறைவன் பேரொளிப் பிழம்பாக இங்கு விளங்குகிறார். திருமாலும் பிரமனும் அடி முடி காண முயன்ற வரலாறு அனைவரும் அறிந்ததே.

திருக்காளத்தியில் காற்று லிங்கம். மூலத்தானத்தில் லிங்கத்தினருகிலுள்ள விளக்கொன்றின் சுடர் மென்காற்றின் இயக்கத்தால் அசைவதுபோல அழகாக அசைந்து கொண்டிருப்பதனை இன்றுங் காணலாம்.



RangaRakes tamilnavarasam.com

சிதம்பரம் ஆகாயத்தலம். வெட்டவெளி. இங்கு இறைவன் வான் (ஆகாய) வடிவில் ஆகாய லிங்கமாக எழுந்தருளியுள்ளான். இதைக் குறிப்பதே சிதம்பரரகசியம்.

ஐம்பூதத் தலங்களின் அமைப்பு. தமிழ் ஞானிகளின் தத்துவ அறிவைக் காட்டுவதாகும். பூதங்களுள் நுண்மையானது ஆகாயம். அதன் வடிவாக விளங்குவது சிதம்பரம்.

## அனாகதத்தலம்

நமது உடலில் ஆறு ஆதாரங்கள் உள்ளன. அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பன. இதுபோன்றே உலகமாகிய விராட்புருடனுக்கும் ஆறாதாரங்களாக ஆறு ஊர்களைப் பெரியோர்கள் குறித்துள்ளனர். ஆறு ஆதாரங்களும் நம் உடலில் அவற்றின் இருப்பிடங்களும் ஆறாதாரத் தலங்களும் வருமாறு:

மூலாதாரம் - குதத்திற்கும் கோசத்திற்கும் நடு. 'எருவிடும் வாசற்கிருவரன் மேலே கருவிடும் வாசற் கிருவிரற் கீழே' என்பது திருமூலர் திருமந்திரம். உடம்பு அவரவர் கையால் எட்டுச் சாண். தொண்ணூற்றாரங்குலம். இதில் மேலே நாற்பத்தேழரை அங்குலமும், கீழே நாற்பத்தேழரை அங்குலமும் தள்ள, இடைநின்ற ஓரங்குலத்துள் உள்ளது மூலாதாரம். -காஞ்சிபுரம் (மண்)

சுவாதிட்டானம் -கோசத்திற்கும் நாபிக்கும் நடு - ஆனைக்கா(நீர்)

மணிபூரகம் -நாபி (கொப்பூழ்) -அண்ணாமலை(தீ)

அனாகதம் -இருதயம் -தில்லை (வான்)

ஆக்ஞை -புருவமத்தி -காசி

ஆறாதாரத் தலங்களில் ஐந்து, பஞ்ச பூதத்தலமாகவிருப்பது கருதற்குரியது. சிதம்பரம் இருதயத்தலமாக விருப்பதால் குகை, தகராகாசம், புண்டரீகபுரம் என்ற பெயர்களைப் பெற்றது.

## சபை-அம்பலம்

தமிழகத்தில் இறைவன் திருநடனம் புரியும் சபைகள் ஐந்து. அவை:

கனகசபை(பொன்னம்பலம்) - சிதம்பரம்

**ரஜிதசபை (வெள்ளியம்பலம்)-மதுரை.**

**தாமிரசபை -திருநெல்வேலி.**

**இரத்தின சபை -திருவாலங்காடு**



RangaRakes tamilnavarasam.com

**சித்திரசபை -திருக்குற்றாலம்.**

**குடதிசைஅதனில் மருவுகுற் றாலம்**
**கோதறு சித்திர சபையாம்**
**குற்றமில் குணக்கின் பழையனூர் மன்றம்**
**குலநவ ரத்னமன் றென்பார்**
**அடல்விடைப் பாகன்நெல்லையம் பதியில்**
**அம்பலம் தாம்பிர சபையாம்**
**ஆலவாய் மதுரை வெள்ளியம் பலமாம்**
**அணிதில்லைச் செம்பொனம் பலமே.**

**-தில்லைக்கலம்பகம், 32**

தமிழகத்தின் ஐம்பெருஞ் சபைகளுள் ஒன்றான சிதம்பரம் தனக்குள்ளும் ஐந்து சபைகளை உடையது. அவை சிற்சபை, கனகசபை, தேவசபை, நிருத்தசபை, இராஜசபை என்பனவாம்.

**சிற்சபை:** இது சிற்றம்பலம் எனப்படும். ஐந்து சபைகளுள் முதன்மையானதும் சிறந்ததும் இதுவே. இதுவே நடராசப் பெருமானின் மூலத்தானமாம். இச்சிற்சபையில் நடராசப் பெருமானுக்கு வலது புறத்தில் சிதம்பர ரகசியம் உள்ளது. உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூன்று நிலையிலும் இறைவன் இச்சிற்சபையிற் காட்சியளிக்கிறார். உருவம் (சகளம்)-நடராசர். அருவம்(நிட்களம்) -சிதம்பர ரகசியம். அருவுருவம் (சகள நிட்களம்) -படிகலிங்கம். படிக லிங்கத்தை அழகிய சிற்றம்பலமுடையார் என்பர். இவர்களேயன்றி இரத்தின சபாபதியும், சுவர்ணகால பைரவரும் இங்கெழுந்தருளியுள்ளனர்.

**கனகசபை: இ**து சிற்றம்பலத்தின் முன் மண்டபம். சிற்சபைக்கு எதிரே உள்ளதால் எதிரம்பலம் என்றும் கூறப்பெறும். இங்கே நின்று தான் நாம் நடராசப் பெருமானை வழிபடுகிறோம். சிற்றம்பலத்தைப் போல் இதுவும் தெற்கு நோக்கியதே. இதன் வாயிற்படிகள் நேர்ப்புறமாக (தெற்குப் பக்கம்) இல்லாமல் பக்கங்களில் கிழக்கு மேற்கு ஆகிய இருபுறமும் அமைந்துள்ளமை சிறப்பாகும். இங்கு நாள் தோறும் காலையில் (10 மணியளவில்) அழகிய சிற்றம்பலமுடையார்க்கும் இரத்தின சபாபதிக்கும் அபிடேக ஆராதனைகள் நடைபெறும். இக் கனக சபையிற்றான் ஆண்டில் நான்குமுறை நடராசப்பெருமான் திருமஞ்சனங் கொண்டருளுகிறார்.

**தேவசபை**: இது பேரம்பலம் எனப்படும். இங்கு உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். இதுவே தீட்சிதர்கள் கோயில் நிர்வாகம் பற்றிக் கூடிப் பேசுமிடம்.

**நிருத்தசபை:** இது தேர் அம்பலம் எனப்படும். சித்திர வேலைப்பாடமைந்த தூண்களையும் குதிரைகள் பூட்டிய தேர் போன்ற அமைப்பையும் உடைய இம் மண்டபம் நடராசப்பெருமான் திருமுன்னர் கொடி மரத்தின் தென்பால் உள்ளது.



RangaRakes tamilnavarasam.com

**இராஜசபை**: இது ஆயிரக்கால் மண்டபமாகும். இங்கு நடராசப பெருமான் ஆண்டுக்கு இரு முறை (மார்கழி-திரு ஆதிரை, ஆனி-உத்தரம்) எழுந்தருளித் திருமஞ்சனம் கொண்டருளுகிறார். ஆருத்ரா தரிசனமும் ஆனித்திருமஞ்சன தரிசனமும் நடைபெறுவது இம்மண்டபத்திலேயேயாகும். சேக்கிழார், தமது பெரிய புராணத்தை ஆயிரக்கால் மண்டபமாகிய இந்த ராஜ சபையிலேயே அரங்கேற்றினார் என்பர்.

சிற்சபை, கனகசபை, தேவசபை, நிருத்தசபை, இராஜசபை ஆகிய இவ்வைந்தையும் பஞ்சபூதச் சபைகள் என அடிகள் குறித்தருளுவர்.

| | | |
|---|---|---|
| **மண்** | - | **கனகசபை** |
| **நீர்** | - | **இராஜசபை** |
| **தீ** | - | **தேவசபை** |
| **வளி** | - | **நிருத்தசபை** |
| **வான்** | - | **சிற்சபை** |

என்பது அடிகளின் உபதேசக் குறிப்பு. இவ்வைந்திலும் சிற்சபை சிறந்தது. இது ஆகாயச் சபையன்றோ? நடராசப்பெருமான், சபைக்கு நாயகராதலின் சபாபதி என்றும் சபாநாதர் என்றும் சபாநாயகர் என்றும் வழங்கப்படுவார்.

## <u>தில்லைத்திரு நடனம்</u>

**உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.**

**ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவு மாகிச்**
**சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்**
**பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்**
**போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.**

**கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி**
**அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின்மேலாம்**
**சிற்பரவியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று**
**பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.**

**-பெரியபுராணம் 1, 350,351**



RangaRakes tamilnavarasam.com

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே

அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

-திருவிசைப்பா1

இறைவனைக் கூத்தப்பிரானாக, ஆடல் வல்லானாக, தாண்டவராயனாகநம் பண்டைத் தமிழர் கண்டனர். இறைவனது திருக்கூத்து எங்கும் நீக்கமற நிறைந்திருப்ப தென்பதனைத் திருமூலர்,

எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருள் தன்விளை யாட்டதே -2722

எனத் தமது திருமந்திரத்தில் அருளுகின்றார். இறைவன் ஆடியருளிய தாண்டவங்கள் பலவாகும். அவற்றுள் ஆனந்தத் தாண்டவம் சிறந்தது. அது தில்லையில் ஆடியருளப் பெற்றது. எல்லாத் தாண்டவங்களையும் பற்றிக் கூறுதற்கு இடமின்மையின் இங்கு ஆனந்தத் தாண்டவத்தை மட்டும் காண்போம்.

இறைவன் ஐந்தொழில் செய்கின்ற நடனம் ஆனந்த நடனம். ஐந்தொழில்களாவன: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல். இவற்றை வடமொழியில் சிருட்டி, திதி, சங்காரம், திரோபாவம் அனுக்கிரகம் என்பர். இவ்வைந்தொழில்களும் ஆனந்தத் தாண்டவத்தில் ஒருங்கே நிகழ்கின்றன என்பதைத் திருமூலர்:

அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையிற்சங் காரம்
அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே. -2799

எனத் திருமந்திரத்திலும், திருவதிகை மனவாசகங் கடந்தார்

தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு. -35

என உண்மை விளக்கத்திலும் அருளுகின்றனர்.



RangaRakes tamilnavarasam.com

இதனைக் குமர குருபர சுவாமிகள் தமது சிதம்பர மும்மணிக்கோவையுள்,

**பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்**
**நாமநீர் வரைப்பில் நானில வளாகமும்**
**ஏனைப் புவனமும் எண்ணீயிங் குயிரும்**
**தானே வகுத்ததுன் தமருகக் கரமே**
**தனித்தனி வகுத்த சராசரப் பகுதி**

**அனைத்தையும் காப்பதுன் அமைத்தபொற் கரமே**
**தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலும்**
**மாற்றுவது ஆரழல் வைத்ததோர் கரமே**
**ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் மறைத்துநின்று**
**ஊட்டுவ தாகும்நின் ஊன்றிய பதமே**
**அடுத்தஇன் னுயிர்கட்கு அளவில்பே ரின்பம்**
**கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே** -2

என அருளுவர்.

கூத்தப்பெருமானது துடிசேர் கரம், அபயகரம், தீயேந்தியகரம், ஊன்றிய திருவடி, தூக்கிய திருவடி ஆகிய ஐந்தும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்கின்றன.

படைத்தல் (சிருட்டி)-துடிசேர் கரம்

**'அரன்துடி தோற்றம் - திருமந்திரம்.**
**'தோற்றம் துடியதனில்'- உண்மை விளக்கம்**
**'வகுத்ததுன் தமருகக்கரமே' - சிதம்பர மும்மணிக்கோவை**

துடி, தமருகம்-உடுக்கை. உடுக்கையேந்திய கரம் படைத்தல் தொழிலைச் செய்கிறது. உடுக்கை நாத தத்துவத்தைக் குறிக்கும். ஆகாயம் சத்த தன்மாத்திரையினின்றும் தோன்றியது. ஆகாயமாகிய அம்பலத்தில் நடமியற்றும் பெருமான் சத்தத்தின் அறிகுறியாக, நாத தத்வத்தின் அறிகுறியாக, உடுக்கையை ஏந்தியிருக்கிறார்.

**காத்தல்(திதி) -அபயகரம்**

**'அமைத்தல் திதியாம்' - திருமந்திரம்**

**'தோயும் திதி அமைப்பில்' - உண்மை விளக்கம்**

**'அனைத்தையும் காப்பதுன் அமைத்த பொற்கரமே'**

**-சிதம்பர மும்மணிக்கோவை**



RangaRakes tamilnavarasam.com

அமைத்தல், அமைப்பில், அமைத்த பொற்கரம்-அபயஹஸ்தம், அபயகரம், வலக்கை அபய முத்திரை காட்டுகிறது. இது அபயகரம், அபயஹஸ்தம், அமைத்த கரம் எனப்படும். இடக்கை, வீசிய நிலையில் தூக்கிய திருவடியைக் காட்டுவதாக இருக்கும். இந்த வீசிய கரம் கஜஹஸ்தம் என்றும் சொல்லப்படும். அபயங் காட்டுவதான அமைத்த கரம் காத்தல் தொழிலைச் செய்கிறது.

**அழித்தல்(சங்காரம்)-தீயேந்திய கை**

**'அங்கிதன்னில் அறையில் சங்காரம்'**

**-திருமந்திரம்**

**'சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்'**

**-உண்மை விளக்கம்.**

**'அடங்கலும் மாற்றுவது ஆரழல்வைத்ததோர் கரமே'**

**-சிதம்பர மும்மணிக்கோவை**

அங்கி, அழல்-தீ. இடக்கைகளுள் ஒன்று தீச் சுடரை ஏந்தியிருக்கும். இத் தீயேந்தியகரம் அழித்தல்தொழிலைச் செய்வது.

**மறைத்தல்(திரோபாவம்) -ஊன்றிய திருவடி.**

**'உற்றணைப்பில் அமருந்திரோதாயி'**

**-திருமந்திரம்.**

**'ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதம்'**
**-உண்மை விளக்கம்.**

**'மறைத்து நின்று ஊட்டுவதாகும் நின் ஊன்றியபதமே'**

**-சிதம்பர மும்மணிக்கோவை.**

நடராசப்பெருமான் வலக்காலை ஊன்றி நின்று ஆடியருளுகின்றார். ஊன்றிய திருவடியாகிய வலக்கால் மறைத்தல்தொழிலைச் செய்கின்றது.

**அருளல் (அனுக்கிரகம்)-தூக்கிய திருவடி.**

**'அடி என்றும் அனுக்கிரகம்'**

**-திருமந்திரம்.**

**'முத்தி நான்ற மலர்ப்பதத்தே'**

**-உண்மை விளக்கம்.**

**'அளவில் பேரின்பம் கொடுப்பது முதல்வ நின் குஞ்சிபதமே'**

**-சிதம்பர மும்மணிக்கோவை**

பெருமான் இடதுகாலைத் தூக்கி ஆடியருளுகின்றார். இத் தூக்கிய திருவடி குஞ்சிதபாதம் எனப்படும். (நான்ற மலர்ப்பாதம்-தூக்கித் தொங்கவிடப்பட்ட கால்). தூக்கிய திருவடியாகிய இடக்கால் அருளல் தொழிலைச் செய்கிறது.

ஆனந்த நடனம் ஐந்தொழில்களையும் செய்வதாக அமைவதால் பஞ்சகிருத்திய நடனம் எனப்படும். ஐந்தொழில் நடனமாகிய இவ்வானந்தத் தாண்டவத்தில் ஐந்தெழுத்து மறையும் அடங்கியிருப்பதால் பஞ்சாக்கர நடனமும் ஆகும். பஞ்சாக்கர நடனத்தை உண்மை விளக்க ஆசிரியர் மனவாசகங் கடந்தார் அருளுமாறு:

**எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே**
**நட்டம் புதல்வா நவிலக்கேள்-சிட்டன்**
**சிவாயநம என்னும் திருஎழுத்தஞ் சாலே**
**அவாயமற நின்றாடு வான்**

**-உண்மை விளக்கம் 31**

பஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு இறைவன் ஆடியருளுவான் என்று கூறும் ஆசிரியர் அடுத்த இரண்டு செய்யுட்களில் இறைவனது தூல, சூக்குமபஞ்சாக்கர நடனங்களைக் கூறியருளுகிறார்.

**ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே**
**நாடும் திருவடியி லேநகரம்-கூடும்**
**மகரம் உதரம் வளர்தோள் சிகரம்**
**பகருமுகம் வாமுடியப் பார்**

**-உண்மை விளக்கம் 32**

| | | |
|---|---|---|
| **திருவடி** | - | **ந** |
| **உதரம்(வயிறு)** | - | **ம** |
| **தோள்கள்** | - | **சி** |
| **முகம்** | - | **வா** |
| **முடி** | - | **ய** |



RangaRakes tamilnavarasam.com

இது தூலபஞ்சாக்கர நடனம். நமசிவாய என்பது தூலபஞ்சாக்கரம்.

**சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்**
**ஆர்க்கும் யகரம் அபயகரம்-பார்க்கில் இறைக்(கு)**
**அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்**
**தங்கும் மகரமது தான்**

**-உண்மை விளக்கம் 33**

| | | |
|---|---|---|
| **துடி(உடுக்கை)** | - | **சி** |
| **வீசியகரம்** | - | **வா** |
| **அபயகரம்** | - | **ய** |
| **தீச்சுடர்** | - | **ந** |
| **ஊன்றிய திருவடி** | - | **ம** |

இது சூக்கும பஞ்சாக்கர நடனம். சிவாயநம என்பது சூக்கும பஞ்சாக்கரம். நமசிவாய என்னும் தூலபஞ்சாக்கர நடனம் ஊன நடனமும், சிவாயநம என்னும் சூக்கும பஞ்சாக்கர நடனம் ஞான நடனமும் ஆகும். தூலசூக்கும பஞ்சாக்கரங்களின் வேறுபாடு முதலியவற்றை விரிந்த நூல்களிற் காண்க. இவண் விரிப்பிற் பெருகும்.

**திருக்கூத்து முறைமையாவது:**

**மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்**
**சாய அமுக்கிஅருள் தானெடுத்து-நேயத்தால்**
**ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்**
**தானெந்தை யார்பரதம் தான்.**

**-உண்மை விளக்கம் 36**

உடுக்கை ஏந்திய திருக்கையால் மாயையை நீக்கி, அனல் ஏந்திய திருக்கரத்தால் வல்வினையைச் சுட்டு, ஊன்றிய திரு அடியால் மலம் மேலிடமால் அமுக்கி, தூக்கிய திருஅடியால் அருள்தான் எடுத்து, நேயத்தால் அமைத்த திருக்கிரத்தால் ஆன்மாவை ஆனந்த வெள்ளத்தில் அழுத்தல் எம் தந்தையார் திருக்கூத்து முறைமை ஆம்.

## திருக்கூத்துத் தரிசனம்

பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலிய பழம்பெரும் முனிவர்கள் தில்லையில் திருநடனங் கண்டு இன்புற்றோராவர். இனித் திருமூலர் முதலிய ஞானிகள் திருக்கூத்துத் தரிசன அனுபவங்களைக் கூறும் கூற்றுகளைக் காண்போம்.

## திருமூலர்

**விம்மும் வெருவும் விழும்எழும் மெய்சோருந்**
**தம்மையும் தாமறி யார்கள் சதுர்கெடுஞ்**
**செம்மை சிறந்த திருஅம் பலக்கூத்துள்**
**அம்மலர்ப் பொற்பாதத் தன்புவைப் பார்கட்கே.**

**-திருமந்திரம் 2744**

பொருள்: திருவம்பலத்துள் கூத்தாடுந் திருவடிகளில் அன்பு வைப்பவர்கள், விம்முவார்கள், வெருவுவார்கள், விழுவார்கள், எழுவார்கள், மெய் சோர்வார்கள், தம்மைத்தாம் அறியார்கள்.

**தேட்டறுஞ் சிந்தை திகைப்பறும் பிண்டத்துள்**
**வாட்டறுங் கால்புந்தி யாகி வரும்புலன்**
**ஒட்டறு மாசை அறுமுளத் தானந்த**
**நாட்ட முறுக்குறு நாடகங் காணவே.**

**-திருமந்திரம் 2745**

பொருள்: நாடகங் காணவே-நடனத்தைக் காணின், தேட்டறும்-பொருளாசை நீங்கும், சிந்தை திகைப்பறும்-அச்சம் நீங்கும், பிண்டத்துள் வாட்டறும்-உடல் வாட்டம் நீங்கும், கால்புந்தியாகி வரும் புலன் ஒட்டறும்-ஐம்புலனும் அடங்கும், ஆசை அறும்-ஆசை கெடும், உளத்து ஆனந்த நாட்டம் முறுக்குறும்-உள்ளத்தில் பேரின்ப விருப்பம் முதிரும்.

**புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோற்**
**களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்**
**துளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்**
**ஒளிக்குளா னந்தத் தமுதூறும் உள்ளத்தே.**

**-திருமந்திரம் 2778**

பொருள்: புளியைக் கண்டவர்களுக்கு நாக்கில் நீர் ஊறுவது போல திருக்கூத்துக் கண்டவர்களுக்குக் கண்களில் அருட்கண்ணீர் துளிக்கும், நெஞ்சு உருகும், உள்ளத்தே ஆனந்த அமுது ஊறும்.

திருமந்திரம் ஒன்பதாந் திருக்கூத்துத் தரிசனம் 82 மந்திரங்களும் ஈண்டு உணர்தற்குரியன. அவை சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றிலைகூத்து, அற்புதக்கூத்து, என்னும் உள் தலைப்புகளையும் பெற்றுள்ளன.



RangaRakes tamilnavarasam.com

எம்பெருமான் தில்லையில் திருநடனஞ் செய்கின்ற அழகு, தம்மைக் கண்டு தொழ வருவாரை "என்று வந்தாய்" என்று கேட்டு உபசரிப்பது போன்றுள்ளதென்று நாவுக்கரசர் கூறும் நயம் அனுபவத் திருவாக்காகும்.

**ஒன்றியிருந்து நினைமின்கள்**
**உந்தமக்கு ஊனமில்லை**
**கன்றிய காலனைக் காலாற்**
**கடிந்தான் அடியவற்காச்**
**சென்று தொழுமின்கள் திலையுள்**
**சிற்றம் பலத்துநட்டம்**
**என்றுவந் தாய் என்னும் எம்பெரு**
**மான்றன் திருறிப்பே.**

-(4-81-2)4939

**குனித்த புருவமும் கொவ்வைச்செவ்**
**வாயில் குமின்சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போல்**
**மேனியில் பால்வெண்ணணீறும்**
**இனித்த முடைய எடுத்தபொற்**
**பாதமும் காணப்பெற்றால்**
**மனித்த பிறவியும் வேண்டுவதே**
**இந்த மாநிலத்தே**

-(4-81-2)4941

திருநடனத்தை காணப்பெறுவதனால் உலகில் மனிதப் பிறவியும் வேண்டுவதே என அருளும் நாவுக்கரசர் அடுத்த திருப்பாட்டில் 'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி, மதித்திடுமின்' என்றும் 'தில்லையம்பலத்து கூத்தனுக்கு ஆட்பட்டிருப்பதன்றோ நந்தம் கூழைமையே' என்றும் அருளுவர்.

**வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்**
**பார்த்தற்குப்பாசு பதமருள் செய்தவன் பத்தருள்ளீர்**
**கோத்தன்று முப்புரந் தீவளைத் தான் தில்லை யம்பலத்துக்**
**கூத்தனுக் காட்பட்டிருப்பதன்றோநந்தங் கூழைமையே.**

**(கூழைமை-கடமை)**

-(4-81-5)4942

**சேக்கிழார்**

ஆளுடைய நம்பிகளாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லைத் திருக்கூத்தைக் கண்டபோது அடைந்த அனுபவத்தைச் சேக்கிழார் பெருமான்.

**ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள**
**அளப்பருங் கரணங்கள் நான்கும்**
**சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்**



RangaRakes tamilnavarasam.com

**திருந்துசாத் துவிகமே யாக**
**இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த**
**எல்லையில் தனிப்பெருங் கூத்தின்**
**வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து**
**மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்**

**-252**

எனத் திருத்தொண்டர் புராணத்துள் அருளுவர்.

**நடராச வடிவம்**

எல்லாத் திருவுருவங்களிலும் நடராசத் திருவுரு சிறப்புவாய்ந்தது. இதன் கலைச்சிறப்பில் மேலைநாட்டவரும் சிந்தையைப் பறிகொடுத்துள்ளனர். நடராசத்திருவுரு கலைச்சிறப்பால் மட்டுமின்றித் தத்துவச் சிறப்பாலும் உயர்ந்தது. பேரா இயற்கையின் ஓயா இயக்கமே ஆண்டவனின் திருக்கூத்து. இத்திருக்கூத்தின் தத்துவங்களைக் காட்டுவதே நடராச வடிவம்.

பனித்த சடை-அதில் விளங்கும் பிறை, கங்கை, கொக்கிறகு, வெண்தலை-முக்கண்-குனித்தபுருவம்-கொவ்வைச் செவ்வாய், அதிற்குமிண் சிரிப்பு-துடிவைத்த கை-அழலேந்திய கை-அபயகரம்-வீசியகரம்-எடுத்த பொற்பாதம்-ஊன்றியதிருவடி-பவளமேனி, அதிற்பால் வெண்ணீறு, பாம்புகள்-மிதியுறும் முயலகன் - சுற்றியுள்ள திருவாசி-இவையே நடராச வடிவாம்.

நடராச வடிவத்தில் திருவாசி ஓங்காரத்தைக் குறிப்பது. திருவாசியிலுள்ள சுடர்கள் (தீக்கொழுந்துகள்) எழுத்துக்களாம்.

**ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்**
**நீங்கா எழுத்தே நிறைசுடராம்-ஆங்காரம்**
**அற்றார் அறிவர்அணி அம்பலத்தான் ஆடலிது**
**பெற்றார் பிறப்பற்றார் பின்.**

**-உண்மை விளக்கம், 34**

மற்ற திருவுருவங்களில் திருவாசி தனியாக இருக்கும். கூத்தப்பெருமான் திருவுருவில் திருவாசி திருவுருவோடு சேர்ந்தேயிருக்கும். இவ்வாறு தத்துவத்தாலும் கலைச்சிறப்பாலும் சிறந்த இந்நடராச வடிவம் தமிழ்நாட்டிற்கே உரியது. நடராச வடிவத்தைக் கண்டவர்கள் தமிழர்களே. வடநாட்டுக் கோயில்களில் நடராசர் திருவுருவம் இல்லை. சபைகள் ஐந்தும் தென்றமிழ் நாட்டிலேயே இருப்பதும் கருதத்தக்கது.

**தென்தில்லை மன்றினுள் ஆட போற்றி**
**தென்னாடுடைய சிவனே போற்றி**


RangaRakes tamilnavarasam.com

**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.**

**-திருவாசகம்**

**ரகசியம்**

இதன் தத்துவமும் சிறப்பும் முன்னரே இந்நூல் 10-11 பக்கங்களில் கூறப்பட்டுள்ளன.

**இரு சமயக் கடவுள் இருப்பு**

தில்லை சிவத்தலத்தோடு வைணவத்தலமும் ஆகும். மயர்வற மதி நலம் அருளப்பெற்ற ஆழ்வார்களாலே மங்களாசாசனஞ் செய்யப் பெற்ற நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளுள் தில்லையும் ஒன்று. இங்கு நடராசப் பெருமானோடு கோவிந்தராசப் பெருமாளும் எழுந்தருளியிருக்கிறார். கோவிந்தராசர் எழுந்தருளியுள்ள இடம் திருச்சித்ரகூடம் எனப்படும். தில்லைத் திருச்சித்ரகூடத்தைக் குலசேகரப் பெருமாளும் திருமங்கை யாழ்வாரும் மங்களாசாசனஞ் செய்துள்ளனர். குலசேகரப் பெருமாள் (741-751)11 பாசுரங்கள், திருமங்கையாழ்வார் (1158-1177,2674) 21 பாசுரங்கள், ஆகப் பாசுரங்கள் 32.

**அங்கணெடுமதிள் புடைசூழயோத்தியென்றும்**
**அணிநகரத் துலகனைத்தும்விளக்கும்சோதி**
**வெங்கதிரோன்குலத்துக்கோர் விளக்காய்த்தோன்றி**
**விண்முழுதுமுய்யக்கொண்டவீரன்றன்னை**
**செங்கணெடுங்கருமுகிலையிராமன்றன்னைத்**
**தில்லைநகர்த்திருச்சித்ரகூடத்தன்னுள்**
**எங்கள் தனிமுதல்வனையென்பெருமான் றன்னை**
**என்றுகொலோகண் குளிரக்காணுநாளே,**

**-குலசேகரர் 741**

**ஊன்வாடவுண்ணாதுயிர்காவலிட்டே**
**உடலிற்பிரியாப்புலனைந்தும்நொந்து**
**தாம்வாடவாடத்தவம் செய்யவேண்டா**
**தமதாஇமையொருலகாளகிற்பீர்**
**கானாடமஞ்ஞைக்கணமாடமாடே**
**கயலாடுகானீர்பழனம்புடைபோய்**
**தேனாடமாடக்கொடியாடுதில்லைத்**
**திருச்சித்ரகூடம்சென்றுசேர்மின்களே.**

**-திருமங்கை, 1158**

திவ்யதேசத்தின் பெயர்: திருச்சித்ரகூடம், எம்பெருமான்: கோவிந்தராசர், பிராடியார்: புண்டரீகவல்லி, திருமுகம்: கிழக்கு நோக்கியது, விமானம்: சாத்வீக விமானம், தீர்த்தம்: புண்டரீக தீர்த்தம், சிறப்பு: சக்ரவர்த்தித் திருமகனுக்கு வடநாட்டுச் சித்ரகூடத்தைப் போலவே இத் தில்லைச் திருச்சித்ரகூடமும் ப்ரீதி.



RangaRakes tamilnavarasam.com

திருச்சித்ரகூடமாகிய கோவிந்தராசர் சந்நிதி, நடராசர் எழுந்தருளியுள்ள சிற்சபைக்கு அருகிலேயே கனகசபைக்கு எதிரில் சற்று மேற்கே தள்ளி அமைந்துள்ளது. நடராசர் சந்நிதி தெற்கு நோக்கியது. கோவிந்தராசர் சந்நிதி கிழக்கு நோக்கியது. கோவிந்தராசர் சந்நிதிக் கெதிரே வடக்குநோக்கி நின்றால் இருவரையும் ஒருசேரத் தரிசிக்கலாம்.

தில்லையம்பலத்தெதிரே திருமால் கிடந்த திருக்கோலத்தில் காட்சியளிப்பதனை மாணிக்கவாசகர் தமது திருக்கோவையாருள், தில்லையம்பல முன்றில் மாயவன் வரங்கிடப்பதாகக் கூறுவது அழகிது.

**புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா**
**திரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு**
**கரங்கடந் தானொன்று காட்டமற் றாங்கதுங் காட்டிடென்று**
**வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றிலம் மாயவனே.**

**-திருக்கோவையார் 86**

ஆதியில் தில்லை சிவத்தலமாகவே இருந்தது. திருமாலின் திருவுருவம் அங்கெழுந்தருளுவிக்கப் பெறவில்லை. கி.பி.எட்டாம் நூற்றாண்டில் நந்திவர்ம பல்லவ மன்னன் II தில்லையம்பல முன்றிலில் கோவிந்தராசர் திருவுருவத்தை நிறுவினான். முதலில் அத்திருவுரு திண்ணையொன்றின்மீதே நிறுவப்பெற்றது. நந்திவர்மன் வைணவபக்தன். காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோயிலைக் கட்டியவன் இவனே. திருச்சித்ரகூடம் பல்லவ மன்னானல் ஏற்படுத்தப்பட்டதென்பது.

**பைம்பொன்னுமுத்தும்மணியும்கொணர்ந்து**
**படைமன்னவன்பல்லவர்கோன்பணிந்த**
**செம்பொன்மணிமாடங்கள்சூழ்ந்ததில்லைத்**
**திருச்சித்ரகூடம்சென்றுசேர்மின்களே**
-1160

என்னும் திருமங்கையாழ்வார் பாசுரத்தாலும் அறியப்பெறும். முற்காலத்தில் தில்லை மூவாயிரவரே கோவிந்தராசரையும் பூசித்து வந்தனர். இவ்வுண்மை.

**செந்தளிர்வாய்மலர் நகைசேர்செழுந்தண்சோலைத்**
**தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்**
**அந்தணர்களொருமூவாயிரவரேத்த**
**அணிமணியாசனத்திருந்தவம்மான்றானே.** **-742**

என்னும் குலசேகராழ்வார் பாசுரத்தாலும்

**மூவாயிர நான்மறையாளர் நாளும்**
**முறையால்வணங்கஅணங்காயசோதி**
**தேவாதிதேவன் திகழ்கின்றதில்லைத்**
**திருச்சித்ரகூடம்சென்றுசேர்மின்களே.**



RangaRakes tamilnavarasam.com

-1165

என்னும் திருமங்கையாழ்வார் பாசுரத்தாலும் நன்கறியப்படும்.

கி.பி.12-ஆம் நூற்றாண்டில் தில்லைத் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்த இரண்டாம் குலோத்துங்க சோழன் கோவிந்தராசப் பெருமாளைப் பெயர்த்துக் கடலில் எறிந்துவிட்டான். ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப்பரணி, குலோத்துங்க சோழனுலா, இராசராசசோழனுலாக்களில் இச்செய்தி குறிப்பிடப்பெறுகிறது. திருமால் அவரது முன்னைய இடமாகிய கடலுக்கே அனுப்பப்பட்டார் என்று இவை கூறுகின்றன.

**தில்லைத் திருமன்ற முன்றிற் சிறுதெய்வக்**
**தொல்லைக் குறும்பு தொலைத்தெடுத்து-**

**-குலோத்-உலா, 39**

**பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பெறிந்து**
**முன்னிற் கடலகழின் மூழ்குவித்த-சென்னி**

**-இராச-உலா, 33**

**முன்றிற் கிடந்த தடங்கடல்போய்**
**முன்னைக் கடல்புகப் பின்னைத்தில்லை**
**மன்றிற் கிடங்கண்ட கொண்டன்மைந்தன்**
**மரகத மேருவை வாழ்த்தினவே.**

**-தக்கயாகப் பரணி 777**

தில்லையினின்றும் கோவிந்தராசர் அகற்றப்பட்ட இச்செய்தியைக் குருபரம்பரை, பிரபன்னாமிர்தம், வாசுதேவ சரிதை இராமனுஜ திவ்யசரிதை ஆகிய வைணவ நூல்களும் கூறுகின்றன.

நானூறு ஆண்டுகள் தில்லையில் கோவிந்தராஜர் வழிபாடு இல்லாதிருந்தது. பின்னர் 16-ஆம் நூற்றாண்டில் விஜயநகரமன்னர் அச்சுதராயர் காலத்தில் கோவிந்தராஜர் மீண்டும் நிறுவப்பெற்றார். வைகானச முறைப்படி பூசைகள் ஏற்படுத்தப்பட்டன. செஞ்சி நாயக்கர் மன்னான கிருஷ்ணப்ப நாயக்கன் திருச்சித்ர கூடத்திற்குச் சில திருப்பணிகள் தொடங்கிச் செய்தபோது சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் பூசல்கள் உண்டாயின. கிருஷ்ணப்ப நாயக்கன் திருச்சித்ரகூடத்தின் எதிரே கருடத்தூணை நிறுவினான். தீக்ஷிதர்கள் நிறுவலாகாதென்றனர். மீறி நிறுவப்படின், தங்களிற் பலர் கோபுரத்திலேறிக் கீழே குதித்து இறப்பதாகக் கூறினர். இவ்வச்சுறுத்தலுக்கு மன்னன் செவி சாய்க்க வில்லை. இருபது பேர் கோபுரத்திலேறி வீழ்ந்து உயிர் நீத்தனர். மன்னன் கோபமுற்று சண்டையிருவோருள் மற்றுமுள்ளவரைக் கொல்ல உத்தரவிட்டான். அவர்கள் அங்குமிங்கும் ஓடி ஒளிந்தனர். ஒரு பெண் தன் கழுத்தைத் தானே அறுத்துக்கொண்டு செத்தாள். இந்நிகழ்ச்சிகளை 1597-இல் சிதம்பரம் வழியாக



RangaRakes tamilnavarasam.com

யாத்திரை செய்த பிமெந்தா என்னும் பாதிரியார் (Father N.Pimenta) எழுதியுள்ளார்.

சைவ வைணவப் பூசலொன்றால் திருவாவடுதுறைத் தம்பிரான் ஒருவர் வீரசைவராக மாறும்படி நேரிட்டது. குடந்தையிற் பிறந்த சிவப்பிரகாசர் என்பார் (பின்னாளில் சித்தர் சிவப்பிரகாசர்) திருவாவடுதுறை மடத்தில் தீக்கையும் துறவும் பெற்றுத் தம்பிரானாயிருந்தார். அது காலை தில்லையில் வைணவர் முறைகடந்து நடந்தனர். சைவர்கள் திருவாவடுதுறை ஆதீனத் தலைவரிடம் விண்ணப்பித்தனர். ஆதினத் தலைவர், சிவப்பிரகாசரைத் தில்லைக்கு அனுப்பினார். தில்லை சென்று நிலையை அறிந்த சிவப்பிரகாசர் அவ்வட்டத்தின் அதிகாரியாக வேலூரிலிருந்த லிங்கண்ணாவைக் காண வேலூர் சென்றார். லிங்கண்ணா பழுத்த வீரசைவர். அவருக்கு உவப்பாயிக்குமென்பதால் சிவப்பிரகாசர் லிங்கதாரணம் செய்துகொண்டு வீர சைவத் திருக்கோலத்தில் சென்று தாம் வந்த காரியத்தை முடித்துக்கொண்டார். பின்னர், திருவாவடுதுறை திரும்பியபோது, இவர் வீரசைவக் கோலம் பூண்டு விட்டதனைக் கண்ட ஆதீன கர்த்தர் இதுவும் திருவருட்செயல் எனக்கருதித் தனிமடம் ஒன்றமைத்துக்கொண்டு தொண்டு செய்யக் கட்டளையிட்டார். சிவப்பிரகாசரும், சித்தர் சிவப்பிரகாசர் என்னும் பெயருடன் இறுதி வரை வீரசைவத் துறவியாகவே விளங்கி வீடு பெற்றார். இவ்வாறு சித்தாந்த சைவத் துறவி யொருவர் அகப்புறச் சமயமாகக் கருதப்படும் வீரசைவ சமயத்தைச்சார நேரிட்டமை தில்லைச் சைவ வைணவப் பூசலால் ஆகும். இவர் தலைமையில் அமைந்ததே துறையூர் வீர சைவ மடம்.

அக்காலத்தில் சிதம்பரத்தில் சைவ வைணவத் தகராறுகளுக்குக் குறைவேயில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் பூசல்கள் பல நடந்தன. இப்பூசல்களில் யார் பக்கம் முறையானது என்று கூறுவதற்கில்லை. இரு சாராருமே அவ்வக் காலங்களில் முறை தவறி நடந்து பூசலை விளைவித்திருக்கின்றனர். 8-ஆம் நூற்றாண்டில் பல்லவ மன்னனால் ஏற்படுத்தப்பெற்று, 12-ஆம் நூற்றாண்டில் பிற்காலச் சோழ மன்னனால் அப்புறப்படுத்தப்பட்டு, நானூறாண்டு காலம் வழிபாடின்றிக் கிடந்து 16-ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னனால் மீண்டும் நிறுவப்பெற்றுப் 17-ஆம் நூற்றாண்டில் பரப்பி (விஸ்தரித்து)க் கட்டப் பெற்ற திருச்சித்ரகூடம் இறுதியாக 1934-ஆம் ஆண்டில் செட்டி நாட்டரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் பெருந் திருப்பணி செய்யப்பெற்று இப்போதுள்ளவாறு புதுப்பிக்கப்பட்டது.

### திருமுறைகளின் மூல ஏடுகள் வைக்கப்பெற்றிருந்தமை

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் முற்பாதியில் இருந்தவர்கள். சுந்தரமூர்த்திகள் இவர்களுக்குப் பின் ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் விளங்கியவர். இம் மூவரும் தலங்கள் தோறும் சென்று தேவாரப்பதிகங்களைப் பாடியருளினர். அவை அவ்வப்போது ஏடுகளில் எழுதப்பெற்றன. இவர்கள் இறைவனோடிரண்டறக் கலந்தபின், இவர்களது பாடல்களைத் தாங்கிய மூல ஏடுகள் தில்லைத் திருக்கோயிலின் அறையொன்றில் சேமித்து வைக்கப்பெற்றன. பின்னர் 10-ஆம் நூற்றாண்டில் முதலாம் இராசராச சோழன் நம்பியாண்டார் நம்பிவாயிலாகத் தேவார ஏடுகள் தில்லையில் வைக்கப்பட்டிருப்பதை அறிந்து அவற்றைக் கண்டு வெளிப்படுத்தினான். விரிவு திருமுறை கண்ட புராணத்துட் காண்க. திருமுறைகண்ட



RangaRakes tamilnavarasam.com

சோழன் முதலாம் இராசராசன் அல்லன் என்பாரும் உளர். அவ்வாராய்ச்சி இங்கு வேண்டா. மூவருக்குப் பின் அவர்களது பதிக ஏடுகள் வேறெங்கும் வைக்கப்பட்டாது தில்லையில் வைக்கப் பெற்றமை தில்லையின் தலைமையை நன்குணர்த்தும்.

**மாணிக்கவாசகர் சிற்றம்பலத்தில் புகுந்து மறைந்தமை**

மாணிக்கவாசகர் தில்லையில் உறையும் போது ஒருநாள் இறைவன் மானிடத் திருக்கோலந் தாங்கி எழுந்தருளி வந்து திருவாசகப் பதிகங்களைத் தாம் எழுதிக் கொள்ள விரும்புவதாக வேண்டினார். மாணிக்கவாசகர் தாம் அருளிய திருவாசகத்தையும் திருக்கோவையையும் முறையே சொல்லிவர, அவர் அவற்றை எழுதிக்கொண்டார். எழுதி முடித்து அழகிய திருச்சிற்றம்பலமுடையான் எனக் கையொப்பமிட்டு ஏடுகளை அன்று இரவில் சிற்சபைப் படியின் மீது வைத்து மறைந்தார். மறுநாள் காலையில் பூசகர்கள் படியில் ஏடுகளைக் கண்டு எடுத்து மாணிக்கவாசகரின் பாடல்கள் எனத் தெரிந்து அவரை அணுகி அவற்றின் பொருளை அருளுமாறு வேண்டினர். வாசகரும் அவர்களைச் சிற்சபைக்கு அழைத்துச் சென்று சிற்றம்பலமுடையாரைக் காட்டி இதன் பொருள் இவனே என்று கூறி சபைக்குட் புகுந்து மறைந்தார்.

இவ்வாறு மாணிக்கவாசகர் இறைவனோடிரண்டறக் கலப்பதற்கு இடமாக விருந்தது தில்லைச் சிற்சபையேயாகும் எனின் சிற்சபையின் சிறப்பைச் சொல்லற்பாற்றோ!

**சேக்கிழார்க்கு அடியெடுத்துக் கொடுத்தமை**

பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் அத் திருத்தொண்டர் புராணத்தைப் பாடத் தொடங்கியபோது எங்ஙனம் பாடத் தொடங்குவோம் என்று நினைந்து சிற்சபைக்குச் சென்று கூத்தப்பெருமானை வணங்கி நிற்ப, பெருமான் அவர்க்கு 'உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்' என்று அடியெடுத்துக்கொடுத்தார். சேக்கிழார் அதனையே முதலாகக் கொண்டு பெரிய புராணத்தை அருளினார். விரிவு, அடிகள் அருளிய உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கத்துள் காண்க.

**சமயப்பொது**

தில்லை, அருவ வழிபாட்டை உடையதாதலின் அது எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவானதாகும். தில்லை மன்றை எச்சமயத்தாரும் வந்து வணங்குவர் என்பதைத் தாயுமானவர்

**சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு**
**சமயசங்கே தப்பொருளுந் தானொன் றாகப்**
**பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை**
**பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்தபோதங்**
**கென்மார்க்கம் இருக்குதெல்லாம் வெளியே யென்ன**
**எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்**
**கன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந் தானே**
**கண்டவுடன் ஆனந்தங் காண்ட லாகும்.**



RangaRakes tamilnavarasam.com

**-14, ஆகாரபுவனம் (சிதம்பரரகசியம்)12**

எனப் பாடுவர். இப்பகுதிக்குச் 'சிதம்பர ரகசியம்' என்ற இரண்டாம் தலைப்பும் இருப்பது குறிக்கத்தக்கது.

சிதம்பர ரகசியம் அருவவழிபாட்டுக்குரியதாகலின் எச்சமத்தார்க்கும் பொதுவென்பதில் ஐயமில்லை. 'அனைத்து உலகும் தொழுந்தில்லை' (474), எல்லோரும் இறைஞ்சுதில்லை' (476) என மணிவாசகரும் அருளுவர். 'எச்சமய முடிபுகளும் திருச்சிற்றம்பலத்தே இருந்த' என வள்ளற்பெருமானும் அருளுவர். இதனை இறைவனே தனக்கறிவித் தருளினான் என்பர்.

**இச்சைஒன்றும் இல்லாதே இருந்தஎனக் கிங்கே**
**இயலுறுசன் மார்க்கநிலைக் கிச்சையைஉண் டாக்கித்**
**தச்சுறவே பிறமுயற்சி செயுந்தோறும் அவற்றைத்**
**தடையாக்கி உலகறியத் தடைதீர்த்த குருவே**
**எச்சமய முடிபுகளும் திருச்சிற்றம் பலத்தே.**
**இருந்தஎன எனக்கருளி இசைவித்த இறையே**
**முச்சகமும் புகழமணி மன்றிடத்தே நடிக்கும்**
**முதல்அரசே என்னுடைய மொழியும்அணிந் தருளே.**

**-6 (இடை) அருள்விளக்கமாலை 53**

## பலத் தொழுதமை

சிதம்பரத்தை வழிபட்டுப் பாடிய பெரியோர்கள் பலர். வழிபட்ட பெரியோர்களும் அவர்கள் அருளியவைகளும் வருமாறு:

| | | |
|---|---|---|
| பதஞ்சலி | - | |
| வியாக்கிரபாதர் | - | |
| திருமூலர் | - | திருமந்திரம் |
| திருஞானசம்பந்தர் | - | தேவாரப்பதிகங்கள் |
| திருநாவுக்கரசர் | - | தேவாரப்பதிகங்கள் |
| சுந்தரமூர்த்திகள் | - | தேவாரப்பதிகங்கள் |
| ஐயடிகள் காடவர்கோன் | - | க்ஷேத்திரத் திருவெண்பா |
| சேரமான் பெருமாள் | - | பொன்வண்ணத்தந்தாதி |
| மாணிக்கவாசகர் | - | திருவாசகம், திருக்கோவையார் |



RangaRakes tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| பட்டினத்தடிகள் | - | கோயில் நான்மணிமாலை |
| குலசேகராழ்வார் | - | பெருமாள் திருமொழி |
| திருமங்கையாழ்வார் | - | பெரிய திருமொழி |
| நம்பியாண்டார் நம்பி | - | கோயில் திருப்பண்ணியர்விருத்தம் |
| கண்டராதித்தர் | - | திருவிசைப்பா |
| திருமாளிகைத்தேவர் | - | திருவிசைப்பா |
| புருடோத்தம நம்பி | - | திருவிசைப்பா |
| திருவாலியமுதனார் | - | திருவிசைப்பா |
| வேணாட்டடிகள் | - | திருவிசைப்பா |
| பூந்துருத்திநம்பிகாட நம்பி | - | திருவிசைப்பா |
| கருவூர்த்தேவர் | - | திருவிசைப்பா |
| சேதிராயர் | - | திருவிசைப்பா |
| சேந்தனார் | - | திருவிசைப்பா |
| திருப்பால்லாண்டு | | |
| கல்லாடர் | - | கல்லாடம் |
| சேக்கிழார் | - | திருத்தொண்டர் புராணம் |
| உமாபதி சிவாசாரியர் | - | கோயிற்புராணம் |
| இரட்டைப் புலவர்கள் | - | தில்லைக்கலம்பகம் |
| அருணகிரிநாதர் | - | திருப்புகழ் |
| புராணத் திருமலைநாதர் | - | சிதம்பர புராணம் |
| சித்தர் சிவப்பிரகாசர் | - | அத்துவித வெண்பா |
| மறைஞான தேசிகர் | - | சைவசமயநெறி |
| | | சிவதருமோத்தரம் |

| | | |
|---|---|---|
| அப்பையதீக்ஷிதர் | - | பலவடமொழிநூல்கள் |
| வெள்ளியம்பலவாணமுனிவர் | - | ஞானாவரண விளக்கம் முதலியன |
| படிக்காசுத் தம்பிரான் | - | தனிப்பாடல்கள் |
| குமரகுருபர சுவாமிகள் | - | சிதம்பர மும்மணிக்கோவை |
| | - | சிதம்பரச் செய்யுட்கோவை |
| | - | சிவகாமியம்மை இரட்டைமணிமாலை |
| தாயுமானவர் | - | பாடல்கள் |
| திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை | - | தில்லைமக அந்தாதி |
| திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் | - | திருவருட்பாப் பாடல்கள் |

சிதம்பரச் சிறப்புகள் ஒருவாறு கூறப்பட்டன. சிறப்புகள் இவ்வளவே எனக் கருதற்க. இன்னும் பல உள: எனினும் விரிவஞ்சிச் சிலவற்றையே சுருங்கக் கூறினோம்.

## சிதம்பரத்தில் அருளிய பாடல்களும் வழிபாடும்

### சிதம்பர விஷயமான பாடல்கள்

அடிகளது அருள்வாழ்வில் ஏறத்தாழப் பன்னிரண்டு ஆண்டுகள் சிதம்பர வழிபாட்டிற் கழிந்தன. அக்காலத்தில் அடிகள் சிதம்பரம் பொருளாக அருளிச் செய்த பாமாலைகள் பல. அவை நான்காம் திருமுறையும் ஆறாம் திருமுறையின் முன் பகுதியுமாய் அமைந்துள்ளன. 'இவற்றைச் சிதம்பர விஷயமான பாடல்கள்' என அடிகளார் குறித்தருளுகின்றனர். சென்னை வாழ்வை நீத்துக் கருங்குழிக்கு வந்த பின்னர் 1866 வரை ஏறத்தாழ இருநூறு பாமாலைகள் அடிகளால் அருளப் பெற்றனவென்பது அவர்களது திருமுகமொன்றாற் பெறப்படுகிறது. குரோதன ஆண்டு பங்குனித் திங்கள் 17-ஆம் நாள் (28-3-1866) இறுக்கம் இரத்தின முதலியார்க்கு எழுதிய திருமுகத்தில் 'நான் இங்ஙனம் வந்த பின்னர் சிதம்பர விஷயத்தில் தோத்திர மாலைகளுஞ் சாத்திர மாலைகளுமாக சுமார் 200 மாலைகள் செய்யப்பட்டிருக்கின்றன' என அடிகள் குறித்துள்ளதனால் இதனை அறியலாம். இங்ஙனம் வந்த பின்னர் என்பது கருங்குழிக்கு வந்தபின்னராகும். கருங்குழிக்கு வந்ததிலிருந்து 28-3-1866-க்குள் அடிகள் ஏறத்தாழ இருநூறு பாமாலைகளைச்


RangaRakes tamilnavarasam.com

சிதம்பரவிஷயமாகப் பாடியருளினர் என்பது இதனால் தெரிகிறது. பின்னர் அருளப்பட்ட பாமாலைகளும் பாடல்களும் பல.

### எல்லாம் செயல் கூடும் என் ஆணை

அம்பலத்தே எல்லாம் வல்லான் தன்னை ஏத்தின் எல்லாம் செயல் கூடும் என்று தன்மேல் ஆணையிட்டு அடிகள் அருளியுள்ளனர்.

**எல்லாம் செயல்கூடும் என் ஆணை அம்பலத்தே**
**எல்லாம்வல் லான்தனையே ஏத்து.**

அடிகள் ஆணையிட்டுக் கூறியருளிய இக் குறள் வெண்பா அடிகளது திருவாயிற் பிறந்தது முதல் இன்றுவரை சன்மார்க்கிகளால் மந்திர மொழியாகப் பெரிதும் பயிலப்பட்டு வருவது கண்கூடு.

**நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப**

என்பது ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம். (பொருள், செய்யுள், 176). அடிகள் நிறைமொழி மாந்தர். அவர்கள் ஆணையிற் கிளந்தது இம்மறைமொழி. இது மந்திரமென்பதிலும் ஐயமுண்டோ. அடிகள் நிறைமொழி மாந்தர் என்பதும் அவர்களது மொழி நிறைமொழி என்பதும் 'நானுரைக்கும் வார்த்தையெல்லாம் நாயகன் தன் வார்த்தை" என அவர்களே அருளுவதாற் பெறப்படும். இம்மந்திரமொழியை அடிகள் ஆணையிற் கிளந்தனரென்பது, இதனுள் 'என் ஆணை' என்றமையாற் பெறப்படும். ஆறாம் திருமுறை முதற்பதிப்பில் (1885) 'தனையே ஏத்து' என்பது 'தாளை ஏத்து' என்று காணப்படுகிறது.

**எல்லாஞ் செயல்கூடு மென்னாணை யம்பலத்தே**
**யெல்லாம்வல் லான்றாளை யேத்து**

என்பது முதற் பதிப்பின் பாடம்.

### அடிகள் ஆணையிற் கிளத்தல்

தாம் கூறுவனவற்றை ஆணையிட்டுக் கூறுவது அடிகளிடத்துப் பெரு வழக்காகக் காணப்படுகிறது. ஆணையிட்டுக் கூறும் வழக்கம் ஞானசம்பந்தப் பெருமானிடத்திலிருந்து அடிகட்கு அமைந்ததாதல் வேண்டும். ஞானசம்பந்தப் பெருமான் தமது வாக்கை நான்கு இடங்களில் 'ஆணை நமதே' என ஆணையிட்டுரைக்கின்றனர். நனிபள்ளி உள்கவினை கெடுதல் ஆணை நமதே (2387), சிந்தை செயவல்லவர்கள்.........அந்த உலகெய்தி அரசாளும் அதுவே சரதம் ஆணை நமதே (3645),நவில்வார்.............வானிடை வாழ்வார் மண்மிசைப் பிறவார் மற்றிதற் காணையும் நமதே (4078) என்பன காண்க. இதனால் ஆணை நமதென்ற பெருமாள் என்ற பெயரையும் பெற்றனர். நம்பியாண்டார் நம்பிகள் ஆணை நமதென்னவலான் எனப்போற்றுவர் (ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை).



RangaRakes tamilnavarasam.com

அடிகலும் பல இடங்களில் ஆணையிட்டுரைக்கின்றனர். அவற்றை, தன் மீது ஆணையிட்டு இறைவனிடத்து விண்ணப்பித்தல், இறைவன் மீதே ஆணையிட்டு தன்மீது ஆணையிட்டு உலகினர்க்கு உரைத்தல் என மூவகையாகக் கூறலாம். தவிர இறைவன் தன் மீது ஆணையிட்டு அடிகட்கு உறுதியுரைத்ததாகக் கூறும் பாடல்களும் உள.

**ஆணை உன்மேல் ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஐயா**
**அரைக்கணமும் நினைப்பிரிந்தே இனித்தரிக்க மாட்டேன்**
**கோணைநிலத் தவர்பேசக் கேட்டதுபோல் இன்னும்**
**குறும்புமொழி செவிகள்உறக் கொண்டிடவும் மாட்டேன்**
**ஊணைஉறக் கத்தையும்நான் விடுகின்றேன் நீதான்**
**உவந்துவராய் எனில்என்றன் உயிரையும்விட் டிடுவேன்**
**மாணைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்நீ எனது**
**மனம்அறிவாய் இனம்உனக்கு வகுத்துரைப்ப தென்னே.**

**-6 (இடை) பிரியேன் என்றல், 2**

இது அடிகள் இறைவன் மீது ஆணையிட்டு விண்ணப்பித்தது.

**ஆணை ஆணைநீ அஞ்சலை அஞ்சலை**
**அருள்ஒளி தருகின்றாம்**
**கோணை மாநிலத் தவரெலாம் நின்னையே**
**குறிக்கொள்வர் நினக்கேஎம்**
**ஆணை அம்பலத் தரசையும் அளித்தனம்**
**வாழ்கநீ மகனேஎன்**
**றேணை பெற்றிட எனக்கருள் புரிந்தநின்**
**இணைமலர்ப் பதம்போற்றி.**

**-6 (முடி) தனித்திருமலை, 26**

இது இறைவன் தன்மீது ஆணையிட்டு அடிகட்கு உறுதி உரைத்தது. பிறவற்றைத் திருவருட்பாவில் ஆங்காங்குக் கண்டுகொள்க.

**சிற்றம்பலப் புகழ்ப் பாக்கள்**

திருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம்பலத்தே பொதுவிளங்க வளர்ந்த சிவக்கொழுந்தை,

**திருவிளங்கச் சிவயோக சித்திஎலாம் விளங்கச்**
**சிவஞான நிலைவிளங்கச் சிவாநுபவம் விளங்கத்**
**தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே**
**திருக்கூத்து விளங்கஒளி சிறந்ததிரு விளக்கே**
**உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க**
**உலகமெலாம் விளங்கஅருள் உதவுபெருந் தாயாம்**
**மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க**
**வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே.**

எனப் போற்றிப் பணிந்தருளுவார். தன்னை விளையாட்டுப் பருவத்தே ஆட்கொண்ட அம்பலத்தரசைக் கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவாய், அத்தருவின் நிழலாய், அந்நிழல் கனிந்த கனியாய், ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீராய், அத்தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலராய், மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாய் அம் மென்காற்றில் விளைசுகமாய், அச்சுகத்திலுறும் பயனாய், கண்டு களி கூர்வார்.

**கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த**
**குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே**
**ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே**
**உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே**
**மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே**
**மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே**
**ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்**
**ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.**

**-6(இடை) அருள்விளக்கமாலை 2**

வாழை, மா, பலா ஆகிய முக்கனிகளையும் தனித்தனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டி, சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் கலந்து, தேன் பெய்து, பால் கலந்து, தேங்காய்ப்பால் சேர்த்து, பருப்பிடியும் விரவி, நெய் விட்டு, இளஞ்சூட்டில் இறக்கி எடுத்த சுவைக் கட்டியிலும் இனித்திடும் தெள்ளமுதே என்பார்.

**தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்**
**சர்க்கரையுங் கற்கண்டின் பொடியும்மிகக் கலந்தே**
**தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தேங்கின்**
**தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி**
**இனித்தநறு நெய்அளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி**
**எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள் அமுதே**
**அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே**
**அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கல்அணிந் தருளே.**

**-அருள் விளக்கமாலை 17**

பார்த்தாலும், நினைத்தாலும், படித்தாலும், படிக்கப்பக்கம் நின்று கேட்டாலும், பரிந்து உள் உணர்ந்தாலும், ஈர்த்தாலும், பிடித்தாலும், கட்டி அணைத்தாலும் இத்தனைக்கும் தித்திக்கும் இனித்த சுவைக் கரும்பே என்பார்.



RangaRakes tamilnavarasam.com

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கம்நின்று கேட்டாலும் பரிந்துள்உணர்ந் தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டிஅணைத் தாலும்
இத்தனைக்கும் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே
வேர்த்தாவி மயங்காது கனிந்தநறுங் கனியே
மெய்ம்மைஅறி வானந்தம் விளக்கம்அருள் அமுதே
தீர்த்தாஎன் றன்பர்எலாம் தொழப்பொதுவில் நடிக்கும்
தெய்வநடத் தரசேஎன் சிறுமொழிஏற் றருளே.

-அருள் விளக்கமாலை 26

எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவத்தைக் கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருலும் களிப்பாய், காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணாய் வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமாய், மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியாய், நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவாய், நரர்களுக்கும், சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமாய்க் காண்பார்.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம்அளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடம்இடுகின்ற சிவமே
என்அரசே யான்புகலும் இசையும் அணிந் தருளே.

-அருள் விளக்கமாலை 39

சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமே தெய்வம் என்பர்,

அருட்சோதித் தெய்வம்எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரும் மறைகள் எலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளும் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

-6(இடை) பரசிவ நிலை 1

எல்லாஞ்செய் வல்லதெய்வம் எங்கும்நிறை தெய்வம்
என்னியிரில் கலந்தெனக்கே இன்பநல்கும் தெய்வம்
நல்லார்க்கு நல்லதெய்வம் நடுவான தெய்வம்
நற்சபையில் ஆடுகின்ற நடராஜத் தெய்வம்
கல்லார்க்குங் கற்றவர்க்கும் களிப்பருளுந் தெய்வம்



RangaRakes tamilnavarasam.com

காரணமாந் தெய்வம்அருட் பூரணமாந் தெய்வம்
செல்லாத நிலைகளெலாஞ் செல்லுகின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்

-6(இடை) பரசிவ நிலை 2

எனப் பாடியருளுவார்.

உலகரை நம்பிலேன் உன்னையே நம்பினேன், என்னைக் கைவிடேல் என வேண்டுவார்.

வட்டவான் சுடரே வளர்ஒளி விளக்கே
வயங்குசிற் சோதியே அடியேன்
இட்டமே இட்டத் தியைந்துளே கலந்த
இன்பமே என்பெரும் பொருளே
கட்டமே தவிர்த்திங் கென்னைவாழ் வித்த
கடவுளே கனகமன் றகத்தே
நட்டமே புரியும் பேரருள் அரசே
நம்பினேன் கைவிடேல் எனையே.

புண்படா உடம்பும் புரைபடா மனமும்
பொய்படா ஒழுக்கமும் பொருந்திக்
கண்படா திரவும் பகலும்நின் தனையே
கருத்தில்வைத் தேத்துதற் கிசைந்தேன்
உண்பனே எனினும் உடுப்பனே எனினும்
உலகரை நம்பிலேன் எனது
நண்பனே நலஞ்சார் பண்பனே உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

-6(முன்) அபயத்திறன் 2,4

## சிவகாமியம்மையைப் பாடியது

சிவகாமியம்மையாரைப் பாடிய பதிகமொன்று இரண்டாந் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. அம்மை திருப்பதிகம் என வழங்கும் அதன் தொடக்கத்தில் அடிகள் "சிவகாமி அம்மன்" என்றேழுதியிருக்கிறார்கள். பதிகத்தின் ஒருபாடல் வருமாறு:

சூரிட்ட நடையில்என் போரிட்ட மனதைநான்
சொல்லிட்ட முடன்அ ணைத்துத்
துன்றிட்ட மோநம்எனும் நன்றிட்ட அமுதுண்டு
சும்மா இருத்தி என்றால்
காரிட்டி தற்குமுன் யாரிட்ட சாபமோ
கண்டிலேன் அம்மம் மஓர்
கணமேனும் நில்லாது பொல்லாது புவியில்
கறங்கெ னச்சுழல் கின்றதே



RangaRakes tamilnavarasam.com

தாரிட்ட நீஅருள் சீரிட்டி டாய்எனில்
　　　　தாழ்பிறவி தன்னில் அதுதான்
தன்னைவீழ்த் துவதன்றி என்னையும் வீழ்த்தும்இத்
　　　　தமிய னேன்என் செய்குவேன்
ஆறிட்ட சடையாளர் தில்லையம் பதிமருவும்
　　　　அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
　　　　வானந்த வல்லி உமையே

-2, அம்மை திருப்பதிகம் 6

### சிதம்பர அனுபவங்கள்

### இறைவன் தில்லைத் திருநடனம் காண்க என்றருளியது

தில்லைத் திருநடனத்தைக் காண அடிகள் விழைந்தபோது, இறைவன், 'அஞ்சாதே என் மகனே! உனக்கு அநுக்கிரகம் புரிந்தோம்! நீ ஆடுக! வேண்டியவாறு ஆடுக! தில்லை மன்றில் திருநடனங்கண்டு நெடுங்காலம் இன்ப வெள்ளத்துள் திளைத்து இனிது வாழ்க' என அருளிச் செய்தார். இறைவன் இங்ஙனம் அருளிச் செய்தானென்பதைப் பெருமானார் தமது அருட்பாடலொன்றுள் அழகாக அருளுகின்றனர்.

அஞ்சாதே என்மகனே அநுக்கிரகம் புரிந்தாம்
　　　　ஆடுகநீ வேண்டியவா றாடுகஇவ் வுலகில்
செஞ்சாலி வயலோங்கு தில்லைமன்றில் ஆடுத்
　　　　திருநடங்கண் டன்புருவாய்ச் சித்தசுத்த னாகி
எஞ்சாத நெடுங்காலம் இன்பவெள்ளந் திளைத்தே
　　　　இனிதுமிக வாழியவென் றெனக்கருளிச் செய்தாய்
துஞ்சாதி யந்தமிலாச் சுத்தநடத் தரசே
　　　　துரியநடு வேஇருந்த சுயஞ்சோதி மணியே.

-4, அன்புமாலை 19

### இன்னும் ஒருகால் காண்பேனோ

ஒருகால் அல்லது பலகால் திருநடனங் கண்ட பெருமான் 'இன்னும் ஒருகால் காண்பேனோ' என்று ஏக்கமுறுவாராய் இரண்டாம் திருமுறை தரிசனப் பதிகத்தின் பத்துப் பாடல்களிலும் 'இன்னும் ஒரு கால் காண்பேனோ' எனக் கூறுகின்றார்கள்.

**திருவார் பொன்னம் பலநடுவே தெள்ளார் அமுதத் திரள்அனைய**
**உருவார் அறிவா னந்தநடம் உடையார் அடியார்க் குவகைநிலை**
**தருவார் அவர்தம் திருமுகத்தே ததும்பும் இளவெண் ணகைகண்டேன்**
**இருவா தனைஅற் றந்தோநான் இன்னும் ஒருகால் காண்பேனோ.**

**-2, தரிசனப் பதிகம் 1**

### சிறிதறிந்தேன், முழுதும் அறிவேனோ

சிதம்பரத்தே ஆனந்த சித்தர் திருநடத்தைச் சிறிதறிந்தேன், இன்னும் முழுதும் அறிவேனோ என்று பெருமான் ஏக்கமுற்றமையை

**சிதம்பரத்தே ஆனந்த சித்தர்திரு நடந்தான்**
**சிறிதறிந்த படிஇன்னும் முழுதும்அறி வேனோ**
**பதம்பெறத்தேம் பழம்பிழிந்து பாலும்நறும் பாகும்**
**பசுநெய்யும் கலந்தெனப் பாடிமகிழ் வேனோ**
**நிதம்பரவி ஆனந்த நித்திரைநீங் காத**
**நித்தர்பணி புரிந்ரின்ப சித்திபெறு வேனோ**
**மதம்பரவு மலைச்செருக்கில் சிறந்தசிறி யேன்நான்**
**வள்ளல்குரு நாதர்திரு உள்ளம்அறி யேனே**

**-6(முன்) அத்துவித ஆனந்த அனுபவ இடையீடு 4.**

என்னும் திருப்பாடலிற் காண்கிறோம்.

### அம்பலவாயிலில் அழுதுநின்றது

ஒருநாள் அடிகள் அம்பலவாயிலில் ஒருபுறத்தில் நின்று திருவருளை நினைந்து அயர்ந்து அழுதார். அடிகளது அயர்ச்சியையும் அழுகையையும் பொறுக்கலாற்றாத அம்பலத்திறைவன் அடிகள் முன் தோன்றி முகமலர்ந்து அருண்மொழி கூறித்தேற்றியருளினான். இதனைப் பின்னாளில் நினைந்து உருகும் அடிகள்,

**அந்நாளில் அடிச்சிறியேன் அம்பலவா யிலிலே**
**அருளைநினைந் தொருபுறத்தே அயர்ந்தழுது நின்றேன்**
**முந்நாளில் யான்புரிந்த பெருந்தவத்தால் எனக்கு**
**முகமலர்ந்து மொழிந்தஅருண் மொழியைநினைந் தந்தச்**
**செந்நாளை எதிர்பார்த்தே பன்னாளும் களித்தேன்**
**சிந்தைமலர்ந் திருந்தேன்அச் செல்வமிகு திருநாள்**
**இந்நாளே ஆதலினால் எனக்கருள்வீர் என்றேன்**
**என்பதன்முன் அளித்தீர்நும் அன்புலகில் பெரிதே**

-6 (முடி) இறை எளிமையை வியத்தல் 10

எனப்பாடி இறைவனின் பேரன்பை வியந்து போற்றியருளுகின்றார்.



RangaRakes tamilnavarasam.com

## அம்பலத் திருவாயிலில் உரைத்தது

ஒருநாள் அம்பலத்திருவாயிலில் ஆண்டவன் அடிகளுக்கு "எல்லா அற்புதங்களும் வல்ல நம் அருட்பேரொளியை உனக்கு அளித்தோம். இந்நாள்தொட்டு நீ எண்ணியபடி இயற்றி விளையாடி மகிழ்க, என்றும் இறவா நிலைபெற்று இன்ப அனுபவனாகி சுத்தமாதி மூன்று உடல்களையும் பெற்று இச்சைப்படி வாழ்க. யாம் வந்து நின்னுள் கலந்தோம். இனி எந்த ஆற்றினும் பிரியோம். உண்மை. இது எம் ஆணை", என்று உறுதியுரைத்தான். உரைத்தது இதுவென்பதும் உரைத்த இடம் அம்பலத் திருவாயில் என்பதும் பின்வரும் நடராஜபதி மாலைப்பாடலாற்பெறப்படும்.

**அந்நாளில் அம்பலத்திருவாயில் இடைஉனக்**
**கன்புடன் உரைத்தபடியே**
**அற்புதம்எ லாம்வல்ல நம்அருட் பேரொளி**
**அளித்தனம் மகிழ்ந்துன்உள்ளே**
**இந்நாள் தொடுத்துநீ எண்ணிய படிக்கே**
**இயற்றிவிளை யாடிமகிழ்க**
**என்றும்இற வாநிலையில் இன்பஅது பவனாகி**
**இயல் சுத்தம் ஆதிமூன்றும்**
**எந்நாளும் உன்இச்சை வழிபெற்று வாழ்கயாம்**
**எய்திநின் னுட்கலந்தேம்**
**இனிஎந்த ஆற்றினும் பிரிவுறேம் உண்மைஈ**
**தெம்மாணை என்றகுருவே**
**மன்னாகி என்பெரிய வாழ்வாகி அழியாத**
**வரமாகி நின்றசிவமே**
**மணிமன்றின் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்**
**வல்லநட ராஜபதியே.**

**-6(இடை) நடராஜபதிமாலை, 30**

## அம்பலத் திருக்காட்சி

அம்பலத்தே ஓரிடத்து ஓர் நாள் ஆதித்தர் பன்னிருவர் (துவாதசாதித்தர்) ஒளியினும் பேரொளியான இறைவனை அடிகள் கண்டார். கண்டு களிகொண்ட அடிகள் 'என் இரு கண்களே! உமது பெருந்தவம் எவ்வுலகில் யார் தான் செய்வார். பிரமனும் மாலும் காணாமல் அலைந்தனர். இன்னும் அலைகின்றனர். அவ்வாறிருக்க அம்பலத்தே ஓரிடத்து ஓர் நாள் ஆதித்தர் பன்னிருவர் ஒளிமாற்றும் பர ஒளியைப் பார்த்து உய்ந்தீர்' எனத்தம் கண்கள் செய்த பெருந்தவத்தைப் பாராட்டிப் பாடியருளுகின்றார்.

**என்னிருகண் காள்உமது பெருந்தவம்எப் புவனத்தில் யார்தான்செய்வர்**
**முன்னிருவர் காணாமல் அலைந்தனரால் இனுங்காண முயலா நின்றார்**
**நன்னிருபர் தொழுதேத்தும் அம்பலத்தே ஓரிடத்தோர் நாள்ஆ தித்தர்**
**பன்னிருவர் ஒளிமாற்றும் பரஒளியைப் பார்த்துய்ந்தீர் பண்பி னீரே.**



RangaRakes tamilnavarasam.com

**சேணாடர் முநிவர்உயர் திசைமுகன்மால் உருத்திரன்அந் திரளோர்சற்றும்
காணாத காட்சியைநான் கண்டேன்சிற் றம்பலத்தின் கண்ணே பன்னாள்
ஆணாகப் பிறந்தடியேன் அருந்தவம்என் புரிந்தேனோ அறிகி லேன்முன்
பேணாத பிறப்பெல்லாம் பிறப்பலஇப் பிறப்பேஎன்பிறப்பாம் அந்தோ**

**-2, தனித்திருவிருத்தம் 44,45**

## திருச்சிலம்பொலிகேட்டது

சிலம்பொலிகேட்டல் ஞானயோக அனுபவங்களுள் ஒன்று. சேரமான் பெருமாள் நாயனார் நாடோறும் பூசைமுடிவில் சிலம்பொலி கேட்கும் பேறு பெற்றவர். ஒரு நாள் சிலம்பொலி கேட்கவில்லை. உயிரை மாய்த்துக்கொள்ள உடைவாளை உருவினார். இறைவன் விரைந்து சிலம்பொலி காட்டினான். முன்னரே அருளாது தாழ்த்ததென்னென்று சேரமான் கேட்க இறைவனும் 'வன்றொண்டன் (சுந்தரர்) இங்கு (தில்லைச்சிற்றம்பலம்) வந்து நம்மைப்பாடினான் நின்று கேட்டு வரத்தாழ்த்தோம்' என்றருளினார். சேரமான் சுந்தரரைக் காண விரும்பித் தில்லை சென்றார். பொன்வண்ணத்தந்தாதி பாடிப் பொன்னம்பலவனைத் துதித்தார். பாடியதற்குப் பரிசாகச் சிற்றம்பலவர் அங்கேயே சிலம்பொலி கேட்பித்தருளினார். இது சேரமான் சிலம்பொலி கேட்ட வரலாறு.

மாணிக்கவாசகப் பெருமான் வாதவூரில் சிலம்பொலி கேட்டார்.

**வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்**

**-கீர்த்தித்திருவகவல் 52, 53**

என்பது மணிவாசகர் சிலம்பொலிகேட்ட குறிப்பு.

நமது அடிகளும் திருச்சிலம்பொலி கேட்டமை பின்வரும் அவர்களது அருட்பாடலானறியப்பெறும்.

**வாட்ட மோடிருந்த சிறியனேன் தனது
வாட்டமும் மாயையா திகளின்
ஈட்டமும் தவிர்க்கத் திருவுளத் திரங்கி
என்னைஓர் பொருள்என மதித்தே
தீட்டரும் புகழ்சேர் திருவடித் துணைகள்
செலுத்திய திருச்சிலம் பொலிநான்
கேட்டபோ திருந்த கிளர்ச்சியும் இந்நாள்
கிலேசமுந் திருவுளம் அறியும்.**

**-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 121**

அம்பலவாணனிடம் பரிசதீக்கையும் வாசகதீக்கையும் பெற்றது

பரிசதீக்கை, வாசகதீக்கை, திருவடிதீக்கை ஆகிய தீக்கைகளையெல்லாம் வள்ளற் பிரானார்க்கு இறைவனே செய்தருளினான்.



RangaRakes tamilnavarasam.com

**இருளற ஓங்கும் பொதுவிலே நடஞ்செய்**
**எங்குரு நாதனெம் பெருமான்**
**அருளெனும் வடிவங்காட்டிஒண் முகத்தே**
**அழகுறும் புன்னகை காட்டித்**
**தெருளுற அருமைத் திருக்கையால் தடவித்**
**திருமணி வாய்மலர்ந் தருகில்**
**பொருளுற இருந்தோர் வாக்களித் தென்னுள்**
**புகுந்தனன் புதுமைஈ தந்தோ**

**-2, தனித்திருவிருத்தம், 46**

என்ற பாடலைக் காண்க. 'அருமைத் திருக்கையால் தடவி' என்பது பரிசதீக்கை பெற்ற குறிப்பு. 'திருமணிவாய்மலர்ந்தருகில் பொருளுற இருந்தோர் வாக்களித்து' என்பது வாசகதீக்கை பெற்ற குறிப்பு.

## சிதம்பரம் இராமலிங்கம்

சிதம்பரம் இராமலிங்கம் என்றே அடிகள் கையொப்பமிடுவர். அடிகளின் அருளிச் செயல்களுல் முதல்முதலில் அச்சானவை கந்தர்சரணப்பத்தும் தெய்வமணிமாலையும் ஆகும். அச்சிட்ட ஆண்டு அதிற் குறிக்கப்படவில்லையேனும்,ஒழிவிலொடுக்கம் அச்சிடப்பெற்ற1815-ம் ஆண்டிற்கு முன்னமேயே அது அச்சிடப்பெற்றதாதல் வேண்டுமென திருவருட்பாப் பதிப்பாளர் திரு. ஆ. பலகிருஷ்ணபிள்ளையவர்கள் குறிப்படுகின்றனர். தெய்வமணிமாலைப் பதிப்பில் பெருமான் பெயர் சிதம்பரம் இரமலிங்கம் பிள்ளை என்றே காணப்படுகிறது. பிறந்த ஊரையோ முன்னோர்களது ஊரையோபெயரின் முன் சேர்த்துக்கொள்வதே வழக்கு. மருதூரிற் பிறந்து சென்னையிலும், கருங்குழியிலும் வடலூரிலும் மேட்டுக்குப்பத்திலும் வாழ்ந்த அடிகள் தம்மைச் சிதம்பரம் இராமலிங்கம் என்றே தொடக்க முதல் சித்திவரை வழங்கினார். இது அடிகளின் சிதம்பரப் பற்றைக் காட்டும். 'பற்றிய பற்றத்தனையும் பற்றற விட்டருள பலப்பற்றே பற்றுமினோ எற்றும் இறவீரே' என்பது அடிகள் திருவாக்கு.

## தற்காலத்தில் சிதம்பரம்

இறுக்கம் இரத்தின முதலியார், அடிகள் மாணாக்கருள் ஒருவர். சென்னையில் ஆசிரியராவிருந்த அவர் சிதம்பரம் பச்சைப்ப முதலியார் பாடசாலைக்கு வர விரும்பி வள்ளற்பெருமானுக்கு எழுதினார். அதற்குவிடையாக 20-03-1861-இல் வரைந்த கடிதத்தில் பச்சையப்ப முதலியார் பாடசாலையைப் பற்றியும் சிதம்பரத்தின் அக்கால நிலையைப் பற்றியும் தமது கருத்தைச் சுருக்கமாக அடிகள் புலப்படுத்துகின்றார்கள். கடிதத்தின் அப்பகுதி வருமாறு.

................சிதம்பரத்தில் வசிப்பது சம்மதமானாலும் இது விஷயத்தில் வசிப்பது சம்மதமின்று . ஏனெனில் சிதம்பரத்தில் பச்சையப்ப முதலியார் இஸ்கூல் கிரமமல்லாததாகத் தற்காலத்தில் காணப்படுகிறது. அன்றியும் அவ்வலுவல் இராஜாங்க சம்பந்த அலுவலாகவிருந்தால் நன்றாகவிருக்கும். அவ்வாறின்றி ஒருமையில்லாத சில இந்துக்கள் சம்பந்தமானதாக விருக்கின்றது. சிதம்பரம் தற்காலத்தில் நமது உயிர்த்துணைவராகிய நடராஜப்பெருமானைப் பற்றி நாம்


RangaRakes tamilnavarasam.com

போவதற்கும் இரொண்டொரு தினம் இருப்பதற்கும் தக்கதேயன்றி வேறொரு வகையாலுந்தக்கதாகத் தோன்றவில்லை. ஆயின் அது கலிகால வண்ணம்................

பங்குனி-மீ-சூ-உ

இங்ஙனம்
சிதம்பரம் இராமலிங்கம்

சிதம்பரத்தின் அக்காலத்திய நிலை அடிகட்கு மன நிறைவளிக்கவில்லை என்பது இதனால் நன்கறியப்பெரும்.

சிதம்பரம் கோயில் புதுக்கக் கருதியது

சிதம்பரம் கோயிலில் பெரிதும் பற்றுக்கொண்ட அடிகள் அதிற் சில திருத்தங்களை செய்து ஆகமங்களிற் கூறியவாறு புதுப்பிக்கக் கருதினார்கள். இவ்வுண்மை,

**திருவளர் திருச்சிற் றம்பலம் ஓங்கும்**
**சிதம்பரம் எனும்பெருங் கோயில்**
**உருவளர் மறையும் ஆகமக் கலையும்**
**உரைத்தவா றியல்பெறப் புதுக்கி**
**மருவளர் மலரின் விளக்கிநின் மேனி**
**வண்ணங்கண் டுளங்களித் திடவும்**
**கருவளர் உலகில் திருவிழாக் காட்சி**
**காணவும் இச்சைகாண் எந்தாய்.**
**-6(முன்)பிள்ளைச் சிறு விண்ணப்பம்20**

என்னும் திருப்பாடலால் நன்கறியப்படும். மேலும் அடிகள் சாலை சம்பந்தப்பட்டவர்க்கு இட்ட சமாதிக் கட்டளையில்,
".............சன்மார்க்க சங்கமும் மேற்படி தருமச்சாலையும் நிலை பெற விளக்கஞ் செய்யும் பொருட்டாகவும் சிதம்பரங் கோயில் திருச்சபைகளைப் புதுக்கி நிலைபெற விளக்கஞ் செய்யும் பொருட்டாகவும் கருணை கூர்ந்து எனது தந்தையாராகிய எல்லாம் வல்ல திருச்சிற்றம்பலக் கடவுள் பார்வதிபுரம் சமரச வேத சன்மார்க்க சங்கத் தருமச் சாலைக்கு எழுந்தருளிக் காட்சி கொடுக்குந்தருணம் மிகவும் அடுத்த சமீபமாக விருக்கின்றது."

எனக் குறித்துள்ளதனின்றும் சிதம்பரங் கோயிலின் திருச்சபைகளைப் புதுக்குவதற்கானதோர் திருக்குறிப்புண்டென்பது தெரியவரும்.

சிதம்பரத்தில் அடிகள் செய்யக் கருதிய திருத்தம் இன்னதெனத் தெரியவில்லை. ' மறையும் ஆகமக் கலையும் உரைத்தவாறு இயல்பெறப் புதுக்கி' என்பதனால் ஆகமங்களிற் கூறப்பட்டவாறு புதுக்கி அமைக்கக் கருதினர் என்பது அறியப்பெறும். ஒவ்வொரு கோயிலுக்கும் இன்ன ஆகமம் என்பதுண்டு. சிதம்பரத்திற்கு மகுடாகமம். ஆயினும் சிதம்பரத்தில் இப்போது செய்யப் பெறுவது வைதிக பூசையே; ஆகம பூசையன்று. பதஞ்சலியார் முறைப்படிப்பூசை செய்வதாகத் தீக்ஷிதர்கள் கூறுகின்றனர். திரு ஆனைக்காவிலும் வைதிக பூசையே. இக் கோயில்களில் ஆகமபூசை வைதிகபூசையாக ஆதிசங்கரர் காலத்தில் அவரால்



RangaRakes tamilnavarasam.com

மாற்றப்பட்டதெனத் தெரிகிறது. இரட்டையர்பாடிய தில்லைக் கலம்பகம் 69_ஆம் செய்யுளுள் தில்லைக்குரியது மகுடாகமம் எனச் சொல்லப்பட்டுள்ளது.

**நில்லாத வெழுபிறப்புந் தொல்லை யல்லல்**
**நீக்குசிவ காமவல்லி நிலையுந் தொல்லை**
**செல்லாரும் பொழில்புடைசூழ் சிதம்பரமுந் தொல்லை**
**திருமூலட் டானமொடு சிவகங்கை தொல்லை**
**சல்லாபந் தருமகுடா கமமுந் தொல்லை**
**தலபுரா ணமுந்தொல்லை சபையுந் தொல்லை**
**சொல்லாரு நான்மாறையுந் தொல்லை தில்லைச்**
**சோதி நடமாடுவதுந் தொல்லை தானே.**

சிதம்பரங் கோயிலைப் புதுக்குவது பின்னாளில் தவிர்ந்து போயிற்று. அதன்மேல் அடிகள் புதிய தோர் சிதம்பரத்தை வடலூரில் படைத்தார்கள் அதுவே உத்தரஞான சிதம்பரம் சத்திய ஞானசபை.

### சமயகுரவர் நால்வரையும் அவர்களது அருளிச் செயல்களையும் அவர்களது அருள் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்களையும் போற்றுதல்.

திருஞானசம்பந்தர் நாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவசகர் ஆகிய சமயகுரவர் நால்வரையும் போற்றி அடிகள் நான்கு மாலைகளை அருளியுள்ளார்கள். அவை ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை, ஆளுடைய அரசுகள் அருள்மாலை, ஆளுடைய நம்பிகள் அருள்மாலை, ஆளுடைய அடிகள் அருள்மாலை என்பன. இந்நான்கும் நான்காம் திருமுறையின் இறுதியில் இடம் பெற்றுள்ளன. திருஞான சம்பந்தப்பெருமானை ஆளுடைய பிள்ளையார் என்பதும், திருநாவுக்கரசர் பிரானை ஆளுடைய அரசுகள் என்பதும், சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஆளுடைய நம்பிகள் என்பதும், மாணிக்கவாசகப்பெருமானை ஆளுடைய அடிகள் என்பதும் ஒருவகை வழக்கு. இவ்வழக்கு நம்பியாண்டார் நம்பிகளின் காலமுதலே இருந்து வருகிறது. பிள்ளை, அரசு, நம்பி, அடிகள் என்பவை நால்வர்குரிய சிறப்புப்பெயர்களாக். திருஞானசம்பந்தர் பிள்ளைப் பருவத்திலேயே இறைவியால் ஞானப் பாலூட்டப் பெற்று இறைவனுக்கும் இறைவிக்கும் பிள்ளையாயினமையால் அவரைப் பிள்ளை எனவும், திருநாவுக்கரசர் நாவுக்கு அரசரும் சொற்கோவும் ஆன்படியால் அவரை அரசு என்றும், சுந்தரமூர்த்திகள் நம்பி ஆரூரர் ஆவதால் அவரை நம்பி என்றும், மாணிக்கவசகர் அமைச்சுச் செல்வத்தை அறவே நீத்துத் துறவு பூண்ட செம்மனத்தராதலின் அவரை அடிகள் என்றும் வழ்ங்கினர். ஆளுடைய என்பது இறைவனால் ஆட்கொள்ளப்படுதல் உடைய என்னும் பொருளதாம். இவ்வகையில் நமது அடிகள் ஆளுடைய வள்ளலார் ஆவர். ஆளுடைய வள்ளலாராம் நமது வடலூரடிகள் அருளிய மேற்குறித்த மாலைகளை ஒருசேரக்குறிக்க வேண்டின் ஆளுடைய நால்வர் அருண்மாலை எனலாம். இதற்கு ஒப்பாகவேறொன்றைக் கூறவேண்டுமாயின் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய நால்வர் நான்மணிமாலை ஒன்றையே கூறலாம். நால்வர் துதியாக எழுந்த நூல்களில் சிறந்தது நான்மணி மாலையே என்பது அனைவர்க்கும் ஒப்பமுடிந்ததோர் உண்மையாம். நால்வரை அனுபவித்தோர் இருவர். ஒருவர் சிவப்பிரகாசர். மற்றொருவர் அருட்பிரகாச (வள்ளலா)ராம் நமது அடிகள். மேற்கூறிய நான்கு மாலைகளைத் தவிர பிற பல

பாடல்களிலும் நால்வரையும், அவர்களது அருளிச் செயல்களையும் அவர்களது அருள் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதங்களையும் அடிகள் பாராட்டுவர்.

## ஆளுடைய பிள்ளையார்

### ஆளுடைய பிள்ளையாரைக் குருவாகக் கொள்ளல்

அடிகள் தமது இளமையிலேயே திருஞானசம்பந்தப் பெருமானை வழிபடு (உபாசனா) குருவாகக் கொண்டார்கள். அடிகளைப்போன்றே ஞானசம்பந்தரைக் குருவாகக் கொண்டோர் வேறு சிலரும் உண்டு. காழிக்கண்ணுடைய வள்ளலாரும் ஞானசம்பந்தரைக் குருவாகக் கொண்டவரே. தென்முகப் பரமாசாரியரும் ஞானசம்பந்தரும் குருபீடங்களாம். இறைவனே தென்முகப் பரமாசாரியராக குருவாகி வந்தருளினார். ஞான சம்பந்தர் மனிதராய்ப் பிறந்து திருஞானம் பெற்றுச் குருத்துவபீடத்திலிருந்தருளுபவராயினார். முருகனே திருஞானசம்பந்தராக வந்தார் என்று உபசரித்துரைப்பதும் உண்டு. ஆளுடைய பிள்ளையாரருள்மாலையில் 'ஞானசம்பந்தத் தெள்ளமுதாஞ் சிவகுருவே', 'ஞானசம்பந்தன் என்றோங்கு சற்குருவே', 'ஞானசம்பந்தச் செல்வமே எனது சற்குருவே', 'என்னுயிர்க்குயிர் எனுங் குருவே', எனக் கூறுவதால் அடிகள் சம்பந்தப்பிரானைக் குருவாகக் கொண்டமை பெறப்படும். ஞானசம்பந்தரை, அடிகள் அருள்நெறியில் முதலரசியற்றியதுரை என்பர். சத்திய தருமச்சாலையில் வியாழக்கிழமை (குல வாரம்) தோறும் திருஞானசம்பந்தர்க்குச் சிறப்பு வழிபாடும் ஏற்படுத்தியருளினர்.

### உயிர் அனுபவம், அருள் அனுபவம், சிவ அனுபவம்

### இன்னதெனப் பிள்ளையார் அருளியது.

உயிர் அனுபவம், அருள் அனுபவம், சிவ அனுபவம் என்னும் மூவகை அனுபவங்களையும் பிள்ளையார் பிள்ளைப் பெருமானுக்கு உணர்த்தியருளினார். தத்துவ நிலைகள் தனித்தனி ஏறித் தனிப்பர நாதமாம் தலத்தே ஒத்த தன்மயமாம் தன்னைத் தான் இன்றி உற்றிடல் உயிரனுபவம். தனிப் பரநாத வெளியின்மேல் தனது தன்மயம் தன்மயம் ஆக்கிப் பனிப்பிலாது என்றும் உள்ளதாய் விளங்கிப் பரம்பரத்து உட்புறமாகி இனிப்புற ஒன்றும் இயம்புறா இயல்பால் இருந்ததே அருள் அனுபவம். உள்ளதாய் விளங்கும் ஒரு பெருவெளி மேல் உள்ளதாய் முற்றும் உள்ளதுவாய் நள்ளதாய் எனதாய் நானதாய் தனதாய் நவிற்றரும் தானதாய் இப்படிக் கூறொணாத அப்பாலுக்கப்பால் வேறு வெளியே சிவ அனுபவம். மூல மலப்பிணி தவிர்க்கும் பொருள் அருளனுபவம். அதற்குப் பத்தியம் உயிரனுபவம். உயிரனுபவம் உற்றால் அதனிடத்தே அருளனுபவம் உறும். அவ்வருளனுபவத்தே சிவ அனுபவம் உறும். இந்த அனுபவ நிலைகள் குருமுகமாக உணர வேண்டியவையாம். ஏட்டில் எழுதிக் கற்பிக்க இயலாதவையாம். இவற்றைக் காழிப் பிள்ளையார் வடலூர்ப் பிள்ளையார்க்கு உணர்த்தியருளினாரென்பது.

**உயிர்அது பவம்உற் றிடில்அத னிடத்தே**
**ஓங்கருள் அநுபவம் உறும்அச்**
**செயிரில்நல் அநுப வத்திலே சுத்த**
**சிவஅநு பவம்உறும் என்றாய்**
**பயிலுமூ வாண்டில் சிவைதரு ஞாநப்**



RangaRakes tamilnavarasam.com

பால்மகிழ்ந் துண்டுமெய்ந் நெறியாம்
பயிர்தழைந் துறவைத் தருளிய ஞாந
பந்தன்என் றோங்குசற் குருவே. 2

தத்துவ நிலைகள் தனித்தனி ஏறித்
தனிப்பர நாதமாந் தலத்தே
ஒத்ததன் மயமாம் நின்னைநீ இன்றி
உற்றிடம் உயிரநு பவம்என்
றித்துணை வெளியின் என்னைஎன் னிடத்தே
இருந்தவா றளித்தனை அன்றோ
சித்தநற் காழி ஞானசம் பந்தச்
செல்வமே எனதுசற் குருவே. 3

தனிப்பர நாத வெளியின்மேல் நினது
தன்மயந் தன்மயம் ஆக்கிப்
பனிப்பிலா தென்றும் உள்ளதாய் விளங்கிப்
பரம்பரத் துட்புற மாகி
இனிப்புற ஒன்றும் இயம்புறா இயல்பாய்
இருந்ததே அருளது பவம்என்
றெனக்கருள் புரிந்தாய் ஞாநசம் பந்தன்
என்னும்என் சற்குரு மணியே. 4

உள்ளதாய் விளங்கும் ஒருபெரு வெளிமேல்
உள்ளதாய் முற்றும்உள் ளதுவாய்
நள்ளதாய் எனதாய் நானதாய்த் தனதாய்
நவிற்றருந் தானதாய் இன்ன
விள்ளொணா அப்பால் அப்படிக் கப்பால்
வெறுவெளி சிவஅநு பவம்என்
றுள்ளுற அளித்த ஞானசம் பந்த
உத்தம சுத்தசற் குருவே. 5

பொத்திய மூல மலப்பிணி தவிர்க்கும்
பொருள்அரு ளநுபவம் அதற்குப்
பத்தியம் உயிரின் அநுபவம் இதனைப்
பற்றறப் பற்றுதி இதுவே
சத்தியம் எனஎன் தனக்கருள் புரிந்த
தனிப்பெருங் கருணைஎன் புகல்வேன்
முத்தியற் சிவிகை இவர்ந்தருள் நெறியின்
முதலர சியற்றிய துரையே. 6

என்னும் ஆளுடைய பிள்ளையாரருண்மாலைச் செய்யுள்களால் அறியப்பெறும்.

**அடி முடி இதுவென உணர்த்தியருளியது.**

சிவத்தின் அடியையும் முடியையும் காண்பதற்குத் திருமாலும் பிரமனும் முயன்றும் கண்டிலர். அடி முடியைக் காணப்பெறுவது பெரும் பேறாகும். சிவத்திற்கு



RangaRakes tamilnavarasam.com

அடி எதுவோ? முடி எதுவோ? என்று அடிகள் பலகால் வருந்தியிருந்தனர். அடிகள் படும் வருத்தத்தைப் பார்த்து ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளிக் கண்ணோக்கஞ் செய்து 'அடியும் முடியும் நினக்குள் விளங்குவது' என்றருளிச் செய்தார். இவ்வுண்மை,

**அடியெனல் எதுவோ முடியெனல் எதுவோ**
**அருட்சிவ மதற்கெனப் பலகால்**
**படியுற வருந்தி இருந்தஎன் வருத்தம்**
**பார்த்தரு ளால்எழுந் தருளி**
**மிடியற எனைத்தான் கடைக்கணித் துனக்குள்**
**விளங்குவ அடிமுடி என்றாய்**
**வடிவிலாக் கருணை வாரியே மூன்று**
**வயதினில் அருள்பெற்ற மணியே.**

**-ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை 7.**

என்பதாற் பெறப்படும்.

## திருநெறித் தமிழ்கொண்டு ஐயநீத்தருளியது

ஞானநெறியில் முன்புறும் நிலை எது பின்புறும் நிலை எது என அடிகள் உளம் மயங்கியபோது ஆளுடைய பிள்ளையார் தாமருளிய திருநெறித் தமிழாகிய தேவாரத்தைக் கொண்டு அடிகளின் ஐயத்தை நீத்தருளினார்.

**முன்புறு நிலையும் பின்புறு நிலையும்**
**முன்னிநின் றுளமயக் குறுங்கால்**
**அன்புறு நிலையால் திருநெறித் தமிழ்கொண்**
**டையநீத் தருளிய அரசே**
**என்புபெண் ணுருவோ டின்னுயி ரதுகொண்**
**டெழுந்திடப் புரிந்துல கெல்லாம்**
**இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே**
**என்னுயிர்க் குயிர்எனுங் குருவே.**

**-4, ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை9**

திருமுறைகள் பன்னிரண்டும் திருநெறித் தமிழ் எனப்படும். 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் பிரமபுரப் பதிகத்தின் திருக்கடைக்காப்பில் தமது வாக்கைத் திருநெறிய தமிழ் என்று ஞானசம்பந்தரே அருளுவர்.

**அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை யலர்மேய**
**பெருநெறிய பிரமாபுர மேவியபெம் மானிவண் றன்னை**
**ஒருநெறிய மனம்வைத் துணர்ஞான சம்பந்தன் னுரைசெய்த**
**திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே.**

அடிகளின் ஐயத்தை ஆளுடைய பிள்ளையார் நீக்கியருளினார். அதுவும் திருநெறித் தமிழாம் தேவாரத்தைக் கொண்டு நீக்கியருளினார் என்பதனால் தேவாரத்தின்



RangaRakes tamilnavarasam.com

ஞானச் சிறப்பையும் ஆளுடைய பிள்ளையாரின் குருத்துவ நிலையையும் உணரலாம். பொதுவாகத் தேவாரப் அப்திகங்கள் தோத்திரங்களே யாயினும் அவற்றை அருளிய ஆசிரியன்மார் சாத்திரக் கருத்துகளையும் ஞான அனுபவ உண்மைகளையும் ஆங்காங்கே சுட்டியுள்ளனர். இதனைச் சாத்திரப் பயிற்சியுடையாரும் சிவானுபவம் கைவந்தவர்களுமே தெள்ளிதின் அறியலாம். ஆளுடைய பிள்ளையார் தமது திருநெறித் தமிழ்கொண்டு அடிகளின் ஐயத்தை நீத்தருளினராக, இறைவன் ஆளுடைய பிள்ளையாரின் திருக்கடைக் காப்பால் தமது திருவுளங் காட்டியதும் உண்டு. அது பின்னர்க் கூறப்பெறும். அடிகளது ஞான சாதனத்திற்குப் பொதுவாகத் திருமுறைகளும் சிறப்பாகச் சம்பந்தர் அருளிச் செயல்களும் பெரிதும் துணைபுரிந்தன என்பது இவற்றாற் பெறப்படும் பேருண்மை.

**கற்பம் பல முயன்றாலும் பெறலரும் திறனெலாம்**
**ஒரு பகற்பொழுதில் அளித்தது.**

பல கற்ப காலங்கள் முயன்றாலும் பெறுதற்கரிய திறனெல்லாம் ஒரு பகலில் ஆளுடைய பிள்ளையார் தனக்களித்ததாக அடிகள் கூறுவர்.

**வருபகற் கற்பம் பலமுயன் றாலும்**
**வரலருந் திறனெலாம் எனக்கே**
**ஒருபகற் பொழுதில் உறஅளித் தனைநின்**
**உறுபெருங் கருணைஎன் உரைப்பேன்**
**பெருமண நல்லூர்த் திருமணங் காணப்**
**பெற்றவர் தமையெலாம் ஞான**
**உருவடைந் தோங்கக் கருணைசெய் தளித்த**
**உயர்தனிக் கவுணிய மணியே.**

**-4 ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை 10.**

மேலும் வருத்தமில்லாத வகையொன்றைத் தனக்குத் தெரிவித்தருளியமையை எட்டாவது திருப்பாடலிலும், உலகியல் உணர்வு அணுத்துணையும் இல்லாத சிறிய பிள்ளைப் பருவத்திலேயே தனக்குள்ளிருந்து அருள்நெறியினின்று விலகாது காத்தருளியமையை முதல் பாடலிலும் குறிப்பிடுகின்றனர்.

**செவ்வகை ஒருகால் படுமதி அளவே**
**செறிபொறி மனம்அதன் முடிவில்**
**எவ்வகை நிலையும் தோற்றும்நீ நினக்குள்**
**எண்ணிய படிஎலாம் எய்தும்**
**இவ்வகை ஒன்றே வருத்தமில் வகைஎன்**
**றெனக்கருள் புரிந்தசற் குருவே**
**தெவ்வகை அமண இருளற எழுந்த**
**தீபமே சம்பந்தத் தேவே.**

**உலகியல் உணர்வோர் அணுத்துணை யேனும்**
**உற்றிலாச் சிறியஓர் பருவத்**
**திலகிய எனக்குள் இருந்தருள் நெறியில்**
**ஏற்றவுந் தரமிலா மையினான்**



RangaRakes tamilnavarasam.com

**விலகுறுங் காலத் தடிக்கடி ஏற**
**விடுத்துப்பின் விலகுறா வண்ணம்**
**அலகிலா உணர்ச்சி அளித்தனை உன்றன்**
**அருட்கடற் பெருமைஎன் புகல்வேன்**
**திலகநற் காழி ஞாநசம் பந்தத்**
**தெள்ளமு தாஞ்சிவ குருவே.**

**-4, ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை 8,1**

பிள்ளையாரின் அருள்வாழ்வில் நடைபெற்ற அற்புதங்களில் ஈடுபடல்

சம்பந்தப்பெருமான் மயிலையில் எலும்பைப் பெண்ணாக்கியது பெருமண நல்லூரில் திருமணங்காண வந்தார் அனைவர்க்கும் முத்தி தந்தது ஆகிய அற்புதங்களில் அடிகள் மிகுதியும் ஈடுபடுவர். பிள்ளையார் எலும்பைப் பெண்ணாக எழுப்பிய நாளில் தேவர்களைப் பார்த்து வானம் சிரித்தது எனப்பாடுவர்.

**நல்லமு தம்சிவை தான்தரக் கொண்டுநின் நற்செவிக்குச்**
**சொல்லமு தந்தந்த எங்கள் பிரான்வளஞ் சூழ்மயிலை**
**இல்லமு தந்திகழ் பெண்ணாக என்பை எழுப்பியநாள்**
**சில்லமு தம்பெற்ற தேவரை வானஞ் சிரித்ததன்றே.**

**-1, திருஅருண் முறையீடு 131**

எலும்பைப் பெண்ணாக்கியதைக் கண்டு தேவர்கள் வானத்திலிருந்து பூமாரி பொழிந்தார்கள். பூமாரி பொழிந்த தேவர்களைப் பார்த்து வானம் சிரித்தது. தேவர்களே! நீங்கள் சாகாமையைத் தரும் அமுதம் உண்கிறீர்கள். ஆனாலும் செத்தாரை எழுப்ப உங்களால் முடிவதில்லை. உங்களால் ஆகாதா செயலைப் பூமியில் ஒருவன் செய்துவிட்டான். அது கண்டு நீங்களும் நாணமின்றிப் பூமாரி பொழிகின்றீர்களே என்று சிரித்ததுபோலும்.

இறைவா! நின் சீரினைச் சம்பந்தர் சொல்ல, எலும்பு பெண்ணானதென்பர்; அது பெரிதல்ல, சைவ வடிவான ஞான சம்பந்தரின் சீரைச் சொன்னால் சாம்பரும் தெய்வவடிவாகும், எலும்பு பெண்ணாதல் வியப்பன்று எனப்பாடி மகிழ்வர்.

**பண்ணாலுன் சீரினைச்சம் பந்தர்சொல வெள்ளெலும்பு**
**பெண்ணான தென்பார் பெரிதன்றே-அண்ணாஅச்**
**சைவவடி வாஞான சம்பந்தர் சீருரைக்கில்**
**தெய்வவடி வாஞ்சாம்பர் சேர்ந்து.**

**-1, சிவநேச வெண்பா 41**

பெருமணநல்லூர்த் திருமணத்தை நினைந்து மகிழும் அடிகள் ஆளுடைய பிள்ளையார் தனது திருமணத்திற்கு வந்திருந்த அனைவர்க்கும் வீட்டுப் பேறு அருளியதைப் போற்றுவாராய், இறைவனே! ஞான சம்பந்தப் பெருமானுடைய திருமண விழாவில் பொருள் சுமக்கும் ஆட்களுள் யான் ஒருவனாக இருந்திருப்பேனேல், அந்நாளே வீடு பெற்றிருப்பேன், இன்று நின் தாள்கள்


RangaRakes tamilnavarasam.com

வருந்துமாறு வேண்ட வேண்டியதில்லை. அந்நாளில் தடைப்பட்டுவிட்டேன், ஆதலினால் இந்நாள் நின்தாள் வருந்த வேண்ட வேண்டியவனாக இருக்கிறேன் என்பார்.

**எங்கோவே யான்புகலி எம்பெருமான் தன்மணத்தில்**
**அங்கோர் பொருட்சுமையாள் ஆனேனேல்-இங்கேநின்**
**தாள்வருந்த வேண்டேன் தடைபட்டேன் ஆதலினிந்**
**நாள்வருந்த வேண்டுகின்றேன் நான்.**

**-1, சிவநேச வெண்பா 42**

திருஞான சம்பந்தர் திருமண நிகழ்ச்சியில் அடிகள் எவ்வளவு தூரம் உள்ளத்தைப் பறிகொடுத்தாரென்பது இதனால் விளங்கும்.

**பெருமண நல்லூர்த் திருமணங் காணப்**
**பெற்றவர் தமையெலாம் ஞான**
**உருவடைந் தோங்கக் கருணைசெய் தளித்த**
**உயர்தனிக் கவுணிய மணியே**

என்றும் 'அருண் மணத்தில் ஒளி அனைவரையும் ஆக்கும் மாண்பன்' என்றும் போற்றுவர்.

## ஆளுடைய பிள்ளையாரின் பொன்மொழிகளைத் தம் நெஞ்சுக்கு எடுத்துரைத்தல்

அடிகள் தமது நெஞ்சுக்கு அறிவுறித்தலாகப் பாடியருளிய நெஞ்சறிவுறுத்தலில்,

**... ... ... ... .... .... .... .... .... ... இறையோன்**
**புலனைந்தும் என்றருளும் பொன்மொழியை மாயா**
**மலமொன்றி அந்தோ மறந்தாய்...நிலனொன்றி**

என்றும்,

**... ... ... ... ... ... ... ... ... ... ...சம்பந்தர்**
**அற்றவருக் கற்றசிவ னாமெனுமப் பொன்மொழியை**
**மற்றைமொழி போன்று மறந்தனையே...சிற்றுயிர்க்குக்**

**....1, நெஞ்சறிவுறுத்தல் 470, 525**

என்றும், சம்பந்தரின் பொன்மொழிகளை நெஞ்சுக்கு எடுத்துக்கூறி அவற்றை மறந்தனையே என்றருளுவர். புலனைந்தும் என்றருளிய பொன்மொழியாவது 'புலனைந்தும் பொறி கலங்கி' என்னுந் தொடக்கத்தையுடைய ஐயாற்றுத் தேவாரமாம். {52} இதனை இறையோன் அருளும் பொன்மொழி எனக்கூறி, ஞானசம்பந்தரை இறையோனாகச் சொன்னதனை ஆழ்ந்து கருதுக. அற்றவருக் கற்ற சிவனாம் என்னும் பொன் மொழியாவது 'வெற்றவே அடியார்' என்று



RangaRakes tamilnavarasam.com

தொடங்கும் திருவாலவாய்த் தேவாரமாம்.{53} 'அற்றவர்க்கு அற்ற சிவன்' என்னும் சம்பந்தர் பொன்மொழியைத் தாயுமானாரும் எந்நாட்கண்ணியுள்,

**அற்றவர்க் கற்றசிவன் ஆம்என்ற அத்துவித**
**முற்றுமொழி கண்டருளில் மூழ்குநாள் எந்நாளோ**

எனப் போற்றியருளுவார்.

{52. **புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி**
**அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி**
**அலமந்த போதாக அஞ்சேலென்**
**றருள்செய்வான் அமருங் கோயில்**
**வலம்வந்த மடவார்கள் நடமாட**
**முழவதிர மழையென் றஞ்சிச்**
**சிலமந்தி அலமந்து மரமேறி**
**முகில்பார்க்கும் திருவை யாறே.**

**-தேவாரம் (1-130-1) 1394 திருவையாற்றுத்**
**திருப்பதிகம்**

{53. **வெற்றவே யடியா ரடிமிசை வீழும்**
**விருப்பினன் வெள்ளைநீ றணியும்**
**கொற்றவன் றனக்கு மந்திரி யாய**
**குலச்சிறை குலாவிநின் றேத்தும்**

**ஒற்றைவெள் விடைய னும்பரார் தலைவ**
**னுலகினி லியற்கையை யொழித்திட்**
**டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற**
**வாலவா யாவது மிதுவே.**

**-தேவாரம் (3-120-2)4091 திருஆலவாய்த்**
**திருப்பதிகம்**}

ஆளுடைய பிள்ளையாரையும், அவரது அருள்வாழ்வில் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சிகளையும், அவரது அருளிச் செயல்களையும் எண்ணி உள்ளங் குழைந்து மகிழும் அடிகளார் பிள்ளையார் துதியாகப் பாடியருளிய தேனினுமினிய திருப்பாடலொன்றைக் கூறிப் பிள்ளையாரைப் பற்றிய இப்பகுதியை நிறைவு செய்வாம்.

**சீரார் சண்பைக் கவுணியர்தம் தெய்வமரபில் திகழ்விளக்கே**
**தெவிட்டா துளத்தில் தித்திக்கும் தேனே அழியாச் செல்வமே**
**காரார் மிடற்றுப் பவளமலைக் கண்ணின் முளைத்த கற்பகமே**
**கரும்பே கனியே என்இரண்டு கண்ணே கண்ணிற் கருமணியே**
**ஏரார் பருவம் மூன்றில்உமை இனிய முலைப்பால் எடுத்தூட்டும்**
**இன்பக் குதலை மொழிக்குருந்தே என்ஆ ருயிருக் கொருதுணையே**
**பேரார் ஞான சம்பந்தப் பெருமா னேநின் திருப்புகழைப்**

**பேசு கின்றோர் மேன்மேலும் பெருஞ்செல் வத்தில் பிறங்குவரே.**

## ஆளுடைய அரசுகள்

'ஒண்ணுளே ஒன்பது வாய்வைத்தாய்' எனத் திருப்புகலூர்த் திருத்தாண்டகத்தில் ஆளுடைய அரசுகள் அருளுவதை எண்ணி உருகும் அடிகள்

**கண்ணுளே விளங்குகின்ற மணியே சைவக்**
**கனியேநா வரசேசெங் கரும்பே வேதப்**
**பண்ணுளே விளைந்தஅருட் பயனே உண்மைப்**
**பதியோங்கு நிதியேநின் பாதம் அன்றி**
**விண்ணுளே அடைகின்ற போகம் ஒன்றும்**
**விரும்பேன்என் றனையாள வேண்டுங் கண்டாய்**
**ஒண்ணுளே ஒன்பதுவாய் வைத்தாய் என்ற**
**உத்தமனே{54} சித்தமகிழ்ந் துதவு வோனே.**

-5

{54. திருநாவுக்கரசர் ஒண்ணுளே ஒன்பது வாய் வைத்தாய் என்றருளிய திருப்பாடல்.

**எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ**
**எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்**
**கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்**
**கழலடியே கைதொழுது காணின் அல்லால்**
**ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்**
**ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்**
**புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்**
**பூம்புகலூர் மேவிய புண்ணியனே**

**-(6-99-1)7215**

என்னும் புகலூர் மறுமாற்றத் திருத்தாண்டகமாகும் }

என ஆளுடைய அரசுகளருண்மாலையிற் பாடுவர் 'சொற்றுணை வேதியன்' என அரசுகள் அருளியதை எண்ணுவாராய்,

**சொற்றுணை வேதியன் என்னும் பதிகச் சுருதியை{55} நின்**
**பொற்றுணை வார்கழற் கேற்றியப் பொன்னடிப் போதினையே**
**நற்றுணை யாக்கரை ஏறிய புண்ணிய நாவரசைக்**
**கற்றுணை யாதிந்தக் கற்றுணை யாமென் கடை நெஞ்சமே.**

**-1, திருஅருண்முறையீடு 132**



RangaRakes tamilnavarasam.com

எனப்பாடுவர். நாவுக்கரசரைச் சமணர்கள் கருங்கல்லிற் அக்ட்டி உவர் நீர்க்கடலில் வீழ்த்தினார்கள். அதுபோன்றே மாயையாகிய சமணர்கள் மனமாகிய கருங்கல்லில் என்னைக் கட்டிப் பாவமாகிய கடலில் வீழ்த்துகின்றனர். நானும் ஐந்தெழுத்தோதுகின்றேன் என்னையும் கரையேற்ற வேண்டும் என வேண்டுவார்.

**சீர்தரு நாவுக் கரையரைப் போலிச் சிறியனும் ஓர்**
**கார்தரு மாயைச் சமணான் மனக்கருங் கல்லிற் கட்டிப்**
**பார்தரு பாவக் கடலிடை வீழ்த்திடப் பட்டுழன்றே**
**ஏர்தரும் ஐந்தெழுத் தோதுகின் றேன்கரை ஏற்றரசே.**

**-1, திரு அருண்முறையீடு 135**

திருநல்லூரில் நீ திருவடி தீட்சை செய்தபோது அரசுகளின் சென்னி எப்படிக் குளிர்ந்ததோ, யான் அதனை எண்ணுந்தோறும் என் தலை மட்டுமோ, மனமும் குளிர்கின்றதே என அரசுகள் பெற்ற திருவடி தீக்கையைப் போற்றிப் பாடியருளுகின்றமை அழகிதாம்.

**துடிவைத்த செங்கை அரசேநல் லூரில்நின் தூமலர்ப்பொன்**
**அடிவதித்த போதெங்கள் அப்பர்தம் சென்னி யதுகுளிர்ந்தெப்**
**படிவைத்த தோஇன்ப மியான்எணுந் தோறும்இப் பாவிக்குமால்**
**குடிவைத்த புன்தலை ஒன்றோ மனமும் குளிர்கின்றதே.**

**-1, திரு அருண்முறையீடு 151**

**{55. சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே**

**-தேவாரம் (4-11-1) 4262 }**

## ஆளுடைய நம்பிகள்

### வடகலைக்கும் தென்கலைக்கும் உறுகணக்கு.

**இலைக்குளநீ ரழைத்ததனில் இடங்கர்உற அழைத்ததன்வாய்த்**
**தலைக்குதலை மதலைஉயிர் தழைப்பஅழைத் தருளியநின்**
**கலைக்கும்வட கலையின்முதற் கலைக்கும்உறு கணக்குயர்பொன்**
**மலைக்கும்அணு நிலைக்கும்உறா வந்தொண்டப் பெருந்தகையே.**

**-4, ஆளுடைய நம்பிகள் அருண்மாலை 3**

முதலையுண்ட பிள்ளையை வர அழைத்தருளிய திருப்பாட்டாகிய தென்கலைக்கும், வடகலையின் முதற்கலையாகிய வேதத்திற்கும் உறு கணக்கு பொன்மலைக்கும் அணுநிலைக்கும் உறாது ஆரிய வேதங்களினும் தமிழ்த்



RangaRakes tamilnavarasam.com

திருமுறைகள் சிறந்தனவென்பது பொருள். ஆரியமறைகள் அணு. தமிழ்மறைகள் மலை, அதுவும் பொன்மலை

### ஏழிசையாய் என்னும் திருப்பாட்டு

ஆளுடைய நம்பிகளாகிய சுந்தரர்,

**ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய**
**தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி**
**மாழை யொண்கண்பரவையைத் தந்தாண்டானை மதியில்லா**
**ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனேயே.**

**-7, திருமுறை, 51 திருவாரூர்த் திருப்பதிகம் 10 (7751)**

என்றருளும் திருப்பாட்டை நினைந்து கரையும் அடிகள் 'ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய என்னுடைய தோழனுமாய் என்று நீ முன் சொன்ன பெருஞ் சொற்பொருளை அடியேன் ஆழ்ந்து நினைத்திடில் கருவி கரணங்களெல்லாம் கரைந்து கரைந்து இன்புறுவதுகாண்' என்று போற்றியருளுவர்.

**ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய**
**தோழனுமாய் என்றுமுன்நீ சொன்னபெருஞ் சொற்பொருளை**
**ஆழநினைத் திடில்அடியேன் அருங்கரணம் கரைந்துகரைந்**
**தூழியல்இன் புறுவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே**

**-4, ஆளுடையநம்பிகள் அருண்மாலை5**

தாயுமானவரும் என்னுடைய தோழனுமாய் என்ற திருப்பாட்டை எந்நாட்கண்ணி (45) அறிஞர் உரை (13) யுள்,

**என்னுடைய தோழனுமாய் என்ற திருப்பாட்டின்**
**நன்னெறியைக் கண்டுரிமை நாஞ்செய்ய தெந்நாளோ -4**

எனப் போற்றியருளுவர்.

### யானை மீது எழுந்தருளிய திக்கோலத்தைக் காணப்பெற்றிலனே.

நாவலூர்ப் பெருந்தகையே! வானமும், இந்திரனும், மாலும் அயனும், தவமுனிவர்களும் காண வெள்ளையானையின் மீது எழுந்தருளிக்கயிலை சென்ற காட்சியை நான் காணப்பெற்றிலனே என உருகுவர்.

**வான்காண இந்திரனும் மாலயனும் மாதவரும்**
**தான்காண இறைஅருளால் தனித்தவள யானையின்மேல்**
**கோன்காண எழுந்தருளிக் குலவியநின் கோலமதை**
**நான்காணப் பெற்றிலனே நாவலூர்ப் பெருந்தகையே**

**-4, ஆளுடைய நம்பிகள் அருண்மாலை 6.**



RangaRakes tamilnavarasam.com

உன் திருப்பாட்டைத் தினந்தோறும் நான்படிக்கும் போது,

தனிக்கருணைப் பெருந்தகையே! தேனென இனிக்கும் அமுதாகிய உன் திருப்பாட்டைத் தினந்தோறும் நான் படிக்கும் போது என்னை நான் அறியேன். நாஒன்றுமட்டுமோ படிக்கும்; ஊனும் படிக்கும், உள்ளமும் படிக்கும், உயிரும்படிக்கும், உயிர்க்குயிரும் படிக்கும் இஃது என் அனுபவங்காண் எனத்தாம் திருப்பாட்டில் தினமும் திளைத்து மகிழும் வண்ணத்தை நம்பிகளிடம் விண்ணப் பித்தருளுவர்.

**தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்தோறும்**
**நான்படிக்கும் போதென்னை நானறியேன் நாஒன்றோ**
**ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்**
**தான் படிக்கும் அநுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே.**

**-4, ஆளுடைய அடிகள் அருண்மாலை 7**

தினந்தோறும் நான் படிக்கும்போது என்றதனை நோக்குக. சுந்தரமூர்த்திகள் தேவாரத்தைத் 'திருப்பாட்டு' என்பது வழக்கு. ஈண்டு அடிகள் திருப்பாட்டு என்றே குறிப்பிடுகின்றனர்.

**உன் முடிமேல் இறைவன் திருவடிக்கு என்ன ஆசையோ**

திருவதிகையில் சித்தவட மடத்தில் துயின்ற நம்பிகளாகிய ஊரனுக்கு {56} அவர் மறுப்பவும் வலிந்து திருவடிதீக்கை செய்வித்தனையே அவர் திருமுடிமேல் நின் திருவடிக்கு என்ன ஆசைகண்டாய்? என நம்பிகள் திருவடிதீக்கை பெற்றதனை வியந்து பாராட்டியருளுவர்.

**ஒருமுடி மேல்பிறை வைத்தோய் அரிஅயன் ஓண்மறைதம்**
**பெருமுடி மேலுற வேண்ட வராதுனைப் பித்தனென்ற**
**மருமுடி யூரன் முடிமேல் மறுப்பவும் வந்ததவர்**
**திருமுடி மேலென்ன ஆசைகண் டாய்நின் திருவடிக்கே.**

**-1, திரு அருண்முறையீடு 152**

**{56. ஊரன் என்பது சுந்தரமூர்த்திகளின் பெயர்**
**சென்று கண்ணுதல் திருமுன்பு தாழ்ந்துவீழ்ந் தெழுந்துசே ணிடைவிட்ட**
**கன்று கோவினைக் கண்டணைந் ததுஎனக் காதலின் விரைந்தெய்தி**
**நின்று போற்றிய தனிப்பெருந் தொண்டரை நேரிழை வலப்பாகத்**
**தொன்றும் மேனியர் "ஊரனே! வந்தனை" என்றனர் உலகுய்ய.**

**சேரர் காவலர் பரிவுடன் கேட்பித்த திருஉலாப் புறங்கொண்டு**
**நாரி பாகரும் நலம்மிகு திருவருள் நயப்புடன் அருள்செய்வார்**
**ஊர னாகிய ஆலால சுந்தர னுடனமர்ந் திருவீரும்**
**சார நங்கண நாதராம் தலைமையில் தங்குமென் றருள்செய்தார்.**



RangaRakes tamilnavarasam.com

-பெரியபுராணம் 4275, 4281.}

**திருமால் பாவைவிட்டுவாயிற்படியாய் வடிவெடுக்க நேர்ந்திலனே**

இறைவனது திருவடிகளைக் காண்பதற்காகத் திருமால் ஏனோ வராகமாக வடிவெடுத்து மண்ணைக் குடைந்து அலைந்தான். அப்படியும் காணப்பெற்றிலனே. சுந்தரனாரின் பரவை வீட்டுத் தலைக்கடையில் வாயிற்படியாய் வடிவெடுக்க நேர்ந்திலன். அவ்வாறு வடிவெடுத்திருந்தால் சுந்தரர்க்காகப் பரவையாரிடம் ஒரு முறைக்கிருமுறையாக இறைவன் தூது சென்றபோது திருவடிக்காட்சியோடு திருவடியைச் சூடவும் பெற்றிருக்கலாமே என நயமாகப்பாடியருளுவர்.

**எம்பரவை யோமண் ணிடந்தலைந்தான் சுந்தரனார்**
**தம்பரவை வீட்டுத் தலைக்கடையாய்-வெம்பனையாய்**
**வாயிற் படியாய் வடிவெடுக்க நேர்ந்திலனே**
**மாயப்பெயர் நீண்ட மால்.**

-1, சிவநேசவெண்பா 44

**சுந்தரர் மணத்தில் தடுத்தாட்கொண்டது**

சுந்தரரதுன் திருமணத்தில் நீ வந்து தடுத்தாட்கொண்டதுபோல் என் மணத்தில் நீ வராவிடினும் உனது கணங்களுள் ஒன்று வந்து அழைப்பதானால் முன்பு செய்ததன்றி இன்னும் ஒரு மணம் செய்வேன் என்பார். 'முன்மணத்தில் சுந்தரரை முன்வலுவில் கொண்டதுபோல்' என்னும் திருப்பாடல் முன்னரே அடிகளின் திருமணத்தைக் கூறும்போது எடுத்துக்காட்டப்பட்டது (பக்கம் 65.) சுந்தரப்பெருமான் மணத்தில் வழக்கிட்டதுபோல் நீர் ஓலை ஒன்றைக் காட்டுதல் வேண்டா. தொண்டன் என்று ஒருசொல் உரைப்பீராகில் அது போதும். வேலை ஒன்றல்ல மிகப்பல எனினும் வெறுப்பிலாது செய்குவன் எனப்பாடியருளுவார்,

**மாலை ஒன்றுதோள் சுந்தரப் பெருமான்**
**மணத்தில் சென்றவண் வழக்கிட்ட தெனவே**
**ஓலை ஒன்றுநீர் காட்டுதல் வேண்டாம்**
**உவந்து தொண்டன்என் றுரைப்பிரேல் என்னை**
**வேலை ஒன்றல மிகப்பல எனினும்**
**வெறுப்பி லாதுளம் வியந்துசெய் குவன்காண்**
**சோலை ஒன்றுசீர் ஒற்றியூர் உடையீர்**
**தூய மால்விடைத் துவசத்தி னீரே**

-2 கொடி விண்ணப்பம் 1

**கச்சூரில் பிச்சையேற்றூட்டியது**

திருக்கச்சூரில் இறைவன் பிச்சையேற்று சுந்தரர்க்கு ஊட்டியதை,

**பைச்சூர் அரவப் படநடத் தான்அயன் பற்பலநாள்**



RangaRakes tamilnavarasam.com

**எய்ச்சூர் தவஞ்செய் யினும்கிடை யாப்பதம் ஏய்ந்துமண்மேல்**
**வைச்சூரன் வன்தொண்டன் சுந்தரன் என்னுநம் வள்ளலுக்குக்**
**கச்சூரில் சோறிரந் தூட்டின ரால்எம் கடவுளரே.**

**-2, திருஅருள்வழக்க விளக்கம் 6**

எனப்போற்றுவர்.

<u>ஆளுடைய அடிகள்</u>

**திருவாசக அனுபவம்**

திருவாசகம் அடிகளது வழிபடுநூல் அடிகள் திருவாசகத்தில் ஓரம் வாய்ந்தவர் எனத் தம் ஆசிரியர் பூவை அட்டாவதானம் கலியாணசுந்தரயதீந்திரர் கூறியதாக மணி திருநாவுக்கரசு முதலியார் எழுதியுள்ளார் (பக்கம் 54). திருவாசக அனுபவத்தை நான் அனுபவிக்க அருளவேண்டும் என மணிவாசகப் பெருமானிடமே அடிகள் வேண்டுகின்றார்.

**தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க**
**வாசகனே ஆநந்த வடிவான மாதவனே**
**மாசகன்ற நீதிருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்**
**ஆசகன்ற அநுபவம்நான் அநுபவிக்க அருளுதியே.**

**-4, ஆளுடைய அடிகள் அருண்மாலை 1**

அன்புருவம், அருளுருவம், இன்புருவம்.

வாதவூர் இறையே! புருவ நடுவில் மனத்தைவைத்து எலும்புருவாகி நெடுங்காலம் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாந்தனர். நீயோ அன்புருவம் பெற்று அதன்பின் அருளுருவம் அடைந்து, பின்னர் இன்புருவம் ஆயினை எனப்புகழ்வார்.

**மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்**
**என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க**
**அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்துபின்னர்**
**இன்புருவம் ஆயினைநீ எழில்வாத வூர்இறையே.**

**-4, ஆளுடைய அடிகள் அருண்மாலை 3**

சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் என மூவகை உடம்புகளை அடிகள் கூறுவர். இம்மூன்றுமே இங்கு அன்புருவம், அருளுருவம், இன்புருவம் எனக்கூறப்பட்டன. அன்புருவம் அருளுருவம் இன்புருவம் என்ற வரிசையிற் கூறுவதே படிமுறையைக் காட்டுகிறது. அன்புறின் அருளுறும். அருளுறின் இன்புறும்.



RangaRakes tamilnavarasam.com

## "என்னையும் இருப்பதாக்கினன்" என்றதன் பொருள் என்ன?

மாணிக்கவாசகப்பெருமான் திருவாசகம் திரு அண்டப்பகுதியில் 'என்னையும் இருப்பதாக்கினன்' எனக் கூறியருளுகின்றார்.

**வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்**
**தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை**
**குரம்பை தோறும் நாயுட லகத்தே**
**குரம்புகொண்டு இன்தேன் பாய்த்தினன் நிரம்பிய**
**எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது**
**உள்ளம் கொண்டுஓர் உருச்செய்தாங்கு எனக்கு**
**அள்ளூறு ஆக்கை அமைத்தனன் ஒள்ளிய**
**கன்னற் களிதேர் களிறெனக் கடைமுறை**
**என்னையும் இருப்ப தாக்கினன் என்னில்**
**கருணை வான்தேன் கலக்க**
**அருளொடு பராவமுது ஆக்கினன்**
**பிரமன்மால் அறியாப் பெற்றி யோனே.**

**-170-182**

இதனுள் என்னையும் இருப்பதாக்கினன் என்பதன் பொருளைத் தமக்கு விளக்கியருளவேண்டும் என மணிவாசகப் பெருமானையே அடிகள் வினவுகின்றாஅர்.

**உருஅண்டப் பெருமறைஎன் றுலகமெலாம் புகழ்கின்ற**
**திருஅண்டப் பகுதிஎனும் திருஅகவல் வாய்மலர்ந்த**
**குருஎன்றெப் பெருந்தவரும் கூறுகின்ற கோவேநீ**
**இருஎன்ற தனிஅகவல் எண்ணம்எனக் கியம்புதியே**

**-4, ஆளுடைய அடிகள் அருண்மாலை 4**

திரு அண்டப் பகுதியை, 'உரு அண்டப்பெருமறை என்று உலகமெலாம் புகழ்கின்ற திருஅண்டப்பகுதி' எனச்சிறப்பித்தமை காண்க. திருவாசகத்தை அனுபவித்தோர் மூவர். ஒருவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். மற்றொருவர் அருட்பிரகாச வள்ளலாராம் நமது அடிகள். பிறிதொருவர் ஐரோப்பியப் பாதிரியராகிய டாக்டர் ஜி.யு.போப். அடிகளது திருப்பாடல்களுள் திருவாசகத் தொடர்கள் எடுத்தாளப்பட்டிருப்பதும் திருவாசக ஈடுபாட்டைக் காட்டும்.

## என் வாட்டமெலாம் வந்தொருக்கால் மாற்றுதியே.

வாதவூர் நாயகனே! அடியேனது வாட்டத்தை யெல்லாம் நீ ஒருகால் வந்து மாற்றவேண்டும் என வேண்டுவார்.

**தேடுகின்ற ஆநந்தச் சிற்சபையில் சின்மயமாய்**
**ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே**
**நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்**



RangaRakes tamilnavarasam.com

**வாடுகின்ற வாட்டமெலாம் வந்தொருக்கால் மாற்றுதியே.**

**-4, ஆளுடைய அடிகள் அருண்மாலை 5.**

சிற்சபையில் இறைவன் செய்யும் திருநடனம் சின்மயமானது என அருளியதைக் காண்க. ஆடுகின்ற சேவடிக் கீழ் ஆடுகின்ற ஆரமுதே என மாணிக்கவாசகரைக் குறிப்பது நயமானது. நடராசப் பெருமானது இடப் புறத்தில் சிவகாமியம்மையும் வலப்புறத்தில் தூக்கிய திருவடியின் கீழ் மாணிக்கவாசகரும் இருப்பர். ஆதலாற்றான் ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே என அடிகள் அருளினர். நடராசரோடு உடனிருக்கும் நிலை வாசகர்க்கே உரிய தனிச் சிறப்பு.

### திருவாச இன்பம்

திருவாசகத்தை எண்ணுந்தோறும் எய்தும் இன்பம் காமமிகு காதலன்தன் கலவிதனைக் கருதுகின்ற கற்புடையாள் ஒருத்தி எய்தும் இன்பத்தினும் மிக்க இன்பமாகும் என அருளுவது அடிகளின் திருவாசகக் காதலைக் காட்டும்.

**சேமமிகும் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்**
**மாமணியே நீஉரைத்த வாசகத்தை எண்ணுதொறும்**
**காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற**
**ஏமமுறு கற்புடையாள் இன்பினும்இன் பெய்துவதே.**

**-4, ஆளுடைய அடிகள் அருண்மாலை 6**

நான் கலந்து பாடுங்கால்

வான்கலந்த மாணிக்க வாசக! நின் திருவாசகத்தை நான் கலந்து பாடுங்கால், நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து என் ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கிறது என அடிகள் அருளுகின்றார்.

**வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை**
**நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ் சுவைகலந்தேன்**
**ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.**

**-4, ஆளுடைய அடிகள் அருண்மாலை 7**

இது அடிகள் திருவாசகத்தைப் பாடும் அனுபவமாகும். திருவாசகம் முதலிய அருட்பாக்களைப் பாடும்போது ஊன்கலந்து உயிர்கலந்து பாடவேண்டும். அங்ஙனம் அடிகள் பாடி இன்புற்றுப் பேறு பெற்றனர். மாணிக்கவாசகரை 'வான் கலந்த மாணிக்கவாசக' என்றதனை நோக்குக. திருச்சிற்றம்பலத்தே அவர் இறைவனோடிரண்டறக் கலந்தமையால் வான் கலந்த என்றார். 'திருச்சிற்றம்பலத்தே வானலாற் பிறிதொன்றிலை' என்பது அடிகளின் திருவாக்கு.

### நின் ஒரு மொழியே போதும்



RangaRakes tamilnavarasam.com

நின் வாசகத்தில் ஒரு மொழியே என்னையும் என்னை உடையானையும் ஒன்றுவித்துத் தருமொழியாம் என்று போற்றியருள்வர்.

**வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்**
**ஒருமொழியே என்னையும்என் உடையனையும் ஒன்றுவித்துத்**
**தருமொழியாம் என்னில்இனிச் சாதகமென் சஞ்சலமென்**
**குருமொழியை விரும்பிஅயல் கூடுவதென் கூறுதியே.**

**-4, ஆளுடைய அடிகள் அருண்மாலை 8**

'சாதகமேன்' என்றது திருவாசகத்தை தவிர வேறு சாதகம் வேண்டுவதில்லை என்றவாறாம். 'குரு மொழியை விரும்பி அயல் கூடுவதேன்' என்றது திருவாசகமாகிய குரு மொழி இருக்க அதனை விட்டுக் குருமொழியை விரும்பி வேறிடஞ் செல்வதேன் என்றவாறாம். மணிமொழியைக் குரு மொழியாகவே அடிகள் கொண்டனர்.

## பறவைகளும் வேட்டமுறும் விலங்குகளும் நாட்டமுறும்

மாணிக்கவாசக! நின் வாசகத்தைக் கேட்டபொழுது கீழான பறவையினங்களும் வேட்டமுறும், பொல்லாத விலங்குகளும் மெய்ஞ்ஞான நாட்டமுறும். எனவே இங்கு நான் திருவாசகத்தைக் கேட்டு வேட்டமும் மெய்ஞ்ஞான நாட்டமும் உறுதல் வியப்பன்றே என விண்ணப்பிப்பர்.

**வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்**
**கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்**
**வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான**
**நாட்டமுறும் என்னில்இங்கு நானடைதல் வியப்பன்றே.**
**-4, ஆளுடைய அடிகள் அருண்மாலை 10**

## ஆளுடைய அடிகளுக்காக இறைவன் செய்தருளிய அற்புதங்களைப் போற்றுதல்.

சுந்தரர் யானைமீதமர்ந்து கயிலை சென்ற காட்சியைக் கண்டிலனே என்பது போன்றே, மாணிக்கவாசகர்க்காகக் கொண்ட குதிரைச் சேவகக் கோலத்தை என் கனவிலாயினும் காட்டு என இறைவனை வேண்டுவார். அப்பாடலைப் பக்கம் 148-இல் காண்க. அன்று இறைவன் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டபோது வாதவூரர் நெஞ்சம் என்ன பாடு பட்டதோ, அதனை இன்று கேட்டபோது என் நெஞ்சம் இடிபட்டதே என இறைவனிடம் விண்ணப்பிப்பது அடிகளின் அருள் உள்ளத்தைக் காட்டும்.

**வன்பட்ட கூடலில் வான்பட்ட வையை வரம்பிட்டநின்**
**போன்பட்ட மேனியின் புன்பட்ட போதில் புவிநடையாம்**
**துன்பட்ட வீரர்அந் தோவாத வூரர்தம் தூயநெஞ்சம்**
**என்பட்ட தோஇன்று கேட்டஎன் நெஞ்சம் இடிபட்டதே.**



RangaRakes tamilnavarasam.com

**-1, திருஅருண்முறையீடு 81**

புவி நடையாம் துன்பு அட்ட வீரர்என மாணிக்கவாசகர் இதனுள் போற்றப்படுகிறார். புவிநடை-உலகநடை.

மாணிக்கவாசகர்க்கு நீ உபதேசித்தது வேதாந்தமோ அன்றிச் சித்தாந்தமோ என இறைவனை நோக்கி வினவுவர்.

**வேத முடிவோ விளங்கா கமமுடிவோ**
**நாத முடிவோ நவில்கண்டாய்-வாதமுறு**
**மாசகர்க்குள் நில்லா மணிச்சுடரே மாணிக்க**
**வாசகர்க்கு நீஉரைத்த வாறு.**

**-1, சிவநேசவெண்பா 46**

வேதமுடிவு-வேதாந்தம், ஆகமமுடிவு-ஆகமாந்தம், சித்தாந்தம்.

<u>திருவைந்தெழுத்தில் பற்று</u>

திருவைந்தெழுத்தில் அடிகள் பெரும்பற்றுக் கொண்டிருந்தனர். அது,

**பெற்ற தாய்தனை மகமறந் தாலும்**
**பிள்ளை யைப்பெறும் தாய்மறந் தாலும்**
**உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்**
**உயிரை மேவிய உடல்மறந் தாலும்**
**கற்ற நெஞ்சகம் கலைமறந் தாலும்**
**கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்**
**நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்**
**நமச்சி வாயத்தை நான்மற வேனே.**

**-2, நமச்சிவாய சங்கீர்த்தன லகரி 7**

என்னும் பாடலால் நன்கறியப்படும். பெற்ற தாயைப் பிள்ளை மறப்பதில்லை. பிள்ளையைப் பெற்ற தாய் மறப்பதில்லை. உடலை, உயிர் மறாப்பதில்லை. உயிரை உடல் மறப்பதில்லை. கற்ற நெஞ்சம் கலை மறப்பதில்லை. கண்கள் இமைப்பதை மறப்பதில்லை. இவையே இயல்பு, இவ்வியல்புகள் மாறி ஒன்றை ஒன்று மறந்தாலும் நமச்சிவாயத்தை நான்மறவேனே என அருளுவது அடிகள் திருவைந்தெழுத்தின் பால் கொண்டிருந்த பற்றின் திறத்தைக் காட்டும்.

**இறுக்கம் இரத்தின முதலியார்க்குத் திருவைந்தெழுத்தை உபதேசித்தது**

இறுக்கம் இரத்தின முதலியார்க்கு எழுதிய கடிதமொன்றில் அடிகள் திருவைந்தெழுத்தை உபதேசித்தருளியுள்ளார்கள். அக்கடிதம் வருமாறு"

<u>உ</u>

**சிவமயம்**

## இது ரகசியம்

அன்பு அறிவு இரக்கம் ஒழுக்க முதலிய நற்குணங்களாற் சிறந்து நமது கண்மணிபோல் விளங்குகின்ற அன்புள்ள தங்களுக்கு சிவபெருமான் திருவருளால் சிவஞானமும் தீர்க்காயுளும் சிந்தித மனோரதசித்தியும் மேன்மேல் உண்டாவதாக. நாளது வரையில் இவ்விடத்தில் ம-ள-ள-ஸ்ரீ நாயக்கரவர்களும் யானும் க்ஷேமம். தங்களுடைய க்ஷேம விபவங்களை அடிக்கடி தெரிவிக்கவேண்டும். எனக்கு எழுதிய கடிதம் இரண்டும் வரக் கண்டு அறிந்தேன். அந்தக் கடிதங்களில் குறித்தபடி இதன் அடியில் சில சிவசந்நிதான சாட்சியாகத் தெரிவிக்கிறேன்.

பிர்ம விஷ்ணு ருத்திராதிகளுடைய பதங்களும் அந்தக் கர்த்தாக்களும் அவர்களால் சிருட்டி திதி சங்காரம் செய்யப்பட்டு வருகிற தேகாதி பிரபஞ்சங்களும் அனித்தியம். ஆகலில் நித்தியமாகியும் என்றும் ஒரு தன்மையுள்ளதாகியும் சச்சிதானந்த வடிவமாகியும் அகண்ட பரிபூரண வஸ்துவாகியும் விளங்கிய சிவமே நமக்குப் பொருள். அன்றியும், தாய் தந்தை குருதெய்வம் சிநேகர் உறவினர் முதலியவர்களும் மேற்குறித்த சிவத்தின் திருவருளேயல்லது வேறில்லை. நாம் பல சனனங்களையுந் தப்பி மேலான இந்த மனிதப் பிறவியெடுத்தது சிவத்தின் திருவருளைப் பெறுவதற்கே. எவ்வகைப் பிரயாசத்தினாலாவது அந்த அருளை அடையவேண்டும். அந்த அருள் எவ்வகையால் வருமென்றால்- எல்லாவுயிர்களிடத்திலும் தயவும் பிரபஞ்சத்தில் வெறுப்பும் சிவத்தினிடத்தில் அன்பும் மாறாது நம்மிடத்திருந்தால் அவ்வருள் நம்மையடையும். நாமும் அதனையடைந்து எதிரற்ற சுகத்திலிருப்போம். இது சத்தியம். இனி மேற் குறித்த சாதனத்தை நாம் பெறுவதற்கு சிவபஞ்சாக்ஷரத் தியானமே முக்கிய காரணமாக இருக்கிறது. ஆகலில், இடைவிடாது நல்ல மனத்தோடு அதனை தியானிக்க வேண்டும். அதனையிதனடியில் குறிக்கின்றேன்.

**ஓம் சிவாயநம**

**"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப் பெற்றேன்" {57}**

**"சிவாயநமவென்று சிந்தித்திருப்பார்க் கபாய மொருநாளுமில்லை". {58}**

**{57. நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே.**

**-திருவாசகம், திருவேசறவு 10(553)**

**{58. சிவாய நமவென்று சிந்தித் திருப்பார்க்
கபாய மொருநாளு மில்லை-உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லம்
விதியே மதியாய் விடும்.**



RangaRakes tamilnavarasam.com

**-நல்வழி 15}**

"நான் செய்த புண்ணியம் யாதோ சிவாயநம வெனவே ஊன் செய்த நாவைக் கொண்டோதப் பெற்றேன்."{59}

{59. **நான்செய்த புண்ணியம் யாதோ சிவாய நமவெனவே**
**ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற் றேன்எனை ஒப்பவரார்**
**வான்செய்த நான்முகத் தோனும் திருநெடு மாலுமற்றைத்**
**தேன்செய்த கற்பகத் தேவனும் தேவருஞ் செய்யரிதே.**

**-திருவருட்பா 1, திருவருண் முறையீடு 90}**

இதனைக் கண்டு தியானித்து வந்தால் பின்பு எல்லாம் விளங்கும்.

தை மீ எ உ. சி. இராமலிங்கம்.

**இதை மற்றவர்களுக்கு வாசித்துக் காட்டப்படாது**

இது

சிரஞ்சீவி மகா-ள-ள ஸ்ரீ இரத்தின முதலியார்
அவர்களுக்கு கொடுப்பது
சிவானுக்கிரகம் விளங்க.

திருமுகத்தின் தொடக்கத்தில் 'இது ரகசியம்' என்றும், இறுதியில் 'இதை மற்றவர்களுக்கு வாசித்துக் காட்டப்படாது' என்றும் அடிகள் குறித்தருளுகின்றனர். 'நானேயோ தவஞ்செய்தேன்' என்னும் திருவாசகத்தையும் 'சிவாய நமவென்று சிந்தித்திருப்பார்க்கு' என்னும் நல்வழியையும், 'நான்செய்தபுண்ணியம் யாதோ' என்னும் தமது திருவாக்கையும் எடுத்துக்காட்டியருளுகின்றனர். திருவைத்தெழுத்தை உபதேசிப்பதாதலினாலும், தமது திருவாக்கை ஆதாரமாகக் குறித்திருப்பதாலும் இதனை ரகசியம் என்றும் மற்றவர்களுக்குக் காட்டப்படாதென்றும் அடிகள் குறித்தருளினர் போலும். இந்த இரகசியத் திருமுகத்தைத் திருவருட்பா திருமுகப் பகுதியில் அச்சிடும் ஆ.பா. அவர்கள் 'இவ் உபதேசத் தெய்வத் திருமுகமானது ஸ்ரீ இறுக்கம் இரத்தின முதலியார் வாழ்நாட்களுக்குப் பிறகு சிற்சில அகவின ஆன்ம நேயர்கள் கைக்கு எட்டி அவரவர்களாலும் தமக்கும் தம்மைச் சார்ந்தவர்க்கும் பயன்படுமாறு பிரதி செய்யப்பட்டிருக்கிறது. சன்மார்க்க சாதகர் யாவரும் அறிந்தனுபவிக்கும் பொருட்டு இஃது இங்கு அச்சிடப்பட்டிருக்கிறது' என ஓர் அமைதியையும் அடிக்குறிப்பாக எழுதியுள்ளார். இரத்தின முதலியார்க்கு எழுதிய பிற திருமுகங்கள் சிலவற்றிலும் அடிகள் பஞ்சாட்சரதியானத்தை வற்புறுத்தியருளினர்.

## திருமுறைகளால் அருள்பெற்றது

### திருநெறிமெய்த் தமிழ்மறையாம் திருக்கடைக்காப்பால்
### இறைவன் திருவுளங்காட்டியருளியது



RangaRakes tamilnavarasam.com

திருநெறிமெய்த் தமிழ்மறை என்பது தேவாரம். திருக்கடைக் காப்பு என்பது சம்பந்தர் பதிகங்கள். சம்பந்தர் தேவாரத்தைத் திருக்கடைக்காப்பு என்பதும் திருநாவுக்கரசர் தேவாரத்தைத் தேவாரம் என்றே கூறுவதும் சுந்தரர் தேவாரத்தைத் திருப்பாட்டு என்பது ஒருவகை வழக்கு. ஒருநாள், திருக்கடைக்காப்பாகிய சம்பந்தர் தேவாரத்தால் இறைவன் அடிகட்குத் தன் திருவுளத்தைக் காட்டியருளினான். காட்டிய நாளில் அடிகள் அதனைத் தெரிந்திலர். பின்னொரு நாள் அடிகளின் உளத்திலிருந்தே இறைவன் பெருநெறியைக் காட்டியருளிய தன் பொருளை அடிகள் உணர்ந்தனர். அது பிழைபடாத் தெய்வமறை என்பதையும் உணர்ந்தனர். திருக்கடைக்காப்பால் திருவுளங்காட்டியதை அடிகள் குறித்தருளும் பாடல் வருமாறு:

**திருநெறிமெய்த் தமிழ்மறையாம் திருக்கடைக்காப் பதனால்**
**திருவுளங்காட் டியநாளில் தெரிந்திலன்இச் சிறியேன்**
**பெருநெறிஎன் உளத்திருந்து காட்டியநாள் அறிந்தேன்**
**பிழைபடாத தெய்வமறை இதுவெனப்பின் புணர்ந்தேன்**
**ஒருநெறியில் எனதுகரத் துவந்தளித்த நாளில்**
**உணராத உளவைஎலாம் ஒருங்குணர்ந்து தெளிந்தேன்**
**தெருணெறிதந் தருளும்மறைச் சிலம்பணிந்த பதத்தாள்**
**சிவகாம வல்லிமகிழ் திருநடத்தெள் ளமுதே.**

**-2, திருஅருள் விலாசம் 2**

**திருமந்திரத் திருமுறையால் உணர்த்தியருளியது.**

இறைவன் திருமந்திரத் திருமுறையால் அடிகட்கு மெய்ம் மொழிப் பொருளொன்றை உணர்த்தியருளினானென்பது,

**திருவளர் திருஅம் பலத்திலே அந்நாள்**
**செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்**
**உருவளர் திருமந் திரத்திரு முறையால்**
**உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்**
**கருவளர் அடியேன் உளத்திலே நின்று**
**காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்**
**மருவிஎன் உளத்தே நம்பிநான் இருக்கும்**
**வண்ணமும் திருவுளம் அறியும்.**

**-6, பிள்ளைப்பெரு விண்ணப்பம் 118**

என்னும் பாடலால் அறியப்பெறும். இத்திருப் பாடலில் அடிகள் மூன்று மெய்ம்மொழிப் பொருள்களைக் குறிப்பிடுகின்றனர். 1. திருஅம்பலத்திலே அந்நாள் செப்பிய மெய்ம்மொழிப் பொருள். இது சேக்கிழார்க்கு இறைவன் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுத்தது. 2. திருமந்திரத்திருமுறையால் உணர்த்திய மெய்ம்மொழிப்பொருள். 3. அடிகளது உள்ளத்திலே நின்று காட்டிய மெய்ம்மொழிப்பொருள். திருமந்திரத்தால் காட்டிய மெய்ம்மொழிப் பொருளும், உள்ளத்திலே நின்று காட்டிய மெய்ம்மொழிப் பொருளும் இன்னதெனத் தெரியவில்லை. அடிகள் போற்றிய அருள்நூல்களுள் திருமந்திரமும் ஒன்று.



RangaRakes tamilnavarasam.com

சன்மார்க்கத்தைப்பற்றி உபதேசிக்கும் போது 'இந்த மார்க்கத்தின் உண்மை தெரிய வேண்டில் திருமந்திரத்தைக் கவனிக்கில் விளங்கும்' என அடிகள் உபதேசித்தருளியதாக ஓர் அன்பர் குறித்து வைத்திருக்கிறார். திருமந்திரம் சாத்திரங்களுட் சிறந்தது. 'தோத்திரத்துக்குத் திருவாசகம் சாத்திரத்துக்குத் திருமந்திரம்' என்பது பழமொழி. மிக உயர்ந்த ஞான நூலாகிய திருமந்திரத்தில் அருளனுபவத்தாலுணரத்தக்க அரும்பொருள்கள் மிகப்பல உள்ளன. அவற்றுள் ஒன்றையோ பலவற்றையோ அடிகட்கு இறைவன் உணர்த்தியருளினான்.

## உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம்

திருவளர் திருவம்பலத்திலே அந்நாள் செப்பிய மெய்ம்மொழிப் பொருளாகிய 'உலகெலாம்' என்பதற்கு அடிகள் விளக்கமொன்றை எழுதியருளியுள்ளார்கள். அது உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் என வழங்கிவருகிறது. அது வருமாறு:

**உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.**

## மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் ஆமாறு

இஃது **உலகெலாம்** என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் என்பது எங்ஙனமெனின்: திருவரு ளின்பத்தை யங்கைக் கனியிற் பெற்ற பெரியரையும் அத்திருவருளையும் வாச்சிய லக்ஷியமாகக் கொண்ட பெரிய புராணத்திற் றெய்வத்தற்சிறப்புச் செந்தமிழ்ச் செய்யுட்கண் எல்லாம் வல்ல விறைவன் றிருவருளா லெடுத்துக் கொடுக்கப்பட்ட **உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்** என்னுமெய்ம் மொழியினது பொருள் விளக்கமாகலின் மெய்ம்மொழிப் பொருள் விளக்க மென்றாயிற் றென்க.

இதனை மெய்ம் மொழியென்ற தென்னை யெனின்: உணர்ந்தோர், இழிகுண வாங்கார மொழியாய மனிதர் மொழியினும் சமகுண வாங்கார மொழியாய தேவர் மொழி மெய்ம்மொழி யென்பர்; அதனினும், உயர்குண வாங்கார மொழியாய முனிவர் மொழி யென்பர்: அதனினும், இயல்புப் பிரகிருதி மொழியாய அரிபிரமாதியர் மொழி மெய்ம்மொழி யென்பர்: அதனினும், சுத்தா சுத்த மாயா மொழியாய உருத்திராதியர் மொழி மெய்ம்மொழி யென்பர். இங்ஙன மன்றி, மொழித் திறன் றெரிந்து முடிபு முற்றுணர்ந்தோர் அபர வயிந்துவப் பிரணவ மொழியாய சதாசிவாதியர் மொழியே மெய்ம்மொழி யென்பர் என்னின், இவ்வபர வயிந்துவப் பிரணவ மொழிக்கு உபாதான வுபகரண வதிகரண வியாபக சித்தமாய் சுத்த வியோ மாகாரமாய் விளங்குகின்ற திருவருட் பரவயிந்துவத் துரியத் திருவாக்கான் மொழிந்த உலகெலாம் என்னு மொழியை மெய்ம்மொழி யென்ற லிறும்பூ தன் றென்க. வேறிறைபிய லடை யொன்று வழக்கின்க ணின்மை யிற் கூறியதன்றி இஃதோ ரியைபிய லடையு மன்றென்க.

இதனைத் திருவருட் பர வயிந்துவத் துரிய மொழியென்றது எங்ஙன மெனின்: சுத்த முதலிய மாயாகாரிய வாகாயங்களினன்றி, நா தாதீதமாய்,



RangaRakes tamilnavarasam.com

சிதாகாசமென்று வேதாகமங்களான் மீக் கூறப்பட்ட சிற்சபைக்கட் டோன்றிய மொழியாகலின் அங்ஙனங் கூறிய தென்க.

ஆயி னிவ் வடை மொழிப் பொருட் டுணி பென்னை யெனின்; வாச்சியப் பொருளாங்கால் மெய்யம்மையை யுடைய மொழி யென்று வேற்றுமை வழியான் விரித்து அபர வயிந்துவப் பிரணவ மொழிக்கும், லஷியப் பொருளாங்கால் மெய்யம்மையாகிய மொழியென் றல்வழியான் விரித்து திருவட் பர வயிந்துவத் துரிய மொழிக்கு மியைபு கோட றுணிபென்க.

இங்ஙனம் வாச்சிய லஷியமொழி வரலா றென்னை யெனின்: மனிதர் தேவர் முனிவர் அரி பிரமர் உருத்திராதியர் மொழியாய வாங்காரமொழி பிரகிருதிமொழி மாயை மொழி யென்பவை அசுத்தமுஞ் சுத்தாசுதமு மாகிய சத்தார்த்தப் பிரபஞ்ச காரண வைகரியாதி நான்கு வாக்கின் காரியமொழி யாகலின் மெய்ம்மொழி யான்றென்க. சதாசிவாதி மொழியாகிய பிரணவ மொழி சுத்த சத்தார்த்தப் பிரபஞ்ச காரணமாகிய அபர வாயிந்துவ காரிய மொழியாகலின் வாச்சிய மெய்ம்மொழி யாயிற்றென்க. பரசிவ மொழியாய திருவருட் டுரியமொழி, துரிய சத்தார்த்தப் பிரபஞ்ச காரணமாய்ச் சிற்சத்திபர விந்துவிற் பதிதலான் நாத மாத்திரத்தினுண்டாய மொழியாகலின், லஷ்ய மெய்ம்மொழியாயிற்றென்க.

இஃது மெய்ம்மொழி யென்பதைப் பெரிய புராணத்துள்

**அருளீ னீர்மைத் திருத்தொண் டறிவருந்**
**தெருளி னீரிது செப்புதற் காமெனின்**
**மருளின் மெய்ம்மொழி வானிழல் கூறிய**
**பொருளி னாகு மெனப்புகல் வாமன்றே-60**

என்ற செய்யுளுள்ளுங் காண்க வென்க.

இஃது அபார வாக்கிய விவகார மன்றாகலின் விசேட விலக்கண மியற்பட விரித்த விலகமென்க.

இம் மெய்ம்மொழிப் பொருள் விளக்கத்தி னெல்லை யெங்ஙன மெனின்: யோகாந்த கலாந்த நாதாந்த போதாந்த வேதாந்த சித்தாந்த மென்னுஞ்சடாந்தனுபவ சாத்தியர்களுமவற்றை விரும்பியவ் வழிக்க ணின்ற சாதர்களுமந்தரானுபவ திட்டாந்தமாக உபாசிக்க விளங்குகின்ற சிதம்பர ரகசியத்தைக் குறிக்குஞ் சிற்சபைக் கண்ணே, சேக்கிழா ரென்னுந் தெய்வ புலவர் பொருட் டிறைவர் பரமாகாய் வாக்கான் மொழியப்பட்டுச் சமரசாநுபவ சாட்சாத்காரமாய் ஆறந்தத்தினு நடிக்கின்ற சிதம்பர நடநத் திருவருட் பதத்தை வாச்சிய லஷியப் பொரு ளெல்லையையுடையதென்க.

இனி **உலகெலாம்** என்பதன் மட்டன்றி, **உணர்ந்தோதற்கரியவன்** என்ற தொடர்காறு மத்திருவருட் பர வயிந்துவத் துரியத் திருவாக்கி னெழுந்த மெய்ம்மொழி யென் றையமறக் கொள்க வென்க. எங்ஙனமெனின்; திருவருட் புலமை சான்ற சேக்கிழா ரென்னும் பெரியர் செயர்கரிய வென்றரையன் பணித்தவா றடுத்த கருவிகண் முறைப்பட வொன்றேனு மின்றி முடித்தற் கெனங்ஙன கூடுமென் றையுற் றழுங்கிய வுள்ளத்தோடருட் பொதுவின் கட் போந்து பணிந்து இபழிச்சித்



RangaRakes tamilnavarasam.com

திருவருட் பெருமையைச் சிந்தித்து நிற்ப. ஆண் டிறவர் அவர் கருதிய பெருஞ் செயன் முடித்தற் பொருட் டுள்ங்கொண்டு சிற்சபைக்கட்புறத் துலகெலா மென்று மவ ரகத் தந் நிலைகண் உணர்ந்தோதற் கரியவ னென்று மொழிந் தருளியவாறென்க.

அங்ஙன மொழிதற் கியைபு எங்ஙன் மெனின்; உலகெலா மென்பது பல நோக்குடைப் பெருமொழி யாகலின் எந் நோக்கங் கருதி மொழிந்தன ரிறைவ ரந் நோக்க மவ ரறிந்தே முடித்தல் வேண்டு மற்றையர் முடித்தற் கணுத் துணையுங் கூடா. அன்றித் திருவருட் டுரியத் திருவாக்கி னெழுந்த பயனிலை முற்றாக் குறை மொழியை மற்ற வாக்கான் முடித்தற் கியை பெவ் வாற்றானு மிறைத்தனையு மின்று. அன்றி, சிவசுதந்தரச் செயற் குறையைச் சிவ சுதந்தரத்தான் முடித்தலுங் கூடா. அன்றி யிதுகாறு மிறைவ ரருள் வடிவாற் பக்குவர்கட் குபதேச முதலிய திருவாக்களித்தவற்று ளிங்ஙனங் குறைமொழி யளித்த தின்று. அங்ஙன மளித்த லத் திருவருட் டுரியத் திருவாக்கி னியலு மன்று. ஆகலினென்க.

ஆயி னோரிடத்தே மொழியாது அகத்தும் புறத்தும் மொழிந்த தென்னை யெனின்: அக்காலை யருட் பொதுவின்கணின்ற வந்தண ரறவோர் முதலிய பலரு மவர்வழி மற்றையோரும் சேக்கிழா ரென்னும் பேரிற் சிறந்த பேரறிவுடைய பெரியர் திருவருட் டுணையா லிப் பெருங் காப்பிய முடித்தனர். இஃது மாயைத் துணையாற் றேவர் முனிவர் மனித ரியற்றிய மற்றைக் காப்பியங்கள் போ லெளிதன் றென் றன்புகொண்டனுபவித் துய்தற்பொருட்டு மம்மெய்ம் மொழியைக் கேட்டுச் சேக்கிழாரது புறக்கரணங்கள் சுத்தியாதற் பொருட்டும், புறத்தே யுலெகெலா மென் றெழுந்து தத்துவ படலத்தான் மயங்கிய வரை தான்ம திருட்டியைப் படல நீக்கி யறிவு விளக்கிச் சுத்தி செய்தற் பொருட் டகத்தே யுணர்ந் தோதற் கரியவனென்று முடிந்த தென்க.

ஆயி னகத்தும் புறத்து மொழிதற் களவை யெங்ஙன மெனின்: திருவருட் பர வயிந்துவத் துரியமொழி புறத்தே யெழுந் தகத்தே நிறைந்தது சுத்தி செய்தற் கருணையான் வாயுப்போல வென்னுஞ் சுதன்மியமாகிய விக்கருதல் வியாத்தியானறிக வென்க. என்னையெனின்: பொருட் புலப்பாட்டின்கட்சிற் சக்தியானது பர விந்துவிற் பதிதலு மதனா லதன்க ணாத முண்டாதலு முண்மை யாதலிற் பக்கமும் பக்கத் தன்மையும் பெறப்பட்டன. வரலாற்றுப் புலப்பாட்டின்க ணகத்தும் புறத்தும் சுத்தி செய்தற் கருணையா னன்றி யம்மொழி தோன்றாதாகலிற் சிதைக்கப்படா வளவைத் திறன் பெறப்பட்டது. உறழ்ச்சிப் புலப்பாட்டின்க ணேர்ச்சிப் பொருள் வான் புறத்தெழுந் தக்கது நிரம்புத லெங்ஙன மங்ஙனந் திருவருட் பரவயிந்துவப் புறத் தெழுந்து வாக் ககத்து நிரம்புதல் கூடுமாகலி னளக்கப்படுகை மாறுபடாமை பெறப்பட்டது. ஆகலிலசம்பவ மவ்வியாத்தி யதிவியாத்திகளு மின்று. இதனால் வியாத்தி முறை காண்க வென்க.

இனி யிம் மெய்ம்மொழிக்குப் பொருள் விளக்கஞ் செய்யுமிடத்துக் காட்சியுங் கருதலு மின்றியு முரை யளவையும் வேண்டுங்கால் வேதாகம முதலிய குறித்தல் வேண்டுமா லெனின், குறித்தல் வேண்டா. என்னை யெனின்:-

இங்ஙனம் வருணாசிரம மானத்தாற் பந்தப்பட் டேகதேசத்தான் வழங்குகின்ற வேதம் வருணாசிரம மானத்தாற் பந்தப்படாது யாண்டும் பூரணத்தான் வழங்கு மெய்ம்மொழிக்குப் பிரமாணமாகா வென்க. அன்றியும் வேதங்களோர்

காலத்திலுருத்திரனாலும் வேறோர் காலத்தில் விண்டுவாலும் பிறிதோர் கால்த்திற் பிரமனாலும் மற்றோர் காலத்திற் பராசரன் வியாசன் முதலிய முநிவராலுந் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் பலவாறு விகாரப்படுகின்றனவாய்; தாதுக்கள் பிரத்தியயங்கள் பிராதிபத்தியங்கள் முதலிய வியலுறுப்பும், வர்ன்னம் பதம் ஜடை முதலிய வியல் விசேட வுறுப்பும், உதாத்தம் அநுதாத்தம் சுரிதக முதலிய விசையுறுப்பும், சிக்ஷை கற்பம் வியாகரணம் நிருத்தம் சோதிடம் சத்தம் முதலிய வங்க வுறுப்பும், ஆயுணூல் தநு நூல் காந்தருவ நூன் முதலிய வுபறுப்புமுடையன வாய்; பஞ்சப் பிரம்ம மந்திரந் தத்துவத் திரய மந்திர முதலிய மந்திர சாமாநிய விசேடங்களும் ஸ்நாநம் சந்தி ஜெபம் ஓமம் தர்ப்பணம் வைசுவதேவம் இட்டி அக்கினிட்டோமம் பசுபந்தம் திரையாக்கிநிய முதலிய நித்திய கன்மங்களும், வருட கன்ம விசேடம் அயன கன்ம விசேடம் மாத கன்ம விசேடம் பருவ கன்ம விசேடம் முதலிய நைமித்திக கன்மங்களும்,அசுவமேதம் ராஜசூயம் பௌண்டரீக முதலிய காமிய கன்மங்களும், சுரா பானம் பரதார கமனம் அசத்திய வாச்க முதலிய நிசேத கன்மங்களும், அநசநம் சாந்திராயணம் கிருச்சிர முதலிய பிராய்ச்சித்த கன்மங்களும், சூரியவுபாசனை பிரமவுபாசனை விண்டுவுபாசனை ருத்திர வுபாசனை பிரணவ வுபாசனை முதலிய வுபாசனா கன்மங்களுமாகிய கன்ம சாமாநிய விசேஷங்களும், சமயத்தார் சாதியார் பலர்க்கு மொத்த வண்ணம் வரைதற்கு மோதற்கு முணர்தற்கு மிடங் கொடாமையும் பலவாறு விகற்பித்துக் கூறு மயக்கமு முடையனவாய்; தாந்திருவருட்பர வயிந்துவ சத்தியான அபர விந்து வின்க ணுற்பத்தியா யதனிடத் தேலய மாதலிலாதியு மந்தமு முடைத்தாயிருந்தும், அங்ஙனங்கோடலின்றி யுற்பத்தி யின்மையும் லய மின்மையுமாகிய வநாதி யென்று நித்திய மென்றும் தம்மைத் தாமே விபரீதத்தான் மீக் கூறுகின்ற மதமு மகங்காரமும் பெற்றிருத்தலு மன்றியும்;

கருமை கடினம் எளிதி னுருகாமை புலானாற்ற முடைமை முதலிய வண்மைக் குணங்களான் வெளிப்பட்டு மண் வெட்டி கோடரி அரிவாண் முதலிய வற்ப கருவியை விரும்பினோ ரெளிதிற் பெறத் தான் பரிணமித்தலே யன்றி, மகுட குண்டல முதலிய விசேடக் கருவிகளை விரும்பினோர்க்குத் தன்னுண்மைக் குணமாய சுவர்ணத் தன்மையை நெடுஞ் சேய்மைக்கண் மறைத் தரிதிற் பெறவிருந்த வயலோக ஞாயம்போல், மாயா சத்தார்த்தப் பிரபஞ்ச காரிய சித்த விருத்தியாகிய வன்மைக் குணங்களான் வெளிப்பட்டு, பூலோக போகம் சுவர்க்கலோக போக முதலிய வநித்திய போகங்களை விரும்பினோ ரெளிதிற் பெறத் தா மந்திர தந்திரங்களாற் பரிணமித்தலே யன்றி, அருட்போகம் ஆனந்த போகம் சிவ போகம் முதலிய நித்திய போகங்களை விரும்பினோர்க்குத் தம துண்மைக் குணமாகிய வுபதேச லக்ஷியத் தன்மையை நெடுஞ் சேய்மைக்கண் மறைத்தரிதிற் பெறவிருத்தலானும்; தன் பலத்தை விரும்பினோர்க்கு நின்று கர நீட்டித்தலினானு மேற்றுக் கருவி முதலியவற்றானுங் கை கூடுதலின்றி, மே லிவர்ந்தரிதிற்றலைக்க ணின்று தன் காய்களைக் கவந்து மந்நிலைக்க ணனுபவித்தற்கும் வேறோர் கருவி வேண்ட நின்ற விலாங்கலி விருக்ஷ ஞாயம் போல் உபதேச லக்ஷியத் தன்மையைப் பெறத் தொடங்கிய சாதகர்க்குத் தத்தம் பருவத்திற் கடுத்த வுணர் வானும் பல்வகைச் சாதகத்தானுங் கைகூடுதலின்றித் தெய்வ கதியான் முடிபு நோக்கி யத்தலைக்கணமைந்த பொருளைக் கவர்ந்து மந்நிலைக்க ணனுபவத்திற்கும் வேதாந்த விசார முதலிய வேறோர் கருவி வேண்ட விருத்தலானும், மனிதர்மொழி தேவர்மொழி முனிவர்மொழி யரிபிர மாதியர்மொழி யுருத்தி ராதியார்மொழி யென்பவைக்குப் பெரும்பாலும் பிரமாணமாகி

நிற்பனவன்றித் திருவருட் பர வயிந்துவத் துரிய மொழிக்கொருவாற்றானும் பிரமாணமாகா வென்க.

ஆகமங்களுட் சில ருக்குவேதம் போன் மந்திர கலையைக் குறித்துஞ் சில தயித்திரீய வேதம் போற்றந்திர கலையைக் குறித்துஞ் சில சாமவேதம் போலுபயமுங் குறித்துஞ் சில வதர்வண வேதம் போலுலகியலைக் குறித்தும் வருதலின் வேத சம்மதமாகியும், சில ஏகான்ம விரோதஞ் சாதித்தலின் வேத விரோதமாகியும், உபய மாயா காரியங்களைப் பெரும்பாலும் விரித்து விளக்கலான்; மயேசுர சதாசிவாதி மொழிக்குப் பெரும்பாலும் பிரமாணமாமன்றி யித்துரிய மொழிக்குப் பிரமாண மாகாவென்க.

இதனால், வேதாகமங்கள் சகளத்திற் சகுணமாகத் தோன்றிய வீசுர வாக்கியங்க ளென்பதும் **உலகெலாம்** என்பது பூரண நிஷ்களத்தினிர்க் குணமாகத் தோன்றிய பரசிவ வாக்கியமென்பது **உணர்ந்தோதற் கரியவன்** என்பது ஏகதேச நிஷ்களத்தினிர்க்குணமாகத் தோன்றிய பர சிவ வாக்கிய மென்பதுமறிக வென்க.

ஆயினிம் மெய்ம்மொழிக் குரைப் பிரமாணம் வேறின்றாலோவெனின்; தற் சுதந்தரத்தானுந் தற்புகழ்ச்சியானுந் தன் மேம்பாடு வெளிப்படுத்து நிமித்தத்தானு மீசுராதிகளாலுபசரித்துரைக்கப்பட்ட வேதாகமாதிகளிங்ஙன மெய்ம்மொழிப் பிரமாணமாகா வென்றதன்றி, சிவ சுதந்தரத் தானு நிரகங்காரத் தானுஞ் சிற் சத்தியாநந்த சத்தித் துவாரமாக நாதாந்தத்திருந்து சிவ ஞானிகண் மோநந் ததும்ப மொழிந்தருளிய திருவருட்டுரிய மொழிகளைப் பிரமாண மாகா வென்கிலம். ஆகலினுரை யளவை வேண்டுங்காலச் சிவஞானிகளது திருவருட்டுரிய மொழிகளுட் குறிக்க வேண்டுவன குறிக்குது மென்க.

இம்மெய்ம் மொழி நிர்க்குண லக்ஷிய முடைய தாகலின், அறிவுருவுடையார் குறி குணங் குறியாரென்பது கருதியன்பதனாலே வெருவாதிதன் பொருள் விளக்க மென்னப் பெருவாய் மையர் போற் பிதற்றினனன்றி விளக்கும் வன்மையான் விளக்க வந்தனனன் றளக்கு நுண்ணிய வறிவிலேனே.

மெய்ம்மொழிப் பொருள்விளக்கம் ஆமாறு முற்றிற்று.

## மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் வருமாறு

இனியிம் மெய்ம்மொழிக்குப் பொருள் விளக்கங் கூறுதும்.

**உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்**<br>
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**<br>
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**<br>
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.**

இதனுட் கலிவிருத்த வியலினாற் சீரோரடியான் முடிந்த உலகெலா முணர்ந்தோதற் கரியவ னென்னுந் திருவருட்பர வயிந்துவத்துரிய மெய்ம்மொழித் தொடர்க்கண் உலகெலாம் என்னு முதன்மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் வருமாறு:



RangaRakes tamilnavarasam.com

**உலகெலாம்** என்பது

க. சூக்கும ஸ்தூல அந்தரங்க பகிரங்க சாதாரண அசாதாரண பவுதிகப் பிரத்தியக்ஷ வியக்தி ரூப சம வாய காரண மூலமா யாந்தராந்த ராங்கார ஏகதே சோத்பவ தன்மாத்திரை காரிய **பூத தத்துவ வுலகு.**

க. சூக்குமாந்தர சிநே காணுத்வ சவிகற்ப சாத்திய விசித்திர பூத ரூப சத்தியுலகு.

உ. ஸ்தூல வாகிய சிநே காணுத்துவ சவிகற்ப சாத்திய விசித்திர பூத சொரூப சத்தி யுலகு.

ங. சூக்கும ஸ்தூல வாகி யாந்தர கிரியா சிநே காணுத்துவ சவிகற்ப கன்ம சாத்திய சாதக விசித்திர பூத சுபாவ சத்தி யுலகு.

ச. காரணாணுக் காரிய பரியந்த சாத்தியத்துவ பூத சாதி சாமானிய வியாத்தி சத்தி யுலகு.

ரு. காரியாணுக் காரண பரியந்த சாத்தியத்துவ பூ தோபாதி சாமானிய வியாபக சத்தி யுலகு.

சு. விவித ரூப சாத்திய பூத விசேட சத்தி யுலகு.

இவ்வாறு இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட உலகங்களைக் கூறி 'இன்னும் இதனை விரிக்கிற் பெருகுமென்க' என முடித்திருக்கிறார்கள். அண்டங்களின் எண்ணிக்கை நூற்றொரு கோடிக்கு மேற்பட்டதென மாணிக்கவாசகர் அருளுவர்.

**அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**
**அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி**
**ஒன்றனுக் கொன்று நின்றஎழில் பகரின்**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன.**

**-திருவாசகம், திருஅண்டப் பகுதி**

அடிகளோ இரண்டாயிரத்திற்கு மேல் கூறி, விரிக்கிற் பெருகுமென்றனர்.

மேற்கூறிய மூன்று மெய்ம்மொழிப் பொருள்களையும் விளக்கி மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் என்னும் நூலொன்றை அடிகள் செய்யக் கருதினர். இனி அச்சிடுவதாகக் குறிப்பீர்களாக என முதல் நான்கு திருமுறை முதற்பதிப்பின் இறுதியில் அடிகள் குறிப்பிடும் நாற்பத்து மூன்று நூல்களுள் மெய்ம்மொழிப்பொருள் விளக்கமும் ஒன்று. 19-4-1866-இல் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகத்தில் **'குடும்பகோடம், பொதுவேதம், மெய்ம்மொழிப் பொருள் விளக்கம்,** சன்மார்க்க விளக்கம் என்பவைகளை நூதனமாக ஏற்படுத்தக் கருதியபடி வரையாக் கடிதப்புத்தகம் மூன்றென்னிடத்திலிருக்கின்றன' எனக் குறிக்கப்பட்டதனால் 1866-ஆம் ஆண்டிலும் இஃதெழுதி முற்றுப்பெறவில்லை எனக் கருதலாம். உலகெலாம்



RangaRakes tamilnavarasam.com

என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கமே எழுதப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு மெய்ம்மொழிப் பொருள்களின் விளக்கங்கள் எழுதப்பெறவில்லை.

## ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம்

அடிகள் சமரச சுத்த சன்மார்க்கம் என்ற ஒரு நெறியை இக் காலத்தில் ஏற்படுத்தினார்கள். அது ஆறந்தங்களுக்கும் பொதுவானதால் அதற்குச் சடாந்த சமரச சுத்த சன்மார்க்கம் எனப் பெயரிட்டருளினர். ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம் என்பதற்கு அடிகள் விரித்தருளிய பொருள் அன்பரொருவரால் பின்வருமாறு குறித்து வைக்கப்பட்டுள்ளது.

ஷடாந்த சமரச சுத்த சிவ சன்மார்க்கம் என்பதில் ஷடாந்தம் என்பது யாது? வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆக ஆறு. மேற்படி அந்தங்களின் அநுபவம், காலம் இடம் முதலிய வேறுபாடுகளால் ஏறிக்குறையும். ஆதலால் **ஷடாந்தமும் வியாபகமில்லாமல் வேதாந்த சித்தாந்தத்தில் நான்கந்தமும் வியாப்பியமாயிருக்கின்றன. மேற்படி அந்தம் நான்கின் ஐக்கிய விபரம்: வேதாந்தத்தில் போதாந்த யோகாந்தமும் சித்தாந்தத்தில் நாதாந்த கலாந்தமும் அடங்கியிருக்கின்றன. இந்த ஐக்கியம் பற்றி வேதாந்த சித்தாந்தமே இப்போது அநுபவத்தில் சுத்த வேதாந்த சுத்த சித்தாந்தமாய் வழங்குகின்றன.**

இவற்றிற்கு அதீதம் ஆகிய சுத்த வேதாந்த சித்தாந்த அந்தாந்தமாகிய சமரச சுத்த சன்மார்க்கமே நித்திய மார்க்கம். மேற்குறித்த மார்க்கத்திற்குச் சமய மதங்களாகிய சன்மார்க்கங்கள் அநந்நியமாய் விளங்கும்; அந்நியமல்ல. மேற்படி சமய மத மார்க்கங்கள் எவை எனில்; சமய சன்மார்க்கம் மதசன்மார்க்கம் என இரண்டும். இவற்றுள் அடங்கிய சன்மார்க்கம் அநந்தம். அதில் சமய சன்மார்க்கத்தின் வகையாறு, தொகை முப்பத்தாறு, விரிவு அறுகோடி. இதுபோல் மதத்திலும் வகை தொகை விரிவு உள்ளன. மேற்குறித்த சமய மதசன்மார்க்கங்களில் வகரவித்தை தகரவித்தை யுள. அவை அவ்வச் சமய மத சன்மார்க்கங்களின் தலைமையாகிய கர்த்தா மூர்த்தி ஈசுரன் பிரமம் சிவம் முதலிய தத்துவங்களின் காலப் பிரமாண பரியந்தமிருக்கும்; அதற்கு மேலிரா.

மேற்படி சமய மத சன்மார்க்கங்களில் ஷடாந்த சமரச முளதோவெனில்; உளது. யாதெனில்; வேதாந்த சித்தாந்த சமரசம், யோகாந்த கலாந்த சமரசம், போதாந்த நாதாந்த சமரசம். இதற்கு அதீதம் ஷடாந்த சமரசம். இதற்கு அதீதம் சன்மார்க்க சமரசம். இதற்கு அதீதம் சுத்த சமரசம். ஆதலால் சுத்த சமரசத்தில் சன்மார்க்கத்தைச் சேர்க்க சுத்த சமரச சன்மார்க்கமாம். இது பூர்வோத்தர ஞாயப்படி, கடைதலை பூட்டாகச் சமரச சுத்த சன்மார்க்கமென மருவியது.

இதன் தாத்பரியம் யாதெனில்: சமரசம் என்பதற்குப் பொருள், எல்லா அந்தங்களினது அந்தமும் தனக்குப் பூர்வ மாக்கித் தான் உத்தரத்தினின்று மருவியது சமரசம். இதற்கு அநுபவம் குருதுரியஸ்தானம். சுத்த சமரசமென்பதற்கு ஞாயம்; விந்து பரவிந்து இரண்டையும் மறுக்கச் சுத்தவிந்து வந்தது போலும், சிவம் பரசிவம் இரண்டையு மறுத்தது சுத்தசிவம் போலும், சன்மார்க்க சிவசன்மார்க்கமிரண்டையும் மறுத்தது சுத்த சன்மார்க்கம்; பூர்வத்தில் நின்ற சமய மத சன்மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம். இதன்பொருட்டு ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கமென்றே மருவியது. ஒருவாறு, ஷடாந்தங்களின் பொதுவாகிய ஷடாந்த

சன்மார்க்கம் ஒன்று, இதன் பூர்வத்தில் சமரச சன்மார்க்கம் ஒன்று, இதன் உத்தரத்தில் சுத்தசன்மார்க்கமொன்று; ஆதலால் ஷடாந்த சமரசம். ஆன்மாவுக்கு அருள் எப்படி அநந்நியமோ, அதுபோல் சுத்த சன்மார்க்கத்திற்குப் பூர்வத்தில் சொன்ன சன் மார்க்கங்கள் யாவும் அநந்நியம்.

சன்மார்க்கம் என்பதில் வகை தொகை விரிவு அனந்தம். இதன் தாத்பரியம் யாதெனின்; சமய சன்மார்க்கத்தின் பொருள் குணத்தினது லக்ஷியத்தை அனுசந்தானஞ் செய்வது. குணம் என்பது யாது? சத்துவகுணம். இயற்கை உண்மை ஏக தேசமான சத்துவ குணத்தின் சம்பந்தமுடைய மார்க்கமே சமயசன்மார்க்கம். சத்துவ சம்பந்தமுடைய மார்க்கம் யாதெனில்; சத்போதம், சத்கர்மம், சத்சங்கம், சத்காலம், சத்விசாரம், சத்பாத்திரம், சற்சனம், சற்செய்கை முதலியனவும் சத்துவ சம்பந்தம் உடையன. இதனியல்பாவன; கொல்லாமை, பொறுமை, சாந்தம், அடக்கம், இந்திரியநிக்கிரகம், ஆன்ம இயற்கைக் குணமாகிய ஜீவகாருண்யம். இது சத்துவ குணத்தின் வாச்சியார்த்தம். இவ்வணம் வாச்சியாநுபவம் பெற்றுச் சொரூபா நுபவமாகிய சாதனமே சமய சன்மார்க்கம்.

சமயா தீதமாவது மதம். மத சன்மார்க்கத்தின் பொருள் நிர்க்குண லக்ஷியஞ்செய்வது. நிர்க்குணமாவது பூர்வகுணமாகிய சத்துவத்தின் வாச்சியாநுபவம் பெற்று லட்சியாநுபவம் பெறுதல். யாதெனில்; சோகம், சிவோகம், தத்வமசி, சிவத்துவ மசி என்னும் வாக்கியத்தின் முக்கியா நுபவம். சத்துவகுண நிர்க்குண லட்சியத்திற்கு மார்க்கம் நான்கு; எவை எனில் சத்துவ குணத்தின் முதல் விளைவு **தன்னடிமையாகப் பலரையும் பாவித்தல், இரண்டாவது புத்திரனாகப் பாவித்தல், மூன்றாவது சிநேகிதனைப் போலப் பாவித்தல், நான்காவது தன்னைப் போலப் பாவித்தல்.** இது ஜீவஞாயம். இவ்வாறே தான் கடவுளுக்கு **அடிமையாதல், புத்திரனாதல், சிநேகனாதல், கடவுளே தானாதல்**. இது சத்துவகுண லட்சியார்த்தமாகிய மத சன்மார்க்க முடிவு.

சத்துவகுண விளைவு என்பதற்குப் பொருள் சத்துவகுணத்தின் முக்கிய லக்ஷியமாகிய எல்லாம் வல்ல சர்வ சித்தியோடு ஞான சித்தியைப் பெறுதல். நெல்லை விளைத்தான் என்பதன் பொருள் உழுதல் தொடங்கிக் கிருகத்தில் சேர்த்து அநுவிக்கிற பரியந்தம் அடங்கியிருப்பதுபோல் சன்மார்க்கம் என்பது சாதாரணம் முதல் அசாதாரணம் ஈறாக அடங்கிய பொருளெனக் கொள்க. குண நிர்க்குண வாச்சிய லட்சியார்த்தமாகிய சமய மதத்தின் அநுபவமல்லாதது சுத்த சன்மார்க்கம். இம்மார்க்கத்திற்கு மேற்குறித்த மார்க்கங்கள் அல்லாதனவேயன்றி இல்லாதனவல்ல.

சுத்த சன்மார்க்கந்தான் யாதெனில்;சுத்தம் என்பது ஒன்றுமல்லாதது. சுத்தம் என்பது சன்மார்க்க மென்னுஞ் சொல்லுக்குப் பூர்வம் வந்ததால், மேற்குறித்த சமய மதா நுபவங்களைக் கடந்தது. சத்மார்க்கம் என்னும் பொருட்கு அர்த்தம் நான்கு வகை; அஃது பூர்வாதி உத்தரோத்தரபரியந்தம். இதன் முக்கிய லட்சியம் சுத்த சன்மார்க்க அநுபவ ஸ்தானமாகிய சுத்த சிவதுரியாதீத நிலைபெறில் விளங்கும். ஏக தேசத்தில் ஒருவாறு பூர்வம் என்பதற்குப் பொருள்-சிருஷ்டியாதி. அனுக்கிரக மீறாகச் செய்யும் பிரமாதி சதாசிவ மீறாகவுள்ள பஞ்சகிருத்திய கர்த்தர்களிலொவ்வொரு கிருத்தியத்தின் விரிவு ஐந்தாக விரிந்த கர்த்தர் பேதம் இருபத்தைந்தாக விரிந்த மஹா சதாசிவாந்த அனுபவ காலத்தை அறுபத்து நாலாயிரத்தில் பெருக்கிய கால அளவு எவ்வளவோ அக்கால அளவு சுத்த மகா

சதாசிவானுபவத்தைப் பெற்றுச் சுத்த தேகியாயிருப்பது. சத்தென்பது பரிபாஷை. அது அனந்த தாத்பர்யங்களைக் கொண்டு ஓர் வாக்கியபதமாய் நின்றது. மார்க்கம் என்பது யாதெனின்; துவாரம், வழி. வழியென்பது சத்தென்னும் பொருளின் உண்மையைத் தெரிவிக்கிற மார்க்கம். ஆதலால், எவ்வகையிலும் உயர்வுடையது பாவனாதீதாதீதம், குணாதீதாதீதம், லட்சியாதீதாதீதம், வாச்சியாதீதாதீதம் ஆகிய சுத்த சன்மார்க்கம்.

மேற்படி மார்க்கத்தின் ஏகதேசம் அடியிற் குறிக்கும் அநுபவங்கள்; எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வகைத் தடையும் வாராத சுத்தமாதி ஞானதேக சித்தியும், அண்டபிண்ட தத்துவங்களைச் சுதந்திரத்தில் நடத்தும் தனிப்பெரும் வல்லமையும், ஏம ரவுப்பிய பிரேத ஜீவிதாதி சித்தியும், வஸ்துப் பிரத்தியாக்ஷானுபவ சித்தியும் ஆகிய இவற்றை ஒருங்கே அடைவது மேற்குறித்த மார்க்கத்தின் முடிபு. ஒருவாறு.

-திருஅருட்பா, உபதேசப்பகுதி, பக்கம் 45

இவை அடிகளாரின் உபதேசங்களைக் கேட்ட அன்பர்கள் எழுதி வைத்தனவேயாகும். இவற்றை ஊன்றி உணர்தல் வேண்டும்.

இனி (ஷடாந்த) சமரச சுத்த சன்மார்க்க சங்கம் என்னும் பெயரின் விளக்கத்தை யாமறிந்தவரை பொதுவாகக் கூறுவோம்.

**ஷடாந்தம்**

**ஆறந்தம்**: ஷடாந்தம் என்னும் சொல் ஆறு அந்தம் எனப்பொருள்படும். அந்தம்-முடிபு. அவை: கலாந்தம், நாதாந்தம், யோகாந்தம், போதாந்தம், வேதாந்தம், சித்தாந்தம் என்பன.

**வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்**
**நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்**
**ஓதத் தகுமென் டியோகாந்த அந்தமும்**
**ஆதிக்க லாந்தமும் ஆறந்த மாமே.**

**-திருமந்திரம் 2370**

**தூய கலாந்தச் சுகந்தரு வெளிஎனும்**
**ஆயசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி**
**ஞானயோ சிற்சபை அருட்பெருஞ் ஜோதி**
**ஆனியில் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி**
**விமலபோ தாந்தமா மெய்ப்பொருள் வெளிஎனும்**
**அமலசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி**
**பெரிய நாதாந்தப் பெருநிலை வெளிஎனும்**
**அரியசிற் றம்பலத் தருட்பெருஞ் ஜோதி**
**சுத்தவே தாந்தத் துரியமேல் வெளிஎனும்**
**அத்தகு சிற்சபை அருட்பெருஞ்ஜோதி**
**சுத்தசித் தாந்தச் சுகப்பெரு வெளிஎனும்**



RangaRakes tamilnavarasam.com

அத்தனிச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி.

-அருட்பெருஞ்ஜோதி அகவல் 33-44

நாதாந்த போதாந்த யோகாந்த வேதாந்த
நண்ணுறு கலாந்தம்உடனே
நவில்கின்ற சித்தாந்தம் என்னும்ஆ றந்தத்தின்
ஞானமெய்க் கொடிநாட்டியே
மூதாண்ட கோடிக ளொடுஞ்சரா சரம்எலாம்
முன்னிப் படைத்தல்முதலாம்
முத்தொழிலும் இருதொழிலும் முன்னின் றியற்றிஜம்
மூர்த்திகளும் ஏவல்கேட்ப
வாதாந்தம் உற்றபல சத்திக ளொடுஞ்சத்தர்
வாய்ந்துபணி செய்யஇன்ப
மாராச்சி யத்திலே திருஅருட் செங்கோல்
வளத்தொடு செலுத்தும்அரசே
சூதாண்ட நெஞ்சினில் தோயாத நேயமே
துரியநடு நின்றசிவமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராஜபதியே.

-6 (இடை) நடராசபதிமாலை 17

"ஷடாந்த சமரச சுத்தசிவ சன்மார்க்கம் என்பதில் ஷடாந்தம் என்பது யாது? **வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆக** ஆறு."

-பெருமாளின் உபதேசக் குறிப்பு

இம் மெய்ம்மொழிப்பொருள் விலக்கதினெல்லை யெங்ஙன மெனின்; **யோகாந்த கலாந்த நாதாந்த போதாந்த வேதாந்த சித்தாந்த மென்னுஞ் சடாந்தானுபவ** சாத்தியர்களுமவற்றை விரும்பியவ்வழிக்கணின்ற சாதகர்களுக்கு மந்தரானுபவதிட்டாந்தமாக உபாசிக்க விளங்குகின்ற சிதம்பர ரகசியத்தைக் குறிக்கும் சிற்சபைக் கண்ணே, சேக்கிழா ரென்னுந் தெய்வப் புலவர் பொருட்டிறைவர் பரமாகாய வாக்கான் மொழியப்பட்டுச் சமர சாநுபவ சாட்சாத்காரமாய் ஆறந்தத்தினு நடிக்கின்ற சிதம்பர நடநத் திருவருட் பதத்தை வாச்சிய லக்ஷியமாகக் கொள்ளப்பட்டதாகலின், சடாந்த சமரச லக்ஷியப் பொருளெல்லையையுடைய தென்க.

-உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம்.

**ஆறந்தமுறைவைப்பு:** கலாந்தம், நாதாந்தம், யோகாந்தம், போதாந்தம், வேதாந்தம், சித்தாந்தம் என்பதே சரியான முறைவைப்பு. திருமந்திரம் சிவயோகசாரக்கட்டளை என்னும் நூல்{61} 'வேதத்தினந்தமும்' என்னுந் திருமந்திரத்தை எடுத்துக்காட்டி, "இதற்கு வசனக் கிரமம் கலாந்தம், நாதாந்தம்,



RangaRakes tamilnavarasam.com

யோகாந்தம், போதாந்தம், வேதாந்தம், சித்தாந்தம் ஆக ஆறு; இந்த முறையே அனுட்டிக்க வேணும்" எனக் கூறுகிறது. சரியான முறைவைப்பும் அனுட்டானக் கிரமமும் இதுவே. திருமூலர் வேதாந்த முதலாகக் கூறியது யாப்பமைதியை நோக்கியாகும். 'ஆதிக் கலாந்தமும்' என அருளுவதாலும் கலாந்தம் முதலாவதென்பது பெறப்படும். வள்ளற்பெருமானது அருளிச் செயல்களிலும் ஆறந்த முறைவைப்பு பலவாறாகக் காணப்படுவது யாப்புப் பற்றியேயாகும். இனி ஆறந்தங்களையும் வரிசைக் கிரமமாகக் காண்போம்.

{61. சிவயோக சாரக்கட்டளை: திருமந்திரம் சிவயோக சாரக்கட்டளை என்று இரண்டு நூல்கள் திருவாவடுதுறை யாதீனத்திலிருந்து வெளிவந்துள்ளன. (1) வெளியீட்டு எண் 90. இரண்டாவது திருமந்திர மாநாட்டில் (1955) வெளிவந்தது. திருமந்திரம், சிவயோகப் பகுதி முதலியன, பழையவுரை விளக்கம் என்பது வெளித் தலைப்பு. உள்தலைப்பு-திருமந்திரம், சிவயோகம் என்னும் சிவயோகசாரக்கட்டளை. (2) வெளியீட்டு எண் 96. மூன்றாவது திருமந்திர மாநாட்டில் (1956) வெளிவந்தது. திருமந்திரம் சிவயோக சாரக்கட்டளை என்னும் சிவயோக சிந்தனை. சிவயோகா சாரக்கட்டளை எனப்பிரதி பேதம் உள்ளதாகப் பதிப்பாசிரியர் குறித்துள்ளார். யோகத்தைக் கூறும் திருமந்திரப் பாடல்களும் யோக விளக்கங்களுமாக இவ்விரண்டும் அமைந்துள்ளன. இவற்றின் ஆசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. ஆதீன ஏட்டுச் சுவடிகளிலிருந்து இவற்றைப் பதிப்பித்தவர் ஆதீன வித்துவான் திரு.த.ச.மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களாவர். }

**1.கலாந்தம் :**

**கொள்கையி லான கலாந்தங் குறிக்கொள்ளில்**
**விள்கையி லான நிவிர்த்தாதி மேதாதிக்கு**
**உள்ளன வாம்விந்தும் உள்ளே ஒடுங்கலும்**
**தெள்ளி அதனைத் தெளிதலும் ஆமே.**

**-திருமந்திரம் 2377**

**அளிக்கும் புவனம் புவனத்தில் ஐவர் கலைகள்ஐந்து**
**திளைக்கும்நற் சத்திகள் எல்லாம் தெரிந்து செகம்அனைத்தும்**
**வளைக்கும் பரவிந்துத் தன்னுள் அடங்கமெய்ஞ் ஞானஇன்பம்**
**அளிக்கும் கலாந்தமும் தானாகி நிற்பவள் அம்பிகையே**

**-புவனை கலைஞானதீபம் 90 {62}**

{62. புவனைகலைஞான தீபம்: 100 செய்யுள்களை உடையது. முதல் 50 தேர்த்திரம். பின் 50 சாத்திரம். 90,91,92,93,94, 95 ஆம் செய்யுள்கள் கலாந்தம்,



RangaRakes tamilnavarasam.com

நாதாந்தம், யோகாந்தம், போதாந்தம், வேதாந்தம், சித்தாந்தம் என்ற வரிசையில் ஆறந்தங்களைக் கூறுகின்றன. இதன் ஆசிரியர் கவிராஜ சுந்தரன் என்பது 96 ஆம் பாடலால் தெரிகிறது. சென்ற சார்வரி வருடத்திற்கு முந்திய சார்வரியில் மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடப் பதிப்பொன்று வெளிவந்தது. பின்னர் 1959 இல் தருமபுர ஆதீனப் பதிப்பொன்று (வெளியீடு எண் 439) வெளிவந்தது.}

கலாந்தமாவது பிராசாதயோகமார்க்க முடிபு. பிரசாதம் என்ற சொல்லுக்குச் சிவஞானமாகிய கதியைத் தருவது என்பது பொருள். ப்ரா-சிவஞானம், ஸா-கதி, த-கொடுப்பது. பிராசாத யோகத்தில் பஞ்சகலைப் பிராசாதம், அட்டகலைப் பிராசாதம், தசகலைப்பிராசாதம், துவாதசகலைப் பிராசாதம், சோடசகலைப் பிரசாதம் எனப் பலவகை உண்டு. அவற்றுள் சோடசகலாப் பிரசாதம் சிறந்த தென்பர். சோடச கலைகளாவன: 1. மேதைகலை, 2. அர்க்கீசகலை, 3. விஷகலை, 4. விந்துகலை, 5. அர்த்தசந்திரகலை, 6. நிரோதிகலை, 7. நாதகலை, 8. நாதாந்தகலை, 9. சத்திகலை, 10. வியாபினிகலை, 11. வியோமரூபைகலை, 12. அநந்தைகலை, 13. அநாதைகலை, 14. அநாசிருதைகலை, 15. சமனைகலை, 16. உன்மனைகலை. சோடச கலாப்பிராசாத யோகமாவது: மூலாதாரம் தொடங்கி பிரமரந்திரம் வரையுள்ள ஆன்மாவின் சஞ்சாரத்தை மேதை முதல் உன்மனை ஈறான பதினாறு கலைகளாகக்கொண்டு அவற்றின் பெயர், வியாபகம், அளவு உருவம், ஒளி முதலியவற்றை அறிந்து அவற்றுக்குரிய அதி தெய்வங்களையும் தத்துவங்களையும் தரிசித்து அவற்றுக்கப்பால் சென்று ஆங்குள்ள பரம்பொருளிடத்தே நிராதாரபாவானையால் தன்னையும் சிவத்தையும் வியாபகமாகப் பாவித்து அந்த நிலையிலே நிற்றல் பிராசாத யோகமாம். இது அட்டாங்க யோகத்தினும் வேறானது. அட்டாங்க யோகம் பொது. பிராசாதயோகம் சிறப்பு. பிராசாத யோகத்தைச் சொல்லும் தமிழ் நூல்கள். 1. சீகாழித் தத்துவப் பிரகாசர் செய்த தத்துவப் பிரகாசம், 2. அம்பலவாணத் தம்பிரான் செய்த பிராசாத அகவல், 3. கமலை ஞானப்பிரகாசர் செய்த பிராசாதமாலை, 4. குருஞானசம்பந்தர் செய்த பிராசாத ஷட்கம் (வடமொழி நூலாகிய பிராசாத ஷட்சுலோகியின் மொழிபெயர்ப்பு) 5, 6, கண்ணுடைய வள்ளலார் மரபில் ஒருவர் செய்த பிராசாத தீபம், பிராசாத விதி ஆகியனவாம்.

**2. நாதாந்தம்:**

**மேவும் பிரமனே விண்டு உருத்திரன்**
**மேவுசெய் ஈசன் சதாசிவன் மிக்குஅப்பால்**
**மேவும் பரவிந்து நாதம் விடஆறாது**
**ஓவும் பொழுது அணுஒன்றுள தாமே.**

**-திருமந்திரம் 2374**

**விரிகின்ற பூதத் தலைவரும் விந்துவும் விட்டகல**
**வருகின்ற நாதத்தே மான்கண் டதனுள் மனம்அடங்கத்**
**தருகின்ற தத்துவம் ஆறாறும் நீங்கித் தனதுருவாய்த்**
**தெரிகின்ற நாதாந்த நேசமும் ஆகும் திரிபுரையே.**

**-புவனை கலைஞானதீபம் 91**



RangaRakes tamilnavarasam.com

நாதாந்தமாவது காரியேசுவர காரணேசுவர தியாக முடிபு. விதிப்படி சிவபூசை புரிவோர் காரணேசுவரத்தியாகம் செய்யும் முறைமையில் பிரமன், விண்டு, உருத்திரன், மகேசன், சதாசிவன் ஆகிய ஐவரையும் கடந்து தான் மட்டும் நாத முடிவை அடைதலை அறிவர்.

**3.யோகாந்தம்:**

**தேடும் இமயம் நியமாதி சென்றுஅகன்று**
**ஊடும் சமாதியில் உற்றுப் பரசிவன்**
**பாடுஉறச் சீவன் பரம்ஆகப் பற்றுஅறக்**
**கூடும் உபசாந்தம் யோகாந்தக் கொள்கையே.**

**-திருமந்திரம் 2376**

**விரிக்கும் இயம நியமா சனத்தின் விதிஅறிந்து**
**சரிக்கும் அநிலனை நேரே நிறுத்திச் சமாதிபெற்றே**
**இருக்கும் பொழுதில் உபசாந்த நிட்கள ஞேயம்எய்திப்**
**பரிக்கும் தனியினி யோகாந்தம் எங்கள் பராபரையே.**

**-புவனைகலைஞானதீபம் 92.**

யோகாந்தமாவது அட்டாங்க யோகமார்க்க முடிபு. யோகத்தின் அங்கங்கள் எட்டு. 1. இயமம், 2. நியமம், 3. ஆசனம், 4. பிராணாயாமம், 5. பிரத்தியாகாரம், 6. தாரணை, 7. தியானம், 8. சமாதி என்பன.

**இயம நியமமே எண்ணிலா ஆதனம்**
**நயமுறு பிராணாயாமம் பிரத்தி யாகாரஞ்**
**சயமிகு தாரணை தியானஞ் சமாதி**
**அயமுறும் அட்டாங்க மாவது மாமே.**

**-திருமந்திரம் 552**

இவ்வெட்டு அங்கங்களை உடையதாதலின் யோகம், அட்டாங்கயோகம் எனப்படும். திருமந்திரத்தில் இவ்வெட்டும் எட்டு அதிகாரங்களிற் கூறப்பட்டுள்ளன. பின்வரும் சூத்திரங்கள் இமயம் முதலானவற்றைக் கூறுவனவாம்

**பொய்கொலை களவே காமம் பொருணசை**
**யில்வகை யைந்து மடக்கிய தியமம்** 1

**பெற்றதற் குவத்தில் பிழம்புநனி வெறுத்தல்**
**கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை**

**பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு**
**நயனுடை மரபி னியம மைந்தே.** 2



RangaRakes tamilnavarasam.com

**நிற்ற லிருத்தல் கிடத்தல் நடத்தலென்**
**றொத்த நான்கி னொல்கா நிலைமையோ**

**டின்பம் பயக்குஞ் சமய முதலிய**
**வந்தமில் சிறப்பி னாசன மாகும்** 3

**உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுந்**
**தந்த மியக்கந் தடுப்பது வளிநிலை.** 4

**பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாம**
**லொருவழிப் படுப்பது தொகைநிலை யாமே.** 5

**மனத்தினை யொருவழி நிறுப்பது பொறைநிலை.** 6

**நிறுத்திய வம்மன நிலைதிரி யாமற்**
**குறித்த பொருளொடு கொளுத்த னினைவே** 7

**ஆங்கனம் குறித்த வம்முதற் பொருளொடு**
**தான்பிறனாகாத் தகையது சமாதி.** 8

பிராணாயாமத்தை வளிநிலை என்றும், பிரத்தியாகாரத்தைத் தொகைநிலை என்றும், தாரணையைப் பொறைநிலை என்றும், தியானத்தை நினைவு என்றும், மேற்சூத்திரத்துட் கூறப்பட்டுள்ளதைக் காண்க. {63}

{63. இச்சூத்திரங்கள் எட்டும் சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லாருரையிலும் (14, ஊர்காண்காதை அடி 11, 'அறத்துறை விளங்கிய வறவோர் பள்ளியும்' என்பதன் உரை). தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் உரையிலும் (புறத்திணையியல், சூத்திரம் 20. 'நாலிரு வழக்கிற்றாபதபக்கமும்' என்பதன் உரை) எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.}

இயமம், நியமம்: விதித்தன செய்ததும் விலக்கியன ஒழிதலும்.

ஆசனம் : இருக்கை

பிராணாயாமம் : பிராணனைத் தன் வயப்படுத்தல்

பிரத்தியாகாரம்: புலன்களைப் பொருள்களின் மேற்செல்லவொட்டாது தடுத்தல்

தாரணை : மனத்தினை ஓரிடத்தில் நிறுத்துதல்.

தியானம் : நிலைதிரியா நினைவு

சமாதி : உரையுணர்வு கடந்து நிற்றல்.



RangaRakes tamilnavarasam.com

இவற்றுள் முடிவான சமாதியில் எட்டும் அடங்கும். தியானத்தில் ஏழும், தாரணையில் ஆறும், பிரத்தியாகாரத்தில் ஐந்தும் பிராணாயாமத்தில் நான்கும், ஆசனத்தில் மூன்றும், நியமத்தில் இரண்டும் அடங்கும். இவ்வெட்டு அங்கங்களையுடைய யோகத்தின் முடிபு யோகாந்தம்.

**4.போதாந்தம்**

**உள்ள உயிர்ஆறாற தாகும் உபாதியைத்**
**தெள்ளி அகன்றுநா தாந்தத்தைச் செற்றுமேல்**
**உள்ள இருள்நீங்க ஓர்உணர்வு ஆகுமேல்**
**எள்ளல்இல் நாதாந்தத்து எய்திடும் போதமே.**

**-திருமந்திரம் 2375**

**அறையும் கலாந்தமும் நாதாந்தமும் அட்ட யோகாந்தமாந்**
**துறையும் செறிந்துபின் ஆறாறும் நீங்கித் துணிந்ததினே**
**நிறையும்அப் போதத்தின் உள்ளே அடங்கிய நேயஇன்பம்**
**உறையும்அப் போதாந்த ரூபமு மாம்எங்கள் உத்தமியே.**

**-புவனைகலைஞானதீபம் 93**

போதாந்தமாவது தத்துவ ஞானமார்க்க முடிபு. போதம்-அறிவு. சிவபோதம், சீவபோதம் என்னும் வழக்குகளைக் காண்க.

**5.வேதாந்தம்**

**தானான வேதாந்தம் தானென்னும் சித்தாந்தம்**
**ஆனாத் துரியத்து அணுவன் தனைக்கண்டு**
**தேனார் பராபரஞ் சேரச் சிவோகமாய்**
**ஆனா மலம்அற்று அருஞ்சித்தி ஆதலே.**

**-திருமந்திரம் 2372**

**மறுவா மலஞ்செற்று மேலாந் துரியத்தின் வாழ்வறிந்து**
**நிறுவா மனத்தை நிறுவிச்சிற் பூரண நின்மலமாய்ப்**
**பெறுவானும் பேறும்அற்று ஒன்றாம் சிவோகப் பெரியஇன்பம்**
**உறுவார் உறுகின்ற வேதாந்தம் எங்கள் உலகம்மையே.**

**-புவனைகலைஞானதீபம் 94**

வேதத்தின் அந்தம் வேதாந்தம். வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு. இவை இருடிகளாற் செய்யப்பட்டுப் பின்னாளில் வேதவியாசராற் செப்பஞ் செய்யப்பெற்றவை. இவ முன்னாளில் எழுதிவைக்கப் பெறவில்லை. வாய்மொழியாகவே வழிவழியாய் ஆசாரியர்களால்



RangaRakes tamilnavarasam.com

மாணாக்கர்களுக்குக் கற்பிக்கப்பட்டும் ஓதப்பட்டும் வந்தன. பொருளை மறைவாக உடையனவாதலின் இவை மறை எனப்படும். வேதங்கள் மந்திரம், பிராம்மணம், ஆரண்யகம் உபநிடதம் என நான்கு பிரிவுகளைக் கொண்டவை. வேதங்களின் முற்பகுதி மந்திரங்கள். இவை தேவதைகளை விளித்துச் சொல்லப்படுபவை. இதனி அடுத்த பகுதி பிராம்மணங்கள். இவை மந்திரங்களின் பொருளைக் கூறுவன. மூன்றாவது பகுதி ஆரணியகம். இது வானப்பிரஸ்தர்களுக்குரிய தருமங்களைக் கூறும். வானப்பிரத்தம் ஆரண்யங்களில் (காடுகளில்) இருந்து அநுட்டிக்கப்படுவதாதலின் அதற்குரிய தருமங்களைக் கூறும் இப்பகுதி ஆரண்யகம் எனப்பெயர் பெற்றது. வேதங்களின் இறுதிப்பகுதி உபநிடதங்கள். இவை ஞானத்தைக் கூறுவன. வேதத்தின் அந்தத்தில் இருப்பதாலும் வேதங்களது முடிவான கருத்துகளைக் கூறுவதாலும் உபநிடதங்கள் வேதாந்தம் எனப்படும். வேதாந்தத்துக்கு அடிப்படை நூல்கள் உபநிடதங்களே ஆயினும் மூன்று நூல்கள் முக்கியமாகக் கொள்ளப்படுகின்றன. 1. உபநிடதங்கள், 2. பகவத்கீதை. 3. பிரம்ம சூத்திரம். இம்மூன்றும் பிரஸ்தானத் திரயம் என வழங்கும். இவையே வேதாந்தத்துக்கு அடிப்படை நூல்கள்.

**6.சித்தாந்தம்:**

**நித்தம் பரனோ டுயிருற்று நீள்மனம்**
**சத்தம் முதல்ஐந்தும் தத்துவத் தால்நீங்கிச்**
**சுத்தம் அசுத்தம் தொடரா வகைநினைந்து**
**அத்தன் பரன்பால் அடைதல்சித் தாந்தமே.**

**-திருமந்திரம்** 2373

**அந்தம்ஓர் ஆறினுட் சைவசித் தாந்தம் அரிதரிது**
**விந்துவும் நாதமும் யோகமும் போதமும் வேதமும்ஆம்**
**இந்த வகைஐந்திற்கு அப்புறம்ஆம் அது எய்தஎன்றால்**
**சுந்தரி பாதம் தொழுதிடிற் கூட்டுவள் சொல்வதுஅன்றே.**

**-புவனைகலை ஞானதீபம்** 95

ஆறாவது அந்தமாகிய சித்தாந்தமே முடிந்த முடிபானது. இது சைவசித்தாந்தம் எனப்படும் ' வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்', 'வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த ஆராஅமுத அருங்கனிபிழிந்த சாரங்கொண்ட சைவசித்தாந்தம்' என்பர் பெரியோர், புவனைகலை ஞானதீபம் இதனைக் கூறும் முறை மிக அருமையானது. 'அந்தம் ஓர் ஆறினுள் சைவசித்தாந்தம் அரிது அரிது, கலாந்தம், நாதாந்தம், யோகாந்தம், போதாந்தம், வேதாந்தம் ஆகிய ஐந்திற்கும் அப்பால் அது உள்ளது: அதனை எய்த என்றால் சுந்தரி பாதம் தொழுதிடில் கூட்டுவள், அது சொல்லால் விளக்கக் கூடியது அன்று' எனப்புவனைகலை ஞானதீபம் கூறுவது சித்தாந்தத்தின் சிறப்பை நன்கெடுத்துக் காட்டுவதாம். மேலும், உரைக்க வொண்ணா அத்திருவருள் திறத்தைப் புவனைகலை ஞானதீபம்,

**புரையின்றிப் போக்குவரவினை யோதிற்றுப் பூரணமாய்க்**
**கரையின்றி வாக்கு மனத்துக் கெட்டாது கடந்துநின்ற**

**பரையின் திருவருள் யாரே பகர்வர்அம்மா**
**உரையின் றுறக்கத் திருப்பதல் லால்என் உரைப்பதுவே.** 100

எனக்கூறும். இச்செய்யுள் அதன் இறுதிச் செய்யுளாகும்.

இச்சைவ சித்தாந்தம் ஆகமாந்தம் எனவும் கூறப்பெறும். சித்தாந்தத்திற்கு நூல்கள் சிவாகமங்களும், பன்னிருதிருமுறைகளும், பதினான்கு சாத்திரங்களுமாம். பின் வந்த பண்டார சாத்திரங்களும் ஆம். தாயுமானவர் இராமலிங்க அடிகள் அருளிச் செயல்களும் ஆம்.

ஞானம்பெற விரும்புவோர் ஆறந்தங்களையும் தெளிவாக அறிதல் வேண்டும்.

**அந்தமோ ராறும் அறிவார் அதிசுத்தர்**
**அந்தமோ ராறும் அறிவார் அமலத்தர்**
**அந்தமோ ராறும் அறியார் அவர்தமக்**
**கந்தமோ டாதி அறியவொண் ணாதே.**

**-திருமந்திரம் 2371**

ஆறு அந்தங்களையும் அறிபவர் அதிசுத்தர்; மலமற்றவர். ஆறந்தலங்களையும் அறியாதவர்கள் அந்தத்தையும் ஆதியையும் அறியமாட்டார்கள். திருமூலர் திருமந்திரம் எட்டாந் தந்திரத்தில் ஆறந்தம் என்னும் தலைப்பில் (அதிகாரம் 15) முப்பத்தைந்து மந்திரங்கள் உள்ளன. புவனை கலைஞான தீபத்தில் ஆறு செய்யுட்களுள் ஆறந்தங்களும் கூறப்பெறுகின்றன. இவை தவிர ஆறந்தங்களையும் விரித்துக் கூறும் நூலைக் காண்கிலம். **கலாந்த விளக்கம், யோகாந்த விளக்கம், நாதாந்த விளக்கம், போதாந்த விளக்கம், வேதாந்த விளக்கம், சித்தாந்த விளக்கம்** என ஆறு நூல்களை அடிகள் எழுதியருளக் கருதியிருந்தனர். பின்னர் அவை எழுதப் பெறாது தவிர்ந்து போயின. திருவருட்பா முதற்பதிப்பு (1867) அச்சாகின்ற காலத்தில் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு அடிகள் வரைந்த திருமுகமொன்றில் 'இதில் குறிக்கின்றவைகளை இனி அச்சிடுவதாகக் குறிப்பீர்களாக' எனக் குறித்தருளி 43 நூற்பெயர்களைக் (தலைப்புகளைக்) குறித்துள்ளார்கள். அவற்றுள் மேற்கூறிய கலாந்த விளக்கம் முதலிய ஆறும் இடம் பெற்றுள்ளன. நாற்பத்து மூன்றுள் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம் சன்மார்க்க விளக்கம் ஆகிய இரண்டின் பகுதிகள் மட்டும் வெளியாகியுள்ளன. அவை உரைநடை. கலாந்த விளக்கம் முதலியவற்றையும் அடிகள் உரைநடையிலேயே செய்யக் கருதியிருந்தார்களாதல் வேண்டும். செய்தருளப் பெறாது தவிர்ந்துபோனமை நம் தவக்குறைவே. திருமந்திரம் கூறுவனவற்றைப் புவனைகலைஞான தீபம் சற்று விளக்குகிறது. அடிகளது விளக்க நூல்கள் அருளப் பெற்றிருப்பின் அவை ஆறந்தங்களை மேலும் விளக்குவதாக அமைந்திருக்கும்.

## <u>வேதாந்த சித்தாந்த சமரசம்</u>

**வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்**
**ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன**
**நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்**
**பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே.**



RangaRakes tamilnavarasam.com

**-திருமந்திரம் 2397**

எனத் திருமூலர் வேதாந்த சித்தாந்த சமரசத்தைப் போதித்தருளினர். 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை வகுத்த வித்தகச் சித்தர் கணமே' எனத் தாயுமானவர் வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலையை வகுத்தருளினர். 'வேதாந்த சித்தாந்த சமரசமும் வருமோ' என அடிகளும் இறைவனிடம் வேண்டியருளுவர்.

## ஆறந்த (ஷடாந்த) சமரசம்

ஆறந்தங்களையும் சமரசப்படுத்திக் கண்டவர் நமது அடிகள். ஆறந்தங்களும் இப்போது வழக்கிலில்லை. வேதாந்தம் சித்தாந்தம் இரண்டுமே பயிற்சியில் உள்ளன. மற்றவற்றைப் பெயரளவாலும் அறியார் பலர். இதைப்பற்றி அடிகள் நுட்பமான செய்தியொன்றை அருளியுள்ளார்கள். வேதாந்தத்தில் போதாந்த யோகாந்தமும், சித்தாந்தத்தில் நாதாந்த கலாந்தமும் அடங்கியுள்ளனவென்றும் ஆதலின் வேதாந்த சித்தாந்தமே இப்போது வழங்குகின்றனவென்றும் அடிகள் அருளுவர். பக்கம் 241 காண்க. சமரச சுத்த சன்மார்க்க வேதாந்த சித்தாந்த சமரச முடைய தெனவும் அருளுவர்.

## ஆறந்த அனுபவ சித்திகளை அடிகள் பெற்றமை.

'ஆறந்த நிலைகளின் அநுபவ நிறைவே' என அடிகள் இறைவனைத் துதிப்பர். ஆறந்தப் பதிகளிலும் அவற்றின் மேலும் அப்பாலும் அவன் அருட் செங்கோல் செலுத்துகிறான் எனப்போற்றிப் புகழ்ந்து பாடிப்பணிவர்.

**ஆறந்த நிலைகளின் அநுபவ நிறைவே**
**அதுஅது வாய்ஒளிர் பொதுவுறு நிதியே**
**கூறெந்த நிலைகளும் ஒருநிலை எனவே**
**கூறிஎன் உள்ளத்தில் குலவிய களிப்பே**

**பேறிந்த நெறிஎனக் காட்டிஎன் தனையே**
**பெருநெறிக் கேற்றிய ஒருபெரும் பொருளே**
**சாறெந்த நாள்களும் விளங்கும்ஓர் வடல்வாய்த்**
**தனி நட ராஜஎன் சற்குரு மணியே.**

**-6 (இடை)சற்குருமணிமாலை 6**

**நல்லார்சொல் யோகாந்தப் பதிகள்பல கோடி**
**நாட்டியதோர் போதாந்தப் பதிகள்பல கோடி**
**வல்லார்சொல் கலாந்தநிலைப் பதிகள்பல கோடி**
**வழுத்தும்ஒரு நாதாந்தப் பதிகள்பல கோடி**
**இல்லார்ந்த வேதாந்தப் பதிகள்பல கோடி**
**இலங்குகின்ற சிந்தாந்தப் பதிகள்பல கோடி {64}**
**எல்லாம்பேர் அருட்சோதித் தனிச்செங்கோல் நடத்தும்**
**என்னரசே என்மாலை இனிதுபுனைந் தருளே.**



RangaRakes tamilnavarasam.com

-6 (இடை) அருள்விளக்கமாலை 10

{64. யோகாந்தப் பதிகள் பலகோடி முதலாகக் கூறியது தத்துவ புவனங்களை. விரிவு சிவாகமங்களிலும் சித்தாந்த நூல்களிலும் காண்க.}

**நாதாந்த வரையும்எங்கள் நாயகனார் செங்கோல்**
**நடக்கின்ற தென்கின்றார் நாதாந்த மட்டோ**
**போதாந்த நிலையும்உயர் யோகாந்த நிலையும்**
**புனிதகலாந் தப்பதியும் புகல்கின்றார் புகலும்**
**வேதாந்த வெளியும்மிகு சித்தாந்த வெளியும்**
**விளங்கும்இவற் றப்பாலும் அதன்மேல்அப் பாலும்**
**வாதா ந்தத் ததன்மேலும் அதன்மேல்அப் பாலும்**
**மன்றாடி அருட்செங்கோல் சென்றாடல் அறியே.**

-6(முடி) அனுபவமாலை 43

ஆறந்தங்களின் அனுபவங்களைத் தனக்கு அருளவேண்டுமென இறைவனை வேண்டும் அடிகள் 'நாதாந்தத் திருவீதி நடந்து கடப்பேனோ; நாதாந்தத் திருவீதி நடப்பாயோ தோழி' என்றெல்லாம் பாடுகின்றார்கள். ஆறந்த வீதிகளில் நடந்திடும் வல்லமையை வேண்டிய அடிகட்கு ஆறந்த வீதிகளில் ஆடல்செயும் (நடஞ்செய்யும்) பேற்றையே இறைவன் வழங்கினான். அடிகள் ஆறந்த வீதிகளில் ஆடல் செய்யும் பேறு பெற்றாரென்பது,

**காரண காரியக் கல்விகள் எல்லாம்**
**கற்பித்தென் னுள்ளே கலந்துகொண் டென்னை**
**நாரணர் நான்முகர் போற்றமேல் ஏற்றி**
**நாதாந்த நாட்டுக்கோர் நாயகன் ஆக்கிப்**
**பூரண மாம்இன்பம் பொங்கித் ததும்பப்**
**புத்தமு தாம்அருட் போனகம் தந்தே**
**ஆரண வீதியில் ஆடச்செய் தீரே**
**அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.**

**தேகம்எப் போதும் சிதையாத வண்ணம்**
**செய்வித் தெலாம்வல்ல சித்தியும் தந்தே**
**போகம்எல் லாம்என்றன் போகம தாக்கிப்**
**போதாந்த நாட்டைப் புரக்கமேல் ஏற்றி**
**ஏகசி வானந்த வாழ்க்கையில் என்றும்**
**இன்புற்று வாழும் இயல்பளித் தென்னை**
**ஆகம வீதியில் ஆடச்செய் தீரே**
**அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.**

**தானந்தம் இல்லாத தன்மையைக் காட்டும்**


RangaRakes tamilnavarasam.com

சாகாத கல்வியைத் தந்தெனக் குள்ளே
தேனந்தத் தெள்ளமு தூற்றிப் பெருக்கித்
தித்தித்துச் சித்தம் சிவமய மாக்கி
வானந்தம் ஆதியும் கண்டுகொண் டழியா
வாழ்க்கையில் இன்புற்றுச் சுத்தவே தாந்த
ஆனந்த வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.

சிற்சபை இன்பத் திருநடங் காட்டித்
தெள்ளமு தூட்டிஎன் சிந்தையைத் தேற்றிப்
பொற்சபை தன்னில் பொருந்திஎல் லாம்செய்
பூரண சித்திமெய்ப் போகமும் தந்தே
தற்பரம் ஆம்ஓர் சதானந்த நாட்டில்
சத்தியன் ஆக்கிஓர் சுத்தசித் தாந்த
அற்புத வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.

தத்துவம் எல்லாம்என் தன்வசம் ஆக்கிச்
சாகாவ ரத்தையும் தந்தெனைத் தேற்றி
ஒத்துவந் துள்ளே கலந்துகொண் டெல்லா
உலகமும் போற்ற உயர்நிலை ஏற்றிச்
சித்திஎ லாம்செயச் செய்வித்துச் சத்தும்
சித்தும் வெளிப்படச் சுத்தநா தாந்த
அத்திரு வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.

இத்தனை என்றுநின் றெண்ணிடல் ஒண்ணா
என்பிழை யாவையும் அன்பினில் கொண்டே
சத்திய மாம்சிவ சித்தியை என்பால்
தந்தெனை யாவரும் வந்தனை செயவே
நித்தியன் ஆக்கிமெய்ச் சுத்தசன் மார்க்க
நீதியை ஓதிஓர் சுத்தபோ தாந்த
அத்தனி வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.

மருந்திது மணிஇது மந்திரம் இதுசெய்
வகைஇது துறைஇது வழிஇது எனவே
இருந்தெனுள் அறிவித்துத் தெள்ளமு தளித்தே
என்னையும் தன்னையும் ஏகம தாக்கிப்
பொருந்திஎ லாஞ்செய் வல்லஓர் சித்திப்
புண்ணிய வாழ்க்கையில் நண்ணியோ காத்த
அருந்தவ வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.

பதிசார வைத்துமுற் பசுநிலை காட்டிப்

பாசவி மோசனப் பக்குவன் ஆக்கி
நிதிசார நான்இந்த நீள்உல கத்தே
நினைத்தன நினைத்தன நேருறப் புரிந்து
திதிசேர மன்னுயிர்க் கின்பஞ்செய் கின்ற
சித்திஎ லாந்தந்து சுத்தக லாந்த
அதிகார வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.

இருளான மலம்அறுத் திகபரங் கண்டே
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ
மருளான பற்பல மார்க்கங்கள் எல்லாம்
வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போகத்
தெருளான சுத்தசன் மார்க்கம தொன்றே
சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்
அருளான வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.

இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டுத்
தெருட்சாருஞ் சுத்தசன் மார்க்கநன் னீதி
சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்
அருட்சோதி வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.

-6(முடி) சிவானந்தத்தழுந்தல், 1-10

என்னும் திருப்பாடல்களாற் பெறப்படும். இப்பத்துப்பாடல்களும் அடிகட்கு இறைவன் அருளிய சித்தி வல்லபங்களைக் கூறுவனவாம். இவை ஊன்றி நோக்கற்பாலன. 'நாதாந்தத் திருவீதி நடந்து கடப்பேனோ' என்றும், 'நாதாந்தத் திருவீதி நடப்பாயோ தோழி' என்றும் வருந்திய அடிகளை ஆண்டவன் நாதாந்த நாட்டுக்கு நாயகன் ஆக்கினான்; போதாந்த நாட்டைப் புரக்கமேல் ஏற்றினான். நாதாந்த நாட்டுக்கோர் நாயகன் ஆக்கியது முதற்பாடலிலும், போதாந்த நாட்டைப் புரக்கமேல் ஏற்றியது இரண்டாம் பாடலிலும் அருளப்பெற்றன. ஆரணவீதியில் ஆடச்செய்ததும் (ஆரணம்-வேதம்), ஆகம வீதியில் ஆடச்செய்ததும், வேதாந்த வீதியில் ஆடச் செய்ததும், சித்தாந்த வீதியில் ஆடச் செய்ததும், நாதாந்த வீதியில் ஆடச்செய்ததும், போதாந்த வீதியில் ஆடச்செய்ததும், யோகாந்த வீதியில் ஆடச்செய்ததும், கலாந்த வீதியில் ஆடச்செய்ததும், அருளான வீதியில் ஆடச் செய்ததும், அருட்சோதி வீதியில் ஆடச்செய்ததும் முறையே பத்துப் பாடல்களில் குறிப்பிடப் பெற்றன. ஆரண ஆகம வீதிகளை முன்பும், அதன்பின்பு ஆறந்த வீதிகளையும், அருளான வீதி அருட்ஜோதி வீதிகளை அதன் பின்பும் கூறியது படி முறையைக் காட்டியதாம்.



RangaRakes tamilnavarasam.com

அடிகள் ஷடாந்தானுபவ சாத்தியரென்பது இவற்றாற் போதரும். ஆறந்த அனுபவங்களையும் பெற்ற அடிகள் தமது கொள்கைக்குச் **சடாந்த சமரச சுத்த சன்மார்க்கம் எனப்** பெயரிட்டருளினர்.

'சமரச வேத சன்மார்க்க சங்கம் என்பதற்குப் பொருள்: எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவு நூல் முடிபான நான்காவது மார்க்கத்தை அநுஷ்டிக்கின்ற கூட்டமென்று கொள்க. மேர்படி மார்க்கம் நான்காவன; தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என நான்கு', என அடிகள் அருளியுள்ளனர். (உபதேசப் பகுதி, பக்கம் 45). சன்மார்க்கம் இன்ன தென்பதனையும் அதற்கும் மற்ற மூன்று மார்க்கங்களுக்கும் உள்ள தொடர்பினையும் இவண் ஆராய்வோம்.

## நான்கு மார்க்கங்கள்

இறைவனை அடைவதற்கு நான்கு மார்க்கங்களைச் சைவசித்தாந்தம் கூறும்.

**சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்**
**தாதமார்க் கம்மென்றுஞ் சங்கரனை யடையும்**
**நன்மார்க்க நாலவைதாம் ஞான யோக**
**நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்**
**சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்பிய**
**சாரூப்பிய சாயுச்சிய மென்றுசதுர்விதமாம்**
**முன்மார்க்க ஞானத்தால் எய்துமுத்தி**
**முடிவென்பர் மூன்றினுக்கும் முத்திபத மென்பர்.**

என்னும் சிவஞான சித்தியார்ச் செய்யுள் (270) நான்கு மார்க்கங்களையும் அவற்றையே வேறு பெயராற் சொல்லப்படுவதான நான்கு சாதனங்களையும் அந்நான்கின் பயனாம் நால்வகை முத்திகளையும் கூறுகிறது. தோத்திரத்துக்குத் திருவாசகம் சாத்திரத்திக்குத் திருமந்திரம் எனப் பெரியோர்களாற் சிறப்பிக்கப் பெற்றதும், திருமுறை பன்னிரண்டனுள் பத்தாவதும், நமது அடிகளாரால் மிகவும் ஏத்தியெடுத்துப் பாராட்டப் பெறுவதுமாகிய திருமூலர் திருமந்திரம் நான்கு சாதனம், நான்கு மார்க்கம், நான்கு முத்தி ஆகிய பன்னிரண்டையும் பன்னிரண்டு அதிகாரங்களிற் கூறும். சித்தாந்த சாத்திரங்களிலும் பண்டார சாத்திரங்களிலும் இவை விரிவாகக் கூறப்படுகின்றன. கட்டளை நூல்கள் இவற்றை அழகாக வகுத்துக் கூறுகின்றன. அடிகளும் இவற்றைத் தமது அருட்பாடல்களுள் ஆங்காங்குக் கூறியருளுகின்றனர். அடிகளின் சமரச சுத்த சன்மார்க்கத்தை அறிய விரும்புவோர் இந்நான்கு மார்க்கங்களையும் சாதனங்களையும் பிறவற்றையும் தெளிவாகத் தெரிந்துகோடல் இன்றியமையாதது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனச் சாதனங்கள் நான்கு. தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என மார்க்கங்கள் நான்கு. நான்கு சாதனங்களும் முறையே நான்கு மார்க்கங்களாக வேறு பெயர்களாற் கூறப்படுகின்றனவே யன்றி வேறல்ல. இந்நான்காலும் அடையப்பெறும் பயன் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என நான்கு. இவற்றைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தின் அறிதற்கு எளிதாகும்.


RangaRakes tamilnavarasam.com

**சரியை - தாசமார்க்கம் -சலோகம்**
**கிரியை - சற்புத்திரமார்க்கம் -சாமீபம்**
**யோகம் - சகமார்க்கம் -சாரூபம்**
**ஞானம் - சன்மார்க்கம் -சாயுச்சியம்.**

சரியை முதலான சாதனம் நான்கில் ஒவ்வொன்றிலும் நான்கு பிரிவுகள் உண்டு. அவையாவன:

சரியை
சரியையிற் சரியை
சரியையிற் கிரியை
சரியையில் யோகம்
சரியையில் ஞானம்

கிரியை
கிரியையிற் சரியை
கிரியையிற் கிரியை
கிரியையில் யோகம் (கிரியா யோகம்)
கிரியையில் ஞானம்

யோகம்
யோகத்திற் சரியை (யோக சரியை)
யோகத்திற் கிரியை
யோகத்தில் யோகம்
யோகத்தில் ஞானம்

ஞானம்
ஞானத்திற் சரியை (ஞான சரியை)
ஞானத்திற் கிரியை (ஞானக் கிரியை)
ஞானத்தில் யோகம் (ஞான யோகம்)
ஞானத்தில் ஞானம்

**தாசமார்க்கம் -சரியை-சாலோகம்**

**தாதமார்க் கம்சாற்றிற் சங்கரன்தன் கோயில்**
**தலம்அலகிட் டிலகுதிரு மெழுக்கும் சாத்திப்**
**போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி**
**புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்**
**தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்த வனமும்**
**செய்துதிரு வேடங்கண் டால் அடியேன் செய்வ(து)**
**யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்**
**இயற்றுவதிச் சரியைசெய்வோர் ஈசனுல கிருப்பர்**

**-சிவஞானசித்தியார் 271**



RangaRakes tamilnavarasam.com

**எளியனல் தீப மிடல்மலர் கொய்தல்**
**அளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்**
**பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி**
**தளிதொழில் செய்வது தான் தாச மார்க்கமே.**

**-திருமந்திரம் 1502**

**தாசமார்க்கம்:** இது நான்கு மார்க்கங்களிலும் முதல் மார்க்கம்; மார்க்கம் நான்கிலும் இதுவே முதற்படி. தாசன் என்ற சொல்லுக்கு அடிமை என்பது பொருள். ஆதலின் தாசமார்க்கத்தை அடிமை நெறி. அடிமை வழி, அடிமை மார்க்கம் எனலாம். இதில் இறைவன் ஆண்டான்; நாம் அவனுக்கு அடிமை. இறைவனை ஆண்டானாகக் கொண்டு நாம் அவனுக்கு அடிமைப்பட்டு-ஆட்பட்டு-அடிமைத் தொண்டுகளைச் செய்து வழிபடுவது. அவை இறைவனது திருக்கோயிலை அலகிடுதல், மெழுக்கிடுதல், மலர் கொய்தல், அம்மலர்களை தார், மாலை,கண்ணி, திருவிளக்கிடுதல், திருநந்தவனம் வைத்தல். அடியார்களைக் காணின எதிர்சென்று செய்பணி வினவி அவற்றைச் செய்தல் முதலியன. இத் தாசமார்க்கமே சரியை எனப்படும்.

**சரியை:** தேகத்தை சிவார்ப்பிதஞ் செய்தல், அதாவது புறத்தொழின் மாத்திரையானே இறைவனுடைய உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. இது சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம். சரியையில் ஞானம் என நால்வகைப்படும். சரியையிற் சரியை: திருக்கோயில்லில் அலகிடல் மெழுகல் முதலியன; சரியையிற் கிரியை: ஒரு மூர்த்தியை வழிபடல். சரியையில் யோகம்: நெஞ்சின் கண் இறைவனைத் தியானஞ் செய்தல். சரியையில் ஞானம்: தியான பாவனையின் உறைப்பினால் நெஞ்சின் கண் ஓருனுபவ உணர்வு நிகழ்தல்.

சரியையாகிய தாசமார்க்கத்தாலடையும் பயன் சாலோகம் என்னும் பதமுத்தி. சாலோகம் என்பது இறைவனுகலத்தில் உறையும் பேறு இது பதமுத்தியே யொழிய முடிவான பரமுத்தி யல்ல.

## <u>சற்புத்திர மார்க்கம் - கிரியை - சாமீபம்</u>

**புத்திரமார்க் கம்புகலில் புதியவிரைப் போது**
**புகையொளிமஞ் சனம் அமுது முதல்கொண் டைந்து**
**சுத்திசெய்தா னம்மூர்த்தி மூர்த்தி மானாம்**
**சொதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த**
**பத்தியினால் அருச்சித்துப் பரவிப் போற்றிப்**
**பரிவினோடும் எர்யில்வரு காரியமும் பண்ணி**
**நித்தலும் இக் கிரியையினை இயற்று வோர்கள்**
**நின்மலந்தன் அருகிருப்பர் நினயுங் காலே.**
**-சிவஞானசித்தியார்272**

**பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்**
**ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை**
**நேசித்திட் டன்னமும் நீசுத்தி செய்தன்மற்**



RangaRakes tamilnavarasam.com

றாசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே.

-திருமந்திரம் 1496

**சற்புத்திரமார்க்கம்:** இது இரண்டாவது மார்க்கம். முதலாவதாகியா தாச மார்க்கத்தினும் இது உயர்ந்தது. இதில் இறைவனுக்கும் நமக்குள்ள சம்பந்தம் தந்தைக்கும் மனுக்குமுள்ள சம்பந்தமாகும். இறைவனைத் தந்தையாயும் தன்னை மகனாயும் பாவித்தலின் இது சற்புத்திரமார்க்கம் எனப் பெயர் பெற்றது. இதில் செய்யும் பணிகள் புதிய மலர், தூபதீபங்கள், திருமஞ்சனம், திருவமுது முதலிய பொருள்களைச் சேர்த்து, பூதசுத்தி முதலிய ஐந்து சுத்திகளையுஞ் செய்து, அதன்மேல் மூர்த்தியைக் கற்பித்து, மூர்த்திமானாகிய சிவத்தைத் தியானித்து ஆவாகித்து, சுத்தமான பத்தியினால் ஏகாக்கிர மனத்தோடு உபசரித்துத் தோத்திரஞ் செய்து அக்கினி காரியமியற்றுதல் முதலியனவாம். இச்சற்புத்திர மார்க்கமே கிரையை எனப்படும்.

**கிரியை:** இந்திரியங்களை சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவது புறத்தொழின் அகத்தொழின் மாத்திரையானே இறைவனுடைய அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. இது கிரியையிற் சரியை, கிரியையிற்கிரியை, கிரியையில்யோகம், கிரியையில் ஞானம் என் நால்வகைப்படும், கிரியையிற் சரியை: பூசைக்கு வேண்டிய பொருள்களை செய்து கோடல், கிரியையிற் கிரியை: ஆகமத்தில் விதித்தவாறு ஐவகைச் சுத்தி முன்னாகச் செய்யும் பூசனை. கிரியையில் யோகம்: அகத்தே பூசை ஓமம் தியானம் மூன்றற்கும் மூவிடம் வகித்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகம். கிரியையில் ஞானம்: அந்தரியாக் உறைப்பின்கண் நிகழும் ஓரனுபவ உணர்வு.

கிரியையாகிய சற்புத்திர மார்க்கத்தாலெய்தும் பயன் சாமீபம் என்னும் பதமுத்தி. சாமீபம், சமீபத்தில் இருத்தல் எனப் பொருள்படும். அதாவது இறைவன் சந்நிதியில் சமீபமாக இருந்து கொண்டு(அணுக்கத் தொண்டு) செய்யும் பேறு. இதுவும் பதமுத்தியே, பரமுத்தியல்ல.

## சகமார்க்கம்-யோகம்-சாரூபம்

**சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி இரண்டும்**
**சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்கள்**
**அகமார்க்க மறிந்தவற்றின் அரும்பொருள்கள் உணர்ந்தங்**
**கணைந்துபோய் மேலேறி அலர்மதிமண் டலத்தின்**
**முகமார்க்க அமுதுடலம் முட்டத் தேக்கி**
**முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்**
**உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்**
**உழத்தல்உழந் தவர்சிவன்தன் உருவத்தைப் பெறுவர்.**

-சிவாஞானசித்தியார் 273

**ஆதார சோதனை யானாடி சுத்திகள்**
**மேதாதி யீரெண் கலாந்தத்து விண்ணொளி**
**போதா லயத்துப் புலன்கர ணம்புந்தி**
**சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே.**



RangaRakes tamilnavarasam.com

**-திருமந்திரம் 1492.**

**சகமார்க்கம்**: இது மூன்றாவது மார்க்கம். முதலிரண்டு மார்க்கங்களாகிய தாச சற்புத்திர மார்க்கங்களினும் உயர்ந்தது. இதில் இறைவனுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம் இரண்டு நண்பர்களுக்குள் உள்ள சம்பந்தமாம். சகமார்க்கம்-தோழமை நெறி. இதில் இறைவனுக்கு நாம் தோழமை நிலையிலிருக்கிறோம். இம்மார்க்கத்தில் மேற் கொள்ளப் படுபவை பஞ்சேந்திரியங்களை ஒடுக்கி இரேசக பூரக வாயுக்களைத் தடுத்துக், கும்பித்திருந்து, பிராணவாயுவைச் சுழுமுனையில் நிறுத்தி, சரீரத்துள்ளே ஆறாதாரங்களை யறிந்து, மூலாதாரத்தில் அக்கினியைச் சொலிக்கச் செய்து நாபித்தானத்தில் குண்டலி சக்தி சொரூபமாயிருக்கும் அமுதத்தையுருகப் பண்ணி, மற்றை ஆதாரங்களில் அதோ முகமான பதுமங்களை அதனைக்கொண்டு பேதித்து, மேலே சென்று விந்துத் தானத்தின் வழியே யிறங்கிப் பெருகுகின்ற அமுததாரையைத் தனதுடல் முற்றும்நிறையச் செய்து, முழுச் சோதியான சிவத்தைத் தியானித்திருப்பது முதலியனவாம். இச்சகமார்க்கமே யோகம் எனப்படும்.

**யோகம்:** கரணங்களைச் சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவது அகத்தொழின் மாத்திரையானே இறைவனுடைய அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. இது யோகத்திற் சரியை, யோகத்திற் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் என நால்வகைப்படும். யோகத்தில் சரியை: இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம் என்னும் நான்குமாம். யோகத்தில் கிரியை: பிரத்தியாகாரமும் தாரணையும். யோகத்தில் யோகம்: தியானம். யோகத்தில் ஞானம்" சமாதி. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை தியானம், சமாதி ஆகிய எட்டும் சேர்ந்ததே யோகமாதலின் அது அட்டாங்க யோகம் எனப்படும். அட்டாங்கமாவது எட்டு அங்கங்கள்.

யோகமாகிய சகமார்க்கத்தாலடையும் பயன் சாரூபம் என்னும் பதமுத்தி. சாரூபம் என்பது இறைவனது உருவத்தைப் பெறுதல். இதுவும் பதமுத்தியேயன்றிப் பரமுத்தி யல்ல.

**சன்மார்க்கம்-ஞானம் -சாயுச்சியம்**

**சன்மார்க்கம் சகலகலை புராண வேத**
**சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவும் உணர்ந்து**
**பன்மார்க்கப் பொருள்பலவும் கீழாக மேலாம்**
**பதிபசுபா சம்தெரித்துப் பரசிவனைக் காட்டும்**
**நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான**
**ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்**
**பின்மார்க்கச் சிவனுடனாம் பெற்றி ஞானப்**
**பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் தானே.**

**-சிவஞானசித்தியார் 274**

**தானவ னாகித் தானைந்தா மலஞ்செற்று**
**மோனம தாமொழிப் பான்முத்த ராவது**



RangaRakes tamilnavarasam.com

**மீனமில் ஞானானு பூதியில் இன்பமுந்**
**தானவ னாயுற லானசன் மார்க்கமே**

**சன்மார்க்க சாதனந் தான்ஞான ஞேயமாம்**
**பின்மார்க்க சாதனம் பேதையர்க் காய்நிற்கும்**
**துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றார்**
**சன்மார்க்கந் தானவ னாகுஞ்சன் மார்க்கமே.**

**-திருமந்திரம் 1481, 1483**

**சன்மார்க்கம்**: இது நான்காவது மார்க்கம். மற்ற மூன்று மார்க்கங்களினும் இது உயர்ந்தது. சன்மார்க்கம் என்ற சொல்லை சத்-மார்க்கம் எனப் பிரிக்கவேண்டும். சத் என்பது நன்மை. சன் மார்க்கம் என்பது நல்வழி. நல்லாறு எனப் பொருள்படும். இது வேதங்கள், சாத்திரங்கள், புராணங்கள், கலை ஞானங்கள் என்பன பலவும் கற்றுணர்ந்து புறச் சமயங்களில் பலவாகச் சொல்லப்படுகிறயாவையும் பூர்வ பட்சஞ்செய்து மேலான பசு, பதி, பாசமாகிய ஞானத்தால் ஞாதுரு ஞான ஞேயங்கள் பொருந்தாவண்ணம் பதியோடு இரண்டறக் கலக்கத் தக்க ஞானத்தைப் பெறுவதாம். இச் சன்மார்க்கமே ஞானம் எனப்படும்.

**ஞானம்:** ஆன்மாவாகிய தன்னைச் சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவது புறத்தொழில் அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத் தொழின் மாத்திரையானே உருவம் அருவுருவம் அருவம் என்னும் முத்திறத் திருமேனியுங்கடந்த அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நின்ற இறைவனிடத்துச் செய்யும் வழிபாடு. இது ஞானத்திற்சரியை, ஞானத்திற்கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என நால்வகைப்படும். ஞானத்தில் சரியை: கேட்டல், ஞானத்தில் கிரியை: சிந்தித்தல். ஞானத்தில் யோகம்: தெளிதல், ஞானத்தில் ஞானம்: நிட்டை கூடல்.

ஞானமாகிய சன்மார்க்கத்தால் எய்தும் பயன் சாயுச்சியம் என்னும் பரமுத்தி. சாயுச்சியம் என்பது இறைவனோடு இரண்டறக் கலத்தல். இது ஒன்றே பரமுத்தி, முடிந்த முடிபானது. முன் சொல்லப்பட்டவை மூன்றும் பதமுத்திகளே.

## ஞானத்தின் சிறப்பு

நான்காவது சாதனமாகிய ஞானம், சரியை கிரியை யோகம் என்னும் முதல் மூன்று சாதனங்களினும் உயர்ந்தது. சரியை கிரியை யோகங்களின் பயன் ஞானத்தை அடைதலே. சரியை கிரியை யோகம் மூன்றும் ஞானத்தை அடைவதற்கான படிகளே.

**சரியையில் சிவார்ப்பிதஞ் செய்யப்படுவது தேகம்.**
**கிரியையில் சிவார்ப்பிதஞ் செய்யப்படுவது இந்திரியங்கள்.**
**யோகத்தில் சிவார்ப்பிதஞ் செய்யப்படுவது கரணங்கள்.**
**ஞானத்தில் சிவார்ப்பிதஞ் செய்யப்படுவது ஆன்மாவாகிய தன்னையே.**

**சரியையில் புறத்தொழிலால் வழிபாடு.**
**கிரியையில் புறத்தொழில் அகத்தொழில் இரண்டாலும் வழிபாடு.**


RangaRakes tamilnavarasam.com

**யோகத்தில் அகத்தொழிலால் வழிபாடு**
**ஞானத்தில் அறிவுத்தொழிலால் வழிபாடு.**

**சரியையில் வழிபடப்படுவது உருவத்திருமேனி**
**கிரியையில் வழிபடப்படுவது அருவுருவத்திருமேனி.**
**யோகத்தில் வழிபடப்படுவது அருவத்திருமேனி.**
**ஞானத்தில் வழிபடப்படுவது உருவம் அருவுருவம் அருவம் ஆகிய மூன்றையும் கடந்தது.**

இவற்றை நுணுகியுணரின் சரியை கிரியை யோக ஞானங்களின் படிமுறை நன்கு விளங்கும்.

**"விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்**
**அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே"**

எனத் தாயுமானவர் (பராபரக்கண்ணி157) பாடுகின்றார். சாரியையை அரும்புக்கும், கிரியையை அதனின் முதிர்ந்த மலர்க்கும். யோகத்தை அதனின் முதிர்ந்த காய்க்கும், ஞானத்தை அவை எல்லாவற்றினும் முதிர்ந்த கனிக்கும், உவமித்துள்ள அழகும் அருமையும் நுட்பமும் போற்றத்தக்கவை. அரும்பு, மலர், காய், கனி என்ற படிமுறையே அவை ஒன்றின் ஒன்று முதிர்ந்தது, மேலானது என்பதைக் காட்டுமன்றோ?

**புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்**
**புகன்மிருதி வழிஉழன்றும் புகலும்ஆச் சிரம**
**அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்**
**அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்**
**சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத**
**சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்**
**திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகம்**
**செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்.**

என்னும் சிவஞான சித்தியார்ச் செய்யுளில் (263) அருணந்தி சிவாசாரியர், முதலில் புறச்சமயமாகிய வேற்றுச் சமயத்தை மேற்கொண்டொழுகி, பின்னர் உண்மை ஒரு சிறிது தெளியப்பெற்று, அகச் சமயங்களுள் ஒன்றிற் புகுந்து ஒழுகி, கலைகளையும் நூல்களையும் நன்கு ஆய்ந்து, அதனால் அறிவு முதிர்ந்து ஆகமப்பொருளை உணர்ந்து, சைவசித்தாந்தத்தை மேற்கொண்டு அதன்கட் சரியை கிரியை யோகம் என்னும் மூன்றையும் படிப்படியாகக் கடந்து இறுதியாக ஞானத்தையடைந்து சிவனடியைச் சேர்வர் என இவற்றை அழகாகப் படிமுறையிற் கூறுதல் காண்க.

இதுபோன்றே நமது அடிகளும் திருவருட்பா பாடலொன்றில் தமது வரன்முறையான சாதன அனுபவங்களைக் கூறுவது காணலாம். அப்பாடல் வருமாறு:

**சரியைநிலை நான்கும்ஒரு கிரியைநிலை நான்கும்**
**தனியோக நிலைநான்கும் தனித்தனிகண் டறிந்தேன்**
**உரியசிவ ஞானநிலை நான்கும்அருள் ஒளியால்**
**ஒன்றொன்றா அறிந்தேன்மேல் உண்மைநிலை பெற்றேன்**
**அரியசிவ சித்தாந்த வேதாந்த முதலாம்**
**ஆறந்த நிலைஅறிந்தேன் அப்பால்நின் றோங்கும்**
**பெரியசிவ அனுபவத்தால் சமரசசன் மார்க்கம்**
**பெற்றேன்இங் கிறவாமை உற்றேன்காண் தோழி.**

**-6 (முடி) அனுபவமாலை 93**

சரியை நிலைகள் நான்கு, கிரியை நிலைகள் நான்கு, யோக நிலைகள் நான்கு, ஆகிய பன்னிரண்டையும் தனித்தனியே கண்டறிந்ததாயும், அதன்மேல் அருள் ஒளித் துணையால் ஞானநிலைகள் நான்கையும் ஒவ்வொன்றாக அறிந்ததாயும், அதன்மேலே இவற்றின் பயனான உண்மை நிலையைப் பெற்றதாயும், சித்தாந்தம் வேதாந்தம் முதலாகிய ஆறந்த நிலைகளையும் அறிந்து, அவ்வாறந்தத்திற்கும் அப்பால் நின்றோங்குகின்ற பெரிய சிவானுபவத்தால் சமரச சன்மார்க்கத்தைப் பெற்று இறவாமையுற்றதாயும், தலைவி தோழிக்குக்கூறும் கூற்றாகப்பாடிய மேற்பாடலில் சாதனங்களின் படிமுறையை அடிகள் வரன்முறையாக விளக்கி யருளியுள்ளமை காண்க.

பதினாறுபடிகளையும் தனித்தனியே ஒவ்வொன்றாகக் கண்டறிந்தாகக் கூறும் அடிகள், நேரிடையாகவே பதினைந்தாம் படிக்கு ஏறுவதற்குரிய வழியொன்றை நமக்குக் காட்டியருளுகின்றார்கள்.

இப்படியே, காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வரவிடுத்தவர், ஆணுக்குக் கடுக்கனிடுதலும் பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடுதலும் தமக்குச் சம்மதமானால், காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல்களிட்டு வரவிட்டிருக்க மாட்டாரா என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுகிற பக்ஷத்தில், காதில் கடுக்கனிடவும் மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா? இப்படி விசாரித்துப் பிரபஞ்சபோகத்தின் கண் அலக்ஷியம் தோன்றினால் நிராசை உண்டாம். ஆதலால் சரியை முதலிய சாதகம் நான்கில், மூன்றாவது படியாகிய ஞானத்தில் யோகம் செய்கின்ற பலனாகிய நிராசை என்னும் படி உண்டாகின்றாது. ஆகையினாலே இந்த விசாரத்திலிருந்து கொண்டிருங்கள்.

-பேருபதேசம் 22-10-1873

ஞானத்தின் சிறப்பைத் திருமூலர்

**ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை**
**ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று**
**ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா**
**ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே**

**-திருமந்திரம் 1467**

என அருளுவர்.

<u>**சன்மார்க்கத்தின் சிறப்பு**</u>

மார்க்கங்கள் நான்கில் சன்மார்க்கமே உயர்ந்தது. மற்ற மூன்று மார்க்கங்களும் சன்மார்க்கத்தை அடைதற்கான படிகளே. சன்மார்க்கம் ஒன்றே முடிவான பரமுத்தியைத் தரும். மற்ற மூன்றும் பதமுத்திகளையே தரும். "தானவனாயுறலான சன்மார்க்கமே" என்றும் "தானவனாகுஞ் சன்மார்க்கமே" என்றும் இதனைச் சிறப்பிப்பர் திருமூலர். "என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே" என முழங்குவர் நமது அடிகள். சன்மார்க்கம் ஒன்றே சாகாநிலை தரும் என்பதும் சாகாதவனே சன்மார்க்கி என்பதும் அடிகளின் முடிந்தமுடிபான கொள்கைகள்.

திருநாவுக்கரசர் தாசமார்க்கத்தினர் (ஞானசரியை) என்பதும், திருஞானசம்பந்தர் சற்புத்திரமார்க்கத்தினர் (ஞானக் கிரியை) என்பதும், சுந்தரமூர்த்திகள் சகமார்க்கத்தினர் (ஞானயோகம்) என்பதும், மாணிக்கவாசகர் சன்மார்க்கத்தினர் (ஞானத்தில் ஞானம்) என்பதும் வழக்கு. திருநாவுக்கரசர் திருக்கோயில்கள் தோறுஞ்சென்று பாடும் பணியோடு உழவாரப்பணியும் பூண்டு தமது நெடிய வாழ்க்கை முழுவதும் திருத்தொண்டராகவே திகழ்ந்ததுபற்றி அவரை மார்க்கத்துள் தாசமார்க்கத்தையும், சாதனத்துள் சரியை (ஞானசரியை) யையும் கொண்டவரெனவும்; திருஞானசம்பந்தர் குழந்தைப் பருவத்திலேயே அம்மையாகிய இறைவியால் ஞானப்பாலருந்தப்பெற்று, பிள்ளைப் பருவத்தே சிறு கைகொட்டிப்பாடிய செங்கைகள் நோவப்பொறாதலின் பொற்றாளமும், தளர்நடை பொறுக்கப் பெறாதலின் ஊர்வதற்கு முத்துச் சிவிகையும் நிழற்றற்கு முத்துப்பந்தரும் அப்பனாகிய இறைவனால் அன்போடு தரப்பெற்று, நிலவுலகில் நிலவிய குறுகிய காலமாகிய புண்ணியப் பதினாறாண்டளவும் இறைவனிடத்து மகன்மைக் காதலே பூண்டொழுகியது பற்றி அவரை மார்க்கத்துள் சற்புத்திர மார்க்கத்தையும், சாதனத்துள் கிரியை (ஞானக்கிரியை) யையும் கொண்டவரெனவும்; சுந்தரமூர்த்திகள் இறைவனைத் தன் காதலிமாட்டுத் தூது செல்லப்பணித்த தோழமை நெறியுடையராதல் பற்றி அவர் மார்க்கத்துள் சகமார்க்கத்தையும் சாதனத்துள் யோகத் (ஞானயோகம்) தையும் கொண்டவரெனவும்; மாணிக்கவாசகர் அன்பும் சிவமுமே பொருளெனக் கண்டு உள்ளுருகி அருள்நெறி நின்றவராதலின் அவரைச் சன்மார்க்கத்தில்-ஞானத்தில்-நின்றவரெனவும் கொண்டனர்.

சமரச சன்மார்க்கியாகிய நமது அடிகளும் தம்மை இறைவன் அடியனாக்கி, மகனாக்கி, தோழனாக்கி, அடிகளாக்கி ஆட்கொண்டான் எனக்கூறுகின்றார்கள்.

**அடிய னாக்கிப் பிள்ளை யாக்கி**
**நேய னாக்கியே**
**அடிக ளாக்கிக் கொண்டா யென்னை**
**யவல நீக்கியே**

**-கீர்த்தனைப்பகுதி, மெய்யருள் வியப்பு 72**

**அன்றே என்னை யடிய னாக்கி**



RangaRakes tamilnavarasam.com

யாண்ட சோதியே
அதன்பின் பிள்ளை யாக்கி யருளிங்
களித்த சோதி யே
நன்றே மீட்டு நேய னாக்கி
நயந்த சோதி யே
நானு நீயு மொன்றென் றுரைத்து
நல்கு சோதி யே.

**-கீர்த்தனைப்பகுதி, மெய்யருள் வியப்பு 96**

என்பது அடிகளின் திருவாக்கு. நானும் நீயும் ஒன்றென்பது சன்மார்க்கம். இதனாலும் படிமுறை விளங்கும். இதுகாறும் கண்டவற்றால் ஷடாந்த சமரச சுத்தசன்மார்க்கம் என்பதன் பொருள் ஒருவாறு விளங்கும்.

## நான்கு மார்க்கங்களையும் பற்றி அடிகள் அருளும் புதிய விளக்கம்

நான்கு மார்க்கங்களையும் பற்றிய புதிய விளக்கமொன்றை அடிகள் அருளியுள்ளார்கள். இறைவனுக்கு அடிமையாதல் தாசமார்க்கம், மகனாதல் சற்புத்திர மார்க்கம், நண்பனாதல் சகமார்க்கம், இறைவனே தானாதல் சன்மார்க்கம் என்பது பழைமை தொட்டு வழங்கிவரும் பொருள். ஆனால் அடிகளோ இதனைக் கூறுவதோடமையாது, எல்லா உயிர்களையும் தன்னடிமையாகப் பாவித்தல் தாசமார்க்கம், எல்லா உயிர்களையும் தன் மகனாகப் பாவித்தல் சற்புத்திர மார்க்கம், எல்லா உயிர்களையும் தன் நண்பனாகப் பாவித்தல் சகமார்க்கம், எல்லா உயிர்களையும் தன்னைப் போல் பாவித்தல் சன்மார்க்கம்;இது ஜீவநியாயம் என அருளுகின்றார்கள். பக்கம் 243 காண்க.

தாசமார்க்கம் -இறைவனுக்கு அடிமையாதல்
சற்புத்திர மார்க்கம்-இறைவனுக்கு மகனாதல் - இது தெய்வ நியாயம்.
சகமார்க்கம்-இறைவனுக்கு நண்பனாதல் சமய சன்மார்க்கம்.
சன்மார்க்கம்-இறைவனே தானாதல்.

**தாசமார்க்கம்-எல்லா உயிர்களையும் தன் அடிமையாகப் பாவித்தல்.**
**சற்புத்திர மார்க்கம்-எல்லா உயிர்களையும் தன் மகனாகப் பாவித்தல்.**
**சகமார்க்கம்-எல்லா உயிர்களையும் தன் நண்பனாகப் பாவித்தல்.**
**சன்மார்க்கம்-எல்லா உயிர்களையும் தன்னைப்போல் பாவித்தல்.**

**-இது ஜீவநியாயம். சமரச சன்மார்க்கம்.**

## சமரச சன்மார்க்கக் கொள்கைகள்

கடவுள் ஒருவரே என்பதும், ஒருவரேயாகிய அக்கடவுளை உண்மை அன்பால் ஒளி (ஜோதி) வடிவில் வழிபட வேண்டுமென்பதும், சிறு தெய்வ வழிபாடு கூடாதென்பதும், அத்தெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி கூடாதென்பதும், புலால் உண்ணலாகாதென்பதும், சாதி சமய முதலிய எவ்வகை வேறுபாடும் கூடாதென்பதும், எவ்வுயிரையும் தம் உயிர்போல் எண்ணும் ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமையைக் கைக்கொள்ள வேண்டுமென்பதும்,ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய


RangaRakes tamilnavarasam.com

சீவகருணியமே பேரின்ப வீட்டிமன் திறவு கோலென்பதும், புராணங்களும் சாத்திரங்களும் முடிவான உண்மையைத் தெரிவிக்க மாட்டாவென்பதும் இறந்தவரைப் புதைக்க வேண்டுமேயொழிய எரிக்கக்கூடாதென்பதும், கருமாதி திதி முதலிய சடங்குகள் செய்யவேண்டாமென்பதும் பிறவும் அடிகளின் சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளாம். இக்கொள்கைகளைப் பின்பற்றவும், இக்கொள்கைகளைக் கொண்ட சமரச சுத்த சன்மார்க்கப் பெருநெறியை உலகெங்கும் பரப்பவும் வேண்டி அடிகள் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்றொரு சங்கத்தை அமைத்தருளினார்கள்.

## <u>சன்மார்க்க சங்கம் நிறுவியது-1865</u>

சங்கங் காண்பதில் அடிகட்கிருந்த பேரார்வத்தைத்,

**தங்கமே அனையார் கூடிய ஞான**
**சமரச சுத்தசன் மார்க்கச்**
**சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்**
**சார்திருக் கோயில்கண் டிடவும்**
**துங்கமே பெறுஞ்சற் சங்கம் நீ டுழி**
**துலங்கவும் சங்கத்தில் அடியேன்**
**அங்கமே குளிர நின்றனைப் பாடி**
**ஆடவும் இச்சைக்காண் எந்தாய்.**
**-பிள்ளைச்சிறு விண்ணப்பம் 21**

என்னும் அருட்பாடலால் நன்கறியலாம்.

தம்மைச் சூழ்ந்தொழுகிய அன்பர்களைக் கூட்டி 1865-ஆம் ஆண்டில் அடிகள் சங்கத்தை அமைத்தார்கள். அப்போது அதற்கிடப்பட்ட பெயர் 'சமரச வேத சன்மார்க்க சங்கம்' என்பது. பிற்காலத்தில் இப் பெயர் 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்' என அடிகளாரால் மாற்றியமைக்கப்பட்டது. சமரச வேத சன்மார்க்க சங்கம் என்பதே முதலில் சங்கத்தின் பெயராக இருந்ததென்பது அடிகளின் கடிதங்கள், கட்டளைகள் முதலியவற்றில் சமரச வேத சன்மார்க்க சங்கம் என்றே வழங்கப் பெற்றிருப்பதால் அறியப்பெறும். தமது பாடலொன்றிலும் சங்கத்தைச் சமரச வேத சன்மார்க்க சங்கம் எனவும், சாலையைச் சமரச வேத சன்மார்க்க சங்கச் சாலை எனவும் அடிகள் சுட்டுகின்றார்கள்.

**வேலைஅப் பாபடை வேலை அப் பாபவ வெய்யிலுக்கோர்**
**சோலைஅப் பாபரஞ் சோதிஅப் பாசடைத் துன்றுகொன்றை**
**மாலைஅப் பாநற் சமரச வேதசன் மார்க்கசங்கச்**
**சாலைஅப் பாஎனைத் தந்தாப் பாவந்து தாங்கிக்கொள்ளே.**

**-6(இடை)தனித் திருத்தொடை(2)3**

தொழுவூர் வேலாயுதனாரும் தமது திருவருட்பா வரலாற்றில் (பாடல்ல்ல் 32,42,62) சங்கத்தைச் சமரச வேத சன்மார்க்க சங்கம் என்றே குறித்துள்ளார். 1867-ல் முதன் முதலாக வெளியிடப் பெற்ற 'திருவருட்பா' வின் முகப்பேட்டிலும் சமரச வேத சன்மார்க்க சங்கம் என்றிருக்கக் காணலாம்.



RangaRakes tamilnavarasam.com

சங்கம் நமக்குப் புதியதன்று. சங்கம் வைத்து மொழி வளர்த்தோர் நம் முன்னோர். அக்காலத்தைச் சங்க காலம் என்றே வழங்குகிறோம். தமிழையும் சங்கத் தமிழ் என்கிறோம். மொழிச் சங்கம் நமக்குப் பழைமையானது. ஆன்மிக சங்கமோ நமக்கு முற்றும் புதுமையானது. தமிழகத்தில் ஆன்மிகத்திற்கென முதன் முதலில் சங்கம் கண்டவர் வள்ளற்பெருமான் இராமலிங்க அடிகளேயாவர். இந்தியாவில் சங்கங்கண்ட ஞானிகள் இருவர். ஒருவர் வட இந்தியர். இன்னொருவர் தென் தமிழர். முன்னவர் புத்தர். பின்னவர் நமது அடிகள். இந்தியாவிலேயே முதன் முதலாகச் சமயத்திற்கெனச் சங்கம் கண்ட பெருமை புத்தரையே சாரும். இயேசுவும் நபியும் தம் காலத்தில் தத்தம் சமயங்களுக்குச் சங்கங்களை ஏற்படுத்தவில்லை. பௌத்த சமயம் இன்று உலக சமயமாக நிலவுதற்குக் காரணம் சங்கமே. பௌத்தர்களுக்குச் சங்கமே உயிர். அவர்கள் மூன்றைச் சரணடைவர். முதலாவது புத்தர். இரண்டாவது அவருடைய தர்மம் (பௌத்த தர்மம்). மூன்றாவது சங்கம்(பௌத்த)சங்கம், ' புத்தம் சரணம் கச்சாமி,தர்மம்சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி' என்பது அவர்களது திரி சரணம். நாமும் வள்ளலாரையும் அவரது தர்மத்தையும்(சமரச சன்மார்க்கம்)அவரது சங்கத்தையும் சரணடைவோமாக.

தமிழகத்தில் வள்ளற்பெருமானார்க்கு முன்பிருந்த ஞானிகள்(சமய குரவர்கள், சந்தான குரவர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்கள், ஆகியோர்) மடங்களை அமைத்துக்கொண்டு தொண்டு செய்தனர். ஆனால் பின்வந்த அடிகளோ மடம் கட்டாது சங்கத்தை ஏற்படுத்தினார்கள் இஃதன்றோ அடிகளோ மடம் கட்டாது சங்கத்தை ஏற்படுத்தினார்கள் இஃதன்றோ அடிகளின் தனிச் சிறப்பு. மடத்திற்கும் சங்கத்திற்கும் வேறுபாடு என்ன? மடம் துறவறத்தார்க்கு மட்டுமே உரியது. சங்கம் இல்வாழ்வார்க்கும் உரியது. மடம் பக்குவ ஆன்மாக்களுக்கு மட்டுமே உரியது. சங்கம் பக்குவர், அபக்குவர் ஆகிய எல்லார்க்கும் உரியது. மடம் எல்லார்க்கும் இடந்தராது. சங்கம் இடந்தரும். எல்லார்க்கு இடந்தந்து இழுத்துத் திருத்தவேண்டும் என்ற பேரெண்ணத்தாற்றான் அடிகள் மடம் எனப் பேரிடாது சங்கம் எனப் பேரிட்டருளினர். அன்று மடமாக அமைந்திருப்பின் அதற்கு நாட்டி இன்று இவ்வளவு கிளைகள் தோன்றியிரா. சங்கமாக அமைந்தமையாற்றான் இன்று ஊரெங்கும் நாடெங்கும் சன்மார்க்க சங்கங்களைக் காண்கிறோம்.

சங்கத்தின் பெயராகிய 'சமரச வேத சன்மார்க்க சங்கம்' என்பதன் பொருள் அடிகளாராலேயே பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது.

சமரச வேத சன்மார்க்க சங்கம் என்பதற்குப் பொருள்: எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவு நூல் முடிபான நான்காவது மார்க்கத்தை அநுஷ்டிக்கின்ற கூட்டமென்று கொள்க. மேற்படி மார்க்கம் நான்காவன: தாசமார்க்கம் சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என நான்கு.

சன்மார்க்கம் என்பதன் பொருளை முன்னர் கண்டோம். சமரச வேதம் என்பதன் பொருளை இவண் ஆராய்வோம். மேகாட்டிய அடிகளின் உபதேச விளக்கத்தால், வேதம் என்பதற்கு அறிவு நூல் என்றும், சமரச வேதம் என்பதற்கு எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான அறிவு நூல் என்றும் அடிகள் பொருள் கொண்டுள்ளார்கள் என்பது விளங்கும். வேதங்கள் பல. அவ்வச் சமயங்கள் தத்தமக்குத் தனியாக வேதங்களையுடையன. ஆரியர்க்கு வேதங்கள் இருக்கு.



RangaRakes tamilnavarasam.com

யசுர், சாமம், அதர்வணம் என்பன. தமிழரக்கும் வேதம் திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களுமாம். கிறித்தவர்க்குப் பைபிளும் இஸ்லாமியர்க்குக் குர் ஆனும் பௌத்தர்க்குக் திரிபிடகமும் வேதங்கள் ஆகும். இவ்வாறு ஒவ்வொரு சமயத்தார்க்கும் அவ்வச் சமயத்தின் தலையான் நூல் வேதமாயிற்று. இவையெல்லாம் சமய வேதங்கள்; ஒரேயொரு சமயத்திற்கு மட்டுமே யுரியன.

அடிகள் கண்டதோ சமரச வேதம். சமரச வேதம் சமயங் கடந்தது. சமயா தீதமானது. எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவானது. எல்லாச் சமயத்திலும் காணப்படும் நற்கருத்துக்களைத் தன்னுட்கொண்டு அவற்றிற் சொல்லப்படாத உயர்ந்த கருத்துக்களைக் கூறி எல்லாச் சமயத்திற்கும் சமரசமாக விளங்குவது. ஆதலின் சமரச வேதம் எனப் பெயர் பெற்றது. அடிகள் சமரச வேதம் என்றொரு நூல் செய்தார்கள் அது நமக்குக் கிடைக்கவில்லை. சீவகாருணிய ஒழுக்கத்தின் முதற் பிரிவின் இறுதியில் ' இன்னும் இந்தச் சீவகாருணிய ஒழுக்கத்தின் விரிவைச் சமரச வேதத்திற் கண்டு கொள்ளலாம்' என் அடிகள் கூறுகின்றமையான் சமரச வேதம் என்றொரு நூலை அடிகள் செய்தார்கள், அல்லது செய்யக் கருதியிருந்தார்கள் என்பது நன்கறியப்படும். திருவருட்பா முதல் நான்கு திருமுறைகளை முதன் முதலாகத் தொழுவூர் வேலாயுத முதலியாரவர்கள் 1867-ஆம் ஆண்டில் வெளியிட்டபோது அதன் இறுதியில் இனி அச்சிற் பதிப்பிக்கப்படுபவை என நாற்பத்து நான்கு நூல்களை குறிப்பிட்டுள்ளார். அதில் பொது வேதம் என்பதும் ஒன்று. அக்குறிப்பு அடிகள் கட்டளைப்படியே தொ.வே அவர்களால் நூலிறுதியிற் சேர்க்கப்பட்டது. அன்பர் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு அடிகள் 1866 ஏப்ரலில் வரைந்த கடிதமொன்றில் 'பொது வேதம்' என்ற நூல் ஒன்றை எழுதவிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப் பொதுவேதமும் சமரச வேதமும் இரண்டு வெவ்வேறு நூல்களாக இருப்பதற்கில்லை. இரண்டும் ஒன்றாகவே இருக்கவேண்டும். சமரச வேதம் என்பது முதலில் வைக்கப்பட்ட பெயராகவும் பொது வேதம் என்பது அதற்கே பின்னால் வைக்கப்பட்ட பெயராகவும் இருக்கலாம். இந்நூல் எழுதப் பெறாமல் தவிர்ந்து போயிற்றோ அல்லது எழுதி முற்றுப் பெறாது போயிற்றோ தெரியவில்லை. நூன்முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ கிடைக்கவில்லை.

சமரச வேத பாடசாலை என்ற பெயருடன் ஒரு பாடசாலையையும் அடிகள் நிறுவினார்கள். அது தொடர்ந்து நிலை பெறவில்லை எனபத் தெரிகிறது. சாலையும் சமரச வேத தருமச்சாலை என்ற பெயருடனேயே தோற்றுவிக்கப்பட்டது. சன்மார்க்க சங்கத்தார்.

தம்மைச் சூழ்ந்து ஒழுகிய அன்பர்களைக் கூட்டியே சங்கத்தை அடிகள் அமைத்தார்கள் என் முன்னரே கூறினோம். அடிகளது திருக்கூட்டமும் கடிதம் முதலியவற்றால் நெருங்கிய தொடர்புடைய நட்பினருஞ் சேர்ந்த சூழலே சங்கமாக இருந்தது.

**சங்கத்தின் தலைவர்:**

எல்லாம் வல்ல தனித் தலைமைப் பெரும்பதியாகிய இறைவனையே சங்கத்தின் தலைவராக அடிகள் கொண்டனர். இறைவனைச் சங்கத் தலைவராக வைத்து அடிகள் பாடிய பாடல்கள் பல. அவற்றுள் ஒன்று வருமாறு.

**செத்தவர்கள் எல்லாம் திரும்ப எழுந்துவரச்**
**சித்தம் வைத்துச் செய்கின்ற சித்தியனே-சுத்தசிவ**
**சன்மார்க்க சங்கத் தலைவனே நிற்போற்றும்**
**என்மார்க்கம் நின்மார்க்க மே.**

**-6(முடி) சுத்த சிவசன்மாரக்க உலகின் ஒருமைநிலை8**

'சமரச சன்மார்க்க சங்கத்தின் முதலே', 'சன்மார்க்க சங்கத்தார் தழுவிய பதியே', 'சுத்த சன்மார்க்கக் கழக நேர்நின்ற கருணை மாநிதியே'. என்பனவற்றையும் கருதுக.

**சன்மார்க்க சங்க மதிப்பு**

சன்மார்க்க சங்கத்தைக் குறித்து அடிகள் கொண்டிருந்த பெருமித உணர்வைப் பின்வரும் பாடல்கள் காட்டும்.

**கொள்ளைஎன இன்பம் கொடுத்தாய் நினதுசெல்வப்**
**பிள்ளைஎன் எற்குப் பெயர் இட்டாய்-தெள்ளமுதம்**
**தந்தாய் சமரசசன் மார்க்கசங்கத் தேவைத்தாய்**
**எந்தாய் கருணை இது.**
-6(இடை)ஆனந்தானுபவம்4

சன்மார்க்கப் பெருங்குணத்தார் தம்பதியை என்னைத்
தாங்குகின்ற பெரும்பதியைத் தனித்தசபா பதியை
நன்மார்க்கத் தெனை நடத்திச் சன்மார்க்க சங்க
நடுவிருக்க அருளமுதம் நல்கியநா யகனைப்
புன்மார்க்கர்க் கறிவரிதாம் புண்ணியனை ஞான
பூரணமெய்ப் பொருளாகிப் பொருந்தியமா மருந்தை
அன்மார்க்கம் தவிர்த்தருளி அம்பலத்தே நடஞ்செய்
அருட்பெருஞ்சோ தியைஉலகீர் தெருட்கொளச்சர் வீரே.

-6(முடி)மரணமிலாப் பெருவாழ்வு27

ஓவா துண்டு படுத்துறங்கி உணர்ந்து விழித்துக் கதைபேசி
உடம்பு நோவா துளமடக்கா தோகோ நோன்பு கும்பிட்டே
சாவா வரமும் சித்தியெல்லாம் தழைத்த நிலையும் சன்மார்க்க
சங்க மதிப்பும் பெற்றேன் என் சதுர்தான் பெரிதான் சரித்திரத்தை
ஆவா நினைக்கில் அதிசயம்என் அப்பா அரசே அமுதேஎன்
ஆவிக் கினிய துணையேஎன் அன்பே அறிவே அருட்சோதித்]
தேவா இதுநின் செயலேஇச் செயலை நினைக்குந் தொறும்எனது
சிந்தை கனிந்து கனிந்துருகித் தெள்ளார் அமுதம் ஆனதுவே.

-6 (முடி) இறைஇன்பக் குழைவு7



RangaRakes tamilnavarasam.com

சன்மார்க்க சங்கத்தே இறைவன் தன்னை வைத்தான் என்றும், சன்மார்க்க சங்க நடுவிருக்க அருளமுதம் நல்கினான் என்றும், சன்மார்க்க சங்க மதிப்பைப் பெற்றேன் என்றும் அடிகள் கூறுவதால் சன்மார்க்க சங்கத்தின் மதிப்பு எத்தகையதென்பதை அறியலாம்.

**சங்கத்துச் சாதுக்கள்**

சன்மார்க்க சங்கத்தாரைச் 'சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள்' என அடிகள் சிறப்பித்தருளுகின்றனர்.

**புன்மார்க்கத் துள்ளும் புறத்தும் வேறாகிப்**
**புகன்றசொல் அன்றுநும் பொன்னடி கண்ட**
**சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் காணச்**
**சத்தியம் சத்தியம் சத்தியம் சொன்னேன்**
**தன்மார்க்கத் தென்னுடல் ஆதியை நுமக்கே**
**தந்தனன் திருவருட் சந்நிதி முன்னே**
**என்மார்க்கத் தெப்படி யேனுஞ்செய் கிற்பீர்**
**எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே.**

**-6(முடி) மெய் இன்பம் பேறு 8.**

இதனுள் சன்மார்க்க சங்கத்துச் சாதுக்களை நும்பொன்னடி கண்ட சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் என்றதைக் காண்க.

பின்னாளில் மேட்டுக்குப்பத்திலிருந்தபோது கல்பட்டு சுவாமிகளுக்காக எழுதிக்கொடுத்த விண்ணப்பத்திலும் 'சமரச சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் சமுகத்து நிற்கப்பெற்ற விசேடத்தால்' என்றருளியுள்ளமையையும் நோக்குக. சன்மார்க்க சங்கத்தவர்களை அடிகள் எங்ஙனம் மதித்தார்கள் என்பது இதனால் விளங்கும். சங்கம் நிறுவியபின், சங்கத்தாரை முன்னிலைப்படுத்தியும், குறித்தும் பல பாடல்களை அடிகள் பாடியருளியுள்ளார்கள்.

**"சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் உமது**
**தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடுங் கேட்பீர்"**

**"நற்குணச் சன்மார்க்க சங்கத்தார் எல்லாம்**
**நண்ணினர் தோத்திரம் பண்ணிநிற் கின்றார்"**

**"சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் காணச்**
**சத்தியம் சத்தியம் சத்தியம் சொன்னேன்"**

**"மற்றறிவோம் எனச்சிறிது தாழ்த்திருப்பீர் ஆனால்**
**மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ**
**சற்றும்அதை நும்மாலே தடுக்கமுடி யாதே**
**சமரசசன் மார்க்கசங்கத் தவர்களல்லால் அதனை**
**எற்றிநின்று தடுக்கவல்லார் எவ்வுலகில் எவரும்**

**இல்லைகண்டீர்............"**

என்பன அவ்வாறு குறிப்பிடும் இடங்களிற் சிலவாம்.

**<u>சங்கத்தார் தொண்டுகள்</u>**

சங்கத்தார் செய்த அரிய பெரிய திருவருட்தொண்டு அடிகளின் பாடல்களைத் திரட்டிநூலாக வெளியிட்டதாகும். இது அவர்களின் முதல் தொண்டு. இரண்டாவது தொண்டு சத்திய தருமச் சாலையை நிறுவி நடத்தியது. அடிகள் தருமச்சாலையைத் தொடங்கியபோது (1867-மே) அதனைச் சங்கச் சார்பாகவே தொடங்கி வைத்தனர். சங்க அடியார்களாலேயே சாலை நடத்தப் பெற்றது. மூன்றாவது தொண்டு சத்திய ஞானசபை. இதுவும் சங்கம் சார் திருக்கோயிலே.

**<u>சங்கப் பெயர் மாற்றம்</u>**

சங்கம் தொடங்கப்பட்ட 1865 முதல் 1872 வரை எட்டாண்டு காலம் சங்கத்தின் பெயர் 'சமரச வேத சன்மார்க்க சங்கம்' என்றே இருந்தது. 1867-இல் நிறுவப் பெற்ற சாலைக்கும், 1872-இல் நிறுவப்பெற்ற சபைக்கும் சங்கத்தின் பெயரை ஒட்டியே பெயர்கள் அமைந்திருந்தன. 1872-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18-ஆம் நாளில் (ஆங்கிரஸ வரூ ஆடி மீ ௲௨) அடிகள் ஞானசபை வழிபாட்டிற்குரிய விதிகளை வகுத்தருளியபோது சங்கம், சாலை, சபை ஆகிய மூன்றன் பெயரையும் மாற்றியமைத்தார்கள். சமரச வேத சன்மார்க்க சங்கம் என்ற பெயர் **'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்'** என மாற்றப்பட்டது. இப்பெயர் மாற்றத்தில் 'வேத' என்னும் சொல் நீக்கப்பட்டும், 'சுத்த', 'சத்திய' என்னும் சொற்கள் உற்ற இடத்தில் பெய்து விளக்கப்பட்டும் இருப்பது கவனிக்கற்பாலது. ஞானசபை வழிபாட்டுக்கான விதிகளை அடிகள் எழுதியருளிய 'ஞானசபை விளக்க விபவ பத்திரிகை' என்னும் கட்டளையின் முதற்பத்தியில் இம்மாற்றங்கள் அறிவிக்கப்படுகின்றன. அவை வருமாறு.

இன்று தொடங்கி சபைக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபையென்றும், சாலைக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை யென்றும், சங்கத்திற்கு சமரச சுத்த சன்மார்க்க சத்தியச் சங்கமென்றும் திருப்பெயர் வழங்குதல் வேண்டும்.

**சங்கத்தைச் சார்வீர்**

அகத்தே கருத்துப் புறத்தே வெளுத்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித்திடுதற்கென்றே பிறந்த (இறைவன் வருவிக்க வந்துற்ற) பெருமானாகிய அடிகள் 'சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர்' என மக்களைக் கூவி அழைத்தார்கள்.

**ஆடாதீர்சற்றும் அசையாதீர் வேறொன்றை**
**நாடாதீர் பொய்உலகை நம்பாதீர்-வாடாதீர்**
**சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்தினிஇங்**
**கென்மார்க்க மும்ஒன்றா மே.**



RangaRakes tamilnavarasam.com

**மார்க்கம்எலாம் ஒன்றாகும் மாநிலத்தீர் வாய்மைஇது**
**தூக்கம்எலாம் நீக்கித் துணிந்துளத்தே-ஏக்கம்விட்டுச்**
**சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியம்நீர்**
**நன்மார்க்கம் சேர்வீர்இந் நாள்.**

**-6(முடி) சுத்தசிவ நிலை 41:42**

'சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர்', 'சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின்' எனக்கூவி அழைக்கும் அடிகள், 'இனி எவ்வுயிரும் சன்மார்க்க சங்கந்தனை அடையச் செய்வித்தே என்மார்க்கம் காண்பேன்' என வாய்ப்பறை யார்ப்பர்.

**எவ்வுலகும் அண்டங்கள் எத்தனையும் நான்காண**
**இவ்வுலகில் எந்தை எனக்களித்தான்-எவ்வுயிரும்**
**சன்மார்க்க சங்கம் தனைஅடையச் செய்வித்தே**
**என்மார்க்கம் காண்பேன் இனி.**

**-6(முடி) சுத்தசிவநிலை 28**

சமரச சன்மார்க்க சங்கத்தை ஏற்படுத்துவதற் கென்றே வள்ளற் பெருமான் பிறந்தவர். இதற்கென்றே இந்தக் காலத்தில் இறைவன் பெருமானைப் பிறப்பித்தான். அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித்திடவும், அடைந்த அவரெல்லாம் இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடவுமென்றே தன்னை இக்காலத்தில் இறைவன் வருவித்தான் என அடிகள் கூறுவர்.

**அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்**
**திருந்த உலகர் அனைவரையும்**
**சகத்தே திருத்திச் சன்மார்க்க**
**சங்கத் தடைவித் திடஅவரும்**
**இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்**
**திடுதற் கென்றே எனைஇந்த**
**உகத்தே இறைவன் வருவிக்க**
**உற்றேன் அருளைப் பெற்றேனே.**

**-6 (முடி) உற்றதுரைத்தல் 9**

எதற்கெனப் பிறந்தாரோ அதைச் செய்யத் தொடங்கியதையே, 'எவ்வுயிரும் சன்மார்க்க சங்கந்தனை அடையச் செய்வித்தே என் மார்க்கம் காண்பேன் இனி' என்றருளினர். 'அகத்தே கறுத்து' என்ற பாடலும் 'எவ்வுலகும் அண்டங்கள் எத்தனையும்' என்ற பாடலும் உடன் வைத்து நோக்கத் தக்கன. முன்னைய பாடல் பெருமான் பிறந்த காரணம். பின்னையது அதன் நிறைவேற்றம்.

இவ்வாறு கருங்குழியில் உறைந்து, சன்மார்க்க சங்கங்கண்டு, சிதம்பரம் சென்று வழிபடவும் மீளவுமாக இருந்த பெருமான் தம்மைச் சூழ்ந்திருக்கும் கூட்டத்தை விட்டுத் தனித்துறைய விரும்பிச் சில காலம் அயலிடங்களுக்குச்


RangaRakes tamilnavarasam.com

சென்று தங்குவதுண்டு. சங்கம் நிறுவிய அடுத்த ஆண்டில் அவ்வாறு கூடலூர் சென்று சில காலம் தங்கினார்கள்.

## கூடலூரில் உறைதல்

11-6-1866இல் (அக்ஷய வரு வைகாசி மீ ந.ய உ இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகத்தில் 'எனக்கு தற்காலம் பலர் பலர் விவகாரம் முதலியவற்றால் உடம்பு அபக்குவமாகவிருக்கின்றது. நான் கூடலூரிலிருக்கின்றேன்' என்றெழுதியுள்ளார்கள். உடம்பு அபக்குவமடையுமளவுக்குப் பலர் பலர் விவகாரம் அடிகட்கு நேர்ந்திருக்கிறது. இரக்கத்தால் பலர் பலர் விவகாரங்களில் அடிகள் ஈடுபட்டார்கள். அடிகளது திருமுகங்களை நோக்கின் அடிகட்கிருந்த பலர் பலர் விவகாரங்களை அறியலாம். இவ்விவகாரங்களிலிருந்து நீங்கிச் சற்றுத் தனித்துயறையக் கருதியே அடிகள் கூடலூர்க்கு{65} வந்திருத்தல் கூடும். கூடலூர்க்கு வந்து விட்டதால் விவகாரங்கள் விட்டுவிடுமோ? பெருமானைப் போன்று இரக்க உள்ளம் படைத்தவர்களுக்கு எங்கிருந்தாலும் பலர் பலர் விவகாரம் வந்து கொண்டுதானிருக்கும்.

{65. கூடலூர், இப்போது கடலூர் என வழங்குகிறது. தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகர். ஒரு முனிசிபல் நகரம்.}

அதே ஆண்டு ஆடித் திங்கள் 19 ஆம் நாள் (2-8-1866) திருநறுங்குன்றம் இராமசாமி நயினார்கு எழுதிய திருமுகத்திலும் 'நான் தற்காலம் கூடலூரிலிருக்கின்றேன்' எனக் குறித்துள்ளார்கள். இரத்தின முதலியார்க்கு எழுதிய மற்றொரு கடிதத்தின் இறுதியில் 'உடனே தாங்கள் எனக்கு, கூடலூருக்கு அவ்விடத்திய சங்கதிகளை, தபாலில் தெரிவிக்க வேண்டும்' எனக் குறித்திருக்கின்றனர். இக்கடிதத்தில் காணும் தபால் முத்திரை 1866 செப்டம்பர் 22ஆம் தேதி போலத் தோன்றுவதாக ஆ.பா.குறிக்கிறார். இவற்றால் 11-6-1866 முதல் 22-9-1866 வரை தொடர்ந்தோ அல்லது இடையிடை விட்டு விட்டோ அடிகள் கூடலூரில் தங்கியிருந்திருக்கிறார்கள் என அறியப்படுகிறது. 11-6-1866க்கு எத்தனை நாளைக்கு முன் கூடலூர்க்கு வந்தார்களென்பதும் 22-9-1866க்குப் பின் எவ்வளவு காலம் கூடலூரிலிருந்தார்களென்பதும் தெரியவில்லை. எது எப்படி இருப்பினும் கூடலூரில் பலநாள்-மாதக் கணக்கில்-தங்கினார்கள் என்பது மட்டும் தெளிவு. முன்னொரு முறையும் பெருமான் மூன்று திங்களுக்கு மேலாகக் கூடலூரில் தங்கியிருந்ததை இந்நூல் 175 ஆம் பக்கத்தில் கூறியுள்ளோம். கருங்குழியிலும் வடலூரிலும் வைகிய காலங்களில் அவ்வப்போது கூடலூர்க்குச் சென்று சில காலம் தங்குவதுண்டென்பது பல அகச் சான்றுகளாலும் புறச்சான்றுகளாலும் நன்கறியக் கிடக்கிறது. அங்ஙனம் கூடலூரில் அடிகள் தங்கிய காலங்களில் நிகழ்ந்த அற்புதங்கள் பலவாம். அவற்றுட் சில வருமாறு.

## சித்தர் ஒருவர் வந்து அடிகளைக் கண்டு சென்றது

அடிகளார்க்கு ஆட்பட்டவர்களுள் கூடலூர் மு. அப்பாசாமி செட்டியாரும் ஒருவர். இவர் அடிகளைப்பற்றிக் கேள்வியாலறிந்து கருங்குழிக்கு வந்து அடிகளுக்கு ஆட்பட்டார். இவரது தமையனார் இராமசாமி செட்டியார் என்பவர் நாவில் புற்று உண்டாகித் துன்புற்றார். அப்பாசாமி செட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்க அடிகள் மூன்று வேளை பூசுமாறும் உட்கொள்ளுமாறும்



RangaRakes tamilnavarasam.com

திருநீறளித்து அப்புற்றுநோயை நீக்கியருளினர். பின்னர் அப்பாசாமி செட்டியார் அடிகளைக் கூடலூர்க்கு அழைத்துச் சென்று உபசரித்தார். செட்டியார்க்கும் அடிகட்கும் இவ்வாறு தொடர்புண்டாயிற்று. அடிகள் கூடலூர் செல்லுங்காலங்களில் பெரும்பாலும் அப்பாசாமி செட்டியார் வீட்டிலேயே தங்குவது வழக்கம். அவர் வீடு தேரடிக்கருகில் நான்காவது வீடாகும். ஒரு கால் அடிகள் கூடலூரில் செட்டியார் வீட்டில் தங்கியிருக்கும்போது பங்குனி உத்திரம் வந்தது. கிண்ணித்தேர் விழா நடைபெற்றது. திருவிழாவை முன்னிட்டுச் செட்டியார் வீட்டுக்கு வந்திருந்த பலர் திண்ணையிலிருந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது யாரோ புதியவர் ஒருவர் ஒளி வீசும் தோற்றத்துடன் விரைவாக வீட்டினுள் நுழைவதைச் சிலர் பார்த்தனர். அவர் யார் என்ற ஐயம் எழுந்தது. திண்ணையிலிருந்தவர்களுள் புதுவை உறையூர் துரைசாமி பிள்ளை என்பவர் உள்ளே போய் பார்ப்போம் என்று சொல்லி வந்தவரைப் பின்பற்றி வீட்டினுட் சென்றார். மற்றும் சிலரும் உடன் சென்றனர். வீட்டினுள் அடிகளைத் தவிர வேறு யாரும் இல்லை. அடிகளின் திருமுன்னர் பெரிய லட்டு ஒன்று இருந்தது. துரைசாமிபிள்ளையையும் மற்றவர்களையும் கண்டதும் அடிகள் அந்த லட்டை எடுத்துச் சிறிதளவு சுவைத்துப் "பிட்டு வாணிச்சி தந்தது இப்படித்தானிருந்ததோ" என்று வியந்து மிகுதியை அனைவர்க்கும் அளித்தனர். 'யாரோ வந்தாற்போலிருந்ததே இங்கு ஒருவரையும் காணோமே' என்று துரைசாமி பிள்ளை கேட்க, 'ஒரு சித்தர் வந்து போனார். அவர் இந்நேரம் காசியிலிருப்பார், அவர் கொடுத்த லட்டுதான் இது' என்று அடிகள் கூறினர். விண்வெளிச் செல்லும் வன்மையுள்ள சித்தர் கையுறையுடன் வந்து அடிகளைக் கண்டு செல்வதெனின் அடிகள் சித்தாதி சித்தரன்றோ? வந்த சித்தரின் திறத்தை வடலூர்ச் சித்தர் அறிவார். வடலூர்ச் சித்தரின் திறத்தை வந்த சித்தர் அறிவார். மற்று யாரே அறிவர்!

## தீண்டிய பாம்பு மாண்டது

அப்பாசாமி செட்டியாரின் வாழைத் தோட்டத்தைப் பார்ப்பதற்கு ஒருமுறை அடிகள் சென்றிருந்தார்கள். வாழையிலிருந்த பாம்பு ஒன்று அடிகளாரது தலையில் தீண்டிற்று. தீண்டிய இடத்தில் இரத்தம் கசிந்தது. அடிகள் அவ்விடத்தில் திருநீற்றைப் பூசினர். தோட்டத்திலிருந்து திரும்பியதும் தலையில் திருநீறு இருப்பதைக் குறித்துச் சிலர் கேட்கவே அடிகள் பாம்பு தீண்டியதென்றனர். உடனே எல்லாரும் பாம்பை அடிக்க ஓடினர். அடிகளோ 'பாம்பு, தான் சாவ நம்மைத் தீண்டிற்று' அங்கு ஏன் செல்கிறீர்கள் என்றனர். சென்று பார்த்தவர்கள் பாம்பு அது இருந்த வாழையிலையின்மேலேயே இறந்து கிடக்கக் கண்டனர். பாம்பு தீண்டி மனிதர் இறப்பதுண்டு. மனிதரைத் தீண்டிப் பாம்பு இறந்ததனை அடிகள் வரலாற்றில்தான் காண்கிறோம். அடிகள் சாதாரண மனிதரோ? நஞ்சுண்ட கண்டனுக்கு நல்லபிள்ளை அன்றோ? நாவுக்கரசர்க்குச் சமணர் நஞ்சூட்டினர். அந்நஞ்சு அரசுகளுக்கு எவ்வித ஊறும் செய்யவில்லை. அமுதுண்டும் சாவர் தேவர்கள். நஞ்சுண்டும் சாகார் ஞானிகள். 'விடமுண்டும் சாகாமலிருக்கக் கற்றால்' என்று பாடுவர் பாரதியாரும்.

## கூடலூர் தேவநாயகம் பிள்ளைக்கு அருளியது

கூடலூரில் யோகி ஒருவர் இருந்தார். அவர் இறக்குந்தறுவாயில் தன்மகன் தேவநாயகம்பிள்ளையிடம் "யார் முக்காடு போட்டுக்கொண்டு கையில் பிரம்பு வைத்துக்கொண்டு இங்கு வந்து இதுதானா உன் தகப்பன் வியோகஸ்தானம் என

இவ்விடத்தைக் பிரம்பால்தட்டிக் காட்டிக் கேட்பாரோ அவரையே குருவாகக் கொள்" என்று சொல்லி இறந்தார். மூன்று வருடங்களுக்குப்பின் தேவநாயகம்பிள்ளை வீட்டிற்கு எழுந்தருளிய பெருமான் பிரம்பால் அவ்விடத்தைத் தட்டிக்காட்டி அவ்வாறே கேட்டனர். தேவநாயகம்பிள்ளையும் தந்தையார் கூறிச்சென்ற குறிப்பை நினைந்து அன்று முதல் அடிகளையே குருவாகக் கொண்டார். தேவநாயகம்பிள்ளை இரசவாதத்தில் பெரும்பொருளைச் செலவிட்டிருப்பதை அறிந்த அடிகள் இரும்புத் தகடொன்றைப் புடமிட்டுப் பொன்னாக்கிக் காட்டி இச்சையற்றவனுக்கே இது இயலும், இனி இவ்வேலையை விட்டு விடுக என அறிவுரை கூறியருளினர். பிறகு ஒருகால் அடிகள் தேவநாயகம்பிள்ளையை அழைத்துக்கொண்டு செஞ்சி மலைக்குச் சென்று மலைமீது பல விடத்தும் சுற்றித் திரிந்தனர். தேவநாயகம்பிள்ளை களைத்துப் பசியால் வாடினார். அவரை ஒரு மரத்தடியிலிருக்கச் செய்துவிட்டுச் சற்றுதூரம் சென்றுமீண்ட அடிகள் பெரிய லட்டு ஒன்றையும் ஒரு செம்பில் தண்ணீரையும் கொண்டு வந்தளித்தனர். தேவநாயகம்பிள்ளை அவற்றை அருந்தியபின் செம்பைக் கொடுத்துவிட்டு வருவதாகச் சொல்லிச் சிறிதுதூரம் சென்று திரும்பினர்.

## அன்பர் ஒருவர்க்கு வழித்துணை அருளியது

மஞ்சக்குப்பத்தில் ஆங்கில ஆசிரியராகவும் பின்னாளில் சிதம்பரத்தில் தாசில்தாராகவும் விளங்கிய இராமகிருஷ்ணபிள்ளை என்பவர் நாள்தோறும் இரவில் மஞ்சக்குப்பத்திலிருந்து கூடலூர்க்கு வந்து அடிகளின் அருளுபதேசங்களைக் கேட்டுச் செல்வது வழக்கம் திரும்பும் போது இருளால் சாலையில் அஞ்சியபோதெல்லாம் யாரோ ஒருவர் அவர்க்குச் சற்று முன்னே செல்வது போலத் தோன்றும். அவரைத் துணையாகக் கருதி இவர் அஞ்சாது செல்வார். ஊரை நெருங்கியதும் முன் சென்றவர் மறைந்து விடுவார். இடையே உற்று நோக்கினும் அம்மனிதர் தோன்றுவதில்லை.

## தாசில்தாருக்கு அறிவுரை

மஞ்சக்குப்பம் தாசில்தார் வேங்கடசுப்பையர் நாடோறும் அடிகளின் உபதேசங்களைக்கேட்கக் கூடலூர்க்கு வருவார். அவரது வண்டிக்கு முன் சக்கிலியன் ஒருவன் கொம்பு ஊதிக்கொண்டு ஓடிவருவது வழக்கம். ஒரு நாள் மிக வேகமாக ஓடிவர நேரிட்டதால் பசித்துக் களைத்த அவனது உடல் நடுங்கிற்று. அன்று ஐயர் கூட்டத்திற்கு வந்தவுடன் வழக்கம்போல் அடிகள் அவரைப்பார்த்து விசாரிக்கவில்லை. சற்று நேரங் கழிந்தபின் அவரைப்பார்த்து " இந்த வாழ்வு எத்தனை நாளைக்கு இருக்கும். கொம்புக்காரனை முன்னமே போக வேண்டிய இடத்திற்கு அனுப்பி அவ்விடத்திற்குச் சிறிது தூரம் முன்னிருந்தே ஊதினால் போதாதோ" என்று புகன்றனர். தாசில்தாரும் அவ்வாறே செய்வதாகக் கூறிப் பொறுத்தருள வேண்டினார். பசித்துக் கலைத்திருந்த சக்கிலிக்கு உணவளிக்கச் செய்த பின்னரே அடிகள் அன்றைய உபதேச உரையைத் தொடங்கினர்.

## மற்றும் சில அற்புதங்கள்

ஒருநாள் கூடலூரில் இரிசப்பசெட்டியார் என்பவர் வீட்டின்மாடியில் அடிகள் இருந்தபோது திருவழுந்தூர் சுப்பிரமணியன், திருப்பாதிரிப் புலியூர் முத்துவீரன், திருவயிந்திரபுரம் பொன்னன் ஆகிய மூன்று நாதசுரக்காரக்கள் அடிகள் திருமுன்பு

நாதசுரம் வாசித்து வணங்கினர். பெருமான் அவர்களை நோக்கி 'நீ மணியே, நீ முத்தே, நீ பொன்னே' எனக்கூறி அவர்களது இசைப்புலமையின் அருமையினைப் பாராட்டித் திருநீறளித்து வாழ்த்தியருளினர். மற்றொருநாள் சேலத்திலிருந்து கூடலூர்க்கு வந்திருந்த அறுவை வாணிகரின் பணியாள் ஒருவன் உள்நாக்கு வளர்ந்து துன்புற்றவனாய் அடிகளிடம் வந்து திருநீறு பெற்றுக் குணமடைந்தான். ஒருவன் கண்ணோயால் முகம்வீங்கித் தெரு வழியே சென்றதைக் கண்டு திண்ணையில் அருளுரையாற்றிக் கொண்டிருந்த அடிகள் அவனை அழைத்து ரஸ்தாளி வாழைப்பழத்தைக் கண்களில் வைத்துக் கட்டச் சொல்லியருளினர். அவ்வாறே செய்யலும் கண்ணோய்க் குணமாயிற்று..

ஒருநாள் கூடலூர் அப்பாசாமிச் செட்டியார் வீட்டுத் திண்ணையில் வித்துவான்கள் பலர் கூடியிருந்து உரையாடினர். ஒரு வித்துவான் 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்றார். மற்றொரு வித்துவான் கைவல்லியத்தில் உள்ள 'இந்தச் சீவனால் வரும்' என்னும் பாட்டை எடுத்துக் கூறினார். ஒரு மணி நேரம் வாதம் நிகழ்ந்தும் முடிவேற்படவில்லை. வீட்டினுள்ளிருந்த வள்ளற்பெருமானைக் கேட்க உட்சென்றனர். பெருமான் வித்துவான்களை நோக்கி 'ஏன்காணும், வாதம் வந்துவிட்டதோ?' என்று கூறி, உட்கார வைத்து "சாத்திரப் பிரமாணம் சொன்னால் உங்களுக்குச் சந்தேகம் நிவர்த்தியாகாது, ஒரு கதை சொல்லுகிறேன் கேளுங்கள். தெருவில் நிர்வான சந்நியாசி ஒருவர் போனார். ஒருவன் அவர்க்கு வாழைப்பழம் கொடுத்தான். இன்னொருவன் பெண்கள் இருக்கும் தெரிவில் நிர்வானமாய்ப் போகிறானென்று கோபித்துக் கல்லால் அடித்தான். மற்றொருவன் அவ்விருவரையும் சாமியாரையும் அழைத்துக்கொண்டு நீதிபதியிடம் சென்றான். சென்று அவ்விருவரையுங் காட்டி 'இந்தப் புண்ணியவான் பழம் கொடுத்தான். இந்தப் பாவி கல்லால் அடித்தான்' என்றான். நீதிபதி சாமியாரை 'உம்மை யார் அடித்தது?' என்று கேட்டார். சாமியார் 'வாழைப்பழம் கொடுத்தவன் அடித்தான்' என்று கூறினார். 'யார் வாழைப்பழங் கொடுத்தது' என்று கேட்டதற்குக் 'கல்லாலடித்தவன் வாழைப்பழங் கொடுத்தான்' என்று விடையளித்தார். நிதீபதி 'கல்லாலடித்தவன் யார்?' என்று கேட்டார். 'இட்டுக்கொண்டு வந்தவன் கல்லால் அடித்தான்' என்றார் சாமியார். நீதிபதி வாக்கு மூலம் எழுதத் தெரியாது மயங்கி 'இவர் மேற்படியிலுள்ளவர்' என ஒருவாறுணர்ந்து அடித்தவனைத் தண்டித்தார். சாமியாரைப் போன்றவர்களுக்கு 'அவனன்றி ஓரணுவும் சஅசையாது' என்பது பொருந்தும். பழம் கொடுத்தவன் இவன், கல்லாலடித்தவன் இவன் என்று பேதங் கொண்டவர்களுக்கு 'இந்தச் சீவனால் வரும்......' என்று பாட்டுப் பொருந்தும் என்று கூறிக் கதையை முடித்து வித்துவான்களின் ஐயத்தைத் தெளிவித்தருளினர். அவர்களும் உண்மையை உணர்ந்து சமாதானமாயினர்.

இங்ஙனம் கூடலூரில் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. நாடோறும் மாலையில் அடிகளைக் காணப்பலர் வந்து கூடுவர். இரவு முன்னேரத்தில் அடிகள் அவர்களுக்கெல்லாம் அருளுரை பகர்வர். அதிகாரிகள் முதல் அனைவரும் வந்து அடிகளைக் கண்டு வணங்கியும் அருளுரைகளைக் கேட்டும் பயன்பெறுவாராயினர்.

## உருவ வழிபாட்டைப் பற்றிப் பிரம்ம சமாஜத்தாருடன் வாது 16-1-1867

அட்சய ஆண்டு தைத்திங்கள் ஐந்தாம் நாள் (16-1-1867) திருப்பாதிரிப்புலியூர்க் கடுத்த பெண்ணை நதித் தென்கரையில் உண்ணாமுலைச் செட்டிச் சாவடிக்கருகில் ஒரு நைமித்தியத் திருவிழாவைப் பற்றிப் பலர் கூடினர்.



RangaRakes tamilnavarasam.com

அடிகளும் அதுசமயம் அங்கிருந்தார்கள். பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்த ஸ்ரீதரஸ்வாமி நாயக்கர் என்பவரும் அங்கு வந்திருந்தார். அவர் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவராதலின் உருவ வழிபாட்டை அறவே வெறுப்பவர். உருவ வழிபாட்டை மறுத்து அப்பக்கத்தில் முன்னரே பலவிடங்களில் உரையாற்றியவர். அவர் ஆற்றிய உரைகளைக் கேட்டுக் குழப்பமடைந்திருந்த சிலர் அவர் கூற்றினை அடிகளுக்குத் தெரிவித்து உண்மையை விளக்கியருளுமாறு வேண்டினர். அடிகளுக்கும் ஸ்ரீதர நாயக்கருக்கும் சொற்போர் மூண்டது.

அன்று நடந்த வாதத்தை 'நடந்த வண்ணம் உரைத்தல்' என்ற தலைப்புடன் ஆலப்பாக்கம் நாயனா ரெட்டியார் எழுதிவைத்திருந்தார். 1893 ஆம் ஆண்டில் ச.மு.க. அதனை வெளியிட்டார். 'நடந்த வண்ணம் உரைத்தல்' வருமாறு:

## <u>நடந்த வண்ணம் உரைத்தல்</u>

கல்வி கேள்விகளால் சிறந்த அறிவுடையவர்களுக்கு வந்தனஞ் செய்து வெளிப்படுத்துகை

அக்ஷய வரு தை மீ ரூஉயில் கூடலூரைச் சார்ந்த திருப்பாதிரிப்புலியூர்க் கடுத்த பெண்ணை நதித் தென்கரையில் உண்ணாமுலைச் செட்டிச் சாவடிக்குச் சமீபத்தில் ஓர் நைமித்தியத் திருவிழாவைப் பற்றி யறிவுடையோ ரனேகர் கூடினர். அவ்விடத்தில் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளுமிருந்தனர். அப்போது பிரம சமாஜம் சம்பேடு ஸ்ரீதரஸ்வாமி நாயக்கர் சிலருடன் வந்திருந்தனர்.

அதற்குமுன் திருப்பாதிரிப்புலியூரில் ஸ்ரீதரஸ்வாமி நாயக்கர் செய்த பிரசங்கத்தினாற் சந்தேகத்திலழுந்திய சிலர் தமது சந்தேகத்தை நீக்கிக் கொள்வதற் கொஃதோர் தருணமென்று கருதி அக்கூட்டத்தில் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளை நோக்கி "ஐயா! பிரம்மத்தை நின்னைப்பது தகுதியென்றும் விக்கிரக ஆராதனை செய்வது தகுதியல்லவென்றும் இங்கே வந்திருக்கின்ற ஸ்ரீதரஸ்வாமி நாயக்கரவர்கள் எங்கள் முன்பாகப் பலமுறை பிரசங்கித்தார். அதனால் எங்களுக்குச் சந்தேகமுண்டாகியிருக்கின்றது. அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்விக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்போது, சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள், "பிரம்மத்தையறியத் தொடங்கினோர் அறிதல் வேண்டும்; விக்கிரக ஆராதனை செய்யத் தொடங்கினோர் செய்தல் வேண்டும்; இவ்விருவகையும் அததற்குரிய பக்குவர்களுக்கு அடுத்த வகைகளென்றறிய வேண்டும்" என்று சொல்லினர்.

அப்போது அங்கிருந்தவரிற் சிலர், நாயக்கரைப் பார்த்து, "இது விஷயத்தில் தங்கள் கோட்பாட்டை வெளிப்படுத்தி நிறுத்தல்வேண்டும்" என்றார்கள். நாயக்கர் லிகிதமூலமாய் வெளிப்படுத்துவேனென்றார்.

அதுகேட்டு, "ஓர்சபையில் மாறுபட்ட இருவர் தங்கள் தங்கள் கோட்பாடுகலை அந்தச் சபையிலறிஞரறிய எடுத்துரைத்து அதற்குத்தக்க காட்சி, அநுமானம், உவமானம் சத்தம் முதலிய பிரமாணங்களும் உடன்படல், மறுத்தல், ஒரு சாருடன்பட்டு மற்றொருசாருடன்படாமை, முற்று முடன்படல் போன்றுடன்படாமை முதலிய கோட்பாடுகளுக் கமைந்த பலவகை யுக்திகளும், அனுபவத்தோடு தர்க்க

வுபதர்க்க, லக்ஷண, வுபலக்ஷணங்களுக்குப் பொருந்த விரித்து விவகரித்து அந்த விவகாரத்திற் சந்தேக விபரீத மயக்கத்திற்கு இடங்கொடாமல் முடிந்த நிச்சயத்தை, பின்னர் லிகிதமூலமாய்ப் பிறரறிய வெளிப்படுத்தல் மரபேயல்லது, மாறுபட்டோர் இருவரும் வேறுவேறிடங்களிலிருந்து அறிஞர் சபாதிபத்தியமின்றித் தங்கள் தங்கள் மனஞ்சென்றவழி அளவை யெல்லையைக் கடந்தெழுதிக் கொள்வதில் ஞாயந் தோன்றாது என்றும், ஒழியாத லிகிதச் சண்டையாக முடியுமென்றும், அது தர்க்க மரபல்லவென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

அங்கிருந்தவரிற் சிலர், நாயக்கரைப் பார்த்து "ஐயா! தங்கள் கோட்பாட்டை வெளியிட்டுப் பிரமாணத்தால் நிலைபெறச் செய்து எங்களையும் அவ்வழியில் நடத்துவிப்பதற்கு அடுத்த தருண மிதுவாக விருக்க இத்தருணத்திலிப்படிச் சொல்வது தங்கள் கோட்பாட்டிற்கு அழகல்ல" என்றார்கள்.

உடனே நாயக்கர் "நித்திய நிரஞ்சன நிர்ம்மல நிராமய நிராலம்ப சொரூபம் அவாங் மனோகோசரமுமான பிரமத்தை நினைப்பது தக்கதென்பதும், விக்கிரகாராதனை செய்வது தகாதென்பதும் எங்கள் பிரம்ம சமாஜ வேத சமாஜ கோட்பாடு" என்று வெளியிட்டார்.

"அவாங் மனோகோசரமான பிரமம், மனத்தினாலெப்படி நினைக்கப்படும்! ஆகாயம் அடியாலும் படியாலும் அளக்கப்படும், காற்று கையாற் பிடிக்கப்படும் என்பவைபோல், வார்த்தை மாத்திரத்தாலன்றி அர்த்த லக்ஷ்யானுபவங்களுக்கு இடம்பெற வில்லையே" என்று சுவாமிகள் வினவினர்.

"மிதக்கியானமுள்ள நம்மிட மனத்திற்குப் பரிமித வஸ்துவைப் போலடங்காததென்று சொன்னதே யல்லது, ஏகதேசம் மனத்திற்கு விளங்காததென்று சொன்னதல்ல" என்று நாயக்கர் உத்தரித்தனர்.

"மனத்திற்கு அகோசர மென்பது, மனத்திற்கு விஷயப் படாததென்று பொருள்படுமே யல்லது, சிறிது விஷயமாகிப் பெரிதுவிஷயமாகாதென்று பொருள்படாதென்றும், அவ்வாறு பொருள் கொள்வது லக்ஷண வுபலக்ஷண விதியல்லவென்றும், ஒருகாலத்தில் ஒருபொருள் சிறிது விஷயமானால் மற்றொரு காலத்தில் சிறிது விஷயமாகும் பிறிதொரு காலத்திற் சிறிது விஷ்யமாகும் இவ்வாறு முழுவதும் விஷயமாகுமென்றும், அவாங் மனோகோசர மென்றதில், மனத்திற்குச் சிறிது விஷயமானபடி வாக்குக்குஞ் சிறிது விஷயமாதல் வேண்டு மென்றும், இங்ஙனம் மனவாக்குகளுக்குச் சிறிது விஷயமாகுமென்று கொண்டபோது கண், காது, மூக்கு, மெய், வாய், கை முதலிய மற்ற இந்திரியங்களுக்கும் விஷயமாகுமென்பது தானே விளங்குதலால் பிரம்ம லக்ஷணத்தோடு விரோதப்படுமென்றும், மன முதலான அந்தக் கரணங்களுக்கும் கண் முதலான இந்திரியங்களுக்கும் நாம ரூபக்கிரியைகள் விஷயமாகுமல்லது தத்துவாதீதமாகிய பிரமம் விஷயமாகு மென்பது விபரீத வுணர்ச்சியென்றும், மனோலயங் கிடைத்த பின்னர் பிரம்மாநுபவங் கிடைக்கமென்றும், மனஞ் சிறிது தோன்றினும் ஆத்ம ஞானம விளங்காதென்றும், மனம்-அசத்து,சடம், அநித்யம்,துக்கம், அசுத்தம் உடையது; பிரமம்-சத்து, அறிவு, நித்தியம்,இன்பம் சுத்தம் உடையது ஆகலின் மனத்திற்கு பிரமம் எவ்வகையினும் விஷயமாகாதென்றும் இவ்வாறே வேத முதலிய கலைகளிலும் ஆப்த வாக்கியங்களிலும் ஆணையிட்டிருப்பதென்றும், பிரம்மம் மனத்திற்கு விஷயப்படாதென்பது அநுபவத்திற்கும் மற்ற ஹேதுக்களுக்கும் யூகங்களுக்கும் பொருந்துகின்ற பகஷமென்றும்" சுவமிகள் சொல்லினர்.

பின்னர் சிலபொழுது நாயக்கர் சும்மாவிருந்தனர். அங்கிருந்தவரிற் சிலர் நாயக்கரைப் பார்த்து "சும்மாவிருக்கப் படாது உத்தரிக்கவேண்டும்" என்றார்கள். நாயக்கர் சற்று நேரஞ் சென்று மீளவும் "மனத்தினால் பிரம்மத்தை நினைக்ககூடும்" என்று முன் சொல்லியதையே சொல்லினர்.

"தங்களிஷ்டப்படி விதியைக் கடந்த விவகாரமுந்தடைப்படுகின்றது. பிரமம், மனத்திற்கு விஷயமாகுமானால் கண்ணுக்கும் விஷயமாகும்: இவைகளுக்கு விஷயமாகுமானால் மற்ற இந்திரியங்களுக்கும் விஷயமாகும் என்று நான் முன் சொல்லியதைத் தாங்கள் சிறிது உய்த்துணரவேண்டும்" என்று சுவாமிகள் சொல்லினர்.

நாயக்கர் சற்று நேரஞ்சென்று "மனத்திற்கு விஷயமாவதெல்லாங் கண்ணுக்கு விஷயமாகுமோ?" என்றார். சுவாமிகள் ஆகுமென்றார்.

நாயக்கர்"மற்ற இந்திரியங்களுக்கு விஷயமாகாமல் மனத்திற்கே விஷயமாகத் தக்கது ஒன்றுமில்லையோ! ஒன்றுமில்லையோ!!" என்று பலமுறை வியந்து வினவினார்.

"மனத்திற்கே விஷயமாகத் தக்கது யாது? அதனைத் தாங்களே வெளிப்படுத்தல் வேண்டும்" என்று சுவாமிகள் சொல்லினர்.

" ஆனந்தம் மனத்திற்கே விஷயமாவ" தென்று நாயக்கர் சொல்லினர்.

" ஒரு ரூபவிஷயத்தைக் கண்கள் கண்டு, அந்த ரூபவிசேஷத்தால் அனந்த விருத்தியை யடைந்து, பின்னர் அதன்வழியாக மனத்திற்கும் அவ்வானந்தத்தை யடைவிக்குமென்றும், கண்கள் முன்னர் ஆனந்தத்தை யடைந்ததற்கு அடையாளம், அக்கண்களிலிருந்து சிந்துகின்ற பாஷ்பங்களே யென்றும், அதை யானந்த பாஷ்பமென்று வழங்குவதே போதுமான பிரமாணமென்றும்,இஃதன்றி நேத்திரானந்தம் சிரவனானந்தம், என்று அறிவுடையோர் பிரயோகிப்பதை யூகிக்கவேண்டுமென்றும், இங்ஙனம் கண் முதலிய இந்திரியங்களும் மனமுதலிய கரணங்களும் ஆன்மாவுக்கு உபகாரக் கருவிகளாதலால் அவைகள் ஆனந்தமடைந்தனவென்பது உபசரிப்பென்றும், ஆனந்தம் பிரத்யேக ஆன்ம ஞான விஷயமென்பது உண்மையென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

பின்னர் சற்றுநேரம் சென்று "ஓரிந்திரியத்திற்கு விஷயமாவது வேறோ ரிந்திரியத்திற்கும் விஷயமாகு மென்றது எப்படி? காதுக்குப் புலப்படுவது மூக்குக்குப் புலப்படாது, கருத்துக்குப் புலப்படுவது கண்ணுக்குப் புலப்படாது" என்று நாயக்கர் சொல்லினர்.

"முன்னர் அவாங் மனோகோசரமென்றதற்குத் தாங்கள் கொண்ட கருத்தின்படி வாக்குக்கும் மனத்திற்கும் பிரமஞ் சிறிது விஷயமாகுமானல் கண்களுக்கும் கைகளுக்கும் சிறிது விஷயமாகுமென்று தாங்களே யூகித்தறியலாமென்றும், ஒருபொருள் மனத்தினால் நினைக்கப்படுமானால் காதினாலுங் கேட்கப்படும், காதினாற் கேட்கப்பட்டது கண்ணிணாலுங் காணப்படும், கைகளாலும் பிடிக்கப் படுமென்பது உபதர்க்க உபலக்கண மென்றும்,



RangaRakes tamilnavarasam.com

ஸ்தூல சூக்கும காரண பூதங்களால் உருவாகித் தோன்றுகின்ற பொருளினிடத்து மனமுதலான கரணங்களுக்கும் கண் முதலான இந்திரியங்களுக்கும் விஷயங்க ளாகத்தக்க பண்புகள் உண்டா யிருக்குமென்று அறிந்த பஷத்தில் ஒரு பொருள் பண்பினால் ஓரிந்திரியத்திற்கு விஷய மாகுமானால் அந்தப் பொருள் மற்றொரு பண்பினால் மற்றோ ரிந்திரியத்திற்கும் விஷயமாகுமென்று சாதாரண ஜனங்களாலும் அறியப்படுமென்றும், அகஷ்யோக ஞாயத்தாலும் இந்திரியங்களின் சொரூப ரூப சுபாப வியாபக வியத்தி விசேஷ சாமாநிய முதலியவைகளையும் மன முதலான கரணங்களின் சொரூப ரூப சுவாப வியாபக வியத்தி விசேஷ சாமாநிய முதலானவைகலையும் வெளிப்படுத்துகின்ற தத்துவ சாத்திரங்களாலும் பிரகிருதி சாத்திரங்களாலும் உய்த்துணர்ந்து தெளியப் படுமென்றும், கண்களும் மனமும் அதிகரனோ பாதான சம்பந்த முடையதென்றும், மத்திய பூத தூல சூக்கும காரியமென்றும், இதனால் மனத்திற்கு விஷயமாவது கண்களுக்கும் விஷயமாகுமென் றும், கண்களுக்கு விஷயாமாவது மனத்திற்கும் விஷயமாகுமென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

அந்தச் சமயத்தி லிவைகளைக் கேட்டுச் சூழநின்ற திருவயிந்திரபுரம் வைஷ்ணவப் பிராமண பண்டிதர்களும் ஸ்மார்த்த பண்டிதர்களும் அந்தச்சபையி லுட்புகுந்திருந்து சுவாமியை நோக்கி, "மனத்திற்குப் புலப்படுவது கண்களுக்கு எப்படிப் புலப்படுவது" என்று வினவினர்.

"ஒரு பொருளில் ஸ்தூலப் பிரகிருதி, சூக்குமப் பிரகிருதி, காரணப் பிரகிருதி, மகா காரணப் பிரகிருதி, மூலப்பிரகிருதி, என ஐவகைப் பிரகிருதி அங்கங்களுண்டென்றும்; அவைகளில் காரணப் பிரகிருதி மகா காரணப் பிரகிருதி யங்கங்கள் மனத்திற்கு விஷயமாகுமென்றும், ஸ்தூல சூக்குமப் பிரகிருதி அங்கங்கள் கண்களுக்கு விஷயமாகுமென்றும் இவை சாதாரண லக்ஷணமென்றும், அசாதாரண லக்ஷணத்தில் கண்ணறிவு பல முறை சாதன லக்ஷியத்தால் நுட்பவறிவாகி மனத்திற்கு விஷயமாகின்ற காரண மகாகாரணப் பிரகிருதியங்கங்களையும் அறிவுமென்றும், இவ்வாறறிவது அசாத்தியமல்ல சாத்தியமேயென்றும், இதனை அக்கயோக சாதனமுதலிய வழிகளாலும் தத்துவ சாத்திரங்களாலும் அநுமான முதலிய பிரமாணங்களாலும் அறிந்து கொள்ளலாமென்றும், அன்றி மனத்திற்குப் புலப்படுவது பிரபஞ்சம் அது கண்களுக்கும் புலப்படுமென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

மனத்திற்குப் பிரமம் புலப்படாதோ" என்று பண்டிதர் வினவினார்கள்.

"பிரமம் மாயாதீதமாதலால், மாயாகாரியமாகிய மனத்திற்குப் புலப்படாதென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

ஆனால், "பிரமத்தை யெப்படி யறியலாம்" என்று பண்டிதர் வினவினார்கள்.

"ஆன்ம ஞானத்தால் அறியலாம்" என்று சுவாமிகள் சொல்லினர். பின்னர் சம்மதித்தவர்களாகப் பண்டிதர் சும்மாவிருந்தார்கள்.

அதன்மேல் அங்கிருந்தவர்களிற் சிலர் நாயக்கரைப் பார்த்து, "சும்மாவிருக்கப்படாது, தருண நேரிட்டபோதே உத்தரிக்க வேண்டும்" என்றார்கள். நாயக்கர், வழக்கப்படி "லிகிதமூலமாய் உத்தரிக்கின்றேன்" என்று சொல்லினர்.



RangaRakes tamilnavarasam.com

அதுகேட்டு அந்தச் சபையிலுள்ளவர்களும் அதன்புறத்து நின்றவர்களும் சிறிது சிரித்தார்கள். அது பொறாமல் நாயக்கர் "இன்னும் எட்டுத் தினத்திற்குள் இவ்விடத்தில் என்னைச் சிரித்தவர்களை யெல்லாம் நான் சிரிப்பிக்கின்றேன்" என்று சபதங் கூறினர்.

அதுகேட்டு அந்தச் சபையில் உணர்வுந் தயவுமுடையவொருவர், "இதென்ன கெர்வித வார்த்தை" என்றனர்.

அதுபொறாமல் நாயக்கர் அளவிறந்த கோபாவேசத்தோடுங் கண்கள் சிவப்பத் தேகம் பதைப்ப வாயாற் சில பழிபடு வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே திடீரென்றெழுந்து இடி முழங்கினாற்போல் ஆரவாரித்தனர். இவருக்குச் சகாயமாய்ப் பின்வந்தவர்களும் நெருப்பில் நெய்விட்டதுபோற் கோபமூண்டு கோடித்தனர்.

அத்தருணத்தில், சுவாமிகள் நாயக்கருக்கும் மற்றவர்களுக்குங் கோபந்தனியத்தக்க நல்ல வார்த்தைகளைச் சொல்லி எழுந்தவரை மீளவுமிருக்கவைத்து, "ஐயா, நாயக்கரவர்களே! கெர்வித வார்த்தையென்ற சத்தத்தின் லக்ஷியத்தை நாம் உள்ளபடி யறிந்தால் இவ்வளவு தீவிரம் நேரிடுமென்று எனக்குத் தோன்றவில்லை. ஆயினும் போனது போக இனியாவது இச்சபையாரறிய பிரமம் மனத்திற்கு விஷயமாகாதென்று நான் தெரிவித்தபடி தாங்களும் சம்மதிக்கின்ற பக்ஷத்தில் சம்மதமென்று சொல்லிச் சும்மாவிருக்கவேண்டும், சம்மதியாத பக்ஷத்தில் பிரமாணத்தாலும், யுக்தியாலும் அனுபவத்தாலுந் தங்கள் கோட்பாட்டை நிறுத்துவீர்கள்" என்று சொல்லினர்.

"நாயக்கர் இப்போது என்னை விட்டுவிட்டால், பின்பு லிகிதமூலமாக வாதிக்கின்றேன்" என்று சொல்லினர்.

"எதிர்நின்று வாதிப்பதற்குக் கூடாமையால் லிகிதமூலமாய் வாதிப்பீர்களென்பதில் நம்பிக்கையில்லை யென்றும், லிகிதமூலமாய் வாதிப்பது தர்க்கலக்ஷண மரபல்லவென்று முன்னரே குறித்திருக்கின்றேன்" என்றுஞ் சொல்லி முடித்து அந்தச் சபையிற் சிலரை நோக்கி "பிரம்மாநுபவம் விக்கிரக ஆராதனை செய்தாலல்லது வாராதென்றும், விக்கிரகம் என்பது விசேட இடம் என்று பொருள்படுமென்றும், ஆன்மா விருப்பதற்குக் கிரகம் மனிதர் முதலிய சீவதேகங்களென்றும், பிரம்மப் பிரகாச மிருந்து வெளிப்படுவதற்கு விக்கிரகம் தேவ தேகங்களென்றும், அந்தத் தேவ தேகங்களாகிய விக்கிரகங்களில் விதிப்படி பக்தியோடு உபாசிக்கில் பிரம்மப்பிரகாசம் எளிதில் வெளிப்பட்டு அனுக்கிரகிக்கு மென்றும், அவ்வாறு விசேட இடமென்று சொல்லப்படுகின்ற விக்கிரகங்களில் பிரம்மப்பிரகாசம் வெளிப்பட்டு அனுக்கிரகித்தற்கு அடையாளம் சிலகாலத்திற்குமுன் விக்கிராகாராதனஞ் செய்த பக்தர்கள் குஷ்டம் குன்மம் முதலான தீராத வியாதிகளைத் தீர்த்தும் இறந்தவர்களை எழுப்பியும் அசாத்தியமான அநேக மகத்துவங்களைச் செய்துவருகின்றார்களென்றும், பிரம்ம சமாஜத்தார் வேத சமாஜத்தார் அந்த அடையாளங்களை யுடையவர்களாகத் தோன்றவில்லை யென்றும், நாமெல்லாம் நமது பக்குவத்திற்குத் தக்கபடி விக்கிரகாராதனைசெய்து அதனால் அருளைப்பெற்று அதனால் அறிவுவிளங்கி அதனால் பிரம்ம சுகத்தை யனுபவிக்கலாமென்றும் "சுவாமிகள் சொல்லிக் கொண்டே யெழுந்தனர்.



RangaRakes tamilnavarasam.com

நடந்த வண்ணம் உரைத்தல் முற்றிற்று.

இது, பிரமசமாஜத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் வள்ளற்பெருமானுக்கும் நடந்த சொற்போராதலின், பிரமசாமஜம், அதன் கொள்கைகள், ஆகியவற்றைப் பற்றியும் அச்சமாஜத்தை நிறுவிய ராஜாராம்மோகன்ராயைப் பற்றியும் அறிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும். ஆதலின் அவற்றைக் கலைக்களஞ்சியத்திலிருந்து ஈண்டெடுத்துக் காட்டுகின்றாம்.

## பிரமசமாஜமும் அதனை நிறுவியவரும்

**ராஜா ராம் மோகன் ராய்:** (1774-1833) இந்திய மறுமலர்ச்சியின் தந்தை. இந்துமதச் சீர்திருத்த வாதிகளில் முதல்வர். பெண்களுக்குச் சம உரிமை கிடைக்கப் பாடுபட்டவர். பின்னால் எழுந்த தேசிய இயக்கங்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தவர். இவர் மேற்கு வங்காளத்தில் பர்துவான் மாவட்டத்தில் ராதாநகர் என்ற ஊரில் 1774 மே 22 ஆம் நாள் ஒரு பிராமண குடும்பத்தில் இவர் முதலில் பாடலிபுத்திரம் (patna)என்ற நகரிலிருந்த பள்ளியில் பாரசீக மொழியும் அரபுமொழியும் கற்றார். 16ஆம் வயதில் விக்கிரக ஆராதனைக்கு மறுப்பு ஒன்று எழுதினார். பலர் கண்டித்தனர். அதன்மேல் இவர் காசிக்குக் சென்று சமஸ்கிருத மொழியும் வேத நூல்களும் கற்றார். பௌத்த மத நூல்களைக் கற்க விரும்பி அவை எழுதியுள்ள பாலி மொழியைக் கற்பதற்காகத் திபெத்து நாட்டிற்குச் சென்றார். இருபதாம் வயதில் வீட்டுக்குத் திரும்பி வந்தார். தந்தையாரும் உடன் பிறந்தார்களும் இறக்கவே இவருக்குப் பொருள் வருவாய்க்கு இடம் உண்டாயிற்று. அதனால் தாம் பாரசீக மொழியில் எழுதியிருந்த விக்கிர ஆராதனை மறுப்பு நூலை அச்சிட்டு இலவசமாக வழங்கினார். அதன்பின் வேதங்களிலும் உபநிடதங்களுலும் தாம் நல்லவை என்று எண்ணிய பகுதிகலை மொழி பெயர்த்து வெளியிட்டார். அதனால் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் வேலை கிடைத்தது. ஒரு மாவட்டத்தில் வரி வசூல் செய்யும் திவான் வேலையைப் பத்தாண்டுகள் பார்த்தார். அதன்பின் வேலையைவிட்டு நீங்கிக் கல்கத்தாவில் வீடு கட்டிக்கொண்டு வாழலானார். அங்குத் தம்முடைய கருத்தை ஏற்றுக்கொள்ளும் இளைஞர்களைச் சேர்த்து 1815-ல் மத்திய சபை என்பதை அமைத்தார். அது ஆன்ம சபையாகும். ஆனால் இச்சபையின் கருத்துக்கலை வைதிக பிராமணர்கள் எதிர்த்தபடியால் அச்சபை நாளடைவில் நலிவடைந்தது ராஜாராம் மோகன்ராய் கல்கத்தாவிலிருந்த 15 ஆண்டு காலத்தில் தற்காலக் கல்விமுறை வேண்டும் என்றும், சதி என்னும் உடன்கட்டை முறையை ஒழிக்கவேண்டும் என்றும், இதுபோன்ற பல சீர்திருத்தங்கள் மதத்திலும் சமூக வாழ்விலும் செய்யவேண்டும் என்றும், நூல்களும் கட்டுரைகளும் பத்திரிகைகளில் கடிதங்களும் ஆக ஆங்கிலத்திலும் வங்காளத்திலும் பாரசீகத்திலும் சமஸ்கிருத்திலும் இடைவிடாது எழுதிப் பிரசாரம் செய்து வந்தார்.

இவருடைய கருத்துக்கள் அயல்நாடுகளுக்கும் எட்டவே அமெரிக்காவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் பல அறிஞர்கள் இவருடன் கடிதப் போக்குவரவு வைத்தனர். இவருடைய நூல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து இங்கிலாந்து ஜெர்மனி அமெரிக்கா பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பிரசுரிக்கப்பெற்றன. அமெரிக்க ஞானியான எமர்சன், ஹார்வர்டு (Harvard) பல்கலைக்கழகத்தில் மாணவராயிருந்த போது, அவருக்கு அவருடைய அத்தையார் நல்ல நூல்கள் என்று ராம்மோகன்ராயின் நூல்களை ஆராய்ந்தார். இயேசு கிறிஸ்துவின் போதனைகளுள் சிறந்தவற்றை மொழிபெயர்த்து வெளியிட்டார்.

இவர் எல்லா மதங்களிலுமுள்ள சிறந்த அமிசங்களைச் சேர்த்து ஓர் அருவமான பரம்பொருளை வணங்குவதற்கென்று பிரமசாமஜம் என்ற சமய வழியபாட்டு இயக்கத்தை 1828-ல் தொடங்கினார். அதில் தாகூர், கேசவ சந்திர சென் போன்ற பல அறிஞர்கள் சேர்ந்தனர். நாடெங்கும் இந்த இயக்கம் பரவியது. அதன் காரணமாக எல்லா மதங்களிலும் சீர்திருத்தங்கள் தோன்றின.

1829ஆம் ஆண்டில் அரசாங்கத்தார் இவர் இடைவிடாது செய்த பிரசாரத்தின் பயனாக உடன்கட்டை ஏறுவதைத் தடுத்துச் சட்டமியற்றினர். ராம்மோகன் ராய்க்கு டெல்லி அரசர் ராஜா பட்டம் அளித்தார். அவருடைய தூதுவராக ராம்மோகன் ராய் 1930 ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்றார். அங்கு அவருக்குச் சிறந்த வரவேற்பளிக்கப்பெற்றது. கிழக்கிந்தியக் கம்பெனியாரும் ஒரு பெரிய விருந்தளித்தனர். அக்கம்பெனியின் தலைவர் இங்கிலாந்து அரசரான நாலாம் வில்லியம் என்பவரிடம் அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தார். ராம்மோகன்ராய் இங்கிலாந்தில் இருந்த காலத்தில் இந்திய மக்களுக்கு வேண்டிய பல நன்மைகளைக் குறித்துப் பலவிதமாகப் பிரசாரம் செய்தார்.

இவர் 1833-ல் பிரிஸ்டல் நகரத்தில் நோயுற்றார். ஆங்கில நண்பர்கள் பக்கத்திலிருந்து கவனித்து வந்தனர். செப்டம்பர் 27ஆம் நாள் உயிர் துறந்தார். ஒன்பது ஆண்டுகள் சென்ற பின்னர் துவாரகநாத் தாகூர் இருடைய கல்லறையின்மீது ஓர் அழகான நினைவுச் சின்னம் கட்டினார்.

-கலைக்களஞ்சியம், தொகுதி.8பக்கம் 705

**பிரம சமாஜம்**: பிரம சமாஜத்தை நிறுவியவர் இந்தியப் பெரியோர்களில் ஒருவரான ராஜா ராம்மோகன் ராய் ஆவர். அவர்தெய்வபக்தி நிரம்பிய குடும்பத்தில் 1774ஆம் ஆண்டில் வங்காளத்தில் ராதாநகர் என்ற ஊரில் பிறந்து இளமையிலேயே பாரசீக மொழியும் அரபு மொழியும் பாட்னா நகரத்தில் போய்க் கற்றார். பின்னர்க் காசிக்குச் சென்று சமஸ்கிருத இலக்கியத்திலும் வேத சாஸ்திரங்களிலும் பாண்டித்தியம் பெற்றார். கல்கத்தாவிலிருந்து ஏகத்துவ கிறிஸ்தவர்களின் கூட்டுறவின் பயனாக ஹீப்ரு கிரேக்க மொழியிலுள்ள கிறுஸ்தவ வேத நூலைப் பயின்றார். திபெத்துக்குப் போய்ப் பௌத்தமத ஆராய்ச்சி செய்தார். 1813-ல் தமது அரசாங்க உத்தியோகத்தை இராஜிநாமா செய்துவிட்டுக் கல்கத்தாவில் தங்கினார்.

அப்பொழுது அவருடைய உள்ளத்தில் இடம் பெற்றிருந்த பொருள்கள் இவை: 1.அருவமான கடவுள் ஒருவரே என்பதைப் பரவச் செய்தல் 2. உடன்கட்டை ஏறும் வழக்கத்தை (சதி) நிறுத்தல். 3. ஆங்கிலக் கல்வியை ஏற்படுத்துதல். 4. வங்காளி இலக்கியத்தை உண்டாக்குதல். இந்த நான்கிலும் முதல் இரண்டு பொருள்களே அவருடைய பொதுநல வாழ்வின் முதல் பகுதியில் அவருடைய கவனத்தைக் கவர்ந்து நின்றன.

பிரமசமாஜ நிறுவனம்: சமயம், சமூகம், நெறிக்கல்வி, அரசியல் ஆகியவற்றைப் பற்றி ஆராய 1814-ல் ஆன்மிக சபாவை அமைத்தார். அதனுடன் துவாரகநாத் தாகூருடைய உதவியைக் கொண்டு பிரம சபையும் அமைத்தார். அங்கு எல்லா மக்களும் யாதொரு வேறுபாடுமின்றிக்கூடி உலகத்தை ஆக்கி அளித்து வருவதும் மாறாமல் நித்தியமாய் இருப்பதுமான பரம்பொருளை வழிபட்டுவர ஏற்பாடு செய்தார். இந்தச் சபைதான் 1830-ல் 'பிரம சமாஜம்' என்ற

பெயர் பெற்றதாகும். சிறிதுகாலம் சென்றபின் இதனுடன் 'தத்துவபோதினி சபை' இணைக்கப்பெற்றது. ஒரே பரம்பொருளான கடவுளை நாள்தோறும் விக்கிரக ஆராதனையில்லாத முறையில் வழிபடும் வழக்கத்தைத் தேவேந்திரநாததாகூர்{66} ஏற்படுத்தினார்.

{66. மகரிஷி தேவேந்திரநாத டாகுர் (1815-1905): இவர் கவி ரவீந்திரரின் தந்தை. வங்காளத்தில் புதிய சமய நெறியைத் தோற்றுவித்த ராஜாராம் மோகன்ராயின் நெருங்கிய நண்பரான துவாரகநாதடாகுரின் மூத்த மகனார். செல்வப் பெருக்கில் இவருடைய தந்தை போக வாழ்க்கை நடத்தியவர். ஆனால் சிறு பிராயத்திலேயே தேவேந்திரநாதர் உலக வாழ்வில் வெறுப்புக் கொண்டனர். மெய்ப்பொருளைக் காணப் பல சமயங்களின் கொள்கைகளை ஆராய்வதில் கவனம் செலுத்தினார். 1829-ல் தத்துவ போதினி சபையை நிறுவித் 'தத்துவ வேதத்திலும் உபநிடதத்திலும் அடங்கியிருக்கும் உயர் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைத்தார். 1828-ல் ராம்மோகன் ராய் கண்ட பிரம சமயம், அவர் இங்கிலாந்தில் 1833-ல் காலமானதால் தகுந்த தலைவரின்றி மழுங்கியது. 1842ல் மகரிஷி அதை உயிர்ப்பிக்க முன்வந்தார். இப்புது நெறியில் அமைப்பு வைதிக சனாதனக் கொள்கைக்கு மாறாக இருந்தது. 1850-ல் தேவேத்திரநாதர் தொகுத்து வெளியிட்ட பிரம தர்மம் என்ற ஒப்பற்ற நூலில் மெய்ஞ்ஞானம் என்ன என்பதை விளக்கி இறைவனை நிர்க்குணமாகவும் அருவமாகவும் வழிபடுவதற்கு வகை செய்தார்.

இதற்கிடையில் தந்தை காலமாகிவிட்டார். அவர் நிர்வகித்த யூனியன் பாங்கும், மற்றும் உள்ள வாணிக நிலையங்கலும் நிலை குலைந்து போகவே நஷ்ட மேற்பட்டுக் கோடிக்கணக்கில் கடன் சுமை தேவேந்திரரின் மீது விழுந்தது. சொத்துக்களை விற்றுக் கடன்களை அடைத்துத் தம் நேர்மையைக் காப்பாற்றிக் கொண்டார்.

1851-ல் பிரிட்டிஷ் இந்தியக் கழகத்தின் கௌரவச் செயலாளராக இருந்தபோது, இந்தியர்களை ஒன்று திரட்ட ஒரு பொது ஸ்தாபனம் இருக்கவேண்டியதன் அவசியத்தைச் சென்னைப் பிரமுகர்களுக்கு ஒரு கடித வாயிலாகத் தெரிவித்தார்.

இவர் உலக விவகாரங்களில் ஈடுபடாமல், தூய வழியைக் கடைப்பிடித்துத் தவசி போலவே கடவுள் சிந்தனையோடு வீடு தங்காமல் இமயமலைச் சாரல்களில் ஏகாந்தத்தை நாடிச் செல்லுவார். இதனாலேயே வங்க நாட்டினர் மகரிஷியென இவரைப் போற்றினர். இவர் எழுதியுள்ள நூல்கள் பல. பிரம தர்மம் பற்றி இவர் ஆற்றியுள்ள சொற்பொழிவுகள் அறிவுக் களஞ்சியங்கள். 'ஆத்ம ஜ்ஜீவனி' என்ற சுயசரிதையில் இவர் தம் பரந்த அனுபவங்களைக் கூறுகிறார். 1905-ல் இவர் தம் கல்கத்தா இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார். இவருடைய மனைவியார் சாரதா தேவியார் மகரிஷிக்கு ஏற்ற புனிதவதியாக விளங்கினர்.

-கலைக்களஞ்சியம் தொகுதி 6, பக்கம் 185 }

பாரத வருஷப் பிரம சமாஜம்: 1862-ல் கேசவசந்திரசேனர் என்பவர் பிரமசமாஜத்தின் ஆசாரியராக நியமிக்கப்பெற்று 'பிரமாநந்தர்' என்ற பட்டம் வழங்கப்பெற்றார். ஆயினும் அவர் ராம் மோகன்ராய் நிறுவிய ஆதி பிரம சமாஜத்தினின்றும் 1866-ல் பிரிந்து போய், பாரத வருஷ பிரம சமாஜம் என்ற புது


RangaRakes tamilnavarasam.com

சமாஜத்தை அமைத்தார். அதன் பின்னர் மாகாணங்களில் சமாஜங்கள் பெருகலாயின. ஆனால் கேசவசந்திரசேனர் தம்முடைய 13 வயது குமாரியை பிகார் மைனர் மகாராஜாவுக்கு வைதிகப் புரோகிதர் சடங்குகளுடன் மணம் செய்து கொடுத்தார். அது பிரம சமாஜத்தாரிடையே அதிருப்தியை உண்டாக்கிற்று. பலர் அவரைப் பகிஷ்கரித்தார்கள். ஆயினும் அவர் நவலி தான் (புதிய சமய போதனை) என்னும் பெயரால் தமது மதப்பிரசாரத்தை நடத்தி வந்தார். சகல சமயங்களும் ஒருவகை உண்மையையே கூறுகின்றன என்பதைப் போதிப்பதே அதன் நோக்கம். இவ்வாறு கேசவ சந்திரசேனர் 'தெய்வ ஆணை, 'பெரியோர்' என்ற தம் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதைக் கண்டு பிரம சமாஜத்தின் ஆதி அங்கத்தினர்கள் சிலர் வருந்தினர். சமாஜத்திற்குச் சரியான அமைப்புத் திட்டம் வகுக்காததினாலேயே இந்தக் குழப்பம் உண்டாயிருப்பதாக உணர்ந்தார்கள். ஆகவே 1878-ல் சாதாரண பிரமசமாஜம் என்ற பெயரால் ஒரு சங்கத்தை நிறுவினார்கள். 1. ஒரே கடவுள். 2. ஆன்மா நித்தியம். 3. கடவுள் வழிபாடு அவசியம், 4. எந்த நூலிலும், எந்த மனிதனிடமும் தவறிருக்கலாம் என்ற கொள்கைகளை வற்புறுத்துவதே அதன் நோக்கம்.

பிரம சமாஜத்தின் சிறப்பு பண்புகள்: 1. அந்தர் யாமித்துவம் -கடவுளைத் தொழ எந்தப் புரோகிதரும் தேவையில்லை. 2. சுதந்திரத்துவம்-வேதங்கள் கடவுளாற் கூறப்பட்டவையல்ல. 3. பரந்த மனப்பான்மை-உண்மைகள் எந்தச் சமயத்திற்கும் தனிச் சொத்தல்ல. 4. கடவுளின் அருள் வடிவம்-கடவுள் அன்புருவர். இந்த நான்கு கோட்பாடுகளை உலக மக்களுக்கு அறிவிப்பதே பிரம சமாஜத்தின் தலையான நோக்கமாகும்.

-கலைக்களஞ்சியம், தொகுதி 7, பக்கம் 289

## <u>விக்கிரக வழிபாட்டைப்பற்றி அடிகள் கொள்கை</u>

பிரம சமாஜத்திற்கும், சன்மார்க்க சங்கத்திற்கும் நோக்கங்களில் வேறுபாடில்லை. சமய சீர்திருத்தத்திலும் சமூக சீர்திருத்தத்திலும் வள்ளற்பெருமான் ராம் மோகன்ராய்க்குச் சற்றும் பின்னிற்பவரல்லர். உருவ வழிபாடு அறவே கூடாதென்பவர் பிரமசமாஜத்தார். உருவ வழிபாடும் வேண்டியதே என்பவர் வள்ளற்பெருமான். உருவ வழிபாடும் அருவ வழிபாடும் அவ்வப் பக்குவர்க்கு உரியவை; உருவ வழிபாடு முதற்படி, அருவ வழிபாடு முடிவானபடி, அரு வழிபாடு எல்லாராலும் செய்ய இயலாது, அதற்குப் பெரும் பக்குவம் வேண்டும், உருவ வழிபாடு எல்லாராலும் செய்ய இயலும், உருவ வழிபாட்டிலிருந்தே அருவ வழிபாட்டு நிலைக்குரிய பக்குவத்தைப் பெறுதல் சாமானியர்க்குரிய சாதனமுறை, ஆதலால் உருவ வழிபாடு இகழ்ச்சிக்குரியதன்று என்பது வள்ளற்பெருமானின் கொள்கை. சாதாரண தரத்தவர்கள் செய்ய வேண்டிய தியானத்தைப் பற்றி உபதேசிக்கும்போது "தியானஞ் செய்ய வேண்டுமானால் ஏதாவது ஓர் உருவத்தைத் தியானிக்கவேண்டும். நிஷ்களமாயிருக்கப்படாது. உருவமாக இருக்கவேண்டும். அருவமாகத் தியானக்கப்படாது. பின் உருவம் கரைந்து அருவமாகும்" என அடிகள் உபதேசித்திருக்கின்றனர். (ஆ.பா.உபதேசப்பகுதி, பக்கம் 1.4)

இவ்வாறு அருவ வழிபாடு, உருவ வழிபாடு இரண்டையும் ஆதரிக்கும் வள்ளற்பெருமானுக்கு, பிரம்ம சமாஜத்தார் உருவ வழிபாட்டை வன்மையாகக் கண்டித்துப் பொதுமக்களிடம் தம் கருத்தைப் பரப்புவது உடன்பாடில்லை. இதனால் பாமர மக்களிடம் உருவ வழிபாடும் குறைந்து நாத்திகம் பரவும் எனப் பெருமான்



RangaRakes tamilnavarasam.com

கருதினர் போலும். ஆதலாற்றான் நேரிட்ட இச்சமயத்தில் உருவ வழிபாட்டைப் பற்றித் தம் கொள்கையை விளக்கிப் பிரம சமாஜத்தவரை வாதில் தோற்கச் செய்து 'பிரம்மத்தை அறியத்தொடங்கினோர் அறிதல் வேண்டும், விக்கிரக ஆராதனை செய்யத் தொடங்கினோர் செய்தல் வேண்டும், இவ்விருவரையும் அததற்குரிய பக்குவர்ளுக்கு அடுத்த வகைகள்' என அடிகள் உண்மையை நிறுவினர்.

## கருங்குழியில் நிகழ்ந்த அற்புதங்கள்

### நீரால் விளக்கெரித்தது

இரவில் விளக்கில்லாத இடத்தில் இருக்கக் கூடாதென்பது அடிகள் கொள்கை. ஆதலின் அடிகளது அறையில் இரவு முழுவது விளக்கெரிந்துகொண்டே யிருக்கும். அடிகள் இரவில் ஒருமணி நேரமே உறங்குவர். தியானம் செய்வதிலும் அருட்பாடல்களைப் பாடுவதிலும் எழுதுவதிலுமே மற்றைப் பொழுதைக் கழிப்பர். இரவு முழுவதும் எரிய வேண்டியதாதலின் நிறைய எண்ணெய் கொள்ளுமாறு பெரிய அகல் விளக்கென்று அருகே அமர்ந்து எழுதுவதற்கு ஏதுவாக ஒரு மாடத்தில் வைக்கப்பட்டிருக்கும். மாலையில் விளக்கேற்றும் நேரத்தில் வந்து அகலைச் சுத்தம் செய்து எண்ணெயிட்டு விளக்கேற்றும் பணியை ரெட்டியார் வீட்டுத் தலைவி முத்தியாலம்மாளே செய்வது வழக்கம். இரவில் எண்ணெய் குறைந்தால் வேண்டியபோது விட்டுக் கொள்ளுவதற்காக எண்ணெய்க் கலமொன்று விளக்கருகே வைக்கப்பட்டிருக்கும். ஒரு நாள் மாலை முத்தியாலம்மாள் ஒரு புதிய மண்கலத்தில் தண்ணீர் நிரப்பி விளக்கருகே வைத்திருந்தனர். எண்ணெய்க் கலம் வாய் உடைந்து போயிருந்தால் புதிய கலம் மாற்றவேண்டி மண்கலமாதலின் அதனைப் பழக்குவதற்காகத் தண்ணீர் வார்த்து வைத்திருந்தார்கள். அன்று மாலை விளக்கேற்றுவதற்கு முத்தியாலம்மாள் இல்லை. அயலூர் சென்றிருந்தார். விளக்கு வைக்கும் நேரம் வந்தது. அடிகள் எண்ணெய்க் கலமென எண்ணித் தண்ணீர்க் கலத்தை எடுத்து விளக்கில் வார்த்து ஒளியேற்றி விளக்கருகே அமர்ந்து அருட்பாக்களை எழுதத் தொடங்கினர். எண்ணெய்க் குறைய குறைய முன்போல் தண்ணீரையே விட்டனர். துயில் கொள்ளப்போகும்போதும் விளக்கில் தண்ணீரை நிரப்பிவிட்டுத் துயின்றனர். இரவெல்லம் விளக்கெரிந்தது. வார்த்தது தண்ணீரென்பதனை அடிகள் அறியார். மறுநாள் காலை முத்தியாலம்மாள் வெளியூரினின்று திரும்பியதும் அடிகளின் அறைக்கு வந்து பார்த்தார். விளக்கில் தண்ணீர் இருந்தது. எண்ணெய்க் கலத்தில் எண்ணெய் வைத்திருந்த அளவே இருந்தது. தண்ணீர்க் கலத்தில் தண்ணீர் குறைந்திருந்தது. இவற்றைப் பார்த்த அம்மையார் அடிகலை நோக்கி 'ஏன் சாமி! இராத்திரி விளக்கு எரிந்ததா?' என்றார். 'விடிய விடிய எரிந்தது' என அடிகள் புகன்றனர். வியப்புற்ற அம்மையார் 'எந்தக் கலயத்திலிருந்து எண்ணெய் ஊற்றினீர்கள்' என்றார். 'இதிலிருந்து தான்' என்று அடிகள் தண்ணீர்க் கலத்தைச் சுட்டினர். 'இது தண்ணீர்க் கலயம் சுவாமி, புதுக்கலயமானதால் பழக்குவதற்காகத் தண்ணீர் நிரப்பி வைத்திருந்தேன், பழைய எண்ணெய்க் கலயம் பக்கத்திலிருக்கிறது, இரண்டும் அருகருகே இருந்ததால் தண்ணீர்க்கலயத்தை எடுத்து விளக்கில் வார்த்திருக்கிறீர்கள், தண்ணீரும் விடிய விடிய எரிந்திருக்கிறதே, சாமி கையால் வார்த்ததால் எரிந்திருக்கிறது, நாங்கஎெல்லாம் வார்த்தால் எரியுமா?' என்று அம்மையார் வியந்து வீட்டிலுள்ள அனைவர்க்கும் நடந்ததைத் தெரிவித்தார். அனைவரும் வியப்புற்று அடிகளைத் துதித்தனர். அடிகளோ 'என்னால் என்ன இருக்கிறது, இறைவன் சந்நிதியில் தண்ணீர் விளக்கும் எரிந்தது' என்று கூறி அமைந்தனர்.

நீரால் விளக்கெரிக்க நமிநந்தியார்க்கு ஆணை பிறந்தது. வள்ளற்பெருமான் விளக்கில் நீர் வார்த்ததோ எண்ணிச் செய்ததல்ல, தற்செயலாக நேர்ந்தது. தற்செயலே திருவருட் செயலாகித் தண்ணீர் விளக்கும் எரிந்தது அடிகள் சந்நிதியின் முன்னே.

ஒற்றியூர்த் தியாகப் பெருமானைப் பாடிப்பரவும் வள்ளற்பெருமான் 'வானை நோக்கி மண் வழி நடப்பவன்போல்', 'வாயிலான் பெருவழக்குரைப்பதுபோல்', 'வித்தை இன்றியே விளைத்திடுபவன்போல்', 'கலம் இலாது வான்கடல் கடப்பவன்போல்', 'போர்க்கும் வெள்ளத்தில் பொன்புதைப்பவன்போல்', 'ஓடஉன்னியே உறங்குகின்றவன்போல்' 'முதல் இலாமல் ஊதியம் பெறவிழையும் மூடன் என்ன', கல்லை உந்தி வான்நதி கடப்பவர்போல்', 'நெய்யினால் சுடுநெருப்பவிப்பவன் போல்', 'நீர் சொரிந் தொளிவிளக் கெரிப்பவன் போல்' தான் இருப்பதாக விண்ணப்பிக்கின்றார்கள் (இரண்டாம் திருமுறை, பழமொழி மேல் வைத்துப் பரிவு கூர்தல்). 'நீர் சொரிந்தொளி விளக்கெரிப்பவன் போல்' என்ற பாடிய பெருமானே பின்னாளில் நீர் சொரிந்தொளி விளக்கெரிப்பவரானார். தண்ணீர் விளக்கெரிந்த இவ்வற்புதத்தைச் சென்னை நண்பர்களுக்கு அடிகளே ஒரு பாடலால் தெரிவித் தருளுகின்றார்கள்.

**மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக்**
**கில்லையென்றார் மேலோர் நானும்**
**பொய்விளக்கே விளக்கெனவுட் பொங்கிவழி**
**கின்றேனோர் புதுமை யன்றே**
**செய்விளக்கும் புகழுடைய சென்னநகர்**
**நண்பர்களே செப்பக் கேளீர்**
**நெய்விளக்கே போன்றொரு தண்ணீர்விளக்கு**
**மெரிந்தது சந்நிதியின் முன்னே.**

இப்பாடல் திருவருட்பா இரண்டாம் திருமுறையுள் 'அருள்நிலை விளக்கம்' என்ற தலைப்புடன் சேர்க்கப்பட்டுள்ளது. திருவருட்பா முதல் பதிப்பில் (1867 பிப்ரவரி) இப்பாடல் வெளிப்பட்டிருப்பதால் இவ்வற்புதம் நிகழ்ந்த காலம் 1867 மே மாதத்தில் தருமச்சாலை தொடங்கிய பின்னரே அடிகள் வடலூருக்கு வந்து சாலையில் வதிந்தார்கள். அதற்கு முன்னரே இது நிகழ்ந்ததாதலின் இது நிகழ்ந்த இடம் கருங்குழியே என்பது வெள்ளிடைமலை.

'திருவருட்பா மகிமை' என்றோர் செய்யுள் செய்த மதுரை யாதீனம் சிதம்பர சுவாமிகளும் அச்செய்யுளில் தண்ணீர் விளக்கெரித்த தன்மையைக் குறிப்பிடுகின்றார்கள்.

**தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்கள்தம்**
**உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்-கண்மணியாம்**
**நங்கள் இராமலிங்கன் நல்லஅருட் பாமுறையைத்**
**துங்கமுற மாணா தொழு.**

**-திருவருட் மகிமை: சிதம்பர சுவாமிகள்.**


RangaRakes tamilnavarasam.com

இவ்வெண்பாவைத் தொழுவூர் வேலாயுத முதலியாரவர்கள் தமது திருவருட்பா வரலாற்றில்,

**பண்ணீர்மைச் சுவைமுதிர்ந்த திருப்பனுவல் அருட்பயனைத்**
**தண்ணீர்என் றொருவெண்பாச் சம்பந்தப்பிரான் வழியில்**
**தெண்ணீர்த்தென் கூடல்வரும் சிதம்பரமா முனிதெரித்தால்**
**உண்ணீர்மை ஒன்றுமிலேன் உரைப்பதும்ஓர் புகழாமே (44)**

என்றும், தண்ணீர் விளக்கெரித்த அற்புதத்தை

**நல்லருளின் இயல்பெளியோம் பெறக்காட்ட நன்னீரால்**
**செல்லல்இருள் அறவிளக்கங் கெரிவித்தும் தீச்சன்ன**
**வல்லபிணி அறுவிக்கும் வகைகாட்டும் படிஉடலின்**
**அல்லல் செயும் பிணிஅனைத்தும் அருள்மொழியா னேஅறுத்தும் (25)**

என்றும் குறிப்பிடுகிறார்.

## இறைவன் இரவில் எழுந்தருளி 'ஒன்று' கொடுத்தது.

ஒரு நாள் நள்ளிரவில் இறைவன் மானிடத் திருமேனிதாங்கிக் கருங்குழி வீதிகளில் செம்பருக்கைக் கல்லுறுத்த நடந்து அடிகள் இருக்குமிடத் தேடிவந்து கதவைத் தட்டித் திறக்குமாறு கூறினார். அடிகள் கதவைத் திறந்தார். வந்த இறைவன் தன் திருவடிகளில் ஒன்றை வாயிற்படியின் அகத்தும் மற்றொன்றைப் புறத்தும் வைத்தவாறு நின்று அடிகளை நோக்கிக் 'காலநிலை கருதி மனங்கலங்குகின்ற மகனே! இன்று முதல் ஒன்றும் அஞ்சேல், இது ஓர் நின்மலம், இது தேவர்க்கும் அரிது, நற்றவர்க்கும் அரிது, உனக்கிது நாம் நல்கினம், இங்கிதனை வாங்கிக்கொண்டு உலகில் நீ விளையாடி மகிழ்க, இன்னும் நெடுங்காலம் புலவர் தொழ வாழ்க, மரணமற்று வாழ்க' எனக்கூறி அடிகள் கையில் ஒன்றைக் கொடுத்தார். வந்தவர் யாரோ அவர் தருவது யாதோ என அஞ்சி அடிகள் அதனை வாங்க மறுத்தார். வந்தவரோ, 'மறுக்காதே இங்கிதனை வாங்கிக்கொள்'ளென்று வலிந்து கொடுத்துச் சென்றார். தந்த அப்பொருளின் அனுபவம் வாய்ப்பதற்குப் பன்னாளாகவே பின்னொரு நாளும் இறைவன் முன்போலவே இரவில் வந்து முன்பு தந்த பொருளினை உணர்த்திச் சென்றார். இவ்வற்புத நிகழ்ச்சியை அடிகள் நாலாந் திருமுறை அருட்பிரகாசமாலை நூறு பாடல்களிலும் பாடல்தோறும் குறித்தருளியுள்ளனர்.

**உலகமெலாம் உதிக்கின்ற ஒளிநிலைமெய் யின்பம்**
**உறுகின்ற வெளிநிலையென் றுபயநிலை யாகி**
**இலகியநின் சேவடிகள் வருந்தியிட நடந்தே**
**இரவில்எளி யேன்இருக்கும் இடந்தேடி அடைந்து**
**கலகமிலாத் தெருக்கதவங் காப்பவிழ்க்கப் புரிந்து**
**களித்தெனைஅங் கழைத்தெனது கையில்ஒன்று கொடுத்தாய்**
**அலகில்அருட் கடலாம்உன் பெருமையைஎன் என்பேன்**
**ஆனந்த வல்லிமகிழ் அருள் நடநா யகனே.**


RangaRakes tamilnavarasam.com

அன்றொருநாள் இரவிடைவந் தணிக்கதவந் திறப்பித்
தருண்மலர்ச்சே வடிவாயிற் படிப்புறத்தும் அகத்தும்
மன்றவைத்துக் கொண்டென்னை வரவழைத்து மகனே
வருந்தாதே இங்கிதனை வாங்கிக்கொள் ளென்ன
ஒன்றுசிறி யேன்மறுப்ப மறித்துவலிந் தென து
ஒருகைதனிற் கொடுத்திங்கே உறைதிஎன்று மறைந்தாய்
இன்றதுதான் அநுபவத்துக் கிசைந்ததுநா யடியேன்
என்னதவம் புரிந்தேனோ இனித்துயரொன் றிலனே.

இயங்காத இரவிடைஅன் றொருநாள்வந் தெளியேன்
இருக்குமிடத் தனைத்தேடிக் கதவுதிறப் பித்துக்
கயங்காத மலரடிகள் கவின்வாயிற் படியின்
கடைப்புறத்தும் அகத்தும்வைத்துக் களித்தெனைஅங் கழைத்து
மயங்காதே இங்கிதனை வாங்கிக்கொண் டுலகில்
மகனேநீ விளையாடி வாழ்கஎன உரைத்தாய்
புயங்காநின் அருளருமை அறியாது திரிந்தேன்
பொய்யடியேன் அறிந்தின்று பூரித்தேன் உளமே.

ஒருநாளன் றிரவில்அடி வருந்தநடந் தடியேன்
உற்றவிடந் தனைத்தேடிக் கதவுதிறப் பித்து
மருநாள மலரடிஒன்றுள்ளகத்தே பெயர்த்து
வைத்துமகிழ்ந் தெனைஅழைத்து வாங்கிதனை என்று
தருநாளில் யான்மறுப்ப மறித்தும்வலிந் தெனது
தடங்கைதனிற் கொடுத்திங்கே சார்கஎன உரைத்தாய்
வருநாளில் அதனருமை அறிந்துமகிழ் கின்றேன்
மணிமன்றுள் நடம்புரியும் மாணிக்கமணியே.

-4 அருட்பிரகாசமாலை 1:4:6:7.

வந்த இறைவன் தன் திருவடிகளை வாயிற்படிக்கு உள்ளே ஒன்றும் வெளியே ஒன்றுமாக வைத்துக்கொண்டு நின்ற நிலையும், அவர் கொடுத்ததை அடிகள் வாங்க மறுத்ததும், அவர் மீண்டும் வலிந்து கொடுத்ததும் இவற்றுள் கூறப்பட்டன.

அரிபிரமா தியரெல்லாம் அறிந்தணுக ஒண்ணா
அரும்பெருஞ்சீர் அடிமலர்கள் அன்றொருநாள் வருந்தக்
கரிஇரவில் நடந்தருளி யானிருக்கு மிடத்தே
கதவுதிறப் பித்தெனது கையில்ஒன்று கொடுத்து
உரிமையொடு வாழ்கஎன உரைத்ததுவும் அன்றி
உவந்தின்றை இரவினும்வந் துணர்த்தினைஎன் மீது
பிரியமுனக் கிருந்தவண்ணம் என்புகல்வேன் பொதுவில்
பெருநடஞ்செய் அரசேஎன் பிழைபொறுத்த குருவே.

செய்வகைஒன் றறியாது திகைப்பினொடே இருந்தேன்
திடுக்கெனஇங் கெழுந்திருப்பத் தெருக்கதவந் திறப்பித்



RangaRakes tamilnavarasam.com

**துய்வகைஒன் றெனதுகரத் துவந்தளித்து மகனே**
**உய்கமகிழ்ந் தின்றுமுதல் ஒன்றும் அஞ்சேல் என்று**
**மெய்வகையில் புகன்றபின்னும் அஞ்சியிருந் தேனை**
**மீட்டும்இன்றை இரவில்உணர் வூட்டி அச்சந் தவிர்த்தாய்**
**ஐவகையாய் நின்றுமன்றில் ஆடுகின்ற அரசே**
**அற்புதத்தாள் மலர்வருத்தம் அடைந்தனஎன் பொருட்டே.**

**-4 அருட்பிரகாச மாலை 17,23.**

அன்றொருநாள் இரவில் வந்து பெரும் பொருளொன்றைத் தந்த தோடன்றி இன்றை இரவிலும் வந்து அதனை உணர்த்தியது இப்பாடல்களிற் கூறப்பட்டது. இரண்டாவது முறை இறைவன் வந்த இரவில் அடிகள் இவ்வருட்பிரகாசமாலை நூறுபாடல்களையும் பாடி விண்ணப்பித்தார்கள் என்பது 'இன்றை இரவில்' என்று கூறுவதால் தெளிவு.

இறைவன் வந்தருளிய நேரம் 'கழுதும் உணர்வரிய நடுக்கங்குல்' என்று ஒரு பாடல் கூறும். 'செம்பருக்கைக் கல் உறுத்த', 'செம்பரற்கல் உறுத்த' இறைவன் நடந்து வந்தார் என்பது இரு பாடல்களிற் கூறப்படுகிறது. இறைவன் கொடுத்தருளிய பொருள் இன்னதென்று தெளிவாக ஒரு பாடலிலேனும் சொல்லப்பெறவில்லை. 'ஒன்று கொடுத்தாய்' என்றே பெரும்பாலான பாடல்களிற் கூறப்படுகிறாது. 'ஒன்று' என நூறு பாடல்களும் கூறுகின்றனவேயன்றி அந்த ஒன்று இன்னதெனக் கூறவில்லை. 'பெருவண்ணக் கொழுந்தொன்று' (3),'உரிய பொருள் ஒன்று' (19), 'தன்னுருவம் போன்றவொன்று' (51), 'சத்தி ஒன்று' (61) எனச் சில பாடல்கள் கூறுகின்றன.

ஒரு நாளைக்கு இருநாளாக இரண்டு இரவுகளில் எழுந்தருளிப் பெரும்பொருளொன்று கொடுத்தருளிய இவ்வற்புதம் நிகழ்ந்த இடம் கருங்குழியாகும். நான்காம் திருமுறையில் இப்பாடல்கள் இடம் பெற்றுள்ளதால் முதல் நான்கு திருமுறைகள் வெளியிடப்பட்ட 1867 பிப்ரவரிக்கு முன் இது நிகழ்ந்திருக்க வேண்டும். பாடல்களைத் தொகுத்து அச்சிடும் முயற்சி ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி விட்டதால் ஏறத்தாழ 1865இல் அல்லது அதற்குச் சற்று முன்னும் பின்னுமான காலத்தில் இவ்வற்புதம் நிகழ்ந்திருக்கக்கூடும்.

## <u>திருநீறு கேட்கச் சுடர்ப்பூ அளிக்கப்பெற்றது</u>

மற்றொருநாள் அடிகள் அன்பர் பலர் புடைசூழ இருந்தபோது இறைவன் எழுந்தருளி அங்கிருந்த மற்றவர்களுக்கெல்லாம் திருநீறளித்து அடிகளை நோக்கிப் புன்னகை செய்து திருநீற்றுப்பையிலிருந்து செஞ்சுடர்ப்பூ ஒன்றை அளித்தருளினார். அச்சுடர்ப்பூவைப் பெற்ற அடிகள் திருநீறும் தருக என வேண்டினர். இறைவனோ 'அன்று உனக்குத் திருநீறளித்தனம், இன்று இதனை அளித்தோம்' என்று சொல்லிச் சென்றார். இவ்வற்புத நிகழ்ச்சியை நான்காம் திருமுறை பிரசாதமாலை பத்துப்பாடல்களிலும் பாடல்தோறும் அடிகள் குறித்திருக்கின்றனர்.

**திருஉருக்கொண் டெழுந்தருளிச் சிறியேன்முன் அடைந்து**
**திருநீற்றுப் பைஅவிழ்த்துச் செஞ்சுடர்ப்பூ அளிக்கத்**
**தருவுருக்கொண் டெதிர்வணங்கி வாங்கியநான் மீட்டும்**



RangaRakes tamilnavarasam.com

தயாநிதியே திருநீறும் தருகஎனக் கேட்ப
மருவுருக்கொண் டன்றளித்தாம் திருநீறின் றுனக்கு
மகிழ்ந்தளித்தாம் இவைஎன்று வாய்மலர்ந்து நின்றாய்
குருஉருக்கொண் டம்பலத்தே அருள்நடனம் புரியும்
குருமணியே என்னைமுன்னாட் கொண்டகுணக் குன்றே 1

என்வடிவந் தழைப்பஒரு பொன்வடிவந் தரித்தே
என்முன் அடைந் தெனைநோக்கி இளநகைசெய் தருளித்
தன்வடிவத் திருநீற்றுத் தணிப்பைஅவிழ்த் தெனக்குத்
தகுசுடர்ப்பூ அளிக்கவும்நான் தான்வாங்கிக் களித்து
மின்வடிவப் பெருந்தகையே திருநீறுந் தருதல்
வேண்டுமென முன்னரது விரும்பியளித் தனம்நாம்
உன்வடிவிற் காண்டியென உரைத்தருளி நின்றாய்
ஒளிநடஞ்செய் அம்பலத்தே வெளிநடஞ்செய் அரசே 2

அழகுநிறைந் திலகஒரு திருமேனி தரித்தே
அடியேன்முன் எழுந்தருளி அருள்நகைகொண் டடியார்
கழகநடு எனைஇருத்திஅவர்க் கெல்லாம் நீறு
களித்தருளி என்னளவிற் கருணைமுக மலர்ந்து
குழகியற்செஞ் சுடர்ப்பூவைப் பொக்கணத்தில் எடுத்துக்
கொடுத்தருளி நின்றனைநின் குறிப்பறியேன் குருவே
மழகளிற்றின் உரிவிளங்க மணிப்பொதுவிற் சோதி
மயவடிவோ டின்பநடம் வாய்ந்தியற்றும் பதியே. 3

இறைவன் அளித்த செஞ்சுடர்ப்பூ, மணச் செழும்பூ, அருண் மணப்பூ, செழுமணப்பூ என்றும் பிறபாடல்களிற் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வருள் நிகழ்ச்சி அடிகள் தனித்திருக்கும்போது நடந்ததன்று. பலரோடிருக்கும்போது நடந்ததாகும். பாடல்களில் காலம் குறிப்படப்பெறாமையாலும் பலர் உடனிருக்கும் போது நிகழ்ந்தமையாலும் இது பகலில் நிகழ்ந்திருக்கவேண்டும். இது நிகழ்ந்த இடமும் கருங்குழியே ஆகும்.

<u>அடிகளும் அரசாங்க அதிகாரிகளும்</u>

உயர்தர அதிகாரிகள் பலர் அடிகளிடம் அன்பு பூண்டொழுகினர் என்றும், அடிகளுடன் இருப்பதை விரும்பித் தங்கள் இருப்பிடங்களை அடிகளுக்கு அருகில் மாற்றிக்கொண்டனர் என்றும் தென்னார்க்ககாடு மாவட்ட கெசட்டில் கூறப்பட்டுள்ளது. (At its height his influence must have been very real, his admirers and diciples, who included even level headed Government officieals, are said to have changed their residences and gone to live where they coculd be constantly near him.- A.S.DT. GAZETTEER, PAGE316)மஞ்சக்குப்பம் தாசில்தார் வேங்கட சுப்பையர், மஞ்சக்குப்பம் கோர்ட்டு சிரஸ்தேதார் இராமச்சந்திர முதலியார், சிதம்பரம் தாசில்தார் இரமகிருஷ்ணபிள்ளை, குடியாத்தம் தாசில்தார் நரசிம்மாசாரியர், ஆகியோர் அடிகளுடன் தொடர்புகொண்ட அதிகாரிகளுள் சிலராவர். இவர்ள் தொடர்பு இந்நூலுள் ஆங்காங்குக் கூறப்படும்.

சித்தூர் மாவட்டம் குடியாத்தம் தாசில்தார் நரசிம்மமாசாரரியர் அடிகட்கு எழுதிய ஒரு கடிதத்தையும் அதனாலறியப்பெறும் செய்திகளையும் இவண் காண்போம்.

நரசிம்மாசாரியர் குடியாத்தத்தில் ஹெட் தாசில்தாராயிருந்தபோது (1866)அடிகள் அவர்க்கொரு திருமுகம் விடுத்தனர். அத்திருமுகத்தில் தலைக்குக் கட்டும் உருமாலை ஒன்று வெள்ளை நிறத்தில் சரிகைக் கரையிட்டதாகவாங்கி வாங்கியனுப்பக் கேட்டிருந்தனர். தாசில்தார் அவ்வாறே உருமாலை வாங்கியனுப்பினார், அதனுடன் கடிதமொன்றும் எழுதியனுப்பினார். 26.12.1866;ல் எழுதப்பட்ட அக்கடிதம் வருமாறு;

ஶ்ரீமச் சம்யத்த சத்குணபதி பூற்ன்னராய்-கியானுஷ்டான சம்பன்னராய் றாயோக சாம்பறாச்சி சிங்காசனா சீளராய்-மகான்களாயி எழுந்தருளி இருக்கிற மகாராஜராஜ ஶ்ரீ ராமலிங்கம் பிள்ளை அவர்களுடைய சன்னிதானத்துக்கு.

கா. நரசிம்மாசாரியார் யெழுதிய விக்யாபன பத்திரிகை. இவடம் குடியாத்தத்தில் குசலம். தங்களுடைய ஆத்துமானு பவானந்தாதி செயல்களுக்கு யெழிதி அனுப்பக் கோருகிறேன். இப்பவும்:-

தாங்கள் சிற்காலத்துக்கு விசே ஷானுக்கிரஹ பூற்வகமாய்யெழுதி அனுப்பிவைத்த ஆக்கியா பத்திரிகை சேர்ந்து மிகவும் ஆனந்தமடையலானேன். தங்களுடைய ஆக்கியா பிரகாரம் சறிகை வெள்ளை தலை உருமாலை பியாங்கி துவாறா இத்துடன் அனுப்பி வைக்கலாச்சுது. சேர்ந்த சங்கதி தெரியப்படுத்தக் கோருகிறேன். இந்த உருமாலையினுடைய கிரயம் யெனக்கு சேற்குறதாக் யெழிதிநீர்கள்.

தங்களுடய ஆக்கிய பிறகாறம் நடப்பிவைக்கவேண்டியதேயென் வேலையே தவிற அதனுடைய கிரயம் வாங்குகிற வேலை யென்னதல்ல். மஹான்கள் விஷயத்திலே கறணத் திறிய பூற்வகமாய் நடப்பிவைத்த கைங்கறியங்களை குறிச்சு தகுந்த விசேஷம் சு(வா)மியே குடுத்துக்கொண்டிருக்கிற விஷயத்தில் அபபேற் கொத்த கிறயத்தை விட்டுவிட்டு அல்ப்பமான திறவிய ரூப கிறயத்தை அபேக்ஷிக்குறது யெங்கையாவது உண்டோ. தாங்களே யோசிக்கவேண்டியது. கோவிந்தா சாறியறோடே சில சங்கதிகள் நான் சொன்னது தங்களுடைய தற்சனம் அப்பிடியாவது நேறிடுமென்னமோ வென்று தாத்பறியத்துனாலேயே தவிற வேரில்லை. இவடம் தாங்கள் யேளி யெனக்கு தரிசனம் கொடுக்க வேணுமென்று அபிசந்தி தங்களுக்கு இருந்தாலும் அதற்கு பிறதி பாதகமாயி இருக்கப்பட்ட மஹா பாபங்களுக்கு ஆகாறமானயென்னை தாங்கள் ரொம்பவும் ஸ்தோத்திறம் பண்ணதைக் குறித்து நான் மிகவும் அஞ்சிகுறேன். மஸ்தான் அவற்களுடன் தாங்கள் இவடம் யேளறதாய் யெழிதீனீர்கள். அப்பிடி யேளறது தங்கத்துக்குப் பறிமள முண்டாப்போல சந்தோஷிக்கலாகுறது. தில்ல கோவிந்ாச சுவாமியாருடைய சன்னதிக்கு வருஷா வருஷமும் கோஷ்ட்டி சேற்க்க தாங்கள் நினைச்சால் ஒரு அப்பியந்தறமும் இருக்கமாட்டாது. இஷ்ட்டம் சம்பூறண மாகாமல் போனதைகுறித்து வியாகுலம் காண வைத்தீர்கள். "காலோஹி துரதிக் கிரமணா" என்கிற சீதா பிராட்டி வசனப் பிறகாரம் எல்லாம் காலத்துக்கு உள்பட்டிருக்கிறபடியால் அந்தந்தகாலத்து குணங்கள்-கேத மோதங்கள்-தப்புகிறதில்லை. அதுக்கு சிந்திச்சி பிறயோஜனம் இல்லையென்று சறவக்கியற்களாகிய தங்களுக்கு கியாபகப் படுத்துகிறேன். ம-ள-ள-ஶ்ரீ மஸ்தான் அவர்களுகு கோவிந்தாசாரியாற் அவர்களிடத்துக்கு ஒரு கடிதமும் அதுக்குமுன்



RangaRakes tamilnavarasam.com

தபால் மூலமாய் ஒரு கடிதமும் யெழிதியிருக்கிறேன். அதற்கு வெகு னாள் ஆயும் ஜவாபு வறவில்லை. அதுவும் யென்னுடைய தோஷமாகவே நினைக்குறேன். "கதா திறக்ஷியா மஹேறாமம் ஜெகதச் சோக னாசனம்" யென்கிறபடி தங்களுடைய தற்சனத்துக்கு விசேஷமாய் அபேக்ஷித்து யிருக்கிறேன். இவ்வளவே சமாசாறம்.

தஅளசுயசுவரு
டிசம்பற்மீ உசுஉ காய-நரசிம்ஹாசார்ய
குடியாத்தம்

க்ஷேமம் - இவை.

இந்தக் கடிதம் சிதம்பரத்தில் ஊ ஶ்ரீமான் தில்ல கோவிந்த ராஜசுவாமி சன்னிதி தற்கமர்த்தறாகிய கோமாண்டூர் கிற்ஷ்ண மாசாறியாற் அவர்கள்மேல் விலாசம் பார்த்துக்கொண்டு மஹா றாஜறாஶ்ரீ பிள்ளையவர்கள் றாமலிங்க பிள்ளையவர்கள் சன்னிதானத்தில் குடுக்கத் தகுந்தது. குடியாத்தத்திலிருந்து.

இக்கடிதத்தால் இரண்டு செய்திகள் அறியப்படுகின்றன. 1. சரிகை வெள்ளை தலை உருமாலை. 2. தில்லை கோவிந்தராச சுவாமி சந்நிதிக்கு கோஷ்டி சேர்த்தல். உருமாலை செய்தி ஒருவாறு விளங்குகிறது. தலைக்கு கட்டும் உருமாலை ஒன்று வெள்ளை நிறத்தில் சரிகைக் கரை போட்டதாய் வாங்கியனுப்புமாறு அடிகள் தாசில்தாருக்கு எழுதினர். அதன் விலையையும் பின்னர் கொடுத்து விடுவதாகக் குறித்தனர். தாசில்தார் உருமாலை வாங்கி அனுப்பினார். அதன் விலைத்தொகையைப் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை என்பதையும் பணிவாகக் கடிதத்தில் விண்ணப்பித்துள்ளார். தலை உருமாலை அடிகள் எதற்காகக் கேட்டனர் என்பது விளங்கவில்லை. தில்லை கோவிந்தராச சுவாமி சந்நிதிக்கு கோஷ்டி சேர்க்கும் செய்தியும் விளங்கவில்லை. "கோஷ்டி சேர்க்கத் தாங்கள் நினைத்தால்" என்று தாசில்தார் எழுதுகிறார். அடிகள் தில்லை கோவிந்தராசப் பெருமாள் சந்நிதியில் பாடுவதற்குப் பிரபந்த கோஷ்டியொன்று சேர்க்க எண்ணினார்களோ என்னவோ தெரியவில்லை. தில்லை நடராசப் பெருமானைக் குறித்து ஆயிரக்கணக்காகப் பாடிய அடிகள் கோவிந்தராசரைக் குறித்து ஒன்றுமே பாடவில்லை. அடிகள் விஷ்ணு பரமாகப் பாடியதெல்லாம் திரு எவ்வுளூர் வீரராகவரைப் போற்றிப் பாடிய ஒரு பஞ்சகம் (5 பாட்டு), பொதுவாகப் பாடிய இராமநாமத் திருப்பதிகம் ஒன்று, திருக்கண்ணமங்கை இலக்குமியைப் பாடிய பாடல் ஒன்று ஆகிய பதினாறு பாடல்களே. இவ்வாறிருக்க அடிகள் தில்லை கோவிந்தர்க்குக் கோட்டி சேர்க்கக் கருதினர் என்னும் செய்தியின் உண்மை விளங்கவில்லை. தாசில்தார் எழுதிய கடிதமும் தில்லை கோவிந்தராசர் சந்நிதி அறங்காவலரின் மேல் விலாசத்திற்கே எழுதப்பட்டுள்ளது. இவை பற்றிய ஆராய்ச்சி ஈண்டு வேண்டுவதின்று.

## அடிகளை அன்பரொருவர் இசைவிருந்தில் கலந்து கொள்ள அழைத்தல்

தன் வீட்டில் நடைபெறும் இசைவிருந்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென அன்பர் ஒருவர் அடிகளை வேண்டிக் கடிதமொன்று எழுதியிருக்கிறார்.

உ

ஐயா!

இன்று ராத்திரி நமது வீட்டில் 6 மணிக்கு நடக்கும் சிவகங்கை வயித்திநாதய்யர் பாட்டுக் கச்சேரிக்குத் தாங்கள் வந்திருந்து சிறப்பிக்கக் கோருகிறேன்.

1867 வரு பிப்ரவரி மீ 4 உ ......................................

ம-ள-ள-ஸ்ரீ கூடலூர் கருங்குழி ராமலிங்கம்
பிள்ளையவர்களுக்கு.

ஊர்க்குடிகள் தத்தம் வீடுகளில் நடைபெறும் சிறப்புகளுக்கு அடிகளை அழைப்பது வழக்கம். இதனை இவ்வன்பர் கடிதம் உறுதிப் படுத்துகிறது. ஊர் மக்களோடு அடிகள் கலந்து பழகினர் என்பதும், மக்களும் அடிகளைப் பெரிதும் மதித்துப் பேரன்போடு போற்றினர் என்பதும் இதனால் அறியப்படும்.

## திருவருட்பா அச்சிற் போந்தது

### முதல் நான்கு திருமுறைகளின் முதற் பதிப்பு - 1867

திருவருட்பா அச்சிற் போந்த வரலாறு மிகச் சுவையானது, அருமையானது. அதனை அறிதற்கான ஆதாரங்கள் தொழுவூர் வேலாயுத முதலியார் பாடிய திருவருட்பா வரலாறும், அடிகள் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகங்கள் சிலவுமாம். திருவருட்பா வரலாறு எனத் தனியாக ஒரு நூலை எழுதக் கருதியிருத்தலின் ஈண்டு அதனைச் சுருங்கக் கூறுகின்றோம்.

திருவருட்பாவின் முதல் நான்கு திருமுறைகளின் முதற்பதிப்பு 1867 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வெளியாயிற்று. அதனை வெளியிட்டவர்கள் புதுவை வேலு முதலியார், செல்வராயபுரம் சிவானந்த முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார் ஆகிய மூவராவர். இவர்கள் அடிகளின் சென்னை நண்பர்கள். அதனைத் தொகுத்தும் திருமுறைகளாக வகுத்தும் பதிப்பித்தவர் தொழுவூர் வேலாயுத முதலியார். இவர் அடிகளது மாணாக்கருள் தலைவர். 1857ஆம் ஆண்டில் அடிகள் சென்னை வாழ்வை நீத்து வடலூர்ப் பக்கம் சென்றபின் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு அடிகளின் பாடல்களைத் தொகுத்து நூலாக அச்சிட்டு வெளியிடவேண்மென்ற எண்ணம் உண்டாயிற்று. திருவருட்பா ஏடுகளைத் தொகுத்தல் அச்சிடுதல் சம்பந்தமாக இரத்தின முதலியார்க்கும் அடிகட்கும் 1860 முதலே கடிதத்தொடர்பு தொடங்கிற்று. 1867 இல் திருவருட்பா வெளிவந்தது. திருவருட்பாவை வெளியிடுவதில் ஏழாண்டுகள் இரத்தின முதலியார் முயன்றார். அச்சிட அனுமதி வேண்டி அடிகளிடம் தவங்கிடந்தார். நாளும் ஒருவேளையே உண்பதென்று நோன்பு பூண்டார். இவ்வாறு வருந்தி வருந்தி அரிதின் முயன்று திருவருட்பாவை அச்சிட்டு வெளிக்கொணர்ந்த பெருமை இறுக்கம் இரத்தின முதலியாரையே சாரும்.

1860 ஆம் ஆண்டில் இறுக்கம் இரத்தின முதலியார் அடிகளின் பாடல் ஏடுகளைத் தொகுக்கும் முயற்சியைத் தொடங்கினார். இதற்கு இடையில் சென்னையிலிருந்த சிலர் அடிகளது பாடல்களைச் சிறுசிறு நூல்களாக



RangaRakes tamilnavarasam.com

அச்சிடுவதில் முனைந்தனர். இரத்தின முதலியாரும் செல்வராய முதலியாரும் அவர்களை அணுகி, முறையாகத் தாங்கள் அவற்றை அச்சிடவிருக்கையில் சிறு சிறு நூலாக அவர்கள் அச்சிடுவது தகாதெனத் தடுத்தனர். அவர்கள் அச்சிடத் தொடங்கி விட்டதால் அதனை நிறுத்துமாறு கூறிச் சிறிது பொருளும் தந்தனர். அதன் பின்னரும் அவர்கள் அச்சிடுவதை நிறுத்தினார்களில்லை. இந்நிலையில் இறுக்கம் இரத்தின முதலியார் பாடல் ஏடுகளைத் தொகுப்பதிலும் அவற்றை அச்சிடுவதற்கு அடிகளிடத்து இசைவு பெறுவதிலும் தீவிரமாக முனைந்தார். இவை,தொ.வே. பாடிய திருவருட்பா வரலாற்றாலும் (பாடல்கள் 48-52) ச.மு.க. சரித்திரக் குறிப்புகளில்,

"வள்ளலார் சென்னை, புதுச்சேரி, சிதம்பரம், கடலூர், கருங்குழி ஆகிய இடங்களில் விளங்கிய காலத்தில் பாடிய பிரபந்தங்களையும் பதிகங்களையும் சிலர் தனித்தனிச் சில புத்தகங்களாய் அச்சுப் பிழைகளோடு வழங்குவதைக்கண்டு சமரச வேத சன்மார்க்க சங்கத்தை யபிமானித்த புதுவை வேலு முதலியார் சிவாநந்தபுரம் செல்வராய முதலியார் இறுக்கம் இரத்தின முதலியார் முதலிய அன்பர்கள் வள்ளலார் பாலடைந்து 'தேவர் திருவாக்கினின்று பொழிந்த அமுத வருஷமான பாக்களை அச்சிட உத்தரவாக வேண்டும்' என்று மிகுதியும் வேண்ட சுவாமிகள் முதலில் இசையாது பின்னர் இவர்கள் குறையிரக்க ஒருவாறு இசைந்தனர்."

எனக் கூறப்படுவதாலும் அறியப்பெறும்.

## நிர்ப்பந்த ஏற்பாடு
## இறுக்கம் இரத்தின முதலியார் நாளும் ஒரு வேளையே உண்ணும் விரதமும் அடிகளின் எதிர் விரதமும்

அடிகளிடமுள்ள பாடல் ஏடுகளைத் தம்மிடம் அனுப்பிவைக்குமாறு இறுக்கம் இரத்தின முதலியார் வேண்டினார். பலமுறை வேண்டியும் அடிகள் பராமுகமாக இருந்தனர். தமது பாடல்கள் அச்சாவதில் அடிகளுக்கு ஆர்வமோ விருப்பமோ இல்லை. அடிகளிடமும் அவர்களை அடுத்துள்ளவர்களிடமும் உள்ள ஏடுகளை அனுப்பி வைக்கும்படியும் பாடல்கள் அடங்கிய தபால் கட்டு வந்துசேரும் வரைதாம் ஒருவேளையே உணவு கொள்ளுவதென்ற முடிவுக்கு வந்துள்ளதாகவும் இரத்தின முதலியார் அடிகட்குக் கடிதமெழுதினார். இக்கடிதம் கண்ட அடிகள் பாடல் ஏடுகளை இரண்டு திங்களில் அனுப்புவதாகவும் பாடல்களைப்பெறும் வரை ஒரு வேளையே உணவு கொள்வதென்ற நிர்ப்பந்த ஏற்பாட்டைத் தவிர்க்கும்படியும், அங்ஙனம் தவிர்த்துத் தமக்குத் தபாலில் தெரிவிக்கும் வரை தாமும் ஒரு வேளையே உண்பார் என்றும் தம்மீது ஆணையிட்டுத் திருமுகம் ஒன்றை இரத்தின முதலியார்க்கு வரைந்தருளினர். 30-12-1860 இல் வரையப் பெற்ற அத்திருமுகம் வருமாறு:-

உ

சிவமயம்

நற்குணங்களெல்லாவற்றிற்கும் இடனாகிய நன்மனக் கருவியொடு எனது இதயத் திடைவிடாது இருக்கின்ற சிரஞ்சவீ இரத்திந முதலியாரவர்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சிவஞானமும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாவதாக.



RangaRakes tamilnavarasam.com

நாளது வரையில் இவ்விடத்தில் யானும் ள-ள நாயக்கரவர்களும் க்ஷேமம். தமது சுபசரித்திரங்களை கேட்க ஆசையுள்ளவனாக விருக்கின்றேன். எனக்கும் நாயக்கரவர்களுக்கும் தபால் மார்க்கமாகத் தாம் அனுப்பிய கடிதங்கள் வந்து சேர்ந்து சங்கதிகளை தெரிந்துகொண்டேன்.

நான் சென்னப்பட்டணம் விட்டு இவ்விடம் வந்த நாள் தொடங்கி நாளது வரையில் பாடிய பாடல்கள் பல. அவைகளை முழுதும் எழுதி வைக்க வேண்டுமென்கிற லக்ஷியம் எனக்கு இல்லாமையால் அப்படி அப்படி சிதறிக் கிடக்கின்றன. ஆயினும் அவைகளைச் சேர்ப்பிக்க சுமார் இரண்டு மாதம் பிடிக்கும். ஆகலால் நான் பங்குனி மீ அவசியம் வருகிறேன். வரும் போது கொண்டு வருகிறேன். இது உண்மை. எவ்விதமாவது உ மாதத்திற்குள் தமது இடத்தில் இருக்கச் செய்கிறேன். குமாரசாமி பிள்ளை சண்முகப் பிள்ளை ரெட்டியார் இவாள் இடங்களில் தற்காலம் இருக்கின்ற பாடல்கள் சுமார் ரூய-க்கு உட்பட்டதாகவே இருக்கும். வெளிப்பட்ட பாடல்கள் பல பல. ஆதலால் மன்னிக்க வேண்டும்.

அன்புள்ள என் கண்மணி போன்ற தாம் இனி இதனடியில் எழுதுகின்ற வண்ணம் செய்ய-பிராத்திக்கின்றேன். அதாவது இந்தப்பாடல்கள் பங்கியில் அனுப்பி என்னிடஞ் சேர்கின்ற பரியந்தம் நான் ஒருவேளை போசனந்தான் செய்வேன் என்று எழுதியதைப் பார்த்த பின்பு நான் சாப்பிடுகிற சாதம் உடம்பில் பொருந்தவில்லை. பட்டினி கிடந்தவனைப் போல் இருக்கின்றேன். ஆதலால் என்னை நிம்மதியுள்ளவனாக்க எண்ணங்கொண்டு ஒரு வேளை பொசனங் கொள்ளுகிற நிபந்தனை நீக்கி உடனே தபாலில் எனக்குத் தெரிவித்தால் அல்லது நான் சலிப்பை தவிரேன். ஒரு வேளை போசனம் உள்ளவனாகவே இருப்பேன். இது சத்தியம். என் மேல் ஆணை. தாம் மேற்குறித்த நிற்பந்த ஏற்பாட்டைத் தவிர்த்து உடனே யெனக்கு -தெரியப்படுத்த வேண்டும். உ மாதத்திற்கு பின்பு பாடல்கள் அவசியம் சேரும்.

மார்கழி மீ கஅஉ சிதம்பரம் இராமலிங்கம்.

இஃது

**சென்னப்பட்டணம் பெத்து நாயக்கன்பேட்டை ஏழு**
**கிணத்துக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளைத் தெருவில்**
**கலக்டர் கச்சேரி ள-ள சுப்பராயப்பிள்ளை யவர்கள்**
**வீட்டிற்கு எதிர் வீட்டில் ள-ள ரத்தின முதலியார்**

அவர்களுக்கு வருவது.

20-3-1861 இல் வரைந்த ஒரு திருமுகத்தில் விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல் இவைகளை அனுப்பி வைத்த செய்தி குறிப்பிடப்படுகிறது;

… … … … … … … … … … … … … … … … … … … … …. … … … … … … ..
விண்ணப்பக் கலிவெண்பா நெஞ்சறிவுறுத்தல் இவைகளை அங்கிருந்து இங்கு வந்திருந்து பிரயாணப்பட்டங்கு வருகின்ற பெரிய தமக்கையார் வசத்தில் சுமார்



RangaRakes tamilnavarasam.com

ஒரு மாதமாயிற்று கொடுத்தனுப்பினேன். அவாள் மத்தியில் கருங்களவால் கையில் மெய்யில் உள்ளவைக ளெல்லாம் இழந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். அவாள் இன்னு மத்தியில் பந்துக்களிடமாக இருக்கின்றார்கள் போலக் காணுகின்றது. ஆதலில் அவர்கள் அவ்விடம் வந்தவுடன் மேற்படி புத்தகங்களைச் சேர்ப்பிப்பதும் அல்லாததும் உடனே அவசியம் எனக்குத் தெரியப்படுத்த வேண்டும்... ... ... ... ...

விண்ணப்பக் கலிவெண்பாவும், நெஞ்சறிவுறுத்தலும் 1861 ஆம் ஆண்டுக்கு முன்னரே பாடப்பெற்றவையென்பது இதனால் தெளிவு.

## <u>அச்சிட இசைவளித்தருளல்</u>

இறுக்கம் இரத்தின முதலியார் ஒருவாறு பாடல்களைத் திரட்டினார். ஆண்டுகள் ஐந்து கடந்தன. 1860 இல் நாளும் ஒரு வேளையே உணவு கொள்வதென நோன்பு கொண்டு திருவருட்பாத் திருப்பணியைத் தொடங்கியபின் ஆண்டுகள் ஐந்தாகியும் பாடல்கள் அனைத்தும் ஒன்று சேரவில்லை. அச்சிடுதற்கு அடிகளின் இசைவும் கிடைக்கவில்லை. இனித் தாமதிக்க இயலாதென்றும் அச்சிடுதற்கு இசைவளித்தே ஆகவேண்டுமென்றும் வற்புறுத்தி விண்ணப்பித்துக் கடிதம் ஒன்றை 1865 நவம்பர் 13ஆம் தேதி பதிவுத் தபாலில் அடிகட்கு அனுப்பினார். அக்கடிதத்தைப் பெற்ற அடிகள் தமது பாடல்களை அச்சிடுவது தமக்கு அத்துணை அவசியமின்றாயினும் இறைவன் தம் முள்ளிருந்து பாடுவித்தவைகளை மாத்திரம் அச்சிட்டுக் கொள்ளலாம் என இசைவளித்தருளினர். அருளிய அத் திருமுகம் வருமாறு:

<u>உ</u>

சிவமயம்

அன்பறி வாசாரங்களிற் சிறந்து சிவபத்தியினுஞ் ஜீவகாருண்யத்தினுந் தலைநின் றெமதுள்ளத்திற் கலந்து விளங்கிய தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்து மேன்மேலுண்டாக.

தஅளசுரு வரு நவம்பர் மீ யங உ ரிஜிஸ்டர் செய்தனுப்பிய தங்கள் கடிதத்தைக் கண்ணுற்றறிந்து கொண்டேன்.

அக்கடிதத்திற் குறித்த விஷயம் எனக் கத்துணை அவசிய மின்றாயினுந் தங்கள் கருத்தின்படி இறைவ னென்னுள்ளிருந்து பாடுவித்தவைகளை மாத்திரம் தாங்களாயினும் ம-ள-ள செல்வராய முதலியாரவர்களாயினும் தாங்கள் வரைந்தபடி செய்து கொள்ளலாம். இனி எழுதுவதற்கு சமயமின்று. ஆகலின் இங்ஙனம் அமைதி செய்தாம்.

சுமார் இருபதுதினஞ் சென்ற பின்னர் சமய முண்டாம்.

ஆண்டு வரைவன வரைதும். சிரஞ்சீவி சிரஞ்சீவி. சிவ சிவ, இங்ஙனம் சிரஞ்சீவி.



RangaRakes tamilnavarasam.com

இராமலிங்கம்.

14-2-1866இல் சிதம்பரத்தில் தபாலில் சேர்க்கப் பெற்ற ஒரு திருமுகத்தில்

அன்றி ஒற்றியூர் பாடல்கலையு மற்றவைகளையும் அச்சிடத் தொடங்குகிறதாய்க் கேள்விப் படுகிறேன். அவைகளை தற்காலம் நிறுத்தி வைத்தால் நான் அவ்விடம் வந்தவுடன் இவ்விடத்தி லிருக்கின்ற இன்னுஞ் சில பாடல்களையுஞ் சேர்த்து அச்சிட்டுக் கொள்ளலாம். பின்பு தங்க ளிஷ்டம். நமது சிநேகிதர் மகா-ள-ள-ஸ்ரீ வேலு முதலியாரவர்களுக்கு இதைத் தெரியப்படுத்துவீர்களாக.

என அடிகள் குறித்துள்ளார்கள்.

## இராமலிங்கசாமி என்று வழங்காமை வேண்டும்

1866 மார்ச் திங்களில் இறுக்கம் இரத்தின முதலியார் அடிகட்கு எழுதிய கடிதமொன்றில் அச்சிலிருக்கும் திருவருட்பாவின் முகப்பேட்டில் அடிகளின் பெயரை இராமலிங்க சுவாமிகள் என்று குறிப்பிட அனுமதி வேண்டினார். சிதம்பரம் பொருளாக அண்மையிற் பாடிய பாடல்களை அச்சிடுதற்கு அனுப்புமாறும் கேட்டார். சிதம்பர விஷயத்தில் தோத்திர மாலைகளும் சாத்திர மாலைகளுமாக சுமார் இரு நூறு மாலைகள் பாடப்பட்டுள்ளனவென்றும் அவற்றைப் பின்னர் வெளிப்படுத்திக் கொள்ளலாம் என்றும் விடையிறுத்ததோடு, 'இராமலிங்க சாமியென்று வழங்குவது என் சம்மத மன்று, இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும்' என்றும் அடிகள் ஆணையிட்டனர். அத்திரு முகத்தின் ஒரு பகுதி வருமாறு:-

உ

அன்புள்ள தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளுந் திடதேகமும் சகல சம்பத்து சிவகடாக்ஷத்தால் தீர்காயுளுந் திட தேகமும் சகல சம்பத்து மேன்மேலுண்டாக. தாங்கள் வரைந்து விடுத்த கடிதமும் இப்பாடல்களும் இரண்டு தினத்திற்கு முன் என்னிடம் சேர்ந்தன. இன்று குறை நிரம்பப் பெற்றன கொள்க. அன்றி, நான் இத்திசைகண் வந்தபின் இங்ஙனமிருந்து தங்களிடத்திற் போந்த சில பாடல்களில் ஒன்றும் வெளிப்படா திருத்தல் வேண்டும். என்னையெனில் நான் இங்ஙனம் வந்த பின்னர் சிதம்பர விஷயத்தில் தோத்திர மாலைகளுஞ் சாத்திர மாலைகளுமாக சுமார் உள மாலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் வெளிப்படும் போது வெளிப்படுத்திக் கொள்ளலாம். இது நிற்க. முன்னோர் கடித்தத்தினான் குறித்த பாயிரத்தை இன்னுஞ் சில தினஞ் சென்ற பின்னர் அனுப்புகிறேன், தற்காலம் என்னினைவு விரிதற்கின்மையால்,.................இதுநிற்க.

இராமலிங்கசாமி யென்று வழங்குவிப்பது என் சம்மதமன்று. என்னை? ஆராவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதலில். இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும்.

ஜீவகாருண்ணியமும் சிவானுபவமும் அன்றி மற்றவைகளை மனத்தின்கண் மதியாதிருத்தல் வேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.



RangaRakes tamilnavarasam.com

குரோதன வருஷ இங்ஙனம்
பங்குனி மீ கஎ உ சிதம்பரம் இராமாலிங்கம்

பின்னர் 19-4-1866இல் வரைந்த திருமுகமொன்றில்

குடும்ப கோடம், பொது வேதம், மெய்ம்மொழிப் பொருள் விளக்கம், சன்மார்க்க விளக்கம் என்பவைகளை நூதனமாக ஏற்படுத்தக் கருதியபடி வரையாக் கடிதப் புத்தகம் மூன்றென்னிடத் திருக்கின்றன. அவை அமையும். ஆகலில் அது விடயத்தில் உழத்தல் வேண்டா. நான் வருமதிக்கடையில் அங்ஙனம் போதுதற் குளங்கொண்டிருக்கின்றன. இஃதுபாய மன்றுண்மை. அருநெறி செல்வோர்க்கு மச்சுறுத்தத் தக்க விவ்வெய்ய பருவத்தின்கண் வான் பெயலறியா வன்னெறிப் பட்டு மெய்வருத்தங்கோட லொன்றோ. எவ்வகையானுங் களை கணின்றி பசித்தாரது பசி நீக்குதற் பொருட்டே திருவருளாற் கிடைக்கும் பொருட் கருவியை அங்ஙனம் செலுத்தலின்றி இங்ஙனஞ் செலுத்தும் வெறுஞ் செயற்பாட்டிற் கொருப்படுங் குறைமையுங் கோடற்கினாம். ஆகலின் இது விடயத்திற் றுணிந் துரைத்தற்குச் சித்தமு நாவுஞ் செல்வன வல்ல.

எனக் குறித்திருக்கின்றார்கள்.

## 'சிதம்பர விஷயமான பாடல்களை அச்சிட்டுக் கொள்ளுங்கள்'.

சிதம்பர விஷயமான பாடல்களை அச்சிட்டுக் கொள்ளுங்கள் என அடிகள் 26-11-1866இல் இசைவளித்தார்கள். பாடலொன்றின் சரியான பாடத்தையும் அத்திருமுகத்தில் குறித்தருளினார்கள். அத்திருமுகம் வருமாறு:

தங்கள் சுபசரித்திரங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். மகா-ள-ள-ஸ்ரீ அப்பாசாமி செட்டியார் அவர்கட்குத் தாங்கள் வரைந்த கடிதத்திற் குறித்த வண்ணம் சிதம்பர விஷயமான பாடல்களை தங்கள் கருத்தின்படி அச்சிட்டுக் கொள்ளுங்கள். அன்றியும் 'கண்டா யென்தோழி' என்கிற பாட்லகளை வைத்திருக்கின்றவர் தற்காலம் சமீபத்திலில்லை. அவர் வந்தவுடன் வாங்கி அனுப்புகிறேன். 'விண்படைத்த பொழிற்றில்லை அம்பலத்தான் எவர்க்கு மேலானானன்பருள மேவு நடராஜன்' எனல் வேண்டும். இது நிற்க.... .... ... ... ...

இங்கெடுத்துக் காட்டிய திருமுகங்கள் ஏழும் அடிகள் இறுக்கம் இரத்தின முதலியாரின் கடிதங்களுக்கு விடையாக எழுதியவைகளேயாம். இரத்தின முதலியார் அடிகட்கு எழுதிய கடிதங்கள் கிடைக்கவில்லை. எனினும் அடிகளது விடைக் கடிதங்களால் இரத்தின முதலியாரின் வேண்டுகோள் இன்னதாக இருக்குமென்று உய்த்துணரக் கிடக்கிறது. இங்ஙனம் 1860 முதல் 1866 முடிய ஆறு ஆண்டுகள் அடிகளுக்கு மீண்டும் மீண்டும் கடிதங்களால் விண்ணப்பித்தும் ஓரிருமுறை நேரில்வந்து விண்ணப்பித்தும், பதிவுத் தபாலில் கடிதமெழுதியும், நாளும் ஒரு வேளையே உண்ணும் நோன்பிருந்தும், பாடல் ஏடுகளையும் அவற்றை அச்சிடுதற்கு இசைவையும் அரிதிற் பெற்று இறுக்கம் இரத்தினமுதலியார் திருவருட்பா வெளியீட்டை 1867 பிப்ரவரியில் நிறைவேற்றினார்.

## திருவருட்பா என்னும் பெயரும் திருமுறை வகுப்பும்

அடிகளின் அருளிச் செயல்களுக்குத் திருவருட்பா எனப் பெயரிட்ட வரும் அவற்றை ஆறு திருமுறைகளாக வகுத்தவரும் தொழுவூர் வேலாயுத முதலியாராவர். திருவருட்பா என்னும் பெயரைத் தொ.வே. அவர்கள் தமது திருவருட்பா வரலாற்றில்

**ஆயஅருள் இறைஎங்கள் அருட்பிரகா சப்பெருமான்**
**தூயஅரு ளால்பொழிந்த சொல்அமிழ்தாம் தமிழ்ப்பெருக்கு**
**நேயஅருட் பற்றாகி நிறைமனத்துப் பெரியர்க்கும்**
**மாயமயக் குழல்என்போல் மறவர்க்கும் உள்ளுருக்கி.** 34

**அளவாத பேரன்பு சொரிந்தருளை விளைவித்துத்**
**தளவாரும் நகைக்கயற்கண் தையல்இடங் கொண்டபிரான்**
**வளமாரும் கழல்மலரோ டிரண்டறுத்து வாழ்விக்கும்**
**உளவாலே அருட்பாஎன் றொருநாமம் பூண்டதுவே.** 35

**மருளாலே சிலர்என்போல் மருளாலே மயங்கிஉணர்ந்**
**தருளாலே உரைத்ததென அருட்பாவின் உரைகொண்டார்**
**தெருளாதேன் சிந்தைதனைத் தெளிவித்துச் சிவம்ஆக்கும்**
**அருளாலே உரைததென அருட்பாவின் உரைகொண்டாம்.** 36

எனப்பாடுவர். அடிகள் அதுகாலம்வரை அருளிய பாடல்களை ஆறு திருமுறைகளாகத் தொ.வேவகுத்தார்.

**அறுசமயத் துள்ளாரும் அயலாரும் அவர் அறியப்**
**பெறுபொருளும் அளவாத பெரும்பொருளும் காட்டலினால்**
**உறுதிபெறும் அத்துவா அதன்மேலாய் உறுபொருளை**
**மறுவறக்காட் டுகையாலும் மற்றாறு முறையாக** 38

தனித்தனி நூல்களாக விளங்கத்தக்க திருவடிப் புகழ்ச்சி, விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல். சிவநேசவெண்பா, மகாதேவமாலை, திருவருண்முறையீடு, வடிவுடை மாணிக்கமாலை, இங்கித மாலை ஆகிய எட்டும் முதற்றிருமுறையாக வகுக்கப்பெற்றன. சென்னையிலிருந்தபோது திருவெற்றியூர் வழிபாட்டுக் காலத்தில் திருவொற்றியூரை குறித்தும் தில்லையைக் குறித்தும் பாடிய பதிகங்களும்,திருமுல்லைவாயில், திருவலிதாயம்,புள்ளிருக்குவேளூர், திரு ஆரூர், திரு அண்ணாமலைப்பதிகங்களும், பொதுப்பதிகங்களும்,கீர்த்தனைகளும் ஆகியவை இரண்டாவது திருமுறையாக வகுக்கப்பெற்றன. திருவொற்றியூரைக் குறித்துப் பாடப்பெற்ற அகத்துறைப் பதிகங்கள் பத்தொன்பதும் மூன்றாம் திருமுறையாயின. கருங்குழிக் வந்தபின் சிதம்பர வழிபாட்டுக் காலத்தில் சிதம்பரத்தைக் குறித்து பாடப்பெற்ற எட்டு மாலைகள், ஆளுடைய நால்வர் அருண்மாலைகள் நான்கு ஆகப் பன்னிரெண்டும், நான்காம் திருமுறையாயின. இந்நான்கு திருமுறைகளே ஒரு தொகுதியாக 1867ல் வெளிப்படுத்தப் பெற்றன. திருத்தணிகைப் பாடல்கள் ஐந்தாம் திருமுறையாக வைக்கப்பட்டன. அடிகளாரின் ஆணைப்படித் தற்போது வெளியிட வேண்டாமென வைக்கப்பட்ட பாடல்கள் ஆறம் திருமுறையின் பாற்பட்டன.



RangaRakes tamilnavarasam.com

ஐந்தாம் திருமுறை பின்னர் 1880இல் தொ.வே அவர்களால் வெளியிடப்பெற்றது. ஆறாந் திருமுறை 1885இல் வேலூர் பத்மநாப முதலியார், பெங்களூர் இராகவலு நாயக்கர் ஆகிய இருவரது முயற்சியால் சோடசாவதானம் தி.க.சுப்பராயச் செட்டியார் அவர்களால் பார்வையிடப்பட்டு திரிசிரபுரம் ம.லோகநாத செட்டியாரால் பதிப்பிக்கப்பட்டது.

## திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் பெயர்

இம்முதற் பதிப்பின் முகப்பேட்டில் தான் முதன் முதலாக, திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை அவர்கள் என அடிகள் குறிப்பிடப்பெறுகிறார்கள். திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய திருவருட்பா என அச்சிடப்பட்டது. திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் சிறப்புப் பெயரைப் பெருமானுக்கு இட்டு இம்முகப் பேட்டில் அச்சிட்டவர் தொழுவூர் வேலாயுத முதலியாரேயாவர். முகப்பேட்டில் அங்ஙனம் குறித்த தோடன்றித் தாம் பாடிய திருவருட்பா வரலாற்றிலும் (பாடல்கள் 28,33, 34, 42, 56, 60, 61) வழங்கினர்.

**தனித்துரைத்த இராமலிங்கத் தனிமறைஆ தரித்துய்ந்தார்**
**இனித்தஅருட் பிரகாச வள்ளல்என இனிதேத்தி**
**அனித்தமற்றார் சிலஅறவர் அந்தோஎன் போன்மறந்து**
**மனித்தன்எனக் கொண்டொழிந்தார் மலவாழ்வில் சிலமறவர்.** 28

## முதற்பதிப்பு வெளியீடு

இராமலிங்க சுவாமிகள் என வழங்காமை வேண்டுமென அடிகள் தடுத்துவிட்டனராதலின் அங்ஙனம் வழங்க விரும்பியும் அஃதியலாது போயிற்று. அஃதியலாது போன நிலையில் வேறு செயலறியாது எங்ஙனம் பெருமானைச் சிறப்பித்து வழங்குவோம் என்று சிந்தித்து இறுதியாகத் திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க பிள்ளை என வழங்கக் தொடங்கினர். நூல் வெளிவந்த பின் இதனைக் கண்ணுற்ற அடிகள் வருந்தினராம். பின்னர் ஒருவாறு சமாதானப்பட்டுத் 'திருவருட்பிரகாச வள்ளல் ஆர்? என்று கேட்கிற இராமலிங்கம்' என்று வைத்துக் கொள்ளவேண்டுமோ? என்றருளினாராம்.

**வேண்டுவன உபகரிக்கக் கலிநாற்பத்**
**தொன்பதுநூற் றுபான் மேலெட்**
**டாண்டெழுதா எழுத்தேற்றி நான்குமுறை**
**அரசறிய வெளியிட் டியார்க்கும்**
**பூண்டெழுபேர் இன்பமகிழ் வதுபெருகப்**
**பணிபுரியும் பெற்றி யானே**
**காண் தகுசீர்த் தேவநா யகன் அருளும்**
**இரத்தினப்பேர்க் காத்திட் டானே.** 57

எனத் தொ.வே. சொல்லுமாறு திருவருட்பாவின் முதற்பதிப்பு.

உ திருச்சிற்றம்பலம். திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்கள் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பா. முதற் புத்தகம்.



RangaRakes tamilnavarasam.com

இஃது சமரச வேத சன்மார்க்க சங்கத்தை யபிமானித்த புதுவை வேலு முதலியார், சிவாநந்தபுரம் செல்வராய முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார் வேண்டுகோளின்படி இவ்வாசிரியர் மாணாக்கரும் ஷெ சமரச வேத சன்மார்க்க சங்க வித்வான் களிலொருவருமாகிய தொழுவூர் வேலாயுத முதலியாரால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. கலியுகாதி சுசுசுஅ-ல் நிகழும் அக்ஷய வருஷ மகரரவி. ASITIV PRESS, 292 LINGEE CHETTY STREET, MADRAS. February 1867. Registered copy-right.

என்னும் முகப்பேட்டுடன் (அடுத்த பக்கம் காண்க) 1867 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் வெளியிடப் பெற்றது.

திருவருட்பா வெளிப்போந்த பெருமை பெரிதும் இறுக்கம் இரத்தின முதலியாரையே சாரும். நூலுக்குத் திருவருட்பா என்றும், அதன் பகுதிகளுக்குத் திருமுறை என்றும், ஆசிரியர் அடிகளாருக்குத் திருவருட்பிரகாச வள்ளலாரென்றும் பெயரிட்ட பெருமையும் புண்ணியமும் உபய கலாநிதிப் புலவர் தொழுவூர் வேலாயுத முதலியாரவர்களையே சாரும்.

இம்முதற் பதிப்பு நூலின் விலை மூன்று ரூபாய். இதனுள் காணப்படும் அறிவிப்பொன்று பின்வருமாறு:

## அறிவித்தல்

இப்புத்தகம் வேண்டியவர்கள் மயிலாப்பூரிலிருக்கும் ராயல் ஹோட்டல் (Royal Hotel) புதுவை, வேலு முதலியாரிடத்திலும், சென்னப்பட்டணத்தில் ஏழுகிணற்றுக்கடுத்த வீராசாமிபிள்ளை வீதியில் -ந அ வது கதவிலக்கமுள்ள வீட்டில் -இ.இரத்தின முதலியாரிடத்திலும், கிருஷ்ணப்ப நாயக்கன் அக்கிரஹாரம் வண்ணாரச்சந்தில் - உ 0 வது, கதவிலக்கமுள்ள வீட்டில் சி.செல்வராய முதலியாரிடத்திலும், கூடலூரில் முத்துகிருஷ்ண ராமசாமி செட்டியார் குமாரர் மு.அப்பாசாமி செட்டியாரிடத்திலும், ராயவேலூரில் மண்டி அ. வேலு முதலியாரிடத்திலும், இதன் விலை ரூபா ரு கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். வெளிதேசத்தர்களுக்கு இப்புத்தகம் வேண்டுமானால் மேல்விலாசத்துடன் புத்தகக்கிரயத்தையும் தபால் செலவையும் 7 அணா தபால் முத்திரைத்தலையாக அனுப்புகிறா பக்ஷத்தில் ரூபா க-இ-க அணா வட்டத்துடன் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். இப்புத்தகம் மயிலை சிக்கிட்டிச்செட்டியார் குமாரர் சோமசுந்தர செட்டியார் பேருதவியாற் பிரசுரஞ் செய்யப்பட்டது. முதற்பதிப்பு.

## சிறப்புப் பாயிரங்கள்

மதுரைஆதீனம் சிதம்பர சுவாமிகளும் பொன்னேரி சுந்தரம் பிள்ளையும் திருவருட்பாவுக்குச் சிறப்புப் பாயிரம் செய்தனர். சிதம்பர சுவாமிகள் பாயிரம் வருமாறு:

**உ**

## திருச்சிற்றம்பலம்



RangaRakes tamilnavarasam.com

**திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்**

சிதம்பரம்

இராமலிங்கபிள்ளை

அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பா

முதற்புத்தகம்

இஃது
சமரசவேதசன்மார்க்க சங்கத்தை யபிமானித்த
புதுவை-வேலுமுதலியார்
சிவாநந்தபுரம் -செல்வராயமுதலியார்
இறுக்கம்-இரத்தினமுதலியார்
வேண்டுகோளின்படி

இவ்வாசிரியர்மாணாக்கரும்
ஷெ சமரசவேதசன்மார்க்க சங்க
வித்வான்களிலொருவருமாகிய
தொழுவூர்-வேலாயுதமுதலியாரால்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

**தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்கள்தம்**
**உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்-கண்மணியாம்**
**தங்கள் இராமலிங்கன் நல்லஅருட் பாமுறையைத்**
**துங்கமுற மாணா தொழு.**

இப்பாயிரம், 'இது வேதாகம சுத்த சைவ சித்தாந்த சமயாசாரிய பீடமாய் விளங்குகின்ற மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகளாதீனம் சிதம்பர சுவாமிகள் அருளிச் செய்தது-திருவருட்பா மகிமை' என்ற தலைப்புடனும், பொன்னேரி சுந்தரம் பிள்ளை செய்த 'தாய் மலர்ந்த பெருங்கருணைத் தத்துவனார்' என்னும் பாடல் (பக்கம் 8 காண்க) 'ஆசாரிய ஸ்துதி' என்ற தலைப்புடனும்' என்ற கீழ்க்குறிப்புடனும் நூலிறுதியில் அச்சிடப்பெற்றன. இவ்விரு பாயிரங்களையும் நூலிறுதியில் சேர்த்து அச்சிடுவதற்கும் அடிகளது இசைவைப் பெறவேண்டியதாயிற்று. பொன்னேரி சுந்தரம் பிள்ளை சென்னையிலிருந்து கருங்குழிக்கு வந்து அடிகளிடம் மன்றாடி இசைவு



RangaRakes tamilnavarasam.com

பெற்றார். அவரது மன்றாட்டுக்கு இரங்கிய அடிகள் புதுவை வேலு முதலியார்க்கெழுதிய திருமுகத்தின் கீழ்,

அன்புள்ள ஐயா,

நமது சுந்தரப் பிள்ளை எழுதிய பாயிரம் நன்றாயிருக்கிறது அதை அச்சிடுவிப்பீர்களாக. அன்றி நமது சிதம்பர சுவாமிகள் பாயிரமும் நன்றாயிருக்கின்றது. அதையும் அப்படி செய்க. வந்தனம்.

எனக் குறிப்பெழுதிக் கொடுத்தனர். இக்குறிப்படங்கிய திருமுகத்தைப் பெற்றுக்கொண்டு சுந்தரம் பிள்ளை சென்னை சென்றார். பாயிரங்கள் அச்சிடப்பெற்றன.

## தொ.வே.பாடிய 'திருவருட்பா வரலாறு'

அடிகளின் பிறப்பு, வளர்ப்பு, சிறப்பு, திருவருட்பா அருளிச் செய்தது, பதிப்பு வரலாறு ஆகியவற்றை அறுபத்தாறு பாக்களில் தொழுவூர் வேலாயுதனார் பாடித் 'திருவருட்பா வரலாறு' என்னும் தலைப்புடன் நூலிறுதியில் சேர்த்து அச்சிட்டார். (பின் இணைப்பு-1 காண்க)

## 'இனி அச்சிற் பதிப்பிக்கப்படுபவை' என்னும் குறிப்பு.

திருவருட்பா அச்சாகிக் கொண்டிருக்குங் காலத்தில் ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை முதலிய நால்வர் தோத்திரங்களையும் இறுக்கம் இரத்தின முதலியார் கோரிய வண்ணம் அனுப்பியபோது அவற்றின் தொடர்பாக எழுதியனுப்பிய திருமுகக் குறிப்பில் 'இதில் குறிக்கின்றவகைகலை இனி அச்சிடுவதாகக் குறிப்பீர்களாக' என அடிகள் நாற்பத்து மூன்று தலைப்புகளைக் குறித்தனுப்பியருளினார்கள்.

அன்பறிவு முதலியவற்றிற் சிறந்த தங்கட்கு சிவகடாக்ஷத்தால் மேன்மேல் சுபம் உண்டாக.

தாங்கள் குறித்தபடி வரைந்து அனுப்பினேன். இவை மிகவும் விரைவில் வரையப்பட்டன ஆகலால் மிகவும் மெதுவில் பார்க்கவேண்டும்.

சிதம்பரம் இராமலிங்கம்.

மற்றைச் சங்கதிகளைப் பின்னிட்டு தெரிவிக்கின்றேன். அன்றி, இதில் குறிப்பிடுகின்றவைகளை இனி அச்சிடுவதகாக் குறிப்பீர்களாக. அவை-

நடராஜ நிபுணம்-நடராஜ விசித்திரம்-நடராஜ மதுரம்-நடராஜ அலங்காரம்-நடராஜ ஞான நாடகம்-நடராஜ ஆனந்த நாடகம்-சிதம்பர உபதேசம் -சிற்றம்பல நடனம்-பொன்னம்பல நடனம்-பொது நடனம்-தத்துவ நடனம்-ஆனந்த நடனம் -அதீத நிலை-அருள் விளக்கம்-மெய்ப் பொருள் விளக்கம்-மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் பொருள் விளக்கம்-சன்மார்க்க விளக்கம்-சாதன விளக்கம்-கலாந்த விளக்கம்-யோகாந்த விளக்கம்-நாதாந்த விளக்கம்-போதாந்த விளக்கம்-வேதாந்த



RangaRakes tamilnavarasam.com

விளக்கம்-சித்தாந்த விளக்கம்-அண்ட விளக்கம்-பிண்ட விளக்கம்-பிரகிருதி விருத்தி-தத்துவ விருத்தி-சுத்த சிவராசியம்-பரசிவராசியம்-மந்திரக் கொத்து-மகாவாக்கியவகை-பொதுவேதம்-குடும்பகோஷம்-இயல்வகை-அளவை வகை-ஞாய வகை-இலக்கண விருத்தி-தர்க்க விருத்தி-தென்மொழி விளக்கம்-வடமொழி விளக்கம்-உலகியல் விளக்கம்-கலை மரபு.

இந்த தபால் வந்தவுடன் சேர்ந்த செய்தி தெரிவிக்க வேண்டும்.

இந்நாற்பத்து மூன்றுக்கும் முன் முதலில், 'ஐந்தாவது திருமுறை, திருத்தணிகைப்பதிகம்' என்பதையும் சேர்த்து நாற்பத்து நான்காக்கி இனி அச்சிற் பதிப்பிக்கப்படுபவை என்ற தலைப்பில் நூல் இறுதியில் தொ.வே.குறிப்பிட்டார்.

இவற்றுள் சில பின்னர் அச்சாயின. பெரும்பாலனவை வள்ளற் பெருமானாரால் செய்யப் பெறாமலே தவிர்ந்து போயின. இவற்றைக் குறித்து யாம் எழுதவிருக்கும் திருவருட்பா வரலாற்றில் விரிவாக ஆராயப்பெறும்.

## 4. உத்தரஞான சிதம்பரப் பகுதி 1867-1870
## (அகவை 44-47)

### சத்திய தருமச்சாலை நிறுவியது 23-5-1867

அடிகளின் கொள்கைகளுள் தலையாயது சீவகாருணியம். சீவகாருணியத்தை அடிகள் இருவகையால் வற்புறுத்துவர். 1.புலான் மறுத்தல் 2. அற்றார் அழிபடி தீர்த்தல். புலால் மறுத்தலைப் பின்னோரிடத்துக் கூறுவாம். அற்றார் அழிபசி தீர்த்தலை இவண் காண்பாம்.

### பசியின் கொடுமையும் அதைத் தவிர்த்தலின் சிறப்பும்

பசி எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. மிகக் கொடியது. கொடியவற்றுளெல்லாம் கொடியது பசியே. எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணம் பசியே. பசி இன்றேல் உயிர்களுக்குத் துன்பமில்லை. கொடிய இப்பசியைப் பசித்தீ என்றும் பசிநோய் என்றும் பசிப்பிணி என்றும் கூறுவர். தமிழ் மூதாட்டியாகிய ஔவையார் 'வயிறே உன்னோடு வாழ்தல் அரிது' எனப்பாடுவர்.

**ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்**
**இருநாளுக்கு ஏலென்றால் ஏலாய்-ஒருநாளும்**
**என்னோ வறியாய் இடும்பைகூர் என்வயிறே**
**உன்னோடு வாழ்தல் அரிது. -நல்வழி 11**

மானம், குலம், கல்வி, ஈகை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தொழின் முயற்சி, மங்கையர்மேற் காமுறுதல் ஆகிய இவை பத்தும் பசி வந்திடப் பறந்துப்போம் என்பர்.

**மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை**
**தானந் தவம்உயர்ச்சி தாளாண்மை தேனின்**

**கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்**
**பசிவந் திடப்பறந்து போம். -நல்வழி 26**

இப்படிப் பத்தும் பறக்க வரும் பசியை ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார் தண்டமிழ்க் காப்பியமாகிய மணிமேகலையில்

**குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்**
**நாணணி களையு மாணெழில் சிதைக்கும்**
**பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்**
**பசிப்பிணி யென்னும் பாவி ...... ...... ..... ....... ...... ......**
**-11 பாத்திரம்பெற்ற காதை 76-80**

எனக்கூறுவர். கொடிய அப்பசியைத் தீர்த்தலின் சிறப்பினை

**பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்**
**இசைச்சொ லளவைக் கென்னா நிமிராது -8081.**

என்றும்,

**ஆற்றா மாக்க ளரும்பசி களைவோர்**
**மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை**
**மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே -93-86**

என்றும் கூறுவர்.

**ஆற்றுவார் ஆற்றல்பசிஆற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின். 225**

**அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி. 226**

எனத் திருவள்ளுவரும் கூறுவர். இவர்களைப் போன்றே வள்ளற்பெருமானும் பசிக்கொடுமையையும் அதைத்தீர்த்தலின் சிறப்பினையும் பலபட விரித்து எழுதியும் பாடியும் உள்ளனர். அடிகள் அருளிய சீவகாருணிய ஒழுக்கம் என்னும் நூல் முழுவதும் பசிக்கொடுமையையும் அதைத் தீர்த்தலின் சிறப்பையும் கூறுவதேயாகும். இத்திறத்தில் இதுவரை உலகில் தோன்றியுள்ள நூல்களில் இதுவே தலையானது, அழுத்தந் திருத்தமானது. இதற்கொப்பான நூல் வேறில்லை. பசிக் கொடுமையையும் அதனைத் தவிர்த்தலின் சிறப்பையும் அடிகள் அருளிய சீவகாருணிய ஒழுக்கம் கூறுமாறு:

### சீவகாருணிய ஒழுக்கம்:-பசிக்கொடுமை

சீவர்களுக்குப் பசியதிகரித்த காலத்தில் சீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றது; அது மயங்கவே அறிவுக்கறிவாகிய கடவுள் விளக்கம்



RangaRakes tamilnavarasam.com

மறைபடுகின்றது; அது மறையவே புருட தத்துவம் சோர்ந்து விடுகின்றது; அது சோரவே பிரகிருதி தத்துவம் மழுங்குகின்றது; அது மழுங்கவே குணங்களெல்லாம் பேதப்படுகின்றன, மனம் தடுமாறிச் சிதறுகின்றது, புத்தி கெடுகின்றது, சித்தம் கலங்குகின்றது, அகங்காரம், அழிகின்றது, பிராணன் சுழல்கின்றது, பூதங்களெல்லாம் புழுங்குகின்றன, வாதபித்த சிலேட்டுமங்கள் நிலைமாறுகின்றன, கண் பஞ்சடைந்து குழிந்து போகின்றது, காது கும்மென்று செவிடுபடுகின்றது, நா உலர்ந்து வறளுகின்றது, நாசி குழைந்து அழல்கின்றது, தோல் மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது, கை கால் சோர்ந்து துவளுகின்றன, வாக்குத் தொனிமாறிக் குளறுகின்றது, பற்கள் தளருகின்றன, மலசல வழி வெதும்புகின்றது, மேனி கருகுகின்றது, ரோமம் வெறிக்கின்றது, நரம்புகள் குழைந்துநைகின்றன, நாடிகள் கட்டுவிட்டுக் குழைகின்றன, எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்குவிடுகின்றன, இருதயம் வேகின்றது, மூலை சுருங்குகின்றது, சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது, ஈரல் கரைகின்றது, இரத்தமும் சலமும் சுவறுகின்றன, மாமிசம் குழைந்து தன்மை கெடுகின்றது, வயிறு பகீலென் றெரிகின்றது, தாப சோபங்கள் மேன்மேலும் உண்டாகின்றன, உயிரிழந்து விடுவதற்கு மிகவுஞ் சமீபித்த அடையாளங்களும் அநுபவங்களும் மேன்மேலும் தோன்றுகின்றன; பசியினால் இவ்வளவு அவத்தைகளும் தோன்றுவது சீவர்களுக்கெல்லாம் பொதுவாகவே யிருக்கின்றது.

**சீவகாருணிய ஒழுக்கம்:- பசி தவிர்த்தலின் சிறப்பு.**

இவ்வளவு அவத்தைகளும் ஆகாரங் கிடைத்தபோது உண்டு பசிநீங்க நீங்குகின்றன. அப்போது தத்துவங்களெல்லாம் தழைத்து உள்ளங் குளிர்ந்து அறிவு விளங்கி அகத்திலும் முகத்திலும் சீவ களையும் கடவுள் களையுந் துளும்பி ஒப்பில்லாத திரும்தியின்பம் உண்டாகின்றது. இப்படிப்பட்ட இன்பத்தை உண்டு பண்ணுகின்ற புண்ணியத்துக்கு எந்தப் புண்ணியத்தைச் இணையென்று சொல்லலாம்? இந்தப் புண்ணியத்தைச் செய்கின்ற புண்ணியர்களை எந்தத் தெய்வத்துக்குச் சரியென்று சொல்லாம்? எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுளம்சமென்றே சத்தியமாக அறியவேண்டும். இதனால் நகரவேதனை சனன வேதனை, மரணவேதனை என்கின்ற மூன்று வேதனைகளுங் கூடி முடிந்த வேதனையே பசிவேதனை யென்றும், அகம் புறம் நடு கீழ் மேல் பக்கம் என்கிற எவ்விடத்தும் நிறைந்து எக்காலத்தும் வேறுபடாத மோக்ஷ இன்பமே ஆகாரத்தினா லுண்டாகும் திருப்தி யின்பம் என்றும் அறியப்படும்.

அற்றார் அழிபசி தீர்த்தலே சீவகாருணியம் என்பதனைக் கூறுகின்றார்:

பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் சீவகாருணியம்.

பசியென்கிற விஷக்காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே சீவகாருணியம்.

கடவுளியற்கை விளக்கத்திற்கு இடமாகிய சீவதேகங்களென்கிற ஆலயங்கள் பசியினால் பாழாகுந் தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே சீவகாருணியம்.



RangaRakes tamilnavarasam.com

கடவுள் இன்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ் செய்கின்ற சீவரது தத்துவக் குடும்ப முழுதும் பசியினால் நிலை தடுமாறி அழியுந் தருணத்தில் ஆகாரங்கொடுத்து அக்குடும்ப முழுதும் நிலைபெறச் செய்வதே சீவகாருணியம்.

பசி யென்கிற புலியானது ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லது தொடங்குந் தருணத்தில் அப் புலியைக் கொன்று அவ் உயிரை இரட்சிப்பதே சீவகாருணியம்.

பசியென்கின்ற விஷம் தலைக்கேறிச் சீவர் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை இறக்கி மயக்கந் தெளியச் செய்வதே சீவகாருணியம்.

பசி என்கிற கொடுமையாகிய தேள் வயிற்றிற் புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் அக்கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே சீவகாருணியம்.

'நேற்று இராப்பகல் முழுதும் நம்மை அரைப்பங்கு கொன்று தின்ற பசியென்கிற பாபி இன்றும் வருமே! இதற்கு என்ன செய்வோம்' என்று ஏக்கங் கொள்கின்ற ஏழைச் சீவர்களது ஏக்கத்தை நீக்குவதுதான் சீவகாருணியம்.

'வெயிலேறிப் போகின்றதே, இனிப் பசியென்கிற வேதனை வந்து சம்பவிக்குமே! இந்த விதிவசத்திற்கு என்ன செய்வது!' என்று தேனில் விழுந்த ஈயைப்போல, திகைக்கின்ற ஏழைச்சீவர்களுடைய திகைப்பை நீக்குவது தான் சீவகாருணியம்.

'இருட்டிப் போகின்றதே, இனி ஆகாரங் குறித்து எங்கே போவோம்! யாரைக் கேட்போம்! என்ன செய்வோம்!' என்ற விசாரத்தில் அழுந்திய ஏழைச் சீவர்களது விசாரத்தை மாற்றுவதே சீவகாருணியம்.

'நடந்து நடந்து காலுஞ் சோர்ந்தது. கேட்டுக் கேட்டு வாயுஞ் சோர்ந்தது, நினைந்து நினைந்து மனமும் சோர்ந்தது; இனி இப்பாவி வயிற்றுக்கென்ன செய்வோம்!'என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே சீவகாருணியம்.

'பகற்போதும் போய்விட்டது, பசியும் வருத்துகின்றது, வேறிடங்களிற் போக வெட்கந் தடுக்கின்றது, வாய்திறந்து கேட்க மானம் வலிக்கின்றது, வயிறு எரிகின்றது, உயிரை விடுவதற்கும் உபாயந் தெரியவில்லை. இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்!' என்று மனமும் முகமும் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல் உற்பாத சொப்பனங் கண்ட ஊமையைப்போல் மனம் மறுகுகின்ற மானிகளாகிய சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்து மானத்தைக் காப்பதுவே சீவகாருணியம்.

'நாம் முன் பிறப்பில் பசித்தவர்கள் பசிக்குறிப் பறிந்து பசியை நீக்கி யிருந்தால், இப் பிறப்பில் நமது பசிக்குறிப்பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வார்; அப்போது அப்படி நாம் செய்ததில்லை, இப்போது நமக்கிப்படிச் செய்வாருமில்லை என்று விவகரித்துக்கொண்டு தூக்கம் பிடியாமல்


RangaRakes tamilnavarasam.com

துக்கப்படு கின்ற ஏழைச் சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே சீவகாருணியம்.

தேக முழுவதும் நரம்புகள் தோன்றப் பசியினால் இளைத்து உயிரொடுங்கி மூர்ச்சை மூடியகாலத்தும் அயலாரைக் கேட்பது துணி யாமற் கடவுளை நினைத்து நினைத்து நெருப்பிற்படுத்து நித்திரை செய்யத் தொடங்குவாரைப் போல, அடிவயிற்றிற் கொடிய பசி நெருப்பை வைத்துப் படுக்கத் தொடங்குகின்ற விவேகிகளுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசி நெருப்பை ஆற்றுவதே சீவகாருணியம்.

'நேற்றுப் பட்டினி கிடந்ததுபோல் இன்றும் பட்டினிகிடப்பது எப்படி? நாம் பாலிய வசத்தால் இன்றும் பட்டினி கிடக்கத் துணிவோமாயினும் பட்டினி சகியாத நமது ஏழை மனைவி வயிற்றுக்கு யாது செய்வோம்? இவள் பசியைக் குறிப்பதும் பெரிதல்ல வார்த்திப திசையால் மிகவுஞ் சோர்ந்த நமது தாய் தந்தைகள் இன்றும் பட்டினி கிடந்தால் இறந்துவிடுவார்களே! இதற்கென்ன செய்வோம்? பசியினால் அழுதழுது களைத்த நமது புத்திரர்களது சோர்ந்த முகத்தை எப்படிப் பார்ப்போம்? என்று எண்ணி எண்ணிக் கொல்லன் உலையிலூத மூண்ட நெருப்பைப்போல், பசிநெருப்பும் பயநெருப்பும் விசாரநெருப்பும் உள்ளே மூண்டபடி யிருக்கக் கன்னப்புடையில் கைகளை வைத்துக்கொண்டு கண்களில் நீர் கலங்க வருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்து வருத்தத்தை மாற்றுவதே சீவகாருணியம்.

'கண் கை கால் முதலிய உறுப்புக்களிற் குறைவில்லாதவர்களாகி ஆகாரஞ் சம்பாதிக்கத் தக்க சக்தியுள்ளவர்களும் பசியால் வருந்தி இதோ படுத்திருக்கின்றார்கள்; குருடும் செவிடும் ஊமையும் முடமுமாக விருக்கின்ற நமக்கு ஆகாரம் எந்தவழியாற் கிடைக்கும்! பசி எப்படி நீங்கும்!' என்று தனித்தனி நினைத்து நினைத்துத் துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே சீவகாருணியம்.

**பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும் எந்தச் சமயத்தாராயினும் எந்தச் சாதியாராயினும் எந்தச் செய்கையாராயினும் அவர்கள் தேசவொழுக்கம் சமயவொழுக்கம் சாதியெழுக்கம் செய்கையொழுக்கம் முதலானவைகளைப்பேதித்து விசாரியாமல், எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாய் விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம்.**

சன்மார்க்க வொழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசி நிவர்த்தி செய்துகொள்ளத் தக்க மிருகம் பறவை ஊர்வன தாபரம் என்கின்ற உயிர்களுக்குப் பசி வந்தபோது பசி நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம்

சீவகாருணியமுடையார்க்கு உண்டாகும் நன்மைகளைச் சொல்லுகின்றார்:

பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாகக்கொண்ட சீவகாருணிய முள்ள சமுசாரிகளுக்குக் கோடையில் வெயிலும் வருத்தாது; மண்ணும் சூடு செய்யாது; பெருமழை பெருங் காற்று பெரும்பனி பேரிடி பெருநெருப்பு முதலிய உற்பாதங்களும் துன்பம் செய்விக்கமாட்டா; விடூசிகை{67} விஷக்காற்று விஷசுரம் முதலிய அஜாக்கிரதைப் பிணிகளு முண்டாகா; அந்தச் சீவகாருணிய முள்ள



RangaRakes tamilnavarasam.com

சமுசாரிகள் ஆற்று வெள்ளத்தாலும் கள்ளர்களாலும் விரோதிகளாலும் கலக்கப்படார்கள்; அரசர்களாலும் தெய்வங்களாலும் அவமதிக்கப்படார்கள்; சீவகாருணியமுள்ள சமுசாரிகளது விளைநிலத்தில் பிரயாசையில்லாமலே விளைவு மேன்மேலும் உண்டாகும்; வியாபாரத்தில் தடையில்லாமல் லாபங்களும், உத்தியோகத்திற் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும்; சுற்றங்களாலும் அடிமைகளாலும் சூழப்படுவார்கள்; துஷ்ட மிருகங்களாலும் துஷ்ட ஜந்துக்களாலும் துஷ்டப் பசாசுகளாலும் துஷ்ட தெய்வங்களாலும் பயஞ் செய்யப்படார்கள்; சீவகாருணிய முள்ள சமுசாரிகளுக்கு எப்படிப்பட்ட ஆபத்துக்களும் அஜாக்கிரதையினாலும் ஊழ்வகையினாலும் சத்தியமாக வராது.

{67. வீடூசிகை-அம்மை, வைசூரி }

இயல்வது கரவேல் என்றருளியவர் ஈவது விலக்கேல் என்று ஜீவகாருணியத்தை வற்புறுத்துகின்றார்

பசித்தவர்க்குப் பசியை நீக்குகின்ற விஷயத்தில் புருஷனைப் பெண்சாதி தடுத்தாலும், பெண்சாதியைப் புருஷன் தடுத்தாலும் பிள்ளைகளைத் தந்தை தடுத்தாலும், தந்தையைப் பிள்ளைகள் தடுத்தாலும், சீஷரை ஆசாரியர் தடுத்தாலும், அடியாரை ஆண்டவன் தடுத்தாலும், குடிகளை அரசன் தடுத்தாலும் அந்தத் தடைகளால் சிறிதுந் தடைபடாமல் அவரவர் செய்த நன்மை தீமைகள் அவரவரைச் சேருமல்லது வேறிடத்திற் போகா வென்பதை உண்மையாக நம்பிச் சீவகாருணிய வொழுக்கத்தை நடத்த வேண்டுமென்றும் அறிய வேண்டும்.

அரசனே தடுத்தாலும் ஆண்டவனே தடுத்தாலும் ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய சீவகாருண்ய ஒழுக்கத்தைத் தவிராதே என்று அடிகள் வற்புறுத்தும் அழுத்தம் அடிகளது கொள்கைகளுள் ஜீவகாருண்யமே தலையானது என்பதைக் காட்டும்.

ஜீவகாருண்யத்தின் திருவுருமாகிய அடிகள் வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினார். பசியினால் இளைத்து வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்த வெற்றரைக் கண்டு உளம் பதைத்தார். உலகில் மாந்தர் பசியால் களைத்துப் பட்டினியுற்றுப் பரதவிக்கின்றார் என்று கேட்டபோதெல்லாம் உளம் பகீர் என நடுங்குறுவார். பசி எனில் வள்ளற் பெருமானின் உள்ளம் நடுங்கும்.

**வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்**
**வாடினேன் பசியினால் இளைத்தே**
**வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த**
**வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்**
**நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்**
**நேர்உறக் கண்டுளந் துடித்தேன்**
**ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்**
**சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.**

**எட்டாரும் பொருளே திருச்சிற்றம் பலத்தே**
**இலகிய இறைவனே உலகில்**
**பட்டினி உற்றோர் பசித்தனர் களையால்**



RangaRakes tamilnavarasam.com

பாதவிக் கின்றனர் என்றே
ஒட்டியபிறரால் கேட்டபோ தெல்லாம்
உளம்பகீர் எனநடுக் குற்றேன்
இட்டஇவ் வுலகில் பசிஎனில் எந்தாய்
என்னுளம் நடுங்குவ தியல்பே.

-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 62:22

பசிக்கொடுமையை வள்ளற்பெருமான் சொல்லுவது போல் இனியொருவர் சொல்ல முடியாது. பசி தவிர்த்தலின் சிறப்பையும் அவர்கள் சொல்லுவது போல் இனி யொருவர் சொல்ல முடியாது. ஆற்றா மாக்களின் அரும்பசி களையும் பேரறமாகிய சீவகாருண்ய ஒழுக்கமில்லாதாரைப் 'பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர், பழங்கஞ்சியாயினும் வழங்கவும் நினையீர்', என்று பாடுவர்; சாடுவர்.

வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத் தாள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண் டொட்டியுள் இருந்தீர்
பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோல் கிளைத்தீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.

-6 (முடி) உலகர்க்கு உய்வகை கூறல் 6

பசி தவிர்க்கும் அறமாகிய சீவகாருணிய ஒழுக்கத்தை இங்ஙனம் தமது சொல்லாலும் பாட்டாலும் எழுத்தாலும் வளர்த்த அடிகள் அதனைச் செயலில் நடத்திக்காட்ட அமைத்ததே சத்திய தருமச்சாலையாம். "ஔவையாரும் திருவள்ளுவரும் கொலை புலை தவிர்த்தல் நன்றென்று கூறினர். கூறியதோடு நின்றாரேயன்றி அவற்றை நிலை நிறுத்தற்கு அவர்கள் ஏதும் செய்திலர். கூறியதோடமையாது அவற்றை நிலை நிறுத்தற்கு முயன்று பல செயல்களைச் செய்த வடலூரார் போல் வேறு யாருளர்" என்று தண்டபாணி சுவாமிகள் பாடுவர்.

கொலையும்புலையும் தவிர்தனன்றென் றௌவை கூறியசொல்
மலையிலக்கென் றவள்பின்னோனும் சொற்றனன் மாநிலத்தில்
நிலைபெறச்செய்ய வடலூரன்போல் முயல்நெஞ் சுற்றிலார்
தலையினிற் கங்கைவைத்தோன் அருளோர்ந்த சரதமிதே.

-சீவகாருண்ய ஒழுக்கம், ச.மு.க.பதிப்பிற்குத் தண்டபாணி
சுவாமிகள் அளித்த சாற்றுக்கவி.

.... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

பராவுகா ருணியதீர்க்கம் பகவனா தியின்பாலீன்ற
நிராசையோர் முதலோர்நூலி நிகழ்த்தினா ரியற்றிலாறே.



RangaRakes tamilnavarasam.com

-புலவர் புராணம், கண்கண்ட புலவர் சருக்கம் 18

## சத்திய தருமச்சாலை

### பெயர் சூட்டலும் இடம் தேர்தலும்

தருமச்சாலை நிறுவுதற்குரிய முயற்சிகளைச் சங்கம் நிறுவிய இரண்டாண்டுகளுக்குப் பின் 1867 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் அடிகள் மேற்கொண்டார்கள். அதுகாலை கருங்குழியை உறைவிடமாகக் கொண்டிருந்தார்களேனும் வடலூர்க்கு அடுத்தாற்போல் அதன் வடபுறமுள்ள பெருவெளியே தருமச்சாலையை அமைக்கத்தக்க இடமென அடிகள் முடிவு செய்தனர். அவ்விடத்தைத் தேர்ந்தெடுத்த காரணம் அது இருபெரு நெடுஞ்சாலைகள் கூடுமிடமென்பதே. இதனை அறிந்ததும் அவ்விடத்தின் நிலங்களுக் குரியவர்களனைவரும் கூடி நாற்பது பேர் கையொப்பமிட்டு (இருபத்து மூவர் கீறல், பதினெழுவர் கையொப்பம்) எண்பது காணி நிலத்தை 2-2-1867 அக்ஷய வருஷ தைமீ 22உ அடிகட்குத் தருமச்சாலை கட்டுவதற்கென இனாமாக எழுதிக்கொடுத்தனர். அவ்வினாம் பத்திரத்தைக் கீழே காண்க.

வடலூர்க் குடிகள் அடிகளுக்குச் சாலைக்காக எழுதிக் கொடுத்த இனாம் பத்திரம்

யிதில் கண்டுயிருக்கற நிலங்களை சமரச வேத தர்ம்ம சாலைக்காகயினும் குடுக்கப்பட்டு இதுனடியில் கையெழுத்து வைக்கப்பட்டவர்கள் விவறம்.

2-2-67 வருஷ
வையித்தினாதய்யர் கையெழுத்து.
சிவசாமி அய்யர் கைஎழுத்து.
ஆதி பசி{68} கயி எழுது.
{68. பசி-படையாச்சி என்பதன் சுருக்கம்.}
மாரி பசி கையெழுத்து.
-இந்த கீறல் மஞ்சக்கொல்லை னான் கைனாட்டு.
அறுனாசல செட்டி கையி எழுத்து.
-இந்த கீறல் பரிய பசி கைனாட்டு.
-இந்த கீறல் சின்னான் சின்னபயல் கைனாட்டு.
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
வெங்கடாசலபதி பசி கெயிழுத்து.
-இந்த கீறல் தம்பி பசி கைனாட்டு.
-இந்த கீறல்... ... பசி கைனாட்டு.
னாறாயணன் பசி கைஎழுத்து.
... ... ... ... ... முது.
... ... ... ... ... பசி எழுது.
... ... ... ... ... பசி கையெழுத்து.
முத்து பசி காயிழத்து.
சின்னதம்பி பசி கையிழுத்து.



RangaRakes tamilnavarasam.com

-இந்த கீறல் மொட்டக்காளை சேபெருமாள் கைனாட்டு.
-இந்த கீறல் பொன்னபசி தம்பி சின்னது பசி கைஎழுத்து.
பொந்தயி சேபெருமான் அனுமதியில் முத்து பசி கையி எழுத்து.
... ... ... ... கை எழுத்து.
-இந்த கீறல் சேவிகான் கைனாட்டு.
-இந்த கீறல் சமட்டிபாலன் கைனாட்டு.
-இந்த கீறல் சேபெ பெருமான் கைனாட்டு.
-இந்த கீறல் பொன்ன பசி கைனாட்டு.
இந்த வெங்கடாஜல னான் கைனாட்டு.
-இந்த கீறல் வய்யாபுரி... ...யன் கைனாட்டு.
கொமறசாமி படயாசி கையி யெழுத்து.
-இந்த கீறல் பூசாரி ஆனை பசி கைனாட்டு.
றாமசாமி க எது.
-இந்த கீறல் பூசாரி சேவி கையெழுத்து.
-இந்த கீறல் குப்ப பசி கைனாட்டு.
-இந்த கீறல் அழகன் சம்மட்டி கைனாட்டு.
-இந்த கீறல் பெரிய தம்பி கைனாட்டு.
-இந்த கீறல் சின்னசேபெருமா பசி அனுமதியில் ஷெயார் மகன் அரிய
புத்திர பசி கைநாட்டு.
-இந்த கீறல் மொட்டை வெங்கிடாசல பசி மகன் றாமசாமிக்காக
கார்டின் ஷெயார் பெண்சாதி அங்கம்மாள் கைநாட்டு.
-இந்த கீறல் பெரியகுட்டி வெங்கிடாசலம் கைனாட்டு.
-இந்த கீறல் பிறமன் மகன் விடத்திறன் கையினாட்டு.
-இந்த கீறல் சின்னறாமன் கயினாட்டு.

வடலூர்க் குடிகள் சுவாமிகளுக்கு எழுதிக் கொடுத்த
இனாம்பத்திரம் முற்றிற்று.

இவ்இனாம் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட நாள் 2-2-1867. அவ்விடத்தில் தருமச்சாலை தொடங்கப்பட்ட நாள் 23-5-1867. சாலை தொடங்குவதற்கு மூன்று திங்களுக்கு முன்னரே எழுதப்பட்ட இப்பத்திரத்தில் சாலையின் பெயர் சமரச வேத தருமச்சாலை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சாலையின் பெயர், இடம் முதலானவற்றைப் பல திங்களுக்கு முன்னரே அடிகள் திட்டமிட்டு அமைத்திருந்தார்களென்பது இதனாற் பெறப்படும்.

**சமரசவேதசன்மார்க்க சங்கம்** எனச் சங்கத்திற்குப் பெயரிடப்பட்டது போன்றே சாலைக்கும் தொடக்கத்தில் சமரச வேத தருமச்சாலை எனப் பெயரிடப்பட்டது. பின்னாளில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை என மாற்றப்பெற்றது. சாலையின் தொடக்கவிழா அழைப்பிதழிலும் தொடக்கவிழாவன்று வெளியிடப்பட்ட சீவகாருணிய ஒழுக்க விளம்பரத்திலும் சாலையின் பெயர் சமரச வேத தருமச்சாலை என்றே கூறப்பட்டுள்ளது. சங்கத்தின் பெயரை ஒட்டியே சாலைக்கு இப்பெயர் இடம்பெற்றது. அடிகளது பாடலொன்று சாலையை சமரச வேத சன்மார்க்க சங்கச் சாலை' எனக் கூறுகிறது.

**வேலைஅப் பாபடை வேலைஅப் பாபவ வெய்யிலுக்கோர்**



RangaRakes tamilnavarasam.com

**சோலைஅப் பாபரஞ் சோதிஅப் பாசடைத் துன்றுகொன்றை**
**மாலைஅப் பாநற் சமரச வேதசன் மார்க்கசங்கச்**
**சாலைஅப் பாஎனைத் தந்தஅப் பாவந்து தாங்கிக்கொள்ளே.**

**-6(இடை) தனித்திருத்தொடை. (2) 3.**

## முன்னேற்பாடுகள்

தருமச்சாலை தொடங்குவதற்கு விரிவான முன்னேற்பாடுகள் சன்மார்க்க சங்கத்தாரால் செய்யப்பட்டன. பிரபவ வருஷ வைகாசி மீ 11 உ வியாழக்கிழமையன்று சாலையைத் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டது. மண் சுவர் எழுப்பி விழல் வேய்ந்து தற்காலிகமாக தருமச்சாலைக்கு ஒரு கட்டிடத்தைக்கட்டி அதில் வைகாசி மீ 11உ அன்னம்பாலிக்கத் தொடங்குவதென்றும் அன்றே சாலையின் நிலையான சங்கற் கட்டிடங்களுக்கும் கிணறு முதலியவற்றிற்கும் அடிப்படை யிடுவதென்றும் முடிவு செய்யப்பெற்றது. வைகாசி 11 தொடக்க விழாவன்று மூவாயிரம் பேராவது கூடுவரென்று எதிர்பார்த்தனர். அன்றைய செலவு முழுவதையும் சாலை அபிமானிகளாகிய சங்கத்தவர்களே பகிர்ந்து கொள்வதென்று ஏற்பாடு செய்யப் பெற்றது. இம்முன்னேற்பாடுகளைக் குறித்துச் சங்கத்தாருள் ஒருவராகிய மு.அப்பாசாமி செட்டியார் சாலை அபிமானிகளுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். ஆது வருமாறு:

<u>உ</u>

அன்புந் தயவுமுள்ள ஐயா வந்தனம்.

நாம் ஆன்ம லாபத்தைப் பெற்றுக்கொள்ளூ நிமித்தம் கடவுள் சம்மதப்படி யேற்படுத்திக் கொண்ட சமரச வேத தருமச் சாலையின் சங்கற் கட்டடங்களின் அஸ்திவாரங்களும் கிணறு குளம் கேணி முதலிய நீர்நிலை யெடுபுகளும் தற்காலம் இலேசிலே நம்மாற் கட்டுவித்துக்கொண்ட விழன் மேய்ந்த மண் கட்டடச் சாலையில் ஒருசார் ஆகார தரும விருத்தியும் பிரபவவருஷ வைகாசி மீ கௌ குருவாரம் உதயகாலம் சிங்க லக்கினத்தில் துவக்கஞ் செய்வதாகத் தீர்மானித்துக் கொண்டபடி அன்றைய தினத்தில் துவக்கும்போது மூவாயிரம் சனங்களுக்குக் குறையாமல் கூடுமென்று தோற்றுகின்றது. ஆகையால் அத்தினத்தில் செல்லுகின்ற செலவு முழுவதும் இந்தத் தருமச்சாலையை யபிமானித்த நாமனைவரும் பாகஞ் செய்துகொண்டு செலுத்துவோமாக.

பிரபவ வருஷ — சமரச வேத தருமச்சாலைத் தலைவராகிய சிதம்பரம் இராமலிங்கப் பிள்ளையவர்கள் அநுமதிப்படி ஷெ தருமச்சாலையை நடத்துகின்ற சமரச வேத சன்மார்க்க சங்கத்தாரில் ஒருவராகிய

மு. அப்பாசாமி செட்டி



RangaRakes tamilnavarasam.com

சாலையின் தொடக்க விழாவை நடத்துவதற்குச் சங்கத்தார் எங்ஙனம் முன் ஏற்பாடுகள் செய்து கொண்டன ரென்பது இச்சுற்றறிக்கையால் நன்கு விளங்குகிறது. கூடலூர் அன்பர் கூ.துரைசாமி என்பவர் அடிகட்கு எழுதிய கடிதமொன்றில் "வைகாசி மீ ககஉ நடக்கப்போகிற அன்னதானத்திற்குச் சுமார் மூன்றுக்குமேல் நெல் வண்டிகளும் ஒரு வண்டி காய்கனிகளுமாக நான்கு வண்டி தயாராகுமென்று நினைக்கிறேன்" என்றேழுதுகிறார். விழா ஏற்பாடுகளின் அளவை இதனாலும் அறியலாம்.

## தொடக்க விழா அழைப்பு

தொடக்க விழாவுக்கு இரு வேறு வகை அழைப்பிதழ்கள் எழுதப்பட்டன. ஒன்று சங்கத்தார் பெயரால் பொதுவாக எல்லார்க்கும் அனுப்பப்பட்ட அச்சுப்பத்திரிகை. மற்றொன்று அடிகளின் பெயரால் துறவிகளுக்கு எழுதப்பட்ட அழைப்பிதழ்.

சங்கத்தார் பெயரால் எல்லார்க்கும் அனுப்பப்பட்ட அச்சுப் பத்திரிகை வருமாறு:

**உ**

**கடவுள் துணை**

அன்புந் தயையுமுடைய ஐயா வந்தனம்.

சிதம்பர தலத்திற்குச் சுமார் இருகாத வழி நடை யெல்லையில் கூடலூரைச் சார்ந்த வடலூரென்றும் பார்வதிபுர மென்றும் வழங்கப்படுகின்ற ஊருக்கு வடபுறத்தில் சென்ன நகரிலிருந்து கும்பகோணத்திற்குப் போகின்ற பெரிய பாட்டை கஉரு-வது மயிலில் மஞ்சகுப்பத்திலிருந்து விருத்தாசலம் போகின்ற பாட்டை உங-வது மயிலில் பிரபவவருஷ வைகாசி மீ ககஉ குருவாரம் உதய காலம் ருஷப லக்கினத்தில் சமரச வேத தருமச்சாலையில் செங்கற் கட்டடங்களுக்கு அஸ்திவாரங்களும் கிணறு குளம் கேணி முதலிய நீர்நிலை யெடுப்புகளுந் தற்காலம் அவ்விடத்தில் நூதனமாகக் கட்டப்பட்ட விழன்மேய்ந்த கண்கட்டடச் சாலையில் ஒரு சார் ஆகார தரும விருத்தியுந் துவக்கஞ் செய்யும்படி நிச்சயித்திருகின்றது.

ஆகலில் அந்தத் தினத்தில் தாங்கள் தங்கள் மனைவியர் புத்திரர் துணைவர் தந்தையர் தாயர் உறவினர் சிநேகர் முதலியவர்களோடும் வந்திருந்து அந்தத் தரும விசேஷ விருத்தியை விபவமாக நடத்துவிப்பீர்க ளென்று நம்புகின்றோம்.

பிரபவவருஷ
சித்திரை மீ யசஉ

சமரசவேதத் தருமச்சாலைத் தலைவராகிய சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்கள் கட்டளைப்படி ஷெ தருமச் சாலையை நடத்துகின்ற சமரச வேத சன்மார்க்க சங்கத்தாரில் ஒருவராகிய



RangaRakes tamilnavarasam.com

மு. அப்பாசாமி செட்டி.

அடிகளாரின் பெயரில் துறவிகளுக்கு அனுப்பப் பட்ட கடிதம் வருமாறு

உ

கடவுள் துணை

சாந்த சித்தமுடைய சாமி யவர்களுக்கு வந்தனம்.

சிதம்பர தலத்துக்குச் சுமார் இருகாத வழி நடை யெல்லையில் கூடலூரைச் சார்ந்த வடலூரென்றும் பார்வதிபுர மென்றும் வழங்கப்படுகின்ற ஊருக்கு வடபுறத்தில் சென்ன நகரிலிருந்து கும்பகோணத்திற்குப் போகின்ற பெரிய பாட்டை கஉரு-வது மயிலில் மஞ்சக்குப்பத்திலிருந்து விருத்தாசலம் போகின்ற பாட்டை உங-வது மயிலில் பிரபவவருஷ வைகாசிமீ ககஉ குருவாரம் உதயகாலம் சிங்க லக்கினத்தில் சமரச வேத தருமச்சாலையின் செங்கற் கட்டடங்களுக்கு அஸ்திவாரங்களும் கிணறு குளம் கேணி முதலிய நீர்நிலை யெடுப்புகளுந் தற்காலம் அவ்விடத்தில் நூதனமாகக் கட்டப்பட்ட விழன் மேய்ந்த மண் கட்டடச் சாலையில் ஒரு சார் ஆகார தரும விருத்தியுந் துவக்கஞ்செய்யும் படி நிச்சயித்திருக்கின்றது.

ஆதலால் அந்தத் தினத்தில் அவ்விடத்தில் அன்பர்களுடன் எழுந்தருளி அனுக்கிரகிக்க வேண்டு மென்று பிரார்த்திக்கின்றேன்.

சாலைத் தொடக்கவிழா அழைப்பே மிக அழகாக அமைந்திருக்கிறது. பழக்கமுள்ள துறவிகளை அடிகளே நேரில் கடிதமெழுதி அழைத்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கெல்லாம் சங்கங்கத்தின் பெயரால் அச்சிடப்பட்ட அழைப்பு அழைப்புக்கும் மிக்க வேறுபாடில்லை. அடிகள் துறவிகளுக்கு எழுதிய கடிதம் 'சாந்த சித்தமுடைய சாமியவர்களுக்கு வந்தனம்' எனத் தொடங்குகிறாது. 'அன்பர்களுடன் எழுந்தருளி அனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்' என முடிகிறது. இது துறவிகளுக்கு எழுத வேண்டிய முறைப்படி எழுதியதாகும். அச்சிட்ட அழைப்பு 'அன்புந் தயையுமுடைய ஐயா! வந்தனம்' என்று தொடங்கி, 'தாங்கள் தங்கள் மனைவியர் புத்திரர் துணைவர் தந்தையர் தாயர் உறவினர் சிநேகர் முதலியவர்களோடும் வந்திருந்து............நடத்துவிப்பீர்களென்று நம்புகிறோம்' என்று முடிகிறது. இது பொதுவாக எல்லார்க்கும் எழுதுதற்குரிய முறை. இரு வகை அழைப்பிலும் விளியும் வேண்டுகோளும் தரத்திற்கேற்ப மாறுபட்டதேயொழிய மற்ற உடபொருளில் மாறுபாடில்லை.

இனி, பத்திரிகை எழுதப்பட்டுள்ள அழகைக் காண்போம். 'சிதம்பர தலத்திற்குச் சுமார் இரு காத வழி நடையெல்லையில்' என்பதனால் (காதல்-10மைல்) சிதம்பரத்திலிருந்து சுமார் இருபது மைல் என்று சொல்லப்பட்டது. 'கூடலூரைச் சார்ந்த வடலூரென்றும் பார்வதிபுரமென்றும் வழங்கப்படுகின்ற ஊருக்கு

வடபுறத்தில்' என்பதனால் வடலூர் கடலூர் தாலுக்காவைச் சேர்ந்ததென்பதும் வடலூர் பார்வதிபுரம் என இரு பெயர்களை உடையதென்பதும் தருமச்சாலை அமைக்கப்பெறும் இடம் வடலூர்க்கு வடபுறத்திலுள்ள தென்பதும்சொல்லப்பட்டன. 'சென்ன நகரிலிருந்து கும்பகோணத்திற்குப் போகின்ற பெரிய பாட்டை கஉரு-வது மயிலில், மஞ்சக்குப்பத்திலிருந்து விருத்தாசலம் போகின்ற பாட்டை உஙு-வது மயிலில்' என மைல் கணக்குக் காட்டியிருப்பது ஒரு தனி அழகாம். சென்னை-கும்பகோணம் சாலை 'பெரிய பாட்டை' எனக் குறிக்கப்பட்டது. மஞ்சக்குப்பம்-விருத்தாசலம் சாலை அடைமொழியின்றிப் 'பாட்டை'எனக் குறிக்கப்பட்டது. தொலைவுக்குச் செல்லும் நெடுஞ்சாலையாதலின் (State Highway) முன்னது'பெரிய பாட்டை' எனப்பட்டது. பின்னது நெடுந்தொலைவு நீளாது ஒரு மாவட்டத்துக் குள்ளிட்டதாகலின் (District Road) 'பாட்டை' என அடைமொழியின்றி வழங்கப்பட்டது. இன்ன இன்ன சாலையில் இத்தனை இத்தனையாவது மைலில் என மைல் கணக்குக் காட்டியதால் அவ்விரு சாலைகளும் கூடுமிடம் என்பதைக் கூறாது கூறியதாம். 'செங்கற் கட்டிடங்களுக்கு அஸ்திவாரங்களும்' என்பது தருமச்சாலைக்கான நிலையான செங்கல் கட்டிடங்களுக்கு அஸ்திவாரம் போடுவதைக் குறித்தது. 'கிணறு குளம் கேணி முதலிய நீர் நிலை யெடுப்புகளும்' என்பது அவை வெட்டத் தொடங்கப்படுவதைக் குறித்தது. 'தற்காலம் அவ்விடத்தில் நூதனமாகக் கட்டப்பட்ட விழன் மேய்ந்த மண் கட்டடச்சாலையில் ஒருசார் ஆகார தரும விருத்தியுந் துவக்கஞ் செய்யும்படி நிச்சயித்திருக்கின்றது' என்பது தற்போது புதிதாக மண் சுவர் எழுப்பி விழல் வேய்ந்து கட்டப்பட்டுள்ள மண் கட்டிடத்தில் உனவு வழங்கும் அறம் தொடங்கபடுமென்பதைக் குறித்தது. கூடலூர் துரைசாமி என்னும் அன்பர் அடிகட்கு எழுதியதாக முன்னர்க் குறித்த கடிதத்தின் இறுதியில் பின் குறிப்பாக 'நோட்டீசு ஆயிரங்காப்பி தயாராகிறது. அதில் புரூபு காப்பி ஒன்று சமுகத்திக்கு அனுப்பியிருக்கிறது' என்று அவர் குறிப்பிடுவதால் சாலைத் தொடக்க விழா அழைப்பிதழ் ஆயிரம் படிகள் அச்சிடப்பட்டன எனத் தெரிகிறது.

## தருமச்சாலைத் தொடக்க விழா 23-5-1867

23-5-1867 பிரபவ வருஷ வைகாசி மீ கக உ வியாழக்கிழமை தருமச்சாலைத் தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது. முன்னரே கட்டி முடிக்கப் பெற்றிருந்த தற்காலிக மண் கட்டிடத்தில் அற்றார் அழி பசி தீர்க்கும் சீவகாருணிய ஒழுக்கப் பேரறம் தொடங்கப்பெற்றது. நிலையான செங்கற் கட்டிடங்கள் கட்டுதற்கு அடிப்படை நாட்டப்பெற்றது. கிணறு முதலியன தோண்டும் பணிகளும் தொடங்கப்பட்டன. நிலையான (நிரந்தரமான) செங்கற் கட்டிடங்களுக்கு அடிப்படை (அஸ்திவாரம்) இடுதல் ஒரு புறமும் முன்னரே கட்டி முடிக்கப் பெற்றிருந்த தற்காலிகச் சிறு கூரைக் கட்டிடத்தில் அன்னமளிக்கத் தொடங்குதல் பிறிதொரு புறமும் நிகழ, இங்ஙனம் கால்கோள் விழாவும் திறப்பு விழாவும் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் ஒருங்கே கொண்டாடப்பட்டது. கால்கோள் விழாவும் திறப்பு விழாவும் ஒருங்கே கொண்டாடப்பட்ட இது உலக வரலாற்றிலேயே முதல் நிகழ்ச்சியாகும். அதற்கு முன்னும் இப்படியொரு நிகழ்ச்சி நிகழ்ந்ததில்லை. அதற்குப் பின்னும் நிகழ்ந்ததில்லை. அடிகள் அருளியலொடு உலகியலும் வல்லவர். இவ்வுண்மை அவர்களது கடிதங்களாலும் கட்டளைகளாலும் செயல்களாலும் நன்கறியக் கிடக்கிறது. தமக்கு அருளியலோடு உலகியலையும் இறைவன் உணர்த்தியருளினான் எனப் பல பாடல்களில் அடிகளே குறிப்பிடுகின்றனர். அடிகள் எழுதத் திட்டமிட்டிருந்த நூல்களுள் 'உலகியல் விளக்கம்' என்பதும் ஒன்று.



RangaRakes tamilnavarasam.com

இவ்வளவு கூறுவானேன்? அடிகளின் உலகியல் திறத்தைக் காட்டத் தருமச் சாலைத் தொடக்க விழா ஒன்று போதுமே!

ஆயிரம் பத்திரிகை அச்சிட்டு வழங்கி, மூவாயிரம் பேருக்குமேல் எதிர்பார்த்து, மூன்றுவண்டி நெல்லுக்கும் ஒரு வண்டி காய்கனிகளுக்கும் ஏற்பாடு செய்து நடத்தப் பெறும் விழா எவ்வாறிருந்திருக்கும்? வடலூரைச் சுற்றிலும் பல மைல் தூரம் வரை தருமச்சாலை தொடங்குவதைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. தொடங்கப் போகிற சமரச வேத தருமச்சாலையில் தகுதியுள்ள ஒரு ஊழியனாகத் தன்னைச் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டி விருத்தாசலத்திலிருந்து ஓர் அன்பர் எட்டு நாள்களுக்கு முன்னரே (வைகாசி 2) அடிகட்கு நேரே கடிதமொன்றெழுதினாரெனில் விழாவைப் பற்றிய செய்தி பரவியிருந்ததைக் கூறவும் வேண்டுமோ? சுற்றுப்புற ஊர்களிலிருந்தும் தொலைவிலுள்ள சென்னை முதலிய இடங்களிலிருந்தும் பலர் வந்து குழுமினர். ஆயிரக்கணக்கானோர்க்கு அன்று அன்னம் பாலிக்கப்பட்டது. அடிகள் அருளிய ஜீவகாருணிய ஒழுக்கம் என்னும் நூலின் சில பகுதிகள் அன்றைய விழாக்கூட்டத்தில் படித்து விளக்கப்பட்டன. தருமச்சாலையின் நோக்கம் முதலியவற்றைத் தெரிவிக்கும் விளம்பரமொன்றும் வெளியிடப் பெற்றது, சீவகாருண்ய ஒழுக்க விளம்பரம் எனப் பெயரிய அது வருமாறு:

உ

**திருச்சிற்றம்பலம்**

**ஜீவகாருண்ய வொழுக்க விளம்பரம்**

கல்வி கேள்விகளாற் பகுத்தறியத் தக்க அறிவையுடையவுயர் பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்களனைவர்க்கும் வந்தனஞ் செய் தறிவிக்கை.

உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்களிந்தப் பிறப்பினா லடையத் தக்க பிரயோசனத்தைக் காலமுள்ள போதே யறிந்து அடையவேண்டும்.

அந்தப் பிரயோசனம் யாதோ வெனில்: எல்லா வண்டங்களையும் எல்லாப் புவனங்களையும் எல்லாப் பொருள்களையும் எல்லாச் சீவர்களையும் எல்லாச் செயல்களையும் எல்லாப் பயன்களையும் தமது பரிபூரண வியற்கை விளக்கமாகிய அருட் சத்தியால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற வியற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் பூரண வியற்கை யின்பத்தைப் பெற்று எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற வொப்பற்ற பெரிய வாழ்வை யடைவதே யிந்த மனிதப் பிறப்பினால் அடையத் தக்க பிரயோசன மென்றறிய வேண்டும்.

இயற்கை யின்பத்தைப் பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற அந்தப் பெரிய வாழ்வை எதனால் அடையவேண்டு மெனில்: கடவுளின் இயற்கை விளக்கமாகிய வருளைக்கொண்டே யடைய வேண்டுமென்றறிய வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளை எதனால் பெறக் கூடுமெனில்: ஜீவகாருணிய வொழுக்கத்தினாற் கடவு ளருளைப் பெறக் கூடு மல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாதென்று உறுதியாக அறிதல் வேண்டும்.

ஜீவகாருண்யத்தின் முக்கிய லக்ஷியமாவ தெது வெனில்: எந்த வகையாலும் ஆதாரமில்லாத ஏழைகளுக் குண்டாகின்ற பசியென்கின்ற பெரிய ஆபத்தை நிவர்த்தி செய்கின்றதே முக்கிய லக்ஷியமென்றறிய வேண்டும்.

ஆகலில் அந்த ஜீவகாருணிய வொழுக்கத்தை நடத்தும் பொருட்டு கூடலூர் ஜில்லா கூடலூர் தாலுகாவைச் சார்ந்த வடலூரென்கின்ற பார்வதிபுரத்தில் சமரச வேத தருமச்சாலை யென்றொரு தருமச்சாலை யேற்படுத்தப்பட் டிருக்கின்றது. அது பலர் சகாயத்தாலேயே நிலை பெற வேண்டுமாதலால், ஜீவதயையுடைய புண்ணியர்கள் தங்கள் தங்களாற் கூடியவரையில் பொருண் முதலிய உதவிசெய்து அதனால் வரும் லாபத்தைப் பாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.

உலக முழுவதும் ஆளுகின்ற சக்கிரவர்த்தி யாகிய அரசனுக்கும் உலக முழுவதும் ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க சுத்த வீரனுக்கும் மூன்றாசைகளையும் ஒழித்து உண்மையறிந்து பிரமா நுபவத்தைப் பெற்ற ஜீவன் முத்தர்களுக்கும் பசி நேரிட்டபோது மன மிளைத்தும் வலி குலைந்தும் அநுபவந் தடை பட்டும் வருந்துகின்றார்க ளென்றல், எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி நேரிட்டால் என்ன பாடுபடார்கள்! பசி அதிகரித்த காலத்தில் முகம் புலர்ந்து போகின்றது, உச்சி வெதும்புகின்றாது, பிரமரந்திரம் அடைபடுகின்றது, காது கும்மென்று செவிடுபடுகின்றது, கண் பஞ்சடைந்து எரிந்து நீருலர்ந்து குழிந்து போகின்றது, நாசி அழன்று கலை மாறி நீருலர்ந்து குழிந்து போகின்றது, நாக்கு நீருலர்ந்து தடிப்பேறுகின்றது, மெய்முழுதும் கருகி சக்தியற்று ஸ்மரணை கெடுகின்றது, வாக்கு குழறித்தொனி மாறுகின்றது, கைகளும் கால்களும் தடதடத்துச் சோர்ந்து தடுமாறுகின்றது, மலசல வழி வெதும்பி வேறுபடுகின்றது, உரோமம் வெறிக்கின்றது, பற்கள் கருகித் தளர்கின்றது, இரத்தமஞ் சலமும் சுவறுகின்றது, சுக்கிலம் தன்மை மாறி வறளுகின்றது எலும்புகள் குழைந்து நோக்கா டுண்டாகின்றது, நாடி நரம்புகள் வலியிழந்து மெலிந்து கட்டு விடுகின்றது, வயிறு பகீரென்கின்றது, மனசு தளர்ந்து நினைவு மாறுகின்றது, புத்திகெட்டு நிலை மாறுகின்றது, சித்தம் கலங்கித் திகைப் பேறுகின்றது. அகங்காரம் குலைந்து அச்ச முண்டாகின்றது, பிரகிருதி சுருங்குகின்றது, கடவுள் விளக்கமும் ஆன்ம விளக்கமும் மறைபடுகின்றது, தாபசோபங்கள் மேன்மேலுண்டாகின்றது.

இவ்வளவு அவத்தைகளும் ஏக காலத்தி லுண்டாகின்றது எல்லாச் சீவர்களுக்கும் பொதுவாகவே யிருக்கின்றது. ஆகாரமுண்டு பசி நீங்கிய தருணத்தில் தத்துவங்க ளெல்லாம் தழைந்து கடவுள் விளக்கமும் ஆன்ம விளக்கமும் அகத்திலும் முகத்திலும் வெளிப்பட்டு, திருத்தி யின்ப முண்டாகின்றது. ஆகலில் நாமனைவரும் எந்த வகையிலும் ஆதார மில்லாத ஏழைகளுக்குப் பசி நேரிட்டபோது மிகவும் கருணையுள்ளவர்களாகி நம்மாற் கூடிய மட்டில் அந்தப் பசி யென்கின்ற ஆபத்தைப் பொதுவாக நிவர்த்திப்பதற்கு முயற்சி செய்வதே ஆன்ம லாபமென்று அவசியம் அறிய வேண்டும்.

பிரபவவருஷ இங்ஙனம்



RangaRakes tamilnavarasam.com

வைகாசிமீ கக௨ சமரச வேத சன்மார்க்க சங்கத்தார்
பார்வதிபுரம் சமரச
வேத தருமச்சாலை

தருமச்சாலைத் தொடக்க விழாவிற்கு எழுந்தருளிச் சிறப்பிக்குமாறு சென்னையிலிருந்த முத்துகிருஷ்ண பிரம்மத்திற்கு (நிட்டானுபூதிக்கு உரை எழுதியவர் இவரே. பக்கம் 93 பார்க்க) அடிகள் திருமுக மொன்றைத் தபாலில் விடுத்திருந்தார்கள். அது வைகாசி 7 ஆம் நாளில் தான் அவருக்குக் கிடைத்தது. குறுகிய திருமுகம் கிடைத்ததால் அவர் வைகாசி 11 விழாவிற்கு வடலூர் வர இயலவில்லை. ஆயின் அவரது உடல் சென்னையிலும் உள்ளமும் உயிரும் வடலூரிலும் இருந்தன. அந்நிலையில் 'தருமச்சாலையின் தருமம் சூரிய சந்திரர் உள்ளவரை நடந்து வரும்படி வாழ்த்தியும் பாராட்டியும் அடுத்த நாளே அடிகட்கு ஒரு திருமுகம் வரைந்தார். பல இடங்களில் மஞ்சள் பூசி அனுப்பப்பெற்ற அவ்வருமைத் திருமுகம் வருமாறு

**உ**

**சுபமஸ்து**

அருணாசலீஸ்வரன்பேட்டை
பிரபவவருஷ வைகாசிமீ அ௨

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூப சாட்சாத்கார சிவ சுப்ரமண்யக் கடவுளினது வரப்பிரசாதத்தினால் திருஅவதாரஞ் செய்த என்னருமைக் கண்மணியாகிய சமரச உள்ளம் வாய்ந்த இராமலிங்கமே!

முதலாவது:- முன்னால் சித்திரைமீ முதல்தெய்தி எழுதிய கடிதத்திற்கு பதில் ஒன்றும் காணாமல், ஷெமீ உ.உ.உயில் எழுதி வரவிட்ட சமரச வேத தருமச் சாலையின் செங்கற் கட்டட முதலானதும் நாளதுமீ யக௨ ரிஷப லக்னத்தில் ஆரம்பஞ் செய்வதற்கு இவனும் வரவேண்டுமென்று குறிப்பிட்ட பத்திரிகை நாளதுமீ எ௨ பார்க்க சந்தோடமாயிற்று. ஆனால் இவன் வருவதற்கு நா ளில்லாமல் போனதால் நின்றுவிட லாயிற்று. முந்தி தெரிந்தால் ம ள-ள வேலு முதலியாருடன் வந்து விடுவேன் அல்லது தனித்தாவது வரலாம். அது என் பாக்கியம். அப்படிக் கிருந்தபோதிலும் என்னுடைய மங்கள வாழ்த்துதலானது ஷெமீ யக௨ முதலாய் ஷெ கட்டட முதலாகியதும் நிர்விக்கினமாய் முடிந்தேறி நித்தியோச்சவமாய் தங்கள் உள்ளன்பிற்றோன்றிய சங்கல்ப்படி எல்லா தருமங்களும் அபிவிர்த்தியாய் சந்திராதித்தர் உள்ளவரையிலும் நடந்து வரும்படி நமது சிவானந்தக் கருணா சமுத்திரத்தை பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றது.

உ-வது:- இவ்வண்ணம் இக்காலத்தில் இச் சிவ கடாக்ஷமிருந்து முடிப்பிக்குந் தன்மையுடையது அவரது அடியார்களின் பக்தியின் மகிமையேயாம். அது இத்தன்மை யுடையதென்று அளவிடப்படாதாதலாலும் ப்ரம்மத்தை நாடி துறந்தவர்களுக்கும் மற்றையோர்களுக்கும் இவ்வுலகத்தில் இப்போது தான் இது நூதனமாக ஏற்படுகின்ற அன்னசாலையும் வித்தியானந்தமும் சமரச பக்குவங்களுமான பெரும்பாக்கியமான சிவானந்த செல்வத்தின் அருமையும்


RangaRakes tamilnavarasam.com

மேன்மையும் யோக்கியமும் சிலாக்கியமும் இவ்வள வென்று சொல்வதற்கு ஏடும் போதாது. நாவுமில்லை. இச்சிறந்த தெய்வத் தன்மையுள்ள கீர்த்தியானது ப்ரம்மகியானம் அடையும் பொருட்டே இனி திரு அவதாரஞ் செய்யப் போகின்ற புமான்களுக்கும் உலக முள்ளளவும் உண் மகிட்சியைப் பூரணமாகச் செய்துவைக்குமாதலாலும் இவ்விஷயத்தைக் குறித்து தனங் கொடுத்தவர்களுடைய புண்ணியமும் இதைக் குறித்து வாக்கு சகாயமும் சரீர சகாயமும் செய்தவர்களுடைய உள்ளன்பின் பெருமையும் எத்தன்மைத் தோ வேதங்களாலும் அளவிடக்கூடாமை யென்று சகல சாஸ்திரமும் சொல்லுமாயின், ஒன்றுந் தெரியாதவனாகிய இவன் சொல்வதென்னை யுள.

ரு-வது:- இவனது தேகம் பட்டணத்திலும் உயிர் தங்களிரு தயத்திலும் அடியார்களுடைய அன்பிலும் நாளதுமீ யகஉ முதல் உட்புகுந்து ஷெ சிவ கைங்கரிய முடிந்தேறும் பொருட்டு நித்திய மங்கல வாழ்த்துதலோடு நிலைபெற்றிருக்கும். இனி யொருகால் அதைக் குறித்து மற்றவை ஆரம்பஞ் செய்யு நாளில் இரண்டு வாரத்துக்கு முன்னர் தெரிவிக்க சித்தமுண்டாயிர்ந்தால் இந்த தேகம் வந்து விடும். சித்த மறியவும். இதற்கு பதில் ஷெ யகஉ ஷெ கைங்கரியம் ஆரம்பித்து ஆனந்தங் கொண்டாடிய பின்னர் அச்செய்தியை இவனுக்கும் ஒரு வரியெழுதக் கோருகின்றனம்,

## <u>சுருதிப் பிரமாணம்</u>

## <u>ஞானவாசிட்டம்</u>

அறிஞர்க் குலகா னந்தமய மறியா தவருக் கிடர்மயமாஞ், செறிவு மிருளா மந்தகர்க்குச் செங்க ணுள்ளோர்க் கொளியாகும், பிரிவில் பிரம மனைத்துமென நாடிற் பிரம மவனேயாம், நறிய வமுதுண் டவனமுத மயத்தை நண்ணா திரானன்றே.

சிருட்டி தொட்டு இந் நாள் பரியந்த முண்டாயிருக்கும் வித்தியாசப் பிராந்தியை நீக்கும்பொருட்டு தங்களா லேற்படும் வித்தியானந்தமும் அன்னசாலையும் வியாச பகவான் சுகருக்கு (ப்ரபஞ்சமதே ப்ரம்மோக மென்று) போதிச்சது போலவே பெத்தனும் முத்தனுமாகிய யாவருடைய அறிவின் கண்ணைத் திறந்து காட்டி வருமென்று நம்புகிறேன். அதற்கு மேல் நாரதர் சுகருக்கு (ஏகமே வாத்வைதம் ப்ரம்மோக மென்று) போதித்தது போல் மேற் சொல்லிய பசி வுபாதி நீங்கி வித்தியானந்த முண்டாயிருக்கும் தருமச் சாலையில் நின்றும் சிவ புனிதர்கள் அப்பேறடைவார்கள் எனத் தோன்றுகின்றது. சுபமஸ்து.

**சிவகடாக்ஷந்துணை**

**திருச்சிற்றம்பலம்**

(மேல்விலாசம்)
சென்னைக் கடுத்த அருணா
சனீஸ்வரன்பேட்டை ஷெ — இங்ஙனம்
கோயிலுக்கு எதிர் உஉச- — தங்களன்பிற்



RangaRakes tamilnavarasam.com

வது கதவிலக்கமுள்ள திருமடத்திலிருக்கும் இன்னான்.

கூழியன்
திரு. முத்துக்கிருஷ்ணன்.

உ

கூடலூர் மகா-ள-ள-ஸ்ரீ முத்துகிருஷ்ண இராம
சாமி செட்டியார் குமாரர் அப்பாசாமி செட்டி
யார் மேல்....வையிட்டு மகானுபாவராகிய சிதம்
பரம் இராமலிங்க பிள்ளையார் சந்நிதானத்தில்
கொடுப்பது, அவ ரெங்கே யிருந்தாலும் தட்ச
ணமே அவரிடத்துக்கு அதிதீவரமாய்
அனுப்பி விடவும்.

அவசரம். சறூர் சறூர். cuddakire.

## தருமச்சாலையின் தொண்டு

ஆற்றாமாக்களின் அரும்பசிகளையும் பேரறம் தருமச் சாலையில் நாள்தோறும் நடந்து வந்தது. இன்றும் குன்றாது நடந்து வருகின்றது. சாதி சமய முதலிய வேறுபாடுகளுக்கு அங்கே சிறிதும் இடமில்லை. அடிகள் தமது 'சீவகாருணிய ஒழுக்க' நூலில் "பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும் எந்தச் சமயத்தாராயினும் எந்தச் சாதியாராயினும் எந்தச் செய்கையாராயினும் அவர்கள் தேச வொழுக்கம் சமயவொழுக்கம் சாதியொழுக்கம் செய்கையொழுக்கம் முதலானவைகளைப் பேதித்து விசாரியாமல் எல்லாச் சீவர்களிடத்திலும் கடவுள் விளக்கம் பொதுவாய் விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்துக்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்திப்பதே ஜீவகாருண்யம் "எனக்கட்டளையிட்டுள்ளனராதலின் சாலைக்கு வருவோர் அனைவரும் எவ்வித வேறுபாடுமின்றி உணவளிக்கப் பெற்றே சென்றனர், இன்றும் செல்லுகின்றனர்.

புலாலுண்போர் சன்மார்க்க சங்கத்திற்கு அருகராகார். புலாலுண்பவரை அடிகள் சங்கத்திற் சேர்த்துக் கொண்டதில்லை. எனினும் அவர்கள் 'பசி' என்று சாலைக்கு வந்துவிட்டனராயின் அப்புறவினத்தார்க்கும் உணவளிக்க அடிகள் திட்டஞ் செய்திருந்தனர். என்னை? புறவினத்தார்க்குப் பசிதவிர்த்தல் மாத்திரமே செய்க என இறைவன் தனக்குக் கட்டளையிட்டதாகக் கூறுதலின்.

**உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்**
**உறவினத்தார் அல்லர்அவர் புறஇனத்தார் அவர்க்குப்**
**பயிர்ப்புறும்ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக**
**பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே**
**நயப்புறுசன் மார்க்கம்அவர் அடையளவும் இதுதான்**
**நம்ஆணை என்றெனக்கு நவின்றஅருள் இறையே**



RangaRakes tamilnavarasam.com

மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில்நடம் புரியும்
மாநடத்தென் அரசேஎன் மாலைஅணிந் தருளே.

வன்புடையார் கொலைகண்டு புலைஉண்பார் சிறிதும்
மரபினர்அன் றாதலினால் வகுத்தஅவர் அளவில்
அன்புடைய என்மகனே பசிதவிர்த்தல் புரிக
அன்றிஅருட் செயல்ஒன்றும் செயத்துணியேல் என்றே
இன்புறஎன் தனக்கிசைத்த என்குருவே எனைத்தான்
ஈன்றதனித் தந்தையே தாயேஎன் இறையே
துன்பறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றுதிருப் பொதுவில்
தூயநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே.

கொடியவரே கொலைபுரிந்து புலைநுகர்வார் எனினும்
குறித்திடும்ஓர் ஆபத்தில் வருந்துகின்ற போது
படியில்அதைப் பார்த்துகவேல் அவர்வருத்தம் துன்பம்
பயந்தீர்த்து விடுகஎனப் பரிந்துரைத்த குருவே
நெடியவரே நான்முகரே நித்தியரே பிறரே
நின்மலரே என்கின்றோர் எல்லாரும் காண
அடியும்உயர் முடியும்எனக் களித்தபெரும் பொருளே
அம்பலத்தென் அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.

-6 அருள் விளக்கமாலை 71;72;73

இவ்வாறு வள்ளற்பெருமான் காட்டிய வழியில் தருமச்சாலை அது தோன்றிய நாள்தொட்டு இன்றுவரை நூற்றுமூன்று ஆண்டுகளாகச் சீவகாருண்யத் தொண்டாற்றி வருகிறது.

## கிளைச் சாலைகள்

தருமச்சாலையச் சார்ந்து வைத்தியசாலை, சாஸ்திரசாலை, உபகாரசாலை, விருத்திசாலை, உபாசானசாலை, யோகசாலை, விவகார சாலை ஆகிய சாலைகளை அதன் கிளைகளாக நிறுவ அடிகள் திட்டமிட்டிருந்தனர். இவைகளை நிறுவுவதைக் குறித்துச் சன்மார்க்க சங்கத்தவர்கள் செய்துகொண்ட கையொப்ப ஏற்பாட்டைப் பற்றிய சிறு குறிப்பொன்று வருமாறு.

சமரச வேத தருமச்சாலையைச் சார்ந்த வைத்தியசாலை, சாஸ்திரசாலை,உபகாரச்சாலை, விருத்திசாலை, உபாசனாசாலை,யோகசாலை, விவகாரசாலை-இவைகளைக் குறித்து சமரச வேத சன்மார்க்க சங்கத்தவர்கள் ஏற்படுத்திக்கொண்ட கையொப்ப ஏற்பாடு.

இக்கிளைச்சாலைகள் நிறுவப் பெற்றதாகத் தெரியவில்லை. நிறுவுதற்கான திட்டத்தை அடிகள் உளங்கொண்டிருந்தனர். சன்மார்க்க சங்கத்தார் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். ஆயினும் அவை நிறைவேறப்பெறாது தவிர்ந்து போயின.

## சீவகாருண்ய ஒழுக்கம்



RangaRakes tamilnavarasam.com

## சீவகாருண்யஒழுக்க நூலை அருளியது

அற்றார் அழிபசி தீர்த்தலையும் புலால் மறுத்தலையும் வற்புறுத்தி அடிகள் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்னும் நூலை எழுதியருளினரென்பது முன்னரே கூறப்பட்டது. தருமச்சாலைதொடங்குவதற்குமுன்னரே அடிகள் இந்நூலை எழுதத் தொடங்கினார். அக்ஷ்ய ஆண்டு சித்திரைத் திங்கள் எட்டாம் நாள்(19.4.1866)இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரந்த திருமுகத்தில் "குடும்பகோடம், பொதுவேதம், மெய்ம் மொழிப்பொருள் விளக்கம், சன்மார்க்க விளக்கம் என்பவைகளை நூதனமாக ஏற்படுத்தக் கருதியபடி வரையாக் கடிதப் புத்தகம் மூன்றென்னிடத்திருக்கின்றன. அவை அமையும். ஆதலில் அது விடயத்தில் உழத்தல் வேண்டா" என அடிகள் குறித்துள்ளனர். சீவகாருண்ய ஒழுக்கத்தின் தலைப்பு 'சன்மார்க்க விளக்கத்தின் முதற்பிரிவாகிய சீவகாருண்ய ஒழுக்கம் எனக் காணப்படுகிறது. 'இன்னும் இந்தச் சீவகாருணிய ஒழுக்கத்தின் விரிவைச் சமரச வேதத்திற் கண்டுகொள்ளலாம்' என இறுதியில் கூறப்படுகிறது. 'சமரச வேதம்' என்பது முற்குறித்த பொது வேதமே. சன்மார்க்க விளக்கம், பொது வேதம் இவற்றோடு சம்பந்தப்பட்ட இச் சீவகாருண்ய ஒழுக்கம் 1866க்கு முன்னரே எழுதத் தொடங்கப்பட்டதென்பது மேற்செய்திகளால் அறியப்படுகிறது. ஆ.பா தமக்குக் கிடைத்த மூன்று கையெழுத்துப் பிரதிகளில் முதற்பிரிவின் இறுதியில் 'பிரபவ சித்திரை மீ'{69} எனத் தேதிக்குறிப்பு காணபிபடுவதாகக் குறிப்பிடுகிறார். விபவ,சுக்கில ஆண்டுகளில்(1869) இறுக்கம் இரத்தின முதலியார் தருமச்சாலை சண்முகம் பிள்ளைக்கு எழுதிய கடிதங்களில் ஜீவகாருணிய வொழுக்கம் எழுதிமுடிந்ததும் முடியாததும் தெரிவிக்கும்படி கேட்டிருப்பதால் 1869ஆம் ஆண்டிலும் சீவகாருண்ய ஒழுக்கம் எழுதி முற்றுப் பெறவில்லை என்பது தெரிகிறது.

{69. அதாவது 1867}

சீவகாருணிய ஒழுக்கத்தின் முதற்பதிப்பு அடிகள் சித்திபெற்ற ஐந்தாண்டுகளுக்குப்பின் 1879இல் புதுச்சேரியில் பு.பெ கிருஷ்ணசாமி நாயகரால் அச்சிடப்பெற்றது. அதன் முகப்பேடு.

உ, அருட்பெருஞ்ஜோதி, திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்கள் திருவாய் மலர்ந்தருளிய சீவகாருண்ய வொழுக்கம். இஃது கூடலூர் இஸ்கூல் இனிஸ்பெக்டர் சீ.இரங்கசாமி பிள்ளை புதுவைக்கடுத்த வைத்திகுப்பம் மே.அப்பாசாமி நாயகர் இவர்கள் கேட்டுக் கொள்ள கலவை முத்தியாலு செட்டியார் குமாரர் சங்கரசெட்டிட்யார் முயற்சியில், பு.பெ.கிருஷ்ணசாமி நாயகரால் சபா.மாணிக்கபிள்ளை அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.எனக் காணப்படுகிறது. (அடுத்த பக்கம் காண்க) இம்முதற்பதிப்பு foolscap1\8 அளவில் 58 பக்கங்களை உடையது. இதனைப் பதிப்பித்த பு.பெ.கிருஷ்ணசாமி என்னும் அன்பர் முகப்புப் பக்கத்தின் பின்புறம் ஒரு அறிவிப்பை அச்சிட்டிருக்கிறார். நல்ல நூல்களை அச்சிட்டு வெளியிடாது சிலர் மறைப்பதைக் குறித்துத் தமது வருத்தத்தை அழகாகப் புலப்படுத்தும் அவ் அறிவிப்பு வருமாறு.

உ

கடவுடுணை

கல்வி அறிவு ஒழுக்கங்களாலான்ற
பெரியோர்களுக்கு அறிவிப்பு

புண்ணியவான்களாகிய சில தீர்க்கதரிசிகள் உலகோபகாரமாகச் செய்தருளிய நூல்களைச் சிற்சிலர் தாங்கள் மாத்திர முணர்ந்து நற்கதியடைய விரும்பிப் பொறாமையுள்ளத்தாராய் வெளிப்படுத்தக் கூடாதென்று சொல்லித் தாங்களுந் தெரிந்து கொள்ளாமல் சிதலுக்கிரை யாக்குவதற்கு வைத்திருக்கின்றார்கள். அப்படிச் செய்வது நீதியல்ல. ஆதலால் யாவரு முணர்ந்து நற்கதி யடைதற் கேதுவாக் கை நூல்களை வெளியிடுவதே உத்தமம்.

உ
அருட்பெருஞ்ஜோதி
திருவருட்பிரகாசவள்ளானென்னும்
சிதம்பரம்
இராமலிங்கபிள்ளையவர்கள்
திருவாய்மலர்ந்தருளிய

## சீவகாருண்யவொழுக்கம்

இஃது
கூடலூர் டிஸ்ட்ரீச்ட்-இஸ்கூல் இனிஸ்பெச்டர்
சீ. இரங்கசாமிபிள்ளை.
புதுவைக்கடுத்த
வைத்திகுப்பம்-மே-அப்பாசாமிநாயகர்
இவர்கள் கேட்டுக்கொள்ள
முத்தியாலுசெட்டியார் குமாரர்
ங்கரசெட்டியார் முயற்சியில்
கிருஷ்ணசாமிநயகரால்
.....................................
சபா மாணிக்கபிள்ளை அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது

மேலும் ஒருவன் றானீயன்ற பெண்மகவை யயலானுக்கீவ தன்றித் தானே மணஞ் செய்து கொள்வானா. இக்கருத்தைப் பற்றியே பெரியோர்கள் பின்சென்று நின்றார்கள் போலும்.

கஅளகூஆ
அன்பன் பு.பெ.கிருஷ்ணசாமி

சீவகாருண்னிய வொழுக்கமும் இன்னும் பற்பல நூல்களும் புதுவை ம-ள-ள-ஸ்ரீ கலவை சுப்பராய செட்டியார் காலேஜிலிருக்கும் பு.பெ.கிருஷ்ணசாமி நாயகரிடத்தில் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம்.

**'சன்மார்க்க போதினி' பாடசாலை-1867**



RangaRakes tamilnavarasam.com

தருமச்சாலை நிறுவிய அதே ஆண்டிலேயே (1867) அடிகள் சன்மார்க்க போதினி என்னும் பாடசாலையொன்றையும் நிறுவினார்கள். இப்பாடசாலை சிறுவர் முதல் முதியோர் வரை அனைவர்க்கும் கல்வி கற்பிப்பது, தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பிக்கும் மும்மொழிப் பாடசாலை, இப் பாடசாலையைப் பற்றிப் பின்வரும் குறிப்பொன்றே கிடைத்துள்ளது.

... ... ... ... ... ... ... .. .. .. .. .. .. .... .... .... .... ... .... .... ... ... ...
ஆபால விருத்தர்கள் வரையில் யாவர்க்கும் பயில்விக்கும் சன்மார்க்க போதினி என்கிற சாஸ்திர பாடசாலை யொன்று நியமிக்கப்படும்.

பார்வதிபுரம்
பிரபவவருஷ மீ உ

தமிழ் ஆரியம் இங்கிலீஷ் சன்மார்க்க போதினி........சாலையில் உபய கலாநிதிப் பெரும்புலவர் தொ. வேலாயுத முதலியார் முதலிய அறிஞர்களால்............

"இவ்வளவே, முன்னுள்ள ஏடு கிழிபட்டும் இடையிலும் பின்னுமுள்ளவை எழுதப் படாமலும் ஓர் அன்பர் கையெழுத்தில் இருக்கிறது" எனக் குறிப்பிட்டு இதனை ஆ.பா. திருவருட்பா திருமுகப்பகுதியில் எடுத்துக் காட்டியுள்ளார். 'பிரபவ' என ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. இது சாலை தொடங்கிய 1867 ஆம் ஆண்டாகும். சன்மார்க்க போதினி என்ற பெயரே அழகானது. சன்மார்க்கத்தைப் போதிக்கும் பாடசாலையாதலின் சன்மார்க்க போதினி எனப்பெயர் பெற்றது. இதைவிடப் பொருத்தமாக (அக்காலத்தில்) வேறு என்ன பெயரிடக் கூடும். கிளைச்சாலைகளுக்கான ஏற்பாடு பற்றிய குறிப்பில் 'சாஸ்திரசாலை' என்பதொன்று கூறப்படுகிறது. இங்கும் சன்மார்க்க போதினி பாடசாலை 'சன்மார்க்க போதினி என்கிற சாஸ்திர பாடசாலை' என்று கூறப்படுகிறது. கிளைச்சாலைகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்பட்ட சாஸ்திர சாலையே இச் சன்மார்க்க போதினி பாடசாலை எனக் கருதலாம்.

இப்பாடசாலையின் சிறப்புகள் இரண்டு. 1. பாலர் முதல் விருத்தர் வரை யாவரையும் பயிற்றுவது. 2. மும்மொழி பயிற்றுவது. "ஆபால விருத்தர்கள் வரையில் யாவர்க்கும் பயில்விக்கும்" எனக் கூறுவதால் சிறுவர் முதல் முதியோர் வரை அனைவரையும் பயிற்றுவிப்பதென்பது போதரும். பாலர் பள்ளிகள் முன்னாளிலும் உண்டு. ஆனால் விருத்தர்க்கும் (முதியோர்க்கும்) அதில் இடமேற்படுத்தியது தான் அடிகளின் தனிச் சிறப்பு. அந்நாளில் முதியோர் பள்ளிகள் இல்லை. தமிழ் நாட்டில் முதியோர் கல்வியை முதல் முதலில் ஏற்படுத்தியவர் வள்ளற்பெருமான் இராமலிங்க அடிகளேயாவர். இப் பாடசாலையின் இன்னொரு பெருஞ் சிறப்பு தமிழ் ஆரியம் ஆங்கிலம் ஆகிய மொம்மொழிகளும் கற்பிக்கப்படுமென்பது. மேற்குறிப்பில் 'தமிழ் ஆரியம் இங்கிலீஷ்' என்றதனை நோக்குக. 'தமிழ் ஆரியம் இங்கிலீஷ்' என்ற முறைவைப்பே அழகானது. தமிழ், தாய்மொழியும் நாட்டு மொழியுமாதலின் முதலில் வைக்கப்பட்டது. தமிழோடு ஒருபுடை ஒத்துத் தத்துவ நூல்கள் பலவற்றைத் தன்னகத்துக் கொண்டு பழங்காலந்தொட்டே வழங்கி வந்த ஆரியம் அதன் பின் வைக்கப்பட்டது. 'தமிழ்' என்பதன் உரையிலும், மெய்ம்மொழிப்பொருள் விளக்கத்திலும், பெரு விண்ணப்பத்திலும் தமிழின் சிறப்பைக் கூறுமிடத்து ஆரியத்தின் சிறப்பின்மையையும் கூறுவதைக்கொண்டு ஆரியத்தை அடிகள் அறவே



RangaRakes tamilnavarasam.com

வெறுத்தாரெனக் கருதிவிடலாகாது. தமிழை நோக்க, ஆரியம் சிறந்த தாகாதே யொழிய ஆரியம் அறவே சிறப்பில்லாததன்று. இதுவே அடிகளின் கருத்து. ஞான சாத்திர ஆராய்ச்சிக்கு வடமொழிப் பயிற்சி பெரிதும் உதவுவதாகும். இவற்றையெல்லாம் கருதியே அடிகள் தமது பாடசாலையில் ஆரியத்தையும் கற்பிக்க ஏற்பாடு செய்தனர். அரசாங்க ஆட்சி மொழியாகிய ஆங்கிலம் மூன்றாவதாக வைக்கப்பட்டது. நம் நாட்டவர் முன்னேற்றமடைதற்கு ஆங்கிலப் பயிற்சி இன்றியமையாதென்பதைக் கருதியே அடிகள் ஆங்கிலப் பயிற்சியளிப்பதற்கும் திட்டஞ் செய்தனர்.

தொழுவூர் வேலாயுத முதலியார் இப்பாடசாலைக்கு ஆசிரியராக அமர்த்தப்பட்டார். 'தொழுவூர் வேலாயுதமுதலியார் முதலிய அறிஞர்களால்' என்பதால் முதலியாரைத் தவிர வேறு சிலரும் பாடஞ் சொல்ல இருந்தனர் எனத் தெரிகிறது. வேலாயுதனார் பன்மொழி பயின்றவர். அவர் தமிழிலும் வடமொழியிலும் புலவரென்பதற்கு 'உபயகலாநிதிப் புலவர்' என்ற பட்டமே சான்று. அவர் ஆங்கிலமும் பயின்றவர். பெங்களூர் நீதி மன்றத்தில் சிலகாலம் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றியவர். கன்னடம், மகாராட்டிரம், இந்துஸ்தானி ஆகிய மொழிகளையும் அறிந்தவர். முதியோர் கல்விக்கும் மும்மொழிப் பயிற்சிக்கும் இடமாகிய இப்பாடசாலை நிறுவப்பெற்று, பின்பு நின்று போயிற்றோ அல்லது நிறுவப்பெறாமலேயே நின்று போயிற்றோ தெரியவில்லை. நிறுவப்பெற்று இன்று வரை நிலை பெற்றிருக்குமாயின் இன்று அது ஒரு பெரும் பன்மொழிக் கல்லூரியாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

**'சன்மார்க்க விவேக விருத்தி' பத்திரிகை தொடங்குதல்**

தமது சன்மார்க்க கொள்கைகளைப் பரப்புவதற்காகச் சன்மார்க்க விவேக விருத்தி என்னும் பத்திரிகையொன்றை அடிகள் இக்காலத்தில் தொடங்கினார்கள். சன்மார்க்க சங்கத்தார் இப்பத்திரிகைக்காகச் செய்த விளம்பரமும் கையொப்ப ஏற்பாடு வருமாறு.

உ

சற்குரவே நம:

**சன்மார்க்க விவேக விருத்தி**

விளம்பரம்

அறிவுடைய நண்பர்க்கு அன்பொடு வந்தனஞ் செய்து அறிவிக்கை.

நண்பர்களே!

உலகில் வழங்கும் பிறப்புகளுள் உயர் பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்ட நாமனைவரும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பொருளின் அனுபவங்களைக் காலமுள்ளபோதே அறிந்து அனுபவித்தல் வேண்டும். அங்ஙன மறிந்து அனுபவிப்பதற்குச் சன்மார்க்க விவேக விருத்தியே சாதனமாதலின், அதனையடைதற்குத் தக்க நன்முயற்சிக் கோர் முன்னிலையாகச் சன்மார்க்க விவேக விருத்தி யென்னும் பத்திரிகை யொன்று வழங்குவிக்கு நிமித்தம், இதனடியில் தனித் தனி நம்மா லியன்ற வளவில் மாதந்தோறும் பொருளுதவி செய்வதாகக்



RangaRakes tamilnavarasam.com

கையொப்பமிட்டு மேற்குறித்த வண்ணம் நமக்கும் பிறர்க்கும் பயன்படும்படி வழங்குவிப்போமாக.

இங்ஙனம்
சன்மார்க்க சங்கத்தார்.

| எண் | ஊர் பேர் | கையொப்பம் | துகை<br>ரூ. அ. பை. |
|---|---|---|---|
| ௧ | சிதம்பரம் | இராமலிங்கம் | க 0 0 |
| உ | கூடலூர் | வெங்கடேசய்யர் | க 0 0 |
| ங | கூடலூர் | மு.அப்பாசாமி செட்டி | க 0 0 |
| ச | கூடலூர் | துரைசாமி நாயகன் | க 0 0 |
| ரு | ஷெயூர் | சின்னசாமிப் பிள்ளை | 0 அ 0 |
| சூ | ஷெயூர் | கா.அய்யாசாமி | 0 அ 0 |
| எ | கூடலூர் | தேவநாத பிள்ளை | 0 ச 0 |
| அ | கூடலூர் | பபூ.சின்னதம்பி | 0 உ 0 |
| சூ | ஷெ | ம.வீராசாமி | 0 உ 0 |
| க0 | ஷெ | கா.இரத்தின ௧ | 0 உ 0 |
| கக | ஷெ | கா.மு.தேவநாயகம் | 0 அ 0 |
| கஉ | ஷெ | வி.இராஜா | 0 ச 0 |
| கங | ஷெ | இராமையர் | 0 உ 0 |
| கச | ஷெ | விசுவலிங்க முதலியார் | 0 உ 0 |
| கரு | புதுவை | குமரப்பசதாசிவசெட்டியார் | 0 அ 0 |
| கசூ | கூடலூர் | விஜயரகுநாதன் | 0 உ 0 |
| கஎ | ஷெ | அப்பாவுஞானியார் | 0 உ 0 |
| கஅ | புதுவை | மு.அண்ணா-சுப்புராய ௧ | 0 உ 0 |



RangaRakes tamilnavarasam.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கரு | புதுவை | F.குப்புசுவாமி நாயுடு | 0 | உ | 0 |
| உ0 | கூடலூர் | ந.சிவசிதம்பர செட்டி | 0 | ச | 0 |
| உக | புதுவை | ந.துரசாமி | 0 | அ | 0 |
| உஉ | திருப்பாதிருப்புலியூர் | அ.க.பரமானந்தன் | 0 | சூ | 0 |
| உங | திருமயிலை | முருகேசமுதலியார் | 0 | உ | 0 |
| உச | திருக்கோவலூர் | சுப்பிரமணியன் | 0 | உ | 0 |
| 25 | அரசூர் | இராஜகோபாலு | 0 | அ | 0 |
| 26 | ஆலப்பாக்கம் | சு.நயினாரெட்டி | 0 | அ | 0 |
| 27 | கூடலூர் | வரதராசன் | க | 0 | 0 |
| 28 | ஷெபுதுப்பாளய சிரஸ்ததார் | றாமச்சந்திர ழ: | 0 | அ | 0 |
| 29 | ஷெ நாஜர் | வா...............ரெட்டி | 0 | அ | 0 |
| 30 | கூடலூர் | கெ............தன் | 0 | உ | 0 |
| 31 | கூடலூர் | குமாரசாமிழ:தம்பி ஆறுமுகம் | 0 | உ | 0 |
| ஙஉ | கூ | ம.அரங்கநாதன் | 0 | ச | சூ |
| ஙங | புதுவை | கநகசபை | 0 | ச | 0 |
| ஙச | நெல்லி | கொமரகுரு | 0 | உ | 0 |
| ஙரு | சிதம்பரம் | ஆனந்தநாதசண்முகசரணாலயன் | 0 | உ | 0 |
| ஙசூ | கல்பட்டு | ராமலிங்கம் | 0 | உ | 0 |
| ஙஎ | சி.தருமச்சாலை | சண்முகபிள்ளை | 0 | உ | 0 |
| ஙஅ | க ஷெ | நமசிவாயன் | 0 | உ | 0 |
| ஙசூ | சி.வேட்டவலம் | அரங்கசாமி | 0 | உ | 0 |
| ச0 | வேட்டவலம் | அப்பாசாமிபண்டாரியார் | க | 0 | 0 |



RangaRakes tamilnavarasam.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சக | சிதம்பரம் | குழந்தைவேலு | 0 | உ | 0 |
| சஉ | சிதம்பரம் | பாவாடைப்பிள்ளை | 0 | உ | 0 |
| சங | சிதம்பரம் | ந.அருணாசலப்பரதேசி | 0 | உ | 0 |
| சச | பனப்பாக்கம் | ஆறுமுகம் | 0 | உ | 0 |
| சரு | பொலவநூர் | வேலாயுதம் | 0 | உ | 0 |
| சசு | பறங்கிப்பேட்டை | பரங்கிப்பேட்டைகாதர்சாயுபு | 0 | க | 0 |
| சஎ | வடலூர் | ஆதிப் படையாச்சி | 0 | உ | 0 |
| சஅ | ஒறத்தூர் | அண்ணாமலை நயினார் | 0 | உ | 0 |
| சகூ | திருநறுங்குன்றம் | சி.தானப்ப நயினார் | 0 | உ | 0 |

'இதோடு நின்றிருக்கிறது. இதில் தேதித் தகவல் ஒன்றும் இல்லை. இதன்கண்ணுள்ள 49 வகைப்பட்ட எண் ஊர் பேர் கையொப்பம் துகை முதலிய தகவல்களெல்லாம் சுவாமிகள் உள்பட அவரவர்கள் கையெழுத்திலேயே இருக்கின்றன. கையொப்பத்தில் முன்பின் உள்ள சிற்சில எழுத்துக்கள் தெளிவற்றிருப்பனவற்றைக் கூடியவரையில் யூகித்து இங்குப் பிரதி செய்திருக்கிறது'- என ஆ.பா. அடிக்குறிப்பெழுதியுள்ளார்.

பத்திரிகையைப் பற்றிய அறிவிப்பில் காலம் (வருடம் மாதம் தேதி) குறிக்கப்படவில்லையெனினும் தருமச்சாலை தொடங்கப்பெற்ற 23-5-1867க்குப் பின்னரே இது வெளியிடப் பெற்றிருக்க வேண்டும். கையொப்பக்காரர்களில் இருவர் (37,38) தங்களது இருப்பிடமாகத் தருமச்சாலையைக் குறிப்பிடுவதே போதிய சான்றாம். ஆதலின் பத்திரிகை தொடங்கப்பெற்ற காலம் 1867 ஆம் ஆண்டு எனக் கொள்ளலாம்.

பத்திரிகையின் பெயரும் அப்பெயரிடப் பெற்றதற்கான காரணமும் அறிவிப்பிலேயே அழகாகக் கூறப்பட்டுள்ளன. 'மாதந்தோறும் பொருளுதவி செய்வதாக' எனக் குறிப்பிட்டுள்ளதனால் இது திங்களிதழ் என்பது அறியப்படும்.

அறிவிப்பின் கீழ் 'இங்ஙனம் சன்மார்க்க சங்கத்தார்' என்று காணப்படினும் வள்ளற்பெருமானது ஆணையின் வண்ணமே அது வெளியானதென்பது தெளிவு. மேலும் முதற் கையொப்பக்காராக அடிகளே கையெழுத்திட்டு ஒரு ரூபாய் வரவு வைத்திருக்கின்றார்கள். வரவு வைக்கப்பட்டுள்ள தொகைகளில் பெரிது ஒரு ரூபாய். சிறிது ஓரணா. வரவுத்தொகைகளின் கூடுதல் பதினைந்து ரூபாய் ஒன்பதே முக்காலணா (ரூ.15-9-9). ஜமீன்தாரிலிருந்து பரதேசிவரை கையொப்பமிட்டுப் பொருளுதவி செய்திருக்கின்றனர். காதர் சாயபு என்ற முஸ்லிம் அன்பர் ஒருவரும் கையெழுத்திட்டு ஓரணா கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.



RangaRakes tamilnavarasam.com

தமிழ் நாட்டில் சென்ற நூற்றாண்டின் முதற்பகுதியில் தான் முதன்முதலாகப் பத்திரிகைகள் தோன்றின. முதன்முதலாகப் பத்திரிகைகலை வெளியிட்டவர்கள் கிறிஸ்தவப் பாதிரியார்களே. பாதிரியார்களைத் தொடர்ந்து இந்துக்கலும் பத்திரிகைகளை வெளியிடத்தொடங்கினர். வார இதழ், திங்களிரு முறை, திங்களிதழ் என்ற பல வகை இதழ்கள் தோன்றின. நூறு ஆண்டுகளுக்குமுன், பத்திரிகை தோன்றத் தொடங்கிய அந்தக் காலத்திலேயே அடிகளும் ஒரு பத்திரிகையைத் தொடங்கினார் எனில் அவர்களது ஆர்வத்தை அளவிட இயலுமோ? நூலாசிரியரும் உரையாசிரியரும் பதிப்பாசிரியரும் போதகாசிரியரும் ஞானாசிரியரும் அருட்கவிஞரும் ஞானியும் ஆகிய நமது பெருமான் பத்திரிகையாளரும் ஆவரன்றோ!

சன்மார்க்க விவேக விருத்தி திட்டமிடப்பட்ட ஏற்பாடுகளோடு நின்றுவிட்டதாகவே தெரிகிறது. வெளி வராமலே நின்றுபோன சன்மார்க்க விவேக விருத்தியை 1-2-1969 முதல் மீட்டும் தொடங்கி நாம் நடத்தி வருகிறோம்.

## அடிகள் சாலையில் உறைதல்

சாலை நிறுவப்பெற்ற பின் அதுவே அடிகளின் உறைவிடமாயிற்று. அதன்பின் அடிகள் கருங்குழியில் இல்லை. வெளியூர்களுக்குச் சென்று தங்கிய சிற்சில காலந்தவிர மற்றைக் காலங்களில் சாலையிலேயே இருந்தார்கள். 1867 முதல் 1870 வரை நான்காண்டுகாலம் சாலையிலேயே உறைந்தனர். அக்காலத்தில் நிகழ்ந்தவற்றைக் காணுமுன் அடிகளின் தோற்றம், உடை, உணவு, உறக்கம், பழக்க வழக்கங்கள், கொள்கைகள் ஆகியவற்றைக் காண்போம்.

## அடிகளின் தோற்றம், உடை, உணவு உறக்கம், பழக்க வழக்கங்கள் முதலியன

### தோற்றம்

தொழுவூர் வேலாயுத முதலியார் பிரம்ம ஞான சங்கத்தாருக்கு அளித்த வாக்குமூலத்தில் அடிகளின் தோற்றம், உடை, உணவு, பழக்க வழக்கங்களைப் பின்வருமாறு வருணிக்கிறார்.

In personal appearance, Ramalingam was a moderately tall, spare man-so spare, indeed, as to virtually appear a skeleton-yet withal a strong man, erect instature, and walking very rapidly; with a face of a clear brown complexion, a straight, thin nose, very large flery eyes, and with a look of constant sorrow on his face. Toward the end he let his hair grow long; and, what is rather unusual with Yogis, he wore shoes. His garments consisted but of two pieces of white cloth. His habits were execssively abstemious. He was known to hardly ever take any rest. A strict vegetarian, he ate but once in two or three days, and was then satisfied with a few mouthfuls of rice. But when fasting for a period of two or three months at a time, he literally ate nothing, living merely on warm water a little sugar dissolved in it.



RangaRakes tamilnavarasam.com

அடிகள் தோற்றப்பொலிவு மிக்கவர். பார்ப்பதற்கு எலும்புக் கூடெனவே தோன்றும் மிக மெலிந்த செந்நிற உடல், நடுத்தர உயரம், நிமிர்ந்த தோற்றம், அழகிய திருமுகம், நீண்ட மெல்லிய கூரிய அழகிய மூக்கு, ஒளிவீசும் பரந்த கண்கள், கருணை ததும்பும் பார்வை, இவையே அடிகளின் திருவுருவம். அடிகளின் திருவுருவை அவரருளே கண்ணாகக் கொண்டு காணின் அல்லால் இப்படியர், இந்நிறத்தர், இவ்வண்ணத்தர், இவர் இராமலிங்கர் என்றெழுதிக் காட்டொணாது. அடிகளின் திருமேனி நிழற்படத்திலடங்காத் திருமேனி, அடிகளைநிழற்படம் (Photo) எடுக்க முயன்றும் முடியவில்லை. நிழல் சாயாத் திருமேனியை நிழற்படம் எடுக்க இயலுமோ? விளக்கம் பின்னர்.

அடிகள் மெலிந்த உடலினர் என்பதற்குத் திருவருட்பாவிலேயே அகச்சான்றுகள் உள்ளன. தன் உடல் மெலிவையும் உள்ல மெலிவையும் அடிகளே கூறியருளுகின்றார்கள்.

வேகமுறு நெஞ்ச மெலிவும் எளியேன்றன்
தேக மெலிவும் தெரிந்தும் இரங்காயேல்
மாக நதியும் மதியும் வளர்சடைஎம்
ஏக இனிமற் றெனக்கார் இரங்குவரே.

கள்ள மனத்துக் கடையோர்பால் நாணுறும்என்
உள்ள மெலிவும் உடல்மெலிவும் கண்டிருந்தும்
எள்ளின் அளவும் இரங்கி அருளாயேல்
எள்ளும் உலகில் எனக்கார் இரங்குவரே.

-2, திருப்புகற் பதிகம் 1;2

கள்ளநெறி கொள்ளும் கடைநாயேன் என்னினும் நின்
வள்ளல் மலர்த்தாளே வழுத்துகின்றேன் என்னுடைய
உள்ள மெலிவோ டுடல்மெலிவும் கண்டும்அந்தோ
எள்ளளவும் எந்தாய் இரங்கா திருந்தனையே.

வெள்ள மருவும் விரிசடையாய் என்னுடைய
உள்ள விரிவும் உடல்மெலிவும் கண்டிருந்தும்
தள்ளரிய நின்னருள்ஓர் சற்றும் புரியாமே
கள்ளவினைக் கென்உளத்தைக் கைகாட்டி நின்றனையே.

-2, சிந்தைத் திருப்பதிகம் 4;7

அன்னையே என்றன் அப்பனே திருச்சிற்
றம்பலத் தமுதனே எனநான்
உன்னையே கருதி உன்பணி புரிந்திங்
குலகிலே கருணை என் பதுதான்
என்னையே நிலையாய் இருத்தஉள் வருந்தி
இருக்கின்றேன் என்உள மெலிவும்
மன்னும்என் உடம்பின் மெலிவும் நான் இருக்கும்
வண்ணமும் திருவுளம் அறியும்.

### -6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 115

**உடை**

அடிகள் வெள்ளாடைத் துறவி, தூய வெண்ணிற ஆடையே அடிகள் உடுத்துவர். கல்லாடை உடுத்ததில்லை. துறவுக்கோலத்திற்கு முதல் அறிகுறியாக இன்று கருதப்படுவது காவி உடை. காவி உடை கடின சித்தர்களுக்கே வேண்டுவது, அது போர்க் கொடி போன்றது, மூவாசைகளிலும் பற்று மிக்கவர்களாகிய கடுஞ்சித்தமுடையோர் கல்லாடைத் துறவு கொள்ளவேண்டும். வெள்ளாடை வெற்றிக்கொடி போன்றது. தத்துவத்தை வென்றோர்க்கு வெள்ளாடையே போதுமானது என்பது அடிகள் கருத்து. இக்கருத்துக்களைக்கொண்டே அடிகளின் உபதேசக் குறிப்பொன்று பின்வருமாறு.

மூன்றாசைகளில் விசேஷம் பற்றுள்ளவர்களாகித் தயவில்லாத கடின சித்தர்கள் சந்நியாசம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேல்படி குற்றமற்றவர்களுக்குச் சந்நியாசம் வேண்டுவதில்லை. சந்நியாசி காவி வேஷ்டி போடுவதற்கு ஞாயம்; தயவில்லாத கடின சித்தர்களாகையால் தத்து வாபாசமுள்ளது. தத்துவத்தைச் செயித்து தயவை நடத்துவதற்கு யுத்தக் குறி (அல்லது) அடையாளமாகத் தரிசிப்பது காவி. வெற்றியான பிறகு அடைவது தயவு. ஆதலால் வெற்றிக்கொடி வெள்ளை.

-உபதேசப்பகுதி, பக்கம் 22.

தமிழகத்தில் முன்னாளிற் கல்லாடை வழக்கில்லை. தமிழ்நாட்டு ஞானிகள் பலரும் வெள்ளாடைத் துறவியராகவே நிகழ்ந்தனர். சமய குரவர்களும் சந்தான குரவர்களும் வெள்ளாடைத் துறவிகளே. தவ வேடம், ஞானவேடம், சிவவேடம் என மூன்று வேடங்களைத் திருமூலர் கூறுகின்றார். ஒன்றிலாதல் கல்லாடையைக் குறிக்க வில்லை. கல்லாடைப் பழக்கம் பின்னாளில் புறச்சமயங்களிலிருந்து நம் சமயத்திற்கு வந்ததே. கோலம் வேண்டாத அகத்துறவிகள் வெள்ளாடை யோடேயே அந்நாளில் இருந்தனர். அடிகளும் அவ்வாறே.

'மெய்யுறக் காட்ட வெருவி வெண்துகிலால் மெய் எலாம் ஐயகோ மறைத்தேன்' (பிள்ளைப்பெருவிண்ணப்பம் 52) என்பது அடிகள் வெள்ளாடையினர் என்பதற்கு அகச்சான்றாகும். 'அவரது உடை இரண்டு வெள்ளை ஆடைகளே' His garments consisted but of two pieces of white cloth எனத் தொ.வே. கூறுவது புறச்சான்றாகும். வெள்ளாடையிலும், அடிகள் வழக்கமாக உடுத்துவது லாங்கிளாத் (Long cloth) என்னும் வகையே. இறுக்கம் இரத்தின முதலியார்க்கு விடுத்த ஒரு திருமுகத்தில் 'ஒன்று அல்லது இரண்டு லாங்கிளாத்து பீசு வாங்கி அனுப்பினால் அதன் கிரயத்தைப் பின்பு செலுத்திவிடலாம். இதற்கு பிரயாசம் வேண்டாம்' என்றும்; அடுத்த திருமுகத்தில் 'வருத்தம் பாராது வரவிடுத்த ஒரு பீசும் ஒன்பது லக்ஷம் பீசுகளாகக் கொண்டேன். இதுவே அமையும். இனி வருத்தம் எடுத்துக்கொள்ள வேண்டாம். பின்பு பார்த்துக் கொள்ளலாம்', என்றும் எழுதியுள்ளதே அகச்சான்றாம்.

**உணவு**



RangaRakes tamilnavarasam.com

இளமை முதலே அடிகள் உணவில் வெறுப்புடையவர் என்பது முன்னரே கூறப்பட்டது (பக்கம் 45). அடிகள் சிலகாலம் நாளும் ஒரு வேளையே உண்டனர். சிலகாலம் இருவேளை உண்டனர். நாளும் ஒரு போது உண்டதற்கு,

**கேளனந் தான்ஒரு போதுண் டனைமனக் கேதம்அற**
**நீளனம் தேடு முடியான் எதுநினக் கீந்ததென்றே**
**வேளனம் போல்நடை மின்னாரும் மைந்தரும் வேடிக்கையாய்**
**ஏளனம் செய்குவர் நீஅரு ளாவிடில் என்அப்பனே.**

-2, புறமொழிக்கிரங்கல் 1

என்ற பாடலும், சில காலம் இருபோது உணவு கொண்டனரென்
பதற்கு,

**இரவும் பகலும் தூங்கியஎன் தூக்கம் அனைத்தும் இயல்யோகத்**
**திசைந்த பலனாய் விளைந்ததுநான் இரண்டு பொழுதும் உண்டஎலாம்**
**பரவும் அமுத உணவாயிற் றந்தோ பலர்பால் பகல்இரவும்**
**படித்த சமயச் சாத்திரமும் பலரால் செய்த தோத்திரமும்**
**விரவிக் களித்து நாத்தடிக்க விளம்பி விரித்த பாட்டெல்லாம்**
**வேதா கமத்தின் முடிமீது விளங்கும் திருப்பாட் டாயினவே**
**கரவொன் றறியாப் பெருங்கருணைக் கடவுள் இதுநின் தயவிதனைக்**
**கருதும் தொறும்என் கருத்தலர்ந்து சுகமே மயமாக் கண்டதுவே.**

-6, (முடி) இறை இன்பக் குழைவு 8

என்ற பாடலும் அகச்சான்றுகளாம். ஒருபோதும் இருபோதும் உணவு கொண்ட பெருமான் பின்னாளில் இரண்டு மூன்று நாளைக்கொருமுறை உண்பராயினர். அரைவயிறும் உண்ணார். சில கவளங்களே கொள்வர். தொடர்ந்து இரண்டு மூன்று திங்களுக்கும் உண்ணாதிருப்பர். சிறிது சர்க்கரைக் கரைசலையே (வெந்நீரில் சர்க்கரை கலந்து) அருந்துவர். பின்னாளில் உணவை அறவே நீத்தனர்.

**அன்னம்உண அழைக்கின்றாய் தோழிஇங்கே நான்தான்**
**அம்பலத்தே ஆடுகின்ற அண்ணல்அடி மலர்த்தேன்**
**உன்னைநினைத் துண்டேன்என் உள்ளகத்தே வாழும்**
**ஒருதலைமைப் பெருந்தலைவர் உடையஅருட் புகழாம்**
**இன்அமுதில் என்னுடைஅன் பென்னும்நறுங் கனியின்**
**இரதமும்என் தனிக்கணவர் உருக்காட்சி எனும்ஓர்**
**கன்னல்உளே தனித்தெடுத்த தேம்பாகும் கலந்தே**
**களித்துண்டேன் பசிசிறிதும் கண்டிலன்உள்அகத்தே.**

**ஈங்குசிலர் உண்ணுகஎன் றென்னைஅழைக் கின்றார்**
**என்தோழி நான்இவர்கட் கென்புகல்வேன் அம்மா**
**ஓங்குநிலா மண்டபத்தே என்கணவ ருடனே**
**உவட்டாத தெள்ளமுதம் உண்டுபசி தீர்ந்தேன்**
**தேங்குழல்இங் கினிஎனக்குப் பசிவரில்அப் போது**
**செப்புகின்றேன் இப்போது சிலுகிழைத்தல் வேண்டா**



RangaRakes tamilnavarasam.com

**ஏங்கல்அற நீ அவர்க்குத் தெளிவிப்பாய் மற்றை**
**இருந்தவரும் விருந்தவரும் இனிதுபுசித் திடற்கே.**

**-6 (முடி) அனுபவமாலை 6;30**

என்னும் அனுபவமாலைப் பாடல்கள் பசிநீத்த நிலையின் அனுபவத்தைக் கூறுவனவாம்.

சோற்றிலே ஒருவனுக்கு விருப்பம் உண்டானால் அவனுடைய தவம் எல்லாம் ஆற்றிலே கரைத்த புளியைப் போலப்போகும் என்று பெருமான் கூறுவர்.

**சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடில் ஒருவன்**
**துன்னுநல் தவம்எலாஞ் சுருங்கி**
**ஆற்றிலே கரைத்த புளிஎனப் போம்என்**
**றறிஞர்கள் உரைத்திடல் சிறிதும்**
**போற்றிலேன் உன்னைப் போற்றிலேன் சுவையில்**
**பொருந்திய காரசா ரஞ்சேர்**
**சாற்றிலே கலந்த சோற்றிலே ஆசை**
**தங்கினேன் என்செய்வேன் எந்தாய்.**

**-6 (முன்) அவா அறுத்தல் 2.**

இது, சோற்றாசையற்ற நல்தவசியாகிய அடிகள் பிறர் குற்றம் தன் குற்றமாகக் கூறி விண்ணப்பிக்கும் பாடலாம். அடிகள் ஒருபோது உண்ட காலத்து, உச்சிப்போதிலேயே உன்பர். இருபோது உண்ட காலம் உச்சிப்போதும், இரவு முன்னேரமும் ஆகும். சத்துவ குணப் பொருள்களையே உணவில் கொள்வர். தூதுளையையும் கையாந்த கரையையும் அடிக்கடி சேர்த்துக் கொள்வர். வெந்நீரையே அருந்துவர். தண்ணீர் அருந்தார். அன்பர்களுக்கு உபதேசித்த நித்திய கரும விதிகளில் அடிகள் கூறும் உணவு முறைகளும் உண்ணும் முறைகளும் ஈண்டு அறியத்தக்கவை. அடிகளது உணவைப்பற்றிக் கூறும் போது, அடிகள் மரக்கறி உணவினர் என்பதைக் கூறவும் வேண்டுமோ? (A strict Vegetarian) என்பர் தொழுவூர் வேலாயுதனார்.

**உறக்கம்**

இரவு 15 நாழிகை முதல் 221/2 நாழிகை வரை (12-00 மணி முதல் 3-00 மணி வரை) மெல்லென உறங்கவேண்டும் என நித்திய கருமச் சிறப்பு விதியில் அடிகள் விதித்துள்ளனர். குடும்ப கோஷத்தில் ஐந்து நாழிகை உறக்கம் சொல்லப்பட்டுள்ளது.

**கண்வளர்ந் திடுதலைங் கடிகை மற்றைய**
**திண்வளர் பொழுதெலாந் தேசி கப்பிரான்**
**பண்வளர் திருவடிப் பணியும் எம்பிரான்**
**ஒண்வளர் பணிகலும் உஞற்றி வைகினான்.**

**-முயற்சிப்படலம் 57/**



RangaRakes tamilnavarasam.com

சித்திவளாகத்திற் செய்த உபதேசத்தில் 'தூக்கத்தை ஒழித்தால் ஆயுள் நீடிக்கும். ஒருவன் ஒரு நாளைக்கு இரண்டரை நாழிகை தூங்கப் பழக்கஞ் செய்வானானால் அவன் ஆயிரம் வருடம் வாழ்வான்' என அருளியுள்ளார்கள்.

நித்திய கரும விதியில் 71/2 நாழிகையும் (3 மணி நேரம்), குடும்ப கோஷத்தில் 5 நாழிகையும் (2மணி), சித்திவளாக உபதேசத்தில் 21/2 நாழிகையும் (1 மணி நேரம்) உறக்கத்திற்கு விதிக்கப்பட்டது. அடிகள் இளமையில் 3 மணி நேரமும், பின்பு 1 மணி நேரமும் உறக்கங்கொள்வாராயினர். பிற்காலத்தில் அறவே துயில் நீத்தனர். சாதகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறை இதுவாம். 'தூக்கம் வந்தபோதெல்லாம் பயத்தொடு படித்தேன் மற்று நான் எழுந்தபோதெல்லாம் தொந்தமாம் பயத்தால் சிவசிவ தூக்கம் தொலைவ தெக்காலம் என்றெழுந்தேன்' என்பது அடிகள் வாக்கு (பிள்ளைப் பெருவிண்ணப்பம் 33). 'தூக்கம் தொலைத்த துணையே' என இறைவனை விளிப்பர்.

**தூங்குகநீ என்கின்றாய் தூங்குவனோ எனது**
**துரைவரும்ஓர் தருணம்இதில் தூக்கமுந்தான் வருமோ**
**ஈங்கினிநான் தனித்திருக்க வேண்டுவதா தலினால்**
**என்னுடைய தூக்கம்எலாம் நின்னுடைய தாக்கிய்**
**ஏங்கலறப் புறத்தேபோய்த் தூங்குகநீ தோழி**
**என்னிருகண் மணிஅனையார் எனைஅணைந்த உடனே**
**ஓங்குறவே நான் அவரைக் கலந்தவரும் நானும்**
**ஒன்றான பின்னர்உனை எழுப்புகின்றேன் உவந்தே.**

**-6 (முடி) அனுபவமாலை 66.**

என்னும் அனுபவ மாலைப் பாடல் துயில் நீத்த நிலையின் அனுபவத்தைக் கூறுவதாம்.

## பழக்கவழக்கங்கள்

### முக்காடு

அடிகள் இடையில் உடுத்தும் ஆடையை முழங்கால் மறையுமளவிற்கே உடுத்துவர். மேலாடையை உடல்முழுதும் போர்த்தி யிருப்பர். தலையைச் சுற்றி முக்காடாக அணிந்திருப்பர்.

**கையுற வீசி நடப்பதைக் நாணிக்**
**கைகளைக் கட்டியே நடந்தேன்**
**மெய்யுறக் காட்ட வெருவிவெண் துகிலால்**
**மெய்எலாம் ஐயகோ மறைத்தேன்**
**வையமேல் பிறர்தங் கோலமும் நடையும்**
**வண்ணமும் அண்ணலே சிறிதும்**
**பையநான் ஊன்றிப் பார்த்ததே இல்லைப்**
**பார்ப்பனேல் பயமிகப் படைப்பேன்.**



RangaRakes tamilnavarasam.com

மெய்யுறக்காட்ட வெருவி மெய் எலாம் ஐயகோ, வெண்துகிலால் மறைத்தேன்' என்பதைக் காண்க. தலையையும் காலையும் எப்போதும் மூடியிருக்க (கவசித்திருக்க) வேண்டும் என்பது அடிகளின் கொள்கை, அதற்கேற்பத் தலையை முக்காடிட்டு மூடியும், காலுக்குச் செருப்பு (ஜோடு) அணிந்தும் இருப்பர்.

அடிகள் தலைமுடியை மழித்திருந்தார்களா அல்லது நீளவளர விட்டிருந்தார்களா என்பதனை உறுதியாகக் கூற இயலவில்லை. மீசை வைத்திருந்தார்களென்பது மட்டும் கருங்குழி ரெட்டியார் வீட்டிலிருந்த ஒரு பழைய படத்தால் தெரிகிறது. இப்போது அங்கு இருப்பது பழைய படத்தால் தெரிகிறது. இப்போது அங்கு இருப்பது பழைய படத்தைக் கொண்டு செய்த புதிய படம். மீசையை முழுமையாக முறுக்கி வளர்க்கவில்லை. ஓரங்களைக் கத்தரித்து விட்டிருந்தார்கள். மீசை விட்டிருப்பதால், தலையைச் சுத்தமாக மழிப்பதற்கில்லை. தாடி வைத்திருக்கவில்லை. 'கடைசி காலத்தில் முடியை நீள வளர விட்டிருந்தார்' (Toward the end he let his hair grow long) எனத் தொ.வே.கூறுவர். அடிகள் கைக்குட்டை ஒன்றை வைத்திருப்பர். அமர்ந்த நிலையிலுள்ள கருங்குழி ரெட்டியார் வீட்டுப் படத்தில் கைக்குட்டை வைத்திருப்பதனைக் காணலாம். கைக்குட்டையை இடையில் செருகியிருப்ப ரென்பது 'கைத்துகில் வீசி அயந்தருதெருவில் நடப்பதற்கஞ்சி அரைக்குமேல் வீக்கினன் எந்தாய்' என்பதனால் அறியப்படும்.

## கைகளைக் கட்டியிருத்தல்

அடிகள் கைகளை வீசி நடவார். கைகளைத் தொங்கவிட்டுக்கொண்டும் இரார். கைகளைக் கட்டிக்கொண்டே இருப்பர். அடிகளின் திருவுருவப் படங்கள் அனைத்தும் கைகட்டிய நிலையில் அமைந்திருப்பதைக் காணலாம்.

**கையுற வீசி நடப்பதை நாணிக்**
**கைகளைக் கட்டியே நடந்தேன்**

என்பது அடிகள் திருவாக்கு. கைகளைக் கட்டியிருந்ததன் காரணம் அடக்கங் கருதியேயாம்.

## திருவடி நிலைகள்

அடிகள் காலுக்குச் செருப்பு அணியும் வழக்கமுடையர். துறவிகள் பாதக்குறடு (மரத்தால் செய்யப்படுவது) அணிவது வழக்கம். அடிகளோ பாதக்குறடு அணியாது ஜோடு அணிவர். What is rather unusual with Yogis, he wore shoes என்பர் வேலாயுதனார். 'சுவாமிகள் அன்பர்கள் வேண்டிக் கொடுக்கும் சகலாத் பாதரக்ஷைகளை உபயோகிப்பது வழக்கம்' எனச் ச.மு.க. பதிப்பு சரித்திரக் குறிப்புகளிற் காணப்படுகிறது. இறுக்கம் இரத்தின முதலியார் அனுப்பி வைத்த காலணிகள் வந்து சேர்ந்தனவென்பதை அடிகளே தமது திருமுகமொன்றில் குறிப்பிடுகிறார்கள். "சி.தருமலிங்கப்பிள்ளையின் வசத்தில் அனுப்புவித்த கழல்களீரிரண்டும் பூணப்பெற்றனம்" என்பது அத்திருமுகத்திற் காண்பது. சுத்த தேகமுடைய ஞானிகளது திருவடிநிலைகளில் லிங்கத்தை வைத்தால் நெருப்புக்கு நிற்குமாம். அதனால் அவ்வுபயோகத்திற்காக அன்பர்கள் (மருத்துவப் பயிற்சி



RangaRakes tamilnavarasam.com

உடையவர்கள் போலும்) அடிகளது திருவடிநிலைகளை அவ்வப்போது தாம் எடுத்துக் கொண்டு, புதியதாக வாங்கிவைத்து விடுவராம்.

## அடிகளின் அடக்க ஒழுக்கம்.

அடிகள் அடக்கம் நிறைந்தவர்கள். அடிகளின் தோற்றமே அடக்கத்தைக் காட்டுகிறது. அடிகளின் திருவுருப்படத்தைப் பார்க்கும்போதே அவர்கள் ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் என்பது புலனாகும். எவ்வகையிலும் ஆரவாரத்தை அடிகள் விரும்பியதில்லை. பேரையும் புகழையும் கூட விரும்பவில்லை. எதிலும் அடக்கமாகவே இருக்க விரும்பினர். யாருக்கும் தெரியாமல் இருப்போம் என்றிருந்த என்னைப் பிறர் அறியத் தெருவில் இழுத்து விடுத்தது நின் அருட் செயலோ அன்றி மாயையின் செயலோ? என்று இறைவனிடம் விண்ணப்பிப்பர்.

**அவ்வண்ணம் பழுத்தவரும் அறிந்திலர்சற் றெனினும்**
**அறிந்தனம்ஓர் சிறிதுகுரு அருளாலே அந்தச்**
**செவ்வண்ணம் பழுத்ததனித் திருஉருக்கண் டெவர்க்கும்**
**தெரியாமல் இருப்பம்எனச் சிந்தனைசெய் திருந்தேன்**
**இவ்வண்ணம் இருந்தஎனைப் பிறர்அறியத் தெருவில்**
**இழுத்துவிடுத் ததுகடவுள் இயற்கைஅருட் செயலோ**
**மவ்வண்ணப் பெருமாயை தன்செயலோ அறியேன்**
**மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே.**

**-6 (இடை) தற்போத இழப்பு 1**

'நாடறியாதிருப்பம் என்றே நன்று நினைந்தொருசார் உள்ளிருந்த எனைத்தெருவில் இழுத்து விடுத்தது தான் உன் செயலோ பெருமாயை தன்செயலோ', 'அகத்திருந்த எனைப் புறத்தே இழுத்து விடுத்தது தான் ஆண்டவநின் அருட்செயலோ மருட்செயலோ', 'பிறர் சிறிதும் அறியாமல் இருக்க வேண்டும் என இருந்த என்னை வெளியில் இழுத்திட்டு வாடுகின்ற வகைபுரிந்த விதியை நினைந்து', எனப் பிற பாடல்களிலும் கூறுவர். தற்போத இழப்பு பத்துப்பாடல்களிலும் இது கூறப்பட்டுள்ளது.

அடிகள் வெய்யிலுக்குக் குடைபிடிக்க மாட்டார்கள். உடன் வரும் அன்பர்கள் எப்போதாவது அடிகளின் தலைக்கு மேல் குடையைப் பிடிப்பர். அப்போதெல்லாம் அடிகள் அஞ்சுவார். ஒரு சமயம் நண்பர்கள் சிலர் சேர்ந்து அடிகட்குச் சரிகை ஆடை ஒன்றை உடுத்தி விட்டனர். சரிகை வேட்டியை உடுத்துவதற்கு அடிகள் பயந்து நடுங்கினர். அடிகளின் பயத்தைக் கண்டு 'இப்படிப் பயப்படுகிறாரே' என்று நண்பர்கள் பயந்தனர். கைக்குட்டை கையிலிருந்தால் வீசி நடக்க நேரிடும் என்று அஞ்சி இடையில் செருகியிருப்பர்.

**நயந்தபொற் சரிகைத் துகில்எனக் கெனது**
**நண்பினர் உடுத்திய போது**
**பயந்தஅப் பயத்தை அறிந்தவர் எல்லாம்**
**பயந்தனர் வெய்யலிற் கவிகை**
**வியந்துமேற் பிடித்த போதெல்லாம் உள்ளம்**



RangaRakes tamilnavarasam.com

வெருவினேன் கைத்துகில் வீசி
அயந்தரு தெருவில் நடப்பதற் கஞ்சி
அரைக்குமேல் வீக்கினன் எந்தாய்,

-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 51

உயர்ந்த இருக்கையில் அமர்வதற்கு அஞ்சுவர். காலின் மேல் கால் வைத்து அமர்வதற்கு அஞ்சுவர். திண்ணை மீதிருந்து கீழே காலைத் தொங்கவிடவும் அஞ்சுவர்.

காட்டுயர் அணைமேல் இருக்கவும் பயந்தேன்
காலின்மேல் கால்வைக்கப் பயந்தேன்
பாட்டயல் கேட்கப் பாடவும் பயந்தேன்
பஞ்சணை படுக்கவும் பயந்தேன்
நாட்டிய உயர்ந்த திண்ணைமேல் இருந்து
நன்குறக் களித்துக் கால்கீழே
நீட்டவும் பயந்தேன் நீட்டிப்பே சுதலை
நினைக்கவும் பயந்தனன் எந்தாய்

-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணம் 67

இவ்வாறு அடிகள் எதிலும் ஆரவாரமின்றி ஒருவகை அச்சதோடேயே ஒழுகுவர்.

## அடிகளின் சீவகாருண்ய உள்ளம்

அடிகள் சீவகாருண்யத்தின் திருவுருவம். அடிகள் வேறு, சீவகாருண்யம் வேறன்று. அடிகளே சீவகாருண்யம். சீவகாருண்யமே அடிகள். சீவகாருண்யமே அடிகளது உயிர். சீவகாருண்யமாகிய உயிரை அடிகளது பொன்னுடல் தாங்கி நின்றது. அடிகளது திருவுள்ளம் சீவகாருண்யத்தையே எக்காலும் எண்ணியது. அடிகளது திருவாய் சீவகாருண்யத்தையே எக்காலும் பேசியது, பாடியது. அடிகளது திருக்கரங்கள் சீவகாருண்யத்தையே எக்காலும் செய்தன. அடிகளது எண்ணமும் சொல்லும் செயலும் சீவகாருண்யமாகவே விளங்கின. சீவகாருண்யமாகிய உயிர் உள்ளிருந்துகொண்டு அடிகளின் உடம்பையும் கருவி கரணங்களையும் சீவகாருண்ய மயமாக்கிற்று. சீவகாருண்யமே தன் உயிர் என்பதை அடிகளே அழுத்தந்திருத்தமாகப் புகல்வர். 'என் உயிர்தான் உயிர் இரக்கந்தான் ஒன்றதே இரண்டிலை', 'என்னையும் இரக்கம் தன்னையும் ஒன்றாய் இருக்கவே இசைவித்து', என்பன அடிகளின் திருவாக்குகள். 'இரக்கமே என் உயிர்' எனப் புகலும் அடிகள் இரக்கம் நீங்கின் என் உயிரும் நீங்கும் என்பர். 'இரக்கம் ஒருவில் என் உயிரும் ஒருவும், என் உள்ளத்து ஒருவனே நின்பதத்து ஆணை' என இறைவன் மீது ஆனையிட்டுரைப்பர்.

வருமுயிர் இரக்கம் பற்றியே உலக
வழக்கில்என் மனஞ்சென்ற தோறும்
வெருவிநின் அடிக்கே விண்ணப்பித் திருந்தேன்
விண்ணப்பஞ் செய்கின்றேன் இன்றும்



RangaRakes tamilnavarasam.com

**உருவஎன் உயிர்தான் உயிர்இரக் கந்தான்**
**ஒன்றதே இரண்டிலை இரக்கம்**
**ஒருவில்என் உயிரும் ஒருவும்என் உள்ளத்**
**தொருவனே நின்பதத் தாணை.**

**என்னையும் இரக்கந் தன்னையும் ஒன்றாய்**
**இருக்கவே இசைவித் திவ்வுலகில்**
**மன்னிவாழ் வுறவே வருவித்த கருணை**
**வள்ளல்நீ நினக்கிது விடயம்**
**பன்னல்என் அடியேன் ஆயினும் பிள்ளைப்**
**பாங்கினால் உரைக்கின்றேன் எந்தாய்**
**இன்னவா றெனநீ சொன்னவா றியற்றா**
**திருந்ததோர் இறையும்இங் கிலையே.**

**-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 97:100**

**கருணையே வடிவாய் விளங்கி,** பிறர்க்கு உற்ற துன்பங்களையெல்லாம் இறையருளால் தவிர்த்து அவர்க்கு இன்பம் நல்குவதும், புலை கொலை இரண்டும் அற்ற நெறியில் உலகெலாம் நடக்கச் செய்வதுமே அடிகளது இச்சைகள்.

**கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த**
**கடுந்துயர் அச்சமா திகளைத்**
**தருணநின் அருளால் தவிர்த்தவர்க் கின்பம்**
**தரவும்வன் புலைகொலை இரண்டும்**
**ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க**
**உஞற்றவும் அம்பலந் தனிலே**
**மருவிய புகழை வழுத்தவும் நின்னை**
**வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய்.**

**-6 (முன்) பிள்ளைச்சிறுவிண்ணப்பம் 22.**

கருணையே வடிவாய் என்ற சொற்களைக் காண்க. அடிகள் கருணையின் வடிவம், சீவகாருண்யத்தின் திருவுரு என்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ! உலகிலே உயிர்கள் படும் துன்பத்தை ஒரு சிறிதேனும் கண்ணால் பார்க்கவும் செவியால் கேட்கவும் அடிகள் சகிக்கமாட்டார்.

**மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்**
**வருத்தத்தை ஒருசிறி தெனினும்**
**கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்**
**கணமும் நான் சகித்திட மாட்டேன்**
**எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால்**
**இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்**
**நண்ணும்அவ் வருத்தம் தவிர்க்கும்நல் வரந்தான்**
**நல்குதல் எனக்கிச்சை எந்தாய்.**

-6 (முன்) பிள்ளைச்சிறுவிண்ணப்பம் 23.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார். பசியினால் இளைத்து வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்த ஏழைகளைக் கண்டு உளம் பதைத்தார். பிணியால் வருந்துகின்றோரைக் கண்டு உளம் துடித்தார். மானத்திற்கு அஞ்சி இரக்கவும் இயலாது நெஞ்சு இளைத்தவர்களைக் கண்டு தானும் இளைத்தார்.

**வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்**
**வாடினேன் பசியினால் இளைத்தே**
**வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த**
**வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்**
**நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்**
**நேர்உறக் கண்டுளந் துடித்தேன்**
**ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்**
**சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.**

-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 62

தன்னை அடுத்தவர், அயலார், உற்றார், உறவினர், நண்பர், பிறர் முகங்களில் இளைப்பைக் கண்டபோ தெல்லாம், அவர்கள் உள்ளம் வெதும்பிய வெதுப்பைப் பார்த்தபோ தெல்லாம் மயங்குவார், உள்ளங்கலங்குவார், பயந்து உள்ளம் பதைப்பார், இறைவனிடம் விண்ணப்பிப்பார்.

**விண்டபோ தகரும் அறிவரும் பொருளே**
**மெய்யனே ஐயனே உலகில்**
**தொண்டனேன் தன்னை அடுத்தவர் நேயர்**
**சூழ்ந்தவர் உறவினர் தாயர்**
**கொண்டுடன் பிறந்தோர் அயலவர் எனும்இக்**
**குறிப்பினர் முகங்களில் இளைப்பைக்**
**கண்டபோ தெல்லாம் மயங்கிஎன் னுள்ளம்**
**கலங்கிய கலக்கம்நீ அறிவாய்.**

**சீர்த்தசிற் சபைஎன் அப்பனே எனது**
**தெய்வமே என்பெருஞ் சிறப்பே**
**ஆர்த்தஇவ் வுலகில் அம்மையர் துணைவர்**
**அடுத்தவர் உறவினர் நேயர்**
**வேர்த்தமற் றயலார் பசியினால் பிணியால்**
**மெய்யுளம் வெதும்பிய வெதுப்பைப்**
**பார்த்தபோ தெல்லாம் பயந்தென துள்ளம்**
**பதைத்ததுன் உளம்அறி யாதோ.**

-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 9;10.



RangaRakes tamilnavarasam.com

வாழ்க்கையில் வறுமையால் நேர்ந்த சங்கடங்களால் வருந்தி இளைஞரும் முதியோரும், நண்பனிடம் சொல்லி ஆற்றிக் கொள்வோம் என அடிகளிடம் வந்து அவரவர் குறைகளை உரைப்பர். அடிகள் அவைகேட்டு நடுங்கி உள்ளம் உடைவர்.

**பரைத்தனி வெளியில் நடம்புரிந் தருளும்**
**பரமனே அரும்பெரும் பொருளே**
**தரைத்தலத் தியன்ற வாழ்க்கையில் வறுமைச்**
**சங்கடப் பாவியால் வருந்தி**
**நரைத்தவர் இளையர் முதலினோர் எனையோர்**
**நண்பன்என் றவரவர் குறைகள்**
**உரைத்தபோ தெல்லாம் நடுங்கிஎன் னுள்ளம்**
**உடைந்ததுன் உளம்அறி யாதோ.**

**-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 11.**

பல்லிகள் சகுனஞ் சொல்லும் போதெல்லாம் பிறர் துன்பத்தைக் கேட்கச் சொல்லுகின்றனவோ என மனம் நொந்து இளைப்பார். கோட்டான் கூவுந்தோறும் புலிக்குரல் கேட்ட பசுப்போல் அஞ்சுவார். கண்ணிமை, தோள் முதலிய உறுப்புகள் துடிக்குந்தோறும், ஐயோ பிறர்துயர் காட்டத் துடித்தனவோ என்று மயங்கி உள்ளம் உடைவார்.

**பல்லிகள் பலவா யிடத்தும்உச் சியினும்**
**பகரும்நேர் முதற்பல வயினும்**
**சொல்லிய தோறும் பிறர்துயர் கேட்கச்**
**சொல்கின் றவோஎனச் சூழ்ந்தே**
**மெல்லிய மனம்நொந் திளைத்தனன் கூகை**
**வெங்குரல் செயுந்தோறும் எந்தாய்**
**வல்லியக் குரல்கேட் டயர்பசுப் போல**
**வருந்தினேன் எந்தைநீ அறிவாய்.**

**நிறமுறு விழிக்கீழ்ப் புறத்தொடு தோளும்**
**நிறைஉடம் பிற்சில உறுப்பும்**
**உறவுதோல் தடித்துத் துடித்திடுந் தோறும்**
**உன்னிமற் றவைகளை அந்தோ**
**பிறர்துயர் காட்டத் துடித்தலோ என்று**
**பேதுற்று மயங்கிநெஞ் சுடைந்தேன்**
**நறுவிய துகிலில் கறைஉறக் கண்டே**
**நடுங்கினேன் எந்தைநீ அறிவாய்.**

**-6 (முன்) பிள்ளைபெருவிண்ணப்பம் 23;26.**

பல்லிகள் ஆந்தைகள் சொல்லுவது, தோள் துடிப்பது போன்ற சகுனங்கள் நேரிட்டால் அவற்றை நாம் நமக்கென்று எடுத்துக்கொள்ளுவோம். நமக்கு நன்மை வரப்போகிறது அல்லது தீமை வரப்போகிறது என்று எண்ணுவோம். ஆனால் அடிகளோ பிறர் துயரைக் காணவும் கேட்கவும் இச்சகுனங்கள் ஏற்பட்டனவோ,



RangaRakes tamilnavarasam.com

இங்கே இந்தச் சகுனம் உண்டாகிறதே, எங்கே யாருக்கு என்ன துன்பம் நேரிடப்போகிறதோ என்று எண்ணிக் கலங்குவார். அடிகள் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரன்றோ? பிறர்க்கறம் முயலும் பெரியோரன்றோ?

காக்கைகள் கரையக்கேட்டுக் கலங்குவார்; பருந்தின் கடுங்குரல் கேட்டு உளங்கலைவார்; ஆந்தை அலறக் கேட்டு அஞ்சுவார்; சாக்குருவி கத்தக்கேட்டு மனம் தளர்வார்; கொடுஞ்சகுனஞ் செய்யும் வேறு உயிர்களால் மயங்குவார்; பாம்புகளைக் கண்டபோதெல்லாம் உள்ளம் ஒடுங்குவார், நடுங்குவார்; நச்சுயிர்களைக் கண்டபோதெல்லாம் வெருவுவார்; நாய்கள் சேர்ந்து குறைத்துச் சண்டையிடுவதையும் ஊளையிடுவதையும் கேட்டுத் தியங்குவார்; தீது செய்வோரையும் கொடுஞ் சொற் புகல்வோரையும் கண்டு உள்ளம் உயங்குவார், மயங்குவார்.

**காக்கைகள் கூவக் கலங்கினேன் பருந்தின்**
**கடுங்குரல் கேட்டுளங் கலைந்தேன்**
**தாக்கிய ஆந்தை குரல்செயப் பயந்தேன்**
**சாக்குரல் பறவையால் தளர்ந்தேன்**
**வீக்கிய வேறு கொடுஞ்சகு னஞ்செய்**
**வீக்களால் மயங்கினேன் விடத்தில்**
**ஊக்கிய பாம்பைக் கண்டபோ துள்ளம்**
**ஒடுங்கினேன் நடுங்கினேன் எந்தாய்.**

**வேறுபல் விடஞ்செய் உயிர்களைக் கண்டு**
**வெருவினேன் வெய்யநாய்க் குழுவின்**
**சீறிய குரலோ டழுகுரல் கேட்டுத்**
**தியங்கினேன் மற்றைவெஞ் சகுனக்**
**கூறதாம் விலங்கு பறவைஊர் வனவெங்**
**கோள்செயும் ஆடவர் மடவார்**
**ஊறுசெய் கொடுஞ்சொல் இவைக்கெலாம் உள்ளம்**
**உயங்கினேன் மயங்கினேன் எந்தாய்.**

-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 24;25.

ஒருவரோடொருவர் உரத்துப் பேசுவதைக் கேட்டபோது உள்ளம் நடுங்குவார். படபட எனப்பகலால் வேகமாகக் கதவு தட்டப்படும் போதெலாம் கலங்குவார். 'ஐயோ', அப்பா', அம்மா' எனப் பிறர் அலறிய சொல் காதில் விழுந்தபோதெலாம் உள்ளங் கலங்குவார்.

**உரத்தொரு வருக்கங் கொருவர் பேசியபோ**
**துள்ளகம் நடுங்கினேன் பலகால்**
**கரத்தினால் உரத்துக் கதவுதட் டியபோ**
**தையவோ கலங்கினேன் கருத்தில்**
**புரத்திலே அம்மா அப்பனே ஐயோ**
**எனப்பிறர் புகன்றசொல் புகுந்தே**
**தரத்தில்என் உள்ளத்தைக் கலக்கிய கலக்கம்**
**தந்தைநீ அறிந்தது தானே.**



RangaRakes tamilnavarasam.com

**-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 56**

துன்பந் தாங்காது பிறர் கண்ணீர் விடக்கண்டு தாமும் கண்ணீர் விட்டுக் கலங்குவார். அசப்பிலே யாராவது அழைக்கும்போது அழைப்பது ஏனோ அவர்க்கு என்ன உற்றதோ என்று எண்ணாததெல்லாம் எண்ணி 'ஏன்' என்று கேட்கவும் மறப்பார்.

**மண்ணினீள் நடையில் வந்தவெந் துயரை**
**மதித்துளம் வருந்திய பிறர்தம்**
**கண்ணினீர் விடக்கண் டையவோ நானும்**
**கண்ணினீர் விட்டுளங் கவன்றேன்**
**நண்ணிநின் றொருவர் அசப்பிலேஎன்னை**
**அழைத்தபோ தடியனேன் எண்ணா**
**தெண்ணியா துற்ற தோஎனக் கலங்கி**
**ஏன்எனல் மறந்தனன் எந்தாய்.**

**-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 57**

'பிறர்தம் கண்ணினீர் விடக்கண்டு ஐயவோ நானும் கண்ணினீர்விட்டு உலங்கவன்றேன்' என்ற வரிகளை உன்னுக. அடிகள் கண்ணீர்விட்டு அழுதார். தனக்காக அன்று; பிறருக்காக, (நமக்காக). அடிகளிடம் யாராவது வந்துகொண்டே இருப்பார்கள். வந்தவரின் முகத்தைப் பார்த்து, என்னவோ, ஏதோ, இவர்தாம் துன்புடையவரோ, இன்புடையவரோ, சொல்ல வந்தது என்னவோ, என்று எண்ணி மனங் கலங்கி, வந்தவரை 'வா' என்பதற்கும் மறப்பார். அன்புடையவரைக் கண்டபோதெல்லாம் என்னவோ, ஏதோ என்று அயர்வார்.

**என்புடை வந்தார் தம்முகம் நோக்கி**
**என்கொலோ என்கொலோ இவர்தாம்**
**துன்புடை யவரோ இன்புடை யவரோ**
**சொல்லுவ தென்னையோ என்றே**
**வன்புடை மனது கலங்கிஅங் கவரை**
**வாஎனல் மறந்தனன் எந்தாய்**
**அன்புடை யவரைக் கண்டபோ தெல்லாம்**
**என்கொலோ என்றயர்ந் தேனே.**

**-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 59.**

"நண்ணி நின்றொருவர் அசப்பிலே என்னை அழைத்தபோது அடியனேன் எண்ணாது எண்ணியாதுற்றதோ எனக்கலங்கி'ஏன்' எனல் மறந்தனன்" என்பதனை "என்புடை வந்தார் தம் முகம்நோக்கி, என்கொலோ, என்கொலோ, இவர் 'தாம் துன்புடையவரோ, இன்புடையவரோ, சொல்வது என்னையோ என்றே வன்புடை மனௌத் கலங்கி அங்கு அவரை 'வா' எனல் மறந்தனன்" என்பதனோடு இயைத்து நோக்குக. அழைத்தார்க்கு 'ஏன்' என மறந்தார். வந்தாரை 'வா' என மறந்தார். என்னே பெருமானின் நொய்தான உள்ளம்.



RangaRakes tamilnavarasam.com

மாடுகளும் கன்றுகளும் கதறிய போதெல்லாம் பயந்தார். இளைத்த ஆடு மாடுகளைக் கண்டு தாமும் உளம் இளைத்தார்.

**காணுறு பசுக்கள் கன்றுக ளாதி**
**கதறிய போதெலாம் பயந்தேன்**
**ஏணுறு மாடு முதல்பல விருகம்**
**இளைத்தவை கண்டுளம் 'இளைத்தேன்**
**கோணுறு கோழி முதல்பல பறவை**
**கூவுதல் கேட்டுளங் குலைந்தேன்**
**வீணுறு கொடியர் கையிலே வாளை**
**விதிர்த்தல்கண் டென்என வெருண்டேன்.**

**-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 60.**

## சீவகாருண்யத்தின் எல்லை

அடிகள் ஜீவகாருண்யத்தின் எல்லையைக் கண்டவர்கள், நமக்கும் காட்டியவர்கள். அடிகள் வாடிய பயிரைக் கண்டு வாடினார். இளைத்த விலங்குகளைக் கண்டு இளைத்தார். மக்கள் முகங்களில் இளைப்பைக் கண்டபோதெல்லாம் மயங்கினார். பிறர் கண்ணீர் வடிக்கக் கண்டு தாமும் கண்ணீர் வடித்தார். அடிகளது உயிரிரக்கம் மக்களோடு மட்டும் நிற்கவில்லை. மாடு முதலிய விலங்குகளோடு மட்டும் நிற்கவில்லை. மண்ணாங்கட்டி வரையும் சென்றது. ஒருகால் சீவகாருண்யத்தைப்பற்றிச் சில அன்பர்கள் நெடுநேரம் வாசாஞானமாய்ப் பேசிக் கொண்டிருந்தனர். அதனைக் கண்ட அடிகள் 'ஜீவகாருணியம் எவ்வளவு தூரம் பரந்துள்ளதென்று அறிவீர்களா' என்று கேட்டு விட்டு ஒரு கதையைக் கூறினர். தெருவில் பெரியோர் இருவர் சென்றனர். ஒருவர் கால்பட்டு ஒரு மண் கட்டி உடைந்து போயிற்று. அதைக்கண்ட மற்றவர் மூர்ச்சையானார். மூர்ச்சை தெளிந்து எழுந்த பின் முன்னவர் காரணங் கேட்க அவரோ, உமது கால்பட்டு அழகிய அம்மண்கட்டி உடைந்து இயற்கைநிலை குலைந்து விட்டதே என்று வருந்தினேன், மூர்ச்சையாயிற்று என்றார். இதுதான் ஜீவகாருண்யத்தின் எல்லை என அடிகள் விளக்கியருளினர். மக்கள் முதல் மண்ணாங்கட்டிவரை இரக்கம் காட்டுவதன்றோ அடிகள் கண்ட ஜீவகாருண்யம் {70}

{70. That man is truly ethical who shatters no ice-crystal as it sparkles in the sun, tears no leaf from a tree, cuts no flower.
-Albert Schweitzer.}

## அடிகளின் கொள்கைகள்

கடவுள் ஒருவரெ, அவர் அருட்பெருஞ்சோதியர், சிறுதெய்வ வழிபாடு கூடாது, அத்தெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி கூடாது, புலால் உண்ணக் கூடாது, ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய சீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல், சாதி சமயம் முதலிய எவ்வித வேறுபாடும் கூடாது, எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணவேண்டும், ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமையைக் கைக்கொள்ளவேண்டும், புராணம் சாத்திரம் முதலியவை முடிவான



RangaRakes tamilnavarasam.com

உண்மையைத் தெரிவிக்கமாட்டா, இறந்தவரைப் புதைக்கவேண்டும், எரித்தல் கூடாது, கருமாதி திதி முதலிய பொருளற்ற சடங்குகள் செய்யவேண்டா என்பன அடிகளின் சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளாம். இவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

## கடவுள் ஒருவரே

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' 'ஒன்று கண்டீர் உலகுக்கொரு தெய்வமும்' என்பன திருமூலர் திருவாக்குகள் (திருமந்திரம் 2104;2962). கடவுள் ஒருவரே என்பது எல்லா சமயங்களுக்கும் ஒப்ப முடிந்த கொள்கையாம் ஆயினும் நடைமுறையில் அவை பலவாகிய மூர்த்திபேதங்களையும் சிறு தெய்வங்களையும் கொண்டிருக்கின்றன. இவை அடிகட்கு உடன்பாடன்று. உருவமாகியும், அருவமாகியும், அருவுருவமாகியும் கடவுள் ஒருவரே உள்ளார். இருவர் மூவர் ஐவர் என்பது உடலுக்கு உயிர் இரண்டு மூன்று ஐந்து என்பது போலாம் என்பர்.

**உருவ ராகியும் அருவின ராகியும் உருஅரு வினராயும்**
**ஒருவ ரேஉளார் கடவுள்கண் டறிமினோ உலகுளீர் உணர்வின்றி**
**இருவ ராம்என்றும் மூவரே யாம்என்றும் இயலும்ஐ வர்கள்என்றும்**
**எருவ ராய்உரைத் துழல்வதென் உடற்குயிர் இரண்டுமூன் றெனலாமே.**

**-6 (முன்) தனித் திருஅலங்கல் 45.**

தெய்வங்கள் பல என்பார் திருவருள் விளக்கம் இல்லாதவர் என்பது அடிகள் கொள்கை. 'தெய்வங்கள் பலப்பல சிந்தை செய்வாரும், சேர்கதி பலப்பல செப்புகின்றாரும், பொய் வந்த கலை பல புகன்றிடுவாரும், பொய்ச் சமயாதிகளை மெச்சுகின்றாரும், மெய் வந்த திருவருள் விளக்கம் ஒன்றில்லார்' என்பது அடிகளின் திருவாக்கு'.

**தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்**
**சேர்கதி பலபல செப்புகின் றாரும்**
**பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்**
**பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்**
**மெய்வந்த திருஅருள் விளக்கம்ஒன் றில்லார்**
**மேல்விளை வறிகிலர் வீண்கழிக் கின்றார்**
**எய்வந்த துன்பொழித் தவர்க்கறி வருள்வீர்**
**எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே.**

**-6 (முடி) மெய் இன்பப்பேறு 11.**

தெய்வம் ஒன்றென்று அறியாமல் எமது தெய்வம் எமது தெய்வம் என்று பல தெய்வங்களைச் சொல்லுதல் குருடர் யானை கண்ட கதையை ஒக்கும் என்பர்.

**எவ்வகைசார் மதங்களிலே பொய்வகைச்சாத் திரங்கள்**
**எடுத்துரைத்தே எமதுதெய்வம் எமதுதெய்வம் என்று**
**கைவகையே கதறுகின்றீர் தெய்வம்ஒன்றென் றறியீர்**
**கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்**



RangaRakes tamilnavarasam.com

**ஐவகைய பூதவுடம் பழிந்திடில்என் புரிவீர்**
**அழியுடம்பை அழியாமை ஆக்கும்வகை அறியீர்**
**உய்வகைஎன் தனித்தந்தை வருகின்ற தருணம்**
**உற்றதிவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர் உவப்பே.**

**-6 (முடி) புனித குலம் பெறுமாறு புகலல் 5**

## கடவுள் அருட்பெருஞ்சோதியர்

கடவுள் ஒருவரே என்ற அடிகள் அவ்வொரு கடவுளை அருட்பெருஞ்சோதியராகக் கொண்டார்கள்; இறைவனைச் சோதி வடிவில் முன்னைப் பெரியோர்களும் கண்டுள்ளனர்.

**'திருவையா றகலாத செம்பொற் சோதீ'**

**-அப்பர்**

**'சோதியே சுடரே சூழொளி விளக்கே'**
**'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி'**
**-மாணிக்கவாசகர்**

**'சுத்த நிர்க்குணமான பரதெய்வமே பரஞ்சோதியே'**

**-தாயுமானவர்**

என்னும் திருவாக்குகளைக் காண்க. ஆயினும் முன்னைப் பெரியோர்கள் இறைவனைச் சோதி வடிவனாக ஒரோ வழிக் குறித்தனரே அன்றி அடிகளைப் போல் சோதி வடிவு ஒன்றை மட்டுமே முடிந்த முடிவாகக் கொண்டாரில்லை. அடிகளோ இறைவனை சோதிமயமாகவே கண்டனர். அடிகளது முடிந்த முடிவான கொள்கை அருட்பெருஞ்சோதி வழிபாடே. அதற்கென அமைத்தருளியதே உத்தரஞான சிதம்பரமாகிய சத்திய ஞானசபை. அதற்கெனப் பாடியருளியதே அருட்பெருஞ்சோதி அகவல். அருட்பெருஞ்ஜோதி வழிபாடு எச்சமயத்திற்கும் பொருந்துவது. அது உருவ வழிபாடன்று, அருவ வழிபாடும் அன்று, அருவுருவ வழிபாடாகும்.

## சிறு தெய்வ வழிபாடு கூடாது

அடிகளால் கண்டிக்கப்பட்டவற்றுள் சிறு தெய்வ வழிபாடும் ஒன்று. எல்லாம் வல்ல தனித்தலைமைப் பெரும் பதியாகிய இறைவன் ஒருவனே கடவுள், அவனே வழிபடத் தக்கவன், அவன் அருட்பெருஞ்ஜோதியனாக விளங்குகிறான், அவனைத் தவிர வேறே கடவுள் இல்லை, பிரம விஷ்ணு ருத்திரர்களெல்லாம் பதத் தலைவர்கள், கடவுளல்லர், இறைவனது பேரருளை நோக்க, இப்பதத் தலைவர்கள் சிறுபிள்ளைக் கூட்டமேயாவர் என்பது அடிகளது கொள்கை.

**நான்முகர்நல் உருத்திரர்கள் நாரணர்இந் திரர்கள்**
**நவில்அருகர் புத்தர்முதல் மதத்தலைவர் எல்லாம்**

**வான்முகத்தில் தோன்றிஅருள் ஒளிசிறிதே அடைந்து**
**வானகத்தும் வையகத்தும் மனம்போன படியே**
**தேன்முகந்துண் டவர்எனவே விளையாடா நின்ற**
**சிறுபிள்ளைக் கூட்டம்என அருட்பெருஞ்சோ தியினால்**
**தான்மிகக்கண் டறிகஎனச் சாற்றியசற் குருவே**
**சபையினடத் தரசேஎன் சாற்றும் அணிந் தருளே.**

**-6 (இடை) அருள்விளக்கமாலை 89**

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் பெருமையைக் கருதும்போது சமயத் தெய்வங்க ளெல்லாம் துரும்பினும் கீழ் நிலையிலுள்ளவர்கள் என்பர்.

**சமயத் தெய்வம் பலவுஞ் சிறிய**
**துரும்ப தென்னவே**
**சாற்றப் புகினுஞ் சாலா ரருளின்**
**பெருமை யுன்னவே**

**-கீர்த்தனை, எனக்கும் உனக்கும் 52**

கருப்பு, காட்டேரி, பிடாரி முதலியவைகளையே நாம் சிறு தெய்வங்களாக எண்ணுகிறோம். பிரம விஷ்ணுக்களைக் கடவுளர்களாகக் கருதுகிறோம். பிரம விஷ்ணுக்களும் சிறு தெய்வங்களே என்பதை அடிகள் பாட்டாலும் உரையாலும் தெளிவாக விளக்குகின்றார்கள், அடிகளின் உபதேசக் குறிப்பொன்றைக் காண்க:

சர்வ சித்தியையுடைய தனித் தலைமைப் பதியாகிய ஆண்டவரை வேண்டித் தவம்செய்து சிருட்டிக்கும் சித்தியைப் பெற்றுக் கொண்டவன் பிரமன்; சிருட்டி திதி ஆகிய சித்தியைப் பெற்றுக் கொண்டவன் விஷ்ணு; சிருட்டி திதி சங்காரம் ஆகிய சித்தியைப் பெற்றுக் கொண்டவன் ருத்திரன். இவர்கள் ஏற்படுத்திய சமய மார்க்கங்களை அனுட்டிக்கின்றாவர்கள் இவர்களை அந்தந்தச் சமயங்களுக்குத் தெய்வங்களாக வணங்கி வழிபாடு செய்துவந்தார்கள். இம் மூர்த்திகளுடைய சித்திகள் சர்வ சித்தியையுடைய கடவுள் சித்தியின் இலேசங்கள்; அதில் ஏக தேசம்கூட அல்ல. ஆகையால், இவர்கள் அந்தச் சர்வ சித்தியையுடைய கடவுளுக்கு ஒப்பாகார்கள்; கோடி கோடிப் பங்கு தாழ்ந்த தரத்தில் இருக்கின்றார்கள். ஆகையால், சமயத்தெய்வங்களை வழிபாடு செய்து, அந்த சமயத் தெய்வங்கள் பெற்றுக் கொண்ட அற்ப சித்தியில் அவர்கள் மயங்கி மகிழ்ந்து அகங்கரித்து மேலேற வேண்டிய படிகளெல்லாம் ஏறிப் பூரண சித்தியை யடையாமல் தடைப்பட்டு நிற்றல்போல் நில்லாமல், சர்வசித்தியையுடைய கடவுளொருவர் உண்டென்றும், அவரை உண்மை அன்பால் வழிபாடு செய்து பூரண சித்தியைப் பெற வேண்டுமென்றும் கொள்ளவேண்டுவது சன்மார்க்க சங்கத்தவர்களுடைய கொள்கை.

-உபதேசப்பகுதி, பக்கம் 69

**சிறுதெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடுதல் கூடாது**

அடிகள் காலத்திலும் அதற்கு முன்பும் சிறு தெய்வங்களுக்கு உயிர்ப்பலி இடும் வழக்கம் இருந்தது. புலி சிங்கம் முதலிய காட்டு விலங்குகளைப்


RangaRakes tamilnavarasam.com

பிடித்துக்கொண்டு வந்து பலியிடுவதில்லை. பலியிடுவோர் வீரர்களாயின் காட்டு விலங்குகளைப் பிடித்து வந்தல்லவோ பலியிடவேண்டும். உயிர்ப்பலி ஏற்கும் (கேட்கும்) தெய்வங்களும் சத்தியுள்ளதாக இருந்தால் காட்டு விலங்குகளையல்லவோ கேட்கவேண்டும். எருமை, ஆடு, கோழி முதலிய வீட்டு விலங்குகளும் பறவைகளுமே பலியாயின. இவை பலியிடுவோர்க்கு அடங்கியவை யன்றோ. பலியிடுவோர் உணவாகக் கொள்ளுவன வன்றோ. பிடாரி கோயில்களிலும் காளி கோயில்களிலும் கருப்பு கோயில்களிலும் நூற்றுக் கணக்கான எருமைகள், ஆடுகள், கோழிகள் பலியாகும். புலாலுண்ணும் இப்புறவினச் சிறு தெய்வங்களை அடிகள் 'நலிதரு சிறிய தெய்வம்' என்பர். இவற்றின் கோயில்களைக் 'கலியுறு சிறிய தெய்வ வெங்கோயில்' என்பர்.

**நலிதரு சிறிய தெய்வமென் றையோ**
**நாட்டிலே பலபெயர் நாட்டிப்**
**பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள்**
**பலிக்கடா முதலிய உயிரைப்**
**பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே**
**புந்திநொந் துளநடுக் குற்றேன்**
**கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்**
**கண்டகா லத்திலும் பயந்தேன்.**

**-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 63**

இக்காலத்தில் பலியிடுவதைத் தடுத்துச் சட்டமியற்றப்பட்டுள்ளது. அடிகள் காலத்தில் சட்டமில்லை. கேள்வி முறையில்லை. பலியிடும் வேள்வி முறையே தாண்டவமாடிற்று. அந்நாளில் அடிகள் உயிர்ப்பலியைக் கண்டித்துப் பேசியதன் பயனே, எழுதியதன் பயனே, பாடியதன் பயனே, அடிகளது திருவுள்ளக் கிடையே, பின்னாளில் பலித்தடைச் சட்டம் தோன்றியதற்கு முதற் காரணமாம். இவ்விருபதாம் நூற்றாண்டில் தோன்றிய பல சீர்திருத்தங்களுக்கு வித்திட்டவர் அடிகளே ஆவர். அடிகளது அருள் வாழ்வையும் அருளிச் செயல்களையும் ஆராய்வோர் இதனைத் தெள்ளிதின் உணரலாம்.

## புலால் மறுத்தல்

புலாலுண்பதனைக் கண்டித்த அளவுக்கு அடிகள் வேறெதனையும் கண்டித்ததில்லை. புலால் மறுத்தலை வற்புறுத்திய அளவுக்கு வேறெதனையும் வற்புறுத்திய தில்லை. சாதி சமயம் முதலிய எல்லாவற்றாலும் ஒருமைப் பாட்டினைக் கண்ட அடிகள் புலையொழுக்கம் ஒன்றை மட்டுமே கருதி மக்களை இரு இனங்களாகப் பிரித்தனர். 1.அக இனம். 2. புற இனம். புலால் மறுத்தோர் அகவினத்தார். அஃதுண்போர் புறவினத்தார். 'உயிர்க்கொலையும் புலைப் புசிப்பும் உடையவர்களெல்லாம் உறவினத்தாரல்லர், அவர் புற இனத்தார்' என இறைவனே தனக்கு அருளினான் என அறைவர்.

**உயிர்க்கொலையும் புலைப் பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்**
**உறவினத்தார் அல்லர்அவர் புறஇனத்தார் அவர்க்குப்**
**பயிர்ப்புறும்ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக**
**பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே**



RangaRakes tamilnavarasam.com

**நயப்புறுசன் மார்க்கம்அவர் அடையளவும் இதுதான்**
**நம்ஆணை என்றெனக்கு நவின்றஅருள் இறையே**
**மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில் நடம் புரியும்**
**மாநடத்தென் அரசேஎன் மாலைஅணிந் தருளே.**

-6 (இடை) அருள்விளக்கமாலை 71

புலாலுண்பவராகிய புறவினத்தாரை அடிகள் தமது உடன் கூட்டத்திலும் சன்மார்க்க சங்கத்திலும் சேர்த்துக் கொண்டதே இல்லை. புலால் உண்ணும் மக்களைக் கண்டு மயங்கி உள்ளம் நடுங்கி ஆற்றாமல் எலும்பெல்லாம் கருக இளைத்தேன் என இறைவனிடம் விண்ணப்பிப்பர்.

**புண்புலால் உடம்பின் அசுத்தமும் இதனில்**
**புகுந்துநான் இருக்கின்ற புணர்ப்பும்**
**என்பொலா மணியே எண்ணிநான் எண்ணி**
**ஏங்கிய ஏக்கம்நீ அறிவாய்**
**வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு**
**மயங்கிஉள் நடுங்கிஆற் றாமல்**
**என்பெலாம் கருக இளைத்தனன் அந்த**
**இளைப்பையும் ஐயநீ அறிவாய்.**

-6 (முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம் 41.

ஒருவன் ஆணைப் பெண்ணாக்கவும் பெண்ணை ஆணாக்கவும் இறந்தவரை எழுப்பவும் வல்லவனாயினும் அவன் புலாலுண்ணுங் கருத்துடையவனாயின் ஞானியாகான் என்பது அடிகள் கொள்கை. இதனைக் குருவின் மீதும் சிவத்தின்மீதும் ஆணையிட்டுரைப்பர்.

**மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்தில்**
**கண்விழித்து வயங்கும் அப்பெண்**
**உருவாணை உருவாக்கி இறந்தவரை**
**எழுப்புகின்ற உறுவ னேனும்**
**கருவாணை யுறஇரங்கா துயிருடம்பைக்**
**கடிந்துண்ணுங் கருத்த னேல்எங்**
**குருவாணை எமதுசிவக் கொழுந்தாணை**
**ஞானிஎனக் கூறொ ணாதே.**

-2, அறநிலை விளக்கம்

கருத்தனேல் என்பதைக் கவனிக்க. உண்ணும் கருத்துடைய வனாயிருந்தாலும் அவன் ஞானியாகான்.

புலால் உண்போர் பலரைப் புலால் உண்ணாதவராக அடிகள் மாற்றினர். 'வடலூரிலும் சுற்றுக் கிராமங்களிலுமுள்ள புலாலுண்போரைச் சுத்த போஜனமுடையராக வள்ளலார் திருத்தினர்' எனச் ச.மு.க. பதிப்பு சரித்திரக் குறிப்பிற் காணப்படுகிறது. பறையன் ஒருவனும் படையாச்சிகள் இருவரும் புலான்



RangaRakes tamilnavarasam.com

மறுத்து அகவினத்தராகிய வரலாறும் கூறப்படுகிறது. புலாலுண்பவரைச் சைவ உணவினராக மாற்றும் அற்புத ஆற்றல் அடிகளிடம் காணப்பட்டதென்றும் அடிகளின் திருநோக்கம் ஒன்றே புலாலுணவில் ஒருவனுக்குள்ள இச்சையை ஒழிப்பதற்குப் போதுமானதென்றும் தொ.வே. கூறுகின்றார். {71}

{71. He had a strange faculty about him, witnessed very often, of changing a carnivorous person into a vegetarian; a mere glance from him seemed enough to destroy the desire for animal food-Statement to Theosophical society.}

## சாதி சமய வேறுபாடுகள் கூடா

பிறப்பால் சாதி சமய வேறுபாடு கருதுவதை அடிகள் அறவே வெறுத்தனர். சாதிகளும் சமயங்களும் பிறப்பால் ஏற்படவில்லை. தொழில் ஒழுக்கம் பற்றிச் சாதிகள் ஏற்பட்டன. தத்துவ ஒழுக்கம் பற்றிச் சமயங்கள் ஏற்பட்டன. இந்நாளில் அவை சமரச சன்மார்க்கம் விளங்குவதற்குத் தடையாயுள்ளன. இத்தடைகள் தவிர்ந்தாலல்லது இறையருள் கைகூடாதென்பதை அடிகள் தமது உபதேசத்தில் தெளிவாக அருளியுள்ளார்கள். அடிகளின் அவ்வுபதேசத்தை அன்பர்கள் இருவர் குறித்து வைத்துள்ள குறிப்புகள் வருமாறு:

தத்துவ வொழுக்கம் பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தொழிலொழுக்கம் பற்றி ஜாதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு ஜாதி யேற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள். அவையாவன: ஜாதியாசாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமயாசாரம், மதாசாரம், மரபாசாரம், கலாசாரம், சாதனாசாரம், அந்தாசாரம், சாஸ்திராசாரம் முதலிய ஆசாரங்கள். ஆதலால் மேல்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து, சுத்த சிவசன்மார்க்க சத்தியஞான ஆசாரத்தை வழங்கிப் பொது நோக்கம் வந்தால், மேல்படி ஆசாரத்தை வழங்கிப் பொது நோக்கம் வந்தால், மேல்படி காருண்யம் விரித்தியாகிக் கடவுளருளைப் பெற்று, அனந்த சித்தி முத்திகளைப் பெறக்கூடுமே யல்லது, இல்லாவிடில் கூடாது.

-உபதேசப்பகுதி, பக்கம் 22

தத்துவ நியாயத்தை அநுசரித்துச் சமயங்களேற்படுத்தப் பட்டிருக்கின்றன. தொழில் நியாயத்தை அனுசரித்து ஜாதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாக இருப்பன சமய ஏற்பாடு ஜாதி ஏற்பாடு முதலியவைகள் ஆதலால், இவைகளை விட்டொழித்துப் பொது நோக்கம் வந்தாலொழிய, காருண்ணியம் விருத்தி ஆகிக் கடவுள் அருளைப் பெற்று அனந்த சித்தி வல்லபங்களைப் பெற முடியாது.

-உபதேசப்பகுதி, பக்கம் 63.

சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகள் சாதி சமயவேறுபாடுகள். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய இலட்சியம் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை.



RangaRakes tamilnavarasam.com

இறைவனிடத்துச் செய்துகொண்ட சுத்த சன்மார்க்க சத்தியச் சிறுவிண்ணப்பத்தில் அடிகள் இதனை அழகாகக் கூறுகின்றார்கள்.

எல்லாம் உடைய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளே! இதுதொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள் மதங்கள் மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் வருணம் ஆசிரம முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்திற் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய ஆன்ம நேய ஒருமைப் பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி யாண்டவரே! தேவரீர் திருவருட் பெருங்கருனைக்கு வந்தனம்! வந்தனம்!

-சுத்த சன்மார்க்க சத்தியச் சிறுவிண்ணப்பம்

சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய இலட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை மக்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கவேண்டுமாயின், சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சாதி சமயங்கள் ஒழிய வேண்டுமென்பதை அடிகள் கண்டார்கள். தடைகளைத் தகர்க்கக் கருதினார்கள். மலைபோன்ற அத்தடைகளை உளிகொண்டு பிளக்கவில்லை, வெடிவைத்தே தகர்த்தார்கள். தூள் தூள் ஆக்கினார்கள்.

சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்! வீணே நீர் அலைந்து அலைந்து அழிதல் அழகல்லவே என்று அறை கூவினார்கள்.

**சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே**
**சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே**
**ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்**
**அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே**
**நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த**
**நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர்அவர் தாமே**
**வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய**
**மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே.**

**-6(முடி) புனிதகுலம் பெறுமாறு புகலல் 1**

சாதி சமயங்களிலே வீதிபல வகுத்த சாத்திரக் குப்பைகள் எல்லாம் பாத்திரம் அன்று என்றார்.

**சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த**
**சாத்திரக்குப் பைகள்எல்லாம் பாத்திரம்அன் றெனவே**
**ஆதியில்என் உளத்திருந்தே அறிவித்தபடியே**
**அன்பால்இன் றுண்மைநிலை அறிவிக்க அறிந்தேன்**
**ஓதிஉணர்ந் தோர்புகழும் சமரசசன் மார்க்கம்**
**உற்றேன்சிற் சபைகாணப் பெற்றேன்மெய்ப் பொருளாம்**



RangaRakes tamilnavarasam.com

**சோதிநடத் தரசைஎன்றன் உயிர்க்குயிராம் பதியைச்**
**சுத்தசிவ நிறைவைஉள்ளே பெற்றுமகிழ்ந் தேனே.**

**-6 (முடி) அனுபவமாலை 92**

இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பைகளை எல்லாம் புன்செய்யில் எருவாக்கிப் போட்டு, மருட்சாதி சமயங்கள் மதங்கள் ஆச்சிரம வழக்கெல்லாம் குழிவெட்டி மண்மூடிப் போட்டு, அருட்சோதி வீதியில் ஆடச்செய்தான் அருட்பெருஞ்சோதி ஆண்டவன் என்றார்.

**இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை**
**இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு**
**மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம**
**வழக்கெலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டுத்**
**தெருட்சாருஞ் சுத்தசன் மார்க்கநன் னீதி**
**சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்**
**அருட்சோதி வீதியில் ஆடச்செய் தீரே**
**அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.**

**-6 (முடி) சிவானந்தத் தழுந்தல் 10**

சாதியும் மதமும் சமயமும் தவிர்த்துச், சுத்த சன்மார்க்க வீதியில் உமைத்தான் நிறுவுவல், வம்மின்! என்று மக்களைக் கூவி அழைத்தார்.

**ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா**
**அருட்பெருஞ் சோதிஎன் உளத்தே**
**நீதியில் கலந்து நிறைந்தது நானும்**
**நித்தியன் ஆயினேன் உலகீர்**
**சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே**
**சத்தியச் சுத்தசன் மார்க்க**
**வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை**
**விளம்பினேன் வம்மினோ விரைந்தே.**

**-6 (முடி) தனித்திருமாலை (9) 21**

நால் வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலாக நவின்ற கலைச் சரிதம் எல்லாம் பிள்ளை விளையாட்டே என்றார். தோல் வருணங் கண்டுமேல் வருணம் அறிவார் இல்லை என்றார். (தோல் வருணம்-உடல்தோலின் நிறம், மேல் வருணம்-சாதி).

**நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா**
**நவின்றகலைச் சரிதம்எலாம் பிள்ளைவிளை யாட்டே**
**மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ**
**விழித்திதுபார் என்றெனக்கு விளம்பியசற் குருவே**
**கால்வருணங் கலையாதே வீணில்அலை யாதே**
**காண்பனஎல் லாம்எனக்குக் காட்டியமெய்ப் பொருளே**

**மால்வருணங் கடந்தவரை மேல்வருணத் தேற்ற**
**வயங்குநடத் தரசேஎன் மாலைஅணிந் தருளே.**

**-6 (இடை) அருள்விளக்கமாலை 85**

எம் குலம் எம் இனம் என்பது தொண்ணூற்றாறு அங்குலம் என்றார்.

**எங்குலம் எம்மினம் என்பதொண் ணூற்றா**
**றங்குலம் என்றருள் அருட்பெருஞ் ஜோதி**

**-அருட்பெருஞ்ஜோதி அகவல் 219-220**

தொண்ணூற்றாறு அங்குலம் என்றது உடம்பை. உடம்பு அவரவர் கையால் எட்டுச்சாண். ஒரு சாண்-பன்னிரண்டங்குலம். எட்டுச் சாண்-96 அங்குலம். எம்குலம், எம் இனம் என்பது எண்சாண் (96 அங்குல) உடம்புக்கே ஒழிய அவ் உடம்பின் உறு பொருளாகிய உயிருக்கன்று என்பது கருத்து. இதனை அருட்பெருஞ் ஜோதியே தனக்கு அருளிற்று என்பார், 'என்றருள் அருட்பெருஞ் ஜோதி' என்றார். அவ் அருட்பெருஞ் ஜோதியை 'சாதியும் மதமும் சமயமும் காணா ஆதி அநாதி என்பார்.

**சாதியும் மதமும் சமயமும் காணா**
**ஆதிஅ நாதியாம் அருட்பெருஞ் ஜோதி**

**-அருட்பெருஞ் ஜோதி அகவல் 115-116**

சாதியும் மதமும் சமயமும் அருட்பெருஞ் சோதியைக் காணா. அருட்பெருஞ் சோதியைக் சாதியாலும் மதத்தாலும் சமயத்தாலும் காண இயலாதென்பது கருத்து. சாதியும் மதமும் சமயமும் காணா அவ் அருட்பெருஞ் சோதி சாதியும் மதமும் சமயமும் பொய் என ஆதியில் தனக்கு உணர்த்திற்று என்பார்.

**சாதியும் மதமும் சமயமும் பொய்யென**
**ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி,**

**-அருட்பெருஞ்ஜோதி அகவல் 211-212**

இறைவன், சாதிகுலம் சமயம் எலாம் தவிர்த்துத் தன்னை மேலேற்றினான் என்பார்.

**சாதிகுலம் சமயம்எலாம் தவிர்த்தெனைமேல் ஏற்றித்**
**தனித்ததிரு அமுதளித்த தனித்தலைமைப் பொருளே**
**ஆதிநடுக் கடைகாட்டா தண்டபகிர் அண்டம்**
**ஆர்உயிர்கள் அகம்புறம்மற் றனைத்தும்நிறை ஒளியே**
**ஓதிஉணர்ந் தவர்எல்லாம் எனைக்கேட்க எனைத்தான்**
**ஓதாமல் உணர்ந்துணர்வாம் உருவுறச்செய் உறவே**
**சோதிமய மாய்விளங்கித் தனிப்பொதுவில் நடிக்கும்**
**தூயநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே.**



RangaRakes tamilnavarasam.com

-6(இடை) அருள்விளக்கமாலை 23

சாதியைச் சமயத்தை மதத்தை எலாம் விடுவித்து என்னை ஞான நீதியிலே சுத்த சிவசன்மார்க்க நிலை தனிலேநிறுத்தினான் என்பார்.

**சாதியைநீள் சமயத்தை மதத்தைஎலாம்**
**விடுவித்தென் தன்னை ஞான**
**நீதியிலே சுத்தசிவ சன்மார்க்க**
**நிலைதனிலே நிறுத்தி னானைப்**
**பாதியைஒன் றானவனைப் பரம்பரனைப்**
**பராபரனைப் பதிஅ னாதி**
**ஆதியைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்சோ**
**தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ.**

-6 (முடி) அச்சோப்பத்து 10

இந்தச் சாதி இந்த மதம் என்பதெல்லாம் வாய்ச் கழக்கு. இந்த வாய்ச் சழக்குகளை எல்லாம் தவிர்த்தவன் இறைவன் என்பார்.

**ஆதிஅந்தம் தோற்றாத அரும்பெருஞ்சோ தியனே**
**அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே**
**ஓதிஎந்த வகையாலும் உணர்ந்துகொளற் கரிதாய்**
**உள்ளபடி இயற்கையிலே உள்ளஒரு பொருளே**
**ஊதியம்தந் தெனையாட்கொண் டுள்ளிடத்தும் புறத்தும்**
**ஓவாமல் விளங்குகின்ற உடையவனே இந்தச்**
**சாதிஇந்த மதம்எனும்வாய்ச் சழக்கைஎலாம் தவிர்த்த**
**சத்தியனே உண்கின்றேன் சத்தியத்தெள் அமுதே.**

-6 (முடி) பெறாப்பேறு 3

சாதியும் சமயமும் தவிர்த்தவர் உறவே! என்று இறைவனை அழைப்பார்.

**ஆதியும் அந்தமும் இன்றிஒன் றாகி**
**அகம்புறம் அகப்புறம் புறப்புறம் நிறைந்தே**
**ஓதியும் உணர்ந்தும்இங் கறிவரும் பொருளே**
**உளங்கொள்சிற் சபைநடு விளங்குமெய்ப் பதியே**
**சோதியும் சோதியின் முதலுந்தான் ஆகிச்**
**சூழ்ந்தெனை வளர்க்கின்ற சுதந்தர அமுதே**
**சாதியும் சமயமும் தவிர்த்தவர் உறவே**
**தனிநட ராஜஎன் சற்குரு மணியே.**

-6 (இடை) சற்குருமணிமாலை 20

சாதியும் பேதச் சமயமும் நீங்கித் தனித்தனன் என்பார்.



RangaRakes tamilnavarasam.com

**ஆதியும் அந்தமும் இல்லாத் தனிச்சுட ராகிஇன்ப**
**நீதியும் நேர்மையும் ஓங்கப் பொதுவில் நிருத்தமிடும்**
**சோதியும் வேதியும் நான்அறிந் தேன்இச் செகதலத்தில்**
**சாதியும் பேதச் சமயமும் நீங்கித் தனித்தனனே.**

**-6 (முடி) சிவானந்தப் பற்று 6**

சாதி சமயச் சழக்கைவிட்டேன் அருட்சோதியைக் கண்டேன் என்பார்.

**சாதி சமயக் சழக்கைவிட் டேனருட்**
**சோதியைக் கண்டேனடி -அக்கச்சி**
**சோதியைக் கண்டேனடி.**

**-கீர்த்தனைப்பகுதி, அருட்காட்சி 3**

சாதி சமயச் சழக்கெல்லாம் அற்றது என்பார்.

**சாதி சமயச் சழக்கெல்லாம் அற்றது**
**சன்மார்க்க ஞான சபை நிலைபெற்றது.**

**-கீர்த்தனைப் பகுதி, அருள் அற்புதம் 8**

சாதி சமய மத வழக்கெல்லாம் மாய்ந்தது. வருணாசிரம மயக்கம் சாய்ந்தது என்பார்.

**மதித்தச மயமத வழக்கெல்லா மாய்ந்தது**
**வருணாச்சி ரமமெனு மயக்கமுஞ் சாய்ந்தது**
**கொதித்தலோ காசாரக் கொதிப் பெல்லாமொழிந்தது**
**கொலையுங்க ளவுமற்றைப் புலையும் அழிந்தது.**

**-கீர்த்தனைப் பகுதி, இது நல்ல தருணம் 1**

இவ்வாறு சாதி சமய வேறுபாடுகளைக் கண்டித்து அடிகள் அருளிய பாடல்கள் பலவாகும். அடிகளின் திருமுன்னர் சாதி வேற்றுமைக்கு இடமிருந்ததே யில்லை. அந்தணர் சபாபதி சிவாசாரியர் முதல் பறையன் அமாவாசை வரை எல்லாச் சாதியாரும் அடிகளிடம் பழகினர். அடிகள் அனைவரையும் சமமாகவே கருதினார்கள். சபாபதி சிவாசாரியரும் தனது பூணூலையும் சிகையையும் நீக்கி விட்டு அனைவருடனும் சமமாகப் பழகி ஒரேபந்தியில் உண்டு வந்தார். இவ்வாறு அடிகள் சாதிக் காட்டை அழித்துச் சன்மார்க்க நாடாக்கினார்கள். சன்மார்க்கப் பயிரை வளர்த்தார்கள்.

## எவ்வுயிரையும் தம் உயிர்போல் எண்ணுதல்

'எவ்வுயிரும் என் உயிர்போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே'. 'எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணுந்



RangaRakes tamilnavarasam.com

தபோதனர்கள் செவ்வறிவை நாடி மிகச் சிந்தை வைப்ப தெந்நாளோ' எனத் தாயுமானவர் பாடுவர்.

எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணி ஒழுகும் உத்தமர்களின் அடிக்கு ஏவல் செய்ய என் சிந்தை விழைந்தது என்பர் நமது அடிகள். எவ்வுயிரும் தம் உயிர்போல் காண்பவர் வாய்ச்சொல்லே வேதாகமத்தின் வாக்குஎன்பர்.

**எவ்வுயிரும் பொதுஎனக்கண் டிரங்கிஉப**
**கரிக்கின்றார் யாவர் அந்தச்**
**செவ்வியர்தம் செயல்அனைத்தும் திருஅருளின்**
**செயல்எனவே தெரிந்தேன் இங்கே**
**கவ்வைஇலாத் திருநெறிஅத் திருவாளர்**
**தமக்கேவல் களிப்பால் செய்ய**
**ஒவ்வியதென் கருத்தவர்சீர் ஓதிடஎன்**
**வாய்மிகவும் ஊர்வ தாலோ.**

**எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்**
**தம்முயிர்போல் எண்ணிஉள்ளே**
**ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்**
**யாவர்அவர் உளந்தான் சுத்த**
**சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்**
**இடம்எனநான் தெரிந்தேன் அந்த**
**வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்**
**சிந்தைமிக விழைந்த தாலோ.**

**கருணைஒன்றே வடிவாகி எவ்வுயிரும்**
**தம்உயிர்போல் கண்டு ஞானத்**
**தெருள்நெறியில் சுத்தசிவ சன்மார்க்கப்**
**பெருநீதி செலுத்தா நின்ற**
**பொருள்நெறிசற் குணசாந்தப் புண்ணியர்தம்**
**திருவாயால் புகன்ற வார்த்தை**
**அருள்நெறிவே தாகமத்தின் அடிமுடிசொல்**
**வார்த்தைகள்என் றறைவ ராலோ.**

**-6 (முடி) தனித்திருமாலை 3**

எவ்வுயிரும் தம்முயிர்போல் கருதுவதே ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையாம். இதனை வள்ளற் பெருமானின் பேருபதேசத்திற் காண்க.

**<u>வேத, ஆகம, சாத்திர, புராண, இதிகாசங்கள் முடிவான உண்மையைத் தெரிவிக்கமாட்டா</u>**

வேதங்கள் ஆகமங்கள் சாத்திரங்கள் புராணங்கள் இதிகாசங்கள் கூறும் கதைகளையும் கற்பனைகளையும் அடிகள் ஒவ்வார். 'கலை உரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப்போக' என்பர்.



RangaRakes tamilnavarasam.com

வேதாகமங்கள் சூதாகச் சொல்லுகின்றன, உண்மையை வெளிப்படையாக உரைக்கவில்லை, இவற்றால் என்ன பயன் என்பர்.

**வேதாக மங்கள்என்று விண்வாதம் ஆடுகின்றீர்**
**வேதாக மத்தின் விளைவறியீர்-சூதாகச்**
**சொன்ன அலால் உண்மைவெளி தோன்ற உரைக்கவில்லை**
**என்ன பயனோ இவை.**

-6 (முடி) சுத்தசிவநிலை 30

சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றஞ் சொல்லுகின்றனவேயன்றி நேத்திரங்கள் போற்காட்டவில்லை என்பர்.

**சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி**
**நேத்திரங்கள் போற்காட்ட நேராவே-நேத்திரங்கள்**
**சிற்றம்பலவன் திருவருட்சீர் வண்ணம் என்றே**
**உற்றிங் கறிந்தேன் உவந்து.**

-6 (முடி) சுத்தசிவநிலை 29

வேதாகமாதிகளில் அறவே உண்மை இல்லாமற் போகவில்லை என்பதும் இலைமறைகாயாக ஆங்காங்கே சிற்சில உண்மைகள் சொல்லப்பட்டுள்ளன வென்பதும் அடிகளின் கருத்தாம். வேதாகமங்களின் சூதுகளையும் உளவுகளையும் இறைவன் தனக்குக் காட்டினான் என்றும் உள்ளதனை உள்ளபடி உணர உரைத்தான் என்றும் கூறுவர்.

**வேதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள்**
**விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்**
**ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி**
**உள்ளதனை உள்ளபடி உணரஉரைத் தனையே**
**ஏதமற உணர்ந்தனன்வீண் போதுகழிப் பதற்கோர்**
**எள்ளளவும் எண்ணம்இலேன் என்னொடுநீ புணர்ந்தே**
**தீதறவே அனைத்தும்வல்ல சித்தாடல் புரிவாய்**
**சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.**

-6 (இடை) திருஅருட் புகழ்ச்சி 8

வேதாகமங்களெல்லாம் சாலம் என அடிகளுக்கு உரைத்த இறைவன், அவற்றின் சொற்பொருளும் இலக்கியமும் பொய் எனக் கண்டறியேல், வேதாகமங்களின் உண்மை நினக்காகும், உலகர் அறிந்த வேதாகமம் பொய் எனக் கண்டுணர்வாய் எனவும் உரைத்தருளினான்.

**இயல்வேதா கமங்கள்புரா ணங்கள் இதிகாசம்**
**இவைமுதலா இந்திரசா லங்கடையா உரைப்பார்**
**மயல்ஒருநூல் மாத்திரந்தான் சாலம்என் அறிந்தார்**
**மகனேநீ நூல்அனைத்தும் சாலம்என அறிக**



RangaRakes tamilnavarasam.com

**செயல்அனைத்தும் அருள்ஒளியால் காண்கஎன எனக்கே**
**திருஉளம்பற் றியஞான தேசிகமா மணியே**
**அயல்அறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற**
**ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.**

**தோன்றியவே தாகமத்தைச் சாலம்என உரைத்தேம்**
**சொற்பொருளும் இலக்கியமும் பொய்எனக்கண் டறியேல்**
**ஊன்றியவே தாகமத்தின் உண்மைநினக் காகும்**
**உலகறிவே தாகமத்தைப் பொய்எனக்கண் டுணர்வாய்**
**ஆன்றதிரு அருட்செங்கோல் நினைக்களித்தோம் நீயே**
**ஆள்கஅருள் ஒளியால்என் றளித்ததனிச் சிவமே**
**ஏன்றதிரு அமுதெனக்கும் ஈந்தபெரும் பொருளே**
**இலங்குநட தரசேஎன் இசையும்அணிந் தருளே.**

**-6 (இடை) அருள்விளக்கமாலை 87;88**

இந்து வேதாகமங்களில் மாத்திரந்தான் ஏமசித்தி ஞானசித்தி முதலிய சித்திகளைச் சொல்லியிருக்கின்றது. மற்ற எந்தச் சமயங்களிலும் மேற்படி சித்திகளையும் சாகாத கல்வியையும் சொல்லவில்லை. ஒருவேளை அப்படி யிருக்கிறதாகக் காணப்படுமாகில் அது இந்து வேதாகமங்களில் சொல்லி யிருப்பதன் ஏக தேசங்களென்பது உண்மை.

-உபதேசப்பகுதி, பக்கம் 68

இந்து வேதாகமங்களில் என்றது இருக்கு முதலிய வேதங்களை மட்டுமன்று; தேவார திருவாசக முதலிய திருமுறைகளையும் தமிழ்ச் சாத்திரங்களையும் சேர்த்தேயாகும். மற்ற எந்தச் சமயங்களிலும் என்றது ஏனைய புறச் சமயங்களை.

வேத, ஆகம, புராண, சாத்திரங்களை அடிகள் முற்றிலும் கொள்ளவுமில்லை. முற்றிலும் தள்ளவுமில்லை. கொள்ளற்குரிய அளவுகொண்டனர். தள்ளற்குரிய அளவு தள்ளினர். ஒரு பழுத்த சைவ சித்தாந்தி, சிறந்த சன்மார்க்கி, அனுபவ ஞானி எவ்வளவுக்கு வேதாகமங்களைக் கொள்ளலாகுமோ அவ்வளவுக்குக் கொண்டனர். எவ்வளவுக்குத் தள்ளலாகுமோ அவ்வளவுக்குத் தள்ளினர்.

### சமாதி வற்புறுத்தல்

உயிர் நீங்கிய உடலைப் புதைக்கிறோம், அல்லது எரிக்கிறோம். எரிக்கக்கூடாது, புதைக்கவேண்டும் என்பதே வள்ளற்பெருமானின் கொள்கை. இதைக் குறித்து அடிகள் ஒரு பதிகமே அருளிச் செய்திருக்கிறார்கள். 'இனிச்சாகும் பிணங்களே' என்றும், 'கண்கெட்ட மாட்டினீரே' என்றும், 'இழுதை யீரே' என்றும், புதைப்பவரைச் சாடுகின்றனர். 'பரன் அளிக்கும் தேகம் இது, சுடுவது அபராதம், சுட்டால் அதுதான் கொலையாம்' என அடிகள் கூறுவர்.

**அணங்கெழுபேர் ஓசையோடும் பறையோசை**
**பொங்கக்கோ ரணி கொண்டந்தோ**
**பிணங்கழுவி எடுத்துப்போய்ச் சுடுகின்றீர்**



RangaRakes tamilnavarasam.com

இனிச்சாகும் பிணங்க ளேநீர்
கணங்கழுகுண் டாலும்ஒரு பயனுண்டே
என்னபயன் கண்டீர் சுட்டே
எணங்கெழுசாம் பலைக்கண்டீர் அதுபுன்செய்
எருவுக்கும் இயலா தன்றே.

குணம்புதைக்க உயிரடக்கம் கொண்டதுசுட்
டால்அதுதான் கொலையாம் என்றே
வணம்புதைக்க வேண்டும்என வாய்தடிக்கச்
சொல்லுகின்றேன் வார்த்தை கேட்டும்
பிணம்புதைக்கச் சம்மதியீர் பணம்புதைக்கச்
சம்மதிக்கும் பேய ரேநீர்
எணம்புதைக்கத் துயில்வார்நும் பாற்றுயிலற்
கஞ்சுவரே இழுதை யீரே.

பான்அளிக்கும் தேகம்இது சுடுவதப
ராதம்எனப் பகர்கின் றேன்நீர்
சிரம்நெளிக்கச் சுடுகின்றீர் செத்தவர்கள்
பற்பலரும் சித்த சாமி
உரனளிக்க எழுகின்ற திருநாள்வந்
தடுத்தனஉ துணர்ந்து நல்லோர்
வரனளிக்கப் புதைத்தநிலை காணீரோ
கண்கெட்ட மாட்டி னீரே.

-6(முடி) பரன் அளிக்கும்தேகம் சுடுவதபராதம் எனல் 6,7,9

பிணத்தைப் புதைப்பது எரிப்பது இவ் இரண்டுமே உலகெங்கும் உள்ள பழக்கம். இரண்டைப் பற்றிய குறிப்புகளும் சங்க நூல்களில் உள்ளன. இரண்டுமே பழைமையானதேனும் புதைப்பதே மிகப் பழமையானது. மிகப் பழங்காலத்தில் உலகெங்கும் புதைக்கும் வழக்கமே இருந்தது. பின்னாளில்தான் எரிக்கும் வழக்கம் வந்தது. கிறித்தவர்கள் புதைக்கிறார்கள். இஸ்லாமியர்கள் புதைக்கிறார்கள். இவ்விருவரும் எரிப்பதில்லை. இந்துக்களாகிய நாம் இரண்டும் செய்கின்றோம். கிறித்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடுகாடு மட்டுமே உண்டு. நமக்கோ இடுகாடு சுடுகாடு இரண்டும் உள்ளது. நம்மிலும் துறவிகள் இறந்தால் சமாதி செய்கிறோம், எரிப்பதில்லை. குழந்தைகள் இறந்தால் புதைக்கிறோம். மணமாகாத கன்னிப் பெண்கள் இறந்தால் புதைக்கிறோம். சுமங்கிலிகள் இறந்தால் புதைக்கிறோம். அம்மை நோயால் இறந்தவர்களைப் புதைக்கிறோம். ஆயினும் புதைப்பது சிறுபான்மையாகவேயிருக்கிறது. எரிப்பதே பெரும்பான்மையாக உள்ளது. இறந்த பின் எப்படிச் செய்தாலென்ன எனச் சிலர் அமைதியடைகின்றனர். சிலர் தங்கள் குலம் அல்லது குடும்பத்தின் நீண்ட நாள் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகின்றனர். நீண்டநாள் பழக்க வழக்கம், சந்தர்ப்பம், சூழ்நிலை இவற்றைவிட்டுக் கொள்கை என்ற அளவில் இனி ஆராய்வோம்.

வள்ளல் பெருமானுடைய கொள்கை பிணத்தைப் புதைப்பது. இதனைப் பெருமான் வற்புறுத்திக் கூறுகின்றார்கள், இடித்துக் கூறுகின்றார்கள். பொதுவாக அனைவர்க்கும் கூறியதோடமையாது தருமச்சாலை சம்பந்தமுடையவர்களுக்குக்

கட்டளை யொன்றை எழுதியும் இதனை வற்புறுத்தியுள்ளார்கள். சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக் கட்டளை என அது வழங்குகிறது. பிணத்தைச் சுடக்கூடாதென்பதற்கு அடிகள் கூறும் காரணம் மூன்று. 1.இதுபரன் அளிக்கும் தேகம். சுடுவது அபராதம். 2. சிட்டால் அதுதான் கொலையாம். 3. இறந்தவர்கள் திரும்பவும் எழுந்து வருவார்கள். சுடுவது அபராதம் என்பது ஒருவாறு விளங்குகிறது. பிணத்தைச் சுடுவது எங்ஙனம் கொலை ஆகும் என்பது விளங்கவில்லை. இறந்தவர்கள் எல்லாரும் திரும்ப எழுந்து வருவார்கள் என்பதும் விளங்கவில்லை. உயிரோடு இருப்பவரை எரிப்பின் அது கொலையாகும். பிணத்தைச் சுடுவது கொலையாதல் எங்ஙனம்? விளக்கம் வேண்டுமன்றோ?

உடம்பு 96 தத்துவங்களால் ஆனது. (தத்துவம் 36+தாத்துவிகம் 60). பூதம் 5, ஞானேந்திரியம் 5, தன்மாத்திரை 5, கன்மேந்திரியம்5, அந்தக் கரணம் 4, ஆக ஆன்ம தத்துவம் 24. வித்தியா தத்துவம் 7, சுத்த தத்துவம் 5, ஆக தத்துவம் (உட்கருவிகள்) 36.

பிருதிவியின் கூறு 5, அப்புவின் கூறு 5, தேயுவின் கூறு 5, வாயுவின் கூறு 5, ஆகாயத்தின் கூறு5, நாடிகள் 10, வாயுக்கள் 10, ஏடணை 3, வாக்காதியின் வழி தொழில் 5, குணம் 3, வாக்கு 4, ஆக தாத்துவிகம் (புறக்கருவிகள்) 60. ஆகத் தத்துவங்கள் 36+60=96.

தத்துவம் 96-ல் புறக்கருவி 60-ல் வாயுக்கள் 10 எனப் பார்த்தோம். அவை: 1.பிராணன், 2.அபானன், 3.உதானன், 4.வியானன் 5.சமானன், 6.நாகன், 7.கூர்மன், 8.கிரிகரன், 9.தேவதத்தன் 10.தனஞ்செயன், இவை தசவாயுக்கள் எனப்படும். இவற்றின் தொழில்:

பிராணன்: மூலாதாரத்தில் தோன்றி இடைகலை பிங்கலையாக ஏறிக் கபாலத்தளவுஞ் சென்று நாசியில் 12 அங்குலம் புறப்பட்டு, 4 அங்குலம் வெளியே போய் 8 அங்குலம் உள்ளே அடங்கும். இவ்வாறு ஒரு நாளைக்கு 21600 சுவாசம் நடக்கும். இதில் 7200 வெளியே செல்லும் 14400 உள்ளே அடங்கும்.

அபானன்: குதத்தில் நின்று மல சலங்களைக் கழிப்பிக்கும்.

உதானன்: விக்கல் இருமல் செய்யும்.

வியானன்: உண்ட உணவின் சாரத்தை 72000 நாடிகளிலும் கலப்பிக்கும்.

சமானன்: எல்லாவற்றையும் சமன் செய்யும்.

நாகன்: இருமல் தும்மல் உண்டாக்கும்.

கூர்மன்: கண்ணேறறல் செய்யும்.

கிரிகரன்: சோம்பல், கொட்டாவி உண்டாகும்.

தேவதத்தன்: இமைத்தல் நகைத்தல்களைச் செய்யும்.



RangaRakes tamilnavarasam.com

தனஞ்செயன்: உடம்பை வீங்கவும் விரியவும் செய்து உயிர் நீங்கிய காலத்தில் கபாலத்தைப் பிளந்து செல்லும்.

பத்து வாயுக்களுள் முதல் வாயுவான பிராணன் அடங்கியவுடன் உடம்பு பிணமாகிறது. தனஞ்செயன் தவிர மற்ற 95 தத்துவங்களும் அடங்கிவிடுகின்றன. தனஞ்செயன் மட்டும் உயிர்நீங்கிய உடம்பினுள் மூன்றுநாள் வரை இருக்கும். உடம்பை (பிணத்தை) வீங்கவும் விரியவும் செய்யும். உயிர்போன பின்னும் பிணம் வீங்கக் காண்கிறோம். வீரியக் காண்கிறோம். வீங்கச் செய்வதும் விரியச் செய்வதும் இத்தனஞ் செயனே. இப்படி மூன்று நாள் இருந்து மூன்றா நாள் மண்டையை நெல் அளவு பிளந்துகொண்டு தனஞ்செயன் வெளியேறும். உயிர் நீங்கிய உடம்பில் (பிணத்தில்) 95 தத்துவங்கள் தொழிற்படாவிடினும் தனஞ்செயனாகிய ஒரு தத்துவம் (96வது தத்துவம்) தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறாது. அது மூன்று நாள் வரை தொழிற்படும். அதன்மேல் அதுவும் தொழிற்படாது. மூன்றாநாள் கபாலத்தைப் பிளந்து வெளியேறும். பிணத்தைச் சுடும்போது உடல் நாடமாகி உள்ளிருக்கும் தனஞ்செயன் வலிய வெளியேற்றப்படுகிறது. சிரம் நெளிக்கச் சுடுகின்றீர் என்று அடிகள் கூறியதன் கருத்து இதுவாகலாம். புதைக்கப்படின் அது தானாக வெளியேறும். சுடுவதனால் நம்மையறியாது நாமே அதனை வெளியேற்றிய வர்களாகிறோம். இதனால்தால் சுடுவது கொலையாகும் என அடிகள் கூறினர் போலும். மூன்று நாளுக்குப் பின் சுடுவோமென்றால் மூன்று நாள் வரை வைத்திருக்க இயலாதன்றோ?

புதைப்பது நன்றா? எரிப்பது நன்றா? என்ற வினா மேலை நாடுகளிலும் உள்ளது. அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் இதைப் பற்றித் தீராத விவாதஞ் செய்துகொண்டிருக்க, தத்துவ ஞானியாகிய நமது அடிகள் புதைக்க வேண்டுமென்று கட்டளையிட்டுள்ளனர். அடிகளின் கட்டளையை அப்படியே ஏற்றுக் கடைப்பிடிக்க வேண்டுமே யொழிய ஆராய்ந்து ஏற்போம் என்பது சரியாகாது. முற்றறிவினராகிய அடிகளது வாக்கெல்லாம் பதிவாக்குகளே யாகும்.

## குறையை இறைவனிடத்து விண்ணப்பிப்போம்

ஒருகால் அடிகளின் தமையனார் சபாபதிபிள்ளையின் மருகர் புராணிகர் பொன்னேரி சுந்தரம்பிள்ளை தமது வறிய நிலையை அடிகளிடம் விண்ணப்பித்து வருந்தினார். அவரது குறையைக் கேட்ட அடிகள், நீ முன்னே தில்லை நகர்க்குச் சென்று ஆனந்தத் தாண்டவங்கண்டு அங்கே இரு, நானும் இரண்டொருநாளில் வருகிறேன், நம் இருவர் குறைகளையும் இறைவனிடம் விண்ணப்பித்து நீக்கிக்கொள்ளலாம். வருந்தாதே என்றொரு பாடலைப்பாடி அளித்துத் தேற்றி அனுப்பினர்.

**திருவோங்கு பொற்சபையுஞ் சிற்சபையு**
**நம்பெருமான் செய்யா நின்ற**
**உருவோங்கும் ஆனந்தத் தாண்டவமுங்**
**கண்டினிதாங் குறைக யானுந்**
**தருவோங்கு தில்லைநகர்க் கோரிருபா**
**னாள்வரைக்குட் சார்கின் றேன்நம்**
**இருவோங்கள் குறையுமிறைக் குரைத்தகற்றிக்**
**கொளலாநீ யிளையே லையா.**



RangaRakes tamilnavarasam.com

பாடலைப் பெற்ற சுந்தரம் பிள்ளை தில்லை சென்றார். இரண்டொரு நாளில் அடிகளும் சென்றனர். இருவரும் கூத்தப்பெருமானை வழிபட்டனர். அடிகளோடு இருந்து வழிபடும் பேற்றைச் சுந்தரம் பிள்ளை பெற்றார். அடிகளிடம் அவர் விண்ணப்பித்த குறையும் சின்னாளில் நீங்கிற்று.

## குடும்பகோரம்

வள்ளற்பெருமான் சென்னையில் திகழ்ந்த காலத்தில் திருமழிசை வைத்தியலிங்க தேவர் என்னும் அன்பர் ஒருவர் பெருமானிடத்து அன்பு பூண்டொழுகினார். அவரது மகன் முத்துசாமி முதலியாரும் பெருமானை வழிபட்டு அன்பு பூண்டொழுகினார். இம்முத்துசாமி முதலியார் சிவபெருமான் மீது தோத்திரப் பாக்கள் சிலவற்றைச் செய்து பெருமானிடம் அவற்றைக் காண்பித்தார். கண்ணுற்ற பெருமான் அவரது பக்தியையும் பாடல்களையும் பாராட்டிச் சாற்றுக் கவியொன்றையும் அருளினர். அச்சாற்றுக்கவி வருமாறு:

**ஒருவகைப் பொருள்தெரித் துயவுதீர்**
**மறைகள்நான் கொன்றி வாழ்க**
**உயரரன் தரும்ஏழு நான்கதாம்**
**ஆகமம் உலகின் மல்க**
**இருவகைப் பவம்ஒழித் திலகும்வெண்**
**நீற்றினம் எங்கும் ஓங்க**
**இணையில்நல் அறமுன்ஆம் பயன்ஒரு**
**நான்கும் ஈடேறி வெல்க**
**பொருவலற் றரையர்எத் திசையுளும்**
**நீதியால் பொலிக யாரும்**
**புகழ்சிவாத் துவிதசித் தாந்தமெய்ச்**
**சரணர்எண் புல்க நாளும்**
**திருஅருட் பனுவல்சொற் றிடும்அவர்க்**
**கெண்திரு சேர்க வாதைச்**
**செப்பு முத்துச்சுவா மிக்கவிக்**
**குரிசில்சீர் செழிக மாதோ.**

வள்ளற்பெருமான் வடலூர்ப் பெருவெளியில் எழுந்தருளிய காலத்தில், சென்னையில் இம்முத்துச்சாமி முதலியாருக்குத் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு எழுந்தருளி வாழ்த்தியருள வேண்டுமென முத்துசாமி முதலியார் பெருமானை வேண்டினர். திருமணம் போன்ற உலகியல்களில் கலந்துகொள்ளும் நிலையில் பெருமானது திருவுள்ளம் அக்காலத்திலில்லை. ஆதலின் பெருமான் திருமணத்திற்குச் சென்றாரல்லர். பெருமானது திருக்கரத்தால் திருநீறளிக்கப்பெற்றிலனே என்று முத்துசாமி முதலியார் வருந்தினார். அவரது வருத்தத்தை அறிந்த பெருமான் திருமணத்திற்குத் தாம் வரத்தடையாயிருந்தவை இவையெனக் கூறி நீண்டதோர் செய்யுட் கடிதத்தை முத்துசாமி முதலியார்க்கு வரைந்து விடுத்தனர். நானூற்றுப் பன்னிரண்டடிகளையுடைய நிலைமண்டில ஆசிரியப்பாவால் இயன்ற அச் செய்யுள் திருமுகம் வருமாறு:



RangaRakes tamilnavarasam.com

## குடும்ப கோரம்

திருவளர் கமலக் குருமலர் தவிசினன்
முதற்பெருந் தேவர் மூவரும் பணியப்
பொதுவிடைத் திருநடம் புரியுநம் பெருமான்
அடிமலர்க் கன்புசெய் அன்பர்கட் கன்பன்

சீர்விளை தூய்மை நீர்விளை யாடிச்
சொற்றரு வாய்மைப் பொற்றுகில் உடுத்துக்
கரிசில்வெண் ணீற்றுக் கவசந் தரித்துத்
தத்துவ சிற்பர சற்குண அகண்ட
பூரண சச்சித போதா னந்த

அற்புத சிற்குண அங்கலிங் கேச்சனை
அகத்தும் புறத்தும் அருச்சனை புரிந்து
சிவந்தரு சுகமெனுந் திருவமு துண்டு
சீலம் எனுந்தாம் பூலந் தரித்தே
அளவில் இன்பம் அனுபவிக் கின்றவன்

மூதறி வாளன் முத்துச் சாமியென்
றியற்பெய ருடையவித் திருவா ளனுக்கு
இராம லிங்கம் எழுதி விடுத்த
மயலுறு சோபன வாசகம் ஆவது:-
ஐயநின் புடையிப் பொய்யனேன் போதர

தடைபல உளவை சாற்றிட என்றால்
ஆயிரங் கோடிநா வாயினும் முடியா
இருந்து மற்றவை எண்ணிட என்றால்
உள்ளம் உடம்பெலாம் கொள்ளினும் போதா
எழுதவென் றாலும் ஏட்டுக் கடங்கா

என்னினுஞ் சிறிதே எழுதத் துணிந்தனன்
(புருஷன்)
என்னெனின் யான் ஓர் ஏழை என்பதும்
தெளிவிலாச் சிறியரிற் சிறியனேன் என்பதும்
இன்புடை அறிவே இல்லை என்பதும்
அன்புடை யாய்நீ அறியாத தன்றே

(அவள் முதன் மனைவி)

செம்பொடு களிம்பு செறிந்தது போன்றோர்
ஆணவக் கிழத்தி அநாதியில் இறுகப்
பிரமரா க்ஷசிபோற் பிடித்துக் கொண்டனள்
சிவபூ ரணத்தைச் சிறிதுங் கொண்டனன்
ஜெகமெனும் ஏக தேசமுந் தெரிக்காள்

எவ்விடத் திருளும் என்னகச் சுவரெனக்
கனவிருள் வடிவங் காட்டுங் கொடியாள்
இரவிது பகலிது இன்பிது துன்பிது
ஒளிவெளி இதுவென ஒன்றுந் தெரிக்காள்
இறுக்கும் அரக்கி இவளொடும் இருந்தே

எளியேன் முயங்கிடல் என்தவம் என்கோ
(அவள் பெற்ற பிள்ளை)
முற்றும் அஞ்ஞான மூடப் பிள்ளை
ஒருவன் பிறந்தனன் ஓடிவான் அவன்றனால்
பாநுவின் ஒளியைப் படரிருள் மூடல்போல்
என்னகக் கண்ணையும் என்புறக் கண்ணையும்

அங்கையால் மூடி அலக்கழிப் பானெனைத்
தன்னையின் னானெனத் தானுங் காட்டான்
என்னையின் னானென எண்ணவு மொட்டான்
ஏடுறும் எண்ணும் எழுத்தும் உணரான்
தாயினுங் கொடியன் ஆயினும் என்றன்

விதியை நொந்து விருப்பின் வளர்த்தேன்
இவன்றன் வாழ்க்கையும் வாழ்க்கையோ என்ன
மதிப்பவர் ஆரெனை வையகம் மகிழ்ந்தே
வையக மகிழ்ச்சி வையகம் நெருப்பாம்
மருளுறு சிறுவன் வளர்நாள் தொடுத்தே

உறவகன் றார்யான் அறிவகன் றிட்டேன்
(அவனுடைய இரண்டாம் மணவினைக் கர்த்தா)
செப்புறுந் தெய்வச் செயலென் கேனோ
இருதொ டக்குகள் இயலா தென்றே
தொடக்குப் பற்பல அடுக்கடுக் காயின
ஆரோ பசுபதி அவன்வடி வழலாம்

அங்கண் மூன்றாம் அருட்சத்தி மானாம்
மண்ணும் விண்ணும் மாலய னோரால்
நேடியுங் காணா நீள்பத முடியனாம்
எழுமலை எழுகடல் எழுபுவி எழுகார்
ஆன எவையும் அளித்துநோக் குவனாம்

ஊர்தரும் மாருதம் உயிர்ப்பாய் உளனாம்
உயிரெழு வகுப்பையும் ஊட்டியுறக் குவனாம்
ஊழிகள் தோறும் உள்ள ஒருவனாம்
உரைகொண் டோதரும் உயர்வே தாகமம்
உற்ற கலைகள் உயரிய நிலைகள்

அண்ட பிண்டம் அவற்றின் துறைகள்

சாரும் இறைகள் சராச ரங்கள்
வளமுறு வர்ணா சிரம வகைகள்
வகுக்குறு வகுப்பினும் வதிவாழ்க் கையனாம்
சதிர்மா மாயை சத்திகள் கோடி

மன்னிய அறங்கிடை வதிபெற் றியனாம்
அவன்றான் யாரோ அறியேன் யானே
அறிதர வேண்டும் அப்பரு வத்தே
மாயை என்னும் மாதினைக் கொணர்ந்தே
சிறுகருங் காக்கைக் குறுகுறுங் கழுத்தில்

கனம்பெறு பனங்காய் கட்டிய வாறெனக்
கட்டிப் புண்ணியங் கட்டிக் கொண்டனன்
(அவன் இரண்டாம் மனைவி)
விடுத்தெனைப் புண்ணியன் விலகலும் அவள்தான்
விண்ணவர் மண்ணவர் வியக்கும் உருக்கொடு
கொள்ளிவாய்ப் பேய்களோர் கோடி நின்றே

தடித்த குழவியைப் பிடித்தது போல
மற்றவள் என்னை மணந்து கொண்டனள்
பெண்ணடை அனைத்தும் பெருங்கதை யாகும்
அடுத்தவர் என்னை அந்தோ கொடிய
அருந்தளை ஏனென அறைந்தெனை அகன்றனர்

அகமெலாம் பகீரென அனந்த உருவாய்
அவ்வவ் வுருகொண் டணைத்துக் கெடுப்பள்
காற்றினை ஒருசிறு கரகத் தடைப்பள்
கடலே ழினையுங் கடுகிடை முகப்பள்
வகைவகை யாயுடல் வணைந்து வகுப்பள்

வையக முற்றும் வாயில் மடுப்பள்
பகலிடை நள்ளிருள் இருக்கப் பண்ணுவள்
இருளில் பானுவை எவர்க்குங் காட்டுவள்
அண்டம் எல்லாம் அணுவிற் செறிப்பள்
அணுவை அண்டமாய் ஆக்கி நகைப்பள்

பொய்யை மெய்யாப் பொருந்தி மகிழ்வள்
பொருந்தும் மெய்யைப் பொய்யாச் செய்வள்
அடர்வஞ் சகக்கழங் காடற் பிரியாள்
காணாப் பன்னிலை கலையுடன் காட்டுவள்
இருளை இரிக்கும் இந்து ரவிகளைப்

படைத்திங் கியற்றுவள் பற்பல ஜாலம்
பிரமனை வலக்கைப் பிடிக்குள் அடக்குவள்
இடக்கையில் மால்பதி ஏந்தித் தரிப்பள்

தலையிடை உருத்திரன் தன்பதி தெரிப்பள்
குளிரெழு கடலிவள் குளிக்குந் தடமே

அண்ட மெல்லாங் கொண்டையில் முடிப்பள்
ஜெகமெலாங் கலைக்குள் சேர்த்துக் கட்டுவள்
உடம்பிடை உரோமம் ஒவ்வொன் றிடையே
புவனமொன் றாகப் பொருந்தச் சமைப்பள்
எவரையுங் கணத்தில் எய்தி மயக்குவள்

இக்கொடும் பாவி என்மனை யானது
பிடாரியைப் பெண்டாய்ப் பெற்றது போலும்
அனுகூ லச்சொலை அகத்திடை மதியாள்
அடிமடி பிடிப்பாள் அரியவம் பிசைப்பள்
உறங்க விடாளவள் உறங்குபாய் சுருட்டாள்

மடிமாங் காயிடுங் கொடுமைக் கிளையாள்
சாகவும் விடாளவள் சார்பழி தளராள்
தவத்தில் இசையாள் பவத்தின் நசையால்
மருட்பேய் என்ன மதித்திட வாட்டிப்
படைத்தென் மானம் பறக்கச் செய்வள்

மான மகற்றியும் மனைவிட் டேகாள்
இரவும் பகலும் எனையிழுத் தணைப்பள்
இவளாற் படுமிடர் இம்மட் டிலவே
புகலப் படுமோ புகலின் இருசெவி
பொருந்துளங் கைத்திடும் போதும் போதும்

மல்லாந் துமிழின் மார்பின் மேலெனச்
சொல்லுவர் அதனாற் சொல்வது மரபல
(அவள் பெற்ற பிள்ளைகள் மூத்த பிள்ளை)
கொடுந்தவம் புரிந்தொரு குரங்குபெற் றாற்போல்
மலைக்கப் பெற்றிட மனம் எனும் இளைஞன்
உலக்கைக் கொழுந்தென ஒருவன் பிறந்தனன்

வருமிவன் சேட்டை வகுக்கவாய் கூசும்
விதிவிலக் கறியா மிகச்சிறிய னாயினும்
விண்மண் நடுங்க வினைகள் இயற்றிக்
காமக் குழியில் கடுகிப் படுகுழி
விழுமதக் களிறென விழுந்து திகைப்பன்

பதியை யிழந்த பாவையின் செயல்போல்
கோபவெங் கனலிற் குதித்து வெதும்புவன்
நிதிகவர் கள்வர் நேரும் சிறையென
உலோபச் சிறையில் உழன்று வாழ்வன்
வெற்பெனும் யானையை விழுங்கும் முதலை


RangaRakes tamilnavarasam.com

முழுகிக் கடலில் முளைத்திடல் போல
மோகக் கடலில் மூழ்கி மயங்குவன்
மதுகுடித் தேங்கி மயக்குறு வார்போல்
மதத்தால் வீறி மதங்களில் வியப்பன்
பட்டினி இருக்கும் வெட்டுணிபோல

மச்சரங் கொண்டு மகிழ்கூர்ந் தலைவன்
காசில் ஆசை கலங்குறா வேசை
எனினும் விழிமுனம் எதிர்ப்படில் அக்கணம்
அரிய தெய்வமென் றாடுவன் பாடுவன்
அணிகள் அணிவன் எரிநாய் போலச்

எலும்பைச் சுரண்டும் எரிநாய் போலச்
சுற்றுவன் பற்றுவன் தொழுவன் எழுவன்
கணத்தில் உலகெலாங் கண்டே இமைப்பில்
உற்ற விடத்தில் உறுவன் அம்மா
சேய்மை எல்லாஞ் செல்லற் கிளையான்

பித்தோங் கியவுன் மத்தனாய்த் திரிவான்
சொல்வழி நில்லான் நல்வழி செல்லான்
சேர அழைக்கில் சிரத்தே ஏறுவன்
வெட்டிலுந் துணியான் கட்டிலுங் குறுகான்
மலக்கி ஈன்ற மாதினும் பாவி

கள்ளது குடித்துத் துள்ளுவான் போல
மதத்தாற் பொங்கி வழிந்து துள்ளுவன்
முத்தந் தரல்போல் மூக்கைக் கடிப்பன்
மறைசொல் வான்போல் வளர்செவி கிள்ளுவன்
சாற்றும் இரங்கான் தனித்துயில் கொள்ளான்

கூவிளிச் செய்வன் கூடுவன் பலரை
கூவி அதட்டினும் கோபங் கொள்வான்
இங்கு முள்ளான் அங்கு முள்ளான்
படைக்கு முன்னே பங்கு கொள்வான்
மடியில் நிறுத்தி வாய்மை வழங்கினும்

வண்ணான் கல்லிடை வறிஞர் சீலையை
ஒலித்திடல் போல உரத்திக் கத்துவன்
என்னைத் தாதையென் றெண்ணான் சொல்லும்
வாய்மை எல்லாம் வண்புனல் ஓவியம்
ஆகக் கொள்வான் அவன்பரி சுரைக்கேன்

பிறந்தவிப் பாவி இறந்தான் இலையே
சென்றநாள் எலாமிச் சிறுவனால் அன்றோ
வருசுகங் காணா வைச்சுமை நேர்ந்தேன்
திறந்திவன் செயலைத் தினைத்துணை விடாது



RangaRakes tamilnavarasam.com

செப்பின் கற்கள் சிதைந்து கசியும்

கனத்த மரங்கள் கண்ணீர் பொழியும்
கடவுளர் இவன்செயல் காணு வாரேல்
இமையாக் கண்களை இமைத்திடு வாரால்
(இரண்டாவது பிள்ளை)
காசிபன் மனைவிமுன் கடுந்தவம் புரிந்து
பையுடைப் பாம்பைப் பயந்தது போன்று

புத்தி என்னும் புத்திரன் றன்னை
ஈன்றனள் அவனோ எளியரில் எளியன்
வாய்மையுந் தூய்மையும் வதிதரு வாழ்க்கையன்
தாயொடும் பழகான் தமையனோ டணையான்
தறுக ணாளரிற் குறுகியுற வாடான்

பாவம் என்னிற் பதறி அயர்வான்
பாடு படற்குக் கூடான் உலகர்
கயங்கு நெறியில் உயங்கி மயங்குவன்
பாழ்நிகர் புந்தியர் பாலிற் பொருந்தான்
எப்பா டும்படான் எவரையுங் கூடான்

கபடரைக் காணிற் சாதம் போவான்
கங்குலும் பகலுங் கருதுவிவ காரத்
தடத்திடை வீழ்ந்து தயங்குறு நயங்கள்
சாருவன் கூறுவன் தருக்குவன் எவைக்கும்
அடங்குவன் வறிதே அமைதல் இல்லான்

இவனை மடியில் இருத்தித் திடமொழி
செப்பிடச் சோர்வு செறிவு தெனக்கே
இவன்பாற் செய்வ தேதும் அறியேன்
(மூன்றாவது பிள்ளை)
செறிதரு கோளுன சேயிழை யாள்பினும்
நையப் புணர்ந்து நாள்பட வருந்தி

நாடி நாடி நாயையீன் றதுபோல்
உணர்விலி என்றே உலகர் ஓதும்
சித்தம் என்னுஞ் சிறிய குழவியைப்
பயந்து கரத்திற் பதற எடுத்தனள்
கரைதரு விண்ணீர்க் கடிதடம் ஆகக்

கதிர்விடும் உடுக்கள் கறங்குமீ னாக
மதியைத் தாமரை மலராய் மதித்ததில்
மூழ்கப் பிடிக்க முன்னங் கொய்திட
எண்ணுவன் எழுவன் எட்டுவன் சிறிதும்
நேரா திளைத்தே நிலைகள் பற்பல


RangaRakes tamilnavarasam.com

வான்கண் டவன்போல் வாயாற் கொஞ்சுவன்
எனையுங் கூவுவன் இவனிடர் பலவே
இடர்பல இயற்றி இழுக்குங் கொடியன்
(இளைய பிள்ளை)
இவன்செயல் நிற்க இவன்தாய் வயிற்றில்
தாருகன் என்னுந் தறுகன் களிற்றைத்

தந்தமா யைக்குத் தனிமூத் தவளாய்
அகங்காரம்எனும் அடங்காக் காளை
அவனி மூன்றும் அதிர்ந்து கவிழக்
கடைமுறை பெற்றுக் களித்தனள் அவன்செயல்
கருதவும் பேசவும் கனிவாய் கூசுமே

கூற்றுவர் கோடி கொண்டுதித் தாலென
முளைந்து வளர்ந்தனன் மூத்தவன் மூழை
இளையவன் காளை எனுமிலக் கியமாய்
முன்னுள மூவரை மூடுகி ஈர்த்தே
எண்ணில் விளையாட் டெழுப்புந் திறத்தன்

எல்லா ஆற்றலும் என்பால் உளதெனத்
தருக்குவன் இவன்றன் சங்கடம் பலவே
தன்னைத் தானே தகைமையில் மதிப்பன்
தரணியிற் பெரியார் தாமிலை என்பான்
மாதின் வயிற்றில் வந்தவன் எனாது

தானே பிறந்த தன்மைபோற் பேசுவன்
விடியும் அளவும் வீண்வா திடுவன்
வாயால் வண்மை வகைபல புரிவன்
ஓதவன் பெருமை ஈதவன் இயல்பே
சொல்லினுங் கேளாத் துரியோ தனனென

வானவர் தமக்கும் வணங்கா முடியன்
முன்வினை யாவும் முற்றுந் திரண்டே
உருக்கொடிங் கியம்பொணா ஊறுகள் இயற்றுவன்
பிள்ளையும் அல்லன் கொள்ளியும் அல்லன்
இன்னும் இவன்செயும் இடர்பல வற்றை

எவர்பாற் சொல்லி என்துயர் ஆற்றுவேன்
(அவனது மூன்றாம் மணவினைக் கர்த்தாவும்
மூன்றாம் மனைவியும்)
பாதகி துன்பம் பவக்கடல் ஏழும்
மக்கள் துன்பம் மலையோர் எட்டும்
நீளல்போ தாதென நெஞ்சில் நினைத்தோ
அவளது சூழ்ச்சி அற்புதம் அற்புதம்

தொல்லை மரபில் தொழில்பல கற்ற


RangaRakes tamilnavarasam.com

உலவுறு காமிய ஒண்டொடி என்னும்
கபடவஞ் சகியாங் களத்தினைக் கொணர்ந்து
பேய்பிடித் தவன்பாற் பெரும்பூதங் கூட்டித்
தான்மணந் ததுபோ தாதிங் கென்றுபின்

மாற்றுகா லுக்கு மறுகால் ஆக
மாட்டி மிகமன மகிழ்ந்தாள் கூர்வேல்
கண்ணினை யாணெடுங் கடல்சூழ் உலகில்
நிறைந்துள யாரையும் நெருங்குவள் கணத்தில்
இவள்செயும் வீரம் எண்ணி விளம்ப

உடலெலாம் நாவாய் உறினும் ஒண்ணா
ஒருத்தியே இரண்டங் குருகொடவ் வவற்றில்
பலவாய்ப் பலவுளும் பற்பல வாயுரு
பொருத்த முறவே புரிவலவ் வவற்றில்
பலகால் புணர்ந்து பயன்வலி போக்கி

ஒருருக் கரும்பும் ஒருருக் காஞ்சியும்
ஓருரு வமுதம் உண்ண வளிப்பாள்
விட்டிவை எல்லாம் பட்டினி யாக்குவள்
ஓருரு வடிவால் உயர்பஞ் சணைமேல்
அகமகிழ் சுரதம் அளித்துக் களிப்பள்

ஒருருத் தன்னால் உறுநிலப் பாய்மேல்
என்பு நோவ இழுத்தே அணைவள்
இங்ஙனம் பற்பல ஏழைக் குறும்புகள்
இயற்றி எவருமே ஏக்கங் கொளவே
இவள்முன் நம்செபம் என்றுஞ் சாயா

அரகர என்றே அரற்றி மெலிவேன்
(அவள் பெற்ற மூவர்)
இவ்வா றென்னை யிழைத்திடுங் கொடியாள்
முக்குண மூன்று மூவுரு எடுத்தே
மூவர் தமையுமம் மூவரும் அறியார்

வெலவரும் இவரால் மேலோடு கீழ்நடு
ஆய உலகும் அவ்வுல குயிரும்
பற்பல நெறியிற் பாடுபட்டாரெனில்
எளியேன் பாடிங்கியம்பவும்படுமோ
இவர்கடம் இயல்பை எண்ணவும் பயமாம்

பாரெலாந் தரமாய் பரவும் இவர்தாம்
ஏற்றுவார் இறக்குவார் எங்கு நடத்துவார்
இயற்றுவார் கீழ்மேல் எங்கு மாக
உவகை ஊட்டுவர் உறுசெவி மூடத்
திட்டுவர் பலவாய்த் திரண்டு திரண்டே

ஆற்றுறு மாற்றலை ஆற்றல் அரிதாம்
இவ்வுலக கதனில் என்கண் காண
ஆயிழை யாளை ஆய்ந்து மணந்த
நாளில் தொடங்கியிந் நாள்பரி யந்தம்
மனஞ்சலித் திடவே வலிய விலங்கினைத்

தாளி லிட்டுத் தயங்கி அலைந்தேன்
வீண்சஞ் சலமென விளம்புந் துகளை
முடிமூழ்க வாரி முடித்திட் டேனல்
ஈட்டிய பொருளால் இற்பசு வீந்தே
எருமை தன்னை அருமையா யடைந்தனோ

ஆற்ற முடிய தலைவேன் எனவும்
குறித்தங் கெடுத்திடுங் கூவல் நீரை
விழற்கு முத்தலை வேண்டிட் டிறைத்துத்
துணைக்கரஞ் சலித்தே துயருற்றேனோ
காற்றினும் விரைந்தே காரான் பாலைக்

கமரிடை ஏனோ கவிழ்த்துங் கலங்குவேன்
கலநீர் தன்னைக் கண்ணிற் சிந்திக்
கழறிக் குழறிக் கனியுடல் களைக்கச்
சிலைநேர் நுதலிற் சிறுவியர் வரும்ப
அருந்தொழிற் செய்திங் கடைந்த பொருளைச்

சிவபுண் ணியத்திற் செலவிற் கலவாது
பெண்சிலு குக்குப் பெரிதும் ஒத்தேன்
பகலு மிரவும் பாவிகள் அலைத்தனர்
இவர்கள் சல்லியம் ஏற்பவர் ஆரெனக்
கூக்குரல் கொண்டு குழறுவ னெழுவன்

கிணற்றில் மண்ணைக் கெல்லப் பூதம்
தோன்றிய தென்னுஞ் சொல்லை ஒத்தது
இவரு டாட என்னால் முடியுமோ
அவளுக் கிவள்தான் அறியவந் தாளெனும்
மூன்று மாதரும் முழுப்பாய் சுருட்டிகள்

இவர்களில் ஒருவரும் இசையவந் தாரலர்
இச்சை வழியே இணங்கி வலிவில்
மணமது கொண்டு வாழ்ந்து வருகையில்
சண்டன் மிண்டன் தலைவர் என்ன
புவிமிசைப் பாதகர் போந்திங் குதித்தனர்

இவரால் நேர்ந்த எண்ணிலாத் துயரைப்
பொறுப்ப தரிதாம் வெறுப்பது விதியே
பாவ மின்னும் பற்பல உளவே

(இக்குடும்பம் குடியிருக்கக் கொண்டவீடு)
குடும்பத் துடனே குடித்தனஞ் செய்யக்
குடிக்கூ லிக்குக் கொண்ட மனையில்

கண்ட காட்சிகள் களவிரோ தங்கள்
இராமா யணத்தும் பாரதத் துமிலை
இழிவினும் இழிவது எண்சாண் உள்ளது
மலமஞ் சலமும் மாறா ஒழுக்கது
சுற்றினும் ஒன்பது பொத்தல் உடையது

சீழுங் கிருமியுஞ் சேர்ந்து கிடப்பது
என்புதோல் இறைச்சி எங்குஞ் செந்நீர்
ஆய்ந்து செய்த ஆகர முற்றது
அகலல் அணுகல் புகலல் இகலல்
அணிகள் துணிகள் அணிவ தாய

சால வித்தைகள் சதுரிற் கொண்டது
கிடந்தும் இருந்தும் நடந்தும் பற்பல
பகரிம் மனையால் படும்பா டதிகம்
(அவ்வீட்டுத் தலைவரும் குடிக்கூலி நிர்ப்பந்தமும்)
இம்மனைத் தலைவராய் எழுந்த மூவர்
தறுகட் கடையர் தயவே இல்லார்

பணிசிர முதலாய்ப் பாதம் வரையில்
வாது செய்திடும் வண்கால வாதி
பெருகுறு கள்ளினும் பெரிதுறு மயக்கம்
பேதைமை காட்டும் பெருந்தீப் மயக்கம்
கொடுவிடம் ஏறிடுங் கொள்கைபோ லிரக்கங்

கொள்ளா திடர்செய் குளிர்ந்த கொள்ளி
இவர்கள் என்னோ டிகல்வர் இரங்கார்
எனக்கு நேரும் ஏழ்மையும் பாரார்
பிண்டமென்னும் பெருங்குடிக் கூலி
அன்றைக் கன்றே நின்று வாங்குவர்

தெரியா தொருநாள் செலுத்தா விட்டால்
உதரத் துள்னே உறுங்கனல் எழுப்பி
உள்ளும் புறத்தும் எண்ணெரி ஊட்டி
அருநோய் பற்பல வடிக்கடி செய்வர்
இவர்கொடுஞ் செய்கை எண்ணுந் தோறும்

பகீரென உள்ளம் பதைத்துக் கொதித்து
வெதும்பும் என்னில் விளம்புவ தென்னே
(குடும்பத் தலைவனின் வெளிவிவகாரம்)
சினமிகும் இவர்தம் செய்கைகள் கனவிலும்
நினைந்து விழித்து நேர்வதன் முன்னர்



RangaRakes tamilnavarasam.com

மற்போர் கருதி வந்தவர் போல

ஓதும்வே தாந்தம் உரைப்பர் சிலபேர்
வாட்போ ரினுக்கு வந்தவர் போல
வயங்குசித் தாந்தம் வழங்குவர் சிலபேர்
தண்டாயு தப்போர் தாங்குவார் போல
இதிகாசத்தை யிசைப்பவர் சிலபேர்

உலக்கைப் போரை உற்றார் போல
இலக்கண நூலை இயம்புவர் சிலபேர்
கற்போர் விளைக்கக் காட்டுவார் போலச்
சமய நூல்களைச் சாற்றுவர் சிலபேர்
வாய்ப்போ ருக்கு வந்தவர் போல

விவகா ரங்கள் விளம்புவர் சிலபேர்
மடிபிடி போர்க்கு வாய்ந்தவர் போல
மததூ ஷணைகள் வழங்குவர் சிலபேர்
கட்குடியர் வந்து கலக்குதல் போலக்
காம நூலைக் கழறுவர் சிலபேர்

விழற்கு நீரை விடுவார் போல
வீண்கதை பேச விழைவார் சிலபேர்
இவர்கள் முன்னே இவருக் கேற்ப
குரல்கம் மிடவுங் குறுநா உலரவும்
அழலை யெழவும் அவரவர் தம்பால்

சமயோ சிதமாய்ச் சந்ததம் பேசி
இயன்ற மட்டில் ஈடுதந் தயர்வேன்
(அவனது உள் விவகாரம்)
பின்னர் மனையின் பின்புறத் தேகிக்
கலக்கு மலத்தைக் கடிதே கழித்துக்
கல்லில் அழுக்கைக் கழற்றுதல் போன்று

பல்லின் அழுக்கைப் பண்பின் மாற்றிச்
சோமனைப் போலவெண் சோமனைத் துவைத்து
நன்னீர் ஆடி நறுமலர் கொய்து
தேவருக் கேற்ற திரவியங் கூட்டிப்
பாவையை வைத்துப் பாடி யாடும்

சிறாரைப் போலச் செய்பணி யாற்றி
மண்ணின் சுவர்க்கு வண்சுதை தீட்டல் போல்
வெண்ணீ றதனை விளங்கப் பூசிப்
புகழ்ருத் ராக்கப் பூனை என்ன
உற்ற செபவடம் உருட்டி யுருட்டிக்

குரண்டகம் போன்று குறித்த யோகம்



RangaRakes tamilnavarasam.com

**செய்த பின்னர் சிறிது நேரம்**
**அருத்தியிற் பூசனை அமர்ந்தங் காற்றி**
**ஊன்பிண் டத்திற் குறுபிண்ட மீந்து**
**குடிக்கூ லிக்கடன் குறையறத் தீர்த்துப்**

410 **பகல்வே டத்தாற் பலரை விரட்டி**
**(அவன் பரத்தையோ டயர்தல்)**
**நித்திரைப் பரத்தையை நேர்ந்து கூடவும்**

412 **பொழுதுஞ் சரியாய்ப் போகின்றதுவே.**

குடும்பகோரம் முற்றும்.

தத்துவக் குடும்பத்தின் சேட்டைகளைப் பெருமான் இதனுள் அழகாக விரித்துரைக் கின்றார்கள். குடும்பத் தலைவன் பெயர் 'ஏழை'. அவனுக்கு மூன்று மனைவிகள். முதல் மனைவி ஆணவம். இரண்டாம் மனைவி மாயை. மூன்றாம் மனைவி கன்மம். முதல் மனைவியாகிய ஆணவத்திற்கு ஒரே மகன். அவன் பெயர் அஞ்ஞானம். மாயைக்கு நான்கு பிள்ளைகள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நால்வர். மூன்றாம் மனைவியாகிய கன்மத்திற்கு மூன்று பிள்ளைகள். சத்துவம், ராசசம், தாமதம் ஆகிய மூவர் (முக்குணங்கள்). மூன்று மனைவியரோடும் எட்டுப் பிள்ளைகளோடும் ஏழைத் தலைவன் வாழ்வதோ வாடகை வீட்டில். வாடகை வீடோ ஒருவர்க்குச் சொந்தமானதன்று. மூவர்க்குச் சொந்தமானது. அம்மூவர் வாதம், பித்தம், சிலேத்துமம் என்போர். வீட்டு வாடகையும் மாத வாடகை யன்று. நாள் வாடகை. வீட்டுக்காரர் மூவரும் அன்றைக்கன்றே வாடகையை வசூலிக்கின்றனர். வீடு-உடம்பு. வாடகை-உணவு. இவ்வாறு துன்புறும் குடும்பத் தலைவனுக்கு எத்தனையோ வெளி விவகாரங்கள்; உள் விவகாரங்கள். வேதாந்தம் பேச வருவோர், சித்தாந்தம் பேச வருவோர், இதிகாசம் கூற வருவோர், இலக்கணம் இயம்ப வருவோர், சமய நூல்களைச் சாற்ற வருவோர், காம நூல் கழற வருவோர், மத தூஷணை செய்ய வருவோர், விவகாரம் பேச வருவோர், வீண் கதை பேச வருவோர் இப்படி எத்தனையோ வெளி விவகாரங்கள். மலங்கழித்தல், பல் துலக்குதல், ஆடை துவைத்தல், நீராடல், சிவச்சின்னமணிதல், பூசனை, யோகம் என எத்தனையோ உள் விவகாரங்கள். இத்தனை விவகாரங்களுக்கும் பகற்பொழுது சரியாப் போகிறது. இரவு வந்தது. இனிப் பரத்தை வீட்டுக்குச் செல்லவேண்டும். பரத்தை யார்? நித்திரை. நித்திரைப் பரத்தையை நேர்ந்து கூடவும் பொழுதுஞ்சரியாய்ப் போகின்றதுவே.

தத்துவக் குடும்பத்தில் அகப்பட்டுத் தடுமாறும் கோர நிலையைக் கூறுவதாதலின் இது குடும்ப கோரம் எனப்பெயர் பெற்றது. உண்மையில் வள்ளற் பெருமானின் குடும்பம் இஃதன்று. இது நம் குடும்பமாகும். பெருமானின் குடும்பத்திலோ மனைவி-நிராசை, புதல்வன் -சாந்தம், பொருள்-உதார குணம், நண்பர்கள்-அறிவு, நிராங்காரம், ஏவல்-சுத்த மனம், இருப்பிடம் - சகல கேவலமற்ற இடம்.

**நிலைஉறும் நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடு**
**நிகழ்சாந்த மாம்புதல்வனும்**
**நெறிபெறும் உதாரகுணம் என்னும்நற் பொருளும்மருள்**


RangaRakes tamilnavarasam.com

நீக்கும்அறி வாம்துணைவனும்
மலைவறு நிராங்கார நண்பனும் சுத்தமுறு
மனம்என்னும் நல்ஏவலும்
வருசகல கேவலம்இ லாதஇட மும்பெற்று
வாழ்கின்ற வாழ்வருளுவாய்
அலையிலாச் சிவஞான வாரியே ஆனந்த
அமுதமே குமுதமலர்வாய்
அணிகொள்பொற் கொடிபசுங் கொடிஇரு புறம்படர்ந்
தழகுபெற வருபொன்மலையே
தலைவர்புகழ் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

-5, தெய்வமணிமாலை 7.

இவ்வாறு அருளியற் குடும்ப மியற்றும் வள்ளற்பெருமான் நம் போன்றோர் செய்யும் உலகியற் குடும்பத்தின் கோரங்களைத் தம்மீதேற்றிக் கூறி இத்தடைகளால் திருமணத்திற்கு வரவில்லைஎன முத்துசாமி முதலியாருக்குக் குடும்பகோரத்தை வரைந்து விடுத்தனர். பெருமானிடமிருந்து குடும்பக்கோரக் கடிதத்தை முதலியாரிடம் கொண்டு சென்றவர் கொந்தமூர் வாதாசாரியர் ஆவர். குடும்பகோரத்தைப் பெற்ற முத்துசாமி முதலியார் அதனை மனப்பாடம் செய்து வைத்திருந்தார். பின்னொருகால் அவரே அதனைச் சொல்லக் கேட்டு மோசூர் கந்தசாமி முதலியார் எழுதிவைத்தார். அவர் எழுதி வைத்திருந்த அது சித்தாந்த சரபம் கலியாணசுந்தர யதீந்திரரால் பரிசோதிக்கப்பட்டுக் காஞ்சி நாகலிங்க முதலியாரால் அவரது "தொழிற் கல்வி" இதழில் 1914 ஆனந்த ஆடி, ஆவணி இதழ்களில் வெளியிடப் பட்டது. தொழிற்கல்வி (Industrial Education) தொகுதி 1 பகுதி 4, 1914ஜுலை (ஆனந்த, ஆடி) இதழில் ஒரு பாதியும் தொகுதி1, பகுதி5, 1914 ஆகஸ்ட் (ஆனந்த, ஆவணி) இதழில் மறுபாதியுமாக வெளியாயிற்று. இதழாசிரியர் வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முதலியார் குடும்பகோரத்தின் வரலாற்றைக் குறித்து எழுதியுள்ள குறிப்பு வருமாறு:

வீரசைவ சமயாநுட்டான பரரும் செங்குந்த குலதிலகரும் ஆகிய திருமழிசை வைத்தியலிங்க தேவர் குமாரர் முத்துசாமி முதலியார் அவர்கள் மணவினைக்கு சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் வரக்கூடாமைக்கு உண்டாகிய பலதடைகளை இவ்வகவற்பாவினால் விளங்க உரைத்திருக்கின்றனர். அவ்வகவலை அப்படியே அம்முத்துசாமி முதலியார் மனப்பாடம் செய்து வைத்திருந்தனர். அதனை நண்பர் மோசூர் கந்தசாமி முதலியார் B.A. மிக முயன்று அவர்பாற்கேட்டு கடிதத்தில் வரைந்து சித்தாந்த சரபம் அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியார் அவர்கள் முன்னிலையில் செப்பஞ் செய்து என்பால் கொடுத்தனர். நான் இத்தொழிற் கல்வியில் வெளிப்படுப்பின் அது பலர்க்கும் பயன்படுமென்று கருதி வெளியிடலானேன்.

-பத்திராதிபர்.



RangaRakes tamilnavarasam.com

திருவருட்பா 1924 ச.மு.க. பதிப்புல் குடும்ப கோரத்திற்குச் ச.மு.க. எழுதியுள்ள அடிக்குறிப்பு வருமாறு:

வீரசைவ அநுட்டான சீலராகிய திருமழிசை வயித்தியலிங்க தேவர் பிள்ளைப்பெருமான் சென்னையில் திகழ்ந்த காலத்து அவர்பால் மிக்க அன்பு பூண்டொழுகினவர். அத் தேவர் குமாரர் முத்துசாமி முதலியார் சிவபிரான்மீது பாஇய பாக்களைக் கண்ணுற்றுப் பிள்ளைப் பெருமான் ஒருவகைப் பொருடெரித்து எனுஞ் சாற்றுக்கவி தந்தருளினர். பிறகு வள்ளலார் வடலூர்ப் பெருவெளியில் எழுந்தருளியிருந்த காலத்தில், சென்னையில் இம் முத்துசாமி முதலியாருக்கு விவாகம் நடந்தேறியது. அக்காலை வள்ளலார் திருக்கரத்தால் விபூதி அளிக்கப் பெற்றிலேன் என மனம் வருந்திய முத்துசாமி முதலியாருக்கு இச்செய்தி அறிந்த வள்ளலார் தாம் விவாகத்திற்கு வரத் தடையாயின இவை யென இவ் வகவற் பாவில் வரைந்து கொந்தமூர்-சீனிவாச வரதாசாரியார் மூலமாய்க் கொடுத்தனுப்பினர். ஷெ முதலியார் இவ் வகவலை மனப்பாடஞ் செய்திருந்ததை அவர் சொல்ல, மோசூர்-கந்தசாமி முதலியார். பி.ஏ. வரைந்து வைத்திருந்தனர். அது சித்தாந்த சரபம்-கலியாண சுந்தர யதீந்திரரால் பரிசோதிக்கப்பட்டு, தொழிற்கல்வி எனும் பத்திரிகையில் காஞ்சி-நாகலிங்க முதலியாரால் ஆனந்தவருஷ ஆவணி, புரட்டாசி {72} மாத சஞ்சிகைகளில் வெளியிடப்பெற்றது.

{72. ஆடி ஆவணி என்பதே சரியானது.}

## கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் அடிகளைக் கண்டது
## சுந்தர சுவாமிகள் வரலாறு

சுந்தர சுவாமிகளின் காலம்: 1831-1881. பிறந்த ஊர்; கங்கை கொண்டான் (திருநெல்வேலி மாவட்டம்). பெற்றோர்: யக்ஞேஸ்வர சாஸ்திரி, காமாட்சியம்மாள். பிறந்த நாள்: 2-12-1831. ராம சுப்பையரின் மகள் சானகியை மணம் புரிந்தார். பின்னர் துறவியானார். கோடகநல்லூரில் பலநாள் தங்கியிருந்ததால் கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் என வழங்கப்பெற்றார். சிவானுபூதி ரஸாயனம், சுவானுபவ ரசமஞ்சரி, நிஜாநந்தவிலாசம் என்பவை இவரியற்றிய நூல்கள். சூதசங்கிதையில் சிறந்த பயிற்சி உடையவர். திருக்கோயில் வழிபாட்டில் மிகப்பற்றுடையவர். மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை இவரைக் குருவாகக் கொண்டார். சுவாமிகளை மனத்துட்கொண்டே சுந்தர முனிவர் பாத்திரத்தைத் தனது மனோன்மணியத்தில் அமைத்தார். சுவாமிகள் 1881 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் ஆறாம் நாளில் அரிமளத்தில் சமாதியானார்.

டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்களின் 'என் சரித்திரத்'தில் சுந்தர சுவாமிகளைப்பற்றிய குறிப்புகள் சில காணப்படுகின்றன. ஒரு கும்பாபிடேகத்திற்கு நன்கொடை பெறுவதற்காகத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சுவாமிகள் வந்தபோது நடந்தவற்றை ஐயரவர்கள் எழுதியுள்ளனர். சுவாமிகளைப் பற்றிய குறிப்பை மட்டும் இவண் தருகிறோம். சுவாமிகளது திருவுருவப் படத்தை 'என் சரித்திரம்' 426 ஆம் பக்கத்தில் காண்க.

சுந்தர சுவாமிகள் என்பவர் அதி வர்ணாசிரமம் பூண்ட ஒரு துறவி. வேதாந்த கிரந்தங்களிலும் சிவ புராணங்களிலும் தேர்ந்த அறிவுள்ளவர். சூத ஸம்ஹிதையை அங்கங்கே விரிவாகப் பிரசங்கம் செய்து பலருடைய உள்ளத்தில் சிவ பக்தியை



RangaRakes tamilnavarasam.com

விதைத்த பெரியார் அவர். திருவையாற்றோடு சார்ந்த ஸப்த ஸ்தான ஸ்தலங்கள் ஏழிலும் தியமழபாடியிலும் பல செல்வர்களைக் கொண்டு திருப்பணிகள் செய்வித்து அந்த எட்டு ஸ்தலங்களுக்கும் ஒரே நாளில் கும்பாபிஷேகம் நடத்த எண்ணிய அப்பெரியார் அதன் பொருட்டுத் தமிழ் நாட்டிலுள்ள சிவநேசச் செல்வர்களிடம் பொருளுதவி பெற்று வந்தனர். அவருடைய சிஷ்யர்கள் பலர். எல்லா வகுப்பினரிலும் அவருக்குச் சிஷ்யர்கள் உண்டு. மகா வைத்தியநாதையர் அவரிடம் மந்திரோபதேசம் பெற்றுச் சில வேதாந்த நூல்களையும் பாடம் கேட்டனர். திருநெல்வேலியில் ஐயாசாமிப்பிள்ளை என்னும் அன்பர் அவருடைய உபதேசம் பெற்று ஒரு மடம் கட்டிக் கொண்டு தத்துவ விசாரமும் ஞானசாதனமும் செயுது வாழ்ந்து வந்தார். தத்துவராயர் இயற்றிய பாடுதுறை முதலிய நூல்களில் ஆழ்ந்த பயிற்சியுள்ளவர் அவர்.

டாக்டர் உ.வே.சா. என் சரித்திரம் பக்கம் 427

சுந்தர சுவாமிகள் வந்த பொழுது மகா சந்நிதானம் ஒடுக்கத்தின் வாயில்வரை வந்து சுவாமிகளை வரவேற்று அழைத்துச் சென்று இருக்கச் செய்ததாக ஐயரவர்கள் எழுதுகிறார்கள். இதனால் ஆதீன கர்த்தர் சுவாமிகளிடம் கொண்டிருந்த மதிப்பு விளங்கும்.

## சுந்தர சுவாமிகள் அடிகளைக் காணல்

அடிகள் கருங்குழியில் வதிந்து சிதம்பர வழிபாட்டுக்குப் போகவும் வரவுமாக இருந்த காலத்தில் ஒருகால் சிதம்பரத்தில் சுந்தர சுவாமிகளைச் சந்திக்க நேர்ந்தது. இருவரின் சந்திப்பைச் ச.மு.க. சரித்திரக் குறிப்புகள் பின்வருமாறு கூறுகிறது.

அதிவருணாசிரமம் பூண்ட கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் சிதம்பரத்தில் கிழக்குச் சந்நிதிவீதிச் சத்திரத்தில் அன்பர்களுடன் எழுந்தருளியிருந்த காலத்தில், வடக்குச் சந்நிதி வீதியிலிருந்த வள்ளலார் சுந்தரசுவாமிகளிடம் சிலரை அனுப்பிச் சமயம் பார்த்துவரக் கட்டளையிட்டனர். அன்பர்கள் சென்றவுடன் சுந்தர சுவாமிகள் அறிந்து 'இங்கா சமயம் பார்க்கச் சொன்னது' என்று கூறி, உடனே புறப்பட்டு அன்பர் கூட்டத்துடன் சிவநாமம் புகன்று கரகோஷத்துடன் வள்ளலார் இருந்த விடத்திற்குச் சென்றனர். உடனே வள்ளலாரும் சுவாமிகளும் ஒருவரையொருவர் இறைஞ்சிப் போற்றினர்.

வள்ளலார் சுவாமிகளைத் தம் எதிரில் உட்காரும்படி பலமுறை சொல்லியும் சுவாமிகள் வள்ளலார் திருமுன்பு உட்காராமல் வள்ளலார்க்கு ஒருபால் அமர்ந்தனர். ஞான விஷயமாய் இருவரும் மூன்று நாள் வார்த்தையாடியதில் சுந்தரசுவாமிகள் தோல்வியடைந்து மனம் சோர்ந்ததைக் கண்டு வள்ளலார் உபசரித்துவிட்டு மறுபடியும் தோல்வியடைந்தோர் பக்கமாக மாறி வாதநிகழ்த்திச் சுந்தரசுவாமிகளைக் களிப்பித்தனர். அப்போது அங்கிருந்த வேலூர் நாகப்பிள்ளை மஹாதேவமாலையில் சில கவி சொல்ல சுந்தர சுவாமிகள் 'யார் ஆட்டு' எனக் கேட்க, 'வள்ளலார் பாடியது' என்று அவர் குறிக்க, சுவாமிகள் 'இப்படியெல்லாம் பாடியோ என்னை அலக்கழித்தது' என்று கூறினார். சுவாமிகளை நோக்கி வள்ளலார் 'எவ்வளவு இங்கு படித்திருக்கிறதோ அவ்வளவும் அநுபவத்தில் வந்தால் விசேஷம்' என்றனர். சுந்தரசுவாமிகள் விபூதி கேட்க, வள்ளலார் தர



RangaRakes tamilnavarasam.com

இசையவில்லை. ஆயினும் சுந்தர சுவாமிகள் தம்மிடமிருந்த வாழைப்பட்டையிலுள்ள விபூதியைச் சிறிது எடுத்து வள்ளலார் நெற்றியில் இட்டு அந்த விபூதியைத் தன் பட்டையிலுள்ள விபூதியில் கலந்து தாமும் இட்டுக்கொண்டு அங்கிருந்த யாவர்க்கும் கொடுத்தனர்.

அப்பால், சுந்தர சுவாமிகள் கீழ்வீதிச் சத்திரஞ் சென்ற போது வழிவிடப் போயிருந்த அன்பர்கள் வள்ளலார் திருமுன்பு உட்காராததற்குக் காரணம் வினவ, தம் எதிரில் உட்காருவோர் சக்தியை வள்ளலார் அப்போதே இழுத்துக்கொள்ளும் ஆற்றல் மிக்க சித்தர் என்று சுவாமிகள் விடையளித்தனர். வள்ளலார் தமது அன்பர்களிடம் 'இன்னும் ஆறு மாதத்தில் சுவாமிகள் தேகம் விழும்' என்று கூறிக் கண்ணீர் விட்டனர். அங்ஙனமே ஆறாம் மாதத்தில் சுவாமிகள் சிவபிரான் திருவடியடைந்தனர்.

'இன்னும் ஆறு மாதத்தில் சுவாமிகள் தேகம் விழும்' என்று அடிகள் கூறி வருந்தியதாக சரித்திரக் குறிப்புகள் கூறுகிறது. ஆனால் அடிகள் சித்திபெற்ற பின்னுங்கூட சுந்தரசுவாமிகள் இருந்திருக்கிறார்கள். சுந்தர சுவாமிகள் சமாதியானது 1881 ஆம் ஆண்டென (அடிகள் சித்திக்கு 7 ஆண்டு பின்) அவர் வரலாறு கூறுகிறது. ஆதலின் ஆறு மாதத்தில் தேகம் விழும் என அடிகள் கூறியதாகச் சொல்லுவது உண்மை யன்றெனக் கொள்ள வேண்டியிருக்கிறது. அடிகட்கு நேர் எதிரே அமராது சுவாமிகள் ஒருபால் அமர்ந்தது பெரியோர்கள் திருமுன்னர் நேர் எதிரே அமர்தல் அபசாரம் என்னும் கருத்துடனிருக்கலாம். அடிகள் எதிரிலிருப்பவரது ஆற்றலை இழுத்துக் கொள்ளும் சக்தியுடைய ராகலாம். அங்ஙனம் செய்யும் குணமும் வழக்கமும் உடையராகார். அடிகள் சுவாமிகளுக்குத் திருநீறளிக்க மறுத்தது. வெள்ளை வேட்டிக்காரராகிய தாம் கல்லாடைத் துறவியாகிய சுவாமிகளுக்குத் திருநீறளிப்பது பொருந்தாது, அபசாரம் எனக் கருதியேயாகும்.

## தண்டபாணி சுவாமிகள் அடிகளைக் கண்டது

## தண்டபாணி சுவாமிகள் வரலாறு

திருப்புகழ்ச் சுவாமிகளென்றும் முருகதாச சுவாமிகளென்றும் இவர் வழங்கப்படுவர். இவரது காலம் 28-11-1839-5-7-1898. பிறந்த ஊர்: திருநெல்வேலி. தந்தையார்: செந்தில் நாயகம் பிள்ளை. அன்னையார்: பேய்ச்சிமுத்து அம்மையார். குலம்:சைவ வேளாளர் குலம். பிள்ளைத்திருநாமம்:சங்கரலிங்கம். இவர் இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர். இவர் பாடிய பாடல்கள் பல்லாயிரக் கணக்கானவை. அவற்றை எழுதிய ஏடுகள் பலவற்றை இவரே கிழித்தெறிந்து விட்டார். கிழித்தெறிந்தது போக எஞ்சியுள்ள பாடல்கள் ஐம்பதாயிரத்திற்கு மேலிருக்கும். இவரது பிரபந்தங்களில் இப்போது கிடைப்பவை மட்டும் நூற்றுக்கு மேற்பட்டவை. சுவாமிகள் வெள்ளைக் கோவணம் மட்டுமே அணிந்திருப்பர். சிறு கல்லாடை ஒன்றை இடையில் அரை நாண் போலச் சுற்றிக் கட்டியிருப்பர். கையில் தண்டு பிடித்திருப்பர், சுவாமிகள் பெயராலும் தண்டபாணி. செயலாலும் தண்டபாணி. சுவாமிகளது சொல்லில் வீரம் தோன்றுவதுபோன்றே தோற்றத்திலும் வீரம் தோன்றும். தென்னாடெங்கும் சுற்றிப் பல்லாயிரம் பாடல்களைப் பாடி வீரத்துறவியாக விளங்கிய சுவாமிகள் இறுதியாகத் திருவாமாத்தூரில் சமாதியாயினர். இவரது மடம் கௌமார மடம் என்னும் பெயருடன்

திருவாமாத்தூரில் உள்ளது. தற்போது சுவாமிகளின் பேரர் அம்மடத்திலிருந்து தொண்டாற்றி வருகிறார்.

## தண்டபாணி சுவாமிகள் அடிகளைக் காணல்

**ச.மு.க. பதிப்பு சரித்திரக் குறிப்புகள் கூறுமாறு:-** தண்டபாணி சுவாமிகள் அடிகளைக் கண்ட வரலாறு 'இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகளுள் 'பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் சைவவேளாண் மரபில் உதித்து ஒன்பது வயது முதல் முருகப்பெருமானைச் செந்தமிழ்ச் சுவை பொலிந்த திருப்புகழ்களால் தம் காலம் முழுவதும் துதித்த தண்டபாணி சுவாமிகள் என்று வழங்கும் முருகதாசர் ஒருகால் வடலூர்க்கு வந்து வள்ளலாரிடம் சிலநாள் தங்கி முருகரது திருவருளை வியந்து கொண்டிருந்தனர். முருகதாசர் தாம் பாடிய திருப்புகழ்களை வள்ளலார்க்கு எடுத்துக் காட்டிக்கொண்டேவர, வள்ளலார் ஏடுகளை ஒரு சிறிது தள்ளினர். அதனால் அலட்சியங் கொண்டதாக அவர் எண்ணவே, வள்ளலார் முருகதாசரை அருணகிரிநாதரே என்று சிறப்பித்துப் பேசினர். எனினும் அவர்க்குத்திருப்தியில்லை ஏடுகளைத் தள்ளினதால் கணக்கிலாமற் பாடிக்கொண்டிருப்பதோடு அனுபவ ஞானம் இருத்தல் வேண்டும் என்று வள்ளலார் எண்ணினரோ என்று அவர் ஐயமுற்றனர். பின் ஒருகால் முருகத்தியானத்தி லிருந்த போது வள்ளலார் தாயுமானவரே என்று அவர்க்கு விளங்கியது. ஒருநாள் முருகதாசர் உஷ்ணவாயுவால் சிறிது அபக்குவம் அடைய, வள்ளலார் கேட்க, வினையால் விளைந்தது என்றனர். வள்ளலார் "இங்கேயும் வினையுண்டோ?' என்று முருகதாசர்க்குக் கூறிச் சந்நியாசிகளை வினை தாக்குமோ என்பதைக் குறித்துப் பிரசங்கஞ் செய்தனர். வள்ளலாரைக் குறித்து வினாப் பதிகமும் அனுபவப் பதிகமும் பாடி ஜீவகாருணியமூர்த்தியாகிய முருகதாசர் தமது நூல்களில் பலவிடத்தும் ஜீவகாருணியம் விளக்கவந்த வள்ளலாரைப் புகழ்ந்திருக்கின்றனர்.

**தண்டபாணி விஜயம் கூறுமாறு**:- தண்டபாணி சுவாமிகளது வரலாற்றை அவரது மகனாரும் மாணாக்கருமாகிய தி.மு.செந்தினாயகம் பிள்ளை 'தண்டபாணி விஜயம்,' என்னும் செய்யுள் நூலாகப் பாடியுள்ளார். இதனுள் 'வடலூராரைச் சந்தித்தல்' என்ற தலைப்பில் ஐந்து பாடல்கள் உள்ளன.

... ... ... ... ... ... ... .... ... ... ... ... ... ... .... ... ... ... ... ... ... ... ... ... .... ...
... ... ... ... .... ... ... ... ... ... .... .. ... ... ... .... ......... .... ... ... ... ... ... ... ... ... ....
மிச்சமாந்தொண்டைநாட்டினுட்கூட லூரிலோர்வீட்டிடைவடலூர்
மெச்சருட்குரிசிலிராமலிங்கப்பேர்மேலவன்றன்னைநேர்கண்டார்

### வடலூரைச் சந்தித்தல்

**கண்டுமிக்குறவாயநுபவத்திரங்கள்கலந்துபேசுபுமிகக்களித்திட்**
**டொண்டுவர்க்கிரிநேர்குகனவன்றாயுமானவனெனவிவருளத்தில்**
**விண்டுளவாற்றையவனிடங்கூறிவினவினரவன்மிகவியந்துட்**
**கொண்டுதன்வாயாலிருக்கலாமென்னக்கூறினனவ்விருவோரும்.**

**தன்னலந்தாழ்த்தித்தாரணிவாழுந்தனிநலமுயர்த்திடுந்தவஞ்சே**



RangaRakes tamilnavarasam.com

ருன்னதக்கருணையுடையராலவர்தம்முரிமையாருரைத்திடவல்லா
ரின்னவாறியலுஞ்சிலதினத்திவர்தாமியம்பும்வண்ணத்திலக்கணத்தை
யன்னவன்வினவிக்களித்தொர்சூத்திரத்திலையமுற்றிவரிடமிசைப்பான்.

இடையினத்தொற்றோடுழுமாய்தமெனாவியம்பியதியாதுகாரணமோ
விடையுரைத்திடுகென்றனனதற்கிவர்முன்விதித்ததொல்காப்பியர்தாமு
மடைவுறவிதனைவிரித்திலர்யானே யறுமுகக்குகன்றிருவருளாற்
றடையறவிதனில்விதித்துளேன்வண்ணத்தமிழ்ப்புலவோரதுதெரிவார்.

என்றலுஞ்சிறிதுமனகடுத்தியானெண்ணிடிலொருநூறுவண்ணங்கட்
கன்றவென்காலாற்றேய்ப்பனென்றனனுட்கனன்றிவர்சிறுநகைகாட்ட
வன்றதன்குறிப்பையறிந்தனோனுன்றனருந்தமிழ்க்குருகிடாவறிஞ
ரின்றகிலத்தியானதைவெறுத்துரைக்கிலென்கவிப்புலமையென்னாமே.

ஆதலாலுன்றனுளத்தபிமானமமைந்தவாற்றினையிகழ்ந்துரைத்து
வாதனைச்சினமுன்னுளத்தினிலுளதோவெனத்தெரிந்தேனெனவகுத்தா
னோதலென்னிடமேன்றிருவருளறியவுரைத்தியென்றனரதோடந்த
வாதமற்றருநீர்ப்பிளவெனக்கலந்துமகிழ்ந்துசின்னாளிருந்தப்பால்.

-164-169

திருப்பரங்குன்றத்தில் வண்ணத்திலக்கணத்தை அரங்கேற்றிய தண்டபாணி சுவாமிகள் தொண்டை நாட்டுக் கூடலூர்க்கு வந்தார். அங்கு ஒரு வீட்டில் தங்கியிருந்த இராமலிங்க அடிகளை நேரிற் சென்று கண்டார். இருவரும் தத்தம் அனுபவங்களைப் பேசிக் களித்தனர். தாயுமானவரே இராமலிங்கரென முருகன் தனக்குக் கூறியதை சுவாமிகள் அடிகளிடம் சொல்லினர். அதனைக்கேட்ட அடிகள், 'இருக்கலாம்' என்று கூறினர். சுவாமிகள் செய்த வண்ணத்திலக்கணத்தை அடிகள் கேட்டு மகிழ்ந்து ஒரு சூத்திரத்தைக் குறித்து இதில் இவ்வாறு விளம்பியது யாது காரணமோ என வினவினர். சுவாமிகள் தொல்காப்பியரும் இதனை விரித்திலர் யானே முருகனருளால் இதனை விரித்து விதித்துளேன். வண்ணத் தமிழ்ப் புலவரே இதனை அறியக் கூடும் என்றார். இதனைக் கேட்ட அடிகள் சினந்து, 'யான் எண்ணின் ஒரு நூறு வண்ணங்களை என் காலால் தேய்ப்பன்' என்றனர். பின் சுவாமிகள் வருத்தமுறாததைக்கண்டு, 'உள்ளத்தில் சினமுளதோ எனச் சோதித்தேன்' என்று சமாதானப்படுத்தினர். கூடலூரில் அடிகளுடன் சின்னாளிருந்தபின் சுவாமிகள் திருவயிந்திரபுரம் சென்றார். இதுவே தண்டபாணி விஜயம் கூறும் வரலாறு.

சுவாமிகள் வண்ணம் பாடுவதில் வல்லவர். 'வண்ணச்சரபம்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றவர். தமது வண்ணப் பாடல்களை அடிகள் கேட்டு வியந்ததனை 'மிடியில் சீர் வடலூரான் முதற்புலவோர் கேட்டுளம் மிக வியந்தத்துவே' எனச் சுவாமிகள் கூறுவர்.

## புலவர் புராணத்துள் தண்டபாணி சுவாமிகள் அடிகளைப் பாராட்டல்

அகத்தியர் முதல் இராமலிங்கர் வரை விளங்கிய புலவர்களது வரலாற்றைப் புலவர் 'புராணம்' எனத் தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ளார். புலவர் புராணம்72 சருக்கங்களையும்,3003 செய்யுள்களையும் உடையது. எழுபத்திரண்டாவதாகிய



RangaRakes tamilnavarasam.com

இருதிச் சருக்கம் கண்கண்ட புலவர் சருக்கம். இதனுள் தமது சமகாலபொ புலவர்களைப் பற்றிச் சுவாமிகள் கூறியுள்ளார். கண்கண்ட புலவர் சருக்கத்தின் இருபத்திரண்டு பாடல்களுள் பத்துப் பாடல்கள் அடிகளைப்பற்றிக் கூறுவன. அடிகளைக் கூறுவதுடன் புராணம் முற்றுப் பெறுகிறது.

கருங்குழி நகரந்தன்னிற் கருணிக குலவேளாள
ரங்குடிப் பிறந்தபால னாடக சபைப்பிரான்பா
னெருங்குபே ரன்பிற்சீர்த்தோ னெஞ்செலா முருகப்பாடும்
பெருங்குண நிதியம்போல்வான் பிழையில்பே றுறவேட்டானே

திருவரு ளடைந்தமேலோர் சிந்தையிற் குறிப்பவெல்லா
மிருநிலத் தியலுமென்றே யாவரும் வினவக்கூறி
வருநம தூதர்தம்மான் மாய்ந்தவர் வாழமீட்டுத்
தருவது மெளிதேயென்றோர் சரதமுஞ் சாற்றினானே

அத்தகைப் பெருஞ்சித்தாடற் காமிடம் வடலூரென்றே
சித்தமு டெண்ணியாங்கு சென்றுபல் சீருங்சேர்த்தான்
செத்தவிந் திரரென்பாரந் திரள்புயத் தணிந்தமூர்த்தி
யுத்தமப் பயனல்கான்பொ றுருமறை வுறச்செய்தானே

அவனுடன் மூன்றுகால மளவாளாய்ப் பேசியுள்ள
னெவளவும் பேதமின்றி யென்கருத் திசைந்தேசொன்னான்
றவறுத லடைந்தற்கேட்டுத் தளர்ச்சியோ டையமுற்றேன்.
சிவனருட் செயலுமென்றன் சிந்தையுஞ் சாட்சிதானே.

இனியவன் றனைக்கண்டன்றி யெட்டுணைத் திருத்திதானுந்
தொனிதரு கடலோரேழுஞ் சூழ்தரு பாரிற்கொள்ளேன்
மனிதரிற் புலவராயவ் வள்ளறன் வரவெண்ணாதார்
கனியுமன் புறினுஞானக் கண்ணறு கடையர்தாமே.

செத்தவர் மீண்டீண் டெய்தச் செய்தலுஞ் சிலர்கொள்பேறே
யித்தரை யினரும்வானத் தினருமு னருந்தாதாற்று
முத்தமத் தருமமற்றோ ரொருவர்வே டதுமன்றாமான்
முதமிழ்ப் புலமைச்சீலர் முன்னிநன் குணர்தற்பாற்றே.

இராகவன் கண்ணனான்ற விருடியாம் பிருகுவன்றித்
தராதலத் திந்நாள்வந்த தவத்தினர் சிலருமீட்டார்
பராவுகா ருணியதீர்க்கம் பகவனா தியின்பாலீன்ற
நிராசையோர் முதலோர் நூலி னிகழ்த்தினா ரியற்றிலாரே

ஆதலால் வடலூ ராற்கு மடியனேன் றனக்குமிந்தப்
பூதலத் தினரூனுண்ணாப் புதுமைசெய் திடலேமேலாஞ்
சாதலெய் தினரைமீட்குந் தகையதிற் றாழ்வேயாமிக்
காதனல் கியதோர்தெய்வக் கருணை நீ டூழிவாழி.

பத்திர கிரிதன்னாயும் பசியமுள் ளியுமுன்பெற்ற



RangaRakes tamilnavarasam.com

**முத்தியோ தரும்பேறன்று மூதுல கினையீடேற்ற**
**நத்திடுங் கருணையேமே னாரண னனையாரோர்வார்**
**சித்திபெற் றிடுனுமற்பர் செயலறிந் தியற்றாரம்மா**

**தண்டமிழ் வடலூரான்முன் றாயுமா னவனேயென்று**
**மண்டரூர் மலர்கொண்டுற்ற வஞ்சுக மடியேன்னென்றும்**
**விண்டதே வொருவனுள்ளான் வெறும்பொயான் விளம்பிலேன்மெய்த்**
**தொண்டர்தாட் டுகளுமாயாச் சூரியா தியருஞ்சான்றே.**

'உருமவைறவுச் செய்தானே' (பாடல்14) என்றும், 'தவறுதல் அடையக் கேட்டுத் தளர்ச்சியோடு ஐயமுற்றேன்'(1) என்றும், 'இனியவந்தனைக் கண்டன்றி எட்டுணைத் திருப்திதானும்...கொள்ளேன்,(16) என்றும் கூறுவதால் அடிகளார் சித்திபெற்றபின் இவை பாடப்பெற்றன என்பது தெளிவாகிறது. ' அவனுடன் மூன்று காலம் அளவளாய்ப் பேசியுள்ளேன்,(15) என்பதனால் அடிகளை மும்முறை கண்டனரென்பது போதரும். ஒரு முறை கடலூரிற் கண்டதை ச.மு.க. சரித்திரக் குறிப்புகள் கூறுகிறது. பிறிதொரு முறையும் வடலூரிலேயே கண்டிருக்கக்கூடும். வள்ளற்ப்பெருமான் முற்பிறப்பில் தாயுமானவர் என்று முருகன் தனக்கு உணர்த்தியதாக இருபத்தோராம் பாடலிற் கூறுகின்றார். அடிகளின்மீது 'அனுபவப்பதிகம்' வினாப்பதிகம்' என் இரண்டு தனிப்பதிகங்களையும் பாடியுள்ளார். இவ்விரு பதிககங்களும் திருவருட்பா ஆறு திருமுறைகளும் சேர்ந்த முதற் பதிப்பில் (திருவருட்பாத் திருமுறைத் திரட்டு 1892, பொன்னேரி சுந்தரம் பிள்ளை திரட்டியது) அச்சிடப்பட்டுள்ளன. தமது உடலை மறைத்துக்கொண்டு இறைவனோ டிரண்டறக் கலந்த அடிகள் இனி மீளவும் வருவார் என்ற இரண்டு கருத்துக்களைத் தண்டபாணி சுவாமிகள் வெளியிட்டுள்ளார். இவற்றை இறைவனே தனக்குணர்த்தியாதகச் சத்தியம் செய்து கூறுகிறார். அடிகள் முற்பிறப்பில் தாயுமானவரா? அடிகள் மீண்டும் வருவாரா? விடைகளைப் பின்னிணைப்பில் காண்க.

## திருச்சிற்றம்பல ஞானிகள்

திருக்கழுக்குன்றத்தை செர்ந்த இவர் திருச்சிற்றம்பல ஞானியார் என்றும் வழங்கப்பெறுவர். அடிகளிடம் மிமுந்த அன்பு பாராட்டிப் பழகியவர். தமக்கு உபதேசம் செய்தருளும்படி ஒருகால் அடிகளை இவர் வேண்டினார். கல்லாடைத் துறவியாகிய ஞானியார்க்கு வெள்ளை வேட்டிக்காரராகிய தாம் உபதேசஞ் செய்வது தகாதென்று அடிகள் தடுத்தனர். எனினும் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்கவே தன்னைத்தான் உணரவேண்டுமென்ற கருத்துப்பட ஒரு பாடல் செய்தளித்தனர்.

**நின் நிலையை என்னருளால் நீயுணர்ந்து நின்றடங்கின்**
**என்னிலையை அந்நிலையே எய்துதிகான் - முன்னிலையை**
**இற்குருவி னாட்டாதே என்றுரைத்தான் ஏரகம் வாழ்**
**சற்குருஎன் சாமி நாதன்.**

இப்பாடலைப் பெற்றுக்கொண்ட ஞானியார் அகமிக மகிழ்ந்தவராகி மதுரைக்குச் சென்று திருஞானசம்பந்த சுவாமிகள் மடத்தில் தங்கினார்.



RangaRakes tamilnavarasam.com

<u>இலக்கணக் கடிதம்</u>

கருங்குழியில் அடிகள் உறைந்த வீட்டிலிருந்த புருஷோத்தம ரெட்டியார் ஒரு சமயம் வீட்டில் கோபித்துக்கொண்டு வெளியேறி விட்டார். அவர் மதுரைக்குச் சென்று திருஞானசம்பந்தர் மடத்தில் திருச்சிற்றம்பல ஞானிகளுடன் இருப்பதாகக் கேள்வியுற்ற குடும்பத்தினர் மதுரை மடத்திற்குக் கடிதமொன்றெழுதி அவரை வருவித்துதவுமாறு அடிகளை வேண்டினார். அடிகளும் மதுரை மடத்துச் சுவாமிகளுக்கு ஒரு திருமுருகம் அனுப்பினார். அத்திருமுகத்தை மடத்திலிருந்த சிலர் பார்க்க நேரிட்டது. கணக்கிலவதானி தேவி பட்டினம் முத்துசாமிபிள்ளை என்பவர் அப்போது அங்கிருந்தார். அடிகளின் திருமுகத்தைப் பார்த்த அவர், 'வள்ளலாரைப் பெரிய வித்துவான் என்று சொல்கிறார்களே, அவருடைய படிப்பு இலக்கணமில்லாப் படிப்பு . என்றார். திருச்சிற்றம்பல ஞானிகள் அதனைக் கேட்டுவருந்தியவராய், ' வள்ளற்பெருமான் விவகரிக்குங் காலத்தில் சிதறிய இலக்கணத்தில் கோடியிலொரு கூறே இவ்வுலகில் வழங்குகிறது ' என்றார். அப்படியாயின் இலக்கணச் சிறப்புடன் வள்ளலாரிடமிருந்து ஒரு கடிதம் வருவித்து அனைவர்க்கும் காட்டுமாற்உ மடத்துச் சுவாமிகள் கூறினார். ஞானிகள் அடிகட்கு ஒரு கடிதமெழுதி, அவ்விடத்திய செய்திகளை இலக்கண வகையால் தனக்குத் தெரிவிக்க வேண்டுமென விண்ணப்பித்தார். தொழுவூர் வேலாயுத முதலியாரும் ச்.ஆறுமுக முதலியாரும் குடியிருந்த வீட்டின் முகப்பில் அடிகள் இருந்தபோது அக்கடிதம் வந்தது. கடிதத்தை கண்ட அடிகள் 'பிச்' என்று சொல்லி எறிந்துவிட்டனர். உடனிருந்த தொழுவூர் வேலாயுத முதலியாரும் மற்ற அன்பர்களும, இலக்கணப் புலமையுடன் ஒரு திருமுகம் எழுதியனுப்ப வேண்டுமென்று வற்புறுத்தினார். அடிகளும் மறுக்க மாட்டாது இரண்டொரு வரிகள் மட்டும் எழுதி வேலாயுதனாரிடம் கொடுத்துக் கடிதத்தை முடித்தனுப்பக் கட்டளையிட்டார். அவ்வாறே வேலலாயுதனார் பின்வரும் இலக்கணப் பத்திரிக்கையை எழுதியனுப்பினார்.

உணர்ந்தோரானியல் வகையவின்ன வென்றவற்றிற் பின்மொழி மதிக்கு முன்மொழி மறைகு முதலீறு விளங்க முடிப்பதாய பின்மொழி யடைசார் முன்மொழி ஞாங்கர் விளங்கிய ஞானிகட்கு பொய்யற் கெதிர்சார்புற்ற மூலியொன்று வளைத்து வணக்கஞ்செய்த ககந நீரொழி லென்றும் வான் வழங்கு பண்ணிகாரமென்றும் நாகச்சுட்டு மீனென்றும் வேறு குறிப்ப தொன்று.

அண்மைச் சுட்டெடுத்த வேழாவதன் பொருண்மை யும்மையடுத்த பல்லோர் வினாப் பெயர்ப் பொருள் குறிஞ்சி யிறைச்சிப் பொருளொன்றனோடு புணர்ப சேய்மை சுட்டெடுத்த வத்திறத்தியல் யாது.

இரண்டொனுருபொடு புணர்ந்த தன்மைப் பன்மை யாறாவதன் பொருட்டாக்கினார்க் குய்த்த கற்பிய லதிகரிப்பின் வருந்தலைமகட் பெயர விரண்டினோ டிரண் டிரண் டீகக் கழிவிலைப் பெயரவு மகார விற்று முதனிலைத் தனிவினைச் செயவென் வாய்ப்பாட்டு வினையெச்சத் தனவாகக் கலம்பகச் செய்யுளுறுப்பாற் சிறத்தும்.

இரு வகை முதற்பொரு ளொன்றன் பாகுபாட் டுறுப்பிற் குறித்த வைம் பூதத்தோர் விசேடணத் தெதிர்மறை நடுக்குறை யியற்சொற் பெயர வுயிர்ப்



RangaRakes tamilnavarasam.com

பெயராக வெதிர்காலங் குறித்து நின்றது சிலவினைச் சார்பான் விலங்கு சூடிய வரைவில் வெளியாம்.

இதனோ டீரிரு வகைப்பட்ட வோர் சார் புது நிலஞ் செலவுய்த் தனம் வேண்டுழி வேண்டியாங் குய்க்க மற்றைய பின்னர் வரைதும்.

இற்றே விசும்பிற் கணைச்சலம்.

இங்ஙனம்
நங்கோச்சோழன்வீரமணி
குடியார் திருவாணைப்படிக்கு

ச.மு.க. பிரபந்தத் திரட்டில் (1923) உள்ள இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகளிலும்,திருவருட்பா ச்.ம்.க.பதிப்பில் (1924) உள்ள இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகளிலும் இதன் தலைப்பு 'இலக்கண விய நடை வழக்கைப்பாடுறுத்துவிக்கும் பத்திரிக்கை' என்றிருக்கிறது. 'பார்வதிபுரம்,சுக்கில ளூ துலாரவி உஎஉ' என இடமும் காலமும் குறிக்கப்பட்டுள்ளன. ஆ.பா. வியாக்கியானப் பகுதி முதற்ப பதிப்பிலும்(1931) இல் உரைப்பகுதி என்ற பெயருடன் வெளிவந்தது) மேற்குறித்தவாறே தலைப்பு, கையெழுத்து,இடம்,காலம் ஆகியவற்றைப் பதிப்பித்திருக்கிறார். வியாக்கியானப்பகுதி இரண்டு(1935)மூன்றாம் பதிப்பு (1961) பதிப்புகளில் தலைபு ' இலக்கண பத்திரிக்கை ' என்று காணப்படுகிறது. கையெழுத்து இங்ஙனம் நங்காச்சோழன் வீரமணிசூடியார் திருவானைப் படிக்கு, என்று மட்டுமே இருக்கிறது. 'அடிமை தொழுவூர் வேலயுதம் ' என்பது இல்லை. இடம்,காலக் குறிப்புகளும் இல்லை. 'இவ்விலக்கணத் திருமுகத்தின் வரலாறு அடியில் கண்டபடி ஓர் பிரதியில் காணப்படுகிறது' என ஆ.பா. குறிப்பிடுகிறார்.

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடத்தில் திருவருட்பிரகாச வள்ளலார் ஜக சகாப்தம் உ-ல் நிகழா நின்ற விபவவருஷ ஆவணி மீ த்தில் திருக்கழுக்குன்றம் திருச்சிற்றம்பல ஞானிகள் போயிருந்த தருணத்தில், கடந்த அக்ஷய வருஷத்தில் கருங்குழி புருஷோத்தம ரெட்டியார் தன் வீட்டிலிருந்து கோபத்தால் மதுரைக்குப் போயிருந்த தருணத்தில் ஷெயாரை யுபசரித்து இவ்விடம் அனுப்பவேண்டுமென்று ஷெ மடத்து சுவாமிகளுக்கு சி.இராமலிங்கம் பிள்ளை யவர்களால் அனுப்பப்பட்ட கடிதத்தால்-ஒரு தருணம் நாவலர் மனுஷியர்களி லங்கிருந்த சிலர் திருவருட் பிரகாச வள்ளலார் விசேஷ வித்வானென்று சொல்கிறார்களே யவருடைய படிப்பு இலக்கணமில்லாப் படிப்பு - என்று சொல்லக்கேட்ட திருச்சிற்றம்பல ஞானியார் புகன்றது-அவர்களால் விவகரிக்கும் விவகாரத்திற் சிதறிய இலக்கணத்தில் மொழிகளில் கோடியிலொரு கூறிவ் வுலகி லிருக்கின்ற தென்று வாதிக்க-அம்மடத்து சுவாமிக ளப்படியாகி லந்த சுவாமிகளா விலக்கண விதிப்படியொரு கடித மனுப்பும்படிகேட்டு வருவிக்க வேணுமென்று கேட்டுக்கொண்டபடி-மேற்படி ஞானி யிவைகளைக் குறியாமல் சன்னிதானத்துக் கொரு கடித மனுப்பினார்-ஷெ கடிதத்தினால் இவ்விடத்திய சுகுணங்களையும் அற்புதங்களையும் இலக்கண வகையாற் றனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று பிரார்த்தித்ததால்-அதன் பொருட்டெழுதி விடுத்த குசல பத்திரிகை பின்புறங் காண்க.

**இலக்கண பத்திரிகை**

ச.ஆறுமுக முதலியார் வேலாயுத முதலியா ரிவர்கள் குடியிருந்த முகப்பி லிருந்து அய்யா அவர்களாற் சில வரியும் மற்றவை ஆக்ஞையின் பேரில் வேலாயுத முதலியாராலும் எழுதியது-

இலக்கணத் திருமுகத்தைப் பெற்ற திருச்சிற்றம்பல ஞானிகள் மடத்திலுள்ள அனைவர்க்கும் காட்டினர். அவதானியார் முத்துசாமி பிள்ளைக்குப் பொருள்விளங்காததால்; 'வேணுமென்றே ஒரு வித்துவான் பூட்டுப்போட்டால் அந்த வித்வான் தான் அதைத் திறக்கவேண்டும் என்றார். ஞானியார், 'அப்படியாயின் நீர் ஒரு பூட்டுப்போடும்' என்றனர். அவதானியார்,

**தகரவரிக் கூந்தலர்கா மாதிமுந்நீர் தாழும்**
**தகரவரி நாலைந்து சாடும் - தகரவரி**
**மூவொற்றி யூர்பொருளை மூன்றுமங்கை யேந்துமொரு**
**சேவொற்றி யூரரனைச் செப்பு** {73}

{73. ஆ.பா பதிப்பில் இவ்வெண்பா சிற்சில வேறுபாடுகளுடன் பின்வருமாறு காணப்படுகிறது.

**தகரவரிக் கூந்தலர்கா மாதிமுந்நீர் தாழும்**
**தகரவரி நாலைந்து சாடும் - தகரவரி**
**மூவொற்றி யூர்பொருளை மூன்றுமங்கை யேந்துமொரு**
**சேவொற்றி யூரரனைச் செப்பு** }

என்ற வெண்பாவை இயற்றியனுப்பினார். இதற்கு அவதானியார் கருதிய உரையையும் அவர்க்கும் விளங்காத வேறு ஒரு விசேட உரையையும் அடிகள் செய்து விடுத்தனர். அவற்றைக் கண்ட அவதானியார் செருக்கொழிந்தவராகி வடலூர்க்கு வந்து தெருக்கோடியிலேயே வண்டியை விட்டிறங்கி வீதியில் வீழ்ந்து வணங்கிக் கொண்டே வந்து அடிகளைக் கண்டு பணிந்து 'வித்துவான் என மதித்திருந்தேன், பரி பூரண ஞானி என்று உணர்ந்திலேன் மன்னிக்க வேண்டும்' என வேண்டினார். அடிகளின் தோத்திரமாக ஒரு பாடலையும் பாடிப்பணிந்தார். அப்பாடல் கிடைக்கவில்லை.

## அகரத்தைப்பற்றிய வினாக்கள்

அடிகட்கு ஆட்பட்ட அன்பர்களுள் ஒருவராகிய ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகள், 'தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளிலும் சில வழுக்களைக் காண்கிறோம், தேவரீரது வாசகத்திலும் செய்யுளிலும் கருத்து விளங்காது மயக்குகின்றா சொற்றொடர்கள் சில உளவென்று எமது மாட்டாமையால் தோன்றுகிறது. இதற்கு யாது செய்வோம்' என்று அடிகளிடம் வேண்டினர். அடிகளும் அவருக்குச் சமாதானங் கூறியருளினர். தமது வினாவையும் அடிகள் அதற்கு அருளிய சமாதானத்தையும் ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகள் குறித்துவைத்துள்ள குறிப்பு வருமாறு


RangaRakes tamilnavarasam.com

## அகர உயிரின் இலக்கண நியாய விசார வினாக்கள்

**ஸ்ரீ சுவாமிகளுக்கு ஆட்பட்ட சமரச வேத சன்மார்க்க சங்கத்து அறிஞர்களில் ஒருவராகிய ஸ்ரீ ஆனந்த நாத சண்முக சரணாலய சுவாமிகள் எழுதியவற்றுள் கண்டது:-**

... ... புலவர்கள் பலர் அகங்காரத்தால் தம்மை மதியாது இயலறியாது எழுதியவாறே, புலமையிற் பெரியோ மென்னுஞ் செருக்கின்றி.......அறிவறிந் தடங்கியாரிற் சிலர் எழுதியவற்றிற் சில சில விடங்களில் வழுவினர். இவ்வழுக்கள் செருக்கால் வழுவியதன்று. விசாரத்தாலுஞ் சிவாநுபவ மேலீட்டாலும் வழுவியது. இவற்றைத் தேவாரந் திருவாசக முதலிய உண்மை முறைகளிற் காண்கின்றேம். இக்காலத்து எமது ஆசிரியரை வணங்கி "ஐயரே! தேவரீர் எழுதிய சில வாசகத்தினுஞ் செய்யுளினுங் கருத்துக்கு விளங்கப் புலப்படாமை மயக்குகின்ற சொற்றொடர்கள் சில வுள வென்று எமது மாட்டாமையாற் றோன்றுகின்றது: இதற்கு யாது செய்வேம்?" என்று விண்ணப்பஞ் செய்ய, அவர் "ஐய! நீர் அஞ்சற்க. யாம் எழுதிய வாசகத்தினுஞ் செய்யுளினுஞ் அளவிறாந்த குற்றங்களிருக்கின்றன: என் செய்வேம்! விசார வசத்தால் ஆங்காங்குந் தவறினேன். அதனைப் பெருங் கருணையுள்ள எமது கடவுள் மன்னிப்பர். மற்றையரு மன்னித்தல் வேண்டும். யாம் யார்? எமக்கு யாது தெரியும்? புழுவினுங் கடைய புலையரிற் சிறியேம் இதனால் நாணுதலுடையேம்" என்றனர். ஐயர் புகன்ற மாற்றம் எவ்வாறென்றெண்ணி நிற்குந் தருணத்து எம்மை ஆண்டிருக்கப் பணித்து மீட்டுஞ் சொல்லுவர்:-

அகரவுயிர் என்பது யாது? அகரவுயிர்க்கு

1.வரி வரலாற்றின் இலக்கணம் என்னை?
2.ஒலி வரலாற்றின் இலக்கணம் என்னை?
3.தன்மை வரலாற்றின் இலக்கணம் என்னை?
4.உணர்ச்சி வரலாற்றின் இலக்கணம் என்னை?

அதன்

5.உண்மை யநுபவ விலக்கணம் என்னை?

அகர வுயிர்க்கு

6.வரி யுறு விலக்கணம் என்னை?
7.ஒலி யுறு விலக்கணம் என்னை?
8.தன்மை யுருவி விலக்கணம் என்னை?
9.உணர்ச்சி யுருவி விலக்கணம் என்னை?
10. உண்மையனுபவ வுருவி விலக்கணம் என்னை?

அகர வுயிரின்

11.வரிச் சொரூப விலக்கணம் என்னை?
12.ஒலிச் சொரூப விலக்கணம் என்னை?
13.தன்மைச் சொரூப விலக்கணம் என்னை?



RangaRakes tamilnavarasam.com

14.உணர்ச்சிச் சொரூப விலக்கணம் என்னை?
15.உண்மை யநுபவச் சொருப விலக்கணம் என்னை?

அகர வுயிர்க்கு

16.வரிச் சுபாவ விலக்கணம் என்னை?
17.ஒலிச் சுபாவ விலக்கணம் என்னை?
18.தன்மைச் சுபாவ விலக்கணம் என்னை?
19.உணர்ச்சிச் சுபாவ விலக்கணம் என்னை?
20.உண்மை யநுபவச் சுபாவ விலக்கணம் என்னை?

அகர வுயிரின்

21.வரிச் செயற்கை யிலக்கண மென்னை?
22.ஒலிச் செயற்கை யிலக்கண மென்னை?
23.தன்மைச் செயற்கை யிலக்கண மென்னை?
24.உணர்ச்சிச் செயற்கை யிலக்கண மென்னை?
25.உண்மைச் செயற்கை யிலக்கண மென்னை?

அகர வுயிரின்

26.வரி யதிகார விலக்கணம் என்னை?
27.ஒலி யதிகார விலக்கணம் என்னை?
28.தன்மை யதிகார விலக்கணம் என்னை?
29.உணர்ச்சி யதிகார விலக்கணம் என்னை?
30.உண்மை யதிகார விலக்கணம் என்னை?

அகரவுயிரின்

31.வரிப் பொது விலக்கணம் என்னை?
32.ஒலிப் பொது விலக்கணம் என்னை?
33.தன்மைப் பொது விலக்கணம் என்னை?
34.உணர்ச்சிப் பொது விலக்கண மென்னை?
35.உண்மைப் பொது விலக்கண மென்னை?

அகரவுயிரின்

36.வரிச் சிறப் பிலக்கணம் என்னை?
37.ஒலிச் சிறப் பிலக்கணம் என்னை?
38.தன்மைச் சிறப் பிலக்கணம் என்னை?
39.உணர்ச்சிச் சிறப் பிலக்கணம் என்னை?
40.உண்மைச் சிறப் பிலக்கணம் என்னை?

அகரவுயிரின்

41.வரிக் குண விலக்கண மென்னை?


RangaRakes tamilnavarasam.com

42.ஒலிக் குண விலக்கண மென்னை?
43.தன்மைக் குண விலக்கண மென்னை?
44.உணர்ச்சிக் குண விலக்கண மென்னை?
45.உண்மைக் குண விலக்கண மென்னை?

என்பன முதலாக இவ்வகர வுயிர் ஒன்றற்கே யின்னும் பற்பல இலக்கண நியாய விசார வினாக்கள் உளவாயின், எம்போல்வாருணர்ச்சிக்கண் அவ்வினாக்களுக்கு விடை யெங்ஙனந் தோற்றும்? ஒரெழுத்திற்கே யிங்ஙனுமானால் பற்பல வெழுத்துக்களுக்கும் அவ்வெழுத்துக்களா லாகிய சொற்களுக்குஞ் சொற்பொருள்களுக்கும் விடை கொடுப்பது எங்ஙனம்? ஆகலில் கற்றோ மென்னுஞ் செருக்கை முழுதும் விடுத்து விசார வசத்தராகிச் சிவபெருமான் திருவருலைச் சிந்தித்திருத்தல் வேண்டும்" என்று எம்மையோர் பொருளாகக் கருதி இரக்கத்தால் இசைத்தனர். ஆகலின் கல்வியிற் செருக்கடைதல் எவ்வாற்றானும் பொருந்தாது... ... ...

(முற்றும்)

இலக்கண இலக்கியப் புலமையில் வள்ளற்பெருமான் வேறு யாருக்கும் பின்னிற்பவரல்லர். ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி, தொண்டமண்டலசதகத்தின் நூற்பெயரிலக்கணம் முதலியவற்றாலும் அகரத்தைப்பற்றிய இவ்வினாக்களாலும் பிறவற்றாலும் பெருமானது இலக்கணப்புலமையை நன்கறியலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் மூவராகத் திகழ்ந்தவர்கள், பிள்ளையவர்களும் நாவலரும் வள்ளலாருமாவர். மகாவித்துவான் மீனட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இலக்கிய வித்துவான், கவிஞர், ஆறுமுக நாவலர் இலக்கண வித்துவான்,சைவப்புலவர்,வள்ளற்பெருமான் இலக்கண இலக்கிய வித்துவானும் அருட்கவிஞரும் சைவப்புலவரும் சமரச சன்மார்க்க ஞானியும் ஆவர். இளமையில் முப்பத்தைந்தாண்டு வரை பெருமான் சென்னையில் வித்துவானாகப் புகழ் பெற்று விளங்கினார். பெருமன் ஞான மார்க்கத்தில் திரும்பாது புலமை வாழ்க்கையில் நின்றிருப்பார்களாயின் சென்ற நூர்றாண்டில் மற்ற யார்க்கும் பேரும் புகழும் இருந்திராது. இதனை ஆ.பா. தமது திருவருட்பா பதிப்பு.,வசனப்பகுதி, பாயிரத்தில், " தமது வாழ்க்கையில் தாம் ஓர் வித்துவானாக விளங்குவதைக் குறித்துச் சுவாமிகள் ஏகதேசமும் கருதியவர்களல்லர் என்பது நிச்சயம். சன்மார்க்க முகங்கொண்டிருக்கும் பரந்த உலகத்தின் பொல்லாத காலம் அவர்கள் ஒருகால் அங்ஙனம் கருதிய்திருப்பார்களானால், தமிழ்நாட்டில் சென்ற நூற்றாண்டின் இலக்கிய இலக்கண மஹாவித்துவான் என்ற சிறப்புப்பெயர் வேறு எவர்க்கும் வந்திராது" என அழகாகர் கூறுகிறார். இங்ஙனம். கூறுவதோடன்றிச் சுவையான ஓர் அடிக்குறிப்பும் கொடுத்திருக்கிறார். அது வருமாறு;

மஹாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் ஆறுமுக நாவலர் அவர்களிடத்தில் ஒரு சமயம் பேசிக்கொண்டிருந்த பொழுது 'இரமலிங்க சுவாமிகள் துறவடையாமல் நாவலர் வித்துவான் முதலிய பெயர்களை ஏற்றிருந்தால் தங்களுக்கு இலக்கண வித்துவான் என்றும் எனக்கு முலக்கிய வித்துவான் என்றும் பெயர் கிடைத்திராது' என்று சொன்னதாக வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து பாலியத்தில் சுவாமிகள் மேட்டுக்குப்பத்திலிருக்கும்போது குருக்கள் வீட்டில் தங்கி பலருக்கும் தொண்டு செய்யும் பாக்கியம் பெற்ற முத்து



RangaRakes tamilnavarasam.com

அய்யர் என்பவர் சொன்னதாக ஞாபகம் - அன்பர் ஊழியன், கீழ்வேளூர் ஸ்ரீ அ.அருணாசல முதலியார்.

## சாலையின் நடைமுறை

சாலை தொடங்கப்பெற்ற பின் அடிகள் சாலையிலேயே உறைந்தார்களென்பதை முன்னரே கூறினோம். சன்மார்க்க சங்கத்தாரின் இறை வழிபாட்டுக்கும் பிற பணிகளுக்கும் சாலையே இடமாயிற்று. சாலையே சங்கத்தின் அலுவலகமாயிற்று. சன்மார்க்க சங்கத்திற்காகவும் அடிகளுக்காகவும் மு. அப்பாசாமி செட்டியார் சாலையை நடத்திவந்தார். சண்முகம்பிள்ளை நமசிவாயம் பிள்ளை முதலான அன்பர்களும் சாலையில் அடிகளுடன் இருபதின்மருக்கு மேல் இருந்தனர். அன்பர்கள் உதவும் பொருளால் சாலை நடைபெற்றது. சாலைகுச் சன்மார்க்க சங்கத்தார் உபகரித்த பொருள்களின் அட்டவணை ஒன்று வருமாறு.

உ

சிவமயம்

சமரசவேத சன்மார்க்க சங்கத்து தருமச்சாலைகு ஷை சங்கத்தாரால் உபகரிக்கப்படும் பொருள்களுக்கு விவரமான அட்டவணை:-

(1) சென்னப்பட்டணத்திலிருக்கும் சதரங்கப் பட்டணம் ஆறுமுக முதலியார்-விபவஸ்ரீ மார்கழி மீ 18உ அனுப்பிய சாமான்களுக்கு விபரம்:

(2)

| | | | |
|---|---|---|---|
| சிகப்பு சால்வை | கரு | ஆப் டிம்மி பேப்பர் தஸ்தா | சு |
| மல்பீசு | க | லெட்டர் பேப்பர் ரீம் | க் |
| லாங்கிளாத்து பீசு | உ | பேனா கட்டு | உ |
| கார்பெட்டாக்கு என்கிற பை | க | இங்கி பவுடர் | சு |
| பயிண்டு செய்த ஆப்டிம்மி பேப்பர் புத்தகம் | உ | சிலேட்டு பென்சில் பொட்டி | க |
| பிரனாகுபேப்பர் தஸ்தா | சு | பென்சல் | சு |

(2) கஸ்டம் ஆபீசு முருகேச முதலியா ரனுப்பிய சாமான்கள் விபரம்:
பச்சை பட்டுக்குட்டை க

(3) சென்னப்பட்டணம் ரத்தின முதலியாரால் வரவு;
ஜோடு க

பட்டு அரைநாட் கயிறுகல் உ

விபஸ்ரீ மார்கழி மீ 18உ வெங்கடேசய்யர

ஒரு காகிதத்தில்ஒரு நாளைய வரவே காண்கிறதுஎன்றும் இதன் ஆங்கிலத் தேதி 31/12/1868 என்றும் ஆ.பா. அடிக் குறிப்பெழுதியுள்ளார். உடுத்துவதற்கு ஆடைகள் (மல்பீசு, லாங்கிலத் பீசு)போர்த்திக் கொள்ளுவதற்குப் போர்வைகள்,



RangaRakes tamilnavarasam.com

எழுதுவதற்குத்தாள்கள், மை,எழுதுகோல் முதலியன அன்பர்களால் உதவப்பட்டுள்ளன. இவை அடிகளுக்கு மட்டுமே அன்றிச் சாலை அன்பர்கள் அனைவர்க்கும் பயன்பட்டன.

### சாலையில் ஒருநாள் காலை அடிகள் பெற்ற பேறு

அறச்சாலையாகிய சத்திய தருமச்சாலை அடிகளைப் பொறுத்தவரை தவச்சாலையாகவும் திகழ்ந்தது. அடிகளது முகத்தில் எப்போதும் ஒரு துயரக்குறி இருந்துகொண்டேயிருக்குமாம். with a look of constant sorrow on his face என்பர் தொ.வே.அடிகளின் முகம் துயரக் குறியோடு விளங்கியதன் காரணம் இரண்டு. 1. இறைவன் இன்னும் தனக்கு முற்றிலும் அருள்செய்யவில்லையே என்ற கவலை 2. எவ்வளவோ சொல்லியும் நாம் சொல்பவற்றை மக்கள் கேட்டுக் கடைப்பிடிக்கவில்லையே என்ற வருத்தம். இந்தக் கவலையோடும் இந்த வருத்தத்தோடும் அடிகள் சாலையில் அருந்தவம் ஆற்றினார். அடிகளது தவத்திற்கு இரங்கிய இறைவன் ஒரு நாள் காலையில் எழுந்தருளி அருள் செய்தான். பல பிறப்புகள் தவஞ்செய்து அடையத்தக்க பெரும்பயனின் விளைவுகளையெல்லாம் தந்தருளினான். 'மேலையிலே இம்மையிலே ஒருமையிலே மேவுகின்ற பெரும் பயனாம் விளைவை எலாம் தருமச்சாலையிலே ஒரு பகலில் தந்த தனிப்பதியே' என்பர் அடிகள்.

**காலையிலே என்றனக்கே கிடைத்தபெரும் பொருளே**
**களிப்பேஎன் கருத்தகத்தே கனிந்தநறுங் கனியே**
**மேலையிலே இம்மையிலே ஒருமையிலே தவத்தால்**
**மேவுகின்ற பெரும்பயனாம் விளைவைஎலாம் தருமச்**
**சாலையிலே ஒருபகலில் தந்ததனிப் பதியே**
**சமரசசன் மார்க்க சங்கத் தலைஅமர்ந்த நிதியே**
**மாலையிலே சிறந்தமொழி மாலைஅணிந் தாடும்**
**மாநடத்தென் அரசேஎன் மாலையும் ஏற் றருளே.**

**-6(இடை)அருள்விளக்கமாலை92**

தருமச்சாலையிலே வாஎன்று காலையிலே வந்து கருணை அளித்ததையும், காலையிலே இறைவனைக் கண்டுகொண்டு சாலையிலே இன்பந் தழைப்பதையும் அடிகள் அழகாகக் கூறியருள்வர்.

**என்பாட்டுக் கெண்ணாத தெண்ணி இசைத்தேன் என்**
**தன்பாட்டைச் சத்தியமாத் தான்புனைந்தாந்முன்பாட்டுக்**
**காலையிலே வந்துகருணை அளித் தேதருமச்**
**சாலையிலே வாஎன்றான் தான். -6(இடை)பாமாலை ஏற்றல்5**

**காலையிலே நின்றன்னைக் கண்டுகொண்டேன் சன்மார்க்கச்**
**சாலையிலே இன்பம் தழைக்கின்றேன் - ஞாலமிசைச்**
**சாகா வரம்பெற்றேன் தத்துவத்தின் மேல்நடிக்கும்**
**ஏகா நினக்கடிமை ஏற்று -6(இடை)ஆனந்தானுபவம்2**

மேலே காட்டிய மூன்று திருப்பாடல்களிலும் முறையே



RangaRakes tamilnavarasam.com

**'காலையிலே என்றனக்கே கிடைத்த பெரும் பொருளே'**
**'காலையிலே வந்து கருணை அளித்தே'**
**காலையிலே நின்றன்னைக் கண்டு கொண்டேன்'**

**எனக்** கூறப்படுதலின் சாலையில் ஒரு நாள் காலையில் அடிகல் இறைவனைக் காணப் பெற்றாரென்பது நன்கு விளங்கும்.

**<u>சாலையில் நிகழ்ந்த அற்புதங்கள்</u>**

அடிகள் சில சமயம் சாலை வெளியில் உச்சிப்போதில் வெய்யிலில் அமர்ந்து நிட்டையிலிருப்பார். அப்போது பார்ப்பின் அடிகளின் தலைக்கும் சூரியனுக்கும் இடையே ஒரு தீப்பிழம்பு(அக்கினி ஸ்தம்பம்) தோன்றும். ஒரு நாள் உச்சிப்போதில் அடிகள் சாலையிலிருந்து வெளிச் சென்றனர். சென்று சிறிது நேரம் கழிந்த பின், அடிகள் திரும்ப வாராது பற்றிக் கவலையுற்றவராய் சண்முகம் பிள்ளை வெளியே வந்து பார்க்க,அடிகளின் அங்கங்கள் வெவ்வேறாய்க் கிடப்பதைக் கண்டு பயந்து பதறி மயங்கி வீழ்ந்தார். உடனே அடிகள் அங்கங்கெளல்லாம் ஒன்றாகி எதிரே வந்து தோன்றி 'இனி இப்படி வாராதீன்'என்று கூறி அவருடன் சாலைக்குத் திரும்பினர்.

**<u>உடுத்த ஆடையை அவிழ்த்துத் தரையில் விரித்துப் படுத்தயர்ந்தபோது இறைவன் வந்து அருளியது.</u>**

என் செய்வேன் சிறியனேன், என் எண்ணம் ஏதாக முடியுமோ என்று எண்ணி இரு கண்களில் நீர் கலங்க மனம் மிக மயங்கி வாட்டத்தோடு ஒரு நாள் இரவில் தருமச்சாலையில் உடுத்த ஆடையை அவிழ்த்து விரித்துத் தரையில் படுத்து எண்ணாத தெல்லாம் எண்ணி உலகியலை மறந்து அருளை உன்னி அடிகள் படுத்தயர்ந்தார். வைகறையில் இறைவன் அடிகளிருக்குமிடத்திற்கு எழுந்தருளி எழுப்பி, உனக்கு என்ன பயம் என்று தன் திருக்கரங்களால் தூக்கி அணைத்து வெறொரு இடத்திற்குக் கொண்டு சென்று அமர்த்தி, நகைத்து. நீ இவ்வாறு நலிதல் அழகோ! நின் எண்ணம் பலிக்க! அருள் அமுதம் உண்டு இன்புறுக! எனத் திருவார்த்தையளித்து மறைந்தருளினார். இவ்வற்புத நிகழ்ச்சியை அடிகள் பலவிடங்களிற் குறித்து மகிழ்கின்றார்கள்.

**உடுத்துகில் அவிழ்த்துவிரித் தொருதரையில் தனித்தே**
**உன்னாதும் உன்னிஉளத் துறுகலக்கத் தோடே**
**படுத்தயர்ந்த சிறியேன்றன் அருகணைந்து மகனே**
**பயமுனக்கென் என்றென்னைப்பரிந்துதிருக் கரத்தால்**
**அடுத்தணைத்துக் கொண்டெடுத்துப் போய்ப்பிறிதோர் இடத்தே**
**அமர்த்திநகைத் தருளியேன் ஆண்டவனே அரசே**
**தொடுத்தணிஎன் மொழிமாலை அணிந்துகொண்டென் உளத்தே**
**சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே**

**-6(முடி)திருநடப்புகழ்ச்சி6,**

**வாட்டமொடு சிறியனேன் செய்வகையை அறியாது**



RangaRakes tamilnavarasam.com

மனமிக மயங்கிஒருநாள்
மண்ணிற் கிடந்தருளை உன்னிஉல கியலினை
மறந்துதுயில் கின்றபோது
நாட்டமுறு வைகறையில் என் அரு கணைந்தென்னை
நன்றுற எழுப்பிமகனே
நல்யோக ஞானம் எனி னும் புரிதல் இன்றிநீ
நலிதல் அழ கோஎழுந்தே
ஈட்டுகநின் எண்ணம் பலிக்க அருள் அமுதம் உண்
டின்புறுக என்றகுருவே
என் ஆசை யேஎன்றன் அன்பே நிறைந்தபேர்
இன்பமேஎன் செல்வமே
வேட்டவை அளிக்கின்ற நிதியமே சாகாத
வித்தையில் விளைந்தசுகமே
மெய்ஞ்ஞான நிலைநின்ற விஞ்ஞான கலர் உளே
மெவுநட ராஜபதியே.
என்செய்வேன் சிறியனேன் என்செய்வேன் என்எண்ணம்
ஏகாத முடியுமோஎன்
றெண்ணி இரு கண்ணினீர் காட்டிக் கலங்கிநின்
றேங்கிய இராவிலொருநாள்
மின்செய்மெய்ஞ் ஞான உருவாகி நான் காணவே
வெளிநின் றணைத்தென் உள்ளே
மேவிஎன் துன்பந் தவிர்த்தருளி அங்ஙனே
வீற்றிருக் கின்ற குருவே
நன்செய்வாய் இட்டவிளை வதுவிளைந் ததுகண்ட
நல்குரவி னேன் அடைந்த
நன்மகிழ்வின் ஒரு கோடி பங்கதிகம் ஆகவே
நான்கண்டு கொண்டமகிழ்வே
வன்செய்வாய் வாதருக் கரியபொரு ளேஎன்னை
வலியவந் தாண்டபரமே
மணிமன்றின் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராஜபதியே

-6(இடை)நடராஜபதிமாலை24,25

முதல்நாள் இரவில் அடிகள் வருந்தினர். அடியவரின் வருத்தத்தைப் பொறுக்கலாற்றாத ஆண்டவன் மறுநாள் காலையே வருத்தத்தைப் போக்கி களிப்படையச் செய்தான். 'கங்குலிலே வருந்திய என் வருத்தம் எலாம் தவிர்த்தே காலையிலே என் உளத்தே கிடைத்த பெருங்களிப்பே' (அருள் விளக்க மாலை 6)என அடிகள் போற்றுவார்.

படுத்திருந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு அடிகளை இறைவன் மாற்றி வைத்தான். இவ்விடமாற்றம் படுத்திருக்கும் இடத்தில் மட்டுமன்று. அடிகளது நிலையிலும் இடமாற்றத்தை இறைவன் செய்தருளினான். அதுவரை இருந்த நிலையிலிருந்து மேல் நிலைக்கு ஏற்றியருளினான்.

பயத்தோ டொருபால் படுத்திருந்தேன் என்பால்
நயத்தோ டணைந்தே நகைத்து-வயத்தாலே


RangaRakes tamilnavarasam.com

**தூக்கி எடுத்தெனைமேல் சூழலிலே வைத்தனை நான்**
**பாக்கியவான் ஆனேன் பதிந்து.**

**என்னேநின் தண் அருளை என் என்பேன் இவ்வுலகில்**
**முன்னே தவந்தான் முயன்றேனோ-கொன்னே**
**படுத்தயர்ந்தேன் நான்படுத்த பாய்அருகுற் றென்னை**
**எடுத்தொருமேல் ஏற்றிவைத்தாய் யே**

**நான்படுத்த பாய் அருகில் நண்ணி எனைத்தூக்கி**
**ஊன்படுத்த தேகம் ஒளிவிளங்கத்-தான்பதித்த**
**மேல் இடத்தே வைத்தனை நான் வெம்மைஎலாம் தீர்ந்தேன் நின்**
**கால்இடத்தே வாழ்கின்றேன் காண்.**

**-6(முடி)திருஅருட்பேறு2,3,6**

'மேல்சூழலிலே வைத்தனை', 'மேல் ஏற்றி வைதாயே'. 'மேல் இடத்தே வைத்தனை' என்பவை மேல் நிலைக்கு ஏற்றியருளியதைக் கூறுவனவாம். ஏறும்போரு ஒரு நிலையில் ஏற அறியாது இளைத்த்த காலத்துக் கைகொடுத்துத் தூக்கியதனை அடிகள் கூறுவர். ' ஏறியநான் ஒரு நிலையில் ஏற அறியாது இளைக்கின்ற காலத்தென் இளைப்பெல்லாம் ஒழிய வீறிய ஓர் பருவசத்தி கைகொடுதுத் தூக்கி மேலேற்றச் செய்து' என்பர்(4 அன்புமாலை17)இதுபோன்ற நிகழ்ச்சிகள் பலவாம்.

### ஒரே சமயத்தில் பல் இடங்களில் திகழ்ந்தது

கூடலூர் பெரை தெவநாத பிள்ளை என்பவர் அடிகட்கு ஆட்பட்ட அன்பர்களுள் ஒருவத். அவர் பாடிய தோத்திரப்பாக்களை அடிகள் பார்வையிட்டுத் திருத்தியருளியதோடு சாற்றுக்கவி யொன்றும் அருளினர். அச்சாற்றுக் கவி.

**இரும்புருக்க உலைக்களந்தோ றுழல்கின் நீர்**
**இரும்பொன்றோ இளகாக் கல்லும்**
**விரும்பியொரு கண்த்துருக்கும் உளவொன்று**
**கேட்கவள மேவு கூடற்**
**பெரும்புகழான் தேவநா தன்பரனைக்**
**குறித்தன்பு பிறங்கப் பாடும்**
**கரும்பியைந்த சுவைப்பாட்டில் ஒன்றவைக்கு**
**முன்பாடிக் காணு வீரே.**

என்பதாம். இத்தேவநாத பிள்ளையின் மகன் ஐயாசாமி பிள்ளை ஒருகால் தொடையில் கட்டி உண்டாகித் துன்புற்றார். அதனை அறிந்த வள்ளற் பெருமான் கட்டி உடைவதற்கு மருந்து கூறிப் பின்வரும் செய்யுளை வரைந்து திருநீற்றுடன் தேவநாத பிள்ளைக்கு அனுப்பியருளினார்.

**இறையருள் நிரம்ப இருத்தலான் மகிழ்ந்து**
**பிறையென வளருநம் பிள்ளை மணிக்கு**
**ஊருவிற் கட்டி உடனே உடையும்**



RangaRakes tamilnavarasam.com

**அதுகுறித் தையநீ  அஞ்சலை அஞ்சலை**
**இதுகுற்த் தருள் நீ றிதற்குள் அடக்கஞ்**
**செய்துவைத் தனன் அத் திருநீ றெடுத்து**
**எய்துமுப் போதும் இடுகமற் றதன்மேல்**
**கொவ்வைச்சாறும் கோள்வெடி யுப்பும்**
**கவ்வக் கலந்து காய்ச்சிப் பூசுக**
**பூசுக உடைந்தபிற் பூரம் பூசுக**
**பாசுறு முருங்கைபட்டை சாற்றினிலே**

பெருமான் அனுப்பிய திருநீற்றினையும்,கூறிய மருந்தையும் பூசி ஐயாசாமி பிள்ளை துன்பம் நீங்கப்பெற்றார்.

பின் ஒரு சமயம் ஐயாசாமிபிள்ளை கடும் நோயொன்றால் துன்புற்றார். நோயின் கடுமை உயிர் நீன்ங்குமோ என் அஞ்சுமாறு இருந்தது. ஒரு நாள் இரவில் தேவநாதபிள்ளை மகனது நோய்க்காக மிகவும் வருந்தியவராய் வள்ளற்பெருமானை நினைந்தார். அதுபோது வடலூரில் தருமச்சாலையில் அன்பரிடையே உபதேசம் செய்துகொண்டிருந்த பெருமான் அத்தருணமே கடலூரில் தோன்றி தேவநாத பிள்ளையின் வீட்டுக்கதவைத் தட்டினர். தேவநாதபிள்ளை கதவைத் திறந்தார். பெருமான் உள்ளே புகுந்து ஐயாசாமி பிள்ளைக்குத் திருநீறிட்டுச் சற்று நேரம் அங்கிருந்தபின் புறப்பட்டுவிட்டனர். அன்றிரவே நோய் முற்றிலும் குணமாயிற்று. மறுநாள் தேவநாதபிள்ளை ஐயாசாமி பிள்ளையயும் வண்டியில் அழைத்துக்கொண்டு வடலூர்க்கு வந்தார். பெருமான் சாலையில் அன்பர்களிடையே அருளுரையாற்றிக் கொண்டிருந்தனர். தேவநாத பிள்ளை வருவதைக் கண்டதும் விரைந்து எதிர்வந்து தனித்தழைத்துச் சென்று நேற்று கூடலூர் வந்ததை இங்கு யாருக்கும் கூற வேண்டாம் எனப் புகன்றனர். தேவநாதபிள்ளைக்கு ஐயமுண்டாயிற்று. அவர் சாலையிலிருந்தவர்களை உசாவினார். முன்னாளிரவு முழுவதும் அடிகள் சாலையிலேயே இருந்தனரென்றும் வெளிஉயில் செல்லவில்லை என்றும் அவர்கள் கூறினர். ஒரே சமயத்தில் அடிகள் வடலூரிலும் கூடலூரிலும் காட்சியளித்து அங்கங்கு அருளிய திறத்தைத் தேவநாதபிள்ளையும் சாலையிலிருந்தவர்களும் அறிந்து வியந்து போற்றுவாராயினர்.

ஒருமுறை அடிகள் திருவதிகைக்கு வழிபடச் சென்றபோது விழாக்காலமாதலின் மக்கள் கூட்டம் மிகுதியாக இருந்தது. அடிகளைக் காண்பதற்காகக் கூட்டத்தில் பலர் நெருங்கவே பெரு நெருக்கடி உண்டாயிற்று. அப்போது அடிகள் அக்கூட்டத்தில் பல இடங்களிலும் தோன்றிக் காட்சியளித்தனர்.

ஒருநாள் மாலை சாலையிலிருந்து அடிகள் உலாவப் புறப்பட்டார்கள் உடன் பலர் புறப்பட்டனர். தனியே உலவச் செல்லக் கருதிய அடிகள் உடன் வருபவர்களை நோக்கி, 'இருங்கள்' என்று கூறி நடந்தனர். அதன் பின்னரும் மற்றவர்கள் பின்தொடரவே அடிகள் திடீரெனத் தொலைவிற் காணப்பட்டனர். தொடர்ந்தவர்கள் ஓடி நெருங்க முயன்றபோது பின்னும் தொலைவில் பெருமானைக் காணலாயினர்.

கருங்குழியில் உறையும் காலத்தில் ஒருநாள் மாலை அடிகள் கல்லாங்குளத்தின் அருகே உலவிக் கொண்டிருந்தனர். தனித்திருக்கும் இதுவே உபதேசம் கேட்கத்தக்க சமயம் என்று கருதி அன்பர் ஒருவர் அடிகலை அணுகினர்.



RangaRakes tamilnavarasam.com

அடிகள் அத்தருணமே தொலைவில் காணப்பட்டார்கள். நெருங்க நெருங்கத் தூரமாகவே செல்லுவதைக் கண்ட அவ்வன்பர் அயர்ந்து நின்றார்.

மரம் வாங்குவதற்காக ஆறுமுக முதலியார் சென்னை சென்றபோதும் அடிகள் வடலூரிலிருந்தவாறே சென்னையிலும் தோன்றி அவருக்கு உதவினர்.

## அடிகளின் திருக்கரம் அமுதசுரபி ஆதல்

தருமச்சாலையில் ஒருநாள் இரவு உணவுநேரத்தில் பலர் வந்து விட்டனர் சமைத்த உணவு சிறிதே உள்ளதென்றும் அனைவர்க்கும் பரிமாறப் போதாதென்றும் சண்முகம் பிள்ளை அடிகளிடம் விண்ணப்பித்தார். அடிகள் உடனே எழுந்து 'பிச்' இலைபோடும் என்று கூறித் தம் கையால் அனைவர்க்கும் பரிமாறினர். அனைவரும் உண்ட பின்னும் உணவு எஞ்சியிருந்தது.

## சாலைக்கு அரிசி வருவித்தருளல்

ஒருநாள் சண்முகம் பிள்ளை சாலையில் சமைப்பதற்கு அரிசியில்லாததை விண்ணப்பித்தார். அடிகள் தனித்தமர்ந்து சிறிது நேரம் தியானம் செய்தபின் 'வேண்டிய அரிசியும் மற்றவையும் நாளைக்கு வரும்' என்று கூறினர். அவ்வாறே மறுநாள் திருத்துறையூரினின்றும் ஓர் அன்பர் மூன்று வண்டிகளில் அரிசியும் பிற உணவுப் பொருள்களும் கொண்டுவந்து நேற்றிரவு கனவில் உத்தரவானதாகக் கூறிச் சேர்ப்பித்தார்.

## திரைமறைவில் திருச்சிற்றம்பலம்

ஆண்டுதோறும் ஆனித் திருமஞ்சனத்திற்கும் திருவாதிரைத் திருவிழாவிற்கும் வெளியூர் அன்பர்கள் பலர் வடலூருக்கு வந்து அடிகளையும் அழைத்துக்கொண்டு சிதம்பரம் சென்று தரிசிப்பது வழக்கம். ஒரு சமயம் அவ்வாறே பலர் வந்து சிதம்பரம் செல்லக் காத்திருந்தனர். விழா நாள் நெருங்கியும் அடிகள் புறப்படுவதாகத் தோன்றவில்லை. விழா நெருங்க நெருங்க ஒவ்வொருவராகச் சிதம்பரம் சென்றனர். சிலர் மட்டும் அடிகளுடன் செல்வோம் என்று இருந்தனர். விழா நாளும் வந்தது. அன்றும் அடிகள் வடலூரைவிட்டுப் புறப்படவில்லை சிதம்பர தரிசனம் தவறியதே என்று அச்சிலரும் வருந்தினர். அவர்களது வருத்தத்தை உணர்ந்த அடிகள் அவர்களை நோக்கி 'சிதம்பர தரிசனம் இதோ பாருங்கள்' என்று தருமச்சாலையின் ஒரு பகுதியில் திரையிடச் செய்து, அத்திரைக்குள் சென்று பார்க்கக் கூறினர். திரைக்குள்ளே சென்றவர்கள் அங்கு சிதம்பர தரிசனத்தைக் கண்டு களித்தனர். அடிகளார் அப்போது தில்லை சென்று வழிபடும் பருவத்தில் இல்லை என்பதும் அடிகளாரின் இருப்பிடமே தில்லையாகத் திகழ்ந்தது என்பதும் இதனால் வெளிப்படை. அடிகள் வடலூரை உத்தரஞான சிதம்பரமாக்கியவரன்றோ?

## மழை பொழிவித்தது

கோடை காலத்தில் சித்திரைத் திங்களில் தருமச்சாலைக்கு வந்தவர்களிற் பலர் மழையில்லாக் குறையால் துன்புற்றதை அறிந்த வள்ளற்பெருமான் ஒரு செம்பு

தண்ணீரைக்கொண்டு வந்து தமது காலில் ஊற்றும்படிக் கூறினர். அன்பர்கள் அவ்வாறே செய்ததும் சற்று நேரத்தில் மேகங்கள் திரண்டு நான்கு செவி{74} மழை பெய்தது. புதுப்பேட்டை என்னும் ஊரில் உள்ள அன்பர்கள் இந்நிகழ்ச்சியைக் கேட்டு வடலூர்க்கு வந்து தம் ஊரில் மழையின்மையையும், கிணறுகள் நீர்ச்சுரப்பற்றுப் போயிருத்தலையும் விண்ணப்பித்தனர். பெருமான் ஆறு குடந்தண்ணீரைத் தம் தலையில் விடக்கட்டளை யிட்டனர். அவ்வாறே செய்யலும் புதுப்பேட்டையில் ஆறு கிணறுகளில் நீர் நன்கு ஊறி மேல் நீராயிற்று. முன்னிலும் சுவையாயும் ஆயிற்று. ஊரில் நல்ல மழையும் பொழிந்து செழித்தது.

{74.செவி - 'செவிடு' என்பதின் மரூஉ. படி மரக்கால் முதலிய முகத்தல் அளவைகளுள் ஒன்று.}

### தீ அணையச்செய்தது

ஒரு வீட்டில் தீப்பற்றி எரிந்தபோது அடிகள் இருந்த இடத்திலிருந்தே தனது மேலாடையால் வீசினர். தீ அணைந்தது.

### புன்செய் நன்செயாதல்

அடிகளுக்கு ஆட்பட்டவர்களுள் தாசில்தார் முருகேசபிள்ளை என்பவர் ஒருவர். அவரது மாமனார் மணலூர் நடராசபிள்ளை தமது புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக்க அதிகாரிகளுக்குப் பலமுறை விண்ணப்பித்தும் பயனில்லாததாயிற்று. இறுதியில் வள்ளற்பெருமானிடம் வந்து திருநீறு பெற்றுச் சென்ற பின்னர் புன்செய்கள் நன்செய்களாயின.

### ஒருவரது அகந்தை அடங்கியது

புதுச்சேரி தந்தி நிலைய மானேஜர் பிநாகபாணி முதலியார் என்பவர் ஏழெட்டு மொழிகளில் பயிற்சியுள்ளவர். சாலையில் வெறுங்கூட்டம் சேர்ந்து உண்டு பொழுது போக்குகிறார்கள் என்பது அவர் எண்ணம். அவர் ஒரு சமயம் அடிகளைக் காண வடலூர்க்கு வந்தார். அவர் வருமுன்னரே அடிகள் 'ஒருவர் புத்தி சொல்ல வருகிறார்' என்றனர். அவர் வந்து சற்று நேரம் உரையாடிய பின், தங்களுக்கு எத்தனை மொழிகளில் பயிற்சியுண்டென அடிகள் வினவினர். பிநாகபாணியார் ஐந்தாறு மொழிகள் தெரியும் என்றார். அப்போது அங்கு விளையாடிக்கொண்டிருந்த ஐந்தாண்டுச் சிறுவனாகிய திருநாகேசுவரனை (தொ.வே.-யின் மகன்) அழைத்து அவர் முன் நிறுத்தி எந்தமொழியில் எந்தப் பொருளை வேண்டுமானாலும் இந்தப் பிள்ளையைக் கேளுங்கள் என்றனர். முதலியார் பேச நாவெழாது குழறினார். அடிகள் சற்று நேரம் பொறுத்துப் பொறுத்து, உம், கேளும், கேளும் என்று பல முறை புகன்றனர். பேச நாவெழாது அரை மணி நேரமாகத் தவித்த முதலியார் செருக்கு அடங்கியவராய் மன்னிக்க வேண்டும் என்று மனத்துள்ளேயே எண்ணித் துதித்தார். அடிகள் 'பிச்' என்றதும் பிநாகபாணியார் பேச்சு வரப் பெற்றார். பின்னர் தமது நல்லெண்ண மில்லாமைக்கு வருந்தியவராய் மன்னிப்புக் கேட்டுச் சென்றார்.

### கள்வர்க்கும் கருணை பாலித்தது



RangaRakes tamilnavarasam.com

ஒருகால் மஞ்சக்குப்பம் கோர்ட்டு சிரஸ்தேதார் இராமச்சந்திர முதலியார் வடலூர்க்கு வந்து வள்ளற்பெருமானைத் தம்மூர்க்கு வந்து சின்னாளிருக்குமாறு வேண்டினார். இருவரும் புறப்பட்டு வண்டியில் சென்றனர். இரவு குள்ளஞ்சாவடி அருகே வரும்போது கள்வர்கள் இருவர் வண்டியை மறித்து நிறுத்துமாறு வெருட்டினர். வண்டிக்காரனும் சிரஸ்தேதாரின் சேவகனும் பயந்து முந்திரித் தோப்பினுள் ஓடி ஒளிந்தனர். கள்வர்கள் வண்டியின் பின்புறம் வந்து வண்டியிலிருந்தவர்களை இறங்கும்படிக் கூறினர். பெருமான் இறங்கிவிடுவார்களோ என்ற அச்சத்துடன் முதலியார் முதலில் இறங்கினார். அவர் கையிலிருந்த வைர மோதிரத்தைக் கழற்றும்படிக் கள்வர்கள் அதட்டினர். அது பேசாதிருந்த வள்ளற்பெருமான் அவ்வதட்டலைக் கேட்டதும் 'அவசரமோ' என்றனர். கள்வர்கள் அடிப்பதற்காகத் தடியை உயர்த்தினார்கள். உயர்த்திய கைகள் அவ்வாறே செயலற்று அசையாது நின்றுவிட்டன. கண் பார்வையும் நீங்கியது. கள்வர் இருவரும் பெருமானை வண்டியோடு சுற்றி வந்து நிலத்தில் வீழ்ந்து வணங்கி இனி இந்தத் தொழிலை விட்டு விட்டு உழைத்து உண்பதாக உறுதி கூறிச் சென்றனர். ஓடி ஒளிந்த சேவகனும் வண்டிக்காரனும் வந்து பெருமானின் பெருமையை அறியாது தாங்கள் நடந்து கொண்டதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர்.

பின்னொருகால் பிள்ளைப் பெருமான் கூடலூரிலிருந்து திரும்பும் போது குள்ளஞ்சாவடியில் தங்கினர். ஹெட் கான்ஸ்டபிளாகப் பணியாற்றும் முஸ்லிம் அன்பர் ஒருவர் புதிய ஆடை ஒன்றை வள்ளற்பெருமானுக்கு அளித்து அணிந்து கொள்ளும்படி வேண்டினார். அவரது அன்புக்கு உருகிய பெருமானும் அவ்வாடையைப் போர்த்துக்கொண்டு அன்றிரவு குள்ளஞ்சாவடியிலேயே ஒரு சத்திரத்தின் திண்ணையில் துயின்றனர். பெருமான் சத்திரத்தின் திண்ணையில் துணையின்றித் தனித்துறங்குவதை அறிந்து ஹெட்கான்ஸ்டபிளும் அன்றிரவு அச்சத்திரத் திண்ணையிலேயே தங்கினார். நள்ளிரவில் கள்வன் ஒருவன் வள்ளற்பெருமான் போர்த்திருந்த ஆடையை இழுத்தான். அவன் அதைப் பறித்துக் கொள்ளுவதற்கு ஏதுவாகப் பெருமானும் வேண்டுமென்றே புரண்டு படுத்தார்கள். கான்ஸ்டபிள் திருடனை அதட்டிப் பிடித்தார். அடிகளோ, 'ஏழை போகிறான் விட்டு விடுங்கள்' என்று அவரைச் சமாதானப்படுத்தி, ஆடையை அக்கள்வனுக்கே அளித்து ' இந்தத் தொழிலை விட்டுவிடு' என்று கூறி அனுப்பினர்.

இளமையிலும் இவ்வாறொரு நிகழ்ச்சி நடந்தது ஈண்டு நினைவு கூரத்தக்கது. வள்ளற்பெருமான் இளமையில் சென்னையில் வதிந்த காலத்தில் காதில் கடுக்கன் அணிந்திருந்தார்கள். ஒரு நாள் இரவு ஒற்றியூரில் ஒரு சத்திரத்தில் துயின்ற போது கள்வனொருவன் வலது காதுக் கடுக்கனைக் கழற்றினான். கழற்றுவதை உணர்ந்த பெருமான் கழற்றி முடியும் வரை பொறுமையாகத் தூங்குவது போலிருந்து விட்டு இடது காதுக் கடுக்கனையும் கழற்றற்கேதுவாகச் சாய்ந்து படுத்தனர். மற்றொரு கடுக்கனையும் கள்வன் கழற்றிச் சென்றான். அதன் பின் பெருமான் கடுக்கன் அணியவே யில்லை.

இவ்வாறு கள்வர்க்கும் கருணை செய்யும் கருணாமூர்த்தியாக அடிகள் விளங்கினர். திருடர்களிடத்தும் கருணைகாட்டி அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்தினர்.

## புறவினத்தாரை அகவினத்தாராக மாற்றியது

வடலூர்ப் பறைச்சேரியில் அமாவாசை என்பவன் ஒருவன் இருந்தான். சேரியின் தலைவனாகிய அவனை அழைத்து இறந்த மாடுகளைத் தின்னாமல் புதைக்கும்படி அடிகள் அறிவுறுத்தினர். அவன் அவ்வாறே செய்துவந்தான். சிலநாள் கழித்து மீண்டும் அழைத்து இனி எவ்வகைப் புலாலையும் உண்ணாதே என்று கட்டளையிட்டனர். சேரியில் என் பங்குக்கு வரும் மாமிசத்தையும் விட்டுவிட்டால் என்ன செய்வது, நாள்தோறும் செலவுக்கு அரை ரூபாயாவது வேண்டுமே என்று அவன் கூற, பெருமான் அரை ரூபாய் ஒன்றை மஞ்சள் துணியில் முடிந்து கொடுத்து 'இதைப் பெட்டியில் வைத்துக்கொள், நாள் தோறும் எட்டணா வருமானம் கிடைக்கும்' என்றருளினர். அவ்வாறே செய்யலும் அன்று முதல் அவனுக்கு நாளும் அரை ரூபாய் வருமானம் கிடைத்தது. அவனும் புலாலை அறவே நீக்கி அகவினஞ்சார்ந்தான்.

வடலூரில் அருணாசல படையாச்சி வேங்கடாசல படையாச்சி என இருவர் இருந்தனர். இருவரும் பெரிய குடும்பிகள், புறவினத்தார், ஒருநாள் அடிகள் இருவரையும் அழைத்து 'இன்று முதல் புலால் உண்பதைத் தவிருங்கள், உங்கள் நிலத்தில் நெல்லும் அவுரியும் ஒன்றுக்கு ஐந்தாக விளையும்' என்றனர். அவர்களும் அவ்வாறே செய்ய ஒப்புக்கொண்டு அகவினத்தாராகிச் செல்வத்தில் முன்னையினுஞ் சிறந்து விளங்கினர்.

புலால் உண்ணும் புறவினத்தாரைப் புலால் மறுத்த அகவினத்தாராக மாற்றும் ஓர் அற்புத ஆற்றல் அடிகளிடம் காணப்பட்டது என்றும் அடிகளது பார்வை ஒன்றே புலால் உணவில் ஒருவருக்கிருக்கும் இச்சையை ஒழிக்க வல்லது என்றும் தொ.வே.கூறுவர். பக்கம் 369 அடிக்குறிப்பு காண்க.

## <u>பொன் விளைவு</u>

செம்பு முதலிய உலோகங்களை வேதித்துப் பொன்னாக்குவது இரசவாதம் எனப்படும். அடிகள் இரசவாதத்தில் வல்லவர். 'அவர் ஒரு பெரிய இரசவாதி' (He was a great Alchemist) என்பது தொ. வே. வாக்குமூலம். பொன் செயல் வகையைத் தனக்கு இறைவன் உணர்த்தியதாக ஒரு பாடலில் அடிகளே குறிப்பிடுவர்.

**என்செயல் அனைத்தும் தன்செயல் ஆக்கி**
**என்னைவாழ் விக்கின்ற பதியைப்**
**பொன்செயல் வகையை உணர்த்திஎன் உளத்தே**
**பொருந்தியமருந்தையென் பொருளை**
**வன்செயல் அகற்றி உலகெலாம் விளங்க**
**வைத்தசன் மார்க்கசற் குருவைக்**
**கொன்செயல் ஒழித்த சத்திய ஞானக்**
**கோயிலில் கண்டுகொண் டேனே.**

-6(இடை) இறைதிருக்காட்சி 9

இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகமொன்றில் பொன் உரைக்கின்ற உரைகல்லும் வெள்ளி உரைக்கின்ற உரைகல்லும் தராசும் வாங்கியனுப்பும் படிக் கேட்டிருக்கிறார்கள். முதலியார் அவ்வாறே அவற்றை


RangaRakes tamilnavarasam.com

வாங்கியனுப்பினார். அவை வந்து சேர்ந்ததை அடுத்த திருமுகத்தில் அடிகள் தெரிவிக்கின்றனர். திருமுகங்கள் இரண்டும் வருமாறு.

உ

சிவமயம்

அன்பு அறிவு தயை முதலிய சுபகுணங்களிற் சிறந்த உண்மையன்பராகிய தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக வென்று திருவருளை சிந்திக்கின்றேன். தங்கள் சுப சரித விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். மற்ற சங்கதிகளை எனக்கு சாவகாசம் நேரிட்டபோது எழுதித் தெரிவிக்கின்றேன். தற்காலம் வேண்டுவதை இதனடியில் எழுதுகிறேன். அதாவது பொன்னுரைக்கின்ற உரை கல் ஒன்று வெள்ளியுரைக்கின்ற உரை கல் ஒன்று இவைகளையும் இவைகளுக்கு அடுத்த தராசு முதலிய கருவிகள் வைக்கின்ற பை ஒன்று இம்மூன்றும் வாங்கி பங்கியிலனுப்பவேண்டும். சுமார் ரூ பலம் அ பலம் நிறுக்கத்தக்க தராசு நேரிட்டாலும் அதனுடன் அனுப்பவேண்டும்.

தேகத்தை பக்குவமாகப் பாராட்டிக்கொண்டு சிவசிந்தையும் ஜீவகாருண்ணியமும் மாறாமல் சாக்கிரதையோடு இருப்பீர்களாக. இதை சமரச வேத சன்மார்க்க சங்கத்தவர் அல்லாதவர்களுக்கு வெளிப்பட வாசிக்கப்படாது. வேணும் சிரஞ்சீவி சிரஞ்சீவி,

விபவவருஷ இங்ஙனம்
சித்திரைமீ உஙஉ சிதம்பரம் இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் ஏழு கிணற்றுக் கடுத்த
வீராசாமிப் பிள்ளை வீதியில் கீழண்டை வாடை
நெ. ஙஅ-வது கதவிலக்கமுள்ள வீட்டில்
இறுக்கம் மகா-ள-ஸ்ரீ இரத்தின
முதலியாரவர்களுக்கு

உ

சிவமயம்

கல்வி கேள்விகளாலும் அன்பறி வொழுக்கங்களாலுஞ் சிறந்த தங்கட்கு திருவருள் வலத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்து மேன்மேலுண்டாக.

தங்கள் சுபசரித விபவங்களை அடிக்கடி கேட்டு மகிழ விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். தாங்கள் அனுப்புவித்த பங்கியில் தாங்கள் கடிதத்தில் குறித்தபடி



RangaRakes tamilnavarasam.com

இருக்கக்கண்டு களிப்பொடு பெற்றுக்கொண்டேன். தாங்கள் அனுப்புவித்த பங்கிவந்த தினத்திற்றானே எனக்கு ஊர்ப்புறங்களிற் போக அவசியமான பிரயாண நேரிட்டபடியால் உடனே பங்கிவந்த செய்தியை தங்களுக்குத் தெரியப்படுத்துவதற்குக் கூடாமையாயிற்று. இந்தக் கடிதமும் கொள்ளடத்தின் வடகரையில் திருநாவலூரிலிருந்து எழுதினேன். என்னுடன் சுமார் உ பெயர்கள் வந்திருக்கின்றார்கள். மற்றவர்கள் சாலையிலிருக்கின்றார்கள். நான் சாலைக்கு வந்தவுடன் மற்ற சங்கதிகளைத் தபாலில் தெரிவிக்கிறேன். தாங்கள் சாக்கிரதையோடு தேகத்தைப் பக்குவமாகப் பாராட்டிக்கொண்டு சிவசிந்தையோ டிருக்கவேண்டும். தங்களுக்கும் நமக்கும் அன்பராகிய செல்வராய முதலியார் அவர்களுக்கும் இங்ஙனம் தெரிவிக்கவேண்டும். வாழ்க வாழ்க வாழ்க. நான் சுமார் பத்து தினத்தில் தருமச்சாலைக்கு வந்து சேர்வேன்.

விபவவருஷ — சிதம்பரம் இராமலிங்கம்.
வையாசிமீ யசூஉ

இஃது
சென்னப்பட்டணம் ஏழுகிணற்றுக் கடுத்த
வீராசாமி பிள்ளை வீதியில் 38-வது கதவு
இலக்கமுள்ள வீட்டில் மஹாராஜராஜஸ்ரீ
முதலியார் இரத்தின முதலியார் அவர்கள்
திவ்விய சமுகத்திற்கு

அடிகள் பொன் செய்யும் ஆற்றல் பெற்றவர்கள் என்பதற்கு மேற்குறித்த பாடலும், இ.இ.முதலியார்க்கு வரைந்த இரண்டு திருமுகங்களும் அகச்சான்றாம். இரசவாத வித்தையைக் கற்கும் நோக்கத்துடன் அடிகளைப் பலர் அணுகவே அவர்களுக்கெல்லாம் அவ்வித்தையைச் செய்து காட்டி 'இச்சையற்றவனுக்கே இஃது இயலும் ஆதலின் இம் முயற்சியை விடுக' என்று அறிவுரை பகர்ந்து அனுப்புவராம்.

## சபாபதி சிவாசாரியார்

இவரது ஊர் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள ஆடூர். இவரை முதன் முதலாக அடிகள் சிதம்பரத்தில் 1867 பிரபவ ஆண்டு மார்கழித் திங்களில் சந்தித்தார்களென்றும் அப்போது இவருக்கு அகவை பத்தொன்பதென்றும் எமக்குக் கிடைத்த குறிப்பொன்றால் அறியப்படுகிறது. விபவ ஆண்டு வைகாசித் திங்கள் 23 ஆம் நாளில் (3-6-1868) அடிகள் சிவாசாரியர்க்கு வரைந்த திருமுகமொன்று பின் வருமாறு.

உ

சிவமயம்

சத்தியக் கியானானந்த சொரூப சாக்ஷாத்கார சுத்த சிவகுல சிவாசார சிவாநுபவ சிவப் பிராமணோத்தம சிவத்துவ போதக சிகாமணிகளாகிய சுவாமி அவர்கள் பரம கருணாம்பர பத்ம பாத யுகள சந்நிதிக்கு அடிமை பக்தி பூர்வகமாக அனந்த முறை தண்டனிட்டுச் செய்துகொள்ளும் விண்ணப்பம்: சுவாமிகள் கடாக்ஷித்தருளிய நிரூபத்தைப் பூசித்து வாசித்து அறிந்தேன். அந்த நிரூபத்திற்


RangaRakes tamilnavarasam.com

குறித்தபடி சிவபுண்ணியத் திருவிழாவைத் தரிசிக்கும்படி பிரயாண சித்தனாயிருந்தேன். இத் தருணத்தில் இந்தப் பார்வதிபுரத்தில் பிராமணர் இருவர்களுக்கு இராஜாங்க விவகார வழியில் ஒரு பெரிய ஆபத்து நேரிட்டு அவர்களைப் பிடித்துக்கொண்டு போயிருக்கின்றார்கள். அவர்கள் இத் தருணத்தில் சிறிது சகாயம் செய்தால் உயிர் வாழ்வோம் இல்லாவிடில் உயிரிழந்து விடுவோமென்று பரிதபித்து எழுதிய கடிதம் வந்து சேர்ந்தபின் நான் அவ்விடம் வரும் பிரயாணம் ஆலசியப்பட்டது. இங்கு கூடியவரையில் அவர்கள் விஷயத்தில் சகாயம் செய்யவேண்டுவது கருணைக்கு இலக்ஷிய மாகலில் என் மனது இவ்விடம் வருவதற்கும் அவ்விடம் போவதற்கும் துணிவு தோற்றாமல் ஊசலாடுகின்றது. இது சிறிது துணிவு பெற்ற பின் நான் வருகின்றேன். தற்காலம் அடிமை வந்திருப்பதாகவே சாமிகள் திருவுளங்கொண்டு மேற்குறித்த சிவ புண்ணியத் திருவிழாவைச் சிறப்பாக நடத்துவிக்க வேண்டு மென்றும் சுவாமிகள் திருவடிகளைச் சிந்தித்துப் பிரார்த்திக்கின்றேன். மற்றவைகளை நான் சந்நிதியில் வந்து விண்ணப்பஞ் செய்து கொள்ளுகிறேன். அடிமையின்மேல் கருணாநிதியாகிய சாமிகள் திருவுள்ளம் வேறுபடா தென்கிற துணிவுபற்றி இங்ஙனம் விண்ணப்பம் செய்துகொண்டேன். சாஷ்டாங்க தொண்டன்.

விபவவருஷ இங்ஙனம்
வைகாசிமீ உஙுஉ சிதம்பரம் இராமலிங்கம்.

இஃது
சிதம்பரம் துக்குடி ஆடூரில் சற்குணாகர தயாம்
பர சாமிகள் சபாபதி சிவாசாரிய சாமியவர்கள்
சுபகுண நடன விபவ சந்நிதிக்குப் பார்வதி
புரத்திலிருந்து வருவது.

அடிகளின் பழக்கம் 1867 முதலே ஏற்பட்டதேனும் 1869 சுக்கில ஆண்டு வைகாசித் திங்களில் தான் சிவாசாரியர் வடலூர் வந்தார். வந்தது முதல் இறுதிவரை வடலூரிலேயே தங்கினார். சத்திய ஞான சபை கட்டப்பெற்ற பின் அதன் பூசகர் ஆனார். இன்றும் இவரது பரம்பரையினர் ஒருவரே பூசகராக உள்ளார். வள்ளற்பெருமானிடம் பழகியவர்களுள் சற்று அறிவுத் திறமுடையோர் இருவர். ஒருவர் தொழுவூர் வேலாயுத முதலியார். இன்னொருவர் சபாபதி சிவாசாரியர். பெருமான் சித்திபெற்ற பின் தொ.வே. சன்மார்க்க உலகிலிருந்தே பெரும்பாலும் விலகிவிட்டார். சிவாசாரியார் சன்மார்க்க நிலையங்களுள் முக்கியமான சத்திய ஞான சபையை முற்றிலும் பிடித்துகொண்டார். சிவாசாரியரால் ஏற்பட்ட நன்மைகளும் உண்டு. தீமைகளும் உண்டு. நன்மைகள்: சத்திய ஞான சபையைக் கட்டிக் காத்துக் கிடந்தது. தம் காலத்தில் ஒரு திருப்பணிசெய்து கும்பாபிடேகமும் செய்தது. பெருமானது திருக்கரத்தால் எழுதப்பெற்ற திருவருட்பா ஏடுகளில் தமக்குக் கிடைத்தவற்றைப் பாதுகாத்து வைத்திருந்து. அருட்பெருஞ்ஜோதி அகவலையும் தனிப்பாடல்கள் சிலவற்றையும் அச்சிட்டு வெளிப்படுத்தியது முதலியன. தீமைகள்" வள்ளற் பெருமானது கட்டளைக்கும் கருத்துகளுக்கும் மாறாக ஞானசபை வழிபாட்டில் சடங்குகளைப் புகுத்தியது, ஞான சபையில் படிகலிங்கம் ஸ்தாபித்தது முதலியன.

சிவாசாரியரைப் பற்றிச் ச.மு.க. பதிப்பு சரித்திரக் குறிப்புகளில் கூறப்படுவது பின்வருமாறு.



RangaRakes tamilnavarasam.com

ஆடூரில் வேதாகமக் கடலைத் தமது பேரறிவால் கடைந்தெடுத்த சிவாஞான அமுதருந்தும் சாதகத்தி லிருந்து பல பிரபல சாஸ்திரிகளால் மதிக்கப்பெற்று விளங்கிய பிரம்மஸ்ரீ சபாபதி சிவாசாரியார் அவர்களை நிருபத்தால் வரவழைத்துத் தனிமையில் காயத்திரியின் மெய்ப்பொருளை விளக்கி இருக்கச் செய்தனர்.

ஆடூர் சபாபதி குருக்கள் ஒருநாள் தன் கூரைவீட்டுத்திண்ணையில் ஒழிவிலொடுக்க நூலைப் படித்துக்கொண்டிருக்க, வள்ளலார் வந்து "என்ன புத்தகம்?" என்று கேட்க, "ஒழிவிலொடுக்கம்" என்று குருக்கள் கூற, வள்ளலார் "இப்புத்தகத்தை நெருப்புப் போட்டுக் கொழுத்துங்காணும்" என்று சொல்லிப் போயினர். உடனே குருக்கள் சந்தேகந் தீர்க்குந் தரமுள்ள கல்பட்டுச்சாமியைக் கேட்க அவர் "நீர் இப்புத்தகத்தைத்தொட அருகரலர்" என்று வள்ளலாரது கருத்தை விளக்கினர்.

## வேட்டவலம் ஜமீன்தார்

வேட்டவலம், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஒரே ஜமீன். அதன் ஜமீந்தார் அருணாசல வசந்தகிருஷ்ணவாணாதராய அப்பாசாமி பண்டாரியார். அவர் 13-12-1867 இல் சேதுயாத்திரக்குப் புறப்பட்டார். வழியில் வடலூர் வந்தார். அடிகட்கு ஆட்பட்டார். அது முதல் அடிகள் சித்திபெறும்வரை பலவகையாலும் அடிகட்குத்தொண்டு செய்தார். அடிகளும் பலமுறை வேட்டவலத்திற்கு எழுந்தருளினர். அடிகளின் ஆணைப்படி ஜமீன்தார் தனது ஜமீன் நிர்வாகத்திலுள்ள காளி கோயிலில் உயிர்ப்பலி இடுவதை நிறுத்திப் பால் பொங்கல் செய்து படைக்கக் கட்டளையிட்டார்.

## அருட்பா மருட்பா வாதம்

அடிகளின் பாடல் திரட்டிற்குத் திருவருட்பா எனப் பெயரிட்டதும் அதன் பகுதிகளுக்குத் திருமுறை எனப் பெயரிட்டதும் அடிகளைத் திருவருட்பிரகாச வள்ளலார் என வழங்கியதும் ஆறுமுக நாவலருக்கு உடன்பாடில்லை. அடிகளது பாடல்கள் அருட்பாக்கள் அன்றென்பதும் அவை மருட்பாக்கள் என்பதும், ஆதலின் திருவருட்பா என்னும் பெயர் அடிகளின் பாடல் தொகுதிக்குப் பொருந்தாதென்பதும் நாவலரின் வாதம். பட்டினத்தார் பாடற் றிரட்டு, குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, தாயுமானவர் பாடற்றிரட்டு, மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு என்பவை போல் அடிகளது பாடல் தொகுதியும் 'இராமலிங்க பிள்ளை பாடல் திரட்டு' என்றோ அல்லது 'இராமலிங்கபிள்ளை பிரபந்தத் திரட்டு' என்றோ வழங்கப்பட வேண்டுமென்பது நாவலர் கருத்து. திருமுறை என வழங்கத்தக்கவை பன்னிரு திருமுறைகளே என்பதும் வேறு எவற்றையும் திருமுறை என்னும் பேரால் வழங்கக்கூடாதென்பதும் நாவலர் கொள்கை.

பழுத்த சைவராகிய ஆறுமுக நாவலருக்கு வள்ளற்பெருமானின் சமரச சன்மார்க்கக் கொள்கைகள் பிடிக்கவில்லை. அடிகளின் சீர்திருத்தக் கொள்கைகள் புறச்சமயத்தார்களுக்கு, முக்கியமாகக் கிறித்தவர்களுக்கு இடங் கொடுப்பதாக உள்ளனவென்று அவர் கருதினார் இக் காரணங்களால் வள்ளற் பெருமானின் மீது நாவாலருக்கு ஒரு வகை வெறுப்பு உண்டாயிற்று. பெருமானையும்



RangaRakes tamilnavarasam.com

திருவருட்பாவையும் தூற்றி எழுதுபவரானார். 'போலியருட்பா மறுப்பு' என்று ஒரு கட்டுரையை எழுதி மாமண்டூர் தியாகேச முதலியார் பேராற் பதிப்பித்து 1868இல் வெளியிட்டார். நாவலர் எழுதிய 'போலியருட்பா மறுப்பு' க்கு மறுப்பாகப் 'போலி அருட்பா மறுப்பின் கண்டணம் அல்லது குதர்க்காரணியநாசமஹாபரசு' என்னும் நூலைத் தொழுவூர் வேலாயுத முதலியார் எழுதினார். பிற்காலத்தில் இருசாரிலும் பின்னும் சில மறுப்புகளும் கண்டணங்களும் வெளீவந்தன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி புலவர்களிடையே வாதங்கள் மலிந்திருந்த காலம். ஏதாவதொரு வாதத்தில் கலக்காத புலவர்கள் புலவர்களாகவே மதிக்கப்படாத காலம். இந்நிலையில் எழுந்த அருட்பா மருட்பா வாதம் (போலிப்) புலவர் சிலர்க்கு வெறும் வாய்க்கு அவலிட்டது போலாயிற்று. நாவலர் காலத்திலும் அதற்குப் பின்பும் - பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும்-அருட்பா மருட்பா வாதங்கள் தீவிரமாக நடைபெற்றன. பின்னாளில் ஓய்ந்தன. அடிகளின் அருட்பாடல்களை மருட்பா என்னும் வாதம் செத்தது. அவை அருட்பாக்களே என்னும் உண்மை நிலை பெற்றது.

## நாவலர் வழக்கு

வாதத்தாற் பயனில்லை என்றுணர்ந்த நாவலர் வழக்குத் தொடுக்கலானார். வள்ளற்பெருமான் சிதம்பரத்திற் செய்த சொற்பொழி வொன்றில் தம்மைத் தூற்றியதாகவும், அவரும் அவரோடு சேர்ந்தவர்களும் தம்மை அடிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் மஞ்சக்குப்பம் நீதி மன்றத்தில் 1869 ஆம் ஆண்டில் வள்ளற் பெருமான்மீது நாவலர் ஒரு குற்ற (criminal) வழக்குத் தொடுத்தார். நாவலர் வாதி, வள்ளற் பெருமான் பிரதிவாதி. யாழ்ப்பாணம் சௌந்தரநாயகம் பிள்ளை என்னும் வழக்கறிஞரை நாவலர் தம் பக்கல் அமர்த்தியிருந்தார். வள்ளற் பெருமானுக்காக வழக்கறிஞர் அமர்த்தப்படவில்லை. வழக்கு கேள்விக்கு (hearing) எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி பிரதிவாதிகளுக்கு அழைப்பாணைகள் (சம்மன்) பிறப்பிக்கப்பட்டன. அடிகள் அழைப்பாணையை ஏற்று வழக்கின் கேள்வி நாளன்று நீதி மன்றத்திற்கு வந்தார்கள். வழக்கு நடப்பதை வேடிக்கை பார்க்க நீதி மன்றத்தில் பெருங்கூட்டம் கூடியிருந்தது. விசாரணை தொடங்கும் நேரம் வந்தது. நீதிபதி தன் இருக்கையில் அமர்ந்தார். வாதியாகிய நாவலரும் ஓரிடத்தில் அமர்ந்திருந்தார். பிரதிவாதியை அழைக்க நீதிபதி கட்டளையிட்டார். நீதிமன்றச் சேவகன் பிரதிவாதியாகிய வள்ளற் பெருமானைப் பெயர் சொல்லி அழைத்தான். பெருமான் மன்றத்துள் புகுந்தார். உடனே அங்கு கூட்டமாக நின்றிருந்தவரெல்லாம் வழிவிட்டு விலகினர். அமர்ந்திருந்தவரெல்லாம் எழுந்து நின்று கைகூப்பினர். ஒருபால் அமர்ந்திருந்த நாவலரும் எழுந்து நின்று கைகூப்பினார். நீதிபதியும் தன் இருக்கையினின்றும் பாதி எழுந்துவிட்டார். நீதி மன்றத்திற்கு எவ்வளவு பெரியவர் வரினும் நீதிபதி எழுந்திருத்தல் வழக்கமன்று. வள்ளற் பெருமானைக் கண்டவுடன் தன்னையறியாமலே நீதிபதியும் எழலானார். பின்னர் நீதிபதி அமர்தற்குரியாரை அமரச் செய்து வள்ளற் பெருமானையும் அமரும்படிக் கேட்டுக்கொண்டு வழக்கு விசாரணையைத் தொடங்கினார். வாதி விசாரணை தொடங்கிற்று.

நீதிபதி: வாதியாகிய நீர் பிரதிவாதி நுழைந்தபோது எழுந்து நின்றாது ஏன்?

வாதி(நாவலர்): எல்லாரும் எழுந்து நின்றார்கள். நானும் எழுந்து நின்றேன்.

நீதிபதி: எல்லாரும் ஏன் எழுந்து நின்றார்கள்?



RangaRakes tamilnavarasam.com

வாதி(நாவலர்): பெரியவர் வருகிறாரே என்று எழுந்து நின்றார்கள்.

நீதிபதி: நீர் எதற்காக எழுந்து நின்றீர்.

வாதி(நாவலர்): நானும் அதற்காகத்தான் எழுந்து நின்றேன்.

நீதிபதி: பெரியவர் வருகிறார் என்பதற்காகத்தானே.

வாதி(நாவலர்): ஆம்.

நீதிபதி: பிரதிவாதியைப் பெரியவர் என்று நீரே ஒப்புக்கொள்ளுகிறீர். அமர்ந்திருந்த நீர் பிரதிவாதி கோர்ட்டில் நுழைந்த போது எழுந்து நின்றீர். அதனோடன்றிக் கையையும் கூப்பினீர். பிரதிவாதியைப் பெரியவர் என்று ஒப்புக்கொள்ளும் நீர் வழக்குத் தொடர்ந்திருக்க வேண்டாம். வழக்குத் தொடுத்த நீர் உமது கட்சி உண்மையாயிருக்கும் பக்கத்தில் பிரதிவாதியைக் கண்டு எழுந்து நிற்கவேண்டாம். உமது கட்சியில் உண்மையில்லை என்பது நம் முன் நிகழ்ந்த உமது செய்கையாலேயே தெளிவாகி விட்டது. ஆகவே வழக்கைத் தள்ளுபடி செய்கிறோம். கோர்ட் கலையலாம்.

நீதிபதி இருக்கையினின்றெழுந்து தனியறைக்குச் சென்று விட்டார். கோர்ட் கலைந்தது. உண்மை வென்றது.

### நாவலரும் வள்ளலாரும்

நாவலரது தமிழ்த் தொண்டுகளும் சைவத் தொண்டுகளும் சிறந்தனவே. அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரே ஒரு இரங்கத்தக்க நிகழ்ச்சி அவர் வள்ளற்பெருமான் திறத்தில் அபசாரப்பட்டதேயாகும். வள்ளற்பெருமானை உணர்ந்துகொள்ளக்கூடிய பக்குவம் நாவலர்க்கு இல்லை. அந்நாளைய புலவர் பலர்க்கு இல்லை. ஆயினும் அவர்களெல்லாம் ஒதுங்கி நின்றனர். நாவலர் ஒருவரே எதிர்த்துத் தோற்றார். நாவலரைப்பற்றியும் அவர் தொடுத்த வழக்கைப்பற்றியும் அருட்பா மருட்பா வாதத்தைப் பற்றியும் சுருக்கமாகவே கூறினோம். விரிவு இனி வரவிருக்கும் எமது திருவருட்பா வரலாற்றில் காணலாம்.

### அடிகளின் மருத்துவத் தொண்டு

சித்தமருத்துவம், ஆயுர்வேத மருத்துவம், அலோபதி மருத்துவம், யுனானி மருத்துவம் என்ற நான்கு மருத்துவ வகைகள் இன்று வழங்குகின்றன. இவற்றில் சித்த மருத்துவமே பழைமையானது. அதுவே நமது நாட்டு மருத்துவம். அதற்கு நாட்டு மருத்துவம், நாட்டு வைத்தியம் என்றே பெயர். நம் நாட்டுச் சித்தர்கள் அனைவரும் மருத்துவர்களே. வைத்தியம், வாதம், யோகம் இவை மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. வள்ளற்பெருமான் இம் மூன்றிலும் வல்லவர். பசிப்பிணி மருத்துவராகத் திகழ்ந்த அடிகள் உடற்பிணி மருத்துவராகவும் திகழ்ந்தனர். தேகசித்தி பெறுவதற்குரியதாகத் தமது உடம்பைப் பக்குவப் படுத்திக் கொள்ளவும், ஏழை மக்களின் பிணிகளை நீக்கவும் அடிகள் பல மருந்துகளைச் செய்தனர். கருங்குழியில் உறைந்த காலத்திலும் வடலூரில் உறைந்த காலத்திலும்



RangaRakes tamilnavarasam.com

பலருக்கு மருந்தளித்து நோய்தீர்த்தனர். அன்பர் பலர்க்குக் கடித வாயிலாக மருந்து கூறினர். (திருவருட்பா ஆ.பா. பதிப்பு திருமுகப் பகுதி காண்க)இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகமொன்றில் 'இங்ஙனம் இருவர் பிணியாளர் வேறுகதி இன்றி என்பால் புகலடைந்திருக்கின்றனர். அப்பிணி சிறிது சாந்தப்பட்டவுடன் பிரயாணப்பட்டு அவ்விடம் வர நிச்சயித்திருக்கிறேன்' எனக் கூறுகின்றனர். இரண்டாண்டுகள் பேருழைப்பால் பல வகையாலும் பதப்படுத்தி வைத்திருந்த மருந்தொன்று விழிப்பின்மையால் கெட்டுப் போனதைப்பற்றித் தமது வருத்தத்தை ஒரு திருமுகத்தில் புலப்படுத்துகின்றனர்.

உ

சிவமயம்

சற்குண சிரோமணியாகி நமது கண்மணி போன்று விளங்கிய சிரஞ்சீவி இரத்ந முதலியாரவர்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்துஞ் சிவஞானமு மேன்மே லுண்டாவனவாக. சி.தருமலிங்கப் பிள்ளையின் வசத்திலனுப்புவித்த கழல்க ளீரிரண்டும் பூணப்பெற்றனம்.

சுமார் பதினைந்து தினத்திற்குமுன் யாம் விடுத்த கடிதம் அங்ஙனம் வரப்பெற்றதும் பெறாததும் புலப்பட்டே மின்று. புலப்படுதற்கு அவாவுகின்றாம்.

இனி ஈராண்டு பலவகைக் கருவிகளால் பதப்படுத்தி யேழைகள் பலர்க்கும் உபயோகிக்கும் பொருட்டு நம்மாட்டிருந்த ஓர் பேருழைப்பு ஓர் அசாக்கிரதையால் தன்மை கெடப் பெற்றது. இங்ஙனம் பெறினும் நம் பெருமான் றிருவுளக் குறிப்பு அங்ஙன மிகுந்த தென்று கருதி அமைதி பெற்றாமாயினும், பிணிகளாற் பிணிப்புண்ட ஏழைகளைக் கருதும்போதெல்லாம் ஒரு சிறிது உளம் புடைபெயர்கின்றாம். ஆகலின் அப் புடை பெயர்ச்சியை இன்னும் இரண்டு மூன்று திங்களினீக்கப்பெற்று ஆண்டு அவசியம் வருவேம். யாம் வருமளவும் தேக முதலிய கருவிகளைக் கடைக்கணித்து வருக. சிவபிரான் றிருவடித்துணையன்றி வேறு துணை நமக்கு இன்மையின் அவற்றை இடைவிடாது நினை. வாழ்க வாழ்க. சிரஞ்சீவி. சிவபெருமான் திருவருட்டுணை மேன்மேலுண்டாக.

மருந்து தன்மை கெட்டதைக் குறித்து இறைவன் திருவுள்ளம் அவ்வளவு தான் என்று அமைதி செய்து கொண்டாலும் பிணிகளாற் பிணிக்கப்பெற்ற ஏழைகளைக் கருதும் போதெல்லாம் தம் உள்ளம் புடை பெயர்கின்றதை உள்ளமுருகக் கூறுகின்றனர். தருமச் சாலையைச் சார்ந்து வைத்தியசாலை ஒன்றை வடலூரில் அடிகள் ஏற்படுத்தக் கருதினர். பக்கம் 341 'கிளைச்சாலைகள்' காண்க. அடிகள் அருளியதாக மருந்துச் சரக்குகளின் குண அகராதி ஒன்று காணப்படுகிறது. (திருவருட்பா ஆ பா. பதிப்பு, உபதேசப் பகுதி பார்க்க) இதுவும் அடிகளின் மருத்துவப் புலமைக்குச் சான்றாகும்.

**திருக்குறள் வகுப்பு நடத்தச் செய்தது**



RangaRakes tamilnavarasam.com

அடிகள் போற்றிய அருள் நூல்களுள் திருக்குறளும் ஒன்று. குறட்பாக்களையும் குறள் தொடர்களையும் குறட் கருத்துகளையும் அடிகள் தமது அருட்பாடல்களில் எடுத்தாள்வர். மக்களிடையே திருக்குறளைப் பரப்புவதற்காக உபயகலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கொண்டு அடிகள் வடலூரில் திருக்குறள் வகுப்பை நடத்தினார்கள். பொது மக்களுக்காக முதன் முதலில் திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் இராமலிங்க அடிகளே. வேலாயுத முதலியாரின் திருக்குறள் வகுப்பைப்பற்றிய சுவையான வரலாறொன்று அறியப்படுகிறது. கற்றார் கல்லார் இளையோர் முதியோர் ஆகிய பலதரத்தினரும் வகுப்புக்கு வந்தனர். வேலாயுதனார் தமது பன்மொழிப்புலமை பரந்த நூலாராய்ச்சி கவியாற்றல் ஆகியவற்றிற்கேற்ப வகுப்பை மிக விரிவாக நடத்தினார். மூன்று திங்களாகியும் மூன்று அதிகாரங்களும் முடியவில்லை. போதிய அறிவு வலியில்லார் சிலர்க்குப் பாடத்தைப் பின்பற்ற இயலவில்லை. அவர்கள் அடிகளிடஞ் சென்று முறையிட்டனர். அடிகள், 'மூடமூண்ட வித்துவானைக் கூப்பிடும்' என்றார்கள். அதனைக் கேட்டவர்களும் முறையிட்டவர்களும் முதலியாரை அடிகள் 'மூடம்', 'முண்டம்', எனக் கூறியதாகக் கருதி உள் நகை கொண்டனர். முதலியார் வந்ததும் அடிகள் மூடமுண்டவித்துவான் என்பதற்கு மாணாக்களின் மூடத்தை உண்ட வித்துவான் என்பது பொருள் எனக்கூறி வகுப்பை எளிதாக நடத்துமாறு கட்டளை யிட்டருளினர். அடிகள் காலத்திலும் அதற்கு முன்பும் திருக்குறள் முதலிய நூல்களைப் பெரும் புலவர்கள் முறையாகப் பாடஞ் சொல்லுவதும் கேட்கும் தரத்திலுள்ளோர் பாடங் கேட்பதும் வழக்கமே யொழிய, கற்றார் கல்லார் முதலிய எல்லாத் தரத்தினரையும் பொதுவாகக் கூட்டி வகுப்பு நடத்தும் வழக்கமில்லை. இதிகாசபுராணச் சொற்பொழிவுகளே பொது மக்களுக்காகச் செய்யப்பட்டு வந்தன.அந்நிலையில் அக்காலத்தில் முதன் முதலாகப் பொது மக்களுக்காகத் திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் நமது அடிகளே ஆவர்.

## சன்மார்க்க சங்கம் விளங்கும் காலம் என்னும் அறிவிப்பு 27-4-1870

தருமச்சாலையிலிருந்த ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகளின் ஐயத்திற்கு விடையாக அடிகள் சன்மார்க்க சங்கம் விளங்கும் காலம் என்னும் குறிப்பொன்றை எழுதியளித்தருளினர்.

உ

திருச்சிற்றம்பலம்
இஃது தூற்றாமல் வைக்க.

சமரவேத சன்மார்க்க சங்கம் கூடி விளங்கும் காலம் எது? அது நமக்கு அறிவு வந்த நாள் தொட்டு இந்நாள் பரியந்தம் இறந்து போன நமது சிநேகர் உறவினர் அடுத்தோர் வார்த்திபர் வாலிபர் பாலியர் குமாரர் ஆண்மக்கள் பெண்மக்கள் என்பவர் எல்லாம் உயிர்பெற்று எழுந்து மேற்குறித்த சங்கத்தில் கூடி விளங்கும் காலமாகும். இது விஷயத்திற் றருக்கஞ் செய்யப்படாது, உண்மை.

பிரமோதூதவருஷ
சித்திரை மீ யசூஉ
உத்தரஞானசித்திபுரம்

"ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான தருமச் சாலையில் பிரமோதூத வருஷ சித்திரை மீ யகூஉ புதவாரம் சுமார் பகல் சூ மணி நேரத்தில் வேலூர் ஆனந்தநாத ஷண்முக சரணாலய சுவாமிகள் பெருமானிடத்தில் சாதலைக் குறித்து விண்ணப்பித்த தருணத்தில் பெருமான் திருக்கரத்தால் எழுதித் தந்த பிரதம பத்திரிகை" என்று இதன் வரலாறு ஓர் பிரதியில் காணப்படுவதாக ஆ.பா.குறிக்கிறார். "இஃது தூற்றாமல் வைக்க" எனத் தொடக்கத்திலும் "இது விஷயத்தில் தருக்கஞ் செய்யப்படாது. உண்மை" என இறுதியிலும் அடிகள் குறிக்கின்றனர். இது விஷயம் அதாவது இறந்தவர்கள் எல்லாருமே உயிர் பெற்று எழுந்து வருவர் என்ற கொள்கை விளங்கவில்லை. தூற்றாமல் வைப்பதும் தருக்கஞ் செய்யாதிருப்பதுமே நாம் இதுபோது செய்யக்கூடியதாம்.

### அடிகள் இறைவனிடம் வற்புறுத்தி விண்ணப்பித்தல்

அடிகள் தமது விண்ணப்பங்களை வற்புறுத்திச் செய்துகொள்ளும் வழக்கமுடையர். வற்புறுத்தி வேண்டுதலும், விரைவில் அருளுமாறு வேண்டுதலும் திருவருட்பாவில் பல இடங்களில் காணக்கிடக்கின்றன. உன்னை நான் மறப்பேனோ, மறக்கமாட்டேன், மறந்தால் உயிர்விடுவேன், என்னை நீ மறப்பாயோ, மறந்தால் என்ன செய்வேன், எங்கே போவேன், யாரிடம் சொல்வேன், தாயினும் தயவுடையாய்! நீ மறந்தாலும் உன் அருள் மறவாது என்றே இன்னும் இருக்கின்றேன், மறவாதே, இப்போதே அருட்ஜோதியை எனக்கு விரைந்து அருள் என்று வேண்டுவார்.

**உன்னைமறந் திடுவேனோ மறப்பறியேன் மறந்தால்**
**உயிர்விடுவேன் கணந்தரியேன் உன்ஆணை இதுநீ**
**என்னைமறந் திடுவாயோ மறந்திடுவாய் எனில்யான்**
**என்னசெய்வேன் எங்குறுவேன் எவர்க்குரைப்பேன் எந்தாய்**
**அன்னையிலும் தயவுடையாய் நீமறந்தாய் எனினும்**
**அகிலம்எலாம் அளித்திடும்நின் அருள்மறவா தென்றே**
**இன்னுமிகக் களித்திங்கே இருக்கின்றேன் மறாவேல்**
**இதுதருணம் அருட்சோதி எனக்குவிரைந் தருளே.**

**-6 (இடை) பிரியேன் என்றல்7.**

நான் மறந்தேன் என்றாலும் என்னை நீ மறக்கமாட்டாய் என்று இருக்கின்றேன், இதுவரையில் தேவர்கள் மறந்தேன், திருமாலை மறந்தேன், பிரமனை மறந்தேன், உருத்திரர்களை மறந்தேன், என்னுடைய உடம்பை மறந்தேன், உயிரை மறந்தேன், உணர்ச்சியையும் மறந்தேன், உலகத்தை மறந்தேன், ஆனால் உன்னை மறந்தறியேன், பால் மறந்த குழந்தையைப் போல் என்னைப் பார்க்காதே, பரிந்துவந்து அருட்சோதியை அருள் என்பார்.

**நான்மறந்தேன் எனினும்எனைத் தான்மறவான் எனது**
**நாயகன்என் றாடுகின்றேன் எனினும்இது வரையும்**
**வான்மறந்தேன் வானவரை மறந்தேன்மால் அயனை**
**மறந்தேன்நம் உருத்திரரை மறந்தேன்என் னுடைய**
**ஊன்மறந்தேன் உயிர்மறந்தேன் உணர்ச்சிஎலாம் மறந்தேன்**


RangaRakes tamilnavarasam.com

**உலகம்எலாம் மறந்தேன்இங் குன்னைமறந் தறியேன்**
**பான்மறந்த குழவியைப்போல் பாரேலிங் கெனையே**
**பரிந்துநின தருட்சோதி புரிந்து மகிழ்ந் தருளே.**

-6 (இடை) பிரியேன் என்றல் 8

தெருவிலே விளையாடித் திரிந்தேன், நீ வலிய வந்து மாலை இட்டு ஆட்கொண்டாய், அந்தச் சிறுவயதில் என்மீது உனக்கிருந்த ஆசை எல்லாம் போய்விட்டதோ? நான் புதியவனாகிவிட்டேனோ? உன்னுடைய காலைப் பிடித்துக்கொண்டேன், விடுவேனோ, பிடித்தது கைப்பிடியன்று, அது உயிர்ப்பிடி, உயிர்போனாலன்றி விடமாட்டேன், விடமாட்டேன், விடமாட்டேன் என்பார்.

**தெரிவிடத்தே விளையாடித் திரிந்தஎனை வலிந்தே**
**சிவமாலை அணிந்தனைஅச் சிறுவயதில் இந்த**
**உருவிடத்தே நினக்கிருந்த ஆசைஎலாம் இந்நாள்**
**ஓடியதோ புதியஒரு உருவுவிழைந் ததுவோ**
**கருவிடத்தே எனைக்காத்த காவலனே உனது**
**கால்பிடித்தேன் விடுவேனோ கைப்பிடிஅன்றதுதான்**
**வெருவிடத்தென் உயிர்ப்பிடிகாண் உயிர்அகன்றால் அன்றி**
**விடமாட்டேன் விடமாட்டேன் விடமாட்டேன் நானே**

-6 (இடை) பிரியேன் என்றல் 9

உன்னுடைய திருவரவைக் காணாமல் உண்ணமாட்டேன், உறங்க மாட்டேன், பிறரோடு பேசமாட்டேன், அவிழ்ந்த ஆடையையும் உடுத்த மாட்டேன் என்று வற்புறுத்தி விண்ணப்பிப்பர். 'அரும்பெறல் உண்டியை விரும்பவும் மாட்டேன்', அடுத்தினிப் பாயலில் படுக்கவும் மாட்டேன்', 'ஆசையிற் பிறரொடு பேசவும் மாட்டேன், 'அன்பொடு காண்பாரை முன்பிடமாட்டேன்', 'அருந்தவர் நேரினும் பொருந்தவும் மாட்டேன்', 'அரைக்கணம் ஆயினும் தரித்திடமாட்டேன்,' அடுக்கவீழ் கலை எடுத்துடுக்கவும் மாட்டேன்,' இவற்றையெல்லாம் 'அறுத்துரைக்கின்றேன் நான் பொறுத்திட மாட்டேன் அருட்பெருஞ்சோதியீர் ஆனை நும்மீதே' என்று அடிகள் அறுத்துக்கட்டி விண்ணப்பிப்பது அவர்களது உறுதியைக் காட்டும்.(6. இடை- உண்மைகூறல்)

**விரைவில் அருளுமாறு வேண்டுதல்**

விரைந்து அருளவேண்டும் என அடிகள் பல பாடல்களில் விண்ணப்பிப்பர். 'அல்லும் பகலும் திருக்குறிப்பை எதிர்பார்த்திங்கே அயர்கின்றேன்' என வேண்டுவர். சும்மா இருக்கும் சுகம் இன்று வருமோ, நாளைக்கே வருமோ, அல்லது மற்றென்று வருமோ என்று ஏங்குவர்.

**இன்றுவரு மோநாளைக் கேவருமோ அல்லதுமற்**
**றென்றுவரு மோஅறியேன் எங்கோவே-துன்றுமல**
**வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து**
**சும்மா இருக்குஞ் சுகம்.**



RangaRakes tamilnavarasam.com

-1, திருவடிப்புகழ்ச்சி, காப்பு.

இன்றைக்கே கொடு, இப்போதே கொடு என்று வேண்டுவது அடிகளார்க்கு வழக்கம். திருக்குறிப்பை இற்றைப் பொழுதே குறிப்பித்து அருட்சோதி அளிக்க வேண்டுமென வேண்டுவர்.

**கூடுங் கருணைத் திருக்குறிப்பை இற்றைப் பொழுதே குறிப்பித்து**
**வாடுஞ் சிறியேன் வாட்டம்எலாம் தீர்த்து வாழ்வித் திடல்வேண்டும்**
**பாடும் புகழோய் நினைஅல்லால் துணைவே றில்லைப் பரவெளியில்**
**ஆடுஞ் செல்வத் திருவடிமேல் ஆணை முக்கால் ஆணையதே.**

-6 (முன்) அடியார்பேறு 20

**குற்றம் புரிதல் எனக்கியல்பே குணமாக் கொள்ளல் உனக்கியல்பே**
**சிற்றம் பலவா இனிச்சிறியேன் செப்பும் முகமன் யாதுளது**
**தெற்றென் றடியேன் சிந்தைதனைத் தெளிவித் தச்சந் துயர்தீர்த்தே**
**இற்றைப் பொழுதே அருட்சோதிஈக தருணம் இதுவாமே.**

-6 (முன்) தனித்திரு அலங்கல் 46

இற்றைப் பொழுதே ஈக என வேண்டும் அடிகள், 'அட்டி செய நினையாதீர் அரைக் கணமும் தரியேன் அரைக் கணத்திற்கு ஆயிரம் ஆயிரம் கோடியாக வட்டியிட்டு உம்மிடத்தே வாங்குவன், உம்மீதே ஆணை, ஆதலின் விரைந்து வந்து அருள்வீர் என்பர்.

**பெட்டிஇதில் உலவாத பெரும்பொருள்உண் டிதுநீ**
**பெறுகஎன அதுதிறக்கும் பெருந்திறவுக் கோலும்**
**எட்டிரண்டும் தெரியாதேன் என்கையிலே கொடுத்தீர்**
**இதுதருணம் திறந்ததனை எடுக்கமுயல் கின்றேன்**
**அட்டிசெய நினையாதீர் அரைக்கணமும் தரியேன்**
**அரைக்கணத்துக் காயிரம்ஆ யிரங்கோடி ஆக**
**வட்டிஇட்டு நும்மிடத்தே வாங்குவன்நும் ஆணை**
**மணிமன்றில் நடம்புரிவீர் வந்தருள்வீர் விரந்தே.**

-6 (இடை) திருஅருட்பேறு 2

இது தருனம் தவரும் எனில் உயிர்போய்விடும் என்பர்.

**எதுதருணம் அதுதெரியேன் என்னினும்எம் மானே**
**எல்லாஞ்செய வல்லவனே என்தனிநா யகனே**
**இதுதருணம் தவறும்எனில் என்உயிர்போய் விடும்இவ்**
**வெளியேன்மேல் கருணைபுரிந் தெழுந்தருளல் வேண்டும்**
**மதுதருன வாரிசமும் மலர்ந்ததருள் உதயம்**
**வாய்த்தததுசிற் சபைவிளக்கம் வயங்குகின்ற துலகில்**
**விதுதருண அமுதளித்தென் எண்ணம்எலாம் முடிக்கும்**
**வேலைஇது காலைஎன விளம்பவும்வேண் டுவதோ.**



RangaRakes tamilnavarasam.com

-6 (இடை) திருவருட்பேறு 7.

திரும்பத் திருப்பப் பலமுறை உனக்கு நான் சொல்ல வேண்டுமோ? என்னுடைய துன்பமெல்லாம் தீர்த்து என் எண்ணத்தை யெல்லாம் முடித்துவைத்து என்னை ஏற்றுக்கொள்ளாவிடில் தப்பாமல் உயிர் விடுவேன் இது சத்தியம் சத்தியம் என்று ஒரு முறைக்கு இருமுறையாகச் சத்தியம் செய்து வேண்டுவார்.

**அப்பாநான் பற்பலகால் அறைவதென்னே அடியேன்**
**அச்சம்எலாம் துன்பம்எலாம் அறுத்துவிரைந் துவந்தே**
**இப்பாரில் இதுதருணம் என்னைஅடைந் தருளி**
**எண்ணம்எலாம் முடித்தென்னை ஏன்றுகொளாய் எனிலோ**
**தப்பாமல் உயிர்விடுவேன் சத்தியஞ்சத் தியம்நின்**
**தாளிணைகள் அறிகஇது தயவுடையோய் எவர்க்கும்**
**துப்பாகித் துணையாகித் துலங்கியமெய்த் துணையே**
**சுத்தசிவா னந்தஅருட் ஜோதிநடத் தரசே.**

-6 (இடை) பிரியேன் என்றல் 1.

**வேண்டிய பொருள் எலாம் ஒரு நாழிகையில்**
**கிடைக்கப் பெற்றது**

இற்றைப் பொழுதே கொடுத்தருள், இத்தருணமே கொடுத்தருள் என்று வேண்டிய அடிகளுக்கு இறைவன் ஒரு நாழிகையில் வேண்டிய பொருளெலாம் கிடைக்கச் செய்தருளினான்.

**நடைக்குரிய உலகிடைஓர் நல்லநண்பன் ஆகி**
**நான்குறித்த பொருள்கள்எலாம் நாழிகைஒன் றதிலே**
**கிடைக்கஎனக் களித்தகத்தும் புறத்தும்அகப் புறத்தும்**
**கிளர்ந்தொளிகொண் டோங்கியமெய்க் கிளைஎனும்பேர் ஒளியே**
**படைப்புமுதல் ஐந்தொழிலும் கொள்கஎனக் குறித்தே**
**பயந்தீர்த்தென் உள்ளகத்தே அமர்ந்ததனிப் பதியே**
**கடைப்படும்என் கரத்தில்ஒரு கங்கணமும் தரித்த**
**ககனநடத் தரசேஎன் கருத்தும்அணிந் தருளே.**

-6 (இடை) அருள்விளக்கமாலை 50

என்னும் பாடலால் இவ்வுண்மை பெறப்படும். அடிகட்கு இறைவன் ஒரு நாழிகையில் யோக நிலையை உணர்த்தினான். இரண்டரை நாழிகையில் அருள் ஒளித்திருவை மணம் புரிவித்தான். இவை பின்னர் கூறப்பெறும்.

**இறைவன் அடிகட்குச் சன்மார்க்க மரபை**
**உணர்த்துதல்**

1.சாகாத கல்வியே கல்வி. 2. ஒன்றே சிவம் என அறியும் அறிவே அறிவு. 3. மலம் ஐந்தும் வென்ற வல்லபமே தனித்த பூரண வல்லபம். 4. வேகாக்கால், சாகாத்தலை, போகாப்புனல் இவை மூன்றையும் கண்டுகொண்டு எப்பொருளும் விளைய விளைவிக்கும் தொழிலே மெய்த்தொழில். இந்நான்கையும் ஒருங்கே அடைவதே நிறைவான பேரின்பம். இதுவே சுத்த சன்மார்க்கத்தின் மரபு என்று அடிகட்கு இறைவன் உணர்த்தியருளினான்.

**சாகாத கல்வியே கல்விஒன் றேசிவம்**
**தான்என அறிந்தஅறிவே**
**தகும்அறிவு மலம்ஐந்தும் வென்றவல் லபமே**
**தனித்தபூ ரணவல்லபம்**
**வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்**
**விளையவிளை வித்ததொழிலே**
**மெய்த்தொழில தாகும்இந் நான்கையும் ஒருங்கே**
**வியந்தடைந் துலகம்எல்லாம்**
**மாகாத லுறஎலாம் வல்லசித் தாகிநிறை**
**வானவர மேஇன்பமாம்**
**மன்னும்இது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்**
**மாபென் றுரைத்தகுருவே**
**தேகாதி மூன்றும்நான் தருமுன்அருள் செய்தெனைத்**
**தேற்றிஅருள் செய்தசிவமே**
**சிற்சபையின் நடுநின்ற ஒன்றான கடவுளே**
**தெய்வநட ராஜபதியே.**

-6 (இடை) நடராஜபதிமாலை 28

"நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு. அவையாவன: ஏமசித்தி, சாகாக்கல்வி, கடவுள் நிலையறிந்து அம்மயமாதல், தத்துவ நிக்கிரகம் ஆக நான்கு", என அடிகள் அன்பர்களுக்கு உபதேசித்தருளியதாக உபதேசக் குறிப்பொன்று கூறுகின்றது. சுத்த சன்மார்க்கத்தின் மரபுரைத்த மேற்பாடலிற் கூறப்பெற்ற நான்குமே இவ்வுபதேசக் குறிப்பிலும் கூறப்பெறுகின்றன.

| ஷெ பாடலில் | - | ஷெ உபதேசத்தில் |
|---|---|---|
| 1. சாகாத கல்வி | - | 1. ஏமசித்தி |
| 2.ஒன்றேசிவம் என அறியும் அறிவு | - | 2.சாகாக்கல்வி |
| 3.மலம் ஐந்தும் வென்ற வல்லபம் | - | 3. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல் |
| 4. எல்லாம் விளையவிளை விக்கும் மெய்த்தொழில் | - | 4. தத்துவ நிக்கிரகம். |



RangaRakes tamilnavarasam.com

பாடலிலும் சரி, உபதேசக் குறிப்பிலும் சரி இந்நான்கின் முறைவைப்பு சரியாக இல்லை. சாகாக் கல்வி இரண்டிலும் கூறப்பட்டுள்ளது. ஒன்றே சிவம் என அறியும் அறிவுதான் கடவுள் நிலையறிந்து அம்மயமாதல். மலம் ஐந்தும் வென்ற வல்லபம் என பாடலிற் கூறியதே தத்துவ நிக்கிரகம் என உபதேசத்திற் கூறப்பட்டது. எல்லாம் விளைவித்த தொழில் என்று பாடலிற் கூறியதும் ஏமசித்தி என்று உபதேசத்திற் கூறியதும் எல்லாம் வல்ல சித்தியாம். இவற்றைப் பின்வருமாறு முறைப்படுத்தலாம்.

1.தத்துவ நிக்கிரகம்

2.கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல்

3.சாகாக் கல்வி.

4.எல்லாம் வல்ல சித்தி.

தத்துவ நிக்கிரகம் செய்து கைவரப்பெற்றால் கடவுள் நிலையை அறிந்து அம்மயமாகலாம். கடவுள் மயமாவதே சாகாக்கல்வி. சாகாக்கல்வி கைவரின் எல்லாம் வல்ல சித்தியும் கைகூடும். இவை எல்லாவற்றிற்கும் அடிப்படை தத்துவ நிக்கிரகம் செய்தல்

### சன்மார்க்கப் பணிசெய்யக் கட்டளையிடுதல்

உலகில் இதுவரை பல சமயங்கள் பலமதங்கள் எனும் பவநெறியே பரவியிருக்கிறது, இவையெல்லாம் பிள்ளைவிளையாட்டு என உணராது மக்கள் அவற்றில் ஈடுபட்டுப் போர்செய்து இறந்து இறந்து வீணாகிறார்கள், உண்மை நெறியை அறிந்திலர், இனியும் மக்கள் இறந்திறந்து வீணாகாத வண்ணம் விரைந்து சுத்த சன்மார்க்க நெறியைக் காட்டி உண்மைப் பொருளை உணர்த்தி இன்புறச் செய்வாயாக, மக்களைப் பொது நெறியில் செலுத்துவாயாக, என் பிள்ளை ஆதலால் உரிமையோடு உனக்கு இவ்வேலையை இட்டேன்,மனத்தில் வேறு எண்ணாதே என்று இறைவன் அடிகட்கு கட்டளையிட்டருளினான்.

**பேருற்ற உலகிலுறு சமயமத நெறி எலாம்**
**பேய்ப்பிடிப் புற்றபிச்சுப்**
**பிள்ளைவிளை யாட்டென உணர்ந்திடா துயிர்கள்பல**
**பேதமுற் றங்கும் இங்கும்**
**போருற் றிறந்துவீண் போயினார் இன்னும்வீண்**
**போகாத படிவிரைந்தே**
**புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டிமெய்ப்**
**பொருளினை உணர்த்திஎல்லாம்**
**ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதிநீ**
**என்பிள்ளை ஆதலாலே**
**இவ்வேலை புரிக என் றிட்டனம் மனத்தில்வே**
**றெண்ணற்க என்றகுருவே**
**நீருற்ற ஒள்ளிய நெருப்பே நெருப்பினுள்**



RangaRakes tamilnavarasam.com

நிறைந்திருள் அகற்றும் ஒளியே
நிர்க்குண னந்தபா நாதாந்த வரைஓங்கு
நீதிநட ராஜபதியே

-6(இடை)நடராஜபதிமாலை27

பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என் றிடும் ஓர்
பவநெறி இதுவரை பரவிய திதனால்
செந்நெறி அறிந்திலர் இறந்திறந் துலகோர்
செற இருள் அடைந்தனர் ஆதலின் இனி நீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி எனும்வான்
புத்தமு தருள் கின்ற சுத்தசன் மார்க்கத்
தன்னெறி செலுத்துக என்ற என் அரசே
தனிநடராஜ என் சற்குரு மணியே

-6(இடை)சற்குருமணிமாலை12.

இங்ஙனம் இறைவனால் சன்மார்க்கத்தைப் பரப்பக் கட்டளையிடப் பெற்ற அடிகள், சன்மார்க சங்கம் அமைத்தும் சன்மார்க்க தருமச் சாலையை அமைத்தும் சன்மார்க்க ஞானசபையை அமைத்தும் உலகில் சன்மார்க்கத்தை நாட்டியருளினார்.

## 5.சித்திவளாகப் பகுதி
## (1870-1874)

### அகவை 47-51

### சித்திவளாகம்

### மேட்டுக்குப்பத்தில் உறையத்தொடங்கியது 1870

சென்னை வாழ்வினை நீத்த அடிகள் 1858ஆம் ஆண்டு முதல் கருங்குழியை உறைவிடமாகக் கொண்டார்களென்பதையும் 1867ஆம் ஆண்டில் வ்டலூரில் தருமச்சாலை நிறுவப்பெற்றபின் சாலையையே உறைவிடமாகக் கொண்டார்களென்பதையும் முன்னரே கூரினோம், நாளடைவில் தருமச்சாலையில் கூட்டம் பெருகிர்று. அமைதியை விரும்பிய அடிகள் தனித்துறையைக் கருதி வடலூர்க்குத் தெற்கே இரண்டு கல் தொலைவிலுள்ள மேட்டுக்குப்பத்திற்குச் சென்று உறையத் தொடங்கின்மார்கள். மேட்டுக்குப்பத்தில் உறையத் தொடங்கிய காலம் 1870ஆம் ஆண்டாகும். திங்களும் நாளும் இன்னதெனத்தெரியவில்லை. சித்திவளாகத்திலிருந்து அடிகள் வெளியிட்ட கட்டளைகளுல் காலத்தால் முந்தியது 26.10.1870இல் அன்பர்களுக்கு இட்ட சாலைக்கட்டளை ஆகும். 27.4.1870இல் வெளியிட்ட சன்மார்க்க சங்கம் விளங்கும் காலம் என்னும் கட்டளையில் (பக்கம்429)காண்க) உத்தரஞான சித்திபுரம் என இடம் குறிக்கப்பட்டுள்ளது. 8.6.1870இல் தொழுவூர் வேலாயுதனார் ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகளுக்கு எழுதிய கடித்தத்தில் ' நம் பெருமான் இப்போது எவ்விடத் தெழுந் தருளியிருக்கின்றது' என்று உசாவுகிறார். இவற்றையெல்லாம் வைத்து நோக்கின் 27.4.1870க்கும் 26.10.1870க்கும் இடைப்பட்ட ஆறுமாத காலத்தில் ஒரு நாள்


RangaRakes tamilnavarasam.com

அடிகள் மேட்டுக்குப்பத்தை உறைவிடமாகக் கொள்ளத்தொடங்கினார்கள் என்பது போதரும். 1870 வைகாசி(மே) எனக் கொள்ளுதல் பொருந்தும். எவ்வாறாயினும் 26.10.1870க்குப் பிற்பட்டன்று என்பது தெளிவு. எனவே அடிகள் மேட்டுக்குப்பத்தை உறைவிடமாகக் கொள்ளத் தொடங்கிய காலம் 1870 வைகாசித் திங்கள் என்று கொள்வோம்.

## சித்திவளாகத் திருமாளிகை

மேட்டுக்குப்பத்தில் அடிகள் உறைந்த இடம் சித்திவளாகம் ஆகும். முன்பு அது வைணவ ஆசாரியர்கள் தங்கும் திருமாளிகையாக இருந்தது. கருங்குழியிலும் மேட்டுக்குப்பத்திலும் வாழ்வோர் பெரும்பாலும் வைணவர்கள். கருங்குழியில் திருமால் கோயில் ஒன்றும் உள்ளது. வைணவக் குடிகள் வாழும் ஊர்களுக்கு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வைணவ ஆசாரியர்கள் எழுந்தருளி ஒரு பொது இடத்திலோ அல்லது அவர்கள் தங்குவதற் கென்றே அமைக்கப்பட்ட திருமாளிகையிலோ சிலநாள் தங்கித் தம் குடிமக்களுக்கு உபதேசமும் சம்பிரதாய தீக்கை முதலியனவும் செய்வர். அவ்வாறு ஆசாரியர் வருங்காலத்தில் எழுந்தருளுவதற்கென்று கட்டப்பெற்றிருந்ததே மேட்டுக்குப்பம் (சித்திவளாகத்) திருமாளிகை ஆகும். திருமாளிகை என்னும் பெயர் வைணவ வழக்கு. ஆசாரியர்கள் உறையும் இடத்தைத் திருமாளிகை என்பர். கருங்குழி, மேட்டுக்குப்பத்திற்குப் பல காலமாக வைணவ ஆசாரியர் வராததால் மேட்டுக்குப்பத் திருமாளிகை பயனின்றிக் கிடந்தது. இந்நிலையில் அடிகள் மேட்டுக்குப்பம் நோக்கினர். திருமாளிகையை உறைவிடமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கவேண்டும் என ஊர் மக்கள் அடிகளை வேண்டினர். அவர்களது அன்பான வேண்டுகோளுக்கியைய அடிகளும் அத்திருமாளிகைக்குச் சித்திவளாகம் எனப் பெயரிட்டு அதில் எழுந்தருளினர். அதுமுதல் சித்திவளாகத் திருமாளிகை என அது வழங்கப்படலாயிற்று. அதனை உறைவிடமாகக் கொண்டது முதல் சித்திபெற்ற 1874 ஆம் ஆண்டு வரை அடிகள் அச்சித்திவளாகத்திலேயே எழுந்தருளியிருந்தனர்.

## சித்திவளாகம் என்னும் பெயர்

சித்திவளாகம் என்பது அடிகள் இட்ட பெயர். இப்பெயர் அருமையும் ஆழ்ந்த பொருளும் உடையது. சித்தி-வீடுபேறு. வளாகம் - இடம். சித்திவளாகம் - சித்தியைத் தரும் இடம், வீடு பேற்றை அளிக்கும் இடம்.

## முத்தியும் சித்தியும்

சமயிகள் முத்தியே முடிவானபேறு என்பர். சமயாதீதரும் சமரச சன்மார்க்கியுமான வள்ளற்பெருமானோ சித்தியே முடிவான பேறு என்பர். முத்தி என்பது, அடைய வேண்டிய நிலைக்கு முன் உறும் ஒரு சாதனம் என்றும் சித்தி என்பது அந்நிலையைச் சேர்ந்து அனுபவிக்கும் அனுபவம் என்றும் கூறுவர். முத்தியை அடைவது சித்தியின் பொருட்டே என்றும் கூறுவர். முத்தி என்பது இன்னதென்பதையும் சித்தி என்பது இன்னதென்பதையும் அடிகள் அருட்பெருஞ்ஜோதி அகவலில் கூறுவது வருமாறு.

**முத்திஎன் பதுநிலை முன்னுறு சாதனம்**
**அத்தக வென்றஎன் அருட்பெருஞ்ஜோதி**



RangaRakes tamilnavarasam.com

**சித்திஎன் பதுநிலை சேர்ந்த அனுபவம்**
**அத்திறம் என்றஎன் அருட்பெருஞ்ஜோதி** 249-252

முத்தி என்பது நிலைமுன் உறு சாதனம். சித்தி என்பது நிலை சேர்ந்த அனுபவம். இதனால் முத்தி என்பது சித்தியை அடைவதற்கான ஒரு சாதனமே என்பது தெளிவு. முடிவான வீடு பேற்றை அடைந்து அனுபவிப்பதே சித்தி. அந்நிலையை அடைவதற்குப் பயன்படும் பாச நீக்கமாகிய சாதனமே முத்தி. சித்தியெனினும் முத்தி யெனினும் ஒக்கும் என்பர் சிவஞான முனிவர். அடிகள் பாச நீக்கத்தை முத்தி என்றும் வீடுபேற்றைச் சித்தி என்றும் கூறி இரண்டிற்குமுள்ள நுண்ணிய வேறுபாட்டைப் புலப்படுத்துகின்றனர். பாச நீக்கமாகிய முத்தியைப் பெற்றால் வீடுபேறாகிய சித்தியைப் பெறலாம். பாசநீக்கமாகிய முத்தியைப் பெறுவது வீடு பேறாகிய சித்தியின் பொருட்டேயாகும். இதனை

**புடையுறு சித்தியின் பொருட்டே முத்தியை**
**அடைவதென் றருளிய அருட்பெருஞ் ஜோதி** 247-248

என அருட்பெருஞ்ஜோதி அகவலில் விளக்குவர். முத்தி சித்திகளை இவ்வாறு வகுத்துக் கூறும் அடிகள் தமது அனுபவத்தைக் கூறுமிடத்தும்

**முத்தியைப் பெற்றேனம் முத்தியினால் ஞான**
**சித்தியை யுற்றேனென் றுந்தீ பற**
**சித்தனு மானேனென் றுந்தீ பறா**

**-கீர்த்தனைப் பகுதி, திருஉந்தியார் 10**

எனக்கூறுவர்.

**முத்தி-பாசவீடு, பாசநீக்கம். நிலைமுன் உறுசாதனம்.**
**சித்தி-சிவப்பேறு, வீடுபேறு. நிலைசேர்ந்த அனுபவம்.**

சிவப்பேறாகிய சித்தியைத் தரும் இடமே சித்திவளாகம்.

## சித்திவளாகத்தில் ஆற்றிய அருந்தவம்

### பிரமதண்டிகாயோகம்

சித்திவளாகத்தில் தமது திருவறையில் தீச்சட்டிகளுக்கு இடையே அமர்ந்து அடிகள் யோகஞ் செய்வர். இதனைப் பிரமதண்டிகா யோகம் என்று ச.மு.க. பதிப்பு சரித்திரக் குறிப்பு கூறுகிறது.

சித்திவளாகத் திருவறையில் வள்ளலார் அடிக்கடி பிரமதண்டிகா யோகம் செய்து வருங்கால் இருபக்கத்திலும் இருப்புச் சட்டியில் சீமைக்காரி எரிந்துகொண்டிருப்பது வழக்கம். ஒருநாள் குருக்கள் சுவாமிகள் உள்ளே திடீரென நுழைய அவர் கால்கள் பட்டு இருப்புச் சட்டியிலுள்ள நெருப்பு பக்கங்களில் சிதறிக் குருக்கள் மீதும் வள்ளலார்மீதும் விழுந்தன. விழுந்தும் வள்ளலார் திருமேனிக்கு ஒரு சிறிதும் மாசு இலது. குருக்களுக்கு விரல்களில் புண்பட்டது. இதனால் வள்ளலார் சுத்ததேகம் பெற்றார் என்பது புலனாம்.



RangaRakes tamilnavarasam.com

பயன்படுத்தப்பெற்ற சட்டிகள் இருப்புச் சட்டிகள். கரியும் சீமைக்கரி. உலோகத் துண்டு ஒன்றையோ வெள்ளி நாணயம் ஒன்றையோ கையில் வைத்து மூடித்திறந்தால் அவை உருகி ஓடும் அளவுக்கு அகச்சூடு உடைய அடிகள் அவ்வளவு அகச் சூடும் போதாது என்று தோன்றிய காலங்களில் புறத்தே தீச்சட்டிகளை வைத்துக்கொண்டு அப்புறச்சூட்டால் தமது அகச் சூட்டை மிகுவித்துக்கொள்வர் போலும். தீச்சட்டியினின்றும் நெருப்புத் துண்டுகள் சிதறி அடிகளின் மீது விழுந்த போதும் அடிகளின் திருமேனிக்கு ஊறு நேரவில்லை. அடிகளது திருமேனியே கனல் மேனி. ஞானக் கனல் நிறைந்த அத்திருமேனியை ஐம்பூதங்களுள் ஒன்றாகிய தீக்கனல் என் செய்யும் காற்றாலே புவியாலே ககனமதனாலே கனலாலே புனலாலே எஞ்ஞான்றும் அழியாத திருமேனி யன்றோ அடிகளின் திருமேனி. அப்பர் பெருமானுக்கு நீற்றறை ஊறுசெய்யாதிருந்ததும் இதுவே.

**ஒருநாழிகையில் யோக நிலையை உணர்த்தப் பெற்றது.**

இங்ஙனம் தீச்சட்டிகளிடை இருந்து யோகஞ் செய்த அடிகட்கு இறைவன் யோக நிலையை ஒரு நாள் மாலை ஒரு நாழிகைப் பொழுதில் உணர்த்தியருளினான். மறுநாள் காலையே யோகப் பயனை முழுமையாக அளித்தான்.

**ஒரு நாழிகையில் யோக நிலையை**
**யுணர்த்தி மாலை யே**
**யோகப் பயனை முழுது மளித்தாய்**
**மறுநாட் காலையே.**

**-கீர்த்தனை, எனக்கும் உனக்கும் 30**

**உருவத்தை மறைத்துக்கொண்டு**
**பிறர் கண்டுகளுக்குத் தோன்றாது உறைதல். அக்டோபர் 1870.**

மேட்டுக்குப்பத்தை உறைவிடமாகக் கொண்டபின் அடிகள் அவ்வப்போது சிற்சில காலங்களில் தம் உடலைப் பிறர்க்குத் தோன்றா வண்ணம் மறைத்துக்கொண்டு அருவ நிலையில் சில நாளிருப்பதுண்டு. இத்தகைய சாதனைகளைத் தனித்திருந்து மேற்கொள்ளுவதற்காகவே வடலூரை விட்டு மேட்டுக்குப்பத்தை உறைவிடமாகக் கொண்டார்கள். பிரமோதூத ஆண்டு ஐப்பசித் திங்களில் (1870 அக்டோபர்) சிலநாள் அங்ஙனம் தம் திருவுருவை மறைத்துக்கொண்டு யாவர் கண்ணுக்கும் தோன்றாதிருந்தனர். இதனால் சாலையில் உள்ளவர்கள் அஞ்சக் கூடுமென்று எண்ணித் தாம் மறைந்திருப்பதைக் குறித்து அஞ்சவேண்டாம் என்றும் சில நாளில் வெளிப்படுவதாகவும் அதுவரை சாலையை எளிதாக நடத்தி வருமாறும் சாலையிலுள்ளார்க்கு முன்னரே அறிவித்தனர். 'அன்பர்களுக்கு இட்ட சாலைக் கட்டளை' என வழக்கும் அவ்வறிவிப்பு வருமாறு.



RangaRakes tamilnavarasam.com

உ

திருச்சிற்றம்பலம்

அன்புள்ள நம்மவர்களுக்கு அன்புட னறிவிப்பது.

ஒருவனைப் பற்றி அனந்தம் பேர்களுக்கு நன்மையுண்டாம் என்பதை உண்மையாக நம்பிருங்கள். என்னா லுங்களுக்கு நன்மை கிடைப்பது சத்தியம். நான் இன்னுங் கொஞ்ச தினத்தில் திருவருள் வலத்தால் வெளிப்படுகின்றேன். அது பரியத்தம் பொறுத்திருங்கள். நான் மிகவும் சமீபத்தில் தானே வெளிப்படுவேன். அஞ்சவேண்டாம். சாலையை லகுவாய் நடத்துங்கள். திருச்சிற்றம்பலம்.

அடிகளின் இவ்வறிவிப்பிற்கு இரண்டு படிகள் கிடைத்திருக்கின்றன என்றும், அவற்றுள் ஒன்றில் 'பிரமோதூத வருஷ அற்பிசி மீ யக உ சாலையிலுள்ளார்க்குப் பெருமான மேட்டுக்குப்பமென்னும் சித்திவளாகத்திலிருந்து எழுதிய திருக்குறிப்பு' என்றும் மற்றொன்றில் ' இது பிரமோத ஸ்ரீ ஐப்பசி மீ யக உ சாலை நடத்திவந்த புதுவை சதாசிவ செட்டியாருக்குப் பெருமான் திருக்கரத்தால் வரைந்தனுப்பியது' என்றும் இதன் வரலாறு காணப்படுவதாக ஆ.பா. கூறுகிறார். பிரமோதூத ஐப்பசி 11க்குச சரியான ஆங்கிலத்தேதி 26.10.1870 என்றும் குறிப்பிடுகிறார். மேட்டுக்குப்பத்தினின்றும் வெளியான கட்டளைகளுள் காலத்தல் முந்தியது இதுவே. மு.அப்பாசாமி செட்டியாரையன்றிப் புதுவை சதாசிவ செட்டியாரும் சிலகாலம் சாலையை நடத்திவந்தாரென்பது அடிகளின் இவ்வறிவிப்பிற்கு அன்பர் எழுதி வைதுள்ள குறிப்பால் அறியப்படுகிறது.

'நான் இன்னும் கொஞ்ச தினத்தில் திருவருள் வலத்தால் வெளிப்படுகின்றேன். மிகவும் சமீபத்தில் தானே வெளிப்படுவேன்' என்பதால் அடிகள் மறைந்திருக்கிறார் என்பது போதரும். ' அது பரியந்தம் பொறுதிருங்கள்,அஞ்சவேண்டாம்' என்றது அடிகளைக் காணவில்லையே என்று அன்பர்கள் அஞ்சிக் கவலையுறாதிருப்பதற்காகக் கூறியதாம்.

இவ்வறிவிப்பை எழுதி வடலூர்க்கு அனுப்பியபின் அடிகள் சித்தி வளாகத்தில் தமது அறைக்குள்ளே சென்று தாழிட்டுக் கொண்டனர். வெளியே வரவில்லை. யாவர் கண்ணுக்கும் புலப்படவில்லை. உள்ளே இருப்பதாகவும் தெரியவில்லை. இவாறு பல நாளிருந்தபின் அறிவிப்பிற்குறித்தவாறே வெளிப்பட்டனர். இவ்வாறு மறைவதும் வெளிப்படுவதும் பலமுறை நிகழ்ந்ததுண்டு.75 ஒருமுறை நிகழ்ந்தது இவ்வறிவிப்பால் தெரிகிறது. இறுதியாக மறைந்ததுதான் 1874 தைப்பூசத்தன்று மறைந்தது. அதன்பின்னர் வெளிப்படவே இல்லை. முதலில் பலமுறை மறைவதும் வெளிப்படுவதுமாக இருந்தது பயிற்சி. இறுதியாக மறைந்தது இறைவனோடிரண்டறக் கலந்தது. அதன்பின்னர் வெளிப்படுவதிற்கில்லை. மீண்டும் வெளிப்படுவேம் என்று கூறி மறைந்ததாக சிலர் சொல்வதற்கு ஆதராமில்லை. அடிகள் மீளவும் வெளிப்படுவார் என்றும் சொல்லுபவர்கள்,இன்றும் சொல்லிக் கொண்டிருப்பவர்கள், முன்னர் 1870இல் மறைவதும் வெளிப்படுவதுமாக இருந்த காலத்தில் அடிகள் கூறியதனைப் பின்னர் இறுதியாக மறைந்தபோது கூறியதாக மயங்கி உணர்ந்தே அவ்வாறு கூறுகின்றனர்.



RangaRakes tamilnavarasam.com

{75.Many a time during his stay there he used to leave his followers disappeearing to go no one knew whither and remaining absen t fo more or less prolonged poeriods of time.
தொ.வே. வாக்குமூலம்}

**சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக்கட்டளை**
**30.3.1871**

இறந்தோரைப் புதைக்க வேண்டுமென்பதே அடிகளது கொள்கை என்பதையும் சமாதி வற்புறுத்தலாக அடிகள் அருளிய பாடல்களையும் முன்னர் கண்டோம். இறந்தவர்களைப் புதைக்க வேண்டு மென்று சாலை சம்பந்திகளுக்கு 30.30.1871இல் மேட்டுக்குப்பத்திலிருந்து எழுதி அனுப்பிய கட்டளையை இவண் காண்போம்.

உ
திருச்சிற்றம்பலம்

அன்புள்ள நீங்கள் சமரச வேத சன்மார்க்க சங்கத் தருமச்சாலைக்கு மிகவும் உரிமையுடையீகளாகலில் உங்களுக்கு உண்மையுடன் அறிவிப்பது.

நீங்களும் உங்களை யடுத்தவர்களும் சிற்றம்பலத் தந்தையார் திருவருளாற் சுகமாக வாழ்வீர்களாக.

கர்ம கால முதலிய பேதங்களால் யார்காயினுங் தேக ஆனி நேரிட்டால் தகனஞ் செய்யாமல் சமாதியில் வைக்கவேண்டும். இறந்தவர்கள் திரும்பவு மெழுந்து நம்முடன் இருக்கப் பார்ப்போம் என்கிற முழு நம்பிக்கையைக் கொண்டு எவ்வளவுத் துயரப்படாமலும் அழுகுரல் செய்யாமலும் சிற்றம்பலக் கடவுள் சிந்தையுடனிருக்க வேண்டும். புருட னிறந்தால் மனைவி தாலிவாங்குதல் வேண்டாம். மனைவி இறந்தால் புருடன் வேறு கல்யாணப் பிரயத்தனஞ்செய்யவேண்டாம். பிள்ளைகளிறந்தால் சஞ்சலிக்க வேண்டாம். கர்ம காரியங்கள் ஒன்றுஞ் செய்ய வேண்டாம். தெரிவிக்கத் தக்கவர்களுக்கு தெரிவித்து ஒரு தினத்தில் நேரிட்டவர்களுக்கு நேரிட்ட மட்டில் அன்ன விரயஞ் செய்ய வேண்டும். இவ்வாறு உண்மையாக நம்பிச் செய்யுங்கள். செய்திருந்தால், சமரச வேத சன்மார்க்க சங்கமும் மேற்படி தருமச்சாலையும் நிலைபெற விளக்கஞ் செய்யும் பொருட்டாகவும் சிதம்பரங் கோயில் திருச்சபைகளைப் புதுக்கி{76} நிலைபெற விளக்கஞ் செய்யும் பொருட்டாகவும் கருணை கூர்ந்து எனது தந்தையாராகிய எல்லாம் வல்ல திருச்சிற்றம்பலக் கடவுள் பார்வதிபுரம் சமரச வேத சன்மார்க்க சங்கத் தருமச் சாலைக்கு எழுந்தருளிக்காட்சி கொடுக்குந் தருணம் மிகவும் அடுத்த சமீபமாக விருக்கின்றது. அந்தத் தருணத்தில் சாலைக்கு உரியவர்களாகியிருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்பிக் கொடுத்தருளுவார். இது சத்தியம். இது சத்தியம். இந்தக் கடிதம் வெளிப்பட்டறிந்துகொள்ளாமுன் இறந்து தகனமானவர்களையும் எழுப்பியருளுவார். இது வெளிப்பட் டறிந்தபின் தகனஞ் செய்தல் கூடாது. அது சன்மார்க்கத்திற்குத் தக்கதல்ல. ஆதலில் மேற்கண்டபடி உண்மையான நம்பிக்கையுடன் வாழ்வீர்களாக.



RangaRakes tamilnavarasam.com

{76. பக்கம் 212 காண்க.}

எனக்கு உலக அறிவு தெரிந்தது தொட்டு எனது தந்தையார் திருவருளை நான் அடையும் வரையில் என்னுடன் பழகியும் என்னை நம்பி யடுத்தும் என்னைக் கேள்வியால் விரும்பியும் எனக்கு உரிமைப்பட்டும் இருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்பிக் கொடுத்து சமரச சன்மார்க்க சங்கத்தை விருத்தி செய்விக்கத் திருவுள்ளத்துக் கருதிய பெருங் கருணை வள்ளல் சாலைக்கு உரியவர்களாகி யிருந்தும் அவநம்பிக்கையுடன் இருக்கின்றவர்கள் விஷயத்திலும் இந்த உபகாரம் செய்தேயருளுவர். ஆனால் அவர்கள் சன்மார்க்க சங்கத்திற்கு மாத்திரம் அருகராகார்கள். ஆகலில் நம்பிக்கையுடன் இருங்கள். பெரிய களிப்பையடைவீர்கள். இது சத்தியம். இது சத்தியம்.

பிரமோதூத வருஷ — இப்படி
பங்குனி மீ யஅஉ — சிதம்பரம் இராமலிங்கம்.
பார்வதிபுரம்

சமாதி செய்வதை வற்புறுத்திச் சாலை சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு நேர் அறிவிப்பாக அடிகள் எழுதியருளிய இத்திருமுகம் சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக் கட்டளை என வழங்குகிறது.

"பிரமோதூத வருஷ பங்குனி மீ யஅஉ சாலை சம்பந்திகளுக்குப் பெருமான் மேல் விளையப் போகின்ற அற்புத விளக்கங்களின் திருக்குறிப்பைச் சாலை சம்பந்தமுடையவர் வழிபட்டு உண்மை லாபத்தைப் பெற்று உய்யும் பொருட்டு தயவோடு சுஹஸ்த லிகிதமாய் வெளிப்படுத்திய அற்புத மஹா பத்திரிகை," என்று இத் திருமுக வரலாறும், இத் திருமுகம் அனுப்பப்பட்ட அன்பர்க்கு ஓர் விசேஷக் குறிப்பாக "இந்தப் பத்திரிகையைச் சாலை சம்பந்திகள் தவிர மற்றவர்களுக்குக் காட்டொணாது, பணதாலாயினும் தேகத்தாலாயினும் உழைப்பெடுத்துக் கொண்டு, உண்மை நம்பிக்கையுடன் இருக்கின்றவர்கள் விஷயத்தில் காட்டத் தடையில்லை. நான் சாலைக்கு வந்தவுடன் தெரிவிக்கின்றேன். அப்போது வரலாம். பெருங் களிப்பை யடைவீர்கள். உண்மையுடனிருங்கள்." என்று மேல்கொண்டு எழுதப்பட்டிருப்பதும் ஓர் பிரதியில் காணப்படுகின்றன என்று ஆ.பா.குறிப்பிடுகின்றார். இதனுள் அடிகள் ஏழு கட்டளைகளை இடுகின்றனர். 1. எரிக்கக்கூடாது. புதைக்கவேண்டும். 2. வருந்தக் கூடாது, அழக்கூடாது. 3. கணவன் இறந்தால் மனைவி தாலி களையக்கூடாது. 4. மனைவி இறந்தால் கணவன் வேறு திருமணம் செய்து கொள்ளக்கூடாது. 5. பிள்ளைகள், உறவினர் முதலியவர்களின் இறப்புக்கு வருந்தக்கூடாது. 6. கருமாதி திதி(திவசம்) முதலிய கர்ம காரியங்கள் செய்யக்கூடாது. 7. தெரிவிக்கத்தக்கவர்களுக்குத் தெரிவித்து ஒரு நாளில் நேரிட்டவர்களுக்குக் கூடுமானவரையில் அன்னதானம் செய்யவேண்டும். புருடன் இறந்தால் மனைவி தாலிவாங்குதல் வேண்டாம்' என்பது மிகப்பெரிய சீர்திருத்தம். இதை வள்ளற்பெருமானைத் தவிர வேறுயாரும் இதுவரை கூறியதில்லை. இறந்தவர்கள் திரும்பவும் எழுந்து வந்து நம்முடன் இருக்க பார்ப்போம் என்ற முழு நம்பிக்கையோடு இருக்கவேண்டும் என்பதும், இறைவன் எழுந்தருளும்போது இறந்தவர்கள் அனைவரையும் எழுப்பிக்கொடுத்தருளுவார் என்பதும் விளங்கவில்லை. இவை கிறித்தவக் சமயக் கொள்கையை ஒத்திருக்கின்றன. செத்தார் எழுதல், செத்தாரை எழுப்புதல் ஆகிய இரண்டை அடிகள் கூறுகின்றார்கள். இவ்விரண்டும் ஒன்றல்ல, வெவ்வேறு பூம்பாவையை


RangaRakes tamilnavarasam.com

ஞானசம்பந்தரும், மூத்த திருநாவுக்கரசை அப்பரும், முதலையுண்ட பாலனைச் சுந்தரரும் எழுப்பியது செத்தாரை எழுப்புதலாம். செத்தார் எழுதல் என்பது இறந்து போன அனைவரும் ஒரு நாளில் ஆண்டவனால் எழுப்பப் பெறுவதாம். செத்தாரை எழுப்புதல் ஒரு வல்லபம். இது நம் ஞானிகளிடத்துக் கண்டது. செத்தாரெழுவர் என்பது ஒரு கொள்கை. இது கிறித்துவ சமயக் கொள்கையை ஒத்துள்ளது.

## சன்மார்க்கப் பெரும்பதி வருகையைப் பற்றிய அறிவிப்பு

12-4-1871

சன்மார்க்க சங்கமும் தருமச் சாலையும் நிலைபெற விளக்கஞ் செய்யும் பொருட்டும் சிதம்பரம் கோயில் சபைகளைப் புதுக்கி நிலைபெற விளக்கஞ் செய்தற் பொருட்டும் எல்லாம் வல்ல திருச்சிற்றம்பலக் கடவுள் வடலூர் தருமச்சாலைக்கு எழுந்தருளிக் காட்சி யளிக்க விருப்பது சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக் கட்டளையிலும் கூறப்பட்டது. சன்மார்க்கப் பெரும்பதியின் இவ்வருகையைப் பிரசோற்பத்தி, சித்திரை, முதல் நாளிலும் (12-4-1871) ஒரு திருமுக வாயிலாக ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகளுக்கு அடிகள் தெரிவித்தருளினர். சுவாமிகளுக்கெழுதிய அத்திருமுகம் வருமாறு.

உ

திருச்சிற்றம்பலம்

சுவாமிகளுக்குத் தெரிவிப்பது

சுத்த சிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்தும் வழங்கும். இதற்கும் எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை. தடையற்ற பெருநெறி வழக்கம் இக்காலந் தொட்டு அளவிறந்த நெடுங்கால வரையில் வழங்கும். அதன்மேலும் அதன் மேலும் வழங்கும். பலவகைப்பட்ட சமய பேதங்களும் சாத்திர பேதங்களும் ஜாதி பேதங்களும் ஆசார பேதங்களும் போய், சுத்த சன்மார்க்கப் பெருநெறி யொழுக்கம் விளங்கும். அது கடவுள் சம்மதம். இது உயசு மாதத்திற்குமேல். இப்போது வருகிற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள் மூர்த்திகள் கடவுளர் தேவர் அடியார் யோகி ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும் எல்லாத் தேவர்களும் எல்லாக் கடவுளரும் எல்லாத் தலைவர்களும் எல்லா யோகிகளும் எல்லா ஞானிகலும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி. இது உண்மையாயின் அந்தப் பதியின் அருளை நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன். என்னையடுத்த தாங்களும் பெறுதற்கு யாதொரு தடையுமில்லை. பெறுவீர்கள், பெறுகின்றீர்கள், பெற்றீர்கள், அஞ்சவேண்டாம்.

பிரஜோற்பத்தி வருஷ
சித்திரைமீ கஉ

## சமரச வேத பாடசாலை நிறுவியது 11-1-1872



RangaRakes tamilnavarasam.com

சமரச வேத பாடசாலை என்றொரு சன்மார்க்கப் பயிற்சிப் பள்ளியை நிறுவும் திட்டமொன்றை 1872 ஆம் ஆண்டில் அடிகள் வெளியிட்டார்கள்.

உ

திருச்சிற்றம்பலம்

இஃது சமரச வேத பாடசாலை

இதில் வாசிக்க விரும்புகின்றவர்கள் பதினைந்து வயதிற்கு மேற்பட்டவர்களாகி, நல்லறிவு, கடவுள் பக்தி, உயிரிரக்கம், பொது நோக்கம், திரிகரண வடக்கம் முதலிய நற்குண வொழுக்கங்களையும் உண்மையுரைத்தல், இன்சொல்லாடல், உயிர்க்குப் கரித்தல் முதலிய நற்செய்கை ஒழுக்கங்களையும் பெற்று சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களாகி யிருத்தல்வேண்டும்.

இதில் வாசிக்கின்றவர்களுக்கும் சிலகாலம் வாசித்து ஒருவாறு வாசிப்பிற் பயிற்சி நேரிட்டால், அந்தப் பயிற்சிக்கும் அவரவர்கள் குடும்பத்திற்கும் தக்கபடி மாதந்தோறும் பொருளுதவி செய்யப்படும். காலை மாலை சுமார் ஐந்தைந்து நாழிகை வாசித்தல் வேண்டும். திருச்சிற்றம்பலம்.

பிரஜோற்பத்திவருஷ<br>
தநுர்மதி-உயகூஉ"

சங்கத்தின் பெயர் சமரச வேத சன்மார்க்க சங்கம் என்றும் சாலையின் பெயர் சமரச வேத தருமச்சாலை என்றும் வழங்கப்பெற்ற காலத்தில் இது தொடங்கப் பெற்றதால் 'சமரச வேத பாடச்சாலை' எனப் பெயரிடப்பெற்றது. இவ்வறிக்கை வெளியிடப்பட்ட நாள் 11-1-1872ஆகும். ஞான சபையில் முதற்பூச விழா 25-1-1872 இல் நிகழ்ந்தது. சபை திறக்கப் பதினைந்து நாட்களுக்கு முன்னர் தான் இப்பாடசாலை திட்டமிடப்பட்டுள்ளது.

இது சன்மார்க்க போதினி பாடசாலை போன்றதன்று. சன்மார்க்க போதினி பொதுக் கல்வியைப் புகட்டுவது. சமரச வேத பாடசாலை சிறப்புக் கல்வி பயிற்றுவது. இது சன்மார்க்கப் பயிற்சிப் பள்ளி. இக்காலத்திய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி போன்றது. சன்மார்க்க போதினியில் சேர்ந்து பயில வயதுக் கட்டுப்பாடு இல்லை. இளைஞர் முதல் முதியோர் வரை அனைவரும் அதிற் சேரலாம். இச் சமரச வேத பாடசாலையிற் சேர்ந்து பயில வயதுக் கட்டுப்பாட்டை அடிகள் ஏற்படுத்தியுள்ளனர். பதினைந்து ஆண்டிற்கு மேற்பட்டவர்களே இதிற் சேர்த்துக் கொள்ளப்பெறுவர். அவர்களும் நல்லறிவு, கடவுள் பக்தி, உயிரிரக்கம், பொது நோக்கம், திரிகரண அடக்கம் முதலிய நற்குணங்களையும் உண்மை உரைத்தல், இன்சொல்லாடல், உயிர்க்குபகரித்தல் முதலிய நற்செய்கைகளையும் உடையவர்களாய் இருக்கவேண்டும். சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களாய் இருக்கவேண்டும் என்னும் தகுதியையும் அடிகள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இப்பாடசாலை காலையில் இரண்டு மணி நேரமும் மாலையில் இரண்டு மணி நேரமும் நடைபெறும். இதிற் பயில்வோர் ஓரளவு பயிற்சி பெற்ற பின் அவரது பயிற்சிக்கும் குடும்பத்திற்கும் தக்கவாறு உதவித்தொகை அளிக்கப்பெறுவர். பயிற்சிக்குத் தக்கபடி உதவித்தொகை அளிப்பது பாடசாலை நியதி.



RangaRakes tamilnavarasam.com

குடும்பத்திற்குத் தக்கபடி உதவித்தொகை அளிப்பது என்பதில்தான் வள்ளற்பெருமானின் பெருங்கருணையைக் காண்கிறோம்.

தக்க மாணாக்கர்களைச் சேர்த்து அவர்களுக்குச் சமரச சுத்த சன்மார்க்கப் பயிற்சி யளித்து அவர்களை நாடெங்கும் அனுப்பிச் சன்மார்க்கத்தைப் பரப்பவும் வளர்க்கவும் வேண்டுமென்பதே அடிகளது இப்பாடசாலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

இப்பாடசாலை ஏற்படுத்தப் பெற்றதா என்பது தெரியவில்லை. 18-7-1872 இல் நிலையங்களின் பெயர்களை அடிகள் மாற்றியமைத்த போது சங்கம், சாலை, சபை ஆகிய மூன்றை மட்டுமே குறிப்பிடுகின்றார்கள். சமரச வேத பாடசாலை அப்போது நடைபெற்றுக் கொண்டிருப்பின் அதனையும் குறிப்பிட்டுப் பெயரை மாற்றியிருப்பார்கள். அப்படிக் குறிக்கப்பெறாமையின் பாடசாலை நடைபெறவில்லை எனக்கொள்ள வேண்டியிருக்கிறது.

## சத்திய ஞான சபை நிறுவியது 25-1-1872

கடவுளை ஒளி (அருட்பெருஞ்ஜோதி) வடிவிற்கண்ட அடிகள் ஒளி (அருட்பெருஞ்ஜோதி) வழிபாட்டிற்கென அமைத்தருளியதே சத்திய ஞானசபையாகும். சன்மார்க்க சங்கம் காண வேண்டுமென்று விரும்பியபோதே அதனைச் சார்ந்து ஒளித் திருக்கோயில் ஒன்றையும் காண அடிகள் விரும்பினர்.

**தங்கமே அனையார் கூடிய ஞான**
**சமரச சுத்தசன் மார்க்கச்**
**சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்**
**சார்திருக் கோயில்கண் டிடவும்**
**துங்கமே பெறுஞ்சற் சங்கம்நீ டூழி**
**துலங்கவும் சங்கத்தில் அடியேன்**
**அங்கமே குளிர நின்றனைப் பாடி**
**ஆடவும் இச்சைகாண் எந்தாய்.**

**-6 (முன்) பிள்ளைச்சிறுவிண்ணப்பம் 21.**

என்னும் அடிகளது திருவாக்கில் 'சங்கம் சார்திருக்கோயில் கண்டிடவும்' என்பதைக் காண்க. சத்தியஞானசபை சங்கம் சார் திருக்கோயிலே.

## உத்தரஞான சிதம்பரம்

சத்திய ஞானசபை அமைக்கப்பெற்ற வடலூர்க்கு அடிகள் உத்தர ஞான சிதம்பரம் எனப் பெயரிட்டனர். தில்லையை அடிகள் பூர்வஞான சிதம்பரம் என்பர். இரண்டும் ஞான சிதம்பரமே. ஒன்று பூர்வம். மற்றொன்று உத்தரம். பூர்வம் என்பது முன். உத்தரம் என்பது பின். பூர்வோத்தரம் என்ற வழக்கை நோக்குக. முன்னைச் சிதம்பரம்-தில்லை. பின்னைச் சிதம்பரம் - வடலூர். பூர்வம் என்பது தெற்கு. உத்தரம் என்பது வடக்கு. தில்லை, தென் சிதம்பரம். வடலூர் வட சிதம்பரம் (வட திருச்சிற்றம்பலம்).



RangaRakes tamilnavarasam.com

உத்தரஞான சிதம்பர மென்னும் பெயர் திருவருளால் ஆக்கப்பட்ட ஆக்கச் சிறப்புப் பெயர் என அடிகள் கூறுவர். சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பத்தில் "உத்தரஞான சித்திபுரமென்றும், உத்தரஞான சிதம்பரமென்றும் திருவருளாலாக்கப்பட்ட ஆக்கச் சிறப்புப் பெயர்களும் பார்வதிபுரமென்றும் வடலூரென்றும் உலகியலாற் குறிக்கப்பட்ட குறிப்புப் பெயர்களும் பெற்று விளங்குகின்ற தெய்வப்பதி" எனக் குறிப்பிடுவர். இத் தெய்வப் பதியைப் பற்றி ஒரு பாமாலையை பாடியருளினார்'. உத்தரஞான சிதம்பரமாலை' என அதற்குப் பெயருமிட்டருளினர்.

## உத்தரஞானசிதம்பரமாலை

### திருச்சிற்றம்பலம்

அருளோங்கு கின்ற தருட்பெருஞ் சோதி யடைந்ததென்றன்
மருளோங்கு றாமல் தவிர்த்தது நல்ல வரமளித்தே
பொருளோங்கி நான்அருட் பூமியில் வாழப் புரிந்ததென்றும்
தெருளோங்க ஓங்குவ துத்தா ஞான சிதம்பரமே. 1

இணைஎன்று தான்றனக் கேற்றது போற்றும் எனக்குநல்ல
துணைஎன்று வந்தது சுத்தசன் மார்க்கத்தில் தோய்ந்ததென்னை
அணைஎன் றணைத்துக்கொண் டைந்தொழில் ஈந்த தருளுலகில்
திணைஐந்து மாகிய துத்தர ஞான சிதம்பரமே. 2

உலகம் எலாந்தொழ உற்ற தெனக்குண்மை ஒண்மைதந்தே
இலகஎ லாம்படைத் தாருயிர் காத்தருள் என்றதென்றும்
கலகம்இ லாச்சுத்த சன்மார்க்க சங்கம் கலந்ததுபார்த்
திலகம் எனாநின்ற துத்தர ஞான சிதம்பரமே. 3

பவமே தவிர்ப்பது சாகா வரமும் பயப்பதுநல்
தவமே புரிந்தவர்க் கின்பந் தருவது தான்தனக்கே
உவமேய மான தொளிஓங்கு கின்ற தொளிருஞ்சுத்த
சிவமே நிறைகின்ற துத்தர ஞான சிதம்பரமே. 4

ஒத்தா ரையும்இழிந் தாரையும் நேர்கண் டுவக்கஒரு
மித்தாரை வாழ்விப்ப தேற்றார்க் கமுதம் விளம்பிஇடு
வித்தாரைக் காப்பது சித்தாடு கின்றது மேதினிமேல்
செத்தாரை மீட்கின்ற துத்தர ஞான சிதம்பரமே. 5

எத்தாலும் மிக்க தெனக்கருள் ஈந்ததெல் லாமும்வல்ல
சித்தாடல் செய்கின்ற தெல்லா உலகும் செழிக்கவைத்த
தித்தா ரணிக்கணி ஆயது வாந்தொழற் கேற்றதெங்கும்
செத்தால் எழுப்புவ துத்தர ஞான சிதம்பரமே. 6

குருநெறிக் கேஎன்னைக் கூட்டிக் கொடுத்தது கூறரிதாம்
பெருநெறிக் கேசென்ற பேர்க்குக் கிடைப்பது பேய்உலகக்
கருநெறிக் கேற்றவர் காணற் கரியது காட்டுகின்ற



RangaRakes tamilnavarasam.com

திருநெறிக் கேற்கின்ற துத்தர ஞான சிதம்பரமே. 7

கொல்லா நெறியாது கோடா நிலையது கோபமிலார்
சொல்லால் உவந்தது சுத்தசன் மார்க்கந் துணிந்ததுல
கெல்லாம் அளிப்ப திறந்தால் எழுப்புவ தேதம்ஒன்றும்
செல்லா வளத்தின துத்தர ஞான சிதம்பரமே. 8

காணாத காட்சிகள் காட்டுவிக் கின்றது காலம்எலாம்
வீணாள் கழிப்பவர்க் கெய்தரி தானது வெஞ்சினத்தால்
கோணாத நெஞ்சில் குலாவிநிற் கின்றது கூடிநின்று
சேணாடர் வாழ்த்துவ துத்தர ஞான சிதம்பரமே. 9

சொல்வந்த வேத முடிமுடி மீதில் துலங்குவது
கல்வந்த நெஞ்சினர் காணற்கரியது காமம்இலார்
நல்வந் தனைசெய நண்ணிய பேறது நன்றெனக்கே
செல்வந்தந் தாட்கொண்ட துத்தர ஞான சிதம்பரமே. 10

ஏகாந்த மாகி வெளியாய் இருந்ததிங் கென்னைமுன்னே
மோகாந்த காரத்தின் மீட்டதென் நெஞ்ச முயங்கிரும்பின்
மாகாந்த மானது வல்வினை தீர்த்தெனை வாழ்வித்தென்றன்
தோகாந்த நீக்கிய துத்தர ஞான சிதம்பரமே. 11

திருச்சிற்றம்பலம்

**சத்திய ஞான சபை**

வடலூரை உத்தர ஞான சிதம்பரமாக்கிய அடிகள் அங்கமைத்த சங்கம் சார் திருக்கோயிலுக்குச் சத்திய ஞான சபை எனப் பெயரிட்டனர். அடிகள் தாம் நிறுவிய நிலையங்களுக்குப் பெயரிடுவதே ஒரு தனிச் சிறப்பு. மடம் என்னாது சங்கம் என்றதும், சத்திரம் என்னாது சாலை என்றதும், கோயில் என்னாது சபை என்றதும் தனிச்சிறப்பன்றோ. சபையின் முழுப்பெயர் 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபை' என்பது. சங்கத்தையும் சாலையையும் போன்றே தொடக்கத்தில் சபையும் வேறு பெயருடையதாயிருந்து பின்பு பெயர் மாற்றஞ் செய்யப்பட் டிருக்ககூடு மென்பது அடிகள் சபை வழிபாட்டு விதிகளைக் குறித்தெழுதியுள்ள பத்திரிகையா லறியப்பெறுகிறது. சங்கம் சாலை இவற்றின் முன்னைய பெயர் தெரிவது போன்று சபையின் தொடக்க காலப் பெயர் தெரியவில்லை.

இறைவனது திருவருட் குறிப்பின்படியே-திருவருட் சம்மதத்தைப் பெற்றே-சத்திய ஞான சபையை அடிகள் அமைத்தனர். அடிகள் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடத்துச் செய்துகொண்ட சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பத்தாலும் சபை விளம்பரத்தாலும் இவ்வுண்மை அறியப்பெறும்.

கடவுள் வழிபாடு எஞ்ஞான்று செய்வோம்? கடவுள் திருவருள் விளக்கம் எந்நாளடைவோம்? மரணம் பிணி மூப்பு முதலிய அவத்தைகள் எப்போது நீங்கும்? என்று மழியாத பேரின்ப சித்தி எக்காலம் கிடைக்கும்? என்று எண்ணியெண்ணி



RangaRakes tamilnavarasam.com

வழி துறை தெரியாமல் வருந்தி நின்ற தருணத்தே-களைப்பறிந்துதவுங் கருணைக் கடலாகிய கடவுளே! தேவரீர் 'நெடுங்கால மரண முதலாகிய அவத்தைகளாற் றுன்பமுற்றுக் களைப்படைந்த உங்களை அவ்வவத்தை களினின்றும் நீக்கிக் களைப்புங் கலக்கமுந் தவிர்த்து அழியாத பேரின்ப சித்தியை அடைவித்தற் பொருட்டாகவே பூர்வ ஞான சிதம்பரத்தின் வடபால் பார்வதிபுரமென்று குறிக்கப்படுகின்ற உத்தரஞான சித்திபுரத்தில் யாம் அளவு கடந்த நெடுங்காலம் சித்தியெல்லாம் விளங்கத் திருவருள் நடஞ் செய்வோ' மென்றும் அதுதருணம் மிகவும் அடுத்து சமீபித்த தருண' மென்றும் 'அப்பதியினிடத்தே யாம் அருணடம் புரிதற்கு அடையாளமாக ஓர் ஞானசபை காணுதல் வேண்டு' மென்றும் திருவருட் குறிப்பால் அறிவித்தது மன்றி, அருளுருவாகியெங்களகத்தும் புறத்தும் அமர்ந்தளி யாதோர் தடைகளுமின்றி அத்திருஞான சபையுந் தோன்றி விளங்கச் செய்வித் தருளிய தேவரீர் பெருங்கருணையைக் கருதுந்தோறும் பெருங்களிப்படைகின்றோம்.

-சிறுவிண்ணப்பம்

கடவுள் தாமே திருவுள்ளங்கொண்டு சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய உண்மை விளக்கஞ் செய்கின்ற ஓர் ஞானசபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து 'இக்காலந் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம் அளவு குறிக்கப்படாத அற்புத சித்திகளெல்லாம் விளங்கயாமே அமர்ந்து விளையாடுகின்றாம்' என்னுந் திருக்குறிப்பை வெளிப்படுத்தி அருட்பெருஞ்சோதியராய் வீற்றிருக்கின்றார்.

-சபை விளம்பரம்

உத்தர ஞான சிதம்பரமாகிய வடலூரில் சத்திய தருமச்சாலைக்கு அணித்தாகச் சத்திய ஞானசபை அமைந்துள்ளது. 1871 பிரஜோற்பத்தி ஆண்டு ஆனித் திங்களில் சபை கட்டத் தொடங்கப் பெற்றது. சபை எண்கோண வடிவானது. தெற்கு நோக்கியது. சபையின் முன் மண்டபத்தில் கீழ்ப்புறம் பொற்சபையும் மேற்புறம் சிற்சபையும் உள்ளன. கிழக்கு நோக்கிய வாயிலையுடைய சிற்சபை. தெற்கு நோக்கிய வாயிலையுடைய ஞானசபை மேற்கு நோக்கிய வாயிலையுடைய பொற்சபை ஆகிய மூன்றும் ஆய்த எழுத்தைப் போன்றமைந் துள்ளன. பொற்சபையும் சிற்சபையும் சிதம்பரத்தில் முன்னரே உள்ளவை. அடிகள் புதிதாகக் கண்டது ஞானசபையே. எண்கோண வடிவான ஞான சபைக்குள் பன்னிருகால் மண்டபம் ஒன்றும் நாற்கால் மண்டபம் ஒன்றும் ஒன்றனுள் ஒன்றாக உள்ளன. நாற்கால் மண்டபத்தின் நடுவே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் எழுந்தருளி யுள்ளார். அவ்வருட்பெருஞ்ஜோதியை மறைத்துக் கொண்டு ஏழு வெவ்வேறு நிறத் திரைகள் தொங்குகின்றன. இத்திரைகள் அருட்பெருஞ்ஜோதி அகவலில் பின்வருமாறு கூறப்படுகின்றன.

**கரைவின்மா மாயைக் கரும்பெருந் திரையால்**
**அரைசது மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி**
**பேருறு நீலப் பெருந்திரை அதனால்**
**பச்சைத் திரையால் பரவெளி அதனை**
**அச்சுற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி**
**செம்மைத் திரையால் சித்துறு வெளியை**
**அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி**



RangaRakes tamilnavarasam.com

**பொன்மைத் திரையால் பொருளுறு வெளியை**
**அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி**
**வெண்மைத் திரையால் மெய்ப்பதி வெளியை**
**அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி**
**கலப்புத் திரையால் கருதனு பவங்களை**
**அலப்புற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி** 813-826

அடிகள் சத்திய ஞான சபையை இயற்கை விளக்கம் என்பர். அகத்தே காணற்குரிய அனுபவத்தை புறத்தே பாவனையாகக் காட்டுவதே சத்தியஞானா சபை. திரைகளெல்லம் தத்துவ படலங்களே; மாய திரைகளே. நம்மிடத்திலுள்ள்லா அஞ்ஞானமாகிய திரைகள் நீங்கப்பெறால் ஆன்ம ஒளியாகிய அருட்பெருஞ்சோதியைத் தரிசிக்கலாம். அகத்தே தாம் பெற்ற அருட்பெருஞ்சோதி யனுபவத்தையே புறத்தில் சபையாகக் காட்டினர் அடிகள்.

**சத்திய ஞாசசபை யென்னுட் கண்டனன்**
**சன்மார்க்க சித்தியை நான்பெற்றுக் கொண்டனன்**
**திருந்தும்என் உள்ளத் திருக்கோயில் ஞான**
**சித்தி புரம் எனச் சத்தியம் கண்டேன்**

என்னும் திருவாக்குகளைக் காண்க.

### சபையில் முதல் தைப்பூச விழா 25.01.1872

ஆனித்திங்களிற் கட்டத் தொடங்கப் பெற்ற சபைக் கட்டிடம் தைத் திங்களிற் கட்டி முடிக்கப் பெற்றது. பிரஜோற்பத்தி தை 13 வியாழக்கிழமை (25-1-1872) பூச நாளில் முதன் முதலாகச் சபையில் வழிபாடு தொடங்கப் பெற்று அனைவரும் அருட்பெருஞ்ஜோதி தரிசனத்தைக் கண்டுகளித்தனர். அருட்பெருஞ் ஜோதியாகிய அகண்டகத்தின் ஒளி கண்ணாடியில் பேரொளியாகப் பிரதிபலிப்பதே சபையிற் காணும் அருட்பெருஞ்ஜோதி தரிசனமாம். ஏறத்தாழ ஐந்தடி உயரமுள்ள அக்கண்ணாடியைச் சித்திவளாகத்தில் ஒரு மண்டலம் (48 நாள்) வழிபாட்டில் வைத்திருந்து பின்பு சபையில் நிறுவச் செய்தனர் எனச் ச.மு.க. கூறுவர்.

### சபை விளம்பரம்

சாலை தொடங்கும்போது சாலையைப் பற்றிய விளம்பரம் ஒன்றை வெளியிட்டது போன்றே சபை தொடங்கும் போதும் சபையைப் பற்றிய விளம்பரம் ஒன்றை அடிகள் வெளியிட்டருளினர்.

உ

திருச்சிற்றம்பலம்

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப் பெற்ற நண்பர்களே!



RangaRakes tamilnavarasam.com

அறிவு வந்த கால முதல் அறிந்து அறியாத அற்புத அறிவுகளையும், அடைந்து அறியாத அற்புத குணங்களையும், கேட்டு அறியாத அற்புதக் கேள்விகளையும், செய்து அறியாத அற்புதச் செயல்களையும், கண்டு அறியாத அற்புதக் காட்சிகளையும், அனுபவித் தறியாத அற்புத அனுபவங்களையும், இது தருணத் தொடங்கிக் கிடைக்கப் பெறுகின்றேன் என்றுணருகின்ற ஓர் சத்திய வுணர்ச்சியாற் பெருங் களிப்புடையேனாகி இருக்கின்றேன்.

நீவிர்களும் அவ்வாறு பெற்றுப் பெருங்களிப்பு அடைதல் வேண்டும் என்று எனக்குள்ளே நின்று நிறைந்து எழுந்து வெளிப்பட்ட எனது சுத்த சன்மார்க்க லக்ஷியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமைப் பேராசை பற்றியே இதனைத் தெரிவிக்கின்றேன்.

இயற்கையிற்றானே விளங்குகின்றவரா யுள்ளவ ரென்றும், இயற்கையிற்றானே யுள்ளவராய் விளங்குகின்றவ ரென்றும், இரண்டு படாத பூரண இன்பமானவ ரென்றும், எல்லா அண்டங்களையும் எல்லா உலகங்களையும் எல்லாப் பதங்களையும் எல்லாச் சத்திகளையும் எல்லாச் சத்தர்களையும் எல்லாக் கலைகளையும் எல்லாப் பொருள்களையும் எல்லாத் தத்துவங்களையும் எல்லாத் தத்துவிகளையும் எல்லா உயிர்களையும் எல்லாச் செயல்களையும் எல்லா இச்சைகளையும் எல்லா ஞானங்களையும் எல்லாப் பயன்களையும் எல்லா அனுபவங்களையும் மற்றெல்லாவற்றையும் தமது திருவருட் சத்தியால் தோற்றுவித்தல் வாழ்வித்தல் குற்றம் நீக்குவித்தல் பக்குவம் வருவித்தல் விளக்கஞ் செய்வித்தல் முதலிய பெருங் கருணைப் பெருந் தொழில்களை இயற்றுவிக்கின்றவரென்றும், எல்லாம் ஆனவ ரென்றும், ஒன்றும் அல்லாதவரென்றும், சர்வ காருணியரென்றும், சர்வ வல்லபரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்புயர் வில்லாத் தனிப் பெருந் தலைமை அருட் பெருஞ் ஜோதியர் என்றும் சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே அகம்புற முதலிய எவ்விடத்தும் நீக்க மின்றி நிறைந்த சுத்த மெய்யறிவென்னும் பூரணப் பொது வெளியில் அறிவார் அறியும் வண்ணங்களெல்லா மாகி விளங்குகின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரே யாகிய கடவுளைஇவ்வுலகினிடத்தே ஜீவர்கள் அறிந்து அன்பு செய்து அருளையடைந்து அழிவில்லாத சத்திய சுக பூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பல வேறு கற்பனைகளாற் பலவேறு சமயங்களிலும் பலவேறு மதங்களிலும் பல வேறு மார்க்கங்களிலும் பல வேறு லக்ஷியங்களைக் கொண்டு, நெடுங் காலமும் பிறந்து பிறந்து அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவுமின்றி விரைந்து விரைந்து பலவேறு ஆபத்துக்களினால் துன்பத்தில் அழுந்தி இறந்திறந்து வீண் போகின்றார்கள்.

இனி இச்சீவர்கள் விரைந்து விரைந்து இறந்து இறந்து வீண்போகாமல், உண்மையறிவு உண்மையன்பு உண்மையிரக்க முதலிய சுப குணங்களைப் பெற்று நற்செய்கை யுடையராய், எல்லாச்சமயங்களுக்கும் எல்லாமதங்களுக்கும் எல்லாமார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாகி விளங்குஞ் சுத்த சன்மார்க்கத்தைப்பெற்று, பெருஞ் சுகத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு, மேற்குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளங்கொண்டு சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய உண்மை விளக்கஞ் செய்கின்ற ஓர் ஞானசபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து "இக்காலந் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம் அளவு குறிக்கப்படாத

சித்திகளெல்லாம் விளங்க யாமே அமர்ந்து விளையாடுகின்றாம்" என்னுந் திருக்குறிப்பை வெளிப்படுத்தி, அருட்பெருஞ்ஜோதியராய் வீற்றிருக்கின்றார்.

ஆகலின், அடியிற் குறித்த தருணந் தொடங்கி வந்து வந்து தரிசிக்கப் பெறுவீர்களாகிற் கருதிய வண்ணம் பெற்றுக் களிப்படைவதும் அன்றிஇ, இறந்தவர் உயிர்பெற் றெழுதல் மூப்பினர் இளமையைப் பெற்று நிற்றல் முதலிய பலவகை அற்புதங்களைக் கண்டு பெருங்களிப்பும் அடைவீர்கள்.

| | |
|---|---|
| சென்னப்பட்டணம் | இங்ஙனம் |
| இராஜதானியை சேர்ந்த | சிதம்பரம் |
| கூடலூர் ஜில்லா ஷை | இராமலிங்ம் பிள்ளை. |
| தாலூகா வடலூரில் | |
| அல்லது பார்வதிபுரம் | |

அடியிற் குறித்த தருணந் தொடங்கி எனக் கூறப்பட்டுள்ள போதினும் இதனடியில் காலம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. வேறொருவரால் எழுதப்பட்டு சுவாமிகள் கையெழுத் திட்டிருக்கும் ' இதன் மூலத்தில் இந்தத் தருணத்தின் விவரம் எதுவும் குறிக்கப்பட்டிருக்கவில்லை. ஷை பத்திரிக்கை பல பாஷையிலும் அச்சிட்டிருப்பதை அற்புதம் விளங்குங் காலத்தில் தினங் குறித்து ஷை பத்திரிக்கையை பிரசுரஞ் செய்யப்படும் ' என்று ஓர் அன்பர் பரதியிலுள்ள குறிப்பையும், கிடைத்த பழந்துண்டு ஒன்றில் தேதி வரிசையாக விஷயங்களைக் குறித்திருப்பதில் இதைச் சுவாமிகள் திருக்காப்பிட்டுக்கொண்ட தேதி யாகிய ஸ்ரீமுகளூ தைமீ யகூஉ க்கு எதிராகக் குரறித்திருப்பதையும் கருதி இந் நாட்குறிப்பை ஒருவாறு உயுத்துணர்க' என் அ.பா. குறுகிறார். இதனுள் மூன்று பொருள்கள் கவனத்திற் குரியவையாயுள்ளன. இவ்விளம்பரம் வேறொருவரால் எழுதப்பட்டு அடிகளால் கையெழுத்திடப்பெற்றிருக்கிறது. அடிகள் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை எனக் கையெழுத்திட்டிருக்கிறார்கள். 2. இவ்விளம்பரம் பல மொழிகளிலும் அச்சிடப்பெற்றது. 3. இவ்விளம்பரத்தின் காலம் 1885இல் வெளி வந்த திருவருட்பா ஆறாம் திருமுறை முதற்பதிப்பிலும் இவ்விளம்பரத்தின் கீழ் ஸ்ரீமுகளூ தைமீக்கூஉ சுக்கிரவாரம் எனக் காணப்படுகிறது. இவ்விளம்பரத்தின் காலத்தை ஆராயுமிடத்து ஸ்ரீமுக தை19((30.1.1874)என்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. அது அடிகள் சித்தி வளாகத்தில் சித்தி பெற்ற(இறைவனோடிரண்டறக் கலந்த)நாளாகும். ஞானசபை தொடங்கிய காலத்தில் முதற்பூச விழாவின்போது (25.1.1872)இவ்விளம்பரம் வெளியிடப்பெற்றதெனக்கொள்வதே பொருத்தமுடைத்தாம். சாலைத் தொடக்க விழாவின்போதும் ஒரு விளம்பரம் வெளியிடப்பெற்ற தன்றோ?

சபை கட்டப்பெற்ற காலத்தில் அடிகள்சித்தி வளாகத்திலிருந்தனர். அடிகள் தம் கரத்தால் வரைந்தளித்த அமைப்புப் படத்தின்படியே அன்பர்கள் சபையைக் கட்டி முடித்தனர். அடிகளால் வரையப்பெற்ற அப்படம் இரண்டு மூன்று வருடத்திற்கு முன்னும் வடலூரில் காணப்பட்டது. இப்போது காணப்படவில்லை என ச.மு.க பதிப்பு சரித்திரக்குறிப்பு (1924) கூறுகிறது. 1920,21 வரை அப்படம் வடலூரில் காணப்பட்டதென்பது இதனால் தெரிகிறது, சபையில் வழிபாடு தொடங்கிய முதற் போச விழா வரை அனைத்தையும், மேட்டுக்குப்பத்திலிருந்தவாறே அன்பர்களைக்கொண்டு நடத்தச் செய்தனர். சபை கட்டும் வேலைகுப் புலால் மறுத்தவர்களாகிய அகவினத்தார்களையே

பயன்படுத்துமாறு அடிகள் கட்டளையிட்டிருந்தனர். அன்பர்களும் அவ்வாறே செய்தனர். ஆயினும் சபைக்கு முன் பெரியதோர் அலங்காரப் பந்தலிடுவதற்குத் தஞ்சாவூர் மராட்டியர்களை அமர்த்திவிட்டனர். அவர்கள் கலைத்திறன் கைவந்தவரேனும் கொலை புலையைக் கைவிடாதவர்கள். புறவினத்தார்களாகிய அவர்கள் வேய்ந்த பந்தர் அங்கிருத்தல் அடிகட்குச் சம்மதமில்லை. சபை கட்டி முடிந்த பின் அடிகள் வந்து பார்த்தபோது அப்பந்தலைத் தமது சக்தியால் எரியச் செய்துவிட்டனர். கட்டிடத்தை ஒட்டியிருந்த அப் பந்தலும் கட்டிடத்திற்கு ஊறின்றி எரிந்து சாம்பாலாயிற்று.

## சபை வழிபாட்டு முறை

ஞான சபையின் வழிபாட்டு முறை முற்றிலும் புதுமையானது. கோயில் வழிபாட்டு முறைகளின் வேறானது. வழிபாட்டிற்காகக் கூடுவோர் அனைவரும் சபைக்கு வெளியே வாயிற்புறத்தருகில் நின்று மெல்லெனத் துதி செய்தல் வேண்டும். புலாலுண்போராகிய புறவினத்தார் சபைக்குப் புறத்தே நின்று வழிபடவேண்டும். சிற்சபை பொற்சபை உள்ள முன் மண்டபத்துள்ளேயும் அவர்கள் புகலாகாது. இதுவே சபைக்குரிய வழிபாடு. இது தவிர வேறு எதுவும் கூடாது. சபையினுள் யாரும் புகலாகாது. சபையினுள் உள்ள அகண்டத்திற்குத் திரி முதலியன இடுதற்காகவும் சபையினுட்புறத்தைச் சுத்தப்படுத்துதற்காகவும் புலை, கொலை நீத்தவராயும் மூவாசைகளிலும் பற்றில்லாதவராயும் உள்ள யாராவது ஒருவர் வேண்டும்போது சபையினுள் புகலாம். அங்ஙனம் உட்புகுதற்கும் புறத்தே இருந்து வழிபடுதற்கும் சாதி முதலிய வேறுபாடில்லை. மத்தளம் முதலிய இசைக்கருவிகள், சோறு தேங்காய் பழம் முதலிய நைவேத்தியங்கள், தீப தூப முதலிய ஆராதனைகள், திருநீறு முதலிய பிரசாதங்கள் இன்னும் இவ்வகைகளில் சமயக் கோயில்களில் அனுட்டிக்கப்படுபவை யாவும் ஞானசபை வழிபாட்டிற்குப் புறம்பானவையாம்.

## சாலையிலுள்ளார்க்கு இட்ட ஒழுக்கக் கட்டளை 9-3-1872

எப்போதாவது தமக்குத் தோன்றுங் காலங்களில் வடலூர்க்கு வந்து சங்கத்தையும் சாலையையும் பார்வையிட்டுச் சபையை வழிபட்டுத் திரும்புவதும் மற்றக் காலங்களில் சித்திவளாகத்திலேயே இருப்பதும் அடிகட்கு வழக்கமாயிற்று. இவ்வாறிருக்கு நாளில் வடலூரில் சாலையிலிருப்பவர்கள் முறையாக ஒழுகவில்லை என்பதை அடிகள் அறிய நேர்ந்து வருந்தினர். தமது வருத்தத்தைப் புலப்படுத்திச் சாலையை நடத்திவரும் அப்பாசாமி செட்டியார்க்கு 9-3-1872 இல் ஒரு திருமுகம் விடுத்தனர். சாலையிலுள்ளார்க்கு இட்ட ஒழுக்கக் கட்டளை என வழங்கும் அத்திருமுகம் வருமாறு:

உ



RangaRakes tamilnavarasam.com

சிவமயம்

அப்பாசாமி செட்டியா ரவர்களுக்கு,

இந்த சாலையால் எனக்கு மிகவும் சலிப்புண்டாகிறது. அந்த சலிப்பு இரண்டு பக்கத்திலும் உபத்திரவம் பண்ணும். ஆதலால் சாலையி லிருக்கிறவர்க ளெல்லாம் சன்மார்க்கத்திற்கு ஒத்து வாயடங்கி மனமடங்கி இருக்கவேண்டும். என்மேற் பழியில்லை. சொல்லிவிட்டேன். பின்பு வந்ததைப் படவேண்டும்.

பிரஜோத்பத்திவருஷ
மாசிமீ உஅஉ

வந்தனம் கூறியும் வாழ்த்தியும் அன்போடு தமது கடிதங்களைத் தொடங்கும் வழக்கமுடைய அடிகள் இக்கட்டளையை வந்தனமோ வாழ்த்ததோ இல்லாது அப்பாசாமி செட்டியாரவர்களுக்கு என வெறுமையாகத் தொடங்குகின்றனர். கட்டளை மிகச் சுருக்கமாக இருக்கிறது. அதன் ஒவ்வொரு சொல்லும் அழுத்தந் திருத்தமாக இருக்கிறது. இந்தச் சாலையால் தனக்கு மிகவும் சலிப்புண்டாகிறதென்பதை முதலிற் குறிப்பிடுகின்றார்கள். சலிப்படைவதற்காகவோ அடிகள் சாலையைத் தொடங்கினர்? அந்தச் சலிப்பு இரண்டு பக்கமும் உபத்திரவம் பண்ணும் என அடுத்துக் கூறுகின்றனர். இரண்டு பக்கமும் என்றது தன் பக்கமும் சாலையிலுள்ளார் பக்கமும். ஆதலால் சாலையிலிருக்கிறவர்கள் எல்லாம் சன்மார்க்கத்திற்கு ஒத்து வாயடங்கி மனமடங்கி இருக்கவேண்டும் என அறிவுரை கூறி இறுதியில் என்மேல் பழியில்லை, சொல்லிவிட்டேன், பின்பு வந்ததைப்படவேண்டும் என முடிக்கின்றனர். இன்சொற்களையே வழங்கும் அடிகள் இத்தகைய கடுஞ்சொற்களை வழங்குமளவிற்குச் சாலையிலுள்ளார் ஒழுக்கக் கேடாக நடந்திருக்கின்றனர் என்றறிகிறோம். கண்டித்தற் குரியவற்றில் அடிகள் கண்டிப்பாக இருப்பர். அதற்கு இக்கட்டளையே ஓர் எடுத்துக்காட்டாம்.

## அருட்பெருஞ் ஜோதி அகவல் அருளியது 18-4-1872

அடிகளது அருளிச் செயலாகிய திருவருட்பா ஆறு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளது. ஐந்து திருமுறைகளிலும் ஆறாந் திருமுறை சிறந்தது. அதனுள்ளும் அருட்பெருஞ்ஜோதி அகவல் சிறந்தது. திருவருட்பாவை ஒரு ஞான உடம்பாகக் கொண்டால் அதன் முகம் ஆறாந் திருமுறை. அதன் கண் அருட்பெருஞ்ஜோதி அகவல். அக் கண்ணுள் மணியாகத் திகழ்வது அருட்பெருஞ்ஜோதி என்னும் மந்திரம்.

அடிகளோடு பழகியவர்களுள் ஒருவராகிய ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகள் இவ்வருட்பெருஞ்ஜோதி அகவலைப் பற்றிக் கூறுமிடத்து 'திருவருட்பிகாச வள்ளற் பெருமானருளிய திருப்பாசுரங்கள் யாவும் விசேடமேயாயினும் முன்னைந்து திருமுறைகளும் சமயத்திற்குட்பட்ட சொரூப தோத்திரமாயும் ஆறாவது திருமுறை சமயாதீத பரவஸ்து வினிலக்கணத்தை யுள்ளடக்கி நிற்குந் தோத்திரப் பாக்காளாயும் அதிலும் அத்திருமுறை முன்புள்ள அருட்பெருஞ்ஜோதி அகவற்பாவானது அவ்வள்ளற் பெருமானுக்கு அருட்டெரிசனமுண்டாங் காலையில் அருளிச்செய்து தெனவு முணரப் பெற்றேன்.....'



RangaRakes tamilnavarasam.com

என்றெழுதுகின்றார். வேதத்துள் ஸ்ரீருத்திரம் போல அருட்பாவுள் அருட்பெருஞ்ஜோதி அகவல் விளங்குகின்றது என்பர் அழகரடிகளார்.

சித்திவளாகத்தில் எழுந்தருளியிருந்து அகத்தே சத்திய ஞானசபையைக் கண்டு, புறத்தேயும் உத்தர ஞான சிதம்பரத்தில் அதனைக்கட்டி, அகத்தேயும் புறத்தேயும் அருட்பெருஞ்சோதியைத் தரிசிக்கப்பெற்று அருட்பெருஞ்சோதி அனுபவம் கைவரப்பெற்றுத் திளைத்த காலத்தில் அடிகள் அருட்பெருஞ்ஜோதி அகவலைப் பாடியருளினார்கள். தனக்குக் கிடைத்த, அடிகளின் கரத்தாலெழுதப்பெற்ற அருட்பெருஞ்ஜோதி அகவல் மூலத்திலும் ஓர் அன்பரின் படியிலும் அகவலின் இறுதியில் "ஆங்கிரச வருஷ சித்திரை மீ அஉ" என்றெழுதப்பட்டுள்ளதென்றும் அதற்குச் சரியான ஆங்கில நாள் 18-4-1872 வியாழக்கிழமை என்றும் ஆ.பா. எழுதுகிறார். இதனால் அகவல் அருளப்பெற்ற காலம் 18-4-1872 ஆங்கிரச ஆண்டு சித்திரைத் திங்கள் எட்டாம் நாள் வியாழக்கிழமை என்பது போதரும்.

அருட்பெருஞ்ஜோதி அகவல் 1596 அடியான் இயன்ற ஓர் ஆசிரியப்பா. ஆசிரியப்பா மூன்றடிச் சிற்றெல்லையும் ஆயிரம் அடிப்பேரெல்லையும் பெற்று வரும். 'ஆசிரியப் பாட்டி னளவிற் கெல்லை ஆயிரமாகும் இழிபு மூன்றடியே' என்பது தொல்காப்பியம் (பொருளதிகாரம், செய்யுளியல் 157). இதற்கு உரை செய்த பேராசிரியர் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, அடியான் வந்த பாக்களை எடுத்துக்காட்டி 'பிறவும் அன்ன, ஆயிரம் அடியால் வருவனவும் உளவேற் கண்டு கொள்க' என எழுதினர். ஆயிரம் அடியான் வந்த ஆசிரியப்பா அக்காலத்தில் இல்லை. சங்க இலக்கியங்களுள் அடியான் மிகுந்து வந்த பாட்டு மதுரைக் காஞ்சியே (782 அடி). சங்க காலம் முதல் அடிகளது காலம் வரை இதனினும் மிகுத்து வந்த பாட்டு இல்லை. ஆயிரம் அடியினும் மிகுந்து வந்த பா அடிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவலே. இனித் தொல்காப்பியத்தைப் பதிப்பிப்பாரும் அதற்குப் புத்துரை வரைவாரும் ஆயிரம் அடியினும் மிகுத்து வந்ததென அருட்பெருஞ்ஜோதி அகவலை எடுத்துக் காட்டலாம்.

அளவாற் பெருமையுடைய இது பொருளாலும் பெருமை யுடையது. இது தோத்திரத்துக்குத் தோத்திரமும் சாத்திரத்துக்குச் சாத்திரமும் ஆகும். இதன் பல இடங்கள், திருவாசகம் முதல் நான்கு அகவலுள் கூறப்பெறும் கருத்துகளுக்கு விளக்கங்களாக அமைந்துள்ளன. ஐம்பூதநிலைகள் ஐந்தொழில் முதலியவற்றைப்பற்றிய நுட்பமான பொருள்கள் பலவற்றை இதனுட் காண்கிறோம். இதன் சில பகுதிகள் எளிதில் பொருள் விளங்குவன. சில எளிதில் விளங்காதன. 'எங்கே கருணை இயற்கையின் உள்ளன அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே,' 'கொல்லா நெறியே குருவருள் நெறி' என்பன போன்ற பொதுவான பேருண்மைகளும் இதனுட் கூறப்பெறுகின்றன. அவன், அவள், அது (131-136, 945), பதி பசு, பாசம் (1045), எட்டும் இரண்டும்-அகர உகரம்-(257-1131), மூவகை வடிவம் (237), கரும, யோக, ஞான சித்திகளாகிய மூவகைச் சித்திகள் (239-246), அக, அகப்புற, புற, புறப்புற அமுதங்கள் (747-754), ஆறந்தங்கள் (33-44), ஏழுதிரைகள் (813-826) முதலியன இதனுள் சொல்லப்படுகின்றன. சாமாறு தவிர்த்து ஆமாறு அருளியதைச் சொல்லுமிடங்கள் பல. இதனுள் அருட்பெருஞ்ஜோதி யரை அடிகள் விளிக்கும் திருவண்ணம்-அருட்பெருஞ்ஜோதி, ஒன்றே, மெய்ப்பொருளே, பரமே, பதமே, சிவமே, சிவ பதியே, சற்குருவே, தாயே, தந்தையே, துணையே, நட்பே, உறவே, சத்தே, சித்தே, இன்பமே, அமுதே, மணியே, மந்திரமே, மருந்தே,

பொன்னே, நிதியே, மலையே, கடலே, காவே, நிழலே, காற்றே, நீரே, உணவே, பாலே, சுவையே, கனியே, தேனே, நெய்யே, மலரே, மணமே, இசையே, பாட்டே, கண்ணே, மணியே, அன்பே, விளக்கே, மதியே, மழையே, சுடரே, கனலே, அருட்பெருஞ்ஜோதி என்பனவாம்.

'தோலெலாம் குழைந்திட' என்பது முதல்' என் உளத்து ஓங்கிய என் தனி அன்பே' என்பது வரை (1449-1476) சொல்லப்பட்டுள்ள சித்தி யனுபவங்கள், திருவாசகம் திருவண்டப் பகுதியில் என்னையும் இருப்பதாக்கினன் (179) என்பதற்கு முன்னும் பின்னுமான அடிகளில் கூறப்பட்ட அனுபவத்தின் விரியாம்.

அருட்பெருஞ்ஜோதி என்று தொடங்கி அருட்பெருஞ்ஜோதி என்று முடியும் இவ்வகவலை ஒருவர் பொருளறியாது ஓதினாலும் அருட்பெருஞ்சோதி என்ற திருப்பெயரை ஓராயிரம் முறைக்கு மேல் ஓதிய (அருட்பெருஞ்சோதி அட்டோத்தர சகச்ராம அருச்சனை ஒன்று செய்த) புண்ணியம் உண்டாம். அகவலின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப் பல்லோரும் ஏத்தப் பணிந்து.

### சன்மார்க்கப் பிரார்த்தனை

### கல்பட்டு இராமலிங்க சுவாமிகளுக்காக அருளிச்செய்த விண்ணப்பம்

### 12-5-1872

அடிகளுக்கு ஆட்பட்ட அன்பர்களுள் கல்பட்டு இராமலிங்க சுவாமிகளும் ஒருவர் (பக்கம் 176 பார்க்க) பின்வரும் விண்ணப்பம் கல்பட்டு சுவாமிகளுக்காக அடிகள் செய்தருளியது ஆகும்.

ஸ்ரீ பார்வதிபுரம் என்னும் உத்தரஞான சிதம்பரத் திருப்பதிக் கண்ணே அகிலாதாரமாய் விளங்கும் ஸ்ரீ சமரச வேத சன்மார்க்க சங்கத்துப் பெருந்தலைப் பதியாக வீற்றிருந்தருளும் அருட்பெருஞ்ஜோதியராகிய எமது ஆண்டவனார் திருச்சந்நிதிக்கு யானெனும் போத நாச வந்தனஞ் செய்த விண்ணப்பம்.

எம்மிறையவரே!

இது பரியந்தம் யானாகத் தேடிய தோர் பொருளென்பதில்லையாகவே, தேவரீர் பெருங் கருணையால் என்னை உய்யக்கொள்ள உபகரித்தருளிய உடல் பொரு ளாவி என்னும் மூன்றையும் அறியாமையால் யான் எனது என்று கொண்ட தோர் சுதந்தரமானது துன்பவின்ப விளைவுக்கு ஆதாரமாய் இன்றைய வரையில் என்னைப் பற்றி இருந்த தொன்றை யான் பெரும் பொருளாக வெண்ணி நின்றனர். ஆதலால் அச் சமரச சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் சமுகத்து நிற்கப்பெற்ற விசேடத்தால் அத் தற் சுதந்தரப் பொருளைத் தேவரீர் பெருங்கருணைச் சந்நிதி முன்னே அர்ப்பித்தனன். இனி, தேவரீர் அதனை அருள் வசமாக்கி ஏழையாகிய என்னையும் என்னை யடுத்த சுற்றம் என்னோடு பழகிய நட்பின ராதியரையும் உய்யக் கொண்டருளுக.

ஆங்கிரசவருஷ இங்ஙனம்



RangaRakes tamilnavarasam.com

வைகாசிமீ முதல் உ                                                   அடிமை
மேட்டுக்குப்பம்                                                   க.இராமலிங்கம்.

## 1.சன்மார்க்க விண்ணப்பங்கள்

அடிகள் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடத்துச் செய்துகொண்ட உரைநடை விண்ணப்பங்கள் நான்கு நமக்குக் கிடைத்துள்ளன அவை:

1.சுத்த சன்மார்க்க சத்தியச் சிறுவிண்ணப்பம்

2.சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெருவிண்ணப்பம்

3.சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்

4.சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்.

என்பனவாம். சிறு விண்ணப்பம், பெரு விண்ணப்பம், ஞான விண்ணப்பம், சங்க விண்ணப்பம் என இவற்றின் பெயரைச் சுருங்கக் கூறலாம். இந்நான்கும் சத்திய ஞானசபையைக் குறித்து எழுந்தனவே. இவை செய்யப்பெற்ற காலம் 1872 ஆம் ஆண்டாகும். இனி இந்நான்கு விண்ணப்பங்களையும் ஒவ்வொன்றாகக் காண்போம்.

## 1.சுத்த சன்மார்க்க சத்தியச் சிறுவிண்ணப்பம்

**<u>திருச்சிற்றம்பலம்</u>**

இயற்கை யுண்மைய ரென்றும் இயற்கை யறிவின ரென்றும் இயற்கை யின்பின ரென்றும் நிற்குண ரென்றுஞ் சிற்குணரென்றும் நித்திய ரென்றுஞ் சத்திய ரென்றும் ஏக ரென்றும் அநேகரன்றும் ஆதிய ரென்றும் அனாதிய ரென்றும் அமலரென்றும் அருட்பெருஞ்ஜோதிய ரென்றும் அற்புத ரென்றும் நிரதிசயரென்றும் எல்லாமானவ ரென்றும் எல்லாமுடையவ ரென்றும் எல்லாம் வல்லவ ரென்றுங் குறிக்கப்படுதன் முதலிய அளவு கடந்த திருக்குறிப்புத் திருவார்த்தைகளாற் சுத்த சன்மார்க்க ஞானிகள் துதித்தும் நினைத்தும் உணர்ந்தும் புணர்ந்தும் அனுபவிக்க விளங்குகின்ற தனித்தலைமைப் பெரும் பதியாகிய பெருங் கருணைக் கடவுளே! தேவரீர் திருவருட் சமுகத்தில் துரும்பினுஞ் சிறியேமாகிய யாங்கள் சிற்றறிவாற் செய்துகொள்ளுஞ் சிறு விண்ணப்பங்களைத் திருச் செவிக் கேற்பித்தருளியெங்களை யிரக்ஷித்தருளல் வேண்டும்.

எல்லாச் சத்திகளும் எல்லாச் சத்தர்களும் எல்லாத் தலைவர்களும் அறிந்து கொள்ளுதற்கு மிகவு மரியதாய் எல்லாத் தத்துவங்களுக்கும் எல்லாத் தத்துவிகளுக்கும் அப்பா லப்பாலாய் விளங்கும் ஓர் சுத்த ஞான வெளியில் தமக்கு ஒரு விதத்தாலும் ஒப்புயர்வு சிறிதுங் குறிக்கப்படாத தனிப்பெருந் தலைமை யருட் பெருஞ்ஜோதியராகி விளங்குகின்ற தேவரீரது தனிப் பெருந்தன்மைக்கு மெய்யறிவுடையோரால் விதிக்கப்பட்ட வேதாகமங்களும் பெருந்தகை வாசகத்தைப்பெறாது சிறுகதை வாசகங்களைப் பெற்றுத் திகைப்படைகின்றன வென்றால், மலத்திற் புழுத்த புழுவினுஞ் சிறியே மாகிய யாங்கள் திருச் சமுகத்தில்



RangaRakes tamilnavarasam.com

விண்ணப்பித்தற் குரிய பெருந்தகை வாசகத்தை எவ்வா றறிவோம்! எங்ஙனஞ் செய்வோம்! ஆதலில் கருணாநிதி யாகிய கடவுளே! யாங்கள் விண்ணப்பிக்கின்ற அற்ப வாசகத்தில் உரிமை நோக்காது அங்கீகரித்தருளி யெங்களைக்காத்தருளல் வேண்டும்.

தாயினுஞ் சிறந்த தயவுடைக் கடவுளே! இயற்கையே அஞ்ஞான விருளில் அஞ்ஞான வுருவில் அஞ்ஞானிகளாய் அஞ்ஞானத்திற் பயின்று ஏதுந்தெரியாது கிடந்த எங்களைத் தேவரீர் பெருங் கருணையாற் பவுதிக வுடம்பிற் சிறிதறிவு தோற்றி விடுத்த அஞ்ஞான்றுதொட் டிஞ்ஞான்றுவரையும், அது கொண்டு அறிவே வடிவாய் அறிவே யுருவாய் அறிவே பொறியா யறிவே மனமா யறிவே யறிவா யறிவே யநுபவமா யனுபவிக்கத் தெரிந்து கொள்ளாது, குற்றமே வடிவாய்க் குற்றமே யுருவாய்க் குற்றமே பொறியாய்க் குற்றமே மனமாய்க் குற்றமே யறிவாய்க் குற்றமே யநுபவமாய் அநுபவிக்கின்ற சிறியேங்கள் திருச் சமுகத்தில் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பமும் குற்றமே வடிவாய்க் குற்றமே குறிக்கு மென் றறிந்தோ மாயினும், குற்றங் குறியாத வகை விண்ணப்பஞ் செய்தற்கு ஒருவாற்றானு முணர்ச்சியில்லோ மாதலிற் றுணிவு கொண்டு விண்ணப்பிக்கின்றோம். குற்றங்களையே குணங்களகாக் கொள்ளுதல் தேவரீர் திருவருட் பெருமைக் கியற்கை யாதலின் இவ்விண்ணப்பங்களிற் குற்றங்குறியாது கடைக்கணித்தருளிக் கருணை செய்தல் வேண்டும்.

அஞ்ஞான விருளில் ஒன்றுந் தெரியா துணர்ச்சி யின்றிக் கிடத காலம் போக அவ்விருளைவிட்டு நீங்கிய காலத்தே, இவ்வுலகினிடத்து புல் நெல் மரஞ் செடி பூடு முதலியவாகவும் கல் மலை குன்று முதலியவாகவும் பிறந்து பிறந்து களையுண்டல் வெட்டுண்டல் அறுப்புண்டல் கிள்ளுண்டல் உலர்ப்புண்டல் உடப்புண்டல் வெடிப்புண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அத்தாபரயோனி வர்க்கங்கௌல்லாஞ் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தோம்; பின்னர் எறும்பு செல் புழு பாம்பு உடும்பு பல்லி முதலியவாகவும் தவளை சிறு மீன் முதலை சுறா திமிங்கல முதலியவாகவும் பிறந்து பிறந்து தேய்ப்புண்டல் நசுக்குண்டல் அடியுண்டல் பிடியுண்டல் முதலிய பல வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அவ்வூர்வன நீர் வாழ்வன யோனி வர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தோம்; பின்னர் ஈ வண்டு தும்பி குருவி காக்கை பருந்து கழுகு முதலியவாகப் பிறந்து பிறந்து அடியுண்டல் பிடியுண்டல் அலைப்புண்டல் உலைபுண்டல் முதலிய பல வேறு அவத்தைகளால் இறந்திறந்து அப் பறவை யோனி வர்க்கங் ளெல்லாஞ் செனறு உழன்று றுழன்று அலுப்படைந்தோம்; பின்னர் அணில் குரங்கு நாய் பன்றி பூனை ஆடு மாடு யானை குதிரை புலி கரடி முதலியவாகப் பிறந்து பிறந்து பிடியுண்டல் அடியுண்டல் குத்துண்டல் வெட்டுண்டல் தாக்குண்டல் கட்டுண்டல் தட்டுண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளா லிறந் திறந்து அவ்விலங்கு யோனி வர்க்கங் ளெல்லாஞ் சென்று சென்று உழன் றுழன்று அலுப்படைந்தோம்; பின்னர் பசாசர் பூதர் இராக்கதர் அசுரர் சுரர் முதலியராகப் பிறந்து பிறந்து அலைபடுட்தல் அகப்படுதல் அகங்கரித்தல் அதிகரித்தல் மறந்து நிற்றல் நினைந்து நிற்றல் மயக்குறுதல் திகைப்புறுதல் போரிடுதல் கொலைபடுதல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அத் தேவ யோனி வர்க்கங்ளெல்லாஞ் சென்று சென்று உழன் றுழன்று அலுப்படைந்தோம்; பின்னர் காட்டகத்தர் கரவு செய்வார் கொலை செய்வார் முதலியராகப் பிறந்து பிறந்து பயப்படல் சிறைப்படல் சிதைபடல் முதலிய


RangaRakes tamilnavarasam.com

அவத்தைகளால் இறந்திறந்து அந்நரக யோனி வர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று உழன் றுழன்று அலுப்படைந்தோம்.

அங்ஙனம் யாங்கள் அபொ பிறவிகள் தோறும் அடைந்த அலுப்பும் அச்சமும் அவலமுங் களைப்புத் துன்பமுந் திருவுளத்தடைத்து இரங்கியருளி அழியாப் பெருவாழ்வை பெறுதற்குரிய வுயரறிவுடைய விம் மனித தேகத்திற் செலுத்தி யருளிய தேவரீரது பெருங்கருணைக்கு யாங்கள் செய்யுங் கைம்மாறு ஒன்றுந் தெரிந்தோமில்லை . உயிர்களின் அகத்தும் புறத்தும் அகப்புறத்தும் புறப்புறத்தும் நீக்கமின்றி நிறைந்து விளங்குகின்ற அருட்பெருஞ்சோதியா ண்டவரே!

இம் மனித தேகத்திற் செலுத்திய காலத்திலும் தாய் வயிற்றிலும் சிசுப் பருவத்திலும் குமாரப் பருவத்திலும் பல வேறு அவத்தைகளால் அறிவின்றி யிருந்தோமாகலில் தேவரீர் பெருங்கருணைத் திறத்தை யறிந்துகொள்ளாமல் வீண்போது கழித்தும். அப் பருவங்கழிய இப் பருவத்தினிடத்தே, எல்லா அண்டங்களையும் எல்லா வுலகங்களையும் எல்லா வுயிர்களையும் எல்லாப் பொருள்களையும் மற்றை யெல்லாவற்றையும் தோற்றுவித்தும் விளக்கஞ் செய்வித்தும் துரிசு நீக்குவித்தும் பக்குவம் வருவித்தும் பலன் றருவித்தும் எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக்கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மை யன்பாற் கருத்திற் கருதி வழிபாடு செய்யின் அக்கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்குமென்றும், அத்திருவருள் விளக்கத்தால் மரணம் பிணி மூப்பு பயம் துன்ப முதலிய அவத்தைக ளெல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வளவுந் தடைபடாத பேரின்ப சித்திப் பெரு வாழ்வை யடைதல் கூடுமென்றும், எங்கள் அறிவில் தேவரீர் திருவருளால் உண்மைப்பட வுணர்த்தியருளப் பெற்றோம். அவ்வுணர்ச்சியைப் பெற்றது தொடங்கிக் கடவுள் வழிபாடு எஞ்ஞான்று செய்வோம்? கடவுள் திருவருள் விளக்கம் எந்நாளடைவோம்? மரணம் பிணி மூப்பு முதலிய அவத்தைகள் எப்போது நீங்கும்? என்று மிழியாத பேரின்ப சித்தி எக்காலங் கிடைக்கும்? என்று எண்ணியெண்ணி வழி துறை தெரியாமல் வருந்தி நின்ற தருணத்தே :-

களைப்பறிந் துதவுங் கருணைக் கடவுளே! தேவரீர் 'நெடுங்கால மரண முதலாகிய அவத்தைகளாற் றுன்பமுற்றுக் களைப்படைந்த உங்களை அவ்வவத்தைகளி னின்றும் நீக்கிக் களைப்புங் கலக்கமுந் தவிர்த்து அழியாத பேரின்ப சித்தியை அடைவித்தற் பொருட்டாகவே பூர்வ ஞான சிதம்பரத்தின் வட பால் பார்வதிபுர மென்று குறிக்கப்படுகின்ற உத்தர ஞான சித்திபுரத்தில் யாம் அளவு கடந்த நெடுங்காலம் சித்தியெல்லாம் விளங்கத் திருவருள் நடஞ்செய்வோ 'மென்றும்' அது தருணம் மிகவும் அடுத்து சமீபித்த தருண'மென்றும்' அப்பதியினிடத்தே யாம் அருண்டம் புரிதற்கு அடையாளமாக ஓர் ஞான சபை காணுதல் வேண்டு'மென்றும் திருவருட் குறிப்பால் அறிவித்ததுமன்றி, அருளுருவாகி யெங்க ளகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாதோர் தடைகளு மின்றி அத் திரு ஞான சபையுந் தோன்றி விளங்கச் செய்வித் தருளிய தேவரீர் பெருங் கருணையைக் கருதுந்தோறும் பெருங் களிப்படைகின்றோம். இனி அத்திருஞான சபையை அலங்கரித்தல் வேண்டுமெனக் குறிப்பித்த வண்ணம் அலங்கரிக்கத் தொடங்குகின்றோம். அருட்பெருஞ்சோதி யாண்டவரே! தேவரீர் அருளுருவாகி யெங்கள் அகத்தும் புறத்தும் அமர்ந்தருளியாங்கள் செய்யும் இவ்வலங்காரத் திருப்பணியில் எவ்விதத்தாலும் யாதொரு தடையும் வாராதவண்ணஞ் செய்வித்து அவ்வலங்காரத் திருப்பணியை முற்றுவித்தருளல் வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

சர்வ வல்லபராகிய தனித் தலைமைக் கடவுளே! அத் திருவலங்காரத் திருப்பணி முற்றிய தருணத்தே தேவரீர் அமர்ந்தருளி அற்புதத் திருவருள் விளக்கத்தால் எங்களையும் இவ்வுலகில் இத்தேகத்தைப் பெற்ற மற்றவர்களையும் உண்மை யடியர்க ளாக்கி யுண்மை யறிவை விளக்கி யுண்மை யின்பத்தை அளித்துச் சமரச சுத்த சன்மார்க்க நிலையில் வைத்துச் சத்திய வாழ்வை யடைவித்து நித்தியர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும். எல்லாம் உடைய அருட்பெருஞ்ஜோதி யற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள் மதங்கள் மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் வருணம் ஆசிரம முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்திற் பற்றாதவண்ணம் அருள் செய்தல்வேண்டும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய ஆன்ம நேய ஒருமைப் பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளக்கச் செய்வித்தருளல் வேண்டும்.

எல்லா மாகிய தனிப் பெருந் தலைமை அருட்பெருஞ்ஜோதி யாண்டவரே! தேவரீர் திருவருட் பெருங் கருணைக்கு வந்தனம்! வந்தனம்!

**திருச்சிற்றம்பலம்**

சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம் முற்றிற்று.

## 2.சமரச சுத்த சன்மார்க்க சத்தியப்பெரு விண்ணப்பம்

திருச்சிற்றம்பலம்

இயற்கை யுண்மை நிறைவாகி யுள்ள ஓர் சுத்த சிவா நுபவ வெளியில், இயற்கை விளக்க நிறைவாகி விளங்கிய அருட்பெருஞ்சோதி சொரூபராய், இயற்கை யின்ப நிறைவாகி யோங்கிய சிவானந்த வொருமைத் திருநடச் செய்கையை எல்லா உயிர்களும் இன்பமடைதற் பொருட்டுத் திருவுளக் கருணையாற் செய்தருளுகின்ற சர்வ வல்லபராகிய தனித் தலைமைத் கடவுளே!

அறிவென்பது ஓர் சிறிதுந் தோற்றாத அஞ்ஞான மென்னும் பெரியபாசாந்தகாரத்தில் நெடுங் காலம் சிற்றணுப்பசுவாகி யருகிக் கிடந்த அடியேனுக்குள் உள்ளொளி யாகி யிருந்து அப் பாசாந்தகாரத்தி னின்றும் எடுத்து, எல்லாப் பிறப் புடம்புகளிலும் உயர்வுடைத்தாகிய ஆறறிவுள்ள இம் மனிதப் பிறப்புடம்பில் என்னை விடுத்துச் சிறிது அறிவு விளங்கச் செய்த தேவரீரது திருவருட் பெருங் கருணைத் திறத்தை எங்ஙன மறிவேன்! எவ்வாறு கருதுவேன்! என் னென்று சொல்வேன்!

எல்லாம் வல்ல இயற்கை யுண்மைக் கடவுளே! உபசாரத் தாற் பெற்ற தந்தை யென்பான் ஒருவனது சுக்கிலத் துளியின் கண் என்னை யோர் பகுதிப் பேரணு வுருவிற் பெருகி வெளிப்பட விருத்திய காலத்திலும், எனக்குள் உள்ளொளியாகி யிருந்து அப்பகுதிப் பேரணு வுருவைச் சிருட்டித் தருளினீர். அன்றிப் புறத்தில் யாவராலுஞ் சகிக்கப்படாத அதன் அருவருப்பையும்



RangaRakes tamilnavarasam.com

சஅசுத்தத்தையும் தீ நாற்றத்தையும் சகித்து, அச் சுக்கிலத் துளியி னிடத்து ஓர் ஆவியுருவாகி யிருந்து, அத் துளியின் கண் ணுள்ள பல் வகை விரோத தத்துவங்களாற் சிறிதுந் தடைபடாமல் என் னுருவையுங் காத்தருளினீர். அன்றி, அங்ஙனம் அரும்பிய ஆன்ம சத்திக் கலைகள் வெளிப்பட விளக்கி வளர்த்து மருளினீர்.

உபசாரத்தாற் பெற்ற தாயென்பாள் ஒருத்தியின் சோணிதத் திரளில் என் னுருவைச் சேர்க்கும் வரையில், அப்போது அப்போது என் னுருவைச் சிதைப்பதற்கு எதிரிட்ட துரிசுக ளெல்லாவற்றையு நிக்கிரகஞ் செய்தருளினீர். இங்ஙனம் புரிந்த தேவரீரது திருவருட் பெருங் கருணைத் திறாத்தை எங்ஙன மறிவேன்! எவ்வாறு கருதுவேன்! என்னென்று சொல்வேன்!

எல்லாம் உடைய இயற்கை விளக்கக் கடவுளே! தாய் கருப்பையிற் சோணிதத் திரளிற் சேர்த்து என்னை ஓர் பூதப் பேரணு உருவிற் பெருகி வெளிப்பட இருத்திய காலத்திலும், எனக்குள் உள்ளொளியாகி இருந்து அப் பூதப் பேரணு வுருவைச் சிருட்டித் தருளினீர். அன்றிப் புரத்தில் எவராலுஞ் சிறிதுஞ் சகிக்கப்படாத அத னசுத்தம் அருவருப்பு துற்கந்த முதலியவற்றைப் பொறுத்து அச் சோணிதத் திரளில் ஓர் ஆவி யுருவாகி யிருந்து, அத் திரளி னுள்ள பல்வகை விரோத தத்துவங்களால் சிறிதுந் தடைபடாமல் என்னுருவைக் காத்தருளினீர்.

அன்றியும், அவ்விடத் தெதிரிட்ட துரிசுக ளெல்லாவற்றையும் நிக்கிரகஞ் செய்தருளினீர். அன்றி, அங்ஙனம் பூத்த ஆன்ம சத்திக் காலைகள் வாட்டமடையாது வெளிப்பட்டு விளங்க வளர்த்தருளினீர்.

அன்றியும், தாய் கருப்பையினிடத்துப் பூதப் பேரணுவுருவிற்கிடந்த என்னை அக் கருப்பையிற் பவுதிக பிண்ட வடிவிலிருத்தும் வரையில், நச்சுக் கிருமி நச்சுக் காற்று நச்சுச் சுவாலை முதலிய வுற்பாத வகைகளால் எனது பூதப் பேரணுவுருச் சிதறி வேறுபடாமலுங் காத்தருளினீர். அன்றியும், தாய் கருப்பையிற் பவுதிக பிண்ட வடிவில் என்னை யிருத்திய காலத்திலும், எனது இச்சை ஞானக் கிரியைகளை வெளிப்படுத்துதல் முதலிய உபகரிப்பதிகரிப்புகளுக் குரிய உபயோக தத்துவ வுறுப்புக ளெல்லாவற்றையும் குறைவின்றி வகுத்தமைத்து வளர்த்துக் காத்தருளினீர்.

அன்றியும், அடியேன் தாய் கருப்பையிற் பிண்ட வடிவிற் கிடந்த காலத்து, இரும்பிற் பெரிதுங் கடினமுடையதாய் இருட்குகையிற் பெரிதும் இரு ளுடையதாய் மிகவுஞ் சிற்றள வுடையதாய் அசுத்த முதலிய வற்றால் நிரம்பிய அக் கருப்பையினுள் நெருக்கத்தாலும் வெப்பத்தாலும் புழுங்கிய புழுக்கத்தினால் வருந்தி வருந்திக் களைத்தபோதெல்லாம், அங்ஙனம் அமுதக் காற்றை அடிக்கடி மெல்லென வீசுவித்து, அவ் வருத்தமுங் களைப்புந் தவிர்த்துக் காத்தருளினீர்.

அன்றியும், தாய் கருப்பையிற் பிண்ட வடிவிற்கிடந்து பசியினாற் பரதவித்து மூர்ச்சித்தபோ தெல்லாம், பூதகாரிய அமுதத்தை எனக்கு ஊட்டுவித்துப் பசியை நீக்கி மூர்ச்சை தெளிவித் தருளினீர். அன்றியும் தாய் கருப்பையிற் பிண்டவடிவிற் கிடந்து பேய் வெருட்டாலும் பேரிருட்டாலும் பயந்தபோதெல்லாம், நாதவொலியாற் பேய் வெருட்டையும் விந்து விளக்கத்தாற் பேரிருட்டையுந் தவிர்த்து, என் பயத்தை நீக்கி யருளினீர். அன்றி, தாய் கருப்பையின் கண் நேரிட்ட பெருந் தீ பெருங் காற்று பேரோசசி பெரு வெள்ளம் பெரும் புழு முதலிய உற்பாத துரிசுகள்

அனைத்தையுந் தவிர்த்துக் காத்து, அப்பிண்ட வடிவில் எனக்கு ஓரறிவையும் விளக்கி யருளினீர்.

அன்றியும், உலகினிடத்தே பிறந்து அனுபவிப்பதற் குரிய சுப வனுபவப் பெருக்கம் ஆயுட் பெருக்கம் முதலிய நன்மைகளையும் எனக்கு அப் பிண்ட வடிவின் கண்ணே அமைத் தருளினீர்.

அன்றியும், சோணிதக் காற்றின் அடிபடல் யோனிநெருக்குண்ணல் முதலிய அவத்தைகளால் அபாயம் நேரிடவொட்டாமற் காத்து இவ் வுலகினிடத்தே தோற்றுவித் தருளினீர். இங்ஙனம் புரிந்த தேவரீரது திருவருட் பெருங் கருணைத் திறத்தை எங்ஙன மறிவேன்! எவ்வாறு கருதுவேன்! என்னென்று துதிப்பேன்!

எல்லா மாகிய இயற்கை யின்பக் கடவுளே! தந்தை யென்பவனது சுக்கிலப் பையின்கண் யான் வந்தமைந்த கணப்பொது தொடங்கி தாயென்பவளது சோணிதப் பையின்கண் சென்றடைந்த கணப்போதிற்கு முன் கணப்போது வரையுமாக, என்னாலொருவாறு அளவிடப்பட்ட ஒரு கோடி ஒன்பது லக்ஷத் தறுபதி னாயிரங் கணப்போது பரியந்தம் எவ்வகைத் தடைகளும் வாராதபடி, பகுதிப் பேரணு வுருவிற் கிடந்த எனது அகத்தினும் புறத்தினும் அருவாகியும் உருவாகியும் சலித்தன் முதலியன்றி அன்போடும் அருளொடும் பாதுகாத் திருந்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் தன்மைக்கு இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப்போது பாதுகாத்தலிற் சலிப்படைந்தும் தளர்ச்சியடைந்தும் அருவருப்புற்றும் சுதந்தரமற்றும் பராக்கிலிருந்துந் தடைபடுகின்ற தந்தை முதலிய ஜீவர்கள் கருணைத் தன்மையை ஒப்பென்று சொல்வதற்கு எவ்விதத்தினுஞ் சிறிதாயினும் மனந்துணியாமையால், அங்ஙனம் உபசரியாதவனாகி யிருக்கின்றேன். ஆகலில் தேவரீரது திருவருட் பெருங் கருணையை யென்னென்று கருதுவேன்! என்னென்று துதிப்பேன்!

அருட்பெருஞ்ஜோதித் தனித் தலைமைக் கடவுளே! தாயென்பவளது சோணிதப் பையின்கன் யான் வந்தமைந்த கணப் போது தொடங்கி இவ்வுலகிற் றோன்றிய கணப்போதிற்கு முன் கணப்போது வரையுமாக, என்னா லொருவாறு அளவிடப்பட்ட ஆறுகோடி நாற்பத்தெட்டு லக்ஷங் கணப்போது பரியந்தம், எவ்வகைத் தடைகளும் எவ்வகை ஆபத்துகளும் வாராதபடி, பூதப் பேரணு வுருவிலும் பிண்டப் பெருவடிவிலும் கிடந்த என தகத்தினும் புறத்தினும் அருவாகியும் உருவாகியும் சலித்தன் முதலிய வின்றிப் பெருந் தயவினோடு பாதுகாத்திருந்த தேவரீரது திருவருட் பெருங் கருணைத் தன்மைக்கு இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப்போது பாதுகாத்தலிற் சலித்தும் தளர்ந்தும் அருவருத்தும் பரதந்திரித்தும் பராக்கடைந்தும் தடைபடுகின்ற தாய் முதலிய ஜீவர் கருணைத் தன்மையை ஒப்பென்று சொல்வதற்கு எவ்வகையினும் எத்துணையும் மனந் துணியாமையால், அங்ஙனம் உபசரியாதவனாகியிருக்கின்றேன். ஆகலில் தேவரீரது திருவருட் பெருங்கருணையை என்னென்று கருதுவேன்! எங்ஙனந் துதிப்பேன்!

யாவராலும் பிரித்தற் கொருவாற்றானுங்கூடாத பாசமென்னு மகாந்தகாரத்தில் யானது வென்னும் பேதந் தோன்றாது அருகிக் கலந்து அளவிறந்த காலம் முன்பின் னென்ப தின்றி மூர்ச்சித்துக்கிடந்த என்னை அம் மகாந்தகாரத்தி னின்றும் ஓர் கணப்பொழுதினுள் அதிகாரணக் கிரியையால் அதிகாரணப் பகுதி யுருவிற் பிரித்தெடுத் தருளிய தேவரீரது திருவருட் பேராற்றலை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!



RangaRakes tamilnavarasam.com

சத்திய ஞானாநந்தத் தனித் தலைமைக் கடவுளே! காரணக் கிரியையாற் காரணப் பகுதி யுருவினும் அதி சூக்குமக் கிரியையால் அதிசூக்குமப் பகுதி யுருவினும் சூக்குமக் கிரியையாற் சூக்குமப் பகுதி யுருவினும் பரத்துவ சத்திசத்தரால் பூதவுருவினும் அபரத்துவ சத்திசத்தரால் பவுதிக வடிவினும் ஓர் கணப்போதினுள் என்னைச் செலுத்தாமற் செலுத்திய தேவரீரது திருவருட் பேராற்றாலை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

அகண்ட பூரணாநந்த ராகிய அருட்பெருஞ்ஜோதிக் கடவுளே! ஜீவனை ஆதரிப்பிக்கும் பூதப் பிருதிவித் தோற்றமும் ஜீவனை விருத்தி செய்விக்கும் பூத நீர்த் தோற்றமும் ஜீவனை விளக்கஞ் செய்விக்கும் பூ தாக்கினித் தோற்றமும் ஜீவனை யதி கரிப்பிக்கும் பூத வாயுத் தோற்றமும் ஜீவனை வியாபகஞ் செய்விக்கும் பூத வெளித் தோற்றமும் உபப் பிருதிவிப உப நீர் உபாக்கினி உப வாயு முதலிய தோற்றங்களும் அவைகளிருக்கு மிடங்களும் தொழிலிட முதலிய விடங்களும், ஒலியறிவு உருவறிவு சுவையறிவு நாற்றவறிவு பரிசவறிவு என்னும் ஐவகைக் குண மெய்யென்னு முள்ளிடப்பொறிகளும் அவைகள் உத்தியோகத்தற் குரிய வெளியிடப்பொறிகளும், வசனித் தறிதல் நடந்தறிதல் கொடுத்தெடுத்தறிதல் மலம் விடுத்தறிதல் சலம் விடுத்தறிதல் என்னும் ஐவகைத் தொழிலறிவுகளும் அவைக ளிருத்தற் குரிய வாக்கு பாதம் கை நீர் வாயில் அபானவாயில் என்னும் கரும உள்ளிடப் பொறிகளும் அவைகள் தொழிற்படற் குரிய கருமப் புறவிடப் பொறிகளும், நினைத்தல் விசாரித்தல் நிச்சயித்தல் அகங்கரித்தல் என்னும் சூக்குமக் கரணத்தொழில்களும் அவைகளை இயற்றும் மனம் புத்தி சித்தம் அகங்கார மென்னும் சூக்கும கரணங்களும் அவைகளை யியற்றுவிக்கும் அதிசூக்கும கரணங்களும், அக் கரணங்களின் உபகரணங்களாகிப் பலபல பேதப்பட்டு விரிந்தசத்துவம் ராஜதம் தாமச முதலிய குணங்களும் அவைக ளிருத்தற்கும் உத்தியோகித் தற்கும் இடங்களும், பருவஞ் செய்தல் தகுதி செய்தல் இச்சை செய்தல் தெரிவு செய்தல் அதிகாரஞ் செய்தல் காரணஞ் செய்தல் காரியஞ் செய்தல் முதலிய இடைப் பாட்டுத் தொழில்களும் அவைகளை யியற்றும்பொழுது இயைபு இச்சை அறிவு முதலிய கருவிகளும் அக்கருவிகளுக் குரிய இடங்களும் அவைக ளுத்தி யோகித்தற் குரிய இடங்களும், துரிசு நீக்குவித்தல் சுகம் விழைவித்தல் தூய்மைசெய்வித்தல் இன்பமடைதற்கு வழியா யிருத்தல் துணையாயிருத்தல் முதலிய பரத்துவத் தொழில்களும் அவைகளை இயற்றுதற்குரிய தத்துவங்களும் அவைக ளிருத்தற் குரிய இடங்களும் பிரேரித்தற் குரிய இடங்களும், அறிதல் அறிவித்தல் அனுபவித்தல் அனுபவிப்பித்தல் முதலிய முக்கியத்தொழில்களும் அவைகளை இயற்றுகின்ற சத்திசத்தர்களும் அவர்க ளிருத்தற் குரிய இடங்களும் அவர்கள் அதிகரித்தற் குரிய இடங்களும் வாத விருத்தி பித்த விருத்தி சிலேட்டும விருத்திகளும் அவைகளிருக்குமிடங்களும் உத்தியோகிக்கு மிடங்களும், சூரியசத்தி சந்திரசத்தி அக்கினிசத்தி தாரகைசத்தி பிரமசத்தி மாயாசத்தி ருத்திரசத்தி அக்கினிசத்தி தாரகைசத்தி பிரமசத்தி மாயாசத்தி ருத்திரசத்தி முதலிய சத்திகளும் அவர்களிருத்தற்கும் அதிகரித்தற்கும் உரிய இடங்களும் அச் சத்திகளை நடத்துஞ் சத்தர்களும் அவர்களிருத்தற்கும் அதிகரித்தற்கும் உரிய இடங்களும், நனவு கனவு சுழுத்தி முதலிய அவத்தைகளும் அவைக ளிருத்தற் குரிய இடங்களும் இங்ஙனம் இன்னும் பற்பல அக வுறுப்புகளும் அகப்புற வுறுப்புகளும்; மீத்தோல் புடைத்தோல் வந்தோல் மென்தோல் முதலிய தோல்வகைகளும், வெண்ணரம்பு செந்நரம்பு பசுநரம்பு சிறுநரம்பு பெருநரம்பு முதலிய நரம்பின் வகைகளும், பேரென்பு சிற்றென்பு நீட்டென்பு முடக்கென்பு



RangaRakes tamilnavarasam.com

முதலிய என்பின் வகைகளும், நல்லிரத்தம், புல்லிரத்தம் கலவை யிரத்தம் கபிலையிரத்த முதலிய இரத்த வகைகளும், மெல்லிறைச்சி கல்லிறைச்சி மண்ணிறைச்சி நீரிறைச்சி முதலிய இறைச்சி வகைகளும், மேனிலைச் சுக்கிலம் கீழ்நிலைச் சுக்கில முதலிய சுக்கில வகைகளும், ஓங்கார மூளை ஆங்கார மூளை முதலிய மூளை வகைகளும், தலையமுதம் இடையமுத முதலிய அமுத வகைகளும், வெண்மை செம்மை பசுமை கருமை பொன்மை என்னும் வண்ண வகைகளும் வெண்மையிற் செம்மை வெண்மையிற் பசுமை வெண்மையிற் கருமை வெண்மையிற் பொன்மை செம்மையின் வெண்மை செம்மையிற் பசுமை செம்மையிற் கருமை செம்மையிற் பொன்மை பசுமையின் வெண்மை பசுமையிற் செம்மை பசுமையிற் பொன்மை பசுமையிற் கருமை கருமையின் வெண்மை கருமையிற் செம்மை கருமையிற் பசுமை கருமையிற் பொன்மை பொன்மையின் வெண்மை பொன்மையிற் செம்மை பொன்மையிற் பசுமை பொன்மையிற் கருமை என்னும் வண்ண பேத வகைகளும், இவைகள் இவைகள் இருத்தற் குரிய இடங்களும் செயல் வகைகளும்பயன் வகைகளும், இங்ஙன மின்னும் பற்பல புறவுறுப்புகளும் புறப்புற வுறுப்புகளும் எனக்கு உபகரிக்கும் பொருட்டு இப் பவுதிக வடிவின்கண் ஒருங்கே உண்ணின்று தோன்ற உண்ணின்று தோற்றாது தோற்றுவித்து தேவரீரது திருவருட் பேராற்றலை எங்ஙன மறிந்து எவ்வாறு கருதி என்னென்று துதிப்பேன்!

சுத்த சன்மார்க்க லக்ஷிய சத்திய ஞானக் கடவுளே! ஜீவர்களாற் கணித்தறியப்படாத பெரிய உலகின் கண்ணே, பேராசை பெருங்கோபம் பெருமோகம் பெருமதம் பெருலோபம் பேரழுக்காறு பேரகங்காரம் பெருவயிரம் பெருமடம் பெருமயக்கம் முதலிய பெருங் குற்றங்களே பெரும்பாலும் விளைவதற் குரிமையாகிய மற்றை யிடங்களிற் பிறப்பியாமல் குணங்களே பெரும்பாலும் விளைதற்குரிய இவ்விடத்தே,{77} உறுப்பிற் குறைவுபடாத உயர் பிறப்பாகிய இம் மனிதப் பிறப்பில் என்னைப் பிறப்பித்தருளிய தேவரீரது பேரருட் பெருங் கருணைத் திறத்தை யென்னென்று கருதி யென்னென்று துதிப்பேன்!

{77. இவ்விடத்தே-தமிழகத்தே}

அருட் பெரு வெளியின் கண்ணே அருட்பெருஞ் ஜோதி வடிவராகி விகற்ப மில்லாது விளங்குகின்ற மெய்ப்பொருட் கடவுளே! சிசுப் பருவந் தொடங்கிக் குமாரப் பருவம் வரையில் பேய் வெருட்டல் தோஷந் தாங்கல் பாலெதிரெடுத்தல் சவலைக் குருந்தாதல் நோய்ப் பிணிப்புண்டல் பசியா லரற்றல் பயத்தாலுலம்புதல் உண்டி யுவட்டல் உடம்பொடு நேர்தல் முதலிய எவ்வகைத் தடைகளாலுந் தடைபடாமல், எனதகத்தும் புறத்தும் காத்திருந்து வளர்த்தருளிய தேவரீரது பேரருட் பெருங் கருணைத் திறத்தை என்னென்று கருதி யென்னென்று துதிப்பேன்!

அறிவா ரறியும் வண்ணங்க ளெல்லா முடைய பேரருட் பெருஞ்ஜோதிப் பெருந்தகைக் கடவுளே! குமாரப் பருவத்திற்றானே உலகிற் சிறுவர்களுடன் கூடிச் சிறு விளையாட் டியற்றல் சிற்றுண்டி விழைதல் சித்திரம் பயிறல் அதிசயம் பார்த்தல் அசங்கியம் பேசல் அவலித் தழுதல் சிறுசண்டை செய்தல் சிறு குறும்பியற்றல் தன்வசத் துழலல் தாய்வயிற் சலித்தல் முதலிய குற்றங்களில் என்னைச் சிறிதுஞ் செலுத்தாமல், ஓர் சிறிது அறிவு விளங்கப் புரிந்து இடந் தனித் திருத்தல் இச்சையின்றி நுகர்தல் ஜெபதபஞ் செய்தல் தெய்வம் பராவல் பிறவுயிர்க்கிரங்கல் பெருங்குணம் பற்றல் பாடிப் பணிதல் பத்திசெய் திருத்தல் முதலிய நற்



RangaRakes tamilnavarasam.com

செய்கைகளில் என்னைச் செலுத்திய தேவரீரது பேரருட் பெருங் கருணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

எல்லா மானவராயும் ஒன்று மல்லாதவராயும் எல்லா அண்ட சராசரங்களின் அகத்தும் புறத்து நிறைந்து விளங்குகின்ற தனித் தலைமைக் கடவுளே! குமாரப் பருவத்தில் என்னைக் கல்வியிற் பயிற்றும் ஆசிரியரை யின்றியே என்றரத்திற் பயின் றறிதற் கருமை யாகிப் கல்விப் பயிற்சியை என துள்ளகத்தே யிருந்து பயிற்றுவித் தருளினீர்.

இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் போதுபோக்கையும் உண்டுபண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற்கு மறிதற்கும் மிகவு மிலேசுடையதாய்ப் பாடுதற்கும் துதித்தற்கு மிகவு மினிமையுடையதாய் சாகாக் கல்வியை இலேசிலறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தேன்மொழி யொன்றனிடத்தே மனம்பற்றச் செய்து அத் தென்மொழிகளாற் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித் தருளினீர்.

அச் சிறு பருவத்திற்றானே ஜாதி யாசாரம் ஆசிரம ஆசாரம் என்னும் பொய்யுல காசாரத்தைப் பொய் யென் றறிவித்து அவைகளை யநுட்டியாமற் றடை செய்வித்து, அப்பருவம் ஏறுந்தோறும் ஏறுந்தோறும் எனதறிவை விளக்கஞ்செய்து செய்து என்னை மேனிலையில் ஏற்றி ஏற்றி நிலைக்க வைத்தருளினீர்.

வாலிபப் பருவம் அடுக்குத் தருணத்திற்றானே, அப் பருவத்திற்கு மிகவும் உரிய விடய இச்சைகளைச் சிறிதுந் தலையெடுக்கவொட்டாது அடக்குவித் தருளினீர்.

அவ் வாலிபப் பருவந் தோன்றுதற்கு முன்னரே, எல்லா உயிர்கட்கும் இன்பந் தருவதற்கு அகத்தும் புறத்தும் விளங்குகின்ற அருட்பெருஞ் ஜோதி யுண்மைக் கடவுள் ஒருவரே யுள்ளார் என் றறிகின்ற மெய் யறிவை விளக்குவித் தருளினீர். வாலிபப் பருவந் தோன்றிய போதே, சைவம் வைணவம் சமணம் பவுத்த முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும் அச் சமயங்களிற் குறித்த சாதனங்களும் தெய்வங்களும் கதிகளும் தத்துவ சித்தி விகற்பங்க ளென்றும், அவ்வச் சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள் ஆகமங்கள் புராணங்கள் சாத்திரங்கள் முதலிய கலைகளெல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக் கலைகளென்றும், உள்ளபடியே எனக் கறிவித்து அச்சமயாசாரங்களைச் சிறிதும் அனுட்டியாமற் றடைசெய்வித் தருளினீர். அன்றியும் வேதாந்தம் சித்தாந்தம் போதாந்தம் நாதாந்தம் யோகாந்தம் கலாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த மதங்களும் மார்க்கங்களும் சுத்த சன்மார்க் கானுபவ லேச சித்தி பேதங்க ளென்றறிவித்து, அவைகளையும் அனுட்டியாதபடி தடை செய்வித் தருளினீர்.

அங்ஙனஞ் செய்வித்ததுமன்றி, உலகியற்கண் பொன் விஷய விச்சை பெண் விஷய விச்சை மண் விஷய விச்சை முதலிய எவ்விஷய இச்சைகளிலும் என் னறிவை யோரணுத் துணையும் பற்றுவிக்காமல், எல்லா வுயிர்களையும் பொதுமையி னோக்கி யெல்லா வுயிர்களும் இன்பமடைதல் வேண்டுமென்னுங் கருணை நன் முயற்சியைப் பெறுவித்துச் சுத்த சன்மார்க்கத் தனிநெறி யொன்றையே பற்றுவித்து

எக்காலத்தும் நாச மடையாத சுத்த தேகம் பிரணவதேகம் ஞானதேகம் என்னுஞ் சாகாக் கலாநுபவ தேகங்களும் தன் சுதந்தரத்தால் தத்துவங் களெல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப் பெரு வல்லபமும் கடவு ளொருவரே யென்றறிகின்ற வுண்மை ஞானமும் கருமசித்தி யோகசித்தி ஞானசித்தி முதலிய எல்லாச் சித்திகளும் பெறுகின்ற அருட்பெரும் பெற்று வாழ்கின்ற பேரின்பப் பெரு வாழ்வில் என்னை அடைவிப்பதற்குத் திருவுளங் கொண்டு, அருட் பெருஞ் ஜோதியராகி, நான் எவ்விதத்தும் அறிதற்கு அரிய உண்மைப் பேரறிவை யறிவித்தும், நான் எவ்விதத்தும் காண்பதற்கு அரிய உண்மைப் பெருங் காட்சிகளைக் காட்டுவித்தும், நான் எவ்விதத்தும் செய்தற்கு அரிய உண்மைப் பெருஞ் செயல்களைச் செய்வித்தும் நான் எவ்விதத்தும் அடைதற்கு அரிய உண்மைப் பெருநன்மைகளை அடைவித்தும், நான் எவ்விதத்தும் அநுபவித்தற்கு அரிய உண்மைப் பேரனுபவங்களை அநுபவிப்பித்தும், எனது அகத்தினும் புறத்தினும் இடைவிடாது காத்தருளி யெனது உள்ளத்திருந்து உயிரிற் கலந்து பெருந்தயவாற் றிருநடஞ் செய்தருளுகின்றீர்.

இங்ஙனஞ் செய்தருள்கின்ற தேவரீரது திருவருட் பெருங் கருணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

திருச்சிற்றம்பலம்

சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம் முற்றிற்று.

## 3.சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்

**திருச்சிற்றம்பலம்**

இயற்கை விளக்கம் என்கின்ற சத்திய ஞான சபைக் கண்ணே இயற்கை உண்மை என்கின்ற சத்தியத் திரு வுருவினராய் இயற்கை இன்ப மென்கின்ற சத்தியத் திருநடஞ் செய்தருள் கின்ற இயற்கைத் தனிப் பெருங் கருணைத் தனிப் பெரும்பதியாய தனித் தலைமைக் கடவுளே!

தேவரீர் திருவருட் சமூகத்தை யடைந்த உண்மை ஞானிகளின் சித்தி வல்லப தரத்தை வகுத்தறிந்து வாழ்த்துதுமென்று அளவிகந்த முகங்களைக் கொண்டு அளவுகடந்த நெடுங்காலம் தத்தம் அளவைகளால் தனித்தனி யளந்தளந்தும் ஒருமித் தளந்தளந்தும் ஒரு வாற்றினு முடிவு தோற்றாமையின் வேதாக மங்களனைத்தும் ஆங்காங்கு கோடித் ததிசயிக்கின்றன வென்றும், அண்டசராசரங்க ளெல்லாவற்றையும் படைத்தல் காத்தல் துரிசு நீக்கல் முதலிய தொழில்களால் நிகழ்த்துகின்ற அதிகாரத் தலைவர்களும் எவ்வகைத் தத்துவங்களையும் காரண காரியதிறாத்தால் நடத்துகின்ற சத்தி சத்தர்களும் உணர்ந் துணர்ந்தும் உணர்ச்சி செல்லாமையின் முயற்சி பற்றாது மயங்குகின்றன ரென்றும், பேரறிவாற் சிறந்த பெரியவர்களெல்லாம் வியந்து வியந்து விளம்புகின்றனர். அதனால் திருவருட் சமூகத்தையடைந்த உண்மை ஞானிகளின் சித்தி வல்லப தரத்தை ஒருவராலும் ஒருவாற்றானும் உணர்ந்து கொள்ளுதல் கூடாவென்று ஐயுறவின்றி அறிந்துகொண்டேன். இங்ஙனம் அறிந்துகொண்ட சிறியேன் அவ்வுண்மை ஞானிகளுக்குச் சித்தி வல்லப தரத்தைக் கொடுத்தருளிய திருவருட் சமுகத்தி வியற்கையுண்மை விளக்கத்தரத்தை எங்ஙனம் அறியத் தொடங்குவேன்!



RangaRakes tamilnavarasam.com

மலத்திற் புழுத்த புழுவினுஞ் சிறியேன் பொய்யறிவாற் புனைந்துரைத்த பொய்யுரைகளையும் மெய்யுரைகளாகக் கருணையினாற் கடைக்கணித் தருளிய அருட்பெருஞ்சோதி ஆண்டவரே! தேவரீரது திருவருட் சமூகத்தின் இயற்கைப் பெருங் கருணைப் பெருந் தன்மையைக் கருதுதற்கு விரும்பிய ஐந்தொழிற் கருத்தர் முதலியோர் தூய்மையுடைமை அன்புடைமை முதலிய சுப குணங்கலைக் கருதுதற் கருவியாய தமது கரணங்கள் முற்றப்பெற்றிலவென்று கருதுதலின்றி எண்ணி எண்ணி இரங்குகின்றான ரென்று அறிவுடையோர் வியந் துரைத்தலைப் பலகாற் பயின்று கேட்டறிந்தேன். இங்ஙனங் கேட்டறிந் சிறியரிற் சிறியேன் அத் திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங் கருணைப் பெருந் தன்மையைக் காமம் வெகுளி முதலிய அவகுணங்கட் கெல்லாம் வைப்பிடமாகிய பராய் முருட்டன்ன கருங்கற் கரணத்தால் எங்ஙனங் கருதத் தொடங்குவேன்!

நாயிற் கடையேன் செய்த குற்றங்களை யெல்லாம் குணங்களாகக்கொண்டு என்னுள் ளகத்தே யமர்ந்து உயிரிற் கலந்த பெருங்கருணைப் பெருமானே! தேவரீரது திருவருட்ப் சமுகத்தின் இயற்கைப் பெருங் குணப்பெரும் புகழைத் துதித்தற்கு விரும்பிய மூர்த்திகண் முதலியோர் துதித்தற் கருவியாய தத்தஞ் செந்நாவுறுப்புகள் வாய்மை கூறல் இன்சொற் புகறல் முதலிய ஒழுக்கங்களிற் சான்றிலவென்று துதித்த லின்றி அச்சுற்று நிற்கின்றனரென்று அறிஞருண்மை வாசகத்தா லறிந்தேன். இங்ஙனமறிந்த கடையேன் பொய் யுரைத்தல் பயனில கூறன் முதலிய தீமைக்கட் பயின்று தடித்த எனது அசுத்த நாவினால் தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங்குணப் பெரும் புகழை எங்ஙனந் துதிக்கத் தொடங்குவேன்!

அண்டபிண்ட முதலிய எல்லாவற்றிற்கும் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெரும் பதியாய பூரணரே! தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கை யுண்மைத் தரத்தை யறிதல் வேண்டுமென்றும், இயற்கைப் பெருங்கருணைப் பெருந்தன்மையைக் கருதுதல் வேண்டுமென்றும், இயற்கைப் பெருங் குணப் பெரும் புகழைத் துதித்தல் வேண்டு மென்றும், என துள்ளகத்தே ஓவா துறைந் தூற்றெழுந்து விரைந்து விரைந்து மேன்மேற் பெருகுகின்ற பேராசைப் பெருவெள்ளம் அணைகடந்து செல்கின்ற தாகலின் அறிவாரறிகின்ற வண்ணங்களும் கருதுவார் கருதுகின்ற வண்ணங்களும் துதிப்பார் துதிக்கின்ற வண்ணங்களும் ஆகிய எல்லா வண்ணங்களையு முடையவர் அருட்பெருஞ் ஜோதித் தனிப்பெருங்கடவுள் என்ற சத்திய ஞானிகளது உண்மை வாசகத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு, தன்மை சாலாத்தமியேன் அறிதற்கும் கருதுதற்கும் துதித்தற்குந் தொடங்கினேன்.

இங்ஙனந் தொடங்குதற்கு முன்னர், எனதறிவிற்கும் கருத்திற்கும் நாவிற்கும் இயல்வனவாகத் தோற்றிய வண்ணங்களுல் ஒன்றேனும், ஈண்டு இயற்படத் தோன்றாமையின், அருட்பெருஞ்சோதித் தனிப்பெருங் கடவுளே! தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கை வண்ணங்கள், எத்தன்மையவோ!எத்தன்மையவோ! வென்று உணர்ந் துணர்ந்து கருதிக் கருதி யுரைத் துரைத்து அதிசயிக்கின்றவ னானேன்.

இயற்கை யுண்மைத் தனிப்பெரும் பொருளாயும் இயற்கை விளக்கத் தனிப்பெரும் பதமாயும் இயற்கை யின்பத் தனிப்பெருஞ் சுகமாயும் பிரிவின்றி நிறைந்த பெருந் தன்மையராய அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருள் வலத்தால் பொறி புலன் கரண முதலிய தத்துவங்க ளனைத்தையும்

வென்று நின்மலராகித் தத்துவாந்தத்தில் நின்று தம்முண்மையுணர்ந்து இயற்கை யுணர்ச்சியைப் பெற்று இயற்கை யுண்மைக் கண் இயற்கை யின்பாநுபவஞ் செய்கின்ற சுத்த யோகாந்தர்களும் சுத்த கலாந்தர்களும் சுத்த போதாந்தர்களும் சுத்த நாதாந்தர்களும் சுத்த வேதாந்தர்களும் சுத்த சித்தாந்தர்களுமாகிய சுத்த சன்மார்க்க ஞானிகளின் திருக்கூட்டங்களை நன் முயற்சியாற் றனித்தனி யடைந்து பத்தியாற் பணிந்து ' அற்புதப் பெருஞ் செயல் புரிகின்ற ஐயர்களே! அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெரும் பதியாய கடவுளின் இயற்கைத் திருவருட்சமூகம் ம்ருந்த வண்ணம் உள்ளம் உவந்துரைத் தருளல் வேண்டும் என்று விண்ணப்பிக்கின்ற தோறும்,! 'எல்லாப் பொருள்கட்கும் எல்லாக் குணங்கட்கும் எல்லாச் செயல்கட்கும் எல்லாப் பயன்கட்கும் எல்லா வநுபவங்கட்கும் மற்றெல்லாவற்றிற்கும் உருவ சொரூப சுபாவ முதலிய இலக்கணங்கள் அனைத்தும் தாமே யாகியும் தாமல்லராகியும் தாக்கியுந் தாக்கற்றும் அகத்தும் அகப்புறத்தும் புறத்தும் புறப் புறத்தும் நீக்கமின்றி நிறைந்து விளங்குகின்ற இயற்கை உண்மைக் கடவுளது இயற்கைத் திருவருட் சமூக மிருந்த வண்ணம் அந்தோ!அந்தோ!! எங்ஙனமறிவோம்! என்று அவ்வக் கூட்டங்களிலுந் தனித்தனித் உரைத் துரைத்து நெகிழ்ந்து நெகிழ்ந்து நெட்டுயிர்க்கின்றார்க ளென்றும்; எல்லாத் தத்துவங்களையும் எல்லாத் தத்துவிகளையும் தோற்றுவித்தாலும் இயக்குவித்தலும் அடக்குவித்தலும் மயக்குவித்தலும் தெளிவித்தலு மாகிய தொழில்களை எளிதிற் கொடுத்தற்குரிய பூரண சுதந்தரத் தவர்களாய், இயற்கைச் சத்திய ஞான சுகானுபவ பூரண சொரூப சாத்தியர்களாய், எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் தடைபடாத நித்திய சுத்த சத்த ஞானதேகிகளாய், பூதசித்தி கரணசித்தி இந்திரியசுத்தி குணசித்தி பிரகிருதிசித்தி புருடசித்தி விந்துசித்தி பரசித்தி சுத்தசித்தி காலசித்தி கலாசித்தி விசுவசித்தி வியோமசித்தி பிரமசித்தி சிவசித்தி முதலிய பிண்ட சித்தி அண்டசித்தி பகிரண்டசித்தி அண்டாண்டசித்தி என்கின்ற அந்தரஙக ப்கிரங்க தத்துவ தத்துவி சித்திகளெல்லாவற்றையும் திருக்கடைக் கணிப்பாற் செயா வல்லவராய். சடாந்த சமரச் சத்தியராய் விளங்குகின்ற சமரச சுத்த சன்மார்க்க ஞானிகளது சித்விலாசத் திருச்சபைக்கண்ணே. புண்ணிய வசத்தாற் புகுதப் பெற்று மனங்கனிந்து வணங்கி நின்று, 'சர்வ சுதந்தரராய சத்தியர்களே! இயற்கை யுண்மைத் தனிப்பெரும் பதியாய கடவுளின் இயற்கைத் திருவருட் சமூக மிருந்த வண்ணம் திருவுளம் பற்றித் திருவாய் மலர்ந்து திருவார்த்தையருளி தருளல் வேண்டும்' என்று விண்ணப்பிக்கின்ற தோறும் திருவார்த்தை யளித்த லின்றிப் பெருங் கருணைத் திருக்கண்களில் ஆநந்தநீர் பொழிந்து சும்மா விருக்கின்றனரென்றும்; உணர்ந்தோர் வியந்துரைப்பக் கேள்வியுற்று 'இயற்கைத் திருவருட் சமூக மிருந்த வண்ணம் என்னையோ! என்னையோ!!' வென்று குலாவிக் குலாவிக் கூவுகின்றவனானேன்.

அடிநிலைக் கரும ஞானசித்தி யனுபவங்களினும் முடிநிலைக் கரும ஞானசித்தி யனுபவங்களினும், அடிநிலை யோக ஞான சித்தி யனுபவங்களினும் முடி நிலை யோக ஞானசித்தி யனுபவங்களினும், அடிநிலைத் தத்துவ ஞானசித்தி யனுபவங்களினும் முடிநிலைத் தத்துவ ஞான சித்தி யனுபவங்களினும், அடிநிலை ஆன்ம ஞானசித்தி யனுபவங்களினும் முடிநிலை ஆன்ம ஞானசித்தி யனுபவங்களினும், சுத்த ஞானசித்தி யனுபவங்களினும், சமரச சுத்த ஞானசித்தி யனுபவங்களினும், அதுவதுவாகி நிறைந்தும், அதுவதுவாகி விளங்கியும், அதுவதுவாகி யினித்தும்,. ஆங்காங்கு அதீதமாகிக் கலந்தும், இவையனைத்துமாகி ஒருமித்தும், அதீதாமாகிக் தனித்தும் வயங்குகின்ற பெருங்கருணைப் பெரும் பதியாய கடவுளே! எல்லாச் சத்திகளுக்கும் எல்லாச் சத்தர்களுக்கும் எல்லா மூர்த்திகளுக்கும் எல்லா மூர்த்தர்களுக்கும் எல்லாத் தேவிகளுக்கும் எல்லாத்



RangaRakes tamilnavarasam.com

தேவர்களுக்கும் எல்லாச் சதனர்களுக்கும் எல்லாச் சாத்தியர்களுக்கும் எல்லா வுயிர்களுக்கும் எல்லத் தத்துவங்களுக்கும் எல்லாப் பொருள்களுக்கும் எல்லாக் குணங்களுக்கும் எல்லாச் செயல்களுக்கும் எல்லா அனுபவங்களுக்கும் மற் றெல்லாவற்றிற்கும் முதற் காரணமாயும் நிமித்த காரணமாயும் துணை காரணமாயும் இவை யல்லாவாயும் விளங்குகின்ற திருவருட் சமூக மிருந்த வண்ணம் அறிந்துகொள்ளுத லிங்ஙன மானால், திருவருட் சமூகப் பெருங் கருணைப் பெரும் பதியாய தேவரீர் இயற்கைத் திருவண்ண மறிந்து கொள்ளுதல் எங்ஙனமோ!எங்ஙனமோற!!

ஓ! ஒப்புயர் வின்றி விளங்குகின்ற ஒருவரே! தேவரீர் திருவண்ணமும் திருவருட் சமூகத் திருவண்ணமும் அறிதற்கும் கருதுதற்கு எத் திறத்தானும் கூடாவாயினும் அடிமையளவிற் கியன்றபடி அறியா தறிந்தும் கருதாது கருதியும் துதியாது துதித்தும் எனது உரிமையை ஊற்றஞ்செய்கின்றவனானேன். வந்தனம்!வந்தனம்!.

திருச்சிற்றம்பலம்,

சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம் முற்றிற்று.

## 4.சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்

**திருச்சிற்றம்பலம்**

உத்தர ஞான சித்திபுர மென்றும் உத்தர ஞான சிதம்பர மென்றும் திருவருளா லாக்கப்பட்ட ஆக்கச் சிறப்புப் பெயர்களும் பார்வதிபுர மென்றும் வடலூ ரென்றும் உலகியலாற் குறிக்கப்பட்ட குறிப்புப் பெயர்களும் பெற்று விளங்குகின்ற தெய்வப் பதியினிடத்தே, இயற்கை விளக்க நிறைவாகியுள்ள ஓர் சுத்த சிவானுபவ ஞான சபையில்,. இயற்கை யுண்மை நிறைவாகிய திருவுருவைத் தரித்து, இயற்கை யின்ப நிறைவாகிய சிவானந்த ஒருமைத் திருநடச் செய்கையை எவ்வுயிரும் இன்பமடைதற் பொருட்டே செய்தருளுகின்ற எல்லாம் வல்ல தனித் தலைமைக் கடவுளாகிய அருட்பெருஞ்ஜோதி யாண்டவரே! தேவரீரது திருவருட் சமுகத்தில் யான் செய்துகொள்ளுகின்ற சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்.

இவ்வுலகினிடத்து ஆறறிவுள்ள உயர்வுடைத்தாகிய தேகத்தைப் பெற்ற யான் இத்தேகத்திற்கு இடைக்கிடை நேருகின்ற மரணம் பிணி மூப்பு பயம் துன்ப முதலிய அவத்தைகளெல்லாவற்றையும் நிவர்த்தி செய்து, இத் தேகத்தையே நித்திய தேகமாக்கிக் கொண்டு, எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எத்துணையும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் வேண்டுமென்பதே எனது சத்தியமான அதி தீவிர விருப்ப முயற்சியாக இருக்கின்றது.

எனது விருப்ப முயற்சி இங்ஙனமாக, அவத்தைக ளெல்லாவற்றையும் நீக்கி இத்தேகத்தை நித்திய தேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப்பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் எதனாற் பெறுதல் கூடுமென்று அறியத் தொடங்கிய தருணத்து' வேறுஎந்த வழியாலும் பெறுதல்கூடாது, எல்லமுடைய

கடவுளது திருவருட் சுதந்தரம் ஒன்றாலே பெறுதல் கூடுமென்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி யறிந்தேன்.

ஆகலில், எனது சுதந்தரமாகக் கொண்டிருந்த தேக சுதந்தரத்தையும் போக சுதந்தரத்தையும் ஜீவ சுதந்தரத்தையும் தேவரீர் திருவருட்கே சர்வசுதந்தரகாகக் கொடுத்து விட்டேன். கொடுத்த தருணத்தே, இத் தேகமும் ஜீவனும் போகப் பொருள்களும் சர்வ சுதந்தரராகிய கடவுள் பெருங்கருணையாற் கொடுக்கப் பெற்றனமன்றி, நமது சுதந்தரத்தாற் பெற்றனவல்ல வென்னும் உண்மையை அருளா லறிவிக்கவும் அறிந்து கொண்டேன். இனி இன் தேகத்தி னிடத்தும் ஜீவனிடத்தும் போகப் பொருள்களிடத்தும் தேவரீர் திருவருள் சாட்சியாக எனக்கு எவ்விதத்தும் யாதோர் சுதந்தரத் தோற்றமும் தோற்றமாட்டாது. தேவரீர் திருவருட் சுதந்தரத்தை என்னிடத்தே வைதருளி, மரணம் பிணி மூப்பு பயம் துன்பம் முதலிய அவத்தைகளெல்லாவற்றையும் தவிர்த்து, இத்தேகத்தையே நித்திய தேகமாக்கிஎக்காலத்து மழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்தில் என்னை வாழ்வித்தல் வேண்டும்.

இத் தேகத்தைப் பெற்ற எல்லாச் சீவர்களுக்கும் எனக்கறிவித்த வண்ணமே அறிவித்து, அவரவர்களையும் உரிமையுடையவர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.

தேவரீர் பெருங்கருணை ஆட்சிக்கு வந்தனம்!வந்தனம்!

இங்ஙனம்
சிதம்பரம் இராமலிங்கம்

திருச்சிற்றம்பலம்

சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம் முற்றிற்று
சன்மார்க்க விண்ணப்பங்கள் முற்றுப்பெற்றன

## ஞானசபை வழிபாட்டு விதி வகுத்தது

## நிலையங்களின் பெயர்களை மாற்றியது 18.07.1872

ஞானசபையில் நாள்தோறும் வழிபாடு நடைபெற்று வந்தது. ஆனால் அடிகளது கொள்கைகளின்படி நடைபெறவில்லை. ஆத்லின் சபைக்குரிய வழிபாட்டு விதிகளை அடிகள் வகுத்தருளினார்கள். அடிகள் வகுத்தருளிய ஞானசபை வழிபாட்டு விதி வருமாறு:-

உ

திருச்சிற்றம்பலம்

## ஞான சபை விளக்க விபவ பத்திரிகை

அன்புடைய நம்மவர்களுக்கு வந்தனம்.



RangaRakes tamilnavarasam.com

இன்று தொடங்கி சபைக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபை யென்றும் சாலைக்குசமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச் சாலை யென்றும் சங்கத்திற்குசமரச சுத்த சன்மார்க்க சத்தியச் சங்க மென்றும் திருப்பெயர் வழங்குதல் வேண்டும்.

இன்று தொடங்கி அருட் பெருஞ் ஜோதி ஆண்டவரது அருட்பெருஞ் சித்தி வெளிப்படும் வரைக்கும் ஞான சபைக்குள்ளே தகரக் கண்ணாடி விளக்கு வைத்தல் வேண்டும். பித்தளை முதலியவற்றால் செயத குத்துவிலக்கு வேண்ட்டாம். மேலேற்றுகிற குளோப்பு முதலிய விளக்குகளும் வேண்டாம். தகரக் கண்ணாடி விளக்கு வைக்குங் காலத்தில், தகுக்தியுள்ள நம்மவர்கள் தேகசுத்தி கரணசுத்தி யுடையவர்களாய் திரு வாயிற் படிப் புறத்தி லிருந்து கொண்டு விளக்கேற்றி , பன்னிரெண்டு வயதிற்கு உட்பட்ட சிறுவர் கையிற் கொடுத்தாவது எழுபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட பெரியர் கையிற் கொடுத்தாவது, உட்புற வாயில்களுக்கு சமீபங்களில் வைத்து வரச் செய்விக்கவேண்டும். நாலு நாளைக்கு ஒரு விசை காலையில் மேற்குறித்த சிறியரைக் கொண்டாயினும் பெரியரைக்கொண்டாயினும் உள்ளே தூசு துடைப்பிக்க வேண்டும். தூசு துடைக்கப் புகும்போது புகும்போது நீராடி சுத்த தேகத்தோடு கால்களில் வத்திரம் சுற்றிக்கொண்டு புகுந்து முட்டிக்காலிட்டுக்கொண்டு தூசு துடைக்கச் செய்விக்கவேண்டும். விளக்கு வைக்கின்றபோதும் இங்ஙனமே செய்விக்கவேண்டும். விளக்கு வைத்ததற்கும் தூசு தூசு துடைத்ததற்கும் தொடங்குகின்ற பன்னிரெண்டு வயதிற்கு உட்பட்ட சிறுவரும் எழுபத்திரெண்டு வயதிற்கு மேற்பட்ட பெரியரும் பொருள் இடம் போகம் முதலியவற்றில் சிறிதும் இச்சை இல்லாதவர்களாய் தெய்வ நினைப்புள்ளவர்களாய் அன்புடையவர்களாய் யிருத்தல் வேண்டும். விளக்கு வைக்கும்போதும் தூசு துடைக்கும்போதும் நம்மவர்களில் நேர்ந்தவர்கள் புறத்தில் நின்று பரிசுத்தராய் மெல்லென துதி செய்தல்வேண்டும். யாவரும் யாதொரு காரியம் குறித்தும் தற்காலம் உள்ளே போதல் கூடாது. ஞானசபைத் திறவுகோல் ஒருவர் கையிலும் வெளிப்பட விருக்கப்படாது. அத்திறவுகோலை வேறொரு பெட்டிக்குள் வைத்து அப் பெட்டியைப் பூட்டி அப் பெட்டியை பொற்சபைக்குள் வைத்து அப் பெட்டி திறவுகோலை ஆஸ்தானக் காவல் உத்தரவாதியா யிருக்கின்றவர் கையில் ஒப்புவித்தல் வேண்டும்.

தொடர்ச்சி காலம் நேர்ந்த தருணம் எழுதுகிறேன்.

அங்கிரச ளூ இங்ஙனம்<br>
ஆடிமீ ரூ சிதம்பரம் இராமலிங்கம்

இப்பத்திரிக்கையின் வரலாறு "ஞானசபைக் கதவை நேர்ந்த காலத்தில் திறந்து நேர்ந்தவர்களுக்குக் காட்டி மரியாதை யில்லாது இருந்ததைப்பற்றி ஷை சங்க பிரபுக்களிலொருவராகிய உத்தரவாதமுடைய ஆறுமுக முதலியார் சன்னிதானத்தில் விண்ணப்பித்துக் கொண்டதற்கு வெளியான பத்திரிகை" என ஒரு பிரதியில் காணப்படுவதாக ஆ.பா. கூறுவர். ஞான சபை திறக்கப் பெற்றது 25.1.1872. இப்பத்திரிக்கை வெளியிடப் பெற்றது 18.7.1872, ஞான சபையை நிறுவி ஆறுமாதங்களும் நிறையவில்லை. அதற்குள் அங்கிருந்தோர் முறை தவறி நடக்கத் தொடங்கிவிட்டனர். அடிகள் வாயாற் கூறியும் செவி சாய்த்தார்களில்லை. ஆதலின் எழுத்து மூலம் இக்கட்டளையைப் பிறப்பித்தார்கள்.



RangaRakes tamilnavarasam.com

கட்டளையின் முதற் பத்தியில் சங்கம், சாலை, சபை, ஆகியவற்றின் பெயர் மாற்றம் அறிவிக்கப்பெறுகிறது.

| தொடக்கத்தில் இடப்பெற்று இதுவரை வழங்கிய பெயர்கள் | இக்கட்டளையால் மாற்றப்பெற்று இப்போதுஇடப்படும் பெயர்கள். |
|---|---|
| 1.சமரச வேதசங்கம் | சமரச சுத்த சன்மார்க்க சத்தியசங்கம் |
| 2.சமரசவேத தருமச்சாலை | சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை |
| 3, | சமரச சுத்த சன்மார்க்க சத்திய சத்திய ஞானசபை |

தொடக்கத்தில் சபைக்கு இன்ன பெயர் இடப் பெற்றிருந்த தென்பது தெரியவில்லை. சங்கம் சலை இவற்றின் பெயரை ஒட்டிச் சமரச வேத ஞானசபை எனப் பெயரிட்டிருக்கக் கூடும். அறிவிக்கப் பெற்ற பெயர் மாற்றத்தில் பழைய தொடக்க காலப் பெயர்களிலிருந்த 'வேத' என்னும் சொல் நீக்கப்பட்டு, 'சுத்த', 'சத்திய' என்னும் சொற்கள் உரிய இடங்களில் பெய்யப் பெற்று விளக்கப்படுகின்றன. இனி, சபை வழிபாட்டு விதிகளைக் காண்போம். 1. சபையினுள் விளக்கு வைக்கும் முறை, 2.சபையின் உட்புறத்தைச் சுத்தப்படுத்தும்(தூசு துடைக்கும்)முறை 3.இவற்றிற்காகச் சபையினுள் நுழைவார்க்கு உரிய தகுதிகள், 4. சபைத் திறவு கோலை வைத்துக்கொள்ளும் முறை, ஆகிய நான்கு பொருள்கள் இக்கட்டளையுள் கூறப்பெறுகின்றன.

**1:விளக்கு:** தகரக் கண்ணாடி விளக்கு வைக்க வேண்டும். பித்தளை முதலிய வற்றாற் செய்த குத்துவிளக்கு வேண்டாம். மேலேற்றுகின்ற குளோப்பு முதலிய விளக்குகளும் வேண்டாம். தகரக் கண்ணாடி விளக்கை உட்புற வாயில்களுக்குச் சமீபங்களில் வைக்க வேண்டும். இது அடிகளின் கட்டளை.

தகரக் கண்ணாடி விளக்கு என்று அடிகள் கூறியது வெளிச்சத்திற்காக வைக்கக் கூறியதாகும். வழிபாட்டிற்காக வைக்கக் கூறியதன்று. 'உட்புற வாயில்களுக்குச் சமீபத்தில் வைத்துவரச் செய்விக்கவேண்டும்' என்பதை காண்க. வாயிற்படிக்கு அருகில் உட்புறத்தில் வெளிச்சத்திற்காகத் தகரக் கண்ணாடி விளக்கு வைக்குமாறு அடிகள் கட்டளை யிட்டனர். இன்று தகரக் கண்ணாடி விளக்கு வைகப்பெறுவதில்லை, எக்குத்து விளக்குகளை அடிகள் வேண்டாம் என்று கட்டளையிட்டனரோ அக்குத்துவிளக்குகளே ஒன்றுக்குப் பத்தாக வைக்கப்பட்டுள்ளன. சபையின் உள் மண்டபத்தின் படிகளில் இரண்டு ஓரங்களிலும் வரிசையாகப் பித்தளைக் குத்து விளக்குகள் வைக்கப்பட்டுள்ளன. குளோப்பு விளக்குகள் மட்டுமே இன்றில்லை. அடிகள் குத்து விளக்கு என்று மட்டும் கூறாமல் பித்தளை முதலியவற்றால் செய்த குத்து விளக்கு என்று விளக்கிக் கூறியுள்ளார்கள். குத்து விளக்கிற்குச் சு தத்துவங்கள் கூறுவதுண்டு. ' குத்து விளக்கேற்றிக் கும்பிட்டுப் பாரேனோ' என்று சித்தர் பாடல்களில் வரும். குத்து விளக்கிற்குக் கூறப்படும் தத்துவார்த்தங்களைச் சபை விஷயத்தில் கூறிக்



RangaRakes tamilnavarasam.com

குழ்ப்பிக்கொள்ள ஏதுவாகும் என்றுதான் போலும் அடிகள் குத்துவிளக்கு வேண்டாம் என்றது. குத்துவிளக்கு வேண்டாம் என் அடிகள் கட்டளையிட்டிருந்தும இன்று பெரும் பெரும் குத்து விள்க்குகள் சபையினுள் எரிந்துகொண்டிருக்கின்றன.

**2.தூசு துடைத்தல்:** நான்கு நாளுக்கு ஒருமுறை காலையில் சபையினுள் தூசு துடைக்க வேண்டும். தூசு துடைப்பதற்காக உள்ளே புகுவோர் கால்களில் துணி சுற்றிக் கொண்டு புகுந்து முட்டிக்காலிட்டுக் கொண்டு துடைக்க வேண்டும். இது அரைகுறையாகச் சில காலம் பின்பற்றப்பட்டது. (யாம் எழுதிய வடலூர் வரலாறு பக்கம் 106 காண்க). இப்போது அறவே பின்பற்றப்படவில்லை.

**3. சபையினுள் புகுவோர்க்கு உரிய தகுதிகள்:**

வழிபாட்டிற்காக யாதும் சபையினுள் புகக்கூடாது. சபை வாயிலுக்கு வெளியிலிருந்தே வழிபாடு செய்யவேண்டும். ஒருவர் உள்ளே புகுந்து உள்ளிருந்து வழிபாடு செய்விப்பது அடிகள் கருத்தன்று. சபையினுள் யாரும் இருந்து வழிபாடு செய்விக்க வேண்டுவதில்லை. சபையினுள் புகுவதற்கான இன்றியமையாமை இரண்டே. 1. விளக்கு வைத்தல், 2. தூசு துடைத்தல். இவ்விரண்டிற்கும் தவிர வேறு எதற்காகவும் யாரும் சபையினுள் புகலாகாது. இது அடிட்கள் கருத்து மட்டுமன்று கட்டளையும் ஆகும். விளக்கு வைப்பதற்காவும் தூசு துடைப்பதற்காகவும் உள்ளே புகுவோர்க்கு சில தகுதிகளை அடிகளே ஏற்படுத்தியுள்ளனர். 1. வயதுத் தகுதி. 2. ஒழுக்கத் தகுதி. வயதுத் தகுதியாவது உள்ளே புகுவோர் பன்னிரண்டு அகவைக்கு உட்பட்ட சிறுவனாகவாது எழுபத்திரண்டு அகவைக்கு மேற்பட்ட பெரியவராகவாது இருக்கவேண்டும் என்பது. 12 வ்யதிற்கு உட்பட்டு என்றும் 72 வயதிற்கு மேற்பட்டு என்றும் அடிகள் விதித்ததேன்? 12 வயதிற்கு உட்பட்ட சிறுவனுக்குக் காம இச்சை இன்னதென்றே தெரிவதற்கில்லை. 72 வயதிற்கு மேற்பட்டவர்கள் இல்லற ஒழுக்கத்திற்குரிய பருவத்தைக் கடந்தவர்கள். பெண்களுடன் தேக சம்பந்தமுடையார் உள்ளே புகுதல் கூடாதென்பதற்காகவே 12 வயதிற்கு கீழ். 72 வயதிற்கு மேல் என்று எல்லை வகுத்தனர். ஆனால் இன்று நடைபெறுவது என்ன? ஏறத்தாழ 40 அகவையுள்ள ஒருவர் பூசகராக விளங்குகிறார். இனி உள்ளே புகுபவர்க்குரிய ஒழுக்கத் தகுதிகளுக்கு வருவோம். ' பன்னிரெண்டு வயதிற்கு உட்பட்ட சிறுவரும் எழுபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட பெரியரும் பொருள், இடம், போகம் முதலியவற்றால் சிறிதும் இச்சை இல்லாதவர்களாய் தெய்வ நினைப்புள்ளவர்களாய் அன்புடையவர்களாயிருத்தல் வேண்டும்' என்பது அடிகளின் கட்டளை. 'பொருள், இடம், போகம், முதலியவற்றில் சிறிதும் இச்சையில்லாதவர்களாய்' என்பதில் பொருள் என்பது பொன்னாசை, இடம் என்பது மண்ணாசை, போகம் என்பது பெண்ணாசை, மூவாசைகளையும் சிறிதும் அற்றவர் உள்ளே புகலாம். அடிகளின் கட்டளை இவ்வாறிருந்தும் இப்போது ஏறத்தாழ 40 அகவையுள்ளவரும் மனைவி மக்களோடு வாழ்பவருமாகிய இல்லறத்தார் ஒருவர் பூசகராகத் தொழில் புரிகிறார்.

**4. சபைத் திறவுகோலை வைத்துக்கொள்ளும் முறை:**

'ஞானசபைத் திறவுகோல் ஒருவர் கையிலும் வெளிப்படவிருக்கப்படாது' என்பது அடிகள் கட்டளை. ஆனால் இன்றோ ஞானசபைத் திறவுகோல் அதன் பூசகர் கையில் வெளிப்படையாக இருக்கிறது. ஞானசபைத் திறவுகோலை வெளிப்படையாக வைத்திருக்கக்கூடாது. அதனை ஒரு பெட்டிக்குள்



RangaRakes tamilnavarasam.com

வைத்துப்பூட்டி அப்பெட்டியைப் பொற்சபைக்குள் வைக்கவேண்டும். சபைச்சாவியுள்ள அப்பெட்டியின் திறவுகோல் ஆஸ்தான காவல் உத்தரவாதியிடம் இருக்கவேண்டும். ஆஸ்தான காவல் உத்தரவாதி என்பவர், காவல் காரர்(watchman). திறவுகோல் தகராற்றினாலாயே இக்கட்டளை எழுந்தது. ஞானசபைத் திறவுகோலை வைத்திருந்தவர் முறைப்படி நடக்காததைக் கண்ட அன்பர் ஒருவர் அடிகளிடம் விண்ணப்பித்தார். அடிகள் இக்கட்டளைகளைப் பிறப்பித்து வழிபாட்டு விதிகளை வகுத்தருளினார்கள். " ஞான சபைக் கதவை நேர்ந்த காலத்தில் திறந்து நேர்ந்தவர்களுக்குக் காட்டி மரியாதையில்லாதிருந்ததைப்பற்றி ஷை சங்க பிரபுக்களிலொருவராகிய உத்தரவாதமுடைய ஆறுமுக முதலியார் சன்னிதானத்தில் விண்ணப்பித்துக்கொண்டதற்கு வெளியான பத்திரிக்கை" என்னும் குறிப்பைக் காண்க.

அடிகள் ஞானசபை வழிபாட்டைக் குறித்து இன்னும் எழுதவிருந்தார்கள். சமயம் நேராததால் இதனோடு நிறுத்தி, 'தொடர்ச்சி காலம் நேர்ந்தருணம் எழுதுகிறேன்', என முடித்திருக்கிறார்கள்.

இங்கு ஒரு சொல் கூறவிரும்புகிறோம், ' ஞான சபை விளக்க விபவ பத்திரிக்கை'யும் இதுபோன்ற இன்னும் சிலவும் அடிகள் கூறியதன்று, எழுதியதன்று எனச் சிலர் இப்போது கூறத் தலைப்பட்டுள்ளனர். இவ்வாறு கூறுபவர்கள் மாத்ருயோனிப்பரீட்சை" செய்பவர்கள் என்பது எம் கருத்து.

அடிகளின் கட்டளைகளுக் கிணங்க ஞானசபை இன்று நடைபெறவில்லை. நேர்மாறாகவே நடைபெறுகிறது. அடிகளின் கட்டளைகளுக்கு அற மாறாக நடக்கத் துணிந்தோர்-அரியாமையால் அன்று, அறிந்தே நடக்கத்துணிந்தோர்-இன்ன பயனை அனுபவிப்பர் என்று கூற நாம் விரும்பவில்லை. அது அவர்களுக்கே தெரியும். இரண்டொருவர் பயனை அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர். ' அரசன் அன்று கேட்பான். தெய்வம் நின்று கேட்கும்' என்பது பழமொழி. தெய்வம் கேட்கும் காலம் தொடங்கிவிட்டது.

26.1.1929 தைப்பூசத்தில் வடலூரில் ஆற்றிய தலைமை உரையில் நாற்பதாண்டுகளுக்கு முன் திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள் வடலூரைப் பற்றிக் கூறியதை ஈண்டெடுத்துக் காட்டுதல் பொருந்தும்.

தமிழ்நாட்டில் வதிந்து மறைந்த நம் இராமலிங்க சுவாமிகள், சாதிகத வேற்றுமைகளைப் பலவுரையில் மறத்துச் சமரச ஞானத்தை அறிவுறுத்திக் கோயில்களெல்லாம் சாதிக் கோயில்களாக மாறியது கண்டு, எல்லாரும் போந்து வழிபடுவதற்கான இச்சமரச கோயிலை(வடலூர் சபை)அமைத்துச் சென்றார். இங்கேயாதல் சுவாமிகள் கொள்கை ஆட்சியிலிருக்கிறதா? ஈங்கும் சாதிப்பேய் புகுந்து தன்னாட்சி செலுத்துகிறது. இந்தக் கொள்ளைக்கு-இந்தக்கொலைக்கு-என்செய்வது?

'எச்சபை பொதுவென இயம்பினர் அறிஞர்கள்-அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ்சோதி' என்று சுவாமிகள் அருளிச்செய்துள்ளார். இச்சபை அந்நோக்கத்துடன் சுவாமிகள்ளால் நிறுவப்பட்டது. இஃது இப்பொழுது எல்லா



RangaRakes tamilnavarasam.com

நாட்டினர்க்கும், எல்லாமொழியினர்க்கும். எல்லாச் சமயத்தவர்க்கும், எல்லாச் சாதி யார்க்கும் பொதுவாகப் பயன்படுகிறதா?.

அக்கொடுமை கண்டே இராமலிங்க சுவாமிகள் இங்கு இச்சபைக் கோயிலை நிறுவினார். இதுவும் தன் பொதுமையை இழந்து நிற்கிறது .பெரியோர் கொள்கையை வீழ்த்தி அவர் தம் உருவத்துக்கு மட்டும் நம்மவர் விழாக் கொண்டாடுகின்றனர். இக்கொடுமையை யாண்டுச்சென்று முறையிடுவது? ஆண்டவனே! உன்னிடத்திலே முறையிடுகிறேன். வேறு களைகளில்லை. என் நாட்டார்க்கு நலலறிவுச்சுடர் கொளுத்துவாயாக.

_இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்(1955)பக்கம் 34

திரு.வி.க. ஆண்டவனிடம் முறியிட்டது போன்றே யாமும், ஆண்டவனே! உண்டிடத்திலேயே முறையிடுகிறேன், வேறு களைகணில்லை. என் நாட்டார்க்கு-முக்கியமாக வடலூர் சம்பந்தப்பட்டவர்களுக்கு-நல்லறிவுச் சுடர் கொளுத்துவாயாக என முறையிடுகிறோம்.

## அன்பர்களை எச்சரித்தது 25.11.1872

சங்கத்தையும், சாலையையும், சபையையும் நிறுவிய அடிகள் அவற்றை அன்பர்கள் ஒழுங்காக நடத்தாததாலும், ஒருவருக் கொருவர் அடிக்கடி பூசலிட்டுக்கொண்டதாலும் பெரிதும் வருந்தி அவ்வப்போது நயமாகவும் கடுமையாகவும் எச்சரிக்கவேண்டிய வராயினர். சாலையிலுள்ளார்க்கு இட்ட ஒழுக்கக் கட்டளையையும், சபை வழிபாட்டு விதியையும் மேலே கண்டோம். இதன்பின் ஒருவாறு சில தினங்கள் கழிந்தன. வடலூரில் தருமச்சாலையிலும் மேட்டுக்குப்பத்தில் அடிகளுடனும் இருந்தோர் தாம் இருக்கும் இடத்திற் கேற்ப ஒழுகவில்லை. ஆகவே பின்வரும் எச்சரிக்கை 25.11.1872இல் அடிகளால் வெளிப்படுத்தப் பெற்றது.

சித்திவளாகத்திலும் தருமச் சாலையிலும் வசிப்பவர்கள்
பரஸ்பரம் பழகுவதற்கு எச்சரிப்பு பத்திரிக்கை
ஆங்கிரச ஸ்ரீ கார்த்திகை மீ ய உ உ

ஆண்டவர் ஒருவர் உள்ளார் என்றும், அவர் பொதுப்பட உலகத்திலுள்ளார் யாவரும் சன்மார்க்கப் பெரும் பயன் பெற்று நித்திய வாழ்வு வாழ்தற்பொருட்டு வெளிப்படக் காரியபபடுகின்றனர் என்றும், அது காலையில் நாமும் ஆன்ம லாபத்தைப் பெற்றுக்கொள்வோம் எனவும் நம்பி இங்கே வசிக்கும் யாவரும் வழிபாடு விஷயத்தில் ஒரு தடையும் சொல்லாது ஒத்து இருத்தல் அவசியம். அன்றியும் கால பேதத்தால் அல்லது மற்ற வகையால் அவ்வத் தருணங்களில் நேரிடும் குரோதத்தால் விளையும் துவேஷாதிகள் உண்டாயினாலும் அல்லது உண்டாகிறதாயிருந்தாலும் உடனே ஜாக்கிரதைப்பட்டு அதை முற்றிலும் மறந்துவிடல் வேண்டும். அப்படியிருந்தல் மேல் விளைவை யுண்டுபண்ணாதிருக்கும். அபபடி இனிமேல் ஒருவரை யொருவர் அதிக்கிரமித்த வார்த்தைகளால் சண்டை விளையத் தக்கதாக வைதாலும் அப்படி வைதவர்களையும் அந்த வைதலைக் கேட்டுச் சகிப்பவர்களோடு



RangaRakes tamilnavarasam.com

மறுபடி அத்துவேஷத்தை ஒருங்கே விட்டு மறந்து மனக் கலப்புடன் மருவுதல் வேண்டுவது.
அப்படி ம்ருவாதவர்களையும் உடனே அக்கிரம அதிக்கிரம வார்த்தைகளைக் கேட்டு தாங்கள் எதிர்த்து வார்த்தையாடாமல் கூட்டத்தாரில் அப்போது இருக்க வாய்ந்த இரண்டொருவர்க்குத் தெரிவித்தல் வேண்டும். அப்படி தெரிவிக்காதவர்களும் எதிர்த்துச் சண்டை தொடுப்பவர்களும் இங்கிருந்த லனாவசியம். அப்படிப்பட்டவர்களை ஒரு பேச்சுமில்லாமல் இந்த இடம் விட்டுப் போய்விடத் தக்க முயற்சி ஒவ்வருவரும் செய்தல் வேண்டுவது. சி.இராமலிங்கம்.

சாலையில் உள்ளவர்களுக்கு இட்ட ஒழுக்கக் கட்டளை, சபை வழி பாட்டு விதி, இவ்வெச்சரிப்புப் பத்திரிக்கை ஆகிய் வற்றை கண்ணுறுவோர்க்கு அடிகள் தம்மைச் சேர்ந்தவர்களால் எங்ஙனம் துன்புற்றாரென்பது விளகும். அன்று அடிகளைச் சூழ்ந்திருந்த கூட்டம் பெரும்பாலும் உலகியல் நலன் கருதிக் கூடியிருந்ததே யொழிய, ஆன்ம லாபத்தைப் பெற்றுய்ய விரும்பிக் கூடியதன்று.

## வதந்தி ஒன்றை அறிவிப்பால் நீக்கியது 8.9.1878

சித்திவளாகத்தில் அன்பர் பலர் அடிகளைக் சூழ்ந்திருந்தனர். அவர்களுக்கெல்லாம் அருளுரை பகர்வதும், தாம் தவஞ் செய்வதுமாக அடிகள் திகழ்ந்தனர். இவ்வறிருக்கு ஒரு நாளில் ஒரு சமயம், சித்திவளாகத்தில் குறிப்பிட்ட ஒரு நாளில் ஓர் அற்புதம் நிகழப் போவதாக வதந்தி ஒன்று எழுந்து பரவத் தொட்ங்கிற்று. அவ்வீண் வதந்தியை நம்ப வேண்டாமென்று அடிகள் முன்னதாகவே விளம்பரமொன்றை வெளியிட்டனர். 8.9.1873இல் வெளியிடப்பெற்ற அவ்விளம்பரம் வருமாறு.

உ

திருச்சிற்றம்பலம்

உலக அறிவிப்புப் பத்திரிக்கை

ஞான சித்தி புரமென்றும் உத்தர ஞான சிதம்பர மென்றும் பிரமாணிக்கப்படுகின்ற வடலூர் சத்திய ஞான சபைக்கு முக்கிய சம்பந்த முடையதாகி அடுத்த கருங்குழி யெல்லை மேட்டுக்குப்பத்தில் வழிபடப்படுகின்ற சித்தி வளாகத்தில் வந்திருக்கின்றவர்களும் வருகின்றவர்களும் வருபவர்களுமாகிய ஜனங்களுக்கு அறிவிப்பது.

மேல் குறித்த விடத்தில் இந்த மாதத்திற் கடுத்த புரட்டாசி மாதம் ஐந்தாந் தேதியில் அற்புத விளக்கம் நேரிடுவதாக ஓர் வதந்தி வழங்கப்படுகிறது. அது கேள்விப்பட்டு நம்புதலோடு நீர்கள் நீர்களும் பொருள் வகையாலும் தேக வகையாலும் உழைப்பெடுத்துக் கொண்டு பின்பு நிட்டூரப்பட்டுக் கொள்ளுதல் வேண்டாம். அந்தக் கேள்வி யுண்மை யல்ல. இவ்விடத்தில் அற்புதம் விளங்குவது மெய்யோ பொய்யோ. இந்தக் காலாமோ எந்தக்காலமோ. ஆகலில், இந்த அறிவிப்பினால் ஜாக்கிரதையோடு உங்களுங்களுக்கு அடுத்த காரியங்க ளெவையோ அவைகளைக் செய்வீர்களாக.



RangaRakes tamilnavarasam.com

ஸ்ரீமுகளு
ஆவணிமீ உருஉ
மேட்டுக்குப்ப மென்னும்
சித்திவளாகம்

சிதம்பரம்
சிதம்பரம் இராமலிங்கம்

இதனுள் சித்திவளாகத்தை, சத்திய ஞான சபைக்கு முக்கிய சம்பந்தமுடையதாகி வழிபடப்படுகின்ற சித்திவளாகம் என்று கூறியுள்ளது கருதத்தக்கது.

## சித்தி வளாகத்தில் உபதேசித்த திருவருண் மெய்ம்மொழிகள்

தனித்துறையைக் கருதி அடிகள் மேட்டுக்குப்பஞ் சென்றனரேனும் நாளடைவில் சாலையிலிருந்தவருள் சிலர் மேட்டுக்குப்பத்திற்கு வந்து அடிகளுடன் உறைவாராயினர். அருகிலுள்ள ஊர்களிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் அடிகளைக் காண்பதற்காகப் பலர் வந்து கூடினர். இந்நிலையில் அடிகள் அங்கிருந்தவர்களுக்குச் செய்த உபதேசங்கள் பல, அவற்றுள் சிறந்தவை இரண்டு. 1. திருவருண் மெய்ம்மொழி.2.பேருபதேசம். திருவருண்மெய்ம்மொழி என வழங்குவது அடிகளின் விரிந்த உபதேசங்களைப் பெரும்பாலும் அடிகளின் திருவார்த்தைகளைக்கொண்டே அவற்றின் சாரமாக மெய்யன்பரொருவரால் தொகுக்கப்பட்டதாகும். பேருபதேசம், அடிகள் சன்மார்க்கக் கொடிகட்டிய நாளில் செய்தது. திருவருண்மெய்ம்மொழியை இவண் காண்போம்.

## ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கப் பெருநெறியின் உண்மை ஒழுக்கங்களைக் குறிக்கும் அருட்பிரகாசத் தந்தையார் திருவருண் மெய்ம்மொழி

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப்பெற்ற நண்பர்களனைவரும் நாமும் அறியவேண்டுவதும் ஒழுகவேண்டுவதும் யாதெனில்:

இயற்கையிற்றானே விளங்குகின்றவராய் உள்ளவரென்றும், இயற்கையிற்றானே உள்ளவராய் விளங்குகின்றவரென்றும். இரண்டுபடாத பூரண இன்ப இன்பமானவரென்றும், எல்லா அண்டங்களையும் எல்லா உலகங்களையும் எல்லாப் பதங்களையும் எல்லாச் சத்திகளையும் எல்லாச் சத்தர்களையும் எல்லாக் கலைகளையும் எல்லாப் பொருள்களையும் எல்லாத் தத்துவங்களையும் எல்லாத் தத்துவிகளையும் எல்லா உயிர்களையும் எல்லாச் செயல்களையும் எல்லா இச்சைகளையும் எல்லா ஞானங்களையும் எல்லாப் பயன்களையும் எல்லா அனுபவங்களையும் மற்ற எல்லாவற்றையும் தமது திருவருட் சத்தியால் தோற்றுவித்தல் வாழ்வித்தல் குற்றம் நீக்குவித்தல் பக்குவம் வருவித்தல் விளக்கஞ் செய்வித்தல் என்னும் ஐந்தொழில்கள் முதலிய பெருங்கருணைத் தொழில்களை இயற்றுவிக்கின்றவரென்றும். எல்லாம் ஆனவரென்றும், ஒன்றும் அல்லாதவரென்றும், சர்வ காருண்யரென்றும், சர்வ வல்லபரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றனும் ஒப்பு உயர்வு இல்லாத தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ் ஜோதியர் என்றும் சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே, அகம் புறம் முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவு என்னும்


RangaRakes tamilnavarasam.com

பூரணப் பொது வெளியில், அறிவா ரறியும் வண்ணங்களெல்லாமாகி விளங்குகின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரே யாகிய கடவுளை இவ்வுலகினிடத்தே ஜீவர்களாகிய நாம் அறிந்து அன்புசெய்து அருளையடைந்து அழிவில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பல்வேறு கற்பனைகளாற் பலவேறு சமயங்களிலும் பலவேறு மதங்களினும் பலவேறு மார்க்கங்களிலும் பலவேறு லகஷியங்களைக் கொண்டு, நெடுங்காலம் பிறந்து பிறந்து, அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவு மின்றி விரைந்து விரைந்து, பல்வேறு ஆபத்துகளினால் துன்பத்தி லழுந்தி, இறந்து இறந்து வீண் போயினோம், வீண்போகின்றோம்.

ஆதலால், இனிமேலும் ஜீவர்களாகிய நாம் விரைந்து விரைந்து இறந்து இறந்து இறந்து வீண்போகாமல் உண்மை அறிவு உண்மைஅன்பு உண்மைஇரக்கம் முதலிய சுப குணங்களைப் பெற்று, நற்செய்கை உடையவர்களாய், எல்லாச்சமயங்களுக்கும் எல்லாமதங்களுக்கும் எல்லாமார்க்கங்களுக்கும் உண்மைப் பொரு நெறியாகி விளங்கும் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்றுப் பேரின்ப நெறியாகி விளங்கும் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்றுப் பேரின்ப சித்திப் பெருவாழ்வில் பெருஞ்சுகத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு-மேற்குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளங் கொண்டு சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லகஷியமாகிய உண்மை விளக்கஞ் செய்கின்ற ஓர் ஞான சபையைச் சித்தி வளாகம் என்னும் இச்சந்நிதானத்திற் கடுத்த உத்தர ஞான சிதம்பரம் அல்லது ஞானசித்திபுரம் என்று குறிக்கப்படுகின்ற வடலூர் பார்வதிபுரத்தில் தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து ." இக்கால்ந்தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம் அற்புத சித்திகள் எல்லாம் விளங்க யாமே அமர்ந்தருளித் திருவிளையாடல் செய்தருள்கின்றாம்" என்னும் திருக்குறிப்பை இவ்விடத்தே தாயினுஞ் சிறந்த பெருந்தயவுடைய தமது கருணையங் கடலாராகிய அருமைத் தந்தையார் அருட்பிரகாச வள்ளலார் முன்னிலையாகப் பலவாற்றானும் பிரசித்திப்பட வெளிப்படுத்தி, அருட்பெருஞ்ஜோதி சொரூபராய் அப்பெருங்கருணை வள்ளலாரது உடல் பொருள் ஆவிகளைக் கொண்டு பொற்சபை சிற்சபைப் பிரவேசஞ்செய்வித்தருளி, அரிய அவரது திருமேனியில் தாம் கனிவுறக் கலந்தருளிய எல்லாம் வல்ல சித்தத் திருக்கோலங்கொண்டு, அருளரசாட்சித் திருமுடி பொறுத்து அருள் விளையாடல் செய்தருளு நிமித்தம், ஈரேழு பதினான்கு உலகங்களிலுள்ளவர்கள் யாவரும் ஒருங்கே, இஃது என்னை! இஃது என்னை! என்று அதிசியக்கும்படி வெளிப்பட எழுந்தருளும் தருணம் அடுத்த அதிசமீபத்த தருணமாயிருத்தலினால்-அங்ஙனம் வெளிப்படுந் திருவரவுபற்றி எதிர்பார்த்த லாகிய விரதங்காத்தலில் நிற்கும் அல்லது நிற்கவேண்டிய நாம் எல்லவரும் மேற்குறித்த அசிந்திய அற்புதத் திருவரவு நேரிட்ட கணத்திற்றானே, சுத்த சன்மார்க்க அரும் புருஷார்த்தங்களின் பெரும் பயன்களாகிய எக்காலத்தும் நாசமடையாத சுத்தம் அல்லது சுவர்ணதேகம் பிரணவதேகம் ஞானதேகம் என்னும் சாகாக் கலானுபவ சொரூப சித்தித் தேகங்களும், தன் சுதந்தரத்தால் தத்துவங்கள் எல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப் பெரு வல்லபமும், கடவுள் ஒருவரே என்றறிகின்ற உண்மை ஞானமும் கரும சித்தி யோகசித்தி ஞானசித்தி முதலிய எல்லாச் சித்திகளும் பெறுகின்ற அருட்பேறும் பெற்று வாழ்கின்ற பேரின்ப சித்திப் பெரு வாழ்வைட் அடைவதற்கான சுத்த சன்மார்க்கத் தனிப் பெரு நெறியைப் பற்றுவதற் குரிய உண்மை ஒழுக்கங்களில் நாமெல்லவரும் தனித்தனி ஒழுக வேண்டுவது

அவசியமாகலில், அவ்வொழுக்கங்கள் இவை என உணரவேண்டுவது இன்றியாமையாத தாகும்.

சன்மார்க்கப் பெருநெறியின் ஒழுக்கங்கள் **இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம்** என நான்கு வகைப்படும்.

அவற்றுள் **இந்திரிய ஒழுக்கம்** என்பது-நாத முதலிய ஸ்தோத்திரங்களை உற்றுக்கேட்டல் மற்றவை கேளாதிருத்தல், கொடுஞ் சொல் முதலியவை செவிபுகாமல் நிற்றல், அசுத்தங்களைத் தீண்டாதிருத்தல், கொடூரமாகப் பாராதிருத்தல், ருசியின்மீது விருப்பமின்றி யிருத்தல், சுகந்தம் விரும்பாதிருத்தல் என்னும் ஞானே ந்திரிய ஒழுக்கமும்; இனிய வார்த்தையாடுதல் பொய் சொல்லாதிருத்தல், ஜீவஹிம்சை நேரிடுங்கால் எவ்விதத்தந்திரத்திலாவது தடை செய்தல், பெரியோரிடத்திற் செல்லுதல்-என்றால், சாதுக்களிடம் பரிச்சயம் பண்ணுதல், உயிர்க்கு உபகரிக்கு நிமித்தம் சஞ்சரித்தல், உயிர்க்கு உபகார நிமித்தம் கையால் உபகரித்தல். மலஜல பாதைகள் அளவு மீறாமல் கிரமங் குறையாமலும் அளவை போல் தந்திர ஓஷதிகளாலும் ஆகாரம் பக்குவத்தாலும் பவுதிகப் பக்குவத்தாலும் செய்வித்தல் என்னும் கருமேந்திரிய ஒழுக்கம் ஆகும்.

**கரண ஒழுக்கம்:** என்பது-சிற்சபையின் கண் மனத்தைச் செலுத்துவது தவிர மற் றெந்தவகை ஆபாசத்திலும் செலுத்தாமல் இழுத்து மேற்குறித்த இடத்தில் நிறுத்துதல், பிறர் குற்றம் விசாரியாதிருத்தல், தன்னை மதியாதிருத்தல், செயற்கை குணங்களாலுண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவமயாமாயிருத்தல், பிறர்மேற் கோபியா திருத்தல், தனது சத்துருக்களாகிய தத்துவங்களை கோபித்தல், அக்கிரம அதிக்கிரமப் புணர்ச்சி செய்யாதிருத்தல் முதலியவாம் .

**ஜீவ ஒழுக்கம்**: என்பது-எல்லா மனிதரிடத்தும் ஜாதி, சமயம், குலம், கோத்திரம்,சூத்திரம், சாத்திரம், தேசம், மார்க்கம்,. உயர்வு,தாழ்வு முதலிய பேதமற்றுத் தானாக நிற்றல் முதலியவாம்.

**ஆன்ம ஒழுக்கம்:**என்பது-எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிடத்து முள்ள ஆன்மாக்களிடத்து மிரங்கி, ஆன்மாவே சபையாகவும் அதனுள்ளொளியே பதியாகவும் கண்டு கலந்து பூரணமாக நிற்றல் முதலியவாம்.

இங்ஙனம் கூறிய ஒழுக்கங்களுள்ளே இந்திரிய ஒழுக்கம் கரண ஒழுக்கம் என்னு மிவற்றை நாம் ஒவ்வொருவரும் உண்மை யுணர்ச்சியுடன் மேற்கொண்டு ஒழுகவேண்டும்: ஜீவ ஒழுக்கம் ஆன்ம ஒழுக்கம் என்னும் இருவகையான அரிய ஒழுக்கங்கள் திருவருட்டுணை பெற்ற பின்ன ரன்றிக் கைகூடா: ஆதலால் அவ்வொழுக்கங்களைப் பெற்று ஒழுகவேண்டுவதற்கும் ஆன நன்முயற்சிகளின் பழகவேண்டும். அன்றியும்-

இவ்வண்ணமான ஒழுக்கங்களில் இயன்ற மட்டில் ஒழுகப்பெற்று, இடந் தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், தெய்வம் பராவல, பிறவுயிர்க்கிரங்கல். பெருங்குணம் பற்றல், பாடிப் பணிதல், பத்தி செய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில் பலகால் முயன்று முயன்று பழகிப் பழகிப் இருத்தல்வேண்டும். அன்றியும்-

சைவம் வைணவம் சமணம் பவுத்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும் அச்சமயங்களிற் குறித்த சாதனங்களும் தெய்வங்களும் கதிகளும் தத்துவசித்தி விகற்ப பேதங்களென்றும்,அவ்வச் சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள் ஆகமங்கள் சாத்திரங்கள் புராணங்கள் முதலிய கலைகள் எல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக் கலைகளென்றும், வேதாந்தம் சித்தாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த மதங்களும் மார்க்கங்களும் சுத்த சன்மார்க்க கானுப லேச சித்தி பேதங்களென்றும் கேள்விப் பட்டிருக்கின்றனம். ஆகலில், அத்திரு வார்த்தைகளில் உண்மையான நம்பிக்கை கொண்டு, அவ்வவற்றின் உண்மைகளை உள்ளபடியே உணர்த்தப்பெற்று அவைகளின் அனுபவங்களை அடைதல் வேண்டுவதுபற்றி, அவ்வச் சமய மதாசாரங்களைச் சிறிதும் அனுட்டியாது நிற்றலும், அவற்றில் சத்திய வுணர்ச்சி கொள்ளாமல் விடுதலும் வேண்டும். அன்றியும்--

உலகியற்கண் பொன்விஷய இச்சை பெண் விஷய விச்சை மண்விஷய விச்சை முதலிய எவ்விஷய இச்சைகளிலும் நமது அறிவை ஓர் அணுத்துணையும் பற்றுவிக்காமல், பொதுப்பட நல்லறிவு கடவுள் பத்தி உயிரிரக்கம் பொதுநோக்கம் திரிகரண அடக்கம் முதலிய நற்குண ஒழுக்கங்களில் நின்று, உண்மையுரைத்தல் இன்சொல்லாடல் உயிர்க்குபகரித்தல் முதலியவாகக் குறித்த நற்செய்கைகளையும் உள்ளபடி பெற்று, சித்திவளாகம் என்னும் இம்மஹா சந்நிதானத்திற்றானே தரிக்கப்பெறவும்: உலக முகப்பட பராக்கினால் விலகி ஏமாந்த விடாமலும்; நமது எல்லாம் வல்ல ஆண்டவனார் அற்புதத் திருவரவு குறிக்கும் வெளிப்படுகைக்கு எதிர்பார்க்கும் நிலையினராய் , எல்லா அண்ட சராசரங்களையும் நமது தனித் திருவருட் செங்கோல் கொண்டு நடாத்துவித் தருளும் பேரருட் பெருங் கருணை வாய்ந்த தனிப்பெருந் தலைவனது அரிய திருவருகைச் சம்பந்தமான வழிபடுகை அல்லது மங்கலம் புனைதல் முதலிய திருப்பணியினிடம் நமது கரணேந்திரியங்களை விடுத்துக் குதூகலத்துடன் விந்து விளக்கம் நாத ஒலி என்பவற்றால் புறக்கடையில் விலகப்படாமலும்: ஆண்டவனாரது அருளற்புத ஞானசித்தத் திருமேனியின் மங்கலத் திருக்கோலத்தைக் கண்காட்சியாக உடல் குழைய உள்ளங்குளிர ஆநந்தக் கண்ணீர்கொண்டு பரவசத்துடன் தரிசிக்கப் பெறும் பெரும் புண்ணிய முடையவர்களாய் எதிர்படவாய்க்கப்பெறவும்-நின்றோமேயானால்:

நாம் எல்லவரும் சுத்த சன்மார்க்கத்தினுக்கு உரிமையுடையவர்களாகி, அறிவு வாய்ந்த காலமுதல் கண்டறியாத அற்புதக் காட்சிகளையும் கேட்டறியாத அற்புதக் கேள்விகளையும் அறிந்தறியாத அற்புத அறிவுகளையும் அடைந்தறியாத அற்புதக் குணங்களையும் செய்தறியாத அற்புதச் செயல்களையும் அனுபவித்தறியாத அற்புத அனுபவங்களையும்-வெளிப்படத் தரிசிக்கும் அதே கணத்தினுள்ளே-பெற்றுப் பெருங்களிப்புடன் எக்காலத்தும் எவ்விதத்தும் தடைபடாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வு என்னும் பேரின்ப சித்திப் பெருவாழ்வில் வாழப் பெறுவோம்.

இது சத்தியம், இது சத்தியம், இது சத்தியம்

இங்ஙனம் நமது ஆண்டவரால் விரித்து விவகரிக்கப்பட்ட மலையிலக்கான பொய்யாப் பெருமொழி என்னும் கருணாரசத்தின் வெள்ளப் பெருக்கத்தில் ததும்பி வழிந்த மந்திரத் திருவருண் மொழிகளின் சுருக்கம்.

முற்றிற்று

## கொடி கட்டியது,பெருபதேசம் 22.10.1873

### கொடி

கொடி இன்று நேற்றுத் தோன்றியதன்று, மிகப் பழைமையானது. அரசர்கள் தத்தமக்குத் தனியாக ஒவ்வொரு கொடியைக் கொண்டிருந்தனர். சேர மன்னர்கள் வில்லையும், சோழ மன்னர்கள் புலியையும், பாண்டிய மன்னர்கள் கயலையும்(மீன்) தத்தம் கொடியில் பொறிதிருந்தனர். கொடி அரசனுக்குரிய சின்னமாக இருந்தது. முடிக்குரிய சிறப்புக் கொடிக்கும் உண்டு. அரசன் வெளியே வரும்போது கொடியும் உடன் வரும். அரசவையிலும் கொடி விளங்கும். இந்நாளில் ஒவ்வொரு நாட்டு அரசாங்கமும் ஒவ்வொரு கொடியைத் தமக்கெனக் கொண்டுள்ளது.

கட்சிகள் தத்தமக்கென ஒரு தனிக்கொடியைக் கொண்டுள்ளன. கொடியே கட்சியின் முக்கிய சின்னமாக விளங்குகிறது. விழாக் காலங்களிலும் கூட்டங்களிலும் கொடி ஏற்றுகிறார்கள்
.

`போர்ப்படைகளுக்குத் தனிக்கொடியும் உண்டு. போர் வீரர்கள் கொடிபிடித்திருப்பதும் உண்டு. மாடி வீட்டின்மேல் கொடியைப் பறக்க விட்டிருப்பர். பாரதப்போரில் அர்ச்சுனன் தன் தேரில் அநுமக் கொடியைப் பறக்க விட்டிருந்தான். இக்காலத்தும் படைகளுக்குக் கொடிகள் இருப்பதைக் காணலாம். நமது நாட்டின் தரைப்படை. கடற்படை,விமானப்படை ஆகிய மூன்றிற்கும் தனித் தனிக் கொடிகள் உள்ளன.

அரசர்களுக்குமட்டுமே கொடியுண்டெனக் கருதவேண்டா. தெய்வங்களுக்கும் கொடி உண்டு. சிவபெருமானுக்கு ஏற்று(ரிஷப)க்கொடி. திருமாலுக்கு கருடக்கொடி, முருகனுக்குச் சேவற்கொடி கோயில்களில் பலிபீடத்தருகே கொடிமரம் நாட்டப்பட்டிருக்கும். இதனை துவஜஸ்தம்பம் என்பர். துவஜம்-கொடி. ஸ்தம்பம்- மரம். திருவிழாவிற்கு முன் கொடி ஏற்றப்படும். திருவிழாவே கொடியேற்றத்துடன் தான் தொடங்கும்.

துறவிகளுக்கும் கொடி உண்டு. துறவியர் கொடி காவிக்கொடி. பற்றுகளை வென்றோம் என்பதற் கடையாளமாகத் துறவிகள் காவிக் கொடி பிடிக்கின்றனர்.

### சன்மார்க்கக் கொடி

இனி, சன்மார்க்கக் கொடிக்கு வருவோம். இதுவரை கூறிய கொடிகள் அனைத்தும் புறத்தே விளங்குபவை. சன்மார்க்கக்கொடி நம் அகத்தே விளங்குவது. மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையில் 22.10.1873ஸ்ரீமுக ஆண்டு ஐப்பசித் திங்கள் 7ஆம் நாள் புதன் கிழமை காலை 8 மணிக்கு சன்மார்க்கக் கொடியை முதன் முதலில் கட்டிக் காட்டி அங்குக் கூடியிருந்தவர்களுக்கு நீண்ட உப்தேசம் ஒன்றையும் அடிகள் செய்தருளினார்கள். ஐப்பசி மீ7உ புதவாரம் பகல் 8-மணிக்கு மேட்டுக்குப்பம் என்னும் சித்திவளாகத் திருமாளிகையில் முதல் முதல் கொடி கட்டினவுடனே நடந்த விகாரத்தின் குறிப்பு என்ற தலைப்புடன் அவ்வுபதேசத்தை



RangaRakes tamilnavarasam.com

அன்பர் ஒருவர் எழுதிவைத்துள்ளார். அதனுள் கொடியைப் பற்றிக் கூறும் பகுதி பின்வருமாறு.

இக்காலமே சன்மார்க்கக் காலம். இதற்குச் சாஷியாக இப்போதுதான் சன்மார்க்கக் கொடி கட்டிக்கொண்டது. அக்கொடி இப்போதுதான் கட்டிக்கொண்டது. அக்கொடி உண்மையில் யாதெனில்: நமது நாபி முதல் புருவமத்தி ஈறாக ஒரு நாடியிருக்கிறது; அந்த நாடி நுனியில் புருவமத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது; அதன் அடிப் புறம் வெள்ளை வர்ணம்; மேற்புறம் மஞ்சள் வர்ணம். அச்சவ்வின் கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது; இக்கொடி நம் அனுபவத்தின் கண் விளங்கும். இவ்வடையாளக் குறிப்பாகவே இன்றையதினம் அடையாள வர்ணமான கொடி கட்டியது. இனி எல்லவர்க்கும் நல்ல் அநுபவம் அறிவின் கண் தோன்றும். உண்மை சொல்ல வந்தனவனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்து கொள்வாரில்லை. கொடி கட்டிக்கொண்டபடியால் இனி எல்லோரும் உண்மையை அறிந்து கொள்வார்கள்.

இதனால் சன்மார்க்கக் கொடி இன்னதென்பது நன்கு விளங்கும். நமது உடலினுள் நாபி(கொப்பூள்)யிலிருந்து புருவமத்தி வரை ஒரு நாடி இருக்கிறது. இந்த நாடியே கொடிமரம். இந்த நாடியின் நுனியில் புருவமத்தியில் ஒரு சவ்வு தொங்குகிறது. இந்தச் சவ்வே கொடி. அதன் அடிப்புறம் வெள்ளை, மேற்புறம் மஞ்சள் என அடிகள் கூறியுள்ளனர். அளவு கூறவில்லை. கொடியின் அகலத்தில் மூன்றில் ஒருபங்கு மஞ்சள் என்றும் இரண்டு பங்கு வெள்ளை என்றும் சன்மார்க்கிகள் இப்போது வழங்கிவருகிறார்கள். இதற்கு ஆதாரம் அடிகள் உபதேசக் குறிப்பில் இல்லை.

இனி சன்மார்க்க கொடியின் சிறப்பை ஒருவாறு நோக்குவோம். இது புறந்தே விளங்கும் கொடியன்று, அகத்தே விளங்குவது என்பதை முன்னரே கூறினோம். இக்கொடி கண்ணாற் கண்டறியக் கூடியதன்று, அகமுக அனுபவத்தாலறிய வேண்டுவதாகும். நமது உடலில் மூலாதாரம், சுவாதிட்டானம்,மணிபூரகம், அனாகதம்,விசுத்தி, ஆக்ஞை என் ஆறு ஆதாரங்கள் உள்ளன. மூலாதாரம் குதத்திற்கும் கோசத்திற்கும் நடுவிலும், சுவதிட்டானம் கோசத்திற்கும் நாபிக்கும் நடுவிலும் உள்ளன. மணிபூரகம் நாபியும்,அனாகதம் இருதயமும்,விசுத்தி கண்டத்தானமும் ஆக்ஞை புருவமத்தியும் ஆம். நமது உடலில் புருவ மத்தி மிகச் சிறந்த இடம். நெற்றி ஆன்ம விளக்க முடையது. அதிலும் புருவமத்தி ஆன்ம ஒளி விளங்குவது. அதனாற்றான் நெற்றியில் சமயக்குறிகளைக் தரிக்கும் வழக்கத்தை நம் நாட்டவர் பண்டுதொட்டே ஏற்படுத்தியுள்ளனர். புருவமத்திக்கு விந்துஸ்தானம், அறிவிடம், லலாடஸ்தானம், பாலம்,. முச்சுடர்,முச்சந்தி,முப்பாழ்,நெற்றிக்கண்,கபாடஸ்தானம்,சபாத்துவாரம்,மகாமேரு,சிற்சபை,புருவமத்திய மூலம் எனப் பல பெயர்கள் தத்துவ நூல்களிற் காணப்படும்,புருவ மத்தியத்தானத்தின் அனுபவம் திரயோதசாந்தம் வரை உண்டு.இப்புருவமத்தியனுபவம் ஞானிகளுக்கே கிட்டும். அடிகள் புருவமத்திய அனுபவம் பெற்றே அதனடையாளமாக அகத்தில் விளங்கும் கொடியைப் புறமுகத்தில் கட்டிக்காடினார்கள்.

முன்னைய ஞானிகள் எவரும் தம்கொள்கைக்குத் தனிக்கொடி கண்டதில்லை. அடிகள் ஒருவரே தமது மார்க்கத்திற்குத் தனிக்கொடி கண்டனர்.



RangaRakes tamilnavarasam.com

**"கொடி கட்டிக் கொண்டோ மென்று சின்னம்பிடி
கூத்தாடுகின்றோமென்று சின்னம்பிடி"**

என்று பாடினர்.

### பேருபதேசம்

கொடிகட்டிய அன்று அடிகள் நீண்டதோர் உபதேசத்தை அன்பர்களுக்குச் செய்தருளினர். மஹோபதேசம் என வழங்கும் அப்பேருபதேசம் வருமாறு.

### மஹோபதேசம்

ஸ்ரீமுக வருஷம், ஐப்பசிமீ,௪௨,புதவரம், பகல் அ மணிக்கு,
மேட்டுக்குப்பம் என்னும் சித்தி வளாகத் திருமாளிகையில்
முதல் முதல் கொடி கட்டினவுடனே நடந்த விவகாரத்தின்

குறிப்பு

இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்தது போல் இனியும் வீண்காலம் கழித்துக்கொண் டிராதீர்கள். இது முதல் சாலைக்கு ஆண்டவர் போகிற-பத்துத் தினமாகிய கொஞ்சர் காலம்-வரையில், நீங்க ளெல்லவரும் நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள். அந்த விசாரணை எது வென்றால்; நம் நம்முடைய நிலை யெப்படிப்பட்டது? நமக்கு மேல் நம்மை யதிஷ்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை யெப்படிபட்டது? என்று விசாரிக்கவேண்டியது. அதற்குத் தக்கபடி, நீங்கள் ஒருமித்தாவது, அல்லது தனித்தனியாகவாவது, உங்களறிவிற்கும் ஒழுக்கத்துக்கும் ஒத்தவர்கள்டன் கூடியாவது, அல்லது-வேலாயுத முதலியாரைக் கேட்டால் மனுஷ்ய தரத்தில் போதுமான வரையில் சொல்லுவார்-அவரிடம் அப்படிக் கேட்டாவது நல்ல விசாரணையி லிருங்கள். அல்லது, தனியாகவும் விசாரிக்கல்லாம். இவ்விசாரணை முகத்திலிருந்தால், நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக்கொண்டிருக்கின்ற அனந்தத் திரைகளில் அழுத்தமாயிருக்கின்ற முதல் திரையாகிய பச்சைத் திரை முதலில் நீங்கிவிடும். அது நீங்கினால், மற்றத் திரைகள் அதிக விரைவில் நீங்கிப்போய்விடும். அந்தம் பசுமை வர்ணம் எப்படிப்பட்ட தென்றால், கருமைக்கு முதல் வர்ணமான பசுமையாக இருக்கின்றது. இப்படிப்பட்ட அழுத்தமான திரை நீங்கவேண்டுமென ஸ்தோத்திரித்தும், தெய்வத்தை நினைத்தும், நமது குறையை ஊன்றியும் - இவ்வண்ணமாக, இருகின்றபோதும் படுக்கின்றபோதும் இடைவிடாது இவ் விசாரத்தோடு ஆண்டவர் நமக்குண்மை தெரிவிக்கவேண்டுமென்கின்ற முயற்சியுடனிருந்தால், தெரிய வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம்.

அவ்விசாரம் பரம் அபரம் என்று இரண்டு வகையாயிருக்கின்றது. இவற்றில் பரம் பரலோக விசாரம், அபரம் இகலோக விசாரம். இவ்விரண்டில் இகலோக விசாரம் விசார மல்ல. சாதாரணமாக ஒருவன் விசாரம் செய்து கொண்டிருக்கின்றானேயென்றால், அவ்விசாரம் விசார மாகாது, உண்மை விசாரமுமல்ல. ஏனெனில்; விசார மென்கின்றதற்குப் பொருள்; வி-சாரம் என்பதில் வி சாதாரண உலக விசாரத்தை மறுக்க வந்தது; அது மேலும் பரலோக விசாரத்தையே குறிக்கும் பொருட்டு வந்தது. ஜலத்தி லிருக்கின்ற பாசியை நீக்குவதுபோல், நமது ஆன்மாவைத் தெரியவொட்டாமல் மூடியிருக்கின்ற பச்சைத் திரையாகிய ராகாதிகளை விசார அதியுஷ்ணத்தாலல்லாது மற்ற உஷ்ணங்களால்



RangaRakes tamilnavarasam.com

நீக்கமுடியாது. அந்த உஷ்ணம் யோகினுடைய அனுபவத்தில் தெரியும். அதை மனுஷ்ய தரத்தில் உண்டு பண்ணுவதற்கு தெரியாது. அந்த விசாரத்தைவிட ஆண்டவரை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் தெய்வத்தை நினைக்கின்றதிலும் அதிக உஷ்ணம் உண்டாகும். யோகிகள் வனம் மலை முழை முதலியவற்றிற் போய், நூறு ஆயிரம் முதலிய வருஷகாலம் தவஞ் செய்து இவ்வுஷ்ணத்தை உண்டு பண்ணிக் கொள்கிறார்கள். இப்படித் தவம் செய்து உஷ்ணத்தை உண்டுபண்ணிக் கொள்கிறதைப் பார்க்கிலும், தெய்வத்தை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் நினைக்கின்றதிலும்-இதை விடக்-கோடிப்பங்கு பத்துக்கோடிப் பங்கு அதிகமாக உஷ்ணம் உண்டுபண்ணிக் கொள்ளலாம். எவ்வாறெனில்; ஒரு ஜாம நேரம் மனத்தில் இக விசார மின்றிப் பர விசாரிப்புடன் ஆன்ம நெகிழ்ச்சியோடு தெய்வத்தைச் சிந்தித்துக்கொண்டாவது அல்லது ஸ்தோத்திரம் செய்துகொண்டாவதிருந்தால், நாம் பெற வேண்டியதைப் பெற்றுக்கொள்ளலாம். ஆதலால், இவ்வுலகத்தில் வி-சார மென்கின்ற உண்மை தெரியாது. விசாரமென்று வழங்கி, அதைத் துக்கமென்றே சொல்லுவார்கள். நாம் அப்படி அர்த்தம் பண்ணக்கூடாது அவர்கள் பண்ணுகின்றது-துக்கமே விசாரமென்கிறது--தப்பு; அவ் வர்தமுமன்று. சாரமென்கின்றது துக்கம். விசாரமென்கின்றது துக்க நிவர்த்தி. வி உப சர்க்கம். சாரமென்கின்றது முன் சொன்னபடி பரலோக விசாரத்தையே குறிக்கின்றது. ஆதலால், இடைவிடாது நாம் விசார வசத்தரா யிருக்கவேண்டியது. மேலும், வி-சார மென்பது; வி-விபத்து; சாரம்-நீக்குதல், நடத்தல். ஆதலால் இடைவிடாது நான் முயற்சியின் கண் பயிலுதல் வேண்டும்.

மேலும் சிலர் ' இது ஆண்டவர் வருகின்ற தருணமாக இருக்கின்றதே! இத்தருணத்தில் முயற்சி செய்வானேன்? ஆண்டவர் வந்தவுடனே பெற வேண்டியதை நாம் பெற்றுக் கொள்ளப்படாதோ?" என்று வினவலாம். ஆம் இஃது-தாம் வினவியது நலந்தான். ஆண்டவர் வரப்போகின்றது சத்தியந்தான். நம்மவர்களின் திரை நீங்கப் போகின்றதும் சத்தியந்தான். நீங்களெல்லவரும் பெற வேண்டியதைப் பெற்றுக்கொள்ளுகின்றதுஞ் சத்தியந்தான். ஆனால், முன்சொன்ன ராக சம்பந்தமான பச்சை திரை இரண்டு கூறாக இருக்கிறது. யாவெனில்; அசுத்த மாயா திரை சுத்த மாயா திரையென்னும் இரண்டுமாம். இவை கீழ்ப் பாகத்திலொரு கூறும் மேற்பாகத்தி லொரு கூறுமாக இருக்கும். கீழ்ப்பாகத்திலுள்ளது அசுத்த மாயா திரை. மேற் பாகாத்தில் சுத்த மாயா திரை இருக்கும். இவற்றில் அசுத்த மாயா திரை இக லோக போக லஷிய முடையது. சுத்த மாயா திரை பரலோக சாத்தியத்தை யுடையது. இவற்றில்-ஆண்டவர் வந்து அனுக்கிரகஞ் செய்கின்றபோது, முயற்சி யில்லாத சாதாரண மனுஷ்யர்க ளுடைய கீழ்ப்பாத்திலி ருக்கிற அசுத்த மாயையென்னும் பச்சைத்திரையை மாத்திரம் நீக்குவார். ஆதலால், அக்காலத்தில் நாம் அத் திரை நீங்கியவுடன் கூடிய வரையில் சுத்தமாய்ப் புனிதர்களாக இருக்கலாமே யல்லது, பெற வேண்டியதைப் பெற்றுக்கொள்ளுகிறதற்குக் கூடாது. மேலும் பஞ்சகீர்த்திய விபவங்களும் இதர சித்தி முதலியவையும் ஆன்மானுபவத்தையும் செய்யவும் பெறவும் கூடாது. பின்னும் நன் முயற்சி செய்தே மேலேற வேண்டும்.

மேலும் இத்தருணம் இங்கு உண்டாகும் கூச்சல் முதலியவையும் அடுத்தவர்களுக்குப் பக்குவம் வருவிக்கவும் பாவிகளை விலக்கவும் உண்டாயின. ஆதலால், நாம் எல்லவரும் இத் தருணம் இப்போதே விசேஷ நன்முயற்சியுடனே இருந்தால் ஆண்டவர் வருகிறபோது, நம் கீழ்ப்பாகத்திலுள்ள அசுத்த மாயா திரையோடு கூடி மேற் பாகத்திலிருக்கிற சுத்த மாயையினுடைய பச்சைத் திரையும் நீங்கிப்போய் விடும். கருமையிற் பச்சை வண்ணமுடையது அசுத்த மாயா

திரை. பொன்மையிற் பச்சை வண்ணமுடையது சுத்த மாயா திரை கருமையிற் பச்சை வண்ணமுடைய அசுத்த மாயா திரை நீங்கினபிறகு, மற்ற எட்டுத் திரைகளும் அதிக விரைவில் நீங்கிப்போய்விடும். இத்திரைகளின் விவரத்தைத் திருவருட் பெருஞ் ஜோதி அகவலில் கண்டுணர்க. மேலும், இது நீங்கினவுடனே ஒருவன் பஞ்ச கீர்த்திய முதலானவையுஞ் செய்வான். ஆதல்லால் ஒவ்வொரு வரும் முயற்சியுடனே இருந்தால் அதற்குத் தக்க லாபத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கு மேற்பட, நாம் நாமும் முன்பார்த்தும் கேட்டும் லஷியம் வைத்துக்கொண்டிருந்த வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனென்றால், அவைகளில் ஒன்றிலாவது குழூஉக்குறி யன்றித் தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும், கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல் மண்ணைபோட்டு மறைத்து விட்டார்கள். அணுமாத்திரமேனும்ந் தெரிவிக்காமல், பிண்ட லக்ஷணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில்; கைலாசபதி என்றும் வைகுண்டபதி என்றும் சத்திய லோகாதிபதி யென்றும் பெயரிட்டு, இடம் வாகனம் ஆயுதம் வடிவம் ரூபம் முத்லியவையும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பதுபோல் அமைத்து, உண்மையாக இருப்பதாகச் சொல்லியிருக்கின்றர்கள். " தெய்வத்துக்குக் கைகால் முதலியன இருக்குமா? என்று கேட்பவர்க்கு பதில் சொல்லத் தெரியாது விழிக்கின்றார்கள். இஃது உண்மையாக இருப்பதாகவே-முன்னும் பின்னும் உள்ள பெரியவர்களென்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையை அறியாது, அப்படியே கண்ணை மூடிக்கொண்டு உளறியிருக்கிறார்கள். ஆனால், ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. இதுவரைக்கும் அப்படிப்பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை. அவைகளில் ஏகதேச கர்ம சித்திகளைக் கற்பனைகளாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக ஒவ்வொரு சித்திக்கும் பத்துவருஷம் எட்டுவருஷம் பிரயாசை எடுத்துக்கொண்டால், அற்ப சித்திகளை யடையலாம், அதற்காக அவற்றில் லஷியம் வைத்தல், ஆண்டவரிடத்தில் வைத்த லஷியம் போய்விடும். ஆண்டவரிடத்தில் வைத்த லஷியம் போய்விட்டால், நீங்கள் அடையப்போகிற பெரிய பிரயஜோனம் போய்விடும். அல்லது, அதில் முயற்சிசெய்து, அவ்வளவு காலம் உழைத்து, அந்த அற்பப் பிரயோஜனத்தை தெரிந்து கொண்டு, அதனால் ஒரு லாபத்தை ஏகதேசம் அடைந்தால் முக்கிய லாபம் போய்விடும். ஆகையால், அவைகளில் லக்ஷியம் வைக்காமல், ஆண்டவரிடத்திலேயே லகஷியம் வைக்கவேண்டியது. முன் சொன்ன ஏகதேச சித்தி கற்பனையென்கின்றது வாசகப் பெரு விண்ணப்பத்தாலும்,"இயல் வேதாகாமங்கள் புராணங்கள் " என்ற அருள் விளக்கமாலைப் பாசுரத்தாலு முணர்க. மேலும் அதிற்கண்ட குறிப்பையுந் தெரிந்து கொள்ளுங்கள்.

இது போல் வியாகரணம் தொல்காப்பியம் பாணிணீயம் முதலியவைகளில் சொல்லியிருக்கின்ற இலக்கணங்கள் முழுவதும் குற்றமே. அவைகளில் குற்றமே சொல்லியிருக்கின்றார்கள். எவ்வாறெனில்: தொண்ணுறு தொள்ளாயிரம் என்கிற கணிதத்தின் உண்மைத நான் சொன்ன பிறகு தெரிந்து கொண்டீர்களல்லவா? இப்படியே ஒன்று இரண்டு முதல் நூறு முதலான இலக்கங்களுக்கும் உகர் இறுதி வருவானேன்? ஒருவாறு சித்தர்கள் காரணப் பெயராக இட்டிருக்கிறார்கள். தொல்நூறு தொண்ணூறென்றும்,தொல் ஆயிரம் தொள்ளாயிரமென்றும் வழங்குகின்றன. தொ என்பது ஒன்று குறையத் தொக்கது. தொன்மை தொல்



RangaRakes tamilnavarasam.com

லெனப் பிரிந்தது. வழக்கத்தில் தொள்ளாயிரம் தொண்ணூறு என மருவியது. இதற்குப் பத்திடத்திற்கு ஓரிடம் குறைந்த முன் ஆயிர மென்றும், ஒன்று குறைந்த பத்தென்றும் ஒருவாறு கொள்க. இப்படி நான் சொன்னதுபோல் சொன்னால் சிறு குழந்தைகள் கூட அறிந்து கொள்ளும்.

இது போல், சைவம் வைணவம் முதலிய சமயங்களிலும் வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லக்ஷியம் வைக்க வேண்டாம். அவற்றில் தெய்வத்தைப்பற்றிக் குழூஉக் குறியாகக் குறித்திருக்கிறதே யன்றிப் புறங்கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமேயானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனெனில், அவைகளிலும்-அவ்வச் சமய மதங்களிலும்-அற்பப் பிரயஜோனம் பெற்றுக் கொள்ளக் கூடுமே யல்லது, ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கை யுண்மை என்னும் ஆன் மானுபவத்தைப் பெற்றுக் கொள்கின்றதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும் இவைகளுக்கெல்லாம் சாகஷி நானே யிருக்கின்றேன். நான் முதலில் சைவ சமயத்தில் லகஷியம் வைத்துக்கொண்டிருந்தது இவ்வள வென்று அளவு சொல்லமுடியாது. அது பட்டணத்துச் சுவாமிகளுக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலர்க்கும் தெரியும். அந்த லகஷியம் இப்போது எப்படிப் போய்விட்டது பார்த்தீர்களா! அப்படி லகஷியம் வைத்ததற்குச் சாகஷி வேறே வேண்டியதில்லை. நான் சொல்லியிருக்கிற-திருவருட்பாவில் அடங்கி யிருக்கிற - ஸ்தோத்திரங்களே போதும். அந்த ஸ்தோத்திரங்களையும் மற்றவர்களுடைய ஸ்தோத்திரங்களையும் சபைக்குக் கொண்டு வந்தால் அவைகளே சாகஷி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்த தென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது.

இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலைமேலேற்றியிருக்கின்றார். இப்போது எல்லாவற்றையும் விட்டு விட்டதினால் வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டு விட்டீர்களானால் என்னைப் போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துக் கொண்டிருந்தவர்கள் ஏதாவது லாபத்தைப் பெற்று கொண்டார்களா? பெற்றுக் கொள்ளவில்லை. நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லகஷியமே என்னை இந்த நிலையில் தூக்கிவிட்ட தென்றாலோ, அந்த லகஷியம் தூக்கிவிடவில்லை. என்னை இந்த இடத்துக்கு தூக்கிவிட்டது யாதெனில்: அக்காலத்திலேயே எனக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்தா ரென்று வாசகப் பெரு விண்ணப்பத்தினும் " எத்தேவரையும் நின் சாயையாய்ப் பார்த்ததே யன்றித் தலைவ வேறெண்ணியதுண்டோ" என "தேடியதுண்டு நினதுருவுண்மை" என்னும் தொடக்கமுடைய பதிகத்திலும் விண்ணப்பித் திருக்கின்றேன். மேலும் அவர் தெரிவித்த உண்மைப் பெருநெறி ஒழுக்கம் யாதெனில்: " கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக" என்றதுதான். என்னை யேறாநிலை மிசை யேற்றி விட்டது. யாதெனில் தயவு. தயவு என்னுங் கருணைதான் என்னைத் தூக்கிவிட்டது.

அந்தத் தயவுக்கு ஒருமை வரவேண்டும். அந்த ஒருமை இருந்தால்தான் தயவு வரும். தயவு வந்தால்தான் பெரிய நிலை மேல் ஏறலாம். இபோது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினாலேதன் வந்தது. நீங்களும் என்னைபோல் ஒருமையுடனிருங்கள். என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத்தனமாய் எப்படியிருந்தாலும், அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன்; மிரட்டிச் சொல்லுவேன்; தெண்டன் விழுந்து



RangaRakes tamilnavarasam.com

சொல்லுவேன்; அல்லது பொருளைக் கொடுத்து வசப் படுத்துவேன்; அல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன். இப்படி யெந்த விதத்திலேயாவது நல்வழிக்கு வரச் செய்து விடுவேன். நீங்கள் எல்லவரும் இப்படியே செய்தல் வேண்டும். இராத்திரிகூட "நான் இல்லாமல் இந்த ஜனங்கள் க்ஷண நேரம் இருக்க மாட்டார்களே என்று ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன். அது இங்கே இருக்கிற ஜனங்கள் மட்டில் மாத்திர மல்ல. உலகத்திலிருக்கிற எல்லா ஜனங்களையும் குறித்தே விண்ணப்பித்துக் கொண்டேன். ஏன் அப்படி ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன் என்றால்: எல்லவரும் சகோதரர்களாதலாலும், இயற்கை யுண்மை யேகதேசங்களாதலாலும், நான் அங்ஙனம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை வைத்துக்கொண்டிருக்கிறேன்.

இப்போது நீங்கள்-இதுவரைக்கும் ஒழுக்கத்துக்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷ்யர்களா யிருந்தாலும்-சாலைக்குப் போகக் கொஞ்ச தின மிருக்கின்றது-அதற் குள்ளாக நீங்கள் நீங்களும் நல்லொழுக்கத்திற்கு வருவதோடுகூட, மற்றவர்களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்விதத் தந்திரமாவது செய்து நம்மவர்களாக்கிக் கொள்ளவேண்டியதும். நீங்கள் கொஞ்ச தினத்திற்கு அப்படிச் செய்து கொண்டிருங்கள். நானும் ஆண்டவரிடத்தில் இவ் வுலகத்திலுள்ள எல்லா ஜீவர்களும் நன்மை யடையப் பிரார்த்தித்தும், ஆண்டவரிடத்தில் கேட்டுக்கொண்டும் வருகின்றேன். ஆதலால், நீங்கள் அப்படிச் செய்து கொண்டிருங்கள்.

சமயந் தவிர மதங்களில் உள்ள வேதாந்தி சித்தாந்தி யென்று பெயரிட்டுக்கொண்ட பெரியவர்களும் உண்மை யறியாது, சமய வாதிகளைப் போலவே ஒன்று கிடக்க ஒன்றை உளறுகிறார்கள். ஆதலால், நீங்கள் அஃது ஒன்றையும் நம்ப வேண்டாம். எவைகளிலும் தெய்வத்தைப் புறமுகமாகப் புலப்படச் சொல்லவில்லை. " தெய்வத்தைத் தெரிந்துகொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வமெனச் சுற்றுகின்றார்கள். ஐயோ! நம் சகோதரர்கள் தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாததினாலே யல்லவா நம்மைச் சுற்றுகிறார்கள்!" என்று நான் உள்ளும் புறமும் பரிதாபப்பட்டுக் கொண்டே இருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன். தெய்வத்தை ஏன் தெரிந்துகொள்ளவில்லை யென்றால், ஒரு பதார்த்தத்தை அனுபவித்தா லல்லது அந்தப் பதார்த்தத்தினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின்மேல் இச்சை போகாது. அதுபோல், தெய்வத்தை யுள்ளபடி அநுபவித்தா லல்லது, தெய்வத்தினிடத்தில் பிரியம் வராது. ஆதலால், தெய்வத்தத் தெரிந்து கொள்ளவேண்டு மென்கிற முக்கிய லக்ஷியத்தி லிருந்துகொண்டு விசாரஞ் செய்து கொண்டிருங்கள்.

அந்த விசாரம் செய்வது எப்படியென்றால்: அண்டத்தில் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள்-இவைகள் எப்படிப்பட்டன? இவைகளினுடைய சொரூப ரூப சுபாவம் என்ன? இவை முதலான அண்ட விசாரமும், பிண்டத்தில் நாம் யார்? இத் தேகத்தின்கண் புருவம் கைம்மூலம்-இவைகளிலும் இவைபோன்ற மற்ற இடங்களிலும் உரோமம் உண்டாவானேன்? நெற்றி முதலான இடங்களில் அது தோன்றாதிருப்ப தென்ன? கால் கைகளிலுள்ள விரல்களில் நகம் முளைத்தலும் அந் நகம் வளர்தலும்-இவை போன்ற மற்றத் தத்துவங்களினது சொரூப ரூப சுபாவங்களும் என்ன வென்னும் பிண்ட விசாரமுஞ் செய்து கொண்டிருங்கள். இப்படி இடைவிடாது விசாரஞ் செய்து கொண்டிருந்தால், இவ்வுலகத்தின்கணுள்ள ஜனங்கள் அதைகுறித்து ஏளனமாகச் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுவது அவர்களுக்குச் சுபாவம். ஏனெனில், அவர்களுக் உண்மை தெரியாது. ஆதலால் நீங்கள் அதை லக்ஷியம் செய்யக்கூடாது.

இப்படியே "காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வர விடுத்தவர்-ஆணுக்குக் கடுக்கனிடுதலும் பெண்ணுக்கு மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல் களிட்டு வரவிட்டிருக்க மாட்டாரா" என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுகிற பகஷ்த்தில், காதில் கடுக்கனிடவும் மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா? இப்படி விசாரித்துப் பிரபஞ்ச போகத்தின்கண் அலகஷியம் தோன்றினால், நிராசை உண்டாம். ஆதலால், சரியை முதலிய சாதகம் நான்கில், நான்காவது ஞானத்தில் சரியை கிரியை யோகம் ஞானம் என்கின்ற நான்கில், மூன்றாவது படியாகிய ஞானத்தில் யோகம் செய்கின்ற பலனாகிய நிராசை யென்னும்படி உண்டாகின்றது. ஆகையினாலே, இந்த விசாரத்தி லிருந்துகொண் டிருங்கள்.

இவ் விசாரஞ் செய்துகொண் டிருந்தால் ஆண்டவர் வந்தவுடனே கண்டமாக உங்களுக்கு தெரிவிக்க வேண்டியதைத் தெரிவிப்பார். மறுபடியும் உங்களுக்கு உரிமை வந்தவுடனே அகண்டமாகத் தெரிவிப்பார். ஆதலால் நீங்கள் இந்த முயற்சியிலிருங்கள். இரண்டரை வருஷமாக நான் சொல்லிக்கொண்டு வந்தேன். இனிச் சொல்பவர்கல் சில நாள் சொல்லிக்கொண்டு வந்தேன். இனிச் சொல்பவர்கள் சில நாள் தடைபட் டிருப்பார்கள். இனி நீங்கள் இதுவரைக்கும் இருந்ததுபோல் இராதீர்கள். இது கடைசிவார்த்தை. இது முதல்-கொஞ்ச காலம்-சாலைக்குப் போகின்றவரைக்கும், ஜாக்கிரதையாக மேற் சொன்ன பிரகாரம் விசாரஞ் செய்துகொண்டிருங்கள்.

மேலும், சமய மதங்களில் தெய்வத்தினது உண்மையைக் குழூஉக்குறியால் குறித்து, அக்குறிப்பையும் வெளிப்படையாகக் காட்டாது, சிவாய நம என்றும், நமசிவாய என்றும், இது போன்ற அனந்த வர்ணங்களைச் சேர்த்து, ஒன்று,இரண்டு மூன்று ஐந்து ஆறு எட்டு பத்து பதின்மூன்று பதினைந்து பதினாறு இருபத்து நான்கு முதலிய சங்கையில் மந்திரங்களாய் அமைத்து வழங்கி வருவிக்கவிட்டு நடந்து வ்ருகின்றது. அவ்வவ் மந்திரங்களின் அர்த்தம் பலவாக விரியும். ஆதலால் நாம் அடைய வேண்டுவது முடிவான ஆன்மலாப மாகிய சிவானுபவமே யன்றி வேறில்லை. இங்குள்ள எல்லவர்க்கும் சுவர்க்க நரக விசார மில்லை. சுவர்க்க நரக விசார முள்ளவர்கள் தங்கள் கருத்தின்படி பலவகைச் சாதனங்களைச் செய்து அற்ப பிரயோஜனத்தைப் பெற்று, முடிவில் தடைப்பட்டு திருவருட்டுணையால் கருணை நன் முயற்சி யெடுத்துக்கொண்டு, பின் முடிவாட சித்தி இன்பத்தைப் பெறுவார்கள். அஃது அருமை.

இத் தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு, முடிவான இன்பானுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகா வாக்கியத் திருமந்திரத்தை-தமது உண்மையை வெளிப்படக் காட்டும் மகா மந்திரு வாக்கியத்தை-எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய்யறிவின்கண் அனுபவித்தெழுந்த-உண்மை யறி வநுபவாநந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என் போல் ஐயம் திரிபு மயக்கம் இன்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்ம நேய உரிமைப்பாட் டுரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன்! குறிப்பிக்கின்றேன்; குறிபிப்பேன். நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில்; நமக்கு முன் சாதனம் கருணை யானதினாலே, ஆண்டவர் முதற்சாதனமாக,

**அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி**
**தனிப்பெருங்கணை அருட்பெருஞ் ஜோதி**



RangaRakes tamilnavarasam.com

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந் தயவுடைய பேரறிவே யாம். இஃது வாச்சியார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால், முடிவான இன்பானுபவம் பெறுவதற்குத் தடையில்லை. "சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்" என்னும் பிரமாணத்தால் உணர்க.

**{79.சந்ததமும் வேதமொழி யாதென்று பற்றினது**
**தான்வந்து முற்றும்எனலால்**
**சகமீ திருந்தாலும் மரணமுண் டென்பது**
**சதாநிஷ்டர் நினைவதில்லை**
**சிந்தி யறியார்க்கீது போதிப்ப தல்லவே**
**செப்பினும் வெகுதர்க்கமாம்**
**திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள்**
**சித்தாந்த நித்யலரோ?**
**இந்தராதி தேவதைகள் பிரமாதி கடவுளார்**
**இருக்காதி வேதமுனிவர்**
**எண்ணறிய கண நாதர் நவநாத சித்தர்கள்**
**இரவிமதி யாதியோர்கள்**
**கந்தருவத் கின்னரர்கள் மற்றையர்க ளியாவரும்**
**கைகுவித்த் திடுதெய்வமே**
**கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு**
**கருணாகரக் கடவுளே.**

**தாயுமான சுவாமிகள்-கருணாகரக் கடவுள்7**

மேலும், இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது, அசுத்த மாயா காரிகளாகிய சித்தர்கள் மறைத்து விட்டார்கள். சுத்த மாயா காரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால், அனுபவித்தறியாத அனுபவமும் கேட்டறியாத கேள்வியும் நாம் கேட்டிருப்போம். மேலும், இறந்தவர்கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால், கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத்தருணமே. ஆதலால், இத் தருணம் இக் காலமே சன்மார்க்க காலம்.

இதற்கு சாஷியாக இப்போதுதான் சன்மார்க்க கொடி கட்டிக்கொண்டது. அக்கொடி இப்போதுதான் கட்டிக்கொண்டது. அக்கொடி உண்மையில் யாதெனில்; நமது நாபி முதல் புருவமதி ஈறாக ஒரு நாடியிருக்கின்றது; அந்த நாடி நுனியில் புருவமத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது; அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம்; மேற்புறம் மஞ்சள் வர்ணம்; அச் சவ்வின் கீழ் ஒரு நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது; இக்கொடி நம் அனுபவத்தின் கண் விளங்கும். இவ் அடையாளாக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளிமுகத்தில் அடையாள வர்ணமான கொடி கட்டியது. இனி எல்லவர்க்கும் நல்ல அநுபவம் அறிவின் கண் தோன்றும்.



RangaRakes tamilnavarasam.com

உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்துகொள்வாரில்லை. கொடி கட்டிக் கொண்டபடியால், இனி எல்லோரும் உண்மையை அறிந்துகொள்வார்கள். முன் உள்ளவர்கள் உண்மையைத் தெரிய வொட்டாது மண்ணைப் போட்டு மறைத்து மறைத்து விட்டார்கள். இத் தருணம் ஆண்டவரும் தெரிவித்தார், தெரிவிக்கின்றார், தெரிவிப்பார். நீங்கள் எல்லவரும் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். இப்போது நான் சொல்லி வந்த பிரகாரம் ஜாக்கிரதையுடன் உண்மை யறிவாய் விசாரம் செய்துகொண்டிருங்கள். அவசியம் இதற்குக் காரணமான தயவிருக்க வேண்டியது. அந்தத் தயவு வருவதற்கு ஏதுவான உரிமையும் கூட இருக்கவேண்டும். இப்படி இருந்து கொண்டிருந்தால் ஆண்டவர் வந்தவுடனே எல்லா நன்மையையும் பெற்றுக்கொள்வீர்கள். இது சத்தியம், சத்தியம், சத்தியம், இஃது ஆண்டவர் கட்டளை.

எல்லோர்க்கும் தாய் தந்தை அண்ணன் தம்பி முதலான ஆப்தர்கள் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ, அதற்குக் கோடி கோடிப் பங்கு அதிகமாக உதவி கொடும்படியான இடம் இந்த இடம். இது ஆண்டவர் கட்டளை.

**அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

மஹோபதேசம் முற்றிற்று.

## சித்திவளாகத்தில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகள்

### இறைவன் இரட்டைக்குதிரை வண்டியில் வந்து அருளியது

ஒருநாள் இறைவன் அம்மையோடும் இரட்டைக் குதிரை வண்டியில் அடிகள் இருக்குமிடத்திற்கு வந்தான். அப்போது அடிகள் அறைக்குள் இருந்தனர். வெளியே யாரோ வருவதைக் கண்டதும் யாரோ எவரோ என்னும் அச்சத்தோடு உள்வாயில் தாழ்க்கோலைப் பற்றியவராய் அறைக்குள் நின்றிருந்த அடிகளை 'வா' என்று கையை அசைத்து அழைத்து இறைவன் அருள் செய்தான். இந்நிகழ்ச்சியினை கூறம் அகச் சான்றாகிய பாடல்.

**எருதின் உழைத் திருந்தேனுக் கிரங்கிஅடிச் சிறியேன்**
**இருந்த இடந் தனைத்தேடி இணைப்பரிமான் ஈர்க்கும்**
**ஒருதிருத்தேர் ஊர்ந்தென்னை உடையவளோ ட்டைந்தே**
**உள்வாயில் தாழ்படித்துப் பயத்தொடுநின் றேனை**
**வருதிஎனத் திருக்கரங்கள் அசைத்தழைத பதியே**
**மணியா என் மருந்தேஎன் வாழ்வேஎன் வரமே**
**சுருதிமுடி அடிக்கணிந்த துரையே என் உளத்தே**
**சுத்தநடம் புரிகின்ற சித்தசிகாமணியே.**

**-6(முடி)திருநடப்புகழ்ச்சி4.**

என்பதாம். திருவருளைப் பெறுவதற்குத் தாம் மாடுபோல் உழைத்ததை எருதின் உழைத்திருந்தேனுக்கு என்று கூறுகின்றார்கள். உழைப்பில் சிறந்தது எருது.



RangaRakes tamilnavarasam.com

மாடுபோல் உழைக்கின்றான் என்பது உலகில் எளிதாக வழங்குவதே. அடிகளும் திருவருளைப் பெறுவதற்கு மாடுபோல் உழைத்தார்கள். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? அடிகளின் உழைப்பிற்கு இரங்கிய இறைவன் இரட்டைக் குதிரை வண்டியில் எழுந்தருளி வந்தான். 'இணைப்பரிமான் ஈர்க்கும் ஒரு திருத்தேர் ஊர்ந்து' என்பதைக் காண்க. பரிமான் - குதிரை. இணைப்பரிமான் - இரண்டு குதிரைகள், திருத்தேன் - வண்டி. அக்காலத்தில் 'சாரட்' என்ற ஒரு வகை வண்டி வழங்கியது. சாரட் என்பது CHARIOT என்ற ஆங்கிலச் சொல்லின் மரூஉ. இது இரட்டைக் குதிரைகளால் இழுக்கப்படுவது. 'இரட்டைக் குதிரை சாரட்' என்பர் செல்வந்தர் இரட்டைக் குதிரை சாரட் வைத்திருப்பர். ஊர்வலங்கள் முதலியன இரட்டைக் குதிரை சாரட்டிலேயே நிகழும். இறைவனும் இரட்டை குதிரை சாரட்டில் வந்தான். தான் மட்டும் வரவில்லை, இறைவியோடும் வந்து அருள் செய்தான். ' என்னை உடையவளோடு அடைந்தே. என்பதைக் காண்க.

## முட ஆட்டுக் குட்டியின் அன்பும் அடிகளின் அறக் கருணையும்

மேட்டுக்குப்பத்தில் அடிகள் உபதேசஞ் செய்யுங் காலங்களில் குட ஆட்டுக் குட்டி ஒன்று அன்பர்களது கூட்டத்தில் ஓரமாக நின்று கண் இமையாது காதைச் சாய்த்துக்கொண்டு உபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருக்கும். உபதேசக் கூட்டம் முடிந்து அன்பர்கள் சித்திவளாகத்தை வலம் வரும்போது முடக் காலோடு நொண்டிக் கொண்டே தானும் அவர்களோடு வலம் வரும். நாள் தோறும் கருங்குழியிலிருந்து தமக்காக வரும் உணவை அடிகள் இம் முட ஆட்டுக் குட்டிக்கும் முடவராகிய ஆசிரியர் ஒருவர்க்கும் அளிக்கச் செய்வது வழக்கம். அடிகளது திருவுருவப் படத்தில் பின்னணியாக அமைந்திருக்கும் சாலை சபை சித்திவளாகம் ஆகியவற்றுடன் இந்த முட ஆட்டுக் குட்டியையும் காணலாம். அடிகளது திருவுள்ளத்தில் அன்று இடம் பெற்று, திருவுருவப் படத்தில் இன்றும்-என்றும் இடம் பெற்றிருக்கும் அந்த முட ஆடு மறுமையில் மக்கட் பிறப்பு எய்தியிருக்கும் என்பது உறுதி. அடிகளது அருளைப் பெறுவதற்கு அம் முட ஆட்டுக் குட்டி என்ன புண்ணியம் செய்ததோ?

## வலைஞர்க்குக் காட்டிய மறக் கருணை

மேட்டுக்குப்பத்தில் மீன் வலஞர் இருவர் இருந்தனர். வலை வீசப் புறப்படும் அவ்விருவரும் சித்திவளாகத்தின் வழியாகவே செல்வர். வலையும் கையுமாக அவர்கள் நாள்தோறும் அவ்வழியே செல்வதைக் காண்பதற்கு அடிட்கள் அஞ்சினார்கள். 'வலையும் தூண்டிலும் கண்ணி வகைகளும் கண்டபோதெல்லாம் என் உள்ளம் நடுங்கிய நடுக்கம் நின் திருவுளம் அறியும்' என்பது அடிகள் வாக்கன்றோ.

**துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்**
**தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்**
**கண்ணினால் ஐயோ பிறஉயிர் பதைக்கக்**
**கண்டகா லத்திலும் பதைதேன்**



RangaRakes tamilnavarasam.com

**மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி**
**வகைகளும் கண்டபோதெல்லாம்**
**எண்ணிஎன் உள்ளம் நடுங்கிய நடுக்கம்**
**எந்தையின் திருவுளம் அறியும்.**

**-6(முன்) பிள்ளைப்பெருவிண்ணப்பம்65**

வலைஞரின் கொலைத் தொழிலைக் காணப் பொறாத அடிகள் அவர்களை அழைத்து 'வேறு பல நல்ல் தொழில்கள் இருக்கும்போது கொலைத் தொழிலாகிய இவ் வலைத் தொழில் எதற்காக, இதனை விடுத்து வேறு தொழில் செய்து வாழுங்கள்' எனப் பல முறை அறிவுறுத்தினர். வலைஞர்கள் செவி சாய்த்திலர். பின்பு ஒரு நாள் அடிகள் அவர்களை அழைத்து 'நீங்கள் வீசுவது சிறுவலையா, பெரு வலையா' என்றனர். வலைஞர்கள் சிறுவலை எனக் கூறினர். சிறு வலையால் சிறு பொருளையே பெறலாம் பெரும் பொருள் பெற்றுப் பெரு வாழ்வு வாழ வேண்டுமாயின் பெரு வலை வீசுங்கள் என அடிகள் செப்பவே, வலைஞர்கள் பெரு வலையைத் தங்களுக்குத் தந்துதவுமாறு வேண்டினர். பெருவலை என்பது அன்பு, அன்பு வலைய வீசினால் அதற்குள் ஆண்டவனே அகப்படுவான் என்று அடிகள் அருளினர். அடிகளின் கருத்தை உணர்தற்கியலாத வலைஞர்கள் இது வழக்கமாகச் சுவாமிகள் சொல்லுவதுதானே என்று பொருட்படுத்தாது தம் வழிச் சென்றனர். அன்றுமுதல் வலை வீசச் செல்லும் போது சித்திவளாகத்தின் வழியே சென்றால் அடிகள் கண்ணிற்பட்டுவிடுவோம், ஏதாவது சொல்வார்கள் என்று எண்ணி வேறு வழியாகச் செல்வராயினர். சென்று வலை வீசலும் மீன்கள் அகப்படவில்லை. வலையும் அறுந்தது. ஒருநாளன்றிப் பலநாளும் இவ்வாறே ஆயிற்று. மீண்டும் மீண்டும் வலை அறுதலையும் மீன்கள் அறவே அகப்படாதொழிதலையும் கண்ட வலைஞர்கள் இது அடிகளது செயல் என்று அஞ்சி வலைத் தொழிலை விடுத்தனர்.

'என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத் தனமாய் எப்படியிருந்தாலும் அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன், மிரட்டிச் சொல்லுவேன், தெண்டன் விழுந்து சொல்லுவேன், அல்லது பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன், அச்ல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன், இப்படி எந்த விதத்திலேயாவது நல்வழிக்கு வரச்செய்து விடுவேன்' என அடிகள் தமது உபதேச மொன்றில் கூறியுள்ளனர். வடலூரில் அமாவாசையையும் படையாச்சிகள் இருவரையும் புலால் நீக்கச் செய்தது பொருள் கொடுத்து வசப்படுத்தும் வகையைச் சேர்ந்தது. மேட்டுக்குப்பத்தில் வலைஞர்களைத் திருத்தியது மிரட்டி நல்வழிக்கு வரச்செய்ததாம்.

அனைவர்க்கும் அறக் கருணையே பாலிக்கும் அடிகள் இன்றியமையா இடங்களில் மறக் கருணை காட்டியும் சன்மார்க்கம் பரப்பினர் என்பது இதனால் விளங்கும்.

## அடிகள் பட்ட அரும்பாடுகளும் பெற்ற பெரும் பேறுகளும்

### அடிகள் பட்ட அரும்பாடு



RangaRakes tamilnavarasam.com

அருள் பெறுவதற்காக அடிகள் அரும்பாடு பட்டார்கள். படாத பாடுபட்டார்கள். தான் பட்ட பாட்டையெல்லாம் தமது பாடல்களில் உருக்கமாகக் கூறுகின்றார்கள். ஒன்பதாம் ஆண்டில் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற அடிகள் பன்னிரெண்டாம் அகவை முதல் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கினார்கள். ஐம்பத்தோராம் அகவையில் ஞானசித்தி பெற்றார்கள். பன்னிரெண்டாண்டு தொடங்கி ஐம்பத்தோராம் ஆண்டு வரை, முப்பத்தொன்பதாண்டுக் காலத்தில் அடிகள் பட்ட பாடுகள் பல.

**பனிரண் டாண்டு தொடங்கி யிற்றைப்**
**பகலின் வரையுமே**
**படியிற் பட்ட பாட்டை நினைக்கின்**
**மலையுங் கரையுமே**
**ஈராறாண்டு தொடங்கி யிற்றைப்**
**பகலின் வரையுமே**
**எளியேன் பட்ட பாட்டை நினைக்கி**
**லிரும்புங் கரையுமே**

**-கீர்த்தனை, எனக்கும் உனக்கும்78-79**

என்று கூறுவதை நினைக்கும்போது நம் கல் நெஞ்சமும் கரையும். 'பன்னிரண்டாண்டு தொடங்கி இற்றைப் பகல் வரை அடைந்தவை எல்லாம் உன்னி நின்றுரைத்தால் உலப்புறாததனால் ஒரு சில உரைத்தனன்' எனப் பிள்ளைப் பெரு விண்ணப்பத்திலும்(126)கூறுவர். உனது அருளை அடைவதற்குப் படாத பாடெல்லாம் பட்டனன், அந்தப் பாடெலாம் நீ அறியாயோ என்பார்.

**அடாதகா ரியங்கள் செய்தனன் எனினும்**
**அப்பநீ அடியனேன் தன்னை**
**விடாதவா றறிந்தே களித்திருக் கின்றேன்**
**விடுதியோ விட்டிடு வாயேல்**
**உடாதவெற் றரைநேர்ந் துயங்குவேன் ஐயோ**
**உன்னருள் அடைய நான் இங்கே**
**படாதபா டெல்லாம் பட்டனன் அந்தப்**
**பாடெலாம் நீ அறியாயோ,**

**-6(இடை)பெற்றபேற்றினை வியத்தல்5**

இந்த ஏழை படும்பாடு உனக்குத் திருவுளச் சம்மதமோ? இது தகுமோ?இது முறையோ? இது தருமந்தானோ? என வினவுவார்? ' இப்பாடு பட எனக்கு முடியாது துரையே' என்பார்.

**வாழைஅடி வாழைஎன் வந்ததிருக் கூட்ட**
**மரபினிய்யான் ஒருவன் அன்றோ வகைஅறியேன் இந்த**
**ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ**
**இதுதகுமோ இது முறையோ இதுதருமந் தானோ**
**`மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யான் உனக்கு**



RangaRakes tamilnavarasam.com

**மகன் அலனோ நீ எனக்கு வாய்த்ததந்தை அலையோ**
**கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்**
**கொடுத்தருள்நின் அருள் ஒளியைக் கொடுத்தருள் இப்பொழுதே**

**-6(இடை_)பிரியேனென்றல்4**

**துப்பாடு திருமேனிச் சோதிமணிச் சுடரே**
**துரியவெளிக் குள்ளிருந்த சுத்தசிவ வெளியே**
**அப்பாடு சடைமுடிஎம் ஆனந்த மலையே**
**அருட்கடலே குருவேஎன் ஆண்டவனே அரசே**
**இப்பாடு பட எனக்கு முடியாது துரையே**
**இரங்கி அருள் செயல்வேண்டும் இது தருணங்கண்டாய்**
**தப்பாடு வேன் எனினும் என்னைவிடத் துணியேல்**
**தனிமென்றுள் நடம்புரியுந் தாண்மலர் எந் தாயே,**

-4அன்புமாலை 5

பட்டதெல்லாம் போதும், இனிப்பட முடியாது அரசே என்று விண்ணப்பிப்பார்.

**படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே**
**பட்டதெல்லாம் போதும் இந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்**
**உடல் உயிரா திய எல்லாம் நீ எடுத்துக் கொண்டுன்**
**உடல்உயிரா திய எல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்**
**வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாய் என் கண்ணுண்**
**மணியேஎன் குருமணியே மாணிக்க மணியே**
**நடனசிகா மணியே என் நவமணியே ஞான**
**நவமணியே பொன்மணியே நடராஜ மணியே**

**-6(இடை)பிரியேன் என்றல்3**

இவ்வாறு படாத பாடுபட்ட அடிகட்குப் பெரும் பேறுகளையெல்லாம் இறைவன் அருளினான். அவற்றை இனிக் காண்போம்.

## இறைவனின் பிள்ளை ஆனது

இறைவனுக்குப் பிள்ளைகள் பலர். அவர்களுள்: அடிகள் பெரிய பிள்ளை. செல்வப் பிள்ளை. நல்ல பிள்ளை. இறைவன் அடிகளை'மகனே'என்றழைத்துப் பிள்ளைப் பட்டம் பிள்ளையாக்கிக்கொண்டான்.

**பிள்ளை என்னும் சொல்:** பிள்ளை என்னும் சொல் இளமையைக் குறிக்கும்(தொல்காப்பியம், மரபியல்), மக்களுள் பிள்ளை என்பது இருபாற் குழவிக்கும் பொதுப்பெயர். மக்கட் குழவிக்கே அன்றி விலங்கு பறவை மரம் ஆகியட் ஆகிய சில்வற்றின் இளமைக்கும் பிள்ளைப் பெயர் உண்டு. அணிற்பிள்ளை, கிளிப் பிள்ளை, கீரிப் பிள்ளை, தென்னம் பிள்ளை முதலிய வழக்குகளைக் காண்க. குழந்தையைக் குறிக்கும்'பிள்ளை'என்னும் சொல் மருத



RangaRakes tamilnavarasam.com

நில மக்களுள் சிறந்தோராகிய உழுவித்துண்ணும் வேளாளர்க்குரிய சாதிப் பட்டப் பெயராயிற்று.

**பிள்ளையார்:**இறைவனுடைய பிள்ளைகளில் விநாயகர் பிள்ளையார் எனப்படுகிறார். கணபதி விநாயகர் என்பதை விடப் பிள்ளையார் என்பதே பெரு வழக்கு. பிள்ளையார் என்றால் அது விநாயகரையே குறிக்கும். பிள்ளையாரை அறியார் இரார். 'பிள்ளையார் சுழியும்' , 'பிள்ளையார் கொட்டும்' எதற்கும் முன் நிற்கின்றன. இறைவனுக்குப் பிள்ளை என்பதால் அவர் வேறு பேரின்றிப் பிள்ளை என்பதோடு ஆர் என்னும் சிறப்பு விகுதியும் சேர்த்துப் பிள்ளையார் எனப் பேர் பெற்றார்.

**இளைய பிள்ளையார்**: முருகன், இளைய பிள்ளையார் எனப்படுகிறார். முருக வழிபாடு விநாயகர் வழிப்பாட்டுக்கு முந்தியது. விநாயகரைப் பிள்ளையார் என்றதனால் முருகனை இளைய பிள்ளையார் என்று வழங்கினர். விநாயகரை மூத்த பிள்ளையார் என்பர். மூத்த பிள்ளையார் இரட்டை மணி மாலை முதலிய வழக்குகளைக் காண்க.

**சேய்ஞலூர்ப் பிள்ளையார்:**சண்டேசுரரைச் சேய்ஞலூர்ப் பிள்ளையார் என்பர் சேக்கிழார். சண்டேசுரரின் இயற்பெயர் விசாரசருமர். சண்டீசர் என்பது அவர் பெற்ற பதம். சேய்ஞலூர்ப் பிறந்தார் 'அனைத்து நாம் உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச் சண்டீசனுமாம் பதந்தந்தோம்" என அண்டர் பிரானால் சண்டீசப் பதம் பெற்று அரனார் மகனார் ஆயினமையால், சேக்கிழார் அவரைச் சேய்ஞலூர்ப்பிள்ளையார் என்றார்.

**ஆளுடைய பிள்ளையார்:** திருஞானசம்பந்தருக்கு ஆளுடைய பிள்ளையார் என்று ஒரு பேருண்டு. இப்பெயரை வழங்கியவர் சேக்கிழார். ஞானசம்பந்தரின் பிறப்பைச் சொல்லும் சேக்கிழார்' பிள்ளையார் திரு அவதாரம் செய்தார்' என்று சொல்லுகிறார். தமது புராணத்தில் பலவிடத்தும் சம்பந்தரைப் பிள்ளையார் என்று குறிக்கிறார். அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பது பழமொழி. ஆளுடைய பிள்ளையாரும் பிள்ளைப் பருவத்தில் இறைவனை நோக்கி அழுது இறைவியால் ஞானப்பால் அருத்தப் பெற்று பிள்ளையானார். சற்புத்திர மார்க்கம் விளக்க வந்தமையாலும் பிள்ளையாயினர். காழிப் பிள்ளை, காழி நாடுடைய பிள்ளை எனவும் வழங்கப் பெற்றார்.

**பெருந்துறைப் பிள்ளை:-** பட்டினத்தடிகள் தமது திருவிடைமருதூர் மும்மணிக் கோவையுள் மாணிக்கவாசகரைப் பெருந்துறைப் பிள்ளை எனக் குறிப்பிடுகிறார். திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகர் அருள் பெற்றார் என்பது அனைவரும் நன்கு அறிந்ததே.

**பட்டினத்துப் பிள்ளையார்:** பட்டினத்தடிகளைப் பட்டினத்துப் பிள்ளையார் என வழங்குதல் பெரு வழக்கு. இஃது அனைவ்ரும் அறிந்ததே.

**வைவணவ உலகில் பிள்ளைகள்:** வைணவ உல்கிலும் நம்பிள்ளை,வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளை உலகாசிரியர், திருவாய் மொழிப்பிள்ளை, பெரிய ஆச்சான் பிள்ளை எனப் பிள்ளைகள் பலர். இவர்களுக்கெல்லாம் சாதி பற்றியோ

பிற காரணம் பற்றியோ பிள்ளைப் பெயர் அமையவில்லை. சிறப்புப்பற்றி அமைந்ததே.

## வடலூர்ப் பிள்ளையார்

இனி வடலூர்ப் பிள்ளையாராகிய நமது அடிகளிடத்து வருவோம். அடிகளின் இயற்பெயர்-பிள்ளை திருநாமம்-இராமலிங்கம் என்பது. துறவு பூண்ட அடிகளை அன்பர்கள் 'இராமலிங்க சுவாமிகள்' என வழங்கத் தொடங்கினர். அவ்வாறு வழங்குவதை அடிகள் ஆரவாரத்திற்குரிய தென்று தடுத்துவிட்டனர். ஆதலின் அடிகள் இராமலிங்கபிள்ளை என் வழங்கப்பெற்றார். திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை என வழங்கும் வழக்கத்தை தொழுவூர் வேலாயுத முதலியார் ஏற்படுத்தினார். அடிகள் சிதம்பரம் இராமலிங்கம் எனவே கையழுத்திடுவர். சிதம்பரம் இராமலிங்க பிள்ளை எனவும் சில இடங்களில் கையொப்பமிட்டுள்ளனர். இராமலிங்க பிள்ளை என்பதில் பிள்ளை என்பது வேளார்க்குர்டறிய சாதிப்பட்டப் பெயர். அடிகள் பரம்பரைச் சுத்த சைவ வேளாளர். அடிகளின் தந்தை இராமையா பிள்ளை, தமையனார் சபாபதிப் பிள்ளை. இவ்வகையிலும் அடிகள் பிள்ளையானார். இப்படிப் பிள்ளை மகன் பிள்ளையாக மட்டும் விளங்கவில்லை. இறைவனுக்கு மகனாகிப் பிள்ளையார் ஆனார். அருட் பெருஞ் சோதி ஆண்டவனின் செல்வப்பிள்ளை என்ற பட்டமும் தரித்தார். இறைவன் தன்னை மகனாக்கிக் கொண்டானென்றும் பிள்ளையாக்கிக் கொண்டானென்றும் அடிகள் பல இடங்களிற் கூறுவர். "மருவி எனை ஆட்கொண்டு மகனாக்கி அழியா வரந்தந்த தந்தையே" ' சிற்றம்பலவா நின் செல்வப் பிள்ளை ஆக்கினையே' ' எனையே பிள்ளை எனக்கொண்டு பிள்ளைப் பெயரிட்ட பதியே' 'நினது செல்வப் பிள்ளை என எற்குப் பெயரிட்டாய்', 'சிற்சபை உடையான் செல்வ மெய்ப் பிள்ளை என்றொரு பேர்ப்பட்டமும் தரித்தேன்' 'என் பிள்ளை ஆதலாலே இவ்வேலை புரிக என்றிட்டனம் மனத்தில் வேறெண்ணற்க என்ற குருவே' 'அருட்பெருஞ்ஜோதி ஒருவனுண்டே அவன்றான் பெருமையினால் எனை ஈன்றான் நான் ஒருவன் தானே பிள்ளை அவன் பிள்ளை என்ப் பெரியர் எலாம் அறிவார்', 'ஞானசபைத் தலைவனுக்கு நல்ல பிள்ளை நானே', 'சிற்சபையில் நடிக்கும் பெரிய தனித் தலைவனுக்குப் பெரிய பிள்ளை நானே', 'எல்லாம் பெற்றவன் தன் செல்வாக்குப் பெற்ற பிள்ளை நானே" 'எல்லாம் செய் வல்லவருக்கு இனிய பிள்ளை நானே', ' சிற்சபை என் அப்பனுக்கு சிறந்த பிள்ளை நானே', 'கடவுள் மகிழ்ந்தளித்த கதிர்ப்பிள்ளை நானே' என்னும் திருவாக்குகளை காண்க.

**அருளே பழுத்த சிவதருவில் அளிந்த பழ்ந்தந் தடியேனைத்**
**தெருளே சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே80**
**மருளே முதலாம் தடைஎல்லாம் தீர்ந்தேன் நின்பால் வளர்கின்றேன்**
**பொருளே இனிநின் தனைப்பாடி ஆடும் வண்ணம் புகலுகவே.**

**-6(இடை)செய்பணிவினவல் 1**

**கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்**
**கூட்டமும்அக் கூட்டத்தே கூவுகின்ற கலையும்**
**கள்ளம் உறும் அக்கலைகள் காட்டியபல் கதியும்**
**காட்சிகளும் காட்சிதரு கடவுளரும் எல்லாம்**
**பிள்ளைவிளை யாட்டௌன நன் கறிவித்திங் கெனையே**


RangaRakes tamilnavarasam.com

பிள்ளை எனக் கொண்டுபிள்ளைப் பெயரிட்ட பதியே
தள்ளரிய மெய்யடியார் போற்றமணி மன்றில்
தனி நடஞ்செய் அரசேஎன் சாற்றும் அணிந்தருளே

-6(இடை)அருள்விளக்கமாலை84

{80.சிற்றம்பலவா நின் செல்வப் பிள்ளை ஆக்கினையே என்பது இப்பதிகத்தின் பத்துப் பாடகளிலும் மகுடமாக விளங்குகிறது.}

கொள்ளைஎன் இன்பம் கொடுத்தாய் நினதுசெல்வப்
பிள்ளைஎன எற்குப் பெயர் இட்டாய்-தெள்ளமும்
தந்தாய் சமரசசன் மார்க்கசங்கத் தேவைத்தாய்
எந்தாய் கருணை இது.

6(இடை)ஆனந்தானுபவம்4

கட்டமும் கழன்றேன் கவலைவிட் டொழித்தேன்
கலக்கமும் தீர்ந்தனன் பிறவிச்
சட்டமும் கிழித்தேன் தூக்கமும் துறந்தேன்
சாவையும் நோவையும் தவிர்ந்தேன்
சிட்டமும் அடைந்தேன் சிற்சபை உடையான்
செல்வமெய்ப் பிள்ளைஎன் றொருபேர்ப்
பட்டமும் தரித்தேன் எனக்கிறது போதும்
பண்ணிய தவம் பலித்ததுவே.

-6(முடி)சிவபுண்ணிய் பேறு10

திருவளர்பேர் அருளுடையான் சிற்சபையான் எல்லாம்
செய்ய வல்ல தனித்தலைமைச் சித்தன் எல்லாம் உடையான்
உருவமுமாய் அருவமுமாய் உபயமுமாய் அலவாய்
ஓங்கும் அருட்பெருஞ் ஜோதி ஒருவனுண்டே அவன்றான்
பெருமையினால் எனையீன்றான் நான் ஒருவன் தானே
பிள்ளை அவன் பிள்ளை எனப் பெரியர் எலாம் அறிவார்
இருமையுறு தத்துவர்காள் என்னை அறி யீரோ
ஈங்குமது துள்ளல் எலாம் ஏதும் நட வாதே

-6(முடி)தத்துவவெற்றி1

இறைவனுக்குப் பிள்ளையனதை இங்ஙனம் பலபட மகிழ்ந்து பாடும் அடிகள் தமது திருமுகமொன்றிலும் 'இந்த வார்த்தை என்வார்த்தை அன்று திருச்சிற்றம்பலமுடையார் செல்வப்பிள்ளை வார்த்தை' என்றெழுதுகின்றனர்.

இச்செவ்வியை அறிந்த அன்பர்கள் அடிகளைப் பிள்ளைப்பெருமான் என்றும் பிள்ளைப்பெருமானர் என்றும் வழங்கினர். பிள்ளைப்பெருமான் என்பது முருகனுக்குரிய பெயர்களுள் ஒன்று. 'பேராதரிக்கும் அடியவர் தம் பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும் பேறுங் கொடுக்க வரும் பிள்ளைப் பெருமான் என்னும்

பேராளா' எனப் பகழிக்கூத்தர் பாடுவர். (திருச்செந்தூர்ப் பிள்ளை தமிழ்) தணிகை முருகனைப் பாடும் நமது பிள்ளைப் பெருமானும்' எனப் பாடுவர். முருகனைக் குறிக்கும் பிள்ளைப் பெருமான் என்னும் பெயர் வள்ளற்பெருமானுக்கும் பெயராயிற்று. ச.மு.க பதிப்பு சரித்திரக் குறிப்புகளுள் பெரும்பாலும் பிள்ளைப்பெருமான் என்றே அடிகள் குறிப்பிடப் பெறுகின்றனர்.

சேய்ஞாலூர்ப் பிள்ளையார், காழிப் பிள்ளையார், பெருந்துறைப் பிள்ளை, பட்டினத்துப் பிள்ளையார் என்னும் வழக்கினை ஒட்டி நாமும் நமது பிள்ளைப் பெருமானை 'வடலூர்ப் பிள்ளையார்' என வழங்கலாமன்றோ?

## அடிமுடி காட்டப்பெற்றதும் சூட்டப்பெற்றதும்
## திருவடி

அவனினும் அவன் தான் சிறந்தது: இறைவனினும் அவனது திருவடி சிறந்ததென்பது பெரியோர் கொள்கை. பரிபாடலில் கடுவனிளவெயினார்'நின்னில் சிறந்த நின் தாள் இணையவை' எனப்பாடுகின்றார்.

**திருக்குறளில் திருவடி:** திருக்குறளின் தொடக்கத்தில் (முதல் அதிகாரம்)கடவுள் வாழ்த்துக் கூறும் ஆசிரியர் திருவள்ளுவனார் ஏழு குறட்பாக்களில் திருவடியைக் கூறுகின்றார்.

**கற்றதனால் ஆய பயன் என்கொல் வால் அறிவன்**
**நற்றாள் தொழா அர் எனின்** 1

**மலர்மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல** 2

**வேண்டுதல்வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல** 3

**தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது** 7

**அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது.** 8

**கோள் இல் பொறியிற் குணம் இலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை.** 9

**பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.** 10

**திருவாசகத்தில் திருவடி:** திருவாசகத்தில் முதலாவதாகிய சிவபுராணத்தை 'நமச்சிவாய வாஅழ்க' என்று தொடங்கும் மாணிக்க வாசகப் பெருமான் தொடர்ந்து திருவடியை வழுத்துகின்றார்.



RangaRakes tamilnavarasam.com

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்புஅறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்குச் சேயோந்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்புஅறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீர் ஆர் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவனேன் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவந்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

-திருவாசகம்,சிவபுராணம்1-20

**திருவடியே சரணம்:** திருவடியே சிவம், திருவடியே சிவனானம் திருவடியே சிவானுபூதி. திருமூலர் இவற்றை அழகாக அருளுகி றார்.

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளிவார்க்கே

திருவடி ஞானஞ் சிவமாக்குவிக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே

-திருமந்திரம் 138,1598.

**யான் எனது அற்ற இடமே திருவதி**: இறைவன். உருவம், அருவம். அருவுருவம் என்னும் முத்திறந் திருமேனியையும் உடையவன். உருவத் திருமேனியின் திருவடி பருமையாது. பருமைத் திருவடிக்கு மேலாக நுண்மைத் திருவடி-சூக்குமத் திருவடி-ஒன்றுண்டு. அச்சூக்குமத் திருவடியை அடையும் பொருட்டே உருவத் திருவடியை கொள்ளுகிறோம். சிவா நுபூதியைத் திருவடி என்பது சைவ மரபு. திருவளான திருவடி என்பர். ' முதல்வன் திருவடியாகிய சிவானந்தா நுபூதியைத் தலைப்படும்', ' மலவாசனை நீங்கினால் அன்றி



RangaRakes tamilnavarasam.com

முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தை அனுபவித்தல் கூடாது' என்பன சிவஞான மாபாடிய உரைகள். 'யான் எனது அற உயிரியல் பரை(சிசத்தி) நின்றது அடியாம்' என்பது உண்மை நெறி விளக்கம். 'என்னது யான் அற்றால் இறைவனடி தானாகும்' என்பது அநுபோக வெண்பா. 'யான் எனதென்றற்ற இடமே திருவடியாம்' என்பது கந்தர் கலி வெண்பா. சிவானந்தானுபூதியாகிய சூக்குமத் திருவடியைக் குறித்தே நாம் தூலத் திருவடியை(உருவத் திருவடியை) வழிபடுகிறோம்.

**அடியார்கள்:** யான் எனது என்னும் இருவகைப் பற்றும் அற்றுத் திருவடியாகிய சிவானந்த அநுபூதியை அனுபவிப்போரே அடியார் என்னும் திருப்பெயர்க்கு உரியவராவர். அவ்வநுபூதியைப் பெறமுயலும் உண்மையாளர்க்கும் உபசாரத்தால் அடியார் என்னும் பெயர் உரித்தாயிற்று. ' அடியார் அரனடி ஆநந்தம் கண்டோர்' எனத் திருமூலர் அருளுவார்.

**அடியார் அரனடி ஆனந்தம் கண்டோர்**
**அடியார் ஆனவவர் அத்தருள் உற்றோர்**
**அடியார் பவரே அடியவர் ஆமால்**
**அடியார் பொன்னம்பலத்து ஆடல் கண்டாரே.** --2740

என்னும் திருமந்திரம் அடியார் இலக்கணம் உணர்த்திற்று. இறைவனது திருவடி போன்றே அவன் அடியார்களது திருவடிகளும் சிறந்தன.

**வைணவ சம்பிரதாயத்தில் திருவடி: 1. சடாரி-** திருமால் கோயில்களில் பெருமாள்சேவை ஆனபின் சடாரி சாதிப்பார்கள். சடாரியின் பெயர் சடகோபன் என்பது. கிரீடம் போன்று அமைந்த அதன்மேல் பெருமாளின் திருவடிகள் இருக்கும். வழிபடுவோரது சிரத்தின் மேலும் தோளின் மேலும் அதனை அர்ச்சகர் சார்த்துவார். இதுவே சடாரி சாதித்தல் ஆம். சடாரி சாதித்தாலன்றிச் சேவை நிறைவு பெறாதென்பது சம்பிரதாயம். திருமாலின் திருவடிகளைத் தலைமீது சூட்டிக் கொள்ளுதலே இதன் கருத்தாம். **2. சிறிய திருவடி-** அனுமனை ஆஞ்சநேயன், மாருதி ஹனுமான், எனப் பல பெயர்களால் வழங்குவர். ஆயினும் ஸ்ரீவைஷ்ணவ சம்புரதாயத்தில் படிந்த பெரியோர்கள் திருவடி என்றே வழங்குவர். அனுமனைச் சிறிய திருவடி என்பதும், கருடனைப் பெரிய திருவடி என்பபதும் சம்பிரதாயம். ' சிறிய', 'பெரிய' என்ற அடைமொழி கொடாமலே இருவரையும் பொதுவாகத் திருவடி என்பதும் உ ண்டு. ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டியில் திருவடி என்று வழங்காமல் மாருதி என்றாவது ஆஞ்சநேயன் என்றாவது வழங்குவராயின் சம்பிரதாயம் வல்ல பெரியவர்கள் கண் சிவப்பப் பார்ப்பார்கள்.

**திருவடி தீக்கை:-** தீக்கைகளில் சிறந்தது திருவடி தீக்கை. அப்பரும், சுந்தரரும், மாணிக்கவாசகரும் பெற்றது போன்றே வள்ளற்பெருமானும் இறைவனால் திருவடி தீக்கை செய்யப் பெற்றனர். திருவடி தீக்கையாவது அடி முடி சூட்டுதலாம். அதனைக் காணுமுன் அடி முடி காட்டுதலைக் காண்போம்.

<u>அடி முடி காட்டப் பெற்றது.</u>

திருமானும் பிரமனும் இறைவனது அடிமுடிகளைக் காண முயன்றும் கண்டாரிலர். மாலும் பிரமனும் காணத அடி முடிகளை இறைவன் அடிகளுக்குக் காட்டுவித்தான். கண்டு களித்த அடிகள், 'பிரமன் விண்டு கண்டறியா முடி அடி



RangaRakes tamilnavarasam.com

எனக்கே விளங்குறக் காட்டிய விமலா', ' அனம் உகைத்தன் அரி முதலோர் துருவி நிற்க எனக்கே அடி முடிகள் காட்டுவித்தே அடிமை கொண்ட பதியே' என இறைவனைப் போற்றினர்.

**பண்டுகொண் டெனைத்தான் பிழைகுறி யாத**
**பண்பனே திருச்சிற்றம் பலத்தே**
**தொண்டுகொண் டாடியர் களிக்க நின்றாடும்**
**தூயனே நேயனே பிரமன்**
**விண்டுகண் டறியா முடி அடி எனக்கே**
**விளங்குறக் காட்டிய விமலா**
**கண்டுகொண் டுறுதற் கிதுதகு தருணம்**
**கலந்தருள் கலந்தருள் எனையே**

**-6(இடை)அருள் விளக்கமாலை 4**

**மனம் இளைது வாடியபோ தென் எதிரே கிடைத்து**
**வாட்டம் எலாம் தவிர்த்தெனக்கு வாழ்வளித்த நிதியே**
**சினமுகத் தவராக்கி எனக்களித்த சிவமே**
**சிரித்த முகத் தவராக்கி எனக்களித்த சிவமே**
**அனம் உகைத்தான் அரிமுதலோர் துருவிநிற்க எனக்கே**
**அடிமுடிகள் காட்டுவித்தே அடிமை கொண்ட பதியே**
**இனம் எனப்பேர் அன்பர் தொழப் பொதுநடஞ் செய் அரசே**
**என்னுடைய சொன்மாலை யாவும் அணிந்தருளே**

**-6(இடை)அருள் விளக்கமாலை 5**

சினந்த முகம் கொண்டவர்களைக் கண்டு அடிகள் திகைப்பார். அப்போது அச்சின முகத்தவர்களைச் சிரித்த முகத்தவராக்கி யளிப்பான் இறைவன். 'சினமுகத்தார் தமைக்கண்டு திகைத்த பொழுதவரைச் சிரித்த முகத்தவராக்கி எனக்களித்த சிவமே' என மேலைத் திருப்பாட்டில் கூறியுள்ளதைக் காண்க. இப்படி எத்துணை எத்துணையோ அற்புதங்களை அடிகள் திறத்தில் ஆண்டவன் செய்தருளியுள்ளான். அடிமுடி காட்டிய இறைவன் அடிகளது(அவரது)நிலையையுங் காட்டினான், சித்தர்களது நிலையைக் காட்டினான், சகச நிலை காட்டினான், சாகாத நிலை காட்டினான்,மனம் போய்க் கரைந்த இடம் காட்டினான். இங்ஙனம் அருள் நிலைகள் பலவற்றையும் காட்டி அருள் செய்யப்பெற்ற அடிகள்

**அந்தோ ஈ ததிசயம் என் புகல்வேன்**
**அறிவறியாச் சிறியேனை அறிவறியச் செய்தே**
**இந்தோங்கு சடைமணிநின் அடிமுடியுங் காட்டி**
**இதுகாட்டி அதுகாட்டி என் நிலையுங் காட்டிச்**
**சந்தோட சித்தர்கள்தந் தனிச்சூதுங் காட்டி**
**சாகாத நிலைகாட்டி சகசநிலை காட்டி**
**வந்தோடு நிகர்மனம்போய்க் கரைந்த இடங் காட்டி**
**மகிழ்வித்தாய் நின் அருளின் வண்மைஎவர்க் குளதே.**

**-4 அன்புமாலை10**

எனப்பாடி மகிழ்வர். மனம் போய்க் கரைந்த இடம் என்பது மாபெரும் தத்துவநியைாம். அந்நிலையில் நின்றாரே அடிமுடி காண்பர். காட்டியவற்றையெல்லாம், இன்னின்னவற்றைக் காட்டி என சுட்டிக் கூறும் அடிகள் இது காட்டி அதுகாட்டி எனப்பொதுவாகக் கூறும் அருமை நோக்கற்பாலது.

இறைவனது திருவடியும் திருமுடியும் புறத்திலுள்ளது போன்றே நமது அகத்திலும் உண்டு. அகமாவது உடம்பு. திருமூலர் திருமந்திரத்தில் எட்டந்தந்திரத்திலுள்ள 17ஆம் அதிகாரமாக விளங்குவது அடித்தலையறியும் திறங்கூறல். உடம்பினுள்ளே விளங்கும் அடிமுடிகளை இது கூறும்.

**காலுந்தலையும் அறியார் கலதிகள்**
**காலந்தச் சத்தி யருளென்பர் காரணம்**
**பாலென்று ஞானமே பண்பார் தலையுயிர்**
**காலந்த ஞானத்தைக் காட்ட வீடாகுமே** 2425

**தலையடி யாவ தறியார் காயத்தில்**
**தலையடி யுச்சியில் உள்ளது மூலந்**
**தலையடி யான அறிவை யறிந்தோர்**
**தலையடி யாகவே தானிருந்தாரே**

2426

தலைகால் தெரியாமல் திரிகிறான் என உலக வழக்கிற் கூறுகிறோம். தலைகால் தெரியாமல் தருக்கித் திரிகிறான் என்பது உல்கியற் பொருள். அடி முடி தெரியாது திகைப்பதென்பது அருளியற்பொருள். தலைகால் தெரியாது வள்ளற் பெருமானும் பலகால் திகைத்தார். 'தலைகால் இங்கறியாதே திரிந்த சிறியேனை' எனத்தம்மை தாமே கூறுவர்.(அருள் விளக்கமாலை100) சிவத்திற்கு அடி எதுவோ, முடி எதுவோ எனப் பலகாலொ வருந்தி இருந்த தமக்கு சிவத்தின் அடிமுடிகள் உனக்குள்ளே விளங்குகின்றன என்று ஆளுடைய பிள்ளையார் உணர்த்தியருளியதாகக் கூறுவர்.

**அடியெனல் எதுவோ முடியெனல் எதுவோ**
**அருட்சிவ மதற்கெனப் பலகால்**
**படியுற வருந்தி இருந்த என் வருத்தம்**
**பார்த்தரு ளால் எழுந் தருளி**
**மிடியற எனைத்தான் கடைகணித் துனக்குள்**
**விளங்குவ அடிமுடி என்றாய்**
**வடிவிலாக் கருணை வாரியே மூன்று**
**வயதினில் அருள்பெற்ற மணியே**

**-4ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை 7**

அடி முடி காட்டிய இறைவன் மனம் போய்க் கரைந்த இட்ங் காட்டியதையும் ஓர்க. சூக்குமத் திருவடியைப் பற்றி முன்னர்க் கூறியதையும்



RangaRakes tamilnavarasam.com

அறிக, அடி முடி என்பதெல்லாம் அகநிலை அனுபவங்களாம்,வேகாக்கால், சாகாத் தலை, போகாப்புனல் என்பவையும், அன்ன. இவையெல்லாம் குரு முகமாக அறியத் தக்கவை. நூல்களில் நுதலி உணர்த்தக் கூடிவை யன்று.

## அடி முடி சூட்டப் பெற்றது.

## திருவடி தீக்கை

திருவதிகையில் சித்தவட மடத்தில் சுந்தரர்க்கு எவ்வாறு இறைவன் திருவடிதீக்கை செய்தருளினானோ அவ்வாறே வள்ளற்பெருமானுக்கும் திருவடி தீக்கை செய்தருளினான். ஒரு நாள் அடியவர் வேடத்தில் இறைவன் தருமச்சாலைக்கு வந்தான். அடிகளுடன் தங்கினான். இரவு துயிலும்போது அடிகளின் முடியில் தம் இரு அடிகளும் பொருந்துமாறு வைத்துப்படுத்தான். தம் தலை மீது கால்கள் படுவதை உணர்ந்த அடிகள் கால்களை அப்பால் தள்ளினர். உடனே இறைவன் தமது உண்மைக்கோலத்தைக் காட்டி உன்னைக் காணவந்த எனக்கு இவ்வளவு சுதந்தரம் இல்லையோ என்று அருளி ஆட்கொண்டான். இவ்வற்புத நிகழ்ச்சியை அடிகள் தமது அருள் விளக்க மாலையில்

**நீநினைத்த நன்மை எலாம் யாம் அறிந்தோம் நினையே**
**நேர்காண வந்தனம் என் றென்முடிமேல் மலர்க்கால்**
**தான் நிலைக்க வைத்தருளிப் படுத்திடநான் செருக்கித்**
**தாள்களெடுத் தப்புறத்தே வைத்திடத்தான் நகைத்தே**
**ஏன்நினைத்தாய் இவ்வளவு சுந்தரம் என் மகனே**
**எனக்கிலையோ என்றருளி எனைஆண்ட குருவே**
**தேன் நிலைத்த தீம்பாகே சர்க்கரையே கனியே**
**தெய்வநடத் தரசேஎன் சிறுமொழிஏற் றருளே**

**-6(இடை)அருள்விளக்கமாலை51**

எனப்பாடி மகிழ்கின்றனர்.

'அம்பலத்தே திருநடஞ் செய் அடி மலர் என் முடிமேல் அணிந்து கொண்டேன் அன்பொடும் என் ஆருயிர்க்கும் அணிந்தேன்' (அடு பவமாலை 1),' மறை முடிமேல் ஆமகத்தின் முடிமேல் பதிந்த பதம் என் முடிமேல் பதித்த தனிப் பதியே' (அருள் விளக்க மாலை 24) 'என்றன் சென்னி மிசை மகிழ்ந்து தான் கொண்டு வைத்த அந்நாள் சில்லென்றென் உடம்பும் தக உயிரும் குளிர்வித்த தாள் மலர்கள்'(அருட்பிரகாச மாலை74),'இனிப்புறு நன்மொழி புகன் றென்முடி மிசையே மலர்க்கால் இணை அமர்த்தி எனை யாண்ட என்னுயிர் நற்றுணையே' (அருள்விளக்க மாலை 46) , பொதுநடஞ் செய் மலரடி என் தலை மேலே அமைத்தீர்'(இறை எளிமையை வியத்தல் 8), 'மலரடி என் சென்னி மிசை வைத்த பெருந் தெய்வம்'. 'பொன்னடி என் சென்னியிலே பொருந்த வைத்த தெய்வம்(பரசிவ நிலை3-4),'பற்பல உலகமும் வியப்ப என் தனக்கே பத மலர் முடி மிசைப் பதித்த மெய்ப் பதியே'(சற்று மணிமாலை 21), 'பொன்னடி நம் தலைமேல் அமைத்துக் கருணை செயப் பெற்றனம்' (தற்போது இழப்பு 9) எனத்



RangaRakes tamilnavarasam.com

திருவருட்பாவுள் வருவன வெல்லாம் அடிகள் திருவடி தீக்கை பெற்ற அனுபவங்களாம்.

அம்பலத்தான் தன் காலை ஆட எடுத்தான் என்று நீர் கூறுகின்றீர், என் தலைமேல் சூட எடுத்தான் என்று நான் சொல்லுகின்றேன். இவ்வழக்கை யாரிடமேனும் சென்று நாடறியத் தீர்த்துக்கொள்வோம் என்று அழகாகப் பாடும் பாடல் ஈண்டு உணரத் தக்கதாம்.

**ஆடஎடுத் தான்என் றறைகின்றீர் என் தலைமேல்**
**சூடஎடுத் தான் என்று சொல்லுகின்றே-நாடறிய**
**இவ்வழக்கை யார்பால் இசைத்தறுத்துக் கொள்கிற்பாம்**
**கவ்வைஅற்ற அம்பலத்தான் கால்.**

**-6(முடி)சுத்த சிவ சன்மார்க்க உலகின் ஒருமை நிலை10**

## அத்தக மத்தக சையோக தீகஷை பெற்றது

அத்தக மத்தக சையோக தீட்சை என்பது தலையின்மீது கையை வைத்துத் தீட்சை செய்தல். (அத்தம்-கை,மத்தகம்-தலை,சையோகம்-சேர்த்தல்). மகனே! அஞ்சேல், உலகில் பெருந் திறல் சித்திகளை எல்லாம் உனக்கே தந்தனம் எனத் திருவாக்களித்துத் தலையின் மீது தன் திருக்கரத்தை வைத்து இறைவன் அடிகட்கு அத்த மத்தக சையோக தீக்கையை அருளினான். பின்வரும் பாடல்கள் அடிகளின் தலைமீது இறைவன் தன் கரத்தை அமர்த்தி அருளிச் செய்ததைக் கூறுவனவாம்.

**அறிந்திலை யோஎன் பாடெல்லாம் என்றே**
**அழைத்தனன் அப்பனே என்னை**
**எறிந்திடா திந்தத் தருணமே வந்தாய்**
**எடுத்தணைத் தஞ்சிடேல் மகனே**
**பிறிந்திடேம் சிறிதும் பிறிந்திடேம் உலகில்**
**பெருந்திறல் சித்திகள் எல்லாம்**
**சிறந்திட உனக்கே தந்தனம் என என்**
**சென்னிதொட் டுரைத்தனை களித்தே.**

**-6(இடை) பெற்ற பேறறினை வியத்தல் 6**

**நட்டானை நட்ட எனை நயந்து கொண்டே**
**நம்மகன் நீ அஞ்சல் என நவின்றென் சென்னி**
**தொட்டானை எட்டிரண்டும் சொல்லி னானைத்**
**துன்பம் எலாம் தொலைத்தனைத் சோர்ந்து தூங்க**
**ஒட்டானை மெய் அறிவே உருவாய் என்னுள்**
**உற்றானை உணர்த்தார்க்கும் உணர்ந்து கொள்ள**
**எட்டானை என்னளவில் எட்டி னானை**
**எம்மானைக் கண்டுகளித் திருக்கின்றேனே**

**-6(இடை)கண்கொளாக் காட்சி 3**

**நயன, பரிச, வாசகதீக்கைகள் பெற்றது**

**சேர்த்தான் பதம் என் சிரத்தே திருஅருட்கண்**
**பார்த்தான் என் எண்ணம் எலாம் பாலித்தான்- தீர்த்தான் என்**
**துன்பம் எலாம் தூக்கம் எலாம் சூழாது நீக்கிவிட்டான்**
**இன்பமெல்லாம் தந்தான் இசைந்து**

**-6(முடி)அடிமைப்பேறு3**

இத்திருப் பாடலில் திருஅருட்கண் பார்த்தான் என்பது நயன தீக்கை பெற்றதன் குறிப்பாம். நயன தீக்கையாவது கண் பார்வையாலேயே தீக்கை செய்தல். பரிசு, வாசக தீக்கைகள் பெற்றதனை இந்நூல்210ஆம் பக்கத்தில் காண்க. கடைக் கணித்ததும் திருவார்த்ததையளித்தும் திருவருட்பாவில் பலவிடங்களிற் கூறப்படுகின்றன. ஆங்காங்குக் காண்க.

## அடிகளும் இறைவனும் உடலுயிரை மாற்றிக் கொண்டது

### பசு கரணங்கள் சிவகரணங்களாகப் பெற்றது அடிகள் தமது உடல் பொருள் ஆவியை இறைவனுக்கே உரிமையாக்கல்

உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்கிறேன் என உலகியலில் பலர் கூறக்கேட்கிறோம். ஆனால் யாரும் செய்யக் கண்டோமில்லை. அடிகள் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் இறைவனுக்கே உரிமையாக்கினார்கள். இதனைப் பாட்டாலும் உரையாலும் அடிகள் பலவிடங்களிற் கூறுவர்.

**சத்தியம் சத்தியம் அருட்பெருஞ்சோதித்**
**தந்தைய ரேஎனைத் தாங்குகின் றீரே**
**உத்தமம் ஆகும்நுந் திருச்சமு கத்தென்**
**உடல்பொருள் ஆவியை உவப்புடன் அளித்தேன்**
**இத்தகை உலகிடை அவைக்கும்என் தனக்கும்**
**ஏதுஞ் சுதந்திரம் இல்லைஇங் கினிநீர்**
**எத்தகை ஆயினும் செய்துகொள் கிற்பீர்**
**எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீதே.**

**-6 (முடி) மெய்இன்பப்பேறு 1**

மெய் இன்பப்பேறு என்னும் இப்பதிகத்தின் பத்துப்பாடல்களிலும் உடல் பொருளாவியை இறைவனுக்கே உரிமையாக்கியது கூறப்பட்டுள்ளது. இது பாட்டாற் கூறியது.

எனது சுதந்தரமாகக் கொண்டிருந்த தேக சுதந்தரத்தையும் போக சுதந்தரத்தையும் ஜீவ சுதந்தரத்தையும் தேவரீர் திருவருட்கே சர்வசுதந்தரமாகக் கொடுத்து விட்டேன். கொடுத்த தருணத்தே, இத் தேகமும் ஜீவனும் போகப் பொருள்களும் சர்வ சுதந்தரராகிய கடவுள் பெரும் கருணையாற்


RangaRakes tamilnavarasam.com

கொடுக்கப்பெற்றனமன்றி, நமது சுதந்தரத்தாற் பெற்றனவல்ல வென்னும் உண்மையை அருளா லறிவிக்கவும் அறிந்துகொண்டேன். இனி இத்தேகத்தி னிடத்தும் ஜீவனிடத்தும் போகப் பொருள்களிடத்தும் தேவரீர் திருவருள் சாட்சியாக எனக்கு எவ்விதத்தும் யாதோர் சுதந்தரத் தோற்றமும் தோற்றமாட்டாது. தேவரீர் திருவருட் சுதந்தரத்தை என்னிடத்தே வைத்தருளி, மரணம் பிணி மூப்பு பயம் துன்ப முதலிய அவத்தைக ளெல்லாவற்றையும் தவிர்த்து, இத் தேகத்தையே நித்திய தேகமாக்கி எக்காலத்து மழியாத பேரின்ப சித்திப்பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும்.

இது உரையாற் கூறியது.

**அடிகளும் இறைவனும் உடலுயிரை மாற்றிக்கொள்ளல்**

இங்ஙனம் பாட்டாலும் உரையாலும் தமது உடல் பொருள் ஆவியை இறைவனுக்கே அர்ப்பணித்து 'என் உடல் பொருள் ஆவியை நீ எடுத்துக்கொண்டு உன் உடல் பொருள் ஆவியை எனக்களிப்பாய்' என வேண்டுவர்.

**படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே**
**பட்டதெல்லாம் போதும்இந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்**
**உடல்உயிரா தியஎல்லாம் நீஎடுத்துக் கொண்டுன்**
**உடல்உயிரா தியஎல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்**
**வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாய்என் கண்ணுண்**
**மணியேஎன் குருமணியே மாணிக்க மணியே**
**நடனசிகா மணியேஎன் நவமணியே ஞான**
**நன்மணியே பொன்மணியே நடராஜ மணியே.**

**-6(இடை) பிரியேன் என்றல் 3**

அடிகள் வேண்டிய வண்ணமே அடிகளது உடல்பொருள் ஆவியை இறைவன் எடுத்துக்கொண்டு தனது உடல் பொருள் ஆவியை அடிகட்குந் தந்தான், இங்ஙனம் இருவரும் (அடிகளும் இறைவனும்) உடல் பொருள் ஆவியை மாற்றிக் கொண்டனரென்பது 'என் உயிரும் என் உடலும் என்பொருளும் யானே இசைந்து கொடுத்திட வாங்கி இட்டு அதன் பின் மகிழ்ந்தே தன் உயிரும் தன் உடலும் தன் பொரும் எனக்கே தந்து' எனவும், 'என்னையும் என் பொருளையும் என் ஆவியையும் தான் கொண்டு என்பால் தன்னையும் தன் பொருளையும் தன் ஆவியையும் களித்தளித்த தலைவன்' எனவும், 'என் உடலும் என்பொருளும் என் உயிரும் தான் கொண்டான்,தன் உடலும் தன் பொருளும் தன் உயிரும் என்னிடத்தே தந்தான்' எனவும், 'தம் தேகம் எனக் களித்தார் தம் அருளும் பொருளும் தம்மையும் இங்கு எனக்களித்தார்' எனவும் அடிகள் புகல்வதாற் பெறப்படும்.

**என்உயிரும் என்உடலும் என்பொருளும் யானே**
**இசைந்கொடுத் திடவாங்கி இட்டதன்பின் மகிழ்ந்தே**
**தன்உயிரும் தன்உடலும் தன்பொருளும் எனக்கே**
**தந்துகலந் தெனைப்புணர்ந்த தனித்த பெருஞ் சுடரே**
**மன்உயிருக் குயிராகி இன்பமுமாய் நிறைந்த**
**மணியேஎன் கண்ணே என் வாழ்முதலே மருந்தே**



RangaRakes tamilnavarasam.com

மின்னியபொன் மணிமன்றில் விளங்குநடத் தரசே
மெய்யும்அணிந் தருள்வோய்என் பொய்யும்அணிந் தருளே.

-6(இடை) அருள்விளக்கமாலை 60

என்னையும்என் பொரு ளையும்என் ஆவியையும்
தான்கொண்டிங் கென்பால் அன்பால்
தன்னையுந்தன் பொருளையுந்தன் ஆவியையும்
களித்தளித்த தலைவன் தன்னை
முன்னையும்பின் னையும்எனக்கே முழுத்துணையாய்
இருந்தமுழு முதல்வன் தன்னை
அன்னையைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்சோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ.

-6(முடி) அச்சோப்பத்து 8

என்உடலும் என்பொருளும் என்உயிரும் தான்கொண்டான்
தன்உடலும் தன்பொருளுந் தன்உயிரும் - என்னிடத்தே
தந்தான் அருட்சிற் சபையப்பா என்றழைத்தேன்
வந்தான்வந் தான்உண் மகிழ்ந்து.

-6(முடி) சுத்த சிவ நிலை 36.

தந்தேகம் எனக்களித்தார் தம்அருளும் பொருளும்
தம்மையும்இங் கெனக்களித்தார் எம்மையினும் பிரியார்
எந்தேகம் அதிற்புகுந்தார் என்உளத்தே இருந்தார்
என்உயிரில் கலந்தநடத் திறையவர் காலையிலே
வந்தேஇங் கமர்ந்தருள்வர் ஆதலினால் விரைந்தே
மாளிகையை அலங்கரித்து வைத்திடுதி இதற்குச்
சந்தேகம் இல்லைஎன்றன் தனித் தலைவர் வார்த்தை
சத்தியம் சத்தியம்மாதே சத்தியம்சத் தியமே.

-6(முடி) தலைவி கூறல் 1.

பசுவாகிய சீவனும் பதியாகிய சிவனும் உடலுயிரை இங்ஙனம் மாற்றிக்கொள்ளுவதை 'பசுகரணம் பதிகரணமான அனுபூதி', 'பசுகரணம் சிவகரணமான அனுபூதி' என்பர். தூலகாயம், சூக்கும காயம், அகங்காயம், பரகாயம், சிவகாயம் எனக் காயம் ஐந்து பேதம். தூல, சூக்கும, அகங்காயமாகிய மூன்றும் சீவனுக்குரியன. பரகாயமும் சிவகாயமும் சிவனுக்குரியன. இதனைத் திருமந்திரம் உடலிற் பஞ்ச பேதத்துட் காண்க.

விஞ்ஞானத் தோர்க்கா ணவமே மிகுதனு
எஞ்ஞானத் தோர்க்குத் தனுமாயை தானென்ப
அஞ்ஞானத் தோர்க்குக் கன்மந் தனுவாகும்
மெஞ்ஞானத் தோர்க்குச் சிவதனு மேவுமே.

ஞானிக்குக் காயஞ் சிவமே தனுவாமஞ்
ஞானிக்குக் காயம் உடாம்பே யதுவாகும்
மேனிற்கும் யோகிக்கு விந்துவும் நாதமும்
மோனிக்குக் காயமுப் பாழ்கெட்ட முத்தியே.

-திருமந்திரம் 2146, 2135.

சிவதனு என்றதே சிவகாயம். சிவகாயம் பெறுதலே (சிந்தித்தலே) காயசித்தியாம்.

அடிகள் தமது பசுகரணங்கள் பதிகரணங்களாக மாறாப்பெற்றாரென்பதும் சிவகாயம் பெற்றாரென்பதும் மேலெடுத்துக் காட்டியவாற்றால் தெளிவு.

## தேகசித்தி

### சுத்த, பிரணவ, ஞான தேகங்களைப் பெற்றது

சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் என மூன்று தேகங்களை அடிகள் கூறுவர். சுத்த மாதி மூன்று தேகங்களையும் அடிகள் பெற்றதைக் கூறும் பாடல்கள் பலவாம். அவற்றுட் சிலவற்றை ஈண்டெடுத்துக்காட்டுவாம்.

முத்திறல் வடிவமும் முன்னியாங் கெய்துறம்
அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி

-அருட்பெருஞ்ஜோதி அகவல் 237-238

நானே தவம்புரிந்தேன் நம்பெருமான் நல்அருளால்
நானே அருட்சித்தி நாடடைந்தேன் - நான்
அழியா வடிவம் அவைமூன்றும் பெற்றேன்
இழியாமல் ஆடுகின்றேன் இங்கு.

சுத்த வடிவும் சுகவடிவாம் ஓங்கார
நித்த வடிவும் நிறைந்தோங்கு-சித்தெனும்ஓர்
ஞான வடிவும்இங்கே நான்பெற்றேன் எங்கெங்கும்
தானவிளை யாட்டியற்றத் தான்.

-6(முடி) சுத்தசிவநிலை 2717

ஓங்கார வடிவு-பிரணவதேகம்.

மன்னுகின்ற பொன்வடிவம் மந்திரமாம் வடிவும்
வான்வடிவம் கொடுத்தெனக்கு மணிமுடியுஞ் சூட்டிப்
பன்னுகின்ற தொழில்ஐந்துஞ் செய்திடவே பணித்துப்
பண்புறஎன் அகம்புறமும் விளங்குகின்ற பதியே
உன்னுகின்ற தோறும்எனக் குள்ளம்எலாம் இனித்தே
ஊறுகின்ற தெள்அமுதே ஒருதனிப்பேர் ஒளியே



RangaRakes tamilnavarasam.com

மின்னுகின்ற மணிமன்றில் விளங்குநடத் தரசே
மெய்யும்அணிந் தருள்வோய்என் பொய்யும் அணிந் தருளே.

-6(இடை) அருள்விளக்கமாலை 61

மந்திரவடிவு-பிரணவதேகம், வான்வடிவு-ஞானதேகம்.

முதலாவதாகிய சுத்ததேகம்-சுவர்ணதேகம், பொன்உடம்பு, ஒளி உடம்பு எனவும் கூறப்பெறும். அடிகள் பொன்னுடம்பு ஒளி உடம்பு பெற்றதனைக் கூறும் பாடல்களுட் சில பின்வருமாறு.

விரைந்து விரைந்து படிகடந்தேன்
மேற்பால் அமுதம் வியந்துண்டேன்
கரைந்து கரைந்து மனம்உருகக்
கண்ணீர் பெருகக் கருத்தலர்ந்தே
வரைந்து ஞான மனம்பொங்க
மணிமன் றரசைக் கண்டுகொண்டேன்
திரைந்து நெகிழ்ந்த தோலுடம்பும்
செழும்பொன் உடம்பாய்த் திகழ்ந்தேனே.

-6(முடி) உற்றதுரைத்தல் 6

கரைந்துவிடா தென்னுடைய நாவகத்தே இருந்து
கனத்தசுவை தருகின்ற கற்கண்டே கனிவாய்
விரைந்துவந்தென் துன்பமெலாம் தவிர்த்தஅருள் அமுதே
மெய்அருளே மெய்யாகி விளங்குகின்ற விளக்கே
திரைந்தஉடல் விரைந்துடனே பொன்உடம்பே ஆகித்
திகழ்ந்தழியா தோங்கஅருள் சித்தேமெய்ச் சத்தே
வரைந்த்தென்னை மணம்புரிந்து பொதுநடஞ்செய் அரசே
மகிழ்வொடுநான் புனைந்திடுஞ்சொன் மாலைஅணிந் தருளே.

-6(இடை) அருள் விளக்கமாலை 7.

தூக்கம் கெடுத்துச் சுகம்கொடுத்தான் என்தனக்கே
ஆக்கம்என ஓங்கும்பொன் அம்பலத்தான் - ஏக்கம்எலாம்
நீங்கினேன் எண்ணம் நிரம்பினேன் பொன்வடிவம்
தாங்கினேன் சத்தியமாத் தான்.

6 (முடி) பொன்வடிவப்பேறு 15.

வாதித்த மாயை வினையா ணவம்எனும் வன்மலத்தைச்
சேதித்தென் உள்ளம் திருக்கோயி லாக்கொண்டு சித்திஎலாம்
போதித் துடம்பையும் பொன்னுடம் பாக்கிநற் புத்தமுதும்
சாதித் தருளிய நின்னருட் கியான்செய்த தக்கதென்னே.

6(இடை) பேரருள்வாய்மையை வியத்தல் 5.

ஊன உடம்பே ஒளிஉடம்பாய் ஓங்கிநிற்க.
ஞான அமுதெனக்கு நல்கியதே-வானப்
பொருட்பெருஞ் சோதிப் பொதுவில் விளங்கும்
அருட்பெருஞ் சோதி அது.

-6(முடி) பொன்வடிவப்பேறு 6

கற்றேன்சிற் றம்பலக் கல்வியைக் கற்றுக் கருணைநெறி
உற்றேன்எக் காலமும் சாகாமல் ஓங்கும் ஒளிவடிவம்
பெற்றேன் உயர்நிலை பெற்றேன் உலகில் பிறநிலையைப்
பற்றேன் சிவானந்தப் பற்றேஎன் பற்றெனப் பற்றினனே.

6 (முடி) சிவானந்தப்பற்று 9

அச்சோ என்என்று புகல்வேன்என் ஆண்டவன் அம்பலத்தான்
எச்சோ தனையும் இயற்றாதென் னுட்கலந் தின்னருளாம்
மெய்ச்சோதி ஈந்தெனை மேனிலைக் கேற்றி விரைந் துடம்பை
இச்சோதி ஆக்கி அழியா நலந்தந்த விச்சையையே.

-6(இடை) பேரருள்வாய்மையைவியத்தல் 9

சுத்தமாதி மூன்று உடம்புகளையும் அழியா உடம்பென்றும் நித்திய தேகம் என்றும் அருளுவர். அடிகள் அழியா உடம்பு பெற்றதைக் கூறும் அருட்பாக்கள் சிவற்றைக் காண்போம்.

செத்தார் எழுகெனச் சிந்தைசெய் முன்னஞ் சிரித்தெழவே
இத்தா ரணியில் அருட்பெருஞ் சோதி எனக்களித்தாய்
எத்தாலும் என்றும் அழியா வடிவுதந் தென்னுள்நின்னை
வைத்தாய் மணிமன்ற வாணநின் பேரருள் வாய்மையென்னே

-6(இடை) பேரருள்வாய்மையை வியத்தல் 6.

கண்டேன் களித்தேன் கருணைத் திருஅமுதம்
உண்டேன் உயர்நிலைமேல் ஓங்குகின்றேன் - கொண்டேன்
அழியாத் திருவுருவம் அச்சோஎஞ் ஞான்றும்
அழியாச்சிற் றம்பலத்தை யான்.

-6(இடை) ஆனந்தானுபவம் 5

மருணெறிசேர் மலஉடம்பை அழியாத விமல



RangaRakes tamilnavarasam.com

வடிவாக்கி எல்லாஞ்செய் வல்லசித்தாம் பொருளைத்
தருணமது தெரிந்தெனக்குத் தானேவந் தளித்த
தயாநிதியை எனைஈன்ற தந்தையைஎன் தாயைப்
பொருணிறைசிற் றம்பலத்தே விளங்குகின்ற பதியைப்
புகல்அரிதாம் சுத்தசிவ பூரணமெய்ச் சுகத்தைக்
கருணைஅருட் பெருஞ்சோதிக் கடவுளைஎன் கண்ணால்
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.

-6(இடை) கண்டேன்களிந்தேன் கலந்தேன் எனல் 10

எம்மையும்என் தனைப்பிரியா தென்னுளமே
இடங்கொண்ட இறைவன் தன்னை
இம்மையில்என் தனக்கழியாத் திருவடிவம்
தந்தானை எல்லாம் வல்ல
செம்மைதரு சித்தனைஎன் சிவபதியைத்
தெள்அமுதத் திரளை என்றன்
அம்மையைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்சோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ.

-6(முடி) அச்சோப்பத்து 7.

தூக்கமும் துயரும் அச்சமும் இடரும்
தொலைந்தன தொலைந்தன எனைவிட்
டேக்கமும் வினையும் மாயையும் இருளும்
இரிந்தன ஒழிந்தன முழுதும்
ஆக்கமும் அருளும் அறிவும்மெய் அன்பும்
அழிவுறா உடம்பும்மெய் இன்ப
ஊக்கமும் எனையே உற்றன உலகீர்
உண்மைஇவ் வாசகம் உணர்மின்.

-6(முடி) தனித்திருமாலை 20.

சுத்தமாதி மூன்று தேகங்களின் இலக்கணத்தைப் பற்றி அடிகள் அருளிய உபதேசத்தை அன்பரொருவர் குறித்து வைத்துள்ளது வருமாறு

### சுத்தமாதி தேகங்கள்

**சுத்தமாதி மூன்று தேகவிவரம்**: சுவர்ணதேகம், பிரணவதேகம், ஞானதேகம்.

**சுவர்ணதேகவிவரம்**: காரியரூபம், பரதேகம், பரவுணர்ச்சி, பர அறிவு, பரத்துவம், பொன் வண்ணம், கஉ வயது பருவம், நரை திரை பிணி மூப்பு மல ஜலம் வேர்வை ஆகாரம் நித்திரை தாகம் சாயை முதலியன இல்லாமை, ரோம வளர்ச்சி தாழ்ச்சியில்லாமை, அபரஞ்சிமாற்று, கர்மசித்தி, கல்பதேகி, அபரமார்க்கி.

**பிரணவதேகம்**: காரிய காரண ரூபம், பரம்பரதேகம், பரம்பர வுணர்ச்சி, பரம்பர அறிவு, பரம்பர தத்துவம், சுசு முதல் க0அ வரையில் மாற்று, ரூ முதல் அ


RangaRakes tamilnavarasam.com

வயது, உரைபடாதது(?), தேகம் தோற்றும் பிடிபடாது, சர்வ சித்தி, பிராண கல்பதேகி, பர அபர மார்க்கம்.

**ஞானதேகம்**: காரணரூபம், எங்கும் பூரணவியாபகம்,பராபர அறிவு, பராபர தத்துவம், அளவு கடந்த மாற்று, சப்தமய தரிசனம், சர்வ மகாசக்தி, சர்வ சுதந்தரம், உருவம் தோற்றியும் தோற்றாமலுமிருக்கும், காலாதீதன்.

-திருவருட்பா,உபதேசப்பகுதி பக்கம் 93

சுத்த தேகத்தினும் பிரணவ தேகம் சிறந்தது, அதனினும் ஞானதேகம் சிறந்தது, மேற்கண்ட உபதேசக் குறிப்பைப் பின் வருமாறு அட்டவணைப் படுத்தின் இதனை அறிதற்கு எளிதாகும்.

| சுவர்ண தேகம் | பிரணவ தேகம் | ஞானதேகம் |
|---|---|---|
| காரியரூபம்<br>பரதேகம் | காரிய காரண ரூபம்<br>பரம்பர தேகம் | காரண ரூபம்<br>எங்கும் பூரண வியாபகம் |
| பர உணர்ச்சி | பரம்பர உணர்வு | |
| பர அறிவு | பரம்பர அறிவு | பராபர அறிவு |
| பரத்துவம் | பரம்பர தத்துவம் | பராபர தத்துவம் |
| பொன்வண்ணம்<br>அபரஞ்சி மாற்று | 16முதல்108வரையில்<br>மாற்று,உரைபடாதது | அளவு கடந்த மாற்று |
| 12வயது பருவம் | 5முதல் 8வயது | சப்த மயதரிசனம் |
| நரை, திரை, பிணி, மூப்பு,மலம்,ஜலம், வியர்வை, ஆகாரம், நித்திரை,தாகம் நிழல் முதலியன இல்லாமை. | உருவம் தோன்றும் பிடிபடாது | உருவம் தோன்றியும் தோன்றாமலும் இருக்கும் |
| மயிர் வளர்ச்சி தாழ்ச்சி இல்லாமை | | |
| கர்ம சித்தி | சர்வ சித்தி | சர்வ மகாசக்தி,<br>சர்வ சுதந்தரம் |

| | | |
|---|---|---|
| கல்பதேகி | பிராண கல்பதேகி | காலாதீதன் |
| அபரமார்க்கி | பர அபர மார்க்கம் | |

தாயுமானவரும் மூவகைத் தேக சித்திகளைக் குறிப்பிடுகின்றார்.

**முத்தியிலுந் தேகமிசை மூதிதமாஞ் சித்தி பெற்றோர்**
**எத்தனை பேர் என்றுரைப்ப தெந்தாய் பராபமே.**

**-பராபரக் கண்ணி 209.**

மூவிதமாம் சித்தி என்பது அருவ சித்தி உருவசித்தி அருவுருவசித்தி எனச் சித்தாந்த சரபம் அட்டாவதானம் பூவை. கலியாண சுந்தர முதலியார் உரை யெழுதுகின்றார். 'மாணிக்கவாசகர் அருவசித்தியினையும் சுந்தரர் உருவசித்தியினையும், அப்பர் சம்பந்தர் அருவுருவ சித்தியினையும் அடைந்தவர் என்ப, என்றொரு அடிக்குறிப்பு திருப்பனந்தாள் காசி மடத்துப் பதிப்பில் காணப்படுகிறது. இது காறும் கூறியவற்றைப் கீழ்வருமாறு அட்டவணைப்படுத்திக் காணலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| சுத்த தேகம் (சுவர்ணதேகம் பொன்னுடம்பு ஒளிஉடம்பு) | ஒளி வடிவம் | உருவ சித்தி | பொற்சபை அனுபவம் | சுந்தரர் |
| பிரணவ தேகம் | ஒலி வடிவம் | அருவுருவ சித்தி | சிற்சபை அனுபவம் | சம்பந்தர் அப்பர் பட்டினத்தார் |
| ஞானதேகம் | வான் வடிவம் (அருள் வடிவம்) | அருவ சித்தி | ஞானசபை அனுபவம் | மாணிக்க வாசகர் இராமலிங்க அடிகள் |

## <u>நரை திரை முதலியன இல்லாமை</u>

தேகசித்தி பெற்றவர்களுக்கு நரை, திரை, பிணி, மூப்பு, மலம், சிறுநீர், வியர்வை,பசி, நீர்வேட்கை,உறக்கம், நிழல் முதலியவை இரா. அடிகள் மூவகைத் தேகசித்தியும் முற்றப் பெற்றவர்களாதலின் அடிகட்கு நரை இல்லை; திரை



RangaRakes tamilnavarasam.com

இல்லை; பிணி இல்லை; மூப்பு இல்லை; சாக்காடும் இல்லை; மலசலம் இல்லை; வியர்வை இல்லை; பசி இல்லை;நீர்வேட்கை இல்லை; உறக்கம் இல்லை; நிழல் சாய்தல் இல்லை.

அடிகள் நடக்கும்போது கால் நிலந் தோய்வதில்லை. உடலுக்கு நிழல் இல்லை, மழையால் நனைவதில்லை. வெய்யிலால் தாக்கப்படுவதில்லை மேடோ, பள்ளமோ,கல்லோ, முள்ளோ, புதரோ,வெள்ளமோ, தீயோ,மற்ற எதுவோ அடிகள் செல்வதற்குத் தடையாவதில்லை. அடிகளது உருவம் ஒரு நேரம் கண்ணுக்குத் தோன்றும், மற்றொரு நேரம் தோன்றாமல் மறைந்திருக்கும். எங்கும் இயங்கும். எதனையும் இயக்கும்.

### நிழற்படம்(PHOTO)பிடிபடாமை

அடிகளை நிழற்பட மெடுப்பதற்காக அன்பர்கள் பலமுறைமுயன்றும் பயனற்றதாயிற்று. நிழற்படப் பிடிப்பில் கை தேர்ந்து விளங்கிய மாசிலா மணி முதலியார் என்பவரைச் சென்னையினின்றும் வருவித்து அடிகளை நிழற்பட மெடுக்கச் செய்தனர். படத்தில் அடிகளின் திருவுருவம் விழவில்லை. ஆடைகள் மட்டுமே மங்கலாகத் தெரிந்தன. முகம் கை கால் முதலியன படத்திற் படியவில்லை. எட்டு முறை படம் எடுத்தார்கள். வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் எடுத்தார்கள். அடிகட்கு தெரிந்தும் எடுத்தார்கள்; தெரியாமலும் எடுத்தார்கள். ஒரு முறையாவது அடிகளின் ஒளித் திருமேனி படத்தில் விழவில்லை. ஒளியுடலுக்கு நிழல் ஏது? நிழல் வீழ்ந்தால் அன்றோ அது படத்திற்பதியும். அடிகட்கு நிழல் இல்லை. ஆதலின் நிழற்படமும் எடுக்கப்படுவதற்கில்லை.

பேரொளியைப் படம் பிடிக்க இயலாது. பேரிருளையும் படம் பிடிக்க இயலாது. இருளில் படம் பிடிக்க வேண்டுமாயின் ஒளியூட்டிப் படம் பிடிக்கிறோம். பேரொளியைப் படம் பிடிக்க வேண்டுமாயின் இருளூட்டி, நிழல் செய்து படம் பிடிக்க வேண்டும். பேரொளியாகிய சூரியனைப் படம் பிடிப்பதற்குஹீலியாஸ்கோப் (HELIOSCOPE) முதலிய கருவிகளைப் பயன்படுத்துவதையும் கிரகண காலங்களில் படமெடுப்பதையும் காண்கிறோம்.81 அடிகளது உடலை ஒளி ஊடுருவிச் செல்லும். ஒளி ஊடுருவிச் சென்று விடுவதால் நிழல் சாய்வதில்லை. மரத்துண்டொன்றை வெய்யிலில் நிறுத்தினால் அதன் நிழல் சாய்கிறது. கண்ணாடித்துண்டொன்றை வெய்யிலில் நிறுத்தினால் நிழல் சாய்வதில்லை. மரத்துண்டு சூரிய ஒளியை தடை செய்கிறது. ஆதலில் அதன் மறுபுறத்தில் இருள்(நிழல்) உண்டாகிறது. கண்ணாடித் துண்டின் வழியாக ஒளி ஊடுருவிச் செல்லுகிறது. ஆதலின் நிழல் உண்டாவதில்லை. சன்னலின் மரக்கதவுக்கும் கண்ணாடிக் கதவுக்கும் உள்ள வேறுபாட்டாலும் இதனை அறியாலாம். அடிகளின் உடல் இத்திறத்தால் கண்ணாடி போன்றது. ஒளி ஊடுருவிச் செல்லக்கூடியது.

அடிகளது திருவுருவப்படம் கிடைக்கப் பெறுவதற்கில்லையே என்று வருந்திய அன்பர்கள் அடிகளைப் போன்று ஒரு மண் சிலையாவது செய்து வைத்துக்கொள்ள விரும்பினர். அன்பர்களின் விருப்பப்படி பண்ணுருட்டியிலிருந்து பொம்மை செய்யும் குயவர் ஒருவர் அடிகளது திருமேனியைப் போன்று அழகாக மண்ணால் செய்து வெண்சுதை, வண்ணம் முதலியன தீட்டிக் கொண்டு வந்து அடிகளிடமே காட்டினார். அதனைப் பெற்ற அடிகள்' பொன்னான மேனி மண்ணாயிற்றே' என்று கூறிப் புன்னகை செய்து கையிலிருந்த பொம்மையை நழுவ விட்டார்கள்.



RangaRakes tamilnavarasam.com

{81.கிரகண காலத்தில் சூரியனைக் காண்பதற்குப் புகைக் கண்ணாடியைப் பயன்படுத்துவதுண்டு. கண்ணாடித் துண்டொன்றில் விளக்குப் புகையைப் படியச் செய்து புகைபடிந்த அக்கண்ணாடி வழியாகச் சூரியனைப் பார்த்தால் கண் கூசாது. சூரியன் கிரணங்களின்றிச் சந்திரன் போலத் தோன்றும்.}

பொம்மை தரையில் விழுந்து உடைந்தது. படம் பிடித்தல், சிலை செய்தல் முதலியன வீண் முயற்சிகளைக் கைவிடுமாறு அன்பர்களுக்கு அறிவுரை கூறித் தேக சித்திகளின் அருமை பெருமைகளையும் விளக்கி யருளினர். அன்பர்களும் சமாதானமடைந்தனர்.

### மழையால் நனையாமை

மழை பெய்யும்போது அடிகள் வெளிச் செல்லின் மழையால் நனையப் பெறுவதில்லை. அடிகளது திருமேனி கனல் மேனி என்றும், வெள்ளித் துண்டை உள்ளங் கையில் வைத்து மூடித் திறக்கின் அது உருகி நீராகும் அளவு அடிகளின் திருமேனி சூடுடைய தென்றும் முன்னர் கூறினோம். அடிகளின் உடலிலுள்ள ஞானச் சூட்டை அளவு கருவிகளால் அளக்க இயலாது. சில சமயங்களில் கோடி சூரிய உஷ்ணமும் இருக்கும். அவ்வளவு உஷ்ணத்தை நோக்கி வரும் மழைத் துளி வரும் போதே ஆவியாகிவிடாதோ?

### மூவகைச் சித்தியும் பெற்றது

### கர்மசித்தி, யோகசித்தி,ஞானசித்தி

கர்ம சித்தி, யோகசித்தி, ஞானசித்தி, எனச்சித்திகள் மூன்றாகும் இம் மூன்று சித்திகளையும் அடிகள் பெற்றார்கள். மூவகைச் சித்திகளையும் இறைவன் தனக் கருளினான் என்பதை அருட்பெருஞ்சோதி அகவலில்

**மூவகைச் சித்தியின் முடிபுகள் முழுவதும்**
**ஆவகை எனக்கருள அருட்பெருஞ்சோதி**
**கருமசித்தி களின் கலைபல கோடியும்**
**அரசுற எனக்கருள் அருட்பெருஞ்சோதி**
**யோகசித்தி கள் வகை உறுபல கோடியும்**
**ஆகஎன் றென்க்கருள் அருட்பெருஞ் ஜோதி**
**ஞானசித்தி யின்வகை நல்விரி வனைத்தும்**
**ஆனியின் றெனக்கருள் அருட்பெருஞ்சோதி** 239=-246

எனக் கூறுவர். இச் சித்திகளைப் பற்றி அடிகள் அருளிய உபதேசங்களை அன்பர் ஒருவர் குறித்து வைத்துள்ளது வருமாறு:

கர்மசித்தி, யோகசித்தி, ஞானசித்தி, எனச் சித்தி வகை மூன்றாம்.

**கர்மசித்தியாவது:** அணிமா,துரும்பை மேரு வாக்குகிறது. மகிமா,மேருவைத் துரும்பாக்குகிறது; கரிமா, மேருவை ஒன்றுமில்லாமல் செய்கிறது. லகிமா, ஒன்றுமில்லாத இடத்தில் அனேகங்களாகச் செய்கிறது; ஈசத்துவம், குளிகை


RangaRakes tamilnavarasam.com

வல்லபத்தா லெங்கும் செல்லுகிறது; பிராகாமியம், பரகாயப் பிரவேசம்; வசித்துவம் எழுவகைத் தோற்றமாகிய தேவ மானுஷ்ய நரக மிருகபஷ்ஷி ஊர்வன விருக்ஷம் முதலியவற்றை தன் வசப்படுத்துகிறது. தேகத்தைக் கல்பசித்தி செய்து கொள்ளுதல்; அபர மார்க்கி; சதாசிவாந்த அனுபவம், சதாசிவகால வரை; பிரேதத்தை உயிர்ப்பித்தல்; சித்தி காலம் 31/2 நாழிகை முதல் 33/4 வருஷத்திற்குள்.

**யோக சித்தி விவரம்**: சுச சித்திகளையும் தன் சுதந்தரத்தில் நடத்துகிறது' சங்கல்ப குளிகை; பிராண கல்பதேகி; பிரமகாலம்; பராபரமார்க்கி, சித்தி காலம் க உ வருஷ முதல் க அ வருஷத்திற்குள்,. புதைத்த தேகத்தை நாசமடையா முன் உயிர்ப்பித்தல்.

**ஞான சித்திகளின் விவரம்:** அறுபத்து நாலாயிரம் சத்திகளையும் தன் சுதந்திரத்தில் நடத்துகிறது; சுசஎ கோடியாகிய(?) சூஅஅ கோடி பேதமாகிய மகா சித்திகளையும் தன்னிஷ்டம்போல் நடத்துகிற; காலம் கடந்தது; அடிநிலை முடிநிலை சுத்தகர்ம சுத்தயோக சுத்தஞான சித்தி வல்லபங்களைத் தன் சுதந்தரத்தால் நடத்துகிறது.

-உபதேசப்பகுதி,பக்கம்94

சித்திகள் அறுபத்து நான்கெழுகோடி என் அகவலில் ஓரிடத்துக் கூறப்படுகிறது(ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழு கோடியும் விளங்கக் குலவு மெய்ப்பொருளே-911,912) இப்பேரெண்ணிக்கையான சித்திகள் அனைத்தையுமே அடிகள் பெற்றனர்.

### எல்லாம் வல்ல சித்தி பெற்றது

இறைவன் ஒருவனே எல்லாம் வல்லவன். எல்லாம் வல்ல சித்தன் என இறைவனுக்குப் பெயர். அடிகளும் இறைவன் அருளால் எல்லாம் வல்ல சித்தியைப் பெற்றார். எல்லம் வல்ல சித்தரானார்.

**எல்லாம் வல்லசித் தெனக்களித் தெனக்குனை**
**அல்லா திலை எனும் அருட்பெருஞ்சோதி**

**-அருட்பெருஞ்சோதி அகவல் 297-298**

**தனிதுணையாய் என்றன்னைத் தாங்கிக்கொண் டென்றன்**
**மனித்த உடம்பழியா வாறெ-கனித்துணையாம்**
**இன்னமுதம் தந்தெனக்கே எல்லாமும் வல்ல சித்தி**
**தன்னையுந்தந் துட்கலந்தான் றான்.**

**-(இடை)தனிதிருத்தொடை6(ii)2**

என்னும் பாடல்கள், அடிகள் எல்லாம் வல்ல சித்தியைப் பெற்றாரென்பதற்கு அகச்சான்றுகளாம்.

### ஐந்தொழில் ஆற்றல் பெற்றது



RangaRakes tamilnavarasam.com

படைத்தல்(சிருட்டி),காத்தல்(திதி),அழித்தல்,(சங்காரம),மறைத்தல்(திரோதானம்),அருளால்,(அனுக்கிரகம்)என்பன இறைவன் செய்தருளும் ஐந்தொழில்களாம். இவ்வைந் தொழில்களையும் செய்யும் ஆற்றலை இறைவன் அடிகட்கு அளித்தான். அடிகள் ஐந்தொழில் ஆற்றல் பெற்றார் என்பதற்குப் பின்வரும் பாடல்கள் அகச்சான்றுகளாம்.

**ஓத உலவா ஒருதோழன் தொண்டர் உளன்**
**சாதல் ஒழித்தென்னைத் தானாக்கிப்-பூதலத்தில்**
**ஐந்தொழில் செய் என்றே அருட்சோதிக் கோல் அளித்தான்**
**வெந்தொழில் போய் நீங்க விரைந்து.**

**-6(முடி) பொன்வடிவப்பேறு 11**

**சிந்தா குலந்தவிர்த்துச் சிற்றம் பலப்பெருமான்**
**வந்தன் எனைத்தன் வலிந்தழைத்தே-ஐந்தொழிலும்**
**நீயேசெய் என்றெனக்கே நேர்ந்தளித்தான் என்னுடைய**
**தாயே அனையான் தனித்து.**

**-6(முடி)சுத்தசிவநிலை 23**

**சிருட்டி முதல் ஐந்தொழில் நான் செய்ய எனக் கருள்புரிந்தாய்**
**பொருட்டிகழ் நின் பெருங்கருணைப் புனிதா அமுதுவந்தளித்தாய்**
**தெருட்டிகழ் நின் அடியவர் தம் திருச்சபையின் நடுஇருத்தித்**
**தெருட்டிஎனை வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய்.**

**-6(முடி)திருஅருட்கொடை1**

**ஆக்கல் ஒன் றோ தொழில் ஐந்தையுந் தந்தித்த வண்டபிண்ட**
**வீக்கம்எல் லாம் சென்றுன் இச்சையின் வண்ணம் விளங்குகநீ**
**ஏக்கமு றேல் என் றுரைத்தருட் சோதியும் ஈந்தெனக்கே**
**ஊக்கம்எ லாம் உற உட்கலந் தான் என் உடையவனே.**

**-6(இடை)பேரருள்வாய்மையை வியத்தல்7**

**சிந்தையில் துன்பொழி சிவம்பெறு கெனத் தொழில்**
**ஐந்தையும் எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி**
**உலகுயிர்த் திரளெலாம் ஒளிநெறி பெற்றிட**
**இலகும் ஐந் தொழிலையும் யான் செயத் தந்தனை**

**-அருட்பெருஞ்ஜோதி அகவல்167-168,1577-1578**

## மணிமுடி சூட்டப்பெற்றது

அடிகள் இறைவனால் மணிமுடி சூட்டப் பெற்றார், செங்கோல் அளிக்கப் பெற்றார்.கங்கணம் கட்டப்பெற்றார். அம்பலத்து அரசையும் அளிக்கப்பெற்றார். இவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.


RangaRakes tamilnavarasam.com

என் மகனே! அடைய வேண்டியதையெல்லாம் இப்பிறப்பிலேயே நீ அடைந்தனை, ஐயமுறேல், அஞ்சேல் எனக் கூறி இறைவன் அடிகட்கு மணி முடி சூட்டி வாழ்க என வாழ்த்தியருளினான்.

**ஐயமுறேல் என்மகனே இப்பிறப்பிற் றேனே**
**அடைவதெலாம் அடைந்தனைநீ அஞ்சலைஎன் றருளி**
**வையமிசைத் தனி இருத்தி மணிமுடியும் சூட்டி**
**வாழ்க என வாழ்த்திய என் வாழ்க்கை முதற் பொருளே**
**துய்ய அருட்பெருஞ்சோதி சுத்தசிவ வெளியே**
**சுகமயமே எல்லாஞ் செய் வல்லதனிப் பதியே**
**உய்யுநெறி காட்டிமணி மன்றிடத்தே நடிக்கும்**
**ஒருமை நடத் தரசேஎன் உரையும் அணிந்தருளே**
**அடிச்சிறியே அச்சம் எலாம் ஒருகணத்தே நீக்கி**
**அருளமுதம் மிக அளித்தோர் அணியும் எனக் கணிந்து**
**கடிக்கமலத் தயன்முதலோம் கண்டுமிக வியப்பக்]**
**கதிர்முடியும் சூட்டி எனை களித்தாண்ட பதியே**
**வடித்தமறை முடிவயங்கு மாமணிப்பொற் சுடரே**
**மனம்வாக்குக் கடந்தபெரு வான் நடுவாம் ஒளியே**
**படித்தலத்தார் வான் தலத்தார் பரவிடப் பொதுவில்**
**பரிந்தநடத் தரசே என் பாட்டும் அணிந்தருளே.**
**குணம் அறியேன் செய்தபெருங் குற்றமெலாங் குணமாக்**
**கொண்டருளி என்னுடைய குறிப்பெல்லாம் முடித்து**
**மணமுறுபேர் அருள் இன்ப அமுதமெனக் களித்து**
**மணிமுடியும் சூட்டிஎனை வாழ்கஎன வாழ்த்தித்**
**தணவிலிலா தென்னுளத்தே தான்கச்லந்து நானும்**
**தானும் ஒரு வடிவாகித் தழைத்தோங்கப் புரிந்தே**
**அணவுறுபேர் அருட்சோதி அரசுகொடுத் தருளி**
**ஆடுகின்ற அரசே என் அலங்கல் அணிந்தருளே.**

**-6(இடை)அருள்விளக்கமாலை91,96,99**

என்னும் அருள்விளக்கமாலைப் பாடல்கள் மணிமுடி சூட்டப்பெற்ற மாண்பைக் கூறுவனவாம். அருட்பெருஞ்சோதி அகவலிலும்

**ஆதியீ றறியா அருளர சாட்சியில்]**
**சோதிமா மகுடம் சூட்டிய தந்தையே 1129-1130**

என்றருளுவர்.

**<u>செங்கோல் அளிக்கப்பெற்றது</u>**

மணிமுடி சூட்டியருளிய இறைவன் தனது திருவருட் செங்கோலையும் அடிட்கட்கு அளித்து நீயே ஆள்க என்றருளினான்.

**தோன்றியவே தாகமத்தைச் சாலம் என உரைதேம்**
**சொற்பொருளும் இலக்கியமும் பொய் எனக்கண்டறியேல்**
**ஊன்றியவே தாகமகத்தின் உண்மை நினக் காகும்**
**உலகறிவே தாகமத்தைப் பொய் எனக் கண்டுணர்வாய்**



RangaRakes tamilnavarasam.com

ஆன்றதிரு அருட்செங்கோல் நினக்களித்தோம் நீயே
ஆள்கஅருள் ஒளியால் என் றளித்தனிச்சிவமே
ஏன்றதிரு அமுதெனக்கும் ஈந்தபெரும் பொருளே
இலங்குநடத் தரசேஎன் இசையும் அணிந்தருளே

-6(இடை)அருள்விளக்கமாலை88

தங்கோல் அளவது தந்தருட் ஜோதிச்
செங்கோல் செலுத்தெனச் செப்பிய தந்தையே.
-அருட்பெருஞ்சோதி அகவல்1133-34

<u>கங்கணம் அணிவிக்கப்பெற்றது</u>

செங்கோலளித்த இறைவன் கையிற் பொற் கங்கணத்தையும் புனைவித்தருளினான்.

நடைக்குரிய உலகிடைஓர் நல்ல நண்பன்ஆகி
நான்குறித்த பொருள்கள் எலாம் நாழிகைஒன் றதிலே
கிடைக்க எனக் களித்தகத்தும் புறத்தும் அகப்புறத்தும்
கிளர்ந்தொளிகொண்டோங்கியமெய்க் கிளைஎனும்பேர் ஒளியே
படைப்புமுதல் ஐந்தொழிலும் கொள்க எனக் குறித்தே
பயந்தீர்த்தென் உள்ளகத்தே அமர்ந்ததனிப் பதியே
கடைப்படும் என்கரத்தில் ஒரு கங்கணமும் தரித்த
சுகன நடத்தரசே என் கருத்தும் அணிந்தருளே

-6(இடை_)அருள்விளக்கமாலை50

ஐவர்செயும் தொழில் எனக்கே அளித்தாய்நின் அருளமுதென்
கைவரச்செய் துண்ணுவித்தாய் கங்கணம் என் காத்தணிந்தாய்
சைவர் எனும் நின் அடியார் சபை நடுவே வைத்தருளித்
தெய்வம் என்று வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய்

-6(முடி)திருஅருட்கொடை 4

ஐயர் எனை ஆளுடையார் அரும்பெருஞ்சோ தியினார்
அம்பலத்தே நடம்புரியும் ஆனந்த வடிவர்
மெய்யர் எனை மணம்புரிந்த தனிக்கணவர் துரிய
வெளியில் நிலா மண்டபத்தே மேவிஅமு தளித்தென்
கையகத்தே ஒருபசும்பொற் கங்கணமும்புனைந்தார்
கங்கணத்தின் தரத்தை என்னால் கண்டுரைக்கப் படுமோ
வையகமும் வானகமும் கொடுத்தாலும் அதற்கு
மாறாக மாட்டாதேல் மதிப்பரிதாம் அதுவே.

-6(முடி)அனுபவமாலை31

ஐயமுற்றார் எல்லாரும் புறத்திருக்க நான்போய்


RangaRakes tamilnavarasam.com

**அம்பலத்தே திருநடங்கண் டகங்களிக்கும் போது**
**மைஅகத்தே பொருந்தாத வள்ளல் அரு கணைத்தென்**
**மடிபிடித்தார் நானும் அவர் அடிபிடித்துக் கொண்டேன்**
**மெய் அகத்தே நம்மை வைத்து விழித்திருக்கின் றாய்நீ**
**விளங்குகசன் மார்க்க நிலை விளக்குக என் றெனது**
**கைஅகத்தே ஒருபசும்பொற் கங்கணமும் புனைந்தார்**
**கருணையினில் தாய் அணையார் கண்டாய் என் தோழி**

**-6(முடி)அனுபவமாலை59**

கங்கணம் என்பது ஒருவகைக் காப்பு. ஒரு செயலை முடித்ததற்குமுனைந்து நிற்பதன் அறிகுறியாக் அது கையில் அணியப்படும். 'கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறான்' என்று கூறுகிறோமன்றோ. இப்பிறப்பில் இறைவனுடைய அருளைப் பெற்றே தீர்வது என்று இளமையிலேயே அடிகள் கங்கணங் கட்டிக்கொண்டார்கள். அடிகளது உறுதியையும் உழைப்பையும் கண்ட இறைவன் அடிகட்குப் பொற் கங்கணம் கட்டிப் பட்ட மளித்தான்.

## ஆழி அழிக்கப்பெற்றது

மணிமுடி சூட்டி அருட் செங்கோல் அளித்துப் பொற்கங்கணமும் புனைவித்த இறைவ்ன் ஆழியையும் அளித்தருளினான்.

**வாழிநீ டூழி வாழிஎன் றோங்குபேர்**
**ஆழியை அளித்த அருட்பெருஞ் ஜோதி** 220-230

**வாழிநின் பேரருள் வாழிநின் பெருஞ்சீர்**
**ஆழிஒன் றளித்த அருட்பெருஞ் ஜோதி** 1559-1560

**-அருட்பெருஞ்சோதி அகவல்**

ஆழி-மோதிரம். அது மங்கலப் பொருள்களில் ஒன்று. பரம ஏழைகளும் மோதிரம் அணிவதைப் பார்க்கிறோம். பொன்னால் அணிய இயலாதவரும் வெள்ளியாலோ அன்றிப் பித்தளையாலோ அணிவதைக் காண்கறோம். அழகுக்கு மட்டுமின்றி ஆணைக்காகவும்மோதிரம் அணிவதுண்டு. அரசர்கள் அணியும் மோதிரம் கணையாழி(முத்திரை மோதிரம்)எனப்படும். அடு ஆணைக்காக அணிவதாம். இறைவனும் அடிகட்குக் கணையாழி-முத்திரைமோதிரம்-அணிவித்தான். செங்கோல் அளிப்பின் அதனோடு முத்திரை மோதிரமும் வழங்கப்பட வேண்டியதன்றோ.

## அம்பலத்தரசும் அளிக்கப்பெற்றது

முடி,செங்கோல்,முத்திரை மோதிரம் ஆகிய ஆட்சிச் சின்னங்களையெல்லாம் அளித்த இறைவன் தனது அருளரசாட்சியையும் அடிகட்கு அளித்தருளினான்.

**ஆணை ஆணைநீ அஞ்சலை அஞ்சலை**
**அருள் ஒரு தருகின்றோம்**



RangaRakes tamilnavarasam.com

கோணை மாநிலத் தவரெல்லாம் நின்னையே
குறிக்கொள்வர் நினக்கே என்
ஆணை அம்பலத் தரசையும் அளித்தனம்
வாழ்க நீ மகனேஎன்
றேணை பெற்றிட எனக்கருள் புரிந்தநின்
இணைமலர்ப் பதம் போற்றி.

-6(முடி)தனித்திருமாலை26

மகனாகக்கொண்டு பிள்ளைப்பட்டமளித்தும், அடிமுடி காட்டியும், திருவடி தீக்கை அத்த மத்தக சையோக தீக்கை நயனதீக்கை வாசக தீக்கை ஆகிய தீக்கைகளைச் செய்தும், சுத்ததேகம் பிரணவதேகம் ஞானதேகங்களை அளித்தும், கருமசித்தி யோகசித்தி, ஞானசித்திகளை அளித்தும், பொன்செய்யும் ஆற்றலை அளித்தும், மணிமுடிசூட்டியும், செங்கோல் அளித்தும், கணையாழி அளித்தும், கங்கணம் அணிவித்தும், செத்தாரை எழுப்பும் வல்லமையளித்தும்,ஐந்தொழில் ஆற்றல் வழங்கியும், எல்லாம் வல்ல சித்தியை அளித்தும், மரணமில்லாப் பெருவாழ்வைத் தந்தும் இறைவன் அடிகளை ஏறாத நிலை மீது ஏற்றியருளினான், ஆராலும் அறியாத உயர் நிலையில் வைத்தருளினான்.

ஏறா நிலைமிசை ஏற்றியென் தனக்கே
ஆறாறு காட்டிய அருட்பெருஞ்சோதி

-அருட்பெருஞ்சோதி அகவல் 17-18

பாராதி பூதமொடு பொறிபுலன் கரணமும்
பகுதியும் காலம் முதலாப்
பகர்கின்ற கருவியும் அவைக்குமேல் உறுசுத்த
பரமாதி நாதம் வரையும்
சீராய பரவிந்து பரநாத முந்தனது
திகழங்கம் என்றுரைப்பத்
திருவருட் பெருவெளியில் ஆனந்த நடனம் இடு
தெய்வமே என்றும் அழியா
ஊராதி தந்தெனை வளர்க்கின்ற அன்னையே
உயர் தந்தையே என் உள்ளே
உற்றதுணை யே என்றன் உறவே என் அன்பே
உவப்பேஎன் உடைய உயிரே
ஆராலும் அறியாத உயர்நிலையில் எனைவைத்த
அரசே அருட்சோதியே
அகரநிலை முழுதுமாய் அப்பாலும் ஆகிநிறை
அமுதநட ராஜபதியே

-6(இடை)நடராஜபதிமாலை20

இவ்வாறு ஏறா நிலை மிசை ஏறிய அடிகள், ஆராலும், அறியாத உயர் நிலை பெற்ற அடிகள்,'எனக்கு இணை யார் என்று சொல்வேன்' என்பர்.



RangaRakes tamilnavarasam.com

என்னைப்போல் நோற்றவரும், என்னைப்போல் பேரருள் பெற்ற வரும் எந்த உலகத்தில் யார் உள்ளார்' என்று இறைவனையே வினவுவர்.

**செத்தார் எழுந்தனர் சுத்த சன்மார்க்கம் சிறந்தது நான்**
**ஒத்தார் உயர்ந்தார் இல்லா ஒருவனை உற்றடைந்தே**
**சித்தாடு கின்றனன் சாகா வரமும் சிறக்கப் பெற்றேன்**
**இத்தா ரணியில் எனக்கிணை யார் என்றி யம்புவனே.**

**-6(முடி)தனித்திருமாலை19**

**நோவாது நோன்பெனைப் போல் நோற்றவரும் எஞ்ஞான்றும்**
**சாவா வரம் எனைப்போல் சார்ந்தவரும்-தேவா நின்**
**பேரருளை என்போலப் பெற்றவரும் எவ்வுலகில்**
**யார் உளர் நீ சற்றே அறை**

**-6(முடி)சுத்தசிவசன்மார்க்க உலகின் ஒருமை நிலை11**

அடிகளைப்போல் நோவாது நோன்பு நோற்றவரும் இல்லை; பேரருளைப் பெற்றவரும் இல்லை.

## செத்தாரை எழுப்புதல்

சாகாதிருத்தலும் செத்தாரை எழுப்புவதும் இருபெருஞ்சித்திகள். இவை ஒன்றொடொன்று தொடர்புடையவை, சாகதிருக்கவல்லவரே செத்தாரை எழுப்பமுடியும். செத்தாரை எழுப்பவல்லவரே சாகாதிருக்க வல்லவராவார். நம் நாட்டு ஞானிகளில் பலர் இவ்விரு சித்திகளுமே கைவந்தவர்கள்.

**அப்பர்:** திங்களூர் அப்பூதி அடிகளின் இல்லத்தில் பாம்பு தீண்டி இறந்துபோன மூத்ததிருநாவுக்கரசை இறந்து சில நாழிகை கழத்தபின் உயிர் பெற்று எழச் செய்தருளினார்.

**சம்பந்தர்:** திருமயிலையில் பல ஆண்டுகளுக்கு முன் இறந்து எரிக்கப் பட்டு எலும்பாகப் பொறுக்கிக் குடத்துள் வைத்திருந்த பூம்பாவையைப் பல ஆண்டுகளுக்குப்பின் பிரிந்துபோன ஐம்பூத அணுக்களை ஒன்று திரட்டி மற்ற தாதுக்களை உண்டாக்கி உடம்பை உருவாக்கி உயிரையும் சேர்ப்பித்து இடையில் விட்டுப்போன ஆண்டுகளின் வளர்ச்சியையும் கூட்டி அழகிய மங்கையாக் எழுப்பியருளினார்.

**சுந்தரர்**: திரு அவிநாசியில் பல ஆண்டுகளுக்கு முன் முதலையுண்ட பிள்ளையை செரிக்கப்பட்டு முதலைத் தசையாக மாறிப்போயிருந்த உடம்பை உருவாக்கி உயிரையும் சேர்ப்பித்து இடையில் விட்டுப்போன ஆண்டுகளின் வளர்ச்சியையும் கூட்டி இளங்காளையாக மீட்டருளினார்.

நமது அடிகளும் செத்தாரை எழுப்பும் வல்லமையைப் பெற்றார். செத்தாரை எழுப்பும் வல்லமையைத் தமக்கு இறைவன் அளிதருளினான் எனக்கூறும் பாடல்கள் பல.



RangaRakes tamilnavarasam.com

**உயத்திடம் அறியா திறந்தவர் தமையில்**
**வுலகிலே உயிர்பெற்று மீட்டும்**
**நயத்தொடு வருவித் திடும் ஒருஞான**
**நாட்டமும் கற்பகோ டியினும்**
**வயத்தொடு சாகாவரமும் என் தனக்கே**
**வழங்கிடப் பெற்றனன் மரண**
**பயத்தைவிட் டொழித்தேன் எனக்கிது போதும்**
**பண்ணிய தவம்பலித் ததுவே.**

**-6(முடி) சிவபுண்ணியப்பேறு5**

**அப்பன்வரு தருணம்இதே ஐயம் இலை கண்டாய்**
**அஞ்சாதே அஞ்சாதே அகிலமிசை உள்ளார்க்**
**கெய்ப்பறவே சத்தியமென் றுரைத்திடுநின் உரைகோர்**
**எள்ளளவும் பழுதுவரா வானகத்தின் புறத்தும்**
**எவ்வுயிரும் எவ்வெவரும் ஏத்திமகிழ்ந் திடவே**
**செப்பம் உறு திருவருடபேர் ஒளிவடிவாய்க் களித்தே**
**செத்தாரை எழுப்புதல்நாம் திண்ணம் உணர் மனனே**

**-6(முடி)இறைவரவியம்பல் 1**

**இறந்தவர் எழுக என் றெண்ணியாங் கெழுப்பிட**
**அறந்துணை எனக்கருள் அருட்பெருஞ்சோதி**
**செத்தவர் எழுகெனச் செப்பியாங் கெழுப்பிட**
**அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ்சோதி**

**-அருட்பெருஞ்சோதி அகவல்869-872**

தம் உடம்பிலுள்ள மயிரும்செத்தாரை எழுப்பும் வல்லமை உடையதென்று அடிகள் சாற்றுவர்.

**யான்புரிதல் வேண்டுங்கால் இவ்வுலகில் செத்தாரை**
**ஊன்புரிந்து மீள உயிர்ப்பித்தல்-வாட்புரிந்த**
**அம்பலத்தான் நல் அருளால் அந்தோநான் மேற்போர்த்த**
**கம்பலத்தல் ஆகும் களித்து.**

**-6(முடி)சுத்தசிவநிலை39**

கம்பலம்-உரோமம், மயிர்

அடிகளாரது உடம்பிலுள்ள உரோமம் ஒன்றே செத்தாரை எழுப்ப வல்ல ஆற்றல்பெற்றதாயின் அடிகளின் ஆற்றலை என்னென்பது.

இறந்தவரை எழுப்புகின்ற பேராற்றலை அடிகள் பெற்றவராயினும் அவ்வாறு யாரையும் எழுப்பியதாகத் தெரியவில்லை. மேட்டுக்குப்பத்தில் மணியக்காரர் குடும்பத்தில் ஒருவர் இறந்தபொழுது அடிகள் அவரை எழுப்புவதாகத் தமது



RangaRakes tamilnavarasam.com

பிரம்பையும் ஒரு செம்பில் நீரையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டனராம். செல்லும் வழியில் பாதியிலேயே'பிச்' என் சொல்லிக்கொண்டு திரும்பிவிட்டனராம். திருவுளச் சம்மதம் அவ்வளவுதான் போலும், எதற்கும் அடிக்கடி'பிச்' என்று சொல்வது அடிட்களுக்கு வழக்கம். 'பிச்' என்பது பிச்சு என்பதன் கடைகுறை, பிச்சு-பித்து, 'பிச்சுப்புள்ளை விளையாட்டு' என வரூ உம் அடிகள் திருவாக்கை நோக்குக. பிச்சன், பித்தன் என இறைவனுக்கும் பெயர்.

## மரணமிலாப் பெருவாழ்வு

இதனைச் சாகாக்கலை என்றும் சாககாக் கல்வி என்றும் அடிகள் கூறுவர்.

சன்மார்க்கத்தின் முடிபு சாகாத கல்வியைத் தெரிவிப்பதேயன்றி வேறில்லை. சாகிறவன் சன்மார்க்க நிலையைப் பெற்றவனல்லட். **சாகாதவனே** சன்மார்க்கி.

என்பது அகளின் உபதேசம், (திருவருட்பா உபதேசப்பகுதி (பக்கம் 68) என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் தானே என அடிகள் பாடுவர்.

**உற்றமொழி உரைகின்றேன் ஒருமையினால் உமக்கே**
**உறவன் அன்றிப் பகைவன் என உன்னாதீர் உலகீர்**
**கற்றவரும் கல்லாரும் அழிந்திடக் காண் கின்றீர்**
**கரணம் எலாம் கலங்கவரும் மரணமுஞ்சம் மதமோ**
**சற்றும் இதைச் சம்மதியா தென் மனந்தான் உமது**
**தன்மன ந்தான் கன்மனமோ வன்மனமோ அறியேன்**
**இற்றிதனைத் தடுத்திடலாம் என்னொடும் சேர்ந் திடுமின்**
**என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே**

**-6(முடி)மரணம் இலாப்பெரு வாழ்வு 26**

'என்மார்க்கம் இறவாத சன்மார்க்கம் தோழி' என்றும், 'துஞ்சாத நிலை ஒன்று சுத்த சன்மார்க்கச் சூழலில் உண்டு, அது சொல்லளவன்றே' என்றும் அடிகள் பாடுவர்.

**துஞ்சாத நிலையொன்று சுத்த சன்மார்க்கச்**
**சூழலி லுண்டது சொல்லன வன்றே**
**எஞ்சாத அருளாலே யான் பெற்றுக் கொண்டேன்**
**இறந்தாரை யெல்லா மெழுப்புதல் வல்லேன்**
**விஞ்சாத அறிவாலே தோழிநீ யிங்கே**
**` வேது செய் மரணத்துக் கெது செய்வோ மென்றே**
**அஞ்சாம லென்னோடே யாடேடி பந்து**
**அருட்பெருஞ் சோதிகண் டாடேடி பந்து**

**ஈரமு மன்புங்கொண் டின்னருள் பெற்றேன்**
**என்மார்க்க மிறவாத சன்மார்க்கந் தோழி**
**காரமு மிகுபுளிச் சாரமுந் துவர்ப்புங்**
**கைப்போடே யுப்போடே கசப்போடே கூட்டி**
**ஊரமு துண்டுநீ யொழியாதே யந்தோ**
**ஊழிதோ றூழியு முலவாமை நல்கும்**


RangaRakes tamilnavarasam.com

**ஆரமு துண்டென்னோ டாடேடி பந்து**
**அருட்பெருஞ் சோதிகண் டாடேடி பந்து.**

**கீர்த்தனை, ஆடேடி பந்து 8-9**

மரண மிலாப் பெரு வாழ்வைப் பெற்றுக் கொண்ட அடிகள் 'மரண மிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்' என மக்களைக் கூவி அழைப்பர்.

**நினைந்துநினைந்து துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே**
**நிறைந்துநிறைந் தூற்றெழுன்ங் கண் ணீரதனால் உடம்பு**
**நனைந்து நனைந் தருளமுதே நன்னிதியே ஞான**
**நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று**
**வனைந்துவனைந் தேத்துதும் நாம் வம்மின் உலகியலீர்**
**மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்**
**புனைந்துரையேன் பொய் புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்**
**பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே.**

-6(முடி)மரணம் இலாப்பெருவாழ்வு 1

பின்னர் அறிவோம் எனச்சிறிது தாழ்த்திருப்பீர் ஆனால் மரணம் என்னும் பெரும்பாவி வந்திடுமே, அந்தோ, சற்றும் அதை நும்மாலே தடுக்கமுடியாதே, சமரச சன்மார்க்க சங்கத்தவர்கள் அல்லால் அம் மரணத்தை தடுக்கவல்லார் எவ்வுலகிலும் எவரும் இல்லை, இது சத்தியம், ஆதலின் உலகீர்! பற்றிய பற்றுகள் அனைத்தையும் விட்டு அருளம்பலப் பற்றையே பற்றுங்கள், நீவிர் என்றும் இறக்கமாட்டீர் என்பர்.

**மற்றறிவோம் எனச்சிறிது தாழ்த்திருப்பீர் ஆனால்**
**மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ**
**சற்றும் அதை நும்மாலே தடுக்க முடியாதே**
**சமரச சன்மார்க்கசங்கத்த வர்கள் அல்லால் அதனை**
**எற்றிநின்று தடுக்கவல்லார் எவ்வுலகில் எவரும்**
**இல்லை கண்டீர் சத்தியமீ தென்மொழிகொண்டுலகீர்**
**பற்றியபற் றனைதினையும் பற்றறவிட் டருளம்**
**பலப்பற்றே பற்றுமினோ எற்றும் இற வீரே.**

-6(முடி)மரணம் இலாப்பெருவாழ்வு24

இறவாத பெருவரம் நீர் ஏன் அடையமாட்டீர் என வினவுவார். பிணி மூப்பில் உமக்குச் சம்மதமோ, மறந்தும் அவற்றை நினைகில் நல்லோர் மனம் நடுங்குமே, சன்மார்க்கம் பிணி மூப்பு மரணம் இல்லாமல் தவிர்க்கும், இங்கே வம்மின், பிறந்த பிறப்பு இதில்தானே நித்திய மெய்வாழ்வு பெற்றிடலாம், பேரின்பம் உற்றிடலாம் என அழைப்பர்.

**இறந்தவரை எடுத்திடும்போ தரற்றுகின் றீர் உலகீர்**
**இறவாத பெருவரம்நீர் ஏன் அடைய மாட்டீர்**
**மறந்திருந்தீர் பிணி மூப்பில் சம்மதமோ நுமக்கு**
**மறந்தும் இதை நினைக்கில் நல்லோர் மனம் நடுங்கும் கண்டீர்**



RangaRakes tamilnavarasam.com

சிறந்திடுசன் மார்க்கம் ஒன்றே பிணிமூப்பு மரணம்
சேராமல் தவிர்த்திடுங்காண் தெரிந்துவம்மின் இங்கே
பிறந்தபிறப் பிதிற்றானே நித்தியமெய் வாழ்வு
பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே

மரணமிலாப் பெருவாழ்வை பெற்றுக்கொண்ட அடிகள் இறவா வரம் பெற்றேன் என்னும் சாகாவரம்ட் பெற்றேன் என்றும் தான் பெற்ற பெருவாழ்வைச் சாற்றும் பாடல்கள் மிகப்பல. அவற்றுட் சில வருமாறு:

என்னையும் பணிகொண் டிறவா வரமளித்
தன்னையில் உவந்த அருட்பெருஞ்சோதி 125-26

இறவா வரமளித் தென்னை மேல் ஏற்றிய
அறவாழி ஆம் தனி அருட்பெருஞ்சோதி 157-158

சாவா நிலை இது தந்தனம் உனக்கே
ஆவா என் அருள் அருப்பெருஞ்சோதி 209-210

இனிப்பிற வாநெறி எனக்களித் தருளிய
தனிப்பெருந் தலைமைத் தந்தையே தந்தையே 1163-1164

சாகாக் கல்வியின் தரம் எலாம் உணர்த்திச்
சாகாவரத்தையும் தந்து மேன்மேலும் 1567-1568

-அருட்பெருஞ்சோதி அகவல்

தந்தையைக் கண்டேனான் சாகா வரம் பெற்றேன்
சிந்தை களித்தேனென் றுந்தீ பற
சித்தெலாம் வல்லேனென் றுந்தீ பற,

-கீர்த்தனைப் பகுதி,திரூத்தியார் 9

ஏனையான் மதித்துப் புகல்கின்ற தன்றிஃதெந்தைபிரான்
தனையான் மதித்திங்குப் பெற்றநல் வாழ்வது சாற்றுகின்றேன்
வினையான் மெலிந்த மெலிவைஎல் லாம்விரைந் தேதவிர்த்துத்
தனையான் புணர்ந்திடச் சாகா வரத்தையும் தந்தனனே.

-6(முடி)அநுபவசித்தி9

உயத்திடம் அறியா திறந்தவர் தமைஇவ்
வுலகிலே உயிர்பெற்று மீட்டும்
நயத்தொடு வருவித் திடும் ஒரு ஞான
நாட்டமும் கற்பகோ டியினும்
வயத்தொடு சாகா வரமும் என் தனக்கே
வழங்கிடப் பெற்றனன் மரண
பயத்தைவிட் டொழிந்தேன் எனக்கிது போதும்



RangaRakes tamilnavarasam.com

பண்ணிய தவம்பலித் ததுவே

-6(முடி)சிவபுண்ணியப்பேறு 5

பெற்றேன் என்றும் இறாவாமை
பேதம் தவிர்ந்தே இறைவன் எனை
உற்றே கலந்தன் நானவனை
உற்றே கலந்தேன்ன் ஒன்றானேம்
எற்றறே அடியேன் செய்த்தவம்
யாரே புரிந்த்தர் இன்னமுதம்
துற்றே உலகீர் நீவிர் எலாம்
வாழ்க வாழ்க துனிஅற்றே

-6(முடி)உற்றதுரைத்தல் 10

நோவாது நோன்பெனைப்போல் நோற்றவரும் எஞ்ஞான்றும்
சாவா வரம் எனைப்போல் சார்ந்தவரும்-வேதா நின்
பேரருளை என்போலப் பெற்றவரும் எவ்வுலகில்
யார் உளர் நீ சற்றே அறை.

-6(முடி) சுத்தசிவ சன்மார்க்க உலகின் ஒருமைநிலை11

கூகா என அடுத்தோர் கூடி அழாதவண்ணம்
சாகா வரம் எனக்கே தந்திட்டான் ஏகாஅன்
ஏகா என மறைகள் ஏத்துஞ்சிற் றம்பலத்தான்
மாகா தலனா மகிழ்ந்து.

-6(முடி)சுத்தசிவநிலை24

அருட்சோதி யானேனென் றறையப்பா முரசு
அருளாட்சி பெற்றேனென் றறையப்பா முரசு
மருட்சார்பு தீர்ந்தேனென் றறையப்பா முரசு
மரணந்த விர்ந்தேனென் றறையப்பா முரசு.

-நாமாவளி

அமரரும் முனிவரும் அதிசயித் திடவே
அருட்பெருஞ் ஜோதியை அன்புடன் அளித்தே
கமமுறு சிவநெறிக் கேற்றிஎன் றனையே
காத்தென துளத்தினில் கலந்தமெய்ப் பதியே
எமன் எனும் அவன் இனி இலைஇலை மகனே
எய்ப்பற வாழ்க என் றியம்பிய அரசே
சமரச சன்மார்க்க சங்கத்தின் முதலே
தனிநட ராஜ என் சற்குரு மணியே.


RangaRakes tamilnavarasam.com

சாகாக் கலையாகிய உடம்பொடு மறைதல் தமிழகத்தில் பண்டுதொட்டே உண்டு. சங்க இலக்கியங்களில் இதற்குச் சான்றுகள் உள. 'தவம்செய் மாக்கள் தம் உடம்பு இடாது அதன் பயன் எய்திய அளவைமான' என்னும் பொருநராற்றுப்படை வரிகள் உடம்பொடு மறைதலைக் கூறுகின்றன.

**தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ**
**ததன்பய மெய்திய வளவை மான**

**-பொருநராற்றுப்படை 91-92**

இதற்கு உரை எழுதும் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் 'மிக்க தவத்தைச் செய்கின்ற மாக்கள் தம்முடைய தவஞ்செய்த உடம்பைப் போகடாதேயிருந்து அத்தவத்தாற்பெறும் பயனைப்பெற்ற தன்மையைப் யொப்ப' என்றெழுதுகின்றார்.

தவத்தின் ஆற்றலைப் பெற்றவர்க்கு இயமனை வெல்லுதலும் கை கூடும் எனத் திருவள்ளுவரும் கூறுவர்.

**கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட்டவர்க்கு**

**குறள் 269**

மரணமிலாப் பெருவாழ்வு திருவள்ளுவர்க்கும் உடன்பாடென்பதற்கு இக்குறட்பாவே சான்றாம். தேவர் குறளில் சாகாத கல்வியைப் பற்றிச்சொல்லப்பட்டுள்ளதென வள்ளற் பெருமானும் தமது உபதேசங்களிற் கூறியுள்ளனர்.

பதிற்றுப்பத்தில் காணப்படும் நிகழ்ச்சியொன்றும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனை ஆசிரியர் பாலைக் கௌதமனார் பாடினார். பாடிப்பெற்ற பரிசில் அவரும் அவரது ம்னைவியும் உடம்பொடு மறைந்ததாம். பாலைக்கௌதமனாரின்பாட்டுக்கு மகிழ்ந்த குட்டுவன், பரிசிலாக எதுவேண்டுமோ பெற்றுக் கொள்ளுமின் என்றான். நானும் என் மனைவியும் சுவர்க்கத்திற்குப் போக வேண்டும். இதுவே யாம் வேண்டும் பரிசில் எனப் பாலைக் கௌதமனார் கேட்டார். அவர் வேண்டிய பரிசிலைக் குட்டுவன் வழங்கக் கருதிப் பெரியோர்களுடன் ஆராய்ந்து கௌதமனாரும் அவர் மனிவியும் சுவர்க்கம் புருவதற்காகப் பத்து பெருவேள்விகளைச் செய்வித்தான். ஒன்பது வேள்வி வரையில் கௌதமனாரும் அவர் மனைவியும் வேள்விக்களத்தில் இருந்தனர். பத்தாம் பெருவேள்வியில் அங்கிருந்த கௌதமனாரும் அவர் மனைவியும் காணப் பெறவில்லை. உடம்போடு சுவர்க்கம் புகுந்தனர். பதிற்றுப்பத்து மூன்றாம்பத்தின் பதிகத்தில் இதனைக் கூறும் பகுதி வருமாறு.

இமயவரம்பன் தம்பி.......பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலை கௌதமனார் பாடினார் பத்துப்பாட்டு......



RangaRakes tamilnavarasam.com

பாடிப் பெற்ற பரிசில் 'நீர் வேண்டியது கொண்கின்' என ' யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல்வேண்டும்' என,. பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பிக்கப் பத்தாம் பெருவேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பணியையும் காணாராயினர்.

ஒன்பது பெரு வேள்விவரை இருந்தவர்கள்-காணப்பட்டவர்கள் -பத்தாம் பெரு வேள்வியிற் காணாராயினர். 'காணாராயினர்' என்ற சொல்லை நன்கு சிந்திக்க. கண்ணுக்குப் புலப்படாதவர் ஆயினர், உடம்போடு மறைந்து போயினர் என்பது பொருளாம்.சுவர்க்கப் பரிசிலை எப்புலவரும் அதுவரை கேட்டதில்லை. எவ்வரசனும் அதனை வழங்கியதில்லை. புலனழுக்கற்ற அந்தணளராகிய பாலைக் கௌதமானார் உடம்போடே சுவர்க்கம் புகுதலைப் பரிசிலாகக் கேட்டார். அஃதும் இல்லக் கிழத்தியோடும் புகவேண்டு மெனக் கேட்டார். கேட்டதை இல்லை என்னாது ஈயும் கொடையாளனாகிய சூட்டுவனும் பெரியோர்களைக் கொண்டு வேள்வி செய்து உடம்போடே சுவர்க்கம் புரும் பரிசிலை நல்கினான். புருவிக்கச் செய்யும் பெரியோர்களும் விளங்கினர் என்பதற்கு இப்பதிற்றுப் பத்துப் பதிகம் சான்றாம்.

**அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்**
**குடியார்க் கெழுதிய கைச்சீட்டுப்-படியின்மிசைப்**
**பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து**
**முத்தி கொடுக்க முறை.**

என்னும் திருமுகப் பாசுரத்தைப் பெற்றுவந்த பெற்றான் சாம்பானுக்கு உமாபதி சிவாசிரியர் சத்தியோநிருவாணதீக்கை செய்து முத்தி கொடுத்ததும். முத்தி பெற்ற பெற்றான் சாம்பானைக் காணாமையால் ஐயுற்றவர்களுக்கும் அரசனுக்கும் ஐயந் தெளிவிப்பான் முள்ளிச் செடிக்கு முத்தி கொடித்தருளியதும் ஈண்டு கருதத் தக்கவையாம்.

நம் சமயகுரவர் நால்வரும் உடம்பை மறைத்தவர்களே. அவர்களது உடம்புகள் மண்ணுக்கோ நெருப்புக்கோ இரையாகவில்லை. திருஞான சம்பந்தர் உடம்பு அழலுருவிற் கரந்தது. திருநாவுக்கரசர் உடம்பு இலிங்க உருவாயிற்று. சுந்தரமூர்த்திகள் உடம்பு வளி வண்ணமாகிப்பறந்து மறைந்தது. மாணிக்கவாசகர் உடம்பு வெளிவண்ண மாகிக் கலந்தது. பட்டினத்தார் உடம்பு இலிங்க உருவாயிற்று.

**சத்தாகி நின்றோர் சடங்களி லிங்கமென**
**வைத்தாரும் உண்டோஎன் வாழ்வே பராபரமே**

**பராபரக்கண்ணி 244**

எனத் தாயுமானவர் கூறுகின்றார், அப்பரும் பட்டினத்தாரும் தங்களது உடம்புகளைச் சிவலிங்க வடிவமாக மாற்றிக்கொண்டனர். மாணிக்க வாசகரும் வள்ளற்பெருமானும் வெளிவண்ண மாகத் தம்முடம்பை ஆக்கிக் கொண்டு மறைந்தனர்.



RangaRakes tamilnavarasam.com

இவர்கள் உடம்புகள் கர்ப்பூர பக்குவம் வாய்ந்தவை. கட்டைபோன்ற உடம்பு, பஞ்சுபோன்ற உடம்பு, கர்ப்பூரம் போன்ற உடம்பு என உடம்பில் மூவகைப் பக்குவம் உண்டு. மரக்கட்டையில் தீப்பற்றினால் மரக்கட்டை எரிந்து கரிக்கட்டை எஞ்சும். இதுபோல் மரக்கட்டை போன்ற உடம்புகள் இங்கே விழும். மண்ணுக்கே நெருப்புக்கே இரையாகும். பஞ்சில் தீப்பற்றினால் பஞ்சு வெந்து சாம்பலாகும். எச்சம் கரிக்கட்டை போன்று மிகுதியாக இராது, சிறிது கரிச்சாம்பலே எஞ்சும். பஞ்சுபோன்ற இரண்டாவது வகை உடம்புகளும் இங்கே விழுவனவே. ஆயினும் தம் தேகம் இன்ன காலத்தில்,இன்ன இடத்தில் விழும் என்பதை அவர் அறியக்கூடும். தாம் விரும்பிய காலத்தில் விரும்பிய இடத்தில் தேகத்தை விடவும் கூடும். மூன்றாவது வகை கர்ப்பூரபக்குவம் வாய்ந்த உடம்பு. கர்ப்பூரத்தில் தீப்பற்றினால் எரிந்தபின் விஞ்சுவது ஒன்றுமில்லை. இதுபோற் கர்ப்பூட உடம்புகள் கரைந்துபோகும். இங்கே விழுந்து மண்ணுக்கோ தீக்கோ இரையாகா. இதனைத் திருமூலர்.

**அழிகின்ற சாயா புருடனைப் போலப்**
**கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்**
**எழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தை யொக்கப்**
**பொழிகின்ற இவ்வுடற் போமப் பாத்தே**

**-திருமந்திரம் 2587**

என்பர். தாயுமானவரும்,

**சித்த திருவிகற்பஞ் சேர்ந்தார் உடல் தீபம்**
**வைத்தகர்ப்பூ ரம்போல் வயங்கும் பராபரமே** 245

என்றும்,

**வெளியாய் அருளிம் விரவும் அன்பர் தேகம்**
**ஒளியாய்ப் பிறங்கியதும் உண்டோ பராபரமே** 190

என்றும் கூறுவர்.

சுத்த தேகம், பிரணவ, தேகம் ஞான தேகம் எனும் மூன்று தேக சித்திகளையும் முற்றப்பெற்ற வள்ளற் பெருமானின் உடம்பு ஒளியாய்ப் பிறங்கிற்று; தீபம் வைத்த கற்பூரம் போல் வயங்கிற்று; வெளியாய் அருளிள் விரவிற்று. இத்தகைய உடம்பை ஊறு செய்யவும் அழிக்கவும் எதனாலும் இயலாது. பஞ்ச பூதங்களாலே, கதிர்களாலே, கொலைகருவிகளாலே, கோள்களாலே, கூற்றுவனாலே இவ்வுடம்புகளை ஒன்றுஞ் செய்ய இயலா.

**காற்றாலே புவியாலே ககனமத னாலே**
**கனலாலே புனலாலே கதிராதியாலே**
**கூற்றாலே பிணியாலே கொலைக்கருவியாலே**
**கோளாலே பிற இயற்றும் கொடுஞ் செயல் களாலே**
**வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்**
**மெய் அளிக்க வேண்டும் என்றேன் விரைந்தளித்தான் எனக்கே**
**ஏற்றாலே இழிவென நீர் நினையாதீர் உலகீர்**



RangaRakes tamilnavarasam.com

**எந்தை அருட் பேருஞ்சோதி இறைவனைச்சார் வீரே**

-6(முடி)தனித்திருமாலை 40

**ஆராலும் அறிந்துகொளற் கரியபெரும் பொருளே**
**அம்மேஎன் அப்பா என் ஐயா என் அரசே**
**காராலும் கனலாலும் காற்றாலும் ககனக்**
**கலையாலும் கதிராலும் கடல்லாலும் கடல்சூழ்**
**பாராலும் படையாலும் பிறவாலும் தடுக்கப்**
**படுதலிலாத் தனிவடிவம் எனக்களித்த பதியே**
**சீராலும் குணத்தாலும் சிறந்தவர்சேர் ஞான**
**சித்திபுரத் தமுதே என் நித்திரை தீர்ந்ததுவே**

**-6(முடி)பெறாப்பேறு2**

சித்திபெற்ற உடம்பில் வாள் செல்லாது. துப்பாக்கிக் குண்டும் பாயாது. விண்ணினின்று வீழ்கின்ற காஸ்மிக் கதிர்கள் முதலியவையும் இவ்வுடம்பை ஒன்றுஞ் செய்யா. மேற்பாடல்களில் 'கதிராதியாலே' ' கதிராலும் ' என்று கூறியதைக் கவனிக்க. விண்வெளிக்கும் சந்திரனுக்கும் செல்லும் விஞ்ஞான வீரர்கள் இக்கதிராதிகளுக்கு அஞ்சியே பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமான பாதுகாப்புக் கவசங்களை அணிந்து செல்கின்றனர். வள்ளற் பெருமானைப் போன்று தேக சித்தி பெற்ற மெய்ஞ்ஞான வீரர்களோ எவ்வகைப் பாதுகாப்புக் கவசமும் இன்றி வெற்றுடம்பாகவே விண்வெளிக்கேருவர், சந்திரன் முதலிய கோள்களுக்குச் செல்வர்; பல்லாயிரம், அண்டங்களிலும் பராகிரமித்துத் திரிவர். தேக சித்தி பெற்றார் உடம்புகள் எங்கும் இயகுங்கும். அவற்றின் இயக்கத்தை எதனாலும் தடைப்படுத்த இயலா. 'தடுக்கப்படுதலித் தனிவடிவம்' என அடிகள் கூறுவதை நோக்குக.

தேகசித்தி பெற்றார் உடம்புகள் வெளியாய் அருளில் கலக்கும் என்றும் இங்கு நிலத்தில் விழாதென்றும் கண்டோம். அவர்கள் இறைவனோடு இரண்டறக் கலப்பர். அவர்களுக்கு இனிப் பிறப்பு இல்லை. பிறந்த பிறப்பாகிய இப்பிறப்பே இறுதிப்பிறப்பு. இப்பிறப்பில் பெற்ற இத்தேகமே இறுதித் தேகம். இனி ஒரு தேகம் எடுப்பதில்லை. இதுவே நித்திய தேகம்.

குமார சுவாமிகள் அருளிய சுத்த சாகதத்துள் தேக சித்தித் திறம் அருமையாகவும் அழுத்தந் திருத்தமாகவும் கூறப்படுகிறது.

**அடுத்த மற்றிரண்டு சனனத்தில் வீட்டை**
**அடைந்திடும் தொம்பத நெறியோர்**
**அடுத்த மற்றொரு சனனத்தில் வீட்டை**
**அடைந்திடும் தற்பத நெறியோர்**
**அடுத்த இச்சனனந் தன்னில் அடைந்திடும் வீடு**
**அசிபத நெறியுளோர் இவரும்**
**அடுத்த இவ்வுடலோடு அடைந்திடாவிடில் மேல்**
**ஆக்கை ஒன்றொடுக்கும் என்று உணர்வாய்** 17



RangaRakes tamilnavarasam.com

ஒடுங்கிடும் காலம் தோன்றின அடைவே
ஒடுங்கிடும் என்று உரைப்பதனால்
ஒடுங்கிடும் காலம் சத்தியவாதிக்கு ஒடுங்கும் இவ்
உடல் தன் மாத்திரையில்
ஒடுங்கிடும் காலம் அசத்தியவாதிக்கு ஒடுங்கும்
இவ் உடல் அசத்தியமாய்
ஒடுங்கிடும் காலம் உடல் இங்கே வீழ்ந்தால்
ஒடுங்கின தில்லை என்று உணர்வாய். 18

மேல் ஒரு வடிவை எடுத்ததே ஆகின்
மேவும் இவ்வுடல் இங்கே வீழும்
மேல் ஒருவடிவை எடுத்தது இன்றாகின்
மேவும் இவ்வுடல் இங்கே விழா
மேல் ஒரு சிவத்தைச் சீவன் சென்று அடையும்
மேவும் இவ்வுடல் இங்குத்தானே
மேல் ஒரு சிவத்தின் வடிவது ஆம் அருளாய்
வெளியதாம் உலகு கண்டிடவே 19

இந்த நல் ஒழுங்கில் முன் இருபதமும்
எய்தி இவ் அசிபதத்து அடைந்தால்
பந்தம் இல் சிவத்தை வடிவொடும் அடையும்
பகுத்து அவைஒன்றில் ஒன்று ஒதுங்கிச்
சந்ததம் தருக்கி அசிபதத்து அருத்தம் தனைத்
தத்தம் பதத்தினில் ஒடுக்கும்
அந்தகர் தமக்கு மற்று ஒருக்காலும்
அசிபத முத்தியே கிடையா. 26

-சுத்தசாதகம்

மேலெடுத்துக் காட்டிய சுத்த சாதகச் செய்யுள்களில்' அடுத்த இவ்வுடலோடு அடைந்திடாவிடில் மேல் ஆக்கை ஒன்று எடுக்கும் என்று உணர்வாய்' , ' ஒடுங்கிடும் காலம் உடல் இங்கே வீழ்ந்தால் ஒடுங்கினதில்லை என்று உணர்வாய்', 'மேல் ஒருவடிவை எடுத்ததே ஆகின் மேவும் இவ்வுடல் இங்கே வீழும், மேல் ஒருவடிவை எடுத்தது இன்றாகின் மேவும் இவ்வுடல் இங்கே வீழா', 'இவ்வுடல் இங்குத்தானே சிவத்தின் வடிவாய் அருளாய் வெளியதாம் உலகு கண்டிடவே,. 'சிவத்தை வடிவொடும் அடையும்' என்ற தொடர்களை நன்கு ஊன்றி உணர்க. இதனையே தாயுமானாரும்

உலகநெறி போற்சடலம் ஓய உயிர் முத்தி
இலகுமெனல் பந்த இயல்போ பராபரமே 358

என்பர்.

உடம்பு பிணமானால் மறு பிறப்பு உண்டு. உடம்பு பிணமாகாவிடில் மறு பிறப்பு இல்லை. அதுவே இறுதிப் பிறப்பு. சுத்த பிரணவ ஞான தேகங்களைப்


RangaRakes tamilnavarasam.com

பெற்ற அருளாளர்களின் உடம்பு அருள் வெளியாய் இறைவனோடு இரண்டறக்கலக்கும். இதுவே சாகாக்கலை; மரணமிலாப் பெருவாழ்வு. மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற தன் உடல் நிலையை அடிகள் அருட்பெருஞ் ஜோதி அகவலிற் கூறுவதைக் கருதுக.

தோலெலாம் குழைந்திடச் சூழ்நரம் பனைத்தும்
மேலெலாம் கட்டவை விட்டுவிட் டியங்கிட
என்பலாம் நெக்குநெக் கியலிடை நெகிழ்ந்திட
மென்புடைத் தசை எலாம் மெய் உறத் தளர்ந்திட
இரத்தம் அனைத்தும் உள் இறுகிடச் சுக்கிலம்
உரத்திடை பந்தித் தொருதிர ளாயிட
மடல் எலாம் மூளை மலர்ந்திட அமுதம்
உடல் எலாம் ஊற்றெடுத் தோடி நிரம்பிட
ஒண்ணுதல் வியர்த்திட ஒளிமுகம் மலர்ந்திட
தண்ணிய உயிர்ப்பினில் சாந்தம் ததும்பிட
உண்ணகை தோற்றிட உரோமம் பொடித்திடக்
கண்ணிநீர் பெருகிக் கால்வழிந் தோடிட
வாய்துடித் தலறிட வளர்செவித் துளைகளில்
கூயிசைப் பொறிஎலாம் கும்மெனக் கொட்டிட
மெய் எலாம் குளிர்ந்திட மென்மார் பசைந்திட
கைஎலாம் குவித்திடக் கால் எலாம் சுலவிட
மனங்கனிந் துருகிட மதி நிறைந் தொளிர்ந்திட
இனம்பெறு சித்தம் இயைந்து களித்திட
அகங்காரம் ஆங்காங் கதிகரிப் பமைந்திட
சகங்காண உள்ளம் தழைத்து மலர்ந்திட
அறிவுரு அனைத்தும் ஆனந்த மாயிடப்
பொறியுறும் ஆன்மதற் போதமும் போயிடத்
தத்துவம் அனைத்தும் தாமொருங் கொழிந்திடச்
சத்துவம் ஒன்றே தனித்துநின் றோங்கிடச்
உலகெலாம் விடயம் உளவெலாம் மறைந்திட
அலகிலா அருளின் ஆசைமேற் பொங்கிட
என்னுளத் தெழுந்துயிர் எல்லாம் மலர்ந்திட
என்னுளத் தோங்கிய என் தனி அன்பே

அருட்பெருஞ்ஜோதி அகவல் 1449-1476

அருட்பெருஞ்சோதி அகவலில் அடிகள்கூறும் இவ்வனுபவம்

வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன் தழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்புகொண்டு இன் தேன் பாய்த்தினன் நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினான் உருகுவது
உள்ளம் கொண்டு ஓர் உருச்செய்தாங்கு எனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன் ஒள்ளிய

**கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை**
**என்னையும் இருப்ப தாக்கினன் என்னில்**
**கருணை வாந்தேன் கலக்க**
**அருளொடு பராவமுது ஆக்கினன்**
**பிரமன்மால் அறியாப் பெற்றி யோனே.**

**-திருவாசகம்,திருவண்டப்பகுதி 170-182**

என்னும் திருவாசகத்தின் விரியாக உள்ளது. இவற்றை யெல்லாம் ஈண்டு விரிக்கிற்பெருகும் விரிவை இனிவரவிருக்கும் ' சாகாக்கலை ஆராய்ச்சி' என்னும் எமது நூலிற் காண்க.

## ஞானசபையை மூடியது

ஞானசபையை அன்பர்கள் முறையோடு நடத்தாததை அறிந்த அடிகள் சபை வழிபாட்டு விதிகளை வகுத்ததைக் கண்டோம். அதன் பின்னும் சபையை நடத்தியவர்கள், அவ்விதிகளின்படி நடத்தவில்லை. இதனால் வருத்தமுற்ற அடிகள் ஞானசபையை மூடிவிட்டனர். சபையைப் பூட்டித் திறவுகோலைத் தம்மிடமே சித்திவளாகத்தில் வைத்துக்கொண்டனர். சபையில் வழிபாடு நின்றுபோயிற்று. அதன்பின் அடிகள் சித்தி பெற்றவரை சபை திறக்கப்படவில்லை. சித்தி பெற்ற நான்காண்டுகளுக்குப்பின் 1878ஆம் ஆண்டில் சன்மார்க்க சங்காத்தார் சபையைத்திறந்து வழிபாடு தொடங்கினர். விரிவு எமது 'வடலூர் வரலாற்'றில் காண்க.

## வடலூரிலும், சித்தி வளாகத்திலும் பாடிய பாடல்கள்
## ஆறாந்திருமுறை

வடலூரிலும் சித்திவளாகத்திலும் வைகிய காலங்களில் அடிகள் அருட்பெருஞ்சோதி ஆண்டவனை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங்கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான நடத்தரசே என் உரிமை நாயகனேஎன்று வனைந்து வனைந்து ஏத்திப் பாடிய பாடல்கள் பல. ஆசை உண்டேல் வம்மின் இங்கே என்று அனைவரையும் கூவி அழைத்து, நீர் பிறதோ யான் உமக்கு நேய உறவலனோ என்று சொல்லி உலகர்க்கு உய்வகை யாகப் பாடிய பாடல்கள் பல. தாம் பெற்ற பேரனுபவங்களை விதந்து கூறும் பாடல்கள் பல. இவைகளெல்லம் திருவருட்பா ஆறாந்திருமுறையாயின. சென்னையிலும் கருங்குழியிலும் உறைந்த காலத்துப் பாடியவை முதல் ஐந்து திருமுறைகள். 1867இல் வடலூருக்கு வந்தபின் வடலூரிலும் மேட்டுக்குப்பத்திலும் எழுந்தருளியிருந்த காலத்தில் பாடியவை ஆறாந்திருமுறை. இவ்வாறாந்திருமுறையுள் பிள்ளைச்சிறு விண்ணப்ப்ம், பிள்ளைப் பெருவிண்ணப்பம், அருள் விளக்கமாலை,அனுபவமால, அருட்பெருஞ்சோது அகவல், ஆகியவை அடிகளின் வரலாற்றுக் குறிப்புகளையும் அனுபவங்களையும் தம்முட்கொண்டவையாம். ஆறாந்திருமுறைப் பாடல்களை இப்போதைக்கு வெளிபொபடுத்த வேண்டாவென அடிகள் கட்டளையிட்டிருந்தனர். ஆதலின் அவை வெளியிடப்படாதிருந்தன. அடிகள் சித்தி பெற்றுப் பத்தண்டுகள் கழிந்தபின் 1885இல்அன்பர் சிலர் காலநிலையை ஒருவாறு கருதி ஆறாந்திருமுறையை அச்சிட்டு வெளியிட்டனர்.

## சித்தி வளாகத்தில் திருவளக்கு வழிபாடு ஏற்படுத்தியது
## கார்த்திகை 1873

1873 ஸ்ரீமுக ஆண்டு ஐப்பசித் திங்களின் அடிகள் சித்திவளாகத்தில் கொடிகட்டிப் பேருபதேசத்தைச் செய்தருளினார்கள். அடுத்த கார்த்திகைத் திங்களில் தமது அறையிலிருந்த விளக்கை அறைக்கு வெளியே வைத்து அதனை வழிபட்டுவருமாரு அன்பர்களுக்குக் கட்டளையிட்டுக் கதவை மூடிக்கொண்டு அறைகுள்ளேயே இருக்கலானார்கள். திருவிளக்கை வெளியே வைத்தபொழுது அடிகள் அருளிச் செய்ததாக் அன்பர் ஒருவர் குறித்து வைத்துள்ளாது வருமாறு;

சுவாமிகள் ஸ்ரீமுகளூ கார்த்திகமீ த்தில் உள்ளிருந்த விளக்கைத் திருமாளிகைப்புறத்தில் வைத்து,

இதைத் தடைப்டாது ஆராதியுங்கள். இந்தக் கதவைச் சாத்திவிடப் போகிறேன். இனிக் கொஞ்சகாலம் எல்லோரும் ஆண்டவர் இப்போது தீபமுன்னிலையில் விள்ங்குகிறபடியால் உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்காமல், ' நினைந்து நினைந்து, என்னும் தொடக்கமுடைய உஅ பாசுரமடங்கிய பாடலிற் கண்டபடி தெய்வ பாவனையை இந்தத் தீபத்திற் செய்யுங்கள். நானிப் போது இந்த உடம்பிலிருக்கின்றேன். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வேன் என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

அடிகள் தமது அறையிலிருந்து அன்று வெளியே எடுத்துவைத்த திருவிளக்கு இன்னும் எரிந்துகொண்டிருக்கிறது. ஞானசபை பூட்டப்பெற்று வழிபாடு நின்றுபோகவே சன்மார்க்க அன்பர்கள் சித்திவளாகத்தில் இத் திருவிளக்கை அடிகளின் கட்டளைப்படி வழிபாடு செய்து வந்தனர். அடிகள் தமது திருவறைக்குள்ளேயே இருந்து, விரைவில் இறைவனோடிரண்டறக் கலப்பதற்கான சாதனைகளில் ஈடுபட்டிருந்தார்கள். பல நாள் உள்ளே இருப்பதும் சில நாள் வெளியே வருவதுமாக இருந்த்தர்கள். கார்த்திகை, மார்கழித் திங்கள்கள் கழிந்தன. தைத் திங்கள் வந்தது.

## சித்திபெற்றது

### ஸ்ரீமுக ளூ தைமீ யகூ உ 30-1/1874
### (இறைவனோடு இரண்டறக் கலந்தது)

தைத்திங்களில் அடிகள் திருவறையினின்றும் வெளியே வந்து சின்னாளிருந்தார்கள். சிற்சில உபதேசங்களைச் செய்தருளினார்கள். ' கடை விரித்தோம் கொள்வாரில்லை கட்டிவிட்டோம், இப்போது இந்த உடம்பிலிருக்கிறோம் இனி எல்லா உடம்பிலும் புகுந்துகொள்வோம்' என்று கூறித் தாம் உடம்பை மறைத்துக்கொண்டு இறைவனோடிரண்டறக் கலக்க இருப்பதைக் குற்ப்பாகவும் வெளிப்படையாகவும் அன்பர்களுக்கு உணர்த்தினார்கள். தைப்பூசம் வந்தது. ஸ்ரீமுக ஆண்டு தைத் திங்கள் 19ம்நாள் 30.1.-1874 வெள்ளிக்கிழமை பூசத்தன்று முன்னிரவில் அடிகள் அங்கிருந்த அன்பர்களையெல்லாம் அழைத்துத்தாம் அறைக்குள்ளே சென்று உடம்பை மறைத்துக்கொள்ளப் போவதைக்



RangaRakes tamilnavarasam.com

கூறியருளினார்கள். அப்போது கூறியாதாக அன்பர் ஒருவர் குறித்து வைத்துள்ளது பின்வருமாறு.

ஸ்ரீமுக ளூ தைமீ யகூஉ

நான் உள்ளே பத்துப் பதினைந்து தினமிருக்கப்போகிறேன். பாத்து அவநம்பிக்கை யடையாதீர்கள் ஒருகால் பார்க்க நேர்ந்து பார்த்தால் யாருக்கும் தோன்றாது. வெறு வீடாகத்தானிருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக்கொடார்.

என்னைக்காட்டிக் கொடார் என்பதன் பொருள் என்னை காண இயலாது என்பதாம். கார்த்திகைத் திங்களில் திருவிளக்கைத் திருவறையின் புறத்தில் வைத்தபோது கூறியனவாகக் குறித்திருப்பனவாகவும் இவையும்ஏறத்தாழ ஒன்றாகவே உள்ளன.

அன்று இரவு 15 நாழிகை (12மணி)க்கு அடிகல் அங்கிருந்த அனைவர்க்கும் இதுகாறும் நாம் கூறிவந்தபடி ஒழுகி அருட்பெருஞ்சோதி ஆண்டவரை வழிபட்டு உய்யுங்கள் என்று அறிவுரையும் வாழ்த்தும் கூறித் தமது திருவறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டு இரண்டரை நாழிகையில் இறைவனோடிரண்டறக் கலந்தருளினார்கள்.

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளின்

திருவரலாறு முற்றும்

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

வள்ளலார் கழல் வாழ்ந்தால் வாழ்வாவதே

## பிற செய்திகள்

அடிகள் அறைக்குள் சென்றதும், பின் வெளியே காணப்படாததுமான் செய்திகள் எங்கும் பரவி ஒருவகைப் பரபரப்பைஏற்படுத்தின. போலீஸ் விசாரணை வந்தது. மூன்று திங்களுக்குப்பின் 1874 மே மாதத்தில் ரெவினியு போர்டு உறுப்பினரும் கலெக்டரும் (Mr.george Banbury,I.C.S, member of the revenue ; Mr.J.H.Garatin , I/C/S, Collector of south arcot) வந்து பார்வையிட்டனர். அதிகாரிகளின் முன்னிலையில் கதவு திறக்கப்பட்டது. அறையினுள் அடிகள் காணப்படவில்லை. திறந்து பார்த்தால் வெற்றறையாகத்தான் இருக்குமென்று அடிகள் அருளியவாறு அது வெற்றறையாகவே இருந்தது. ஐயுறுதற்கு ஒன்றுமில்லாததைக் கண்ட அவ்வதிகாரிகள் தருமச்சாலையில் ஏழைகளுக்கு உணவளிப்பதைப் பாராட்டி உணவிடுங் செலவிற்காக இருபதுரூபாய் நன்கொடை அளித்துச் சென்றனர்.

தைப்பூசத்திற்கு மூன்றாம் நாள் வடலூரிலிருந்து மேட்டுக்குப்பத்திற்குச் சென்று., சித்திவளாகத்தில் அடிகளது திரு அறையைத் திறந்து வழிபடும் வழக்கம் பின்னாளில் உண்டாயிற்று. இப்பொழுதும் அவ்வாறே ஆண்டுதோறும் நடைபெறுகிறது. ஆண்டுக்கு ஒரு முறையே திறந்து வழிபடும் நாளாகிய அன்று அத்திருவறையைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் தரிசித்து உய்கின்றனர்.

அடிகள் சித்தி பெற்றபின் சங்கமும் சாலையும் சபையும் சித்தி வளாகமும் சன்மார்க்க அன்பர்களால் நடத்தப்பெற்றன. 1938இல் இந்நிலையங்களின் ஆட்சியை , இந்து சமய அறநிலையக் குழுவினர் (Hindu relegious and charitable endowments board) மேற்கொண்டனர். இப்போது இந்து சமய அறநிலய நிர்வாகத்துறைஆல் (H.R. & C.E.(admn)Dept.) நியமிக்கப் படும் அறங்காவலர்களும் நிர்வாக அலுவலரும் நிலையங்களின் நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர்.

## பின் இணைப்புகள்

### பின் இணைப்பு 1 தொ.வே. பாடிய திருவருட்பா வரலாறு

உ

**திருச்சிற்றம்பலம்**

**திருவருட்பா வரலாறு1**

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்**

**திருச்சிற்றம்பலம்**

**ஒருகோட்டுச் சிவகளிற்றை உம்பர்சிறை ஒழித்தொளிர்வைஞ் ஞ்ஜங்கர் ஏந்தித்**
**திருக்கோடு நம்பியைஆ ளுடையனை உடையானைச் செல்வக் காழி**
**வருகோட்டு மாமருதத்தை வாகீச அமுதைவன் தொழ்ட வாழ்வை**
**மருகோட்டு வயல்வாத வூர் அரசைத் தண்டிதனை வழுத்தல் செய்வாம்**

**வேறு**

பராபரம் கோதகலும் அநாமயம் போதநிலை
பகாநலம் வாதம் அறு சுகோதயம் பாதிதம் இல்
நிராமயம் காரகம திலாதசஞ் சீவிதம் நல்
நிராசைகொண்டாருடைய நிகேதநம் சூதம் உறல்
வராத இன் பார எனை முனாளில்வந்தே அருளி
மகாபலம் சேர அருள் விராவுசெம் பாதநம
இராமலிந் தார்மனதின் இராதசந் தோடநம
இராமலிங் காயநம இராமலிங்காய நம

**வேறு**



RangaRakes tamilnavarasam.com

**தன்நிகரும் பெருங்கருணை அருட்பிரகா சப்பெருமான் சந்நி தானம்**
**மன் அருளை விழைஅன்பர் சிலர் அருட்பா வரலாறும் மற்றும் ஈண்டித்**
**நன்னிதிதான் வெளிவந்த ஆறும் உரைக் குதிஎன்ன நகைநா ணாதிங்**
**மென் அறியா மையைவிரிப்பேன் இயைந்தனன் உய் வுண்டாமென் இச்சையாலே**

<u>தரவு கொச்சகக் கலிப்பா</u>

**மணிகொழிக்கும் கல்லோல மாக்கடலை முகந்துண்டு**
**பிணிதவிர்க்கத் தலைப்பெயலும் பெய்யாத காலத்தும்**
**தணிவில்வளந் தருபொன்னித் தடம்புனல்சூழ்ந் தகன்கடைவாய்**
**மணிமுழக்கம் கேட்டறியா வளநாடு சோணாட்டில்**

{1.திருவருட்பா முதல் நான்கு திருமுறைகளின் முதற்பதிப்பு 1867இல் வெளிவந்தபோது அதன் பதிப்பாசிரியராகிய தொழுவூர் வேலாயுத முதலியார், நூலாசிரியராகிய வள்ளற்பெருமானின் வரலாற்றையும், நூலாகிய திருவருட்பாவின் வரலாற்றையும் 66 செய்யுள்களாகப் பாடித் 'திருவருட்பா வரலாறு' என்னும் பெயருடன் நான்காம் திருமுறைக்குப் பின்னர் நூலிறுதியில் சேர்த்து அச்சிட்டு வெளிப்படுத்தினார். முதல் இரண்டு செயுள்கள் காப்பு. முதற் செய்யுள் கடவுள் வாழ்த்து. இரண்டாவது செய்யுள் குரு(வள்ளலார்) வாழ்த்து, மூன்றாவது செய்யுள் அவையடக்கம். பிற 63 செய்யுள்கள் நூலாசிரியர் வரலாறும் நூல் வரலாறும். இதனை ஆ.பா.தமது திருவருட்பா பதிப்பு பூர்வ ஞான சிதம்பரப் பகுதியில் முதல் அனுபந்தமாக அச்சிட்டுள்ளார். இங்கு இதற்குத் தோ.வே.யின் அமைப்பும், ஆ.பா.வின் பாடமும் கொள்ளப்பட்டுள்ளது.}

**நீர்பூத்துப் பிறைக்கொழுந்து நின்றவிர்செஞ் சடைக்காட்டின்**
**ஏர்பூத்த பவளமலை இமையம் அருள் பசுங்கொடியும்**
**நார்பூத்த பன்னகமும் அடுபுலியும் நலன் ஓங்கச்**
**சீர்பூத்த பொது உடைய திருத்தில்லைப் பதிஒருசார்**

**ஐந்திணைசேர் அகத்தமிழின் துறைநுகர்ந்து புறத்துறையின்**
**வந்தபொருள் அவைகொண்டு செய்வனசெய் மாண்பினவாம்**
**நந்தல் இலா ஆக்கத்து நாற்குடியும் தழைத்தோங்கும்**
**கொந்தவிழ்பூந் தன்மருதக் குலமருதூ ராம் மருதூர்**

**இராமையன் மருவாமை இராமைய னிராமையன்**
**அராமுடிப்பூ மணந்தபுகழ் அருங்கருணீ கக்குலதோன்**
**பராவுட மீன்கற்பின் சின்னம்மை சின்னம்மைப்**
**பொராவண்ணம் துணைகொண்டு பொதுநீக்கி அறம்புரத்தான்**

**தூய்மையான் உயர்தவத்தால் துருவம் உறீஇ இருத்தலினன்**
**வாய்மையான் வடகைகலை என ஓங்கி வாழ்நாளில்**
**சேயிமையாத் தனைபிரிந்திங் கெமைத்தெரியாச் சிறியோமை**
**நோய்மைஒ வுறவண்ணமை இன்பத்து நுழைவிப்பான்**


RangaRakes tamilnavarasam.com

மறைவிளங்க ஆகமவாய் மைகள்விளங்கச் சைவநெறித்
துறைவிளங்க வடகலையும் தென் தமிழும் துணிபொருளின்
நிறைவிளங்க நீடுயிர்கல் நெறிவிளங்க நிலைவிளங்கப்
பொறைவிளங்கப் பொய்புகுதா தேழையோம் புலம் விளங்க

விடையுகைக்கும் தாந்தோன்றி விரித்துக்காட் டியமெய்ம்மை
நடையுகக்கக் காட்டியும்கா ணார்காண நாலாம்பொய்க்
கடையுகத்தில் கண்கூடாய் நிலை காட்டப் பெருங்கருணை
மடையுடைத்து மயற்காட்டின் மயங்காமே வெளிகாட்டி

அறங்காட்டும் துறைகாடி அறுசமயத் தவரவர்க்குத்
திறங்காட்டி சிவங்காட்டிச் சித்திமுத்தித் திருக்காட்டிப்
புறங்காட்டில் பொய்யுடலை வையாமெய்ப் புலங்காட்டி
மறங்கட்டென் மனக்காட்டை வளராமே மதிகாட்ட

தவநெறியும் தவப்பயனும் சார்பும்சார் புணர்பொருளும்
சிவனருளும் அருட்பயனும் தேர்ந்தனர்தேர்ந் ததும் உணரா
தவநெறியில் புக்குழன்றங் கசதிஆ டுறும் அறிவில்
பவநெறிநாத் திகரும்உயப் பரிந்தருளின் இயல்காட்டி

சன்மார்க்கத் தவர்யாரும் தனிவிரும்பும் நிலைவிரும்பும்
பன்மார்க்கத் தவர்யாரும் பற்றும் ஒரு பற்றாகி
என்மார்க்கத் தவர்களும்நா டரியபழம் பொருள் எளியேன்
துன்மார்க்கத் தவம்போக்கித் தவமாக்கத் துணிந்தருளி.

பொய்யோடப் பொய்யோடாப் புறநிலைகள் புலம்போட
மெயோடா வைதிகச்செம் மொழி ஒன்றான் வெய்யமல
மையோட மையோடு மனமோட மலிபிறவி
ஐயோடும் இறப்போட அருளோடு கண்ணோடி

போக்குவர வில்லாது புறங்கீழ்மேல் உள் நடுசார்
பாக்கும் இடை அறஇருந்த அதிசூக்கத் தொருதனிமை
நோக்கருநோக் குணர்வருளான் நோக்குற எட் டுருவாதி
தாக்கருதாக் குறஅன்று கொண்டதொரு தகைமைஎன

ஊரொடுபேர் உருஒன்றும் இல்லாத ஒப்பில் உணர்
வோர் உருஈர் உருமுக்கண் நாலிருதோள் ஐந்துமுகம்
கார் உறுகண் டமும் ஆறு கவர்சடையும் மறைத்தருளி
ஏர் உறவந் தெழுந்ததுவோ அன்றி இமை யவர்க்கன்று

பொன்நாடு தனைவழங்கப் போர்காட்டி எஃகேந்தி
எந்நாளும் என் ஆளும் எந்தைஆ றிதோளும்
மன் ஆறு முகமும் ஒளித் துற்றதெனல் அலது மற்றிங்
கென் ஆவ தன்னார் பால் இருஞ்சேய்மை தனைபுனைந்து

அறிமீனார் முன்களிப்ப அனிலநாள் கொண்டதென
உறுகன்னி அறுவைமீன் கொண்டருளி உலகமெலாம்
பெறுகோல மதுகாட்டி உதயஞ்செய் பிள்ளையார்
வறியம்போல் முளை உண்டார் மகிழ்ந்தனைபால் முலைஉண்டார்

திருமுகங்கண் டவர்யாரே ஆயினுங்கண் டளவே நீ
தொருவிமயக் கொழிந்தவர்தாம் செய்வனவும் உறுவனவும்
தரும் உணர்ச்சி முக்குற்றத் தடையற ஆங் குறலானும்
அருள் அன்பின் புறலானும் அல்லல் எலாம் அறலானும்

பாதகசூ தகங்கள் அறப் பணலானும் பாவனையாய்க்
கோதறுபா வனைக்கெட்டாக் கொள்கைத்தாய் உறலானும்
மேதகுதன் நிலைஆக்கி நிலைப்பயனாக் குறல் ஆகி
வேதகத்தா னும்பொருள்கோள் வெளிப்படையில் புலப்படவே

உருநாமம் இராமலிங்கம் எனக்கொண்டார் ஓங்கருளால்
குருநாம மந்திரமாக் கொண்டுய்ந்தார் உயநினைந்தார்
பெருநாம மந்திரத்தைப் பெற்றி அறியார் எல்லாம்
திருநாமம் இதுபிள்ளை திருநாமம் என்பாரே

பாசம்எனக் கிடந்தேனை பசு ஆக்கிப் பருவம்பார்த்
தாசகல உணர்த்தி அருள் ஊட்டம்மை அப்பனுமாம்
பேசரிய பெரியாரைப் பேயுணர்வேன் பேசறியேன்
தேசுவரும் அகவைசிறந் தார் எனவும் சொல் இயைந்தேன்

மீதானத் துயர்பள்ளி மேவேமை வைக்கும் எங்கள்
மேதாவைப் பள்ளி விழைந் தருளிற்றென் றுரைப்பதெவன்
ஓதாமே எமைஎல்லாம் உணர்த்தும் உரு வெளியைஅச்சோ
ஓதாமே உணர்ந்ததென்பர் உணர்கிலார் ஒருவியப்போ

அவ்வயின் ஆ ருயிர்கள்முத்தி ஆரும்நெறி அறிவிப்பான்
செவ்விதின் நல் அருள் வலித்த தோதெரியோம் சிறந்துயிர்கள்
உய்வகைஉள் ளிருந்தும் ஒளித் தொற்றிநின்ற படிகாட்டத்
தெய்வஒற்றி நின்றதனைத் திருவருளால் தேற்றியதே

அறவாழி அந்தணனாய் அருள்பழுத்த தவக்கொழுந்தெவ்
வறவாமா தெனிற்புலவீர் சந்நிதியை அடைந்துள்ளார்
அறமாவ தெல்லாமும் ஒருங்கடையாப் பெற்றாரேல்
அறமாவ தெமக்கல்லால் அடிகளுக்கென் அறஞ்சொலுமே

ஆணவத்தி நான் மாழாந் தறிவிழந்து வெம்பிறவிப்
பூணவத்தைப் பட்டுழலும் புன்கண் அறுத் துய்விப்பான்
மாணவத்தை அருளும்மறை விரித்தமணி வாக்கதனால்
பேணவத்தைச் சோரிதமிழ்ச்செம் பிரவாகம் பெருக்குவித்தே

சிற்றடியேம் பிழைத்தொழும்பைத் திருவுள்ளங் கொண்டகந்தை
முற்றும் ஒழித் தருள்விரவ உபாசனா முறைதெரித்தங்
கற்றம் அற அறிவுருவாய் உருவெளியாய் உருவாகிக்
குற்றம் அறுத் துணர்வூட்டிச்சேணினும்மெய்க் குறிக்கொள்ள

நல்லருளின் இயல்பெளியோம் பெறக்காட்ட நன்னீரால்
செல்லல் இருள் அறவிளக்கங் கெரிவித்தும் தீச்சனன
வல்லபிணி அறுவிக்கும் வகைகாட்டும் படிஉடலின்
அல்லல்செயும் பிணி அனைத்தும் அருண்மொழியா னே அறுத்தும்

"தோடுடைய செவியன்" எனும் தொடையால்முன் நாள் எவர்க்கும்
நாடுடைய பொருட்சுருட்டி நன்றுவிளக் கியதென்ன
ஈடுடைய "உலகமெலாம் உதிக்கின்ற" எனும் தொடையால்
பீடுடைய பொருட்சுருட்டிபொ பேறெமக்கின் றீதென்றும்

வேதியாய் மலக்களிம்பை நீக்கி எமைப் பொன்னாக்கும்
வாதியாய் அருள் விழுங்கி மாயாவா தியனாகிச்
சோதியாய் விளையாடும் தோன்றலுக்கோர் ஆயிரம்பேர்
ஓரினார் உணர்வுடைய தொண்டரெலாம் ஒருசிலவர்/.

தனித்துரைத்த இராமலிங்கத் தனிமறை ஆ தரித்துய்ந்தார்
இனித்த அருட் பிரகாச வள்ளல் என இனிதேத்தி
அனித்தமற்றார் சில் அறவர் அந்தோ என் போன்மறந்து
மனித்தன் எனக் கொண்டொழிந்தார் மலவாழ்வில் சிலமறவர்.

முலை உண்ணி மோட்டெருமைப் பாற்கடல்மீன் எனவாழும்
நிலை உயிர்கள் தமையுடைய பூரணத்துள் நின்றும் அந்தோ
அலவகன்றார் இலர் ஜுன்பத் தழுங்குகின்றார் அறியாமைத்
தலை இருந்தார் இனம் என்றால் அவர்க்குணர்த்தும் தரம் அன்றே

என்பணங்காய்க் கற்றூணம் இருங்கடல் நாவாய் ஆகி
முன்புகாரம் உண்டமகச் சின்னாட்பின் முருகாய் வந்
தன்புறநல் நரிப்பரியே ஆகவும் அந் தோஅறியார்
தன்பெருமைச் சலம் இன்றிச் சந்துரைப்பார்த் தடுப்பரிதே

ஆருயிர்கள் வினைக்கீடாய் அவ்வவர்கட் கறிவொழுக்கம்
சீருறுதெய் வம்சமயம் சிக்கனவே யாத்தருளால்
தேரும் ஒரு சிவன்பருவம் தேற்றுவதால் திருவருளை
ஒருமதல் லால்வேறென் உரைப்பதியாம் உயர்புலவீர்

வேறு

அமலனார்க் கீதோர் புகழ்கெலாம் ஆடல்
அரியதில் கிளந்தனன் அறியேன்



RangaRakes tamilnavarasam.com

நிமலசந் நிதிநேர் துரும்பொன்றே நேர்ந்த
நேர்ச்சியில் அளவறு சித்திக்
கமம் உறு புத்தி முத்தியுற் றுயிர்கள்
கனிவுற இதஞ்செயும் என்றால்
சமரச வேத சன்மார்க்க சங்கச்
சாதுளார் பொறுப்பர் என் பிழையே

எந்தை அருட் பிரகாசன் இன்உயிர்கள் தமைத்தேற்றச்
சந்தமுற இனம் ஆடும் தண்ணருள் ஆடலைப் போற்றச்
சுந்தரநல் அருள் எடுத்துக் கைதருமேல் தொழுதிறைஞ்சிப்
பந்தவினைத் தொடக்கும்மயல் படரும் அற மொழிந்துய்வேன்

ஆய அருள் இறைஎங்கள் அருட்பிரகாச ப் பெருமான்
தூய அரு ளால் பொழிந்த சொல் அமிழ்தாம் தமிழ்ப்பெருக்கு
நேய அருட்பற்றாகி நிறைமனத்துப் பெரியர்க்கும்
மாயமயக் குழல் என்போல் மறவர்க்கும் உள்ளுருக்கி

அளவாத பேரன்பு சொரிந்தரளை விளைவித்துத்
தளவாரும் நகைக்கயற்கண் தையல் இடங் கொண்டபிரான்
வளமாரும் கழல்மலரே டிரண்டறுத்து வாழ்விக்கும்
உளவாலே அருட்பாஎன் றொருநாமம் பூண்டதுவே

மருளாலே சிலர் என்போல மருளாலே மயங்கி உணர்ந்
தருளாலே உரைத்ததென் அருட்பாவின் உரைகொண்டார்
தொருளாதேன் சிந்தைதனைத் தெளிவித்துச் சிவம் ஆக்கும்
அருளாலே உரைத்ததென அருட்பாவின் உரைகொண்டோம்

அத்தகைய திருஅருட்பா உபாசனை லீ லைகள்முறைமை
உய்த்தறியச் சோத்தமொடு சாத்திரமாய் உறுதலினால்
சுத்தமுற எப்பொருளும் விளக்கெழுவாய்த் தொல் எழுத்தை
வைத்த எழுத் தைந்தின் உண்மை மலர்விக்கும் வாய்மையினாலே

அறுசமயத் துள்ளாரும் அயலாரும் அவர் அறியப்
பெறுபொருளும் அளவாத பெரும்பொருளும் காட்டலினால்
உறுதிபெறும் அத்துவா அதன்மேலாய் உறுபொருளை
மறுவறக்காட் டுகையாலும் மற்றாறு முறையாக

பிரிந்துபிரி யத்தருளின் பெற்றிமிக்குப் பினக்கறுமா
தெரிந்துமுறை செய்தருளும் சிறப்பானே திருஅருட்பா
விரிந்தமுறை ஆறெனவே மெய்யருளில் தொடர்பாட்டால்
பரிந்தன்பர் உலகமெலாம் பழிச்சுபுகழ் நிலவியதே

பண்ணிறந்த தமிழ்வேதப் பழம்பனுவல் தொகை அதன்சீர்
எண்ணிறந்து நின்றனபோல் எண்ணிறந்த தாங்கவற்றுள்
உண்ணிறைந்த கருணையினால் உயிர்க்குறுதி பயப்பமுனம்
கண்ணிறைந்த சுவை மருந்தாம் ஐந்துமுறை கண்டமட்டில்

திருநெறிய தமிழாதித் தெய்வமுறை பன்னொன்றும்
ஒருநெறிய மனம் வைத்தர் உறுகாறும் திருத்தில்லைக்
கருநெறியங்க கல்விக்கும் கடப்பானன் கைக்குறியாய்ப்
பெருநெறியர் சேமித்து வைத்ததொரு பெற்றிஎன

அமலம்அருள் திருஅருட்பா அருண்மரபு தனைகுறித்துக்
கமைஉறுமா சேமித்து வைத்திருந்த தென்பர்கண்டீர்
எமைஉடையான் எல்லாமும் வல்ல அருட்பிரகாசன்
சமரசவே தச்சன்மார்ர்க் கச்சங்கச் சாதுக்கள்

தந்திருக்கூட் டத்துள்ளான் சதுரையான் பெரியசிவா
நந்தபுர விழைவுடையான் நஞ்செல்வ ராயன்பால்
அந்தியிளம் பிறைஅணியும் அணிமுடியை மறைத்தபிரான்
சுந்தரக்கை சாத்திய அத் திருவேடு தொகுத்தன்றே

பண்ணீர்மைச் சுவைமுதிர்ந்த திருப்பனுவல் அருட்பயனைத்
தண்ணீர் என் றொருவெண்பாச் சம்பந்தப் பிரான்வழியில்
தெண்ணீர்த்தென் கூடல்வரும் சிதம்பரமா முனி தெரித்தால்
உண்ணீர்மை ஒன்றுமிலேன் உரைப்பதும் ஓர் புகழாமே.

<u>வேறு</u>

ஆறா வதுமுறை ஆரிய னார்தம் அருளானே
வேறோர் சார்சே முற்றன் றெம்வினை விளைபாகம்
தேறாப் பருவம் தேர்ந்தென் றிசினோர் உதுநிற்க
வீறார் மற்றை முறைவெளி வந்தமை விரிசெய்வாம்

ஆங்கவற்றைச் சிலர் அறிந்தார் அறியாரும் ஆகப்பின்
ஓங்கருளான் முத்துச்சா மிப் பெயரின் ஓர் உரவன்
தீங்ககல மன்பதைக்குத் திருஓற்றிச் சிவபெருமான்
பாங்கருட்சந் நிதிமுன்னரப் பகர்ந்துபத்தி வித்தினனே

அப்பத்தி அன்புமுளை சிறிதுபூத் தருள் விரவ
மெய்ப்பத்தி யில் சிலவர் விமல அருட் பாவிழைந்து
செப்புற்றார் யாவர் எனத் தேடுறுதேட் டங்கண்டு
துப்பற்றார் சிலர் எழுதித் துரிசிற்றார் பரிசுற்றார்

ஈதுணர்ந்தங் கென்போல்வார் சிற்சிலவர் பொருள்விழைவால்
கோதுறுவார் மரபிறந்து கோள்விரா அய்ச் சிறிதச் சில்
பேதுறத்தாம் பொறித்தலும் அப் பெற்றிஉணர்ந் தாங்குரைத்த
தீதில் திரு அருட்செல்வ ராயப்பேர்ச் சேமத்தான்

மறுக்கத்தான் அமரர் எலாம் நொந்தழலும் வந்தழலும்
பொறுக்கத்தான் அருநஞ்சம் அமுதுண்டு பொன்மிடறு
கருக்கத்தான் உளம்வைத்த கண்ணாளன் கழற்கன் பான்



RangaRakes tamilnavarasam.com

இறுக்கத்தான் கற்றவன் ஓர் இரத்தினம் என் பானோடு

வேறு

வில்லா ருஞ்சிறு பிள்ளை மதிப்பிஞ் சணிவேணிப்
பொல்லார் மன்றாடிய சே வடிசேர் புலமிக்கான்
நல்லார் நம்பெரு மக்கட் கினியான் நவை இல்லான்
மல்லார் திண்தோள் நம்பி அவன் துணை வலியாலே

<u>வேறு</u>

சிவநேசச் சிவராஜ யோகியர்க்காம் திருச்சிறந்த
தவநேசன் வாசுதேவ வப்பெயர் கொள் தகுதியானே
பவநேச மற்றார்கள் பற்றுபசு பதிக்கனிய
நவநேசன் ஐயாசா மிப்பெயரோ னே இருவர்

தங்களைமுன் னிட்டவரைத் தடுத்தன்றிஅறம்நோக்கி
அங்குசில பொருள் ஈந்தும் அவர் தனியே கரந்துமீட்
டுங்கச்சில் இட்டுவெளி யாக்குறக்கண் டுள்ளுடைந்து
மங்கலஞ் செய் நாயகர்க்கு வழிமொழிவிண் ணப்பித்து

முறையுளித்தாம் அச்சியற்ற இரத்தினப்பேர் முதுக்குறைவன்
இரை அருளுக் கேற்றிரப்ப எந்தை அருள் இசைவின்றிக்
குறை இரந்தார் குறைக்கிரங்கும் கொள்கைகண்ட அக்குணவான்
மிறைஉள்ளார் மிகை அறுக்க மேற்கொண்டங் குசாவுதலும்

பல்லவகோத் திரத்துவந்த சபாபதிமால் பயந்தருளும்
நல்லவன் எம் உயிர்த்துணையான் நாயனார் கழல்மறவாச்
செல்வமிகு காரணத்தா நும்செல்வ ராயன் என
வல்லபடி முன் நுவன்ற வண்மைப்பேர்ச் சேமநிதி

தன் அடைந்தார்த் தானாகத் தங்குபெருந்
        தயாளன்சற் குணங்கள் எல்லாம்
பொன்னுருஒன் றெடுத்ததெனும் புகழாளி
        உயிரும் ஒரு பொருள் அன் றாக
என்னவர்க்கும் ஈகைபயிற் றேந்தல் உணர்
        வினுக்குறையுள் யார்க்கும் தத்தம்
முன்னம் உணர்ந் துபகரிக்கும் முதலியப்பா
        அண்ணல் அருண் முளை நன் மீளி

<u>வேறு</u>

விற்புருவம் நெரிதருளி வீறடங்கப் புரம் பொடித்த
பொற்புருவச் சிலையாளி புண்ணியநீற் றன்புடையான்
அற்புருவன் அருட்பிரகா சப்பெருமான் திருஅருட்குச்

சொற்புதுவை வேலையன் தனைத்துணையாத் துணைகொண்டு

வேறு

வேண்டுவன உபகரிக்கக் கலிநாற்பத்
தொன்பதுநூற் றறுபான் மேலெட்
டாண்டெழுதா எழுத்தேற்றி நான்குமுறை
அரசறிய வெளியிட் டியார்க்கும்
பூண்டெழுபேர் இன்பமகிழ் வதுபெருகப்
பணிபுரியும் பெற்றி யானே
காண் தகுக்சீர்த் தேவநாயகன் அருளும்
இரத்தினப்பேர்க் காத்திட்டானே

வேறு

மிக்கமறை ஏத்துமுக்கண் வித்தகனார் திருமயிலை
தொக்க இளங் கோக்குடியிட்ல் வருந்தூயன் குணநிதியான்
சிக்கிட்டி அருல்சோம சுந்தரன்செய் தாளாண்மை
தக்குலகு திருஅருட்பா இனிதுபெறத் தழைத்தன்றே

வேறு

நேசம் எல்லாம் உடையார்க்காய் உள்ளம் உருகி நிறைஅழிந்த
தேசன் எங்கள் சடகோபன் தெய்வத் தமிழோர் வடிவாகிப்
பாசாங் கழன்று வடகலைப்பார் கடற்கோர் பஃறி யாம்சீனீ
வாச வரதப் பெயர்கொள் அறங் கரையும் நாவின் மறக்கொழுந்து

வேறு

வேதனார் மாலார் காணரும் முக்கண்
விகிர்தனார் விளம்பரு ஞான
போதனார் அளவாப் புனிதனார் நாயேன்
புழுத்தலைக் கினிதிருத் தியசெம்
பரதனார் அன்பர் உளம்பிரி யாத
பரமனார் அருட்பிரகாச
நாதனார் கருணைக் குறையுளார் வீரா
சாமிப்பேர் நற்றவக் கொழுந்து

வேறு

தவம்அர சிருக்கும் அத்தாணி நெஞ்சார்
தகும்உயிர்க் கின்புசெய் தக்க
சிவம் உணர் பெரியர் அருட்பிரகாச
தேசனார் திருவடிக் கன்பர்'
அவம் அறு தேவ நாயகன் அப்பா
சாமியே ஆதிஆ ரியர்கள்

நவம் உறு சென்னைக் கூடன்மற் றுள்ள
        நற்றலந் தொறும் நங்கள் நாதன்

பொன்பழித் தலர்செந் தாமரை குழைத்த
        பூங்கழற் கன்பராய் உள்ளார்
தன்பொரூஉஞ் சீர்த்திச் சமரச வேத
        சன்மார்க்கத் தனிப்பெருஞ் சங்கத்
தென்பவம் அறுக்கும் எம்பெரு மக்கள்
        இன்செவிக் களம்புகுந் தெளியேன்
துன்புறச் சென்னி அரசிருந் தன்றித்
        தூயநல் அருள் வர லாறே

<u>வேறு</u>

நடந்தசெயல் அருள்காட்ட நான்வகுத்த படிஅன்றி
மடம்படுமென் அறிவானே வகுத்ததன்றாம் ஆதலினால்
இடம்படுதம் உணர் உணர்வின் எம்பெருமக் கள்சவையும்
உடம்படும்புன் மொழிஎள்ளா துலகமெலாம் ஓங்குகவே.

திருச்சிற்றம்பலம்

வரலாறு ஒருவாறு முற்றிற்று

இவ்வரலாறு-ஆசிரியர் மாணாக்கர்

தொழுவூர்-வேலாயுத முதலியாரால் சொல்லப்பட்டது

## <u>பின் இணைப்புகள் 2</u>

### <u>பின் இணைப்பு 2; தியாசபிகல் சொசைட்டியாருக்குத் தொ/வே அளித்த வாக்குமூலம்2</u>

STATEMENT OF THOLUVORE VELAYUDHAM MUDELIAR, SECOND AMIL PANDIT OF THE PRESIDENCY COLLEGE, MADRAS,

To the Author of "Hints on Esoteric Theosophy",

Sir,-I beg to inform you that I was a Chela of the late "Arulprakasa vallalare" otherwise known as Chithumbaram Ramalinga Pillay Avergal, the



RangaRakes tamilnavarasam.com

celebrated yogi of Southern India. Having come to know that the English community, as well as some Hindus, entertained doubts as to the excistenceof the Mahatmas (adepts), and ,as to the fact of the Theosophical Society having been formed under their special orders; and having heard, moreover, of your recent work, in whcih much pains are taken to present the evidence about these Mahatmas pro and con- I wish to make public certain facts in connexion with my late revered Guru. My belief is that the ought effectually to remove all such doubts, and prove that Theosophy is not empty delusion, nor the society in question founded on an insecure basis.

Let me premise with a brief descripotion of the perosnality of and the doctrines taught by the above mentioned ascetic, Ramalingam pillay.

He was born at Maruthur, Chittambaram Taluk, South Arcot, Madras Presidency. He came to live at Madras at an early period of his career, and dwelt there for a long time, At the age of nine, without any reading, Ramalingam is certified by eye witnesses to have been able to recite the contents of the works of Agastia and other Munis equally respected by Dravidians and Ariyans. In 1849 I became his disciple, and. though no one ever knew where he had been initiated, some years after, he gathered a number of disciples around h im. He was a great Alchemist. He had a strange faculty about him, witnessed very often, of changing acarnivorous person into a vegetarian,; a mere glance from him seemed enough to destroy the desire for animal food. He had alsothe wonderful faculty of reading other men's minds. In the year 1855, he left Madras for Chidambaram, and thence proceeded to Vadalur and Karinguli, where he remained a number of years, Many a time, during his stay there , he used to leave his followers, desappearing to go no one knew whither, and remaining absent for more or less prolonged periods of time, In personal appearance, Ramalingam was a moderately tall, spare man-so spare, indeed, as to virtually appear a skeleton-yet withal a strong man, erect in stature, and walking very rapidly, with a face of a clear brown complexion,. a straight, thin nose, very large fiery eyes, and with alook of constant sorrow on his face. Toward the end he let his hair grow long; and what is rather unusual with Yogis, he wore shoes, His garments consisted but of two pieces of white cloth. His habits were excessively abstemious. He ws known to hardly ever take any rest. A strict vegetarian, he ate but once in two or three days, and was then satisfied with a few mouthfuls of rice. But when fasting for a period of two or three months at a time, he literally ate nothing, living merely on warm water with a little sugar dissolved in it.

As he preached against caste, he was not very popular, But still people of all castes gathered in large numbers around him. They came not so much for his teachings, as in the hope of witnessing and learning phenomena, or "miracles" with the power of producing which he was generally credited; though he himself discredited the idea of anything supernatural, asserting

constantly that his was a religion based on pure science. Among many other things he preached that:

1.Though the Hindu people listened not to him, nor gave ear to his counsels, yet the esoteric meaning of the Vedas and other sacred books of the East would be revealed by the custodians of the secret-the Mahatmas- to foreigners, who would receive it with joy.

2.That the fatal influence of teh Kalipurusha Cycle , which now rules the world will be neutralized in about ten years.

3.That the use of animal food would be gradually relinquished.

4.That the destinction between races and castes would eventually cease, and the principle of Universal Brother-hoodbe eventually accepteed, and a U niversal Brotherhood be established in India.

5.That what men call "God" is, in fact, the principle of Universal Love- which produces and sustains perfect Harmony and Equilibrium throughout all nature.

6.That men, once they have ascertained the divine power latent in them, would acquire such wonderful powers as to be able to change the ordinary operations of the law of gravity, etc, etc.,

In the year 1867, he founded a society, under the name of "Samarasa Veda Sanmarga Sangham" which means a society based on the principle of Universal Brotherhood, and for the propagation of the true vedic doctrine. I need hardly remark that these principles are ident*cally* those of the Theosophical Society, Our society was in existence but for five or six years , during which time a very large number of poor and infirm persons were fed at the expense of its members.

When he had attained his 54th year (1873), he began to prepare his disciples for his departure from the world. He announced his intention of going into Samadhi. During the first Half of 1873 he preached most forcibly his views upon Human Brotherhood. But, during the last quarter of the year, he gave up lecturing entirely and maintained an almost unbroken silence. He resumed speech in the last daya of January, 1874, and reiterated his prophecies-here-inafter narrated. On the 30th of that month, at Metucuppam, we saw our master for the last time. Selecting a smalla building, he entered dits solitary room after taking an affectionate farewell of his Chelas, stretched himself on the carpet, and then, by his orders, the door was locked and the only opening walled up. But when , a year later, the place was opened and examined, there was nothing to be seen but a vacant room. He left with us a promise to re-appear some day, but would give us no intimation as to the time, place, or circumstances. Until then,however, he said that he would be



RangaRakes tamilnavarasam.com

working not in India alone, but also in Europe, and America and all other countries, to influence the minds of the right men to assist in preparing for the regenaration of the world.

Such, in short, is the history of this great man. The vacts I have referred to above are within the knowledge of thousands of people. His whole occupation was the preaching of the sublime moral dooctrines contained in the Hindu Shastras, and the i ntilling into the masses of the principoles of Universal Brotherhood,. benovelence and charity. But to his great disappointment he found among his larege congregations but few who could appreciate his lofty ethics. During the latter part of his visible earthly carrer, he often expressed his bitter sorrow for this sad state of things, and repeatedly exclaimed.

"You are not fit to become members of this Society of Universal Brotherhood. *The real members of that Brotherhood are living for away, towards the North of India.* You do not listen to me. You do not follow the principoles of my teachings. You seem to be determined not to be convinced by me. YET THE TIME IS NOT FAR OFF, WHEN PERSONS FROM RUSSIA, AMERICA (these two countries were always named), and other foreign lands WILL COME TO INDIA AND PREACH TO YOU THIS SAME DOCTRINE OF UNIVERSAL BROTHERHOOD. Then only, will you know and appreciate the grand truths that I am now vainly trying to make you accept. You will soon find that THE BROTHERS WHO LIVE IN THE FAR NORTH will work a great many wonders in India, and thus confer incalculable benefits upon this our country"

This prophecy has, in my opinion, just been literally fulfilled. The fact, that the Mahatmas in the North exist, is no new idea to us, Hindus, and the strange fact, that the advent of Madamee Blavatsky and Colonel Olcott from Russia and Ameica was foretold several years before they came to India, is an oncontrovertible proof that my Guru was in communication with those Mahatmas under whose direction the Theosophical Society was subsequently founded.

THOLUVALORE VELAYUDHAM MUDELIAR F.T.S.

Witnesses: Munjacuppam Singaravelu Mudeliar
President of the Ksishna Theo/.society.,
Kumbakonam Aravamudu Ayyangar.
fellow ot the Nellore Theosophical society.

"The official position of Vellayu Pandit as one of the Pandits of the Presidency College is an ample guaranteeof his respectability and trustworthiness.



RangaRakes tamilnavarasam.com

G.MUTHUSWAMY CHETTY
JUDGE OF THE SMALL CAUSE COURT MADRAS
VICE PRESIDENT OF THE MADRAS THEO.SOCY.

**தொ.வே.வாக்குமூலம் The Theosophist 1882 ஜூலை இதழில் வெளியிடப்பட்ட போது இதழாசிரியர் H.P.பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய முன்னுரை.**

## COMING EVENTS FORETOLD

(When, in answer to a direct challenge, the author of The Occult World wrote to tehe Bombay Gazette (April 4, 1882), he began his letter with the following profession of faith:- "I was already sure, when I wrote The Occult World, that the Theosophical Society was connected, through Madame Blavatsky, with the great Brotherhood of Adepts I described. I know this to be the case, with much greater amplitude of knowledge." Little did our loyal firend fancy, when he was penning these lines, that h is assertion would one day he capable of corroboration by the testimony of thousands. But such is now the stat of the case Sceptics and prejudicied or interested witnesses in general may scoff as they like, the fact cannot be gainsaid. Our friends-and have some who regard us neither as lunatics nor impostors-will at least be glad to read the statement which follows.

While at Madras, we were told that a well-known Tamil scholar, a Pandit in the Presidency College, desired to have a private conservation with us. The inverview occurred in the presence of Mr. Sikngaravelu, President of the Krishna Theosopohical Society, and of another trustworthy Theosophist, Mr.G.Aravamudud Ayangar, a Sanskritist, of Nellore. We are no more at liberty to repeat here all the questions put to us by the inverviewer that we are to divulge certain other facts, which would still more strongly corroborate our repoeated assertions that(1)our socieity was founded at the direct suggestion of Indian and Tibetan Adepts; and (2) that in coming to th is country we but obeyed their wishes. But we shall leave our firends to dr aw their own inferences from all the facts. We are glad to know that the learned pandit is now engaged in writting, in the Tamil and Telugu languages, a more amplified narrative that he has given, here; and that he is taking steps to obtain certificates of respectable living witnesses who heard this Guru prefigure the events, which have had so complete a fulfilment ._ED_

**வாக்கு மூலத்தின் கீழ் பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய பின் குறிப்பு.**



RangaRakes tamilnavarasam.com

This is one of those cases of previous foretelling of a coming event, which is least of all open to supspicion of bad faith. The honourable charactere of the witness, the wide publicity of his Guru's announcements, and the impossibility that he could bave got from public rumour, or the hournals of the day, any intimation that the Theosophical Societty would be formed and would operate in India-all these conspire to support the inference that Ramalingam Yogi was verily in the counsels of those who ordered us to founhe Society. In March,1873, we were directed to proceed form Russia to Paris In June, we were told to proceed to the United States where we arrived July 6th. This was the veryt time when Ramalingam was most forcibly prefiguring the events which should happen. In October, 1874we received an intimation to go to Chittenden,Vermont, where, at the famous homestead of the Eddy Family , Colonel Olcott was engaged in making his investigations-now so celebrated inthe annals of Spiritualism- of the so-called "materialization of Spirits" November,1875, the Theosophical Society was founded, and it was not until 1878, that the correspondence begam with friends in India, which resulted in the transfer of the Society's Head - quarters to Bombay in February, 1879.

<u>தியாசபிகல் சொசைட்டி3யாருக்குத் தொ.வே.அளித்த வாக்குமூலத்தின் தமிழாக்கம்.</u>

சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் இரண்டாம் தமிழ்ப் பண்டிதர் தொழுவூர் வேலாயுத முதலியார் அளித்த வாக்குமூலம்.

'பிரம்மஞானத்தின் மறைபொருட் குறிப்புகள்' (Hints of Esoteric Theosophy) என்னும் நூலின் ஆசிரியர்க்கு

{3.தியாசபிகல் சொசைட்டி 17.11.1875இல் அமெரிக்காவில் நியூயார்க் நகரத்தில் ஹெலனா பெட்ரோவ்னா பிளாவட்ஸ்கி(Helena Petrovna Blavatsky) என்னும் அம்மையாராலும், கர்னல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட்(Colonal Henry Steel Olcott) என்பவராலும் நிறுவப்பட்டது. பிளாவட்ஸ்கி அம்மையார் ரஷ்யர். மனோ தத்துவ ஆற்றல் வாய்ந்தவர், திபெத்திய சித்தர் ஒருவரால் ஆட்கொள்ளப்பெற்றவர், குடும்பம்.செல்வம், சமூக அந்தஸ்து ஆகிய அனைத்தையும் விட்டு திபேத்திய சித்தருடன் சில காலம் தங்கிப் பல ரகஸ்யங்களை உணர்ந்தவர். பின்பு இவர் அமெரிக்காவுக்கு வந்தபோது அங்கு கர்னல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட் என்பவரைச் சந்தித்தார். ஆல்காட் யுப்தத்தில்(Americal Civil war) புகழ்பெற்ற இராணுவ உத்தியோகஸ்தர். இவர் அம்மையாரின் சீடரானார். அம்மையார் ஆல்காட்டுடன் சேர்ந்து தியாசபிகல் சொசைட்டியை ஏற்படுத்தினார். அம்மையார் அதன் செகரட்டரி ஆனார். ஆல்காட் தலைவரானார். பிளாவட்ஸ்கியும் ஆல்காட்டும் 1878ல் இந்தியாவுக்கு வந்தனர். 1879பிப்ரவரியில் சொசைட்டியின் தலைமை அலுவலகத்தைப் பம்பாயில் அமைத்தனர். 1882டிசம்பரில் தலைமை அலுவலகம் பம்பாயிலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டது. சென்னை அடையாற்றில் 262 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் உள்ள தலமை அலுவலகம் சொசைட்டியின் உலகத் தலைமை அலுவலகமாகும். சொசைட்டி ஓர் அகல உலக அமைப்பு(International Society) இந்தியத் தலைமை அலுவலகம்



RangaRakes tamilnavarasam.com

காசி(வாரணாசி)யில் உள்ளது. தியாசபிகல் சொசைட்டி தமிழில் பிரம்மஞான சபை என வழங்கப்படுகிறது.

உலகில் நமது ஊனக் கண்களுக்குப் புலப்படாமல் மகாத்மாக்கள் இருந்து வருவதாயும், அவர்கள் ஆன்மிக விஷயங்களில் உலகை இயக்கி வருவதாயும், இந்தியாவிலும் திபேத்திலும் உள்ள மகாத்மாக்களின் கட்டளைப்படியே தியாசபிகல் சொசைட்டி தொடங்கப்பட்டதாயும் பிளாவட்ஸ்கி, ஆல்காட், அன்னிபெசண்ட் ஆகியோர் கூறுகின்றனர். மகாத்மாக்களை Adepts ம் என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுகின்றனர். அவர்கள் கூறும் மகாத்மாக்கள் நமது சித்தர்கள் போன்றார் எனலாம். தியாசபிகள் சொசைட்டியைத் தொடங்கத் தூண்டிய-கட்டளையிட்ட-மகாத்மாக்களுள் வள்ளற்பெருமான் இராமலிங்க அடிகளும் ஒருவர்-முக்கியமானவர்-என்பது தியாசபிகல் சொசைட்டியின் கூற்று-நம்பிக்கை. வள்ளற்பெருமான் 1874 ஜனவரி 30உ சித்தி பெற்றார்கள். அடுத்த ஆண்டில் (1875)அமெரிக்காவில் தியாசபிகல் சொசைட்டி தொடங்கப்பெற்றது. தமது ஆன்மநேய ஒருமைப்பட்டுக் கொள்கைகளையே, சமரச் சன்மார்க்கக் கருத்துகளையே சமீபத்திய வருங்காலத்தில் வெளி நாடுகளிலிருந்து வந்து இந் நாட்டில் போதிப்பார்கள் என்ற கருத்துப்பட வள்ளற்பெருமான் கூறிவந்ததாக ஒரு கருத்து தியாசபிகல் சூழலில் உலவலாயிற்று. தொலுவூர் வேலாயுதனார் அதனை உறுதிப்படுத்துபவரானார். சென்னைவந்த பிளாவட்ஸ்கியையும் ஆல்காட்டையும் சந்தித்து ஒரு வாக்குமூலத்தையும் அளித்தார். கௌரவமான சாட்சிகளின் முன்னிலையில் அவ்வாக்குமூலம் ஆங்கிலத்தில் தியாசபிகல் சொசைட்டியாரால் ரெகார்டு செய்து கொள்ளப்பட்ட்து,' பிரம்மஞானத்தின் மறை பொருட் குறிப்புகள்' (Hints on Esoteric Thesosophy) என்ற நூலிலும், பிரம்ம ஞான சபையின் திங்களிதழாகிய ' தி தியாசபிஸ்ட்'(The Theosophist)என்னும் ஆங்கில இதழிலும் (1882ஜூலை)அவ்வாக்குமூலம் வெளிவந்தது. இதழில் வாக்குமூலத்திற்கு முன்னும் பின்னும் இதழாசிரியர் பிளாவட்ஸ்கி அம்மையார் தமது குறிப்புகளை எழுதியுள்ளார். அண்மையில் 1969 செப்டம்பர் ' தியாசபிஸ்ட்' இதழிலும் இவை வெளியடப்பட்டன. இவைத் இங்கு தொ.வே.யின் வாக்குமூலம், அதற்கு பிளாவட்ஸ்கி அம்மையார் தமது இதழில் எழுதிய முன்னுரை, பின்குறிப்பு என்ற வரிசையில் கொடுக்கப்படுகின்றன.}

ஐயா,

நான், தென்னிந்தியாவில் புகழ் வாய்ந்த யோகியரான அருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்களின் சீடன், மாகாத்மாக்கள் இருக்கிறார்களா என்பதிலும் அவர்களது விசேஷ கட்டளைப்படியே பிரம்மஞான சபை ஏற்படுத்தப்பட்டதா என்பதிலும் ஆங்கிலேயரும் இந்தியருட் சிலரும் ஐயுருவதாகத் தெரிகிறது. தாங்கள் பெரிதும் உழைத்து மாகாத்மாக்களைப்பற்றி எழுதி வரும் நூலைப்பற்றிக் கேள்வியுற்றேன். எனது குருவைப்பறி சில செய்திகளை வெளிப்படுத்த விரும்புகிறேன். அவை முற்கூறிய ஐயங்களை அகற்றுவதோடு பிரம்மஞானம் பொருளற்றதொரு மயக்கமன்று என்பதையும் பிரம்மஞான சபை வலிவற்ற அடிப்படையில் அமைக்கப்பட்டதன்று என்பதையும் மெய்ப்பிக்கும் என நம்புகிறேன்.



RangaRakes tamilnavarasam.com

முதலில் இராமலிங்க பிள்ளையின் தனித்தன்மைகளையும் கொள்கைகளையும் சுருக்கமாக விவரிக்கிறேன். சென்னை மாகாணத்தில் தென்னார்க்காடு ஜில்லா சிதம்பரம் தாலுகாவிலுள்ள மருதூரில் அவர் பிறந்தார். இளமையிலேயே சென்னைக்கு வந்து நெடுங்காலம் வசித்தார். ஆரியர்களாலும் திராவிடர்களாலும் ஒப்பப் பாராட்டப்பெறும் அகத்தியர் முதலிய முனிவர்களின் நூல்களை ஓதாமலேயே ஒப்புவிக்கும் ஆற்றலை அவர் ஒன்பதாம் வயதிலேயே பெற்றிருந்ததைப் பலர் நேரில் அறிவர். 1849ஆம் ஆண்டில் நான் அவரது சீடனானேன். அவர் யாரிடம் உபதேசம் பெற்றார் என்பவை ஒருவரும் அறியார். ஆயினும் சில காலத்துள் பல சீடர்கள் அவரைச் சூழ்ந்தனர். அவர் ஒரு பெரிய ரசவாதி. புலால் உண்பவர்களைப் புலால் உண்ணாதவர்களாக மாற்றும் ஒரு தனிச் சக்தி அவரிடம் இருந்ததைக் கண்கூடாகக் கண்டோம். அவரது பார்வை ஒன்றே ஒருவரது புலால் விருப்பத்தை ஒழிக்கப் போதுமானது. பிறரது உள்ளத்தை ஊடுருவி அறியும் வியத்தகு ஆற்றல் அவரிடம் இருந்தது. 1855ம் ஆண்டில் அவர் சென்னையை விட்டுச் சிதம்பரம் சென்றார். பின் அங்கிருந்து வ்டலூருக்கும் கருங்குழிக்கும் சென்று அங்கேயே பல ஆண்டுகள் தங்கினார். அக்காலங்களில் பல முறை தம்மைச் சூழ்ந்திருந்தவர்களைப் பிரிந்து பிறர் கண்களுக்குப் புலப்படா வண்ணம் மறைந்து போவார். நீண்ட காலம் அவ்வாறே பிறரறியா வண்ணமிருப்பார். தோற்றத்தில் இராமலிங்கர் நடுத்தர உயரமுள்ளவராக, பார்ப்பதற்கு எலும்புக்கூடெனவே தோன்றும் மெலிந்த மேனியராக இருப்பார். ஆயினும் வலிமையுடய்யவர். மிக விரைந்து நடப்பார். நிமிர்ந்த தோற்றம். தெள்ளிய சிவந்த முகம். நேரான கூரிய மூக்கு. ஒளி வீசும் பெருங்கண்கள். முகத்தில் இடைவிடாத ஒரு துயரக்குறி. இறுதிக் காலத்தில் தலைமயிரை நீள வளரவிட்டிருந்தார். யோகிகளின் வழக்கத்திற்கு மாறாக ஜோடு(shoes) அணிவார். உடை இரண்டு வெள்ளை ஆடைகளே. எதிலும் மிக்க அளவோடு இருப்பார். ஓய்வு கொள்வதேயில்லை. கடும் மரக்கறியுணவினர். இரண்டு முன்று நாளைக்கு ஒரு முறையே உண்பார். அதுவும் சில கவளங்களே. தொடர்ந்து இரண்டு மூன்று மாதங்கள் உண்ணாதிருப்பார். அக்காலங்களில் சிறிது சர்க்கரை கலந்த வெந்நீரை மட்டுமே அருந்துவார்.

அவர் சாதி வேற்றுமைகளைக் கண்டித்துப் பேசியதால் அனைவரது பெரும் பாராட்டுக்குரியவராக இல்லை. ஆயினும் எல்லாச் சாதியாரும் பெருந் திரளாக அவரைச் சூழ்ந்திருந்தனர். உபதேசங்களைக் கேட்டுப் பயன் பெற அவர்கள் வரவ் இல்லை. சித்தாடல்களைக் கண்டு களக்கவும் அவற்றின் பயனைப் பெறவுமே வந்தனர். சித்தாடல்களில் அவர் வல்லவர். இயற்கைக்கு மேம்பட்ட எதையும் அவர் ஒப்புவதில்லை. தமது மார்க்கம் அறிவியலையே அடிப்படையாகக் கொண்டதென்று இடையறாது வற்புறுத்துவார். அவர். போதித்தவற்றுள் சில பின் வருவன:

1.இந்துக்கள் தம் கருத்துகளுக்குச் செவி சாய்க்காத போதிலும் வேதங்கள் முதலிய கீழை நாட்டுப் புனித நூலகளின் உட்கிடையை அவற்றைக் காப்பாற்றி வைத்திருக்கும் மகாத்மாக்கள் அயல் நாட்டார்க்கு அறிவுறுத்த அவர்கள் மகிழ்வுடன் கேட்பர்.

2.உலகைத் தற்போது ஆளும் கலிபுருஷனின் கொடிய ஆட்சி ஏறத்தாழப் பத்தாண்டுகளின் சமனாகும்.



RangaRakes tamilnavarasam.com

3.புலாலுணவை படிப்படியாகக் காலப் போக்கில் கைவிடப்படும்.

4.சாதி சமய வேற்றுமைகள் இறுதியில் ஒழிந்துபோம். அகில உலக சகோதரத்துவம் வ்ரும் இந்தியாவில் அது நிலை நாட்டப்படும்.

5.மக்களால்,. 'கடவுள்' என்று சொல்லப்படுவது உண்மையில் எல்லா உயிர்களிடத்தும் காட்டும் அன்பே. இவ்வன்பே இயற்கை நியதிகளையும் மாற்றும் அரிய சக்திகளைப் பெறக்கூடும்.

6.மக்கள் தமக்குள்ளே மறைந்து கிடக்கும் தெய்வீக சக்தியை உணர்ந்து கைவரப்பெற்றால் பூமியின் ஈர்ப்பாற்றல் முதலிய இயற்கை நியதிகளையும் மாற்றும் அரிய சக்திகளைப் பெறக்கூடும்.

அகில உலக சகோதரத்துவத்தின் அடிப்படையில் வேதாந்தத்தின் உண்மைக் கருத்துகளைப் பரப்புவதற்காக " சமரச வேத சன்மார்க்க சங்கம்" என்றொரு சங்கத்தை 1867ஆம் ஆண்டில் நிறுவினார4 . அவரது கொள்கைகள் பிர்ம்மஞான சபையின் கொள்கைகளை ஒத்தன. எங்கள் சங்கம் ஐந்தாறு ஆண்டுகளே நிலவிற்று அக்காலத்தில் பேரெண்ணிக்கையான ஏழைகளுக்குச் சங்க உறுப்பினர்கள் செலவில் அன்னதானம் செய்யப்பட்டது.

அவர் தனது 54ம் வயதை5 அடைந்தபோது (1873) இவ்வுலகைத் தாம் நீப்பதற்கேற்பத் தனது சீடர்களைப் பக்குவப்படுத்தத் தொடங்கினார். தாம் சமாதி கூடுவதற்கு எண்ணியிருப்பதையும் தெரிவித்தார்.1873ஆம் ஆண்டின் முற் பாதியில் மனித சகோதரத்துவத்தை மிகவும் வற்புறுத்திப் போதித்து வந்தார். அவ்வாண்டு இறுதி மூன்று மாதத்தில் பேசுவதையும் உப்தேசிப்பாதையும் அறவே விடுத்து இடையறா மௌனத்தில் ஆழ்ந்தார். 1874 ஜனவரி மாதம் இறுதி நாள்களில் பேசத் தொடங்கிக் தாம் கூறி வரும் தீர்க்க தரிசனங்களை மீண்டும் கூறினார். அவை பின் வருவனவாம். அம்மாதம் 30ஆம் தேதி நாங்கள் மேட்டுக்குப்பத்தில் எங்கள் குருவைக் கடைசியாகப் பார்த்தோம். சீடர்களிடம் அன்போடு விடை பெற்ற பின் ஏற்பாடு செய்திருந்த ஒரு சிறு கட்டிடத்தின் தனி அறை ஒன்றில் நுழைந்து விரிப்பில் சயனித்துக்கொண்டர். அவரது கட்டளைப்படி அறைக்கதவு பூட்டப்பட்டது. இருந்த ஒரே துவாரமும் சுவர் வைத்து அடைக்கப்பட்டது. ஓராண்டுக்குப்பின் திறந்து பார்த்தபோது அறையில் ஒன்றுமில்லை. வெற்றறையாகவே இருந்தது. பின் ஒரு சமயம் தோன்றுவதாக உறுதியாகக் கூறியிருந்தாரெனினும் தோன்றும் காலம் இடம் சூழ்நிலைகளைத் தெரிவிக்கவில்லை. அப்படித் தோன்றும் வரை இந்தியாவில் மட்டுமின்றி ஐரோப்பா அமெரிக்கா முதலிய மற்றெல்லாத் தேசங்களிலும் தக்கவர்களின் உள்ளத்தில் அதிட்டித்து உலகைத் திருத்தும் பணியில் வேலை செய்யப்போவதாகத் கூறினார்.

{4. 1867என்னும் ஆண்டும், சமரச வேத சன்மார்க்க சங்கம் என்ற பெயரும் பொருந்தவில்லை. சமரச வேத சன்மார்க்க சங்கம் 1865இல் தொடங்கப்பட்டது. 1867இல் தொடங்கப்பட்டது சத்திய தருமச்சாலையாகும். இங்கு சாலை தொடங்கிய ஆண்டு, சங்கம் தொடங்கிய ஆண்டாக மாற்றிக் கூறப்பட்டுள்ளது. மேலும் சமரச வேத சன்மார்க்க சங்கம் என்ற பெயர் சங்கத்திற்குத் தொடக்கத்தில் இடப்பட்ட பெயர். பின்பு 1872இல் சங்கப் பெயரைச் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என வள்ளற் பெருமானே மாற்றி யருளினார்கள். அப்படி



RangaRakes tamilnavarasam.com

மாற்றியிருந்தும் தொழுவூர் வேலாயுதனார் அம்மாற்றத்தை அறியாமையினாலோ அன்றி அறிந்தும் பொருட்படுத்தாமையினாலோ தனது ஐந்தாம் திருமுறைப் பதிப்பிலும்(1880)இந்த வாக்குமூலத்திலும் (1882) சமரச வேத சன்மார்க்க சங்கம் என்று பழைய பெயரையே குறிப்பிடுகிறார்.}

{5. 54வது வயது என்பது பிழை. 1873இல் சுவாமிகளுக்கு 54அன்று. சுவாமிகள் 1823இல் பிறந்தவர்கள். ஆதலின் வயது 50 என்று சொல்லவேண்டும்.}

இதுவே இப்பெரியாரின் வரலாற்றுச் சுருக்கம். மேற்கூறிய செய்திகள் ஆயிரக் கணக்கானவர்களுக்குத் தெரிந்தவையே. இந்து சாத்திரங்களிலுள்ள ஆழ்ந்த நீதிகள், அகில உலக சகோதரத்துவம், உயிரிரக்கம், அறம்-இவற்றைப் பாமரமக்களுக்கும் விளக்கி உபதேசிப்பதே அவரது முழுவேலையாக இருந்தது. ஆயினும் அவரைச் சூழ்ந்த பெருங்கூட்டத்தாரில் மிகச்சிலரே அவரது உயர்ந்த உபதேசங்களை உணர்ந்ததைக் கண்டு பெரிதும் ஏமாற்ற மடைந்தார். கட்புலனாகிய அவரது இகவாழ்வின் பிற்பகுதியில் இவ்விரங்கத்தக்க நிலையால் தமக்குண்டான பெருவருத்தத்தை அடிக்கடி குறிப்பிட்டு அடுத்தடுத்து அவர் கூறியதாவது:

" இவ்வகில உலக ச்கோதரத்துவ சங்கத்தின் உறுப்பினராவதற்கு நீங்கள் அருகரல்லர். உலக சகோதரத்துவத்தின் உண்மையான உறுப்பினர்கள் இந்தியாவுக்கு வடக்கே வெகு தொலைவில் இருக்கிறார்கள். நீங்கள் எனக்குச் செவிசாய்க்கவில்லை. நான் உபதேசிப்பதை நீங்கள் பின்பற்றவில்லை. நான் சொல்லுவதை ஏற்றுக் கொள்ளுவதில்லை என்று நீங்கல் முடிவு செய்துவிட்டீர்கள் போலும். ரஷ்யாவிலிருந்தும் அமெரிக்கவிலிருந்தும் (இவ்விரு நாடுகளின் பெயர் அடிக்கடி சொல்லப்படும்)6 இன்னும் வெளி நாடுகளிலிருந்தும் வந்து இதே அகில

{6.இதற்கெல்லாம் இவ்ர் சொல்வதைத் தவிர வேறு ஆதாரம் இல்லை. பிரம்மஞான சபை மகாத்மாக்களின் தூண்டுதலால்-கட்டளையால்-நிறுவப்பட்டிருக்கலாம். அம்மகாத்மாக்களில் வள்ளற் பெருமானும் ஒருவராக இருக்கலாம். இவ்விரண்டையும் யாம் மறுக்க வில்லை. இவ்வளவில் நின்றால், அது பிரம்மஞான சபைக்கும், வள்ளற் பெருமான் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கும் ஆக, இரண்டு பக்கமும் கௌரவமாகும். இதற்குமேல் போய் பெருமான் ரஷ்யாவையும் அமெரிக்காவையும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்த்தர் என்பது முதலானவை மிகைப்படுத்தல்களாம்.}

உலக சகோதர்த்துவத்தை பிரசாரம் செய்யும் காலம் வெகு தொலைவில் இல்லை. அப்போதுதான் நான் உங்களுக்கு வீணில் இப்போது சொல்லிவரும் பேரூண்மைகளை உணர்ந்து பாராட்டுவீர்கள். வடக்கே வெகுதொலைவில் வாழும் அச் சகோதரர்கள் இந்தியாவுக்கு வந்து வியக்கத்தக்க பணிகளால் நம்நாட்டிற்கு அளவிடற்கரிய நன்மைகளைச் செய்வதை நீங்கள் காண்பீர்கள்'"

இந்த தீர்க்க தரிசனம் அப்படியே பலித்து விட்டதெனக்கருதுகிறேன். வடக்கே மகாத்மாக்கள் இருக்கிறார்கள் என்பது இந்துக்களுக்குப் புதிய கருத்தல்ல. ரஷ்யாவிலிருந்து மேடம் பிளவட்ஸ்கியும் அமெரிக்காவிலிருந்து கர்னல் ஆல் காட்டும் இந்தியா வருவதற்குப் பல ஆண்டுகள் முன்னமே அவர்கல் வருகை இங்கு முன்னறிவிப்பாகக் கூறப்பட்டு வந்ததே பின்னர் பிரம்மஞான சபை நிறுவக்



RangaRakes tamilnavarasam.com

கட்டளையிட்ட மகாத்மாக்களுடன் எங்கள் குரு தொடர்புடையவர் என்பதற்கு மறுக்கவொண்ணாச் சான்றாகும்.

தொழுவூர் வேலாயுத முதலியார் F.T.S.

சாட்சிகள்: மஞ்சக்குப்பம் சிங்காரவேலு முதலியார்
பிரசிடெண்ட், கிருஷ்ணாதியாசபிகல் சொசைட்டி
கும்பகோணம் ஆராவமுது ஐயாங்கார்
உறுப்பினர், நெல்லூர் தியாசபிகல் சொசைட்டி.

பிரசிடென்சி காலேஜ் பண்டிதர்களுள் ஒருவர் என்கிற உத்தியோக அந்தஸ்தே வேலைய பண்டிதரின் மதிப்பிற்கும் அவரை நம்பலாம் என்பதற்கும் உத்தரவாதமாகும்.

ஜி.முத்துசாமி ரெட்டி
ஜட்ஜ்,சுமால்காஸ் கோர்ட்,மெட்ராஸ்,
வைஸ்பிரசிடெண்ட்,மெட்ராஸ் தியாசபிகல்
சொசைட்டி.

**தொ.வே வாக்குமூலத்திற்குப் பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய முன்னுரையின் தமிழாக்கம்,**

**நிகழப்போவதை முன்னமே அறிவித்தது**

'ஆக்கல்ட் ஓர்ல்டு'(இரகசிய உலகம்) பத்திரிக்கையின் ஆசிரியர் நேரிடையான சவால் ஒன்றுக்கு மறு மொழ¤ò£è 4.4.1882 ஆம் தேதிய பம்பாய் கெஸட்டுக்கு ஒரு கடிதம் எழுதினார். ஆக்கல்ட் ஓர்ல்டில் எழுதியபோதே நன் குறிப்பிட்டுள்ள சித்த சகோதரர்களின் திருக்கூட்டத்துடன் பிரம்மஞான சபை பிளவட்ஸ்கி அம்மையார் மூலம் தொடர்புடையது என்று உறுதியாக அறிவேன், இப்போது அது சரிதான் என்று மேலும் விளக்கமாக அறிகிறேன் என்று தனது நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கடிதத்தைக் தொடங்கினார். நம்முடைய ஆப்த நண்பர் மேலே வரிகளை எழுதியபோது தம்முடைய உறுதியான கூற்று பிற்காலத்தில் ஆயிரக்கணக்கானவர்களுடைய சாட்சியத்தால் நிரூபிக்கப்படும் என்று சிறிதும் நினைத்திருக்கமாட்டார். ஆனால் அதுதன் இன்றைய நிலை. நம்பிக்கையற்றவர்களும், பாரபட்ச முடையவர்களும் அல்லது சுயநல சாட்சிகளும் இஷ்டப்படி இதைப்பற்றி பொதுவாகத் தூற்றலாம். ஆனால் உண்மையை மறுக்க முடியாது. எங்களைப் பைத்தியக்காரர்களாகவோ அல்லது ஏமாற்றுவர்களாகவோ கருதாத சில நண்பர்களாவது கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்குமூலத்தைப் படித்து மகிழ்வார்கள்.

நாங்கள் செனையிலிருந்தபோது பிரசிடென்சி காலேஜ் பண்டிதரான பிரபல தமிழறிஞர் ஒருவர் எங்களைத் சந்தித்துத் தனித்து உரையாட விரும்புவதாக அறிந்தோம். கிருஷ்ணா தியாசபிகல் சொசைட்டி பிரசிடெண்ட் மிஸ்டர் சிங்காரவேலு, நம்பிக்கைக் குரிய மற்றொரு தியாயபிஸ்ட்டும் சம்ஸ்கிருத பண்டிதருமான நெல்லூர் மிஸ்டர் ஜி. ஆராவமுத ஐயங்கார் இவர்கள் முன்னிலையில் சந்திப்பு நேர்ந்தது, சந்தித்தவர எங்களைக் கேட்ட கேள்விகள் எல்லாவற்றையும் கூறுவதைவிட (1) எங்கள் சொசைட்டி இந்திய திபெத்திய



RangaRakes tamilnavarasam.com

மகாத்மாக்களின் நேரிடைத் தூண்டுதலால் ஏற்படுத்தப்பட்ட்து. 2) அவர்களது விருப்பத்துக்குக் கீழ்படிந்தே இந்த நாட்டுக்கு வந்தோம் என்று நாங்கள் திரும்பத்திரும்பக் கூறிவருவதை வலிவாக உறுதிப்படுத்தும் வேறு சிலவற்றைக் கூறலாம். இவ்விவரங்களிலிருந்து உண்மையை அவரவர்கலே அனுமானித்துக் கொள்ளும்படி விட்டு விடுகிறோம். கற்றறிந்த பண்டிதன் இங்கே கூறியதைவிட, விரிவாகத் தமிழிலும் தெலுங்கிலும் எழுதிவருவதையும், பின் நிறைவேறிய இந் நிகழ்ச்சகளைப்பற்றி அவரது குரு முன்னரே கூறிவந்த தீர்க்க தரிசனத்தி நேரில் அறிந்தவர்களும் முக்கியமானவர்களிட மிருந்து சான்றுகளைத் தொகுக்க முயன்று வருவதையும் அறிந்து மகிழ்கிறோம். -ஆசிரியர்

### தொ.வே. வாக்குமூலத்திற்குப் பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய பின்குறிப்பின் தமிழாக்கம்.

கெட்ட எண்ணங்களையும் சந்தேகங்களையும் போக்குமறு எதிர் கால நிகழ்ச்சியைத் தீர்க்கதரிசனமாகக் கூறியதற்கு இது ஒரு சான்றாகும். சான்று கூறுபவரின் கௌரமும் அவரது குருவின் தீர்க்க தரிசனச் செய்திகள் எங்கும் நன்கு பரவியிருப்பதும், தியாசபிகல் சொசைட்டி நிறுவப்பட்டிருப்பதையும் அது இந்தியாவுக்குதந்து செயலடுமென்பதையும் வதந்தியாலோ பத்திரிக்கை வாயிலாகவோ அவர் அறிந்திருக்க முடியாதென்பதும்-இவை எல்லாம் சொசைட்டியை நிறுவக் கட்டளியிட்ட மகாத்மாக்களுள் இராமலிங்யோகியும் ஒருவர் என்பதை உறுதிப்படுத்துகின்றன. 1873 மார்ச் மாதத்தில் ரஷ்யாவிலிருந்து பாரிஸூக்கு செல்லுமாறு நாங்கள் கட்டளியிடப்பட்டோம். ஜூன் மாதம் அமெரிக்கா செல்லுமாறு சொல்லப்பட்டோம். ஜூலை 6-இல் அமெரிக்காவை அடைந்தோம். இந்தக் காலந்தான் இராமலிங்கர் பின் நிகழவிருப்பதைத் தீவிரமாக அறி வித்துக் கொண்டிருந்த காலம். 1874எ அக்டோபரில் வெர்மௌண்ட் சிட்டெண்டனுகுப் போகுமாறு அறிவிப்புக் கிடைத்தது. ஆன்மீக ஆரய்ச்சிகளில் ஈடுபட்டிருந்த கர்னல் ஆல்காட்டை அங்கு பிரபல எட்டி குடும்பப் பண்ணையில் சந்தித்தோம். 1875 நவம்பரில்தியாசபிகல் சொசைட்டி ஏற்படுத்தப் பட்டது. 1878க்கு மேல் இந்தியாவிலுள்ள நண்பர்களுடன் கடிதத் தொடர்பு கொண்டதன் பயனாக சொசைட்டியின் தலைமை அலுவலகம் 1879பிப்ரவரியில் பம்பாய்க்கு மாற்றப்பட்டது.

## பின் இணைப்புகள் 3

### பின் இணைப்பு 3: தென்னார்க்காடு ஜில்லா கெஸட்டீரில் காணப்படும் குறிப்பு:

Extract from page 316-317 of Madras District Gazetteers-Souty Arcot District by W.Francil, I.C.S. published in 1906

PARVATHIPURAM' A village of 1,189 inhabitants lying 23 miles south-west of Cuddalore on the Vridhachalam road. The place is connected



RangaRakes tamilnavarasam.com

with one Ramalinga Paradesi, a some what curious example of a latter-day sait who has been almost defied by his followers.

Born in 1823 in the Chidambaram taluk of Vellala parents in bumble circumstances, he developepd, while still little more that a boy, as undeniable talent for versificationm and his poems brought him into notice. They dealt with religiouis matters; some of them , like those of the famous Salvite saints of old, were composed in euloty of the merits of the deities at certain shrinesm such as the temples at Tiruttani in North Arcot and Tiruvottiyur near Madras; others took for their subject the beauties of the higher life, It was these that led to his becoming gradually regarded as spiritual guide and teacher . After visiting many of the well-=known sacred places of the South, he finally settled at Karunguli, the next village to Parvatipuram. At its height his influence must have been very real,m as his admirers and desciples, who included even level-headed Government officials,are said to have changed their residences and gone to live where they could be constantly near him.

About 1872 the curious octagon-shaped sabha with the domed roof which is to be seen at Vadalur"s a hamlet of Parvatipuram, was erected by him form subscriptions. It is said that the spot was chosen becausefrom it are visible the four great towers of Nataraja's shrine at Chidambaram., It is not an ordinary temple the details of the worship in it being unusal.

Ramalinga Paradesi seems to have persuaded h is descicples that they would rise again from the dead, and he consequently urged that burial was preferable to cremation. Even Brahmins are said to have been buried in this belief, and people who died in other villages were in several cases brought to Vadalur and interred there. In 1874 he locked himself in a room(still in existence) in Metttukkuppam(hamlet of Karunguli), which he used for SAMADHI or mystic meditation, and insructed his disciples not to open it for some time. He has never been seen since, and the room is still locked. It is held by those who still believe in him that he was miraculously made one with his god and that in the fulness of time he will reappear to the faithful. Whatever may be thought of his claims to be a religious leader., it is generally admitted by those who are judges of such matters that his poems, many of which have been published, statnd on a high plane, and his story is worth noting as an indication of the directions which religious fervour may still take.

## கெஸட்டீர் குறிப்பின் தமிழாக்கம்

**பார்வதிபுரம்:** 1189 மக்களைக்கொண்ட ஒரு சிற்றூர். விருத்தாசலம் சலயில் கடலூருக்குத் தென்மேற்கே 23வது மைலில் உள்ளது. இவ்வூர் இராமலிங பரதேசி என்பவருடன் தொடர்புடையது. பின்னாளில் வாழ்ந்த துறவிகளுக்கு அவர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார். அவரைப் பின்பற்றியவர்கள் அவரைத் தெய்வமாகவே கருதினர்.



RangaRakes tamilnavarasam.com

அவர் 1823இல் சிதம்பரம் தாலுகாவில் வேளாளர் குடும்பத்தில் எளிய சூழலில் பிறந்தார். சிறுவராக இருக்கும்போதே கவி பாடும் ஆற்றல் பெற்றிருந்தார். அவரது பாடல்களே அவரை மக்கள் கவனத்திற்குக் கொணர்ந்தன. அப்பாடல்கள் சமய குரவர்களின் பாடல் போன்றவை; சென்னை அருகேயுள்ள திருவொற்றியூர், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருத்தணி கோயில்களில் எழுந்தருளியுள்ள இறைவனின் புகழைப் பாடுபவை, மற்றவை ஆன்மிக வாழ்வின் அழகைப் பற்றியவை. இவையே அவரை ஆன்மிக வழிகாட்டிய்யாகவும் குருவாகவும் செய்த பின் இறுதியாகப் பார்வதிபுரத்திற்கு அடுத்த கருங்குழியில் தங்கினார். அவருடைய புகழ் உச்சத்திலிருந்த தென்பெது மிகவும் உண்மை. ஏனெனில் அர்சாங்க உயர்தர அதிகாரிகள் உட்பட அவரது அன்பர்களும் மாணவர்களுமான சிலர் அவரருகிலேயே எப்போதும் இருக்க விரும்பித் தம் உறைவிடத்தையும் அதற்கேற்ப அவரருகே மாற்றிக்கொண்டனராம்.

1872இல் பார்வதிபுரத்தை அடுத்த வடலூரில் தனித்தன்மை வாய்ந்த எண்கோண வடிவமுள்ள சபை உருண்டைக் கூரையுடன் அன்பர்களின் நன்கொடைகளைக் கொண்டு அவரால் கட்டப்பட்டது. அவ்விடத்தைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் அங்கிருந்து பார்த்தால் சிதம்பரம் நடராசர் கோயிலின் நான்கு பெரிய கோபுரங்களும் தெரிவதே என்று சொல்லப்படுகிறது. அது சாதாரணக் கோயிலல்ல. அதன் வழிபாட்டு முறைகள் மற்ற கோயில்களிலிருந்து வேறுபட்டவை.

இறந்தவர்கள் திரும்ப எழுந்து வருவார்கள் என்றும் இறந்தாரை எரிப்பதிலும் புதைப்பதே சிறந்ததென்றும் இராமலிங் பரதேசி வலிவாக உபதேசித்தார். இந்த நம்பிக்கையால் பிராமணர்களும் பிணங்களைப் புதைத்தார்கள். மக்கள் வெளியூர்களிலிருந்தும் இறந்தவர்களைக் கொண்டு வந்து வடலூரில் புதைத்தார்கள். 1874 இல் கருங்குழியை அடுத்த மேட்டுக்குப்பத்தில் தாம் எப்போதும் சமாதி (தியானம்) கூடும் அறைக்குள் புகுந்து, சில காலம் திறந்து பார்க்க வேண்டாமெனச் சீடர்களுக்குக் கூறித் தாழிட்டுக் கொண்டார். அதன்பின் அவர் காணப்படவில்லை. அவ்வறை இன்னும் பூட்டப்பட்டே உள்ளது. அவர் கடவுளோடு ஐக்கியமாகி விட்டார் என்று அவர் மீது நம்பிக்கையுடையோர் கருதுகின்றனர். காலம் வரும்போது நம்பிக்கையுள்ளவர்களுக்குத் திரும்பவும் தோற்றமளிப்பார் என்றும் நம்புகின்றனர். அவர் ஒரு சமயத் தலைவர் என்பதில் கருத்து எப்படியிருந்தாலும், அச்சாகி வெளிவந்துள்ள அவரது பாடல்கள் மிக உயர்ந்தவைஎன்பது அதனை நிச்சயிக்கும் தகுதியுடையவர்களால் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. சமய மறு மலர்ச்சி இப்போதும் உண்டாகலாம் என்பதற்கு இவரது வரலாறே சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## பின் இணைப்புகள் 4

### பின் இணைப்பு4: அடிகளின் சமகாலப் பெரியோர்கலும் புலவர்களும்

**அடிகளின் சமகாலப் பெரியோர்களும் புலவர்களும்**

**(அடிகளோடு தொடர்புடையோர் மட்டும்)**



RangaRakes tamilnavarasam.com

**பெரியோர்கள்:**

1. தண்டபாணி சுவாமிகள் 28/11/1839 - 5/7/1898

2. கோடகநல்லூர்சுந்தரசுவாமிகள் 2.12.1831 1881

3. முத்துகிருஷ்ண பிரம்மம் 1815

4. திருச்சிற்றம்பலஞானிகள்

5. ஆநந்தநாத சண்முக சரணாலயசுவாமிகள்

6. மதுரை ஆதீனம்குருமகா சந்நிதானம் ஆறுமுகசுவாமிகள்

7. மதுரை ஆதீனம் சிதம்பரசுவாமிகள்

8. திருவாவடுதுறை ஆதீனம் தாண்டவராயத்தம்பிரான் சுவாமிகள்

9. தருமபுர ஆதீனம் வேளூர் கட்டளை விசாரணை உலகநாதத்தம்பிரான் சுவாமிகள்.

**புலவர்கள்:**

1.திரிசிரபுரம் மகாவித்துவன்
மீனாட்ச்சிசுந்தரம் பிள்ளையவர்கள் 6.4.1815 - 1.2.1876

2. ஆறுமுக நாவலர் 18.12.1822 - 5.12. 1879

3. தொழுவூர் வேலாயுதமுதலியார் 1832 - 22.2.1889

4. பூவை அட்டாவதானம் கலியாண
சுந்தரய தீந்திரர் 10.5.1854 - 1918

5. மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாப
முதலியார் 1792 1871

6. புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் 1886

7.மாயூரம் முன்சீப் வேதநாயகம்பிள்ளை 11.10.1826 -21.7.1889

8.மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியார் 1918

9.நரசிங்கபுரம் வீராசமி முதலியார்

## பின் இணைப்புகள் 5



RangaRakes tamilnavarasam.com

## பின் இணைப்பு 5: அடிகள் வழிபட்ட தலங்கள்

### அடிகள் வழிபட்ட தலங்கள்

### திருவருட்பாப் பாடல் பெற்றவை

1.சென்னைக் கந்தகோட்டம்
2.திருவொற்றியூர்
3.திருத்தணிகை
4.திருவலிதாயம்
5.திருமுல்லைவாயில்
6.திருஎவ்வுளூர்
7.புள்ளிக்ருக்குவேளூர்)வைத்தீசுவரன் கோயில்
8.திருவாரூர்
9.திருக்கண்ணமங்கை
10.திருவதிகை
11.திருவண்ணாமலை
12.திருமுதுகுன்றம்(விருத்தாச்சலம்)
13.திருத்தில்லை(சிதம்பரம்)
14.வடலூர்(உத்தரஞானசிதம்பரம்)

இவற்றுள் கந்தகோட்டம், திருத்தணிகை இரண்டும் முருகத் தலங்கள், திருவொற்றியூர்,திருவலிதாயம், திருமுல்லைவாயில், புள்ளிருக்குவேளூர், திருவாரூர், திருவதிகை,. திருவண்ணாமலை, திருமுதுகுன்றம், சிதம்பரம், ஆகிய ஒன்பதும் சிவத்தலங்கள். திரு எவ்வுளூர் திருக்கண்ணமங்கை இரண்டும் திருமால் தலங்கள். வடலூர் சோதித்தலம், இப்பதினான்கும் திருட்பாப் பாடல்பெற்ற தலங்களாம். இவற்றைத் தவிர சென்னை ஏழுகிணறு துலுக்காணத்தம்மன் கோயில், சிங்கபுரிக் (குறிஞ்சிபொபாடி யருகே) கந்தர் கோயில், கருங்குழி விநாயகர் கோயில் இம்மூன்றையும் பாடியிருக்கிறார்கள். இவை தலக்கணக்கில் சேரா.

### திருவருட்பாவைப்புத்தலங்கள்

திருவருட்பா முதல் திருமுறை விண்ணப்பக் கலிவெண்பாவில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் இருநூற்றெழுபத்து நான்கையுமே தலமுறையிற் குறிப்பிட்டு அவ்வத்தலங்களில் கோயில்கொண்டுள்ள பெருமானைத் தனித்தனியே விளித்து விண்ணப்பிக்கிறார்கள். ஆதலின் 274 தலங்களுள் திருவருட்பாப் பதிகங்கள் பெற்ற(வள்ளற் பெருமான் சென்று வழிபட்ட)9 தலங்கள் நீங்கலக மற்ற 265 தலங்களும் திருவருட்பா வைப்புத்தலங்களாம்.

சீகாழிக்கும் மதுரைக்கும் சென்று வழிபட்டதாகச் ச.ம.க. பதிப்பு சரித்திரக் குறிப்பு கூறுகிறது. இவ்விரு தலப்பதிகங்களும் கிடைக்கப்பெறவில்லை.

# பின் இணைப்புகள் 6

## பின் இணைப்பு 6 அடிகளின் அருளிச்செயல்கள் (complete work)

### அடிகளின் அருளிச் செயல்கள் (COMPLETE WORK)

1. பாடல்கள் - திருஅருட்பா-ஆறுதிருமுறைகளாக வகுக்கப்பெற்றவை
2. படல்கள் - ஆறு திருமுறைகளிலும் சேராதவை
3. விண்ணப்பங்கள் -அடிகள் இறைவனிடத்துச் செய்து கொண்டவை(உரை நடை)
4. கடிதங்கள் -அடிகள் தம் கைப்பட எழுதியவை
5, கட்டளைகள் - தாம் நிறுவிய நிலையங்களின் நடைமுறை
6. பத்திரிகைகள் - சுற்றறிக்கைகளும் அழைப்பிதழ் களும்.
7. உபதேசங்கள் - உடன் கூட்டத்தாராலும் கேட்டவர்களாலும் எழுதி வைக்கப்பட்டுள்ள குறிப்புகள்
8. உரைநடை நூல்கள் -1.மனுமுறை கண்ட வாசகம்
   2.ஜீவகாருண்ய ஒழுக்கம்

9. உரைகள் -1.'தமிழ்' என்ற சொல்லுக்கு வரைந்த உரை
   2.பெரியபுரணம் முதற்பாடல் முதற் சொல்லாகிய 'உலகெலாம்'என்பதற்கு வரைந்த விளக்க உரை
   3. ஒழிவிலொடுக்கப்பாயிரவிருத்தி
   4. தொண்ட மண்டல சதகத்தின் நூற் பெயரிலக்கணமும், கடவுள் வாழ்த்துப் பாடலுக்குச் செய்த உரையும்
   5. பொன்வண்ணத் தந்தாதியின் இருபத் திரண்டாம் பாடலுக்குச் செய்த உரை
   6. வேதாந்த தேசிகரின் குறட்பா ஒன்றுக்கு வரைந்த் உரை.

10.பதிப்பித்த நூல்கல் 1.ஒழிவிலொடுக்கம(1851)
   2.தொண்டமண்டல சதகம்(1855)
   3.சின்மய தீபிகை(1857)
11. பிற -பிறரது நூலகளுக்கும் பதிப்புகளுக்கும் வழங்கிய சாற்றுக்கவிகள்,மருந்துச் சரக்குகளின் குண அட்டவணை முதலியன.

## பின் இணைப்புகள் 7

### பின் இணைப்பு 7: அடிகள் முற்பிறப்பில் தாயுமனவரா?



RangaRakes tamilnavarasam.com

## இராமலிங்க அடிகள் முற்பிறப்பில் தாயுமனவரா?

தாயுமனவரின் மறுபிறப்பையோ இராமலிங்க அடிகளின் முற்பிறப்பையோ ஆராய்ந்து நிச்சயிக்கும் தகுதி நம் போலியர்க்கு இல்லை. இஃது அறிவைத் துணையாகக் கொண்டு ஆராயும் பொருளும் அன்று. அருட்டுணையால் ஆராயப்படுமல்லது பிறவாற்றல் கூடாது.

இராமலிங்க அடிகள் முற்பிறப்பில் தயுமானவரே என்று தண்டபாணி சுவாமிகள் கூறுகின்றார்.

**தண்டமிழ் வடலூரான்முன் றாயுமா னவனேயென்று**
**மண்டரூர் மலர்கொண்டுற்ற வஞ்சுக மடியேனென்றும்**
**விண்டதே வொருவனுள்ளான் வெறும்பொயான் விளம்பிலேன்மெய்த்**
**தொண்டர் தாட்டு களுமாயாச் சூரியா தியருஞ்சான்றே**

-புலவர் புராணம்,கண்கண்ட புலவர்
சருக்கம் 21

**வடலூரான் முன் தாயுமானவனே என்னும்**
**திடமாற்ற மோபோற் சிலர்வந்-திடலோதிக்**
**கொன்றான் எழுப்பிக் கொடுக்கும் திருநாளே**
**நன்றாம் அவற்றில்மிக்க நாள்**

**அருமைத் தமிழ்த்தாயு மானபிள்ளை தாமே**
**பெருமை இராமலிங்க பிள்ளை-பொருவிலதாக்**
**கூறும் உரையாற் குலவுநச்சி நானார்கினியார்**
**ஆறுமுக நாவலர்.**

தமக்கும் வள்ளற்பெருமானுக்கும் ஆறுமுக நாவலருக்கும் இவர் முற்பிறவி கூறுகிறார். இராமலிங் அடிகள் முற்பிறப்பில் தாயுமானவர், தாம் முற்பிறப்பில் அருணகிரிநாதர், ஆறுமுக நாவலர் முற்பிறப்பில் நச்சினார்க்கினியார், என்பது இவர் கூற்று. வள்ளலார் தாயுமானவரே என்பதையும் தாம் அருணகிரியே என்பதையும் முருகன் தனக்குக் கூறினான் என்றும், தாம் வெறும் பொய் சொல்லவில்லை என்றும், மெய்யடியார்களின் திருவடித்துகளும் சூரிய சந்திரரும் சாட்சியாகக் கூறுகின்றார். இதனை மறுப்பார் தலையில் இடி விழும் என்று பாடுகின்றார்.

**வல்லைவந் தன்பரைக் காக்கும் செவ்வேற்கை வரதனைக்கண்டு**
**எல்லையில் லாக்களிப் பாய்மடி மீதில் இருக்குமென்னை**
**தொல்லை அருண கிரிதான் என் றன்னவன் சொன்னதுண்மை**
**இல்லையென் றாற்குமுக் கென்றுவெங் கோடை இடிவிழுமே**

வள்ளலார் தாயுமானவரே எனக் கூறுவதோடமைந்திருப்பின் அதனை ஏற்பதில் ஐயமிராது. தாமே அருணகிரியார் என்று கூறுவதும் அதற்கு ஒரு படி மேல் சென்று ஆறுமுக நாவலர் நச்சினார்க்கினியார் என்று கூறுவதும் ஐயத்தை



RangaRakes tamilnavarasam.com

விளைவிக்கின்றன. ஒவ்வொருவருக்கும் இவர் முற்பிறவி கண்டுபிடிக்கும் வழக்கமுடையவரோ எனக் கருத வேண்டியுல்ளது. தனது உள்ளத்தில் அழுத்தமாகப்பட்ட் இக்கருத்துக்களை முருகனே தனக்கு உள்நின்று உணர்த்தியதாகக் கொண்டார்போலும்.

நச்சினார்க்கினியாருக்கு மறு பிறப்பு உண்டு. அருணகிரியார்க்கு மறுபிறப்பு உண்டோ? அவர் முத்தியடைந்தவரென்றன்றோ கூறப்படுகிறார். முத்தியடைந்தோர் மீண்டும் பிறப்பரோ? பிறப்பராயின் அவர் அடைந்தது முத்தியாகுமோ? நச்சினார்க்கினியார் அருணகிரியார் செய்தியை இவ்வளவோடு நிறுத்தி, இனித் தாயுமானவர் செய்தியைக் காண்போம். தாயுமானவர்க்கு மறு பிறப்புண்டென்பதில் ஐயமில்லை. உடல் இங்கே விழுந்த்தால் இனி ஒரு உடம்பை எடுக்கும் என்பதை முன்னரே கூறினோம். நிட்டையிலிருந்து தாயுமானார் தீப்படுத்தப்பட்டார். மெய்ம் மறந்த நிலையில் அவரது உடல் தீக்கிரையாக நேர்ந்தது. ஆதலின் அவர்க்கு மறு பிறவி உண்டு. தாயுமானார்க்கு மறுபிறவி உண்டென்பதே வள்ளற்பெருமானின் கருத்துமாகும். பெருமானின் உபதேசங்களைக் கேட்ட அன்பர் ஒருவர் எழுதி வைத்துள்ள குறிப்பொன்று இதனைத் தெளிவாகக் கூறுகிறது.

சமய மத சன்மார்க்கிகளில் தாயுமான சுவாமிகளும் இன்னும் அநேக பெரியோர்களும் சுத்தப் பரப் பிரம்மத்தினிடத்தில் இரண்டறக் கலந்துவிட்டதாக முறையிடுவது வாஸ்தவமா அவாஸ்தவமா வென்றால், அவாஸ்தவம். சுத்த சன்மார்க்கம் ஒன்றுக்கே சாத்தியம் கைகூடும்; என்றும் சாகாத நிலையைப் பெற்றுச் சர்வ சித்தி வல்லபமும் பெறக்கூடும். மற்றச் சமய மத மார்க்கங்கௌல்லாம் சுத்த சன்மார்க்கத்துக்குச் செல்லக் கீழ்ப்படிகளாதலால், அவற்றில் ஐக்கிய மென்பதே யில்லை. தாயுமானவர் முதலானவர்கள் சுத்த சன்மார்க்கிகள் அல்லர்; மத சன்மார்க்கிகள் என்று ஒருவாறு சொல்லலாம். இதில் நித்தியதேகம் கிடையாது. இது சாதக மார்க்கமே அன்றிச் சாத்தியமல்ல. நாளைச் சுத்த சன்மார்க்கம் வழங்கும்போது இவர்கள் யாவரும் உயிர் பெற்று மீள வருவார்கள். முன்னிருந்த அளவைக் காட்டிலும் விசேஷ ஞானத்தோடு சுத்த சன்மார்க்கத்துக்குக் குரியவர்களாய் வருவார்கள்; சாத்தியர்களாய் இரண்டறக் கலப்பார்களா.

-உபதேசப்பகுதி, பக்கம் 91

தாயுமானவர்க்கு மறு பிறப்பு உண்டென்பதால் மட்டும் அவர் இராமலிங்கராகப் பிறந்தார் எனக் கொள்ள வியலாது. முருகன் உணர்த்தினான் என்பது ஒருபுற மிருக்கட்டும். இதை உணர்த்திய முருகன் இன்னும் சில அசம்பா விதங்களையும் சேர்த்து உணர்த்தியிருக்கிறேனே? ' கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற வல்லதூஉம் ஐயம் தரும், (குறள் 845) என்பது போல, இல்லாததை மேற்கொண்டு கூறுதல் இருப்பதையும் ஐயுறச் செய்கிறது.

தாயுமனவர் பாடல்களில் தொடர்ச்சிபோலத் திருவருட்பா காணப்படுகிறது. திருவருட்பாவுள் நாம் தாயுமானவரைக் காண்கிறோம். தாயுமானவர் இராமலிங்க அடிகள் இவ்விருவருடைய அனுபவங்கள் அருளிச் செயல்கள் ஆகியவற்றைக் கொண்டுட் நுட்பமாக ஆராயும் போது தாயுமானவரே இராமலிங் அடிகளாகப் பிறந்திருக்கலாம் என்று எண்ண இடமேற்படுகிறது. தாயுமானவர்க்கு மறு பிறப்பு உண்டென்பதூஉம், முற்பிறப்பில் தாயுமானவரே என்று தண்டபாணி சுவாமிகள் கூறக்கேட்ட அடிகல் ' இருக்கலாம் ' என்று சொன்னதூஉம் அவ்வெண்ணத்தி



RangaRakes tamilnavarasam.com

வலுப்படுத்துகின்றன. அடிகல் முற்பிறப்பில் தாயுமானவராக இருக்கலாம் என்ற எண்ணமும் நம்பிக்கையும் தண்டபாணி சுவாமிகள் கூற்றை அறிவதற்கு முன்னரே எமக்கு உண்டு. தண்டபாணி சுவாமிகள் கூற்றை அறிந்தபின் அவ்வெண்ணமும் நம்பிக்கையும் வலியுற்றன.

முடிவாகக் கூறுமிடத்து, இராமலிங அடிகள் முற்பிறப்பில் தாயுமானவரே என்பது உண்மை. தாயுமானவர் மறுபிறப்பில் இராமலிங்கர் என்பதால் தாயுமானவர்க்கு ஏற்படும் சிறுமையொன்றும் இல்லை. இராமலிங்கர் முற்பிறப்பில் தாயுமானவர் என்பதால் இராமலிங்கர்க்கு ஏற்படும் தனிப் பெருமையொன்றும் இல்லை. எல்லாம் திருவருள் வண்ணம்.

**வாழ்க தாயுமான இராமலிங்கம்**

## பின் இணைப்புகள் 8

### பின் இணைப்பு 8 : அடிகள் மீண்டும் வருவாரா?

### அடிகள் மீண்டும் வருவாரா?

அடிகள் மீண்டும் வருவார் என்றும் இதனை இறவனே தனக்கு உரைத்தான் என்றும் தண்டபாணி சுவாமிகள் கூறுகின்றார். அடிகள் சித்தி பெற்ற பின்னர் தண்டபாணி சுவாமிகள் அடிகளின் பேரில் இரண்டு பதிகங்களைப் பாடினார். அனுபவப் பதிகம் வினாப்பதிகம் என அவை வழங்குகின்றன. அடிகள் மீண்டும் வருவாரென இறைவன் உரைத்ததாகக் கூறுவது அனுபவப் பதிகம் இன்னும் ஏன் எழுந்து வரச் செய்யவில்லை என்று இறைவனை வினவிபொபாடியது வினாப்பதிகம். அவ்விரு பதிகங்களும் வருமாறு;

### அனுபவப் பதிகம்

**தொண்டென்றுஞ் செய்யத் துணிவா ரனைவருக்குங்**
**கண்டென் றினிக்குங் கவிப்பனுவல்-விண்டெனுற**
**வானவட லூரா நறைவிட் டெழுவானென்**
**றியானறைவ தீசனரு ளே.**

**ஆனந்தத் திருக்கூத்தா லைந்தொழிலும் புரிகின்றோன்**
**மீனஞ்சும் விழி நல்லார் வேட்கையாறா வினையேன்பான்**
**மானங்கொண் டறையூடு மறைந்திருக்கும் வடலூரான்**
**வானங்கண் டின்பமெய்த வருவானென் றுரைத்தானே.** 1

**பெண்ணுருவ மொருபாதி பெற்றிருக்கும் பீடுடையான்**
**கண்ணுரிமை தானுமில்லார் கடைத்தலையிற் றிரிவேன்பா**



RangaRakes tamilnavarasam.com

லெண்ணும்வட லூர்ப்புலவ னிருட்டறைவிட் டெழுந்தொருக்கான்
மண்ணுலக மீடேற வருவானென் றுரைத்தானே. 2

கண்டமதிற் கறையெய்தக் காரால முண்டபிரான்
புண்டருநெஞ் சினனாகிப் புலர்கின்ற பொல்லேன்பாற்
றண்டலைசூழ் வடலூரான் றனியறவிட் டினியோர்கால்
வண்டமிழ்ச்சீர்க் கனியோங்க வருவானென் றுரைத்தானே 3

பொற்றையொரு வில்லாகப் புவியூர்ந்து புரஞ்செற்றோன்
பற்றைவென்றோர் தங்களையும் பதையாம லிகழ்வேன்பா
லற்றையிற்சிற் சிலரேங்க வறையுட்போம் வ்டலூரான்
மற்றையவர் கண்கூச வருவானென் றுரைத்தானே. 4

நம்புவ ன்மிதமொரு நாரியிடந் தூதானேன்
வெம்புதுயர்க் காதரமா மிடிப்பட்டு மெலிவேன்பா
லம்புவியெல் லாமறிய வறையுக்போம் வடலூரான்
வம்புரைப்பார் பலர் நாண வருவானென் றுரைத்தேன். 5

நீராறும் பனிமதியு நெடுஞ்சடையிற் புனைபெம்மான்
பேராசைக் கடலினிடை பிழைபட்டுக் கிடப்பேன்பாற்
சீராரும் வடலூரான் சிற்றறைவிட் டினியிங்கு
வாரானென் பவர்கண்முன் வரவானென் றுரைத்தானே 6

கஞ்சனடுத் தலைகொய்து கரத்தேந்தி யிரந்துண்டோ
நஞ்சயின்ற மீனென்ன நானிலத்திற் சுழல்வேன்பா
னெஞ்சறிய வடலூரா னீறணியார் முதலாய
வஞ்சரையெல் லாங்கெடுக்க வருவானென் றுரைத்தானே 7

விசையனிரு விழிகாண வேடனுருக் கொடுசென்றோன்
றசைநுகர்வார் தமையேசச் சலியாத தமியேன்பாற்
றிசையறிய வடலூரிற் செழுந்தமிழ்ப்பா வலன்றீயோர்
வசைமுழுதுங் கெடமீண்டு வருவானென் றுரைத்தானே. 8

முற்கிரியைக் குரியானை முருகோனைத் தருமூர்த்தி
கற்கிணங்கற்றாற் பலவாறு கலக்கமுறுங் கடையேன்பா
னற்கிருபை வலியாடி நரர்வசை கொள் வடலூரான்
மற்கிளர்தோள் வேந்தர்தொழ வருவானென் றுரைத்தனே 9

நால்வருக்கன் றருள் செய்து நறுந்தமிழ்சொற் றொடைகொண்டோன்
மேல்வருமா றுணராது வெதும்புகின்ற வினையேன்பாற்
சேல்வளநீர் வடலூரான் சிரிப்பார்கண் கரிப்பெய்த
வால்வளைத்தண் கடற்பாரில் வருவானென் றுரைத்தானே. 10

அட்டவித மூர்த்தியுமா மவனருளால் வடலூரான்
வட்டநிலத் தினர்காண வருவானென் றுரைத்தபடி
யிட்ட மிகுந் திருப்புகழோ நியம்பியபாட் டினிதென்பார்


RangaRakes tamilnavarasam.com

சிட்டர்விதிப் படியாஉஞ் சிவன்செயலென் றுணர்ந்தோரே 11

தெய்வமே துணை

## <u>வினாப்பதிகம்</u>

இன்னம் வடலூரா னெழுந்திடவேன் செய்தில்லா
யென்னவொரு பதிக மேத்தவென்னுட்-சொன்னசிவன்
றன்னருளோர் சாட்சி தமியேன் மனஞ்சாட்சி
சின்னதலாச் சத்தியஞ்சாட்சி

அரக்க ரிற்றலை யாயசிற் சிலர்க்கு
மளவி லாவர மருளிய சிவனே
கரக்கு நெஞ்சுடைக் காதகர் வாழ்வு
கண்ட றாப்பெருங் களியடைந் தனையோ
பரக்கு நீர்த்தடஞ் சூழ்தரு வில்லிப்
பாக்கத் தென்னாடு பகர்ந்தமை நிசமே
லிரக்க மேவடி வாம் வடலூரா
னின்ன மேனெழுந் திடப்புரிந் திலையே 1

கனியை நேரிதழ்ச் சிவையொடும் வடிவேற்
கந்த வேளொடுங் காளையிற் றிகழ்வா
யனிய வாதிக ளுவப்பது கண்டு
மடிய ரேந்துய ரடைவதோர்ந் திலையோ
படின றாமலர்க் கொன்றையே போலப்
பகர வல்லவர் பகர்தரத் தினவா
மினிய சொற்கவி பகர்வட லூரா
னின்ன மேனெழுந் திடப்புரிந் திலையே 2

சினக்கு மால்விடைக் கொடியினைப் புகழ்வார்
சிந்தை போற்செயுந் திருவருளு டையா
யனத்த மீறலிற் புவிமக ளழுந் தீ
தகற்ற நாடுத லறிந்திலை கொல்லோ
கனக்கு நான்மறை நெறிகண் மூவிரண்டுங்
கந்த வேண்முக கமலமென் றுணரு
மெனக்கோர் நற்றுணை யாம் வடலூரா
னின்ன மேனெழுந் திடப்புரிந் திலையே 3

களப மென்முலை வணிகமின் னொருத்தி
கருது நாளிரு கனிவிரைந் தளித்தா
யளகை யாதிபன் போற்கொலைத் தீயோ
ரடங்க வாழ்தல்கண் டயர்ந்தன னந்தோ
மிளகை நேரொரு சிறியவண் டெழுந்து
விளக்கில் வீழினும் விழிப்புனல் சிந்தி
யிளகு நெஞ்சகம் பெறும் வட லூரா
னின்ன மேனெழுந் திடப்புரிந் திலையே 4



RangaRakes tamilnavarasam.com

பான னேர் விழிச் சிறுமியர் தொடரப்
பலிகொள் வானொரு படுதலை யெடுத்தாய்
வான நாடரும் வியப்புறத் தகுஞ்சீர்
வழுத்து வார்க்குமுன் வழங்கிலை கொல்லோ
வூன ருந்திட னலமெனக் கொடுபொய்
யொருங்கு நானிலத் துற்றவர் குணர்ந்து
மீனர் நாணுறும் படிவட லூரா
னின்ன மேனெழுந் திடப்புரிந் திலையே 5

பொன்க லாபியை யனையவள் காணப்
பொதுவி லாடிய புனிதவ னவனே
நின்க டாட்சமின் றேற்கவி யாரு
நிகழ்த்தி டாரெனு நியமமாய்த் ததுவோ
வன்க ணாரிகழ் வனபல கேட்டு
மான மின்றி நீ மறைந்துறன் முறையோ
வென்க னாநிசப் படவட லூரா
னின்ன மேனெழுந் திடப்புரிந் திலையே 6

நண்ணி னார்சிலர் மகிழ்வுறச் சில்லோர்
நலிவு நீத்துயர் நல்கிய நம்பா
கண்ணில் வான்சுடர் மூன்றையுங் கொடுநீ
கவின் றுளாயெனல் கதையெனத் தகுமோ
புண்ணி லாவுண வேநரர் பலரும்
புசிக்க வேண்டுறும் புனிதமா தவத்தோ
ரெண்ணி லார் மிகப் புகழ்வடலூர
னின்ன மேனெழுந் திடப்புரிந் திலையே 7

திசையொ ரெட்டுமெண் டோளெனக் கொண்டு
திகழு மெட்டுகூர் திகளுமா மொருவா
விசையன் கைச்சிலை யடியினு மிந்நாள்
விளம்பு முத்தமிழ் வெறுப்பவா யினவோ
வசைவி னின்றிரு வருள்வலிக் கடங்கா
வாக்க மின்றென வறைதரு மாண்மைக்
கிசையு மெய்யுணர் வுறும்வடலூரா
னின்ன மேனெழுந் திடப்புரிந் திலையே 8

வாடி யேத்திய வானவ ருய்வான்
மலர்க்க ணாலமு மடிவில்சங் கரனே
தேடி டும்பய னெய்துறா மையினாற்
சிந்தை நோந்துடற் சிதைப்பனென் றவன் முன்
பாடி டுங்கவி யெவண்சகித் தனையோ
பழுதி லாவிரு பாலர்பெற் றிலையோ
ஈடில் சீர்மலி தரும்வடலூரா
னின்ன மேனெழுந் திடப்புரிந் திலையே 9



RangaRakes tamilnavarasam.com

**பொதுவி லோர்திருத் தாளெடுத் தாடும்**
**பொற்பு நாடு நர்ப் புணரருட் பொருப்பே**
**சதுரர் மட்டுமுன் பகர்தமி ழினிந்த**
**தன்மை யாதுனைச் சாற்றுநந் தமிழ்ச்சொன்**
**மதுரங் கைப்பெனின் மஞ்சிரி யாதோ**
**வாஞ்சை யவுமேன் வழங்கிலை யந்தோ**
**வெதுவு நின்செய் லெனும்வட லூரா**
**னின்ன மெனெழுந் திடப்ப்புரிந் திலையே** 10

**அனக பூரண மாயகண் டமுமா**
**யாடு மாதியை யைந்தொழி லானைக்**
**கனவு நன்னன வொப்பதென் றுணருங்**
**காத லெய்திய கவின்றிருப்ப புகழோன்**
**றனது சிந்தையின் கிளை நிகர் வடலூர்த்**
**தமிழ்வ லான்றனைத் தருகெனப் பகர்பாட்**
**டுனவ லாருளத் தொருங்குவா ழருளே**
**யுணருந் தன்மைய துண்மையொன் றுண்டே.** 11

தெய்வமே துணை.

'இரக்கமே வடிவாம் வடலூரரான்' என்றும், 'மிளகை நேர் ஒரு சிறிய வண்டு எழுந்து விளக்கில் வீழினும் விழிப்புனல் சிந்தி இளகு நெஞ்சகம் பெறும் வடலூரரான்' என்றும் அடிகளைப் போற்றும் தண்டபாணி சுவாமிகள்' தவறுதல் அடையக் கேட்டுத் தளர்ச்சியோடு ஐயம் உற்றேன்', என்றும் ' உத்தமப்பயன் நல்கான்போல் உருமறைவுறச் செய்தானே' என்றும் பாடுகின்றார். ஆறுமுக நாவலர் இறந்தபோது பாடிய பாடலில் இறைவனே அடிகளைக் கொன்றுவிட்டான் என்று பாடுகிறார்.

**அன்று வடலூரருந் தமிழ்ப்பா வல்லானைக்**
**கொன்றுவிட்ட நீதிக்குறை யொன்றும் போதாதோ**
**வின்று நல்லூர் நாவலவரேற்றினையு மேனழித்தா**
**யொன்றுபட்ட நெஞ்சருணர்ந்தேத்துமொண்சிவமே**

என்பது நாவலர்கையறு நிலையாகச் சிவபெருமானை நோக்கிப் பாடியது. அடிகளின் சீவகாருண்யத்தை உணர்ந்த அளவுக்கு அடிகளின் சித்தி நிலையைத் தண்டபாணி சுவாமிகள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. உணர்ந்திருப்பாராயின், ' தவறுதல் அடையக்கேட்டு' என்றும் ' கொன்று விட்ட நீதிக்குற' என்றும் பாடியிருக்கமாட்டார் உடம்பை மறைத்துக்கொண்டு இறவனோடு இரண்டறக் கலந்தவரைத் தவறுதல் அடைந்தார் என்று பாடலாமா? இறைவன் அடியார்களை தன்னோடு ஐக்கியப் படுத்திக்கொள்ளுதலைக் கொலை செய்தல் என்று கூறலாமா? செத்துப்போவதும் சித்திபெறுவதும் பிரிவு என்ற வகையில் ஒன்று தானே என்று கருதிவிட்டார்போலு. நாவலர்க்கு இரங்கற்பாபாட வேண்டுவதே. கையறுநிலை பாட வேண்டியதே. அடிகளின் சித்திக்கு யாரும் வருந்த வேண்டுவதில்லை. அடியார்களின் பிறந்த நாளைக் கொண்டாடுவதினும் அவர்கள் முத்திபெற்ற நாளைக் கொண்டாடுவது சிறப்பென்பதன்றோ நமது மரபு. அடியாகளும் தாம் பிறந்த நாளைவிட முத்தி பெறும் நாளைத்தானே பெரிதும் மதித்து வரவெற்றனர்.



RangaRakes tamilnavarasam.com

உத்தமப்பயன் நல்கான்போல் இறைவன் அடிகளின் உருவை மறையச் செய்துவிட்டான் என்பது அடிட்களின் கொள்கைகு நேர் மாறாகவன்றோ இருக்கிறது. உருவை மறைதுக்கொன்மு இறைவனோடு கலத்தலன்றோ அடிகள் கூறும் உத்தமப்பயன். இவற்றையெல்லாம் உணராது தண்டபாணி சுவாமிகள் எவ்வாறு பாடினார்? அவர் இவ்வாறெல்லாம் பாடியதற்கு ஒரே காரணம், அவ்வளவு விரைவில் அடிகள் சித்திபெற்று விட்டது தனக்குபொ பிடிக்காமையே. இன்னும் பலகாலம் இந்த உடம்போவே உலகத்தில் இருந்து தம்முடன் அடிகள் தொண்டற்றவேண்டும் என்று தண்டபாணி சுவாமிகள் கருதினார். அடிகளைப் பிரியவேண்டி வந்ததே என்ற எண்ணத்தால் இப்படியெல்லாம் பாடிவிட்டார். ' வில்லிப்பாக்கத்தில் என்னோடு பகர்ந்தமை நிசமேல்' (1) என்றும், 'என் கனா நிசப்பட்' (6) என்றும் ' கனவு நன்னனவொப்பது' (11) என்றும் கூறுவதால் வில்லிப்பாக்கத்திலிருந்த போது இறைவன் உரைத்தான் என்பது முன்பு யம் கூறியவாறு (பின் இணைப்பு பக்கம் 32) தமது உள்ளத்தில் அழுத்தமாகப்படும் கருத்தை இறைவன் உள் நின்று உணர்த்துகிறான் என்று கருதியது போன்றேயான். நினைவே கனவாகி யிருக்கலாம்.

வருவாரா என்னும் வினாவிற்கு எமது விடை இதுதான்: ஞான சம்பந்தர் முதலானோர் வருவதப் பற்றிய பேச்சில்லை. அதுபோன்றே அடிகளும் வருவதைப் பற்றிய பேச்சுக்கு இடமில்லை.

## பின் இணைப்புகள் 9

### பின் இணைப்பு 9: இரண்டரை நாழிகை;

### இரண்டரை நாழிகை

சித்திவளாகத்தில் தமது திருவறைக்குட் சென்ற வள்ளற் பெருமான் இரண்டரை நாழிகையில் சித்திபெற்றார்கள்.

**என்சாமி எனதுதுரை என் உயிர் நா யகனார்**
**இன்று வந்து நான் இருக்கும் இடத்தில்அமர் கின்றார்**
**பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது**
**பேர் உடம்பில் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார்**
**தன்சாதி உடையபெருந் தவத்தாலே நாந்தான்**
**சாற்றுகின்றேன் அறிந்திதுதான் சத்தியம் சத்தியமே**
**மின்சாரும் இடைமடவாய் என்மொழிநின் தனக்கே**
**வெளியாகும் இரண்டரைநா ழிகைகடந் தபோதே**

**-6(முடி)தனித்திருமாலை 53**

என்னும் திருப்பாடலால் இஃது உணரப்படும். இத்திருப்பாடின் இறுதியில் 'இங்ஙனம் எல்லாம் வல்லவர் ஓதுக என்றபடி உரைத்துளேன்' என்று குறித்தருளியிருப்பதாக ஆ.பா. கூறுகிறார்.



RangaRakes tamilnavarasam.com

இரண்டரைக் கடிகையில் அருள் ஒளித் திருவை அடிகட்கு இறைவன் மணம் புரிவித்தான். இதனை ஒரு பதிகத்தின் பத்துப்பாடல்களிலும் அடிகள் கூறியுள்ளனர்.

மணம்புரி கடிகை இரண்டரை எனும் ஓர்
வ்ரையுள தாதலால் மகனே
எணம்புரிந் துழலேல் சவுளம் ஆதியசெய்
தெழில்உறு மங்கலம் புனைந்தே
குணம்புரிந் தெமது மகன் எனும் குறிப்பைக்
கோலத்தால் காட்டுக எனவே
வணம்புரி மணிமா மன்றில் என் தந்தை
வாய்மலர்ந் தருளினர் மகிழ்ந்தே. 1

எம்பொருள் எனும் என் அன்புடை மகனே
இரண்டரைக் கடிகையில் உனக்கே
அம்புவி வானம் அறியமெய் அருளாம்
அனங்கனை தனை மணம் புரிவித்
தும்பரும் வியப்ப உயர்நிலை தருதும்
உண்மைஈ தாதலால் உலகில்
வெம்புறு துயர்தீர்ந் தணிந்துகொள் என்றார்
மெயிப்பொது நடத்திறை யவரே. 2

அன்புடை மகனே மெய் அருள் திருவை
அண்டர்கள் வியப்புற நினக்கே
இன்புடை உரிமை மணம்புரி விப்பாம்
இரண்டரை கடிகையில் விரைந்தே
துன்புடை யவைகள் முழுவதும் தவிர்ந்தே
தூய்மைசேர் நன்மணக் கோலம்
பொன்புடை விளங்கப் புனைந்துகொள் என்றார்
பொது நடம் புரிகின்றார் தாமே. 3

ஈதுகேள் மகனே மெய் அருள் திருவை
இரண்டரைக் கடிகையில் நினக்கே
ஊதியம் பெறவே மணம்புரி விப்பாம்
உண்மைஈ தாதலால் இனிவீண்
போதுபோக் காமல் மங்கலக் கோலம்
புனைந்துளம் மகிழ்கநீ என்றர்
தீதுதீர்த் தென்னை இளந்தையில் தானே
தெருட்டிய சிற்சபை யவரே. 4

விரைந்துகேள் மகனே உலகெலாம் களிக்க
மெய் அருள் திருவினை நினக்கே
வரைந்துநன் மண்ஞ்செய் தொருபெரு நிலையில்
வைத்துவாழ் விக்கின்றோம் அதனால்
இரைந்துளம் கவலேல் இரண்டரைக் கடிகை
எல்லையுள் எழில்மணக் கோலம்



RangaRakes tamilnavarasam.com

நிரைந்துறப் புனைதி என்றுவாய் மலர்ந்தார்
        நிருத்தஞ்செய் ஒருத்தர் உள் உவந்தே 5

களிப்பொடு மகனே அருள் ஒளித் திருவைக்
        கடிகை ஓர் இரண்டரை அதனில்
ஒளிப்பிலா துலகம் முழுவதும் அறிய
        உனக்கு நான் மணம்பிரி விப்பாம்
அளிப்புறு மகிழ்வால் மங்கலக் கோலம்
        அணிபெறப் புனைகநீ விரைந்தே
வெளிப்பட உரைத்தாம் என்றனர் மன்றில்
        விளங்குமெய்ப் பொருள் இறையவரே 6

கலங்கிடேல் மகனே அருள் ஒளித் திருவைக்
        களிப்பொடு மணம்புரி விப்பாம்
விலங்கிடேல் வீணில் போதுபோக் காமல்
        விரைந்துநன் மங்கலக் கோலம்
நலங்கொளப் புனைந்து மகிழ்க இவ் வுலகர்
        நவிலும் அவ் வுலகர் பிறரும்
இலங்கநின் மணமே ஏத்துவர் என்றார்.
        இயலுறு சிற்சபை யவரே 7

ஐயுறேல் இது நம் ஆணை நம் மகனே
        அருள் ஒளித் திருவை நின் தனக்கே
மெய்யுறு மகிழ்வால் மணம்புரி விப்பாம்
        விரைந்திரண் டரைக்கடி கையிலே
கையற வனைத்தும் தவிர்ந்து நீ மிகவும்
        களிப்பொடு மங்கலக் கோலம்
வையமும் வானும் புகழ்ந்திடப் புனைக
        என்றனர் மன்றிறை யவரே. 8

தூங்கலை மகனே எழுகநீ விரைந்தே
        தூயநீர் ஆடுக துணிந்தே
பாங்குற ஒங்கு மங்கலக் கோலம்
        பண்பொடு புனைந்ததுகொள் கடிகை
ஈங்கிரண் டரையில் அருள் ஒளித் திருவை
        எழில் உற மணம்புரி விப்பாம்
ஏங்கலை இதுநம் ஆணைகாண் என்றார்
        இயன்மணி மன்றிறை யவரே 9

மயங்கிடேல் மகனே அருள் ஒளித் திருவை
        மணம்புரி விக்கின்றோம் இதுவே
வயங்குநல் தருணக் காலை காண் நீநன்
        மங்கலக் கோலமே விளங்க
இயங்கொளப் புனைதி இரண்டரைக்கடிகை
        எல்லையுள் என்றுவாய் மலர்ந்தார்
சயங்கொள எனக்கே தண்ணமு தளித்த



RangaRakes tamilnavarasam.com

கடிகையும் நாழிகையும் ஒன்றே. 1நாழிகை=24 நிமிடம்,. 1மணிக்கு 21\2 நாழிகை. 21\2 நாழிகையை முகூர்த்த காலம் என்று அடிகல் குறிப்பிடுகின்றனர். 'மணம்புரி கடிகை இரண்டரை எனும் ஓர் வரையுளதாதலால் ' என்பதைக் காண்க. இப்போது 3 3\4 நாழிகை(1 1\2 மணி நேரம்)ஒரு முகூர்த்த காலமாக வழ்ங்குகிறது. கால அளவ்கிய கடிகை தூரத்தைக்குறிக்கும் அளவாயும் வழங்கிற்று. பக் 159 காண்க.

இறைவன் அடிகட்கு யோகநிலைஐ ஒரு நாழிகையில் உணர்த்தினான். வேண்டியபொருள் எலாம் ஒரு நாழிகையில் கிடைக்கச் செய்தான். இரண்டரை நாழிகையில் அருள் ஒளித்திருவை மணம் புரிவித்தான். இரண்டரை நாழிகையில் அடிகளது உடம்பில் கலந்து பிரியாதிருந்தான்.

இரண்டரை நாழிகையில்(கடிகையில்) - ஒரு மணி நேரத்தில்-அடிகள் சித்தி பெற்றார் என்பதை உணர்க.

இரண்டரைக் கடிகையைச் சிலர் நாற்பத்திரண்டாயிரம் வ்ரு டங்கள் என்று சொல்லிக் குழப்புவர். அவைகள் பொருந்தக் கூற்றாம்.

## பின் இணைப்புகள் 10

### பின் இணைப்பு 10; அடிகள் வரல்லாற்றுக் குறிப்புகள்

### அடிகள் வரலாற்றுக் குறிப்புகள்

காலம் : 1823 - 1874
பிறப்பு : 5.10.1823 சுபானு, புரட்டாசி, 21, ஞாயிறு
சித்தி : 30.1.1874 ஶ்ரீமுக,தை19,வெள்ளி

பிறந்த ஊர் : மருதூர் (சிதம்பரம் வட்டம்,தென்னார்க்காடு மாவட்டம்) வடலூரிலிருந்து சுமார் 7மைல்

பெற்றோர் : இராமையா பிள்ளை,சின்னம்மையார் (ஆறாவது மனைவி)

உடன்பிறந்தோர் : சபாபதி பிள்ளை,பரசுராம் பிள்ளை, சுந்தரம் அம்மையார், உண்ணாமுலை அம்மையார்(அடிகள் ஐந்தாவருபிள்ளை)

இயற்பெயர் : இராமலிங்கம்

சிறப்புப் பெயர் : திருவருட்பிரகாச வள்ளலார்.

உறைந்த இடங்கள் : சென்னை.. 1825 - 1858



RangaRakes tamilnavarasam.com

கருங்குழி 1858 - 1867
வடலூர் 1867 - 1870
மேட்டுக்குப்பம் 1870 - 1874

இயற்றிய நூல்கள் :1. மனுமுறை கண்டவாசகம்
2.ஜீவகாருண்ய ஒழுக்கம்

பதிப்பித்த நூல்கள் :1.ஒழிவிலொடுக்கம் (1851)
`` 2.தொண்டமண்டல சதமக் (1855)
3.சின்மய தீபிகை (1857 )

அருளிய பாடல்கள் :திருவருட்பா (ஆறுதிருமுறைகள்)

நிறுவிய நிலையங்கள் : 1. சன்மார்க்க சங்கம் (1865)
2. சத்திய தருமச்சாலை (1867)
3. சத்திய ஞானசபை (1872)
4. சித்திவளாகம் (1870)

நிறுவத்திட்டமிட்டவை : 1.வைத்தியசாலை ()
2.சாஸ்திரசாலை ()
3. உபகாரச்சாலை ()
4. விருத்திசாலை () (1867 தருமச்சா
5. உபாசனாசாலை ()லையின் கிளைகள்
6. யோகசாலை ()
7.விவகாரசாலை ()
8. சன்மார்க்க போதினி(1867) ()பாடசாலைகள்
9. சமரச வேத பாடசாலை(1872)()
10.சன்மார்க்க விவேகவிருத்தி(1867) பத்திரிக்கை

ஞானவாழ்க்கை: 9ஆம் அகவையில் முருகப்பெருமானால் ஆட்கொள்ளப்
பெற்றார்.
12ஆம் அகவையில் முதல் முறையான ஞான வாழ்க்கை
யைத் தொடங்கினார்.
வழிபாடு கடவுள்-- முருகன்
வழிபடு குரு: திருஞானசம்பந்தர்
வழிபடு நூல்: திருவாசகம்
(இது இளமையில் அமைத்துக்கொண்ட முறை)
முதலில் முருக உபாசகர்(கந்தகோட்டம்,திருத்தணிகை)
பின்னர் சிவபக்தர் (ஒற்றியூர்)
அதன்பின்னர் நடராச அன்பர்(தில்லை)
முடிவில் அருட்பெருஞ்ஜோதி அடியார்(வடலூர்)

பெற்றபேறு : எல்லாம் வல்ல சித்தி , நரை, திரை, பிணி, மூப்பு,
சாக்காடு இன்மை. பெருமான் உடம்பை மண்ணுக்கோ
நெருப்புக்கோ கொடுக்கவில்லை.



RangaRakes tamilnavarasam.com

உடம்பை ஒன்றுமில்லாமற் செய்துகொண்டு இறைவனோடு இரண்டறக் கலந்தார். எவ்வாறு மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் சிற்சபையில்(நடராசர் சந்நிதியில்) புகுந்து மறைந்தாரோ அவ்வாறே அடிகள் சித்திவளாகத் திருமாளிகையில் தமது திருவறைக்குட் புகுந்து மறைந்தார்கள்.

| | |
|---|---|
| கொள்கைகள்: | கடவுள் ஒருவரே<br>அவர் அருட்பெருஞ்சோதியர்<br>சிறு தெய்வ வழிபாடு கூடாது<br>அத்தெய்வங்களின் பேரல் உயிர்ப்பலி கூடாது<br>புலால் உண்ணலாகாது<br>சாதி சமய முதலிய வேறுபாடுகள் கூடாது<br>எவ்வுயிரையும் தன் உயிர்போல் எண்ணும்<br>ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைக்<br>கடைப்பிடிக்க வேண்டும்.<br>ஏழைகளின் பசிதவிர்த்தலாகிய சீவகாருண்ய<br>ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்<br>புராணங்களும் சாத்திரங்களும் முடிவான<br>உண்மையைத் தெரிவிக்கமாட்டா<br>இறந்தவரைப் புதைக்கவேண்டும். எரிக்கக்கூடாது<br>கருமாதி,திதி, முதலிய சடங்குகள் வேண்டா.<br>எதிலும் பொது நோக்கம் வேண்டும். |

# பின் இணைப்புகள் 11

## பின் இணைப்பு 11: அடிகள் வரலாற்றுக் காலக்குறிப்புகள்

### அடிகள் வரலாற்றுக் காலக் குறிப்புகள்

| | |
|---|---|
| 1823-10-6 | சுபானு புரட்டாசி,21,ஞாயிறு பிறப்பு |
| 1824 | சிதம்பர தரிசனம்-தந்தையார் இராமையா பிள்ளை இறப்பு-குடும்பம் சென்னைக்கு சென்றது. |
| 1832 | இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றது-அகவை9 |
| 1835 | முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கியது-அகவை 12 |
| 1849 | தொழுவூர் வேலாயுத முதலியார் அடிகளின் மாணவரானது. |
| 1850 (?) | திருமணம் |



RangaRakes tamilnavarasam.com

| | |
|---|---|
| 1851 | (விரோதிகிருது,ஐப்பசி)ஒழிவிலொடுக்கம் பதிப்பித்தது. |
| 1854-6- | (ஆனந்த,ஆனி)மனுமுறை கண்ட வாசகம் வெளி வந்தது. |
| 1855 | (இராஷ்ச,மார்கழி)தொண்டமண்டல சதகம்பதிப்பித்தது |
| 1857 | (பிங்கள, கார்த்திகை) சின்மய தீபிகை பதிப்பித்தது. |
| 1858 | கருங்குழியில் உறையத் தொடங்கியது. |
| 1865 | சன்மார்க்க சங்கம் நிறுவியது |
| 1867-1-16 | அக்ஷய, தை, 5) திருப்பாதிரிப்புலியூர்க் கடுத்த உண்ணாமுலைச் செட்டிச் சாவடிக்குச் சமீபத்தில் ஒரு திருவிழாக் கூட்டத்தில் பிரம சமாஜத்தைச் சேர்ந்த ஶ்ரீதரஸ்வாமி நாயுடுவுடன் விக்கிரக வழிபாடு பற்றி வாது. |
| 1867-2-2 | (அக்ஷய, தை 22, சனி) தருமச்சாலை கட்டுவதற்கு வடலூர்க் குடிகள் இனாமாக நிலம் விட்டது. |
| 1867-2- | (அக்ஷய தை) திருவருட்பா முதல் நான்கு திருமுறைகளின் முதற்பதிப்பு வெளி வந்தது. |
| 1867-4-23 | (பிரபவ, வைகாசி 11, வியாழன்) சத்திய தருமச்சாலை தொடங்கியது. சாலை விளம்பரம் வெளியிட்டது.) |
| 1867 | (பிரபவ) சன்மார்க்க போதினி பாடசாலை பற்றிய அறிவிப்பு |
| 1869 | (சுக்கில, வைகாசி) சபாபதி சிவாசாரியர் வடலூர் வந்து சேர்ந்தது. |
| 1870 | (பிரமோதூத) மேட்டுக்குப்பத்தில் உறையத் தொடங்கியது. |

| | |
|---|---|
| 1870-4-27 | (பிரமோதூத, சித்திரை, 16, புதன்) சன்மார்க்க சங்கம் விளங்கும் காலம் என்னும் பத்திரிகை.) |
| 1870-10-26 | (பிரமோதூத, ஐப்பசி, 11, புதன்) அன்பர்களுக்கு இட்ட சாலைக்கட்டளை. |
| 1871-3-30 | (பிரமோதூத, பங்குனி, 18, வியாழன்) சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக் கட்டளை. |
| 1871-4-12 | (பிரஜோற்பத்தி, சித்திரை, 1, புதன்) சன்மார்க்கப் பெரும்பதி வருகை என்னும் பத்திரிகை. |
| 1871 | (பிரஜோற்பத்தி) சத்திய ஞானசபை கட்டத் தொடங்கியது |
| 1872-1-11 | (பிரஜோற்பத்தி, மார்கழி, 29,வியாழன்) சமரச வேத பாடசாலை பற்றிய அறிவிப்பு. |
| 1872-1-25 | (பிரஜோற்பத்தி, தை, 13, வியாழன்) ஞானசபையில் முதற் பூசவிழா சபைவிளம்பரம் வெளியிட்டது. |
| 1872-3-9 | (பிரஜோற்பத்தி, மாசி, 28, சனி) சாலையிலுள்ளவர்க்கு இட்ட ஒழுக்கக் கட்டளை. |
| 1872-5-12 | (ஆங்கிரச, வைகாசி,1, ஞாயிறு) சன்மார்க்கப் பிரார்த்தனை (கல்பட்டு இராமலிங்க சுவாமிகள் விண்ணப்பம். |
| 1872-7-18 | (ஆங்கிரச, ஆடி, 5, வியாழன்) சபை வழிபாட்டு விதிவகுத்தது-நிலையங்களுக்குப் பெயர் மாற்றம்.) |
| 1872-11-25 | (ஆங்கிரச, கார்த்திகை, 12, திங்கள்) சித்தி வளாகத்திலும் தருமச்சாலையிலும் வசிப்பவர்கள் பரஸ்பரம் பழகுவதற்கு எச்சரிப்புப் பத்திரிகை. |
| 1873-9-8 | (ஸ்ரீமுக, ஆவணி, 25, திங்கள்) சித்திவளாக விளம்பரம்{வதந்தி எச்சரிப்பு} |

| | |
|---|---|
| 1873-10-22 | (ஸ்ரீமுக, ஐப்பசி, 7, புதன் பகல் 8 மணி) கொடி கட்டியது. பேருபதேசம். |
| 1873-11- | (ஸ்ரீமுக கார்த்திகை) சித்தி வளாகத்தில் திருவிளக்கு வழிபாடு ஏற்படுத்தியது. |
| 1874-1-30 | (ஸ்ரீமுக, தை, 19, வெள்ளி) சித்திபெற்றது. |

- - - - -

## இந்நூல் வெளியீட்டிற்கு நன்கொடை அளித்தோர்:

| | |
|---|---|
| காலஞ் சென்ற திரு. ஓ.பி. இராமசாமி செட்டியார் | 300 |
| திரு.பி.என்.இராஜமாணிக்கம் பிள்ளை, புதுவை | 200 |

ரூ.25 அளித்த அறுவர்: ச.மு.வேலாயுத உடையார், ஆய்க்குடி-சி.எம்.சீதாராம முதலியார், காஞ்சிபுரம்-வித்துவான் ப.கோவிந்தசாமி. மன்னார்குடி-சுத்த சன்மார்க்க சங்கம். திருப்பாச்சேத்தி-கே.எஸ்.இராமசாமி பிள்ளை, குண்டடம்-ச.பாடகலிங்கம், கோவை,

ரூ.20 அளித்த மூவர்: வி.எஸ். குழந்தைவேல், கோவை, சி.டி.செல்வகணபதி, சென்னை 7 - என். இராமலிங்கம், குஞ்சாம்பட்டி.

ரூ.17 அளித்தவர்: டி.ஆர். பெரியசாமி, திருச்சிராப்பள்ளி.

ரூ.11 அளித்தவர்: சன்மார்க்க சங்கம், புதுவை.

ரூ.10 அளித்த முப்பத்து மூவர்: சி.சுப்பிரமணியம், புதுக்கோட்டை-எம்.பாலசுப்பிரமணியன், சேலம்-இராமலிங்க மிஷன், காஞ்சிபுரம்-மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப்புளியம்பட்டி-எம்.கிருஷ்ணசாமி முதலியார், பெங்களூர் - வி. மணிக்கசுந்தரம், மேட்டூர் அணை-சா.ப. இராமலிங்கம், மேட்டூர் அணை-சே.கு.முத்தையா நங்கவள்ளி-பி.மாணிக்கவாசகம், சேலம்-=பெ.பெருமாள், பார்த்திபனூர்-என்.மதுரநாயகம், புதுக்கோட்டை-வித்துவான் சு.சண்முகம், எடையார் பாக்கம்,-ர.கிருஷ்ணசாமி, பள்ளபாளையம்-இராமசாமி, தமிழ்க்கல்லூரி, காரைக்குடி,-கே.சி.ஈஸ்வர், மைசூர்-உ.தெ.த.சுடலை முத்து நாடார், சின்னமனூர்-எம்.பி.கிருஷ்ணமூர்த்தி, தேவர்குளம்-மணிவாசகர் நூலகம், சிதம்பரம் இ.தேவராஜன், திண்டிவனம் வி.எஸ்.வீரநாதக்கோனார், அம்பலத்தாடி எம்.துரைசாமிப் பிள்ளை, ரெட்டிப்புதூர்-பி.ராஜா செட்டியார், பெங்களூர் டாக்டர் எம்.வி.ரத்னம், கரூர்-பி.கே.குலசேகரன், ஆம்பூர்-கே.ஏ. சுப்பிரமணியம், திருமலைராயன் பட்டினம்-டாக்டர்.ஜி.விஸ்வநாதன், ஸ்ரீரங்கம்-எம்.வைத்திலிங்கம், இடைப்பாடி-பி.எஸ்.பாபு முதலியார், பெங்களூர்-காலஞ்சென்ற எல்.டி.நடேச உடையார், புதூர்-சரோஜினி ராஜா, சென்னை 6 - எம்.இராமலிங்கம், பெங்களூர் 23-ஏ.பழனிவேல், இராஜபாளையம்-கே.சுப்பராயன், எல்.இ.இ., ஆலங்குளம்.



RangaRakes tamilnavarasam.com

அருள்விளக்கே அருட்சுடரே அருட்சோதிச் சிவமே
அருள்அமுதே அருள்நிறைவே அருள்வடிவப் பொருளே
இருள்கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே
என்அறிவே என்உயிரே எனக்கினிய உறவே
மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
தெருள்அளித்த திருவாளா ஞானஉரு வாளா
தெய்வநடத் தரசேநான் செய்மொழிஏற் றருளே.

-அருள் விளக்கமாலை (1)

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

தயவு